விவேக சிந்தாமணி

1916-17

"GOD BLESS YOU ALL AND HELP YOU THROUGH LIFE."

"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

" Seek Truth wherever you can find it," But, " Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." " TO THINE OWN SELF BE TRUE."

EDUCATIONAL AND SOCIAL

அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** **"Approved"**

புத்தகம். 24.] நளஹு சித்திரைமீ, 1916ஹு ஏப்ரல்மீ [சஞ்சிகை 1.

" GOD BLESS YOU ALL AND HELP YOU THROUGH LIFE."

H. E. LORD HARDINGE'S PARTING MESSAGE TO STUDENTS.

His Excellency Lord Hardinge laid down the reins of his high office as Viceroy and Governor-General of India on the 4th April 1916, after a strenuous period of service extending over five years-and-a-half during which he has inspired the trust and the confidence of the people of India as few Viceroys have done before. The secret of His Excellency's success and the result thereof can be summed up in one word. That word was "Faith." He came as the Messenger of Faith to a despairing people and Faith can work wonders. It can move mountains and it has moved the heart of a whole people. As the children's mouthpiece politics were beyond our province but his educational policy inspired by his whole-hearted and parental love for children has reassured the most sceptical with hope and faith ; and on the unique occasion of receiving the Honorary degree of *LL. D.* bestowed on him by the Bombay University. His Excellency delivered the following "*Message to Students*" which will go deep into the heart of every true student.

PARTING MESSAGE TO STUDENTS.

" Finally, may I make a still further claim on your patience while I address from these academic precincts a few words not only to the students of this University in which I now hold an honoured position, but also to the students of all India in the welfare of all of whom I take the deepest interest. I wish to give them this parting message from a true friend:—In a few hours' time I shall have left you, my work in India being over, but I shall carry away with me memories and interests which will endure throughout my life. Above all I shall carry away with me high hopes for the future of India of which the fulfilment rests largely with you students, who will soon be the manhood of your country. I have to bid you good-bye and godspeed in solemn times which are putting to a supreme test not merely the military organisation and material resources, but above all the character of nations, their capacity for self-discipline and self-sacrifice.

"THE LESSON OF THE WAR."

"Herein lies the lesson of the war which I would commend to all the young students of India. *It is character, it is the capacity for self-discipline, for self-sacrifice, that build up and preserve a nation. Cultivate those qualities steadfastly, patiently, unobtrusively, while you are pursuing your various studies, and you will be able to acquit yourselves as men in after-life and to do each of you your share in building up a nation, worthy of India's past traditions and future greatness.* You will often be in my thoughts, and I trust you will also remember me as one of your sincere well-wishers.

"God bless you all and help you through life."

"THE INTERESTS OF EDUCATION."

"IN THE SAFEST POSSIBLE KEEPING."

His Excellency, in referring to the Progress of Education said, but I will only add that it was for me a piece of real good-fortune, which brought to birth a new department of education at the moment of my arrival and the happy choice that placed at its head so versatile and able a member as Sir Harcourt Butler. The charge of that Department is now committed to the trust of my friend Sir Sankaran Nair, the ablest Indian, I could find for the purpose, and whatever temporary slowing down of the pace may be necessitated by the exigencies of finance owing to this devastating war, I feel confident that in his hands and under the guidance of your new Viceroy, who has earned such a well-deserved reputation in educational circles at Home, the interests of education are in the safest possible keeping for the next five years. During that period much progress will, I trust, be achieved in education as well as in the political development of this land.

"A WONDERFUL REVELATION."

His Excellency Lord Hardinge was *par excellence* "the children's Viceroy," and he has been truly a "father" to the people entrusted to his care. In his replies to the addresses presented to him, His Excellency said with the simplicity and unerring intuition of a child :—

"I think you will agree with me that when so many representative bodies have surveyed the outstanding features of my administration in eulogistic phraseology it would hardly become me to question their judgment. These are the functions of the future historian, but if his verdict is at all favourable to me and if he should cast about for some explanation of any small success I may have had as Viceroy, I will give him this hint. 'I have trusted India, I have believed in India, I have hoped with India, I have feared with India, I have wept with India, I have rejoiced with India, and in a word I have identified myself with India.' India's response has been a wonderful revelation to me, and sometimes I feel as if she had in return confided her very heart to my keeping."

OUR NEW VICEROY.

In the afternoon of 4th April 1916, His Excellency Lord Chelmsford after bidding farewell to His Excellency Lord Hardinge, proceeded to the Secretariat where his warrant from His Majesty the King-Emperor of India was read by the Secretary to the Government of India in Home Department in the Council Chamber in the presence of His Excellency the Governor of Bombay, ordinary Members of the Governor-General's Council and principal officials of the Bombay Government. His Excellency thereupon took his seat in the Council. A Royal salute was fired from the Saluting Battery in honour of Lord Chelmsford on his assumption of the office of Viceroy and Governor-General of India.

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

நள ௵ சித்திரை ௴

விவேகசிந்தாமணி

April-May. 1916.

ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னோஞ் சேரிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

H. E. LORD HARDINGE'S MESSAGE TO STUDENTS.

கனம்பொருந்திய லார்ட் ஹார்டிஞ்சவர்கள் உபதேசமொழி.

லார்ட் ஹார்டிஞ்சவர்கள்.

சென்ற ஐந்தரை வருஷகாலம் இந்தியாவில் அரசர் பிரதிநிதியாக விருந்து ஜனங்களைத் தந்தைபோல் அரவணைத்துக் காத்துவந்த கனம்பொருந்திய லார்ட் ஹார்டிஞ்சவர்கள் நாளது ஏப்ரல்மீ 4உ யன்று தமது வேலையை புதிய இராஜப்பிரதிநிதியவர்கள் ஒப்புக்கொள்ள தாம் ஜனங்களுடைய நன்குமதிப்பை யேற்றுக்கொண்டு அவரவர்களுக்கும் தக்க மறுமொழி கூறிவிட்டுக் கப்பலேறிச் சீமைக்குச் சென்றார். அவர் இராஜரீக விஷயமாகச் செய்த பல மாறுபாடுகள், சீர்திருத்தங்கள் முதலியவற்றைப்பற்றிப் பேசுவது இங்கே சாத்தியமாக வில்லையாயினும் அவருடைய வித்யா போதனாமுயற்சியும் பாலர்களிடத்திலும் மாணாக்கர்களிடத்திலும் அவர் அத்யந்தப் பிரியம்வைத்து அவர்களுக்கு அனுகூலமான ஏற்பாடுகளைச் செய்துவந்ததும் நாம் மறக்கத்தக்கவையல்ல. வித்யாபோதனா விஷயத்தில் அவர்செய்த முயற்சிகள் அப்போதப்போது விவேகசிந்தாமணியில் பிரஸ்தாபிக்கப் பெற்றிருக்கிறபடியால் அதையெல்லாம் இங்கு மறுபடியும் எடுத்துக்கூறவேண்டிய நிமித்த

"SOLEMN TIMES."

காலவிசேஷம்.

பம்பாய் ஸர்வகலாசாலையில் அந்த யூனிவர்ஸிடி சங்கத்தார் அவருக்கு LL. D. என்கிற உயர்ந்த வித்யாபட்டம் அளித்தார்கள். அது கௌரதா சின்னமாக அளிக்கப்பட்டது. அத்தருணம் சான்ஸெலராகிய கனம் லார்ட் உவில்லிங்டன் அவர்களும் வைஸ்சான்ஸெலர் டாக்டர் மாக்கிச்சான் அவர்களும் அவருடைய வித்யா சம்பந்தமான முயற்சிகளைப்பற்றி மிக வெடுத்துக் கொண்டாடிப் பேசினார்கள். அச்சமயம் அவர்களுக்கு விடையளித்தபொழுது கனம் லார்ட் ஹார்டிஞ்சவர்கள் மாணாக்கர்களை மறந்துவிடாமல் தாம்போகுமுன் அவர்களுக்கு ஹிதோபதேசமாகச் சில மொழிகளைச் சொன்னார். அவை யொவ்வொன்றும் ஆணித்திறமான வார்த்தைகள். அவர் இன்னும் சில மணிநேரத்தில் இந்தியாவைவிட்டுப் போவதாயிருந்தாலும் இந்தியாவின் யோகக்ஷேம சம்பந்தமான ஞாபகங்கள் அவர் ஆயுஸ்முழுவதும் அவர்மனதை விட்டகலாதிருக்கும் என்று சொன்னார். அப்படிப்பட்ட ஞாபகங்களில் இந்தியாவிலுள்ள மாணாக்கர்களைப்பற்றிய ஞாபகம் மிகவும் மேலானதாயிருக்கும். அவர்களுடைய யோகக்ஷேமங்களில் அவர் எடுத்துக்கொண்ட சிரத்தை ஒருபோதும் குறை

யாது. அவர்களால் இந்தியா மிகவும் முன்னுக்குவரும் என்று அவர் கொண்டிருக்கிற எண்ணமும் அவர்மனதை விட்டகலாது. அவர்களைவிட்டுப் போகும்படியான காலம் மிகவும் விசேஷமானதாயும் முக்கியமானதாயுமிருக்கிறது. பாரதப்போர் இன்னும் முப்முறமாய் நடந்துகொண்டு வருகிறது. அது ஒவ்வொரு தேசத்தாருடைய படைவலியை மட்டுமல்ல, குணவலியையும் நன்றாகச் சோதிப்பதாகவிருக்கிறது என்றார்.

"THE CHARACTER OF NATIONS IN THE CRUCIBLE.

ஜனசமஷ்டியின் குணவலி சோதனை.

குணவலியென்றால் என்னவெனிலோ, சிக்ஷை தீக்ஷைகளாலும் தன்னயம் பாராட்டாதுழைத்தலாலும் அமையும் அற்புதமான சக்தி. இந்த சக்தி திடீரென்று வரத்தக்கதல்ல. நித்தியப் பழக்கத்தினாலும் பாலசிக்ஷை, வித்யாசிக்ஷை, மதசிக்ஷை, சமஷ்டி தீக்ஷை இவைகளாலும் அப்பியாச முதிர்ச்சியின் பலனாக உண்டாவது. பாலசிக்ஷையில், குழந்தைகளைப் பெற்றோர் வளர்க்கும்முறையும் பள்ளியில் அவர்களுக்குப் பாலபோதம் செய்யும் முறையும் அடங்கும். வித்யா சிக்ஷையென்பது பிரதம பாடசாலையிற் படித்தபின் வித்யாப்பியாசம் செய்வதில் சித்திக்கும் சிக்ஷை தீக்ஷைகளுக்குப் பொருந்தும். மதசிக்ஷை மதசம்பந்தமான ஆசார அனுஷ்டானங்களாலும் இதர கட்டுப்பாடுகளாலும் அமையும் மனோவலிக்குப் பொருந்தும். சமஷ்டிதீக்ஷையென்பது தன்னைமறந்து தேசப் பொதுவுக்குழைக்கும் பாவனப் பழக்கத்தைச் சுட்டி ஜீவேசுவர ஐக்கியபாவத்தை யுண்டுபண்ணுவதற்குச் சாதகமான எல்லா சங்கற்பங்களையும் தன்னுள் அடக்கிநிற்கும். சங்கற்பம் என்றால் மனத்துணிபு அல்லது தீரத்தெளிய நினைத்தல். தீரத்தெளிய நினைத்தலினால் "நினைத்தது முடிக்குமாற்றல்" உண்டாகும். இதற்கு சங்கல்ப சக்தியென்று சொல்கிறதுமுண்டு. இது விசேஷமாய் இச்சாசக்தி யென்று சொல்லும் ஆத்மசக்தியினுதித்து ஞானசக்தியினால் பிரவிர்த்தியடைந்து கிரியாசக்தியினால் பூரணமாகும். இச்சா சக்தியென்பது "Will-Power" என்பதில் அடங்கும். ஞானசக்தி யென்பது "Thought-Power" என்பதில் அடங்கும். கிரியாசக்தியென்பது "Power of Action" என்பதில் அடங்கும். இந்தமூன்று சக்தியும் சேர்ந்துழைப்பதனால் "நினைத்தது முடிக்கும் ஆற்றல்" உண்டாகிறது. இதுதான் "மனுஷத்தனம்" என்றுசொல்லும் மனிதலக்ஷணம். இதைத்தான் குணவலியென்று சொல்வது. குணம் என்பது இங்கே சத்குணத்தைக் குறிக்கும். சத்குணவலி துர்க்குணவலியைக்கெடுக்கும் சக்தியுள்ளதாகும். இந்த சத்குணவலி எந்த தேசத்தாரிடம் நிறைந்திருக்கிறதென்பதைப் பரிசோதிக்க இந்த மஹாயுத்தம் ஒரு பெரிய சோதனையாக ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார். இதை மாணாக்கர்கள் நன்றாக கிரகித்துணர்ந்து கைப்பற்றவேண்டும் என்றும் இந்த யுத்தபடிப்பினையை உட்கொண்டு அவர்கள் வித்யாப்பியாஸம் செய்யும் நாள்களில் தானே படாடோபம் செய்யாது குணம்பெற நாடியுழைக்க வேண்டுமெனவும் சொன்னார்.

"THE LESSON OF THE WAR."

CHARACTER AS NATION-BUILDER.

"Herein lies the lesson of the war which I would commend to all the young students of India. It is character, it is the capacity for self-discipline and self-sacrifice that build up and preserve a nation. Cultivate these qualities steadfastly, patiently and unobtrusively, while you are pursuing your various studies, and you will be able to acquit yourselves as men in after-life and to do each of you your share in building up a nation, worthy of India's past traditions and future greatness. You will often be in my thoughts and I trust you will also remember me as one of your sincere well-wishers. GOD BLESS YOU ALL AND HELP YOU THROUGH LIFE."

பாரதப்போரின் படிப்பினை: "சத்குண சம்பத்தே சமஷ்டிஜன சம்பத்து."

விவேகசிந்தாமணியின் நோக்கமுமிதுவே.

அவருடைய உபதேசமொழியை மூகப்பேட்டில் குறிப்பாய் அச்சிட்டிருப்பதன்றி அப்படியே இங்கேயும் எடுத்து எழுதியிருக்கிறோம். ஏனெனில் அவருடைய இந்த உபதேசமொழியை யனுசரித்து நடக்க மாணாக்கர்களுக்குச் சாதக சாதனமாக விருக்கவேண்டுமென்றே நாம் சென்ற மூன்று வருஷகாலமாக நமக்கு நேர்ந்துள்ள பல கஷ்ட நஷ்டங்களையும் சிந்திக்காது "பாலர்க் குழைக்கவென்று பரிந்து மிக வுழைத்துச், சாலவும் நான் இத்துறையில் உனக்குதவி செய்வேனென்று" வித்யா இலாகாத் தலைவர் தமது உத்யோக சின்னமான ஆஸ்தான பீடத்திலிருந்து சொன்னதோர் உறுதிமொழியை ஈசுவராஜ்ஞையாகக்கொண்டு அதுவே கடைப்பிடியாகப் பிடித்துழைத்து வருகிறோம். அவரது உறுதிமொழியை ஆதாரமாகக்கொண்டே "பாலர் திருவிழா" ஏற்படுத்தினபோது விவேகசிந்தாமணியை பள்ளிப் பிள்ளைகளுக் குபயோகமானதாக மாற்றி நடத்துவதாக வாக்குக்கொடுத்து அந்தப்படி வாக்குத் தவறாது நடந்துவருகிறோம். "ஒவ்வொரு பிரதம பாடசாலையிலும் இதை வாங்கி வாசிக்கச் சிபார்சு செய்யவேண்டுமென்றால், அப்படியே செய்கிறேன். அந்தப்படி நான் வாக்குறுதியளிக்கிறேன். அதை நிறைவேற்றப் பார்ப்பேன்" என்று சொன்ன வார்த்தை சர்க்கார் பள்ளிக்கூடங்களுக்குப் பலித்ததுபோல் இதர பள்ளிக்கூடங்களுக்கும் பலிக்கச் செய்வது வித்யா இலாகா அதிகாரிகளுடைய கடமையாயிருந்தும் அவர்களிற் சிலர் தம் கடமையையுள்ளபடி யுணராது "கட்டின வீட்டுக்குப் பழுதுசொல்கிற" பாவனைகொண்டு முன் பின் பொருந்தாது நடந்துகொள்வது சிந்தனைக்கிடமாயிருக்கிறது. ஆயினும் அனேகர் மனப்பூர்வமாக உதவிசெய்வதாக வாக்களித்திருக்கிறார்கள். அந்த வாக்கை நம்பியே நாம் ஆயிரம் ஆயிரமாய்ச் செலவழித்துக் காகிதம் அகப்படுவதும் கஷ்டமாயிருக்கிற இக்காலத்தில் ஏராளமான தொகை செலவிட்டுக் காகிதத்தை வாங்கி வில்லங்கம் வாராமல் பத்திரிகையை நடத்தி வருகிறோம். ஸ்கூல் அதிகாரிகளும், ஸ்கூல் மானேஜர்களும், லோகல் போர்டு தலைவர்களும் மெம்பர்களும் நமது விடாமுயற்சிக்குத் தாழ்ச்சிநேராமலும் வித்யா இலாகாத் தலைவர் கொடுத்த வாக்குக்குறுதிக்கும் பங்கம் வாராமலும் காத்து பாலர்கள் முன்னுக்குவரச் சாதனசாதகமாயுள்ள நமது முயற்சிக்கு அனுகூலமாக விருந்துதவுவார்களென்று பரிபூர்ண நம்பிக்கை கொண்டு நமது உழைப்பை யெல்லாம் ஈசுவரார்ப்பணம் செய்து ஈசுவரானுக்ரகத்தை முன்னிட்டு இறங்கின இத்துறையில் தொடர்பிடியாக நின்றுழைக்கத் துணிந்திருக்கிறோம்.

LORD HARDINGE'S PARTING MESSAGE.

லார்ட் ஹார்டிஞ்சவர்கள் உபதேசமொழி.

"ஒரு தேசத்தார் ஐக்கிய பத்தியம் பெற்று சமஷ்டி ஞானத்தால் சமஷ்டி பாவம் முதிர்ந்து சமஷ்டி தீக்ஷையில் தேறுவது அத்தேசத்தார்களுடைய குண வலியால்; அதாவது 'தன்னைத்தான் நெஞ்சம் கரியாகத் தான் அடங்கப்'பெறும் சக்தியும் தன்னைக் கொடுத்துழைக்கும் பரோபகார சீலமுமே (Character) என்று சொல்லும் சத்குண சம்பத்து. இந்த சத்குண சம்பத்தினாலேயே தேசக் கட்டுப்பாடும் தேசத்தார்க்குள் ஐக்கியபத்தியமும் உண்டாகி "நேஷன்" அல்லது ஜனசமஷ்டி என்று சொல்லும் சமஷ்டிபாவமுதிர்ச்சி ஏற்பட்டு அமையும். இதை மாணாக்கர்கள் கவனித்து கிரகித்துணர்ந்து, பள்ளியிற் பல பாடங்களையும் படித்து வரும்பொழுதே சத்குணசம்பத்துப் பெற மன உறுதியோடும் பொறுமையோடும் படாடோபமின்றியும் உழைத்து வரல்வேண்டும். இப்படியுழைத்துச் சத்குண சம்பத்துப் பெற்றால் பிற்காலத்தில் மனிதர்களாய் தேச வாழ்க்கையில் சம்பந்தப்பட்டவர்களாகும்பொழுது

இந்தியாவின் பூர்வீகமான ஸ்மிருதி சம்பிரதாயத்துக்கும் அதன் மஹிமைக்கு மேற்படி இந்தியாவில் ஐக்கியபத்தியம்பெற்ற ஜனசமஷ்டி (நேஷன்) ஏற்பட்டு அமைய ஒவ்வொருவரும் தன்னாலாகவேண்டியதைத் தவறு வாராது செய்யத் திறனும் குணவலியுமுள்ளவராவீர்கள். உங்களை நான் மறக்காது உங்கள் க்ஷேமத்தை நாடி அடிக்கடி சிந்தித்து வருவேன். நீங்களும் என்னை உங்கள் ஞாபகத்திலிருத்தி உங்களுடைய யோக க்ஷேமத்தை உண்மையாக நாடியுள்ளவர்களில் ஒருவனை என்னை மதிப்பீர்களென்று கோருகிறேன். உங்களெல்லாருக்கும் நன்மையுண்டாவதாக பகவான் ஆசீர்வதித்து உங்கள் வாழ்க்கை நலம்பெறுவதற்கான அனுக்ரகம் சித்திக்க பகவத் கடாக்ஷம் பெறுவீர்களாக என்று வாழ்த்துகிறேன்." என்று சொல்லி முடித்தார்.

APPEAL TO STUDENTS, PARENTS TEACHERS, SCHOOL MANAGERS AND EDUCATIONAL OFFICERS.

வித்யார்த்திகளுக்கும் வித்யாதிகாரிகளுக்கும் விண்ணப்பம்.

பிள்ளைகளே, பெற்றோர்களே, உபாத்திமார்களே, வித்யா அதிகாரிகளே, ஜன சிரேஷ்டர்களே பாலர்களை இவ்வாறு சத்குண சம்பத்துப்பெறப் பழக்குவதிலும் மேலான வேலையொன்று நீங்கள் செய்யத் தக்கதுண்டோ! சற்று சிந்தியுங்கள். அடியார் "அறுபத்துமூவர்" சாக்ஷியாக வாக்குக் கொடுத்து வாக்குவாங்கி வாக்குத் தப்பாது உழைக்கவேண்டுமென்று உடல் பொருள் ஆவியும் தத்தம் செய்துழைக்கும் ஒரு ஏழையின் விண்ணப்பத்தை நிராதரவாகத் தள்ளினாலும் அரசர் பிரதிநிதியாகவிருந்து, இந்தியாவோடு அனுதாப சக்தியால் ஐக்கியபாவம் மிகுந்து இந்தியாவோடு இந்தியாவாக விருந்தெண்ணி, இந்தியாவோடு இந்தியாவாக விருந்து சிந்தித்து, இந்தியா அழும்போது தானும் அழுது, அது அஞ்சும்பொழுது தானும் அஞ்சி, இந்தியாவுக்குழைப்பதையோர் பெரிய பகவத் கைங்கரியமாகக் கொண்டுழைத்த பிரபுவான லார்ட் ஹார்டிஞ்சவர்கள் கடைசியாகச் சொல்லிப்போன உபதேச மொழியைத் தள்ளுதல் ஆகுமோ! அது தர்மமோ! ஆதலால் "நம்பினோர் கைவிடாத நாதன் தாள்பற்றி, அவனே கதி, அவனே சரண், அவனே துணையென்று உழைக்கும் ஏழைக்கிரங்கி, பாலர்க்குழைக்க முன்வந்து உதவிபுரிவீர்களென்று ஹிருதய கமலவாசியான குமார தேவனைச் சிந்தித்து அவன் திருவருளால் ஊருக்குழைத்து ஔதாரியானேற்கு பாலர்க்குழைக்கவின்று பரிந்துதவி செய்வீர்களெனப் பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்கிறேன்.

"THE INTERESTS OF EDUCATION IN THE SAFEST POSSIBLE KEEPING."

"வித்யாதர்மம் சிதறாது."

நமது புதிய அரசர் பிரதிநிதியும் கனம் ஸர் சங்கரன் நாயர் அவர்களும் சேர்ந்து வித்யா தர்மம் சிதறாது பார்த்துக் கொள்வார்களென்று லார்ட் ஹார்டிஞ்சவர்கள் சொன்னதையுன்னி அவருக்கு எழுதிய லிகிதமொன்றையும் இம்முறை இங்கிலீஷில் தானே அச்சிட்டிருக்கிறேன். (p.8.) அதன் கருத்து முன்னொரு சஞ்சிகையில் வெளியானதேயாதலாலும் அதையே லார்ட் ஹார்டிஞ்சவர்கள் தமது உபதேச மொழியில் கூறியிருப்பதாலும் அதைப்பற்றி இங்கு பின்னுமெழுதில் விரியுமென்று விட்டோம்.

WASTAGE OF CHILD-LIFE: THE ACKNOWLEDGED DEFECT AND ITS REMEDY.

விருதா முயற்சியும் வித்யாதோஷ நிவாரணமும்.

முக்கியமாய் ஸ்வபாஷை ஞானமின்றி இதர பாஷைகளில் ஞான முதிப்பது துர்லபம். இந்த துர்லபமான விருதாமுயற்சி இத்தேசப் படிப்பில் விசேஷமாக விருக்கிறது என்பது கவர்னர்களும், கௌன்ஸில் மெம்பர்களும், வைஸ்ராய்களும், வித்வான்களும் பறையறைந்து கூறிய தோஷம். இந்தத் தோஷ நிவாரணம் செய்ய வித்யா இலாகா மந்திரி கடமைப்பட்டிருக்கிறார். அவர் அக்கடமையைச் செலுத்த நாமெல்லாரும் அவருக்கு அனுகூலிகளாக விருக்கவேண்டும்.

"பெற்றதாயைவிற்றடிமை கொள்ளுகின்றபேதைகாள்
சித்திலாதபோது சீவனில்லை, இல்லை, இல்லையே!"

என்று இடித்துக் கூறியிருக்கிறார் நம்மிற் பெரியோராயுள்ளவர்களும் என்பதைச் சிந்திக்கப் பிரார்த்திக்கிறேன்,

OUR NEW VICEROY AND VICERINE

H. E. LORD CHELMSFORD [செம்ஸ்போர்ட் பிரபு]

H. E. LADY CHELMSFORD [செம்ஸ்போர்ட் பெருமாட்டி]

1916ஞ மேமீ 2-வது சஞ்சிகை. (வைகாசிமீ)

"உண்மையிற் கல்வி உளக்கண்திறக்கும்."

1. நாட்டுப்புறத்தார்க்கு வசதியான வித்யா சீர்திருத்தங்கள் (இங்கிலீஷ்) 33
2. நாட்டுப்புறத்தார்க்கு வசதியான வித்யாபோதனை 35
3. டென்மார்க் நாட்டு விவசாயிகள் வித்யாசாலை 39
4. வேமன்ன மகாகவி அருளிச்செய்த பத்யம் 42
5. சிறுகதை: "திரைகடலோடியுந் திரவியந்தேடு" 47
6. உண்மை முதலில் ஒருவர்க்கும் பிடியாது 52
7. குணவலி விளக்கம்: ப்ராஸ்கோவியா 53
8. வித்தையே பெரியதனம் 57
9. சரித்திரவிலாசம்: பாணிப்பட்டில் மூன்றும் முறை யுத்தம் 58
10. ஸ்ரீ நாம ராமாயணம் 61
11. இருஷிகரும் சண்டையும் 63

No. 3. For JUNE 1916. (Tamil: AUNI)

"To us all towns are one, all men our Kin."

1. " Wisdom's word like Nectar Saves " 65
2. The University of Madras 66
3. The Slaughter of the Innocents 67
4. Sir Harcourt Butler on Education 70
5. Lord Kitchener (with Portraits) 71
6. War Notes 73
7. From Poverty to Power 74
8. On the Cultivation of Mental Happiness as a Characterestic of Motherhood 76
9. Pearls of Faith, Selected and Strung from the Sayings of St. Vemanna 81
10. Character Sketch : The Story of Proscovia 85
11. Short Story : Resourceful Men 88
12. Lessons in Nature Study : How Plants Feed 89
13. Lessons in Economics. Distribution of Wealth 91
14. The Lalgudi Educational Exhibition 92
15. On Envy 96

1916ஞ ஜூன்மீ 3-வது சஞ்சிகை. (ஆனிமீ)

"யாதும் ஊரே:—யாவருங்கேளிர்."

1. "மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம்." 65
2. சென்னை சர்வகலாசாலை 66
3. பள்ளிப்படிப்பும் பிள்ளைகளின் தவிப்பும் 67
4. வித்யாலக்ஷியத்தைப்பற்றி ஸர் ஹார்கோர்ட் பட்லரின் அபிப்பிராயம் 70
5. லார்ட் கிச்சனர் (படங்களுடன்) 71
6. யுத்த சமாசாரம் 73
7. குறைவில் நிறைவு 74
8. அன்னைக்கழகு அகமகிழ் பயிற்சி 76
9. வேமன்ன மகாகவி அருளிச்செய்த பத்யம் 81
10. குணவலி விளக்கம்: ப்ராஸ்கோவியா 85
11. சிறுகதை: உபாயஸ்தர்கள் 88
12. பிரகிருதி வித்யாம்சம்: பயிர்கள் எப்படி வளருகின்றன 89
13. அர்த்த சாஸ்திரம்: தனவிபாகம் 91
14. லால்குடி வித்யாகாட்சிசாலை 92
15. பொறுமை 96

No. 4. For JULY 1916. (Tamil: AUDI)

"What India wanted at present was a Religion of Power."

1. "The Immediate Need for India" ... ... 97—99
2. Sir John Woodroffe on Indian Students 102
3. Training of Medical Students 102
4. Mrs. Annie Basant on Female Education 106
5. The Heavenly Kindergarten or Truth Symbolised in Temples and Shrines 112
6. "Pearls of Faith" Selected and Strung together for Parents aud Children to Wear 116
7. Character Sketch : The Story of Proscovia (concluded) 121
8. Easy Lessons in Economics : Division of Labour 125
9. Children's Page : "Life is Strenuous : The Lazy Suffereth Death unto Life." 128

1916௵ ஜூலை௴ 4-வது சஞ்சிகை. (ஆடி௴)

"இந்தியாவுக்கு வேண்டியது சக்தி."

1. "இந்தியாவுக்கு இப்பொழுது அத்யாவசியமாக வேண்டியதென்ன" ... 99
2. நமது வாலிபர்களாகிய மாணவர்களைப்பற்றி ஸர் ஜான் ஊட்ராப் அவர்கள் சொல்லியது ... 102
3. வைத்திய பாடசாலை 102
4. இந்திய தேசப்பெண்களின் வித்தியாப்யாசத்தைப்பற்றி அன்னி பெஸண்டு அம்மாள் எழுதியது 106
5. சிதம்பரம் 112
6. வேமன்ன மகாகவி அருளிச்செய்த பத்யம் 116
7. குணவலி விளக்கம்: ப்ராஸ்கோவியா (முடிவு) 121
8. அர்த்த சாஸ்திரம்: உத்யம விபாகம் 125
9. சிறுவர்க்கான பக்கம்: சோம்பேரித்தனம் 128

No. 5. For AUGUST 1916. (Tamil : AVANI)

"The lessons of war go deeper.........They reach the Spirit of Man."

1. Third year of the Great War ... ... 129—131
2. School Gardening or Nature-Study and Child-Study 134
3. Suggestions for Nature Study : Sea and Land Breezes, How they are caused 138
4. "To Him that robbed me of all that's mine" : A Study in Three Acts, (*Adapted from a Popular Song.*) ... 142
5. Children's Page : Nobility of Character not dependent on Race or Class ... 144
6. Hindu Ideal of Righteous Rule 146
7. Hindu Ideal of "Life's Help-Meet" 149
8. Wife : A sketch from English Home-Life as drawn by Washington Irving ... 150
9. Easy Lessons in Economics : What is Wealth ? 156
10. Mutual dependence of Men in Organised Societies 158
11. To Live in touch with the Land is to 'Labour' Indeed 159

1916௵ ஆகஸ்டு௴ 5-வது சஞ்சிகை. (ஆவணி௴)

"யுத்தத்தின் படிப்பினைகள் மனிதன் ஆத்மசக்தி வரையில் ஆழ்ந்துள்ளன."

1. பாரதப்போரின் மூன்றுவது வருஷாரம்பம் 131
2. பள்ளிப்பயிர்ச்சியும் தோட்டப்பயிர்ச்சியும் 134
3. பிரகிருதி வித்யாபாடக்குறிப்புகள்: கடற்காற்று, தரைக்காற்று: இவற்றின் உற்பத்தி விவரம் 138
4. பாட்டு: "வாரும் வாரும் துரையே இந்த ஊர்தானோ உமக்கு." (பியாக் ராகம்) ... 142
5. சிறுவர்க்கான பக்கம்: உத்தம குணம் ஜாதி இனத்தையே பொறுத்ததல்ல (ஓர் உண்மையான கதை) 144
6. 'செங்கோன்மை' 146
7. வாழ்க்கைத்துணை நலம் 149
8. மனைவி: ஒரு ஆங்கிலேய குடித்தனக்கதை 150
9. செல்வநூல் விளக்கம்: செல்வமென்றால் என்ன ? ... ... 15[illegible]
10. ஜனசங்காதங்களது பரஸ்பர அபேக்ஷை ... ... 1[illegible]
11. வேளாண்மையோ தாளாண்மையோ ! ... ... 1[illegible]
... ... [illegible]

No. 6. For SEPTEMBER 1916. (Tamil: PURATTASI)

"No good work is ever lost."

"My best wishes for the Success of your Publication."—Sir HaroldStuart, K. C. V. O.

1. Greetings from Far and Near 161
2. Memorandum on the reform of Rural Education ... ... 163—170
3. On the Importance of Nature Study 171
4. Leading opinions on the reform of Rural Education 176
5. Love of Truth, A characteristic of the Scientific Mind 177
6. The State of Female Education, Ancient and Modern, A Review of it by a Hindu Lady ... 181
7. The Influences in Education of Child, Parent and Teacher, by Mfss E. A. Manning 186
8. Easy Lessons in Economics : The Science of Economics 190
9. The Way to Help 192

1916௵ செப்டம்பர்௴ 6-வது சஞ்சிகை. (புரட்டாசி௴)

"நல்லகாரியம் ஒருபோதும் நஷ்டமாகாது." "உமது பிரசுரம் சித்திக்கவேண்டுமாய்க் கோருகிறேன்."—ஸர் ஹாரல்ட் ஸ்டூவர்ட்.

1. சேய்மை அண்மையார் முகமன் (இங்கிலீஷ்) 161
2. நாட்டில் பிரதம வித்யா சீர்திருத்தத்தைப்பற்றிய குறிப்பு 163-170
3. பிரகிருதி வித்யா சிக்ஷையின் முக்கியம் 171
4. காட்டில் பிரதம வித்யா சீர்திருத்தத்தைப்பற்றிய பிரமுகர் அபிப்பிராயங்கள் ... 176
5. வாய்மையால் அகத்தூய்மையாம் 177
6. நமது தேசத்தில் பெண் கல்வியின் ஸ்திதி (ஒரு ஹிந்துமாது எழுதியது. ... 181
7. வித்யாப்யாச முயற்சி; குழந்தைகள், பெற்றோர்கள், போதகர், செய்கடன், (மிஸ். இ. ஏ. மானிங்). 186
8. செல்வநூல் 190
9. உபகாரத்தின் விதி: "பாத்திரமறிந்து பிச்சை கொடு." 192

No. 7. For OCTOBER 1916. (Tamil: AIPPASI)

Freedom and Service of the Spirit :

Freedom and Discipline in Education 193
1. In Praise of Child-Education 195
2. The Principle of Co-operation 198
3. The Right Hon'ble John Burns, M.P.—A Lesson from his Life 203
4. Travel and Description : Ayodhya 206
5. Notice to Subscribers 212
6. "Speak Gently."—From Bates 212
7. Short Story : "Sivasamban" 213
8. Children's Page : The Story of Appayan 219
9. Reform of Rural Education 222
10. Deepavali Festival—National Greching 223

1916௵ அக்டோபர்௴ 7-வது சஞ்சிகை. (ஐப்பசி௴)

1. பாலவித்யா ஜீதை அல்லது சிக்ஷாதீக்ஷையின் ஸ்வதந்திரம் 193,195
2. எத்தால் வாழலாம் ? ஒத்தால் வாழலாம் ! 199
3. கைவேலை செய்துழைத்து கனம்பொருந்திய மந்திரி ஸ்தானத்துக்கு வந்தவரான ஜான் பர்ன்ஸ் சரித்திரம்—"இஷ்டவிருத்தி" - "ஈசனருள்," 203
4. யாத்திரை க்ஷேத்திர வர்ணனை-அயோத்தி 207
5. சந்தாதாரர்க்கு அறிக்கை 212
6. இனிய சொற்கூறல் 212
7. சிறுகதை : "சிவசாம்பன்" 213
8. சிறுவர்க்கான பக்கம் : அப்பய்யன் கதை. 219
9. நாட்டுப்படிப்புச் சீர்திருத்தம் 222
10. தீபாவலிப் பண்டிகை; "கங்கா ஸ்நானம் ஆயிற்றா ?" 223

No. 8. For NOVEMBER 1916. (Tamil: KARTIKAI)

Special Notice to Subscribers with General Notice of Business "Terms" (owing to scarcity of paper.) ... 225

1. The Study of Nature is an Intercourse with the Highest Mind ... 226
2. The Study of Nature's Story-Book ... 227
3. Speak the Truth and Purify the Heart ... 231
4. Rationale of the Worship of the Wife Ideal ... 233
5. Songs for Children ... 236
6. Lessons in Nature Study : Bees and Beehives ... 237
7. Selections from Schiller's Poetry :—i. Three Words of Strength, ii. Division of the Earth and iii. Space... 241
8. Travel and Description : The Holy Benares ... 244
9. The Boyhood of Great Men of the West : 1. Horatio Nelson ... 250
10. Avadhuta-Gita or Sannyasin's Song ... 255
11. Events of the Month ... 256

1916ஸ் நவம்பர்மீ 8-வது சஞ்சிகை. (கார்த்திகைமீ)

சந்தா விவரம் : சந்தாதாரர்க்கு அறிக்கை ... 225

1. பிரகிருதி வித்தையின் மஹாத்துவம் ... 226
2. பிரகிருதி வித்யா கதைப்படிப்பு ... 227
3. வாய்மையா லகந்தூய்மையாம் ... 231
4. சுமங்கலிப் பிரார்த்தனை ... 233
5. பாலர்க்கினிய கீதம் ... 236
6. பிரகிருதி வித்யாம்சம்: தேனீக்களும் தேனும் ... 237
7. ஷில்லர் கவிதை: i. மூன்று மந்திரம் ii. கடவுள் உலகைப் பங்கிட்டுக் கொடுத்தது; iii. இடம். 241
8. யாத்திரை க்ஷேத்திரவர்ணனை : ஸ்ரீகாசி ... 244
9. மேற்றிசை மேதையோர் பாலிய சரிதை: 1. ஹொரேஷியோ நெல்ஸன் ... 250
10. அவதூத கீதை ... 255
11. மாத விசேஷங்கள் ... 256

No. 9. For DECEMBER 1916. (Tamil: MARGHAZHI)

Business "Terms" and General Notice (owing to rarity of credit and scarcity of paper) ... 257

1. Educationists on 'the Educational Problem in India" ... 258
2. "The Educational Problem in India" ... 259
3. Spreading Elementary Education, By Mr. M. H. S. Thompson, ... 264
4. Nature Development and Forcing of Education ... 266
5. The First Need of the Village ... 269
6. Maiden Sacrifice of Modern Society ... 272
7. Cyclone Damages ... 273
8. The Boyhood of Great Men of the West—1. Horatio Nelson (*concluded*) ... 276
9. Lessons in Nature Study : Bees and Beehives ... 279
10. Condolence ... 280
11. Look at the Stage ! And Drink of the Bliss of Loving Thought ... [illegible]
12. Physical Culture as Practised by Professor Ramamurti ... [illegible]
13. Events of the Month ... 28[illegible]

1916ஸ் டிஸம்பர்மீ 9-வது சஞ்சிகை. (மார்கழிமீ)

சந்தா விவரம்: சந்தாதாரர்க்கு அறிக்கை ... 257

1. வித்யாசீலர்கள் அபிப்பிராயம் ... 258
2. இந்தியா வித்யாஸம்பத் பெறுவது எப்படி ? ... 259
3. ஆரம்ப படிப்பைப் பரவச்செய்தல் (மிஸ்ஸர் எம். எச். எஸ். தாம்ஸன்) ... 264
4. வித்யாபிவிர்த்தி முறை :—ஸ்வபாவம், நிர்ப்பந்தம் ... 266
5. கிராமவாசத்துக் கின்றியமையாத நாட்டுப்படிப்பு ... 269
6. தற்கால தாடகை வாங்கும் கன்னியாபலி ... 272
7. சுழல்காற்றினால் நேர்ந்த சேதங்கள் ... 273
8. மேற்றிசை மேதையோர் பாலிய சரிதை: 1. ஹொரேஷியோ நெல்ஸன் ... 276
9. பிரகிருதிவித்யாம்சம்: தேனீக்களும்தேனும் ... 279
10. துயராற்றல் ... 280
11. இராமானுஜ பஜனை : திருவரங்க தரிசனம்—"அமலன் ஆதிபிரான்." ... 280
12. தேஹப்பயிற்சி: ப்ரீம அபிநவ இராமமூர்த்தி யுதாரணம் ... 282
13. மாத விசேஷங்கள் ... 283

No. 10. For JANUARY 1917. (Tamil: THAI)

Business "Terms" and General Notice (owing to rarity of credit and scarcity of paper.) ... 289

1. Reform of Rural and Elementary Education ... 290
2. Wanted Great "Missionaries of Education" ... 291
3. The Home and School Influences ... 293
4. The Use of Toys in the Education of Children ... 296
5. The Beauties of Kamban ... 300
6. Pearls of Faith Selected for Parents and Children to Wear. (From t. Vemanna) ... 302
7. The Boyhood of Great Men of the West : II. Dr. Johnson ... 305
8. Transfusion Column : "There is one thing I fear" ... 308
9. Lessons in Nature Study : Bees and Beehives ... 309
10. Valuable Maxims for Every-day ... 312
11. Health Story : Seshu and his Mother on the Evils of Overeating ... 312
12. Short Story : King Dharmapala or the Secret of Longevity ... 315
13. Events of the Month ... 317

1917ஸ் ஜனவரிமீ 10-வது சஞ்சிகை. (தைமீ)

சந்தா விவரம்: சந்தாதாரர்க்கு அறிக்கை ... 289

1. கிராமவாசத்துக் கின்றியமையாத பிரதம நாட்டுப்படிப்புச் சீர்திருத்தம் ... 290
2. வித்யாவிஷயமாய் கங்கணம்கட்டி உழைக்க உத்தமர்கள் வேண்டும் ... 291
3. இல்லப்பயிர்ச்சிக்கும் பள்ளிப்பயிர்ச்சிக்குமுள்ள வித்தியாசம் ... 293
4. குழந்தைகளும் விளையாட்டுக்கருவிகளும் ... 296
5. கம்பநாட்டார் காப்பிய அழகுகள் ... 300
6. வேமன்னமகாகவி பத்யங்கள் ... 302
7. மேற்றிசை மேதையோர் பாலிய சரிதை: 2. டாக்டர் ஜான்சன் ... 305
8. மொழிபெயர்ப்புவித்தை: "நான் அஞ்சுவதொன்றுளதய்யனே" ... 308
9. பிரகிருதிவித்யாம்சம்: தேனீக்களும்தேனும் ... 309
10. நித்தியப்படி சாதிக்கத்தக்க சிறந்த நீதிகள் ... 312
11. சுகாதாரக்கதை: சேஷுவும் அவன் தாயாரும்—"மீதூண்கேடு" ... 312
12. சிரஞ்சீவி இரகசியம்—தர்மபாலராஜன்கதை ... 315
13. மாத விசேஷங்கள் ... 317

No. 11. For FEBRUARY 1917. (Tamil: MASI)

Business "Terms" and General Notice 321
1. "Manners Maketh Man" 422
2. Reform of Rural and Elementary Education 323
3. The Viceroy on Education 325
4. The Hon'ble Diwan Bahadur P. Rajagopala Achariar Avl, C.I.E. 328
5. The Use of Toys in the Education of Children—II. 330
6. Social Essay : "On Friendship" 331
7. The Boyhood of Great Men of the West : II. Dr. Johnson 334
8. Transfusion Column : "Hail, Mother ! I Take Refuge in Thee" 338
9. "Pearls of Faith" Selected for Parents and Children to Wear. (From St Vemanna) 341
10. Travel and Description : Agra 343
11. Notes on Aluminium 347
12. Children's Page : A Fight Between Tiger and a Wild Boar. By Mr. M. H. S. Thompson ... 349
13. Events of the Month 350

1917௵ பிப்ரவரிமீ 11-வது சஞ்சிகை. (மாசிமீ)

சந்தா விவரம்: சந்தாதாரர்க்கு அறிக்கை 321
1. "குணமே மணம்" 322
2. கிராமவாசத்துக் கின்றியமையாத பிரதமவித்யா சீர்திருத்தம் 323
3. வித்யாவிஷயமாய் அரசர் பிரதிநிதியவர்கள் அபிப்பிராயம் 325
4. கனம் திவான்பஹதூர் பெ. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள், ஸி. ஐ. இ. ... 328
5. குழந்தைகளும் விளையாட்டுக்கருவிகளும்-II. 330
6. சமஷ்டிஸாதனம்: நட்பு 331
7. மேற்றிசை மேதையோர் பாலிய சரிதை: 2. டாக்டர் ஜான்சன் 334
8. மொழிபெயர்ப்பு வித்தை: "தஞ்சமென்றடைந்தேன், தாயே வந்தனம்!" ... 338
9. வேமன்ன மகாகவி பத்யங்கள் 341
10. யாத்திரை க்ஷேத்திர வர்ணனை: ஆக்ரா 343
11. அலுமினியம் என்னும் உலோகம் 347
12. சிறுவர்க்கானபக்கம்: புலிக்கும் காட்டுப்பன்றிக்கும் நடந்த சண்டை 349
13. மாத விசேஷங்கள் 350

No. 12. For MARCH 1917. (Tamil: PANGUNI.)

Title page and Contents for Vol. 24. (i—viii) ... 353
Business Terms and General Notice ... 354
1. "*Obeisance to Thee! O Thou, Mighty with Multiple Might*" ... 354
2. The Defence of India Forces 355
3. The New Submarinism 356
4. The War Expenditure 357
5. The Use of Toys in the Education of Children—III, By C. V. S., ... 357
6. Some Reflections on the State of the Country (By A Country man, ... 360
7. Social Essay on Friendship 362
8. Pearls of Faith, Selected and Strung from the Sayings of St. Vemanna. 364
9. The Blockade and its Effects—The Scarcity of Paper 370
10. The Public Services Commission Report 371
11. Travel and Description: Agra 372
12. Children's Page : The Monkey and the Child 375

191, ௵ மார்ச்சுமீ 12-வது சஞ்சிகை. (பங்குனிமீ.)

24-வது புஸ்தகத்தின் பேரேடும் பொருளடக்கமும்

சந்தா விவரம்: சந்தாதாரர்க்கு அறிக்கை 353
1. அருந்திறலுடையாய், அருளினை, போற்றி! 354
2. இந்தியா பாதுகாப்புச் சைனியங்கள் 355
3. ஜெர்மன் சண்டை புதுமோஸ்தர் 356
4. யுத்தச் செலவு 357
5. குழந்தைகளும் விளையாட்டுக்கருவிகளும் III. (C V S.) 357
6. பஞ்சமும் பிரபஞ்சமும் (நாட்டுப்புறத்தார் அநுபவசித்தாந்தம்) எம். எ. நெல்லையப்பர் ... 360
7. ஸமஷ்டி ஸாதனம் : நட்பு 362
8. வேமன்ன மகாகவி அருளிச்செய்த பத்யங்கள் 364
9. மறியல் யுத்தமும் அதன் பலன்களும் (காகிதப்பஞ்சம்) 370
10. பப்ளிக் ஸெர்விஸ் கமிஷன் ரிபோர்ட்டு 371
11. யாத்திரை க்ஷேத்திரவர்ணனை : ஆக்ரா 372
12. சிறுவர்க்கானபக்கம் : குரங்கும் குழந்தையும் 375

OUR NEW VICEROY ON "CONTINUITY AS A CARDINAL PRINCIPLE OF POLICY."*

OUR NEW VICEROY.

நமது புதிய அரசர் பிரதிநிதி.

நமது புதிய அரசர் பிரதிநிதியாகிய லார்ட் செம்ஸ்போர்ட் அவர்கள் ஏப்ரல்மீ 4ௌ லார்ட் ஹார்டிஞ்ச் அவர்கள் கப்பலேறினதும் தமது வேலையை ஒப்புக்கொண்டு மந்திராலோசனைசபையில் கொலுவிருந்தார். அப்பொழுது பம்பாய் முனிசிபல் சங்கத்தார் வாசித்தளித்த நல்வரவுபசாரப்பத்திரத்துக்கு பதில் கூறிய பொழுது தாம் வித்யாவிஷயத்தில் மிக்க சிரத்தையுள்ளவரென்பதைக்காட்டி வித்யா விஷயமான உழைப்பின் பரோபகார சீலத்தைப் புகழ்ந்து பேசினார். அன்றி தாம் லார்ட் ஹார்டிஞ்ச் அவர்கள் வழிபற்றி நடக்கத் தீர்மானித்திருக்கிறதாகவும் ஆளாத்தன முறையிலும் வித்யா முறையிலும் இடையறா முயற்சி அவசியம் வேண்டியதென்றும் அது ஓர் முக்கியக் கொள்கையென்று தாம் நம்புவதாகவும் சொன்னார். அவருடைய வாய்மொழியை அடுத்தப் பக்கத்தில் எடுத்து அச்சிட்டிருக்கிறோம். புதிய இராஜப் பிரதிநிதி வந்தால் எப்படி யிருப்பாரோ எவ்வழி பற்றுவாரோ வென்று சிந்தைப்பட்டிருந்தவர்களுக்கு இந்த வாக்குறுதி ஆறுதலையும் தேறுதலையும் கொடுக்கும் என்று எண்ணுகிறோம்.

* Lord Chelmsford in replying to the Bombay Corporation address said:—

MR. PRESIDENT AND GENTLEMEN,—Let me first thank you for the personal note of welcome contained in your address. India, above all countries, is not likely to belittle the value of hereditary association and though the period during which my grandfathers were connected with the old Bombay Army is beyond my memory still it is something that the link is there, and I value it as a stimulus and an inspiration. You allude to my sixteen months' sojourn in India as a Territorial officer. I am grateful for the experience derived. In the first place, I was enabled to see with my own eyes the steadfast loyalty of the Princes, Chiefs and peoples of India to His Majesty the King-Emperor. India has no need to be reminded of His Majesty's keen and lively solicitude on her behalf. In the second place I was privileged to watch the work and win the friendship of His Excellency Lord Hardinge who lays down his office to-day. Lord Hardinge has won to an unprecedented degree, the confidence, the respect, nay I would say the affection of the peoples of India, and he has set a hard task before his successor. *Continuity is, however, in my opinion a cardinal principle of policy* when one man succeeds another and so far as possible I shall deem it my duty and privilege to carry on Lord Hardinge's work where he has left it. You refer in your address to my municipal experience. *I must confess that Municipal work, especially in the educational sphere, is my first love.* It has to my mind the preeminent merit of being removed to a large extent from the ordinary divisions of party politics, and men differ only or should differ only according to their respective views of the expediency of a particular piece of concrete work. Those who engage in it for the most part, and I speak from my experience of my late colleagues on the London County Council, look for no reward beyond that of satisfaction in the good work well done on behalf of the community. Following your example I shall not refer to your local needs. It is neither the occasion nor the time. But I am not unaware of the splendid work which has been done in Bombay in respect of the transport of troops and of your work in the hospital for such of those troops as return invalided or wounded from the stricken field. Lady Chelmsford would wish me to thank you for the welcome accorded to her in your address. Those of us who have had previous experience as Governor-General or Governor know the debt we owe to our wives, and know that, come what may, there is one at our side who can sustain us when we flag and inspire us with fresh courage when we are downhearted. I cannot end my reply without an acknowledgment of that passage in your address which refers to the war. I return here from England where I found all men determined that there should be only one ending to this war, namely, a victory for the Allied arms. Your address assures me of the same invincible determination. No personal losses, no reverses will quench this spirit. We are all of one mind in this, that peace can only come when we have secured the safety, honour and welfare of our sovereign and his dominions.

"DEDICATORY EPISTLE TO THE MINISTER OF EDUCATION."

DEDICATION.

" They reckon ill who leave ME out ;
When ME they fly, I am the wings ;
I am the doubter and the doubt,
And I the hymns the Brahmin sings."

—*The Song of the Child.*

Verily, the Call to work for Children came true !
In full, Grace of Help, meet to work was shown
On All-Saint' Day the festive throng of Servants True
In Temple'doring God He came and made ME His own !
Entering the heart of Teachers true to children minist'ring
A Child He came, taking my all, His All to give !
The Saviour of Gods, the servant of His servants that in Thillai live,
The Evil one with one foot crushing His other foot in Grace uplifting !
The Mystic Dance of Grace He danced, the Gracious Eye
Of Love witness ! and His Servants true beholding, they
Knew *nought else* but He and His : To them with the *seeing-eye*
This work seek I through you dedicate, *Servus Servorum De.*

FOREWORD.

To

THE HON. SIR C. SANKARAN NAIR AVL, KT., C.I.E.
MINISTER OF EDUCATION IN THE VICEROY'S COUNCIL,
DELHI.

SIR,

Availing myself though late, of the permission accorded me to write to you 'after assuming charge' of your present office, I desire to publicly inscribe the following few lines addressed to you (in thought) as 'FOREWORD' to the work* in which it appears, in the hope that the cause therein espoused will receive at your hands, as Minister of Education, that earnest consideration and active support which it so well deserves.—

The Need for the Reconstruction of Society and State on a sounder basis is felt on all sides and the cry for giving effect to it has already been raised in England, which demands through its mouthpiece, the London *Times*, "*a revolution in the conception of education in its relation to the life of the people*" and the needed "*machinery which will make the new conception operative.*" The 'New Conception' conists in the authorities learning " to think of education not as a means for conveying to the masses of the people a certain minimum measure of book-learning, *but as a biological process for supplying to every child the outfit for life.*" This 'New Conception' is more in consonance with the ancient idea of education obtaining in India than it may seem to a superficial observer whose " angle of vision " is fixed by " the limitations imposed by the educational ideas that are enshrined" in the official Codes,—which limitations the country cannot escape from, until there is equally a *revolution* in India in the official way of looking at things educational. Already the air is thick with the uplifted Voice of *Seers* and *Statesmen* who perceive the incalculable harm which the "limitations" imposed by the official Codes and modes are doing to the country ; and the Viceroy as the Head of the State and Sir Rabindra Nath Tagore, the " Poet-Laureate of Asia " as representing the ancient Wisdom of India, have at the same time raised their voice against the Vehicle of Education being in a foreign language to the detriment and neglect of the vernaculars of the country.

The current conception of education, the errors of which are admitted on all hands, must give way before the awakened consciousness of the nation stirred to its deepest depths by the stirring events of the times ; and independent workers are already paving the way for the 'New conception' which to us is as old as the Himalayas, gaining ground. Witness Sir Rabindra Nath Tagore's discourse at Calcutta on the "Vehicle of Teaching" which occurred on the same day (10th December 1915) as the Viceroy was expressing his opinion to the same end at the Veterinary College, Lahore. The contents of this volume is the result of a direct Study of Temple-Traditions, Religious Folklore and Childrens' Songs which the author was free to pursue untrammelled by the limitations of the official mind. That freedom is now circumscribed to a certain extent by the limitations of the official-mind, which seems to move still in its old groove, the efforts of Directors and Ministers of Education to reform and remodel it on new lines notwithstanding.

* "Lyrics and Lay-Songs of Temple Legends."

In is now laid down as an indisputable maxim which the parents of children and the educational world will do well to accept and act upon, as best they can, that—

" Children have a stronger desire for first principles than most people suppose. That is a natural desire of the human mind, which is often so much thwarted and disappointed by life that they lose it as they grow older and come to think of it as a mere childish folly. Every one is born a philosopher, as every one is born an artist : but because philosophy is a pompous word, we suppose it to be only the concern of experts."*

This pomposity of the word is due not to anything inherent in it which simply embodies in one word the truth of the maxim—"*Vox populi, vox-Dei*," but to the vain-gloriousness of pedants with immature and imperfectly trained minds that often, like the Jackdaw in the fable, seek to strut and shine in borrowed feathers.

" Great men do not lose their Child-Heart," and one of the lasting things which the Viceroyalty of His Excellency Lord Hardinge has done to renew and renovate the drooping Spirit of India and uplift it to the glory of its ancient Ideals, is the foundation of the "Children's Day" in India, which has done (more than anything else could have done in so short a period), a great deal to awaken **the Child-heart** and through it the child-mind to the duties and responsibilities resting on it as a civic factor in the uplift of Humanity to a higher and greater level of Earthly Life—" the Life Imperial"—from which alone it can realise the glorious destiny awaiting it in the near or distant future, according as the pace and the direction it takes to move along the Eternal Road of Evolutionary Growth, is quick and straight, or halting and crooked or round-about. Revolutions of ages cannot recover a lost truth which the child-mind fails to grasp at the proper stage in its evolutionary growth. I therefore make no apology in dedicating this volume through you, Sir, the Minister in charge of Education, to those "*Children of Light*" who, whatever their age or clime, are ever the guiding Angels of the Race and the true Messengers of Hope, Faith and Love which three alone have the power of uplifting Humanity above its own faults, failings and errors.

Now one word more as to the goal of all true teaching. In the words of the *Times* writer already quoted, "*It is that training of the mind and personality in concentration, alertness, individuality, precision, taste, which results in the assimilation of knowledge and the formation of character.* The classical training is but one of a hundred ways of achieving the same end, but in the hands of a skilled teacher it is a valuable way, for it brings the scholar's mind into direct contact with the genius of the great writers of great ages. But, *nevertheless, it is the teacher, not the ways, that really matters.* If the scholar has mastered his tools in the way of a thorough knowledge of reading, writing and arithmetic and has been trained in discipline, then when the secondary teacher takes him or her in hand the goal will be reached, whatever the way chosen may be, and the way can be varied to suit both the capacity and the possible future of the child. " Whether the special aptitudes of individual scholars be " for knowing men" —the study of the Humanities; or "for knowing the world"—the study of Nature ; it matters not very much. The circle of knowledge comprehends both, and we should all have some notion, at any rate, of the whole circle of knowledge. " The grand thing in teaching is to have faith " that every one is born with some aptitudes of this kind ; and to be careful not to deprive them of their divine inheritance by inexcusable bungling in handling them.

* *The Times' Educational Supplement.*

My own unfaltering faith in the goodness of the cause and my knowledge of your own earnest desire to befriend it, has inspired and encouraged me to thus publicly address you, Sir, in your exalted position, in the exercise of that freedom of thought and franchise which "the philosophy of the spirit"† and the Republic of Letters accord to their respective votaries; and I trust, Sir, you will receive and consider it in the spirit in which it is conceived.‡

In addition to the papers on the Reform of Rural Education which I am sending for your consideration, I would like to invite your attention to the pronounced views expressed at the Convocation of the University and on the occasion of the Christian College Day here, recently.

The Hon'ble Sir H. Stuart spoke in no uncertain terms, his views and convictions on the present system of education which "*it is regrettable gives no weight to those things of the spirit*" that are so essential for the formation of CHARACTER which is "the basis of true citizenship. Speaking of the woeful results of a system which compels the majority of students" *to receive their education through the medium of a foreign language,*" he said that it "strikes the lay observer as *not only mechanical in method and result, but wasteful of valuable years—years when the youthful mind is most open to impressions and receptive of ideals.*" I feel sure, I am voicing the feeling of the whole country when I say that it looks to you, Sir, the first Indian Minister in charge of Education, to prevent this waste of child-life to which I call pointed attention in my Tamil Articles on Rural Education (*Vide* Octr. to January issues of the *Vivekachintamani*.)

Believe me, with sincere good wishes,

Your most Obedient Servant,

LALITALAYA,
January, 1916. } C. V. SWAMINATHAIYAR.

† "A child is just as well able to understand that he must be good for the sake of being good as anyone else is. If the sprit exists in human beings the philosophy of the spirit can be understood by them; anthepohpdli ophy of the spirit is that spiritual activities, whether moral, intellectual, or æsthetic, are to be pursued for their own sake. If pursued for any other reason they are not spiritual activities. So one puts it in general and Philosophica lterms for parents ; but they can, if they understand and believe it, put it more simply, and particularly to their children."

‡ *Vide* Some observations "On the Educatialo Neesnd of the Hour" at p. x. of Lyries & lay-Songs of Temple Legends.

FRŒBEL AND THE FIRST PRINCIPLE OF EDUCATION.

(From the Kindergarten Magazine.)

THE PROPHET AND THE VISION.

A prophet saw a vision long ago,
To people blind he tried his dream to show
They thought he was benighted,
His eager words they slighted,
So little did the foolish people know.

The Prophet to his heart held close the vision,
He bowed beneath the torrents of derision,
He dreamed of children's gladness—
He waited—not in sadness—
Until the time he could fulfil his Mission.

At last the eager little children found him;
With dance and song they gathered close around him.
He was the blessed Warden
With key to a fair garden;
He swung the gates—for chains no longer bound him.

With blindness past we linger, not repining;
Our present joy is future hope defining,
The circle of our years
Is marked by smiles—not tears;
To greet the perfect day our star is shining.

*ஆத்மிகவித்யாபோதகரிஷியான 'ப்ரோபல்.'

அவர் கண்ட வித்யாதத்துவ தரிசனை.

1. தாழ்ச்சியில்லா வொருதீர்க்க தரிசிவெகு காலமுன்னேர்
காட்சியுற்றே யக்கதிவாங் கண்ணிலகுருடர்க்குணர்த்தச்

* ஆத்மிகவித்தை-ஆத்மதத்துவத்தை வளர்க்குவது. ஆத்மிகவித்யா போதனை—The Psychological Method of Education, which is truly a *drawing out* of the Mind and all its faculties—the First Principle underlying the Kindergarten Method. ரிஷி-தீர்க்கதரிசி-Seer.

சூழ்ச்சியுற்றூர் சூழ்ந்ததனைச் சொன்னுரைத் தம்புத்தி
நீட்சியில்லாப் பேதையர்கள் நினைத்தனர்கள் பித்தனென்றே !

தாழ்ச்சியில்லாத-குறைவில்லாத ; சூழ்ச்சி-ஆலோசனை.

2. நினைத்ததுமல் லாமலவர் நேசமொடு பேசுமொழி
யனைத்தினையு நிந்தித்தா ரவர்களறி வவ்வளவே !
முனைத்தகைய புத்தியினுர் முன்கண்ட தேசினைவாய்க்
கனைத்தறிவில் லார்பெயுஞ்சொற் கன்மழையைப் பொறுத்தனரே.

முனைத்தகை-கூர்மைத்தன்மை ; கனைத்து-ஒலித்து, அல்லது திரண்டு; சொற்கன்மழை-வன்சொல்லாகிய கல்மழை.

3. கிண்கிணிச்செவ் வாய்ச்சிறுவா கேடில்லாச் சந்தோஷத்
தண்கடற்கண் மூழ்கிடவுந் தாங்கண்டு, கருதுகின்ற
வொண்கருத்துப் பயனுறவு மொருகாலம் பார்த்திருந்த
ரெண்கலக்க மிலராகி யிவ்வாறு நிகழுநாள் - -

ஒண்கருத்து-தெளிந்தஎண்ணம். பயனுறல்-நிறைவேறல். எண்கலக்கம்-மனக்கலக்கம். இவ்வாறு-இந்தப்பிரகாரம். நிகழும்நாள்-நடக்குங்காலத்தில்.

4. ஆவலோ டருஞ்சிறுவ ரவர்தம்மைக் கண்டுகொண்டார்
கூவுதாய் தனைக்கண்ட குழந்தைகளை நிகரானுர்
தாவியே யாடினுர் பாடினுர் தாஞ்சுற்றி
மேவினு ரெவர்க்கேனும் விடியாதோ வொருகாலம்!

கூவுதல்-அழைத்தல்; விடியாதோ ஒருகாலம்-ஒருகாலமில்லாவிட்டாலுமொருகாலம் விடியுமென்னும் பழமொழிக்கருத்து.

5. காட்டுமவ ருளமெனும்ஆ நந்தத்தோட் டக்கதவின்
பூட்டுவிடத் திறக்கின்ற பொற்கோல்கொண்ட வரானுர்
வீட்டுகின்ற பற்றென்னும் விலங்கற்றோ ரானதினுல்
தோட்ட வழியைத்திறந்தார் துணிவுறுமந் திரக்கோலால்.

வீட்டுகின்ற-வீழ்த்துகின்ற. 'மனமொருவழிப்பட்டது மந்திரம்' என்றிருத்தலால் 'மந்திரக்கோலால்'—என்பதற்கு 'ஏகாக்கிராந்த சித்தி பெற்ற அவர் மனேசக்தியால்' அல்லது சுருக்கமாய் யோகசக்தியால்' என்று அருத்தம் செய்துகொள்ளல் பொருந்தும்.

6. விழியினைமூ டியகட்டு விட்டுமின்ன காமுப்பும்
வழியறிந்துய்ந் திடவருந்தோம் வாளாது நிற்கின்றோம்;
பொழுதிதில்நா மனுபவிக்கும் போதவின்ப மினிநமைச்சேர்
அழிவிலா வின்பத்துக் கறிகுறியா யிருக்குமால்.

வாளாது-வீணுய். பொழுதிதில்-இப்பொழுதில். போத இன்பம்,-போதம்-அறிவு. 'அழிவிலா இன்பம்'-பூரணஞானத்தாலுண்டாகும் பேரின்பம்.

7. ஆயுளெனு மொருவட்ட மழுகையின்றிச் சந்தோஷ
மேயதிக மாகநிறைந் திருக்குமாற் பூரணத்தை
யேயுநாள் தனைநாடி யேநமது நாள்மிக்க
தூயசுட ரொளிவீசித் துலக்கமுறு கின்றதுவே.

ஏயு நாள்-அடையும் நாள். மிக்கதூய சுடரொளி-தாரகவொளி; மனத்தூய்மை யெய்தியகாலத்து ஞானக்கண்ணுக்கு விளங்கும் ஆத்மப்பிரகாசம். இதைத் தாரகயோகவழியில் 'தாரகவொளி' என்று சுருக்கமாய்ச் சொல்லுவர்.

* SHORT SAYINGS ON GREAT SUBJECTS.

(BY A WANDERING ASCETIC)

பேராற்றலைக் குறித்து
ஒரு பரதேசி சொல்லிய
சிறுமாற்றங்கள்.

தைரியம்.

இவ்வுலக வாழ்க்கையில் மேன்மை யடைவிப்பது தைரியமே. புகழிற்கு மூலகாரணமும் அதுவே. மேற்கொண்ட தொழிலிற்கேற்ற தைரியமிருத்தல் வேண்டும். தமக்கு நேரிடக்கூடும் தீங்கைச் சிறிதும் ஆலோசியாமல் தம் பக்தியினுறுதியுற்ற சத்தியக் கொள்கைகளைத் தைரியமாய்ச் சனசமூகத்திற்கு எடுத்துரைத்தல் மேற்கூறிய தைரியத்தினாலேற்படும். நம்கொள்கைகளைக் குறித்துப் பழித்து நகையாடுவார்களே என்ற அச்சம் சிறிதுமில்லாமல் நம் நம்பிக்கைகளை எடுத்துக் கூறல்வேண்டும். ஒருவனுக்கு ஒரு காரியத்தைச்செய்து முடிக்கத் திறமை யிருக்கலாம். ஆனால் அவன் அதைச் செய்யும்பொழுது அச்சமடையில் யாதுபயன்? ஒரு விஷயத்தைப் பற்றித் தெரிந்தவர் அதையே எடுத்துச் சொல்ல திறமையில்லாதவராகின்றனர். சொல்லமுடியாமை தைரிய மின்மையாற்றான், என்று ஏற்படுகின்றது. தைரியமுடைமையே தீங்கினின்றும் ஒருவனைக் காப்பாற்றுவிக்கும். தைரியமே, மேலும் மேலும் எத்தொழிலையுஞ் செய்தற்கேற்ற ஊக்கத்தைத் தருகின்றது. கம்பர் சிறப்புப் பாயிரம் வாங்கிவர தைரியத்தை விடாததால் கம்ப ராமாயணமும் கம்பரும் இருக்கிறார்கள். புகழுறுவதற்கே தைரியத்தை மேற்கொள்ளுகின்றனர் அநேகர். மனச்சாக்ஷிக்கு நேர்மையானவற்றையும் கடமையாற்செய்ய வேண்டியதையும் பயன்தருவனவற்றையும் தைரியமாய்ச் சிலர் செய்து முடிக்கின்றனர். குப்பையிற்கிடந்தாலும் மாணிக்கத்தின் பெருமை சிறிதேனும் குறையாதவாறுபோல் எப்பயனை எதிர்பார்த்துத் தைரியமுற்றாலும் அக்குணமுடைமை மேன்மையே. தைரியம் புருஷலக்ஷணம். பலவித இல்லாத காரணங்களைக் கருதி பிறர் ஊக்கத்தையும் கெடுத்து தானும் கெடுகிறவனே ஆண்ரூபம். 'செய்யாத காரியம் செய்யத் துணிவதும்' † தைரியம் தானே. பொருள் கவர்வதும் தைரியம் தானே. 'தைரியமாவது ஒண்ணாவது, எல்லாம் காலத்தைப்போல நடக்கவேண்டும்' என்பார் பலர். அவர்களே உலகத்திற்கு சுவை. இனி காலத்தைப்பற்றிக் கவனிப்போம்.

காலம்.

உலகத்திலடையக்கூடிய எல்லா நன்மைகளும் காலத்தைப் பற்றியவே. அநுபவிப்பதற்குக் காலமில்லாவிடின் சிநேகிதத்தாலேனும் புத்தகங்களாலேனும் சௌக்கியத்தாலேனும் தேசசஞ்சாரவின்பத்தினாலேனும் என்ன பயனையடையவரும். காலத்தை பணத்திற்கொப்பிடுவது வழக்கம். உயிருக்கு ஒப்பிடுவதே மேன்மை. நாம் பயனின்றிக் கழிக்கும் வினாடிகள் யுகங்கள் புரளினும் மறுபடியும் அடையலாகுமா? சிலருக்கு இன்பமும், சிலருக்குத் துக்கமும் விளைதல், ஒரே காலவளவையைச் சிலர்க்கு அதிகமாகவும் சிலருக்கு குறைவாகவும் காட்டுதல், குற்றத்தைச்செய்து அதனை வெளியிடுதல் ஆகிய இத்தகைய மாறு

* We make a present of these stray thoughts of a youthful ascetic (not yet 23 years old) who, attracted by the 'religious ideal,' has left home & parents to wander in quest of Truth or attain *Kaivalyam* (perfection), to those who would lightly lay their iconoclastic hands on the 'Religious Ideal' hallowed by traditions of ages & incrusted in words & deeds of every-day life. He is not 'educated' in the sense in which it is now generally used. Of English he knows not a word & in Tamil his spelling is "awful bad" as the Inspecting School-master would remark. We have corrected his spelling but have left his ideas & sentences untouched. (We may add we met him 13 years age. *Ed. V. C.*)

† We have generalised in these words the 'particular' statement of the author.

தலையுடைய குணங்களுக்கெல்லாந் தலைவன் காலம். காலம் மனிதர்களுக்குகந்தாற்போலவும் நடக்கின்றது. சிலரிடத்து அது மெதுவாகப் பேசுகின்றது; சிலரிடத்து தவழ்கின்றது; கல்லாத மூடனிடத்து நடிக்கின்றது. காதலால் வருந்துபவரிடத்து மிகவும் மெதுவாகப் போகின்றது. விடுமுறை காலங்களில் நியாயவாதிகளுடன் தாழ்கின்றது. சோம்பேரிகளே ஒரு காரியத்தைச் செய்யக் காலமில்லை யென்பார்கள். "வேண்டுமென்று நூற்றால் வெண்ணெய் போல் நூற்கலாம்." இன்பமிருந்தால் எதுவும் செய்யலாம். முயற்சி செய்யாமலே காலத்தின்மேல் பழி போடுவார் அநேகர். காலத்தை வீணே கழிக்காமல் வாழும் வாழ்க்கையே மேலானதெனப் புகழலாம். ஒரு காரியத்தை இன்றைக்குச் செய்யலாம் நாளைக்குச் செய்யலாம் என்று நினைத்துத் தள்ளுதல் மடமை. செய்யவேண்டியதை உடனே செய்யவேண்டும். காலமாகிய செம்படவன் மனிதர்களாகிய மீன்களை அவரவர்களுக்குப் பிரியமான உணவைத் தூண்டியில் வைத்துப் பிடிக்க முயலுகின்றான். சீக்கிரத்தில் அவன் தூண்டிலில் சிக்கிக்கொள்ளுகிறார்கள். காலம் பறப்பதாகப் பலர் கூறுவார்கள். காலத்தை வீணே கழிக்கும் நம்மினும் அது ஓடவில்லை. ஆதலால் நம்மால் இயன்ற உதவி செய்யவே காலம் ஏற்பட்டது. மேல் விசாரணை ஒன்று செய்யவேண்டும். அது,

தன்முயற்சி,

நாம் அடைய விரும்பும் எப்பொருளையும் முயற்சியின்றி எய்துதலரிது. முயற்சிசெய்தால் எதுவும் முடியும். முடியாத காரியம் இவ்வுலகிலில்லை. மூடரே ஒருசெயலைச் செய்தல் முடியாது என்பர். நம்மவர் தப்பாக அர்த்தம் கொள்ளும் விதிக்கொள்கை முயற்சியைப் பெரிதும் தடைசெய்கின்றது. "ஊழிருந்தால் எதுவும் நாம் முயலாமலே வந்துறும்" என்னுங்கூற்று அடிக்கடி கேள்விப் பட்டிருக்கிறோம். ஊழ்வலி கூட்டிவைக்குமேயன்றி ஊட்டிவைக்காது. தன்முயற்சியின்றி ஊட்டமில்லை. இன்னும் சோதிடர் வாய்மொழியில் நம்பிக்கையுள்ளவர் அதிகமாக முயற்சி செய்வதில்லை. ஒரு நோயுற்றான் பிழைத்திருக்க வேண்டுமென்று மருந்துகொடுக்கவேண்டுவது அவசியம். அவ்வாறிருப்ப அநேகர் 'பிழைத்திருக்க வேண்டுமென்று பிரமன் விதித்தனனாயின் மருந்தின்றியே நோய் தீரும், இல்லையேல் எப்படியும் இறப்பான்' என்கின்றனர். இவர்கள்

> தெய்வத்தானாகா தெனினும் முயற்சிதன்
> மெய்வருத்தக் கூலிதரும்.

என்பதன் உண்மையை யுணர்வதில்லை. தானே முயற்சி செய்யாமற் பிறர்மேற் பழியிருத்தலொண்ணாது. காலமறிந்தும் இடமறிந்தும் முயற்சிசெய்தல் வேண்டும். தன்முயற்சியின்றிக் கடவுள் கொடுப்பார் என்று நம்பினால் அது கைகூடுமோ? அருங்கலத்திட்ட பாலடிசிலைக் கையாலுண்ணாமற் போனால் எவ்வாறு பசி தீரும். தெய்வம் காட்டுமேயன்றி வாயிலூட்டாது என்று பழமொழி வழங்குகிறது. முயன்றும் ஒரு பொருள் கிட்டாவிடின் மனத்தளர்ச்சி யடைதல் கூடாது. நமது ஊக்கத்தை மேன்மேலும் எழச்செய்தல் வேண்டும்: இப்பொழுது அடையும் துன்பங்களனைத்தும் இனி அடையும் இன்பத்திற்கு ஒரு அறிகுறி யென்று அதைநினைக்கவேண்டும். ஒரு தொழிலைச் செய்யப் புகுந்தாற் பெரிய தடைகள் வராமலிரா. இடையில் வருங்கஷ்டங்களை நினைத்து வருந்துதல் மடமை. தைரியமாய் முயற்சியாகிய துணைவலிகொண்டு எதிர்த்தலே மேன்மைக்குணம். ஆற்றாதனைப் போரில் வீழ்த்தலே மேன்மை. வீரனோடு போர்புரிந்து வெல்லுதலே நலம். இறைவனளித்த திறமையைக்கொண்டு தம்தம் தொழில்களை முற்றுவிக்கின்றவனே வாழ்க்கைப் போரில் துன்பத்தீயரைக்கடிந்து இன்பவெற்றிக்கொடி நாட்டுவோனாவான்.

"PEARLS OF FAITH"

SELECTED AND STRUNG TOGETHER, FOR PARENTS AND CHILDREN TO WEAR

(From the Sayings of St. Vemanna.)

ஆந்திரபாஷையில், பிரமஞ்ஞானியும், அருட்கவியுமாகிய,
வேமன்ன மகாகவி அருளிச்செய்த

பத்யங்கள்.

(First Series.)

உலோபிகளால் உலகுக்குப்பயனில்லை.

1. ஈயாதார் மண்ணிலிருந்தென் இறந்தென்னை
வையபயன் என்னை இடரென்னை — ஆயிழையே
புற்றுறையும் புன்கறையான் போந்து பிறந்தென்ன
மற்றதுதான் மாய்ந்தொழியின் என்.

(இ-ள்.) இரப்பவர்க்கொன்றைக் கொடாமற் பொருளைச் சேர்த்துவைக்கும் உலோபிகள் உயிரோடிருத்தலினாலுண்டாகும் பிரயோசனம் யாது. உயிர்விட்டு இறந்துபோதலினால் உண்டாகும் நஷ்டமென்ன இரண்டும் இல்லை. புற்றினுள் வாழ்கின்ற கறையான் பிறந்து விருத்தியானால் தானென்ன. இறந்து மடிந்தால்தானென்ன. (எவ்வளவோ உபயோகமற்ற ஜந்துக்கள்போல அவர்களும் என்றபடி.)

தன்னெஞ்சுபோலிருக்கும் பிறர் நெஞ்சமும்.

2. நின்னகத்தே வஞ்சம் நிகழிற் பிறருன்பால்
இன்னலுற வஞ்சம் இழைத்திடுவார் — உன்னகத்தே
வஞ்சனையொன் றில்லையெனின் மாநிலத்தே நிற்கொருவர்
வஞ்சனைசெய் யாரே மதி.

(இ-ள்.) நீ பிறருக்குக் கேடு நினைத்தால் பிறரும் உனக்குக் கேடு நினைப்பார்கள். நீ கேடு நினையாயாயின் உனக்கும் ஒருவர் கெடுதிசெய்யமாட்டார்கள்.

வன்மையும் எளிமையும் அவரவர் இடத்தைப்பற்றி உண்டாகும்.

3. வாரிதியில் ஓடிவரும் வங்கம் கரைப்புக்கால்
ஓரடியும் ஊரா துறைந்திடுமால் — ஆர்கிளையின்
வல்லார் வலமெல்லாம் வாய்ந்தவிடத் தேயல்லாற்
செல்லாதாம் வேறு தெரி.

(இ-ள்.) கடலில் செல்லுகின்ற கப்பலானது கரைக்கு வந்தால் சற்றும் அசையாததுபோல மகா சாமர்த்திய முடைய சூரர்களும் தனக்கு அநுகூலமான இடத்தில் தம் வலியைக்காட்டலாமேயன்றி மற்றவிடங்களில் அவர்களுடைய சாமர்த்தியம் செல்லமாட்டாது.

இதுவுமது.

4. யானையையும் கொல்லும் எளிதே புனன் முதலை
ஏனையிடம் நாய்க்கும் இகல்சாயும் — ஆனதனால்
மானவலி ஒன்று மதித்திடு நீ யார் யார்க்கும்
தானவலி ஒன்று தனி.

(இ-ள்.) முதலையானது ஜலத்தில் யானையைக்கூடக் கொல்லவல்லதாகும். அச்சலத்தை விட்டுக் கரைக்கு வருமாயின் நாயோடுகூடச் சண்டை செய்யமாட்டாமல் தோற்றுப்போகும். ஆகையினாலே ஒவ்வொருவருக்கும் இயற்கையாயுள்ள சக்தியிலும் இடத்தாற் பெறும் சக்தியே மேலானது.

நன்மக்களால் அடையும்பயன்.

5. ஒண்குணத்தின் நல்லான் ஒருவன் உளனாயின்
வண்குலத்துக் கெல்லாம் வனப்புண்டாம் — தண்பொழிலில்
சந்தனமென் வாசத் தருவொன்றினால் மிளிரும்
அந்தவனம் எல்லாம் அறி.

(இ-ள்.) நற்குண நற்செய்கையுள்ள ஒரு புத்திரன் உண்டானால் அவனால் அவன் குல முழுதும் பெருமையை யடையும். எப்படி யென்னில், ஒரு சோலையில் ஒரு சந்தன விருக்ஷமுண்டாமானால் அதனால் அச்சோலை முழுதும் பரிமளிக்குமாறுபோல.

துஷ்டமக்களால் வரும்கெடுதி.

6. காட்டகத்தே ஒருலவை தீப்பற்றிற் காடெல்லாம்
வீட்டுமது போல விளங்கிழையாய் — கேட்டைத்
தருவான் ஒருசழக்கன் தன் குலத்துக்கெல்லாம்
வெருவந்த செய்து மிக.

(இ-ள்.) காட்டில் புதரொன்றில் தீப்பிடித்துக் கொண்டால் அதனால் அக்காடுமுழுதும் வெந்து பஸ்மமாதல் போலக் கெட்ட குணமுள்ள ஒருவன் குலத்திலுண்டானால் அவனால் அவன் குலம் முழுதும் நாசமடையும்.

அற்பரும் மேலோரும் இத்தன்மையரெனல்.

7. பூரியர்தாம் என்றும் புகல்வார் இடம்பங்கள்
சீரியரோ யாதொன்றும் செப்பாரே — பேருலகில்
வெண்கலம்போல் ஓசை மிகாதுகாண் செம்பொன் செய்
ஒண்கலத்துக் கென்றே உணர்.

(இ-ள்.) உலகத்தில் அற்பகுணமுடைய கீழ்மக்கள் தம்மைப் புகழ்ந்து டம்பமான அநேக வார்த்தைகளைச் சொல்லிக்கொள்வார்கள். பெருமைக் குணங்களுடைய மேன்மக்கள் அடக்கமாயிருப்பார்கள். எவ்வாறெனில், வெண்கலபாத்திரங்கள் கலகலவென்று சத்திக்கும். பொற்பாத்திரங்களோ சத்திக்க மாட்டா.

செல்வமும்வறுமையும் பழவினைக்கீடாக உண்டாகும்.

8. முற்பிறப்பில் நல்ல முயலாதார் செல்வத்துக்
கிப்பிறப்பில் ஆசைப்பா டெய்திடுதல் — பொற்புடனே

விச்சிட்டு வேளாண்மை செய்யான் விளைவுக்கு
நச்சிட்ட வாறெனவே நாடு.

(இ-ள்.) பூர்வஜன்மத்தில் நல்ல புண்ணியங்களைச் செய்யாமல் இப்பிறப்பில் பாக்கியத்துக்காசைப் படுதல் கார்காலத்தில் உழுது விதைவிதைத்துப் பயிர்செய்யாதவன் பின்பு பலன்கொள்ளும் காலத்தில் பலத்துக்கு ஆசைப்படுதல் போலாம் என்றறிதல் வேண்டும். 'முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்' என்றார் ஏனையோரும்.

மனக்கிலேசத்தை மாற்றத் தரமில்லை.

9. இரும்பொடிந்தால் எத்தனைகா லேனுமதைக் கொல்லன்
திரும்பவுமே மூட்டத் தெரிவான்—விரும்பும்
மனமொடிந்தால் யாரே மருவியதை முன்போல்
இனமொருகால் மூட்டவலார் ஈங்கு.

(இ-ள்.) இரும்பினாற் செய்த கருவியொன்று ஒடிந்துபோனால் கருமான் அதை உலையிற்காய்ச்சித் தட்டிக்கொட்டி மூட்டவைப்பான். மனத்துக்கு வியாகுலம் உண்டானால் அவ்வியாகுலத்தைத்தீர்த்து மனத்தை முன்னிலைமைக்குக் கொண்டுவருதல் யாரால் ஆகும். ஆதலால் பிறருக்கு வியாகுலமுண்டாகும் படியான காரியங்களை நாம் செய்யலாகாது.

ஞானியென்பவன் இத்தன்மையானவன் எனல்.

10. பிறர்தாரம் வேண்டான் பிறர்பொருளும் வெஃகான்
பிறர்க்குதவி செய்வான் பெரிதும்—பிறர்தன்னைக்
காயினுந்தான் காயானாய்க் காசினியோர் போற்றநனி
மேயவனே ஞானியென வேண்டு.

(இ-ள்.) எவன் பிறர்மனையை நயவாமல், பிறர் பொருளுக்கும் ஆசைப்படாமல், தன்னாலியன்ற அளவு பிறருக்கு உதவி செய்வானாய் பிறர் தன்னை வெகுவாக உபத்திரவிப்பினும் தான் பொறுத்திருந்து அவர்க்குத் திரும்பவும் உபத்திரவம் செய்யாமல் யாரும் கொண்டாட இருந்து வருகிறானோ அவனே மகா ஞானியென்று சொல்லப்படுவான்.

ஆசையே நாசத்துக்குக்காரணம்.

11. தூண்டிலிரைக் காசித்துத் துள்ளுமீன் ஆருயிர்போய்
மாண்டிடல்போல் மாநிலத்தில் மாந்தர்தாம்—வேண்டரிய
ஆசைப்பேய் பற்றி அலைப்ப அறிவழிந்து
நாசப்பா டெய்துவர்நீ நப்பு.

(இ-ள்.) தூண்டிலில் வைத்த இரைக்கு ஆசைப்பட்டு மீன்கள் தம்முயிரை இழத்தல் போல உலகத்தில் மனிதர்கள் ஆசையானது பேய்போலப் பிடித்தலைத்தலினாலே தமது நல்லறிவு கெட்டு அவ்வாசைக் குள்ளாகித் தீவினைகளைச் செய்து நாசமடைகின்றார்கள்.

உதாரியைக்காணில் உலோபிவருந்துவான்.

12. ஈவான் மருங்கின்வாழ் ஈயாதான் அக்கொடைகண்
டாவா உயிர்விடுமால் அன்றேகாண்—பூவாய் வான்

கற்பகத்தின் பாங்குவளர் கள்ளிச் செடிதானும்
பொற்புறுவ துண்டோ புகல்.

(இ-ள்) உதாரியின் பக்கத்தில் உள்ள உலோபி அவ்வுதாரியின் கொடையைக்காணுந்தோறும் கவலையுற்றுப் பிராணனையிழப்பான்—எப்படி யெனில் கற்பக விருக்ஷத்திற்கு அடியில் முளைத்த கள்ளிச்செடி செழித்து வளரமாட்டாததுபோல.

அற்பர் பெரியோருடைய அருமையை அறியமாட்டார்.

13 அற்பருக்கு மேலாம் அதிகாரம் ஒன்றளித்தால்
பொற்புடையாரைத் துரத்திப் போக்கிடுவார்—குப்பைச்
செருப்பைக் கடித்துவக்கும் சீரில்லா நாய்தான்
கருப்பிரசம் காணுமோ தான்.

(இ-ள்.) அற்ப ஜனங்களுக்கு மேன்மையான அதிகாரத்தைக் கொடுத்தால் அவர்கள் மேன்மக்களது பெருமையை அறியாமல் வெறுத்து ஹிம்சை செய்து துரத்திவிடுவார்கள். செருப்புத்தோலைக் கடித்துச் சந்தோஷிக்கும் நாய்க்குக் கருப்பஞ்சாற்றின் மாதுரியத்தைத் தெரிந்து கொள்ளக்கூடுமோ.

பணமுள்ளவரையே வெகுமானிப்பார்கள்.

14. கைப்பொருளொன் றுள்ளானைக் காமனே யென்றுரைப்பார்
அப்பொருள்தான் இல்லா தருந்துயரம்—துய்ப்பானைக்
கன்னற் சிலைவேளே யானாலும் கைத்திடுவார்
இன்னற் புலையனில் ஈங்கு.

(இ-ள்.) செல்வமுடையவன் இழிகுலத்துதித்த குரூபியானாலும் உயர்குலத்திற் பிறந்த மன்மத லக்ஷணமுள்ளவனென்று புகழ்வார்கள். செல்வமில்லாமல் வறுமைத்துன்ப மடைந்தவனை உயர்குலத் தானாயினும் அழகிற் சிறந்த மன்மதனானாலும் புலையனை வெறுத்தல்போல வெறுப்பார்கள்.

பதிசொல்லைக்கேளாதவள் பதிவிரதையாகாள்.

15. பதிசொற் கடந்தொழுகும் பாவையாள் அன்னான்
சதியன் றவன்தலையிற் றீட்டும்—விதியாம்
இடம்பயின் றுவாழ்தலினும் ஈண்மடங்கு நன்று
கடும்புலிவாழ் காடென்று காண்.

(இ-ள்.) தன் கொழுநன் சொற்படி நடவாத ஸ்த்ரீ அவனுக்கு ஸதி யென்னும் நன்மனையாள் ஆகாள். பின்னென் னெனில் அவன் தலையில் அனுபவிக்கும்படி எழுதி நியமித்த துர்வினைப்பயனே யாவாள். அவளோடு கூடிவாழ்தலினும் கொடியபுலிகள் சஞ்சரிக்கின்ற காட்டிற் சென்று வாழ்தல் எண் மடங்கு நன்றாகும்.

வெளி வேடத்தைக்கண்டு உலகத்தார் மதிப்பார்கள்.

16. காதிற் கடுக்கன் கழுத்தில் வடந்தோளின்
மீதுத் தரியம்கை வெற்றிலையும்—ஓதக்கேள்
தக்கபரு மேனியுமுண் டாமேற்சன் மானிப்பர்
எக்குலமே யாய்விடினும் என்.

(இ-ள்) காதில் கடுக்கனும் கழுத்தில் மணிமாலையும் தோள்மேல் உத்தரீயமும், கையில் வெற்றிலையும் உடையோனாய் இவற்றிற்குத் தக்கபடி பகட்டான பெருத்த மேனியும் ஒருவனுக்கிருக்குமானால் அவனை எவ்வளவு இழிகுலத்தோனாயினும் உலகத்தார் சன்மானிப்பார்கள்.

CHARACTER SKETCH: THE STORY OF PROSCOVIA.

குணவலி விளக்கம்: ப்ராஸ்கோவியாவின் சரித்திரம்.

உலகத்தில் ஸ்திரீ புருஷர்களில் அநேகர் அநேக பெருந்தன்மையான காரியங்களைச் செய்து பேரும் பிரசித்தியும் பெற்றிருக்கிறார்கள். சிலர் ராஜபக்தியினாலும், சிலர் மாதா பிதாக்களிடத்தில் வைத்த வாஞ்சையினாலும், சிலர் புத்திரர் புத்திரிகளிடத்தில் வைத்த வாத்ஸல்யத்தாலும், சிலர் சகோதர விஸ்வாசத்தாலும், சிலர் புருஷபார்யா ப்ரணயத்தாலும், சிலர் ஸ்நேக பந்தத்தாலும் அதி சிலாக்கிய தரமான அருஞ்செயல்களைச் செய்திருக்கின்றார்கள். மேற்கூறிய பலவகையான அன்பினுள் எதனாலேனும் ஒன்றால் தாண்டப்பட்டுத் தமக்கு நேரிடும் கஷ்டங்களையும் சிரமங்களையும் பொருள் பண்ணாமல்—

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்."

என்றபடித் தாம் மேற்கொண்ட நற்கருமங்களை உறுதியாயிருந்து செய்து முடித்த புண்ணிய புருஷர்களின் விருத்தாந்தங்களைப் படிப்பதனாலே நமக்கு விசேஷ நன்மை யுண்டென்பது யாவர்க்கும் சம்மத மாதலினாலே, அவர்களில் ஒருவளாகிய ப்ராஸ் கோவியா என்னும் மாது சிரோமணியின் சரித்திரத்தை யாம் அறிந்த அளவில் இங்கு எழுதுகின்றோம்.

ப்ராஸ்கோவியா என்னும் பெயர்கொண்ட இந்நங்கை, நெடுநாளைக்குமுன் (Russia) ருஷியாதேசத்தில் ருஷ்ய ராஜாங்கத்தில் சேனைத் தலைவராயிருந்த லாபூலாவ் என்னும் ஒரு கனவானின் ஏகபுத்திரி. இவளது தந்தை யாதோ காரணத்தால் நியாயா நியாய விசாரமில்லாமல் மனம்போனபடிப் பிரவர்த்திக்கும் கொடுங்கோன் மன்னனாகிய ஒரு சக்கரவர்த்தியினால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டுத், தமது ஜன்ம பூமியினின்றும் அநேக நூறு காதங்களுக்கு அப்பாலுள்ள சைபீரியா தேசத்துக்கு அனுப்பப்பட்டு, ஆயுள் முழுதும் அங்கு தானே இருந்துவரும்படி சிக்ஷை விதிக்கப்பட்டார். இது ஏதோ சுலபமான தண்டனையென்று நினைக்கக்கூடாது. ஒருவனுக்கு எல்லாப் பேறுகளிலும் சுதந்திரம் என்பது மேலாகியது. அச்சுதந்திரத்தைஇழத்தல் உயிரிழத்தலினும் கடுமையானது, ஆனதினாலே இவருக்கு இஷ்டமானபடி ஓரிடத்துக்குப் போகவும் வரவும் இல்லாமல்நியமித்த இடத்திலே இருக்கவேண்டி வந்த நிர்ப்பந்தம் மிகவும் பொறுத்தற் கரியதே. மேலும் ஒவ்வொருவருக்கும் அவரவர் பிறந்து வளர்ந்து சுகித்திருக்கும் ஊரையும் உறவினரையும் நண்பரையும் இனத்தையும் விட்டுச் சிறிதுகாலம் பிரிந்திருப்பதென்றாலும்எவ்வளவோ வருத்தமாயிருக்கும். அப்படியிருக்க, இனி யென்றும் திரும்பி வாராதபடி நெடுந்தூரத்துக் கப்பால் ஆயுளுள்ள வரையில் இருக்க வேண்டிவரின் அதனிலும் கொடிய துயரா துள்ளது? அன்றியும் அவருக்கு நியமிக்கப்பட்ட இடம் சைபீரியாவின் தலைநகராகிய தோபல்ஸ்க் பட்டணத்துக்கு வடக்கில் ஐஸ்கிம் என்னும் ஒரு குலக்கிராமமாயிருந்தது. அங்கு நாகரிகமேது? நடையேது? பார்வையேது? கேள்வியேது? வேட்டையாடிச் சீவனம் பண்ணும் மறவரும், குறவருமன்றி வேறு சகவாசத்துக் கிடமில்லை. அன்றியும் அங்கு வருஷத்தில் பத்து மாதம் விட விட வென்று நடுக்கி யொடுக்கும் பனிக்காலமாம். அப்பனிக்காலத்தில் இரண்டு மாதமளவில் சூரியரஸ்மியே காணப்படாது. பிரளயாந்த காரம்போல் இருள் மூடிக்கொண்டு ஒரே இரவாயிருக்கும். வருஷம் முழுதும் வெயில் எறித்துக்கொண்டிருக்கும் உஷ்ண தேசத்தில் இருப்பவர்களாகிய நமக்கு அச்சீத தேசத்தின் பனியின் கொடுமை இன்வளவென்று ஊகிக்கவும் முடியாது. இவ்வளவும் போதாதென்று அவருக்குப் பாவம்!

"நெருப்பினுட்டுஞ்சலுமாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பாடரிது."—குறள்.

"நல்குரவென்னுமிடும்பையுட் பல்குறைத்
துன்பங்கள் சென்று விடும்"—குறள்.

என்றபடி அநேக துன்பங்களுக்குக் காரணமாகிய வறுமைத் துயராலும் வருந்த வேண்டியிருந்தது. அவருக்குத் துரைத்தனத்தாரால் காலக்ஷேபார்த்தமாகக் கொடுக்கப்பட்ட ஜீவிதப்பொருள் நாளொன்றுக்கு இரண்டணாவுக்குமேல் இல்லை. இது தவிர வேறோர் ஆஸ்பதமும் இல்லை. ஆதலால் இவரது நிலைமை மிகவும் பரிதபிக்கத் தக்கதாயிருந்தது.

இவருக்குக் கால வித்தியாசத்தால் இந்தத் துர்க்கதி நேர்ந்தபோது கணவனைப் பிரிந்திருத்தல் கற்புடைய மகளிருக்கு அழகன்றாதலின், இவரது சுகதுக்கங்களுக் குரியராகிய இவர் மனைவியும் மூன்று வயதுக் குழந்தையாகிய ப்ராஸ்கோவியாவும் உடன் சென்று இவருக்கு நேர்ந்த துயரத்தைத் தாமும் பகிர்ந்து கொள்ளலாயினர். நெடுநாள் மேற்பதவியிலிருந்து சுகங்களை அனுபவித்து வந்த இவரது மனையாளுக்கு இங்கு பணிவிடை செய்ய ஒருவரும் இல்லாமையினாலே மெழுகல், பெருக்கல், சமைத்தல், தோய்த்தல் முதலான நித்திய விருத்தி வீட்டுக் காரியங்களெல்லாம் தாமே மெய்வருந்தச் செய்துகொள்ள வேண்டியதாயிற்று. ஆயினும், அவர் அவற்றைச் சலிப்படையாமல் செய்து 'குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்' என்றபடித் தம் கணவருக்குத் தக்க ஆறுதலைச்சொல்லி அவர் வருத்தமடையாமல் பாதுகாத்து வந்தார். ப்ராஸ்கோவியாவுக்கு வயது செல்லச் செல்லத் தாயாருக்கு உதவியாக வீட்டுக் காரியங்களைத் தானும் செய்து வந்ததேயன்றி வெளியிற் சென்று கூலிவேலை செய்து யாதேனும் கிடைத்த பொருளையும் கொண்டுவந்து கொடுப்பாள். ப்ராஸ்கோவியாவுக்குப் பதினாறு வயதாகும் வரையிலும் தன் தந்தையின் வருத்தமாவது, தங்கள் முன்னிலைமையாவது, அவளுக்குத் தெரியாததினாலே களித்த சிந்தையும் சிரித்த முகமுமாய்ச் சந்தோஷமாயிருந்து வந்தாள். பின்பு தந்தை விடுதலை யடைவதற்குத் தாம் செய்த பிரயத்தனங்களெல்லாம் பயனில்லாமற் போனதனால் தம் வருத்தத்தைப் பொறுக்கமாட்டாதவராய் அதுவரையில் அவளுக்குத் தெரியவராமல் மறைத்து வைத்ததுபோல மறைத்தலை விட்டுப் பகிரங்கமாகத் தமக்கு நேர்ந்த கதியையும் அதற்கு விமோசனம் இல்லாமையையும் சொல்லித் துக்கிக்கத் தலைப்பட்டதனால் ப்ராஸ்கோவியாவின் களிப்பும் சிரிப்பும் சந்தோஷமும் இரவு கண்ட வெய்யில்போல மறைந்து போயின.

அது முதலாகப் ப்ராஸ்கோவியா தன் தந்தையின் வருத்தத்தைத் தீர்த்தருளும்படிப் பரமபிதாவாகிய கடவுளை அநுதினமும் காலையிலும், மாலையிலும் உள்ளன்போடு நெடுநேரம் தியானித்துப் பிரார்த்தித்து வந்தாள். அப்படி வருநாளில் ஒருநாள் தானே ருஷியாவின் தலைநகராகிய பீடர்புரிக்குச் சென்று சக்கரவர்த்தியை நேரிடக் கண்டு தன் தந்தையின் தண்டனையை மாற்றி மன்னிக்கும்படி விண்ணப்பம் செய்து கொண்டாலோ' என்னும் எண்ணம் காரிருளில் தோன்றிய மின்னொளிபோல் அவளுள்ளத்தில் பளிச்சென்று உதித்தது. அது முதலாக அவள் தன் வீட்டுக் கருகில் உள்ள ஓர் தோப்பிற் சென்று, தனிமையிருந்து நெடுநேரம் அதைப்பற்றிப் பலமுறையும் ஆலோசித்து, தனக்குள்ளே திடம் செய்துகொண்டு, அக்காரியத்தைச் செய்து முடிக்கத் தனக்குப் போதுமான சக்தியும் துணையும் அருளல் வேண்டுமென்று அன்பரது வேண்டுகோளுக்கிரங்கும் கருணாநிதியாகிய கடவுளை முழுவலன்போடு இதயநெக்குருகிப் பிரார்த்தித்து வந்தாள்.

ப்ராஸ்கோவியாவின் சரித்திரத்தைப் படிப்பவருக்கு, அவளது பக்திவலியும், கடவுளிடத்தில் அவள் வைத்திருந்த அசையாத நம்பிக்கையும், எளிது புலப்படாமற் போகாது. "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்னும் வாக்கியத்தை பிரமாணமாகக் கொண்டு அக்கடவுளின் துணையேயன்றித் தனக்கு வேறு துணையில்லை யென்றும், கடவுளின் திருவருளால் சாதிக்க முடியாத தொன்றும் இல்லையென்றும், நிச்சயமாக நம்பியிருந்தாள். இந்நம்பிக்கை யுடையார்க்கு ஆகாத காரியமுமில்லை ; தீராத துயருமில்லை ; வாராத நன்மையுமில்லை ; சாராத செல்வமும் இல்லை ; நேராத இன்பமும் இல்லை. இப்பக்தியும் நம்பிக்கையும் இல்லாமையினாலன்றோ சுழல் காற்றிலகப்பட்ட சருகுபோலவும் கடற்புயலிலகப்பட்ட கலம்போலவும் மனம் நிலையின்றிக் கலங்குவது! அன்னே யுன்னையல்லாலினி யாரை நினைக்கேனே' 'அடிகேளென்னமுதே யெனக்கார் துணை நீயலதே' என்று மெய்யன்போடும் பரமனைச் சரணமாக அடைபவர்களுக்கு யாதொரு குறையுமில்லை. இது நிச்சயம்.

ப்ராஸ்கோவியாவுக்குத் தான் கருதிய விஷயம் சற்றும் நிறைவேறுதற் கிடமில்லாத பித்துறவு போலத் தோன்றினமையால், தந்தை தாயாரோடு அதைச் சொல்லவும் சங்கோசப்பட்டுப் பலமுறையும் அதைப் பிரஸ்தாபிக்க வாயெடுத்தும் உரையெழாமல் மௌனமாயிருந்து வந்தாள். பின்பு ஒருநாள் என்ன வந்தாலும் சொல்லியே விடுகிறதென்று நிச்சயித்துக்கொண்டு தந்தை சந்தோஷமாயிருக்கும் சமயங்கண்டு நெஞ்சும் மார்பும் திடுதிடென்று அடித்துக்கொள்ளத் தான் கருதிய விஷயத்தை ஒருவாறு சொல்லித் தெரிவித்தாள். அது கேட்டுத் தந்தை கைகொட்டிச் சிரித்து தம்மனைவியை நோக்கிப் பார்த்தாயா' நமக்கு "இனி குறைவுமில்லை! நம்மை இத்துயரினின்றும் நீக்குகைக்கு நம்மகள் ஏற்பட்டுவிட்டாள்! நாளைக்கே நமக்குப் பிரயாணம் தான்! மூட்டை கட்டிவைக்க வேண்டியது தான்" என்று பரிகாசமாய்ச் சொல்லி அவள் கூறிய விஷயங்களையும் மனைவிக்குச் சொன்னார். அது கேட்டதும் தாயார் சிறிது கடுந்தொனியோடு, 'உனக்கு வேறே வேலையில்லையா? செய்கிற வேலையை விட்டுச் சிரிப்பாணி வேலையைச் செய்தாளாம்' என்று நல்ல யோசனை பண்ணினாய்! பீடர்புரிக்குப் போவது அப்புறம் ஆகட்டும்: இப்போது சாப்பாட்டுக்கு எத்தனம் பண்ணு" என்றாள்.

ப்ராஸ்கோவியாவுக்குத் தந்தையின் ஏளனத்தாலும் தாயாரின் கடுஞ்சொல்லாலும் உண்டான துக்கமும் வெட்கமும் பொறுக்க முடியாமல், பாவம், விம்மி விம்மி அழத் தொடங்கினாள். அது கண்டு தாயார் இனிய வசனங்களைச் சொல்லி அம்மா அழாதே: நின் தந்தையின் இடுக்கணை எவ்விதமாயினும் தவிர்க்க வேண்டுமென்று நீ எண்ணியது நியாயமே! அது விஷயமாக இன்னமும் ஆரத்தீர ஆலோசித்து நிச்சயிப்போம்: வருத்தப்படாதே என்று சாந்தமாகத் தேற்றினாள்.

அது முதலாக மூன்று வருடகாலம் அவள் தன்னைப் பீடர்புரிக்கு அனுப்பும்படி எவ்வளவோ மன்றாடிக் கேட்டும் அவர் உடன்படவில்லை. அவ்வாறு உடன் படாதது ஆச்சரியமன்று. பதினாறு வயது இளம்பிராயமுள்ள பேதைப் பெண்பிள்ளையை ஐந்நூறு காதத்துக் கப்பாலுள்ள பீடர்புரிக்குக் கால்நடையாக நடந்து அநேகம் ஆறுகள், மலைகள், வனங்கள் முதலியவற்றைக் கடந்து சென்று, அங்கு ஒருவருடைய வாக்குசகாயமுமில்லாமல், சக்கிரவர்த்தியின் தரிசனம் பெற்றுத் தான் எண்ணிய வினையை முடிக்க வல்லவளாக எண்ணியனுப்ப எவர்தான் உடன்படுவார்கள். தம் உயிரினும் சிறந்த தன்மகளை அவ்வளவு அபாயங்களுக்கும் இடர்களுக்கும் துயர்களுக்கும் உட்படுத்தித் தம் விடுதலையைப் பெறுவது ஒருவேளை சாத்தியமாயினும் அது பெற்ற தந்தைக்குச் சம்மதமாகுமா? தர்மமாகுமா? பிள்ளையின் அருமை பெற்றவர்க்கன்றோ தெரியும்? ஆகலின், அவர் ப்ராஸ்கோவியா எவ்வளவு சொல்லியும் ஒப்பாமல் முடிவில் அதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கவே கூடாதென்று கண்டித்தனர். ப்ராஸ்கோவியா என்ன செய்வாள்! தந்தை தாயாரின் சம்மதமில்லாமல் ஒரு காரியத்தைச் செய்தல் சற்குண சம்பத்தியுள்ள பிள்ளைகளுக்கு அழகாகுமோ? 'தந்தை தாய்ப்பேண்' என்றும் 'தந்தை சொன் மிக்க மந்திரமில்லை' யென்றும் 'தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை' யென்றும் வேதவாக்கியங்களும் சொல்லுகின்றனவே. ப்ராஸ்கோவியா பெற்றோர்களின் அநுமதியும் அநுக்கிரகமும் பெற்றுத் தான் மேற்கொண்ட காரியத்தைத் தொடங்கினாலன்றோ கடவுளுடைய அருளும் சித்திக்கும்? அவரது அநுமதியில்லாமல் அவர் சொல்லைக்கடந்து செய்யும் செய்கை நற்செய்கையாயினுமது தீதாய் முடியுமன்றோ? ஆகலால் உத்தம லக்ஷணமுடைய உயர் குலமகளாகிய ப்ராஸ்கோவியா தந்தையின் அநுமதியின்றி ஒரு காரியம் செய்ய வல்லளல்லள். ஆயினும் தான் கொண்ட எண்ணத்தை விட்டுவிடாமல், அக்காரியத்துக்குத் தந்தை தன் அநுமதி கொடுக்கவும் அதனைச் செய்து முடிக்கத் தனக்குச் சக்தியும் தைரியமும் அருளவும் எப்போதும் கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டே யிருந்தாள்.

(இன்னும்வரும்.)

A LESSON IN NATURE STUDY: RAINBOW.

பிரகிருதி வித்யாம்சம்: வானவில்.

வானவில்லை யறியாதார் இவ்வுலகத்தில் ஒருவருமிலர். இதனையே இந்திரதனுசு என்றும் சொல்லுவார்கள். சூரியனுக்கு எதிரில் மழை பெய்யுங் காலத்தில் சூரியரஸ்மிகள் ஜலத்துளிகளின்மீது விழ அதிக அற்புதமானதும் மனதுக்கு ரம்மியமானதும் சப்த வர்ணங்களுடன் கூடினவில்போன்ற ஓர் உருவம் ஆகாசத்தில் அடிவானத்துக்குச் சமீபத்தில் தோன்றும். உற்றுநோக்குங்கால் ஒன்றன்மேலொன்றாக இரண்டுவானவில் தோன்றும். உள்வானவில்லின் வர்ணரேகைகளின் அமைப்பானது தெளிவாயும் பிரகாசமாயுமிருக்கும். அதற்கு மேல் சொற்பம் இடைவிட்டுத் தோன்றும் மற்றொன்றின் வர்ணரேகையின் அமைப்பானது வர்ணங்களின் நிலைமை முறைமாறி அவ்வளவு பிரகாசமின்றி மங்கின நிறமுள்ளதாய்த் தோன்றும். சூரியன் அடிவானத்திலிருந்து நாற்பத்தைந்து டிக்கிரிக்குமேல் உயர்ந்திருந்தால் வானவில் கண்ணுக்குத் தோன்றாது. அதாவது கண்ணுக்குத் தோன்றும் ஆகாச வளைவை நான்கு பாகமாகச் செய்யுங்கால் அடிவானத்திலிருந்து மேற்கிலும் கிழக்கிலும் கால் பாகம் இருக்குமிடத்திற்குள் சூரியன் இருந்தால் இந்திர தனுசுவின் தோற்றம் நம் கண்களுக்குத் தோற்றும். இதற்குக் காரணமென்ன? சூரியனிடமிருந்து பார்க்கிற மனிதனுடைய கண்ணுக்கு நேர்கோடு இழுத்து அந்தக் கண்ணினிடமிருந்து சூரியனுக்கு எதிர்ப்புறமாக 45-டிக்கிரியுள்ள ஒரு கோணத்தை ஏற்படுத்தினால் அந்தக் கோணத்தின் மேற்கோட்டின் எல்லைக்குள் பிரகாசமான வானவில்லானது தோன்றும். ஆகவே எல்லா மனிதர்களும் ஒரே உயரமுள்ளவர்களாகவும் ஒரே இடத்திலிருந்து பார்க்கக்கூடாதவர்களாயுமிருப்பதால் உண்மையில் 45-டிக்கிரியுள்ள கோணங்கள் பல உண்டாகின்றன. அதனால் யதார்த்தத்தில் பார்க்கிற பேர்கள் எத்தனைபேர்

களோ அத்தனை வானவில் ஆகாசத்தில் ஏற்படும். அவனவன் பார்ப்பது ஒரு வானவில்லாயினும் அவனுடைய உயரத்துக்குத் தக்கபடி அவன் ஒன்றைப் பார்க்கிறான். மற்றொருவன் தானிருக்கிற இடத்திலிருந்து பார்க்கையில் மற்றொன்றைப் பார்க்கிறான். ஆகவே எல்லோரும் உண்மையில் ஒரே வானவில்லைப் பார்க்கவில்லை. ஆனால் பலபேர்கள் வானவில்லைப் பார்க்குங்காலத்தில் ஏறக்குறைய ஒரேயிடத்தில் ஒரே வானவில்லைப் பார்ப்பதுபோலவே நினைக்கிறார்கள். எல்லோரும் ஒரே குறிப்பிட்ட இடத்தை நோக்கி இதோ வானவில் தோற்றுகிறதென்று சுட்டிக்காட்டுகிறார்கள். இதற்குக் காரணம் என்னெனில் சூரியன் மிக்க தூரத்திலிருக்கிறபடியாலும் (9,20,00,000 மைல் தூரம்) பற்பல மனிதர்களுடைய உயரத்தின் அளவு மிகச்சொற்பமாயிருப்பதாலும் அல்லது அடிக் கணக்குகளாயிருப்பதாலும் மேற்கூறிய வித்தியாசங்களிருந்தும் தோற்றத்தில் இல்லாமல் பொய்த்துப்போகின்றன. இன்னும் ஆராயின் சூரியனுடைய ரஸ்மிகள் ஒன்றன்பின் ஒன்றாய் வருகின்ற ஜலத்துளிகளின் பிரவாகத்தின்மேல் பட்ட ஒவ்வொரு ஜலத்துளியும் ரஸ்மிகளைப் பிரித்துச் சித்திரம் எழுதினாற்போல் ஆகாசத்தில் தோற்றத்தை யுண்டுபண்ணுகின்றது. ஒரு விநாடியில் பார்த்த ஜலத்துளிகள் கீழே விழுந்து ஜலத்துளி பிரவாகங்கள் வந்துகொண்டே இருக்க வான வில்லில் யாதொரு கீற்று அல்லது பிளப்பு இல்லாமல் சித்திரப் படம்போல் கோணாமற் குழுகாமல் இடைவிடாமல் வானவில்லின் தோற்றத்தைப் பார்க்கிறோம். இதற்குக் காரணமென்னவெனில், பார்க்கிற நம் கண்ணில் உண்டாகும் பிம்பம் ஒவ்வொன்றும் அரைக்கால் விநாடி கால அளவு தங்கிப்பின் மறைகிறது. ஒரு பிம்பம் கண்ணில் பதிந்து அது மறைகிற காலத்துக்குள் அதேமாதிரியான மற்றொரு பிம்பம் ஒன்றன்பின் ஒன்றாய்த்தொடரும் பக்ஷத்தில் ஒரே பிம்பத்தைப் பார்க்கிறதுபோலவே நமக்குத் தோன்றும்.

இதைச் சிறு உதாரணங்களால் நன்றாய்த் தெரிந்து கொள்ளலாம். புஸ்தகம் வாசிக்கும்பொழுது கண் கொட்டினபோதிலும் எழுத்துக்கள் ஒரே வரிசையாய்த் தோற்றுகின்றன. கொள்ளிக் கட்டையைச் சுற்றுங்கால் ஒரே கொள்ளிவட்டம் தோன்றுவது யாவரும் அறிந்ததே. வாயில் ஜலம் விட்டு சூரியனுக்கு எதிரே துப்பும் பக்ஷத்தில் வானவில்கள்போன்ற உருவங்கள் தோன்றுவது பிரத்தியக்ஷம். நாம் வஸ்திரம் சுத்திபண்ணுங்காலத்தில் கல்லில் ஓங்கி அடிக்கையில் ஜலத்துளிகள் சிதறுங்காலத்தில் வானவில்லுகள் தோன்றுவதும் சகசம். சினிமிடோகிராப் காட்சியில் (அதாவது வஸ்துக்கள் உண்மையில் யியங்குவனபோல் உயிர்ப்பித்துக்காட்டும் படங்களைக்கொண்டுகாட்டும் காட்சி) கண்ணின் ஆதாரமாகக்கொண்டு நடமாடும் வஸ்துக்களின் பல நிலைமைகளின் புகைப்படமெடுத்து அவைகளைச் சக்கிரத்தில் வைத்து விரைவாக அதனைச் சுற்றி, ஒரு துவாரத்தின் வழி பார்த்தால் பின்னம் பின்னமாய்ப் புகைப்படங்கள் ஏற்பட்டிருக்கின்ற ஒரு வஸ்துவின் பல அவயவங்கள் கண்ணின் சக்தியர்ல் ஒன்று சேர்க்கப்பட்டுப் பலவிதமாக இயங்கும் வண்ணம் நாம் பார்க்கிறோம். இன்னும் அநேக வித்தைகளில் கண்ணின் சக்தியைப் பிரயோகித்து விசித்திரமான வேடிக்கைகள் செய்கிறார்கள். இந்த வானவில்லின் தோற்றத்தைக் காசிமாநகரில் வேணுகாவனத்தில் பகவான் கௌதமபுத்தர் சில சிஷ்யர்களுடன் சம்பாஷணை பண்ணுங்கால் "சம்சாரமென்று ஒரு பிரவாகம் இந்த வானவில் தோற்றத்தைப்போல" என்று திருவாய் மலர்ந்தருளினார். ஜலத்துளிகளின் பிரவாகம் ஓடிக்கொண்டிருக்க வானவில்லினது நிலைமை சத்தியம்போல் எப்படித் தோன்றுகிறதோ அப்படியே பிரபஞ்சம் என்ற பிரவாகமானது தோன்றியும் மறைந்தும் தோன்றியும் மறைந்தும் ஓடிக்கொண்டிருக்க நிலைத்திருக்கிறது போல் நாமும் எண்ணுகிறோம்.

HISTORICAL COLUMN: THE THIRD BATTLE OF PANIPAT.

சரித்திரவிலாசம்: பானிப்பட்டில் மூன்றாம் முறை யுத்தம்.

பானிப்பட்டென்பது இந்தியாவினின்று ஆப்கானிஸ்தானத்துக்குப் போகும் மார்க்கத்தில் உள்ள ஒரு நகரம். இது ஆதிகாலத்திலிருந்து அநேகயுத்தங்களுக் கிடமாய் யுத்தபூமியாயுள்ளது. பாரதயுத்தம் நடந்த விடமாகிய குருக்ஷேத்திரமென்பதும் இதுவேயென்பர். அப்பாரதயுத்தத்தில் பாண்டவரும் துரியோதனாதியரும் மகாபயங்கரமாக இடைவிடாமல் 18-நாள் பரியந்தம் போர்புரிந்து அநேக சாகசங்கள் செய்தது பலருக்கும் தெரிந்தவிஷயமே. பிற்பட்டு அவ்விடத்தில் மூன்று முறை மிக்க கடுமையான போர்கள் நடந்திருக்கின்றன. 1526-ம் வருஷத்தில், பிற்காலத்தில் இந்தியாவில் மொகலாயராஜ்யத்தை ஸ்தாபித்த அதி பராக்கிரமசாலியாகிய பேபரென்னும் ஆப்கானிஸ்தான் ராஜாவுக்கும், அக்காலத்தில் டில்லி நகரத்தி லரசாண்டுகொண்டிருந்த இப்ராஹீம் லோடி யென்னும் மகம்மதிய சக்கரவர்த்திக்கும் பெரும்போர் விளைந்து, அப்போரில் இப்ராஹீம் அபஜயமடைந்து பிராணனையுமிழக்க, அவனது அரசும் உரிமையும் அந்தபேபருக்கு ஸ்வாதீனமாயின. அதற்கு முப்பது வருஷத்துக்குப்பின், அவ்விடத்திற்றானே, மொகலாயராஜாவாகிய அக்பர் பாதுஷாவுக்கும் ஹீமுவென்னும் இந்துசேனாதிபதியொருவனுக்கும் பெரும்போர் விளைந்து அக்பர் வெற்றிபெற்றனன். அந்தப்போரில் மாத்திரம் அக்பர் தோற்றுப்போயிருப்பானாயின் மகம்மதிய ராஜ்யம் அன்றே தலைசாய்ந்து, இந்துக்களது ஆட்சியும் வலியும் தலையெடுத்திருக்குமாயிருந்தது. ஆயினும் வெற்றியும் தோல்வியும் ஒருவரது யத்தினமன்றே. அனைவர்க்கும் பொதுவாயிருந்து அனைத்தையும் தம்மிச்சைப்படியே நடத்தும் சர்வசக்தராகிய கடவுளின் ஆணைப்படியேயன்றோ நடப்பது. இவ்விரண்டு யுத்தங்களுக்குப்பின், 1761-ம் வருஷத்தில், இதே இடத்தில், மகம்மதியருக்கும் இந்துக்களுக்கும் பின்னுமோர் முறை பயங்கரமான யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தைப்பற்றிச் சிறிது இங்கு விவரிக்க எடுத்துக்கொண்டோம்.

பதினேழாவது நூற்றாண்டில், மஹாராஷ்டிர ராஜ்யத்தை ஸ்தாபித்து அழியாப்புகழைப் பெற்றோனாகிய சிவாஜிமகாராஜா இறந்துபோக அவனுக்குப்பின் அவன் மகனாகிய சாம்பாஜியென்பவன் சிறிதுகாலம் அரசு செலுத்தினன். இச்சாம்பாஜிக்கு வேண்டிய படைவலியும் துணைவலியும் பராக்கிரமமும் சாமர்த்தியமும் இருந்தும் தாளாண்மை யொன்றில்லாமையினாலே "தாளாண்மையில்லாதான் வேளாண்மை பேடிகை வாளாண்மைபோலக் கெடும்" என்றபடி அவ்வளவும் பயனின்றாகி தன் பகைவனாகிய அவுரங்கசீபின் கையிற் பட்டுக் கொடுமையாகச் சித்திரவதை செய்யப்பட்டிறந்தனன். இவன் மகனாகிய 'சாகு' வென்பவன் அக்காலத்தே டில்லி நகருக்குச் சிறையாகப் பிடித்துச் செல்லப்பட்டு, அங்கு அவுரங்கசீபு மரணமடையுங்காலும் பத்துப்பதினைந்து வருடகாலம் சிறையில்வைக்கப்பட்டுப் பின்னர் விடுதலையடைந்து தன் அரசையும் உரிமையையும் பெற்றனன். இவன் மொகலாயர்களுக்கிடையே நெடுநாள் வளர்ந்து வந்தவனாதலினாலே, அம்மொகலாயர் போலவே சிற்றின்பப்பிரியனாகித் தனது ராஜ்யகாரியங்களிலெவ்வளவேனும் கவனமில்லாதவனாய் எல்லாவற்றையும் தன்னைப்போலவே உதவியற்ற குனுஷாவென்னும் ஒரு பிராமண மந்திரியிடம் ஒப்பித்துவிட்டுத், தான் தன்மனம் போனபடி, வேட்டையாடுதலோ மீன்பிடித்தலோ ஏதோ ஒன்றைச்செய்து வீண்பொழுது போக்கி வந்தனன். அதனால் இராஜ்யத்தில் கோன்முறை செல்லாமல் குடிகளுக்குப் பாரமான,

வரிகள் போடப்பட்டு, இடுக்கண் மிகுதியாகி, இன்னம் சின்னாளங்ஙனமே துரைத்தனம் சீர்குலைந்திருக்குமாயின் மஹாராஷ்டிர ராஜ்யம் சிதறுண்டு நசித்துப்போகும் நிலைமையையடைந்தது. நல்லவேளையாய், அக்காலத்தே, அவனுக்கு நன்மந்திரியாக பாலாஜி விசுவநாத் என்றோர் பிராமணமந்திரி கிடைத்ததனாலே, அம்மந்திரியின் புத்திவன்மையினாலும் சாமர்த்தியத்தினாலும் இராஜ்யம் நிலைகுலையாமல் ஒரு சீரில் நிறுத்தப்பட்டது.

இப்பாலாஜி விசுவநாத்தென்பவன் சரித்திரத்தில் முதற் பீஷ்வாவாகக் கணிக்கப்படுகிறான். 'பீஷ்வா' வென்னும் பேருக்கு முதன்மந்திரியென்பது பொருள். இவனுக்குமுன் இப்பட்டத்தோடு இத்தானத்தில் அநேகர் இருப்பினும் அவர்களுக்கு இவ்வளவு பேரும் பிரசித்தியும் அதிகாரமும் கௌரவமும் இல்லாமையினாலே இவனே முதல் பீஷ்வாவாகக் கருதப்படுகிறான். இம்மந்திரி ஸ்தானமும் நாளடைவில் ராஜஸ்தானம்போலவே தந்தைக்குப் பின் மகனுக்குரியதாகி இவ்விசுவநாதனுக்குப் பின் இவன் புத்திரபௌத்திராதி சந்ததியார்கள் பரம்பரையாக இத்தானத்தை அடையலாயினர். ராஜபட்டம் அழிந்து போனபின்னும் கூட இம்மந்திரிப்பட்டம் அழியாது நெடுங்காலம் நின்று வந்தது. 'சாகு' வென்பவன் பேருக்குமாத்திரம் அரசனே தவிர இராஜ்யத்தில் வைத்தல் எடுத்தல் முதலான சகலமான நடவடிக்கைகளும் பீஷ்வாக்களாலேயே செய்யப்பட்டு, சாகு இறந்தபின், அவன்பின் ஆளுகைக்குத்தக்க சுதந்திரமும் வலிமையுமுள்ளவர் ஒருவரும் இல்லாமையினாலே, அந்தப் பெயர் மாத்திரமான அரசும் இல்லாது பீஷ்வாக்களே உண்மையில் அரசர்களானார்கள்.

இவ்வாறு பீஷ்வாக்கள் ராஜாதிகாரம் முழுதும் கவர்ந்து கொண்டதேயன்றி, இவர்கள் நாளில் மகாராஷ்டிர ராஜ்யமும் முன்னிலும் பன்மடங்கு விரிந்து பலப்பட்டது. இவர்கள் தக்ஷிணகண்டத்தில் நிஜாம் ராஜ்யம் தவிர மற்றப்பாகங்கள் முழுவதையும், வடக்கே இந்துஸ்தானத்தில் பெரும்பாகத்தையும் ஆக்ரமித்துக்கொண்டு, நாளாவட்டத்தில், தம்மதிகாரத்தின் கீழ் சிந்தியா, ஹொல்கார், கைக்கொவார், பான்ஸிலே என்னும் நான்கு அதிபர்கள் வெவ்வேறு இராஜ்யங்களை யேற்படுத்திக்கொள்ள இமச்சேது பரியந்தம் இப்பரதகண்டம் முழுதும் தமதுகொடியை நாட்டமுயன்று வந்தனர். இம்முயற்சிக்குப் பெரிய விகாதமாகி இவரது ராஜ்யமே அடிமுறிந்து குலைந்துபோதற் கேதுவாகப் புகுந்ததுதான் யாமிப்போது விவரிக்கலுற்ற பானிப்பட்டு மகாயுத்தம்.

இங்கு மகாராஷ்டிர பீஷ்வாக்களின் ஆளுகையில் இவ்வாறு தம்மை எதிர்ப்பவர் யாருமில்லாமல், நாளுளும் ஓங்கிவருங்காலத்தில், அப்கானிஸ்தானத்திலே அஹமத்ஷா அப்தாலி யென்றோர் அரசன் தோன்றினான். இவன் அப்தாலி அல்லது துரானி யென்னும் அப்கான் ஜாதியாருக்குத் தலைவன். முதலில், பாரசீகமன்னனாய் இந்தியாவின் மீது படையெடுத்து வந்து டில்லி நகருட்புகுந்து அந்நகரமாக்களை அநியாயமாக ஆயிரக்கணக்காக ஆபாலவிருத்தம் கொடுங்கொலை புரிவித்துச் சங்கரித்துக் கொள்ளை கொண்டுபோனவனாகிய நாதர்ஷா வென்பவன் சேவகத்தில் அமர்ந்திருந்து மகாவீரனென்றுபேர்பெற்று, அக்கொடியோன் இறந்தபின்பு தான் காந்தார நாட்டுக்கதிபதியாகி, அத்துடன் திருப்தியடையாமல், உடனேதானே இந்தியாவையும் வென்று கட்டிக்கொள்ளத் துராசைகொண்டு, 1747-ம் வருஷத்தில் முதன் முதல் இத்தேயத்துக்குப் படை

யெடுத்துவந்தனன். ஆயினும், தானொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்குமென்றபடி அவ்வெண்ணம் பலியாமல், மொகலாய சேனாபதியோடு போரில் தோற்றுப்புறங்கொடுக்கத் தொடங்கலாயினன்.

பின்பு, 'ஊக்கமுடைமை ஆக்கத்துக்கழகு' என்னும் முதுமொழியைக் கடைப்பிடித்தவனாகி, மறுபடியும் மொகலயா சக்ரவர்த்தியும் அவன் சேனாபதியும் மாண்டுபோன சமயங்கண்டு, இன்னொருவிசையும் ஓர் பெரும்படையைத் திரட்டிப் போருக்கெழுந்தனன். அப்போது புதிதாகப்பட்டத்துக்கு வந்திருந்த மொகலாயசக்கிரவர்த்தி அவனோடு எதிர்த்துச் சண்டையிடுதற்கஞ்சி, அவனுக்குவேண்டிய பல செல்வங்களையும், லாஹோர், மூல்டான் என்னும் இரண்டு நாடுகளையும் அவசரப்பட்டுக்கொடுத்து அவனோடு சிநேகம் செய்து கொண்டனன்.

இவ்வாறு அகமத்ஷாவுக்கு ஸ்வாதீனமாகிய லாஹோர் நாட்டை மூன்றாவது பீஷ்வாவாகிய பாலாஜி பாஜிராவென்பவனுக்குத் தம்பியாகிய இரகுநாதராவ் என்பவன் ஐதராபாத் ராஜனாகிய காஸியத்தீன் என்பவனது தூராலோசனையால் படையெடுத்துக் கைவசப்படுத்திக்கொண்டனன். இதையறிந்ததும், அகமத்ஷா மகா கோபாக்கிராந்தனாகித் தான் அதன்முன் என்றும் சேர்த்திலாத கடல்போன்ற பெருஞ்சேனையைத் திரட்டிக்கொண்டு 'மஹாராஷ்டிரப் பூண்டே யில்லாமல் மடித்துவிடுகின்றேன்' என்றோர்வஞ்சினம் பூண்டு கடைசியாக இத்தேயத்தின்மீது படையெடுத்துவந்தனன்.

(இன்னும் வரும்)

A LESSON IN ECONOMICS: CAPITAL.

அர்த்த சாஸ்திரம்: மூலதனம்.

தனோத்பத்திக்கு வேண்டிய ஸாதனங்களில் மூன்றாவது மூலதனம். தனோத்பத்தி செய்வதற்காக யந்திராதிகளாகவாவது, உழைப்பாளிகளுக்கு ஆகாரம் வகைராவாகவாவது பிரயோசனப்படுத்தப்படும் பொருளுக்குத்தான் மூலதனம் என்று பெயர்.

மூலதனத்தின் உத்பத்தி. மூலதனம் உத்பத்தியாவது எல்லாரும் கண்கூடாப் பார்க்கக்கூடியவிஷயமே. ஒரு சிறு உதாரணம் போதும். ஒரு கடற்கரையில் மீன்பிடித்து ஜீவனம் செய்துவரும் செம்படவர் கூட்டத்தைப்பற்றி விசாரித்துப்பார்ப்போம். முதல் முதல் அவர்கள் கரையில்வந்து தங்கும் மீன்களைப்பிடித்து அன்னன்றுடு காலக்ஷேபம் செய்துகொண்டு வருவார்கள். மீன்கள் ஏராளமாய்க்கிடைத்தால் மஸ்தாகத்தின்று கொழுத்துத் திரிவார்கள். அவை குறைந்தால் பசியுடன் வருந்துவார்கள். எக்காலத்திற்கும் சரியாக ஆகாரம் கிடைக்கும்படி செய்துகொள்வதற்கு அவர்களால் ஆகாது. ஆனால் இப்படியுள்ள செம்படவக் கூட்டத்தில் ஒருவன் தன் நிலைமையை நன்றாக்க, மீன்கள் அதிகமாகக் கிடைத்தபோது, தனது வாயைக் கையை யொடுக்கிக் கொஞ்சம் சேர்த்துவைத்தால், இப்படிச் சேர்த்துவைக்கப்பட்டதிற்கு தனம்என்று பெயர்வரும்.

இப்படிச் சேர்க்கப்பட்ட திரவியஸஞ்சயத்தை கஷ்டதசை வந்தகாலத்தில் சாப்பிடுவதற்காக வைத்துக்கொள்ளலாம். அல்லது அவைகளைக்கொண்டு வேறொரு பதார்த்தம் உண்டாக்கத்துவக்கலாம். எப்படியெனில்; மீன்கள் குறையுங்காலம் கிட்டவே இவன் தன்னுஸ்தியாகிய கருவாட்டை யெடுத்துக்கொண்டு கடற்கரையைவிட்டு உள்நாட்டுப்புறம்போய் அங்கே ஓங்கி வளர்ந்திருக்கும் மரங்களை கல்லுளிமுதலிய சிறு கருவிகளால் வெட்டி அவைகளைக்கொண்டு ஒரு சிறிய படவைச்செய்து முடிக்கலாம். அது முடிந்த

வுடன் அதைத் தோளில் தூக்கிக்கொண்டு போய் கடற்கரை சேர்ந்து அதினால் கரையில் வந்துவிழும் மீன்களைத்தவிர மற்றும் கடலிற் போய் பலவிதமான மீன்களைப்பிடித்து பல வாரங்களிலும் அடையக்கூடாத அவ்வளவு மீன்களை ஒரே நாளிற்பெறலாம். இப்படியாக பொருள் ஸம்பாதிப்பதில் உபயோகமாகும் படகு மூலதனம். அதை உடைய செம்படவன் மூலதனக்காரன் (Capitalist). இப்போது இம் மூலதனக்காரன் மூன்று காரியங்களில் ஒன்றைச்செய்யலாம். தன்படகைக்கொண்டு கடற்குள்போய் ஏராளமாக மீன்கள் கொண்டுவந்து அவற்றின் பெருக்கத்தால் கலியாணம் செய்துகொண்டு, குழந்தை குஞ்சுகளைப்பெற்று செம்படவர்களுக்குத் தலைவனாகவாகலாம். அல்லது, வேறொருவனுக்கு அதை உபயோகத்திற்குக் கொடுத்துவிட்டு அதற்காக அவன் கொடுக்கும் மீன்களாகிய உபஹாரத்தை வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டு சுகமாக வீருதாவில் காலம் கழிக்கலாம். அல்லது அந்தப் படகை வாடகைக்குக் கொடுப்பதுடன், தான் அறிந்த படகுசெய்யும் வித்தையை கைசோரவிடாது மேன்மேலும் படகுகள் செய்துகொண்டு அவைகளை பலபேர்களுக்கு வாடகைக்குக் கொடுத்து ஏராளமான பொருள்களைப் பெறலாம். இப்படியாகப் பிறந்த மூலதனம் அதிகரிக்க வதிகரிக்க கிரவியோத்பத்தியும் பலக்கிறது.

மூலதனத்தின் முக்கிய பிரயோஜனமென்னவென்றால் அது உழைப்பை மிகவும் ஸுலபமாக்குகிறது. முன்னால் நடந்துவந்த வேலையின் ஒரு பகுதியைக்கொண்டே முன்னடைந்த ஸௌக்கியாதிகள் கிட்டிவிடுவதினால் மீதியாக்கப்பட்ட உத்யமசக்தி வேறு புதுக்காரியங்களில் பிரவேசித்து நூதனமான ஆசைகளைத் தீர்க்க உபயோகமாகிறது. இதற்கு உதாரணம் முன் சொன்ன செம்படவன் படகை நிர்மாணம் செய்ததும் ஒரு நாளிலேயே மற்றவர்கள் பலநாளில் ஸம்பாதிக்கும் மீன்களைப் பெற, அவன் மேலே கலியாணம் செய்துகொள்ளவும், வீடுகட்டிவைக்கவும், தேகத்தை அலங்காரம் செய்துகொள்ளவும் வேண்டிய சாமக்கிரியைகளைத் தேட ஆரம்பிக்கிறான்.

ஆகவே மூலதனமென்பது வேறு பொருளையுண்டாக்குவதற்கான ஸஹகாரியான பதார்த்தங்கள்தான். முதல் முதல் இம்மூலதனம் உழைப்பாளியின் ஆகார ரூபமாயிருக்கிறது. கொஞ்சகாலத்திற்கு ஆகாரம்வரும்படி சேர்த்துவைப்பது முதல் முதல் மனிதன் செய்யும் காரியம். ஆனால் அது அவ்வளவு ஸுலபமானதல்ல. இதில்லாமல்தான் பலகுடிகள் வருந்துவதுடன் பல ஜனக்கூட்டங்கள் இருக்கும் இடம்தெரியாமல் அழிந்துபோய்விட்டன. நாகரிகமதிகரித்து ஆகாரம்கைகூட, மூலதனமானது மற்றொரு ரூபத்தையெடுத்துக்கொள்கிறது. அதாவது மூலதனமானது வேலைசெய்ய வுபயோகமாகும் கருவிகளாக உருக்கொள்கிறது.

வேலையை ஸுலபமாக நடத்திவைப்பதற்குத் தகுந்த கருவி மிகவும் வேண்டிய ஒரு வஸ்து. ஆகாரம் மிகவே, நான் முன்சொல்லியிருக்கும் நிதர்சனத்தில் கண்டபடி, கருவிகள் விருத்தியடைகின்றன. பிறகு நாளாவட்டத்தில் பலவித வேலைப்பாடுகள் உத்பத்தியாக அந்தந்தவேலைக்கு வேண்டிய உபாதனகாரணமான பதார்த்தங்களும் (Materials) மூலதனமென்று அழைக்கப்படுகின்றன. இப்படியாக நாகரிகம் பலத்த ஜனஸங்காதனங்களில் மூலதனம் மூவகைத்தானதாயிருக்கிறது. ஆயினும் நாம் முன்கூறியபடி எல்லாவற்றிற்கும் ஆதியான உழைப்பாளிகள் வேலையை நடத்திவரும்போது உண்டு, உடுத்து அனுபவித்துவரும் பொருள்தான் மூலதனம். மூலதனத்தினால் இன்னமொரு பிரயோஜனமுண்டு. அதாவது, மூலதனம் மிகவும், தனோத்பத்தியும் பலக்கும். எப்படியெனில், ஒருவன் ஒரு தோட்டம் போடுகிறானென்று வைத்துக்கொள்வோம் அவனிடத்தில் மூலதனமில்லாவிட்டால், அல்லது மூலதனம் அல்பமாகமாத்திரமிருந்தால் அவன் ஒரு சிறிய குடத்தைச் சம்பாதித்து அதைக் கொண்டு அக்கம்பக்கங்களிலிருக்கும் ஸ்வபாவிகமான ஏரிகளிலிருந்தும், ஆறுகளிலிருந்தும் ஜலத்தைத் தன் தலையில் சுமந்துகொண்டுவந்து கொட்டி தான் போட்டிருக்கும் அல்ப காய்கறிகளை வளர்க்கவேண்டும். பிரயாஸம் அதிகமாயிருப்பதுடன், நடக்கும்வேலையின் பிரமாணம் குறைச்சலாயிருப்பதால் அல்பமான தனோத்பத்திதான் ஆகும் இப்போது, அவனிடம், கொஞ்சம் மூலதனம் கட்டினால், ஒரு கையேற்றமாவது போடலாம். ஆகவே கொஞ்சம் விலையதிகம் பெறக்கூடிய பதார்த்தங்களையுண்டாக்கிவைக்கலாம். மேலும் இன்னம் கொஞ்சம் கைமுதல் கூடினால் எருதுகள் முதலிய கால்நடைகளைக் கொண்டு பெரிய ஏற்றம் வகைராகட்டலாம் கடைசியில் ஏராளமாக மூலதனமிருந்தால், நீராவி யந்திரமொன்றைக்கொண்டு ஸிரந்திரமாக நீர்வளம் இருக்கும்படி தூரத்திலிருந்து கால்வாய்களையும் அல்லது பூமியின் அந்தர்தேசத்திலிருந்து நீர்ப்பெருக்கையும் ஏற்படுத்திக்கொள்வான். நீர்வளம் மிகவும் நிலவளமும் மிகுந்து ஏராளமாக தனோத்பத்தியாகிறது.

இப்படியாக உபயோகமாகும் மூலதனம் ஸ்திரம் அஸ்திரம்என்று இருவகைத்தானது. முற்கூறிய ஸ்திரமான மூலதனம் நெடுநாள் நீடித்து இருக்கக்கூடியது. அது யாதெனில் வேலைக்கு ஸஹகாரியாகவிருந்து உதவும்படி ஏற்படுத்தப்படும் சாலைகள், யந்திரங்கள், கைக்கருவிகள், உத்யமசாலைக்கும் பண்டங்கள் விற்கப்படும் சந்தைக்கும் இடையே வரத்துப்போக்குக்கு அனுகூலமாகப்போடப்படும் ரஸ்தாக்கள், வண்டி வகைராக்கள், ரெயில் வண்டி முதலிய தேசாந்திரம் போக்குவரவுக்கு உபயோகமாகும் பலத்த ஏற்பாடுகள், கப்பல்கள் முதலியன. அஸ்திரமான மூலதனம் எவையெனில், வேலை செய்யும் காலத்தில் அதைச்செய்வோர் உண்டு, உடுத்து அத்யாவசியகமாய் அனுபவிக்கும் பதார்த்தங்கள்: அல்லது வேலையில் உபாதன காரணமாக உபயோகமாகும் பண்டங்கள். இதற்கு உதாரணமாக, துணிகள் செய்யும் வேலையில் பிரயோகிக்கப்படும் நூற்கள், நூற்கள் செய்யும் வேலையில் உபயோகமாகும் பஞ்சும், பருத்தியும், பருத்திவிளைவிக்கும் வேலைக்கு வேண்டிய பருத்திக்கொட்டை, எரு முதலியவை. இவைகளுக்கு அஸ்திரமென்று பெயர் வந்ததற்குக் காரணம் அவைகள் கொஞ்சகாலம்கூட ஓரிடத்தில் ஒரு மாதிரியாக இருப்பதில்லை. ஆயினும் நாம் ஸ்திரமென்று அழைக்கப்படும் பொருளும் சாஸ்வதமானதல்ல. எல்லாம் காலத்தைப் பொருத்த விஷயமானது. 4-வருஷம் வரக்கூடிய கருவியை அபேக்ஷித்து 10-வருஷம் வரக்கூடியது ஸ்திரம்; ஆனால் 100-வருஷம் தாட்டக்கூடிய வஸ்துவினபேக்ஷையாக அது அஸ்திரம் தான். ஆகையால் ஒரு பொருளைப்பற்றி உடனே ஸ்திரம் அஸ்திரமென்று சொல்ல முடியாது. ஆகவே மூலதனம் காலத்தை யனுசரித்தது; எந்தப் பொருள் எவ்வளவு காலம் வருகிறதோ அதையபேக்ஷித்து அதற்கு ஸ்திரம், அஸ்திரமென்னும் பெயரைக் கொடுக்க வேண்டியது.

இப்படியான மூலதனம் முதல் முதல் உண்டாவது சேர்த்துவைப்பதினால், சேர்த்தல் அல்லது செலவிடாமலிருத்தல் அதன் மூலகாரணம். சேர்த்தல் என்பதற்கு, ஒரு பதார்த்தத்தைக் கண்ணில் கண்டபொழுதே அழிக்காமல் மற்றொரு ஸமயத்திற்கு வேண்டும்படி பாதுகாத்துவைத்தல் என்று அருத்தம். இப்படி சேர்க்கப்பட்டிருக்கும் மூலதனத்தை நாம் தனோத்பத்தி செய்வதில் வியாபிருதர்களாக விருக்கும்போது நமது ஜீவனத்திற்காகவாவது மற்றும் வேலை செய்வோரது ஜீவனத்திற்காகவாவது உபயோகித்தால் அந்த மூலதனத்தை ஸார்த்தகப்படுத்தி வைப்போம். இப்படி ஸார்த்தகப்படுத்தி வைப்பதை நாம் மூலதனத்தை விருத்திக்குப் போடுகிறது (Invest the Capital) என்று சொல்வோம்,

சுகாதார விஷயம்.

THE WAY TO HEALTH.

ON PRESERVING OUR EYES.

நமது கண்களைக் காப்பாற்றும் முறை.

"சர்வஸ்ய காத்ரஸ்ய சிரப்பிரதானம்,
சர்வேந்திரியாணாம் நயனம் பிரதானம்,
ஷண்ணாம் ரஸாநாம் லவணம் பிரதானம்,
பவேந்நதிநாமுதகம் பிரதானம்."

"கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை யீன்றாளின்
மேலன்ன கடவுளுமில்."

என்று காகனாரும் கூறினார். குலமகளுக்கு தன் கணவனைக்காட்டிலும் வேறு பந்துக்களில்லை; பெற்றவளுக்கு தன் குழந்தைகளின் மழலைச் சொற்களைக்காட்டிலும் இனியது வேறு இல்லை; குழந்தைகளுக்கு தமது தாயினும் மேலாகக் கொள்ளத்தக்க அன்புள்ளவர்கள் வேறொருவருமில்லை; அதுபோல நமது தேகத்திலுள்ள உறுப்புகளெல்லாவற்றினும் கண்களே சிறந்தது. இது மூளை, நரம்பு மண்டலமாகிய விரண்டினோடும் ஒன்றாய்ச் சேர்த்து அமைக்கப்பட்டிருப்பது போலவே இரத்த வோட்டத்திற்கும் சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறது. அது மூளையோடு பொருத்தப்பட்டிருப்பதனால், நரம்புத் தடிப்பு, நரம்பு ஒடுக்கம், வேலை செய்தல், இளைப்பாறுதல் முதலிய நரம்பு மண்டலத்திற்குரிய நானாவிதமான தொந்தரவுகளை கண்களும் அநுபவிக்கின்றன. கண் இரத்தவோட்டத்தோடு சம்பந்தப்பட்டிருப்பதனால், நமது தேகத்திற்கு அக்குறைவு நேருப்போதெல்லாம் அதற்கும் தொந்திரவு நேருகிறது.

இந்த முக்கியமான உறுப்பைத் தக்கவிதமாய்க் காப்பாற்றும் பொருட்டு கையாடவேண்டிய முறைகள் இன்னதென்று தெரியாமையாலேயே அதன் நிலைமை கெட்டு, சிறுவயதிலேயே பார்வை குறைந்து கண்ணாடிக்காரர்கள் வரவர அதிகரிக்கக் காரணமாயிருக்கிறது. கண்ணாடி போட்டுக்கொள்ளுகிறவர்களைப் பார்த்து அலங்காரத்திற்காகப் போட்டுக்கொள்ளுகிறார்களென்று பொதுவாய்க் கூறுவது பிசகே எனலாம். முக்கியமாய் நமது தேசச்சிறுவர்களுக்கு கண்பார்வை குறைந்து வருவதற்கு சிற்சில காரணங்களைக்கூறி, அவர்கள் அநுசரிக்கவேண்டிய முறைகளையும் ஒருவாறு கூறுவோம்.

(1) குறைவான அல்லது அதிக பிரகாசமான வெளிச்சத்தில் படிக்கவாவது எழுதவாவது நேரும்பொழுது கண்ணை இறுத்து விழித்தல் கெடுதலானது.

(2) அளவுக்கு மேற்பட்டுக் கண்ணைக் கொட்டாமல் விழித்துக் கொண்டிருத்தல் நலமானதன்று.

(3) கண்ணில் எரிச்சல் கண்டபின்பும், பலவீனமான ஸ்திதியிலிருக்கும்பொழுதும், கண்ணிற்கு வேலை கொடுத்தல் பிசகானது.

(4) கண்ணிற்கு எரிச்சல் கொடுக்கும்படியான எண்ணெய் விளக்குகளை உபயோகப்படுத்திக்கொண்டு அளவுக்கு மிஞ்சிப் படித்தலும், எழுதலும் மோசமானது.

(5) தூக்கம் வந்து தள்ளும்பொழுது கவனியாமல் (புகையிலை தூள்) பொடி போட்டுக் கொண்டு விழித்திருத்தல் தப்பிதமானதே.

(1) அந்திப்பொழுது, மாலை வெளிச்சம் குன்றுங்காலையில் வேலை செய்ய முயல்வதும், ஒரு பொருள் கண்ணுக்குச் செவ்வையாகத் தோற்றாவிட்டால் கண்ணை இறுத்து விழிப்பதும் எல்லாவிடத்தும் யாருக்குமுள்ள சுபாவம், தாங்கள் செய்யத்தொடங்கிய வேலையைச் செய்து முடித்துவிட வேண்டுமென்ற

பேரவாவினால் சூரிய அஸ்தமனமான பிறகும் வேலை செய்வதுண்டென்பதுண்மை. இவ்வித செய்கை கெடுதியானதேயன்றி வேறில்லை. இந்த விஷயத்தில் ஒவ்வொரு குடும்பத்திலுள்ள ஆடவரும் பெண்டிரும் கவனிக்கவேண்டியதன்றி, இந்த துர்வழக்கத்திற்கு இடங்கொடாதிருக்கும்படி முயற்சி செய்வது நன்மை. இவ்விதமாகவே இராக்காலங்களில் குறைவான வெளிச்சத்தில் கண்ணை இறுத்து விழித்துச் செய்யத்தக்க எந்த வேலையையும் செய்யாதிருக்க வேண்டியது நமது கடமை.

அப்படி யேதேனும் அவசியமாகச் செய்ய வேண்டிய வேலை நேர்ந்தால் பிரகாசமான விளக்கு வெளிச்சத்தைக்கொண்டு சீக்கிரம் முடித்து விடுவது நன்று. தவிர சீக்கிரத்தில் முடியாத வேலையாயிருந்தால் மறுநாள் செய்துக் கொள்ளலாமென்று நிறுத்திவைப்பது உத்தமம்.

(2) அளவுக்கு மேற்பட்டுக் கண்ணைக் கொட்டாமல் விழித்துக் கொண்டிருத்தல், என்பதில் கவனிக்க வேண்டிய விஷயமாவது. வெளிச்சம் வேலைசெய்வதற்குப் போதுமான அளவு இல்லாமலிருக்கையிலும், ஒரு பொருளின்பேரில் அளவுக்கு மிஞ்சி ஆசையுண்டாகும் சமயத்திலும், கண்ணைக் கொட்டாமல் விழித்துக்கொண்டிருக்க நேருகிறது. இப்படி கண்ணுக்கு அதிக வேலையைக்கொடுத்து இளைப்பாற விடாவிட்டால் மறுபடியும் சாத்தியமான அளவு வேலை செய்ய வலாது ஆகையால் இவ்விதம் கண்ணுக்கு வேலைகொடுத்து வலியுண்டானால், சிறிது நேரம் படுத்துத் தூங்கவேண்டும். அல்லது கண்ணுக்கு ரமணீயமான மரஞ்செடிகள் நெருங்கிய சிங்காரத் தோட்டங்களுக்குச் சென்று பார்த்து வருவது நலம்.

(3) எரிச்சல் கண்ட பின்னும், பலவீன ஸ்திதியிலும், கண்ணுக்கு வேலை கொடுத்தல், என்பதில் நாம் கவனிக்கவேண்டிய விஷயமாவது. அதிக வேலை செய்வதால் கண்ணுக்கு எரிச்சலுண்டாவதை கவனியாமல் மறுபடியும் வேலை செய்வதாலும் வியாதியால் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது கண்ணுக்கு வேலை வைப்பதாலும், நோய் நீங்கி சௌக்கியமுண்டாகும் சமயத்தில், புஸ்தகங்களைப்படித்தல், எழுதல் முதலிய வேலைகளைச் செய்வதாலும், பெரும்பான்மையும் கண்ணுக்கு ஊனமுண்டாவதுண்டு. ஆகையால் அப்போர்க்கொத்த சமயங்களில் கண்ணுக்கு யாதொரு கடினவேலையும் கொடாமலிருப்பது உத்தமம்.

(4) தற்காலம் நமது தேசத்தில் அதிக சகாயமான விலைக்கு அகப்படுகிற கிரசின் எண்ணெயை சகலரும் உபயோகப் படுத்துகிறார்கள். இந்த எண்ணெய் நமது தேச இயற்கையமைப்புக்கு சற்றும் பொருந்தாது என்பது நமது துணிபு. இங்கிலாந்து போன்ற அதிக குளிர்ச்சியான தேசத்திற்குத் தகுந்தது. இது மகா உஷ்ணமானது. இது இத்தேசத்தில் அதிக உஷ்ணபாகமாகிய சென்னை ராஜதானிக்கு முற்றிலும் உதவாதது. இந்த எண்ணெய் விளக்குகளை வைத்துக்கொண்டு நமது சிறுவர்கள் படிப்பதும் எழுதுவதும் அபாயகரமானதென்றே கூறலாம். அதிலும் அதிக விலை கொடுத்து வாங்க சக்தியில்லாத பலர், மேல் கண்ணாடியே இல்லாததும், கண்ணாடியிருந்தும் புகைமேலே கிளம்பி நாற்றத்தை வீசக்கூடியதுமான கிரசின் எண்ணெய் விளக்குகளை உபயோகிக்கிறார்கள். இவர்கள் பொழுது விடிந்து படுக்கையை விட்டு எழுந்து, வெளியே வரும்பொழுது கண், காது, செவியாகிய உறுப்புகளை துடைத்துப்பார்த்தால், கிரசின் எண்ணெய்ப் புகைச்சலைக் காணுற்று உடனே அவ்வெண்ணெயை உபயோகிப்பதை நிறுத்தி விடுவார்களென்பதில் தடையில்லை. இந்த எண்ணெயை உபயோகிக்கிறவர்களுக்குத் தலைவலி, பித்தவாந்தி முதலியவைகள் சர்வ சாதாரணமாயிருக்கும். கண்களுக்கும் அதிக கெடுதலானதே.

ஆகையால் தங்கள் திருஷ்டி குறையாமலிருக்க எண்ணமுள்ளவர்கள் 'கிரசின்' எண்ணெயை உபயோகிக்காமலிருப்பதே நலம்.

(5) சிலர், நாடகம், ஆட்டம், கூத்து முதலியவைகளுக்குச் சென்று இரவு பன்னிரண்டு மணி கழிந்து இரண்டு மணி வரையில் கண் விழிக்கிறார்கள். அச்சமயத்தில் இவர்களுக்குத் தூக்கம் வந்து தள்ளினாலும், கண்ணெரிச்சலுண்டானாலும் கவனியார்கள். தூக்கம் வருத்துகிறதே என்ற எண்ணத்தால் பொடியைப் போட்டுக்கொண்டு நாடகம் முதலியவைகளைப் பார்த்துவிட்டு வந்து மறுநாட் காலை எட்டொன்பது மணிவரையில் தூங்குவார்கள். இவ்விதமாய் கண்ணுக்கு கொடிய வருத்தத்தைக் கொடுப்பதும் கெடுதலானதே.

கண்ணுக்கு செய்யக்கூடாதவைகளைக் கூறிவிட்டபடியால் செய்யவேண்டியவைகளை ஒருவாறு கூறுவாம்.

கல்கத்தாவைச்சேர்ந்த சில ஆயுர்வேத வைத்தியர்கள் ஒவ்வொருவரும் காலையில் படுக்கையை விட்டு எழுந்தவுடன் குளிர்ந்த ஜலத்தினால் கண்ணைத்துடைத்துக்கொள்ளுவது நலமென்கிறார்கள். இதுவும் அவ்வளவாக சரியானதென்று கூறமுடியவில்லை. அதிக குளிர்ச்சியான ஜலத்தினால் எழுந்தவுடன் கண்ணைத் துடைத்துக் கொள்ளுவதும் சில சமயங்களில் கெடுதலையே உண்டாக்குகிறது. ஆகையால் அதிக குளிர்ச்சியும் சூடுமில்லாத சாதாரணமான ஜலத்தைக் கொண்டு கண்ணைத் துடைத்துக் கொள்ளுவதுடன், வாயில் ஜலத்தை விட்டு நாக்கைவழித்து, முகத்தையும் கழுவிக் கொள்ளுவது நலம்.

தலைக்கு எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்நானஞ்செய்வதாயிருந்தால், சிலர் கண்ணுக்குள் எண்ணெயை விட்டுத்தேய்ப்ப துண்டு. இது நமது அனுபோகத்தில் நன்மை பயப்பதாகத் தோற்றவில்லை. எண்ணெய் சுயமானதாகவில்லாவிட்டால் கண் பொங்கிக்கொண்டு வருத்தத்தைக் கொடுக்கிறது. தவிர, கண் என்பது ஒரு நீரேயல்லாமல் மற்றப்படியன்று; அதிக மெல்லியதான உறுப்பு. இதில் எவ்விதமான வஸ்துக்களையும் இடக்கூடாதென்பது பல ஐரோப்பிய வைத்தியசாஸ்திரிகளுடைய கருத்து. அப்படி கண்ணுக்குள் எண்ணெய் முதலியவைகளை இடுவதால் கண் வரவர சிறுத்துக்கொண்டேவருமென்பதில் தடையில்லை. ஆகையால் தலையுச்சியில் சுயமான எண்ணெயைத் தேய்ப்பதும் உள்ளங்காலில் எண்ணெயை இட்டுத்தேய்ப்பதுமே மகாசிரேஷ்டமானது. உள்ளங்காலுக்கும் கண்ணுக்கும் நெருங்கிய இரத்தவோட்டசம்பந்தங்கள் இருப்பதாக பெரியோர் சொல்லுகிறார்கள். அக்காரணத்தினாலேயே உள்ளங்கால், நடக்கும்பொழுது தரையில்படாதபடி உள்ளமைந்திருப்பதாகவும் சொல்லுகிறார்கள், ஆகையால் உள்ளங்காலில் எண்ணெயைவிட்டுத் தேய்ப்பதால் கண்ணுக்கு வெகு நன்மையுண்டாகும். தவிர, காதில் எண்ணெயை விடுவதும் கண்ணுக்கு அனுகூலமானதென்று சிலர் கூறுவதுண்டு.

தவிர, கண்ணுக்குப் பச்சையான மரம்செடிகளடர்ந்த சிங்காரத் தோட்டங்களை அடிக்கடி பார்த்துக்கொண்டு வருவதால் அதிக நன்மையுண்டாகும். பச்சையான பொருள்களைப்பார்ப்பதால் கண்ணுக்குக் குளிர்ச்சி யுண்டாகும். இக்காரணத்தினாலன்றோ ஐரோப்பியர் அணிந்துக்கொள்ளும் டொப்பியின் அடிப்புறத்தில் பச்சை நிறமுள்ள துணிகளைவைத்து தைப்பதும், பிடித்துக்கொள்ளும் குடையின் அடிப்புறத்தில் போடுகிறதும் வழக்கமாயிருக்கிறது.

இத்தியாதி விஷயங்களை ஒவ்வொருவரும் செவ்வையாய்க் கவனித்துக் கண்ணைக் காப்பார்களென நம்பி வரையலானேம்.

THE LATE Mr. G. SUBRAHMANIA IYER.
காலஞ்சென்ற ஸ்ரீ ஜி சுப்ரமணிய ஐயர்.

சென்னையில் ஹிந்து, சுதேசமித்திரன் பத்திரிகைகளை ஸ்தாபித்துப் பொதுவிஷயங்களில் சிரத்தைபூண்டுழைத்துப் பெரும் புகழும் பெற்ற ஸ்ரீமான் ஜி. சுப்ரமணிய ஐயர் அவர்கள் நாளது ஏப்ரல்மீ 18உ செவ்வாய்க்கிழமையன்று மாலை ஆறேகால் மணிக்கு திருவல்லிக்கேணியிலுள்ள அவருடையகிருகத்தில் பரமகதியடைந்தார். இவர் 1855-ம் வருஷத்தில் பிறந்தவர். முதலில் திருவல்லிக்கேணி ஹிந்துஹைஸ்கூலில் உபாத்தியாயராயிருந்து பிறகு ஹிந்து பத்திரிகை சம்பந்தமாய் உழைக்கவென்று அவ்வேலையைவிட்டு நீங்கினார். லார்ட் லிட்டன் ஸ்வபாஷா பத்திரிகைகளுக்கிட்ட வாய்ப்பூட்டு லார்ட் ரிப்பன் அரசர்பிரதிநிதியாக வந்ததும் தரிக்கப்படவே அவர் "சுதேசமித்திரன்" என்னும் தமிழ்ப்பத்திரிகையை ஸ்தாபித்தார். அப்பத்திரிகையை நடத்துவதில் அவருக்கு உதவியாக அமர்ந்து 1885-ம் வருஷம் முதல் 10-வருஷத்துக்கு அவ்வேலையிலிருந்துழைத்துத்தேறி அதன்பின் விவேகசிந்தாமணி கைசோர்ந்து போகாதபடி பார்க்கவேண்டி அவ்வேலையையும் விட்டு இதற்கே உழைத்து வரத்தீர்மானித்தோம். சுதேசமித்திரனை விட்டுப்பிரிந்த பரிவற்றாது பல வருஷம் வருந்தினேமாயினும், விவேகசிந்தாமணியும் அவருடைய வாக்குசகாயத்தைக்கொண்டே யேற்படுத்தப் பெற்றதையுன்னி அவரிடத்து வைத்த வித்யாகுருபக்தி குறையா துழைத்து வந்தோம். அவருடைய குணவிசேஷங்களைப்பற்றி பத்திரிகை வாசிப்போர் எல்லாருக்கும் அனேகமாய்த் தெரியுமாதலால் இங்கே விவரிக்கவில்லை. அவரைப்போல தேசாபிமானிகள் சித்திப்பது துர்லபம். தேசாபிமானம்தான் அவரைப்பற்றிய கொடுநோயின் வேகத்தையும் வென்று கடைசிவரையில் அவர் அதைப்பாராட்டாது தானே நடமாடி வரச்செய்தது.

லாலி கவர்ன்மெண்டு அவருக்கிழைத்த தீங்கு ஜனங்கள் மனதில் மிகவும் உறுத்தினதன்றி அதுமுதல் தேசாபிமானம் பாராட்டுதல் ஆபத்துக்கு இடமானது என்றும் உணர்ந்து அஞ்சத்துவக்கினார்களென்பது உற்றுணர்ந்துள்நோக்கி யுண்மை யுணரக் கற்றவர்களுக்குப் பிரத்தியக்ஷமாய்த் தோன்றியது. பிறகு போலித் தேசாபிமானம் தலையெடுக்கலாயிற்று. "தந்தலையாட்டம் தலைக்குமேலே" யென்கிறபடி ஒவ்வொருவரும் ஜன சிரேஷ்டராக நடிக்கப் புறப்பட்டார்கள். "எல்லாரும் பல்லக்கேறினால் தூக்குவதற்கு ஆள் எங்கே" யென்கிறபடி ஒவ்வொருவரும் ஜனசிரேஷ்டராய்விளங்கியபொழுது ஜனசமஷ்டிபாவத்துக்கு சிரேஷ்டம் குறைந்து பின்னடப்படலாயிற்று. யார் எப்படிப்போனாலும் காலஞ்சென்றவர் மட்டும் தேசாபிமானம் குன்றாது கடைசிவரையில் தேசத்துக்குழைத்து வருவதையே நோன்பாகக்கொண்ட விரதம் தப்பாது தம் காலத்தைத் தள்ளிக்கொண்டு போய்விட்டார். "அவரைப்போல் வாழ்ந்தாருமில்லை: தாழ்ந்தாருமில்லை." இதுதான் இன்றைக்கு அவரைப் பற்றி எல்லாரும் சொல்லும் பொதுஜன வாக்காக விருக்கிறது.

ஏப்ரல்மீ 28உ பச்சையப்பன் மாளிகையில் கூடிய பொதுக் கூட்டத்தில் அவருடைய ஞாபக சின்னார்த்தம் ஒரு புஸ்தகசாலையும் கட்டடமுமாவது அவர் திரு உருவச் சிலையாவது இரண்டில் ஒன்று சேகரமாகும் தனத்துக்குத் தக்கபடி நிர்மிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

SONGS.

பாட்டுகள்.

தாலாட்டு.

"ஆராரோ ஆராரோ ஆராரடித்தாரோ?
ஆரடித்து நீ அழுறாய் அஞ்சனக்கண் மைகரைய என்?
கண்ணான கண்ணே! என் கண்குளிர்ந்த மாம்பழமே!
தின்னும்பழமே! திகட்டாத செந்தேனே!—என்
ஈச்சம்பழமே! இனித்திருக்கும் தீங்கனியே!
வாழைக்கனியே! வரிக்கண் பலாச்சுளையே!—என்
அடிக்கரும்பே! செந்நெல்லே! ஆடையின்கீழ்
[நற்பாலே!
குடிக்குநல்ல குஞ்சரமே! கோதண்டபாணியனே!
[என்
கண்ணான கண்ணுற்குக் கண்ணூறுவாராதே
சுண்ணாம்புமஞ்சளுமாய்ச் சுற்றிபெறி கண்ணுற்கு!
விபூதி வேப்பிலையும் வீசிபெறி கண்ணுற்கு-என்
கண்ணை யடித்தவர்யார், கற்பகத்தைத் தொட்டவர்
[யார்?
பொன்னையடித்தவர்யார், பூங்கிளியைத் தொட்ட
[வர்யார்?
ஆராரோ ஆராரோ ஆரார் அடித்தாரோ?
ஆரடித்து நீயழுறாய், அடித்தாரைச் சொல்லியழு"

—*From our Review of Muttu Meenakshi.*

ஔவை தனிப்பாடல்.

இனிது.

இனிது இனிது ஏகாந்த மினிது
அதனினு மினிது ஆதியைத் தொழுதல்
அதனினு மினிது அறிவினர்ச் சேர்தல்
அதனினு மினிது அறிவுள் ளோரைக்
கனவிலு நனவிலுங் காண்பது தானே.

அரிது.

அரிதரிது மானிட ராதலரிது
மானிட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியு நயத்த லரிது
ஞானமுங் கல்வியு நயத்தகாலையும்
தானமுந் தவமுந் தான்செய லரிது
தானமுந் தவமுந் தான் செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே.

"HINDU FASTS AND FESTIVITIES."

இந்து புண்ணிய கதைகள்.

நமது விரதங்கள் பண்டிகைகள் சம்பந்தப்பட்ட விஷயங்களை இப்புஸ்தகத்தில் எல்லோரும் வாசித்துத் தெரிந்து கொள்ளும் மாதிரியாய் மைலாப்பூரிலிருக்கும் ஆர்கியலாஜிகல் இலாகா ஜெகதீசய்யர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார். இதில் முதலில் இந்துக்களின் பெருமை, இந்தியா புண்ணிய பூமி என்கிற விஷயம், கோயில், ஸ்நானம் இவைகளின் பிரயோசனம் இவைகளைப்பற்றிச் சொல்லிப் பிறகு ஒவ்வொரு புண்ணிய தினங்களிலும் நாம் கொண்டாட வேண்டிய தெய்வத்தின் பெருமை, அது சம்பந்தமாய் அந்தந்த விரதங்கள் உண்டானதின் காரணத்தைக் காட்டும் கதைகள் இவைகளையும் தெரிவித்து கடைசியாக அந்தந்த விரதத்தின் முக்கிய தெய்வத்தை விசேஷமாய்க் கொண்டாடும் கோயில்களும் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. மேலும் சில படங்களும் சாஸ்திரப் பிரகாரம் அந்தந்த தெய்வம் இப்பூலோகத்தில் ஆவிர்பவித்த காரணத்தைக் குறிக்கும்படிக்காக தயாரித்துச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இதற்கு ஹைகோர்ட் ஜட்ஜ கனம் மிஸ்டர் சேஷகிரி அய்யர் அவர்கள் ஓர்முகவுரை யெழுதியிருக்கிறார்.

"HINDU COOKERY AND HOUSE-WIFERY."

இந்துபாக சாஸ்திரம்.

இதில் நமது பாகசாஸ்திர விஷயமும் ஸ்திரீ ஒழுக்கமும் சுலபமாய் எல்லா பெண் குழந்தைகளும் தெரிந்து கொள்ளும்படி தமிழ் பாஷையில் ஜெகதீசய்யர் வெளியிட்டிருக்கிறார். இதற்கு ஸர். எஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்கள், இது எல்லா பெண் பிள்ளைகளுக்கும் முக்கிய மென்று முகவுரை எழுதியிருக்கிறார்.

இதில் அடங்கிய விஷயங்கள் நளமகாராஜனால் எழுதப்பட்ட கிரந்த புஸ்தகத்திலிருந்து எடுத்து மொழி பெயர்க்கப்பட்டதாகவும் இன்னும் மற்றய அபூர்வ கிரந்தகங்களிலிருந்தும் எடுத்து எழுதப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வருஷம் முழுவதும் அந்தந்தக் காலங்களில் சாப்பிட வேண்டிய ஆகாரங்கள், சமையல் பதார்த்தங்களின் குணங்கள், பால், தயிர், தண்ணீர் இவைகளின் வைத்திய பக்குவம் முதலியனவும் தெளிவாய் எழுதப்பட்டிருக்கின்றன.

"THE OBJECT OF EDUCATION MUST BE TO AWAKEN THE SPIRITUAL LIFE OF PUPILS."
Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."
"Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."
ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**
'HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."

அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*
"New Series" ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** **"Approved"**

புத்தகம். 24.] நள௵ வைகாசிமீ, 1916௵ மேமீ [சஞ்சிகை 2.

"THE OBJECT OF EDUCATION MUST BE TO AWAKEN THE SPIRITUAL LIFE OF PUPILS."

REFORM OF RURAL EDUCATION.

(Letter to the Press and Leading Educationists.)

Sir,—In sending you herewith a copy of my "Lyrics and Lay-songs of Temple Legends" which is dedicated through the Minister in charge of Education "to *those Children of Light* who whatever their age or clime, are ever the guiding Angels of the Race and the true Messengers of Hope, Faith and Love which three alone have the power of uplifting Humanity above its own faults, failings and errors", I beg leave to invite your attention and that of the enlightened public, especially those who are in charge of rural Education and of children of school-going age, the remarkable object lesson which the "Danish Peasant Schools" present to those who are confronted with the difficulties of solving the Educational problem in India.

The writer of the article in the current *Modern Review* (for May 1916) opens it with the suggestive remark: "Now that the question of educating the young rural population of India is before the Government and the public a short account of 'Danish Peasant Schools' may be interesting to readers."

While commending the whole article to the careful and earnest consideration of the Government and Educational Reformers "outside that charmed circle" I may be allowed to cull the following gems of thought which would throw light on the fundamental principles of Educational Reform which are common to all humanity.

"It is necessary to elevate the pupils and for that purpose to revive their religious and patriotic sentiment;

"(1) that no beauty is too high for them;

"(2) that the purest sources of intellectual and moral life must be placed within their reach;

"and (3) that with the new schools a living, real and national education should be created."

These are the words of the Danish Poet Nikolai Frederik Severin Grundtwig with whom originated the movement for elevating the rural population of Denmark which has since then been an object lesson to the world as regards the improvement of her rural population. The high standard of intellectual culture of the Danish Peasant and the marvellous progress made by their agricultural and economic institutions have always impressed the students of rural economy. "The secret of it all lies," says the writer to whom we are indebted for this brief summary, "in the introduction of a rational system of education and in the efforts of a group of Danish patriots to whom patriotism is almost a part of their religion."

The guiding principles of these schools which have infused new life into the 47 per cent. of the children of the peasant population who are passing through them are that —

(1) The instruction must be direct from the mouth of the teacher, who must come into relation with his pupils by means of a real familiar conversation. The voice "coming from the human breast (purified of its dross) *alone* can give words strength and wings and awaken the slumbering soul of the pupil by "going into the unseen to awake the invisible mental life."

(2) The education must be general in character, aiming at opening new horizons in every direction and cultivating the patriotic, religious and æsthetic sentiments. When this is attained the school would produce such men who would be capable of learning agriculture or any other profession with profit.

(3) Instruction should be given in the mother-tongue. (The Danish Elementary Schools keep the child in school until 14 or 15 years old, thus giving a thorough grounding in various branches of studies which he is able to resume and carry on in "the High Schools" "to a degree of refinement very rare among peasants.")

(4) The teaching of history, specially the national history and national poetry should form an essential part of the instruction. Grundtwig was very keen on the methods of teaching history. He says "History must be related in *poetic* language, as it passed from mouth to mouth in the recitation of the Scalds." He emphatically discouraged the practice of learning a mass of facts, statistical tables, etc., by heart in chronological order.

(5) *The object of Education must be to awaken the Spiritual life of pupils* by means of free lectures to excite patriotism through a right understanding of the language, nature and history of their country—to do for the civic life of the people what the Church is doing for their religious life.

(6) The moment of rousing the high appreciation of the pupils for what is high and noble in human life ought, in the new system of teaching, be considered more important than that in which they acquire a grammatical idea or solve a mathematical problem ; which they should also learn but as subordinate to the principal work.

(7) While realising the fact that the school must not be a "political tribune" the pupils must be given a sufficiently clear idea of the existing political conditions which will enable them to take their place in the civic life of the country when they come to take their part as men in the Great Battle of Life.

(8) The object in teaching science, must be, not to make men of science, but *minds* capable of understanding the sciences. With this object steadily kept in view, a general outline of science must be taught—the education in natural sciences, Geometry and Mathematics in High Schools being specially advanced. (The Professors first instruct in the earliest scientific discoveries and then relate the lives of men of science and inventors. Biographical sketches of those who contributed to the progress of science appeal to the imagination of the pupil, —which must be cultivated to the highest level possible.)

These principles formulated by the Danish Poet were declared to be the basis of sound education by our own poet Rabindranath whose educational movement is bound to spread. And it gives me great pleasure to note that these principles on which I have myself been working in my limited sphere these many years have the approval of such world-wide celebrities as Grundtwig and Rabindranath.

LALITALAYA,
MADRAS, S.
18th May 1916.
C. V. SWAMINATHAIYAR.

புஸ்தகம்-24.] [சஞ்சிகை-2.
"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."
நள ௵ வைகாசி ௴
விவேக சிந்தாமணி
April-May. 1916.
ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னார்—மற்றோர்கள்
மாச்சரியந் தாலிகழில் வந்ததென்னேந் தேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

RURAL EDUCATION.

நாட்டுப் புறத்தார்க்கு வசதியான வித்யாபோதனை.

தேசம் என்பது பொதுவில் க்ஷேத்திரத்திற்குப் பெயர். சிறப்பிலக்ஷணம்கொண்டு தேசத்தில் வசிக்கும் ஜனங்களுக்கு அப்பேர் பொருந்தும் பொழுது அது நாடு, நகர் என இருவகைத்தாக விளங்கும். நாட்டுப்புறவாசம் என்பது பட்டணமல்லாத வெளியூர்களில் வசிப்பவர்களுக்குரியதாம். நகர்ப்புறவாசம் என்பது பட்டணங்களிலும் நகரங்களிலும் வசிப்பவர்களுக்குரியதாம். நாட்டுப்புறங்களில் ஜனங்கள் சிதறுண்டு பரவி அன்றைப்பாடு அன்றோடே யென்று உழைத்துண்டு வாழ்வார்கள். நகர்ப்புறங்களில் ஜனங்கள் வர்த்தக, வியாபாரம், துரைத்தனம் முதலிய துறைகளில் இறங்கி உத்யோகம் செய்தும் ஏழைகள் கூலிவேலைசெய்தும் பிழைப்பார்கள்.

நாட்டுப்புறத்தார் பெரும்பாலும் வியவசாயிகளாயிருப்பார்கள். அவர்கள் தான் "உழுதுண்டு வாழ்வார்." அவர்களால்தான் தேசத்தின் செல்வம் விருத்தியடைகிறது. நகரமாக்களோ நாட்டுப்புறத்தார் உழைப்பால் உண்டான செல்வமாம் விளைபொருள்களை வாங்கியும் விற்றும் வர்த்தக வியாபாரம் மூலமாய் அவைகளை தூரதேசங்களுக்குப் பரவச்செய்தும் அதனால் வரும் லாபத்தைக்கொண்டு ஜீவிப்பார்கள். துரைத்தன காரியங்கள் பார்ப்பது வியவகாரதசையைச் சேர்ந்ததே. வியவகாரத்துக்கும் வியவசாயத்துக்கும் என்ன வித்யாசமுண்டோ, அதே வித்யாசம் நகர்ப்புறத்தார்க்கும் நாட்டுப்புறத்தார்க்கும் உண்டு.

வித்தையென்பது அறிவின் விர்த்தி. படிப்பு என்றாலும் அதே அர்த்தம் கொள்ளும். மனம் படியப்பெறுவது படிப்பு. "கற்றதோர் கல்வியும் மனப்பழக்கம்" என்றார் ஔவையாரும். இந்த மனப்பழக்கமாகிய வித்தை நாட்டுப்புறத்தார் நகர்ப்புறத்தார் என்றுள்ள சிறப்புப்பற்றி வியவகார-வியவசாய பேதம்போல் வித்யாசப்பட்டு விளங்கினும் மன்னுயிர் எல்லார்க்கும் பொதுவான சில மனோசிக்ஷைகளுண்டு. அவைதான் எண் என்றும் எழுத்தென்றும் சொல்லப்படுவன.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"

'எண்' என்றால் மனதால் எண்ணும் எண்ணம். கணிதம் மனோசிக்ஷைக்காதாரமானது பற்றி சிறப்புப்பேர்கொண்டு 'எண்' என்பது கணிதத்துக்கு விசேஷப்பேராகச் சொல்வதுமுண்டு.

எண் என்பதில் மனோதத்துவ சாஸ்திரம் எல்லாம் அடங்கும். எழுத்து என்பதில் இலக்கிய இலக்கணங்களெல்லாம் அடங்கும். மனோதத்துவ சாஸ்திரங்களும் இலக்கிய இலக்கண நூல்களும் முகத்துக்கு இருகண்கள் எப்படி

யோ அப்படி அறிவுக்குக் கண்ணாக (பார்க்கும் கருவியாக) விளங்கும். இதை Reading, Writing and Arithmetic என்று சுருங்கச் சொல்வதுண்டு. அதாவது வாசிக்கப் பழகுவது எழுதப்பழகுவது, கணக்குப் பார்க்கப் பழகுவது என மூவகைப் பழக்கமாகச் சொல்வர்.

அரிச்சுவடி கற்றால் வாசித்தாய்விட்டது; அக்ஷரங்களை யெழுதி கையெழுத்துப்போடத் தெரிந்துவிட்டால் எழுதப் பழகியாய்விட்டது; இரண்டும் மூன்றும் ஐந்து என்று விரல்விட்டுக் கூட்டப் பழகிவிட்டால் கணக்குப் பார்க்கப் பழகியாய்விட்டது என்று சொல்வாருமுண்டு. இவர்கள் சுவானம்போல் வித்தையை நக்கிக் குடிக்கக் கற்றவராவர். "பால் ஆறாக ஓடினாலும் நாய்க்கு நக்கித்தான் குடிக்க வரும்." அதுபோல வித்தை அளவற்று சமுத்திரம்போல் விரிந்து நிறைந்திருந்தாலும் அற்ப புத்தியுள்ளவர்களுக்கு சொற்பப் படிப்புத்தான் வரும்.

இது யாருடைய குற்றம்?

நாய் நக்கிக் குடித்தாலும் வயிறு நிறையக் குடிக்கலாமல்லவா? அதுபோல், எழுதப்படிக்கவும் கணக்குப் போடவும் சொற்பம் கற்றிருந்தாலும் இந்த சொற்ப எட்டுப் படிப்பைக் கொண்டு உண்மையான வித்தையைப் பூரணமாய்க் கற்றுக்கொள்ளலாம். தன் பேரை யெழுதத் தெரியாத ஒரு கொல்லத்துக்காரன் விசுவகர்மாவும் மெச்சத்தக்க ஒரு மாளிகை கட்டப் பழகியிருக்கலாம். இவனுக்கு எட்டுப்படிப்பு இல்லாமையினால் கைப்பழக்கம் இல்லையென்று சொல்லலாமா? சொல்லுதல் அமையாது.

"எல்லாரும் பல்லக்கேறினால் தூக்குவது யார்?"

இந்தப் பழமொழி. மிகவும் மேலான புத்திமதியைப் போதிக்கும் பழமொழி. எல்லாரும் எட்டுப்படிப்புப் படித்து ராயஸக்காரர்களாக முயன்றால் உழுது பயிர் செய்வது யார்? உழைத்துத் தொழில் புரிவது யார்? இப்படி ஜனசமஷ்டியின் தர்மம் சிதறாதிருக்கும்படிக்கே வர்ணாச்ரம தர்மம் என்னும் பூர்வீகமான கட்டுப்பாடு ஏற்பட்டது. அதை இக்காலத்தார் உண்மையுணரத்திறனன்றி குதர்க்கம் செய்து பிதற்றித்திரிகிறார்கள். நற்குணம் பிறப்பினால் அமையத்தக்கது. அதாவது பரம்பரை பற்றி மனமும் இந்திரியங்களும் தீக்ஷண்யம் பெற்று விளங்கும்.

"மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுக்க வேண்டுமா?"

என்பது ஓர் சிறந்த பழமொழி. மீன் குஞ்சுக்கு நீந்துதல் எப்படி பிறவிக்குணமாய் அமைந்து விளங்குகிறதோ, அப்படிப்போல தொழிலாளி மகனுக்குத் தொழில் செய்வது தானே வரும். ஏனெனில் வித்தைப்போலிருக்குமாம். சதுர்வர்ணம் ஏற்பட்டது புருஷார்த்தம் நான்கை யொட்டியென்று மேலோர் சொல்லுவர். புருஷார்த்தம் நான்காவது:— அறம், பொருள், இன்பம், வீடு.

தன்னைக் கொடுத்தல் (Self-Sacrifice).

"அந்தணர் என்பார் அறவோர்" என்றதனாலும் "ஈதல் அறம்" என்று ஔவையார் கூறியிருப்பதினாலும் கொடைகளெல்லாவற்றிலும் சிறந்ததான "தன்னைக் கொடுத்தல்" (Self-Sacrifice) உத்தம வர்ணத்தாரான பிராமணர்க்கு இயற்கையாக அமைந்த தொழில். பகவான் அருள்பெற தன்னைக் கொடுத்துதவுகிறாராதலால் இவர்களுக்கு பிராம்மணர் "பிரஹ்மத்தை யறிந்தவர்" என்று பேர் வந்தது. "பாப்பாரப் பயலுக்குப் பிறந்தவனெல்லாம் பிராமணன் ஆகமாட்டான்" என்பது சாமான்ய பொது ஜன வாக்கு. அர்த்த சாஸ்திரம்-பொருளீட்டல். Economics.

"தீவினை விட்டீட்டல் பொருள்" என்றாதலால், உழவு-தொழில்-வியாபார-வர்த்தகத் துறைகளிலிறங்கி "திரைகடலோடியும் திரவியம்தேடு" என்பதை கடைப்பிடியாகக் கொண்டு அர்த்த சாஸ்திரம் (Economics) பயின்று பொருளீட்டு வழியிலிறங்கி யுழைப்போர் வைசியர்களாவர்.

பாதுகாத்தல்—Protection.

தன்னைக் கொடுத்துப் பரோபகாரம் செய்தலை தொழிலாக உழைக்கும் சாதுக்களையும், சண்டை பூசல்களுக்குப் போகாமல் பொருளீட்டல் ஒன்றே தொழிலாக வுழைக்கும் அர்த்த சாஸ்திர சம்பிரதாயிகளான வைசியர்களையும் துஷ்டர்கள் துன்புறுத்தாது பாதுகாத்தல் வேண்டும். அதற்காக துஷ்டநிக்ரகம் செய்து சிஷ்டபரிபாலனம் செய்வோராய் புஜபல பராக்கிரமங்கள் பொருந்தி ஏழை எளியவர்கள் வலியார் கெடுக்காது உட்பகை புறப்பகை யென்றுள்ள இருவகைப் பகைவர்களாலும் பாதகம் நேரிடாது பாதுகாப்பது க்ஷத்திரிய தர்மம். இந்த தர்மநெறி நின்றொழுகுவோர் க்ஷத்திரியர் ஆவர். "அரசன் அன்றுகொல்லும் தெய்வம் நின்றுகொல்லும்" என்றபடி ஜனசமஷ்டியில் துஷ்டர் கொட்டம் அதிக்கிரமித்துப் போகாதபடி பாதுகாக்க வல்ல இவர்கள் க்ஷேத்ரபாலர்களாக (அரசர்களாகவும், அரசர் படைகளாகவும்) இருந்து ஜனசமஷ்டி தர்மம் சிதறாது காத்து வருவார்களாயினர். இவர்களால்தான் ஜனசமஷ்டியில் இன்பநுகர்தலும் அதனால் விளையும் பிரஜாவிருத்தியும் சாத்தியமாதலால் ஜனசுகத்துக்கு க்ஷேத்ரபாலகரான அரசர்களாம் க்ஷத்திரிய வர்ணத்தார் ஜனக்ஷேமத்துக்கு இன்றியமையாதவர்களானார்கள்.

பரனை நினைந்திம்மூன்றும் விட்டது-வீடு.

வீடு அல்லது மோக்ஷ தர்மத்தைக் காப்பாற்ற சூத்ரர்கள் ஏற்பட்டார்கள் என்றால் இக்காலத்துப் படிப்புப் படித்தவர்கள் கைகொட்டிச் சிரிப்பார்கள். ஆயினும் சூத்ரஜாதியின் தொழில் என்ன? அடிமை புரிதல். இந்த அடிமைத் தொழில் எல்லாத் தொழிலிலும் அருமையானது. அருமையானதுபற்றிப் பெருமையானது என்றும் சொல்லத்தகும். யேசுகிறிஸ்து தன் சிஷ்யர்கள் காலைக்கழுவி யஜமான ஸ்தானம்பெற்றவர்க்கு தொண்டு புரிதலினும் பெருமையான வேலை வேறில்லை யென்று அவர்கள் கடைசியாக அறியவேண்டிய படிப்பினையிதுவென்று காட்டினர். "உலகெலாமுணர்ந்து ஓதற்கரியவன்" ஆன எம்பெருமான் நடராஜ மூர்த்தியும் "தில்லைவாழந்தணர்தம் அடியார்க்குமடியன்" என்று தன் பெருமையை சிறுமைப்படச் சிறப்புக் காட்டியருளினாரல்லவா? "பெருமையிற் சிறுமை" யைப்போல் பேரின்பம் தரும்குணம் வேறில்லை. இதற்கு நந்தனார் சரித்திரமே உவமானமாம். "தாழாமற் றாழ்தல்" என்பது இதற்கே பொருந்தும். அப்படியென்றால் பெருமைக்கடலாம் அரும்பெருங் கருணைக்குத் தாழ்வு நேராமல் தாழ்ந்து பணிந்து வீழ்ந்தாரைக் கைதூக்கிவிடல் எல்லாப் புருஷார்த்தங்களிலும் மேலானது. இதற்கு சூத்ரஜாதியை பரிபாலகராக நியமிக்க வேண்டுமென்றால், பகவானுடைய கபட நாடகசூத்திரத்தை யாரே அறியவல்லார் அவருடைய அடியார்களன்றி மற்றவர்யார் அவர் பெருமையைப் புகட்டவல்லார்? "அறுபத்திமூவர்" என்று சிறப்புப் பெயர்பெற்ற அறுபத்திமூன்று சிவனடியார்கள் புராணத்தையும் உள்நோக்கி ஆராய்ந்து ஒவ்வொன்றிலுமுள்ள குணத்தைக் கிரகித்து அவர்கள் சரித்திரத்தை அவரவர்களின் குணச்சிறப்பின் வர்ணனையாகக்கொண்டு (Character Sketch) பார்த்தால் அன்னார் அனைவரும் கர்மத்தால் கடைத்தேறினவர்கள் என்று நன்றாகத் தெரியவரும். யேசுகிறிஸ்துவும் தான் வீழ்ந்தாரைத் தூக்கிவைத்துத் தாழ்ந்தாரை வாழவைக்க அவதரித்ததாகச் சொல்லியிருக்கிறாரன்றோ!

சமஷ்டிசேவை—(Social Service).

ஆதலால் சமஷ்டி சேவையிலும் சிறந்த தொழிலொன்றில்லை. இது யாரால் முடியும்? அறம் பொருள், இன்பம் ஆகிய மூன்று புருஷார்த்தங்

சனையும் தேடியடைந்து அனுபவித்து இவற்றில் உருசியில்லையென்று விட்டு பரங்கருணை வள்ளலாகிய "பரனை நினைந்து" மேலேசொன்ன "இம்மூன்றும் விட்டதே"—"பேரின்ப வீடு" அளிக்கும் "சமஷ்டிசேவை சாதனமாம்." இந்த சாதனத்தைக் கொண்டோர் எளியாரினும் எளியராயிருந்து வலியார் கொட்டத்தை யடக்கவென்றே எளியார்க் கெளியரையிருந்து ஏழைகளோடு கலந்து அவர்கள் படும் கஷ்டநஷ்டங்களையும் துன்பதுக்கங்களை உடனிருந்து தொட்டதை யெல்லாம் பொன்னாக்கும் பரிசவேதிபோல் அவர்களுடைய ஞான சித்தியினால் துன்பங்களை யெல்லாம் இன்பமாக மாற்றும் சூக்ஷ்மத்தை அடியார்க்கடியரையிருந்துணர்த்தும் பரமனை வழிபட்டுணர்ந்து அவனைத் தொழுவதிலும் சமஷ்டி சேவை செய்வதே அவனுக்குத் திருப்தியென்றுணர்ந்து உண்மைக்குழைப்போர் ஊருக்குழைக்க வேண்டுமென்று உழைப்பின் உள்மர்ம முணர்ந்து "நைஷ்கர்ம ஸித்தியால்" கர்மபந்தம் தோற்றாமல் கர்மத்தைச் செய்து வினைவளர்க்காது வினை தீர்த்து விளையாட்டாகத்தானே எல்லாக் கர்மங்களையும் கர்ம தர்மம் உணர்ந்து உணர்த்தவும் உணர்த்தியும் காட்டி உலகை ரக்ஷிக்கத் தன்னைக்கொடுத்துப் பரனைக்கொண்டு எல்லாம்விட்டு எல்லாம்பற்றி பற்றற்ற நிலையிலிருந்து பாடுபட்டுழைப்பார்கள். அவர்கள் ஐகிக தோரணையில் பிரம்மாவினுடைய காலிலிருந்துதித்தவர்களாகச் சொல்லப்படுவர். பிரம்மா என்பவன் சமஷ்டி ஜீவன். இந்தச் சமஷ்டி புருஷன் நடக்கக் காலாயிருந்துதவுவது "சமஷ்டிசேவை" (Social-Service) ஆகையால் "Progress of the world" என்று சொல்லும் சமஷ்டி ஜன அபிவிருத்திக்குக் காரணமாயிருந்து கால்போலுதவுவது "சேவக" கர்மமாதலால், கடவுளுக்கு "சேவகன்" என்கிற சிறப்புப்பேரும் உண்டு. பரதர்மம் இகப்பற்றுள்ளார்க்குத் தலைகீழாக விருக்கத்தோன்றும். அகப்பற்றுவிட்டால் உள்ளது உள்ளபடி தோன்றும். இப்படி யுழைப்பவர்களில் இக்காலத்திற் சிறப்புற்று விளங்குகிறவர்கள் ரவீந்திரநாத் தாகோர் ஒருவர்; மற்றொருவர் மிஸ்டர் காந்தி. அழியாத புகழுடம்பெடுத்தவர்களில் ராமகிருஷ்ண பரமஹம்ஸர் பேரும் யேசுகிறிஸ்துபேரும் மற்ற அடியார்கள்பேரும் கல்விலெழுத்துப்போல் காலசக்ரத்தில் அழுந்தி அச்சுமாறாமல் அநவரதம் திகழொளிவீசி மன்னுயிர்க்கு வழிகாட்டி நிற்கின்றன.

டென்மார்க் தேசத்தில் இப்படிப்பட்ட மஹாபுருஷராய் விளங்கிய கவிவாணர் ஒருவர் முயற்சியினாலே நாட்டுப்படிப்புச் சிறந்து விளங்குகிறது. அங்கே யேற்பட்டுள்ள வியவசாயிகள் பள்ளிக்கூடங்களில் 100-க்கு 47 விகிதம் வியவசாயிகளின் குழந்தைகள் படித்துத்தேறிவருகிறார்கள். இவர்கள் ஏட்டுப் படிப்பே முக்கியமென்று இலவுகாத்த கிளிபோல் மோசம் போகாமல் மனம்படியப் பெறுவதே படிப்பு என்று மனப்பழக்கம் பெற்று அதனால் கைப்பழக்கமும் நாப்பழக்கமும் கூடப்பெற்று எந்தத் தொழிலை வேண்டுமானாலும் எளிதில் கற்றுக்கொள்ளும் மனோபக்குவம் வாய்ந்தவர்களாகப் பள்ளியைவிட்டுப் பிரபஞ்ச வாழ்வில் நுழைந்து தீரர்களாக உழைத்துவருகிறார்கள். அந்தப் பள்ளிக்கூடங்களின் சிறப்பை இச்சஞ்சிகையின் முகப்பில் இங்கிலீஷில் எடுத்துக்கூறியிருக்கிறோம்.

DANISH PEASANT SCHOOLS
டென்மார்க் நாட்டு வியவசாயிகள் வித்யாசாலை.

இத்தலைப்பின்கீழ் மிஸ்டர் நாகேந்திரநாத் காங்குளி யென்பவர் "மாடர்ன் ரிவியூ" என்னும் மாதாந்தப் பத்திரிகையின் மேமாசத்துச் சஞ்சிகையில் எழுதியிருக்கும் விர்த்தாந்தத்தை ஆதாரமாகக்கொண்டே நமது தேசத்தினும் நாட்டுப்புறத்தார்க் குபயோகமான படிப்பு வெறும் ஏட்டுப்படிப்பாகவின்றி மனம் படியப்பெறும் உண்மைப் படிப்பாக விருக்க வேண்டுமென்று வற்புறுத்தி கனம் அரசர் பிரதிநிதியவர்களுக்கும் கனம் வித்யா மந்திரியாகிய ஸர் ஸங்கரன்நாயர் அவர்களுக்கும் வித்யா சிரேஷ்டர்களாய் விளங்கும் உத்யோகஸ்தர்களுக்கும் பத்திராசிரியர்களுக்கும் ஒரு கடிதம் எழுதி அஃதை நாதகீத "நாயகள் சிலம்பொலி" யெனும் சிறுபுஸ்தகத்தோடு அனுப்பியிருக்கிறோம். அந்த விருத்தாந்தத்தை தினசரிப் பத்திரிகையொன்று தமிழ்ப் படுத்தியிருக்கின்றது. அதையே யெடுத்துச் சீர்திருத்தி இதன்கீழ்தானே பிரசுரித்திருக்கிறோம். விவேகசிந்தாமணியை வாசிப்போர் ஒவ்வொருவரும் இது விஷயமாகச் செய்தாகவேண்டிய முயற்சிக்கு அனுகுணமாயிருந்து ஆதரவளிக்க வேண்டினை இவ்விஷயத்தை ஆரத்தீர அமர்ந்து படித்து யோஜித்து "செய்வன திருந்தச் செய்" என்னும் முதுரையைக் கடைப்பிடியாகக் கைப்பிடித் தொழுகல வேண்டும்.

நாட்டுப்புறச் சிறுவர்களுக்கு கல்விகற்பிக்கும் விஷயத்தைப்பற்றி இந்தியா கவர்மெண்டாரும் ஜனசிரேஷ்டர்களும ஆலோசித்து வருகிறார்கள். டெனமார்கு தேசத்துக் குடியானவர்களின் குழந்தைகளுககு எப்படி அத்தேசத்தில் கல்வி போதிக்கிறார்களென்பது கவனிக்கத் தகுந்த விஷயம். குடியானவர்கள் வித்யாபிவிருத்தியில் பாடுபட்டுழைக்கும் தேசங்களில் டென்மார்க்கு தேசம் பிரதமையானது. அவ்விஷயத்தில் மற்றத் தேசங்கள் அச்சிறிய தேசத்தின் உதாரணத்தைக்கொண்டு அறிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் பல உள. அந்நாட்டுக் குடியானவர்கள் பயிர் செய்யும்முறை, அவர்கள் பொருளாதாரவிருத்திக்காகச் செய்திருக்கும் ஸ்தாபனங்கள் எல்லாம் விவசாய மாணவர்கள் பலரும் கவனிக்கத்தகுந்தன. இப்படிக் கெல்லாம் அத்தேசம் வியவசாயத்தில் முன்னுக்கு வந்திருப்பதற்கு அந்நாட்டுத் தேசாபிமானிகளின் விடா முயற்சியே காரணமாகும். டென்மார்க்கு வியவசாயிகள் கூடுமான வரையில் 100-க்கு 47 பேர் சாஸ்திர முறையில் வியவசாயத்தொழிற் கல்வி கற்றவர்கள். இந்த வியவசாயிகளுக்கு கல்வி கற்பிக்கும் வித்யாசாலைகள் அந்நாட்டில் "ஹைஸ்கூல்கள்" என்று பெயர்பெறும்.

வியவசாய கலாசாலை ஸ்தாபனம்.

நாட்டுப் புறத்தார்க்கமைந்த வித்யா ஸ்தாபனம் முன்ன மிருந்த ஒரு கவிவாணர் நிக்கோலே ப்ரடரிக் ஸெவரின் க்ரண்ட்விக் என்பவரால் உண்டாயிற்று. இவரே 1844-ம் வருஷத்தில் ஒரு பெரிய பொதுக்கூட்டம் கூட்டி, தமது நாட்டிற் கேற்ற தேசவித்தை மதவித்தை முதலியவற்றை தம் நாட்டவர்க்குக் கற்பிக்கவேண்டுமென்று போதித்தார். அவ்வார்த்தைகளைக்கேட்ட அந்நாட்டார் அவரையே தமது தலைவராக வைத்துக்கொண்டு அவர் புத்திமதியைக்கேட்டு டேனிஷ் வியவசாய ஜனங்களுக்கு உபயோகமாகும்படியாய் 'ஹைஸ்கூல்களை' ஏற்படுத்தினார்கள்.

ஏட்டுப்படிப்பு இல்லை.

இப் பள்ளிக்கூடங்களில் வியவசாயிகளுக்கு ஏட்டுபபடிப்புப் புஸ்தகங்கள் ஏற்படவில்லை. 'புரொபெஸர்கள்' (போதகர்கள்) பிரசங்கங்கள் செய்வதேதவிர, புஸ்தகத்தைப் பார்த்து மாணவர்களை நெட்டுருச் செய்யச்சொல்வதில்லை. போதகா ஒவ்வொரு மாணவரிடமும் நேரிற் பழகி மனமொத்து சம்பாஷித்துக் கல்வி புகட்டவேண்டும். இப்பள்ளிக்கூடத்தை

ஸ்தாபித்த கவிவாணர் இவ்விஷயத்தை அப்பள்ளிக்கூட போதனாபாகத்தில் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். மனிதன் ஹிருதய கமலத்திலிருந்து வரும் வாக்குமட்டுமே வார்த்தைகளுக்கு உறத்தையும் உய்ப்பிக்கும் சக்தியையும் கொடுக்கும் என்று அவர் சொல்லுகிறார். இப்பள்ளிக்கூடங்களில் 18-முதல் 25-வயது வரையிலுள்ள பிள்ளைகளே சேர்க்கப்படுகிறார்கள். வியவசாயக்கல்வி இம்மாதிரியான வயதுள்ளவர்களின் மனதிலேயே ஆணியறைந்தாற் போலும் பதியும் என்பது, அக்கல்விச்சாலை ஸ்தாபனத்திற்குக் காரணரான கவிவாணரின் அபிப்பிராயம்.

ஸ்வதேச சரித்திர ஞானம்.

தொழில் கற்கவென்று இப்பள்ளிக்கூடங்கள் ஏற்படவில்லை. இந்த ஹைஸ்கூல்களில் பொதுவாக மனப்பழக்கக்கல்வியே பிள்ளைகளுக்கு போதிக்கப்படுகிறது. அவர்கள் பிற்காலத்தில் வியவசாயத் தொழிலையும் வேறு எத்தொழிலையும் கிரகிக்கவல்ல நிபுணராக மாறுகிறார்கள். ஸ்வதேசியசரித்திரமும், கவியும் முக்கியமான பாடங்களாகக் கற்பிக்கப்படுவதில், இச்சரித்திரத்தைக் கவிகளின் மூலமாய் உருக்கமாய்ச் சொல்லிக்கொடுக்கும் மார்க்கத்தை, மேற்கூறிய கவிவாணர் ஏற்பாடு செய்திருக்கிறார். இவர் சரித்திரத்திலுள்ள விசேஷ சமாசாரங்களை கிளிப்பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுப்பதுபோல இன்னின்ன வருஷங்களில் இன்னின்ன நடந்தேறின வென்பவற்றைப்பற்றி ஒன்றும் சொல்லிக் கொடுக்க வேண்டாமென்று திட்டப்படுத்தி யிருக்கிறார்.

தேச பாஷையிற்போதனை.

இப் பள்ளிக்கூடங்களில் தேச பாஷையிலன்றி வேறு பிற எப்பாஷையிலும் கல்வி கற்பிக்கப்படுதலில்லை. மாணவன் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே போகுமுன்னால் டேனிஷ் பாஷை பேசுவதில் நிபுணனாகிறான். டென்மார்க்குத் தேசத்தில் 14, 15, வயது வரையில் எலிமெண்டெரி ஸ்கூல்களில் மாணவர்களிருக்கவேண்டிய சௌகரிய மிருக்கிறபடியால், இவர்கள் எல்லாரும் தேசபாஷையில் நிபுணராவது சுலபசாத்தியமா யிருக்கிறது. ஹைஸ்கூல்களில் இந்த வியவசாய மாணவர்களைத் தம் தேசபாஷையில் பயிற்றும் மாதிரி வெகு சிலாக்கியமானதாய் ஏற்பட்டிருக்கிறது.

பள்ளிக்கூடச் சம்பளம்.

எல்லா மாணவர்களும் சம்பளங்கொடுக்க வேண்டிய கட்டாய முண்டு. சம்பள விகிதமும் வெகு குறைவாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

பரீக்ஷை, யோக்கியதா பத்திரங்கள் இல்லை.

இப்பள்ளிக்கூடங்களில் பரீக்ஷையே இல்லை. வாய்வார்த்தையாகக்கூடப் பையன்கள பரீக்ஷிக்கப்படக்கூடாதென்பதே இக்கலாசாலை ஸ்தாபகரின் அபிப்பிராயம். எல்லாரையும் சேர்த்துக்கேள்வி கேட்கப்படுமேயன்றி ஒரு மாணவனை மட்டும் கேள்விகேட்டுப் பரீக்ஷிப்பதென்பதில்லை.

மாணவர்களுக்கு யோக்கியதாப் பத்திரங்களும் கொடுப்பதில்லை. இவர்களுக்குப் பரீக்ஷை வைத்து இவர்களை கோபன்ஹேகன் பட்டணத்து வியவசாய கலாசாலைகளில் சேர்க்கும்படி உத்தர விடப்பட்டது. அப்போது அக்கலாசாலைகளின் ஸ்தாபகர் சொன்ன பதிலின் சாராம்சம் பின்வருமாறு:—

“மாணவர்களுக்குப் பரீக்ஷையினால் ஆக வேண்டுவதில்லை. வியவசாய விஷயத்தைக் குறித்து விசாலமான பிரசங்க மூலமாய் அவர்கள்மனதில் தேசாபிமானத்தை எழுப்பி, ஸ்வதேசிய சரித்திரஞானத்தினால் அவர் மனதில் கிளர்ச்சி யுண்டுபண்ண வேண்டுமென்பதே எங்களுடைய நோக்கம். தேவாலய பாதிரிமார் மதபோதனையாக எது செய்துகொண்டிருக்கிறாரோ, அதுபோல் தேசத்திற்குற்ற நன்மையை சரித்திரபோதனை முதலியவற்றினால்

நாங்கள் செய்துகொண்டு வருகிறோம். அதனால் கணிதம், இலக்கிய இலக்கணம் முதலியவற்றை நாங்கள் இகழவில்லை. அவற்றைப் பின்னிட்டு மாணவர்தாமே அறிந்துகொள்வார்கள். ஆகையால் பரீக்ஷையை உத்தேசித்துப் பிள்ளைகளை நாங்கள் தர்பீது செய்யவில்லை.

பள்ளிக்கூடங்களின் சங்கியை.

இப் பள்ளிக்கூடங்களில் ராஜநீதி விஷயங்களும் சிறிது கற்பிக்கப்படுமாறு ஏற்பாடு செய்யப்படுகிறது. இம்மாதிரி ஸ்கூல்கள் டென்மார்க்கில் 80 இருக்கின்றன. மேற்கூறிய கவிவாணர் கிரண்ட்விக்கின் சிஷ்யர்களே இந்த ஸ்கூல்களின் டைரக்டர்களா யிருக்கிறார்கள். இப்பள்ளிக்கூடங்களில் இந்நகரத்துக் குடியானவர்களின் குமாரர்களும் குமாரிகளும் சேர்ந்து பயிற்சி பெறுகிறார்கள். பள்ளிக்கூடத்தில் வாசிக்கச் சம்பளம் கட்டவேண்டிய அவசியமிருப்பதனால், ஏழைக்குடியானவர்கள் வியவசாயக்கூலிகள் முதலிய சிலருக்கு இப்பள்ளிக்கூடங்களில் சேர்ந்து படிக்க முடிவதில்லை. ஆனால் அவர்களுக்கும் இம்மாதிரி பள்ளிக்கூடங்கள் இப்போது ஏற்பட்டிருக்கின்றன.

மனப்பயிற்சி பெறும் தன்மை.

இப்பள்ளிக் கூடங்களில், பூகோளசாஸ்திரம், சரித்திரம், டேனிஷ்பாஷை, இயற்கை சாஸ்திரம், ரசாயனசாஸ்திரம் இவைகளில் சிலவேளைகளில் பிரசங்க வாதங்கள் நடந்தேறும்; மாணவர்கள் இவ்வித பிரசங்கம் நடக்கும். மாரி காலங்களில் இப்பள்ளிக்கூடங்களுக்கு வந்து சில விவாதங்களைக்கேட்டு, மாணவர் வீட்டுக்குப்போய் சாவகாசமாய் நாட்டிலிருக்கும் புஸ்தகசாலைகள் சென்று அங்கு புஸ்தகங்களை வாசித்து, விசேஷமாய்த் தம் அறிவைப் பெருக்கிக்கொள்ளுகிறார்கள். ஒரே புஸ்தகத்தை நெட்டுருப்போட்டுத் தள்ளுவதைக் காட்டிலும் இம்மாதிரி பிரசங்கங்களினால் பிள்ளைகள் அடையும் நன்மை அதிகமென்பதே பள்ளிக்கூட ஸ்தாபகரின் அபிப்பிராயம். பள்ளிக்கூடம் இருக்கும் ஸ்தலவிசேஷங்களுக்குப் பொருந்தினாற்போல் வியவசாயப் பயிற்சியைப் போதகர்கள் செய்கிறார்கள்.

ஆசார்ய, சிஷ்யர்கள்
நடந்துகொள்ளும் விதம்.

இப்பள்ளிக்கூடத்தை நடத்தும் டைரக்டர்கள், புரொபஸர்கள் மாணாக்கர்களை வெகு கடுமையாய் நடத்துவதேயில்லை. அதனால் அவர்கள் உபாத்தியாயர்களிடத்து மரியாதை தப்பி நடந்துகொள்வதுமில்லை. உபாத்தியாயர்கள் பையன்களுடன் கலந்து ஆகாரங்கொள்வதும், பையன்கள் எப்பொழுதும் உபாத்தியாயர்களிடம் கூச்சப்படாமல் அணுகிச் சந்தேகம் தெளிந்து கொள்ளுவதும் சகஜம்.

ஒரு சீமாட்டியின் அபிப்பிராயம்.

இப்பள்ளிக்கூடங்களை வந்து பார்க்க ஐரோப்பா தேசத்து மூலைமுடுக்குகளிலுள்ள கல்விமான்கள் பலர் அடிக்கடி இங்குவந்து போவார்கள். ஒரு பிரெஞ்சு சீமாட்டி டேனிஷ்பாஷையையும் அவர்களின் கல்வி முறையையும் கற்க இந்நாட்டுக்கு வந்தார். அவர் பார்த்தபடி 200-சிறு பெண்மணிகள் முதற்கொண்டு மேற்கூறிய பள்ளிக்கூடங்களில் பிரசங்கங்கள் பலவற்றை உற்றுக்கேட்டு மனத்தில் பதித்துக் கொள்வதைப்பற்றியும் அவர்கள் பாட்டுகளுடன் கூடிய தேகப்பயிற்சி செய்யும் முறையையும் வியந்து எழுதியிருக்கிறார்.

ஆஸ்கோப் யூனிவர்ஸிடி.

இந்த ஹைஸ்கூல்களில் படித்தபடிப்பை விருத்தி செய்து கொள்ள ஒருவர் விரும்பினால் இவர்கள் க்ரண்ட்விக்கினால் ஸ்தாபிக்கப்பட்ட ஆஸ்கோப் யூனிவர்ஸிடி சென்று படிக்க வேண்டும். இங்கேயே மேற்கூறிய ஹைஸ்கூல்களில் உபாத்தியாயராக வரக்கூடிய போதகர்கள் பழக்கப்படுகிறார்கள். இங்கு இயற்கை சாஸ்திரங்கள், கணித சாஸ்திரங்கள் முதலியன பல படிகளில் உயர்ந்தனவாய்ச் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.” இங்கு” முதன்

முதலில் ரசாயன சாஸ்திரங்களில் ஆரம்பப் படிப்பைச் சொல்லிக்கொடுத்த பின் அந்த சாஸ்திரக்ஞர்களின் சரித்திரங்களையும், அவர்கள் உண்மை கண்டுபிடித்து உலகத்துக்கு உதவின விஷயங்களையும் நுணுக்கமாய்ச் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

முடிவுரை.

இப்படியாக டென்மார்க்கு தேசத்தில் வியவசாய வித்யாசாலைகள் ஏற்பட்டதனாலன்றோ அந்நாடு வியவசாயத்தில் உலகெங்கும் சிறந்த தேசமாக மதிக்கப்படுகிறது. கல்வியே விசேஷ சௌக்கியத்தைக் கொடுப்பது. எல்லாருக்கும் உயிர்போன்றது கல்வியே. "கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை." நம்முடைய நாட்டுப்புறவாசிகளுக்குக் கற்றுக் கொடுக்கும் கல்வி மிகவும் குறை நிறைந்திருக்கிறது. நம் கிராமாந்தரக் குடியானவர்கள் வித்யாபிவிருத்தியடைய வேண்டுமானால், நம் நாட்டில் கூட்டுறவு முயற்சி விருத்தியாக வேண்டுமானால், நம்நாட்டில் வியவசாயம் விருத்தியடைய வேண்டுமானால், இந்தியாவில் ஒவ்வொரு கிராமங்கள் குக்கிராமங்கள் தோறும் நாட்டுப்புறத்தார்க்கேற்ற வித்யாசாலைகள் ஏற்படுத்தப்பெறல் வேண்டும். டென்மார்க்கு என்னும் வியவசாய தேசம்போல் இந்தியா விருத்தியடைய வேண்டுமானால், நமது நாட்டுத் தேசாபிமானிகள் இலச்சுவான்தாரர்கள் தமது கவனத்தைத் தீவிரமாய்ச் செலுத்தி இவ்விஷயத்தில் உற்றதுசெய்ய உதந்துழைக்க வேண்டும்.

(மாடர்ன் ரிவியூவிலிருந்து தமிழ்ப் படுத்தப் பெற்றது.)

"PEARLS OF FAITH"

SELECTED AND STRUNG TOGETHER FOR PARENTS AND CHILDREN TO WEAR.

(From the Sayings of St. Vemanna.)

ஆந்திரபாஷையில், பிரமக்ஞானியும், அருட்கவியுமாகிய,

வேமன்ன மகாகவி அருளிச்செய்த

பத்யங்கள்.

(Second Series.)

நீசர்குணம் எவ்விதத்தாலும் மாறாது.

17. ஏசறவே கற்றாலும் எத்தனைதான் கேட்டிடினும்
நீசர்குணம் மாறுவரோ நேரிழையே—தேசில்கரி
பால்விட் டலம்புகினும் பல்கால் அதன் கருமை
மேல்விட்டுப் போமோ விளம்பு.

(இ-ள்.) எவ்வளவுகல்விகளை ஐயம் திரிபறக்கற்றபோதிலும் சாஸ்திரங்களைக் கேட்டபோதிலும் நீழ்மக்களுடைய குணமானது மாறமாட்டாது. எப்படி யென்னில் அடுப்புக்கரியை ஆவின்பால் பலதரம் கழுவினபோதிலும் அதன் கருநிறம் அதை விட்டு நீங்காதவாறு போல.

போராதவேளைக்கு அற்பரும் கெடுதிசெய்ய வல்லவராவார்கள்.

18. அந்நாள் இலங்கை அழிந்தகால் வானரங்கள்
தன்னால் அழிந்ததுகாண் தன்பெருமை—முன்னிலொரு
கேடாரும் காலைக் கெடுக்க வலியில்லாக்
கூடாரும் போதுமெனக் கொள்.

(இ-ள்.) முன்னாளில் இலங்கைமாநகர் அழியவந்தபோது அற்பமாகிய குரங்குகளாலன்றோ பெருமையழிந்தது. ஆதலினாலே நமக்குக் கெடுதிவரக்கூடிய துக்காலத்தில் நம்மைக்கெடுப்பதற்கு எவ்வளவு வலியற்ற சத்துருவும்போதும்.

கேடுவருமுன்னே மதி கெட்டுவரும்.

19. கானகத்தே காரிகையைக் கைவிட்டுப் பொன்மயமாம்
மானதனைப் பின்தொடர்ந்த வள்ளலினும்—ஞானம்
முதிர்ந்தார் எவருள்ளார் முன்னம்வரக் கேடு
பதிந்தமதி கெட்டுவரும் பார்.

(இ-ள்.) காட்டில் தன் மனைவியைத் தனியேவிட்டுப் பொன்மானைத் தொடர்ந்து சென்ற ஸ்ரீராமபிரானிலும் அறிவு முதிர்ச்சியுடையார் உலகில் யாவர். அவருக்கும் அப்போது மதிகெட்டுப்போனமையாலே கேடுவருமுன்பு மதி கெட்டுப்போகும் என்னும் உண்மை எத்திறத்தாருக்கும் உரியதேயாம்.

நல்லாரிலும் பொல்லாரே மிகுதியாவர்.

20. நல்லார் கிடைப்பரியார் நாடெங்கும் தேடுகினும்
பொல்லார் அளப்பிலாராற் பூமிசையே—வில்லாரும்
நன்னுதலாய் மண்போல் அகப்படுமோ நானிலத்தில்
பொன்னதுதான் உண்மை புகல்

(இ-ள்.) உலகமெங்கும் வருந்தித் தேடினாலும் நற்குணமுடைய மேலோரைக் காண்பதரிது பொல்லார்க்கோ அளவில்லை. இது சகஜதர்மமேயாம். எப்படி யென்றால் மண்ணைப்போலப் பொன் சுலபத்தில் கிடைக்கின்றதா. இல்லையே அதுபோலவே என்றறிதல் வேண்டும்.

அன்போடளிப்பது சிறிதளவேயாயினும் சிறந்ததாம்.

21. ஆவின்பால் முட்டையள வாயிடினும் சீர்மைத்தாம்
பாவாய் குடம்கழுதைப் பாலெதற்காம்—மேவுமுளத்
தன்பொடுகை யன்னம் அளித்திடினும் சீர்மைத்தாம்
என்பயனு மிட்ட பிற.

(இ-ள்.) விசுத்தமாகிய பசுவின்பால் முட்டையளவேயானாலும் மேன்மையாகும். அஃதன்றி அசுசியாகிய கழுதைப்பால் குடம்பாலையீந்தும் பயனென்ன. யாவர்கொள்வார்கள்! அதுபோல பிரீதியோடு இடும் அன்னம் பிடியளவேயாயினும் சிறந்ததாகும். அன்பில்லாமல் வெறுப்போடு வயிறார அளித்[illegible] பிரயோசனமென்ன

நடைப்பிணமாவான் இன்னானெனல்.

22. தேடான் அளித்தறியான் தின்பனவும் தின்னானல்
ஆடையணி கல்லான் அறிவில்லான்—நீசுகலை
ஞானமுமில் லானை நடைப்பிணமென் றேயுலகில்
மானவர்தாம் வைப்பார் மதி.

(இ-ள்.) பொருளை நல்வழியாலே சம்பாதிக்காமலும், சம்பாதித்த பொருளை நல்வழியிற் செலவு செய்யாமலும், தானும் உண்பனவற்றை உண்ணாமலும் உடுப்பனவற்றை உடுக்காமலும், விவேகமில்லாமலும் வேதசாஸ்திரங்களை அப்பியசிக்காமலும் இருப்பவனை இவ்வுலகில் நடைப்பிணமாகவே எண்ணுவார்கள்.

சத்புருஷர்களுக்கன்றித் தீயாருக்குச்செய்யும் உபகாரம் வீணாகும்.

23. நல்லார்க்குச் செய்தவொரு நன்றி யணுவெனினும்
பல்லா யிரமாகப் பாவிப்பார்—அல்லாத
அற்பருக்குக் குன்றத் தளவே புரிந்திடினும்
வைப்பர்கொலோ தங்கள் மனம்.

(இ-ள்.) நற்குணமுடையாருக்குச் செய்த உபகாரம் சிறிதேயாயினும் அவர்கள் அதை மிகப் பெரிதாகப்பாவித்து நன்றிபாராட்டுவார்கள். தீக்குணமுள்ள அற்பருக்குச் செய்த உபகாரம் மலையளவேயானாலும் அதை அணுவளவாகவேனும் பாவித்து நன்றி பாராட்ட மாட்டார்கள்.

வஞ்சகர்களுக்கு எவ்வளவு போதித்தாலும் நற்குணம் வரமாட்டாது.

24. பாலோடு சீனி படுத்திச் சமைத்தாலும்
ஏலாத எட்டி இனிக்குமோ—மாலாரும்
வஞ்சகர்தம் நெஞ்சில் வருமோ அருங்குணந்தான்
செஞ்சொனது செய்திடினும் செப்பு.

(இ-ள்.) பாலும் சீனியும் வேண்டுமட்டும் சேர்த்துப்பதமாகச் சமைத்தபோதிலும் எட்டிக் காய்க்கு இனிப்புண்டாகுமோ. ஆகாதன்றே. அதுபோல மயக்கமுடைய வஞ்சகர் மனசில் எவ்வளவு தான் போதித்த போதிலும் நற்குணங்கள் உண்டாகுமா ஒருபோதும் உண்டாகா.

விலைமாதர் மனத்தில் அன்புண்டாகமாட்டாது.

25. விலைமாதர் உள்ளத்தே மேவாதாம் காதல்
அலதொன் றடைந்திடினும் ஆங்கு—நிலையாது
பல்லோர்செல் பாதை முளையா முளைத்திடினும்
நில்லாது நீங்கிவிடும் புல்.

(இ-ள்.) வேசையர் மனத்தில் அன்பு தோன்றமாட்டாது. ஒருவேளை தோன்றினும் அவ்வன்பு நிலைத்து நிற்கமாட்டாது. எதுபோலென்னில் பலரும் நடந்து செல்லுகின்ற பாதையில் புல் முளையாது. ஒருவேளை முளைத்தபோதிலும் நெடுங்காலம் நில்லாது. சீக்கிரத்தில் அழிந்துபோகும். இது போலாம்.

மனம்செல்கின்ற வழியேபுலன்களும்செல்லும்.

26. உள்ளம் செலும்வழியே ஓடும் புலனெல்லாம்
கள்ளமின்றி நெஞ்சம் கடவுளடி—நள்ளுமெனில்
ஐம்புலன்கள் தாமும் அதையே யடைந்திடுமால்
பின்பொரிடம் சாராவாம் பேர்ந்து.

(இ-ள்.) மனம் எந்த வழியாகச் செல்லுகின்றதோ அந்தவழியே இந்திரியங்களும் செல்லும். ஆகையினாலே மனத்தை விஷயங்களிலே செலுத்தாமல் நிக்கிரகித்துக் கடவுளின் திருவடிகளில் செலுத்தினால் இந்திரியங்களும் அவ்வாறே அத்திருவடிகளிலேயே செல்லும். வேறோரிடத்தும் செல்லாது.

அறமொன்றே மறுமைக்குத் துணையாவது.

27. தநுவைத் துறந்தாவி தான்செல்லும் போது
மனைவிசுதர் சுற்றமுடன் வாரார்—தனிவழியே
ஏகு முயிர்க்குத் துணையாக எய்துவது
சேகிலறன் ஒன்றே தெரி.

(இ-ள்.) உடலைவிட்டு உயிர்பிரிந்து போகும்போது மனைவிமக்கள் சுற்றத்தார் என்பவர்களில் ஒருவரேனும் உடன்வரமாட்டார்கள். அப்போது தனிவழியே செல்லுகின்ற உயிருக்குத் துணையாக வருவது தான் செய்த புண்ணியம் ஒன்றேயாகும்.

ஆசையை நீத்தவனே யோகியவான்.

28. செம்பொன்னும் ஓடுமொரு சீராகச் சிந்தித்தே
அம்புவிழி யார்மயக்குள் ஆகாதான்—இம்பரிடை
மாயோகம் சாதிக்கும் வல்லோர்கள் தங்களினும்
தூயோனாச் சொல்லப் படும்.

(இ-ள்.) ஓட்டையும் பொன்னையும் ஒன்றாகப்பாவித்து மாதர்மேல் ஆசைவையாதவன் எவனோ அவன் யோகசமாதியில் இருக்கும் மகாயோகியைக்காட்டில் உயர்ந்தோனாகச் சொல்லப்படுவான்.

தேகம் அழியுமன்றி ஆன்மா அழியாது.

29. வானிடத்தே வானடையும் மண்ணிடத்தே மண்ணடையும்
ஊனெடுத்த ஆவி ஒழியுங்கால்—தேனடுத்த
சொல்லாய்நீர் தீவளிதாம் தோயமொடு தீவளியிற்
செல்லும்உயிர் நிற்கும் தனி.

(இ-ள்.) தேகத்தோடு சேர்ந்திருக்கும் ஆன்மாவானது இதனை விட்டு நீங்கும்போது பஞ்சபூதத்தாலாகிய தேகத்தின் கண்ணுள்ள பிருதிவியின் கூறு பிருதிவியோடும் அப்புவின் கூறு அப்புவோடும் தேயுவின்கூறு தேயுவோடும் வாயுவின்கூறு வாயுவோடும் ஆகாசத்தின் கூறு ஆகாசத்தோடும் கலந்து போக ஆன்மா இப்பூதங்களுக்கு அந்நியமாதலாலே அவற்றோடு கலவாமல் சேஷித்து நிற்கும்.

சிரவணமனனங்களாலே ஞானத்தைப்பெறவேண்டும்.

30. சொல்வார்சொற் கேட்டுத் துகளறவே ஆராய்ந்து
நல்வகையின் உண்மை நலந்தெரிவான்—வில்வளைய
வாங்கினுல் அன்னவெழில் வானுதலாய் வாய்ந்திடுவான்
தீங்கிலா ஞானமெனத் தேர்.

(இ-ள்.) வேதசாஸ்திரங்களில் வல்லவர்களாயுள்ள பெரியோர்களையடுத்து அவர்கள் சொல்லும் விஷயங்களை நன்றாகச்கேட்டுப் பின்னர் கேட்ட விஷயங்களை நன்றாக ஆராய்ச்சி செய்து பதார்த்தத்தை அறிகின்றவன் மெஞ்ஞானத்தை யடைவான்.

பகுத்தறிவாலே பாவத்தினீங்கிச்சுகம்பெறலாகும்.

31. தீபமில்லா இல்லிற் றெரியாது தீபம்போல்
தாவில் பகுத்தறிவு தான்பெற்றும்—பாவமெனும்
வெய்யவிருள் ஆறுநெறி வீழ்ந்தங்கு வீணே நீ
நைவதுதான் என்னே நவில்.

(இ-ள்.) தீபமில்லாத வீட்டில் இருள்மூடியிருத்தலின் ஒன்றும் தெரியாது. தீபத்தை ஏற்றி வைத்தபின்னும் அவ்விருள் நீங்காது நிற்குமோ? ஆதலால் புறத்திருளை நீக்கும் தீபம்போல அஞ்ஞானமாகிய அகத்திருளை நீக்குதற்கு விவேகமாகிய தீபத்தைப்பெற்றிருந்தும் கையில் விளக்கிருக்கவும் நெறியறியாமல் குழியில் வீழ்வார்போல நீ ஏன் பாவமாகிய இருளில் திரிந்துழலவேண்டும். விவேகத்தாலே தீவினையில் நீங்கி நல்வினைபுரிந்து சுகம் பெறலாகாதோ.

சத்தியமும் ஞானமுமே மேலோர்க்கு லட்சணம்.

32. வாய்மையுள்ளார் பாலாய் வளரும் பிறங்கறிவு
தூயவறி வுள்ளார்பாற் றோன்றிடுமே—வாய்மையது
வாய்மையும் சீரார் மனத்தறிவும் உள்ளாரே
ஆய்வுறு மேன்மக்கள் அறி.

(இ-ள்.) சத்தியமுள்ளாரிடத்தில் ஞானமுண்டாகும். ஞானமுள்ளாரிடத்தில் பரிசுத்தமாகிய சத்தியம் உண்டாகும். இவ்வாறு ஒன்றையொன்று அடுத்திருப்பனவாகிய ஞானம் சத்தியம் ஆகிய இக்குணங்களை உடையாரே மேன்மக்களாவார்கள்.

SHORT STORY.

SILENT REFORM:

AN OLD WAY OF SOLVING NEW PROBLEMS.

"Close your lips and let your hearts open. Work out the salvation of this land and of the whole world each of you thinking that the entire burden is on your shoulders."—*Swami Vivekananda.*

"திரைகடலோடியுந் திரவியந்தேடு."

(ஒரு சிறுகதை.)

இராமசச்ந்திரய்யர் தனக்குக் கல்யாணமான மறு வருஷத்திலேயே தன் மாமியார் பார்வதியம்மாள், பத்நி தங்கம்மாள், இவ்விருவரையும்கும்பகோணத்திலுள்ள தன் வீட்டிலிருக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டு தான் மாத்திரம் படிக்கப் பட்டணஞ் சென்றிருந்தனர். பட்டணத்தில் எம். எல். பரிக்ஷைக்கு வாசிக்கும்பொழுது அவர் மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய் சம்பளமுள்ள ஓர் வேலையிலமர்ந்தனர். இராமச்சந்திரய்யர் மிகுந்த பணக்காரர். பட்டணத்திலிருந்து மாதந்தோறும் ரூபாய்-60 கும்பகோணத்துக்கு அனுப்பிக்கொண்டிருந்தனர். அவர் அடிக்கடி ரஜாகாலங்களில் கும்பகோணத்துக்கு வந்து போய்க்கொண்டு மிருந்தனர். தங்கம் மிகுந்த புத்திசாலியும், கல்வி பயின்றவளுமாதலால் அவள் ஏற்பாட்டின் படிக்கே கும்பகோணத்தில் சிறப்பாய் வீடுகட்டி முடிந்தது. வீடுகட்டிமுடிந்து கடைசியாகப்பட்டணத்திலிருந்து வந்த நமதய்யர் இரண்டு வருஷகாலமாய் கடிதமெழுதாமலும், போகுமிடஞ் சொல்லாமல் பட்டணமே போவதாய்ச் சொல்லிப்போனவர் வெங்கட்ரமண சுவாமி சமாராதனை நடந்த அன்று காலமே தான் தன் பரிசாரகனுடன் தஞ்சை நகரத்திலிருந்து வந்து சேர்ந்தனர். வந்தது தான் தாமதம், சுவாமி காரியத்திற் கெத்தனஞ் செய்தனர். அவருக்கு இன்ன உத்தியோகமென்பதை தங்கம்மாளாவது அல்லது அவள் தாயார் பார்வதியம்மாளாவது தெரிந்துகொள்ளப் பதட்டப்பட்டவர்களாயிருக்கவில்லை. ஆனால் ஏதோ பெரிய உத்தியோகம் கிடைத்திருக்கலாம் எனவூகித்தார்கள். நல்லபடியாய் வீட்டிற்கு வந்து சேர்ந்தாரே என்று திருப்தி யடைந்தவர்களா யிருந்தார்கள். சமாராதனை முடிந்தது. வீட்டிலுள்ள எல்லோருக்கும் போஜனமாய் விட்டது. இராமச்சந்திரய்யர் வெளித்தாழ்வாரத்தில் கிரிமினல் தரப்புக் கேஸ்களை பைசல் செய்துக்கொண்டிருக்கிறார்.

இரண்டு வருஷகாலமாய் ஒரு மனுஷனைப் பற்றி யாதொரு சமாசாரமும் தெரியாமல், அல்லது தெரிந்துகொள்ளப் பிரயத்தினப்படாமல், தங்கம்மாளாவது, பார்வதி யம்மாளாவது எப்படி யிருந்திருக்கலாம் என்று சிலர் சந்தேகிக்கலாம். கும்பகோணத்தில் தன் வீடு கட்டிமுடிந்து கடைசியாக வந்த நமதய்யர் அவர்கள் தன் பத்நியைப் பார்த்து, "அடி தங்கம்! நான் பட்டணத்தில் இன்னுஞ் சிலகால மிருக்கவேண்டியிருக்கிறது. வர ஒரு வருஷம் செல்லும், அதற்குமேலுஞ் செல்லும்; என்னைப்பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். கடிதம் எழுதவும் எனக்கு முடியாது, நேரமிராது. நீங்களும் நான் போகுமிடம் வரவும்கூடாது. காரணமும் என்னைக் கேட்கக்கூடாது. சுகமாய் யாதொரு கவலையுமின்றி இவ்விடத்தில் நீங்கள் வசிக்க எல்லாவித சவுகரியங்களும் செய்யப்பட்டிருக்கிறது. என் வார்த்தையை மீறி நடப்பீர்களேயானால் நீங்கள் என்னை இழந்தவர்களாவீர்கள்" என்று கண்டிப்பாய்ச் சொல்லிப் போயிருந்தபடியால், மனதில் விசாரமிருந்தாலும், அவர்கள் சுவாமியை வேண்டிக்கொள்ளுதலைத் தவிர வேறொன்றுஞ் செய்வதற்கில்லாமல் அவர் புறப்பட்டுப்போன தினமுதல் ஒவ்வொரு தினத்தையும் ஓர் யுகமாகவே கழித்து வந்தார்கள்.

இராமச்சந்திரய்யர் கச்சேரி செய்யும் தோரணையைக் கண்டானந்தங்கொண்டு, தங்கம்மாள் தாயாரிடம் உள்ளே சென்றதை முன்னமே நாம் பார்த்தோம். அப்பொழுது தங்கம்மாள், "அம்மா! நமக்கு தெய்வானுகூலம் பூர்த்தியாக விருக்கிறதென்பதற் கையமில்லை. உன்

மாப்பிள்ளைக்கு நம்ம தஞ்சாவூர் ஜில்லா கலெக்டர் உத்தியோகமாம்." என்று தன் தாயாரைப் பார்த்துச் சொல்லிக்கொண்டே ஆநந்தக் கண்ணீர் பொழிந்தாள். பார்வதியம்மாள், தன் மகளை நோக்கி, "சரிதானடி உன் அம்மான் சேசன் பிள்ளையின் உபநயனத்தின்போது தானே, அவனுடைய அகத்துலே உன் ஆம்படையானை (அகமுடையானை) முதல் முதலில் பார்த்தோம்: உன் மாமா சேசனும் அந்தப்பிள்ளையைப்பற்றி, அவன் பி. ஏ. பரிக்ஷைக்கு வாசிக்கிறான், புத்திசாலி, சொத்தும் இருக்கிறது தக்கவன் தான், நம்ம குழந்தையை (உன்னை)க் கொடுத்தால் சுகப்படுவள் என்று சொன்னான். நீயும் அந்தப்பிள்ளைக்குத் தான் வாழ்க்கைப்படுவதாய்ச் சொன்னாய்; ஈசுவர சங்கல்பத்தின்படி நடந்தது. இனி நீங்கள் அகமுடையான் பொண்டாட்டியுமாய் குஞ்சு குழந்தைகளைப் பெற்றுக்கொண்டு எங்கேயாவது சுகமாயிருக்கவேண்டியது என்ற ஒரு கோரிக்கைதான் எனக்கு." என்றாள்.

அப்பொழுது அங்கிருந்த கெடியாரத்தில் மணி மூன்றடித்தது. தங்கம்மாள் பால் போளியில் இரண்டும், ஒரு 'தம்ளர்' காபியும் எடுத்துக்கொண்டு, தன் கொழுநன் சட்டை போட்டுக் கொண்டதாய் முன் சொன்ன அறையில், 'டிபன்' தயாராக இருப்பதாய் பரிசாரகப் பையன் மூலமாய்த் தெரிவித்துவிட்டு தான் தன் பர்த்தாவின் வரவை எதிர்பார்த்தவளாக, தாழ்வாரத்தில் கச்சேரி செய்யும் தன் கணவனுடைய முகாரவிந்தத்தை தன்னை யாருமறியாத வண்ணமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தனள்.

குழந்தை இராமச்சந்திரன் கச்சேரி செய்யும் விமரிசையைப்பற்றி இங்கெடுத்துக் கூறல் அவசியம். இளம்வயதானாலும் அவன் கட்சிக்காரர்களிடத்தில் ஜீவகாருண்ய முள்ளவனாய் நியாயத்தை யறிந்து, துஷ்டர்களை நிக்ரகஞ் செய்தும், சிஷ்டர்களைப் பரிபாலனஞ் செய்தும் வருவதில் அதி சமர்த்தனாகக் காணப்பட்டான். அவன் கட்சிக்காரர்களிடம் காட்டு மன்பு வியக்கத்தக்கதாயிருந்தது. பிறர் பொருளுக்குப் பேயாய்ப் பறக்காமல், பாரபக்ஷமென்பது அணுவளவேனு மின்றி எல்லாருக்கும் நல்லவனாய் நடந்து வந்தான். செல்வத்திலாயினும், கல்வியிலாயினும், உத்தியோகத்திலாயினும், அழகிலாயினும் நமது இராமசந்திரன் செருக்குற்றிலன். இக்காலத்தில் பெரும்பான்மையோர் தமக்குச் செல்வம் வந்துற்றபோது தெய்வத்தைக் கனவிலும் நினையாமலும், உற்றாரை மதியாமலும், சொல்வன அறிந்து சொல்லாமலும், தம் துணைகளை நோக்காமலும், எவ்விதத்திலாயினும் பிறர் பொருளைக் கவருவதிலேயே சித்தத்தை நாட்டியவர்களாய், தம்மனசார இது நியாயம், இது அநியாயம் என்று தெரிந்திருந்தாலும் அநியாயமான வழியிலேயே மனதைச் செலுத்தி தம்முடைய துஷ்ட எண்ணத்தின்படிக்கே நடக்க முயன்று, வெம்பகையை வலிதென்றெண்ணாமலும், இருக்கின்றனர். செல்வச் செருக்குற்றவர்கள் தம் செல்வம் நிலையாமை என்றுணராமலே நல்லொழுக்கினரைத் தூயவொழுக்கின ரென்றுரைக்கவும் புல்லொழுக்கினரை தூயபலக்கரென்றுரைக்கவும் செய்வதுமல்லாமல் நல்ல பதிவ்ரதா தர்மத்தைக் கைக்கொண்ட குலஸ்திரீகளை யஞ்சாமல் கெடுக்கவும் பல்வகைக்கான துயரத்தை வலுவிற் சம்பாதிக்கவுஞ் செய்கிறார்கள். அப்படிக்கெல்லாமின்றி இராமசந்திரன் கச்சேரி ஓர் நீதிஸ்தானமாயிருந்தது.

அன்று கோர்ட்டு முடிந்ததும் நமது அய்யர் உள்ளேவர எழுந்தனர். அதையறிந்த தங்கம்மாள் பலகணியை விட்டுச் சரேலென்று விலகி வந்து தன் கொழுநனை எதிர்நோக்கினவளாக அங்கு சுவற்றில் வைத்திருக்கும் விதம் விதமான இரவிவர்மாவின் படங்களை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தனள். அந்த அறைக்

குள் வந்த அய்யரோ ஓர் ஜோதியின் வடிவமாய் அங்கு தோன்றிய தன் பிரிய பத்னியைப் பார்த்தும், தன் சேவகனை கைப்பெட்டியை உள்ளே வைத்துப்போகச் சொல்லி, தனக்குள்ளேயே 'உலகத்தில் நான் ஒருவனே பாக்கியவான், "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி," என்றபடி, இவள் எனக்குப் பணிவிடை செய்வதிலேயே நோக்கமுடையவளாகக் காணப்படுகிறாள். மேலும் முதல் முதலில் ஆலங்குடி அக்கிரகாரத்தில் யாமா சேஷய்யர் வீட்டில் இப்பெண்மணியைப் பார்த்தபோது என்மனதும் இவள் மனதும் ஒற்றுமைப்பட்டு எங்களிருவர் கண்களும் ஓர் நிமைப்பொழுது சந்தித்தன; அத்தருணத்தில் இல்லிற் கிசைந்தொழுகும் பெண் இவள் என்றே தீர்மானித்து மணம் புரிந்தோமே. அது இன்று சபலமாயிற்று;" என்று நினைத்துப் பூரித்துக்கொண்டே தன் கச்சேரி உடைகளைக் களைந்துகொண்டிருக்கையில், படங்களைப் பார்த்துக்கொண்டிருந்த தங்கம், புருஷனைக்கண்டு திடுக்கிட்டு நாணி அவரை நோக்கித், "தங்கள் உத்தியோகத்தை எனக்குச் சொல்லத் தங்களுக்குப் பிரியமில்லாமற் போனாலும், சேவகன் பில்லைக்காவது இரக்கம் வந்ததே" என்று மறுபடியும் சொல்லிக் குறிப்பிட, அவர் அவளை இறுகப்புல்லினர். தத்தம் விருத்தாந்தங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டனர். அங்குள்ள பழவர்க்கங்களை ஒவ்வொரு தினுசாகக் கணக்குப்பார்க்க ஆரம்பித்தனர். அப்பொழுதோர் தந்தி வந்தது. அய்யர் உடனே அதைப் பிரித்து வாசித்தனர். "நாம் எல்லோரும் பட்டணம் போகவேண்டு" மென்றனர்.

தங்கம்மாள்:—"அங்கென்ன விசேஷம்!"

அய்யர்:—கெவர்ன்மெண்டு ஆபீசில் 'அண்டர் செக்ரடரி' (உதவிகாரியதரிசி) யாக என்னை நியமித்து இருக்கிறார்கள். இந்த தந்திசமாசாரம் வருமென எனக்கு முன்னமே தெரியும்.'

தங்கம்மாள்:—"பிராணநாதா! 'இந்தியன் சிவில் சர்விஸ்' பரீக்ஷை தேறினவர்களுக்கன்றி இந்த உத்தியோகங்கள் கிடைப்பதில்லை என்று தாங்களே முன்னொருகாலத்தில் கூறியிருப்பதாக என் ஞாபகத்திற்கு வருகின்றதே."

அய்யர்:—"அடி என் கண்ணே! நீ சொல்லுவது நிஜமே. நானும் மற்றுஞ் சிலருடைய உதவியினால் சீமைக்குச் சென்று மேற்படி பரிக்ஷையில் தேறினேன். நான் சீமைக்குப் போவது உங்கட்குத் தெரிந்தால் அதற்கு எதாவது இடையூறு நேரிடும் என்றேதான் உங்கட்குச் சொல்லாமல் கடிதம் கூட எழுதாமல் சென்றேன்."

தங்கம்:—"சீமை என்றால் இங்கிலாண்டு தேசந்தானே?"

அய்யர்:—"ஆம்."

தங்கம்:—"அங்கு செல்லலாமோ நாம்?"

அய்யர்:—"ஏன் சென்றாலென்ன?"

தங்கம்:—"கடல் யாத்திரை செய்யக்கூடாது என்று சில பெரியோர்கள் சொல்லுகிறார்கள் என்றுதான்—"

அய்யர்:—"ஏது? நீகூட சுத்த பைத்தியக்காரியாக விருக்கிறாய்; முன்னையில் பெரியோர்கள் கடல் யாத்திரை செய்யாமலா பிரபஞ்ச உற்பத்தியைப்பற்றி புத்தகமாக பூகோள சாஸ்திரமென்று எழுதியிருக்கிறார்கள்? இக்காலத்தில் ஐரோப்பியர்கள் தாம் சென்று பார்த்தவரையில் பூகோளம் (Geography) எழுதியிருக்கிறார்கள். கடல் பிரயாணஞ்செய்து வந்தவர்களை எல்லாம் என்னடி பண்ணி விட்டார்கள்?"

தங்கம்:—"பண்ணுகிற திருக்கட்டும்! ஆளுக்குத் தக்கிறைப்போல சமயத்திற் கேற்றதாயுள்ள விதிகளைத்தானே நம் பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள்?

அய்யர்:—"ஆம் அடி ஆம். பணமிருந்தால் ஒன்று; பணமில்லாவிட்டால் ஒன்றுதான்: இன்று பகல் நம்ம சமாராதனைக்கு எத்

தனை கனபாட்டிகள், சஸ்திரிகள் வந்திருந்தார்கள்! யாராவது மூச்சுவிட்டார்களா? உன் தோழி மீனாக்ஷி பரமசாதுவாயிற்றே, ஸ்த்ரீ தர்மங்களை நன்குணர்ந்தவள், "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை,' என்றபடி, அவள் தன் புருஷனுக்கடங்கி, அவன் மனங்கோணாது இசைந்தொழுகி அவன் எப்படிப்பட்டவனாக விருந்தாலும் அவனையே தெய்வமென மனதார நினைத்து அவனை மேன்மையாகவே கொண்டாடி வந்தனள். மேலும்,

"கோதில் கற்புடையார் தம் கொழுநர்பால்
காதல் கூர்ந்து களிமகி ழெய்துவார்."

என்றவாறு அவனிடம் மிக்க அன்பு பாராட்டி வந்தனள்; அத்தகைய புண்ணியவதியைக்கண்டு காமுற்று கெட்ட எண்ணங் கொண்டலைந்த சிலர் தம்முடைய முயற்சியால், அவள்மேல் ஓர் அபாண்டமான அபவாதத்தை யுண்டுபண்ணியும் ஸ்ரீமந்தத்தைக்கூட நடக்க வொட்டாமல் பண்ணியும் என்னென்னவோ கூத்தடித்தார்கள், கருத்தட்டாங்குடியில் நாலைந்து வருஷத்துக்கு முன்னே. அவள் பாவம்! கண்ணீர் விடாத குறைதானே! அவளைக் கொண்டவனை சொல்லவே வேண்டாம்: சுத்த தடியன், அப்பாவி வாயில்லாப்பூச்சி! அவனுடைய அண்ணன்மார்களும், ஒரு தம்பியும் மானமென்பதையே சித்தமாய்க் களைந்தவர்கள்! தகப்பனாரோ தள்ளாத கிழவர், பயந்தவர், நல்ல வித்வான். அவரால் என்ன செய்ய முடியும்? அவர் தன் சிஷ்யனை நம்பி அப்பொழுது மோசம்போனார். ஆயினும் தன் சம்மந்தி (மீனாக்ஷியின் சிறிய தகப்பனார்) யை வைத்துக்கொண்டு கிரியாலோபமில்லாமல் முகூர்த்தத்தை நடப்பித்தனர். ஆயிர மிருந்தாலும் பெற்றமனமோ அல்லவோ? ஊரில் சிலதலையாட்டிகள் செய்த நிர்ப்பந்தத்தினால் மீனாக்ஷியையும், அவள் அகமுடையானையும் மீனாக்ஷிபிரச்வித்து க்ஷேமமாகவிட்டு, என் தோழனும், அந்த அக்கிரகாரத்தில் பெரியாத்துக்காரனுமான கோபாலன், மேற்கே சென்னிமலை என்ற ஊரில் கொண்டுவிட்டு ஏற்பாடு செய்துவிட்டு வந்தான். அவர்களுக்கென்ன குறைந்துபோயிற்று. இப்போது ஊரைவிட்டுப்போக நேர்ந்த பேதையர்களான அவர்களுடைய மனக்கொதிப்பு வீணில்போகுமா? அந்தத் தலையாட்டிகள் கொட்டம் ஒவ்வொன்றாய் அடங்கிக் கொண்டு வருகிறது.

தங்கம்மாள்:—"நிமலருடைய சிஷ்யன் ஆர்? உங்கள் தோழனுடைய வீட்டில் (பெரிய வீட்டில்) தேவதார்ச்சனை செய்கிறாரே அவர் தானே?"

இராமச்சந்திர:—"ஆம் ஆம் ஆம், அந்த ஆஷாடபூதிதான்."

தங்கம்:—"அவரை எல்லாரும் ஆஷாடபூதி என்பானேன்?"

இராமச்சந்திர:—"அவன் மகாவேஷதாரி யாயிற்றே. 'படிக்கிறது திருவாசகம் இடிக்கிறது சிவன்கோயில்' என்றொரு வசனமுண்டு. அந்த மாதிரி அவன் வெளி வேஷதாரியே யல்லாமல் உள்ளே நுழைந்து பார்த்தால் சர்வ ஆபாஸந்தான். அவனைப்பற்றி சொல்லப்புகின் விரியும். பின் ஒரு சமயத்தில் கூறுகிறேன்.

தங்கம்மாள்:—"மீனாக்ஷி அகமுடையான்கூட தன்னைச் சில தலையாட்டிகள் அவமதித்துப் பேசி அவமானம் பண்ணியதாய் அவதூறு குற்றத்தில் கலெக்டர் துரையிடம் பிராது கொடுத்தாராமே; அவருக்கு சாதகமாய் கூடச்சென்ற அவருடைய தம்பி, மச்சினன் (தங்கைபுருஷன்) முதலிய அவருக்கு இரத்த சம்பந்தமாயுள்ளவர்களை எதிரிகளிடம் பொருளை பெரிதென்று தம்மானத்தைக் கூடச் சற்றும் பாராதவர்களாய்ப் பரிதானம் வாங்கிக்கொண்டு, அவரைக் கைநழுவவிட்டு நாகப்பட்டணத்திலிருந்தபடியே பட்டிலேறி வேதாரண்யம் சென்றார்களாமே! இவ்வாறு அவர் வஞ்சிக்கப்பட்டு நாகை நடுத்தெருவில் திண்டாடிவந்து சேர்ந்தாராமே! அவர்பாடு மண்குதிரையை நம்பி ஆற்றிலிறங்கிய கதையாகத்தான் ஆயிற்று. பணத்தையே பெரிதாய் நினைத்தார்களே யல்லாமல் மானத்தைக் கொஞ்சமும் கருதினார்களில்லை. பண ஆசையினாலேயே நல்ல நல்ல கௌரவமான இந்து குடும்பங்கள் சீரழிந்து போகின்றன.

இராமச்சந்திரன்:—இந்தக் காலத்தில் யாருக்கு யார் "பருத்திப் பொதியினைப் போலே வயிறு பருக்கத் தங்கள் தொந்திக்கு அறுசுவை போடுகின்றார்" என்றபடி, எல்லாம் தம்தம் வயிறு நிரம்பினால் சரி! மானமேது, அவமானமேது? பாழு முலகம், சரியான படி பாரபக்ஷ மில்லாமல் நியாயங் கூறுவோருமிலர். கலி பெருத்ததொன்றோ? சந்தியாவந்தனம் சரியாய்ப் பண்ணுகிறார்களா? சிலராவது பஞ்சபாத்திர ஜலத்தைக் கொட்டுகிறார்கள் என்று சொல்லலாம் அதுவுமில்லாமலெத்தனை பேரிருக்கிறார்கள் தெரியுமா? இதைக் காட்டிலும் கொடிய பாபம் வேறென்ன வேண்டும். இதற்கு விதிகூறி—கண்டனை தண்டனைகளைச் செய்பவர்களற்றது; சிலர் சாஸ்திரிகளென்று வெளிக்கு மாத்திரம் விபூதி பூசியும், ருத்திராக்ஷ மாலைகளணிந்தும் டம்பமாய்த் திரிகிறார்கள். காரியத்தில் ஒன்றுமில்லை. சர்வவிகாரந்தான். அவர்களை ருத்திராக்ஷப் பூனைகளென்றே சொல்லலாம். சேணியனுடைய நூலை வாங்கி டஜ்ரூப விதம் செய்துவிற்கத் தலைப்பட்டுவிட்டார்கள். கேள்வி முறையில்லை. இன்னும் இங்கெழுதத்தகாத எவ்வளவோ அக்கிரமங்கள் செய்யத் துணிகிறார்கள். அவைகளுக்கெல்லாம் என்ன செய்துவிட்டார்கள்? நான் சீமைக்குப்போனதில் தான் வந்து விட்டதோ! நாம் எப்போதும் ஈசுவரனுக்குப் பயந்து மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நல்ல வழியில் நடத்தலே போதுமான தருமமாகும். எத்தனையோபேர்கள் சீமைக்குச் சென்று மேற்கூறிய பரிக்ஷையில் தேறுகிறார்கள். அந்தப் பரிக்ஷையை இனி இந்தியாவிலேயே வைக்கப்படவேண்டுமென்றும், சுதேசிகட்கு கலெக்டர், ஜட்ஜி முதலான பாரி உத்தியோகங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்றும் 'காங்கிரஸ் சபையாரின்' தீர்மானங்களில் ஒன்று கோருகிறது. இனி அந்தமாதிரி அனுஷ்டானத்துக்கும் வந்தாலும் வரலாம் போலும். ஆனால் இப்பொழுது அந்தப் பரீக்ஷை யுத்த மும்முறத்தில் நின்றுபோயிருக்கிறது. அதெல்லாம் இருக்கட்டும். நான் கப்பலை விட்டு இறங்கினதுதான் தாமதம். தஞ்சை ஜில்லா கலெக்டர் உத்தியோகம் கைமேல் கிடைத்தது. நான் வேலையை ஒப்புக் கொண்டு இரண்டே வாரமாயிற்று. உங்களைத் தஞ்சைக் கழைத்துக்காண்டு செல்ல இங்கு வந்தேன் தந்தியோ "உதவிகாரியதரிசி" (Under Secretary) வேலை என்று வந்திருக்கிறது. உடனே சென்னை வந்து சேரவேண்டுமாய்க் கண்டிருக்கிறது. ஆகலின் இன்று இரவில் 10-45-க்கு வரும் பட்டணம் மெயிலில் சென்னைமாநகருக்குச் செல்ல சித்தமா யிருங்கள்.

இராமச்சந்திரய்யரும் தங்கம்மாளும் பார்வதியம்மாளையு மாதரணை செய்து வைத்துக் கொண்டு பட்டணத்திலும், கும்பகோணத்திலுமாக உலகம் புகழ சுகமே காலங்கழித்தனர்.

"I consider the journal is a useful organ and may be supplied to all Elementary Schools under your control as it is devoted mainly to educational matter. I request you will be good enough to subscribe for copies of the Monthly Journal (Vivekachintamani) and place it in the hands of Elementary School Masters"—*Extract from the Official Circular to Local and Municipal Boards by A. I. Schools.*

TRUTH OFTEN UNWELCOME AT FIRST.

The time is racked with birthpangs: every hour
Brings forth some gasping truth, and truth [new-born
Looks a mishappen and untimely growth
The terror of the house-hold and its shame
A monster coiling in its nurse's lap
That some would strangle, some would starve;
But still it breathes, and passed from hand to [hand,
And suckled at a hundred half-clad breasts
Comes slowly to its stature and its form
Calms the rough ridges of its dragon scales,
Changes to shining locks its snaky hair,
And moves transfigured into Angel guise,
Welcomed by all that cursed its hour of birth
And folded in the same encircling arms
That cast it like a serpent from their home.

—*Oliver Wendell Holmes.*

உண்மை முதலில் ஒருவர்க்கும் பிடியாது.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

1. மருவிய வயாவிற் கால மிடையற வருந்தா நிற்கும்,
ஒருவறக் கடிகை தோறு முதித்தலா லொவ்வோ ருண்மை;
தருமதி நிறையு முன்னந் தாய்வயிற் றுதித்த சேய்போல்,
உருவது குறைந்து தோன்று முதித்தவவ் வுண்மை மாதோ.

(இ-ள்.) ஒவ்வொரு நாழிகையும் யாதேனும் ஒருண்மை உலகில் தோன்றிக்கொண்டே யிருத்தலினாலே, அது தோன்றுதற்கிடனாகிய காலமென்னும நங்கைக்குப் பிரசவ வேதனை நீங்குவதேயில்லை. அவ்வுண்மையானது பிறக்கும்போது எவ்வாறு தோன்றுமென்னில், பத்துமாதமும் பூர்த்தியாகிக் கருப்பம் பரிபூரணமாகு முன்னமே குறைமாதத்தில் பிறந்த குழந்தைபோல, மகா அவலட்சணமாகத் தோன்றுமேயன்றி, இனிமையாகத் தோன்றுவதில்லை.

2. தாய்மடிச் சுருண்டு தங்குஞ் சருப்பமொன் றதனை யேய்ப்பத்,
தீயவவ் வுருவங் கண்டு, சிந்தையி லயர்ந்து, மற்றீ
தேயநங் குலத்துக் கீன மிழைக்கவந் துற்ற தாய
பாயமொன் றென்ன வஞ்சி மாழ்குவர் மனத்து மாதோ.

(இ-ள்.) அன்றியும், ஒருவர்க்கு நல்லவடிவுடைய குழந்தை பிறத்தற்கு மாறாகச், சர்ப்பம்போலக் கோரரூபமொன்று பிறந்து தாயின் மடியிற் சுருண்டு கிடக்கக்காணின், அஞ்சி, உறவினர்யாரும், ஐயோ நம் குலத்துக்குத் தீராக்குறையும் அவமானமும் உண்டுபண்ண இந்தக்கோரம் என்வந்து பிறந்ததென்று, மனம் வருந்துதல்போல, இவ்வுண்மையைக்கண்டு அஞ்சி வருந்துவார்கள்.

3. சிலரதைக் கழுத்து நையத் திருகுமினென்பர், சில்லோர்
குலைவுற வுணவிடாது கொல்லுமி னென்ப ரேனும்,
நலிவற வுயிர்த்து நின்று, நவில்பல கரத்து மாறி,
முலைபல செவிலியூட்ட முசிப்பற வளருமன்றே.

(இ-ள்.) சிலர் அதனைக்கழுத்தைத் திருகிக்கொன்று விடுங்கள் என்பார்கள். வேறு சிலர் ஆகாரம்போடாமல பட்டினி போட்டுக் கொல்லுங்கள் என்பாரகள். ஆயினும், அவ்வுண்மையென்னும் குழந்தையானது, வல்லுயிர் பெறுதலின், இத்தனைக்கும் மடியாமல், உயிர்பெற்றிருந்து, பல கை மாறி, அநேக செவிலித்தாய்களின் முலைப்பாலுண்டு, சிறிதும் தளர்ச்சியில்லாமல் வளர்ந்துவரும்.

MADRAS

4. வரவர வளர்ந்து பேணி வடிவுற நிறைந்த தாகி,
வெருவுறு முடல மெல்ல விளங்கிநல் லழகு தோன்ற,
மருவிய பாந்தண் மேனி மறைந்துநல் வனப்புவாய்ந்து,
திருமலி தெய்வ மென்னத் திகழ்ந்திடுஞ் சிறப்பி னன்றே.

(இ-ள்.) அவ்வாறு நாளுக்குநாள் வளர்ந்து, உருவத்திலும் வடிவத்திலும் நிறைவடைந்து, முன்கண்டோர் அஞ்சிய அருவெறுப்பான தேகமானது விளக்கமுற்று அழகுதோன்ற, முன்னிருந்த பாம்பைப் போன்ற கொடிய மேனியானது மாறிமறைந்து அழகு வாய்ந்து, தெய்வமேனிபெற்று, ஓர் அழகிய தெய்வம்போல விளங்காநிற்கும் அவ்வுண்மை.

5. மற்றநாட் பிறந்த காலை வைதறப் பழித்தோர் யாரும்,
முற்றிய மகிழ்ச்சி யோடு முனிவற வெதிர்கொண் டேகிப்,
பற்றரும் பாந்த ளென்னப் பயந்தெறிந் துதறுங் கையால்
உற்றுறத் தழுவி யோம்ப வுயருமவ் வுண்மை தானே.

(இ-ள்.) அப்போது, முன்தான் பிறந்த காலத்துத் தன்னை வைது நிந்தித்தோர் யாரும் மிகுந்த மகிழ்ச்சியோடும் எதிர்கொண்டழைத்து, முன்னம் பாம்பென்று நடுங்கித் தொட்டவுடனே எறிந் துதறிய கைகளால் உடல் புளகிக்கத்தழுவி உபசரிக்க, பெருஞ்சிறப்படையும் அந்த உண்மை.

CHARACTER SKETCH: THE STORY OF PROSCOVIA.

குணவலி விளக்கம்: ப்ராஸ்கோவியாவின் சரித்திரம்.

(21-வது பக்கத்தொடர்ச்சி)

இவ்வாறு ப்ராஸ்கோவியா கடவுளைப் பிரார்த்தித்து வருங்காலத்தில், அவளது தாயார் அபாயகரமான ஓர் வியாதியினால் பீடிக்கப்பட்டு நெடுநாள் பாயும் படுக்கையுமாய்க் கிடந்து வருந்த நேர்ந்தது. அப்போது ப்ராஸ்கோவியா அவருக்கு வேண்டிய பத்திய பாகங்களைச் செய்து கொடுத்து அன்போடு பாதுகாத்து வந்ததேயன்றிச், சமையல் சாப்பாடு முதலிய வீட்டுக்காரியங்களையும் குறைவு வராமல் செய்து நிர்வகித்து வந்தாள். அதனால், தந்தை தாயாருக்கு அவளிடத்தில் கௌரவமும் நம்பிக்கையும் உண்டாகி அவளைக் கேவலம் இனந்தெரியாத குழந்தைபோலப் பாவித்தலைவிட்டுப் பாரபுத்திவந்தவளாகப் பாவிக்க வேண்டியதாயிற்று. ஆதலால், இதன்பின் அவள் பீடர்புரிக்குப் போகும் விஷயத்தைப் பிரஸ்தாபிக்க வந்தபோது முன்போல அலக்ஷியம் பண்ணி அவளை வாயெடுக்க வொட்டாமல் கண்டிப்பதைவிட்டு, அவள் தந்தை, "அம்மா நீ எங்களை இந்த வயது காலத்தில் ஆதாரமின்றித் தனியே விட்டு விட்டு மிகவும் அபாயகரமான தொலைதூரப் பிரயாணத்தைத் தனியே செய்ய உத்தேசித்தல் உனக்குத் தருமமாகுமா?" என்று அவளை நயந்து வேண்டத் தலைப்பட்டனர். அவள் அவர் வார்த்தையைக்கேட்டு மனம் வருந்திக் கண்ணீர் விட்டாளாயினும் தான் கொண்ட எண்ணத்தைமட்டும் கைவிடத் துணியவில்லை.

பின்பு, தெய்வம் வரம்கொடுத்தும் பூசாரி வரம்கொடுக்கவில்லை யென்பது போல இவளுடைய தந்தை தயார் ஒருவாறு இவள் கருத்துக் கிணங்கினபோதிலும் இன்னொரு விகாதம் எதிர்ப்பட்டது. இவள் துரைத்தனத்தாரின் அநுமதியில்லாமல் அவ்வூரைவிட்டு வெளியேபோக ஒப்பமாட்டார்கள். ஆதலின் அவ்வநுமதியை அவசியம் பெற்றுக்கொள்ளவேண்டியதாயிற்று. அது எப்படி முடியும்? இவள் தகப்பனார் அதுவரையில் அதிகாரிகளுக்கு

எழுதிக்கொண்ட அநேக விண்ணப்பங்களில் ஒன்றேனும் கவனிக்கப்படவேயில்லை. இப்போது அநுமதிப் பத்திரத்துக்காக அவர் எழுதிக்கொண்டால் அதை யார் கவனிக்கப் போகிறார்கள்? ஆதலினாலே, ப்ராஸ்கோவியா தான் நேராகவே துரைத்தனத்தாருக்கு மநுச் செய்துகொள்ள நிச்சயித்து அவ்வூரில் ஒருவரால் முறைப்படி ஒரு விண்ணப்பம் எழுதிக் கொடுக்கச்சொல்லி அதனை சிபேரியா கவர்னருக்கு அனுப்பினாள்.

ருஷியா துரைத்தனம் நமது பூர்வீக கர்நாடக துரைத்தனத்துக்கு ஒருவிதத்திலும் பின்னடையாதென்றே சொல்லவேண்டும். மநு எழுதிக்கொண்ட ஆறுமாதத்துக்கெல்லாம் தெய்வாதீனமாகப் பிராஸ்கோவியாவுக்கு அநுகூலமாகவே உத்தரவு கிடைத்தது. அவளது பிதாவுக்குத் தண்டனையேயன்றி அவளுக்கு யாதொரு தண்டனையுமில்லை யாதலின் அவளுக்கிஷ்டமானபடி எப்போது வேண்டுமானாலும் சிபேரியாவை விட்டுப் போகலாமென்று அநுமதிப்பத்திரம் வந்தது. ஆயினும் இன்னமும் அவள் மனோரதம் நிறைவேறுதற்குக் காலம் வரவில்லை. "அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி எடுத்த கருமங்களாகா" என்னும் மூதுரை பொய்யாகுமா. ஆதலால் அவள் பிதா, வந்த அந்த பத்திரத்தைத் தாம் வாங்கி அவளுக்குக் கொடாமல் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு, "உத்தரவு வாராதென்கிற நம்பிக்கையினால் மநுச்செய்ய ஒப்புக்கொண்டேனேயன்றிப் பதினெட்டு வயதுப் பெண்பிள்ளையை நெடுந்தூரப்பிரயாணம் தானே செல்லும்படி மனமொப்பி யனுப்புவேனா? பிராணன் போனாலும் மாட்டேன்." என்று ஒரேபிடியாய்ச் சொல்லிவிட்டார்.

'விடாமுண்டன் கொடாமுண்டன்' கதைபோல ப்ராஸ்கோவியாவும் தான் பிடித்த பிடியை விடவில்லை, அவள் படும் துயரத்தைக் கண்டு தாயார் பரிதபித்து "அம்மா உன்பிதா சம்மதிக்கும்பக்ஷத்தில் நான் ஒன்றும் தடை சொல்லவில்லை; சுகமாய்ப் போய்வா" என்று கூறினர். பிதாவும் கடைசியில் சம்மதித்தனர். "நாம் இப்பெண்ணை இங்கு வைத்திருத்தலிற் பயனில்லை. இவள் மனசுக்கு விரோதமாய் இவளுக்கு வருத்தம் உண்டுபண்ணுதலையன்றி வேறு நன்மையைக் காணேம். ஆதலின் இவள் மனம்போனபடி விட்டுவிடவேண்டியதுதான்" என்று சொல்லிப் பின்னும் அவளை நோக்கி, "பேதைப்பெண்ணே, இவ்விடத்தில் உன் தகப்பனோடு சுதந்தரமாகப் பேசுதல்போலச் சக்கிரவர்த்தியோடும் பேசலாமென்றெண்ணுகின்றாயோ? அங்கே அரண்மனையில் எத்தனை கட்டு! எத்தனைகாவல், வாயிலிக்கு வாயில் யமகிங்கரர்போலப் பாராச்சேவகர்கள் இருப்பார்களே. வாசற்படி தாண்டவும் உன்னால் முடியாதே. பிச்சையெடுத்துப் பிழைப்பவர்போல அவ்வளவு எளிமையோடு, தக்க உடையுமில்லாமல், சிபார்சுமில்லாமல், நீ யெவ்வாறு சக்கிரவர்த்தியைப் பார்க்கப் போகிறாய்? யாவர் உன்னை ராஜசன்னிதானத்துக்குக் கூட்டிக்கொண்டு போகக் கௌரவம் பாவியாமல் உடன்படுவார்கள்?" என்று கூறினர். ஆயினும் ப்ராஸ்கோவியாவுக்குச் சற்றும் அதைரியமுண்டாகவில்லை. தனக்கு அநுமதிப்பத்திரத்தைக் கிடைக்கச் செய்தருளிய இறைவன் மற்ற இடையூறுகளையும் நீக்கித் தன் மனோரதத்தை நிறைவேற்றுவிப்பார் என்னும் நம்பிக்கை அவள் மனத்திற் குடிகொண்டிருந்தது. தான் தஞ்சமென்றிக் கடவுளின் ஆற்றலில் வைத்த கரைகடந்த நம்பிக்கையும் தன்னுடைய அதிதீவிர எண்ணமும் மலைபோன்ற இடையூறுகளையெல்லாம் அணுமாத்திரமாகத் தோற்றுவித்தன. ஆதலின் தான் மேற்கொண்டகாரியம் நிஷ்பலமாய்ப் போகுமோ என்கிற சந்தேகமும் சஞ்சலமும் அவளுக்கு இல்லவேயில்லை. அக்காரியம் தன் தாய் தந்தையரின் இஷ்டத்துக்கு விரோதமில்லாமல் அவர் சம்மதத்தோடு தொடங்கிச் செய்யவேண்டுமென்ப தொன்றே யொழிய வேறு சஞ்சலம் அவளுக்கு இல்லை. நல்ல வேளையா

ச்சம்மதியும் கிடைத்து விட்டது. பிரயாணம் புறப்படும் தினமும் நிர்ணயிக்கப்பட்டது.

குறித்த தினத்தில் அதிகாலையில் எழுந்து உடை உடுத்திக்கொண்டு தோளில் சஞ்சியொன்று கட்டித் தொங்கவிட்டுக்கொண்டு பிரயாணத்துக்குச் சித்தமாயினாள். வழிச்செலவுக்குப் பணம் எவ்வளவிருந்தது தெரியுமா? வீட்டில் இருந்த ஆஸ்தியெல்லாமாய்ச்சேர்ந்தது ஒரு ரூபாயுக்கு மேலில்லை. அது பீடர்புரிக்குப்போகப் போதுமா? வீட்டில் இருந்தாலும் சமயத்துக்கு உதவுமென்று அவள் கூறினபோதிலும், அவள் பிதா ஒப்பவில்லை. ஆதலால் பிதாவின் கட்டளையை மீறுதற்கஞ்சி அதையெடுத்துக்கொண்டாள். அவர்களைப் போலவே தண்டனைப்பட்டு வந்திருந்தவர்களில் மிக எளியராகிய இருவர்கள் தங்களிடத்தில் உள்ள நான்கு அணாச் சில்லரையையும் கொண்டுவந்து கொடுத்தார்கள். அதைப் பெற்றுக்கொள்ள அவள் உடன்படாவிடினும், அவரது பிரீதிக்குச் சந்தோஷித்துத் தான் பெறும் நன்மையை அவர்களும் அடையும்படி சக்கிரவர்த்தியிடத்தில் அவர்களுக்காகவும் மநுச்செய்வதாக வாக்குத்தத்தம் செய்தாள். பின்பு உருஷியர்களுள் உள்ள பழையதோர் இனியவழக்கப்படி பிரயாணம் போவார்களின் பொருட்டுச் செய்யும் பிரார்த்தனையைச் செய்து, அதன்பின் ஒருவர்க்கொருவர் பிரிந்துபோகையில் சொல்லிக்கொள்ளும் வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு பிராஸ்கோவியா தந்தை தாயாரை நமஸ்கரித்து அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு பிரயாணமானாள். பதினெட்டு வயதுப் பெண்பிள்ளை வழிச்செலவுக்கு ஒரு ரூபாயுடன் கரைகடந்து காட்டுமார்க்கமாய்க் கால்நடையாக நடந்துசென்று சக்கிரவர்த்தியின் தரிசனம் பெறும்படிப் புறப்பட்டனள்!

இவ்வாறு ப்ராஸ்கோவியா 'திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை' யென்றபடி தெய்வத்தையே துணையாக நம்பிப்புறப்பட்டுச் செல்லுகையில், அந்நெடுந்தூரப்பிரயாணத்தில் அவளுக்கு அநேக இடுக்கண்களுண்டாயின. ஒரு தடவை ஊரைவிட்டுப் புறப்பட்டுச் செல்லுகையில் வழிதப்பிப்போய் நெடுநேரம் சுற்றித் திரிந்து கடைசியில் புறப்பட்ட ஊருக்கே மீண்டும் வந்துசேர்ந்தனள். மற்றொரு தடவையில் தான் செல்லும் மார்க்கத்தில் சமீபமுள்ள ஊர்களொன்றையும் அறியாளாதலின் அங்கு எதிர்ப்பட்டவர்களை நோக்கி 'ஐயா பீடர்புரிக்கு வழி எப்படி' யென்று கேட்க அவர்கள் குலுங்க நகைத்து இந்த மூன்று பாதைகளில் எந்தப் பாதைவழியே சென்றாலும் பீடர்புரிக்கோ ரோமபுரிக்கோ பாரிஸ்புரிக்கோ எங்கு வேண்டுமானாலும் செல்லலாம் என்றார்கள். நல்லவேளையாய் அவள் சென்ற பாதை சரியானபாதையாயிருந்தது. குக்கிராமங்களில் ஜனங்கள்பெரும்பாலும் அவளிடத்தில் இரக்கங்கொண்டு உணவு முதலியவற்றைக்கொடுத்து உபசரிப்பார்கள். பெரிய ஊர்களில்தான் அவளுக்கு அங்கங்கு சில கஷ்டங்கள் நேரிட்டன. ஒரு தடவை ஒரூருக்கு நாலைந்து மைலுக்கிப்பால் செல்லும்போது சந்தியாகாலத்தில் சடிதியில் காற்றும் மழையும் குமுறிக்கொண்டு வந்துவிட்டது. சண்டமாருதத்தால் மரங்கள் வேர்ப்பறியலாய்ப் பறிந்து வீழ்ந்தன. ப்ராஸ்கோவியாவின்மேல் மரம் முறிந்துவிழ ஒரு மயிரிடை தப்பியது. அதனால் அவள் முன்னேக்கிப்போக அஞ்சி அங்கு ஒரு புதரில்போய் ஒதுங்க அது சிறிது நேரம் மழைக்குத் தாங்கலாயிருந்ததேயன்றி அப்பெரு மழைக்கு அச்சிறு புதர் ஓர் ஆதாரமாகுமா? கிளைகளினூடே மழை தாரைதாரையாகச் சொரிந்து அவளை முற்றிலும் நனைத்து விட்டது. மழையோயுமுன் சூரியாஸ்தமனமாகி இருள் மூடிக்கொண்டதனால் பாவம் அம்மடந்தை அவ்விடத்திலேயே குளிரிலும் காற்றிலும் விறைக்க விறைக்க நனைந்த துணியோடு இராப்பொழுது முழுதும் கழிக்கவேண்டியதாயிற்று.

பொழுது விடிந்ததும் மெல்ல மெல்ல நகர்ந்து பாட்டையில் வந்துட்கார்ந்திருக்க அவ்வழியே வண்டியோட்டிச்சென்ற குடியானவன் ஒருவன் இரக்கங்கொண்டு அவளை மறு கிராமத்துக்கு வண்டியிலேற்றிச் சென்றான், வண்டியை விட்டு இறங்கும்போது, பாவம் அவள் தவறிக்கீழே விழுந்து விட்டமையால், உடுப்பு முழுதும் சேறும்சகதியுமாய்ப் போய்விட்டது. பசியும்தாகமும் ஒட்டிக்கொள்ள மெல்லமெல்ல நடந்து களைத்துப்போய் ஒரு தெருத்திண்ணையில் உட்காரப் போனதும் அவ்வீட்டுப் பாக்கியசாலி கொடிய பாம்புபோலச் சீறிவந்து, வேட்டைநாய்போல மேலேவிழுந்து, "போ போ இங்கு நில்லாதே ஊர்வழிபோகிற வறண்டற் பிணங்களுக் கெல்லாம் இதுதானா இடம்" என்று வாயில் வந்தபடி திட்டித் துரத்திவிட்டாள். பின்பு மற்றவீடுகளிலும் அவ்வாறே கிட்டவொட்டாமல் வெருட்டித் துரத்திவிட அவள் கடைசியில் ஊருக்குப் புறத்துள்ள ஆலயத்திற் சென்றிருக்கலாமென்று போக அங்கு கோயில் வாயில் அடைக்கப்பட்டிருந்தமையால் வாயிற்படியில் உட்கார்ந்தாள். இதற்குள்ளாக அவ்வூர்ப் பிள்ளைகளெல்லாம் கும்பலாய்க் கூடிவந்து செத்த மாட்டைக் கொத்தும் காக்கைகள்போல அவளைச் சூழ்ந்து கொண்டு அவளைக் கள்ளியென்றும் ஞானக்குறத்தி யென்றும் பலவிதமாகத்திட்டி உபத்திரவிக்கத் தலைப்பட்டார்கள். ஐயோ! அவளுடைய அவஸ்தையை என்னென்று சொல்லுவது. பசியாலும் களைப்பாற உட்காருவோமென்றால் அதற்கு மொட்டாமல் இத்துஷ்டப் பயல்கள் வருத்தவும் இரண்டு மணிநேரம் இருந்து உள்ளுக்குள்ளே பகவானைத் தியானித்து, "சுவாமீ, தீனதயாபரா, எளியேனுக் கிக்கொடிய துன்பத்தைப் பொறுத்திருக்கப் போதுமான பலத்தைக் கொடுத்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது கருணாநிதியாகிய கடவுளின் அருவருளே உருவுகொண்டதுபோல ஒரு மாதுசிரோமணி அக்கூட்டத்தை விலக்கிக் கொண்டு அவளண்டையில் வந்து, "அம்மா! வருந்தாதே, நீ யாவள்? இங்கு வரக்காரணமென்ன?" என்று கேட்கப் பிராஸ்கோவியாவும் மழைமுகம் கண்ட பயிர்போல வாட்டம் நீங்கித் தன் வரலாற்றைக் கூறினாள். அப்போது கிராமாதிகாரியும் அங்குவந்து அவளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அநுமதிப் பத்திரத்தைப் பார்வையிட்டு அதனால் அவள் அந்தஸ்து முதலியவை அவள் சொல்லிய தற்கிணங்க விருக்கக் கண்டனன். பின்பு அந்தக் கருணையுள்ள அம்மணி அவளைத் தன்வீட்டுக்கு அழைத்துப்போக எழுந்திருக்கச்சொல்ல ஐயோ பாவம்! அவள் கால்கள் குளிரால் விறைத்துப் போய் நீட்டமடக்கச் சுவாதீனமில்லாமல் இருந்ததன்றி ஒருகாற் செருப்பு எங்கோ நழுவி விழுந்துபோய் கால்களிரண்டும் வீக்கம் கொண்டிருந்தன. அந்தப் பயங்கரமான இராத்திரியில் மழையாலும் குளிராலும் அடிபட்டு அவளுக்குண்டான தேகஜாட்டியம் பின்பு மரணபரியந்தம் முற்றும் நீங்கினதேயில்லை. அவ்வூரார் அவளிடத்திற் காட்டிய தயையின்மைக்காக மிகவும் பச்சாத்தாபப் பட்டுப் பின்பு அவளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார்கள்.

அங்கு சிலநாள் தங்கியிருந்து பின்பு தனக்கு உடம்பு அநுகூலப்பட்டு நடக்கச் சத்துவமுண்டானதும் பிராஸ்கோவியா அவ்வூரை விட்டுப் புறப்பட்டுத் தன்வழியே சென்றாள். வழியில் அங்கங்கே இளைப்பாறுவதற்காகவேனும் உடம்பை சுவஸ்தப்படுத்திக் கொள்ளுதற்கேனும் இரண்டொரு பகல் தங்கியிருப்பாள். தான் தங்கின வீட்டில் அவ்வீட்டாருக்குத் தனியாகப் பெருக்கல் மெழுகல் பாத்திரம் பூசகல் தைக்கல் முதலிய சில்லரைக் காரியங்களைச் செய்து கொடுப்பாள். அவள் ஓரிடத்துக்குப் போனால் தன் விருத்தாந்தங்களை உடனே சொல்லிக் கொள்வதில் பயனில்லை யென்று கண்டாள். தான் இன்ன

ளென்றும் இன்ன காரியமாகப் போவதாயும் உண்மையைச் சொன்னால் கேட்டபேர்கள் நம்புவதில்லை. ஏதோ தங்களை ஏமாற்றிக் காசுபறிக்க எண்ணங்கொண்ட கிருத்திரமக் காரியாகக் கருதுவார்கள். ஆதலால் ஒரு வீட்டுக்குச் சென்றதும் மெல்லப், பசிக்கு இத்தனை சாதம் வேண்டுமென்று கேட்பாள். அவ்வீட்டார் தயவாக ஏதாவது கொடுக்க இஷ்டப்பட்டால் பின்பு வழி நடந்து மிகவும் களைத்துப் போயிருக்கிறேன். சற்றுப்படுத்துறங்க இடம் தரவேண்டுமென்று கேட்பாள். அதற்கும் அவர்கள் ஒப்பி இடம் கொடுத்தால் பின்பு அவர்களிடத்தில் தன் வரலாற்றைச் சொல்லுவாள். சில ஊர்களில் தான் என்ன சொல்லியும் தனக்கொருவரும் உபகரியாமல் போனால் கிராமாதிகாரியிடம் சென்று தன் வரலாற்றைச் சொல்லித் தன் அனுமதிப் பத்திரத்தையும் காண்பிப்பாள். அதைப்பார்த்து அவளுடைய அந்தஸ்தைத் தெரிந்துகொண்டு வேண்டிய உதவிகளைச் செய்வார்கள். அவளுக்குச் சிற்சில இடங்களில் மேலே கூறியபடிச் சில கஷ்டங்கள் சம்பவித்தபோதிலும் பெரும்பாலும் ஜனங்கள் அவளை ஆதரவாகவே உபசரித்து வேண்டிய உதவிகளைச் செய்வார்கள்.

(இன்னும் வரும்.)

The Vivekachintamani

THE OLDEST & THE BEST RECOGNISED TAMIL MONTHLY

Vol. 24 begins April 1916 : Nala year.
'NEW SERIES' [From Vol. 22] 'APPROVED' **and Highly Recommended for use in all Govt., Local, Municipal, Missionary & Private Schools and for Home-reading in every Indian Home.**

Terms of Subscription: per Vol. Account kept by Vol. only

If paid strictly in Advance:		**In arrears,**
School Edition (on thick paper)	Rs. 5	One Rupee Extra.*
Popular Edition (on thin paper)	Rs. 4	

* *Subscriptions unduly delayed in payment will be charged at arrears rates.*

Overland postage 8 Annas Extra.
Spare Parts supplied at 8 As. a Part or no.
Order with Remittance or by V. P. Post.

N. B.—When copies are ordered by or for Schools and Associations, the School Edition (on thick paper, approved by authority and intended for school use) **is invariably sent, unless the other edition is specifically mentioned.**

EDUCATION IS WEALTH.

வித்தையே பெரியதனம்.

வித்தையின் குணங்களைக்கேள்:

அது கற்பிக்கிறவனுக்கும் சரி, கற்கிறவனுக்கும் சரி, மேன்மை புரிகிறது.

நீங்கள் யாதாயினும் ஒரு வஸ்துவைப் பிறருக்குக் கொடுத்துவிடும் பட்சத்தில் அது உங்களுக் கில்லாமற்போகின்றதல்லவா? ஆனால் வித்தை அப்படிக்கல்ல. அதன் மகத்துவம் என்னவென்றால், வித்வான் தான் அதை இழக்காமலே பூர்த்தியாய்க் கொடுத்து விடலாம். மற்றொருவன் அதை கிரகிக்கவும் செய்யலாம். வெள்ளி தங்கத்தை இடைவிடாமல் கொடுத்துக் கொண்டிருந்தால் அது குறைகிறது. ஆனால் வித்தையோ பிறருக்குக் கொடுபடுவதினால் தினந்தோறும் விர்த்தியாகுமேயல்லாமல் குறையவேமாட்டாது. திரவியம் போகிறமாதிரி வித்தை ஒருவிதத்திலும் போகாது, செலவாகாது, திருட்டுப்போகாது நல்ல ஆலோசனைகர்த்தா மாதிரி, தமக்கு வரப் போகிற அபாயங்களை முன்னதாகவே தெரிவித்து அவைகளின் பலன்களை காண்பிக்கிறது. கிரகசாரத்தினால் ஒருவேளை நமக்கு தொந்திரவு வந்தால் அப்போது வித்தை நல்ல ஆலோசனை சொல்லுகிறது. ஜனங்களுக்கு வித்தையே தோழனாகவும் பிராண சினேகிதனாகவு மிருக்கிறது.

இருட்டில் தீவட்டி எப்படி வெளிச்சம் தருமோ அப்படி வித்தை ஜனங்கள் மத்தியில் பிரகாசிக்கிறது. மேலும் ஒரு தீபத்தில் மற்றொன்றை ஏற்றினால் முதல் தீபம் எப்படி அணையாதோ அப்படியே வித்தை சொல்வதனால் மூடனாகிற குருடனுக்கு மூடத்தனமாகிற இருட்டு போய்விடுகிறதேயொழிய சொல்பவனுக்கு குறைவுண்டாகிறதில்லை.

ஆகையினால் வித்தை யென்கிற தனமுள்ளவன் தன் அஜாக்கிரதையினால் அதைப் போக்கடித்துக் கொள்ளவும்கூடாது. தன்சக்தியளவு பிறருக்கு அதைக் கற்பிக்க அசம்மதமாயிருக்கவும் கூடாது.

HISTORICAL COLUMN:
THE THIRD BATTLE OF PANIPAT.

சரித்திர விலாசம் :
பானிப்பட்டில் மூன்றாம் முறை யுத்தம்.

(25-வது பக்கத்தொடர்ச்சி).

அது கண்டு மகாராஷ்டிரர் இவ்வப்கானிய சத்துருக்களை அடித்துத் துரத்திவிட்டு இந்து தேசமுழுதும் தமது ஆளுகையிற் சேர்க்கத் துணிந்து அதற்கு வேண்டுமான பெருமுயற்சியைச்செய்தனர். பெரியதோர் மகாசைனியத்தைச் சேகரித்து அதனை, அதன் முன் நிஜாமோடு யுத்தம்புரிந்து வெற்றிகொண்டு அநேக தேசங்களை வசப்படுத்தி மகாவீர பராக்கிரமனென்று பெயர்பெற்றவனாகிய சதாசிவராவ் அல்லது 'பாவா' என்பவனைத் தளகர்த்தனாக நியமித்தனுப்பினர். இவனைத் தவிர அச்சேனையில் சேனா நாயகராகப் பேஷ்வாவின் ஜேஷ்ட புத்திரனாகியவிசுவாசராவும்,பின்நடக்கும் போரில் புகழும் கொள்ளையும் பெறலாமென்னும் ஆவலோடு முக்கியமான மஹாராஷ்டிரத் தலைவர் அனைவரும் கூடியிருந்தனர். இராஜபுத்திரர்களும் ஒருபகுதி சேனையைத்துணையாக அனுப்பியிருந்தனர். ஜாட்டுகுலத் தலைவரின் தலைவனாகிய சூராஜ்மல் என்பவன் தனது பரிவாரங்களோடு படைத்துணையாக வந்திருந்தனன். இவன் பாவாவுக்கு, காலாட்படையையும் பீரங்கிப்படையையும் பின்னிருத்திவிட்டுக் குதிரைப்படையோடு மஹாராஷ்டிரருடைய பூர்வீக வழக்கப்படி பகைவரைப்பொருது போராடும்படிப் புத்திசொல்லியும், அப்பிராம் ஹுணவீரன், தனது கொடிய பீரங்கிப்படையாலும், பிரான்சுக்காரர் இராணுவத்தில் அமர்ந்திருந்து யுத்தகௌசலங்கள் கற்றோனாகிய இப்பிரகிம்கானென்னும் தளகர்த்தனால் நடத்தப்பட்ட தனது ஆயுத சிலர்களாகிப் பழகித்தேர்ந்த ஒன்பதினாயிரம் போர்வீரடங்கிய கனத்த காலாட்படையாலும் செருக்குற்று அப்புத்திமதியைக் கொள்ளாமல் இகழ்ந்து தள்ளிவிட்டனன். சின்னாளைக்கு இப்பெரியமஹாராஷ்டிர சைனியம் ஒருவாறு வெற்றியையே பெற்று வந்தது. டில்லி நகரத்தைப்பிடித்து அங்குள்ள அரண்மனைகளையும் ஆலயங்களையும் கொள்ளைகொண்டு, அம்மகோன்னத நகரியில் மஹாராஷ்டிரர் விசுவாசராவை இந்தியா சக்கிரவர்த்தியாக ஏற்படுத்தவும் எண்ணம் கொண்டனர். சக்கிரவர்த்தியின் சிங்காதனத்தைக் கவர்ந்துகொண்டு, அஸ்தானமண்டபத்தின் வெள்ளி வேய்ந்த முகட்டைப் பெயர்த்தெடுத்து அதனைப் பதினேழு லக்ஷம் ரூபாயாக உருக்கி அடித்துக்கொண்டனர். இது தவிர யமுனை நதிக்கரையில் அகமத்ஷாவானவன் அந்நதியைக் கடக்குமுன்னமே, குஞ்சிபுரமென்னும்கோட்டையைப் பிடித்துக் காவல் வீரரைக்கொன்று இன்னொரு வெற்றியும் மஹாராஷ்டிரர் பெற்றனர். ஆயினும் மகமதிய சேனைகள் அயோத்தியா நபாபாகிய சூஜா உத்தௌலாவின்படைத்துணையைப்பெற்று யமுனையாற்றைக் கடந்த பின்பு அதுகாறும் மஹாராஷ்டிரர் முகமாகச் சென்ற ஜயப்பெருக்கம் திரும்பி மஹமதியர் முகமாகச்செல்லவாரம்பித்தது.மஹாராஷ்டிரர் அகமத்ஷாவுக்குப் பின்னடைந்து பானிப்பட்டையடைந்து அங்கு அகழும் அரணும் ஏற்படுத்தித் தம்தளங்களைப்பலப்படுத்திக்கொண்டனர். அகமர்ஷா தன்னிலும் தொகையிலும் பீரங்கிப்படைவலியிலும் உயர்ந்த பகைவரை அவர்களது அரணுட் புகுந்து தாக்கத்துணிவில்லாமல் சமீபத்தே பாளையமிறங்கித் தன் படையையும் அரணிற் பலப்படுத்திக்கொண்டனன். இரண்டுமாதம்வரையில் இருதிறத்தாருக்கும் அடிக்கடி சிறுபோர்கள் நடந்து பரஸ்பரம் ஆகாரமுதலான சாமான்களை எதிரிபெறாமல் தடுத்து நீக்க முயன்று வந்தனர். மகமதியர்களுக்கு ஆகார பதார்த்தங்களில்லாமல் வெகு சங்கடமாயிருந்தது. அதனால் அகமத்ஷாவை அவன் பரிசனர் முடிவாகச் சண்டை செய்யும்படி வேண்டிக்கொண்டும் அவன் தன் சேனையின் தொகையிலும் மிகுந்த மஹாராஷ்டி

ரசேனையானது இன்னம் அதிக சங்கடங்களை அனுபவிக்க வேண்டியிருக்குமென்றுணர்ந்து அவ்வாறு செய்தற்குடன்படவில்லை. கடைசியில், மஹாராஷ்டிரர் இனிமேல் சமாளிக்க முடியாதென்னும்நிலைமைக்கு வந்ததனால் தங்களைப் பசியாற் கொன்று முடித்தலைக்காட்டிலும் போருக்குச் செலுத்துதல் முறைமையாகும் என்று வேண்டிக்கொண்ட வேண்டுகோளால் பாவா இணங்கினான்.

இவ்வாறு மஹாராஷ்டிரர் யுத்தத்துக்குச் சன்னத்தமாதலை அகமத்ஷா கேள்வியுற்றதும் தானும் தன் சேனைகளைப் பாளையத்தைவிட்டப் புறம் பெயர்த்து வெளி நிலத்தில் போருக்குச் சன்னத்தப்படுத்தினான். இந்த யுத்தமானது, யாம் அதன் சரித்திரசம்பந்தமான பிராதான்யத்தை ஆராய்வோமாயினும், அல்லது அதில் கைகலந்த படைகளின் தொகையை ஆராய்வோமாயினும் இப்பரத பூமியில் நடந்துள்ள மகாயுத்தங்களில் ஒன்றென்று கூறுதற்கையமில்லை. மகமதியசேனையில் 41,800-குதிரைவீரரும் 38,000-பதாதிகளும் 70-பெரும் பீரங்கிகளும் இருந்தனவாகவும், மகாராஷ்டிரசேனையில் 55,000-துரகங்களும், 15,000- காலாட்களும் 200-பெரும் பீரங்கிகளும் இவை தவிர இன்னம் பிரதான சேனையோடு கலவாத அளவற்ற பிந்தாரிகள் முதலான படைகளும் இருந்தனவாகவும் சொல்லப்படுகின்றது. மஹாராஷ்டிரர்கள் முடியிற் பாகையை நெகிழ்த்துவிட்டு முகத்தில் மஞ்சள் பூசி ஜயங்கொள்ளும் தைரியத்தை முழுதும் கைவிட்டுத் தமது பிராணனை நிச்சயமாக இழக்கவந்தவர்போல வந்தார்கள். ஆயினும் சண்டையின முடிவு நெடுநேரம் சந்தேகமாகவே யிருந்தது. இப்ரகிம் கான் என்பவன் தனது தேர்ந்துசிறந்த பதாதியோடு அப்கானியர் மத்தியிடத்துட் புகுந்து பல்லாயிரம ரோஹிலரைக்கொன்றனன். ஆனால் அகமத்ஷா தன்படையின் பின்புறத்திலிருந்து சேனையை வெகு சாமர்த்தியமாகச் செலுத்தி மஹாராஷ்டிரர் மத்தியைக் குதிரைப்படைகொண்டு தாக்கியடிக்கும்படித் தன் மந்திரிக்கு உத்தரவிட்டனன். நெடு நேரம் விடேன் தொடேனென்று போராடிய போராட்டத்தில் அப்கானியர் இந்துக்களினும் அதிக தேகபலமுடையோராதலின் அவர்களுக்கு இவர்கள் ஆற்ற மாட்டாமற்போனார்கள். அபரான்னத்தில் இரண்டுமணி சமயத்தில் விசுவாசராயன் காயம்பட்டு ஆவியிழந்தனன். பாவா இவ்விபத்தைக் கண்டு ஹொல்காருக்குத் தான் முன்நியமித்தபடி செய்யச் செய்தியனுப்பிவிட்டு வேகமாகச்செல்லும் ஒரு குதிரையில்ஏறி யுத்தகளத்தை விட்டு நீங்கி மறைந்தனன். இச்செய்தியைப் பெற்றமாத்திரத்தில் ஹொல்கார் யுத்தரங்கத்தைவிட்டு நீங்க மற்ற மஹாராஷ்டிரத் தலைவரும் தத்தம் சேனைகளோடு நீங்கிவிட்டனர். அவ்வளவு பெரியசேனை முறிந்தோடத்தலைப்பட்டதும் ஒன்றுக்கொன்று திக்குத்திசை தெரியாமல் குழம்பிப்போய் ஆயிரக்கணக்காகப் பகைவர் வாளுக்கிரையாய் மடிந்தார்கள். பகைவர்கையில் அகப்படாமல் தப்பிக்கொண்டவர்களில் அநேகர் குடிகளால் கொல்லப்பட்டார்கள். ஓடி யொளித்தவர்களில் புருஷர், பெண்கள், பிள்ளைகளடங்கிய பல்லாயிரம் ஜனங்கள் பானிப்பட்டு நகரில் அடைத்துவைக்கப்பட்டு மறுநாட்காலையில் புருடர்கள் கோரமாகக் கொல்லப்பட்டனர். ஸ்திரீ ஜனங்களும் பிள்ளைகளும் அடிமைகளாகக்கொண்டு போகப்பட்டனர். எல்லாமாய் இக்கொடிய போரில் மாண்டவர்கள இரண்டு லக்ஷத்துக்குக் குறைவில்லையென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. தமது குடும்பத்தில் யாராவது சிலரை யிழக்காதவர் மஹாராஷ்டிர ராஜ்யத்தில் ஒரு குடும்பமாவது இல்லை.

பேஷ்வாவுக்கு இச்செய்தி கொணர்ந்தபோது அவன் நர்மதாநதி தீரத்தில் இருந்தனன். "இரண்டு முத்துக்கள் கரைந்து போயின; இருபத்தேழு தங்க மோகராக்கள் இழக்கப்பட்டன, வெள்ளியிலும் செம்பிலும் மொத்தம் இவ்வளவென் றெண்ணமுடியாது" என்று

அவனுக்கெழுதிய கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. இதனால் அவன் விசுவாசராயனும் பாவாவும் இறந்தனரென்றும் மஹாராஷ்டிர சேனைகள் முழுதும் மடிந்தனவென்றும் தெரிந்துகொண்டனன். இச்சோகத்தினின்றும் பேஷ்வா தேறித்தெளியாமல் புனா நகருக்குத் திரும்பி வந்ததும் அதிசீக்கிரத்திற்றானே இறந்துபோயினன்.

அஹமத்ஷாவுக்குத் தானடைந்த வெற்றியைக்கொண்டு இந்தியாவில் தன் ராஜ்யத்தை ஸ்தாபிக்க எண்ணமுண்டாகவில்லை. டில்லி ராஜ்யத்துக்கு அதிபதியாக ஷா ஆலம் என்பவனை அரசனாக ஏற்படுத்திவிட்டுத் தான் தன் தேசத்துக்கு மீண்டனன். இந்த யுத்தத்தின் முக்கியமான விளைவு யாதெனில் இத்தோல்வி மஹாராஷ்டிரரது செல்வத்தையும் சீரையும் அடியோடே அழித்து அவர்கள் இத்தேசத்தில் முதன்மையாக ஆளலாமெனனும் எண்ணத்தை முற்றிலும் குலைத்துவிட்டது தான். ஒருவர் பின்னொருவராக மூன்றும்பேர் பேஷ்வாக்கள் மகா வல்லபமுள்ளவராயிருந்ததின் அவர் ஆளுகையின் கீழ் மஹாராஷ்டிரர் படிப்படியாக இந்தியாவில் முதன்மையான அதிகாரத்தையும் உயர் நிலைமையையும் பெற்றனர். காலக்கிரமத்தில் மொகலாயருக்குப் பின் தாங்கள் அவர் பதவியை அடைந்திருப்பார்கள். பேஷ்வாவின் ஸ்தானத்திற் பெறப்பட்ட கௌரவமும் அதிகாரமும் நோக்கின மஹாராஷ்டிர ஜாதியார் முழுதும் பாலாஜி விசுவநாதின் சந்ததியாருக்குள்ளடக்கி அவரது ஆளுகையில் அமைந்து நிற்பாரென்றும் தோற்றியது. ஆயினும் இப்பானிப்பட்டு யுத்தத்தால் இந்த எண்ணமொன்றும் பலியாமல் போயவிட்டது. மஹாராஷ்டிரர் இந்தத் தோல்வியினின்றும் ஒருவாறு தெளிந்து தலையெடுத்தனராயினும் அவருடைய மகோன்னததசை போயே போய்விட்டது. பேஷ்வாக்களின் அதிகாரம் மிகவும் நெகிழ்ந்துபோய் மஹாராஷ்டிர ஜாதியார் எல்லோரையும் ஒன்றாக கட்டிப் பிடிக்கும்படியான சக்தியில்லாமற் போய்விட்டது. இதன்பின் பேஷ்வாக்கள் மஹாராஷ்டிர ராஜகாரியங்களைச் செலுத்துமிடத்து முக்கிய ஸ்தானத்தை அடைதற்குக்கூட மற்றத் தலைவரோடு போராடிச் சில வேளைகளில் அவர்களால் அவமானமும் அபஜயமும்கூட அடையவேண்டியதாயிருந்தது. இதுவரையில் இருந்ததுபோலல்லாமல் மஹாராஷ்டிரர் இதன்பின் ஐகமத்தியமிழந்து வெவ்வேறாகப் பிரிந்து ஒருவரோடொருவர் சண்டையிட்டுச் சச்சரவுபட்டுப் பகையரசர்களுக்கு எளியமாகி அவர் தூர்ப்போதனைக்கும் துராலோசனைக்கும் உட்பட்டு வலியிழக்கலாயினர். இந்த ஸ்திதியில்கூட அக்காலத்துத் தோன்றி வலிபெற்றிருந்த ஐதராபாத், மைசூரெனும் இரண்டு மகம்மதீய ராஜ்யங்களோடு பொருது ஜயித்துத் தமது அதிகாரத்தை முதன்மையாக ஸ்தாபித்துக்கொள்ளக் கூடுமாயினும் அக்காலத்துத் தோன்றி மொகலாய ராஜ்யஸ்தானத்தில் தமது ராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போட்டி போட்டெழுந்த இரண்டு ஐரோப்பிய ஜாதியாரோடு சமாளிக்கத்தக்க வலிமையில்லாமற் போயினர். ஆதலின் இவ்வைரோப்பியரிருவருள்ளும் வலியிரோங்கிய அங்கிலேயருக்கு முடிவில் உட்படவேண்டியதாயிற்று. இவ்வளவும் இப்பானிப்பட்டு யுத்தத்தின் விளைவென்றே எண்ணவேண்டும்.

SRI NAMA RAMAYANAM.

ஸ்ரீ நாம ராமாயணம்.

"When a person advances greatly in his spiritual growth, he gets a very intense love towards God. We call it *Bhakti*. *Bhakti* means in English love of God. When that love of God increases, he becomes united, as it were, with God. He becomes one with God in the frenzy of his love. In some Christian churches, even now, some nuns and monks think that Christ is their most beloved. Some nuns put rings on their fingers as a sign that they are married to Christ. They receive the ring from the communion. Some persons think that Christ is their own brother. So, also, in Hinduism, there are sects who cultivate the practice that God is their brother. We call it *Sakhya Bhava*, meaning brotherly affection. We establish some relation with God ; and in order to get nearer to Him, in order to be closer and closer, we establish some closer relationship. The closest relationship is that of husband, or of father, or of mother, or of brother. In every religion there are such pious persons who practice in that way. We have to go about it in a practical way, so we take up all these means. And when our love has increased very much, we feel as if we had lost our individuality in the existence of God ; and that is UNION. Whether a person be a Christian or a Hindu he becomes united with God. Then he does not say Christ or Buddha or Krishna but God, Iswara, Brahman, the Absolute. When that love increases to such a pitch then there is no difference ; then there comes the union of everything."—*Swami Trigunatita at SanFrancisco.*

We give below an example of the way in which *Rama Nama* is meditated. Readers of *Kamalambal Charitram* will note that the heroine of the story attained to the state of union with God, by meditating on *Rama Nama*—the name that confers Bliss to the devotee who meditates on it.

பாலகாண்டம்.

சுத்த ப்ரம்ஹ பராத்பர ராம்,
காலாத்மக பரமேஸ்வர ராம்.
சேஷதல்ப சுக நித்ரித ராம்,
பிரும்ஹாத்ய மரப்ரார்த்தித ராம்.
சண்ட கிரண குலமண்டன ராம்,
ஸ்ரீமத் தசரத நந்தன ராம்.
கௌசல்யா சுத வர்த்தன ராம்,
விஸ்வாமித்ர ப்ரியதன ராம்.
கோரதாடகா காதக ராம்,
மாரீசாதி நிபாதக ராம்.
கௌசிக மகஸம் ரக்ஷக ராம்,
ஸ்ரீமத் ஹநல்யோத் தாரக ராம்.
கௌதம முனிஸம் பூஜித ராம்,
ஸுரமுனி வரகண சம்ஸ்துத ராம்.
நாவிக தாவித ம்ருதுபத ராம்,
மிதுலா புரஜன மோதத ராம்.
விதேஹ மானஸ ரஞ்சக ராம்,
திரியம்பக கார்முக பஞ்சக ராம்.
சிதார்ப்பித வரமாலிக ராம்,
க்ருதவை வாஹிக கோதுக ராம்.
பார்க்கவ தர்ப்ப விநாசக ராம்,
ஸ்ரீமதயோத்யா நந்தக ராம்.
ராம் ராம்ஜய ராஜா ராம்.

அயோத்யாகாண்டம்.

அகணித குண கணபூஷித ராம்,
அவநீ காமினி காமித ராம்.
ராகாசந்த்ர ஸமானன ராம்,
பித்ருவாக்யா ஸ்ருத கானன ராம்.
பிரிய குஹவினி வேதிதபத ராம்,
தத்க்ஷாளித நிஜம்ருதுபத ராம்.
பரத்வாஜ தருகாகந்தன ராம்,
சித்ரகூடாத்ரி நிகேதன ராம்,
தசரத சந்தத சிந்தித ராம்,
கைகேயீசுத ப்ரார்த்தித ராம்.
விரஜித நிஜபித்ரு கர்மக ராம்,
பரதார்ப்பித நிஜபாதுக ராம்.
தண்டகா வனஜன பாவன ராம்,
ராம் ராம்ஜய ராஜா ராம்.

ஆரண்யகாண்டம்.

துஷ்ட விராத விநாசன ராம்,
சரபங்க சுதீக்ஷ்ணார்ச்சித ராம்.
அகஸ்தியா நுக்ரஹ வர்த்தித ராம்,
க்ருத்ராதிப ஸம ஸேவித ராம்.
பஞ்சவடீ தட ஸுஸ்தித ராம்,
சூர்ப்பன கார்த்தி விதாயக ராம்.
கரதூஷணமுக ஸூதக ராம்,
சீதா ப்ரிய ஹரி ணாநுக ராம்.
மாரீசார்தி க்ருதா சுக ராம்,
வினஷ்ட சீதான் வேஷக ராம்.
க்ருத்ராதிப கதி தாயக ராம்,
ஸபரீ தத்த பலாசன ராம்.
கபந்தபாஹுச் சேதன ராம்,
ராம் ராம்ஜய ராஜா ராம்.

கிஷ்கிந்தாகாண்டம்.

ஹநுமத்சேவித நிஜபத ராம்,
நதஸுக்ரீ வா பீஷ்டித ராம்.
கர்விதவாலி சம்ஹாரக ராம்,
வானரதூதாப் ரேஷக ராம்.
ஹிதகர லக்ஷ்மண சம்யுத ராம்,
ராம் ராம்ஜய ராஜா ராம்.

சுந்தரகாண்டம்.

கபிவர ஸந்தத ஸம்ஸ்மிருத ராம்,
தத்கதி விக்ன த்வம்ஸக ராம்.
சீதாப்ராண தாரக ராம்,
துஷ்ட தசானன தூஷித ராம்.
சிஷ்டஹநுமத் பூஷித ராம்,
சீதோதிகா காவண ராம்.
க்ருத சூடா மணி தர்சன ராம்,
கபிவர வசனாஸ் வாதித ராம்,
ராம் ராம்ஜய ராஜா ராம்.

யுத்தகாண்டம்.

ராவணநிதன ப்ரஸ்தித ராம்,
வானரசைன்ய ஸமாவ்ருத ராம்.
சோஷித ஸரோஜாதி ஸார்த்தித ராம்,
விபீஷணாபய தாயக ராம்.
பர்வத ஸேது நிபந்தக ராம்,
கடகர்ண சிரச் சேதக ராம்.
ராக்ஷஸ கோடி விமர்த்தக ராம்,
அஹிமஹி ராவண மாரண ராம்.
ஸம்ஹ்ருத தசமுக ராவண ராம்,
விதிபவ முகஸுர ஸம்ஸ்துத ராம்.
கஸ்தித தசரத வீக்ஷித ராம்,
சீதா தர்சன மோதித ராம்.
அபிஷிக்த விபீஷ ணாநுத ராம்,
புஷ்ப விமாந ரோகண ராம்.
பரத்வா ஜாதிநி ஷேவண ராம்,
பரதப்ராணத ப்ரியதாண ராம்.
ஸாகேதபுரி பூஷண ராம்,
ஸகலஸ்விய ஸமாவ்ருத ராம்.
ரத்னல ஸத்பீ டஸ்தித ராம்,
பட்டாபிஷேகா லங்க்ருத ராம்.
பார்த்திவ குலஸம் மானித ராம்,
விபீஷ ணார்ப்பித ரங்கத ராம்.
கீச குலாநு க்ரஹக ராம்,
ஸகல ஜீவஸம் ரக்ஷக ராம்.
ஸமஸ்த லோகோத் தாரக ராம்,
ராம் ராம்ஜய ராஜா ராம்,
ராம் ராம்ஜய சீதா ராம்.

ராமாய ராமபத்ராய
ராமசந்திராய வேதஸே
ரகுநாதாய நாதாய
ஸீதாய பதயே நம:—
ராமாபிராமம் நயனாபிராமம்,
வாதாபிராமம் வதனாபிராமம்.

ஓம் சீதாலக்ஷ்மண பரத சத்ருக்ன அனுமத் ஸமேத ஸ்ரீராமசந்த்ர பரப்ரம்ஹணே நம:

ஓம் தத் ஸத்.

AGRICULTURISTS AND THE WAR

(FROM THE AGRICULTURIST.)

கிருஷிகரும் சண்டையும்.

தற்காலத்தில் ஐரோப்பாவில் மஹாபாரதப் போரைப் பார்க்கிலும் அதிக கோரமான யுத்தம் நடக்கிறதென்று நமது சந்தா நேயர்கள் பலரும் அறிவர். இந்த யுத்தத்தினால் பொதுவாக அமெரிக்கா, ஜப்பான், நார்வே, சுவீடன், டென்மார்க் முதலான சில தேசங்கள் தவிர மற்ற தேசத்தாரெல்லாருக்கும் நஷ்டந்தான். இந்த யுத்தத்தினால் அமெரிக்கா தேசத்தவர் தான் அதிக தனவந்தரானார்கள். ஐரோப்பா தேசத்தவர்களைப்போல் சண்டையை நேரில் பார்த்தும் சேனைகள் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்குப் போவதால், ஜனங்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களையும் கஷ்ட நிஷ்டூரங்களையும் அனுபவியாமலும், ஓர் ஊரில் சண்டை நடப்பதால் பீரங்கிக்குண்டுகள் வெடிகுண்டுகள் முதலியவை விழுவதால் ஊர்கள் நாசமாக்கப்படுவதையும், ஸ்திரீகள் ஹிம்சிக்கப் படுவதைப்போலொத்த சண்டையினால் ஏற்படும் பல கொடுமைகளை நாம் அனுபவியா விட்டாலும் நாமும் பலவிதமான கஷ்டங்களுக்குட்பட்டிருக்கிறோமென்பதை எவராலும் மறுக்கமுடியாது. பொதுவாக ஐரோப்பிய சாமான்கள் சரிவர இறக்குமதி யாகாததால் சரக்குகளின்விலைகள் கிராக்கியானதல்லாமல் ஆஸ்திரியா ஹங்கரி, ஜெர்மனி முதலிய நமது விரோதிகளின் தேசங்களிலிருந்து வந்துகொண்டிருந்த காகிதங்கள், பென்சல்கள், கண்ணாடிச் சாமான்கள், சாயச்சாமான்கள் முதலியன வாராததால் நாம் படும் கஷ்டத்திற்களவில்லை. ஷை சாமான்களைப்போலொத்த சாமான்களைச்செய்ய இங்கிலாந்திலுள்ள நிபுணர்கள் எவ்வளவோ பிரயாசைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இருந்தும் ஜெர்மனியிலிருந்து வந்துகொண்டிருந்த சாயத்திற்குச் சமானமான சாயங்கள் கண்டுபிடிக்காததால் நெசவாளிகள் பலர் வேலையற்று சோற்றுக்குத் திண்டாடுகிறார்கள். இப்படி பல வகுப்பார் பலவிதமான கஷ்டங்களை யனுபவித்துக்கொண்டிருக்க, தாங்களாக விவசாயம் செய்து சாப்பிடும் கிருஷிகரை மட்டும் இச்சண்டையானது பாதித்திருக்கமாட்டாதென்று பலர் நம்புகிறார்கள். தென் ஆற்காடு, வட ஆற்காடு, மேல்சமுத்திரக்கரை நாடுகளிலுள்ள கிருஷிகர் அதிக நஷ்டத்திற்குள்ளாயிருக்கிறார்கள். வட ஆற்காடு தென் ஆற்காடு ஜில்லாக்களிலுள்ள கிருஷிகர் நஷ்டமடைந்ததற்கு அவர்கள் தான் காரணகர்த்தாக்களாயிருந்தார்கள், ஏனெனில் எப்போது ஐரோப்பாவின் முக்கியமாகிய பெரிய தேசங்களிலெல்லாம் சண்டையாரம்பித்து விட்டதோ அப்போது இச்சண்டை சீக்கிரம் ஓயாதென்றும் ஆகையால் வியாபாரப் பயிர்களாகிய, மணிலாக்கொட்டை, பருத்தி முதலிய பயிர்களைப் பயிரிடுவது இலாபகரமாயிராதென்றும், அதைவிட தானியப்பயிரிடுவதுதான் சிலாக்யமென்றும் நாம் நம்மாலியன்றமட்டும் வற்புறுத்தி எழுதினதையும் சொன்னதையும் சற்றும் கேளாமல் வாலாயமாய்ச் செய்துவந்த ஷை மணிலாக்கொட்டை, பருத்தி முதலிய பயிர்களைமட்டும் செய்துவந்ததால் ஷை இரண்டு ஜில்லாவாசிகள் அதிக கஷ்டநஷ்டங்களுக்காளாகி தாங்கள் பரம்பரையாய் வைத்திருந்த நிலங்களை அநேகர் இழக்கும்படி நேரிட்டது.

சண்டை ஆரம்பித்ததற்கு முந்திய வருஷத்தில் மழைகள் பெய்யாததாலும் வேறு காரணங்களாலும் விலைவாசிகள் அதிகமாயிருந்தும் நமது இராஜதானியில் 1,024,281-கிருஷிகர் தான் தீர்வை சரியானகால அளவில் செலுத்தாமலிருந்து அவர்களுக்கு விரோதமாய் நடவடிக்கைகள்நடத்தி சர்க்கார் தீர்வை வசூல்செய்தார்கள். ஆனால் சண்டை ஆரம்பித்த வருஷமாகிய 1914-1915ல் 1,331,635 பேர் தீர்வை செலுத்தவில்லை. ஆகவே முந்திய வருஷத்தை விட மழைகள் சற்று சுபிக்ஷமாய் பெய்திருந்தும் முந்தின வருஷத்தைவிட 307,354-பேர்

அதிகமாய்த் தீர்வைசெலுத்தாமல் இருந்திருக்கிறார்கள். இதற்குக்காரணமென்னவென்று சற்று ஆராய்வோம். சண்டை ஆரம்பித்தவுடனே கொப்பரைத் தேங்காயின் விலையும், மணிலாக் கொட்டையின் விலையும் திடீரென்று இறங்கிவிடவே சம்சாரிகள் இன்னது செய்வதென்று தெரியாமல் திகைத்தார்கள். முக்கியமாய் மணிலாக்கொட்டை பயிர்செய்யும் தென்ஆற்காடு ஜில்லாவையும் வடஆற்காடு ஜில்லாவையும் ஒப்பிட்டுப் பார்ப்போம். வடஆற்காடு ஜில்லாவில் சண்டை ஆரம்பிப்பதற்கு முன் வருஷத்தில் 287,000 கிருஷிகர்தான் தீர்வை செலுத்தாமலிருந்தார்கள். சண்டை ஆரம்பித்த பிற்பாடோ, 515,000 கிருஷிகர் தீர்வை செலுத்தவில்லை. ஆகவே சண்டைக்கு முன்னிருந்ததைவிட சண்டைக்குப் பின்னல் 228,000-பேர் அதிகமாய் தீர்வை செலுத்தாமலிருந்திருக்கிறார்கள் இதைப்போலவே தென்ஆற்காட்டில் சண்டைக்குமுன்னல் 8,569-பேர் தீர்வை செலுத்தாமலிருந்திருக்க, சண்டை ஆரம்பித்தவுடனே 25,513-பேர் தீர்வை செலுத்தவில்லை. இதில் முந்தின வருஷத்தைவிட 16,444-பேர் அதிகமாய் தீர்வை செலுத்தாமலிருந்திருக்கிறார்கள். பரம்பரையாய் கிருஷிகர் அனுபவித்துவரும் நிலங்களைத் தீர்வை செலுத்த சக்தியிருந்தால் ஏலம்போட விட்டுவிடுவார்களா? ஒருக்காலும் விடமாட்டார்கள். சர்க்கார் தீர்வை செலுத்தாவிட்டால் முதலில் தீர்வை செலுத்தும்படி கட்டாயப் பத்திரம் (Demand) வரும். இது வந்த பின்னும் குறிப்பிட்ட தேதிக்குள் தீர்வை செலுத்தாவிட்டால் ஜப்தி நோடீசும் (Notice of Distraint) அதற்கும் செலுத்தாவிட்டால், ஏல நோட்டீசும், அந்தத் தேதிக்குள்ளும் செலுத்தாவிட்டால், ஏலம் போட்டு விற்று விடுவார்கள். அப்பால் நிலமானது இந்தக் கிருஷிகளுக்குச் சொந்தமாகாது. நமது இராஜதானியில் இப்படித் தீர்வை செலுத்தாமலிருந்த 1,331,635 நபர்களில் கஷ்டப்பட்டோ, கடன்வாங்கியோ, வேறுவிதமாகச் சேகரித்தோ, எப்படியோ, பெரும்பான்மையோர் நிலத்தீர்வை செலுத்தி விட்டார்கள். அப்படிச் செலுத்தத்தவறி, நிலங்கள் விற்கப்பட்டவர்களின் எண்ணம் அதற்கு முந்திய வருஷத்தில் 1,721, ஆயிருக்க, சண்டைக்குப்பின் வருஷத்தில் 2,012 ஆயிற்று 318பேர் அதிகமாக இந்த வருஷத்தில் நிலத்தை இழக்கும்படி நேரிட்டது. இப்படி ஏலம் போடப்பட்டு வாங்கிய புஞ்சை நிலங்களின் சராசரிகிரயம் முந்திய வருஷங்களில் நிலத்தீர்வையைவிட 9-பங்கு அதிகமாயிருந்திருக்கிறது. ஆனால் சண்டைக்குப்பின்னல் நிலத்தீர்வையைவிட சராசரி 6-பங்குதான் அதிகமாய் விற்றிருக்கிறது. மேலும் முந்தின வருஷத்தில் 1,213-ஏக்கரா புஞ்செய் நிலத்தை ஏலம்போட்ட போது கேட்பாரில்லாமல் சர்க்கார்தாமே வாங்கியிருக்க 1914-15-ல் 2,186-ஏக்கராக்கள் விலையாகாமல் சர்க்காரால் வாங்கப்பட்டது. ஆகையால் தேசத்தில் பொருள்குறைந்து வருகிறதென்பது நன்றாய்த் தெரிகிறது.

நமது கிருஷிகர் மணிலாக்கொட்டை, பருத்தி முதலிய பயிர்களைச் செய்து கஷ்டமடையாமல் அரிசி, சோளம், கேழ்வரகு, முதலிய தானியப்பயிர்களையும், கரும்பு முதலிய நமது தேசத்தில் விலைப்போகக்கூடிய வியாபாரப் பயிர்களையும் சண்டை ஒழியும் மட்டும் பயிர் செய்தால் தக்க லாபம் அடைவார்களென்று நம்புகிறோம்.—கிருஷிகன்.

"TO US ALL TOWNS ARE ONE, ALL MEN OUR KIN."
Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me O God that sublime belief that seeing evil I yet have faith."
"Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the [illegible]
ஸத்தியம் வத—SPEAK THE TRUTH.
'HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."

11 JUL 1916 MADRAS.



அன்பேபரவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*
"New Series". ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE. "Approved"
புத்தகம். 24.] நள வருஷ ஆனிமீ, 1916வருஷ ஜூன்மீ [சஞ்சிகை 3.

"WISDOM'S WORD LIKE NECTAR SAVES."

(*SENT BY THE LATE Dr. G. U. POPE AS A NEW YEAR'S GREETING TO THE VIVEKA CHINTAMANI.*)

"ஏறந்தோர்சொல் வாக்கை அமிர்தம்."

"TO US ALL TOWNS ARE ONE, ALL MEN OUR KIN."

* ஞானிகள்.

யாதும் ஊரே;—யாவருங் கேளிர்;—
தீது' நன்றும் பிறர்தர வாரா;—
நோதலுந் தணிதலும் அவற்றோ ரன்ன;—
சாதலும் புதுவ தன்றே;—வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே;—முனிவின்
இன்னா தென்றலும் இலமே;—மின்னொடு
வானந் தண்துளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியிற் தெளிந்தனம்;—ஆகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே;—
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே!
('ஜீ. யூ. போப்' ஆப்த பூர்வகமாய் ஸர்வ மக்கள் வித்தியார்த்தம் அனுப்பியது.)

THE SAGES.

To us all towns are one, all men our kin.
Life's good comes not from other's gift, nor ill;
Man's pains and pains' relief are from within.
Death's no new thing; nor do our bosoms thrill
When joyous life seems like a luscious draught.
When grieved, we patient suffer; for we deem
This much-prized life of ours a fragile raft
Borne down the waters of some mountain stream
That o'er huge boulders roaring seeks the plain.
Tho' storms with lightnings' flash from darken'd skies
Descend, the raft goes on as fates ordain.
Thus have we seen in visions of the wise!—
We marvel not at greatness of the great,
Still less despise we men of low estate.

G. U. POPE,
With all kindest good wishes.

* This Agaval is by a minstrel, known to us as Kanyan (or 'Singer') of the flowery hill, who was a court poet and friend of Ko Perum Coran of Urraiyur,—a little, it may be, before the date of the *Kurral*. see *Purra Nannurru*, 97, 191, 192, 212. Compare, Kurral 397, பழமொழி, 116.—G. U. POPE.

THE UNIVERSITY OF MADRAS.

ADMISSION TO COLLEGES.

The following correspondence has been sent to us for publication :—

Ref. on P. C. No. 4803. Dated 4th June, 1916.

To The Registrar of the Madras University, Madras.

Sir,—On behalf of the Educational and Parents' Commitee of the Chidren's Educational Movement, I have the honour to submit to you a Memo randum explaining the unreasonableness of the principles that are reported to have been laid down for the admission of the pupils who have completed their School final course into Colleges. It is apprehended that if the admissions are made according to the principles now adopted, many eligible students would be kept out and many others who are ineligible will find admission into the Colleges. This will in addition to causing much public dissatisfaction, seriously affect not only the efficiency of the Colleges but also the results of the Intermediate Examination to be held in March 1918. I therefore request that you will place this Memorandum before the next meeting of the Syndicate for suitable modifications to be made in the rules framed for declaring the eligibility of students for admission into Colleges.

I have the honour to be,
Sir,
Your most obedient servant,
C. V. Swaminathaiyar.

—

Memorandum.

It is given out that it has been decided by the school-final moderation board to make selections of students for the Intermediate course on the following basis :

1. One should have got marks in all the A and C group subjects, which should not be below the Presidency Averages in the subjects.

2. In case one has failed to secure the Presidency Average in any of the A group subjects other than English he can be eligible if the total of the marks got by him in all the A group subjects is not below the total of the Presidency Averages, provided he gets marks not below the Presidency Average in each of the two C group subjects, the marks being either those of the Public Examination or the moderated marks.

The above principle seems to be all right on paper, but when considered in detail it will be found that the principle is not well conceived. Taking for instance a student who has to take the third group of the Intermediate Scheme what is wanted for him is a knowledge of English coupled with sufficient qualifications in Vernacular Composition and Translation in the A group. According to the principles laid down as above by the moderation board, a student who gets 33 per cent. or thereabouts in English, a bare average in Vernacular Composition and Translation and good marks in Elementary Mathematics may become eligible. Suppose one gets 33 marks in English 50 marks in Elementary Mathematics and 40 marks in Vernacular Composition and Translation he may become eligible, by reason of the total of his marks, viz , 123 being above 121, the total of the Presidency Averages. But the boy is clearly ineligible for the Intermediate course, which requires a decent knowledge of English for him to be able to follow the College lectures intelligently ; but another who may get 45 marks in English, 20 marks in Elementary Mathematics and 50 marks in Vernacular Composition and Translation is ineligible according to the principle laid down, though it must be presumed that he is decidedly a better boy to be admitted for the University course than the other. By the admission being made on the principle now laid down a large number of incapable boys will crowd into our Colleges with the result that a large number fo students appearing for the Intermediate Examination will be ploughed down by failure in English, History and Logic which require a sound knowledge of English. In this manner instances may be multiplied of a large number of eligible pupils being kept back by admission being made on the above principles. In Physics

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

நள வருஷம் ஆனி மீ

விவேக சிந்தாமணி

June-July. 1916.

ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றோ மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியந் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

"THE SLAUGHTER OF THE INNOCENTS."

பள்ளிப்படிப்பும் பிள்ளைகளின் தவிப்பும்.

பள்ளியில்படிப்பது பிள்ளை கடைத்தேற வேண்டியென்பார்கள். ஆனால் பள்ளிப்படிப்பினாலுண்டாகும் தவிப்புச் சில சமயங்களில் பொறுத்தல் முடியாததாயிருக்கிறது. "பெற்றவளுக்கே தெரியும் பிள்ளையின் அருமை" யென்பதுபோல், பள்ளியில் படித்து பரீக்ஷை கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்பட்டவர்களே பிள்ளைகள் படும் அவதியை உணரவல்லாராவர். மேலோர் "சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம், கற்றதோர் கல்வியும் மனப்பழக்கம்" என்றுசொல்லியிருக்கிறார்களாயினும், இக்காலதப் பள்ளிப்படிப்பு இதற்குமுற்றும் விரோதமாயிருக்கிறது. "ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது" என்னும் பழமொழிபோல், கைப்பழக்கம், நாப்பழக்கம், மனப்பழக்கம் இல்லாத கல்வி காரியத்துக்குதவுவதாயில்லை. முதல்முதல் பிள்ளைகளுக்குத் தங்கள் தாய்பாஷையில் கல்வி போதிக்காமல் அந்யபாஷையில் கல்வி போதிப்பது அநர்த்தமாகமுடிகிறது. அதனால் மனதுக்கும் வாக்குக்குமுள்ள உறவு அற்றுப்போகிறது—முற்றும் அற்றுப்போகாவிடில் தட்டுக்கெட்டுத் தடுமாறிவிடுகிறது. இந்தத் தடுமாற்றத்தால் மனப்பழக்கம், நாப்பழக்கம் இரண்டும் குறைவுற்று நிறைவெய்தாதுபோகிறது. 10, 12-வயதுக் குழந்தைகளுக்கெல்லாம் கணிதமும் சாஸ்திரப் பயிற்சியும் அந்யபாஷையில் சொல்லிக்கொடுக்கிறார்கள். சொல்லிக்கொடுக்கும் வாத்தியாருக்குச்சுயபாஷையில் போதிக்க அப்பாஷா ஞானம் போதாது. போதுமானாலும் பள்ளிக்கூடவிதி இங்கிலீஷில்தான் போதிக்கவேண்டியதாயிருக்கிறது. இப்படியாக

and Chemistry also, the practical examination in which luck plays a large part has seriously affected many students, who otherwise would have been elgible by getting good marks in theory. It cannot be said, that by departing from its principle the number of admissions will increase, for if those are admitted who get good marks in the subjects which they mean choosing for the Intermediate course a good many (probably a corresponding number) will be rejected who get low marks in the necessary subjects such as English. That one gets low marks in Elementary Mathematics need not necessarily debar a student from admission into a College as that is not a necessary subject, required for the University course of a student who takes the 3rd group. It may reasonably debar one who takes either the 1st or 2nd group or if he intends to enter public service. For these reasons it is necessary that the Syndicate must interfere and suitably modify the principles before it becomes too late, for the old story of the slaughter of the innocents will repeat itself. It is given out that the English examiners in the last Intermediate Examination bitterly complained that the standard of attainments in English of the candidates who appeared for the examination was miserably low. If the rules framed for the eligibility are as they stand now, the members of the moderation board must be asked whether the candidates are to blame or they are to blame themselves.

எடுத்த எடுப்பிலே தப்புமுறைகொண்டு போதிப்பதால் பிள்ளைகள் கிளிப்பிள்ளைகள் கற்பதுபோல் சப்தமாத்திரத்தைக் கேட்டு நெட்டுருப் பழக்கத்தால் ஏதோ சிறிது உளரக்கற்றுக்கொள்கிறார்கள். இதையும் "வாத்தியார் சொன்னபடி தர்ப்பயாமி" என்று பரீக்ஷைக் காலத்தில் தானே தண்ணீர் இறைத்துத் தர்ப்பணம்செய்து வருகிறார்கள். தண்ணீர் என்பதற்கு பதிலாக "கருப்புமை" என்கிற வார்த்தையை உபயோகித்தால் அது மிகவும் நன்றாகப்பொருந்தும், "Angle" "மூலை" அல்லது "கோணம்" என்றால் இன்னதென்று மனதில் பிடிபடாமல்தானே பீஜ கணிதம் படிக்கிறார்கள். இவர்கள் அந்தக் கணிதத்தில் படித்துத் தேறுவதெப்படி? இப்படியே சாஸ்திரப் பயிற்சியும் அரைகுறைப் படிப்பாகவே முடிகிறது. ஆங்கிலபாஷையில் பயிற்சியின்மையினால் மற்ற எல்லாப்பாடங்களும் அரைகுறைப் பாடமாகவே நடந்தேறிவருகிறது, "அரைகுறைப் படிப்பு ஆபத்து" என்பது மெய்யாகவிருக்கிறது. ஏதோ நெட்டுருப் போட்டுப் படிக்கிற பிள்ளைகளும் பரீக்ஷையிற்றேற தாங்கள் எவ்வளவு மார்க்கு வாங்கவேண்டியதென்று தெரியாமல் ஏதோ பொட்டைக்குறிப்பாகப் பரீக்ஷையில் தேற முயற்சிக்கிறார்கள். 10 வருஷம் பிள்ளையை அரும்பாடு பெரும்பாடு பட்டுப் பள்ளியில் படிக்கவைத்தபிறகு செகண்டரி ஸ்கூல் பரீக்ஷைமுடிவு ஆனதும் காலேஜில் வாசிக்கவேண்டியகாலம் வருகிறது. இந்தப் பரீக்ஷையில் தேறுவது பெரும்பான்மையான பிள்ளைகளுக்குச் சூதாட்டத்தில் தேறுவதுபோல்தானிருக்கிறது. எல்லாப் பிள்ளைகளும் ஆங்கிலபாஷா ஞானமுற்றிருக்க வேண்டும். இங்கிலீஷ்பாஷைப் படிப்போடு ஸ்வபாஷையில் வியாஸமெழுதவும் மொழிபெயர்க்கவும் தெரிந்திருக்கவேண்டியதவசியம். இதோடு கணிதசாஸ்திர ஞானமும் சிறிதிருக்கவேண்டியது. ஆங்கிலம், ஸ்வபாஷை, கணிதம் இம்மூன்றும் (A Group) ஒரு முக்கூட்டுப் படிப்பு ஆகிறது. இதற்குமேல், கணித சாஸ்திரமோ, பூத பௌதிகசாஸ்திரமோ, சரித்திரப்பாடமோ, ஸம்ஸ்கிருதம் முதலான வேறுபாடமோ பிரத்தியேகமாக வரவேண்டியது.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பது முதுமொழி. அந்த எண்ணும் எழுத்தும் ஸ்வபாஷா ஞானமும் ஸ்வபாஷையிற் போதனையும் குறைவாயிருப்பதுபற்றி "கண்ணெனத்தகும்"படியான குணம் பெறாமல் "புண்ணெனத்தகும்" பதவியிலிருக்கிறது. இப்படி மனக்கண்தானே புண்ணானால், பார்வை குருட்டுப்பார்வை யாவதற்குக் கேட்பானேன். குருட்டுப் பார்வையுள்ள கண் பெற்றும் "கண்ணைக்கொடுத்ததெய்வம் கோலைக் கொடுக்கும்" என்கிறபழமொழிப்படி தன்முயற்சியால் பிள்ளைகள் கடைத்தேறும்வழி ஏற்படாமல், காலேஜ் ப்ரொபெஸ்ஸர்கள் சிலர்கூடி மேலேபடிக்கத்தக்கவர்கள் யாரென்று அவர்களுக்குத் தோன்றுகிறதோ அவர்கள் மட்டும்தான் மேலே படிக்கலாமென்றொரு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. "எருதின்நோவு காக்கைக்குத் தெரியுமா?", அதுபோல இளம் பிள்ளைகள் பாலப்பருவம் முதற்கொண்டு அந்யபாஷையில் எல்லாப்படிப்பும் படித்துவருகிற கஷ்டம் காலேஜ் ப்ரொபெஸ்ஸர்களுக்கு என்னமாகத் தெரியும்? அவர்கள் ஏதோ ஒரு முறைபற்றி 100-க்கு 20 அல்லது 25 பேர்கள் தேறும்படியான திட்டம்போட்டு மற்றவர்களெல்லாரும் பரீக்ஷையில் தேறினார்களில்லையென்று விளம்பரப்படுத்தி விடுகிறார்கள். பிள்ளைகளுக்காவது தம் பிள்ளை கடைத்தேறுவதில் கண்ணும் கருத்துமாயிருக்கும் பெற்றோர்களுக்காவது இப்பரீக்ஷையில் தேறல் தேறாமையின் குட்டு (இரகஸியம்) இன்னதென்று கண்டுபிடிப்பது கஷ்டமாயிருக்கிறது. 16-வயதுப் பிள்ளைகளெல்லாம் "நீ 10 வருஷகாலமாகப் படித்ததெல்லாம் வீண் படிப்பு" என்று சொல்லக் கேட்டால் அவர்கள் மனம் எப்படி நொந்து புண்ணாகுமென்பதைப் பிள்ளைகளை வளர்த்த புண்யவான்கள் அறிவார்களேயன்றி கூலிக்கு மாரடிக்கும் பெண்டீர்கள்போல வேதனத்துக் குழைக்கும் பரீக்ஷிகர்களாவது பள்ளிப் பிள்ளைகளின் மனவியல்பறியாத ப்ரொபெஸ்ஸர்களாவது உள்ளபடி அறிவதுதுர்லபம். இது பரீக்ஷையின் கொடுமையேயன்றி அப்பரீக்ஷை நடத்த இன்றியமையாதவர்களான பரீக்ஷகர்கள் கொடுமையல்ல.

"வெண்காரம் வெய்தெனினும் நோய் தீர்க்கும்; சிங்கி குளிர்ந்தும் கொல்லும்" என்பது

UNIVERSITY OF MADRAS.

No. 3979 Senate House, 7th June 1916.

From Francis Dewsbury, Esq., B.A., LL.B.,
Registrar, University of Madras.

To M.R.Ry. C. V. Swaminathaiyar Avergal
Mylapore.

Sir,—In acknowledging your letter No. 4803, dated 4th June 1916, handed to me to-day and the memorandum enclosed therewith, I have the honour to state that the selection of School-leaving Certificates holders eligible for University Courses of Study has been completed and that no alteration in the principles of selection for this year is now possible. In this connection, however, I have to remark that the principles of selection detailed in your memorandum as being those adopted for this year are very different from the principles actually accepted by the Syndicate and its Committee, upon which the eligibility of students for University Courses of Study was determined. Consequently your memorandum, being based upon mistaken premises, is valueless as a criticism of the selection of students this year. A large number of the students for whom your memorandum pleads have actually been selected for admission to Colleges. I do not, therefore, propose to place your communication before the Syndicate.

I have the honour to be,
Sir,
Your most obedient servant.
(Sd.) FRANCIS DEWSBURY.
Registrar.

Ref. on P. C. No. 4807 Dated 8th June 1916.

To the Registrar of the University of Madras, Madras.

Sir,—In acknowledging with thanks your reply No. 3979, dated 7th instant, just to hand, I have the honour to request you will be good enough to state "the principles actually adopted by the Syndicate and its Committee, upon which the eligibility of students for University Courses of Study was determined." The principles if they are different, must be of sufficient importance for parents and students to know. So far as I was able to ascertain I found that a student who has actually obtained 8 per cent. over the Presidency Averages in English and Vernacular Composition and Translation and who intends taking up the History Course or 3rd group of subjects in which he has obtained 15 per cent. over the Presidency Average and also 9 per cent. over the Presidency Average in Sanskrit, would be declared ineligible by reason of his marks in Ele-mentary Mathematics (a subject which is certainly not required for his selected course of study in the College) being insufficient to bring up the total of his marks in A group either in the Public Examination or the moderated marks to the limits fixed according to the principle which you say have been adopted by the Syndicate and its Committee the moderation board. I have personal knowledge of the fact that there are many other students who are similarly circumstanced and who, by the principles not being enunciated by a more careful consideration have become ineligible, though judging by the marks they have got in the subjects required for the 3rd group of the Intermediate scheme, they are much more eligible than those who, having got lower marks in English have become eligible from the absolute standpoint of minima adopted by the Committee.

I think you will agree with me that the matter is of sufficient importance to need elucidation in the most authentic manner, especially after you have declared my Committee's memorandum as "being based on mistaken premises" for which reason you state you propose withholding it from being placed before the Syndicate for its consideration. An early reply will relieve the tension of the public mind which certainly exists, because of the mystery surrounding the principles of selection which have been approved.

I have the honour to be.
Sir,
Your most obedient servant,
(Sd.) C. V. Swaminathaiyer.

வித்வத்வாக்கு. உண்மைப்படிப்பு முதலில் கஷ்டத்தை விளைத்தாலும் அதனுடைய சிக்ஷை தீக்ஷைகள் மனவிருளைப்போக்கி ஞான தீபத்தைப் பிரகாசமாக எரியச் செய்யும். இது வெண்காரம் உஷ்ணமான வஸ்துவாயினும் நோய் தீர்க்கும் மருந்தாவது போலாம். விஷம் உண்டதும் உடம்பு சிலிர்க்கக் குளிர்ச்சியை உண்டுபண்ணினும் முடிவில் உயிரை வாங்குமாபோல் இந்தப்பரீக்ஷை முறை "என் பிள்ளை 10-வருஷம் படித்து பரீக்ஷை கொடுத்துவிட்டான்" என்கிற மனக்குளிர்ச்சியை உண்டு பண்ணினாலும் அது முற்றிலும் ஏட்டுப் படிப்பேயாவதுபற்றி மனப்பழக்கம், நாப்பழக்கம், கைப்பழக்கம் இளமையில்தானே சரிவர ஏற்படாத தோஷத்தால் பின்னுக்கு ஆயுஸ் முழுவதும் அநர்த்தம் விளைத்து ஆபத்துக்கிடமாக முடிவதாயிருக்கிறது. ஆகையால் இந்த அரைகுறைப் படிப்பினால் வரும் ஆபத்தை நிவர்த்திக்க பெற்றோரும் பிள்ளைகளும் ஊக்கங்கொண்டுழைத்து முயற்சித்து வரல்வேண்டும். இல்லாவிட்டால் எண்ணைச் செலவும் இளமை நஷ்டமும் தவிர பிள்ளைகள் கடைத்தேறும் வழி ஏற்படுவது கஷ்டமாக முடியும். பள்ளிப்படிப்பைச் சீர்திருத்த நம்மாலாகுமாவென்றிருந்தால் காரியம் ஆகாது. பிள்ளையைப் பெற்றபின் அவர்களை வளர்த்து வித்யா ஸம்பன்னராகச் செய்வது பெற்றோர் தம் கடமையாம். இராஜாங்கத்தார் இதற்கு அநுகுணமான சாதக சாதனங்களை யேற்படுத்தக் கடமைப்பட்டிருப்பினும், அவர்கள் ஏற்படுத்தும் சாதக சாதனங்கள் நமது பிள்ளைகள் பிழைப்பதற்கு ஏற்றவையாக விருக்கின்றனவா இல்லையாவென்று பார்க்கும் பொறுப்பு பெற்றோரைச் சேர்ந்ததே. ஆகையால் பெற்றோர் தம் கடமையை நிறைவேற்ற விவேகத்தோடுழைக்க வேண்டும். விவேக ஞானமில்லாத படிப்புப் படிப்போடு சேர்ந்ததில்லை.

இந்த வருஷம் நடந்த ஸ்கூல் அறுதிப்பரீக்ஷையில் 11-ஆயிரம் பேர்கள் ஆஜராக அவர்களில் 2500-பேர்கள் தவிர மற்ற 8500 பேர்கள் காலேஜில் படிக்க சேர்த்துக்கொள்ளப் படமாட்டார்களென்று தெரியவருகிறது. இது விஷயமாக பாலபோத வித்யா சங்கக்கமிட்டிக்கும் யூனிவர்ஸிடி ரிஜிஸ்திராருக்கும் நடந்த கடிதப்போக்குவரத்தின் முதற்பகுதியை முன்னேட்டில் வெளியிட்டிருக்கிறோம். ரிஜிஸ்திராருடைய முடிவான பதிலை எதிர்பார்த்துக் கொண்டு மேலொன்றும் எழுதாமல் விடப்பட்டிருக்கிறது, தனிப்பாடங்களில் 100-க்கு 40-க்குமேல் வாங்கி A Group மொத்தத்தில் 37 வாங்கினவர்களெல்லாம் தள்ளுபடியாயிருக்க இங்கிலீஷில் மட்டும் 100-க்கு 33 வாங்கினவர்கள் பரீக்ஷையில் தேர்ந்து தேறினவர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் ஆங்கில பாஷையில் ஞானம் குறைந்தவர்கள் 'இண்டர்மீடியேட் பரீக்ஷை'யில் ஏராளமாகத் தேறாதுபோவார்கள். இந்த வருஷம் 'இண்டர்மீடியேட் பரீக்ஷை'யில் 100-க்கு 25 பேர் விகிதம்தான் தேறியிருக்கிறார்கள்.

SIR HARCOURT BUTLER ON EDUCATION.

வித்யாலக்ஷியத்தைப்பற்றி ஸர் ஹார் கோர்ட் பட்லர் அபிப்ராயம்.

ஸர் ஹார்கோர்ட் பட்லர் அவர்கள் இந்தியா கவர்ன்மெண்டில் வித்யா இலாகாமந்திரியாகவிருந்து பிரக்கியாதிபெற்று இப்பொழுது பர்பா உதவிக் கவர்னராக விருக்கிறார். அங்கே அவர் மெய்மேயோவிலுள்ள ஸெய்ன்ட் மைகேல்ஸ் வித்யாசாலையில் பரிசளிக்கும் போது அக்கிராசனம் வகித்திருந்து வித்யா போதனாமுறையையும் வித்யா லக்ஷியத்தையும் பற்றிச் சில அருமையான வார்த்தைகள் சொன்னார். அவருடைய வார்த்தைகளின் அருமை, அவர் வித்யாபோதனையின் உண்மை நோக்கத்தை உள்ளபடி யறிந்தவராயிருப்பதினால்,

விசேஷமாகக் கவனிக்கத்தக்கதாக விருக்கிறது. "பள்ளிப்படிப்பு" என்றால் "பரீக்ஷை கொடுக்கிறது" என்கிற தப்பெண்ணம் எப்படியோ வழக்கத்தில் வந்துவிட்டது. பிள்ளைகளைப் பரீக்ஷிப்பது வித்யாபோதனை முறையென்பது வழக்கத்திற்கு வந்தபிறகு எத்தனையோ விபரீதங்கள் நேர்ந்திருக்கின்றன. "கற்றதோர் கல்வியும் மனப்பழக்கம்" என்றபடி பிள்ளைகளுக்கு மனப்பழக்கம் என்பது (மனம் படியப் பெறுவதற்கான அப்பியாசமுறை) ஏற்படாமல் தானே பிள்ளைகளுக்கு ஏட்டுப்படிப்புச் சொல்லிக்கொடுத்துப் பரீக்ஷையில் தேறச் செய்துவிடுகிறார்கள். இது கிளிப்பிள்ளைப் படிப்பேயன்றி மனப்பழக்கம் தரும் கல்வியென்று சொல்வதற்கு ஹேதுவில்லாமலிருக்கிறது. இந்தத் தப்புவழக்கம் கூடாதென்றும் பரீக்ஷைசெய்வதும் பரீக்ஷையில் தேறுவதும் உண்மையான வித்யாபோதனா முறைகளல்லவென்றும், பள்ளியில் பழகும் பிள்ளைகள் ஆசான் உறவால் தேஹப்பயிற்சி மனப்பயிற்சியில் தேர்ந்து குணவலி பெற்று விளங்குவதே உண்மையான வித்யாபோதனையென்றும், பரீக்ஷையில் தேறுவதே வித்யாபோதனையாக மதிக்குங்காலம் அனேகமாய்ப் போய்விடுமென்றும் சொன்னார். ஜீவனோபாயம் தேடுங்காலத்தில் குணவலியும் மனோவலியும் தேஹவலியும் அநுகுணமாயிருந்துதவுமேயன்றி பரீக்ஷையில் தேறினபேரும் ஏட்டுப்படிப்பைக்கொண்டு கொடுக்கும் யோக்கியதாபத்திரத்தின் சிபார்சும் பிரயோஜனப் படமாட்டாதென்றும், இனி வேலையிலமருங்காலையில் வேலைகொடுக்கிறவர்கள் பரீக்ஷை மதிப்பைவிட்டு குணமதிப்பையே பெரிதாகக்கொண்டு தக்க பேரைத் தெரிந்தெடுக்கும் காலம் சமீபித்து விடுமென்றும் செப்பினர். பெண்கல்வி எப்போதும் பிரயோசனகரமாகவே யிருக்கவேண்டியது என்றும் சொன்னார்.

LORD KITCHENER.

லார்ட் கிச்சனர்.

பிரிடிஷ் மஹாராஜ்யத்தின் யுத்த மந்திரியாகவிருந்து இப்பொழுது நடந்துவரும் மஹா பார'தப்போரை நடத்துவதில் அதிக ஊக்கமும் சாமர்த்தியமுமுள்ளவராகக் காட்டி வந்த லார்ட் கிச்சனர் அவர்கள் நாளது ஜுன்மீ 5உ யன்று இராத்திரி 8-மணிக்கு ஆர்க்னீஸ் தீவுகளண்டை மாலை 8-மணிக்கு 'ஹாம்ப்ஷைர்' என்னும் வேகமான சிறிய யுத்தக் கப்பலில் ருஷியாவுக்குப் போகும்வழியில் சுரங்கம் வெடித்தோ அல்லது 'டார்பிடோ' வென்னும் கடலில் மூழ்கிப்பாய்ந்து வெடிக்கும் வெடியந்திரப்படகினால் தாக்கப்பட்டோ கப்பலுடைந்து அவருடனிருந்த உத்யோகஸ்தர்கள் எல்லாரோடும் மூழ்கிப்போய்விட்டார். இவருக்கு இச்சமயம் தீடீரென்று நேரிட்ட இவருடைய மரணமானது பிரிட்டிஷ் நாடுகள் முழுவதிலும் இதர நாடுகளிலும் மிகவும் துக்கிக்கப்படுகிறது.

இவர் 1850-ம் வருஷத்தில் பிறந்து 1870-ம் வருஷத்தில் இராணுவத்தில் சேர்ந்து 1898-ம் வருஷத்தில் எகிப்தில் மாதியை ஓம்டர்மன் சண்டையில்வென்று பிரபல கீர்த்திபெற்றார். பிறகு ஸர்தார் பட்டம்பெற்று ஓம்டர்மனில் ஜயித்ததற்காக பார்லிமெண்டு சபையார் 30 ஆயிரம் பவுன் அவருக்கு இனாம் கொடுக்க அதைப் பெற்றுக்கொண்டு உடனே நடந்த தென்னாபிரிகா யுத்தத்தில் லார்ட் ரோபர்ட்ஸ் அவர்கள் தலைமையின்கீழ் போர்செய்து, லார்ட் ராபர்ட்ஸ் அவர்களுக்குப்பின் அவ்விடத்திலுள்ள பிரிடிஷ் சேனைகளுக்கெல்லாம் முக்கிய தலைவராயிருக்கும் பதவிபெற்று தென்னாபிரிகாவை சமாதானப்படுத்துவதில் பெருமுயற்சி செய்துழைத்துவந்தார். தென்னாபிரிகாயுத்தத்தில் ஜயித்ததற்காக அவருக்கு 50 ஆயிரம்பவுன் இனாம் கொடுத்ததோடு விஸ்கௌண்ட் என்கிற பிரபுப்பட்டமும் அளிக்கப்பெற்றார். பிறகு 1902-ம் வருஷமுதல் 1909-ம் வருஷம் வரையில் லார்ட் கிச்சனர் இந்தியாவில் முக்கிய சேனாதிபதியாகவிருந்து இந்திய சேனைகளையும் ஸ்வதேச ராஜாக்கள் ராஜ்யப் பொது உதவிக்காக வென்று பழக்கிவைத்துக் கொண்டுவந்த “இம்பீரியல் ஸெர்விஸ்” துருப்புகளையும் சீர்திருத்தி நல்ல பதவிக்குக்கொண்டுவந்தார். இப்பொழுது யுத்தம் ஏற்பட்டவுடன் இந்தியசேனைகளும் இம்பீரியல் ஸெர்விஸ் துருப்புகளும் காலதாமதமின்றி சரேலென்று புறப்பட்டு தூரதேசங்களிலுள்ள ப்ரான்ஸ் முதலான யுத்தகளங்களுக்குப் போகுவது சாத்தியமாக விருந்தது அவர் இந்தியாவிலிருந்தபொழுது செய்த சீர்திருத்தங்களினாலேயே யென்றறியவேண்டியது.

“இந்தியர்கள் ஜெர்மானியரை ஹதம் செய்து துரத்தல்.”

சேனைகளை முஸ்தீபுசெய்து யுத்த சன்னத்தராகச் செய்வதில் இவரைப்போன்ற சாமர்த்தியமுள்ளவர்கள் வேறு இல்லையென்றே சொல்லலாம். இப்பொழுது நடக்கும் யுத்தம் துவக்கினபொழுது பிரிடிஷ் தீவுகளில் லக்ஷத்து 50 ஆயிரம் துருப்புகள்தான் யுத்த சன்னத்தர்களாயிருந்தார்கள். யுத்தம் ஆரம்பித்ததுமுதல் 50 லக்ஷம் பிரிடிஷ் சைனியம் தயார்செய்து அங்கங்கேநடக்கும் யுத்தகளங்களுக்கு அனுப்பியிருக்கிறார். இத்தனை பேர்களைச் சேர்த்து யுத்தம்செய்வதில் பழக்கி அவர்களுக்கு வேண்டிய யுத்த தளவாடங்களெல்லாம் சேகரித்து வழியில் ஆபத்து நேரிடாதபடி சாவதானமாய் அவர்களை எதிரிக்குத்தெரியாதபடி யுத்தகளத்துக்கு அனுப்பிவருவது இலகுவான காரியமல்ல. இந்த கஷ்டசாத்தியமான காரியத்தை அவர் வெகு தீவிரமாய்ச் செய்து முடித்ததன்றி மேன்மேலும் கை சளைக்காமலும் ஜனங்கள் ஊக்கம்குறையாமலும் சேனைகளைச் சேகரித்து தயாரிதுசெய்து அனுப்பிக்கொண்டேயிருந்தார். இவருடைய பெருமுயற்சியாலே யுத்தம் இதுகாறும் கூட்டாளிகள் கை சளைக்காதபடி நடத்துவது சாத்தியமாகி வந்

தது. இப்பொழுது எதிரிகளை மடக்கிவிடக்க கூட்டாளிகள் சைனியங்கள் எல்லாம் சேர்ந்து ஒருமனதுப்பட யுக்திசெய்து தாக்க வேண்டுமென்று அதற்காகவே ருஷியாவுக்குப் போய்க்கொண்டிருந்தார். வழியில் இந்த ஆபத்து நேர்ந்துவிட்டது. இச்சமயத்தில் எவ்வளவு திறமைசாலிகளாயிருந்தாலும் இறந்தவர்களைப்பற்றி மனஞ்சலித்துக் கை சளைக்க நேரமில்லை. ஆதலால் இவருடைய ஸ்தானத்தில் வேறு தக்கவர்கள் யுத்தமந்திரி ஸ்தானத்தை வகித்துச் சண்டையை இடையூறின்று நடத்திவருவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. தற்காலம் யுத்தமந்திரி வேலையை முதல் மந்திரியாகிய கனம் மிஸ்டர் ஆஸ்குவித் அவர்களே சத்தியாக மேற்போட்டுக்கொண்டு பார்த்துவருகிறார். தெய்வ சங்கல்பம் எப்படியிருந்தாலும் மனஞ்சலிக்காது ஊக்கத்தையும் கைவிடாது உழைப்பவர்கள் எப்படியும் ஜயசீலர்களாவார்கள். “தெய்வத்தானாகாதெனினும் முயற்சி தன் மெய்வருத்தக்கூலிதரும்” என்பது உண்மையே. இந்த உண்மையை நம்பி உழைப்பவர்கள் ஒருபோதும் சிறுமைப் படமாட்டார்கள். மிஸ்டர் லார்ட் ஜார்ஜ் யுத்த மந்திரியாக நியமிக்கப்பெற்றிருக்கிறார். அவருடைய ஸ்தானத்தில் தளவாட மந்திரி வேறு நியமிப்பார்கள்.

WAR NOTES.

யுத்த சமாசாரம்.

சில மாதங்களாக யுத்த களங்களின் சமாசாரம் ஒன்றும் தலை கால் புரியாதபடியிருந்ததால் அவைகளைச் செப்பி மனக்குழப்பமுண்டு பண்ண நிமித்தமில்லையென்று சுமமாவிருந்துவிட்டோம். இப்பொழுது மேலண்டைப் போர்க்களத்தில் ஒருகோடியில் வெர்டேன் (Verdun) என்னுமிடத்திலும் மற்றொரு கோடியில் ஈபரேஸ் (Ypres) என்னுமிடத்திலும் சண்டை வெகு மும்முறமாக நடந்து வருகிறதாகத் தெரியவருகிறது. அகழிகள் வெட்டி வெடிகுண்டுகள், வெடியந்திரங்கள் இவைகளைக்கொண்டு செய்யும் யுத்தத்தில் ஒரு தரத்தார் எதிரிகள் அகழிகளைப் பிடித்துக்கொள்வதும் மறுபடியும் அங்கிருந்து துரத்தப்படுவதும் சகஜமாக ஏற்பட்டு வருகிறது. ஆதலால் முடிவில்லாத தோற்பு கெலிப்புகளைச் சொல்லிச் சொன்னதை மறுத்தும் மாற்றியும் பின்னெழுதுவதில் பிரயோசனம் ஒன்றுமில்லை. சண்டை துவக்கி 22-மாசங்களாய்விட்டன. சைனியங்கள் ஒவ்வொரு போர்முனையிலும் ஏராளமாக மடிந்துவருகின்றன. உணவு பொருள்களுக்கும் சண்டைசெய்யும் ஆள்களுக்கும் அந்தந்த நாடுகளில் முட்டுகள் ஏற்பட்டுவருகின்றன. பிரிடிஷ் ராஜ்யத்தில் இதுவரையில் நிர்ப்பந்த ராணுவ சேவகமில்லாமலிருந்தது. இப்பொழுது அங்கேயும் ராணுவ சேவகம் நிர்ப்பந்தமாகச் செய்யப்பட்டிருக்கிறது. ஸ்வதாவாகச் சேர்ந்தவர்களைக்கொண்டு 50 லக்ஷம் சைனியம் சேகரித்தும் சேனையின் தொகை சண்டைமுனையில் நிற்பதற்குப்போதுமானதாகவில்லை. ஜெர்மனியில் சைனிய நஷ்டம் ஏராளமாக நேர்ந்து கையிருப்புச் சேனைகள் மிகவும் குறைந்துபோய் விட்டதாகத் தெரிகிறது. ருஷியர்கள் காகேஷஸ் மலைத் தொடர்ப் பக்கத்தில் ஜயம்பெற்று வருகிறார்கள். துருக்கியிலும் இத்தலியின் வட எல்லையிலும் சண்டை தொடர்பிடியாக நடந்துவருகிறது. மத்தியதரைக்கடற்கரை யோரங்களில் சண்டை கிளம்பியிருக்கிறதாகச் சமாசாரம் வந்து வெகு நாளாய்விட்டது. மேமீ 31௳ யன்று ஜெர்மானிய கப்பற் படைகளுக்கும் பிரிடிஷ் கப்பற்படைகளுக்கும் ஒரு பெரிய சண்டை நடந்தது, அதில் பிரிடிஷார் தரப்பில் 17 கப்பல்களும் ஜெர்மானியர் தரப்பில் 16 அல்லது 17 கப்பல்களும் யுத்தச் சேதமாய் மூழ்கிப்போயின. சண்டை முகத்துக்கு பிரிடிஷ் கப்பற்படைகளின் அதிபர் ஸர் ஜான் ஜெல்லிகோ அவருடைய கப்பற்படைகளுடன் வரவும் ஜெர்மானிய கப்பல்கள் இணைபிரிந்து ஓடியொளித்து அவர்கள் தேசத்துத் துறைமுகங்கள்போய்ச் சேர்ந்துவிட்டன. இந்த சந்தர்ப்பத்தில் யுத்த மந்திரி லார்ட் கிச்சனர் ஏறிப்போன கப்பல் அப்படியே மூழ்கிப்போய் விட்டதாகத் தந்தி சமாசாரம் வந்துள்ளது. இன்னும் சில மாதங்களில் யுத்தம் மிகமும்முறமாய் அதிகரித்து ஒரு விதத்தில் தோற்பு கெலிப்புத் தெரியும்படியாக ஏற்படுமென்று ஊகிக்கக்கூடியதாயிருக்கிறது. ஆயினும் இத்தருணத்தில் நாளைச் சம்பவங்களைப்பற்றி இன்றைக்கு நினைப்பதும் அசாத்தியமாக விருக்கிறது. ஏனெனில் எந்த நிமிஷத்தில் என்ன சம்பவம் நேரிடுமோ, அது என்ன பிரமாதம் விளைக்குமோ யாராலும் சொல்ல முடியாமலிருக்கிறது.

"FROM POVERTY TO POWER."

"THROUGH NATURE TO GOD."

"BY LOVE TO ALL."

"GOD IS LOVE : KNOWLEDGE IS POWER : OM."

"You will convince; without arguing, you will teach; not cherishing ambition, the wise will find you out; and without striving to gain men's opinions, you will subdue their hearts. For Love is all-conquering, all powerful; and the thoughts and deeds and words of Love can never perish.........to know that Love is universal, supreme, all sufficing; to be freed from the trammels of evil; to be quit of the inward unrest; to know that all men are striving to realise the truth each in his own way to be satisfied, sorrowless, serene; this is PEACE; this is GOODNESS, this is IMMORTALITY; this is DIVINITY; this is THE REALISATION OF SELFLESS-LOVE."—*James Allen.*

FUNCTION OF RELIGION : ITS VITAL IMPORTANCE :

"Religion makes easy and felicitous what in any case is necessary (the acceptance of the universe as it is); and if it be the only agency that can accomplish this result, its vital importance as a human faculty stands vindicated beyond dispute. It becomes an essential organ of our life, performing a function which no other portion of our nature can so successfully fulfil. From the merely biological point of view so to call it, this is a conclusion to which so far as I can now see, we shall inevitably be led, and led moreover by following the purely empirical method of demonstration..............

"THE LIFE OF RELIGION in the broadest and most general terms possible, is, one might say, that it consists of the belief that there is an unseen order, and that our supreme good lies in our harmoniously adjusting ourselves thereto. This belief and this adjustment are the religious attitude in the soul."—*Prof. W. James.*

"A platonising writer like Emerson may treat the abstract devineness of things, the moral structure of the Universe, as a fact worthy of worship.

"In those various Churches without a God which to-day are spreading through the world under the name of ethical societies, we have a similar worship of the abstract divine, the moral law believed in as an ultimate object."

"'Science' in many minds is genuinely taking the place of religion. Where this is so, the scientist treats the "Laws of Nature" as objective facts to be revered."—*Ibid.*

"Nature is always so interesting under whatever aspect she shows herself that when it rains, I seem to see a beautiful woman weeping. She appears the more beautiful, the more afflicted she is." *B. de St. Pierre.*

"For Beauty is Truth, Truth, Beauty that is all
"Ye know on earth, and all ye need to know."—*Keats.*

குறைவில் நிறைவு.

"திக்கற்றவர்க்குத் தெய்வந் துணை."

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம்.

கருடவாஹன குருகடாக்ஷ வீக்ஷண்யப்ராப்தாஸ்து.

காண்.

"வஞ்சகமன் வாதனைக்கும் வன்பிறவி வேதனைக்கும்
அஞ்சியுனையடைந்தே னையா பராபரமே."—பட்டினத்தடிகள்.

துதி.

"அப்பநீ அம்மநீ அய்யநீ அன்புடைய மாமனு மாமியுநீ
ஒப்புடைய தாரமு மொண்பொருளுநீ
ஓர்குலமும் சுற்றமும் ஒருநீ
துணையாயென் னெஞ்சந் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ, இம்மணிநீ, இம்முத்துநீ, இறைவநீ!
ஏறூர்ந்த செல்வநீயே!"

மதிவளர்காதலி.

"தசமயிலைசாகரத்துக்கப்பாலேறிச் சிலம்பொலியுமுனதுடைய இருக்கால்கண்டு
நிசமாகஸ்தூல சூக்ஷ்மத்தில் தோன்றி
நிஷ்களத்தில் நீயுநானு மொன்றேயாகி
அறிவில்லா ஆனந்த மயமேயாகி
அருள்வெளியாய் வரமருள்வா யகண்டரூபி!
சுசிவழியாய் சசிமுகமாய்ப் பிள்ளைமுகம் பார்த்தாள்வாய்
சோதியே மனோன்மணியே ஸநாதினவாழ்வே!"

மலைவளர்காதலி.

"பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கள் மித்திரர்கள்-பக்கமுண்டெக்காலமும்
பவிசுண்டு தவிசுண்டு திட்டாந்தமாகயம-படரெனுந்திமிரமணுகாக்
கதியுண்டு ஞானமாங் கதிருண்டு சதிருண்டு-காயசித்திகளுமுண்டு
கறையுண்ட கண்டர்பா லம்மைநின்னருளிற்-கருத்தொன்று முண்டாகுமேல்
நதியுண்ட கடலெனச் சமயத்தையுண்டபர-ஞானவானந்த வொளியே
நாதாந்தரூபமே வேதாந்த மோனமே-நானெனுமகந்தை தீர்த்தென்
மதியுண்ட மதியான மதிவதனவல்லியே-மதுசூதனன் றங்கையே
வரைராசனுக்கிருகண் மணியாயுதித்தமலை-வளர்காதலிப் பெணுமையே."

* * *

"பூதமுதலாகவே நாதபரியந்தமும்-பொய்யென் றெனைக்காட்டியென்
போதத்தினடுவாகி யடியீ றுமில்லாத-போதபூரண வெளிக்குள்
ஏதுமறவில்லென் றுபாயமாவைத்து நினை-யெல்லாஞ்செய் வல்லசித்தாய்
இன்பவுருவைத்தந்த வன்னையே நின்னையே-யெளியேன் மறந்துய்வனோ!
வேதமுதலானநல் லாகமத்தன்மையை-விளக்குமுட் கண்ணிலார்க்கும்
மிக்கநின்மகிமையைக் கேளாதசெவிடர்க்கும்-வீறுவாதம் புகலும்வாய்
வாதநோவாளர்க்கு மெட்டாதமுக்கணுடை-மாமருந் துக்கமிர்தமே
வரைராசனுக்கிருகண் மணியாயுதித்தமலை-வளர்காதலிப் பெணுமையே."

* * *

"பூரணிபுராதனி சுமங்கலைசுதந்தரி-புராந்தகி த்ரியம்பகியெழிற்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்ரதள-புட்பமிசை வீற்றிருக்கும்
நாரணியனாதி நாயகிகுணாதீத-நாதாந்த சத்தியென்றுன்
நாமமேயுச்சரித் திடுமடியர்நாமமே-யானுச்சரிக்க வசமோ
ஆரணிசடைக்கடவு ளாரணியெனப்புகழ-வகிலாண்ட கோடியீன்ற
அன்னையே பின்னையுங் கன்னியெனமறைபேசு-மானந்த ரூபமயிலே!"

* * * *

"பூதமொடுபழகிவள ரிந்திரியமாம்பேய்கள்-புந்திமுதலான பேய்கள்
போராடுகோபாதி ராக்ஷசப்பேய்களென்-போதத்தை யூடழித்து
வேதனைவளர்த்திடச் சதுர்வேதவஞ்சன்-விதித்தானி வல்லலெல்லாம்
விழும்படிக்குனது மௌனமந்த்ராதிக்ய-வித்தையை வியந்தருள்வையோ!
நாதவடிவாகியமஹா மந்த்ராதிரூபியே-நாதாந்த வெட்டவெளியே
நற்சமயமானபயிர் தழையவருமேகமே-ஞானவானந்த மயிலே
வாதமிடுபரசமயம் யாவுக்குமுணர்வரிய-மகிமைபெறு பெரியபொருளே
வரைராசனுக்கிருகண் மணியாயுதித்தமலை-வளர்காதலிப் பெணுமையே.

—தாயுமானவர்.

ON THE CULTIVATION OF MENTAL HAPPINESS AS A CHARACTERITIC OF MOTHERHOOD.

அன்னைக்கழகு அகமகிழ் பயிற்சி.

எனதருமை அன்புள்ள சகோதரிகளே, இவ்வழகிய உலகில் நமக்குவேண்டிய சுகங்களை கருணைக்கடலாகிய ஜெகதீசன் ஏராளமாய் தந்திருந்தும் சிலவேளை நாம் ஏதோ வொருமனக்குறைக்கு உள்ளாகி துன்பப்படுகிறோம். இதை யொழிக்கும்படியாக நாம் ஒரு சாதனம் தேடவேண்டும். அதனால் எப்போதும் சந்தோஷமாயிருக்கும்படியான பழக்கம் நம்மில் உண்டாகவேண்டும். சாதனமில்லாமல் ஒன்றையும் சாதிப்பது கூடாது. கண்விழித்து நாடகமுதலானது பார்த்துக் களிப்பதையும் சந்தோஷமென்பார்கள். நான் சொல்லவரும் சந்தோஷம் அப்படிக்கொத்ததல்ல. துன்பத்திலும் நாம் பெற்றிருப்பதைக் கொண்டு சுகமனுபவிக்கும்படியான பழக்கம் எதுவோ அது தான் அகமகிழ் பயிற்சி.

நமக்குண்டாகும் துன்பங்களில் அநேகம் நாம் செய்துகொள்பவைகளே. அல்ப விஷயங்களுக்கெல்லாம் கோபத்திற்கும் குறைகளுக்கும் உள்ளாகிறோம். ஆழமறியாமல் காரியங்களில் தலையிடுகிறோம். ஆகாப்பண்டங்களில் இச்சைவைத்து அனுபவிக்கிறோம். இச்செய்கைகளால் நேரிடும் துன்பங்கள் அநேகம். நமது செய்கைகாரணமல்லாமல் இராஜரீகமாய் வருபவை கொஞ்சம்.

நமது கெடுதிகள் எதினால் விளைகின்றனவென்று எண்ணிப் பார்க்கும்போது நாம் பெற்ற பேறுகிய *இச்சாசுதந்திரத்தை †துர்விநியோகம் செய்வதினால் என்று வெளியாகும். எழுவகைத் தோற்றங்களில் மக்களாகிய நமக்கு இழிந்தனவாகிய விலங்கு பறவை முதலியன தம்மைப்படைத்த கடவுளின் நியமனங்களுக்குக் கொஞ்சமாவது மாறுபடாமல் தத்தம செய்கைகளை சரிவர நடத்திவருகின்றன. தங்களுக்கு ஏற்பட்ட விதிகளினின்று பிசகும்படியான சுதந்திரம் அவைகளுக்கு இல்லை. ஆகையால் அவற்றின் சுகம் கெடுவதற்கு மார்க்கமில்லை. பட்சி முதலியவற்றை கவனித்துப் பாருங்கள். அவைகள் தத்தம் பேடைகளுடன் கூடிக்குலாவுவதையும் அவைகள் தம்மினத்தை நீடூழியாய் இருக்கும்படி செய்யும் கருமத்தை ஏற்பட்ட கிரமத்திற்கு கொஞ்சமாவது மாறுபடாமல் நடக்கிறதைப் பார்ப்பீர்களானால் ஆச்சரியப்படாமலிருக்க மாட்டீர்கள். அவைகளுக்கு நேர்ந்த விவேகக் குறைவிற்குத் தக்கபடி இச்சாசுதந்திரமும் குறைந்திருக்கிறது. அவைகள் நம்மைப்போல பயிர்செய்து உணவைப் பெறவேண்டிய அவசியமில்லை. கர்த்தன் செயலின் அழகைப் பாருங்கள். விவேகக்குறைவு இருப்பதால் உணவிற்கு பிரயாசைப்படவேண்டியதில்லாமலே பட்சிகள் விருட்சங்களில் உண்டாம் கனிமுதலியவற்றால் தினம் விருந்துண்டு களிக்கின்றன. காக்கை முதலியவை முட்டையிட்டு குஞ்சு பொரிக்குங்காலம் சமீபித்தபோது ஆணும் பெண்ணுமாக கூடுகட்டுவதற்கு சாமக்கிரியைகளைத் தேடுவதில் படும்பாட்டையும், பிறகு தம்குஞ்சுகளுக்கு இரைதேடி அவைகளின் பவழம்போன்ற வாயில் புகட்டி உண்பிக்கும்படி தமக்குவேண்டிய இரையை எங்கும் இலேசில் கிடைக்கும்படி செய்திருக்கும் அழகிய செய்கையையும் கவனியுங்கள். பசு முதலிய மிருகங்கள் கூடவேண்டிய காலந்தவிர மற்றக் காலத்தில் அவ்விச்சையற்றிருந்து அவைகளுக்கு நியமித்த வேலையைச் செய்து வருவதினால் அவைகளுக்கு நோய் நொடிகள் மட்டாயிருக்கின்றன. ஊண் உறக்கம் முதலியவற்றில் மனுஷனும் மிருகங்களுக் கொப்பானவனாலும் பகுத்தறிவு இவனுக்குண்டாயிருப்பதினால் கருத்தன் நியமனங்களைத் தெரிந்துகொண்டு நடக்கவேண்டியவனாய் இருக்கிறான். தெரிந்து நடந்து சுகப்படவும், தெரிந்துகொண்டு நடக்காவிட்டால் துன்பத்திற்கு உள்ளாகும் சுதந்திரத்தையும் பெற்றுவிட்டான். இச்சுதந்திரத்தின மேன்மையைக் கவனிக்காதவராய் துர்விநியோகம் செய்து துக்கங்களைப் பெருக்கிக் கொள்ளுகிறோம். நமக்குள்ள சுதந்திரத்தை எவ்வளவுக்கு கையாடலாம் எங்கு விடவேண்டும் என்று நமது பகுத்தறிவால் சுலப பிரயாசையினால் தெரிந்துகொள்ளக் கூடியவர்களாயிருந்தும், சோம்பலுக்கு உள்ளாகி சித்தம்போனவாறு பிரவர்த்திக்கிறோம். கடினப்பிரசவங்களுக்கு நாம் பலமுறை ஆளாகிறோம். மருந்தும் கையுமாய் இருக்கவேண்டி வருகிறது. உண்டாகும் சந்ததிகள் நோய் நொடியற்று செழித்திருப்பதில்லை. பகுத்தறிவை கூர்மையாக்கிக்கொண்டு *சித்தசுவாதீனத்தைக் கைக்கொள்வோமாகில் நமக்கு நேரிடக்கூடும் துன்பங்களில் பெரும்பாகம் ஒழிந்துவிடும். நாம் துன்பப்படும்போது நம்மையுமறியாமல் "கர்மம்" கர்மமென்று சொல்லுகிறோம். ஆம், நாம் முற்பகல் செய்தது பிற்பகல் விளைந்ததை †நிதரிசனமாய்க் கண்டோம். ஆகையால் நமக்குக்கிடைத்த இச்சாசுதந்திரத்தை வெகுசாக்கிரதையாய் கையாடவேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் சுதந்தரமில்லாதவர்களென்கிறதும் பொய்யல்ல. மனுஷன் செய்யக்கூடாததைச்செய்வதற்கு சுதந்திரமில்லையேயொழிய, இவன் செய்யக் கூடியதில் சர்வசுதந்திரம் பெற்றிருக்கிறான். அன்றியில் அச்சுதந்திரத்தை அத்துமீறி அநுசரித்தால் கேடுவருவது நிச்சயம்.

துன்பங்களால் பயனில்லாமற் போகவில்லை. நாம் செய்யும் துர்க்காரியங்களின் பயனாக துன்பங்கள் உண்டாகாமற்போனால் கடவுளின் நியமனங்களை (சட்டங்களை) நாம் நிறைவேற்றுவது எப்படி? அவரது ஆஞ்ஞைமுடிவுபெறவேண்டும், அதைக்கடக்கவல்லவர் ஒருவருமில்லை.

ஈசனுடைய நியமனங்களைக் கடக்குந்தோறும் நமக்கு துன்பம் உண்டாகிறது. அது நமக்கு நன்மை செய்யும்படி ஏற்பட்ட எச்சரிப்பு. இந்த எச்சரிப்பு நமக்கு அவசியம்வேண்டும். இல்லாவிட்டால் நமக்கு கிடைத்திருக்கும் பெரும்பாக்கியங்களெல்லாம் அவலமாய்ப் போய்விடும். நெருப்பிற்கு சுடுந்தன்மையுண்டல்லவா. அச்சுடுகையைத் தெரிவிப்பது நமது ஸ்பரிசம். சுடுந்தன்மையை ஸ்பரிசம் தெரிவிக்காமற்போனால் ஒவ்வொரு குழந்தையும் நிமிஷந்தோறும் தீய்க்கு இரையாகவேண்டிவரும். இந்த ஒரு திருஷ்டாந்தத்தைப்போல் எதிலும் பார்த்துக்கொள்ளலாம். இயற்கையின் நியமனத்தை நாம் கடக்கும்போதெல்லாம் நமக்கேதோவொரு நோய் உண்டாகி எச்சரிக்காமற்போனால் நன்மைக்கென்று ஏற்பட்டவைகளே நமக்கு பாதகமாய் முடியும். காருண்ணியக் கடவுள் நம்முடைய க்ஷேமதிற்காகவே நோயை யுண்டுபண்ணியிருக்கிறார். அவைகளின் பிரயோசனம் உடனுக்குடன் நமக்குத் தெரிகிறதில்லை. பின்னிட்டுத் தெரியவரும். கொப்புங் கிளையுமாய் செழித்திருக்கும் மரத்தை யொருவன் வெட்டுவதைக் கண்டபோது இன்னதற்காக வெட்டுகிறானென்று நமக்குத் தோன்றுகிறதில்லை. அம்மரத்தினின்று பிறகு சுந்தரமான பெட்டியோ பேழையோ உண்டாகிறது. அதைக்கண்டபோது சந்தோஷமடைகிறோமல்லவா? அதுபோல துக்கங்கள் நம்மைவாட்டி மனதில் சிறுகச்சிறுக ஏறியிருந்த அசுத்தமெல்லாம் போக்கி நற்குணங்களை நம்மில் வெளியாகும்படி செய்தபோது துக்கங்கள் நமக்கு பாக்கியமாக விருந்ததாக அறிவோம்.

கற்பிற்கு அரசியான சீதாப்பிராட்டிக்கு நேர்ந்த துன்பங்களினாலல்லவா அக்குணமணிக்கு என்று மழியாப் புகழுடம்பு உண்டாயிற்று. போகபாக்கியங்களை அனுபவித்து கா

* இஷ்டப்படிகிற விதம் செய்யும் சுதந்திரம்.

† அக்கிரமமாய் செலவழித்தல்.

* மனதை அடக்கி ஆளுதல்.

† திருஷ்டாந்தமாய்.

லங்கழித்து மாண்டுபோனவர்களுடைய தொகையை யாரால் சொல்லி முடியும். இவர்களில் உத்தமர்களாயிருந்த சிலரைப்பற்றி மாத்திரம் நாம் தெரிந்து கொள்வதற்கு மார்க்கமுண்டாயிருக்கிறது. இச்சிலருடைய சரித்திரத்தை கவனமாய்ப் படித்துப்பார்ப்போமானால் இவர்கள் யாவரும் துன்பத்திற்கு உள்ளானவர்களாகவே யிருக்கிறார்கள். ஒவ்வொரு நெறியைக் கைக்கொண்டவர்களாய் அந்நெறியைச் சாதிக்கும் விஷயத்தில் தாங்கள் பட்ட அல்லல்கள் கொஞ்சமல்ல. கற்பெனும் தன்னுயிரினும் சிறந்த ஆபரணத்தைக்காக்கும் பொருட்டு சீதாப்பிராட்டி பட்டபாட்டை ஆலோசிப்போமானால் நாம் இல்லற தருமத்தை நடத்துங்காலத்தில் நமக்குண்டாகும் கஷ்டங்களை துன்பமென்று சொல்ல வாய்கூசும்.

அதிர்ஷ்டவசத்தால் நமக்குக் கிடைத்திருக்கும் துரைத்தனத்தாலும் நாம் அடைந்திருக்கும் கல்விப்பயிற்சியினாலும் சித்த சுவாதீனத்தைமாத்திரம் கைக்கொண்டு நடப்போமானால், கூடியவரையில் நம் வாழ்நாளை இனியதாக்கிக்கொண்டு இகபரசுகங்களையடைய யாதொரு தடையுமிராது. மனுஷப் பிரயத்னத்தையும் கடந்து நமக்கு துன்பங்கள் வருங்காலத்திலும் மற்றெந்தக் காலத்திலும் அகமகிழ்பயிற்சி எப்படி செய்யவேண்டுமென்பதை சீதாபிராட்டியின் சரித்திரத்தைக் கொண்டே தெரிந்துகொள்ளலாம்.

அந்தஅம்மணி தனது ஆபத்துக்கால ஆரம்பமுதல் தான் நடந்துகொண்ட திவ்விய சரித்திரத்தை வெகுசுருக்கமாக நினைவுகூர்வோம்.

கைகேசியின் சூழலால் தன் நாயகன் காட்டுக்குப்போகும்படி நேர்ந்தபோது நாயகனுக்கு அரசுபோய்விட்டதே தனக்கு போகபாக்கியங்கள் இல்லையே என்கிறதாய்க் கொஞ்சமாவது துக்கிக்கவில்லை. ஆனால் எதற்காகத் துக்கப்பட்டார்களென்றால் தன்னை மாமனார்வீட்டில் சௌக்கியமாயிருக்கும் படியாயும் தான்மாத்திரம் காட்டுக்குப் போவதாயும் தன் நாயகர் சொன்னசொல் தன் காதில் நாராசம்போல் துளைத்துச்செல்ல இப்படியும் சொன்னாரல்லவா வென்று விம்மி விம்மி அழுதார். உடனே நாயகரைப்பார்த்து தேவரீர் என்னவார்த்தை சொன்னீர்கள்! சக்கிரவர்த்தி தங்களை காட்டுக்குப்போகும்படி கட்டளையிட்டால் அடியாளுக்கு வேறே கட்டளை வேண்டுமோ. பர்த்தா அநுபவிப்பதை மனைவியும் அவருடன் அநுபவிக்கிறவளன்றோ? ஆகையால் தங்களைவிட்டுப் பிரிந்திருக்க கொஞ்சங்கூட சகியேன். தங்களுடன் இருப்பதே எனக்கு சுவர்க்கம். தங்களுடைய தோழமையினால் காட்டிலுள்ள தர்ப்பை மூங்கில் முதலியவை இலவம்பஞ்சு மான்தோல் முதலியவைபோல் மிருதுவாகும். தேவரீருடன் புல்லின்மேல்படுத்த போதிலும் பஞ்சணைமேல் படுப்பது போலாம். தேவரீருக்கு கிடைக்கும் உணவு கனியானாலும் கிழங்கானாலும் மற்றெதுவானாலும் எனக்கும் அதுவே அமிர்தம்போலாம். தாயையாயினும், தந்தையையாயினும், நம்மில்லத்தையாயினும், அங்கனுபவித்த சுகங்களையாயினும் கருதி சோகங்கொண்டு தங்களை மனம்நோவும்படி செய்யேன், என்று பலவாறாகச் சொல்லியும் தன்னை உடன்கொண்டு செல்ல இராமருக்கு இஷ்டமில்லையென்று தெரிந்து, தான் சீக்கிரம் உள்ளேபோய் மரவுரியொன்றை அணிந்து இராமரது கையைப்பற்றி நின்றார்கள்.

காட்டில் இவர்கள் எப்படி காலங்கழித்தனர்?

* பஞ்சவடி தீரத்தில் கோதாவரிநதியோரம் அழகானசோலையில் இலட்சுமணர்கட்டிய ஓர் † பர்ண சாலையில் இராமரும் சீதையும் இருந்துகொண்டு இலட்சுமணர் காலையில் கனிகிழங்கு முதலியவற்றைக்கொண்டுவர சீதாபிராட்டி நதியில் ஸ்நானம் செய்துவிட்டு கிடைத்த பண்டங்களைச்சமையல்செய்து, பர்த்தாவுக்கும் மைத்துனருக்கும் அன்னம்படைத்துதானும் உண்டு சந்

* ஐந்து ஆலமரமுள்ள கரை.

† இலைகளால் அமைத்த வீடு.

தோஷமாக நாயகருடன் விளையாடிக்கொண்டிருப்பார். அச்சோலையில் நதியோரத்தில் இருவரும் உலாவிக்கொண்டிருக்கும்போது அவர்களைக்கண்டு ஒதுங்கும் அன்னத்தின் நடையைக்கண்டு இராமர் சீதையினுடைய நடையையும் அதையும்பார்த்து சிரிப்பதும், ஆண்யானை நதியில் நீர் அருந்தி திரும்பிப்போம்போது அதனது பெருமித நடையைப்பார்த்து தன்னுடன் கைகோர்த்துத்திரியும் இராஜயானையாகிய இராமருக்கு சமானம் யாரிருக்கிறாரென்று செறுக்குற்று சீதாபிராட்டி நகைப்பதும் உண்டு. அழகான இறகுகளைவிரித்து ஆடும் மயில்களையும், மான்களையும், பூங்கொம்புகளையும், மலைவீழருவிகளையும், இன்னும் இச்சிறுவிடத்தில் சொல்லக்கூடாத அளவிறந்த அற்புதக்காட்சிகளையுங் கண்டு ஒருவருக்கொருவர் காட்டிக்கொண்டு அகமகிழ்வார்கள். மாலையில் சூரியன் அஸ்தமிக்கும்போது தாமரைகள் குவிவது இயற்கை. இவர்களது கைகளாகிய தாமரைகளும் பகவதாரகனைநிமித்தம் தம்சிரமேற்குவியும். இவ்வாறாக தங்களைச் சூழ்ந்துள்ளதைக்கண்டு களிக்கும் இவ்வுத்தமபிறவிகளுக்கு, தங்கள் நாட்டைவிட்டதினாலாவது, அரசிழந்ததினாலாவது யாதொரு துன்பமுமில்லை. அரசுசெய்வதினால் ராஜாவுக்கு அதிக மனக்கவலையுண்டு. இராமருக்கு இவ்விடத்திலே யாதொரு கவலையுமில்லாமல் இருவரும் சுகமாகவிருந்தார்கள்.

இவ்வித சுகத்தைக்கெடுக்க பாவி இராவணன் வந்தான். பிந்தி நடந்ததை இங்குநான் சொல்லவேண்டியதில்லை. நான் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு சம்பந்தப்படும்வரையில் பேசவேண்டியவளாய் இருக்கிறேன். ஆகையால் நான் இங்கு குறிக்கவேண்டியது என்னவென்றால், நம்வீடுகளில் அற்பவிஷயங்களாகிய துணி மணிக்கு எவ்வளவு சண்டை, கோபதாபம், மனக்கடுப்பு! இவற்றால் சுகமிழந்து எல்லாம்போய்விட்டதுபோல் மூலையில் படுப்பது எவ்வளவு தாழ்வு பாருங்கள்.

அரசு இழந்து காட்டிற்குவந்த தன்னுடைய நாயகருடன் தானும் மரவுரி தரித்துக்கொண்டு காட்டில் வசிக்கும்போது அங்கு பெற்றதைக்கொண்டு அவர்கள் எவ்வளவு சந்தோஷமுடையவர்களாயிருந்தார்கள். அவர்களுக்குக் கிடைத்த உணவாதிகளை யுண்டு தம்மைச்சூழ்ந்து எப்பக்கத்திலுமுள்ள ஈசனது அற்புதச் செய்கைகளைக்கண்டு அகமகிழும் சாதனையால் ஆநந்தமடைந்திருந்தார்கள்.

தமக்குக் கிடைத்ததைக்கொண்டு சுகிக்க அறியாத ஜனங்களுக்கு எல்லாப் பாக்கியங்களும் நிறைவாயிருந்தாலும் அவர்கள் நித்திய தரித்திரர்களே. பெற்றதைக்கொண்டு அகமகிழ்பவர்களுக்கு சக்கிரவர்த்திகளும் ஈடாகார் என்று சிறிது பழக்கத்தினால் சுவாநுபவமாய் நாமே யறியலாம் என்கிற உண்மையை சீதாபிராட்டியின் சரித்திரம் சாட்சி பகர்கிறது.

இன்னொரு சிறந்தகுணத்தை நமது சீதாபிராட்டியினிடத்திலிருந்து நாம் கற்கவேண்டியவர்களாயிருக்கிறோம். தான் இலங்கையில் சிறைப்பட்டிருந்த ஏகாந்த நிலையிலும்,

“ராஜ்யம் உன்தம்பி பரதனை நீ காட்டுக்குப்போ” வென்று கைகேசிசொன்ன காலத்தில் சற்றாகிலும் மனம் வாடாமல், முன்னிலும் மூன்றுமடங்கு மலர்ந்தஇராமருடைய * முகாரவிந்தத்தை நினைத்து நினைத்து, சீதாபிராட்டி இவ்வளவு பெருமையான சுபாவம் அவரைத்தவிர மற்ற யாரிடத்திலுண்டு. இப்படிப்பட்ட பிராணநாதனைப் பிரிந்துவிட்டோமேயென்று துக்கித்தார்கள்.

இங்குள்ள அழகைப்பாருங்கள். சீதாபிராட்டி இராமருடைய பெருந்தன்மையைக்கண்டு மகிழ்ந்தது இவ்வளவு அவ்வளவல்ல. அவருக்கு தன் நாயகர்மீதிருந்த அன்பினால் இராஜ்யம்போனது லட்சியமாகவேயில்லை, தனது நாயகருக்கு அரசுபோக தன்னுடைய சுகங்களெல்லாம் போய்விட்டதே என்கிற தன் † சுபநலவாஞ்சையை முன்னிட்டு துக்கிக்காமல், அவரது குணநிசயத்தை நினைத்து நினைத்தல்லவோ துன்பப்பட்டார்கள். உத்தமர்களுடைய குணத்தை இங்கு நிதரிசனமாகக் காண்கிறோம்.

குணமுள்ள பதார்த்தங்கள் நமக்கிருந்து நம்மைவிட்டு நழுவினாலும், அவைகளில்லாமலிருந்தாலும் வருந்துவதினால் நமக்கு அதிக நன்

* முகமாகிய தாமரை.

† தன் சொந்த சுகத்தின் பொருட்டான ஆசை.

மையுண்டு. குணவழகின்மேல் நமது நாட்டம் எப்பொழுது செல்கிறதோ அப்போதே, மனத்தூய்மை நம்மில் உண்டாவதற்கு வழியுண்டாம். குணவழகை நாடாமல் அல்ப விஷயங்களில் நமது நாட்டம் சென்றுகொண்டிருந்தால் மனத்தூய்மையுண்டாகாது. துக்கம் அதிகரிக்கும். மனோசாந்தி நம்மை முற்றும் கைவிடும்.

துக்கங்களைப் பலமுறை நாமே வருவித்துக்கொள்ளுகிறோமென்பதற்கு இன்னொரு திருஷ்டாந்தமிருக்கிறது. நம்மில் நகைப் பயித்தியம் மெத்தவுண்டு. நாம்பெற்றிருப்பதுடன் திருப்தியடையாமல் ஏதோ வொன்றை சங்கல்பித்துக்கொள்ளுகிறது: அதிலேயே என்கிறதினால் உள்ள சந்தோஷம்போய் மனக்கடுப்பு உண்டாகிறது. இது நம்மோடு போவதில்லை. நாயகர்களையும் பிள்ளைகளையும் பாதிக்கும். பூணும் ஆபரணம் வாழ்க்கைக்கு இன்றியமையாததல்ல. ஊண் உறக்கமில்லாமற்போனால் காயம் அழிந்துபோம். நகையில்லாமற்போனால் நேர்வது ஒன்றுங்காணோம். இருப்பதினால்மாத்திரம் பலமுறை கள்ளரால் தீங்குண்டாகிறது. இதினுடைய இலட்சணம் இப்படியிருந்தும் இதில் ஏதோ ஒரு குறை நேர்ந்ததாக வைத்துக்கொண்டு, இதொன்று இல்லாமையால் உள்ள அநேகம் பாக்கியங்களை மறந்து நாம் துக்கிக்கிறதென்றால் நம்மில் எவ்வளவு அறியாமை வெளியாகிறது. சீதாபிராட்டி தான்பிறந்த விடத்தும் புகுந்தவிடத்தும் தனக்குண்டான உலகத்தை விலைக்கு வாங்கத்தக்க எவ்வளவு சிறந்த ரத்தினாபரணங்களையெல்லாம் கழட்டி எறிந்துவிட்டு, நாயகரது தோழமையொன்றிருந்தால் போதுமென அவரது கையைப்பற்றிக்கொண்டு, நுழைவதற்கு அரிதான காட்டில் அவருடன்சென்று அங்குள்ள காட்சிகளைக்கண்டு இருவரும் ஆநந்தித்துக்கொண்டிருந்தார்கள். நமக்கு எல்லாமிருந்தும் நம்மனம் கல்பித்த குறையேயன்றி உள்ளதல்லாத ஓர் குறையை நினைத்துக்கொண்டு நம்மைச் சூழ்ந்துள்ள அநேக பாக்கியங்களை மறந்து நமக்கில்லாததைப் பெரிதாக வெண்ணுகிற நமக்கு சுகம்கிடைப்பது அருமை. நாம பெற்றிருப்பவைகளைக்கொண்டு ஆநந்திக்கப் பழகுவோமானால், நமக்குண்டாகும் சுகத்திற்கு அளவில்லை. நாம் பெற்றிருக்கும் நன்மைகளை உற்று உணர்வோமானால், அவை அநந்தமென்று ஏற்படும். நம்மைச்சூழ்ந்து எப்பக்கமும் கிடக்கும் ஈசனுடைய அற்புதச்செயல்கள் அளவிறந்தனவாயிருக்கின்றன. அவைகளைக்கண்டு மகிழப்படியான சாதனம் நம்மில் வேண்டும். ஞானாநந்தம் அளிக்கும் நூல்கள் பலவுள. இவற்றால் நமக்குள் உள்ளக்கிளர்ச்சியை பயிற்சிசெய்துகொண்டு நம்மையும் நம்மைச் சூழ்ந்தவர்களையும் சந்தோஷிப்பிக்கச் செய்யவேண்டுமேயன்றி கல்பனாகுறைகளை வைத்துக்கொண்டு நம்மையும் நம்மவர்களையும் துக்கத்திற்குள்ளாக்குவது சுத்த அநாகரீகமும் ஈசனிடத்து அன்பு அற்றவர்களின் செய்கையுமாம். நிமிஷந்தோறும் இலவசமாக பரமவள்ளலிடத்திலிருந்து பெறும் நன்மைகள் எத்தனை! சூழ்ந்திருக்கும் அவரது அற்புதச் செய்கைகளைப் பார்த்துக் களிக்க கண்களைப் பெற்றிருந்தும், குருடனுக்கு அவைகள் பயன்படாமலிருப்பதுபோல நாம் அவைகளை பயன்படுத்திக்கொள்ளாமையால் நமக்கும் பிரயோசனமற்றவைகளாகவே யிருக்கின்றன. சுகம் வேண்டுவது நமது எண்ணமானால் எதுசெய்தால் அந்த சுகம் நமக்குக் கிடைக்குமோ அதைச்செய்யாமல் சுகத்தையிழக்கும் செய்கையல்லவோ நம்மில் நிரம்பியிருக்கிறது.

"தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க்
கல்லால் மனக்கவலை மாற்ற லரிது."

என்று திருவள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்தருளியவாறு ஈசனிடத்து நம்மை சமீபமாகச் சேர்ப்பிக்கும் சாதனையினாலல்லாமல் வேறுவிதத்தினால் நமது குறைதீராது. உள்ளக்கிளர்ச்சியுண்டாகாது. பார்ப்பாருண்டானால் நிமிஷந்தோறும் நம்மை விருந்துண்டு களிக்கும்படி செய்யும் அவரது சிருட்டிப்பொருள்களைக் கண்டு களிப்பதினாலும் ஆத்துமாநந்தத்தைத் தரும் நூல்களைப் படிப்பதினாலும், நல்லவர்களுடைய சாவகாசத்தாலும் எல்லாரிடத்திலும் அன்பைப்பாராட்டி நமது சுயநலவாஞ்சையை விட்டொழிப்பதினாலும், நமக்கு சுகங்கிடைக்குமேயன்றி இவைகளல்லாத மார்க்கங்களில் சுகமடைவோமென்பது பொய்யெனப் பெரியோர் அநுபவசித்தமாய் வெளியிட்டிருக்கிறார்கள். ஆகையால் நாமும் பெற்றதைக்கொண்டு அகமகிழ் பயிற்சிசெய்ய பிரயாசைப்படுவோம். நமக்கு ஜெகதீச னருள்புரிவாராக.

"PEARLS OF FAITH"

SELECTED AND STRUNG TOGETHER FOR PARENTS AND CHILDREN TO WEAR.

(From the Sayings of St. Vemanna.)

ஆந்திரபாஷையில், பிரமஞானியும், அருட்கவியுமாகிய,

வேமன்ன மகாகவி அருளிச்செய்த

பத்யங்கள்.

(Third Series.)

சிவத்தைக் கண்டமனம் மற்றொன்றில் தங்காது.

1. வானமுதம் நன்கு வயிறார மாந்தியபின்
ஆனமுதத் தாசையடுக்குமோ—தானதுபோல்
எங்குநிறை சிவத்தை யின்னருளாற் கண்டமனம்
தங்குறுமோ மற்றொன்றிற் றான்.

(இ-ள்.) தேவாமிர்தத்தை வயிறார உண்டபின், ஒருவனுக்குப் பசுவின்பாலில் விருப்பமுண்டாமோ? அதுபோல, சர்வவியாபகனான சிவஸ்வரூபத்தைத் தரிசித்தபின் மனம் மற்றொன்றைத் தியானிக்குமோ? தயானியாது.

தியானமில்லாத பூசை பயனற்றது.

2. இதயத் திலங்குமரு ளீசனை யுன்னாமல்
மதியற்றீர் வன்சிலையை வைத்துப்—புதுமலர் தூய்ப்
போற்றுகின்றீரென்னோ புதுமையதிற்கண்டீர்
ஏற்றமுயிர் தன்னிலுமே யின்று.

(இ-ள்.) இருதய கமலத்தில் விளங்கும் அருட்சொரூபியாகிய, ஈசுவரனைத்தியானிக்காமல், மதியீழந்து சிலாவிக்கிரகங்களைப் பூசிப்பதேன்? உயிருள்ள பிராணிகளைக்காட்டிலும், அவ்விக்கிரகங்களில் என்ன புதுமையைக்கண்டு அவ்வாறு வணங்குகின்றீர்.

யோகியின் தன்மையை உலகத்தார் அறியமாட்டார்கள்.

3. மாயோகி தன்பெருமை மாநிலத்தாரோராமல்
ஆயவகை யெல்லாம் அவமதிப்பார்—தூயசெழு
வானமுதத் தின்சுவையும் மற்றவற்றின் புன்சுவையும்
தானறியுமோ கரந்தான் சாற்று.

(இ-ள்.) மகாயோகியின் பெருமையை ஞானமில்லாத லோகஜனங்கள் அறியாமல், பலவிதமாக இகழ்ச்சிசெய்வார்கள். எப்படியெனில் சுவைமிகுந்த, தேவாமிர்தத்தின் இனிமையையும், மற்றைப்பொருள்களின் சுவையின்மையையும், உண்ணும் நாவேயன்றிக் கையானது அறியவல்லதோ. அறியமாட்டாதன்றோ என்றபடி.

மனத் தூய்மையின் சிறப்பு.

4. உட்டூய்மை யோடு முனூற்றுமொரு நல்வினைதான்
எட்டுணைய தேனு மிழிபன்றே—மட்டொடும
பூங்குழலா யாலின் பொருந்து விரையெத்துணைபார்
ஆங்குமர மெத்துணையாமாய்.

(இ-ள்.) நிர்மயமனத்தோடு செய்தசத்கர்மம் சிறிதாயினும் பெரும்பயனைவிளைக்கும். ஆலம் விதையானது சிறிதாயினும் அதிலிருந்துண்டாகும் மரம் எவ்வளவு பெரியதுபார்.

சிரவண மனனாதிகளாலே ஞானத்தைப் பெறவேண்டும்.

5. சொல்வார் சொற்கேட்டுத் துகளறவே யாராய்ந்து
நல்வகையி னுண்மைநலம் தெரிவான்—வில்வளைய
வாங்கினாலன்னவெழில் வாணுதலாய் வாய்ந்திடுமால்
தீங்கிலா ஞானமெனத் தேர்.

(இ-ள்.) உபதேசித்தற்குரிய குருமுகமாக விஷயங்களைக் கிரமமாகக்கேட்டு, அதன்பின் தானாக அவற்றைச் சிந்தித்து, உண்மையைத் தெளிந்துகொள்பவன் மெய்யுணர்ச்சியை அடைவான்.

உருவச் சிறுமையைக்கண்டு அவமதித்தல் ஆகாது.

6. கண்ணுக்கு மிக்ககறுப்பா யிருக்குமிள
குண்ணச் சுவைநன் குறைத்திடுமால்—ஒண்ணுதல்சேர்
பெண்ணமுதமன்னாய் பிறங்குமறிவிற் பெரியோர்
வண்ணமுமிற் றென்றேமதி.

(இ-ள்.) மிளகு கண்ணுக்குச் சிறந்துக் கறுப்பாயிருந்த போதிலும் வாயிலிட்டுச் சுவைக்க மிகவும் உறைப்பாயிருக்கும். அதுபோலவே அறிவிற் சிறந்த பெரியோர்களும் பார்வைக்கு அறிவில்லாதவர்போலத் தோன்றினாலும், உண்மையில் மகாமேன்மையுடைய ராயிருப்பார்கள்.

இதுவுமது.

7. கத்தூரி நோக்கிற் கருத்திருப்பினும் வாசம்
எத்திசையும் வீசியினிதாகும்—முத்தம்
தனையொத்த வெண்ணகையாய் சாற்றுமிதுபோலாம்
கனமுற்றார் தங்குணமும் காண்.

(இ-ள்.) கஸ்தூரியானது பார்வைக்குக் கறுப்பாய் விகாரமாயிருந்தாலும், நான்கு திசையும் கமகமவென்று பரிமளிக்கும்; அதுபோலவே மேலானவிவேகிகளின் தன்மையும் ஆகும்.

ஞானியரியல்பு.

8. நீர்பிரித்துப் பாலுண்ணு நேரறிவதம்ஸமலால்
ஓர்பறவைவேறறுணர்ந்திடுமோ—தார்குழலாய்
தேடரிய வீசனையும் செய்தசிருட்டியையும்
மூடரறி வாரோ மொழி.

(இ-ள்.) நீரைப்பிரித்துப் பாலையுண்ணும் வித்தை அன்னபட்சிக் கல்லாமல் மற்றொன்றுக்குத் தெரியுமோ தெரியாதல்லவா, அதுபோலவே கர்த்தாவாகிய ஈசனையும் காரியமாகிய பிரபஞ்சத்தையும் ஞானிகள் விவேகித்தறிவார்களேயன்றி, அஞ்ஞானிகள் அறியமாட்டார்கள்.

யோகி உடலைக்குறித்து வருந்த மாட்டான்.

9. ஆறுகடந்தப்பாலடைந்தார்க்குத் தாமுன்னம்
ஏறுபடகென்னாகி லென்னாமே—மாறினலாய்
உன்னரிய பேரின்பத் துற்றவொரு யோகிக்குத்
தன்னுடலா லென்கவலை தான்.

(இ-ள்.) ஆற்றைக்கடந்து மறுகரையிற் சேர்ந்தவர்களுக்குத் தாமேறிச்சென்ற படகுபின்பு எப்படிப் போனால்தான் என்ன விசாரம். அதுபோல நினைத்தற்கரிய பேரானந்தத்தை யடைந்த யோகிக்கு அதனை யடைதற்குச் சாதகமாயிருந்ததேகம் பின்பு எப்படியானால் தானென்ன. அதைப்பற்றி என்னவிசாரம்.

மனக்குற்றம் நீங்கின் பிரமஞானம் உண்டாகும்.

10. மாசகன்றே யுள்ளத்து மாண்புற் றாலல்லாமல்
ஈசனுருவார்க்கு மிலங்காதே—பாசிழையாய்
காமாதியாறும் கடிந்தவுடன் மெஞ்ஞானம்
ஆமேநம் கையினகம்,

(இ-ள்.) மனக்குற்றங்கள் நீங்கினாலல்லாமல் ஈசனைத்தரிசிக்கமுடியாது. காம முதலான ஆறு குற்றங்களும் நீங்கின் உடனே பிரமஞானம் உள்ளங்கை நெல்லிக்கனிபோலச் சித்திக்கும்.

ஆசை நீங்கின் முத்தி உண்டாகும்.

11. ஆசைக் கயிற்றை யறுத்தெறிந்தாலல்லாமல்
பேசுற்றமுத்தி பெறலரிதே— ஆசைதனக்
காளானா மாள்வாரகத்திரைக் காசைப்பட்டு
மாளுமெலி போலேமதி.

(இ-ள்) ஆசாபந்தத்தை நீக்கினாலல்லாமல் ஒருவர்க்கு முத்தியடைய வொண்ணாது. எவர்கள் ஆசையால் கட்டுண்டிருக்கிறார்களோ அவர்கள் கூட்டில்வைத்த இரைக்கு ஆசைப்பட்டு மடிகின்ற எலிபோல மடிவார்கள்.

சிறியோர் எங்குபோனாலும் பெருமையடையார்.

12. கொங்கணம் போனாலும் நாய் கோளரியாமோ காசி
அங்கணையப் பன்றி கரியாகுமோ—நங்காய்வண்
சிந்தை நலனில்லாச் சிறியார்தாமெங்குறினும்
அந்தணராகா ரென்றறி.

(இ-ள்) கொங்கண தேசம்சென்றாலும் நாய், நாய் தான் சிங்கமாகமாட்டாது. காசிக்குப்போனாலும் பன்றி, பன்றி தான் யானையாகமாட்டாது. அதுபோல கெட்ட புத்தியுள்ள கீழ்மக்கள் எங்குசென்றாலும் மேன்மக்களாக மாட்டார்கள்.

இறத்தலைக் குறித்துவிசனித்தல் அறிவீனம்.

13. மாண்டாரே மாண்டாரே யென்றுமனத்தயர்வுற்
றாண்டாண்டு தோறுமவலிப்பார்—பூண்டயங்கும்
கோற்றொடியே யுண்டோகொல் கூற்றினகொடும் பந்தம்
மாற்றமி லான்மாவுக்கு மற்று.

(இ-ள்) இறந்துபோனவர்களைக் குறித்து மெய்யுணர்வில்லாமல் இடைவிடாமல் வருந்துவார்கள். இறந்துபோனவர் யாவர்? அழியாப்பொருளாகிய ஆன்மாவுக்கு மரணமுண்டோ? இல்லையே.

எவர் யாதுதீங்கு செய்யினும் பொறுத்திருப்பவனேயோகி.

14. வைதிடினுந்தன்னை வருத்திடினு மாறொன்று
செய்கலனாய்ச் சும்மா இருந்திடுவான்—வையமிசை
ஆனனே தூயபரமான்மாவவன் பெருமை
தானார்க்குச் செப்பத்தரம்.

(இ-ள்) எவனொருவன் பிறர்தம்மை வைதாலும் வருத்தப்படுத்தினாலும் பிரதிசெய்ய எண்ணாமல் பொறுத்திருக்கின்றானோ அவனே பரமாத்மாவாவான். அவன் பெருமையை விவரிக்க யாரால் முடியும்?

சஞ்சலமில்லாமையே இன்பம்.

15. காற்றணையாத் தீபம்போற் கர்ச்சித்தெழுந்திரையின்
தோற்றமிலாத் தோயக்கடல்போலச்—சாற்றும்
மனத்துளக்கம் நீங்கி வதிவதே யின்பம்
தனக்கிணையில் முத்தியுமாம் தான்.

(இ-ள்) அவியாத தீபம்போலவும், அலையடங்கிய கடல்போலவும் மனோசஞ்சலம் நீங்கி நிச்சலமாயிருப்பதே இன்பம். முத்தியென்பதும் அதுதான்.

பழக்கத்தால் எந்தச்செயலும் எளிதாகும்.

16. ஒன்றியுரையாடிவர உள்ளத்தன் போங்கிடுமால்
தின்றுவர வேம்பதுவும் தித்திக்கும்—என்றும்,

பழகுதலாலெச் செயலும் பாரிலெளிதாகும்
மழை மதர்க்கண் மங்காய் மதி.

(இ-ள்) ஒருவரோடு அடிக்கடி பேசிப்பழகிவர சிநேகம் விருத்தியாகும். தினந்தோறும் வியத மாகத்தின்றுவர வேம்புகூடத் தித்திப்பாகத் தோற்றும். அதுபோலவே அப்பியாசத்தினாலே எவ்வளவோ கஷ்டமான காரியங்கள் கூடச்சுலபமாகும்.

லோபியர் செல்வம் எவ்வாறுமெனல்.

17. உண்ணாரே தாமும் உதவார் பிறர்க்கொன்றும்
கண்ணாகக்கைப் பொருளைக் காத்திடுவார்—எண்ணுங்கால்
கூட்டுந்தேனெல்லாம் குறவர் பறிகொள்ள
ஈட்டுந்தேனீப்போல் வாரீங்கு.

(இ-ள்) உலோபிகள் தாமும் அனுபவியாமல், பிறருக்கும் கொடாமல் சம்பாதித்த பொருள்களைக் கண்களைக் காப்பது போலவெகு பத்திரமாகக் காப்பாற்ற, அப்பொருளைக் கடைசியில் கள்வர் முதலானோர் அபகரித்துக் கொள்வார்கள். எப்படியென்னில் தாம் கூட்டிவைத்த தேனைத்தாமுண்ணாமல் மலைக்குறவர்கள் கொள்ளை கொள்ளக்கொடுக்கும் தேனீக்களைப்போல என்றபடி.

உதாரிகளின் செல்வம் எவ்வாறுமெனல்.

18. குறையாது நீடும் கொடைவல்லார் செல்வம்
இறையுமவர்க் கெய்தாதாஸின்மை—மறிவிழியாய்
மொண்டெடுக்கும் தோறும் முடியாமணற்கேணி
மண்டு புனலூறும் மதி.

(இ-ள்) கொடுப்பவர்களின் செல்வமானது கொடுக்கக் கொடுக்கச் சிறிதும் குறையாமல் வர்த்திக்கும். ஆதலால் அவர்களுக்கு தரித்திரம் என்பது உண்டாகாது. அதுபோலென்னில் மணற்கேணியின் நீரானது இறைக்க அதிகமாக ஊறும் தன்மைபோல என்றபடி.

கீழ்மக்கள்மனம் எவ்விதத்தாலும் இரங்காது.

19. பேதமற்ற கல்லைப் பிதிர்த்துக் தகர்த்திடலாம்
பூதரத்தைத் தூளாய்ப் பொடித்திடலாம்—ஓதும்
அருள்மறுத்த வெய்ய ரகங்குழைக்கு மார்க்கம்
ஒருவிதத்து மில்லையுணர்.

(இ-ள்) உடைத்தற்கரிய கருங்கல்லையும் முயற்சியினால் உடைத்துத் தகர்த்து விடலாகும். மலையையும் தூளாய்ப்பொடித்து விடலாம். ஆயினும் கிருபையில்லாத வஞ்சகர்களுடைய கடினசித்தத்தை இளகச்செய்யும் உபாயம் மாத்திரம் இல்லை.

அருள்வலியில்லையாயின் மற்றவலத்தினால் பயனில்லை.

20. எழிலும் இளமையுமற் றின்புடனே கண்டு
கொழுநனுகவானேற் கொன்னே—கழிவதுபோல்
ஆனபரன்றாய அருளொன் றிலையாகில்
மானவருக் கென்னும்வலி.

(இ-ள்) ஒரு பெண்ணினது அழகையும் இளமையையும் கண்டு கணவன் சந்தோஷியடையாவிடின் அவை நிஷ்பலமாகக் கழிவதுபோல பரமேச்வரன் அருளைப் பெறாதாருக்கு அவர் பெற்றிருக்கும் மற்ற பலங்கள் ஒன்றும் பிரயோசனப்படமாட்டாது.

செல்வம் மனிதர்க்குக் கேடுதியாகும்.

21. செல்வம் பெருகப்பெருகும் செழித்தாசை
சொல்லுமனத் தாசையினாற் றுர்க்குணமாம்—செல்வமது
குன்றக் குறைந்திடுமாலாசை குறைந்திடவே
நன்றில் குணம்தானும் கெடும்.

(இ-ள்) செல்வமானது ஒருவர்க்கு வர்த்திக்க வர்த்திக்க மேன்மேலும் பொருளாசை வர்த்திக்கும்; அவ்வாசையினாலே அநேக துர்க்குணங்கள் உண்டாகும். அன்றிச் செல்வம் குறைதலினாலே ஆசையும் குறைந்துபோம். ஆசை குறைதலினாலே தீக்குணங்களும்கெடும்.

CHARACTER SKETCH : THE STORY OF PROCOVIA.

பராஸ்கோவியாவின் சரித்திரம். குணவலி விளக்கம்:

(57-வது பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாறு பிரயாணஞ் செய்யுங்காலையில் ப்ராஸ்கோவியாவுக்கு ஒருதடவை பெருந்திகில் ஒன்று உண்டாகியது. ஒரு கிராமத்தில் அவள் வீடு வீடாய்த்திரிந்தும் ஒருவரேனும் இராத்தங்க இடம் கொடுக்கமாட்டோமென்று விட்டார்கள். அப்போது, ஒரு கிழவன் முதலில் வெகு கடுமையாய் அவளைக்கிட்ட வொட்டாமல் துரத்திவிட்டவன் பின்பு அவளை வலியவந்து அழைத்தனன். அவளுக்கு அவன் முகமும் பார்வையும் பிடிக்கவேயில்லை. ஆயினும் என்ன செய்வாள்? அவளுக்கு வேறே கதியில்லை. ஆதலால் அவனுடன் அவள் வீட்டுக்குச் சென்றனள். அங்கு அவன் மனைவி அவனிலும் பார்வைக்குக் கொடியவள் போலிருந்தாள். அவள் உள்ளே நுழைந்ததும் அக்கிழவன் வாசற்கதவை அடைத்துத் தாழ்ப்பாள் போட்டுவிட்டான். அங்கு அவர்கள் நுழைந்த அவ்வொரு அறை தவிர வேறே இடமில்லை. அதில் விளக்குக்கூட இல்லை. சிறு குச்சிகளைச் சூழ்ந்துபோலக் கட்டிக் கொளுத்திச் சுவர்வங்கில் நொழுந்தியிருந்த கள்ளி வெளிச்சமன்றி வேறில்லை. அவ்வெளிச்சத்தில் சுற்று முற்றும்பார்த்த போது ப்ராஸ்கோவியாவுக்கு அவ்விரு கிழங்களும் தன்னைப் பயங்கரமாக உற்றுப்பார்த்துக்கொண்டிருப்பதுபோலத் தோன்றியது.

பின்பு அவர்கள் அவளை நோக்கி "நீ எங்கிருந்து வருகிறாய்?" என்றனர். அதற்கவள்: "நான் இஸ்கிமிலிருந்து வருகிறேன். பீடர்புரிக்குப் போகிறேன்" என்றாள். "ஆனால் உன்னிடத்தில் வழிச்செலவுக்கு வேண்டியபணம் இருக்கவேண்டுமே" என்றார்கள். "இல்லை, அரை ரூபாய்க்குள்ளே தான் இருக்கிறதென்றாள்" அப்போது கிழவி "சுத்தப்பொய், பணமில்லாமல் அத்தனைதூரம் ஒருவரும் போகமாட்டார்கள்" என்றாள். அவள் தன்னிடத்தில் அதற்குமேல் இல்லையென்று என்ன சொல்லியும் அவர்கள் நம்பாமையினாலே அவளுக்குக் கோபமும் பயமும் பொறுக்கமுடியாமல் கண்ணீர்விட்டு அழாதவண்ணம் வருந்தினாள்.

கடைசியில் அவர்கள் கொஞ்சம் உருளைக்கிழங்குகள் சாப்பிடக்கொடுத்து கணப்போரமாக ஓர் திட்டாணியில் படுத்துக்கொள்ளச் சொன்னார்கள். தன் பணத்தை வேண்டுமானால் எடுத்துக்கொண்டு தன்னை கொல்லாமலிருக்கட்டும் என்று கருதி தன் மேற் போர்வையையும் மூட்டையையும் தனியே எடுத்து வைத்துவிட்டுக் கடவுளை உட்கனிந்து பிரார்த்திதுப் படுத்துக்கொண்டாள். அவள் தூங்குகிறாளென்று அவர்களுக்குத் தோன்றியதும் அவர்கள் குசு குசுவென்று பேசத் தொடங்கினார்கள். கிழவன், "இவளிடத்தில் அவசியம் பணமிருக்கவேண்டும். நோட்டாக மாற்றி வைத்துக்கொண்டிருக்கிறாள் சந்தேகமில்லை" என்றான். கிழவி, "அவள் கழுத்தில் கயிறொன்று கட்டியிருக்கக் கண்டேன். அதில் சிறு பையொன்று கட்டித் தொங்கவிட்டிருந்தது. பணம் அதில்தான் இருக்கவேண்டும்," என்றாள். பின்பு முன்னிலும் மெதுவாக ஏதோ பேசிக்கொண்டு "இவள் இங்கே வருவதை ஒருவரும் பார்க்கவில்லை. இவள் ஊரில் இருக்கிற சங்கதியே ஒருவருக்கும் தெரியாது," என்றார்கள். அதன் பின் அக்கிழவி திட்டாணிமேல் ஏறி வருவதைப் பயத்தால் நடுங்கிக்கொண்டிருக்கும் அப்பெண் கண்டு "மறுபடியும் என்னை ஏன் உபத்திரவிக்கிறாய்? என்னிடத்தில் பணமில்லை! என்னைக் கொன்றுவிடாதே:" என்று வேண்டிக்கொள்ளவும் அக்கிழவி அதற்கொன்றும் பதில் பேசாமல், அவள் கழுத்திலிருந்த

பையைப் பிடித்திழுத்து அவள் புடவை யெங்கும் தொட்டுத் தொட்டுப்பார்த்து அவள் கால் சப்பாத்தையும் பிடுங்கிப்பார்த்து கைகளையும் திறந்து பார்த்து ஓரிடம் பாக்கியில்லாமல் கேசாதிபாதம் பரிசோதித்தாள். கடைசியில் பையில் அநுமதி பத்திரத்தைத் தவிர வேறொன்றுமில்லாமையால் அவளை அவள் பாட்டில் விட்டு விட்டுத் தாங்களும் படுத்துக் கொண்டார்கள். ப்ராஸ்கோவியா சிறிது நேரம் உடம்பு இலை இலையாய்ப்பறக்க நடுங்கிக்கொண்டிருந்து, பின்பு அவர்கள் விடும் மூச்சினால் அவர்களிருவரும் நித்திரை செய்கின்றார்களென்றறிந்து தானும் தூங்கத் தொடங்கினாள். பொழுது விடிந்து அக்கிழவி தன்னை எழுப்பும் வரையில் எழுந்திருக்கவில்லை. காலையில் அவ்விருவரும் இராத்திரியிலும் அதிக விசுவாசமாகப் பேசி அவள் வரலாற்றை விசாரித்து அவளுக்கு வேண்டிய உணவுகளைக் கொடுத்து உபசரித்துத் தாங்கள் இராத்திரியில் அவளை அவ்வாறு பரிசோதித்ததற்குக் காரணம் அவள் ஒருவேளை திருட்டு நடக்கையுள்ள பிசகு காரியோ என்னும் சந்தேகத்தினால் செய்ததன்றித் தங்களுக்கு அவள் ஸொத்தை அபகரிக்கவேண்டும் என்னும் எண்ணம் சற்றும் இல்லை என்று வற்புறுத்தினார்கள். ப்ராஸ்கோவியா அவ்வீட்டில் க்ஷணப்பொழுதேனும் இருக்க இஷ்டமில்லாமல் உடனே புறப்பட்டு பிரயாணமாயினாள்.

அவள் தன் பணப்பையைத் திறந்து பார்த்ததும் அதில் இன்னம் அரை ரூபாய்க்காசு அதிகம் இருந்தபோதிலும் அவர்கள் தன்னைக் கொல்ல உத்தேசித்தார்களென்பதே அவளுடைய முழுநம்பிக்கை. ஆதலின், அந்தக் கொடிய ஆபத்திலிருந்து தன்னைக் காப்பாற்றினதற்காகக் கடவுளைக் கொண்டாடினாள்.

பின்னொரு தடவை அவளுக்கு இன்னொரு பயமுண்டாகியது. அவள் ஒருநாள் காலையில் ஒரு கிராமத்தைவிட்டுப் புறப்பட்டுப் பிரயாணமானதும் அவ்வூர் நாய்கள் எல்லாமாய்ச் சேர்ந்துகொண்டு அவளைத் தொடர்ந்து வெள்வெள்ளென்று குரைத்து அவள்மேல் விழுந்து கடிக்கவந்தன. கையில் இருந்த தடிக்கொம்பால் அடித்துத் தப்பிக்கொள்ள ஓடவும் அவைகள் முன்னிலும் பயங்கரமாய்க் குரைத்துக்கொண்டு அவளைத் துரத்தின. ஒரு நாய் அவள் துணியைக் கவ்வி இழுக்கவும் அவள் குப்பிரிக்கக் கீழே விழுந்து இனி நாம் பிழைக்கப்போகிறதில்லை என்று எண்ணிவிட்டாள். அவ்வேளையில் அவ்வழியாய்ப் போன குடியானவன் ஒருவன் அந்நாய்களைத் துரத்தியடித்து அவளைக் காப்பாற்றினான். நல்லவேளையாய் நாய்கள் அவளைத் துரத்தினவேயன்றிக் கடிக்கவில்லை.

அதற்குள்ளாகப் பனிக்காலம் வரத்தலைப்பட்டு எட்டுநாள் அகோராத்திரம் இடைவிடாமல் பெய்த பனியினால் அவள் முன்னோக்கிச் செல்லமாட்டாமல் ஓர் கிராமத்தில் தங்கிவிட வேண்டியதாயிற்று. பனிவிட்டதும் அவள் பிரயாணமாகப் புறப்பட அவ்வூரார், அக்கொடிய பனிக்காலத்தில் கால்நடையாக ஒண்டியாய்ப் பனிமேல் நடந்து செல்வது மகா பலசாலிகளான ஆண்பிள்ளைகளுக்கும் கூடப் பிராணஹானியாகும் என்றும், காற்றால் பனிநாற்புறமும் சிதறியடிக்கப்பட்டு வழித்துறை தெரியாமல் மறைத்துவிடும் என்றும் சொல்லி கிருஸ்த்மஸ் பண்டிகைக்காக ஏகாதருணன்புரி என்னும் பட்டணத்திற்குத் தானியம் முதலிய ஸாமான்களைக் கொண்டு செல்லும் வண்டிகள் வருகிற வரையில் அவளை அங்கு தானே நிறுத்திக்கொண்டார்கள். வண்டிக்காரர்கள் அவள் வரலாற்றைக் கேட்டுத் தங்கள் வண்டியில் அவளை ஏற்றிக்கொள்ள உடன்பட்டாராயினும், அவள் உடை பனிக்காலத்தில் பிரயாணம் செய்யத்தக்கதாய் இராமையினால் அவளை ஸாமான் கட்டியிருந்த கம்பளி யொன்றினால் போர்த்தியும் கூட

நாளாநாள் ஒரு ஜாகையில் வந்து சேர்ந்தபோது கடுங்குளிரினால் அவள் கன்னம் வெடித்துப் போயிருக்கக் கண்டார்கள். அவ்வண்டிக்காரர்கள் அதற்கு ஏதோ சிகிஸ்சை பண்ணித் தங்களாற் கூடின ஜாக்கிரதை எடுத்துக்கொண்டார்களாயினும் அவளுக்கு ஆட்டுத்தோல் போர்வை யொன்று இல்லாத பக்ஷத்தில் குளிரினால் அவள் விறைத்துப் பிழைக்கமாட்டாள். ஆதலால் அவளைக் கூட்டிக்கொண்டுபோதல் அஸாத்தியம் என்று சொன்னார்கள். அவ்வளவு நல்ல துணையை இழக்கவேண்டி வருகிறதேயென்று ப்ராஸ்கோவியா மிகவும் வருந்தினாள். அச்சாகையில் இருந்த ஜனங்களோ அவளைத் தங்களிடத்தில் வைத்துவிட்டுப்போக ஸம்மதியோமென்றார்கள். பின்பு வண்டிக்காரர்கள் தாங்கள் சந்தா செய்து ஒரு ஆட்டுத்தோற்போர்வை வாங்கிக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்களாயினும், அச்சாகையில் இருந்தவர்கள் தங்கள் போர்வையைக் கொடுத்துவிட்டால் தங்களுக்கு வேறொன்று எளிதில் ஸம்பாதிக்க முடியாதாதலின் விற்பனைக்குக் கொடுக்கமாட்டோம் என்று விட்டார்கள். அச்சத்திரத்தில் இருந்த வேலைக்காரியின் போர்வைக்கு அதன் கிரயத்தின் இரண்டு பங்கு கொடுப்பதாகச் சொல்லியும் அவள் உடன்படவில்லை. கடைசியில் ஒரு உபாயம் செய்யப்பட்டது. அவ்வண்டிக்காரர்களில் ஒருவன் “இப்பெண்பிள்ளை என்னுடைய போர்வையை போர்த்துக்கொள்ளட்டும் நாம் மயிலுக்கு ஒருதரம் நம்முடைய போர்வைகளை ஒருவர்க்கொருவர் மாற்றிக்கொள்ளுவோம்,” என்று சொல்ல, அவர்கள் எல்லோரும் சரியென்று அதற்குடன்பட்டார்கள். ப்ராஸ்கோவியா ஒருவன் போர்வையைப் போர்த்துக்கொள்ள அவன் ஸாமான் கட்டின படுதாவொன்றைத் தன்மேலிட்டுப் போர்த்துக்கொண்டு குரலெடுத்து உரக்கப் பாடினான். ஒவ்வொரு மயில் கல்லுக்கும் தம் போர்வைகளை வண்டிக்காரர்கள் மாற்றிக்கொள்ள அது அவர்களுக்கு வெகு வேடிக்கையாயிருந்தது. ப்ராஸ்கோவியாவோ தனக்காக அவ்வளவு உதவி செய்த வண்டிக்காரர்களுக்கு யாதும் குளிரினால் அசௌக்கியம் உண்டாகாமல் இருக்கும்படிக் கருணை செய்யக் கடவுளை வழிநெடுகத் தன் மனசுக்குள்ளே பிரார்த்தித்துக் கொண்டே சென்றாள்.

ஏகதருணன்புரியில் அவர்கள் தங்கின சத்திரத்தில் ஒருவள் அவ்வூரில் உள்ள உதாரகுணமுள்ளவர்களின் பெயர்களை ப்ராஸ்கோவியாவுக்குச் சொல்லி அவர்களில் மிலின் என்னும் ஒரு துரைமகளைப் பற்றி விசேஷமாகச் சிலாகித்துச் சொல்ல, ப்ராஸ்கோவியா தான் மேலால் பிரயாணம் செய்யவேண்டும் விதத்தைப்பற்றி அவரது ஆலோசனையை மறுநாள் அவரிடத்திற் சென்று கேட்போமென்று நிச்சயித்துக் கொண்டாள். அத்தினம் ஞாயிற்றுக்கிழமையானதினால் முதலில் கோயிலுக்குப் பிரார்த்தனை பண்ணிவருவோமென்று செல்ல, அங்கு அவளுடைய வழிநடந்த உடையையும் அன்புமேலிட்டால் அவள் செய்த வந்தனையையும் கண்டு அவளை ஜனங்கள் கவனித்து நோக்கலாயினர். அவள் கோயிலைவிட்டு வெளியில் வந்ததும் ஒரு துரைமகள் அவளை யாரென்று விசாரித்தனள். ப்ராஸ்கோவியா தன் பெயரைச் சொல்லி மிலின் பெருமாட்டியின் உதாரகுணத்தைப்பற்றி எங்கும் சொல்லிக்கொள்ளுதலினால் அப்பெருமாட்டியை எவ்விடத்தில் காணலாகும் என்று கேட்டனள். அதற்கு அப்பெருமாட்டி “இந்த மிலின் துரைமகளின் நன்மையைப்பற்றி ஜனங்கள் பெருமிதமாகப் புகழ்வதேயன்றி வாஸ்தவத்தில் அவள் அவ்வளவு தர்மசிந்தையுள்ளவளென்று நான் எண்ணவில்லை. அது கிடக்கிறது, என்னுடன் வா. நான் உனக்கு வேண்டிய உதவிகளைச் செய்கிறேன்.” என்றாள்.

ப்ராஸ்கோவியாவுக்கு இப்படிச் சொன்னது அவ்வளவு இஷ்டமாயிருக்கவில்லை. ஆயினும் அத்துரை மகள் மிலின் பெருமாட்டியின்

வீட்டைக் காட்டி, "உனக்கு வேண்டிய உதவி இங்கு கிடையாவிடின் நீ என்னிடத்தில் வர வேண்டும்," என்று சொல்லி அனுப்பினாள். ப்ராஸ்கோவியா அதற்கொன்றும் மறுமொழி சொல்லாமல் வேலைக்காரர்களைப் பார்த்து "மிலின் பெருமாட்டி வீட்டில் இருக்கிறாரா"? என்று கேட்டாள் அவர்கள் இதென்ன ஆச்சரியம்! என்று தங்கள் யஜமானியைப் பார்த்தபொழுது தான், தான் அதுவரையில் பேசிக்கொண்டிருந்தவர் தாம் மிலின் பெருமாட்டி என்று ப்ராஸ்கோவியாவுக்குத் தெரிந்தது.

இந்த நல்ல பெருமாட்டி பனிக்காலம் முழுதும் ப்ராஸ்கோவியாவைத் தம் வீட்டிலேயே வைத்து ஆதரித்து அவளுக்கு முன் சொன்னபடி ஒருநாள் இராத்திரி மழையில் நனைந்ததனால் உண்டாகிய ஜலதோஷத்தினால் உடம்புக்கு வந்த கெடுதிகளைத் தக்க ஔஷதங்களைக் கொடுத்து நிவர்த்திக்கும்படி வெகு பிரயாசைப் பட்டார். அன்றியும் ப்ராஸ்கோவியாவுக்கு அவள் நிலைமைக்குரிய அநேக படிப்பு விஷயங்களையும் கற்பித்தாள். ப்ராஸ்கோவியாவின் தந்தை தாயார்கள் தம் மகளுக்கு அவரது முன்னிலைமையை ஞாபக மூட்டும்படியான விஷயங்களைப் போதிக்கப் பயந்திருந்தார்களோ அல்லது அந்தச் சிரமத்தை எடுத்துக் கொள்ளப் போதுமான மனவெழுச்சி இல்லாமையினாலோ ப்ராஸ்கோவியாவுக்கு எழுதப் படிக்கக்கூடத் தெரியாமலிருந்து இப்பொழுது கற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்தது. மிலின் பெருமாட்டி தனக்குச் செய்த உதவிகளைச் சொல்லப் புகுந்தால் அவளுக்கு உடனே கண்ணீர் பெருகும்; தான் இப்போது அநுபவித்திருந்த சுகத்தை யெண்ணித் தன் பெற்றோர்கள் பனிக்காட்டில் அநேக கஷ்டங்களுக்குட்பட்டு வருந்தி வருவதையும் எண்ண அவளுக்குத் துயரம் முன்னிலும் அதிகமானதேயன்றி வேறில்லை. ஆயினும் மிலின் பெருமாட்டி பனிக்காலமெல்லாம் சென்று இளவேனில் வரும் வரையில் அவ்வூரை விட்டுப்போக ஒப்பினாரில்லை. பின்பு வல்கா நதியின் உபநதியாகிய காமா நதியில் செல்லும் ஒரு ஓடத்தில் அவளுக்கு இடம் அமர்த்திக் கொடுத்து நிஷ்னிநவகரோட் பட்டணத்துக்கு இரும்பும் உப்பும் ஏற்றிக்கொண்டுபோகும் ஒரு வர்த்தகன் கையில் ஒப்பித்து அவளை அனுப்பினார்.

SHORT STORY.

RESOURCEFUL MEN.

உபாயவஸ்தர்கள்.

(சிறுகதை.)

ஓரூரில் ஒரு கோமுட்டி இருந்தான். ஒருநாள் இராத்திரி ஒரு திருடன் அவன் வீட்டுப் பரணையின்மேல் ஒளிந்துக் கொண்டிருந்தான். அவ்வீட்டில் செட்டி படுத்துக்கொள்ளப் போனான் அப்போது அங்கு திருடன் இருக்கிற அரவம் கண்டு செட்டி ஓர் உபாயம் செய்தான். அதாவது தன் பெட்டிகள் எல்லாம் பூட்டியிருக்கின்றனவா வென்று பார்ப்பது போல் தொட்டு தொட்டு பார்த்தான் உடனே உண்மையாய் தேள் கொட்டினவனைப்போல் ஐயையோ கையில் தேள் கொட்டி விட்டதே என்று உரக்கக்கூவி அழுதான். அவன் அழுகிற குரலைக்கேட்டு அயல் வீட்டுக்காரரெல்லாம் ஓடிவந்து பார்த்து மந்திரித்து விஷமிறங்கிற்றா வென்றார்கள். அதற்கு செட்டி விஷமிறங்கிற்று அந்த புண்ணியவான் மாத்திரம் இன்னும் பரணையைவிட்டு இறங்கவில்லையே யென்று பரணையிலிருக்கிறவனை அவர்களுக்குக் காட்டினான். உடனே அவர்கள் திருடனைப் பிடித்துக்கொண்டு கோமுட்டியின் உபாயத்தை மெச்சினார்கள். அடுத்த வீட்டில் அவனுடைய தம்பி ஒருவன் இருந்தான். அவனுக்கு ஆப்தனான சிநேகிதனொருவன் ஒருநாள் இராத்திரி தன் வீட்டிற்கு வந்தபோது செட்டி தன் காசுப்பையை கொட்டி எண்ணிக்கொண்டிருக்கையில் விளக்கு நின்றுவிட்டது. உடனே சிநேகிதன் பணத்தை எடுத்துக்கொள்ளப் போகிறானென்று கோமுட்டி சந்தேகித்து ஓர் உபாயம் செய்தான். அதாவது தன் சிநேகிதன் கைகளிரண்டையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு நான் ஒருவாக்கு கேட்கிறேன், அதென்னவென்றால்: இதுவரையில் நீ என்னிடத்தில் அதிக விசுவாசமுடையவனாகவிருந்ததுபோல் உன் ஆயுசுவரையில் இருக்கிறதாக இதோ தீபம் வருகிறது அத்தீபமறியக் கைபோட்டுக் கொடென்று தன் பெண்சாதியை சீக்கிரம் தீபம் கொண்டுவரச் சொல்லி தீபம் வருகிறவரையில் கைகளை விடாமல் கெட்டியாய் பிடித்திருந்து தீபம் வந்தவுடனே அதறியக் கைபோட்டுக் கொடென்று கைகளை விட்டுவிட்டான்.

LESSONS IN NATURE STUDY.

பிரகிருதி வித்யாம்சம்.

HOW PLANTS FEED.

பயிர்கள் எப்படி வளருகின்றன.

உலகத்தில் எல்லாத் தேசங்களைவிட இந்தியாவில் பயிர்செய்வோர் அதிகமென்றே யெண்ணுகிறோம். ஆனால் அவர்களில் எவ்வளவு பேர் பயிர் வளர்ச்சியின் முறைகளைப்பற்றி யோசிக்கிறார்கள் என்பதை நினைக்க நமக்கு ஆச்சரியம் உண்டாகிறது.

எந்தச் செடியையாவது நாம் ரசாயன சாஸ்திரவழியாகப் பிரித்துப்பார்த்தால் அது ஏறக்குறையப் பதினைந்து முதற்பொருள்கள் அல்லது மூலவஸ்துக்கள் (Elements) பல வேறளவினவாகச் சேர்ந்து ஆயிருக்கின்றதெனத் தெரியவரும். இப்பதினைந்து பொருள்களில் பத்து எல்லாச் செடிகளிலும் இருப்பதாலும் மேலும் அவை யெல்லாவற்றையும் வேண்டிய அளவிற் பெறுவிடில் எந்தப்பயிரும் சரியாக வளருவதில்லை யாதலாலும் இப்பத்தும் பயிர்களின் முக்கிய ஆதாரமாகக் கருதப்படுகின்றன. அவையாவன: (1) கரி, (2) ஹைட்ரஜன் (Hydrogen), (3) பிராணவாயு, (4) நைட்ரஜன் (Nitrogen,) (5) கந்தகம், (6) பாஸ்பரஸ் (Phosphorus), (7) பொடாசியம், (8) மேக்னீசியம், (9) கால்சியம், (10) இரும்பு என்பவையாம். இவை இன்னும் சில அவ்வளவு முக்கியமில்லாத முதற்பொருள்களோடு வெவ்வேறு விதமாகக்கூடி நமக்குப் பயிர்களிலிருந்து கிடைக்கும்பொருள்களாகின்றன. ஹைட்ரஜன், பிராணவாயு இவை இரண்டும் சேர்ந்து தண்ணீராகின்றது. இத்தண்ணீர்தான் எல்லாச் செடிகளிலுமுள்ள முக்கியமானபொருள். முதல் மூன்றும் சேர்ந்து சர்க்கரை, எண்ணை, ஸ்டார்ச்சு (Starch) என்பவையாகின்றன. முதலைந்தும் சேர்ந்து விதைகளின் முக்கியபாகமும் தண்டு, இலை, இவைகளின் அணுக்களில் (Cells) நிறைந்துள்ளதுமாகிய 'ப்ரோடோப்ளாஸம்' (Protoplasm) என்னும் ஜீவப்பொருள் ஆகின்றது.

மேற்சொல்லியவற்றில் கரி முதலான சிலவற்றையே ஆகாயத் (air) திலிருந்து செடிகள் பெறுகின்றன.

நைட்ரஜனும் மேலேசொன்ன ஜாப்தாவில் அதின்பின்நிற்பவையும் நிலத்திலிருந்து கிடைக்கின்றன. தொன்று தொட்டுவரும் பழக்கத்தாலே *செடிகள் உணவுட்கொள்ளுதலுக்கு அழகான ஒருவழி உடைத்தாயிருக்கின்றன. ஆகாயத்திலுள்ள கரிவாயுவானது (ஒருபங்கு கரியும் இரண்டுபங்கு பிராணவாயுவும் சேர்ந்து ஆகும் காற்று) இலைகளின் மெல்லிய தோலின்வழி உள்ளே செல்லுகிறது. அங்கே பச்சை 'க்ளோரபில்' (Chlorophyll) என்னும் வஸ்துவால் அதிலுள்ள கரிமட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டபின் மீந்த பிராணவாயுவானது பிராணிகளுக்குபயோகப்படும்படி வெளியே வந்துவிடுகின்றது. அப்பிராணவாயு பிராணிகளால் சுவாசிக்கப்பட்டு மறுபடியும் கரிவாயுவாகின்றது. நிலத்திலுள்ள லோக சம்பந்தமான மற்ற உணவுகள் செடிகளின் சிறிய மயிரிலைபோன்ற வேர் நுனிகளால் உட்கொள்ளப்படுகின்றன. ஆனால் அவை சிறு வேர்களின் மெல்லிய தோல்வழியே உட்செல்லுமுன்னர் கரைந்த ஸ்திதியிலிருக்க வேண்டும். வேர்களிலிருந்து ஓர்வகை திராவக (Acid) முள்ள நீர் ஊறுகின்றது. அது சாதாரண தண்ணீரில்கரையாத பலலோக சம்பந்தப் பொருள்களையெல்லாம் தன்னுட் கறைத்துக்கொள்ளக் கூடியதாயிருக்கின்றது. அவ்விதமாக நிலத்திலுள்ள உணவுத்தூள்கள் பக்கத்திலுள்ள வேர்களின் வழியாய் உட்புகுகின்றன. வயற்பயிர்களின் விஷயத்திலோ பயிர்கள் எவ்வளவு தூரம் சன்னமான கிளைவேர்கள் விட்டு உண்டபோதிலும், அந்நிலத்திலுள்ள முக்கிய உணவுகளான பாஸ்பரஸ், பொடாஷ், நைட்ரஜன் என்பவைகள் கொஞ்சம் கொஞ்சமாயிருத்தலால் சீக்கிரம் தீர்ந்துபோகின்றன. நிலம் எவ்வளவு காய்ந்ததாயிருந்தபோதிலும்

* By the development of ages.

அதில் செடிகள் வளரவேண்டுமானால் மிகுதியாக நீரிருத்தல்வேண்டும். ஏனென்றால் செடிகள் சூரிய வெளிச்சத்தில் வளர்ந்து வரும்போது எப்பொழுதும் தம் வேர் வழியாய் தண்ணீரையிழுத்து அதைத்தண்டிலே மேற்செல்லவிட்டு பின் அத்தண்ணீரிலிருக்கும் உணவுமுற்றும் தம்முட்கொண்டபிறகு அந்நீரை இலைகளின் வழியாய் ஆவிரூபமாக வெளிவிடுகின்றது. இவ்வாறு அடிக்கடி வேர்கள் தண்ணீரை யுரிஞ்சுதலால் நிலத்திலிருக்கும் தண்ணீர் ஓடுவதற்குக் காரணமாகிறது. அந்த ஓட்டத்தினால் நிலத்திலுள்ள தண்ணீரிற் கரையக்கூடிய செடியுணவுகள் கரைந்து வேர்களிடம்வர ஏதுவாகிறது.

இயல்பில் ஆகின்ற அழுகுந்தன்மை (கெட்டுப்போகும் தன்மை) யால் நிலத்திலுள்ள லோகசம்பந்தமான பதார்த்தங்கள் நீரிற்கரையக்கூடியனவாகின்றன. மேலும் ஒவ்வொரு நல்ல நிலத்திலும் கணக்கில்லாத அணுப்பிரமாணமான சிறு ஜெந்துக்கள் (Bacteria) இருந்து இம்மாறுதலில் உதவுகின்றன. மேலும் அவைகள் காய்ந்த இலைகள் முதலியவற்றிலுள்ள நைட்ரஜனை வெடியுப்பாக்கி செடிகட்குபயோகமாக்குகின்றன. இவ்வுணவுகள் உட்கொள்ளத்தக்க ஸ்திதியில் கிடைத்தாலன்றி ஏற்றவளர்ச்சியும் விளைவும் உடைய செடிகள் இருப்பதரிது.

நிலத்தில் சீக்கிரம் குறைந்துவிடக்கூடிய பயிருணவுகள் நைட்ரஜன், பாஸ்பரஸ், பொடாஸ் என்பவையே என்று முன்னமே கூறினோம். ஆனால் இவ்விஷயக்கொள்கை தெரியாத வெகுநாள் முன்னமேயே கிருஷிகர், சாணம், எலும்பு முதலியவை தம் வயல்கட்கு அதிகரித்த விளைவைத் தந்தனவென்று கண்டுபிடித்திருந்தார்கள்.

ஆனால் இயற்கைச் (Science) சாஸ்திர ஆராய்ச்சியானது, இந்த எருவுகள் ஏன் அந்த விளைவைத்தந்தன என்பதையுணர்த்திய போது மனிதர்கள், இந்த உணவுப்பொருள்கள் ஒன்றும் பலவும் அதிகமாயும் உடனே பயன்படக்கூடியனவாயும் நிறைந்துள்ள வேறு ரசாயனப்பொருள்களைக் குறைந்த அளவாய் ஏன் எருவாக வுபயோகிக்கக்கூடாதென்று யோசித்தார்கள். பலமுயற்சிகள்செய்து கடைசியில் அது முடிவெய்தி, இப்போது ஐரோப்பா அமெரிக்கா தேசங்களில் கிருஷிக்கு வேண்டிய எருவுகளைச் செய்து கொள்வது, ரசாயன சாஸ்திரத்தொழில்களில் முக்கியமானதாக இருக்கின்றது. கிரேட்பிரிடேன் தீவுகளிலிருந்துமட்டும் வெளிதேசங்களுக்கு ஏற்றுமதியாகிற எருவு 4-லட்சம் டன்னிற்கு மேற்படுகின்றது. இவ்விந்திய நாட்டிலும், ஜனத்தொகை மிக விரைவில் அதிகரித்தலாலும் அதனால் ஆகாரத் தானியங்கள் அதிகமாக வேண்டப்படுதலாலும் இந்நாட்டுக் கிருஷிகள் ரசாயனமுறைப்படி செய்த எருக்களை அதிகமாக உபயோகித்து, இது விஷயத்தில் தான்யவுற்பத்தி செய்யும் பிறதேசங்களின் கிருஷிமுறைக்குச் சமமாகத்தாம் அனுசரிக்கும் கிருஷிமுறையை விர்த்திசெய்து முன்னுக்குக்கொண்டுவரவேண்டிய அவசியம் நேரிடுமென்பது நிச்சயமாய்த் தோற்றுகிறது.

வங்காள ராஜாங்கத்தார் பரீட்சார்த்தமாக ஏற்படுத்திய விளைநிலங்களில் (Experimental farms) செய்த பரிட்சைகளில் இவ்விதமாக தயார்செய்யப்படும் எருவுகள் மற்ற தேசங்களிற்போலவே இந்நாட்டிலும் பயன்கொடுக்குமென்பதை யறிவித்தன. மேலும் நெல்விளைவானது அவ்வெருவால் இரட்டித்ததென்றும், எருவின் விலையைக்கழித்தபின்னும் அதிகலாபமிருந்ததென்றும் கண்டார்கள். இப்போது இருப்பதைவிட அதிகவிளைச்சலுக்காக அதிக நிலங்களை (நிலங்கள் கிடைத்தாலும்) நூதனமாகப்பயிரிடுவதைவிடக் கிருஷிகளுக்கு எருவால் விளைவை யதிகப்படுத்திக்கொள்வது மிக லாபகரமாக இருக்கின்றது. ஏனென்றால் அதிக நிலங்களை சாகுபடிசெய்தால் அதன் கந்தாயமும், வேலிபோடல், உழுதல் முதலிய செலவுகளும் சேர்ந்துசெலவு மிக அதிகமாகின்றது. ஆனால் பின் சொல்லியதிலோ எருவிலே தான் கிருஷிகள் செலவுசெய்ய வேண்டியிருக்கின்றது.

இந்தியாவிலே பயிர்வளம் தரும் பொருள்கள் ஏராளமாயிருக்கின்றன. ஆனால் எலும்பு, புண்ணாக்கு, வெடியுப்புமுதலிய எருவுக்குபயோகமான பொருள்கள் (அவற்றின் உபயோகத்தைக்கண்டறிந்த) வேறுதேசங்களுக்கு ஆயிரக்கணக்கானடன்களாக வருஷா வருஷம் இங்கிருந்து ஏற்றுமதியாகின்றபடியால் இவ்வளந்தரும் வஸ்துக்கள் அற்றுப்போகக்காரணமாகி நிலவளமும் குறைய ஹேதுவாகின்றது. இந்தியாவில் எருவிடுதல் ஏறக்குறைய மற்றெல்லாதேசங்களைவிடக் குறைந்த செலவில் ஆகும்.

இராஜாங்கத்தார் இதுவரையிலும் விவசாயத்தை விருத்திசெய்வதற்காக, குளங்கள் வெட்டுவதிலும் இருப்புப்பாதை போடுவதிலும் தங்கள் கவனத்தைச் செலுத்திவந்தார்கள். இந்தவிவசாய விருத்திவிஷயத்தில் இன்னும் செய்யவேண்டியது அதிகமிருக்கின்றது. விளைவையு மதிகரிக்கச்செய்து நிலவளப்பத்தையும் குன்றாதிருக்கச்செய்யும் அந்த மார்க்கத்தையும் நாம் கவனிக்காதிருக்கக்கூடாது.

மழையுங்குறைந்து இருக்கின்ற கொஞ்சம் தண்ணீரால் பாயப்பெறற பூமிகளிலிருந்து எவ்வளவு விளையக்கூடுமோ அவ்வளவும் விளையவேண்டிய அக்காலங்களில் எருவிடுதல் மிகப் பயனுள்ளதாயிருக்கின்றது. இதனால் ஜனங்களுக்குப் பொதுவில் உண்டாகும் நன்மை தீமைகளைப்பற்றி விரித்தற்கிடமில்லை. ஆனால் இன்னும் அதிகப்பயன் தரும் விவசாயமுறை கையாளப்பட்டால் அதனால் கிருஷிகள் நாள் முழுதும் கடினவேலை செய்து வருந்துவது குறைந்து, அவர்கள் கஷ்டஜீவனமும் கூடிய அளவிற்கு மட்டுப்பட்டு சுகமெய்தும் என்பதற்கு ஐயமில்லை.

சாதாரணமாக இப்போது கிருஷிகள் தம் பெரியோர் நாட்களில் இருந்ததைவிட இப்போது காலங்கெட்டு மழை குறைந்ததனாலே தமது நிலங்களின் விளைவுங் குன்றியது என்று நினைக்கிறார்கள். ஆனால் அந்நிலங்கள் அடிக்கடி வெள்ளாமைசெய்வதால் வளப்பங் குறைந்து தகுதியற்றவைகளாகப் போய்விட்டமையே விளைவின் குறைவிற்குப் பெரும்பாலும் காரணமென்பது திண்ணம்.

LESSONS IN ECONOMICS : DISTRIBUTION OF WEALTH.

அர்த்த சாஸ்திரம்: தனவிபாகம்.

4. தனவிபாகம்.

நாமிதுவரையில் தனம் என்றாலென்னவென்றும், அதையெப்படி யுத்பத்தியாக்குகிறது என்றும் விசாரித்துப்பார்த்தோம். இப்பொழுது இப்படியாகவுண்டாக்கப்பட்ட தனம் எவ்வாறாக, அதை உத்பத்திசெய்வதில் வியாபிருதர்களான ஜனங்களுக்கு ஈந்து கொடுக்கப்படவேண்டியது என்று அறிய முயலவேண்டும்.

தனோத்பத்திக்கு வேண்டிய ஸாதனங்கள் மூன்றென்று படித்திருக்கிறோம். இம்மூன்றும் ஒரே மனிதனால் உத்பத்தியில் பிரயோகிக்கப்பட்டிருந்தால் உத்பத்தியாகும் தனம் முழுவதும் அவனுக்கேதான் சேரவேண்டியது. ஆனால் ஒரு ஜனஸங்காதத்தில் ஆகும் தனோத்பத்தியில உபயுக்தமான ஸாதனங்கள் ஸாமானியமாய் ஒரு மனிதனைச் சேர்ந்தவையல்ல. ஆகையால் தனம் உண்டானதும் அதன் உத்பத்தியில் சம்பந்தப்பட்ட எல்லா ஜனங்களும் திருப்தியடையும்படி விபாகிக்கப்படவேண்டியது. அவர்கள் சரியானபடி திருப்தியடையாவிட்டால் தாங்கள் வேலைக்குக்கொண்டுவரும் ஸாதனங்களைக் கொணடுவரமாட்டார்கள். ஆகவே வேலை நடக்காது. இவ்வகைத்தான தனவிபாகத்தைப்பற்றிச் சில ஸ்வபாவிகமான விதிகள் ஏற்படலாம். அவைகளைக் கூடிய மட்டும் விசிதமாக அறிந்துகொள்ள முயலுவோம்.

தனோத்பத்தியில் பிரயோகிக்கப்பட்ட க்ஷேத்திரம், உத்யமம், மூலதனம் ஆகிய இம்மூன்று ஸாதனங்களும் அத்யாவசியமானவையாகையால் உத்பத்தியாக்கப்பட்ட தனம் இம்மூன்று ஸாதனங்களுக்குரியவரான ஜனங்க

ளுக்குள் பங்குபோடவேண்டியது. உத்யமம் அல்லது உழைப்புக்கு உரியவனுக்குக் கொடுக்கப்படும் தனத்தின் பாகத்திற்கு நாம் வேதனம் (Wages) என்னும் பெயரைக்கொடுப்போம். க்ஷேத்ரஸாதனத்தையுடையவன் பாகத்திற்கு குத்தகை (Rent) என்பதுவழக்கமாகவருகிற பெயர். மூலதனம் போட்டவனது பாகத்திற்கு விருத்தி (Interest) என்றுபெயர்கொடுப்போம். மேலும் தனோத்பத்தி சரியாக நடக்கவேண்டுமானால் தகுந்தபடி களவுமுதலிய உபாதைகளில்லாமலிருக்கவேண்டியது அவசியமாகையாலும் அவைகளைப் போக்கடிக்கத் தகுந்த பலமான ராஜாங்கம் வேண்டுமாகையாலும், இராஜாங்கத்தை நடத்தச் செலவுக்கும் ஒரு பாகம் உத்பத்தியாக்கப்பட்ட தனத்திலிருந்து கொடுக்கப்படவேண்டியது. இதற்கு வரி (Taxes) என்றுதான் பெயர் வழங்குவது எல்லாருக்கும் தெரிந்தவிஷயமே. ஆகவே உத்பத்தியாகும் தனம் எல்லாம் இந்நான்கு வழியாகத்தான் செலவாகவேண்டியது. உத்பன்னமானதனம் = வேதனம் + குத்தகை + விருத்தி + வரி. இதுதான் தனவிபாகத்தைக் குறித்த சாசுவதமான ஸம்பந்த தருமம். இதற்கு தனவிபாகஸம்சிலேஷம் (The equation of distribution) என்ற பெயரைக்கொடுப்போம்.

இதற்கு உதாரணமாக இப்போது பலமாகத் துணிகள் நெய்யப்படும் ஒரு நூலாபீஸில் பத்துலக்ஷம்கஜம் நீளமுள்ள துணியொன்று செய்யப்பட்டது என்று வைத்துக்கொள்வோம். வாதர் கூறும்படி யெத்தனைவிதமாகவந்ததனம் அதை யுண்டாக்குவதில் உதவினஜனங்களுக்குள் ஈந்து கொடுக்கப்படவேண்டியது என்று வினவுவோம். முதல்முதல் ஆபீஸ் கட்டியிருக்கும் இடத்திற்கு உடையவன் வந்து தனக்கு வேண்டிய வாடகைக்காக சிலவாயிரம் கஜங்களைக் கிழித்துக்கொண்டுபோகிறான். பிறகு ஆபீஸில்நடக்கும் வேலைக்கெல்லாம் காரணமான நீரின் சக்தியையோ நீராவியின் சக்தியையோ உண்டாக்கவாவது சமீபத்திற்குக் கொண்டுவரவாவது ஏற்படுத்தப்பட்ட சிப்பந்தி வகைராக்கள் மற்றும் ஒரு பாகத்தையெடுத்துக்கொள்ளுகிறார்கள். பிறகு கைமுதல் போட்டு வேலையை நடத்திவந்தவன் தன் பங்கிற்கு வெகுமயில் நீளமுள்ள துணியைக் கொண்டுபோவான். இவை போக மீதியுள்ளது ஏறக்குறைய 6-லக்ஷம் கஜமுள்ள துணியிருக்கக்கூடும். இவை இரண்டு பங்காளிகளுக்குள் பிரிக்கப்படவேண்டியது. முதற் பங்காளிகளாக ஒரு பெருங்கும்பல் புறப்படுகிறது. ஆபீஸில் வேலைநடத்திய ஓவர்சியர், குமஸ்தாக்கள், கூலியாட்கள் ஆகிய பல ஆண, பெண் குழந்தைகள் கூடின பலர் வந்து தங்களது பங்கையபேக்ஷிக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு சிறுபாகந்தான் கிடைத்தபோதிலும் முடிவில் கொஞ்சம்பாகந்தான் வேலையை நடத்திவைக்கும் எஜமானன் பங்குக்குச்சேறுகிறது. வேலை நேர்த்தியாகநடந்து, உத்பத்தியான சாமான் சரியாக விலைப்போனால் எஜமானனுக்கு உண்டென்று லாபம்கிடைக்கும் அப்படியில்லாவிடில் கையிலிருந்துகூட நஷ்டம் வரலாம். இப்படியாக நடக்கும் தனவிபாகத்தைப்பற்றிக் கொஞ்சம் நிதானமாக விசாரித்துப் பார்ப்போம்.

வேலையாட்களின் பாகம் அல்லது **வேதனம்:** இப்போது நாம வேதனம், வரி, விருத்தியென்று உபயோகிக்கும்வார்த்தைகள் சாமானியமாக வழக்கத்தில் வரும் அருத்தத்தில் உபயோகமாவதில்லை. வேதனம் எனறு வேலைக்கு நேராகக் கொடுக்கப்படும் கூலிக்குத் தான் செல்வநூலில் பெயர். ஆனால் சாமானிய உலக வழக்கத்தின்படி வேலைசெய்பவன் வேலைக்கு வேண்டிய கருவிகளைத்தானே வைத்திருக்கிறான். ஆகவே அவன் பெரும் ஆச்வாஸத்தில் (Remuneration) ஒரு பங்கு அந்த வனங்களைத் திட்டமாக வாங்கி வைத்திருக்கவேண்டிய கைமுதலின் உபயோகத்திற்காகக் கொடுக்கப்படும் விருத்தியை (Interest) அடக்கிக் கொண்டிருக்கிறது. ஆகையால் செல்வநூலின்படி வேதனம் அவன் பெருகிற பாகத்திலிருந்து இப்படிப்பட்ட விருத்தியைக் கழித்ததின்மேல் வரும் பொருளுக்குத்தான் பெயராகும்.

க்ஷேத்திர ஸம்பந்தமான பகுதி அல்லது குத்தகை: பிரகிருதி சக்தியின் உபயோகத்திற்காகக் கொடுக்கப்படுவது இது. ஆகையால் ஒரு க்ஷேத்திரத்திற்கு நாம் குத்தகையொன்று கொடுக்கும் பாகமெல்லாம் குத்தகையாகமாட்டாது. அந்தக்ஷேத்திரத்தின்மேல் கட்டியிருக்கும் கட்டடங்களுக்காகக் கொடுக்கப்படும் பாகம் அந்தவேலையை நடத்துவதில் பிரயோகிக்கப்பட்ட உத்யமம், மூலதனம் முதலியவைகளுக்காகப் பிரித்துவைககப்படவேண்டியது.

மூலதனத்தான் பகுதி அல்லது வட்டி: சாமானியமாய் மூலதனத்தான் தானே வேலையையும் நடத்திவருவதால் இவன் பெற்றுக்கொள்ளும் பாகத்தில் ஒருகூறு இவன் செய்யும் மேற்பார்வை முதலிய வேலைக்காகச் சேரவேண்டியது. இவன் கையிலிருந்து போட்ட முதலுக்குமாத்திரம் கிடைக்கும பணமே வட்டியெனனப்படும். மேலும இவன் பணம் போட்டு வேலைசெய்ய ஆரம்பித்தபோது வேலை சரியாகநடந்து தான் போட்டபணம் வந்து சேருமோ சேராதோவென்ற சந்தேகம் பலமாயிருக்குமாகையால் இந்த சந்தேகத்தை கவனிக்காமல் வேலையை யாரம்பித்து நடத்திய தைரியத்திற்காகவும் ஒருபாகம் சேரவேண்டியது. இவ்வளவும் சேர்ந்துதான் நாம் சாமானியமாக லாபம் எனறுசொல்லும் பாகம் ஆகிறது. இப்படியாக.

லாபம் = மேல் விசாரணைக்குறிய வேதனம், + வட்டி + சந்தேகத்திற்காக வுபசாந்தி.

ஆகவே, முடிவில் ஆராய்ந்து பார்த்தால் விபாகமானது பிரத்யேகமாக ஒவ்வொரு மனிதனையும் பற்றியது. ஒவ்வொருவனும தன் தன் பகுதிசரியாகக் கிடைக்கவேண்டுமென்று பார்க்கிறதற்கு ஆஸ்பதம் அதிகமாகவிருக்கிறதே ஒழிய பலாகூடி சங்காதத்தினஸாதகாபேக்ஷையாகத் தனதன நஷ்டத்தைப் பாராமலிருப்பது அரிது. ஆயினும் பலர் தங்கள் பகுதி சரியாகக் கிடைக்காது என்று கண்டால் ஒருங்குகூடித் தத்தம் காரியசாதனைக்காக சிறுபான்மையோருக்கு நஷ்டம் நேரிடினுமதைப் பாராட்டாமல் நிற்பது ஐரோப்பா தேசத்தில் அடிக்கடி காணப்படும் ஒரு விஷயம். இப்படிச்சேருவதால் தன விபாகமானது சுவபாவிகமாக நடக்காது. சிற்சில விஷயங்களில் ஜனங்களின் ஸ்திதியை யனுசரித்து மாறுபாட்டையடையும். ஆயினும் முடிவில் தனவிபாகத்தின் ஸ்வபாவிகமான விதிகள்தான் நீடித்துநிற்கின்றன. மேலும் இப்படிப்பட்ட விபாகத்தில் சம்பந்தப்பட்ட ஜனங்கள் பலதேசத்திற் பலவாகப் பிரிந்திருக்கிறார்கள். இங்கிலாண்டு தேசத்தில் தனவிபாகம்பெறும் ஜனங்களின்பிரிவு இந்தியாவில் காணப்படாது.

நமது தேசத்தில் ஐரோப்பா கண்டத்தின் பலத்த இராச்சியங்களில் காணும்படியான விசேஷமான யந்திரசாலைகள் பெரும்பான்மையில்லை. யந்திரசாலைகளில் தனமுத்பத்தியாவதில் கூடும் ஜனங்களின் கூட்டத்தினமாதிரியே வேறு; நமதேசத்தார் போன்ற கைவேலையில் வியாபிருதர்களான ஊழைப்பாளிகள் வேலைசெய்து தனவிபாகம் பெறும்மாதிரியே வேறுதான். பொதுவாக இங்கே வேலையாள் தன் வனங்களைத்தானே வாங்கி வைத்திருப்பதினால் சில விஷயங்களுக்கு அவனே மூலதனத்தான் (Capitalist) ஆகிறான். மற்றும் வெகுவேலைக்காராகள் சேர்ந்து யந்திரங்களில் வேலைநடத்திவருவதாலும், இங்கே ஒவ்வொருவனும் தன் பாட்டைமாத்திரம் பார்ப்பதினாலும், ஐரோப்பாகண்டத்தில் வேலையாட்களும், மூலதனத்தாரும் ஒருங்குகூடித் தததம் லாபநஷ்டங்களைச் சீர்திருத்தச செய்யும் ஏற்பாடுகள் இங்கே நடப்பதறகு ஆஸ்பதமில்லை. ஆயினும் தற்காலத்தில ஐரோப்பா, ஆசியா என்கிற வித்தியாசமே அழிந்துபோகும்படி, ஐரோப்பிய தனோத்பத்தியின் ரீதியே உலகமெஙகும் பரவிவருகிறது. யந்திரங்களும்யந்திரசாலைகளும் ஆயிரக்கணக்காக உலகெஙகும் வியாபிக்கின்றன. ஐரோப்பிய மூலதனமே நமதேசத்திலும் பலவான பலத்த உத்பத்தியில் பிரயோகிக்கப்படுகின்றது. ஆகவே இன்னும் கொஞ்சநாளில் ஐரோபபிய தனோத்பத்தி ரீதிதான எங்கேயும் பரவிவிடும். நமது வேளாண்மைகூட இம்மாதிரி மாறுவதறகு ஆரம்பித்துவிட்டது.

திருச்சிராப்பள்ளி ஜில்லா லால்குடி வித்தியாகாட்சி சாலை.

ஆகஸ்டு, 1916.

நாளது வருஷம் ஆகஸ்டுமாதத்தில் லால்குடி ரேஞ்சு உபாத்திமைச் சங்கங்களின் சம்பந்தமாய் ஒரு வித்தியா காட்சிசாலை திறக்கப்பட்டு நடத்தப்படும். அதற்காக ஏற்பட்ட கமிட்டிக்கு ம-ா-ா-ஸ்ரீ திவான் பஹதூர் டி. தேசிகாசாரியர் அவர்கள் ப்ரெஸிடெண்டாயிருக்கும் பொறுப்பை வகித்திருக்கிறார். அக்காலத்தில் சென்னை கவர்னர் மந்திராலோசனை சபையின் மெம்பராகிய கனம் ஸ்ரீமான் சர். பி. எஸ். சிவசாமி அய்யர் B. A., B. L,. K. C. S. I., C. S. I. C. I. E. அவர்கள் ஷை காட்சிசாலையைத் திறக்கும் படிக்கு ஏற்பாடாகிறது. அநேக உபந்நியாசங்களும், பூதக்கண்ணாடி காட்சிகளும் நடைபெறும்.

இந்த காட்சிசாலை நன்று நிறைவேறும்பொருட்டு எல்லா கனவான்களுடைய உதவியும் வேண்டியிருக்கிறது. ஆகையால் கனவான்கள் அடியில் கண்ட காட்சிப்பொருள்களை தங்களால் கூடிய அளவு 1916-ம் ஹு ஜூலை 25-வக்கு முந்தி அனுப்பும் படியாயும், மேல்கண்ட விசேஷத்துக்கு வந்து விஜயம் செய்யும்படியும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

வேண்டி அழைக்கப்படும் சாமான்கள்.

I. வித்தியா பிரிவு:—

1. பிள்ளைகளின் கையெழுத்து.

2. உபாத்திமார்களாலும், மாணாக்கர்களாலும், வேலையில் தேர்ந்தவர்களாலும், காகிதத்தில் தயார் செய்யப்பட்ட பலவித சித்திரங்கள், பூகோள தேச படங்கள், பூகோள உருண்டைகள், பூகோள சம்பந்தமான படங்கள். தேசசரித்திர படங்கள், களிமண் உருவங்கள், காகிதமடிப்பு வேலைகள், காகித வெட்டு வேலைகள், மணி வேலைகள், பாசி வேலைகள், கூடை முடைதல் வேலைகள், பட்டாணி வேலைகள், குத்தித் தைத்த வேலைகள், சரிகை வேலைகள், சடை வேலைகள், நூல் வேலைகள், கம்பளி நூல் வேலைகள்.

3. போதனைக்கென்று உபாத்திமார்களால் செய்யப்பட்ட போதனா உபகரணங்கள். (ஒவ்வொரு உபகரணத்தையும் விவரித்து எழுதவேண்டும்).

4. உபாத்திமார்களாலும், மாணாக்கர்களாலும் இதரர்களாலும் செய்யப்பட்ட கைத்தொழில் வேலைகள்.

5. உபாத்திமார்களாலும், மாணாக்கர்களாலும் இதரர்களாலும் சேர்க்கப்பட்ட போஸ்டு ஸ்டாம்புகள், நாணயங்கள், பூச்சிகள், முதலியவைகள்.

6. கீர்த்திபெற்ற உபாத்திமார்கள், பண்டிதர்கள், அரசர்கள், மந்திரிகள் முதலிய பிரபல கனவான்களின் படங்கள்.

7. ஸ்கூல் கட்டடங்கள், வேலைச்சாலைகள், இயந்திரங்கள், காட்சிசாலைகளின் படங்கள். கிராமத்திலும், நகரத்திலும் சுதேசிகள் வசிப்பதற்கேற்றத் தகுந்த வீடுகளைப்போலும், கிராமத்திலும், நகரத்திலும் எலிமெண்டரி ஸ்கூல்களுக்குத் தகுதியான கட்டடங்களைப்போலும் பலகையாலும், அட்டையாலும் செய்யப்பட்ட மாதிரிகள் (models), பிளானும், எஸ்டிமேட்டும் உடன் அனுப்புதல் வேண்டும்.

8. காட்சிசாலைக்கு சௌகரியமாய் அனுப்பக்கூடிய உள்ளூர் விளைபொருள்கள், அல்லது தாதுவர்க்கப் பொருள், அல்லது சுரங்கத்தில் உண்டாகும் உலோகங்கள்.

9. காட்சிசாலைக்குச் சிறந்ததாகத் தோன்றும் வேறு சாமான்கள்.

II. விவசாயப் பிரிவு:—

1. உலகத்தாருக்கு அருமையாக உபயோகப்படுந் தன்மையால் பொது ஜனங்கள் அவசியமாய்ப் பார்க்க வேண்டிய விளைபொருள்கள்.

2. தற்கால நவீன முறைகளாலோ, விசேஷ பயிர்த்திறமையினாலோ உண்டாக்கப்பட்ட விளைபொருள்கள்.

3. புராதனமாய் வழங்கிவந்த விவசாயக் கருவிகளைத் தோற்கடிக்கும் நவீன விவசாயக் கருவிகள், உபகரணங்கள், இயந்திரங்கள்.

III. கைத்தொழிற் பிரிவு:—

1. பொதுஜனங்களுக்கு விசேஷ உபயோகத்துக்குதவும் கைத்தொழிற் சாமான்கள், சுவர்க் கருப்புப் பலகைக்கும், மரக் கருப்புப் பலகைக்கும் பூசக்கூடிய மை செய்யும் விதம். செலவு சுருக்கமானதாயும், சிறந்ததாயுமிருக்கவேண்டும். செங்கல், மரத்துண்டில் மைபூசி மாதிரி அனுப்பவேண்டும்.

2. விசேஷித்த வேலைத்திறமையையும், கைச் சாமர்த்தியத்தையும் காட்டக்கூடிய கைத்தொழில் வேலைகள்.

3. புராதனமாய் வழங்கிவரும் கைத்தொழிற் கருவிகளைத் தோற்கடிக்கும் நவீன கைத்தொழிற் கருவிகள்,உபகரணங்கள், இயந்திரங்கள்.

4. தச்சு வேலை, தந்த வேலை, சலவைக்கல், வேலை, சுண்ணாம்புக்கட்டி வேலை, கல் வேலை, செம்பு பித்தளை முதலிய உலோகங்கள் வேலை, நெசவு வேலை, பாய் வேலை, வாழை நார் வேலை, அபிரக் வேலை, ஸ்கூல்களுக்குத் தகுந்த மரச்சாமான்கள்.

IV. சங்கீதப் பிரிவு:—சுதேச மேளம், நரம்புக் கருவிகள் (பிடில் வீணை முதலிய) இவைகளை உபயோகித்துக்காட்டல். இந்த வாத்தியக்காரர்கள் தாங்கள் செய்யும் கச்சேரிகளுக்குப் பணம் கேட்கக்கூடாது. தாசிகள் கச்சேரிகளுக்கு உத்தரவு கொடுக்கமாட்டோம்.

V. தேகப்பயிற்சிப் பிரிவு:—சுதேச கசரத்து. இதைச் செய்து காட்டுகிறவர்களும் தங்கள் ஆட்டங்களுக்குப் பணம் கேட்கக்கூடாது.

VI. வியாதிக்கிருமிப் பிரிவு:—வியாதிக்கிருமிகளின் படங்கள். தடுக்கக்கூடிய வியாதிகளால் பீடிக்கப்பட்டவர்களின் படங்கள் (நல்ல ஸ்திதியிலிருந்த போது பிடித்த படத்துடன் அனுப்பவேண்டும்).

VII. ஜீவவர்க்கப்பிரிவு:—செல்வப்பிராணிகள், பட்சிகள், கிடைக்கக்கூடிய காட்டுமிருகங்கள், அநேக விதமான பட்சிகள், நாய்கள், குதிரைகள், எருதுகள், பசுக்கள். சப்கமிட்டியார் தேர்ந்தெடுத்து ஒப்புக்கொள்ளப்பட்டவைகளுக்கு மாத்திரம்தான் அனுமதி கொடுக்கப்படும்.

N. B.—பிராணிகளின் காட்சியும் பட்சிகளின் காட்சியும் முதல் நாள் மாலையே முடிவு பெறும்.

VIII. தாவரவர்க்கப் பிரிவு:—அநேகவிதமான தாவரங்கள், பூக்கள், காய்கள், பழங்கள்.

முக்கிய குறிப்புகள்:—

1. காட்சிசாலைக்கு அனுப்பப்படும் எல்லா சாமான்களையும் சொந்தக்காரர்களுடைய செலவில் தான் அனுப்பப்படும். ரெயில்வே கம்பேனியார் கொடுக்கக்கூடிய சாதகங்களைப்பற்றி அவர்களுக்கு எழுதப்பட்டிருக்கிறது.

2. ஒவ்வொரு சாமானையும் அனுப்புகிறவர், சாமான் செய்தவர் அல்லது சொந்தக்காரருடைய பெயர், தொழில், வயது, சாமானின் விவரம் ஆகிய விஷயங்களை இங்கிலீஷிலும் தமிழிலும் குறித்து எழுதி யனுப்பவேண்டும். உபாத்திமார்களாலும், மாணாக்கர்களாலும், செய்யப்பட்ட சாமான்களாயிருந்தால், ஸ்கூல், ரேஞ்சு, வகுப்பின் பெயரையும் குறிக்க வேண்டும்.

முக்கியமாய்க் கவனிக்க.

3. மாணாக்கர்கள், உபாத்திமார்கள், இதரர்கள் செய்த சாமான்களில் மிகத் திறமையானவைகளுக்கு வேலைத்திறமைக்குத் தக்கபடி ஜட்ஜுகள் நிதானித்தும் வண்ணம் பதக்கங்களும் (மெடல்கள்) செர்டிபிகேட்டுகளும் கொடுக்கப்படும். எல்லாப் பிரிவுகளுக்கும் இப்பரிசுகள் உண்டு.

4. பதக்கங்களும், செர்டிபிகேட்டுகளும் பெற வேண்டுமென்று அனுப்பப்படும் சாமான்களை அவ்வாறு குறித்து அனுப்பவேண்டும். அவைகளின் விவரத்தையும் பூர்த்தியாய் எழுதியனுப்பவேண்டும்.

5. விலைமதிப்புள்ளசாமான்களை சாமான்களின் சொந்தக்காரர்களாவது அவர்களுடைய ஏஜண்டுகளாவது பாதுகாத்துக்கொள்ளவேண்டும். கூடியமட்டும் சாமான்கள் களவுபோகாதபடிக்கு பந்தோபஸ்து செய்வோம். ஆனால் இந்த விதி காட்சிசாலைக்கென்று கடனாய் கமிட்டியார் பொறுப்பில் வாங்கும் சாமான்களுக்குப் பொருந்தாது. விசித்திர பிரக்யாதியும் வேலைப்பாடுமுள்ள சாமான்கள் யாரிடத்திலேயாகிலுமிருந்தால் அவைகளை "கடன் சாமான்களாக" கமிட்டியார் அங்கீகரித்துத் திருப்புவார்கள்.

6. 1916-ஹு ஜூலை 25-வக்குள் இன்ன சாமான்கள் அனுப்பப்போகிறோம் என்று தெரிவிக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. சாமான்களுக்காக ஸ்பெஷலாய் இடம் வேண்டுபவர்கள் உடனே எழுதிக்கொள்ளவேண்டும்.

7. II, VIII. இப்பிரிவுகளில் அழுகக்கூடிய சாமான்கள்மட்டும் காட்சிசாலைமுன் தினம் மாலை 6 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொதுஜன நன்மையைக் கருதி மேல்கண்ட விஷயங்களைப்பற்றி சிரத்தை எடுப்பீர்களென்று நம்புவதுடன் எங்கள் வந்தனத்தையும் செலுத்துகிறோம்.

இப்படிக்கு,

1. ப. பார்த்தசாரதி நாயக்கர், B. A., L T.,
லால்குடி ரேஞ்சு உபாத்திமைச் சங்கங்களின்
அக்கிராசனாதிபதியும்,
லால்குடி ரேஞ்சு ஸ்கூல் சப் அசிஸ்டண்டு
இன்ஸ்பெக்டரும்.

2. L. S. நடராஜ சர்மா, B.A, L. T,
காட்சிசாலை கமிட்டியின் காரியதரிசியும்,
லால்குடி போர்டு செக்கண்டரி ஸ்கூலின் ஹெட்
மாஸ்டரும்.

N. B—கடிதங்கள் எழுதுவோர் முதல் கையொப்பமிட்டிருக்கிறவருக்கு எழுதவும்.

வர்த்தகர்கள் கொண்டுவரும் சாமான்களை ஜட்ஜுகள் பார்வையிட்ட பின்பு சரியான விலைக்கு விற்கலாம். ஜூலை 15வக்குள் தெரிவித்து உத்தரவு பெறவேண்டும். ஒன்றுக்கு அதிக சாமான்கள் ஒரே விதத்தில் இருந்தாலொழிய காட்சிசாலை முடிந்தபின்புதான் விலைக்கு வாங்கின சாமான்களை அப்புறப்படுத்தலாம். லால்குடி திருச்சிராப்பள்ளி கோட்டை ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 12 மயில் தூரமுள்ளது.

ON ENVY.

பொறாமை.

பிறர் சம்பத்தைக்கண்டு துக்கப்படுகிறவனும் பிறர் சந்தோஷப்பட்டால் தான் விசனப்பட்டு அவர் விசனப்பட்டால் தான் சந்தோஷப்படுகிறவனும் தன் துர்ப்பாக்கியத்துக்குத் தானே காரணமாகின்றான். இது அவன் விதி:

எப்படி ஒரு புதர் தீயினால் பற்றியெரிகின்றதோ அப்படியே பொறாமைக்காரன் மனசும் எரிந்துகொண்டேயிருக்கும். அவன் மனசு ஒருநாளும் சந்தோஷமாகவாவது சமாதானமாகவாவது இராது. இத்துர்க்குணம் சாதாரணமாய் மனிதனுக்கு சுபாவம். ஆனால் இதை முளையிலேயே அறிவு என்கிற கோடரியினால் நாசஞ்செய்து மேல் விருத்தியாகாமல் தடுக்கும்பட்சத்தில் நாம் விசனமென்கிறதையே அறியோம். சந்தோஷம் தனக்குத்தானே வரும். இதற்குத் திருஷ்டாந்தம்:—ஒருவன் தன்னயலான் பாக்கியத்தைக்கண்டு சகிக்கமாட்டாமல் ஓர் அரண்ணியத்தில் வசிப்போமென்று போனான். ஒரு மகாரிஷி இந்தப் பொறாமைக்காரனைக்கண்டு பச்சாதாபப்பட்டு ஒரு மந்திரசக்தியுடைய பாச்சிகை யவனுக்குக் கொடுத்தார். அதன் மகத்துவம் யாதெனில் அதை மூன்றுதடவை என்னென்ன கோரிக்கொண்டு போடுகிறானோ அதுகள் சம்பவிக்கும். ரிஷி "மூன்றுதடவையும் நீ இச்சிக்கிறது கிடைக்கும், ஆனால் உன்னயலானுக்கு உன்னைவிட இரண்டு மடங்குகிடைக்கும்" என்று சொன்னார். அவன் வீட்டுக்குப்போனதும் தான் பாச்சிகையை யுருட்டுவதில் அயல் வீட்டுக்காரனுக் குண்டாகப்போகிற பாக்கியத்தை மறந்தவனாய் எனக்கு வீடுகளும், தானியமும், வெள்ளி, தங்கம், நகைகளும் விஸ்தாரமாய்க் கிடைக்கட்டும் என்று சொல்லி பாச்சிகையை முதல்தரம் உருட்டினான். அப்படியே கிடைத்தது. அண்டை வீட்டுக்காரனுக்கு அதனினு மிருமடங்கு கிடைத்தது. உடனே ஞாபகம்வந்து அயலானுக்குத் தீங்கு நினைத்தவனாய் எனக்கு ஒருகண் குருடாகட்டும் என்றுசொல்லி இரண்டாந்தடவை உருட்டினான் உடனே அடுத்த வீட்டானுக்கு இரண்டு கண்களும் போய்விட்டன. என் வீட்டிற் பாதி பூமிக்குள்ளமுழுந்திப் போகட்டுமென்றுச் சரித்து மூன்றாந்தரம் பாச்சிகையை யுருட்டினான் பக்கத்து வீட்டுக்காரன் வீடு பூர்த்தியாக முழுகிப்போய்விட்டது. இப்படியாகவே இவன் தனிமையாக விருக்கக்கண்டு இவன் வேலைக்காரர்களெல்லாரும் ஒருங்குசேர்ந்து நன்றாய்ப்புடைத்துவிட்டு ஆஸ்தியாவற்றையு மெடுத்துக் கொண்டு ஒரு படவிலேறி யோடிவிட்டார்கள். அப்போழ்தவன் 'ஐயோ என் பொறாமையினாலல்லவா இப்படி நேரிட்டது. இந்த துர்க்குணத்தினால் நான் அயல் வீட்டார்களைக் கெடுக்காமலிருக்கும் பட்சத்தில் ஒத்தாசையே செய்திருப்பார்களே. ஒத்தாசையே செய்யாவிடினும் அவர்களிருக்கிறார்களென்கிற பயத்தினால் மற்றவர்கள் என்னை இப்படி இம்சிக்கத் துணியார்களல்லவா" என்று கூக்குரலிட்டுக் கதறினான். ஆனாலவனைக் காது கொடுத்துக் கேட்பார் யாருமில்லை.

THE VIVEKACHINTAMANI.

This magazine is devoted to the diffusion of knowledge and to the "Children's movement." The commendable zeal of the Editor, Mr. C. V. Swaminathan, in promoting the cause of children's education, and in making them to realise their duties, rights and responsibilities, has earned for him an enviable name. The first few pages are devoted to the utterances of Lord Hardinge and his parting message to the students, when the honour of LL. D. was conferred upon him by the Bombay University. This is followed by a dedicatory epistle addressed to Sir Sankaran Nair, the first Indian Member in charge of Education. The Editor advocates the necessity of encouraging the study of vernaculars, on the strength of the pronouncements of Lord Hardinge as the Head of the State, and Sir Rabindranath Tagore, the "Poet-Laureate of Asia," as representing the ancient wisdom of India, "raising their voice against the vehicle of education being in a foreign language, to the detriment and neglect of the vernaculars of the country." The stray thoughts of a youthful ascetic, who gave up his all to attain emancipation from bondage, are also embodied in a chapter under various heads; *i.e.*, bravery, time, self-exertion, etc.

THE NEW INDIA *dated 21st June*, 1916.

"WHAT INDIA WANTED AT PRESENT WAS A RELIGION OF POWER."

Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

"Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

'HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."



அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** **"Approved"**

புத்தகம். 24.] நளஸு ஆடிமீ, 1916ஸு ஜூலைமீ [சஞ்சிகை 4.

"THE IMMEDIATE NEED FOR INDIA"

SIR JOHN WOODROFFE ON INDIAN STUDENTS.

The Hon'ble Justice Sir Woodroffe presided on Saturday at the sixth anniversary meeting of the Calcutta Friends' Sunrise Literary Club, held in the Bharat Sangit Samaj and made an interesting speech. He thanked them for the honour they had done him and said he had not hitherto generally presided at meetings as he had other work to do. This was doubtless social service, but one could not render it in all kinds. However, the solicitation of a friend and interest in the student had brought him there that day, the more readily that the students had lately been severely spoken of. He felt more happy when in the company of students than in most places for youth with its *balbuddhi*, to which their Sanskrit address referred, was both sincere and hopeful—two qualities which a large number of people lost as they grew up through their ambitions and disillusions. Only a week ago an Indian friend (perhaps under the influence of the abnormal heat) had said to him: "This is a dead country," to which he replied. "Only those who are dead believe themselves to be so" and asked: "Is the Indian student dead?" His friend had to admit that his hopes were there. But he (Sir John Woodroffe) said his confidence was there. The students had been much criticised of late, but if he judged them right they would not be depressed over it. For himself he was not alarmed at their condition Nothing in the world was perfect nor wholly worthless as the Sanskrit proverb ran. Every good quality carries with it the liability to certain defects. The broad way of looking at matters was to see whether the qualities outweighed the defects.

The students had faults (who has not ?), but these were connected with certain qualities of energy and self-respect which they had acquired and which are in themselves praiseworthy. Of course all wished the defects away, but speaking for himself he would rather they had these faults than that they should be torpid, servile and lacking in self-respect. For himself he saw in the students the commencement of a future of great worth. He was glad to hear that the students had got up the Club themselves. This showed activity and indep€ndence, and that it was not merely one of those ponds which well meaning persons had made in order that they might more easily angle for the young idea. They should, however, have a definite notion of what they intended to do. This and other Indian clubs should be centres of Indian life and thought and generators of Indian power. The world was a manifestation of divine power (Shakti) and each man was himself a centre of it being a fragment (Angsha) of that great Power. They must be true to the lines on which by the divine imagining (Kalpana) they had been laid. That is they must also, like human artists do, work to type.

This meant they must not imitate any foreign people, but be Indian, and shape themselves as such by the study of the literature, art, philosophy and religion of their ancestors. As they knew they owed a debt to the Pitris, who would not give their aid if ignored. Each must be true to himself and his type. But as they asked respect for themselves they must give it to others who might rightly incite them to develop new qualities in themselves in forms conformable to their own type and nature. But this was a different thing to putting on second-hand clothes borrowed from the shop of servile imitation. He had recently read a prospectus of studies for an Indian school in which there was not a single item which showed that the boys were Indian. By all means let them learn about and be helped by the example of other countries, *but do not forget their own. If they took what others could give let them assimilate it so that it became not others but their own.* In this way the fire of the Indian spirit would burn, and the more intensely by the fuel it fed on. There would then be an Indian Homa fed with what was of worth gathered elsewhere. Each should thus realise himself as a centre of Power and firmly will their own good and that of their country. *What India wanted at present was a religion of Power. The other side of the Spirit she knew better than any. By power he did not mean merely physical force.* He was glad to say that every day such advice as he had to give became less necessary. Much progress had been made towards self-realization during the quarter of a century in which it had been his privilege to live in this sacred country. He was always endeavouring to read the future of it, and nowhere could it be with more certainty read than in the minds and bodies of the Indian student. *In the world-play let theirs be a truly Indian part.* He concluded with the Sanskrit Mantra said by teacher and disciple before study of the Vedas which he said was a fit prayer for all students and moreover their very own : "May God protect us both. May He grant to us both aid. May we two work with all our strength. May our study be with understanding. May there be no dissension between us."—*The Bombay Chronicle.*

Civilization—Ancient and Modern.

"The pandemonium that is going on in Europe shows that modern civilization represents forces of evil and darkness whereas the ancient, *i.e.*, Indian civilization, represents in its essence the divine force. Modern civilization is chiefly materialistic as ours is spiritual. Modern civilization occupies itself in the investigation of the laws of matter and employs the human ingenuity in inventing or discovering means of production and weapons of destruction ; Ours is chiefly occupied in exploring spiritual laws. Our Shastras lay down unequivocally that a proper observance of truth, chastity, scrupulous regard for all life, abstention from coveting other's possessions and refusal to hoard anything but what is necessary for our daily wants, is indispensable for a right life ; that without it a knowledge of the divine element is an impossibility."—MR. M. K. GANDHI *at the 'Gurukula' Anniversary.*

THE VIVEKA CHINTAMANI.—We have received the first three numbers of the new volume which begins from April last and find them maintaining their usual high level of excellence. It is needless to say much on the consistent and strenuous endeavours of the journal for the cause of children's education. It deserves to be widely patronised by all educational institutions and lovers of education.—*The "Hindu" dated 28th June 1916.*

புஸ்தகம்-24.] [சஞ்சிகை-4

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

நள வரு ஆடி மீ } விவேக சிந்தாமணி { July-August 1916.

ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழுவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

"THE IMMEDIATE NEED FOR INDIA."

இந்தியாவுக்கு இப்பொழுது அத்யாவசியமாக வேண்டியதென்ன!

"*In general terms a proper religious spirit is the greatest and most immediate need*" *for India.*—MR. M. K. GANDHI.

"*What India wanted at present was a religion of Power. The other Side of the Spirit she knew better than any. By power he did not mean merely physical force.*"—SIR JOHN WOODROFFE.

ஐரோப்பாமுழுவதும் அமர்க்களமாகி ஒருவரையொருவர் ஹதம்செய்யக் கங்கணம்கட்டி ஏராளமான உயிர்கள் அமர்க்களத்தில் நஷ்டமாவதன்றி பொருள்நஷ்டமும் ஆய்க்கொண்டு வருவது எல்லாருக்கும் யோசனையை உண்டு பண்ணி வருகிறது. "வல்லான் வகுத்தது வாய்க்கால்" என்றபடி தேஹபலமும் சைனிய பலமும் உடையஜாதியார் தாங்கள் இட்டதே சட்டமாக நடைபெற வேண்டுமென்று துணிந்து அசுரபாவங்கொண்டு எல்லாரையும் தங்களுடைய சம்பத்துக்குதவும் ஊழியர்களாக்கிக் கொள்ள யத்தனித்தது அநர்த்தமாய் முடிந்திருக்கிறது யாவருமறிந்த விஷயம்.

இப்படி ஜீவகாருண்யமின்றி காட்டுமிருகங்களை வேட்டையாடுவதுபோல் ஜனங்களையும் நாடு நகர்களையும் வேட்டையாடி யழித்து அஹம்பாவம் மிகுந்து ஸ்வநலமொன்றையே சிந்தித்துக் காரியசாதனை செய்துவருவது "கெடுவான் கேடுநினைப்பான்" என்றபடி பிறர்க்குக்கேடாய் முடிவதன்றி தனக்கும் கேடு விளைப்பதாயிருக்கிறது என்பது ஸ்பஷ்டமாய் விளங்குகிறது. ஆதலால் இந்தப் பாரதப் போரில் சம்பந்தப்பட்ட எல்லாரும் மற்றவர்களும் இப்போருக்குப் பின் இவ்விதமான கேடு நேரிடாதபடி ஜனசமூகத்தையும் துரைத்தன ஏற்பாட்டையும் சீர்திருத்தி ஜனக்ஷேமத்துக்கு அனுகுணமாகவுள்ள வழியில் ப்ரவிருத்தி யுண்டாகும்படி பார்க்கவேண்டுமென்று சிந்தித்து வருகிறார்கள். இந்தச்சிந்தனை இந்தியர்களாகிய நம்மவர்களுக்குமுண்டு. சீர்திருத்தக்காரர்கள் சீர்திருத்தங்களின் மேல் கண்ணாயிருக்கிறார்கள். சண்டைக்காரர்கள் சண்டைக்கு முஸ்தியாயிருப்பதே வழியென்கிறார்கள். சோம்பேறிகள் (தாமஸகுணமிகுந்தவர்கள்) "யார்வந்தால் என்ன? நமது கஷ்டங்களும் நஷ்டங்களும் நம்மோடே! நமக்குக் கதிமோக்ஷமில்லை" யென்று மனம்சோர்ந்து மங்கிக் கிடக்கிறார்கள்.

இந்தச் சமயத்தில் திரிகாலத்தையும் சிந்தித்து முன்னதற்குப்பின் முறைமையும் இனி வருவதற்கு ஏற்றபடி இப்பொழுதே நமக்கு வேண்டிய சாதகங்களைத் தேடிக்கொள்ள வேண்டுமென்று வருமுன்காப்போனைப்போல் முன்யோசனை செய்கிறவர்கள் அபிப்பிராயம் என்னமாயிருக்கிறதென்று தேர்ந்துணர்வது நலம். அது அவசியமுமாகும். இப்படிச் சமஷ்டி நலம்கோரி ஆலோசனைசெய்து உண்மையை உரைக்கத்தக்கவர்கள் முனிவர்களும்

இருஷிகளுமே ஆவர். முனிகள் என்றால் தீரத்தெளிய மனதை யடக்கியாண்டு சிந்திக்கத் தக்கவர்கள். இவர்களை "Thinkers" என்றுசொல்லுவர். இருஷிகள் என்போர் வாக்குமனம் கடந்துள்ளவிடத்தில் உண்மையை உள்ளபடி பிரத்தியக்ஷ சாக்ஷாத்காரமாய்ப் பார்த்து அதனால் "பார்ப்பான்" (Seers) என்று பேர்பெற்றவர்கள். இவர்கள்தான் த்ரிகாலஞானிகள் என்னப்படுவர். திரிகால சிந்தனைக்கும் திரிகால ஞானத்துக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில் : திரிகாலசிந்தனை காலவர்தனைத்துக் குள்பட்டதுவும் திரிகால ஞானம் காலவஞ்சனத்துக் குள்பட்டதுவு மென்று சொல்லலாம். அதாவது,

ஒன்று காலதேச வர்த்தமானங்களுக்குள்பட்டு அவைகளைக்கொண்டு தானே தீரத்தெளிந்து துணிந்து நடத்தலுக்கு சாதகமாகும்.

மற்றொன்று காலதேச வர்த்தமானங்களுக்கப்பால் ஸநாதநமாயுள்ள தர்மத்தையுணர்ந்து உணர்ந்தபடி ஸ்வானுபவத்தில் சாக்ஷாத்கரித்து அதனாலுண்டாகும் நைஷ்கர்மஸித்தியினால் உலகுய்யக் கர்மத்தி லீடுபட்டவர்போல் காட்டி கர்மதர்மமுணர்த்தி நல்வழிகாட்டி நயம்பட உண்மையை உரைப்பாராவர்.

இப்படி முனிகளும் (Thinkers), இருஷிகளும் (Seers) காட்டும்வழியை யனுசரித்து நடக்க கர்மவழியிலிறங்கி கர்மபந்தத்தைக் கடந்தவர்களான கர்மயோகிகளும் இருக்கவேண்டும். இம்மூவரும் மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாவார்கள். இவர்களுக்குச் சமஷ்டிசேவையே பூஜை. சமஷ்டி தர்மமேசட்டம். சமஷ்டி யோகக்ஷேமமே ஐசுவரியம். இம்மூவர்களும் இல்லாத நாடு தட்டுத் தடுமாறிக்கொண்டும் இடறி விழுந்துக்கொண்டுந்தான் செல்லவேண்டும்.

"TO THINE OWN SELF BE TRUE."

"ஸ்வதர்மத்தைக் கைவிடாதே."

யாரும்—பிரத்தியேக நபர்களாயினும் சரி, சமஷ்டி ஜனசமூகமாகிய தேசத்தாராயினும் சரி, ஸ்வதர்மத்துக்கு விருத்தமாய் நடக்கக்கூடாது. ஏனெனில் எள்ளுப்போட்டால் கொள்ளுமுளைக்காது. அதுபோல யாரும் பிராகிருதத்தில் இயற்கை தர்மத்துக்கு விரோதமாக நடக்கமுடியாது.

சமஷ்டி-வியஷ்டி பேதம் பாவனுமாத்ரத்திற் குண்டேயன்றி, தர்ம சம்பந்தப்பட்டமட்டில் பேதமே கிடையாது. அது எப்படியென்றால் தோப்பும் மரமும் பாவனையில் பேதப்படுமேயன்றி, பீஜாங்குர தர்மத்திலாவது வளர்ச்சிதர்மத்திலாவது பேதம் சிறிதும் காணப்படமாட்டாது. வித்துப்போலவே முளையும் இருக்கும். ஒருவித்திலிருந்து கிளம்புமுளை அந்த ஜாதியின் தர்மத்தை யனுசரித்திருப்பது போல ஒருதோப்பு முழுவதிலுமுள்ள மரங்களும் வித்துக்களும் அதேமாதிரி அததன் ஜாதியின் தர்மத்தை யனுசரித்தேயிருக்கும். எள்ளுப்போட்டால் கொள்ளு முளைக்காதது போல, எள்ளையும் கொள்ளையும் கலந்து விதைத்தாலும் அப்போதும் அதே தர்மம்தான் விளங்கும். பீஜக்கலப்பினால் அங்குரம் (முளை) தன் ஸ்வதர்மம்விட்டுப் பிசகாது. அதுபோலவே ஒவ்வொரு தேசத்தாரும் அத்தேசத்திலுள்ள ஒவ்வொரு ஜாதிவர்ணத்தாரும் அவரவர்கள் ஸ்வதர்மத்தை யனுசரித்து நடக்கவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் முயற்சி பலனைத்தரும். ஸ்வதர்மத்தை வளர்ப்பதென்றாலும் "They must work to type" என்றாலும் இரண்டும் ஒன்றுதான். பீஜத்தில் (வித்தில்) மறைந்திருக்கும் மரத்தின் உருவம் எதுவோ அதுவே அந்த வித்தினின்றும வெளியாவது ஸ்வதர்மம் (working to type or being true to type). இதை ஸர் ஜான் வூட்ராப் அவர்கள் நன்றாக வற்புறுத்திக் கூறியிருக்கிறார். வான்கோழி மயிலாகாதது போலவும் புலித்தோல்போற்றிய கழுதை புலியாகாததுபோலவும் ஸ்வதர்ம விருத்தமான முயற்சி கர்மதர்மத்துக்கு விரோதமாயிருக்கிற காரணத்தினால் தர்மபலனைக் கொடுக்காது,

162030

"பிள்ளையார்பிடிக்க குரங்காய்முடிந்தது" என்றது இதற்கே சொல்கிறது. ஸ்வதர்மத்துக்கு விரோதமான முயற்சி "நினைத்தது முடிக்கும் ஆற்றலை" உண்டுபண்ணாது வில்லங்கத்தையே உண்டுபண்ணும். அதாவது இடையில் விக்கினங்களை நிவர்த்திக்கச் சக்தியற்றதாய் மேன்மேலும் விக்கினங்களை யுண்டுபண்ணுவதாகும். நிர்விக்கினமாக ஒரு காரியத்தைச் செய்து முடிக்க வேண்டின் ஸ்வதர்மத்துக்கு விரோதமின்றி முயற்சிக்கவேண்டும். விரோதப்பட்டால் இயற்கைவிரோதம் நேரிடுவதால் நாம் எதிர்பாராத விக்கினங்களெல்லாம் நேர்ந்து நாம் எண்ணினது எண்ணினபடி நிறைவேறாது. நாமொன்று நினைக்க அது வொன்றாகமுடியும். இது இந்த மகாபாரதப்போரில் ஜெர்மானியர் விஷயத்தில் நிதரிசனமாக விளங்கியது "விவேகசிந்தாமணி யுத்தகாண்டத்தை" வாசித்துள்ள எல்லாருக்கும் விளங்கும். ஆகையால் சமஷ்டி-வியஷ்டி யிரண்டிற்கும், தர்மம் ஒன்றே. தர்ம பேதமில்லாதவிடத்துக் கர்மபேதம் உண்டாகக் கற்பிப்பது சணப்பன்வீட்டுக் கோழி போல் வீணாகத் தானே விலங்கிட்டுக் கொள்ளுவதாகும். ஆகையால் கர்மம், தர்மம் ஆகிய இரண்டிற்குமுள்ள இயற்கை உறவு மறக்கக்கூடாதது. அதற்குத்தான் ஸ்வதர்மம் என்று சொல்கிறது. அந்த ஸ்வதர்மத்தையறிந்து அனுஷ்டிப்பதற்குச் சாதனமாக ஏற்பட்டது "வர்ணாச்ரம தர்மம்." இந்த "வர்ணாச்ரமதர்மத்தை" அனுசரிக்கிறவர்கள் இலகுவில்தானே (சுலபமாக) ஸநாதநதர்மத்தின் மர்மத்தை யுணர்வார்கள். எப்படியென்றால் ஒருஜாதி வித்தைப் பயிர் செய்கிறவன் பயிரின் செழுப்பினால் தன் உழைப்பின் பலனை யனுபவிப்பதோடு வித்திலிருந்து முளைகிளம்புகிற பொதுதர்மத்தையும் நன்றாக உணர்கிறான். உழைப்புக்குத் தக்க கூலி இகத்துக்கேற்ற சாதனமென்றும், பிரதிபலனை நாடாதுழைக்கும் உழைப்பு ஸநாதநமான தர்மத்தை விளக்குவதால் அது பரசாதனமென்றும் சொல்லப்படும். ஆதலால் ஸ்வதர்மத்துக்கு விரோதமின்றி யுழைப்பது இகபரசாதன மிரண்டையுமளிக்கும். ஆதலால் தான் கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்கு ஸ்வதர்மானுசரணை வேண்டுமென்று அதன் முக்கியத்தை வற்புறுத்திப் போதித்தார். அதையே தான் ஸர் ஜான் வூட்ராப் அவர்களும் உள்ளபடி கிரகித்து இக்காலத்துக்கேற்றதாய் இந்திய மாணவர்க் குபதேசித்திருக்கிறார். மிஸ்டர் எம். கே. காந்தியவர்களும் குருகுலபாடசாலை வருஷோற்சவகாலத்தில் பேசினபோது இந்தியாவுக்குத் தற்காலம் அவசியமாகவேண்டியது என்னவெனில் "சரியான மதசிந்தனை"—"a proper religions Spirit" என்று சொன்னார்.

சரியான மதசிந்தனை.

சரியானமதம் எக்காலத்தும் எத்தேசத்தும் எல்லாருக்கும் சாசுவதமாயுள்ள உண்மையொன்றெதுவோ அதையே போதிப்பதாகும். அதற்கு ஸத்தியமதம் என்றும் பேருண்டு. அந்த ஸத்தியமதசிந்தனை ஸத்தியத்தையே பெறச்செய்யும். ஏனெனில் "யத்பாவம் தத்பவதி" என்பது மனோதர்மம். ஸத்தியமாயுள்ளது (அழியாததாயுள்ளது) ஆத்மா என்று சொல்லும் அறிவு ஒன்றே. அந்த அறிவைப் பெற்றனுபவிக்க உழைப்பதே உண்மைத் தர்மத்தின்முடிவும் ஸத்தியமதத்தின் பலனுமாகவிருக்கிறது. ஜடசக்தியிலும் ஜீவசக்தி பெரியது. ஜீவசக்தியிலும் ஆத்மசக்தி பெரியது. ஜடப்பொருளில் அறிவு (ஆத்மா) துயில் கொண்டிருக்கும். ஜீவப்பொருளில் அறிவு (ஆத்மா) ஸ்வப்னஸ்திதியிலிருக்கும். இச்சாமாத்திரமாக விளங்கும் ஸ்வாத்மக ஸ்வரூபத்திலோ (ஆத்மா) அறிவு விழித்திருந்து லீலை செய்யும். அதனுடைய லீலையினால் "ஆக்கியதனைத்தும் ஆயது அதனால்." அப்படிப்பட்ட மதசிந்தனையிருந்தால் உலகத்தில் யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை. "Cultivate Will-Power" என்று சொன்னாலும் "ஆத்மசிந்தனையோடு இரு" என்று சொன்னாலும் இரண்

JL
Rm211, M92
M92.24

டும் ஒன்றே ஆகையால் இந்தியாவுக்கு இப்பொழுது அத்யாவசியமாக வேண்டியது இந்த சக்தியைவளர்த்து விளங்கச்செய்யும் மதமே. இந்தச்சக்தி விளங்கப்பெற்றால் அந்த பாக்கியம் பெற்றவர் "நாவசைய நாடசையும்" என்பது உண்மையாக சித்திக்கும். அவர்களே இந்தியாவுக்கு வழிகாட்டிகளாவார்கள் என்பது உண்மை ஞானமுள்ள ஆங்கிலேயர்கள் இந்தியர்கள் இருதரத்தாருடைய அபிப்பிராயமும் என்பதுவிளங்க ஸர் ஜான் ஊட்ராப் அவர்களுடைய உபதேச மொழியையும் மிஸ்டர் எம். கே. காந்தியவர்களுடைய சித்தாந்தமான அபிப்பிராயத்தையும் மேலே யெடுத்து விளக்கியிருக்கிறோம்.

FACILITIES FOR TRAINING OF MEDICAL STUDENTS IN RURAL AREAS.

நாட்டுப்புறத்தில் வைத்தியாப்பியாசம் செய்வோர்க்கு வைத்திய பாடசாலை.

1916௵ ஜூலை௴ 1௳ முதல் சென்னை கவர்ன்மெண்டார் நாட்டுப்புறத்தில் வைத்தியாப்பியாஸம் செய்வோர்க்குச் சாதகமாக கள்ளிக்கோட்டையில் ஒரு புதிய "மெடிகல் ஸ்கூல்" ஏற்படுத்தியிருக்கிறார்கள். சென்னையிலுள்ள இராயபுரம் மெடிகல் ஸ்கூலில் வழக்கமாகச் சேர்த்துக்கொள்கிற தொகையைவிட இன்னும் 30 பேர்களை அதிகமாகச் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறார்கள். தஞ்சாவூர், விசாகப்பட்டணம் மெடிகல் ஸ்கூல்களை விர்த்திசெய்ய உத்தேசித்தும் யுத்தமுடக்கடியினால் தற்காலம் சாத்தியப்படவில்லை. ஆனாலும் அதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இச்சென்னை இராஜதானியில் இப்பொழுது நான்கு மெடிகல் ஸ்கூல்கள் இருக்கின்றன. இந்த நான்கு வைத்திய பாடசாலைகளிலும் இப்பொழுது 200 மாணாக்கர்கள் வைத்தியம் கற்றுக் கொள்ள சாதகம் ஏற்பட்டிருக்கிறது. ஏப்ரல்௴ 7௳ கூடிய சட்டநிரூபணசபையில் இது விஷயமாய் கொண்டுவந்த ஒரு தீர்மானத்தை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டதின்மேல் இந்தமாதிரி அதிகப்படி சாதனங்கள் அளிக்க ஏற்பாடு செய்யலானார்களென்று ஜூலை௴ 9௳ யன்று சமாசாரம் தெரிவித்திருக்கிறார்கள்.

SIR JOHN WOODROFFE ON INDIAN STUDENTS.

நமது வாலிபர்களாகிய மாணவர்களைப் பற்றி ஸர்ஜான் ஊட்ராப் சொல்லியது.

ஸர்ஜான் ஊட்ராப் அவர்கள் கல்கத்தா ஹைகோர்ட்டு ஜட்ஜிகளில் பிரக்கியாதி பெற்ற ஒருவர். அவர் சென்ற ஜூன்௴ கல்கத்தாவிலுள்ள மாணவர் சங்கம் ஒன்றின் வருஷோற்சவத்தன்று அக்கிராசனம் வகித்தபொழுது நமது வாலிபர்களாகிய மாணவர்களைப்பற்றி அவருடைய அபிப்பிராயத்தை வெளியிட்டுப் பேசினார். அது உண்மை நிறைந்துள்ள உத்தம உபதேசமாக விருப்பதால் அவருடைய உபதேச மொழிகளை எல்லாரும் கேட்டுப் பயன்படும்படி கீழே யெடுத்துரைக்கிறோம்.

அந்த மாணவர் சங்கத்தின் பேர் "Calcutta Friends' Sunrise Club"—கல்கத்தா நேசர்கள் அருணோதய சங்கம். அவர்கள் கூட்டம் கூடிய இடம்: பாரத சங்கீத சமாஜ மாளிகை. இப்படிப்பட்ட கூட்டங்களில் அவர் அக்கிராசனம் வகித்ததில்லை. ஏனெனில் அவருக்கு வேறுள்ள வேலைகள் இதற்கு அவகாசம் கொடுப்பதில்லை. ஆயினும் ஒரு நேசர் வற்புறுத்தியதின்பேரிலும் அவருக்குச் சிறுவர்களிடத்திலுள்ள இயல்பான அன்பினாலும் அந்தக் கூட்டத்திற்கு அக்கிராசனாதிபதியாக விருக்கும் பொறுப்பை வகிக்கச் சம்மதித்தார். தன்னை அக்கிராசனம் வகிக்கச் சொன்னதற்காக வந்தனங்கூறி அவர் அங்கே வந்ததற்கு மற்றொரு காரணமாகக் கல்கத்தா மாணவர்களைப்பற்றிக் கடுமையாகச் சமீபத்தில் சிலர் பேசியதைக் குறிப்பிட்டுக் கூறினார்.

"குழந்தையும்தெய்வமும் கொண்டாடுமிடத்தில்"

என்பது பழமொழி. அப்படியென்றால் தெய்வம் உண்டென்று கொண்டாடுகிறவர்களுக்கு பிரத்தியக்ஷமாய் உளனாகவும், இல்லை யென்று மறுக்கும் நாஸ்திகர்க்கு ஒளித்து இல்லனாகவும் தோன்றும் இலக்ஷணம் போல

குழந்தைகளும் அவர்களுடைய மாசற்ற தன்மையை யறிந்து கொண்டாடுகிறவர்களுக்கு சம்பத்துக் காரணமாகவும் மற்றவர்களுக்கு விபத்து ரூபமாகவு மிருக்கிறார்களென்பது அர்த்தம். குழந்தையை அறிந்து வளர்ப்பது தெய்வத்தை யறிந்து வணங்குவதுபோல் மிகவும் கஷ்டசாத்தியமான உத்தம வித்தை யென்றும் அர்த்தம் கொள்ளும். "பாலபுத்தி ஞாலத்திற் சீலம்." இந்த நிலவுலகில் மேன்மை பெற்று விளங்குவது பாலபுத்தி (Child Mind). பாலபுத்தி யென்றாலும் குழந்தைமனம் என்றாலும் ஒன்றே.

"BALABUDHI WAS BOTH SINCERE AND HOPEFUL"

"குழந்தைமனம் கோணாது"

பாலபுத்திக்கு அவர் இரண்டு உத்தம லக்ஷணங்கள் சொன்னார். ஒன்று (Sincerity) உண்மைக்குணம்; மற்றொன்று: (Hopefulness) மனவெழுச்சி அல்லது சித்திஸாதனம். "எண்ணினேன் எண்ணமிது ஸ்வாமி" என்றார் போல குழந்தைகள் எண்ணம் உண்மைக்குணவிசேஷத்தால் ஸித்திஸாதனமாக விருக்கிறது. "சங்கல்பம் வீண்போகாது" எல்பது ஒரு மேலான உண்மையைக் குறிக்கும் முதுரை. சங்கல்பம் என்றாலும் நினைவு என்றாலும் எண்ணம் என்றாலும் ஒன்றே. இவ்விரு குணங்களும் பாலபுத்திக்குள்ள லக்ஷணங்கள். சித்தசுத்தி விசேஷத்தால் அவை உத்தம லக்ஷணங்களாக அமைந்து மனவெழுச்சியை யுண்டுபண்ணுகிறது. மனவெழுச்சிக்குத் தான் Hopefulness என்று சொல்கிறது. மனம் என்பது நினைப்பும் மறப்புமே தொழிலா யிருக்கப்பட்ட ஒரு கருவி. மறப்பிலா நினைப்பு ஸித்திசாதனம் ஆகும். அது உயிர்க்கு உவமையுமாகும். நினைப்பிலா மறப்போ மரணத்துக்கு உவமானமாகும். ஆதலால் தான் பெரியோர் "நினைப்பும் மறப்பும் பிறப்பும் இறப்புமாம்" என்று கூறியிருக்கிறார்கள். உண்மைக் குணமுள்ள விடத்தில் மனவெழுச்சியும் கூடவேயிருக்கும்.

இவ்விரு லக்ஷணங்கள் பாலபுத்திக்கு இயற்கையாக அமைந்துள்ளவை. வயதாக ஆகப் பெரும்பாலார் ஆசைப்பட்டு மோசம்போய் அறிவிழந்து போவதால் புத்தி சூக்ஷ்மம் கெட்டு அதன் பால லக்ஷணங்களை யிழந்து விடுகிறார்கள். இதை வற்புறுத்தி இதற்கு உதாரணமும் ஒன்று சொன்னார். அவர் பேசியதற்கு ஒரு வாரம் முன்னால் தான் அவருடைய இந்தியநண்பர் ஒருவர் (உஷ்ணத்தின் கொடுமை பொறுக்காமலோ என்னமோ) "இந்தியா தேசம் செத்ததோடு சேர்த்தி" யென்று சொன்னார். அப்படியென்றால் இத்தேசத்து ஜனங்கள் செத்தவர்களைப்போல் நடைப்பிணமாக நடமாடி வருகிறார்கள். அவர்களுக்கு கதிமோக்ஷம் இரண்டுமில்லை யென்றபடி. அதைக் கேட்டதும் ஸர்ஜான் ஊட்ராப் அவர்கள் "செத்தார் சாக்காடு காண்பார்"—ஆனால் "இந்திய மாணவர்கள் எப்படி?" யென்று கேட்டார். "அவர்கள் தான் மனவெழுச்சியை யுண்டுபண்ணுகிறார்கள்." (இந்தியா முன்னுக்கு வரலாம் என்கிற மனவெழுச்சி.) அவர்கள் இந்தியா முன்னுக்கு வருமென்கிற உறுதி நம்பிக்கைக்கு இருப்பிடமா யிருக்கிறார்கள் என்று ஸர் ஜான் ஊட்ராப் அவர்கள் சொன்னார். "நெல்லுக்குமியுண்டு."

மாணவர்கள் நடத்தையைப்பற்றிப் பலர் குற்றங்கண்டு பேசியிருப்பதைக் குறிப்பிட்டு அந்தக் குற்றங்கள் அவர்களுக்குண்டாயிருக்கும் மனோசக்தி, தன்மதிப்பு இவை காரணமாக எழுந்தவையாக விருத்தலால், அவை காலக்கிரமத்தில் நீங்கிவிடும் என்று சொன்னார். இவ்வுலகில் குணமும் குற்றமும் மிச்ரமித்து (கலந்து) சிக்குமுக்கலாய்ப் பின்னிக் கிடக்கிறது. ஆதலால் "குணம் நாடிக் குற்றமும் நாடி, மிகைநாடி, மிக்கக் கொளல்" தானே தர்மம் என்று சொன்னார். "நெல்லுக்குமியுண்டு, நீர்க்குநுரையுண்டு, புல்லிதழ் பூவுக்குமுண்டு"—ஆகையால் குற்றமில்லாத நற்றம் உலகில் இல்லை. ஆகையால் குற்றநற்றங்களை யாராய்ந்து எது மேலாய் மிகைப்

பட்டிருக்கிறதோ அதையே நாம் கொள்ள வேண்டும் என்றார். தன்மானம் அல்லது தன்மதிப்பின்றி கூழைக் கும்பிடு போட்டுக் கொண்டு மந்தமதிகளா யிருப்பதைவிட, தன் மதிப்பும் கூர்மைபுத்தியு மமைந்துள்ளவர்களாய் அவற்றோடு சம்பந்தப்பட்ட குற்றங்களுமிருப்பது நல்லது என்று சொன்னார்.

"சக்தியுற்பன்ன ஸ்தானங்கள்."

இந்த மாணவர் சங்கம் பாலர்கள் தம்மாலேயே தன்முயற்சிகொண்டு ஏற்படுத்தப் பட்டதென்று கேட்க அவர் சந்தோஷப் பட்டார். ஏனெனில் அதனால் அவர்கள் சுறுசுறுப்பு புத்தியும் ஸ்வதந்திரப் பிரியமும் உள்ளவர்களென்று காட்டியது. சில மாணவ சங்கங்கள், ஸ்வகாரியப் புலிகளாயுள்ளவர்கள் தங்கள் காரியசித்தியார்த்தம் தூண்டில் போட்டு மீன்பிடிக்கக் குளம் ஏற்பட்டது போல், தங்களுடைய காரியசித்திக்குச் சாதனமான பாலபுத்தியைத் தம் . வசப்படுத்திக் கொள்வதற்காக ஏற்பட்டவையாக விருப்பதுண்டு. இந்த சாமாஜம் அப்படியில்லை. அந்தமட்டும் விசேஷந்தானானாலும் அவர்கள் அஃதோடு திருப்தியடையக்கூடாது. அவர்கள் உத்தேச லக்ஷியம் விளங்கச் சாதகசாதனங்களை உளவறிந்து உபயோகிக்கவேண்டும். அதற்கு லக்ஷியத்துக்கேற்ற லக்ஷண மின்னதென்று நன்றாகத் தெரிந்திருக்கவேண்டும். "இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புவர் புலவனார் என்பர்" ஆயினும் லக்ஷணமின்றி லக்ஷியானுபவம் ஸித்திப்பது துர்லபம். ஆதலால் இன்னதை யுத்தேசித்து இன்ன செய்கிறோமென்கிற குணம் குறி (லக்ஷியலக்ஷணம்) தெளிவாக அவர் மனதிற் பதிந்திருக்கவேண்டுமென்று சொன்னார். இதுவும் இந்த மாணவர் சங்கத்தைப்போன்ற இதர சங்கங்களும் இந்தியாவுக்குப் பிரத்தியேக லக்ஷணமாயமைந்துள்ள குணங்களும் எண்ணங்களும் உத்ஜீவித்துப் பிரபல விருத்தியாவதற்கு மூலஸ்தானங்களாக விருக்கவேண்டும் என்றும் இந்தியாவின் சக்தியுற்பன்ன ஸ்தானங்களாக விருக்க வேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறினார்.

இந்தியர் கொள்கைப்படி இந்தப் பிரபஞ்சமெல்லாம் பராசக்தியிலிருந்துண்டாகி விளங்குகிறது என்றும் ஒவ்வொருவரும் அந்தச் சக்தியின் அம்சமாய் விளங்குகிறாரென்றும் உள்ள உண்மையை அவர்கள் மனதிற் பதியக் கூறி, ஈசுவர சங்கல்பத்துக்கு ஒத்தவரா அவர்கள் உழைக்கவேண்டுமென்று சொன்னார். அதாவது இந்திய லக்ஷிய லக்ஷணங்களுக்குரிய மாதிரி பிசகாமல் அவர்கள் வியஷ்டிபாவங்கள் சமஷ்டிபாவத்துக்கு ஒத்து விளங்க உழைக்க வேண்டுமென்று சொன்னார்.

பித்ரு பக்திவேண்டும்.

இப்படி யிருக்கவேண்டுமானால் அவர்கள் அந்நியதேசத்தாரைப் பார்த்து அவர்கள் மாதிரி நடந்துகொள்ளவேண்டி அவர்களைப் பார்த்து நடிப்பது கூடாது. இந்தியர்கள் இந்தியாவுக்குரிய லக்ஷிய லக்ஷணங்களைக் கைவிடாது அவர்களுடைய பூர்வீக கிரந்தங்கள், தத்துவசாஸ்திரங்கள், மதசித்தாந்தங்கள் இவைகளைக்கற்று அவற்றுக்கு அனுகுணமாக விருந்து தற்காலத்துக்கேற்றபடி விருத்திக்கு வரவேண்டியது. ஏனெனில் பிரவிருத்தி மார்க்கத்துக்கு அனுக்ரக கர்த்தாக்களாயிருப்பவர்கள் பிதுர் தேவதைகள். பித்ருபக்தியில்லாவிட்டால் பித்ருக்களின் அனுக்ரகம் கிடைக்காது. அவர்களுடைய அனுக்ரகமின்றி பிரவிருத்தி மார்க்கத்தின் யோகக்ஷேம சம்பத்துக்கள் கைப்பிடியாக சித்திக்கமாட்டா. ஒவ்வொருவரும் தன் வியஷ்டி சுபாவத்துக்கும் சமஷ்டி சுபாவத்துக்கும் உண்மையாக விருக்கப் பார்த்து நடந்துகொள்ளல் வேண்டும். சமஷ்டி விக்ரகத்துக்கு ஒத்து வந்தால்தான் வியஷ்டிபாவனங்கள் பூர்ணபலனைக் கொடுக்கும் (Each must be true to himself & his type).

இரவல்புத்தி பிரயோசனப்படாது.

"நீங்கள் உங்களுடைய வியஷ்டிபாவங்களையும் அதனால் விளையும் குணங்களையும் சமஷ்டிபாவனாலக்ஷியமாகிய விக்ரக (type) த்துக்கு ஒத்ததாகச் செய்துகொண்டு அதற்காகப் பிறர் உங்களை மதிக்கவேண்டுமென்று நினைப்பதுபோல நீங்களும் இதரர்கள் தங்களுடைய சொந்த சுபாவத்துக்கும் சமஷ்டிவிக்ரகத்துக்கும் அனுகூலமான குணங்களைத் தங்களில் மட்டுமன்றிப் பிறர்களிடத்தும் விர்த்தி செய்ய வேண்டுமென்று முயற்சித்தும் தூண்டியும் வருகிறவர்களிடத்து மதிப்பு வைத்து நடக்க வேண்டும். பிறருடைய சமஷ்டி வாசனையை மதிப்பதற்கும் பிறரைப்பார்த்துக் "கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானுமதுவாகப் பாவித்துத் தன் பொல்லாச்சிறகை விரித்தாடினாற்போல்" இரவல் புத்திகொண்டு நடிப்பதற்கும் மிக்க வித்யாஸம் உண்டு. ஒன்று நன்மையும் நற்குணமும் விருத்திபெறச் செய்யும். மற்றொன்று புன்மையும் புன்னடத்தையும் விர்த்திபெறச் செய்யும். சமீபத்தில் இந்தியாவில் ஒரு பொதுப்பாடசாலை யேற்படுத்துவதற்காக விளம்பரமொன்று பிரசுரித்தார்கள். அதில் போதிக்கிறதற்கான பாடங்களை வாசித்துப் பார்க்க அதில் இந்தியாவிலுள்ள பிள்ளைகள் படிப்பதற்கானதென்று காட்டத்தக்கது ஒன்று கூடவில்லை. அந்நிய தேசப்படிப்பையும் படித்துத் தேறுவது விசேஷந்தான். ஆனால் ஸ்வதேசத்துக் குரிய வித்யாஞானமின்றி அந்நியதேசப் படிப்பு மட்டும் படிப்பது ஒரு பிரயோசனத்தையும் கொடுக்காது. இதர தேசத்தார் போதிக்கத்தக்கது என்ன வுண்டோ அதையெல்லாம் அவர்கள் கிரகித்துத் தெரிந்துகொள்ளட்டும். ஆனால் அதை இந்திய லக்ஷியங்களுக்கு அமைந்ததாகப் பக்குவப்படுத்தி உள்ளமுணர உணர்ந்து உணர்வுகொள்ள வேண்டும். இப்படிச் செய்வதனால் இந்தியாவுக்கு விசேஷ [illegible] "ஹோமாக்னி" வளர்த்து அதில் இதர தேசங்களிலிருந்து கிடைத்த ஞானத்தையும் ஹவிஸாகக்கொண்டு ஹோமம் செய்யலாம். அந்த ஹோமத்தீயில் ஆகுதி செய்யப்பட்டனவெல்லாம் இந்தியாவின் சாசுவதமான லக்ஷியங்களை வளர்ப்பதற்கான உணவாகும்.

CULTIVATE WILL-POWER.

இச்சாசக்திப் பயிர்ச்சிவேண்டும்.

இப்படியாக ஒவ்வொருவரும் சக்தியம்சமாயிருக்கிறதை யுணர்ந்து "சிதக்னிகுண்டஸம்பூதையான" தேவியின் சக்தி விளங்குவதற்கான ஆதாரமாகவும் அவர்களைச் சுற்றி அச்சக்தியின் மஹிமை விளங்கத்தக்கதாகவும் செய்துகொள்ள வேண்டும். இந்தியாவுக்கு இப்பொழுது அத்யாவச்யமாக வேண்டியது சக்தியை வளர்க்கும் மதம். சக்தி யென்றால் வெறும் ஸ்தூலபாவனையான முரட்டு பலம் என்று அர்த்தமல்ல. சக்தியென்று அவர் சொன்னது "Cultivation of Will-Power" என்று சொல்லும் இச்சாசக்தி ரூபமான சூக்ஷ்ம சக்தியின் பயிர்ச்சி. இஃதொன்றுண்டானால் ஞானசக்தியும் கிரியாசக்தியும் தானே வரும். இதையே சித்சக்தி யென்று சொல்லுவர் நம்மனோர். ஏனெனில் இச்சாசக்தியினாலேயே ஆத்மசக்தியாகிய சித்சக்தி அடையப்படுகிறது. இப்படியாக அவர்களுக்குச் சொல்லி வரும் புத்திமதிகளும் உபதேச மொழிகளும் நாளுக்கு நாள் இந்தியர்களின் ஸ்வபாவமான விவேக விர்த்தியினால் பிறர் சொல்லத் தேவையில்லாமல் குறைந்து வருகிறது அவருக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறது.

"IN THE WORLD-PLAY LET YOURS BE A PURELY INDIAN PART."

அவர் சுமார் :5-வருஷங்களாக இத்தேசத்தில் வசித்து வருகிறார். புனிதபூமியாகிய இத்தேசத்தின் வருங்கால நிலைமையை உணர்த்தும் அறிகுறிகளை யறிந்து வாசிக்க அவர் யத்தனப்பட்ட வண்ணமாயிருக்கிறார். அப்படிப்பட்ட அவருக்கு இந்திய மாணாக்கர்கள் குணத்திலும் மணத்திலும் இந்தியாவின் வருங்

கால நிலைமையை வாசிப்பது சுலபமாயிருக்கிறதுபற்றி மிக்க சந்தோஷப்படுவதாகச் சொன்னார். இவ்வுலகில் நடந்துவரும் பிரபஞ்ச நாடகத்தில் அவர்கள் எடுத்துக்கொள்ளும் பாகம் இந்தியா சம்பந்தமானதாகவேயிருக்கட்டும். இந்திய லக்ஷியங்களால் உலகுக்கு ஆகவேண்டியது நிரம்ப இருக்கிறது. முடிவாக மாணவர் கற்றுக் கடைத்தேறுவதற்கின்றியமையாததாயுள்ள குரு-சிஷ்யர்களின் பிரார்த்தனையாகவுள்ள மந்திரத்தைச் சொல்லி பாலபுத்திரும் அதைப் பண்படுத்திப் பயிர்ச்சி செய்வோரும் அம்மந்திரத்தினால் அதன் அர்த்தத்தை யுணர்ந்து பயன்படுவோராகட்டும் என்று சொன்னார்.

வித்தியா லக்ஷணம்.

"பகவான் நம்மை (குரு-சிஷ்யர்களை) இரக்ஷிப்பாராக. அவருடைய அனுக்ரகம் நம்மிருவருக்கும் சித்திப்பதாக. நாமிருவரும் (குரு-சிஷ்யர் இருவரும்) நம் பூர்ணசக்தியையும் உபயோகித்து உழைப்போமாக. நாம் படிப்பதும் கற்பதும் உள்ளுணர்வோடு கூடினதாக விருக்கட்டும். நம்மிருவருக்கும் விவாதமுண்டாகாமலிருக்கட்டும்."

'May God protect us both. May He grant to us both aid. May we two Work with all our strength. May our study be with understanding. May there be no dissension between us."

The Prescribed Tamil Text for the Preliminary Examination for Teachers' Certificates, 1918.

HIGHER GRADE.

KAMALAMBAL CHARITRAM

Price Re. 1-4-0 net

Library Edition, full cloth lettered, Re. 1-12-0.

APPLY TO—

THE SOLE AGENTS & MANAGERS,
"THE VIVEKACHINTAMANI"
Lalitalaya, 19, *Adam Street*,
MYLAPORE.

MRS. ANNIE BESANT ON FEMALE EDUCATION.

இந்தியதேசப் பெண்களின் வித்தியாப்பியாசத்தைப்பற்றி அன்னிபெஸண்டு அம்மாள் எழுதியது.

"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவுநிலைமையாற்
கல்வி அழகே அழகு."

1893ஆம் வருஷத்தில் நானும் வாச்சிமின்ஸ்டர் அம்மாளும் இந்த தேசத்துக்கு வந்தவுடன் நாங்கள் செய்வதாக உத்தேசித்த காரியங்களுக்குள் முதன்மையான விஷயம் இந்நாட்டிலுள்ள சிறிய பெண்களுக்குக் கல்விப்பயிற்சி செய்வதேயாம். ஆனால் ஜனங்கள் எங்களுடைய நோக்கங்களைச் செவ்வையாயறிந்து அதின் மூலமாய் எங்களிடத்தில் சந்தேகமன்றியில் அவர்களுக்கு எங்கள் முயற்சியில் நம்பிக்கை உண்டாகும் வரையில் நாங்கள் அந்த விஷயத்தில் யாதொரு பிரயத்தனமும் செய்யாமல் தாமசிக்கவேண்டுமென்று இங்குள்ள அநேக புத்திமான்கள் தெரிவித்தார்கள். இத்தேசத்து மங்கை ஒருத்தி கேடுகெட்டு துர்ப்பாக்கிய ஸ்திதியை அடைந்த காரணத்தினால் பெண்களின் வித்தியாப்பியாசத்தில் ஜனங்களுக்கு விசுவாசக்குறைவு நேரிட்டதுமல்லாமல் வித்தியாப்பியாசத்தை ஒரு வியாஜமாகவைத்துக்கொண்டு பெண்களை கிறிஸ்து மதத்தில் சேர்க்க முயற்சிக்கப் படுகிறதென்ற பயம் அவர்களுக் குண்டாயிருந்தது. ஆகையால் அவர்கள் மேற்கண்டபடி தாமசிக்கச் சொன்னது யுக்தமாகத்தோன்றினமையால் அதை நாங்கள் அங்கீகரித்தோம். அதுமுதல் இப்போது பத்து வருஷங்களாயின. எங்களுடைய நிஷ்கல்மஷமான கருத்தைப் பற்றியும் எங்களுடைய முயற்சியின் நேர்மையைப்பற்றியும ஹிந்து ஜனங்களுக்கு நம்பிக்கை யுண்டாயிருக்கிற

தென்று இப்போது உண்மையாய்ச் சொல்லலாம். பெண்களின் கல்விப் பயிற்சியைப்பற்றி வேண்டிய முயற்சி அவசியம் செய்யவேணுமென்று என்னைக் கேட்டுக் கொண்டவர்கள் அநேகர். அப்படிப் பின்முறை இவ்விதமாய் இருக்கவேணுமென்று எழுத்து மூலமாயும் உபந்நியாச மூலமாயும் நான் வெளியிட்டிருப்பதை நிராக்ஷேபணையாய் அங்கீகரித்திருக்கிறார்கள். ஆகையினால் அம்முறையையே விஸ்தாரமாய் பிரசித்தப்படுத்த இது நல்ல சமயமென்று தோன்றுகிறது. அதற்கு வெகு ஹிந்துஜன சம்மதமிருக்குமாகில் இந்தியதேச முழுமையும் பெண்களின் வித்தியாப்பியாச சம்பந்தமாய் அம்முறையையே ஆதாரமாக ஏற்படுத்திக் கொள்ளலாமென்றும் தோன்றுகிறது. சில தியாசாபிகல் சங்கத்தாரால் நடத்தப்பட்டு வரும் சில சிறிய பெண் பாடசாலைகளில் அம்முறை அனுஷ்டானத்தில் இருக்கின்றது. அம்முறை இனி மென்மேலும் அபிவிருத்தியடைந்து நடைபெறலாம்.

பெண் கல்வி சம்பந்தமாய் இத்தேசத்தில் அனுஷ்டிக்க வேண்டிய முறையானது, இத்தேசத்தின் சுபாவத்துக்கும் தன்மைக்கும் ஒத்ததாயிருக்கவேண்டும். அம்முறையானது ஹிந்துக்களுடைய அபிப்பிராயத்தில் ஸ்திரீகளுக்கு எந்த நிலைமை அமைத்தல் வேண்டுமோ, அந்நிலைமைக்கு அனுகுணமாயிருக்கவேண்டும். அந்நிலைமையானது நவீனர்களுடைய க்ஷீணித்த அபிப்பிராயத்தை அனுசரிக்காமல் பிராசீனமான மேன்மையான நோக்கை நாடியே இருத்தல் வேண்டும். ஸ்திரீயானவள் மாதாவாகவும், பத்தினியாகவும், ஒரு சமயம் வித்தையும் பக்தியும் வைராக்யமும் பொருந்திய பூர்வகாலத்து பிரம்மவாதினியாகவும் ஆகுகிறதற்கு அனுகூலமாய் அந்த முறையானது அமையவேண்டும். அம்முறையை அனுஷ்டிப்பதினால் வெளிப்படலௌகிக வியாபாரங்களிலும் பொது விஷயங்களிலும் ஸ்திரீகள் பற்பல முயற்சிகளில் நாளுக்கு நாள் புகுந்து புருஷனுக்கு எதிரியாய் போட்டி பாராட்டிக்கொண்டு வருகிற மேல்நாட்டு ஸ்திரீகள் போன்று ஹிந்து ஸ்திரீகள் ஆகக்கூடாது. மேற்கு தேசத்தார் ஸ்திரீ புருஷர்களுடைய பரஸ்பர ஆசரணையைப்பற்றி அவாகள் தாங்களாய் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் முறையை அவர்கள் அனுசரிக்க வேண்டியதுதான். அம்முறையை கிழக்கு தேசத்தார் ஆசரிப்பது யுக்தமன்று. ஸ்திரீகளுடைய கல்வி விஷயமாய் மேற்கு தேசத்தார் அனுசரித்து வரும் முறைகள் இந்த தேசத்துப் பெண்களுக்கு பொருத்தமல்ல. ஆனால் சில பிரகிருதங்களில் பெற்றோர்கள் தங்களுடைய புத்திரர்களுக்கு ஒப்பாகத் தங்களுடைய புத்திரிகளும் வித்தியாப்பியாசம் அடையவேண்டுமென்று இஷ்டப்பட்டால் அவ்வண்ணமே செய்விக்கலாம். ஆனால் இத்தேசத்தில் எல்லாருடைய பொது அனுஷ்டானத்திலிருக்க வேண்டிய முறையானது இந்த தேசத்தார்களுடைய அவசியத்துக்கு ஒத்ததாகவே இருக்கவேண்டியது. இத்தேசத்திற்கு வேண்டிய தென்னவென்றால் கௌரவமான ஆசரணைகளில் பயிற்சியடைந்த பத்தினிகளும் மாதாக்களும் கிருக கிருத்திய விஷயங்களைச் சாதுரியமாகவும் அன்பாகவும் நடத்தக்கூடிய ஸ்திரீகளும், பாலர்களுக்கு வித்தியாப்பியாசம் செய்விக்கக் கூடிய ஸ்திரீகளும், தங்கள் பர்த்தாக்களுக்கு அனுகூலமான யோசனை சொல்லக்கூடியவர்களும், வியாதியுள்ளவர்களுக்கு ஆதரவுடன் நன்றாகப் பயின்ற சிகித்ஸை செய்யக்கூடியவர்களுமேயாம். உயர்ந்த பரிக்ஷைகளில் தேறின ஸ்திரீகள் இத்தேசத்துக்கு அவசியமன்று.

ஆகையால் இத்தேசப் பெண்களுக்கு சுகிருதமான முக்கிய வித்தியா முறைகளைத் இதனடியில் விவரிப்போம்.

I. ஹிந்து சமயம், நல்லொழுக்கம், இவைகள் சம்பந்தமான கல்விப் பயிற்சி:—ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் அவரவ

ருடைய சமயநெறி முறைகளைத் தெளிவாயும் இலகுவாயும் விவேகத்துடனும் கற்பிக்க வேண்டும். ஸநாதந தர்ம்ம புஸ்தகங்கள் 1—2 பாகங்கள் பெண்களுக்கும் மிகவும் உபயோகமானவைகளாயிருக்கும். இவைகளை செவ்வையாக கற்றறிந்தபின், பெண் பாடசாலைகளை விட்டபிறகு அவைகளுக்கு மேற்பட்ட கிரந்தமாகிய 3-ம் பாட புஸ்தகத்தைப் படிக்கத்திறமை யுள்ளவர்களாவார்கள். மகா பாரதம் இராமாயணம் மனுஸ்மிருதி இவைகளிலிருந்து நல்ல ஒழுக்கத்தைப் பற்றிய விஷயங்களை எடுத்து அவர்களுக்குப்போதிக்க வேண்டும். ஹிந்தி பாஷை தெரிந்த எல்லாப் பெண் குழந்தைகளும் துளசிதாஸ் இராமாயணத்தைப் படிக்கும்படி செய்யவேண்டும். இத்துடனே சுதேசபாஷைகளிலுள்ள ஸ்தோத்திரங்களையும், சம்ஸ்கிருத ஸ்தோத்திரங்களையும், படிக்கும்படி செய்தும், பகவத்கீதை, அம்ஸகீதை, அனுகீதை இவைகளிலும் இன்னும் மற்ற உயர்ந்த கிரந்தங்களிலுமுள்ள அநேக ரம்மியமான சுலோகங்களை, அவர்கள் முகஸ்தமாக ஒப்பிவிக்கும்படி செய்யவேண்டும். அவர்களுக்குப் பூஜை செய்யக் கற்றுக்கொடுத்துப், பூஜையின் தாத்பரியங்களை சுலபமாய் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும். இத்தேசத்திலுள்ள ஒவ்வொரு ஸ்திரீக்கும் இயற்கையாயுள்ள பக்திமார்க்கத்தை அபிவிர்த்தி செய்ய வேண்டியதுமன்றியில், அதன் பிரயோஜனத்தையும் தாத்பரியத்தையும் நன்றாக அறியும்படி செய்யவேண்டும். அவர்களுக்கு பாரம்பரியமாய் கிடைத்திருக்கும் பரிசுத்தமானதும் விவேகத்தோடு கூடியதுமான சிரத்தையை மேன்மேலும் விருத்தியாகும்படி செய்யவேண்டும். இன்னும் மேலான வித்தைபெற யோக்கியதை ஒரு ஸ்திரீக்கு இருக்குமாகில், அவளுக்கு அம்மேலான வித்தை போதிக்காமலிருக்கக்கூடாது. அவ்விதமாகப் போதித்தால், மயித்திரேயி, கார்க்கி இன்னும் பூர்வத்தில் வேதகானம் செய்த ஸ்திரீ ரத்தனங்கள் போன்ற ஸ்திரீகள் இக்காலத்திலும் உண்டாவதற்கு ஹேதுவாயிருக்கும். மகம்மதியர் சமயம் ஜோராஸ்டிரியர் மதம் இவைகளைச் சேர்ந்த பெண் குழந்தைகளுக்கு மேலாகச் சொல்லிய ஹிந்துமத கிரந்தங்களுக்கு பதிலாக, அவரவர்களுடைய மதசம்பந்தமான புஸ்தகங்களைப் படிக்கும்படி செய்ய வேண்டும். பெர்சியன் பாஷையில் மகம்மதிய பெண் குழந்தைகளுக்கு படிப்பையும் புத்தி விசாலத்தையும் கொடுக்கக்கூடிய அநேக மனரம்மியமான பக்தி வசனங்கள் இருக்கின்றன. அவைகளுடன் அரேபியா பாஷையிலுள்ள அநேக கிரந்தங்களும் மிகவும் உபயோகமுள்ளவைகளாயிருக்கும்; பார்சீகர்களுக்குள்ளும் அவர்களுடைய பெண்குழந்தைகளின் கல்விக்கு யோக்கியமானதும் சுலப நடையிலுள்ளதுமான அநேக மத கிரந்தங்களிருப்பது மல்லாமல், அவஸ்தாபால்வி என்ற பெர்ஷிய பாஷைகளிலுள்ள நூல்களையும் படிக்கலாம். இம்மதங்கள் சம்பந்தமாய் தென்னிந்தியாவில் சுதேச பாஷைகளில் மிகுதியான கிரந்தங்களிருப்பது எனக்குத் தெரியாது. ஆனால், உத்தரதேசங்களில் மகம்மதிய பெண் குழந்தைகளின் வித்தியாப் பியாசத்துக்கு அனுகூலமான அநேக கிரந்தங்கள் உருடு பாஷையிலிருக்கின்றன.

II. காவிய அப்பியாசத்தைப்பற்றி:— சுதேச பாஷையை நன்றாக வாசிக்கவும் எழுதவும் பயிற்சி உண்டாகவேண்டும். இந்தி, உருடு, பெங்காளி, மஹாராஷ்டிரம், குஜராத்தி, தெலுங்கு, தமிழ், கன்னடம், மலையாளம் இந்த பாஷைகளில் அநேக மூல கிரந்தங்களும் மொழிபெயர்ப்பு கிரந்தங்களும் இருப்பதில், அவைகள் மிகுதியான காவியஞானத்தைக் கொடுக்கக் கூடியனவாகவும், பெண்குழந்தைகளுக்கு வயசானபிறகு சாவகாசமுள்ள காலத்தில், படிப்பால் மனசுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியவைகளாகவு மிருக்கின்றன. ஸ்வபாஷை தவிர, படிக்க அவகாசமிருந்தால்

வேறொரு சுதேச பாஷையை சம்பாஷிக்கக் கற்றுக்கொள்வது பெண்குழந்தைகளுக்கு மிகவும் உபயோகமுள்ளதா யிருக்கும். அவரவர்களுடைய மதத்துக்கு அனுகுணமாய் பூர்வீக பாஷையாகிய சம்ஸ்கிருதம், அறுபி, பெர்ஷியன் இவைகளில் ஏதாவது ஒன்றிலே நன்றாக பயிற்சியடைந்தால் அதிலிருக்கும் உத்தம கிரந்தங்களைப் படித்து ஆனந்தமடைய ஹேதுவாயிருக்கும். கிராகிய சக்தியை அதிகமாகவுடைய இந்த தேசத்துப் பெண்கள் அந்த பாஷைகளை நன்றாய்க் கற்றறிந்து தேர்ச்சியடைந்த பிறகு அவைகளால் மிகுதியான சந்தோஷத்தையடையவும், அவர்களுடைய பர்த்தாக்கள் மேலான காவ்வியங்களைப் படனம் செய்யும்பொழுது, கேட்டு அறிவுடன் ஆனந்திக்கவும் கூடும். இந்துதேச சரித்திரம், இந்துதேச பூகோளசாஸ்திரம் இவைகளையும் படிக்கும்படி செய்து ஷை சரித்திரத்தில் பிரஸ்தாபிக்கப் படுகின்ற சாத்விகிகளான உத்தம ஸ்திரீகளின் கதைகளடங்கிய பாட புஸ்தகங்கள் தயார் செய்து கொடுத்தால் அவைகளைப்படித்து அந்த உத்தம ஸ்திரீகளினுடைய ஆசரணைகளை அனுசரித்து நடப்பது மட்டுமல்ல, அக்கதைகள் இந்த தேசத்தில் முற்காலத்தில் குலஸ்திரீகள் எவ்வளவு மேன்மையான பதவியை அடைந்திருக்கின்றார்கள் என்பதற்கு சாக்ஷியமாக உபயோகப்படும். தற்காலத்தில் இத்தேச ஸ்திரீகள் தாழ்மையான நிலைமையையும் மிகவும் அற்பமான விஷயங்களில் மனசுபற்றி இருப்பதையும் உத்தேசிக்கையில், மேலேகண்ட கதைகளை அவர்கள் படித்துப்பார்த்து அதினால் மேன்மையடைய வேண்டியதும், அவர்களுடைய மனசானது விகாசத்தையடைந்து மேலான தாத்பரியங்களை அடையவேண்டியதும், இந்த தேசத்தவர்களின் பூர்வீக அபிப்பிராயத்துக்கும் ஆசரணைக்கும் ஒத்து நடக்கும்படி அவர்களைச் செய்யவேண்டியதும், மிக்க அவசியமா யிருக்கின்றன. இந்ததேசத்துப் புருஷர்களே மேற்கு தேசத்தவர்களின் கீழான ஆசரணைகளைக் கைக்கொள்வது அயுக்தமாயிருக்கும்போது, ஸ்திரீகள் அந்த ஆசரணைகளை அனுசரிப்பது மிகவும் அயுக்தமென்பதில் சந்தேகமில்லை. மேலும் இந்த தேசத்திற்கு இயற்கையாயுள்ள நிஷ்கல்மஷத்துடன் சிறப்புப்பெற்று இனிமையாய் விளங்கிவரும் ஸ்திரீயின் உயர்வு இவ்வுலகத்துக்கே மேன்மை பயக்கக் கூடியதாகையால் அதைக் கெடுத்துவிடுவது கொஞ்சமேனும் யுக்தமன்று. இந்த தேசத்து மனிதர்கள் ஆங்கிலேயர்களுடைய அபிப்பிராயங்களை நாளுக்கு நாள் அனுசரிப்பதினாலும், இந்தியர்களிடம் பக்ஷம் பாராட்டும் அநேக ஆங்கிலேய ஸ்திரீகள் அவர்களுடைய சகோதரிகள் போன்ற இத்தேசத்து ஸ்திரீகளுடன் சல்லாபம் செய்ய பிரியப்படுவதினாலும், இத்தேசத்துப் பெண்களும் ஆங்கிலேய பாஷையையுங் கற்று அதின் மூலமாய் இத்தேசத்திற்குப் புறம்பாயுள்ள மற்ற தேசத்தார்களுடைய அபிப்பிராயங்களையும் கொள்கைகளையும் ஒருவாறு தெரிந்துகொள்வதும், அவசியமாகவும் இருக்கும். அப்படித் தெரிந்துகொண்டால் காலக்கிரமத்தில் அவர்களுடைய பர்த்தாக்களுடன் அந்த அபிப்பிராயங்களைப் பற்றி சுகமாக சம்பாஷித்துத் தெரிந்து கொள்ளவும், தங்கள் நிலைமைக்கு எவ்விதக் குறைவுமின்றி புத்திவிசாலத்தையடையவும், எளிதாயிருக்கும்.

III. சாஸ்திரப் பயிற்சி:—இத்தேசத்தில் பத்தினியாகவும் மாதாவாகவும் ஒரு சிறிய கிராமத்துக்குச் சமானமாகிய குடும்பத்தை யாளவேண்டியவளாகியும் ஏற்படக்கூடிய ஸ்திரீக்கு, சுகாதார விதிகளையும் ஆகார பதார்த்த குணங்களையும் தெரிந்து கொள்வதும், வியாதியுண்டானால் சுலபமான ஔஷதங்களைப் பிரயோகிக்கவும், ஆபத்துக்காலத்தில் அதற்கேற்ற சிகித்ஸையை செய்து கொள்ளவும், நாகரிகமாய் சமையல் செய்யவும், கிரககிருத்திய விசாரணை செய்து வரவு செலவுக் கணக்கு

வைக்கவும் தெரிந்து கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். அந்தந்த கிரகத்தில் தேக சௌக்கியத்தை கவனித்து நடக்கவேண்டிய முறையையும், நல்லகாற்று வெளிச்சம் சுத்தமாயிருத்தல் முதலியவைகளின் பிரயோஜனத்தையும், அவர்களுக்குக் கற்பிக்கவேண்டியது. இவைகளெல்லாம் பூர்வீகத்தில் இந்த தேசத்து ஸ்திரீகள் நன்றாய் அறிந்து அனுஷ்டித்து வந்தார்கள். பாடசாலையிலேயே சிறிய பெண்களுக்கு இவ்விஷயங்களை கற்றுக்கொடுக்கும் பக்ஷத்தில், பின்பு கிரகத்தில் அவர்கள் கிரமப்படி அனுஷ்டிப்பதற்கு உதவியாயிருக்கும். ஆனால் தற்காலத்துப் பெண் குழந்தைகள் இந்த விஷயங்களில் அவர்களுடைய முன்னோர்களைக் காட்டிலும் கீழான ஸ்திதியிலிருக்கிறார்கள். ஆகாரத்துக்கு சம்பந்தப்பட்ட பதார்த்தங்களின் குணங்களையறிந்து அவைகள் இவ்விதமாக தேகத்தின் அஸ்தி, நரம்பு, தசை முதலானவைகளுக்கு அநுகூலம் அல்லது பிரதிகூலமாயிருக்குமென்றும், அவைகளில் இன்ன இன்னது உன்மத்த ஆகாரம் அல்லது பலாபிவிர்த்திக்கு ஏற்றது என்றும், தெரிந்துகொள்ள வேண்டியது மஹா அவசியம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வைத்தியனை அபேக்ஷிக்காமல், சாதாரண ஔஷதங்களை தங்கள் சிசுக்களுக்கு அவசியமானபோது வினியோகிக்கவும், சொற்பகாயங்களுக்குப் பரிகாரம் செய்யவும், கொடுங்காயம் நேர்ந்தால் வைத்தியன் வரும்வரையில் உயிர்ச்சேதமன்றியில் பாதுகாக்கவும், அவர்களுக்குத் தெரியவேண்டியதுந் தவிர, வியாதியஸ்தர்களை உபசரிக்கவும் வைத்தியன் சொல்லும் முறைகளை சரியாக அனுசரித்து காலக்கிரமமாக ஆகாரம் ஔஷதம் முதலியவைகளைக் கொடுக்கவும், அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது முக்கியம். கிரக கிருத்தியத்துக்கு அவசியமானபடி பதார்த்தங்களின் அளவு, விலை முதலியவைகளையறிந்து விரைவாகவும் சரியாகவும் கணக்கு எழுதுவதற்குப் போதுமானமட்டில் கணிதமும், அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இத்தேசத்துப் பத்தினி, பாகசாஸ்திரம் முக்கியமாய்த் தெரிந்து கொள்ள வேண்டியதாயிருப்பதாலும், அதன்றியில் அவள் புருஷனுக்காவது குழைந்தைக்காவது கிரகத்தில் சவுகரியத்தை உண்டாக்கக் கூடாததாலும் அதைப் பாடசாலையில் கற்பிக்கவேண்டியதவசியம். இந்த தேசத்திலுள்ள பரிசாரகர்கள் மற்ற தேசத்திலிருப்பது போலவே வீட்டின் எஜமானி மேல்பார்க்கவும் சீர்திருத்தவும் தகுந்தவளாயிருந்தாற்றான் வேலைகளை நன்றாகச் செய்யக்கூடியவர்களாயிருப்பார்கள்.

IV. அலங்கார சாஸ்திரப் பயிற்சி:— அவகாசமான காலத்தை வீண்பேச்சிலும் வம்பிலும் செலவழிக்காமல் சுகமாக உபயோகிக்கும்படியாய் ஏதாவது ஒரு அலங்கார சாஸ்திரத்தின் ஒரு முறையை பெண்களுக்கும் பாடசாலையில் கற்பித்துக் கொடுக்கவேண்டும். தென்னிந்தியாவில் சங்கீத சாஸ்திரம் அபிவிர்த்தியாய் வருவதில் அதில் ஜனங்களுக்கு முன் இருந்த பிரியக்குறைவு அவ்வளவாக இப்பொழுதில்லை. வீணை அல்லது வேறு வாத்தியத்துடன் ஸ்தோத்திரங்களை கானஞ் செய்வது, பெண் குழந்தைகளுக்கு மிகவும் சந்தோஷத்தை கொடுப்பதாயிருப்பதுமல்லாமல், கிரகத்துக்கு முக்கிய அலங்காரமாயுமிருக்கும். சித்திரித்தல், வர்ணித்தல் முதலிய பிரவர்த்திகள் சிலர்களுக்குப் பிரியமுள்ளவைகளாக இருப்பதுந்தவிர, ஜரிகை வேலை, தையல் வேலை, முதலியவைகளும் அவர்கள் சுலபமாய்க் கற்றுக்கொள்ளக் கூடியவைகள். தையல் வேலையும், உடுப்பு அளவுபார்த்து செய்தல் முதலியதும் அவர்கள் அவசியமாய்க் கற்க வேண்டும். இவைகளில் பெண்களுடைய பிரியத்துக்கு ஏற்ற முறைகளைக் கற்பித்துக் கொடுக்கவேண்டும். சங்கீதமட்டும், அநேகமாய் எல்லாரும் பிரியமாய்க் கைக்கொள்ளக் கூடியதாகவிருக்கும்.

V. சரீரப்பயிற்சி:—இப்பொழுது குழந்தையாயிருக்கும் பெண்கள் காலக்கிரமத்தில் புத்திரவதிகளாக வேண்டியவர்களாயிருப்பதால், அவர்களுடைய தேகபலத்துக்கு வேண்டிய பயிற்சியை அனாதரவு செய்யக்கூடாது. அதற்குத் தகுந்த அப்பியாசத்தைப் பாடசாலையில் கற்பித்துக்கொண்டு வரவேண்டும். தென்னிந்தியாவில் பின்னல் கோலாட்டம் என்னும் அப்பியாசத்தை, பெண்குழந்தைகள் அனுசரித்து பாடிக்கொண்டே உலாவி நூல்களைப் பின்னியும், அவ்விதமாகவே பின்னல்களை அவிழ்த்தும், விளையாடுவதில் பிரியமுள்ளவர்களாயிருக்கிறார்கள். இன்னும் அநேக விதமான அப்பியாசங்கள் இருப்பதில் அவைகள் நிரம்ப பிரயோஜனமுள்ளவைகளாகவும் சுகமாகவும் சுறுசுறுப்பைக் கொடுக்கக்கூடியவைகளாயுமிருக்கின்றன. இவைகளால் பாலிய வயசுடையவர்கள் தேக சௌக்கியத்தைப் பெற்று விகாரமன்றியில் அழகாக நடக்கப் பழகுகின்றார்கள். பெண்குழந்தைகள் கூட்டமாகக் கூடி அவர்களுடைய இளங்குரலுடன் பாடிக்கொண்டும், கைகளைக் கொட்டியும், அல்லது கோலாட்டம் போட்டுக்கொண்டும், வரிசை வரிசையாக அவர்கள் உலாவிச் செல்லும் காட்சியைக் காட்டிலும், அதிக சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியது என்ன இருக்கிறது. சரீர பல விருத்திக்கு வேண்டிய பயிற்சியை இளமையிலேயே கற்பிக்காத பக்ஷத்தில், வயசு சென்ற பிறகு பல விதமான தீரா வியாதிகளும், பிஞ்சில் பழுத்தல் என்ற அகால விருத்தாப்பியமும், நேரக்கூடியதாயிருக்கும்.

மேலாக விவரித்திருப்பது தான் இந்த தேசத்துப் பெண்கள் கற்கவேண்டிய வித்தியா விஷயத்தின் பொதுவான முறைகளாம். இதின் மூலமாய் மேன்மேலும் உபயோகமுள்ளவர்களாகவும் கிரக கிருத்தியங்களைப் பார்க்க வல்லமையுள்ள கிரகணிகளாகவும் ஆவார்கள். மேற்கண்ட விதமாய்த் தேர்ச்சியடைந்த ஸ்திரீகள் வீடுகளில் விளக்குகள் போல் விளங்குவார்கள். பெண்களில் மேலான படிப்பையும் உத்கிருஷ்டமான விஷயத்தையும் கற்றுக்கொள்ள யோக்கியமான மேதாவிகள் சிறு பான்மையோர் எப்பொழுதும் இருக்கக்கூடும். தனித்தனி அவர்களுடைய புத்தி சுபாவத்துக்குத் தக்கபடி ஏற்றவைகளை அவர்களுக்கு கற்பித்து மேம்பாட்டை அடையச் செய்யவேண்டும். ஏனென்றால் பண்டைய காலத்திற்போல இக்காலத்திலும் உத்தமஸ்திரீ இரத்தினங்கள் உதயமாகி இத்தேசத்திற்கு மங்கியிருந்த உயர்ந்த ஸ்திரீ மேதையென்ற முக்தாமணியை மறுபடியும் திரும்ப பிரகாசிக்கும்படியாக இப்பெண்கள் இந்நாட்டில் ஜனித்திருத்தல் கூடும். அவர்களுடைய மேன்மையான பிரவிர்த்தியைத் தடுப்பதும் அப்பிரவிர்த்தியில் அவர்களுக்கு அனாவசியமாய் இடையூறுகளை உண்டு பண்ணுவதும் கொஞ்சமேனும் சரியல்ல.

ஒரு விஷயம் முக்கியமாய் கவனிக்கத்தக்கது. அதாவது:— இத்தேசத்து ஸ்திரீகளின் பெருமை பூரணமான விருத்திக்கு வந்தாலொழிய இத்தேசம் மேன்மையான பதவியை அடைய முடியாது. இந்தியாவின் சீர்திருத்தமும் இத்தேசத்து ஸ்திரீகளின் சீர்திருத்தத்தை பொருத்தே யிருக்கின்றது. புருஷனை மேன்மை பெறச்செய்பவளும் அல்லது அவனைத் தாழ்மைப்படுத்துபவளும் அவன் பத்தினியேயாவாள். குழந்தையை ஆளாக்குவதும் பாழாக்குவதும் தாயேயாம். புருஷனின் மேன்மையும் தாழ்மையும் ஸ்திரீயின் கைக்குள்ளடக்கம். அவ்விருவர்களும் ஒற்றுமையாயிருந்து இந்தியாவைச் சிறப்பிக்க முயன்றாலொழிய இந்தியாதேசம் எப்பொழுதும் மேன்மையை அடையாது. பாலர்களுக்கு சமயம், நல்லொழுக்கம் இவைகளைக் கற்பிப்பதற்கு நாங்கள் எடுத்த முயற்சியானது ஒருவாறு பயன்பட்டு வருகிறது. அப்பயன் இந்துதேச முழுமையும் பூர்ணமாகப் பரவவேண்டியது முக்கியம். பெண் குழந்தைகளின் வித்தியாப்பியாசத்தைப்பற்றிய முயற்சி இப்பொழுது தான் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அம்முயற்சியைக் கைக்கொண்டு பிரவர்த்திப்பவர்களுக்கு ஈசுவரகடாக்ஷமுண்டாகி சமஸ்த தேவதைகளும் அவர்களுக்கு புத்தியையும், பலத்தையும், மனோதைரியத்தையும் கொடுத்து அநுக்கிரகம் செய்வார்களாக. சுபமஸ்து.

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு."

THE HEAVENLY KINDERGARTEN, OR TRUTH SYMBOLISED IN TEMPLES AND SHRINES.

"The most abstract truth may often be more concretely presented than at first would appear possible, and when so presented reaches ears and hearts which otherwise would fail to receive it."—*Golden Thoughts gleaned from Western Authors,*

சிதம்பரம்.

[நாங்கள் சுற்றுப் பிரயாணம்செய்து வருகையில் தரிசித்த ஸ்தலங்களில் முதன்மையானதும் முக்கியமானதும்சிதம்பரக்ஷேத்ரம். அதைப்பற்றி இங்கேசற்று விவரித்தெழுதி விளக்கவைப்போம்.]

பிருதிவி, அப்பு, தேயு, வாயு ஆகாசமென்னப்படும் பஞ்சபூதங்களின் உருவமாகக்கடவுள் தம்மை ஆத்ம கோடிகளுக்குக் காட்டிக்கொடுத்த ஸ்தலங்களில் சிதம்பரமும் ஒன்று. முதலாவது திருவாரூர்; இரண்டாவது ஸ்ரீரங்கத்துக்கு அருகிலுள்ள ஜம்புகேசுவரம் என்கிற திருவானைக்காவல்; மூன்றாவது காளஹஸ்தி; நான்காவது தேயு ரூபமான திருவண்ணாமலை; இத்திருப்பதியில் கார்த்திகைமாச பௌர்ணமி சமயத்தில் மலை முழுவதும் விளக்குகள் ஏற்றப்படுவதினால் அக்கினிகோளம் போற் காணப்படும். ஐந்தாவதும் கடைசியானதுமான ஆகாச ரூபமானது சிதம்பரத்தில் உபநிஷத்துகளில் சொல்லப்பட்ட பரிசுத்தமானவும், ஒரே நிலையை யுடைத்தானதுமான பரப்பிரம்மம் உருவமற்றவராயும் விசேஷணமற்றவராயுமாகிறார்.

"சிலந்திப்பூச்சியானது தன் வயிற்றிலுள்ள நூலை வெளியே விடுவதுபோலவும், பூமியினின்று மரங்கள் அங்குரித்தல் (முளைத்தல்) போலவும், உயிருள்ள ஜீவராசிகளின் தேகத்திலிருந்து உரோமம் வளர்தல்போலவும், மாறாத சாசுவத நிலையிலிருந்து எல்லா உலகங்களும் உண்டாகின்றன" வென்று மண்டகோபநிஷத் கூறுகின்றது. சிதம்பரத்திலிருக்கிற ரகஸியத்தின் பொருளானது மேற்கூறப்பட்ட தத்துவத்தின் பொருள்தான். இந்த ரகசியப் பொருளானது ஒரு யந்திரரூபமாகவும், ரிஷிகளால் கிரந்தங்களில் சொல்லப்பட்ட உலகம் உண்டாவதையும் அழிவதையும் சூக்ஷ்மமாக விளக்குவதாக இருக்கிறது. இந்த யந்திரமானது சுவாமியானவர் சத்ரூபமாக இருக்கிறதாகச் சொல்லப்படுகிற கனகசபை அல்லது பொன்னம்பலத்திலுள்ள நடராஜ விக்கிரகத்தின் பின்னால் மகா பரிசுத்தமான சுவற்றில் ஒரே கல்லில் செதுக்கப்பட்டு கட்டப்பட்டிருக்கிறது. சுவாமியானவர் அழியாஞான ரூபமாகவிருக்கிறதாகச் சொல்லப்படும் சித்சபையானது கனகசபைக்கு அடுத்தும் அதற்கு எதிரிலும் உள்ளது. எல்லாவற்றிற்கும் காரணபூதமானதும், சர்வக்ஞமானதும், நிரதிசயானந்தமுமான பரப்பிரம்மம் சச்சிதானந்தம் என்று சொல்லப்படுகிறது. உலகத்துக்கு ஆகாசந்தான் எல்லை. இவ்வுலகத்திலுள்ள எல்லாப் பிராணிகளும் ஆகாசத்திலிருந்தே உண்டாயிருக்கின்றன. முடிவில் ஆகாசத்திலேயே லயிக்கின்றன (மறைகின்றன.) ஆகாசம் மற்றவைகளினும் மிகப் பெரிதாயிருக்கிறபடியால் அதுவே சகலத்திற்கும் ஓர் நல்ல இருப்பிடம். மோக்ஷத்தை விரும்புகிற பக்தர்கள் ஆராதிக்கிற சிதம்பரத்திலுள்ள கனகசபையும், ரகஸியமும் இந்த ஆகாசத்தில் வியாபித்திருக்கிறதென்பது ஐதீகம்.

மேற்கூறிய இரண்டு சபைகளைத்தவிர, இன்னும் மூன்று சபைகள் அங்கு உள்ளன. இவைகளில் முதலாவது நிருத்தசபை அல்லது நடனமண்டபம் என்னப்படும். சித்ஸபையானது எப்படி சுவாமியானவர் சர்வக்ஞர் என்பதைக் குறிக்கிறதோ அப்படிப்போலவே இந்த நிருத்த சபையானது சுவாமியானவர் இரகசிய மார்க்கங்களால் ஆக்கல், காத்தல், அழித்தல், சேர்ந்திருத்தல், கொடுத்தல் என்கிற ஐந்து செய்கைகளைச் செய்கிற இடைவிடாத நடனத்தைக் குறிக்கிறது. அதற்கு அடுத்தது தேவசபை. அங்கு தேவர்கள் வந்து மேற்படி நடனத்தை தரிசிக்கக்கூடுவதாக சொல்லப்படு

கிறது. ஐந்தாவதும் கடைசியானதுமான ராஜசபை கர்ப்பக்கிரகத்துக்கு வெளியிலுள்ள ஓர் ஆயிரக்கால் மண்டபம். இவ்விடத்தில் வருஷத்திற்கு இருமுறை ஆனிமாதம் உத்திரத்தன்றும், (இதற்கு 'ஆனித்திருமஞ்சனம்' என்று பேர். †), மார்கழிமாதம் திருவாதிரை நக்ஷத்திரத்தன்றும் நடராஜர் பூமிக்கு இராஜாதிபதியாகக் கொலுக்கொண்டு பிரஜைகளுக்கு தரிசனம் தந்து அடியார் தம் பிரத்தியக்ஷ லீலையை அறியும்படி செய்கிறாரென்பதும் ஐதீகம்.

இனி நடராஜ விக்கிரகத்தைப்பற்றி விசாரணை செய்யும்பொழுது நடராஜரென்றால் நாடகசாலைக்குத் தலைவர். உலகமே நாடகசாலை. நடராஜர் அதற்குத் தலைவர். நம்மால் பார்க்கக்கூடாத அவருடைய அற்புதசக்தியே அங்கு நாடகத்தை ஆட்டி வைக்கிறது. ஆத்மா என்கிற அறிவானது மனத்துக்கு உண்மையானகுருவாக விருப்பதுபோல நடராஜர் உலகத்துக்கெல்லாம் குருவாயிருக்கிறார். ஈசுவரனை அறியும் மார்க்கங்கள் இரண்டு. அவர் உளனுமாகியும் இலனுமாகியும், பார்க்கக்கூடியவராயும், பார்க்கக்கூடாதவராயும், சகளராகியும் நிஷ்களராகியும், குணராகியும் நிர்க்குணராகியும் இருக்கிறார். எல்லாவற்றிலும் ஆத்மா (அறிவு) ஒன்று இருக்கிறதனால், சுவாமியானவர் ஒருவரேயன்றி இருவரல்லாவிட்டாலும் எல்லாம் வெளியிலிருந்து வருவதாகத்தோன்றி அவரிடத்திலிருந்தே உண்டாகின்றன. எல்லாம் அவருக்காகச் சேர்த்துவைக்கவேண்டியதாயிருக்கிறது. நடராஜர் எங்கும் வியாபித்திருக்கின்ற சுவாமியாகிய உண்மைக் குருவின் உருவம். ஒருகாலத்தில் உண்மையான ஆத்மா ஒரு குருவாக நினைக்கப்பட்டிருந்தது. பிறகு அந்த குருவானவர் எதைக் கற்பிக்கிறாரோ அதென்று எண்ணப்பட்டிருந்தது. இந்தப் பிரத்யக்ஷமான உலகத்தில் நிதர்சனமானது கற்பனையைக்காட்டிலும் அதிகமாய்த் தெரிவிக்கின்றது. ஆகையால், நடராஜர் சகலவடிவமான அந்தக் குருவின் உருவம். அதற்கு அடையாளமான சப்தத்துக்கு அறிகுறியாக ஓர் சிறிய முரசத்தைத் தன் வலக்கையில் கொண்டிருக்கிறார். எல்லா உலகத்துக்கும் முதற்காரணமான நாதம் சப்தம், சுவாமியினின்று பிரிக்கப்படும் தன்மையதன்று. இரண்டாவது வலக்கையின் நிலையானது சாந்தத்தையும்ஆத்மஞானத்தைபடைந்தவன் அடையும் அமைதியையும் காண்பிக்கின்றது. இடதுகையில் பிரத்தியக்ஷமாய்த் தெரியும்படி ஜோதியான அக்கினியைத் தரித்துக்கொண்டிருக்கிறார். அது மத சம்பந்தமான உண்மைகள் நேரே அனுபவித்தலாலல்லாமல் வேறுவிதமாக அறியமுடியாதன வென்று காட்டுகின்றது. மனதைக் குறிப்பிக்கும்படி ஒரு மான்வடிவம் அவரது சீர்பாதங்களினருகே இருக்கிறது. ஆத்மாவை மனதானது அறிவது மிகவும் இலகுவானகாரியமன்றென்றும் மானுருவம் அவருடைய பாதங்களினருகே குறிப்பிக்கப்பட்டிருக்கின்றது. அவர் உடுத்துக்கொண்டிருக்கிற புலித்தோலானது, புலியைப்போல மூர்க்கமுங்கொடூரமுங்கொண்டு தோலை யுரித்தாலல்லாமல் வேறுவிதமாக நம்பத்தக்க தல்லாததாயிருக்கிற அகங்காரம் அல்லது மமதையைக் கொன்றதைக் காட்டுகின்றது. கழுத்தில் மாலையாகத் தரிக்கப்பட்டிருக்கிற ஸர்ப்பமானது மனிதர்களுடைய துரோகம் வஞ்சனைகளினின்றும் பரிசுத்தமாக்கப்பட்ட புத்தியை உணர்த்துகின்றது. அப்பாம்பினிடத்திலுள்ள விஷந்தான் புத்தியின் ஸ்வரூபம். தலைமேல் கங்கையை அதாவது சித்சக்தி அல்லது குளிர்

† தில்லை மூவாயிரவர்களில் ஒருவரான தீக்ஷிதர் ஆனிமாசம் 29உ யிட்டுப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்: "ஸ்ரீ சபாநடேசர் ஆனித்திருமஞ்சனாபிஷேக விபூதிப் பிரசாதம் வருகிறது. தாங்களும் தரித்துக் கொண்டு தங்களைச் சேர்ந்தவர்களுக்கும் கிடைக்கச் செய்யவேண்டியது." விவேகசிந்தாமணியை வாசிப்போரெல்லாரும் நம்மைச் சேர்ந்தவர்களே யாதலால் அவர்கள் பொருட்டு ஸ்ரீ சபாநடேசர் (விபூதி) மஹாத்மியத்தைச் சுருக்கித் திரட்டிக் கூறியிருக்கிறோம்.

ச்சியோடு ஆயாசந் தீர்க்கத்தக்கதான ஞானத்தையும், சாசுவத வெளிச்சத்தையும் ஆத்ம சந்தோஷத்தையும் குறிக்கிற சந்திரனையும் தரித்துக்கொண்டிருக்கிறார். வலது காலானது மனிதர்களுடைய ஆசைகளும், பாவங்களுமே உருக்கொண்ட முயலகனென்னுமோர் அசுரனை மிதித்துக்கொண்டிருக்கிறது. இடது காலோ தன்னை யறிந்துக்கொள்ளும் துரிய நிலையைக் காட்டும்படி உயரத்தூக்கப்பட்டிருக்கிறது. துரிய நிலையாவது: மனிதனும் கடவுளும் சந்திக்கும் நிலைமை. அதாவது நடராஜருடைய திவ்விய சக்திரூபமானது கீழே இறங்கி, மனிதனை யவருடைய உலகத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் அங்கு அவரோடு எப்பொழுதுமிருக்கும்படி செய்யும் நிலைமை. இந்நிலையானது நடராஜருடைய உயரத்தூக்கிய திருவடியானது மனிதபுத்தியினால் அடையக் கூடியவற்றையெல்லாம் அடைந்தபிறகு அவைகளையெல்லாம் விட்டு விட்டு, தன்னால் செய்யக்கூடிய எல்லா யோகசக்திகளுக்கும் மேலானதான நடராஜரின் திருவருளைப்பெற்ற பதஞ்சலியின் சிரசைத் தொட்டுக்கொண்டிருக்கிறதாக சொல்லப்படுகிறது. இப்படி நடனஞ்செய்கிற ஸ்தலமானது பூமிக்கு மத்தியெனச் சொல்லப்படும் தில்லைவனம். அது ஒருவனுடைய உருவத்தையும் உலகத்தினுருவத்தையும் குறிக்கின்றது. நடனசாலையானது மனிதர்களின் ஆசை, பெயர், உருவம் முதலிய உலகப்பற்றுகளெல்லாம் கொளுத்தப்பட்டு, புதியதாய் நடராஜரைப்பற்றிய பற்றுகளுண்டாகு மிடமாகிய சுடலை. இதுதான் துரிய நிலை. அதாவது அகப்பற்று புறப்பற்று இல்லாமல் உலகவின்பத்தினின்று நீங்கி ஆத்ம ஞானத்தை அடையும் நிலைமை. பரமகுருவான நடராஜர் தம்மைப்போலவே மனிதர்களையும், உலகவின்பங்களைக் கொளுத்திய சாம்பரின்மேல் நடத்தி நிரதிசயானந்தத்தை யடையும்வண்ணம் கற்பிக்கிறார்.

ஒருசமயத்தில் ஒரு பெரியவரை வேறொருவர் "சிதம்பரத்திற்கும், மேலைச்சிதம்பரம் என்ற பேரூருக்கும் உள்ள வித்தியாசமென்ன" வென்று கேட்க, பெரியவர் "கால்மாற்று," வித்தியாச முண்டென்றனர். சந்தேகிக்கு தன் சந்தேகத்திற்குமேல் மற்றொரு சந்தேகமும் தோன்றி மௌனமாயிருந்தார். பிறகு பெரியவர், "சிதம்பரத்தில் நடராஜர் வலதுகாலை முயலகன்மேல் இருத்தி இடக்காலை மேலே தூக்கி நடனஞ்செய்கிறார். ஆனால் மேலைச் சிதம்பரம் என்கிற ஸ்தலத்தில் இடக்காலை முயலகன்மேல் வைத்து வலது காலை மேலே தூக்கி நடனஞ்செய்கிறார். இதற்குத்தான் யாம் 'கால்மாற்று' வித்தியாசமென்று சொன்னோம்" என்றுகூறினார். இந்த மேலைச் சிதம்பரத்திலும் சிதம்பரத்தில் நடப்பது போல் ஆண்டில் இரண்டு தரிசனங்கள் நடக்கின்றன. ஆனால், நடராஜர் நடனஞ்செய்த விடம் வெள்ளியம்பலம், அல்லது வெள்ளியங்கிரி என்றும், அவ்விடத்திற்கு ஜனங்கள் போய்வருவது நிரம்பவும் கஷ்டமாக விருக்கிறபடியால், மேலைச் சிதம்பரமென்ற விடத்தில் நடராஜ விக்கிரகம் முதலியவைகள் பிரதிஷ்டைசெய்து கனகசபை நிருத்தசபை முதலியவைகளைக் கட்டி உற்சவங்களை நடத்திவருவதாகவும், வெள்ளியம்பலத்தில் நடராஜர் நடனஞ் செய்யும்பொழுது காலிலிருந்த ஒரு சதங்கை சிதம்பரத்தில் வந்து விழுந்ததாகவும், அதன்பிறகு அந்த விடத்தில் நடராஜர் பதஞ்சலி முனிவருக்காக நடனஞ்செய்து காட்டியதாகவும் சொல்லுகிறார்கள்.

வெள்ளியம்பலம் என்ற வெள்ளியங்கிரியானது கோயமுத்தூருக்கு மேற்கே இருப[illegible] மைலுக் கப்பாலுள்ள ஒரு மலை. மலையி[illegible]

பேரில் ஏறிச்செல்வதற்கு சரியான பாதையில்லை. வெகு செங்குத்தான ஏற்றத்தில் ஏழு மைல் ஏறிச்சென்றால் காஞ்சிமகா நதியைக் கடந்து ஒருமைல் ஏறவேண்டும். இவ்விடத்தில் ஒரு பெரிய பாறையின் அடியில் பஞ்சலிங்கங்களையும் காணலாம். இவ்விடத்தில் விம்மிதங்கள் பல. குகைகளுக்கு கணக்கு இல்லை. அனேக ரிஷிகளும் தபசிகளு மிருப்பதாக சொல்லப்படுகிறது. பஞ்ச லிங்கங்களுள்ள ஸ்தலத்தில் ஜனங்கள் இராத்தங்குவது வழக்கமில்லை. ஆண்டி காலை என்னப்பட்ட காஞ்சிமகா நதியின் கரையிலேயே ஜனங்கள் தங்கி லிங்கதரிசனஞ் செய்துக்கொண்டு திரும்புகிறார்கள். இவ்விடஞ் சென்றால் ஜனங்களுக்கு சொல்லமுடியாத ஆநந்தமுண்டாகிறது. மனிதர்கள் இயற்கைப் பொருள்களின் அமைப்பை யுள்ளதுள்ளபடி யறியவேண்டு†மானால் இவ்விடத்திற்குச் சென்று இந்த ஸ்தலத்தில் இரண்டு நாள் தாமதிப்பது அவசியம். கடவுள் இல்லையென்று சாதிக்கிற நாஸ்திகர்கள் இந்த ஸ்தலத்தை ஒரு தடவை தரிசிப்பார்களானால் உடனே அவர்கள் ஆஸ்திகர்களாய் மாறி பக்திமான்களாயவிடுவார்கள். இவ்விடத்தில் இராத்தங்குகிற பக்திமான்களுக்கு நடுநிசியில் தேவகானங்களும் வாத்திய கோஷங்களும் கேட்பதாக இன்னும் பலரால் கூறப்படுகிறது. இவ்விடத்தில் பளிங்கு மண்டபமொன்று பல்லாயிரம் கால்களுடன் இருப்பதாகவும், சாமானியர்கள் அவ்விடஞ்சென்றால் பெரிய வண்டுகள் அவர்களைத் துரத்தி யடிப்பதாகவும் கேள்வி. உயரமான விடத்திலிருந்து இந்த மண்டபமுள்ள விடத்தை இன்னும் பார்க்கலாம். நான்கு பக்கங்களிலும் செங்குத்தான மலைகளால் சூழப்பட்டு, மா, பலா, கொய்யா முதலிய மரங்கள் நிறைந்த சோலைகளால் கவியப்பட்டு, துஷ்ட மிருகங்களால் நிறைந்துள்ள ஒரு மேட்டுப்பாங்கான மத்தியப் பிரதேசம். சுமார் ஒரு மைல் சமசதுரமிருக்கலாம். அனேக புண்ணியவான்கள் இவ்விடத்திற்கு சென்றதை பலர்பார்த்திருப்பதாகவும் திரும்பி வந்தவர்களைக் கண்டவர்கள் ஒருவருமில்லை என்றும் கேள்விப்படுகிறோம். அவ்விடத்தில் சென்று ஒன்றானவர்களுக்கு இவ்விடத்தில் என்னவேலை. இதுவே சிதம்பரமென்றும் அம்பலமென்றும் எண்ணப்படவேண்டும். இந்த ஸ்தலத்தை தரிசனஞ் செய்தவர்கள், திருவாரூர், ஜம்புகேசுவரம், காளஹஸ்தி, திருவண்ணாமலை, சிதம்பரம் என்ற பஞ்ச ஸ்தலங்களை தரிசித்தவர்களுக்கு சமானமாகிறார்கள். எவ்வாறெனில்:—இந்த ஸ்தலத்தில் மேற்படி ஸ்தலங்களிலுள்ள பஞ்சலிங்கங்களு மிருக்கின்றனவென்பதே.

---

† "My own experience in this realm of concrete Nature-study began in January 1901." My visit to பேரூர் was in 1895. "True Nature-study when guided wisely, must ever lead to an appreciation of God, which understanding constitutes the third element in a complete education. A knowledge of the value of such training will enable one to readily grasp the meaning embodied in the following lines."—

"Just as the birds all thankful sing,
As larks poise high on fluttering wing,
As swallows praise Him in their flight,
And flowers bloom towards the light;
And in the lovely early dawn,
A happy smile is on the lawn,
All things with a shout and song
Give forth thanks most glad and strong."—

Nature study Review.

"An appreciation of Nature is a direct channel to an understanding of God."—*Froebel.*

"PEARLS OF FAITH"

SELECTED AND STRUNG TOGETHER FOR PARENTS AND CHILDREN TO WEAR.

(From the Sayings of St. Vemanna.)

ஆந்திரபாஷையில், பிரமஞ்ஞானியும், அருட்கவியுமாகிய,

வேமன்ன மகாகவி அருளிச்செய்த

பத்யங்கள்.

(Fourth Series.)

யோகிகளின் பெருமையைப் பக்தரே அறிவார்கள்.

1. வண்டறியுந் தேன்குவையின் வைப்பு மகரந்தமதெங்
குண்டெனநற் றும்பி யுவந்தறியும்—கொண்டைவிழி
ஆரணங்கே பத்திசெயு மன்ப ரறிவாரால்
தாரணையார் யோகிசெயல் தான்.

(இ-ள்.) தேன் மிகுதியாயிருக்கும் இடத்தையும் புஷ்பத்தின் வாசனையுள்ள இடத்தையும் வண்டுகள் அறிந்து சாருதல் போல சமாதியோகம் செய்யும் யோகிகளின் பெருமையை அவரிடத்துப் பத்தி செய்யும் அன்பர்கள் மாத்திரமே அறிவார்களன்றி மற்றவர்கள் அறியமாட்டார்கள்.

மனம் சலிக்காதவர்களே முத்தியடைவார்கள்.

2. பசித்தழலாற் காமமெனும் பற்றியெழுந் தீயால்
இசைத்திடுவெங் கோப வெரியால்—முசித்தழியா
தெந்நாணீ யோர்நிலையே சிந்தை யிருத்துவையோ
அந்நாளே முத்தி யறி.

(இ-ள்.) பசி காமம் கோப மென்னும் முத்தழல்களாலேயும் மனம் தபியாமல் எப்போதொருவன் தன்மனத்தை ஏகாக்ரசித்தமாக ஆத்மசொருபத்தில் இருத்துகின்றானோ அப்போதே அவன் முத்தியைப் பெற்றான்.

மனோநிக்கிரகம் செய்யாமல் காயக்கிலேசம் செய்வதனால் பயனில்லை.

3. உடலை யொறுத்துமா யோகஞ்செய் வார்போல்
நடலைபுரி வாருளத்து நண்ணும்—வடுவகற்ற
வல்லாரோ புற்றின் புறத்தன்னை மாய்த்தக்கால்
உள்ளரவஞ் சாமோ வுரை.

(இ-ள்.) காயக்கிலேசம் செய்து மேலுக்கு யோகம் செய்பவர்களைப் போலக் கபடபாவனை காட்டுவோர்கள் மனக் குற்றம் நீங்கித் தூயராக மாட்டார்கள். வெளிப்புற்றைமாய்த்ததனாலே அப்புற்றினுள்ளிருக்கும் பாம்பு சாகுமா? சாகமாட்டாதல்லவா?

உள்தூய்மை யில்லாமல் வேடத்தால் மட்டும் பயனில்லை.

4. காவித் துணியுங் கமண்டலமு முண்டனமும்
மேவுமொரு பாடையும் வேடமும்—ஆவலுடன்
கொள்ளவரு தூய்மை குலவும் தலைக்கல்லால்
உள்ளமதற் குண்டோ வுரை.

(இ-ள்.) காவிவஸ்திரம் கட்டிக் கமண்டலம் கைபிடித்து தலை மொட்டையடித்துக் கொண்டு சந்நியாசிக்கு வேண்டிய வேஷமும் பாதுகையும் கொள்ளுதலாலே என்ன பிரயோசனம்? தலையை மொட்டையடித்துக்கொள்ளுதலால் தலையழுக்கு நீங்கி சுவச்சமானதேயன்றி மனவழுக்கு நீங்கி நிர்மலமானதுண்டோ? இல்லையே! என்றபடி.

ஞானமுள்ளவரே மேற்குலத்தவராவர்.

5. அஞ்ஞான முள்ளாரே கீழ்மக்க ளாரகத்தில்
மெஞ்ஞான முள்ளவரே வேதியர்காண்—எஞ்ஞானம்
கொண்டந்நாள் வான் மீகி கோதின் முனியானான்
ஒண்டொடிநீ மற்றீ துரை.

(இ-ள்.) அஞ்ஞானிகளே கீழ்க்குலத்தவராவார். ஞானமுள்ளவரே மேற்குலத்தவராவார். எப்படியென்னின் வான்மீகிமுனிவர் முன்பு வேடனாயிருந்தும் பின்பு தமது ஞானத்தாலன்றோ மகாமுனியாகச் சிறந்தார்?

சற்குருசேவையினாலே முத்தியடைதலாம்.

6. காகத்தின் கூண்டிற் கதிக்கு மெழிற்குயில்போல்
வேகக் குளவியதாம் வெம்புழுப்போல்—பாகொத்த
செப்பலுளா யெந்நாளுஞ் சிற்குருவைத் தியானிக்க
ஒப்பில் குருத் தானா முணர்.

(இ-ள்.) காக்கையின் கூட்டில் இட்ட குயில்முட்டையானது காக்கைமுட்டைபோலவே பேதமின்றி யிருப்பினும் பின்பு பொரியும்போது குயிற் குஞ்சாக வெளிப்படுதல் போலவும், குளவியினால் ஊதப்பட்ட புழுவானது சதா அக்குளவியின் நினைப்பாலே தன்னுருமாறிக் குளவியாதல்போலவும் சத்குருவையே சதா தியானித்துக் கொண்டிருப்பவன் தன் அக்ஞானமான அந்தக்கரணம் மாறி ஞானத்தைப்பெற்று சற்குருவைப்போலவே விளங்குவான்.

அஞ்ஞானம் நீங்கி மனம் நிர்மலமாதலே முத்தி.

7. மனவிருள்தான் றீரவுடன் மாமுத்தி யென்னத்
தனியறிவில் லாமற் றயங்கி—மனமாயைக்
குள்ளானோர் போக உணருமனம் தாமானோர்
தள்ளாத யோகரெனச் சாற்று.

(இ-ள்.) மனத்தில் உள்ள அஞ்ஞானம் நீங்குதலே முத்தியென்னும் ஞானமில்லாமல் அறிவுகெட்டு மனமாயைக்குள்ளாகி உழல்பவர்க்கு ஒருநாளும் முத்தியில்லை. அவ்வாறன்றி அஞ்ஞானத்தில் நீங்கி சித்தே தாமாகக் கண்டவர்களே மோட்சத்துக்குருகராகிய ஞானயோகியர் ஆவார்கள்.

சுகதுக்கங்கள் புண்ணிய பாவங்களால் உண்டாகும்

8. துன்புவரிற் றெய்வத்தைத் தூஷிக்கும் பேதையொழிந்
தின்புவரிற் றன்னை யினிதுவக்கும்—முன்புரிந்த
நல்வினையுந் தீமையுமே நாடிற் சுகதுக்கம்
பல்வகையாக் கூட்டுமெனப் பார்.

(இ-ள்.) அறிவில்லாத மூடன் துன்பம் வந்தபோது தெய்வத்தை நொந்துகொள்ளுவான்; இன்பம் வந்தபோதோ தானே அவ்வின்பத்துக்குக் காரணமாக எண்ணித்தன்னைப் புகழ்ந்து கொள்ளுவான். ஆயினும் யதார்த்தம் வேறு. நாம் முற்பிறப்பிற்செய்த புண்ணிய பாவங்களாகிய கன்மங்களுக்கீடாக இப்போது பலவிதமான சுகதுக்கங்களை அனுபவிக்கின்றோம் தெய்வம் நிமித்தகாரணமேயன்றி முதற்காரணம் புண்ணியபாவங்களேயாகும்.

பத்தியில்லாத பூசை பயனில்லை.

9. பண்டத்தாற் சேதம் பரியா விருந்தன்பு
கொண்டியற்றாப் பூசைமலர்க் குச்சேதம்—வண்டிமிர்பூங்
கோதையாய் தக்காருக் கீயாக் கொடைபொருட்குச்
சேதமா மென்றே தெரி.

(இ-ள்.) பரிந்திடாத விருந்துபண்டச்சேதமேயன்றிப் பயனில்லை. தக்கவர்களுக்குக் கொடுக்காத தானம் வீணாகப்பொருளுக்குத்தான் சேதம். அதுபோலவே பத்தியோடு செய்யாதபூசை பத்திரபுஷ்பங்களுக்குச் சேதமேயொழிய அதனால் எள்ளளவும் பயனில்லை.

மனோ நிக்கிரகம் செய்தல் அரிது.

10. மாற்ற மெளிது மனத்தை நிறுத்தரிது
கூற்ற மரிதுதாங் கொள்ளரிது—தோற்றொடியாய்
வாளேந்தல் யார்க்கு மெளிதாகும் வன்போருக்
காளாதன் மிக்க வரிது.

(இ-ள்.) வாயினாற்சொல்லுதல் எளிதாகும். மனத்தையோடாமல் ஒருநிலையில் நிறுத்துதல் மிகவும் அருமையாகும். பிறருக்கு அதைச்செய்தல்வேண்டும் இதைச்செய்தல் வேண்டுமென்று சொல்லுதல் எளிதாகும். அன்றிச் சொல்லியவண்ணம் தாமே செய்தலரிது. கத்தியைக் கையில்பிடித்தல் பிரயாசமன்று. யுத்தகளத்திற் புகுந்துசண்டை செய்தலோ மிக அருமையாகும்.

உயிர்போகும்போது சுற்றத்தார் உடன் வரமாட்டார்கள்.

11. மக்களெங்கு வேட்ட மனையெங்கு மல்கியநல்
ஒக்கலெங்கு நேசர்களோ டூழியர்தாம்—தொக்கதெங்
காருடலம் விட்டேகம் மாவியெழ வந்தக்கால்
சாரலர்காண் தன்மை தெரி.

(இ-ள்.) உடலைவிட்டு உயிர் நீங்கும்போது மனைவிமக்கள் முதலான சுற்றத்தாராயினும் சிநேகிதராயினும் பரிசனங்களாயினும் நம்முடன் வரமாட்டார்கள், எல்லாரும் உயிருள்ளமட்டும் தான் நம்மைச்சூழ்ந்து கொண்டிருப்பார்கள்.

சிநேகமும் பகையும் நம்மாலே யுண்டாகின்றன.

12. நாம்பிறரை நேசித்தா னம்மையவர் நேசிப்பார்
நாம்பிறர்பா னேச நயப்பற்றாற்—றாம்பிறரும்
அற்றிடுவா ரல்லாம லாடம் பரத்தாலும்
உற்றிடுவ தொன்று மிலை.

(இ-ள்) நாம் ஒருவரை நேசித்தால் அவர்களும் திரும்ப நம்மை நேசிப்பார்கள், நாம் நேசியாவிட்டால் அவர்களும் நம்மை நேசிக்கமாட்டார்கள், ஆதலால் பிறரை நமக்குச் சிநேகமாக்கிக் கொள்ளுதற்கு அவரை நாம் சிநேகித்தலன்றி வேறே யாதுசெய்த போதிலும் பயனில்லை,

மனக் கோணலை நிமிர்த்த வழியில்லை.

13. சொற்கோட்ட முற்றாற் றுகளின் றறுத்திடலாம்
கற்கோட்ட மாணாலுங் கைசெயலாம்—விற்கோட்டம்
மாணுறுத லாயிழைநன் பாகே மனக்கோட்டம்
தானகற்ற வில்லை தாம்.

(இ-ள்,) சொல்லிலுள்ள குற்றங்களைத் தக்கபடி போதித்துத் திருத்திவிடலாம், கல்வளைந்து கோணலாயினும் தக்கபடி வேலைசெய்து அதனை நீக்கலாகும், மனக்கோணலைமாத்திரம் நீக்க வழியில்லை,

காலமும் இடமும் ஆராயாமல் செய்யும் செய்கை வீணாகும்.

14. மெய்வருந்த லல்லால் விளையும் பயனில்லை
கைவருந்தக் குன்றின்மேற் கண்டிடலால் – செய்யபுனல்
ஊற்றெடுக்கும் பள்ளத்தே யோர்வாவி தோண்டினது
நாற்றிசைக்கு நல்கு நலன்.

(இ-ள்.) மலைமேல் கிணறுவெட்டுதலால் தேகப்பிரயாசமேயன்றி அதில் ஜலம் ஊறப்போகிறதுமில்லை; ஒருவர்க்குப் பயன்படப்போவதுமில்லை. பள்ள நிலத்தில் வெட்டினால் சீக்கிரத்தில் ஜலமூறிப் பல்லோருக்கும் பயன்படும்,

ஏழைகளுக்கு ஏழைகளே உதவி செய்வார்கள்.

15. கண்ணில்லான் றன்னோடு காலில்லா னல்லுறவு
பண்ணியொரு வர்க்கொருவர் பற்றாகும்—வண்ணம்போல்
ஏதுமிலா வேழைக் கிரவலர்பற் றாயுறுவர்
தீதணையும் போது தெரி.

(இ-ள்.) குருடனும் முடவனும், சேர்ந்து ஒருவர்க்கொருவர் உதவியாக வழிநடத்தல் போல ஆபத்து வந்தபோது ஏழைகளுக்கு ஏழைகளே உதவியாவர்.

ஈயாத லோபியின் பொருள் எப்படியோ அழிந்துபோகும்.

16. இரப்போர்க்கொன் றீயாம லெப்பொழுதும் பொன்னை
நிரப்புற் றவன்போல நேடிக்—கரப்பிற்பின்

நல்லா யுரைத்தேன்கேள் நாடிப் புதைத்தநிதி
எல்லாம்போய் முற்று மிறும்.

(இ-ள்.) யாசகர்களுக்கு எள்ளளவேனும் கொடாமல் எப்போதும் திரவியத்தைச் சேர்த்துச் சேர்த்துப் புதைத்துவைக்கும் உலோபியின் பணம் பூதம் சார்ந்துப் பயனற்றுப்போகும்.

கர்விகளின் இலக்கணம்.

17. கண்டிருந்துங் காணார் கருத்திற் செருக்குடையார்
கெண்டைவிழி! கேட்டிருந்துங் கேளாரே—பண்டையுரை
"காணுக்கண் கேளாச் செவியுடையார்" என்பதுதான்
வீணுத லில்லையது மெய்.

(இ-ள்.) கர்வமுடையவர் ஒருவரைக்கண்டபோதிலும் காணாதவர்போலவும் ஒருவர் வார்த்தையைக்கேட்டபோதிலும் கேளாதவர் போலவும் இருப்பார்கள். இவரைக்கண்பெற்ற குருடரென்றும் காதுள்ள செவிடர் என்றும் முன்னோர்கள் சொல்லியது உண்மையே.

இன்னின்னவை துன்பத்தைத் தருவன.

18. இன்னா கடன்கொள்ள லெத்தனையார்க் காணலும்
இன்னா விணக்கமறி வில்லாரோ—டின்னா
படிறுரைத்த லென்றும் பணங்கொள்ள வேண்டிய
அடகுவைத்த லின்னா வறி.

(இ-ள்) கடன்வாங்குதலும், மூடர்களோடு சிநேகம்செய்தலும், பொய்பேசுதலும். அடகுவைத்தலும் துன்பத்துக் கேதுவாகும்.

நல்லவிடத்தில் விதைத்த வித்து வீண்போகாது.

19. வெண்மணியா மிப்பிமிசை வீழு மழைத்துளிதான்
தண்புனலில் வீழ்துளியோ தண்புனலாம்—மண்மேல்
விளைவுக் கிசைந்தவிடம் வீண்போகா வித்து
முளைகொண் டெழுப்பயிராய் மூன.

(இ-ள்.) சிப்பிமேல் விழுந்த மழைத்துளியானது முத்தாகமாறும். ஜலத்தில் விழுந்ததோ ஜலமாகவேபோகும். அதுபோல பூமியில் சாரமுள்ள நல்ல இடத்தில் விதைத்த வித்து வீண்போகாமல் முளைத்துச் செழித்துப்பயிராகிப் பயன்கொடுக்கும்.

அறிவில்லார்க்குப் போதிப்பது அசாத்தியம்.

20. அறிவுடையார்க் கொன்றைத் தெரிக்க லெளிதாகும்
அறிவிலருக் குத்தெரித்த லாகா—நறுநதலாய்
ஏரியதன் கோணல் நிமிர்த்த லெளிதாமோ
பாரிலித னுண்மை பகர்.

(இ-ள்.) புத்திசாலிகளுக்கு ஒன்றைப்போதித்த லெளிதாகும். மூடர்களுக்குப் போதித்தல் முடியாதாகும். குளம் குட்டைகளின் கோணலை நிமிர்த்திப்படித்துறை கட்டலாமேயன்றி கரைகடந்த ஏரியின் கோணலை நிமிர்த்த ஆர்க்கு வசமாகும்.

CHARACTER SKETCH:
THE STORY OF PROSCOVIA.

குணவலி விளக்கம்:
ப்ராஸ்கோவியாவின் சரித்திரம்.

(88-வது பக்கத் தொடர்ச்சி முடிவு.)

ப்ராஸ்கோவியாவுக்குத் துணைசேர்த்தனுப்பப்பட்ட மனிதன், அவளுடைய துரதிர்ஷ்டம், உடம்பு அசௌக்கியத்தினாலே காமா நதிக்கரையில் ஒரு கிராமத்தில் தங்கிவிட வேண்டியதாயிற்று. அதனால் அவள் மறுபடியும் துணையின்றித் தனியே விடப்பட்டாள். படவுகள் 'வால்கா' நதிமேல் எதிர்த்துச் செல்லும்போது அவற்றைக் குதிரைகள் கட்டிக் கரையோரமாக இழுத்துச் செல்லவேண்டி வரும். அவ்வாறு செல்லுகையில், சடிதியில் காற்றும் மழையுமாகப் பலமாயடிக்கப், படவு கரைமேல் மோதி உடைந்துபோகாமல் அதனைக் காக்கும்பொருட்டுப் படவுக்காரன் சுக்கானால் தள்ளும்போது அவ்விசையில் ப்ராஸ்கோவியாவையும் வேறிருவரையும் நதியில் தள்ளி வீழ்த்திவிட்டான். அவர்களைத் தக்ஷணமே எடுத்துப் பிராணபாயமில்லாமல்காப்பாற்றினபோதிலும், அங்கு நனைந்த உடையை மாற்றிக்கொள்ள மறைவிட மில்லாமையால் ப்ராஸ்கோவியா ஈரத்துணியுடன் இருக்க வேண்டி வந்ததனால் அவளுக்கு முன்னிருந்த அசௌக்கியம் பின்னும் அதிகரித்தது. மிலின் பெருமாட்டி தான் கூட்டியனுப்பின மனிதன் 'நிஜ்நி நவகரோடு'க்கு அவளைப்பத்திரமாகக் கூட்டிச்செல்வதேயன்றி, அங்கு நின்று மேலே செல்லுதற்குத் தக்க உதவிகளும் செய்வானென்று நம்பியிருந்ததனாலே, அவளுக்கு அவ்வூரில் வேறு சிபாரிசுக் கடிதங்கள் கொடுக்கவாவது அங்கு நின்று மேலே செல்லுதற்குரிய யோசனைகள் சொல்லவாவது இல்லை. அதனால் அப்பெண் மறுபடியும் துணையொருவர் இல்லாமல் நிர்க்கதியாக விடப்பட்டனள். ஆயினும் முன்னைக் கிப்போது ஒரு விஷயத்தில் பேதம் உண்டு. மிலின் துரைசானி அவளுக்கு வழிச்செலவுக்குப் பணங்களும், உடுத்தல் போர்த்தலுக்குரிய துணிகளும் வேண்டிய அளவில் கட்டிக் கொடுத்திருந்ததனால் அவ்விஷயமாக யாதொரு கவலையும் இல்லை. ஆனால் முன்னே தனக்கு இன்னம் இவ்வளவு தூரம் போக வேண்டுமென்றும் இத்தனை கஷ்டங்கள் அனுபவிக்க வேண்டுமென்றும் ஒன்றும் விவரம் தெரியாமல் இருந்தது. அன்றியும் பட்டணங்கள் என்றால் இவ்வளவு நடுக்கமும் முன்னில்லாமலிருந்தது. இப்போது அவ்விரண்டு விஷயங்களாலும் விசேஷ விசாரமும் பயமும் அவள் மனத்தில் குடிகொண்டிருந்தன. 'நவகரோடு'க்கு வந்து சேர்ந்ததும் தோணிக்காரன் அவளை வழக்கமாக இறக்கும் துறையில் ஒரு பாலத்தட்டில் இறக்கி விட்டனன். இறங்கினதும் தனக்கெதிரே ஓர் தேவாலயம் தோன்றக்கண்டு தான் தங்கியிருத்தற்கு ஒரு இடத்தைத்தேடு முன்னமே தன் வழக்கப்படி கடவுளை நோக்கிப் பிரார்த்தனை செய்யும்படி அங்கு சென்றனள். கோயிலுள்ளே ஒருவருமில்லையாயினும் அங்கு சன்னலுக்கப்பால் சிறிது தூரத்தில் தேவாரங்களைப் பாடிக்கொண்டிருந்த பெண்களின் தீங்குரல் அவள் காதில் விழுந்தது. அது பெண்துறவிகள் வாசமாயிருக்கும் ஓர் மடம். அங்கு பெண்களின் குரல் காதில் விழவும் அவளுக்கு மிகவும் ஆறுதலும் தேறுதலும் உண்டாயிற்று. அப்போது அவள் "சுவாமி கிருபையாலே என் மனோரதம் நிறைவேறப் பெறுவேனாயின் நான் இவர்களைப்போலத் துறவுபூண்டு கடவுளுக்குத் தொண்டுசெய்து துதித்துக்கொண்டிருப்பேன்" என்று தனக்குள்ளே ஓர் பிரதிக்ஞை செய்துகொண்டனள். பிரார்த்தனை முடிந்தபின் சிறிது நேரம்" பிரயாணிகள் தங்கும் சத்திரங்களுக்குச் செல்வோமாயின் அங்கு பல பேர் பலவிதமாகத் தன்னைக் குறித்துச் சொல்லத்தகாத வார்த்தைகளைச் சொல்வார்களாயின்

என்ன செய்வது என்று பயந்து அங்கு செல்ல மனமில்லாமல் தயங்கி நின்று பின்பு "நாம் கடவுள் கையில் நம்மை ஒப்பித்தபின் நம்பிக்கை யிழந்து சஞ்சலப்படுவது எவ்வளவு மதியீனம்" என்று தன்னைத்தான் நொந்துகொண்டு பின்னும் ஒரு முறை தனக்குப்பத்தியும் தைரியமும் அளிக்கும்படி பிரார்த்திக்கக் கோயிலுட் சென்றனள். அவ்விடத்தில் இருந்த ஒரு பெண்துறவி அவளைநோக்கி "அம்மா! கோயிற் கதவைச்சாத்தக் காலமாயிற்று" என்று சொல்ல ப்ராஸ்கோவியா கொஞ்சம் நெஞ்சைத் திடம்பண்ணிக்கொண்டு அவளிடத்தில் தனக்கு சத்திரங்களுக்குப் போய்த் தங்கப் பயமாயிருக்கிறதென்றும் மடத்தில் தானே இராப்பொழுது தங்கியிருக்க இடம் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனள். அதற்கவள், "அம்மா! இவ்விடத்தில் பிரயாணிகள் தங்கும் வழக்கமில்லை ஆயினும் மடாதிபதியைக் கேட்டால் உனக்கு வேண்டிய ஏற்பாடுசெய்து கொடுப்பார்" என்றாள். ப்ராஸ்கோவியா தன் பணப்பையைக் காட்டி, "எனக்குக் காசுபணத்தால் யாதும் ஒத்தாசை வேண்டியதில்லை. எகதரினன்புரத்தில் மகாராஜி மிலின் பெருமாட்டி வேண்டிய பணம் கொடுத்தனுப்பி யிருக்கிறாள். நான் வேண்டுவதெல்லாம் ஒரு ராத்திரிக்குத் தங்குமிடமே யன்றி வேறில்லை" என்றனள். அத்துறவிப் பெண் அவள் பேச்சும் மாதிரியும் கண்டு சந்தோஷித்து அவளை மடாதிபதியினிடத்தில் கூட்டிச்சென்றனள். இம்மடாதிபதியும் அவர்களைப்போலவே பெண்தான். அம்மடம் பெண்களுக்கென்றே ஏற்பட்ட மடம். அங்கு கூட்டிச்சென்றதும் ப்ராஸ்கோவியாவின் களங்கமற்ற வார்த்தைகளைக்கேட்டு அநுமதிப்பத்திரத்தையும் மிலின் துரைசானி அவளுக்குக் கொடுத்திருந்த சிபார்சுக் கடிதங்களையும் பார்த்தபோது அப்பெண்களுக்கெல்லாம் அவளைப்பற்றி வெகு சந்தோஷம் உண்டாகியது. மடாதிபதியும் மிக்க பிரீதியோடு அவளைத் தன் அறையிலேயே படுத்துறங்கும்படித் திட்டம் செய்து மறுநாள் அவள் நதியில் வீழ்ந்ததனால் அவளுக்கு தேகம் அசௌக்கியப்பட்டிருப்பதைக் கண்டு அந்த ஸ்திதியில் போகக்கூடாது இன்னம் சிலநாள் தங்கியிருந்து உடம்பைச் சௌக்கியப்படுத்திக் கொண்டு தான் போகவேண்டுமென்று அவளை நிறுத்திக் கொண்டனள். அந்தச் சிலநாள்கள் கழியுமுன்னே ப்ராஸ்கோவியாவுக்கு அசௌக்கியம் மேலிட்டு வைத்தியர்கள்கூடப் பிழைத்தல் அரிது என்று அதைரியப்பட்டுக் கைவிடும்படியான நிலைமைக்கு வந்துவிட்டாள். ஆயினும் அவள் மாத்திரம் வியாதி அதிதீவிரமாயிருந்த காலத்தும் தனக்குப் பிராணாபாயம் உண்டாகும் என்று எண்ணவில்லை. "எனக்கு வாழ்நாள் முடிவு வந்துவிட்டதென்று நான் எண்ணவில்லை. கருணாநிதியாகிய கடவுள் நான் பட்ட கஷ்டங்களெல்லாம் வீணாக என் மனோரதம் நிறைவேறுமுன் என் பிராணன்போகப் பார்க்கமாட்டார், என்றுதான் நிச்சயமாய் நம்புகிறேன்" என்றனள். அவள் வெகுநாள் அவஸ்தைப்பட்டபோதிலும் கடைசியில் தான் எண்ணினபடியே சொஸ்தமடைந்தனள். கோடைகாலமெல்லாம் அதற்குள் சென்றுவிட்டது. பின்பு அவள் மிகவும் பலவீனப்பட்டிருந்ததனால் ஆட்டி அசைக்கும் மோட்டார் வண்டிகளில் பிரயாணம் செய்யச் சாத்தியப்படாதாதலின் பனிக்காலம் வந்து உரைபனிமீதே சக்கரமில்லாமற் சப்பாவண்டிகள் செல்லத்தக்க காலம்வரையில் அங்குதானே அத்துறவிப் பெண்களுக்கிடையில் இன்னம் சில நாளும் இருக்கவேண்டியதாயிற்று.

கடைசியில் அவள் ஒரு மூடு வண்டியில் ஏறி மாஸ்கோ நகரத்திற்கு பிரயாணமாகிச் சென்றாள். அங்கு மடாதிபதி தனக்குக் கொடுத்த கடிதத்தை எவருக்கு எழுதப்பட்டிருந்ததோ அந்தத் துரைசானியைக் கண்டு அவள் கையில் கொடுத்த அளவில் அத்துரைமகள் பீதர்புரியில் ஓர் ராஜகுமாரிக்கு தன் கைப்பட ஒரு கடிதம் எழுதிக் கொடுத்து அவளை ஒரு வர்த்தகனிடத்தில் ஒப்பித்து ஜாக்கிரதையாய் கொண்டு சேர்க்கும்படி அனுப்பினாள். இவ்விதமாக அவள் தான் இஸ்கிம்மிலிருந்து அரைரூபாய்க் காசும் கையில் தடியுமாகப் புறப்பட்டுப் பதினெட்டு மாதம் ஆனபிறகு தான் உத்தேசித்துச் சென்ற பீதர்புரிக்குக் கடைசியில் போய்ச்சேர்ந்தாள்.

ப்ராஸ்கோவியா பீதர்புரிக்குப் போய்ச் சேர்ந்தபின் தன்னைக் கூட்டிவந்த வர்த்தகன் வீட்டிலேயே தங்கியிருந்தாள். அவன் அங்கு ப்ராஸ்கோவியா நாடிவந்த ராஜஸ்திரீயைக் கண்டு பிடிப்பதற்கு முன்னமேயே ஏதோ தன் சொந்தக்காரியமாக ஊரைவிட்டுப்போக நேர்ந்தது. அவன் மனையாள் ப்ராஸ்கோவியாவிடத்தில் பிரீதியாய் அவளை உபசரித்தபோதிலும் அவள் காரியசித்தியைப்பற்றி ஒன்றும் முயற்சி யெடுத்துக்கொள்ளவில்லை. அவள் பிராஸ்கோவியாவுக்கு சிபார்சு செய்யப்பட்டிருந்த துரைமகள் ஒருவளைக் கண்டு பிடிக்கப் பார்த்தபோது அத்துரைமகள் நீவா நதியின் மறுகரையில் இருந்ததனாலும், அப்போது பிப்ரவரிமாதமாதலால் அந்நதி உரைந்து கட்டியாகி பாதி உடைந்ததும் உடையாததுமாய்க் கடத்தற்கு அபாயகரமாயிருந்ததினால் ஒருவரையும் கடந்து செல்லவிடாமல் கட்டுப்படுத்தப்பட்டிருந்ததனாலும் அவளைச்சென்று பார்க்கமுடியாமல் இருந்தது. அப்போது அவ்வர்த்தகன் வீட்டுக்குவந்த ஒருவன் அவள் தகப்பனார் விசாரணையைத் திரும்பப் பார்வையிடும்படிப் பிரார்த்தனை செய்து மந்திராலோசனை சபையாருக்கு ஒரு மநுச்செய்துகொள்ளென்று அவளுக்குச்சொல்லி அம்மநுவை அவள் பொருட்டுத் தான் எழுதிக்கொடுப்பதாகவும் சொன்னான். அவ்வாறே அம்மநுவைக் கையிலெடுத்துக்கொண்டு அப்பெண்மணி ஒருநாள் தப்பாமல் பதினைந்துதினம் ஆலோசனைசபையார் கச்சேரிவாயிலில் சென்று நின்று அங்கு யாரொருவர் ஆலோசனைசபையாரின் அங்கத்தரென்று தனக்குத் தோன்றுமோ அவர்களிடத்திலெல்லாம் அவள் கடிதத்தை நீட்டினள். ஒருவராயினும் அவளைப்பற்றி எள்ளளவாவது கவனம் வைக்கவில்லை. சிலர் கடிந்துபேசி அப்புறம் அகற்றினர். சிலர் அவளை யாசகத்துக்கு வந்தவளாக எண்ணி ஏதோ துட்டு துக்காணி கொடுக்க வந்தார்கள். அவ்வளவுதான்; வேறே பயனில்லாமற் போயிற்று. இதற்குள்ளாக கிறிஸ்து உயிர்த்தெழுந்த தினமாகிய ஈஸ்டர்தினமென்னும் பண்டிகைநெருங்கியது. அந்தப் பரிசுத்தமான வாரமுழுதும் ப்ராஸ்கோவியா தன் மனோரதத்தை நிறைவேற்றிக் கொடுக்கும்படிக் கடவுளை முழுவன்போடு சதா வேண்டிக்கொண்டிருந்தனள். அந்தப் பண்டிகை தினத்தில் அவள் என்று மில்லாத உற்சாகமும் மன எழுச்சியுமடைந்து தன்னை உபசரித்திருந்த அவ்வர்த்தகன் மனைவியோடு வண்டியேறி வெளிப் புறப்பட்டுப் போயினள். அப்போது அடுத்த தடவையில் தன் மநுவின் காரியம் நிச்சயம் பலிக்குமென்று தனக்கு உள்ளூறத் தோற்றியதாகச் சொல்லிக் கொண்டனள்.

அது கேட்டு வர்த்தகன் மனைவி, "உனக்கு வீண் பைத்தியந்தான். ஆலோசனையாவது சபையாராவது? அவர்களால் உனக்குக் காரியம் நிறைவேறுமென்று எனக்குத் தோன்றவில்லை. அவர்களுக்கு நீ மநுச் செய்துகொள்ளுவதைவிட அதோ பார்த்தாயா, அந்த இரும்பு விக்கிரகத்துக்குச் செய்துகொள்ளலாம்;" என்று அங்கிருந்த மகாபீத்தரின் உலோக விக்கிரகத்தைச்சுட்டிக்காட்டிச்சொல்லினள். அதற்குப் ப்ராஸ்கோவியா "ஆகா! கடவுள் சர்வ வல்லமையுள்ளவர். அவர் இரு

பையுண்டானால் அந்த லோகவிக்கிரகம் கூடத் தலை குனிந்து என் விண்ணப்பத்தைத் தன் கையால் வாங்கிக் கொள்ளக்கூடும்" என்றனள். அதுகேட்டு அக்குலமகள் சிரித்துக் கொண்டனள். பின்பு அவர்கள் இருவரும் அவ்விக்கிரகத்தை உற்று நோக்குகையில் அங்கு நின்று நீவா நதியில் படகுக்கு பாலம் திரும்பவும் இடப்பட்டுப் போக்குவரவாயிருப்பது தென்பட்டது. உடனே அவள் ப்ராஸ்கோவியாவை அக்கரையில் அவள் காணவிரும்பிய துரைமகளிடத்திற் கூட்டிப்போவதாகச் சொல்லி அவ்வாறே சென்றனள். அத்துரைமகள் வீட்டில் இருந்ததுமன்றி அவள் வரவை எதிர்பார்த்துக் கொண்டுமிருந்தனள். அத்துரைமகள் ப்ராஸ்கோவியாவை வெகு அன்பாக உபசரித்து அவள் விண்ணப்பத்தைப் படித்துப்பார்த்து அது எப்படி எழுதி யாருக்கு விலாசமிட வேண்டுமோ அப்படியில்லாமல் தப்பும் தவறுமாய் எழுதப்பட்டிருந்ததென்றும் அதை ஒருவரும் கவனியாமற் போனது ஆச்சரியமல்லவென்றும் கூறினள். பின்பு தன் உறவினரில் ஒருவர் ஆலோசனை சபையில் உயர்ந்த வேலையில் இருப்பதாகவும் அவர் பார்த்தால் ப்ராஸ்கோவியாவுக்கு மிகுந்தசாதகம் செய்யக் கூடுமென்றும், அவள் துரதிர்ஷ்டம்! அவருக்கும் தனக்கும் அப்போது நல்ல சௌசன்யம் இல்லையென்றும் சொன்னாள்.

ஆனால், 'ஈஸ்டர்' தினத்தன்று கிரேக்க மத சங்கத்தாரின் சம்பிரதாயப்படி பரஸ்பர மனஸ்தாபங்களெல்லாம் நிவிர்த்திசெய்து கொள்வது வழக்கம். அன்றைத்தினம் ஒவ்வொரு குடும்பத்தாரும் ஒருவரையொருவர் சந்தித்து 'கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்' என்று ஒருவர் சொல்ல அதற்கு விடையாக 'ஆம் எழுந்தனர்' என்று மற்றவர் சொல்ல ஒருவரையொருவர் முத்தமிட்டுக்கொள்ள அத்துடன் அவ்விஷயத்தில் நிகழ்ந்த மனஸ்தாபங்கள் எல்லாம் நீங்கிச் சிநேகிதமாவார்கள். ப்ராஸ்கோவியா அங்கு தன் சிநேகிதர்களோடு போசனம் செய்து கொண்டிருக்கையில் மேலே கூறிய கனவான் வழக்கமாகச் சொல்லும் அவ்வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டுவர உடனே அத்துரைமகள் ப்ராஸ்கோவியாவை அவனுக்குத் தெரிவித்து அவள் வரலாற்றையும் சொன்னாள். அவன் அவள் விஷயத்தில் மிக்க அநுதாபம் காட்டி ஆலோசனை சபையாருக்குத்தன் தகப்பன் குற்றத்தை மறுபடி விசாரிக்க மநுச்செய்து கொள்ளுதல் மிக்க காலதாமசத்துக்கிடமாகுமென்றும் கடைசியில் அவளுக்கு அநுகூலமான தீர்ப்புக் கிடைப்பதும் நிச்சயமில்லையென்றும் இவ்விஷயத்தைப் பற்றி நேரே அலக்ஸாந்தர் சக்கரவர்த்திக்கே மநுச்செய்து கொள்ளுதல் உத்தமமென்றும் சொன்னான். ஆயினும் சக்கரவர்த்தியின் தரிசனம் எவ்வாறு பெறுவது? எவர் அவளை அவரிடம் கூட்டிச் செல்வார்கள்? இது விஷயமாக அவள் ஆலோசித்தபோது, சக்கரவர்த்தியின் தாயராகிய மேரி சக்கிவர்த்தினியின் பிரதான காரியதரிசியாகிய ஒருவரைப் போய்ப்பார்த்தால் அக்காரியம் நிறைவேறும் என்று ஒருவர் சொல்ல அப்படியே அவரிடம் சென்று அவர் மனையாளின் தயவினாலே அவருடைய பிரீதியைச் சம்பாதித்து அவர் தயவினாலே சக்கரவர்த்தினியின் தரிசனம் பெற்றாள்.

இந்த மேரி சக்கிரவர்த்தினி மிகவும் தயாள குணமுள்ளவர். பெருமிதம் பாராட்டிக் கொள்ளாதவர். மகா பரோபகாரி. சாந்த குண சீலர். இவர் ப்ராஸ்கோவியாவை மிகவும் அன்போடு வரவேற்று அவள் வரலாற்றைக் கேட்டு ஆனந்தித்து அவளது சுயநயம் விட்டுப் பரநயும் பாராட்டும் சிறந்த குணத்திற்காக அவளை வெகுவாக மெச்சித் தாம் அவளைச் சக்கிரவர்த்தியினிடம் கூட்டிச் சென்று அவள் மனோரதத்தை நிறைவேற்றி வைப்பதாக வாக்களித்து அவளுக்கு சொந்தச் செலவுக்குபயோகமாகும்படி முந்நூறு ரூபாய் ரொக்கமும் வெகுமதியாக அளித்தனர். ப்ராஸ்கோவியாவுக்கு அச்சமயத்தில் பிறவிக் குருடனுக்கு இருகண் கிடைத்தது போலவும் நித்தியதரித்திரனுக்குப் பெருநிதி கிடைத்தது போலவும் அளவற்ற ஆனந்தம் உண்டாகி அவ்வானந்த மேலீட்டால் தேகம் பரவசமானாள்.

இரண்டு தினம் கழித்து சக்கிரவர்த்தினியால் சக்கிரவர்த்தியிடம் அழைத்துச் செல்லப்பெற்று சக்கிரவர்த்தியின் தரிசனம் பெற்று, தன் தந்தையின் விடுதலையைப் பெற்றதுமல்லாமல் வேறு தன் சிநேகிதர் சிலாரது விடுதலையையும் பெற்றனள்.

இவ்வாறு தான் மேற்கொண்ட காரியம் தெய்வாநுகூலத்தால் நிறைவேறினதினால் ப்ராஸ்கோவியா மனம் களித்து முன்பு தான் நிச்சயித்தபடியே தன் வாழ்நாள் வீணாமல் கடவுளின் கைங்கரியத்தில் செலுத்த எண்ணி துறவு பூண்டு நிஷ்னிநகர் மடத்தில் பெண் துறவிகளோடு கூடியிருந்து தவம் செய்து கொண்டிருந்தனள். அவளது தேகம் அவள் பட்ட அநேக வழி வருத்தங்களால் தளர்ந்து அசௌக்கியப் பட்டு பின்பு சிலவருஷங்களுக்கெல்லாம் மரணமடைந்து பரலோகத்தை அடைந்தனள்.

முற்றும்.

EASY LESSONS IN ECONOMICS.
DIVISION OF LABOUR.
அர்த்த சாஸ்திரம்.
உத்யம விபாகம்.

ஒரு ஜனஸங்காதத்தின் உத்யமத்திற்கு ஸஹகாரியாயிருப்பதில் இரண்டாவது, உழைப்பைப்பற்றிய சிலவிதமான கட்டுப்பாடுகள் என்று முந்தியுரைத் திருக்கிறோம். இதற்கு உத்யம விபாகம் (Division of Labour) என்று ஸாதாரணமாய் பெயர் வழங்கி வருகிறது. ஆனால் இந்த வாசகம் இவ்வளவு திருப்திகரமானதல்ல. இப்பெயரால், தனோத்பத்திவிஷயமாக ஜனங்களின் ஏகீபூதமான வியாபாரங்கள், உத்பத்தியில் பிரயோகிக்கப்படும். பல ஸாதன விசேஷங்கள், விருத்தி வித்தியாசங்கள் முதலியவை பொதுவாகக் குறிக்கப்படுகிறபடியால் உழைப்பின் கட்டுப்பாடுகள் (Organization of Labour) என்னும் வாசகமே தகுமாயிருக்கும். ஆயினும் வழக்கத்தில் வந்த வாசகத்தை விட்டுவிடுவது அசாத்தியமாதலால் உத்யம விபாகம் என்பதைக் குறிச்சொல்லாக இந்த அருத்தத்தைக் குறிக்க வைத்துக் கொள்ளுவோம்.

நாகரிகமில்லாத ஜனஸமூகங்களில் மேற்கூறிய உத்யம விபாகம் விசேஷமாய்த் தென்படுகிறதில்லை. ஒவ்வொருவனும் தனக்கு வேண்டிய வேலைகளனைத்தையும் தானே செய்து கொள்ளுகிறான். ஆதிகாலத்தில் ஒவ்வொருவனும் தனனுடைய குடிசையைக் கட்டி வைக்கிறதும், தனது வில்லம்புகளை வித்தப்படுத்தி வைத்துக்கொள்ளுதலும், தன்னுடைய மாடுகளைப் பார்த்துக் காத்தலும் ஆகிய அக்காலத்திய வியாபாரங்களெல்லாவற்றையும் தானேதான் செய்துகொள்ள வேண்டியிருந்தது. ஆயினும் இங்கேயும் ஆண்பெண்ணை

ன்ற வித்தியாசத்தின்பேரில் ஸ்திரீகள் கிருத்யமின்னதென்றும், புருஷர்களது தொழிலின்னது என்றும் விபாகம் ஏற்பட்டிருக்கலாம். இப்படி சிலகாலம் சென்ற மேல் லிங்க வித்தியாசத்தின் பேரிலின்றி ஸாமர்த்தியத்தை யனுசரித்தும் உத்யம விபாகம் ஏற்படுகிறது. இப்படிப் பிறந்த உழைப்பில் முதலானது கம்மாளன் தொழில். ஆதியில் அவன், இரும்பு, கல், மரம் இவைகளில் பொதுவாக வேலைசெய்யத் துவங்கி, மற்றவர்களது உதவியைத் தான் அவர்களுக்குச் செய்துகொடுக்கும் ஸாமான்களிற்குப்பதிலாகப் பெற்றுக் கொண்டான். இப்படிச்செய்யும் வேலை நாளாவட்டத்தில் அதிகமாக, கம்மாளன் மூவகைத் தானாகப்பிரிந்து, இரும்பு வேலைக்குமாத்திரம் ஒருவனும், மரவேலைக்குத் தச்சனும், கல் கொத்துவதற்குக் கொத்தனுமாக மாறுகிறான். இப்படியே மற்றும் சுதேச வியாபாரங்கள் உதிக்க பல விதமான தொழில்களும் அவைகளுக்கு வேண்டிய தொழிலாளிகளும் உத்பத்தியாகிறார்கள்.

உத்யமவிபாகத்தால் தனோத்பத்தி யெப்படி உபகரிக்கப்படுகிறது என்பதைச் சற்று யோசித்து பார்ப்போம்.

(1) வேலையைக் கற்றுக்கோள்வதற்காகக் சழியும் காலம் குறைகிறது.—ஒருவன் ஒரு வேலை ஸம்பந்தமான ஸகலவியாபாரங்களையும் கற்றுக்கொள்ளவேண்டுமானாலும் அல்லது பல வேலைகளைக் கற்றுக்கொள்ளவேண்டுமானாலும் வெகுவானகாலம் செலவாவதுடன் பல பதார்த்தங்களையும் காரண ஸாமக்கிரியைகளையும் அழித்து நாசம் செய்யவேண்டியிருக்கிறது. ஆனால் ஒரு வேலையைமாத்திரம், அல்லது ஒரு வேலையைப்பற்றிய ஒரு பரிகர்மத்தை மாத்திரம் அவன் கற்றுக்கொள்ளவேண்டுமென்றால், சீக்கிரம் தகுந்த பயிற்சியடைந்து விடலாம்.

(2) வேலையாட்களின் கைத்திறத்தை யதிகரிக்கிறது.—ஒரு வேலையைப் பலதடவைகளில் செய்வதால், நன்றாகக் கற்றுக்கொண்ட வேலையைச் செய்வதிலும் வேலையாள் பிரபலமான ஸ்வாதீனத்தைப் பெறுகிறான். அந்தந்த வேலையைப் பற்றிய கர்மேணந்திரியங்கள் அத்புதமான தேர்ச்சியை யடைகின்றன. அங்கங்கே வேண்டிய அங்கப் பிரத்யங்கங்களும் ஸ்நாயுக்களும் பருத்து பலமடைந்து விசேஷமாக வேலைசெய்யக் கூடியவை யாகின்றன. காசுக்கடைக்காரன் எவ்வளவு சீக்கிரம் பணத்தை யெண்ணுகிறானென்பதையும் மின்தந்தி வேலையில் நியமிக்கப்பட்டவன் எவ்வளவு சுலபமாக ஸமாசாரத்தை யறிவிக்கவும் அறியவும் வல்லவனாக விருக்கிறானென்பதையும் ஊகித்துப் பார்ப்போர்க்கு அப்பியாசத்தால் உத்யம லாகவம் எவ்வளவு உண்டாகலாம் என்பது நன்றாக விளங்கும்.

(3) ஒரு வேலையினின்றும் இன்னொரு வேலைக்குப்போவதினால் நேரிடும் காலநஷ்டம் குறைகிறது.—ஒருவன் ஒரு வேலையைச்செய்யவேண்டுமானால் அதற்குவேண்டிய ஸஹாய ஸாமக்கிரியைகளையெல்லாம் ஸித்தம்செய்து கொண்டுதான் ஆரம்பம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே ஒரு வேலையைத்துவக்கி ஒரு ஸாமானைச் செய்தானால், மற்றொரு ஸாமானைச் செய்ய முன்சென்ற காலத்தில் கால்வரிசை கூடச் செல்லாது. ஆனால் வேலைக்காரன் முதல் ஸாமான் ஆனதும் ஆகாததும் அதைப் போட்டுவிட்டு, வேறொருவேலைக்குப் போனால் அதற்குவேண்டிய உபகிரியைகளையெல்லாம் செய்துவிட்டு அதைத் துவக்கி முடிப்பதற்குள் வெகு காலமாய்விடும்: மேலும் மறுபடியும் பழைய வேலைக்கு வந்தால் இது எல்லாம் சிதறிப்போய் முன்போலவே ஸாதனங்களைச் சேகரிக்கக் காலம் வேண்டியிருக்கும். மேலும் ஒரு காரியத்தை விட்டதும் விடாததும் நேராகச் சட்டென்று மறுகாரியத்திற்குப் போவது ஸுலபமல்ல. மனிதனுக்கு ஆலஸ்யம் ஸாமானியமானது. சோம்பேரித்தனத்துடன் அங்கு மிங்கும் கொஞ்சம் நின்று நிழலாடிவிட்டுப் போவது மனிதனுக்கு இயல்பு. ஆகவே ஒருவன் ஒருவேலையினின்றும் மற்றொரு வேலைக்குப்போகத் தட்டுப்பட்டுக்கொண்டிருந்தால்இப்படிசோம்பேரித்தனம் கொஞ்சம் கொஞ்சமாகப்பழகி வேலையின்பேரிலுள்ள அபிருசி நீங்கிப்போய்விடும்.

(4) யந்திர தந்திர நிர்மாணங்களை ஸாத்தியமாக்குகிறது.—இப்படியாகப் பிரிக்கப்பட்டுத் தொழில் நடந்தால் ஒவ்வொரு பாகமும் நன்றாகச்செய்யப் படுகிறது. அந்தந்தப்பாகம் எப்படி ஸுலபத்தில் சேர்த்தியாக நடக்கும் என்று அதில் பொறுப்புள்ள வேலைக்காரன் பார்த்துச் செய்விக்கிறான். ஆகவே இப்படி வேலையைக்குறைத்து, பலபெயர்கள் செய்யும் வியாபாரத்தைச் சில மனிதர்களைக் கொண்டே செய்வதற்கான பலவித யந்திரங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஆயினும் பெரும்பாலும் யுக்தியால் யந்திரநிர்மாணம் செய்வோர் வேலையில் ஏற்படுத்தப் பட்டிருக்கும் வேலையாட்களல்ல. இதற்கு வெகுவான சாஸ்திரப்பயிற்சியும், புத்திநுட்பமும் வேண்டியிருப்பதால் இதைச்செய்ய வென்றே உத்யம விபாகத்திற்கேற்கச் சில வித்வான்களும், புத்திசாலிகளும் தங்கள் ஆயுள்நாள்முழுதும் இதிலேயே பரிசிரமிக்கிறார்கள்.

(5) இதனால் ஏதாவது அங்கஹீனர்களாகவிருக்கும் ஜனங்கள் கஷ்டமில்லாமல் தத்தம் ஜீவனத்தை ஸம்பாதிப்பதுடன், ஜனஸமூஹத்திற்கும் செல்வத்தை யுண்டாக்கிவைக்க இடமாகிறது. மேற்கூறிய உத்யம விபாகம் உழைப்பாளிகளைப் பற்றியது மாத்திரம் அல்ல. பிரத்யேகமான ராச்சியங்களும், ஜனஸங்காதங்களும் தத்தம்தேசத்தின் சீதோஷ்ணஸ்திதி, ஜனங்களின் குணம் ஸாமர்த்தியம், பூமியின் ஸ்வபாவம் இவைகளை யனுஸரித்து ஒவ்வொரு விதமான உத்யமத்தை மாத்திரம் விசேஷமாய் அபிவிருத்திக்குக் கொண்டு வந்திருக்கின்றன. இப்படியாகப் பிரியும் உழைப்பிற்கு ஸமுதாய விபாகம் என்னும் பெயரைக் கொடுப்போம் (Territorial Division of Labour). இதற்கு ஜெவன்ஸ் என்னும் செல்வநூலாளர் (Local Adaptation) "தேசானு குணமாக வுத்யம ஆதானங்கள்" என்று பேரிட்டிருக்கிறார். இதனால் தான் ஒரு தேசத்திலிருந்து இன்னொருதேசத்திற்கு வர்த்தகம் ஏற்படுகிறது. எந்தெந்தப் பதார்த்தங்கள் எந்த தேசத்தில் சுலபமாயும், ஏராளமாயும் உத்பத்தியாக்கப்படலாமோ அங்கங்கேயே யவைகளை உண்டாக்கிக்கொண்டு மற்றைய தேசங்களுக்கு ஏற்றுமதிசெய்வதினால் வெகு பயனுண்டு. ஸாமான்களும் சுலபமான விலைக்குக்கிடைக்கும்; பலதேச ஸஞ்சாரத்தினாலும், ஒரு தேசத்தாருடன் மற்றொரு தேசத்தார்சேர்ந்து நடப்பதினாலும் நாகரிசத்தை யபிவிருத்தி செய்யப் பல வித ஸஹாயமேற்படுகிறது.

மேற்கூறிய உபயோகங்களைத் தவிர உத்யம விபாகத்தினால் வேறு இரண்டு அனுகூலங்கள் உண்டென்று ஜெவன்ஸ் என்பவர் கூறியிருக்கிறார்.

(1) ஸஹாபவிஸ்திருதி (Multiplication of Services).

அதாவது ஒருவனுக்காவது, அல்லது ஒரு தடவையாவது செய்யப்பட்ட வேலை பலருக்கும் பலகாலத்திற்கும் உபயோகமாவது. இதற்கு நிதர்சனமாகத் தபால் ஆபீஸ் முறைமைகளைக் கூறுவோம். ஒரு கடிதத்தை ஓரிடமிருந்து இன்னோரிடத்திற்குக் கொண்டுபோக நியமிக்கப்பட்ட சேவகன், ஆயிரம் காகிதங்களை அந்த விடத்திற்கு யாதொரு விசேஷ சிரமமில்லாமல் கொண்டுபோகலாம்.

(2) பிரதிரூபவிஸ்திருதி (Multiplication of Copies).

இதற்கு நிதர்சனமாக அச்சு யந்திரத்தை யெடுத்துக் கொள்வோம். ஒரு புஸ்தகம்

வரையவேண்டுமானால் அதிக செலவாகும். ஆயிரம் கிரந்தத்திற்கு, அதாவது 32,000 அக்ஷரத்துக்கு ஏறக்குறைய மூன்று ரூபாய் கொடுத்து ஸம்ஸ்கிருத புஸ்தகங்களை வரைய வைப்பது வழக்கமாகிறது. அப்படியானால் சுமார் 30-பக்கமுள்ள புஸ்தகத்திற்கு மூன்று ரூபாய் வேண்டிவருகிறது. ஆனால் இக்காலத்தில் 300-பக்கமுள்ள புஸ்தகம் மூன்று அணாவுக்குக் கிடைக்கிறது. இப்படி விலை ஸஹாயமானதற்குக் காரணம் பிரதிரூபவிஸ்திருதியினால்தான். ஒரு தடவை அச்சுரூபமாகக் கோர்த்தமேல் அதன் பிரதிரூபத்தை எத்தனை தடவை வேண்டுமானாலும் காகித முதலான தகுந்த ஸாமக்கிரியைகளில் கொள்ளலாம்.

இப்படியாக உத்யம விபாகத்தில் பலவித நன்மைகள் உண்டான போதிலும், இவ்விபாகம் மிகவும் ஸூக்ஷ்மமாகப் பரவிவிட்டால் சில தீங்குகளும் நேரிடும். ஆயினும் நன்மைகளபேக்ஷயாக இந்த தோஷங்கள் அவ்வளவு பலத்தவைகளல்ல.

(1.) வேலைக்காரனது காரியமெல்லாம் ஒருவியாபாரத்தில் மாத்திரம் இருப்பதால் அவனது கைலாகவம் குறைந்துபோய் அவ்வியாபாரத்தைத்தவிர மற்ற விஷயங்களில் மூடனாகிறான். ஒருவனது காலம் முழுதும் குண்டூசிக்குத் தலைகட்டிவைப்பதில் மாத்திரம் சென்றால் அவன் வேறு என்னகாரியத்திற்கு உதவப்போகிறான். ஆகையால் இவ்வேலைக்காரன் ஏதோவொரு காரணத்தால் தனக்கு வரும் வேலையை நடத்தக்கூடாமல் போனால் இன்னது செய்வதென்னத் தெரியாது தியங்கிவிடுகிறான். புதிதான தேசங்களுக்குப் போனால் அதற்கு வேண்டியபடி தன்னுடைய வேலையை மாற்றிக்கொள்ள அவனால் முடிகிறதில்லை.

(2.) இதனால் கைத்தொழில் மிகவும் சிக்குமுக்காக ஸூக்ஷ்மமாகிவிடுகிறது. அதனால் ஏதாவது ஒரு காரணத்தால் ஒருவித வியாபாரம் லாபம் கொடுக்காவிட்டால் அதை விட்டுவிட்டு அதில் வியாபிருதர்களான வேலையாட்கள் வேறொன்றுக்குப்போக முடிகிறதில்லை. அதனால் ஜனங்கள் தாரித்திரியமதிகரித்து அதிருப்தியும் கஷ்டமும் மேலாகி இராச்சியத்தைச் சிதறடிக்கத் தகுந்த எண்ணங்களையும் நடத்தைகளையும் உடையவராக ஆகிறார்கள்.

CHILDREN'S PAGE ON LAZINESS.

சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

சோம்பேரித்தனம்.

"Life is strenuous: The lazy suffereth death unto life."

இல்லாமை சோம்பேரிக்கு உரியது: விசனத்தைத்தவிர வேறொன்றும் அவனுக்கு உண்டாவதில்லை.

சோம்பேரித்தனம் சரீரத்துக்கு ஒரு பெரிய வியாதி. எப்படியென்றால் அதனால் மிகுந்த பாபமும், விசனமும், தொந்தரவும் உண்டாகின்றன.

முதலாவது: உடம்பு வணங்காதவன் பிறரிடத்தில் பொய் சொல்வதற்குப் பின்வாங்க மாட்டான். அதற்கு திருஷ்டாந்தமாக யாராயினும் அவனை பலான மனிதனிடத்திற்கு போய்வரும்படி சொன்னால் உடனே அவன் வீட்டிலில்லையென்று சொல்லிவிடுகிறான். யாதாயினும் ஒரு வஸ்து கொண்டுவரும்படி சொன்னால் அது அகப்படாது எனக்குத்தெரியும் என்று சொல்லுகிறான்.

இரண்டாவது: சோம்பேரி தனக்கு உத்ஸாகமாயிருப்பதைத்தான் அனுசரிப்பான். வேலைக்கு அருகனல்ல. எப்பொழுது தன் வேலையை செய்கிறதில்லையோ, அவன் சொத்தும் சௌக்கியானுபவங்களும் நாளுக்குநாள் குறையும். கடைசியில் துஷ்டத்தனத்துக்கே அருகனாகிறான்.

மூன்றாவது: சோம்பேரிகள் பிறரை ஆசிரயித்து அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருப்பார்கள். ஆகையினால் அவர்களுடையக்கூடிய வஸ்து சமீபத்திலிருந்த போதிலும் பிறருதவியில்லாமல் அது அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

ஆனதினால் ஒவ்வொருமனிதனும் தன் அந்தஸ்துக்கு சம்பந்தமான வேலையில் முயற்சியுடன் பிரவர்த்திக்கவேண்டியது.

"THE LESSONS OF THE WAR GO DEEPER......THEY REACH THE SPIRIT OF MAN."

Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

"Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."

அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்.] [God is Love: Knowledge is Power: *Aum*

"**New Series**" ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** "**Approved**"

புத்தகம், **24.**] நளஹு ஆவணிமீ, **1916**ஹு ஆகஸ்டுமீ [சஞ்சிகை **5.**

THIRD YEAR OF THE GREAT WAR.

On Friday the 4th instant the great war entered on its third year. The following message from the Secretary of State for India sums up the past phases and the present position of the war. "The situation at the close of the second year of the war may be summarised thus:—Germany had hoped to crush France in the first year but France recovered from the initial shock. Germany then hoped to strike Russia to ground last year but despite all German successes the Russian army remained intact. Germany returned to France and struck at Verdun which is still unconquered. Germany has unbroken armies and some reserves in her depots. She says she has no fear of famine. Financially, she has still the confidence of her people and neutrals have not yet gone against her but enthusiasm engendered by the first successes has disappeared. Public opinion in Germany has distinctly changed, and now shows signs of fatigue. The hope that she can crush her enemies in detail by well directed blows, has vanished, and the people are beginning to think about the future. The German financial system is very fragile and if Germany cannot end the war quickly to her advantage she will pass through a terrible period of economic difficulties. After calling up her trained men Germany called up various categories of untrained men beginning with the youngest. The 1916 and 1917 classes have already been summoned and only inferior materials is left. Men up to 46 years have also been called up. In depots are 150,000 to 200,000 wounded who have recovered and the 1918 class. But once these resources are exhausted there remain only old men and convalescents. Yet Germany has to maintain war on all the fronts and support her allies in widely extended fields of operations. She has not yet suffered a crisis owing to lack of effectives but a crisis is approaching and though she has still great resources of labour and is

employing prisoners of war and inhabitants of invaded countries, she is dependent on her own activities and cannot draw on neutral countries as the Allies can. The blockade has not brought actual starvation but it must be pressing hard on the Germans or they would not show such rage at its continuation. Austria is in even a worse position than Germany. She has called up men of 52 and already enrolled the 1918 class. Turkey cannot give the help expected of her or improvise a modern army. On the other hand neither Russia, Italy nor Great Britain have yet been able to employ all their resources. Germany at the beginning had superiority in the quality of munitions but this has been rapidly diminishing. Germany has had many victories but the Allies are now stronger than they ever have been and their resources in men and material are now greater than the resources of Germany." This dispassionate review of the situation, encourages the hope that the issue of the war will have been decided before, perhaps, many months before, the next 4th of August comes round, in favour of the Allies. This is our earnest hope and prayer. No impartial and honest person who examines the question can help coming to the conclusion that as between the two sets of belligerents, the British and their Allies have reason, humanity and righteousness on their side. And it is, therefore, the duty of all who care for these things to wish victory to them. The triumph of Germany would be the triumph of brute force. And nobody, not even the Germans in their sober moments, would like brute force to triumph over right and justice.

At the same time, we trust that Great Britain, Russia, France, Belgium and Italy will not fail to understand the deeper significance of this war. If we believe in an over-ruling Providence whose will is expressed by the moral law, we cannot escape the conclusion that the terrible losses of men and wealth, the immeasurable grief and suffering of millions of men, women and children, which this war has entailed on them as well as on the enemy, are intended as a warning to them no less than to Germany. They have not set up, it is true, brute-force as an idol to be worshipped as Germany has done, but can they look into their hearts and say that, in their relations with the coloured races, they have consistently given effect to those laws of humanity and equity the violation of which by Germany in relation to them, they so much and so justly reprobate? During the Franco-German War of 1870, Bismark, referring to the allegations of atrocities by the German army, retorted with a *tu quoque*. We do not wish to rake up unpleasant memories, but this we feel and must say most emphatically, that God makes no distinction between his white and his coloured children, and unless the white races learn to act towards the coloured races on the same principles as those by which they whish to see their relations with one another regulated, there will be no permanent peace or prosperity for them. And we, too, the coloured races have a terrible responsibility for all this mass of blood and tears that the world has shed and is shedding on account of this war. By our weakness, our discord and disunion, we have tempted the white races from the path of righteousness, and for that too, there must be repentance and atonement. There is need for all of us, therefore, to humble ourselves, and to seek prayerfully to do the Divine Will, so far as a knowledge of it is vouchsafed to us, sincerely and reverently. The lessons of the war go deeper than military or economic organization. They reach the spirit of man.—*The Indian Social Reformer.*

THEFT IN MYLAPORE.—On Friday night (the 4th instant), the house of Mr. C. V. Swaminatha Iyer, in premises No. 19, Adam Street, Mylapore, was entered into, and the three locked rooms being forced open, jewels, silver vessels and other household properties to the aggregate value of about Rs. 1,000 and odd, with cash in gold, currency notes and change, to the value of about Rs. 70 were stolen. A reward has been offered to any person giving information leading to the arrest of the culprits and recovery of the property stolen

SCHOOL FINAL BOARD

His Excellency the Governor in Council is pleased to appoint the following gentlemen to be members of the Board for the award of Secondary School-leaving Certificates for a period of three years from the 15th July, 1916:

OFFICIALS

Mr. Mark Hunter, Professor of English, Presidency College.

Mr. R. G. Grieve, Deputy Director of Public Instruction.

Mr. E. W. Green, Acting Inspector of Schools, Eighth Circle.

Mr. Rao Bahadur V. R. Venkatarama Aiyar, Inspector of Schools, Second Circle.

Mr. P. V. Seshu Aiyar, Professor of Mathematical Physics in the Presidency College.

NON-OFFICIALS

The Rev. W. Skinner, Principal of the Madras Christian College.

The Rev. A. Moffat, Professor of Physical Science in the Madras Christian College.

Mr. R. Venkataratnam, Principal of the Raja's College, Pittapur.

Mr. K. Seshu Aiyar, Headmaster of the Municipal High School, Mayavaram.

The Rev. J. X. Miller, Principal of the American Mission High School, Pasumalai.

புஸ்தகம்-24.] [சஞ்சிகை-5.

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

நள வருஷ ஆவணி மீ } விவேக சிந்தாமணி { August-Sep 1916.

ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னோ தேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

"THE LESSONS OF THE WAR GO DEEPER........THEY REACH THE SPIRIT OF MAN."

"It is not knowledge that moves the world but spiritual ideals and convictions".—*Vice-chanceller, Bombay University.*

"ஆஜ்ஞாசக்கரம் சுழல்வது ஆத்மலக்ஷியம் சன்மார்க்க உறுதி இவைகளாலன்றி சிற்றறிவாலல்ல."

THIRD YEAR OF THE GREAT WAR.

பாரதப்போரின் மூன்றாவது வருஷாரம்பம்.

இந்த ஆகஸ்டுமீ 4உ பன்று ஐரோப்பாவில் நடந்து வரும் பாரதப் போரின் மூன்றாவது வருஷாரம்பம் தொடர்ந்தது. சென்ற இரண்டு வருஷங்களில் நடந்த யுத்தத்தின் பலனை இந்திய மந்திரியவர்கள் திரட்டி யெடுத்து அரசர் பிரதிநிதியவர்களுக்குத் தந்தியடித்திருக்கிறார். அதை அப்படியே எடுத்து முகப்பில் அச்சிட்டிருக்கிறோம். "ஜெர்மனி முதல் வருஷத்தில் தானே ப்ரான்ஸ் தேசத்தாரை நசுக்கி விடலாமென்று நினைத்தது. அந்த எண்ணம் பலிக்காமற் போய்விட்டது. பிறகு சென்ற வருஷத்தில் ருஷிய சைனியங்களை மடக்கி யடித்துத் தலையெடுக்க வொட்டாது செய்துவிடலாமென்று பார்த்தது. பலவிதங்களில் ஜெர்மானியர் ஜயமடைந்தாலும் ருஷியசைனியம் குலையவில்லை. ஜெர்மனியினுடைய சைனியங்கள் இன்னும் சிலகுலைந்ததில்லை. இராணுவ ஸ்தானங்களில் அதற்கு இன்னும் கொஞ்சம் சைனிய பலம் மிகுதியிருக்கிறது. பஞ்சம் வருமென்கிற பயமில்லை யென்று சொல்கிறது. பணச்செலவு வேண்டிய அளவிற்கு கிடைக்கலா மென்கிற நம்பிக்கை யின்னும் இருக்கிறது. சண்டையில் சம்பந்தப்படாத தேசத்தார்கள் இன்னும் ஜெர்மனிக்கு விரோதமாக மாறவில்லை. ஆனால் முதலில் ஜெர்மனிக்குண்டான ஜயங்களைக் கண்டு அதனால் உண்டான உற்சாகம் இப்பொழுது இல்லை. ஜெர்மனியில் பொதுஜன அபிப்பிராயம் முன்போலின்றி நன்றாகமா யிருக்கிறது தெரிகிறது. ஜனங்கள் உற்சாகமிழந்து மனம் சலித்திருக்கிறதாகத் தெரிகிறது. ஜெர்மனி எதிரிகளை ஒருவர் ஒருவராக நசுக்கிவிடலாமென்கிற எண்ணம் இப்பொழுது அற்றுப்போய் விட்டது: ஜனங்கள் இனிமேல் என்ன ஆகுமோவென்று சிந்திக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். ஜெர்மனியின் அரசிறை முறை இந்த யுத்தச் செலவு அழிவைத் தாங்கிச் சமாளிக்கத் தக்கதாகவில்லை: இந்த யுத்தம் சீக்கிரத்தில் ஜெர்மனிக்கு அனுகூலமாக முடியும்படி முடித்துக் கொள்ள சரிப்படாவிட்டால் செலவுக்கு வருவாய் பற்றாது பெரிய திண்டாட்டம் நேரிடுமென்று தோன்றுகிறது. இராணுவத்தில் சேர்ந்து யுத்தம் செய்யப் பழகினவர்களை

யெல்லாம் சண்டைமுகத்துக் கனுப்பியான பிற்பாடு யுத்தப்பழக்கம் பெறுதவர்களையும் சண்டைக்கு சித்தமாக விருக்கச் செய்திருக்கிறார்கள். 1916-17-ம் வருஷத்தில் இராணுவத்தில் சேரத்தக்கவர்களையெல்லாம் ஏற்கனவே சண்டைக்களத்துக் கனுப்பியிருக்கிறார்கள். பாக்கியிருக்கிறவர்களெல்லாம் நிறம் குன்றினவர்களே. 46-வயது வரையிலுள்ளவர்களையெல்லாம் சண்டைமுகத்துக் கனுப்பியாய்விட்டது. இராணுவ ஸ்தானங்களில் காயம்பட்டு சொஸ்தமானவர்கள் தொகை ஒன்றரை அல்லது இரண்டு லக்ஷம் இருக்கும். 1918-வது வருஷத்தில் இராணுவத்தில் சேரத்தக்கவர்கள் இருக்கிறார்கள். இந்த சைனிய பலமெல்லாம் குலைந்துவிட்டால் கிழவர்களும் சிறு பிள்ளைகளும் தான் மிகுதியாயிருப்பார்கள். இந்த ஸ்திதியில் ஜெர்மனி அதன் எல்லைப்புறங்கள் எல்லாவற்றிலும் யுத்தத்தை நடத்திக்கொண்டு அதன் கூட்டாளிகளுக்கும் ஒத்தாசை செய்யவேண்டியிருக்கிறது. இது வரையில் ஜெர்மனிக்கு ஆபத்து வந்ததாகச் சொல்வதற்கில்லை. ஆனால் ஆபத்து சமயம் சமீபித்து வருகிறது. முதலில் கூட்டாளிகளுடைய கையில் யுத்தகளவாடங்களின் கையிருப்புக் குறைவினால் இது வரையில் ஜெர்மனியை ஒன்றும் செய்யக் கூடவில்லை. இப்பொழுது அவர்களுடைய கையிருப்புத் தளவாடங்களும் முஸ்தீபும் ஜெர்மனியைவிட பலப்பட்டுக்கொண்டு வருகிறது. ஜெர்மனிக்கு உழைப்பாளிகள் இன்னும் குறைவில்லாமலிருக்கிறார்கள். யுத்தத்தில் கைதி செய்தவர்களையும் அவர்கள் ஜெயித்த தேசங்களிலுள்ள குடிகளையும் உழைப்பாளிகளாக உபயோகித்து வருகிறார்கள்: ஆயினும் அத்தேசத்தார் சொந்த முயற்சியையன்றி சண்டையில் சம்பந்தப்படாத தேசங்களிலிருந்து ஒரு சகாயமும் பெறுவது சாத்தியமில்லை. கூட்டாளிகளோ அப்படிக்கின்றி தங்கள் சொந்த முயற்சியோடு யுத்தத்தில் சம்பந்தப்படாத தேசங்களிலிருந்தும் உழைப்பாளிகள், தளவாடங்களைச் சேர்க்கலாமாயிருக்கிறார்கள். ஜெர்மானியர் பிறதேசங்களோடு சம்பந்தப்படாதபடி மறியல் போட்டதனால் அவர்கள் இன்னும் வயிறு வாடும் ஸ்திதிக்கு வரவில்லை. ஆனால் அதிக நெருக்கடியாகத் தானிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை: இல்லாவிட்டால் மறியல் போட்டதைப்பற்றி அவர்கள் அவ்வளவு சீறிச்சினந்து விழுந்திருக்கமாட்டார்கள். ஆஸ்திரியாவின் கதியோ ஜெர்மனியின் ஸ்திதியைவிட இன்னும் திண்டாட்டமாகத்தானிருக்கிறது. 52-வயது வரையிலுள்ள மனிதர்களையெல்லாம் இராணுவத்தில் சேர்த்துக்கொண்டு சண்டை முகமனுப்பியிருக்கிறார்கள். 1918-ம் வருஷத்தில் இராணுவத்தில் சேரத்தக்கவர்களையும் இப்பொழுதே சேர்த்துக்கொண்டு சண்டைக்குத் தயாராக இருக்கச் செய்திருக்கிறார்கள். துருக்கி தேசத்தாரால் என்ன உதவி நேரிடுமென்று எதிர்பார்த்தார்களோ அது அங்கிருந்து கிட்டவில்லை. தற்காலத்துக்கேற்ற சைனியம் சேர்க்கவும் அத்தேசத்தாரால் முடியவில்லை. எதிரிகள் பாடு இப்படியிருக்க, ருஷியா, இத்தலி, க்ரேட் ப்ரிட்டன் தேசங்கள் அவர்கள் கையிருப்புச் சைனியங்களையெல்லாம் இன்னும் முற்றும் உபயோகப்படுத்தி விட்டார்களில்லை. ஆதியில் ஜெர்மனியின் கை யுத்ததளவாடங்கள் வெடிகுண்டு வகையராக்களில் மிக வலுத்திருந்தது. இப்பொழுது அந்த வலுக்குன்றியிருக்கிறது. ஜெர்மனி சென்ற இரண்டு வருஷங்களில் பெற்ற ஜயங்கள் பலவாயினும் இது வரவரக் குறைந்துகொண்டே வருகிறது. அவர்கள் ஜயம் இப்படியாகக் குன்றிவர, கூட்டாளிகள் கை முன்னிலும் இப்பொழுது பலப்பட்டு வருகிறது: அவர்கள் சைனிய பலமும் யுத்ததளவாடங்கள் முஸ்தீபுகளும் ஜெர்மனியிலும் மேலானதாக வளர்ந்து பலப்பட்டிருக்கிறது."

இப்படியாக இந்தியா மந்திரியவர்கள் படபடப்பின்றி நிதானம் தப்பாமல் சென்ற இரண்டு வருஷங்களில் நடந்த யுத்தத்தின் பலன்களைத் தாரதாமறிந்து மதிப்பிட்டுச் செய்தியனுப்பியிருப்பது இன்னும் ஒரு வருஷம் ஆவதற்கு அனேகமாதங்கள் முந்தியே கூட்டாளிகள் கக்ஷி யுத்தத்தில் வலுத்து ஜயம் பெறலாமென்கிற எண்ணம் உதிக்கக் காரணமாயிருக்கிறது. இந்த எண்ணம் நிறைவேற வேண்டுமென்றே நல்லவர்களெல்லாம் ஜகதீசனைப் பிரார்த்தித்துக்கொண்டிருப்பார்கள் என்றும் அப்படி அவர்கள் கை பலக்க வேண்டுமென்று பிரார்த்திப்பதை எல்லாரும் ஒரு கடமையாகக் கொண்டு கடவுளைத் துதிக்கவேண்டுமென்றும் எல்லாரும் சொல்லுகிறபடி நாமும் சொல்கிறோம். "மெய்யே வெல்லும் பொய்யல்ல!" "தர்மமே ஜயம்." இதற்குச் சந்தேகமில்லை. ஏனெனில் கூட்டாளிகள் பக்ஷம் நியாயமிருக்கிறது என்பது உண்மையே.

ஆயினும் ஒன்று: கூட்டாளிகள் கக்ஷியைச் சேர்ந்தவர்களான க்ரேட் ப்ரிட்டன், ருஷியா, ப்ரான்ஸ், பெல்ஜியம், இத்தலி முதலான இந்த தேசத்தவர்கள் இந்த மஹாபாரத யுத்தத்தின் முக்கியார்த்தம் என்னவென்று சற்று ஆர அமர்ந்து சிந்திக்கத் தவறக்கூடாது என்று "இந்தியன் ஸோஷியல் ரிபார்மர்" பத்திரிகை கூறுகின்றது.

பகவான் ஒருவர் இருக்கிறார்: பகவத் சங்கல்பம் வீணாவதில்லை யென்பது உண்மையானால் மேற்படி தேசங்களிலுள்ள ஜனங்களுக்கு இந்த யுத்தத்தினால் நேர்ந்த கஷ்டநஷ்டங்களும் பொருளழிவு உயிரழிவு முதலான ஸம்ஹார சிக்ஷைகளும் நேர்ந்தது வீண் சம்பவம் என்று நினைக்கக்கூடாது. காரணமின்றிக் காரியமில்லை யாதலாலும் பிரத்தியேக நபர்களுக்குண்மையான கர்மவிதி தேசசமஷ்டியில் சேர்ந்த ஒவ்வொரு தேசத்தாருக்கும் உண்டாதலாலும் எண்ணிறந்த ஜனங்கள் ஆண், பெண், குழந்தைகள் உட்பட இந்தக் கொடுமையான யுத்த சம்பவங்களால் துன்புக்காளாகி துக்கப்பட்டுத் துயரிலாழ்ந்தி வருந்துவது வீணில் வந்ததாக நினைக்கக்கூடாது என்று கூறுகிறது.

அவர் ஜெர்மானியரைப்போல் "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்று முரட்டு பலத்தையே பெரிதாக வெண்ணி அசுர பூஜை செய்துவர ஏற்பட்டார்களில்லையாயினும் இஃதெல்லாம் வெள்ளைக்காரர்கள் சம்பந்தப்பட்ட மட்டிலின்றி, கறுப்பு மனுஷர்கள் முதலான வர்ண பேதமுள்ள ஜாதியாரோடு அவர்கள் செய்து வரும் கூட்டுறவில் இந்த மேலான தர்மத்தை அவர்கள் அனுஷ்டானத்தில் கொண்டு வந்திருக்கிறார்களோவென்று மாரில் கை வைத்துப் பார்த்துக்கொண்டு அவர்கள் மனச்சாக்ஷி யறிய ஹிருதய பூர்வமாய் உண்மையை உள்ளபடி சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று வற்புறுத்திக் கூறுகிறது. ஜெர்மனியின் அடாபிடித்தனத்தைக் கண்டு சிங்கம் போல் சினந்தெழுந்த இவர்கள், வர்ணபேதமுள்ள ஜாதியார் சம்பந்தப்பட்ட மட்டில் அதே அடாபிடித்தனத்தை தம்மட்டில் அனுசரிப்பது தெய்வசம்மதமாகாது என்று உணர வேண்டுமென்று கூறுகிறது. 1870-ம் வருஷத்தில் பிரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் நடந்த யுத்தத்தில் ஜெர்மன் சைனியங்களின் யுத்தக்கொடுமையைக் கண்டித்துப் பேசினதைக் குறித்து அப்பொழுது ஜெர்மன் சான்ஸெலராயிருந்த ப்ரின்ஸ் பிஸ்மார்க் அவர்கள் 'எங்களைப்பற்றிச் சொல்வதை உங்களுக்கே பொருந்தத்தக்கதாகத் திருப்பி வாசியுங்கள்' என்று பதில் சொன்னார். அதையெல்லாம் சொல்லி அஹிதமான பழைய ஞாபகங்களைக் கிண்டிவிடவேண்டுமென்பது அப்பத்திராசிரியருடைய எண்ணமில்லை. ஆனால் இதுமட்டும் நிச்சயமாய் உறுதியாய் உணர்ந்து உணர்ந்தபடி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறதாகக் கூறுகிறார். அது என்னவெனில்:—மன்குலத்தார்

எல்லாரும் வானத்தின்கீழ் குடியிருக்கிறார்கள். அவர்கள் எல்லாரும் கடவுளின் குழந்தைகளே. பரமதயாளுவான கடவுள் வெள்ளை நிறமுள்ள குழந்தைகளுக்கும் வர்ணபேதமுள்ள குழந்தைகளுக்கும் தாரதம்மியம் பார்ப்பதில்லை; ஓரவஞ்சனை செய்வதுமில்லை. இது சத்தியம். ஆதலால் வெள்ளைக்கார ஜாதியார் வர்ணபேதமுள்ள இதர தேசத்தார்களோடு கூட்டுறவு செய்வதில் "தன்னைப்போல் பிறரை நினை" என்கிற தர்மத்தை யனுசரித்து நடக்கவேண்டும். அவர்கள் அப்படி நடந்துகொள்ளாவிட்டால் உலகத்தில் சாசுவதமான சமாதானம் ஏற்பட வழியில்லை; ஐசுவரிய விருத்தியும் சாசுவதமாக ஏற்படாது என்கிறார்.

அவர்கள் மேல் மட்டும் குற்றஞ் சொல்வதிற் பயனில்லை. வர்ணபேதமுள்ள ஜாதியார்களும் ஒற்றுமையின்றி நெல்லிக்காய் மூட்டைகளாகச் சண்டை சச்சரவு போட்டுக்கொண்டு பலவீனப்பட்டிருந்ததால், வெள்ளை ஜாதியார் அவர்களை தர்ம விரோதமாக நடத்தும்படி தூண்டினவர்களாகிறார்கள். அந்தப் பாபத்துக்கும் அவர்கள் பரிகாரம் தேடிக்கொண்டு எல்லாம் வல்ல கடவுள் முன் தலைகுனிந்து வணங்கி நின்று "ஈசனே எல்லாம் நின்செயல், எல்லாம் நின்னருள், எல்லாம் உன் சங்கல்பம்! உன்னிஷ்டமன்றி என்னிஷ்டம் பலிக்காது!" என்று உள்ளமுணர உணர்ந்து ஈசுவர சங்கல்பத்தை யறிந்து அறிந்தமட்டில் அதற்கு அனுகூலமாகவே நடந்துகொள்ளவேண்டும். இவ்வுலகத்திலுள்ள எல்லாருக்கும் இந்த நற்போதனை புகட்டி நற்சிந்தனை யுண்டாகவே இந்த மஹாபாரதப்போர் உண்டானதாகக் கருதவேண்டியது. இந்த யுத்தத்தின் நற்போதனைகள் அரசியல், அரணியல், படையியல், குடியியல் என்றுள்ளவை மட்டுமாயின்றி மனிதன் தனது ஆத்ம க்ஷேமத்தையும் ஆத்ம சுகத்தையும் அறிந்து பிழைக்கவேண்டுமென்றுள்ள பெரிய நற்போதனையும் இதனால் புகட்டப்படுகிறது என்பதை எல்லாரும் சிந்தையில் வைக்கவேண்டும் என்று உருக்கமான வார்த்தைகளால் அர்த்தம் நிறைந்த வாச்சியாமிர்தத்தை அன்புடன் போதிக்கிறார். இதையெல்லாரும் கவனிக்க வேண்டியது மன்னுயிர்க்குற்ற கடன்.

SCHOOL-GARDENING OR NATURE-STUDY, AND CHILD-STUDY.

பள்ளிப்பயிர்ச்சியும் தோட்டப் பயிர்ச்சியும்.

"To the solid ground
Of Nature trusts the mind which builds for aye."—
*Wordsworth.**

"Fine character is the gift of the limitless ocean, the rugged mountain, the mighty river, the quiet valley with the cloud-flecked blue brooding over all."

பள்ளியில் பிள்ளைகளைப் பழக்குவதானது தோட்டப்பயிர் செய்வதொக்கும். தோட்டமானது எப்படி நீர்வளம், நிலவளம், பயிர்வளம் பண்நேர்த்தியெல்லாம் சேர்ந்து விளங்குகிறதோ அப்படிப்போல பள்ளிக்கூடமும் பிள்ளைகள் பழகக் கூடும் இடத்தின் நேர்த்தி, அதிலுள்ள கட்டடத்தின் நேர்த்தி, பிள்ளைகளின் மனவெழுச்சி, உபாத்தியாயர்களின் போதனாநேர்த்தி இவைகளெல்லாம் சேர்ந்து விளங்குவதாயிருக்கிறது.

தோட்டத்தில் பயிர் பச்சைகளும் புஷ்பங்களும் கொடி செடிகளும் காய்கனி கிழங்குகளும் ஒன்றோடொன்று பொருந்த அமைந்து செய்நேர்த்தியாலும் பயிர்த்தொழில் விசேஷத்தாலும் பலனையளிப்பதோடு கண்ணுக்கு ரமணீயமான ஸ்ரீங்காரமும் விளங்குவதாயிருக்கிறது. "சௌந்தரியலஹரி" யென்று நன்றாகச் சொன்னார்கள். 'லஹரி' யென்பது போதையை உண்டுபண்ணி உற்சாகத்தைக் கிளப்பும் வஸ்து. 'சௌந்தரியம்' என்றால் அழகு. அழகில் ஈடுபட்ட மனம் உண்மையை உணரும் பக்குவம் பொருந்தினதாகிறது. உண்மையென்றால் தோன்றிமறைவதொன்றும் ஜாலத்தோற்றம் மாத்திரமாயின்றி ஸ்திரமாக உள்ளது ஒன்று எதுவோ அதற்குப்பெயர். ஆதலால்தான் இதற்கு ஸம்ஸ்க்ருதத்தில் ஸத்யம் என்று பேர்: ஸத்யம்-அழியாதது: மாறாதது என்றும் சொல்லலாம்.

* *Vide* footnote in English at the end of the article. pp 137 & 138.

"எள்ளுப்போட்டால் கொள்ளுமுளைக்காது" என்பது ஸத்யம் அல்லது உண்மை. ஏனெனில் எள்ளிலிருந்து எள்ளுச்செடிதான் முளைக்கும். இதற்கு † பீஜதத்துவம் அதாவது வித்துக்குள் இருக்கும் உண்மையென்றுபேர். இந்த ஒரு தத்துவத்தைக் குழந்தைகள் தோட்டத்தில் பயிர்செய்து பார்த்து, பிரத்தியக்ஷ சாக்ஷாத்காரமாய் மனதிற்பட வுணர்ந்து, உள்ளத்தில் இந்த உண்மை பதியப்பெற்றால் அவர்கள் "நன்மைவிதைத்தால் நன்மைவிளையும்" "தீமை விதைத்தால் தீமை விளையும்" என்பதிலுள்ள தர்ம மர்மத்தை யுணரும் சக்தி வாய்ந்தவர்களாகிறார்கள். இப்படி பிரத்தியக்ஷப் பிரமாணமாக ஒரு உண்மையைக் கண்கூடாகக் கண்டுணர்ந்து—முகக்கண்ணால் பார்த்து மனக்கண்ணால் கிரகித்ததை உளக்கண்ணால் உண்மைகண்டுணர்ந்து, அந்த உண்மையை சகளமாகவும் (concrete form) கேவலமாகவும் (abstract form) நிஷ்களமாகவும் (absolute form) அறிவோடமர்ந்துணர்ந்து (assimilate) உணர்ந்த உணர்வுமழிந்து சகஜானுபவமாகக் கண்டு தேறுவதுதானே வித்தியாமுறை (process of education) என்று சொல்லப்பெறும். இந்த வித்யாமுறையை யனுசரித்து சிக்ஷை, தீக்ஷை, அப்பியாசம், அனுபவம் என்கிற நான்குபடிகளும் ஏறிச்சென்று இந்த நான்கும்சேர்ந்து ஒன்றான "சகஜானுபவம்" எதுவோ அதுதான் உண்மையான ஞானநிலை. அப்படியென்றால் அறிவின் ஸ்வபாவம். இதற்கு ஸம்ஸ்கிருதத்தில் சித்-சக்தியென்று பெயர். சித்-என்றால் அறிவு. சக்தி-யென்றால் வல்லமை. "அறிவின் வல்லமை" யென்பது அதன்பொருள். இது பதப்பொருள் (Literal Meaning). வாச்சியார்த்தம் செய்யும்பொழுது (context) இதற்கு 'தான் ஸ்வயம்பிரகாசமாகவிருந்துகொண்டு தன் ஸந்நிதான மாத்திரத்தால் எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்யும் சக்தி' என்கிறபொருள் அமையும். தானே தானாய் ஸ்வயம்பிரகாசமாயிருக்கும் இலக்ஷணம் பொருந்தியது அறிவு (சித்.) இதன் சக்தி "சித்-சக்தி." இதற்கு சக்தி தத்துவம் என்று பேர்.

பீஜதத்துவம் 'சகலரூப'மானது (concrete.)
சக்திதத்துவம் 'கேவலரூபம்' (abstract)
பீஜதத்துவமும் சக்திதத்துவமும் சேர்ந்து பரிமாணவிதி (Evolution theory) யாகிறது.
இதற்கு "கீலகம்" (முளை) யென்றுபேர்.
இப்படியாக சகல-கேவல சம்பந்தத்தினால் பரிமாணக் கிரமம் ஏற்படுகிறது.

இந்த சம்பந்தம் நிலம், நீர், சீதோஷ்ணபக்குவம் என்கிற சந்தர்ப்ப விசேஷங்களினால் லபிக்கிறது (உண்டாகிறது).

வித்தை நிலத்திலிட்டு நீர்வார்த்து அதற்கு வேண்டிய சீதோஷ்ண பக்குவம் அமையப் பார்த்துவந்தால் அது தானே முளைவிட்டுக் கிளம்பி கிளைவிட்டு வளர்ந்து தழைத்துச் செழித்துப் பூத்துப் பிஞ்சுவிட்டுக் காயாகிப் பழுத்துப் பலனைத்தரும். அந்தப்பலனும் அதனுள் போட்ட வித்தை அடக்கிக்கொண்டிருக்கும். இவையெல்லாம் "கீலகம்" என்கிற (முளைக்கும்) தர்மத்தைச் சேர்ந்தவையாதலால், பரிமாணவிதி முற்றுக்குமே "கீலகம்" என்கிற பரியாயநாமம் இட்டுக் குறிக்கப்படும்.

இப்படியாக பீஜம் (வித்து), சக்தி, கீலகம் (முளை) யென்கிற மூன்றும் உயிரின் சிருஷ்டி, ஸ்திதி, லயம், (பிறப்பு, வளர்ப்பு, இறப்பு) என்கிற முக்குண தர்மத்தை விளக்கும் உதாஹரணமாக (illustrative example) விளங்குகிறது.

இப்படியாக பிரகிருதிதர்மத்துக்கும் ஜீவதர்மத்துக்குமுள்ள சம்பந்தமும் ஐக்கியலக்ஷணமும் விளங்குவதாகிறது.

இப்படியே தோட்டப்பயிர்ச்சி செய்வதிலிருந்து மனப்பயிர்ச்சி செய்வதின் முறையும் நமக்குத்தானே விளங்குவதாகும்.

† Law of Conformity or 'Being true to type.'

ஆகையால் தான் ஒவ்வொரு வீட்டிலும் தோட்டமிருக்க வேண்டியதோடுகூடப் பள்ளிக்கூடங்களிலும் தோட்டம் இருக்கவேண்டும்.

"பருவத்தே பயிர்செய்" என்பது தோட்டப் பயிர்ச்சிக்கும் மனப்பயிர்ச்சிக்கும் பொருந்திய தர்மம்.

"பிரகிருதியினுண்மையில் பரமனைக்
காணலாம்."

ஆகையினால் பிரகிருதி வித்யாப்பியாஸம் குழந்தைகளுக்கு பாலப்பருவம் முதல் அமைந்துவர ஏற்பாடு செய்யவேண்டும்.

நிலத்தைப் பண்படுத்துவதுபோல் மனதைப் பண்படுத்துவது சிக்ஷை (Discipline)

பண்படுத்தின நிலத்தில் விதைவிதைத்துப் பயிர், களைமூண்டு சாகாமல், களைபிடுங்கிக் காப்பாற்றிப், பலனளிக்கும்வரையில் அதைக் காப்பதுபோல், (Discipline) சிக்ஷையினால் பண்படுத்தப் பெற்ற குழந்தைமனம் கோணாது (கெட்டவழியில் பிரவேசிக்காது) கெட்ட எண்ணங்கள் பழக்கங்கள் பற்றாதபடி சகவாஸதோஷம் நீக்கி ஸத்சங்க (நல்ல சகவாஸ) விசேஷத்தால் "யத்பாவம் தத்பவதி" என்கிற சங்கல்ப சக்தியின் விசேஷத்தை யுணரவுணர்ந்து அனுபவத்தில் அதை உபயோகிக்கப் பழகுவது தீக்ஷை. (Realisation).

சங்கல்பசக்தியின் விசேஷமறிந்தபின் அதை யடக்கியாண்டு இச்சாசக்திக்குட்பட்டதாக (இஷ்டவிரோதமான எண்ணங்கள் உதிக்காமலும், விஷயப்பற்று காரணமாய் இச்சாசக்தி மனவழிப்பட்டுச் சிதறுண்டுபோகாமலும்) காப்பதும், அந்நிலையில் மனம் கட்டுக்காவலின்றித் தானாக அறிவுக்குக் கீழ்ப்படிந்து நிற்கப் பழகுதலும், அந்த அப்பியாசத்தில் சித்திபெறுதலும் அனுபவம் (Self-Experience). அப்படியென்றால் அறிவுமயமான தன்னைத்தானே யனுபவித்து நிற்றல். (இதில் அப்பியாசமும் அடங்கும்). இந்த சிக்ஷை, தீக்ஷை, அனுபவம் என்கிற மூன்றும் வித்யாபீடத்திற்கு இன்றியமையாத மூன்றுகால்கள்.

இந்த மூன்றுசாதனங்களைக்கொண்டு ஸர்வகலைகளையும் கற்றுணரலாம். இந்த மூன்று சாதனங்களும் குழந்தை-மனதிற்கு இயற்கையாக அமைந்துள்ளன. அவை மாறிப்போகாதபடி அவற்றை பாலப்பருவம் முதல் விருத்தி-ஞானத்தால் (Educational progress) வளர்ந்து வரல்வேண்டும். இது பாலப்பருவம் முதல் இடைவிடாது பழகிவரவேண்டிய வித்யா சாதனங்களாதலால் முதற்படியான சிக்ஷைக்கு "பாலசிக்ஷை" யென்கிற சிறப்புப்பெயர் வந்தது.

"பாலசிக்ஷை" யென்றாலும் "அக்ஷராப்பியாஸம்" என்றாலும் இரண்டும் ஒன்றையே குறிக்கும். முன்னது கர்த்தாவைப்பற்றி வந்த காரணப்பெயர். பின்னது காரியம்பற்றி வந்த காரணப்பெயர். (அக்ஷர+அப்பியாஸம்) அழியாத தத்துவமாகிய நாதத்தை (ஒலியாகவும்) சப்தமாத்திரமாகவும், (வடிவாகவும்) வரியுருவமாகவும் (அருவமாயுள்ள அதன் அழியாத தத்துவஞானம் சித்திக்கும் வரையில்) மனப் பழக்கத்தால் அப்பியசிப்பது அக்ஷராப்பியாஸம்.

அ என்னும் சப்தத்தை அக்ஷர ஒலியாகவும்,
அ என்னும் வரியுருவத்தை அக்ஷரவடிவாகவும்,

அ என்பதின் லக்ஷியார்த்தமான அருவமான மஹாமந்திர சக்தியை "நாதவடிவு" ஆகவும் உணர்வது "அக்ஷராப்பியாசமாம்."

'அ' என்னு மெழுத்து சப்தத்துக்கெல்லாம் முதல் "அகரமுதலவெழுத்து ஆதி"—அதுபோல பகவானை முதலாகக்கொண்டது உலகு.

ஆதலால் "அ" என்னும் முதலெழுத்துடன் துவங்கும் அப்பியாசம் உலகஞானம் முற்று முணர்ந்து இந்த உலகத்துக்கெல்லாம் முதலாயிருக்கப்பட்டவன் 'பகவான்' என்று உணரும் வரையில் தொடர்ந்து செல்லும். இடையில்

அப்பியாசம் அறுந்து (விட்டுப்) போனால் வந்தது மோசம். "கற்றதனாலாயபயன்" இல்லையாகிவிடும். இவ்வளவையும் அடக்கித் தாயுமானவர் (சித்) தேவியைத் துதிசெய்து தனக்கு வித்தையளிக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார். அதைச்சொல்லி இதை முடிப்போம்.

"பூதமொடு பழகிவளர் இந்திரியமாம் பேய்கள்
புந்தி முதலானபேய்கள், போராடு
கோபாதி ராக்ஷஸப் பேய்களென் போதத்தை
யூடறுத்து வேதனைவளர்த்திடச் [லாம்
சதுர்வேதவஞ்சன் விதித்தா னிவ்வல்லலெல்
வீழும்படிக்குனது மௌனமந்திராதிக்கிய
வித்தையை வியந்தருள்வையோ
நாதவடிவாகிய மஹா மந்திராதி ரூபியே
நாதாந்த வெட்ட வெளியே
நற்சமய மானபயிர் தழையவரு மேகமே
ஞான ஆனந்த மயிலே
வாதமிடு புறச்சமயம் யாவுக்கு முணர்வரிய
மஹிமைபெறு பெரிய பொருளே
மலைராஜனுக் கிருகண் மணியா யுதித்த
மலை-வளர்காதலிப்பெண்ணுமையே."

மலைராஜன் ஜடப்பொருளுக்கெல்லாம் மேலான தலைவன். இதன்பொருள்:—

ஜடசக்தி நாயகனாகிய உன்னதமான உத்தம
பர்வதராஜனுக்குக் குருடனுக்குக் கண்
கிடைத்தாற்போல் பார்க்கும் சக்தியுண்டாக
கச்செய்தவதரித்த ஜீவேந்திரிய ரூபியாகிய
(உமை) சித்சக்தியே,
அகக்கண் (உளக்கண்) பார்வையின்றி புறக்
கண் பார்வைமட்டும் கொண்டு உண்மை
யுணராது வாதமிட்டுக்கொண்டிருக்கும் சம
யமார்க்கங்களால் உணர்வதற்கு அரிதான
மஹிமை பொருந்திய பெரிய (சின்மயா
னந்தப்) பொருளே,
ஞான ஆனந்தமயிலே, நற்சமயமான
(உண்மைப்)பயிர் தழைத்துச் செழிக்க
(அருள்மழை பொழிய) வருமேகமே [கடந்த
நாத-தத்துவத்துக் கப்பாலுள்ள எல்லாங்
(நிருபாதிக) வெட்டவெளியே
நாதசக்தியின்வடிவாகவிருந்து உருக்கொண்
உபாஸனா தேவதையாக விளங்கும் [டு
மந்திர சக்திகளுக்கெல்லாம் மேலான
மஹாமந்திராதி ரூபியே
எனது இந்திரியங்கள் புத்திமுதலான
அந்தக்கரணங்கள் பூதமொடு பழகிய பழக்க
வாசனையால் அவ்வழியில் சென்று
என் அறிவை இடையறாது விளங்கச்செய்யாது
ஊடறுத்து மின்மினிப் பூச்சிபோல்
அதன் ஒளிமங்கி விட்டுவிட்டொளிரச்
செய்யும் சிருஷ்டிகர்ம அல்லல் ஒழிய
உன் வித்தையை எனக்கு வியந்தருள்வையோ.

வியந்து,—விநோதசக்திவாய்ந்ததாய்:

இந்தவிநோதசக்தி* எல்லாசேதனப்பொருள்களுக்கும் பொதுவாயுள்ளதாயினும் மனிதனுக்கு மற்ற எல்லாப்பிராணிகளையும்விட மிக விசேஷமாயமைந்துள்ளது. இந்த வியப்பு சக்தியில்லாவிட்டால் மனதுக்கு உற்சாகமும் உள்ளக்கிளர்ச்சியும் இல்லையாகும். இதைப் புகழ்ந்து "அதிசயப்பத்து" பாடிய மாணிக்கவாசகர் இதன் அதிமேலான உசித குணத்தை யெடுத்துப்பாடியிருக்கிறார். குருடன் கண் பெற்றாற்போல உலக ஞானத்திலுழன்ற மனம் பராஞான சித்திபெற்றபொழுதும், அந்த அனுபவ முதிர்ச்சியில் நிரதிசயானந்த நிலைபெற்றவிடத்தும் பகவானுடைய அருட்திறத்தைக் கண்டு அதிசயித்து வியக்கும் என்பது அதன் பொருள்.

"மண்ணிலேபிறந்திறந்து மண்ணாவதற்
கொருப்படுகின்றேனை
அண்ணலாண்டுதன் னடியரிற்கூட்டிய
அதிசயங்கண்டாமே."

"* The instinct of curiosity, with its correlative the emotion of wonder, is certainly one of the principal instincts of man, and is even more marked in him than in his nearest animal relatives. Dr. McDougall, the highest authority of our time on the subject, gives the following conclusions of his research:—

"This instinct, being one whose exercise is not of prime importance to the individual, exhibits great

individual differences as regards its innate strength; and these differences are apt to be increased during the course of life, the impulse growing weaker for lack of use in those in whom it is innately weak, stronger through exercise in those in whom it is innately strong. In men of the latter type it may become the main source of intellectual energy and effort; to its impulse we certainly owe most of the purely disinterested labours of the highest types of intellect. It must be regarded as one of the principal roots of both science and religion."

One of the biological facts and national tendencies which the war has revealed to thinking minds is the important one that "We fail to love the truth however much it may interest us and excite the instinct of curiosity, because we fear that it will somehow get us into trouble." This is one of the defects of cram and conventional methods in educating the child-mind wherein Nature-Study does not find a place. Wordsworth says that "Nature never did betray the heart that loved her." "We cannot believe that Nature never will betray the heart that trusts her." It was Carmen Sylva who said: "Simple truth is as complex as woman." And no true woman accepts and yields herself to the man who but half-trusts her. Conventionality in the education of the child thus breeds "A fear of the truth" which is "based upon the implicit if not explicit philosophy that Nature can only be trusted so far as one sees her, if so far."

"To the solid ground
Of Nature trusts the mind which builds for aye."
Wordsworth.

We refer those interested on the subject to Professor R. A. Gregory's book "DISCOVERY; or *The Spirit and Service of Science*." (To be had of the Lalita Publishing Co.)

SUGGESTIONS FOR NATURE-STUDY:

SEA AND LAND BREEZES: HOW THEY ARE CAUSED.

பிரகிருதி வித்யா பாடக் குறிப்புகள்.

கடற்காற்று, தரைக்காற்று : இவற்றின் உற்பத்திவிவரம்:

(ஜுன்மாசம்) நமக்கு நல்ல கோடைகாலம். வெயிலினால் தாபமதிகரிக்கும்போது எப்போது குளிர்ந்தகாற்று அடிக்குமென்றெதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம். கடலோரத்திலுள்ள ஊர்களுக்குப் பன்னிரண்டு மணிக்குமேல் குளிர்ந்த கடற்காற்றுப் புறப்பட்டு வெயிலின் கொடுமையைத் தணிக்கும். கடற்காற்றுத் திரும்பவில்லையே திரும்பவில்லையே யென்று ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்து அது வந்தவுடன் தான் நமக்கு உற்சாகமுண்டாகிறது. கடலோரத்திலில்லாத ஊர்களுக்கு சாயங்காலத்தில் தென்றல் காற்றடித்து உஷ்ணத்தைத் தணிக்கும். இப்போது கடற்காற்றானது எப்படியுண்டாகிறதென்று பார்ப்போம். கடலோரத்திலிருக்கிறவர்களுக்குத் தினம் கடற்காற்று பிற்பகலிலும் தரைக்காற்று முற்பகலிலுமாக வீசுகின்றன. குளிர்ந்து வீசும் கடற்காற்று எப்படியுண்டாகிறதென்றும் உஷ்ணமாகவீசும் தரைக்காற்று எவ்வாறடிக்கிறதென்றும் நம்மில் எத்தனைபெயர் யோசித்துப் பார்க்கிறோம். சூரியசந்திரன் உதித்து அஸ்தமிக்கிறதுபோல் தவறாமல் தினந்தோறும் இந்தக் காற்றுகளடித்துக் கொண்டிருக்கின்றனவே. அது என்னத்தினாலென்று நாம் அனேகமாய் விசாரிக்கிறதில்லை.

நாள்தோறும் நாம் பார்த்துக் கொண்டிருக்கும் வஸ்துக்களிலும் விஷயங்களிலும் விசேஷமிருக்கிறதாக நமக்குத் தோன்றுகிறதில்லை. மலையடிவாரத்திலேயே பிறந்து வளர்ந்தவனுக்கு அந்த மலையினுயரமும், அதின் வெவ்வேறு விதமான கற்களும் செடி கொடிகளும் ஆச்சரியமாய்க் காணப்படாது. மலையைப்பார்க்காதவன் அதைக் கண்டவுடனே அதிலுள்ள கல்லுகளையும் செடிகளையும் கண்டு ஆனந்தப்படுவான். கடலோரத்தில் பிறந்து வளர்ந்தவர்களுக்கு அதன் பெருமையும் அலை முதலானவைகளும் விசேஷமாகத் தோன்றாது. அதைப் பார்க்காதவன் முதலில் கண்டவுடன் ஆச்சரியப்படுவதோடுகூட எப்படி ஈசுவரன் சிருஷ்டித்தானென்று யோசிப்பது முண்டு. சாயங்காலவேளையில் தினந்தோறும் கடற்கரைக்குக் காற்றுவாங்கப் போனாலும் அங்கே நாம் படுத்து விளையாடும்படியான மணல் எப்படி அங்கே வந்தது, எங்கேயிருந்து உற்பத்தியாயிற்றென்று யோசிக்கிறோமா? ஈசுவரசிருஷ்டியானது யோசித்துப் பார்த்தால் அற்பமாகத்தோன்றும் பதார்த்தத்திலும் வெகு ஆச்சரியமாயிருக்கிறது. ஒவ்வொன்றையும் கவனித்துப் பரிசோதித்துப் பார்த்தால் ஈசுவரன் மகிமை புலப்படும். பிரபஞ்ச சிருஷ்டியின் தத்துவமும் உண்மையும் விளங்கும். பார்க்கப்போனால் சாதாரணமாய் ஒருபுளியம் விரையை

மண்ணில் போட்டால் நாலு ஐந்து நாளுக்கெல்லாம் முளைக்கிறதே; அதெப்படியென்று கேட்டால் அதற்குப் பதில் சொல்லுவது எவ்வளவு கஷ்டம். நம்மில் எத்தனை பேர்களுக்குத்தான் சரியானபதில் தெரியும். ஆகையால் அற்பமாய்க் காணப்படும் விஷயங்களையும் நன்றாகக் கவனித்துப் பார்க்கவேண்டியதவசியம்.

கடற்காற்று.—கடற்காற்று குளிர்ந்து வீசுகிறதற்குக் காரணம் அக்காற்று சமுத்திரத் தண்ணீரின்மேற்பட்டு வருவதாலென்று எல்லாருக்குந் தோன்றலாம். ஆனாலக்காற்று பிற்பகலில் மாத்திரம் அடிக்கிறதற்குக் காரணமென்னவென்று பார்ப்போம். சூரியன் பிரகாசத்தால் எல்லா வஸ்துக்களும் உஷ்ணப்படுமென்பது தெரிந்தவிஷயம். வெயிலில் ஒரு கல் கிடந்தால் அது சுட்டுப்போகிறது. நம்முடைய கண்ணுக்குத் தெரியாத காற்றுமவ்வாறே. மழைகாலத்திலும் பனிகாலத்திலும் காற்றுக் குளிர்ந்தடிக்கிறது. வெயிலதிகமாயிருக்கும் கோடைகாலத்தில் காற்று வெப்பமாயிருக்கிறது. அடுப்பண்டையிருந்தால் அடுப்பில் பட்டுவரும காற்று உஷ்ணப்பட்டு நம்மேல் உஷ்ணமாயடிக்கும். வெயிலில் ஒரு கருங்கல், கட்டை, ஒரு பாத்திரத்தில் ஜலம் இவைகளையெல்லாம் வைத்துவிட்டுக் கொஞ்சநேரத்திற்கெல்லாம் பார்த்தால் கருங்கல் அதிகமாகவும், கட்டை கொஞ்சமட்டாகவும் சுட்டிருக்கும். ஜலம் எல்லாவற்றைக்காட்டிலும் குறைச்சலாக உஷ்ணப்பட்டிருக்கும். செம்பு பித்தளைப் பாத்திரத்தில் வைத்திருந்தால் அந்தப் பாத்திரம் உஷ்ணப்பட்டுத் தண்ணீரும் சுடலாம். மரப்பாத்திரத்தில் வைத்தால் சீக்கிரம் சுடாது. இதனால் நமக்கென்ன தெரிகிறதென்றால் சூரியன் வெயிலினால் சில பதார்த்தங்கள் அதிக சீக்கிரத்திலும் சில கொஞ்சம் மெதுவாகவும் உஷ்ணப்படுகின்றனவென்று தெரிகிறது. காலையில் சூரியன் உதயமானதுமுதல் அவன் கிரணங்கள்பட்டு உலகத்திலுள்ள வஸ்துக்கள் கொஞ்சம் கொஞ்சமாய்ச்சுட ஆரம்பிக்கும். காலையில் சூரிய வெப்பம் அதிக உக்கிரமாயிராது. நாழிகையதிகரிக்கஅதிகரிக்க உஷ்ணமும் ஜாஸ்தியாகி எல்லாம் சுட்டுப்போகின்றன. கடல் நீருமப்படியே காலையில் அதிகமாய் உஷ்ணப்படாது. வெயில் ஜாஸ்தியாக ஆகத்தண்ணீரிலும் அதிக உஷ்ணப்படுகிறது. ஆனால் முன்னேசொன்னபடி தரையும் அதிலுள்ள வஸ்துக்களும் சீக்கிரம் உஷ்ணப்பட்டுப்போகும். தண்ணீரோ அவ்வளவு சீக்கிரத்திலாகிற தில்லை. அதிகாலைவேளையில் பார்த்தால் தண்ணீரும் தரையும் உஷ்ணத்தில் ஒன்றுக்கொன்று வித்தியாசமில்லாமலிருக்கலாம். எட்டுமணி சுமாருக்குத் தரை கொஞ்சம்சுட ஆரம்பிக்கும். சுமார் 11, 12 மணிக்கு தரை கொதித்துப் போய்விடும். கடலோ அதிகமாய்ச் சுட்டுப்போகிறதில்லை. தரையானது சுட்டும் கடல் சுமாராகக் குளிர்ந்துமிருக்கிறதினால் என்ன உண்டாகின்றதென்று பார்ப்போம். நம்மைச் சூழ்ந்திருக்கும் காற்றும் உஷ்ண சீதள சம்பந்தத்தினால் முறையே உஷ்ணப்பட்டும் குளிர்ந்தும் வருமென்று கண்டிருக்கிறோம். அடுப்பண்டையிலிருக்கும் காற்று எவ்வாறு சுட்டுப்போகிறதோ அவ்வாறே தரையைச் சூழ்ந்திருக்கும் காற்றும் சுட்டுப்போகும். கடலைச் சூழ்ந்திருக்கும் காற்று தரையைச் சூழ்ந்திருக்கும் காற்றைப்போல் சுட்டுப்போகாமல் சுமாராய்க் குளிர்ந்திருக்கும். ஒரு பக்கத்தில் காற்றுச்சுட்டும் இன்னொரு பககத்தில் குளிர்ந்துமிருக்கும் காற்றுகள் அப்படியப்படியே யிருக்குமாவென்று பார்ப்போம். அசையாப்பொருளாகிய கல் முதலானவை இருக்குமிடத்திலேயேயிருக்கும். காற்று எப்போதும் அசைந்துகொண்டேயிருக்கும். ஒரு விநாடியிலிருந்தவிடத்தில் இன்னொரு விநாடியிலிருக்காது. அசைவதானது நமமுடைய கண்ணுக்குத் தெரியாமற்போனாலும ஒருவிதமாயறியலாம். ஜன்னலைச் சாற்றிவிடுக் கொஞ்சம் திறந்துவைத்து அதின்வழியாக

சூரியன் வெளிச்சம் ஒரு அறைக்குள் வரும்படி செய்தாலும்சரி, இல்லாவிட்டால் ஓட்டில் ஒரு துவாரத்தின்வழியாக சூரியவெளிச்சம் வந்தாலும்சரி: கத்தையாய்வரும் வெளிச்சத்தில் பார்த்தால் சின்னத்தூசியும் குப்பையும் கிடுகிடென்று போய்க்கொண்டும் வந்துகொண்டுமிருக்கும். அந்தத் தூசிகள் ஓடுவதற்குக் காரணம் காற்று. ஆற்றில் தண்ணீர் ஓடும்போது இலைசெடிகளைத் தன் வேகத்தால் கொண்டுபோவதுபோல், காற்றும் தான் போகும்போது தூசிகளையடித்துக் கொண்டுபோகும். சாதாரணமாய்க் கண்ணுக்குத் தெரியாது. வெளிச்சத்தினால் தூசிதுப்பு போகிறது தெரிகிறதனால் காற்றின் ஓட்டத்தை ஊகிக்கிறோம். இப்போது தரையின் மேலும் தண்ணீரின்மேலுமுள்ள காற்று என்ன செய்கிறதென்று கவனிப்போம். அதை யறிவதற்குமுன்னாலே உஷ்ணப்படுவதால் பதார்த்தங்கள் ஏதாவது மாறுதலை யடைகின்றனவாவென்று பார்க்கவேண்டும். கறண்டிக்காம்பை அடுப்பில்போடுவோம். அது பழுக்கப்பழுக்கக் காய்கிறது. அது அடையும் விகாரங்களனேகங்களில் ஒன்றைப்பற்றி மாத்திரம் இப்போது கவனிப்போம். அதாவது, கரண்டிக்காம்பு கொஞ்சம் பெருக்கும். அது கண்ணுக்கு நன்றாகத் தெரியாது. ஒரு இரும்பு மோதிரத்தில் சரியாய்ப் போகும்படியான ஒரு இருப்புக் கோலிக்குண்டை யெடுத்துக்கொண்டு அந்தக்குண்டை மாத்திரம் அடுப்பில் போட்டுக் காய்ச்சுவோம். அதை ஒரு சாமணத்தால் பிடித்துக்கொண்டு இப்போது அந்தக்குண்டு மோதிரத்தில் முன்போல் சரியாய்ப் போகுமாவென்று பார்த்தால் போகாது. இதனால் என்ன விளங்குகிறதென்றால் இருப்புக்குண்டு உஷ்ணப்பட்டதால் பருத்துவிட்டதென்பது விகசிதமாகிறது. உஷ்ணத்தினால் இரும்பு முதலிய கடின வஸ்துக்கள் மாத்திரமல்ல, தண்ணீரைப் போன்ற திரவ பதார்த்தங்களும் காற்றைப்போன்ற சூக்ஷ்ம பதார்த்தங்களும் உஷ்ணப்பட்டால் பருமனில் ஜாஸ்தியாகும்.

உருவம் பெருத்தால் என்ன உண்டாகும்? அது இலேசாக ஆகிவிடும். இரும்பைக்காட்டிலும் தங்கம் கனமென்று சொல்லுவார்கள். அப்படியென்றாலென்ன: இரும்பில் ஒருபலமும் தங்கத்திலொரு பலமும் எடுத்து நிறுத்தால் சரியாய்த் தானிருக்கும். இப்படியிருக்க கனம் லேசென்று எப்படிச் சொல்லுகிறது. ஒரு வீசை கத்திரிக்காய் வாங்குகிறோம். கத்திரிக்காயின் கனமும் ஒரு வீசைக் கல்லின் கனமும் சரியாயிருந்தும் கத்திரிக்காய் லேசல்லவா. வீசைக்கல் சிறிதாயிருக்கிறது. கத்திரிக்காயோ அதைப்போல் எவ்வளவோ மடங்கு பெரிதாயிருக்கிறது. ஒருகையில் ஒரு கத்திரிக்காயையும் இன்னொருகையில் அந்தக் கத்திரிக்கா யவ்வளவு பருமனுள்ள இரும்பையும் எடுத்துப் பார்த்தால் கத்திரிக்காய் வெகு லேசாகவும் இரும்பு அதிக கனமாகவுமிருக்கும். ஆகையால் இரண்டு வஸ்துக்களில் ஒன்று கனம், மற்றொன்று இலேசு என்று சொல்லுவதின் தாற்பரியம் என்னவென்றால் ஒரேபருமனுள்ளதாக இரண்டையும் எடுத்துக்கொண்டு பார்த்தால் எது கனமாகத்தெரிகிறதோ அதைக் கனமான வஸ்துவென்றும் மற்றொன்றை இலேசான வஸ்துவென்றும் சொல்லுகிறோம். உஷ்ணப்படுவதால் காற்று பருக்குமென்று சொன்னோம். பருத்ததினால் பக்கத்திலுள்ள உஷ்ணப்படாத காற்றைக் காட்டிலும் லேசாக ஆகிவிடாதா? அது எப்படியென்று இன்னும் சற்றுப்பார்ப்போம்.

சூரிய உஷ்ணத்தால் பூமியானது சுட்டுப் போகிறது. அதற்குச் சுற்றியும் அதன்மேல் பட்டுக்கொண்டுமிருக்கிற ஒரு குன்றுமணிப் பருமனுள்ள காற்றைப்பற்றி மாத்திரம் பேசுவோம். அந்தக்குன்றுமணிக் காற்று தன்மேல் பூமியினுஷ்ணம் படுவதால் ஒன்றரைக் குன்றுமணிப் பருமனுவதாக நினைப்போம். இதற்கு மேலே உஷ்ணப்படாமலிருக்கும் குன்று

மணிக்காற்றைக்காட்டிலும் இது லேசாகிவிடாதா. கத்திரிக்காய்ப் பருமனையும் வீசைக்கல் பருமனையும் யோசித்துப் பார்த்துக்கொள்ளுவோம். இப்படியே ஒவ்வொரு குன்றுமணிக் காற்றுமாகும். இப்படி உஷ்ணப்பட்டதால் பூமிக்குச் சமீபத்திலுள்ள காற்றானது இலேசாகி மேலே கிளம்பிவிடும். காற்றானது எப்போதும் அசைந்து கொண்டிருப்பதால் லேசாயிருக்கும் காற்று அடியிலும் கனமாயிருக்கும் காற்றுமேலேயும் தங்கியிராது. ஒரு பாத்திரத்தில் தண்ணீரை வைத்து அதற்கடியில் ஒரு கெட்டியைப் போட்டால் அது அடியிலிருக்குமா? அடியிலமுக்கி வைத்தால்கூட கையை யெடுத்தவுடனே மேலே கிளம்பிவிடும். அது மேலே கிளம்பவும், அது இருந்தவிடத்திற்கு மேலேயிருந்த தண்ணீர் வந்துவிடும். இதை நாம் நேரில் பார்க்கமுடியும். காற்று மேலே போகிறதும் கீழேவருகிறதும் கண்ணுக்குத் தெரியாதாயினும் இவ்வாறு நடக்குமென்று நாம் ஊகிக்கிறதோடு ஒருவாறு பிரத்தியட்சமாகவும் காணலாம். ஒரு வெள்ளை ஸீஸாவில் கொஞ்சம் புகையையடைப்போம். காற்றென்றால் கண்ணுக்குத் தெரியாது. புகை கண்ணுக்குத் தெரியும். அந்த ஸீஸாவின் அடியில் சற்றே விளக்கைக் காட்டினால் அடியிலிருக்கிற புகை மேலே கிளம்பிவிடும். மேலேயிருக்கும் புகை கீழேவரும்.

ஆகையால் சூரியனுஷ்ணத்தினால் உஷ்ணப்படும் பூமிக்குச் சமீபத்திலிருக்கும் காற்றும் உஷ்ணப்பட்டு லேசாகி மேலே கிளம்பிப்போகும். அக்காலத்தில் சமுத்திரமானது பூமியைப்போல் அவ்வளவு உஷ்ணப்படுகிறதில்லையென்று கண்டோம். அதைச் சுற்றியிருக்கும் காற்றானது குளிர்ந்தும் பூமியைச் சுற்றியிருக்கும் காற்றைக்காட்டிலும் கனமாகவுமிருக்கும். பூமியை யொட்டியிருக்கும் காற்று மேலேபோனவுடனே அந்த விடத்திற்குக் கடலினின்று குளிர்ந்த காற்றுவருகிறது. இது தான் பிற்பகலிலடிக்கும் கடற்காற்று.

தரைக்காற்று. பகலில் சுமார் பன்னிரண்டு மணிக்கு ஆரம்பிக்கும் கடற்காற்று சாயங்காலமெல்லா மடித்து இராத்திரியிலும் வெகு நாழிகை யடிக்கும். அதற்குப்பின் தரைக்காற்றுத் திரும்பும். பகலில் சூரியகிரணத்தால் பூமி காய்ந்து சூரியன் அஸ்தமனமாக பூமியின் கொதிப்புக் கொஞ்சம் கொஞ்சமாக நீங்குகிறதைப் பார்க்கிறோம். பகலில் தன்னிடத்திருந்த உஷ்ணத்தையெல்லாம் போக்கி ராத்திரியில் பூமி குளிர்ந்துபோய்விடுகிறது. சமுத்திர ஜலமுமப்படியே. ஆனால் பூமிக்கும் சமுத்திரத்திற்கும் ஒரு வித்தியாசமுண்டு. பூமி எப்படி சூரியக்கிரணங்களை வாங்கிக்கொண்டு ஜலத்தைககாட்டிலும் சீக்கிரத்தில் உஷ்ணப்படுகிறதோ அவ்வாறே தன்னிடத்திலுள்ள காங்கையை சீக்கிரம் கொடுத்துவிட்டு தண்ணீரைக்காட்டிலும் சீக்கிரத்தில் குளிர்ந்துபோய்விடும். அது எப்படிப் போலென்றால் சிரமப்பட்டுப் பணத்தைச் சம்பாதிக்கிறவன் அந்தப் பணத்தை வாரியிறைத்துவிடாமல் மெதுவாகவே செலவுசெய்வான். சிரமமில்லாமல் சம்பாதிக்கிறவன் எவ்வளவு சீக்கிரத்தில் சம்பாதிக்கிறானோ அவ்வளவு சீக்கிரத்தில் இறைத்துவிட்டு மற்றவனைக்காட்டிலும் முதலில் பணக்காரனாயினும் கடைசியில் அவனைவிட ஏழையாய் விடுகிறான். அப்படிப்போல பூமி முற்பகலில் தண்ணீரைவிடச் சூடாகவிருந்தும் ராத்திரியாக ஆகத் தன் உஷ்ணத்தைச் சீக்கிரம் கொடுத்துவிட்டு சமுத்திர ஜலத்தைககாட்டிலும் குளிர்ந்துபோய்விடுகிறது. ஆகையால் கடற்காற்று ராத்திரியில், உஷ்ணம் உண்டாகும் நியாயப்படியே, சமுத்திரத்தை யொட்டியிருக்கும் காற்று உஷ்ணமாகவும் தரையையொட்டியிருக்கும் காறறு குளிர்ந்துமிருக்குமாதலால் சமுத்திரத்தைச் சேர்ந்த காற்று லேசாகிப் போய்விட அந்த இடத்திற்குத் தரையினின்றும் காற்று ஓடிவரும். நல்ல கோடைகாலத்தில் பூமி கொதித்து நன்றாக ஆறிக் குளிராதாதலால் அந்தக்காற்று உஷ்ணமாகவேயிருக்கும். கொதிக்கும்படியான மலையில் பட்டு வருமாயின் அதிகக் காங்கையாயிருக்கும். ஆகையால்தான் சென்னப்பட்டணம் முதலான சில ஊர்களில் மே, ஜூன் மாசத்தில் பகலில் 11-மணிவரையி லடிக்கும் தரைக்காற்று நெருப்பைப் போலிருக்கும். அந்தக்காற்று கொதித்துக் கொண்டிருக்கிற மலை, குன்றுகளிற் பட்டு வருவதால் நிரம்ப உஷ்ணமாய்வருகிறது.

"It is not knowledge which moves the world but spiritual ideals and moral convictions."

¶ "TO HIM WHO ROBBED ME OF ALL THAT'S MINE": A STUDY IN THREE ACTS.

† "வாரும் வாரும் துரையே இந்தவூர்தானுஅ உமக்குஊ?"

[*Vide* "*Three Words of Strength*" *or* "மூன்று மந்திரங்கள்" *in* 'நாத-கீத நாமகள் சிலம்பொலி']*

"விட்டுப்பிடி, செத்துப்பிழை, நேசித்திரு."

திருவிண்ணப்பம்—Invocation.

"பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படி பட்டநீ
மட்டுக்குமிஞ்சி மனங்கல்லாச் சமையலூற்றால்
எட்டுச்குழுள்ளே யிருந்தவரை யாட்டுவித்து
அட்டுண்டுவாழ்வார்க் சதியாவந் தாளாயோ!"

(முதல் அங்கம்): "சோரனைக்கண்டனம்": (Act I.)

"பண்டேபயில்தொறும் இன்றேபயில்தொறும் ஒளிக்குஞ்சோரனைக் கண்டனம்"

(2-வது அங்கம்): "பற்றுமின்": (Act II.)

"ஆர்மின், ஆர்மின், நாண்மலர்ப்பிணையில் தாள்தளையிடுமின்
"சுற்றுமின்! சூழ்மின்! தொடர்மின்! விடேன்மின்!—பற்றுமின்!"

(3-வது அங்கம்): "பிடித்தபத்து": (Act III.)

"ஆளுடைச்சுடரே! அளிந்ததோர்கனியே! பெருந்திறல் அருந்தவர்க்கரசே!
பொருளுடைக்கலையே! புகழ்ச்சியைக்கடந்தபோகமே! யோகத்தின் பொலிவே!
தெருளிடத்தடியார் சிந்தையுட்புகுந்த அவர் உள்ளாம்கவர் கள்வனே!
இருளிடத்துன்னைச் சிக்கெனப்பிடித்தேன்! எங்கெழுந் தருளுவதினியே!"

பியாக்-இராகம்.

ஆரோஹணம்: ஸரி கம பம பநி ஸா
அவரோஹணம்: ஸாநி தப மக ரிஸ

(பல்லவி)

† "வாரும் வாரும் துரையே இந்தவூர்தானுஅ உமக்குஊ"?
வாரும் வாரும் ஆண்டியப்பதுரையே இந்தவூர்தானுஅ?

(அனுபல்லவி)

காப்புக்கொலுசு அட்டிகையொட்டியாணம் கண்கொள்ளா மங்கலஜோடிப்பு
காரைமுருகு நாகர்திருகுபூ சாவரன்கட்டி புதுச்சேரிக்கொலுசொடு
வேலங்காய்க்கொலுசும் வெள்ளிப்பாத்திரங் கிண்ணிகளுங் கொள்ளைகொண்டது
போதாதென் றுன்னிமிய சயம்பித்தனை சாமானும்தூக்கிய துரையேஎ!
[வாரும் வாரும்—இந்தவூர்தானுஅ உமக்குஊ?

(சரணங்கள்)

1. அதுஇதுசெய்வேனென் றதிகாரதோரணை
சிதறுமற்செப்பியே—சொன்னசொற்றவறுமற்

¶ *Compare*: "தவசிலிணைவைத்தப்புஜைசெய்!" and *Herbert Spencer*: "Devotion to science is a tacit worship—a tacit irecogniti on of worth in things studied; and by implication in their cause."

† (This refrain is taken from a song which is very largely and commonly sung by little brides during '*Nalangu*' on the occasion of their marriage.) இது ஒரு நலங்குப்பாட்டின் முதலடி. (பியாக்கு இராகம்.)

* The following are the footnotes to Three Words of Strength in "Lyrics and Lay-songs of Temple Legends." (See next page.)

• சூதுவாதும்செய்யாமற் சூக்ஷமமாய்வந்துள்ளேபூட்டையுடைத்து,
நான்பேசியபேச்செல்லாம் கேட்டுக்கொண் டேபொருள்வெளவிய துரையே!
[வாரும் வாரும்—இந்தவூர்தானுஅ உமக்குஊ?

2. நகைபோச்சு நட்டுப்போச்சுப் பணைபோச்சுப் பணம்போச்சு
வகைவகையாப் பேசிநல்ல வாதுசெய்வார் ஊடல்போச்சு
[வாரும் வாரும் துரையே இந்தவூர்தானுஅ உமக்குஊ?

3. வந்துள்ளேசோதித்துப்பெட்டிபேழையெலாந்திறந்து பார்த்துக்கந்தைத் துணிகழித்துச்
சந்துள்ளேபெட்டியை வைத்துத்திறந்தம்மா! நகைநட்டெல்லாமொன்றாய் வெளவியதுரையே
[வாரும் வாரும்—இந்தவூர்தானுஅ உமக்குஊ?

4. கொந்துள்ளே பெண்டீர்மக்கள் நோகிறார்பறி கொடுத்தோமென்று
சந்துள்ளேவந்துநின்ற உன்சிந்தையை உளமொன்றி யுணரமாட்டாமலே!
பொந்துள்ளேகைநீட்டிப் பக்குவமாய்ப் பறிமுதல் வாங்கிவைத்த
சிந்தையையான் என்னென்று சொல்லுவேன் துரையேஎ!
[வாரும் வாரும்—இந்தவூர்தானுஅ உமக்குஊ?

5. நாடுபோச்சு நகர்போச்சு மனைபோச்சு மகவும்போச்சு
விடுபோமென் றுருட்டினுலும் மெய்விட்டுப் பொய்சொல்லேன் ‡
என்றனை அடிமைகொண்டு படுத்தினது போதாமல்
கன்றுஆவின் தலைகடிக்கக் கற்பித்தான் தேசமிதுஊ!
[வாரும் வாரும் துரையே இந்தவூர்தானுஅ உமக்குஊ?

6. வீட்டின்கூறை மேலிருந்து வீழ்த்தினீரே கொல்வேனென்று
வீட்டின்முன் அசுவமிற்க அதைக்கொடுபோய்ப் பணம்பறித்தீர்
காட்டிலேஜனமிருக்க நடுப்பகலிலேஉயிர் வாங்கத்தானும் உடன்பட்டீரே!
பூட்டிலேசாவியேறு தனைத்திறந்துவிந்தையாக நொந்தபுண்ணிற் கோலுமிட்ட துரையேஎ!
[வாரும் வாரும்—இந்தவூர்தானுஅ உமக்குஊ?

ACT (1) These are the very words of the Heavenly Lancer—the Divine Policeman commissioned to preserve God's Peace: "Do good in return for evil. No one is under your protection. You and your family are alike under the wing of God. This is an opportunity to test your Patience (பொறுமை) and Peacefulness (சாந்தி). It will be a disappointment to ME if you fail to stand the test. There is no such thing as abuse and insult. Borne patiently these things are honours."

ACT (2) Thus spake again in the Still Silence of the Soul the Divine Lancer (God's own Policeman bent on preserving God's Peace on Earth and Good Will among men,) investing *Servus Servorum Dei* with the sword of wisdom: "God has placed you as a shield (கவசம்) and protection (ரக்ஷா) to your 'neighbour.' (You must rise up and prove equal to the task.) You talk of *qualifying* and *modifying* and *compromise* with regard to *Principles* that are *Absolute*. You have not been harassed and annoyed sufficiently. Why should I interfere! Suffering is the *Leaven* which brings people up to the *Mark*. If they take the *Lesson* at once there is no suffering. They have not attained it and without the *means* they cannot achieve the *end*. Help and protect them by elevating them, not by satisfying the passions which are evil and which demand satisfaction."

ACT (3) In presenting again the *Divine Flag of Discrimination* (*Kukkuda-dhvajam*) and the mystic weapon which 'conquers the enemy'—*Kamastram* with the Armour of Light (*Vivekachintamani kavacham*) to *Servus Servorum Dei* the Lord of Hosts and *Teacher* of the Teacher, the Son of God, addressed himself to the soul in piteous cry of grievance merged, responding to its prayer "O Lord! save us from all evil!" thus:—"What is all this talk of grievance and rights and possession? There is no grievance that is not a benefit; no right except to humility; and no possession that is due except truthfulness. ‡ Thus armed disarm your neighbour and uproot his hatred by your Love. Love thy neighbour as thy own self."

"Look at me! Give me thy heart! Adore me! Serve me! Cling in Faith and Love and Evermore to Me! So shalt thou come to me! I promise true for thou art sweet to me! And let go these rites and writ duties! Fly to Me alone! Make Me thy single refuge. I will free thy soul of all its sins. Be of good cheer!"—*Baghavad-Gita*.

---

‡ *Compare* Huxley: "If wife and child and name and fame were all to be lost to me one after the other as the penalty, still I would not lie."—*Letter to Charles Kingsley* (1860) *soon after the death of his first child.*

CHILDREN'S PAGE.

சிறுவர்க்கான பக்கம்.

NOBILITY OF CHARACTER NOT DEPENDENT ON RACE OR CLAN.

உத்தமகுணம் ஜாதி இனத்தையே பொறுத்ததன்று.

ஓர் உண்மையான கதை.

வேம்பின் இலையுட் கனியினும் வாழை தன்
தீஞ்சுவையாதுந் திரியாதாம்;—ஆங்கே
இனந்தீதெனினும் இயல்புடையார் கேண்மை
மனந்தீதாம் பக்கம் அரிது.

வேப்பிலைக்குள்வைத்துப் பழுக்கவைத்தாலும் வாழைப்பழம் அதனால் தன் தீஞ்சுவை சிறிதும் மாறாது; அதுபோல உத்தமகுணமுள்ளவர் எவ்வினத்தாராயினும் உத்தமகுணத்தாலே விளங்குவர்.

"ஒருகாலத்து அமெரிக்கருக்கும் மேலிந்தியருக்கும் நடந்த சண்டையில் அமெரிக்க சேனாதிபதியின் இரண்டு பிள்ளைகள் எதிரிகளாகிய இந்தியருடைய கையில் சிறைபானார்கள். அந்த இளஞ்சிறைகளை என்ன செய்யலாமென்று வெகு யோசனை நடந்தது. சில அமெரிக்கருக்குப் பழிவாங்கும் நிமித்தமாயும் மற்ற அமெரிக்கருக்கு ஒரு பயமுண்டாகும்படியாயும் அந்த இளஞ்சிறைகளை ஒரு மரத்தில் கட்டித் தொங்கவிட்டு அம்புகளை ஒவ்வொன்றாக அவர்கள்மேல் எய்து பிராணவதை செய்து கொன்றுவிடலாமென்று சிலர் யோசனை சொன்னார்கள். சிலர் எதிரிகளின் நல்ல நடக்கைக்கு அவர்களைப் பிணைபாக வைத்துக் கொள்ளவேண்டும் என்றார்கள். ஆனால் அந்த இந்தியருக்குள் "வெண்மேகம்" என்று அருத்தங்கொள்ளும் பெயர்பெற்ற ஒரு வீரன், "அந்தச்சிறுவர்களை நானேபிடித்தேன்; அவர்களை என்னிடத்திலேயே ஒப்புவிக்கவேண்டும்" என்று சொல்ல, மற்ற இந்தியரும் அதற்கிசைந்து, அந்தச் சிறுவர்கள் அவன் வசத்திலேயே இருக்கவேண்டுமென்றும், உடனே அமெரிக்கருடைய சேனையை அப்புறப்படுத்தி இந்தியர்கேட்ட நிபந்தனைகளுக்கு இணங்காத பக்ஷத்தில் அவன் பிள்ளைகளிருவரும் கொலைசெய்யப்படுவார்களென்று அவர்கள் தகப்பனுக்குச் சேதிசொல்லி அனுப்பவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். சேனைத்தலைவனுக்குத் தூதுபோன மனிதன் திரும்பிவரக்கொஞ்சகாலம் சென்றபடியால் அதுவரையில் வெண்மேகம் என்னும் வீரன் அந்தப் பிள்ளைகளைத் தன்னால்கூடியமட்டும் தயவாய் நடத்திவந்தான். இது மற்ற இந்தியத் தலைவர்களுக்கெல்லாம் இஷ்டமாய் இராமையால் அவர்கள் அந்தக் குழந்தைகளைக் கடுகடுத்துப் பார்த்து வந்தார்கள்.

இந்தச் சிறு பிள்ளைகளுக்குத் தாங்கள் நிர்ப்பந்தமான ஸ்திதியில் இருந்த சங்கதி தெரியாதிருந்தாலும், மூத்தவனை (Edgar) எட்கர் என்பவன் மாத்திரம் இந்தியவீரர்களின் முகக்குறிகளைப்பார்த்துத் தங்களுடைய அபாயமான ஸ்திதியை ஒருவாறு ஊகித்தான். வெண்மேகத்துக்குக் கொஞ்சம் இங்கிலீஷ் பேசத்தெரியுமாதலால், அந்தப் பிள்ளைகளை எப்போதும் ஆயுதபாணிகளாய் இந்தியர் காத்துக்கொண்டிருந்தபோதிலும், அவர்களை அடிக்கடி வெளியே அழைத்துக்கொண்டுபோவான். ஒருநாள் அந்தத் தலைவன் அந்த ஊரிலுள்ள குதிரைகள் எல்லாவற்றிலும் அதிக வேகமுள்ளதென்று பேர்பெற்ற தன் குதிரைமேல் தானும் அந்தச் சிறுவர்களுமாக ஏறி அந்த இந்திய சேனைகளிருந்த கூடாரத்தைச்சுற்றிச் சவாரி செய்துகொண்டிருக்கையில் சிறுவர்களைப் பார்த்து, "குழந்தைகளே! இந்தக்குதிரையின் வேகத்தை நான் என்னவென்று சொல்லப் போகிறேன்; இதன்குணம் அதிகம் புகழத்தக்கது; மேலும் குறிப்பும் இதற்கு நன்றாய்த் தெரியும். இதன் வேகத்தால் நான் எத்தனையோதரம் எதிரிகளிடத்தினின்றும் தப்பி உயிர்பிழைத்திருக்கிறேன்" என்று இவ்வாறு குதிரையின் குணங்களை அந்தப்பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொண்டிருக்கையில், கூடாரத்தில் ஒருவிதமான சந்தடியும் குழப்பமும் உண்டா

யிற்று. அதென்னவெனில், அமெரிக்க சேனைத் தலைவனுக்குத் தூதுபோயிருந்த மனுஷன் திரும்பிவந்ததனால் உண்டானது.

உடனே வெண்மேகம் மூத்தபிள்ளையைப் பார்த்து: "நீ குதிரைசவாரி பண்ணுவாயா?" என்ன, "எங்கள் தகப்பனார் கற்றுக்கொடுத்திருக்கிறார்" என்று அவன் மறுமொழி சொல்லவே, அவனைப்பார்த்து: "உங்கள் தகப்பனிடத்தில் போன மனுஷன் 'அவர் இந்தியர் சொன்ன நிபந்தனைகளைக் கேட்கமாட்டேன்' என்று சொன்னதாகத் திரும்பி வந்துவிட்டான். இனி உங்களுக்கு மீட்சியில்லை. இந்தியர்கள் உடனே உங்களைக் கொன்றுவிடுவார்கள். நான் உங்களைக் காப்பாற்றக்கூடுமோவென்று பார்ப்போம். அதோ சிறிதுதூரத்தில் இருக்கிறதே அந்தத்தோப்பு! உனக்குத் தெரிகிறதா? அந்தத்தோப்பிலேதான் உங்கள் தகப்பனார் பாளயம் இறங்கியிருக்கிறார். நான் உங்களைக் கொஞ்சதூரம் குதிரைமேல் ஏற்றிக் கொண்டுபோய் உங்களைக் குதிரைமேல் விட்டுவிட்டு இறங்கிவிடுகிறேன். நீ உடனே குதிரையின் காதைப்பிடித்துக் கிள்ளினால் அது அதிக வேகமாய் ஓடும். அந்தத் தோப்பைநோக்கிக் குதிரையைச் செலுத்தினால் உன் தகப்பனாரிருப்பிடம் போய்ச்சேரலாம். ஆனால் கல்லடிக்குமாத்திரம் தப்பித்துக் கொள்ளவேண்டும்" என்றான். இவ்வண்ணம் வெண்மேகம் சொல்லக்கேட்ட மூத்தகுமாரன்: "உம்முடைய தயவேதயவு; நீர் எங்களை இப்படி விட்டுவிட்டால் இந்தியர் உம்முடைய உயிரை வாங்கமாட்டார்களா" என்ன, அதற்கு வெண்மேகம்: "நீங்கள் எனக்காகச் சிந்திக்கவேண்டாம்; எனக்கு 40 வயதாயிற்று; நீங்களோ சிறுவர்கள். இரண்டு பேரைக் காப்பாற்ற ஒரு உயிர்போனால் நிமித்தமில்லை, என்னுயிர் அவ்வளவு மேலானதல்ல" என்றான். இவ்வாறு வெண்மேகமும் சிறுவனும் பேசிக்கொண்டிருக்கையில் இந்திய போர்ச்சேவகர்களெல்லாம் அமெரிக்க [illegible]னிடமிருந்து சமாசாரங்கொண்டுவந்த மனுஷன்மேலேயே ஞாபகமாய்ச் சிறுவர்களைக் கவனியாமல் இருந்தார்கள்.

இப்படி அவர்கள் அயர்ந்திருக்கிற தருணம் பார்த்து வெண்மேகம் குதிரையை விட்டுக் குதித்துப் பிள்ளைகளுக்குக் குதிரையை முடுக்கும்படிச் சமிக்கைபண்ணினான். மூத்தவனாகிய எட்கரின்நெஞ்சு படபடவென்று துடித்துக் கொண்டிருந்தாலும் அவன் உடனே குனிந்து குதிரையின் காதைப்பிடித்து நசுக்க, அது வாயுவேக மனோவேகமாய் ஓடி இந்தியர் என்னவென்று பார்த்து விழித்துக்கொள்வதற்கு முன்னே 100 கஜதூரம் போய்விட்டது. அப்போது அவர்கள், பின்னே தங்களைத் துரத்திக்கொண்டுவருகிற சப்தத்தையும் 'விர் விர்" என்று தங்கள் சமீபத்தில் வந்து விழுகிற பாணங்களின் ஓசையையும் கேட்டுப்பயந்து, மூத்தவன் இளையவனைநோக்கி "லயொனெல்! கெட்டியாய்ப் பிடித்துக்கொள், பின்னே அவர்கள் வருகிறார்களா பார்" என்று சொல்லவே, "லயொனெல் ஆம் அவர்கள் வருகிறார்கள், ஒரு பெருங்கூட்டம் அவர்களைப் பின்தொடர்ந்து வருகிறது. வெண்மேகந்தான் அவர்களை நடத்திவருகிறான்" என்ன, அதற்கு எட்கர்: "வெண்மேகம் ஒருக்காலும் நம்மை எதிர்க்க வரமாட்டான், இன்னும் யாரோ பார்" என்றான்.

அச்சமயத்தில் இவர்களைச் சுற்றி அம்புகள் சரமாரியாய்ப் பொழிய எட்கர் தானே திரும்பிப் பார்த்தபொழுது தம்பிசொன்னது சரியென்று காணப்பட்டது. இவர்களைத் தொடர்ந்து வந்தவர்களுக்குள் வெண்மேகம் அதிக சமீபத்துக்கு வந்துவிட்டான். அவன் சேணமில்லாத ஒரு குதிரைமேல் சவாரிசெய்து இந்தச் சிறுவர்களைக்கிட்டி இந்தியபாஷையில் பிள்ளைகளுக்குத் தெரியாமல் ஏதோ சிலவார்த்தைகள் சொல்லிக் கத்தினான். இப்படிப் பேசினது தன் எஜமானன் ஆபத்துக்காலத்தில் காட்டுங்குறி என்று அறிந்த அந்தக்குதிரை, இதுவரைக்கும் காற்றாய்ப் பறந்தால் இப்

போது மின்னலைப்போல் பாய்ந்தது. இப்படிச் சென்ற குதிரையின் வேகத்தால் பின்னேவருகிறவர்கள் இன்னார் என்று காணக்கூடாதபடி அவர்கள் அதிகதூரம் போய்விட்டார்கள். சிறிதுநேரத்தில் அவர்கள் அம்புகளுக்குத் தப்பி க்ஷேமமாய்த் தோப்பை அடைந்து, அங்கிருந்து ஒரு மலையிறக்கத்தில் அடித்திருந்த தங்கள் தகப்பனாருடைய கூடாரத்தை அன்றுசாயந்திரம் போய்ச்சேர்ந்தார்கள். இதுவரையில் பிள்ளைகள் இறந்துபோனதாக எண்ணியிருந்த தகப்பன் இவர்களைக்கண்டு கட்டித் தழுவிக்கொண்டு இப்படித்தன் குழந்தைகளைக் காப்பாற்றின இந்தியனை வாழ்த்தித் தன்னால் கூடுமானால் வெண்மேகத்துக்குத்தக்க பிரதியுபகாரம் செய்வதாகத் தீர்மானித்தான்.

ஆனால் அந்த இந்தியத்தலைவன் அப்படிக் கொத்த வெகுமானம் பெறும்வரையில் உயிரோடிருக்கவில்லை. எப்படியென்றால் அப்பிள்ளைகளைத் தொடர்ந்துபோன இந்தியன் ஒருவன், வெண்மேகம் குதிரையுடன் பேசின வார்த்தைகளின் கருத்தைஅறிந்து அந்தப் பிள்ளைகள் தப்பித்துக்கொண்டு போனதற்கு இவன்தான் காரணமென்று கண்டு, அதிக கோபங்கொண்டு கையில் இருந்த அம்பை வெண்மேகத்தின்மேல் எறிய, அது அவன் மார்பில் பொத்திக்கொண்டு உருகிப்போக, வீரன் குதிரையில் இருந்து விழுந்து மடிந்தான். இப்படி அவன் குரூரமாய்க் கொலை செய்யப்படவே, உபகாரியாகிய அந்தத்தலைவனுக்கு ஒன்றும் பிரதியுபகாரம் செய்ய இடமில்லாமற் போயிற்றே என்று அமெரிக்க சேனாதிபதி விசனப்பட்டு, வெண்மேகம் விழுந்து மரித்த இடத்தில் ஒரு கோரிகட்டி அதன்மேல் "சினேகிதனுக்காக உயிரைக் கொடுப்பதிலும் பேருதவி வேறொன்றுமில்லை" என்கிற வாக்கியத்தை எல்லாரும் பார்த்துப் புகழும்படிச் செதுக்கி வைத்தான்.

HINDU IDEAL OF RIGHTEOUS RULE.

'செங்கோன்மை'.

'செங்கோன்மையாவது அரசனாற் செய்யப்படும் முறையினது தன்மை'. அந்த முறையானது ஒருபாற் கோடாது சமமாய் நிற்கும் செவ்விய தராசுக்கோல் போன்றிருத்தலின் செங்கோலென்பர்.

"ஓர்ந்துகண்ணோடாதிறைபுரிந்தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதேமுறை"

என்றார் பெரியாரும். தன்கீழ் வாழ்வார் யாவராயினும், உயிரிற் சிறந்த உயர்ந்தோராயினும் தாழ்ந்தோராயினும், வலியாராயினும் மெலியாராயினும், உற்றோராயினும் மற்றோராயினும் சமநிலையாகக் கருதி நடுவுநிலைமையாக, எந்தக்குற்றம் செய்தார்களோ அந்தக் குற்றத்துக்கேற்ற தண்டனையை அறிந்தோரிடமாராய்ந்து செய்வதே அதனிலக்கணமாம்.

"இறைகாக்கும் வையகமெல்லா மவனை
முறைகாக்கு முட்டாச் செயின்."

என்று கூறிய திருவள்ளுவரது சிறிய உரையே அவ்வரசன் செய்யவேண்டுவனவும், அவன் அவற்றைச் செய்தலாலுண்டாகும் பயனும் என்பனவற்றையெல்லாங்கூறும். பருவகாலத்தில் பெய்து பயிரையும் உயிரையும் காக்கும் மழையைப்போல உலகத்தையெல்லாம் அரசன் காப்பான். அவன் தன் முறையினின்றும் விலகி நடக்க நேர்ந்தவிடத்தும் விலகாது தன் செங்கோன்மையைக் காத்து நடப்பதே அவ்வரசனைக் காக்கும் காவலாம். அங்ஙனம் விலக நேர்ந்தவிடத்தும் விலகாது முறைசெய்தாரிருவரை பரிமேலழகர் கூறியுள்ளார். அவர் வரலாறுகளை இங்குச் சிறிது சொல்லுவோம்.

மனுநீதிகண்ட சோழர் சரித்திரம்.

திருவாரூரில் குடிகட்கெல்லாம் கண்ணும் உயிரும்போல நீதிதவறாது அரசு செலுத்தி வந்த மனுநீதிகண்டசோழர் என்பவரிருந்தனர்.

அவர் அரசு செலுத்திக்கொண்டு வருங்காலத்து அவருடைய புத்திரன் சேனைகளெல்லாம் தன்னைச் சூழ்ந்துவர தேர்மீதேறி ராஜவீதியில் உலாப்போயினன். போகும்போது ஒரு பசுக்கன்று துள்ளிக்கொண்டு போய் அந்தத் தேர்க்காலினடியிற் பட்டிறந்தது. அதுகண்ட தாய்ப்பசு சுழன்று ஓடிவந்து அலறிச்சோர்ந்து நின்றது. அதுகண்ட சோழபுத்திரன் அபாயம் வந்ததேயென்று மனதில் மிக்க துன்பங்கொண்டு அறிவழிந்து,

"மலர்தலை யுலகங்காக்கு மனுவெனுமெங்கோமானுக்
குலகிலிப்பழி வந்தெய்தப் பிறந்தவாறொருவன்"

என்று சொல்லிவீழ்ந்தனன். பின் நான் அறியாது செய்த இப்பாவத்துக்குப் பிராயச்சித்தம் உண்டாயின் தந்தையறிதற்குமுன்னே பிராமணர் விதித்தபடி அதைச்செய்யவேண்டுமென்று பிராமணரிடத்தே போயினன். கன்றையிழந்த அப்பசு துன்பம் சகிக்கமாட்டாது ராஜமாளிகை வாயிற்கட்டிய ஆராய்ச்சிமணியைத் தன்கொம்பினால் அடித்தது. அச்சப்தத்தைக் கேட்ட சோழர் சிங்காதனத்தினின்றும் உடனே இறங்கி விரைந்துவந்து வாயிலையடைந்து அங்கேநின்ற காவலாளர்களால் ஒரு பசு தன்கொம்பினால் அம்மணியை அசைத்ததென்றறிந்தனர். அங்கு வருத்தத்தோடு நின்ற பசுவைப்பார்த்து இதற்கு என்ன இடையூறு நேர்ந்தது என்று மந்திரிகளைப்பார்க்க அவர்களிலொருவன் "உம்முடைய புத்திரன் தேர்மீதேறி சேனைகள்சூழ ராஜவீதியிற் போகும்பொழுது ஒருபசுக்கன்று அத்தேர்க்காலிற் பட்டிறந்தது. அதன் தாயாகிய இப்பசு வந்து இம்மணியை யடித்தது" என்று விண்ணப்பம் செய்தனன். அது கேட்ட சோழர் பெருந்துயர்கொண்டு "என்செங்கோன்மை நன்று, இதுயாது செல்தால் தீரும்" என்றிரங்கி ஏங்கி அப்பசுவின் முகத்தைப்பார்த்துச் சோர்ந்தார். அதுகண்ட மந்திரிகள் இதற்குத் தாம் மனந்தளர்வது பரிகாரமாகாது. கோவதைக்கு தர்[illegible]ல் சொல்லிய பிராயச்சித்தத்தை நமது புத்திரனைக்கொண்டு செய்விப்பதே முடிவென்றார்கள். அதுகேட்ட அரசன் "நீங்கள் சொல்லும் பிராயச்சித்தம் இப்பசுவின் நோய்க்கு மருந்தாகுமா? என்பேரில் பரிவுகொண்டு நீங்கள் செப்பிய வார்த்தைக்கு நானிசைந்தால் நடுவுநிலைமை தவறாதா?

"மாநிலங்கா வலனாவான் மன்னுயிர் காக்குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தா
லானமிக பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மா
லானபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ"

என்றபடி உயிர்களுக்குத் தன்னாலும், தன்பரிவாரத்தாலும், பகைவராலும், கள்வராலும் மற்ற உயிர்களாலும் வரக்கூடிய ஐந்து பயத்தையும் நீக்கி அவைகளைக் காப்போனன்றோ அரசனென்னப்படுவான். என் புத்திரன் செய்த கொலைக்கு பிராயச்சித்தம் செய்துவிட்டு வேறொருவன் செய்த கொலைக்குமாத்திரம் அவனைக் கொல்வேனாயின் ஆதிமனுவால் ஏற்பட்ட தர்மசாஸ்திரம் பின்மனுவென்னும் சோழனால் நீக்கப்பட்டது என்னும் பழி உலகத்தில் நிலைக்காதா?" என்றார்.

அப்பொழுது மந்திரிகள் "இதுபோல முன்னும் நடந்திருக்கின்றதே இதன் பொருட்டு புத்திரனைக் கொல்லல் முறையன்று. விதித்தபடி பிராயச்சித்தம் செய்தலே சான்றோர் வழக்கு" என்றார்கள்.

அதற்கவர் 'நீங்கள் நெறியினுண்மை யறியாது பேசுகின்றீர்கள். எந்த உலகத்திலே எந்தப்பசு கன்றையிழந்த துன்பத்தினால் ஆராய்ச்சி மணியை அடித்தது? சொல்லுங்கள். இவனைக்கொல்வதே தகுதி. என்னால் இப்பசுவின் துயரை நீக்கமுடியாததலால் இப்பசு துன்பம் அடைதலைப்போல நானுமென் புத்திரனையிழந்து துன்பமடைதலே நீதி' யென்றுசொல்லி எவ்விடத்தும், எக்காலத்தும், எவராலும் செய்தற்கரிய இச்செய்கையைச் செய்யத் துணிந்தார். துணிந்துசோழர் தம் புத்திரனைத் தாமேகொண்டு வீதியிற்போய் ஏகபுத்திரனே தங்குலத்துக்குள்ளானென்பதை நினைக்காது

தர்மவழியில் செல்லுதல் ஒன்றையே நினைத்து அவனைப் பூமியிற்கிடத்தி அவன் மார்பிலே தேர்ச்சக்கரம் செல்லும்படியாகத் தேரை நடத்தினர். உடனே கடவுள் அவர்க்குக் காக்ஷிதந்தருளி பசுக்கன்றையும் இராசகுமாரனையும் உயிர்ப்பித்தருளினர்.

பொற்கரப்பாண்டியன் சரித்திரம்.

பரிமேலழகர் கூறியமற்றொரு உதாரணம் வருமாறு:—“மதுரையிலரசு புரிந்த பொற்கரப் பாண்டியன்.

“ஒற்றிற்றெரியா சிறைப்புறத்தோர்து மெனப்
பொற்றேள் துணையாத் தொரந்தும்”

என்றபடி, தானே மாறுவேடம் பூண்டு இரவில் சென்று விஷயங்களறிந்து வருவது வழக்கம். ஒருநாள் நடுராத்திரியில் போய்க்கொண்டிருக்கும்பொழுது ஒரு வீட்டில் ஆண் பெண் ஆகிய இருவர் பேசிக்கொண்டிருந்த சப்தம் கேட்டது. எல்லாரும் தூங்குமிச் சமயத்தில் இங்குமட்டும் அரவங்கேட்பானேன் என்றெண்ணி சமீபத்திற்போய் கேட்டுக்கொண்டிருந்தான். அப்போது அவ்வீட்டு அந்தணன் தான் போவதாயிருக்கும் யாத்திரையைப்பற்றி தன் மனைவியிடத்திற் சொல்லிக்கொண்டிருந்தான். அம்மனைவி ‘நீங்கள் என்னைத் தனித்துவிட்டுப்போய்விட்டால் எனக்குத்துணை யார்’ என்று கேட்க அதற்கவன் ‘அரசன் ஆணையிருக்கும்போது உனக்குப்பயமேது’ என்று சொல்ல அவளும் சம்மதித்திருந்தனள். அப்போதரசன் ‘இதென்ன! விபரீதம்! இவன் நம்மீது பாரத்தைப்போட்டுச் செல்லுகின்றானே’ என்று நினைத்து அவ்வந்தணன் போனபின்னர் நாடோறும் இரவில் மாறுவேடம் பூண்டு அவ்விடத்தில் வெளியே சற்று நின்று சங்கதியறிந்து போய் விடுவான். அவ்வாறிருக்க யாத்திரைபோயிருந்த அந்தணன் திரும்பிவிட்டான். அன்றிரவும் அரசன் வழக்கம்போல வீதியிற் செல்ல, அவ்வீட்டினுள் இருவர்பேசும் குரல்கேட்டது. கேட்கவே பிராமணன் தான் வந்துவிட்டானோ இல்லாவிட்டால் அவன் போனசமயம்பார்த்து வேறு எவனாவது புகுந்துவிட்டானோ என்று யோசித்து, அதை அறிய ‘எப்படியிருக்கினும் நாம் கதவைத்தட்டுவோம். நாயகனாயிருந்தால் ஏனென்பான், அன்னியனாயிருந்தால் சும்மா இருப்பன். அப்போதறிந்துகொள்ளலாம்’ என்று தீர்மானித்துக்கொண்டு கதவைத்தட்டினன்.

அப்பொழுது அவ்வந்தணன், “யாரது?” என்று கேட்கவே அந்தணன் வந்துவிட்டானென்று தீர்மானித்துக்கொண்டு அரசன் திரும்பிவிட்டான். கொஞ்சதூரம் வந்து அரசன் “இதென்ன நாம் செய்தகாரியம் விபரீதமாய் முடியுமே: நான் தட்டினதைக்கேட்டு தானில்லாத காலத்து வழக்கமாகவரும்சோரநாயகன் தன் வரவை யறியாது இன்னும் வந்து தட்டினானோ என்று நிரபராதியாகிய அப்பார்ப்பினியின்பேரில் சந்தேகங்கொள்வானே” என்று பயந்து அடுத்தாற்போலிருக்கும் வீடுகளையும் அவ்வாறே தட்டிச்செலவோமானால் எவனோ கள்வன் வந்தானென்று நினைத்துவிடுவார்கள் என்று தீர்மானித்துக்கொண்டு அவ்வாறே செய்து விட்டுப்போயினன். விடிந்தவுடனே அந்தணர்களெல்லாம் ஒருங்கு சேர்ந்து அரசனிடம் வந்து ‘நம்மூரில் திருடர் பயம் அதிகரித்துவிட்டது; நேற்றிரவு எங்கள் வீட்டுக் கதவுகளைத் தட்டினார்கள்’ என்று முறையிட அதற்கரசன் ‘அப்படி யொருவன் வீட்டாரெண்ணத்துக்கு விரோதமாக இரவில் கதவை இடிப்பானேயாகில் அவனுக்கு என்ன தண்டனை செய்வதெனறு கேட்க, மந்திரிகள் ‘அவன் கையைக்குறைத்துவிடுவதே முறை’ என்றார்கள். உடனே அரசன் உடைவாளை உருவி தன்கையை வெட்டிக்கொண்டனன். பின் கடவுளருளால் அக்கரம் பொன்னிறமாக வளர்ந்துவிட்டது” என்பதே.

நீதிபோதம்.

இச்செங்கோன்மையே அநாதியாகிய வேதம், அறம் என்பனவைகளையும் நிலைநிறுத்துதற்கு இன்றியமையாத காரணமாயிருக்கின்றதனால் அவற்றிற்கு ஆதியென்று சொல்லப்படுவது. தான் உலகோம்புங்காலையில் தன் குடிகட்குக் குற்றஞ்செய்தாரை தண்டித்து ஒழித்தல் அவனது கடமையாம். அத்தண்டமாவது துன்பஞ்செய்தல், பொருட்கொள்ளுதல், கொல்லுதல் என்னு மிவை மூன்றுமேயாம். நன்கிழ்வாழ்வாரை தண்டித்தல் தர்மமல்லாததால் பழியன்றோ என்னின்; அப்படியல்ல; ஏனெனில் அப்படித்தண்டித்தல் அவன் தொழிலாகும். தண்டித்தலால் வரும்பயன் யாதென்றால் ஓர் முறை குற்றம் செய்தவன் மறுபடியும் அக்குற்றத்தைச் செய்யாமலிருக்கவும் குற்றஞ் செய்தவனொருவனைப் பார்த்து அவன் அயலாரும் அது செய்யாமலிருக்கவும் பண்ணுவதே. இதனுள் முதற்பயன் துன்பஞ்செய்தல், பொருட்கொள்ளுதல் என்னுமிரண்டினாலும் பெறப்படும். மூன்றாந்தண்டமாகிய கொல்லுதலினால் இரண்டாவது பிரயோசனமே பெறப்படும். அங்ஙனம் கொல்லுதலினால் வேந்தனுக்கு ஒரு பொழுதும் பாவம் வந்தெய்தாது. எப்படி பயிர்கள் களைக்கு அஞ்சி அழியுமோ, அதுபோல அரசன் குற்றம் செய்தாரை தண்டியாது விட்டால் உலகத்துள்ளார் பலதுன்பங்கட்குட்பட்டு வருந்துவராகலின் கொல்லுதலும் ராஜதர்மமே.

“கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.”

என்றார் பெரியாரும்.

“லாலகுடி காக்ஷிசாலை 1916-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 16-ம் தேதி காலையில் சென்னை சட்டநிரூபண சபையின் மெம்பராகிய கனம். சர். பி. எஸ். சிவசுவாமி ஐயரவர்களால் திருச்சிக்கோட்டை நேஷனல் ஹைஸ்கூலிலும், லால்ஹாலிலும், யுத்தசகாய நிதிக்காக, திறக்கப்பட்டு, 6-நாள் நடத்தப்படும். செப்டம்பர் மாதம் 10-ம் தேதி வரைக்கும் சாமான்களை திருச்சிக்கோட்டையிலுள்ள ஆர்கனைசருக்கு (Organi-[illegible]ம்.”—திவான்பஹதூர் டி. தேசிகாசாரியார், ப்ரெஸிடெண்டு.

HINDU IDEAL OF “LIFE’S HELP - MEET.”

“QUOTATIONS FROM STANDARD TAMIL WORKS.”

வாழ்க்கைத்துணைநலம்.

“மனைத்தக்கமாண்புடையளாகித்தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.”

“மனைமாட்சி இல்லாள் கணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்.”

“இல்லதெனில்லவள் மாண்பானல் உள்ளதென்
இல்லவள் மாணக்கடை.”

இல்லறத்திற்குத்தகுந்த நற்குண நற்செய்கைகளையுடையவளாகித் தன்னை மணம்புரிந்த கணவன் வரவுக்குத்தக்க செலவு செய்பவள் தான் இல்வாழ்க்கைக்குத் துணையாவாள். மேற்கூறிய மனையாள் வாய்க்காவிடின், எச்சிறப்புடைத்தேனும், அவ்வில்வாழ்க்கை சிறப்புடைத்தன்று. மாட்சிமைதங்கிய மனையாள் வாய்க்கின் இல்லாததொன்றுளதோ. அஃதன்றேல் உள்ளதுதான் யாது. [1].

“பெண்ணிற்பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப்பெறின்.”

ஒருவன் பெறக்கூடிய பெரும் பேறுகளுள், கற்பென்னுங் கலங்கா நிலைமையுடைய மனையாளினும் சிறப்புடைத்து யாது.

“தெய்வந்தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யுமழை.”

தெய்வம் எனக்கூறும் எதையும் வணங்காளாகி, உறங்கி எழுக்கவும், கணவனைத் தொழும் பெண்டிர் பெய்யென்று சொல்ல மழை பெய்யும். [2].

---

(1) அந்நற்குண நற்செய்கைகள் பின்வரும் செய்யுளான் விளங்குமே :—

அடிசிற்கினியாளே யன்புடையாளே
படிசொற்றவறாதபாவாய்—அடிவருடிப்
பின்றூங்கிமுன்னெழுந்த பேதையேபோதியோ
வென்றூங்கு மென்கணிரா.—திருவள்ளுவர்.

(2) இவ்விடத்து நளாயனிசரித்திரம் அறியக்கூடியது.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்."

தன் கணவன் கற்பு நிலையினின்று, தன்னையுங் காத்து, அவனையும் காப்பாற்றி நற்குண நற்செய்கைகளை மறவாது புரிபவளே மனையாள்.

"சிறைகாக்கும் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை."

கணவன் காக்கும் காவலென் செய்யும்! பெண்கள் தங்கள் கற்பினால் காக்கும் காவலே சிறந்தது. 'அறைகாத்தான் பெண்டிழந்தான்' என்பதும் அறியத்தக்கது. [1]

"பெற்றார்ப் பெறிற்பெறுவார் பெண்டிர்
பெருஞ்சிறப்புப் புத்தேளிர் வாழுமுலகு."

பெண்கள் கணவனை வணங்குவதால் சுவர்க்கத்தில் தேவரால் வணங்கப்படும் பெருஞ்சிறப்படைவர். முற்கூறியபடி தெய்வமும் அவர்கள் வாய்ச்சொல் தட்டாது. [2]

"புகழ்புரிந்தில் லிலோர்க்கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடுநடை."

'கற்புடையாள்' என்று உலகம் கூறும் கீர்த்தியை விரும்பா மனையாள் வாய்க்கின், அவருக்குப் பகைவர்முன் சிங்கம்போன்ற பெருமித நடையில்லை. [3]

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலன் நன்மக்கட் பேறு."

மனைவியின் மாட்சிமைக் குணங்களை ஒருவனுக்கு நன்மையென்றும், நன்மக்கள் பெறுதலை அந்நன்மைக்குப் பூஷணமென்றும் அறிந்தோர் கூறுவர். [4]

[வாழ்க்கைத்துணைநல விசேஷத்தைக் குறித்து நம்மனோர் இவ்வாறு கூறியிருக்கின்றனர். ஆங்கிலேய கிரந்தகர்த்தாக்களில் ஒருவராகிய வாஷிங்டன் இர்விங் என்பவர் மனைவியின் குணத்தைச் சிறப்பித்து தம்மவருள் நாமறிந்த உதாரணம் ஒன்றைக் கூறியெழுதியிருக்கிறார். அதை நம்மவர் அறியவேண்டி அடுத்தாப்போல் தானே வரைந்திருக்கிறோம்.]

(1) சீதாபிராட்டியாரைக்காத்தது அவள் கற்புநிலைமையன்றோ.

(2) கண்ணகியைத் தெய்வமாய் லங்காபுரி, மதுரை, திருவாங்கூரில் கொண்டாடுவதற்கு இதன்றோ காரணம்.

(3) ஆங்கிலேயதேசத்து பூர்வீக அரசனாகிய ஆர்தர்-குவினிவீயர் கதை இதைவிளக்குகின்றது. (The Story of King Arthur & his Queen.)

(4) இதைச் சந்திரமதி சரித்திரம் புலப்படுத்தும்.

Wife : A sketch from English Home-Life as drawn by Washington Irving.

மனைவி.*

(ஒரு ஆங்கிலேய குடித்தனக்கதை.)

"உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா."

"பெண்மணியின் பிரியத்தால் சூழப்பட்ட மனிதன் மனத்துள்ள சுகமும், சௌக்கியமும், ஆழ்கடலில் ஆழ்ந்துள்ள விலையற்ற முத்துக் கல் முதலியவைகளினும் மிகவும் சிறந்தது. நான் இல்லம் அணுகும்பொழுதே அருள்வாடை வீசுகின்றதே. மணத்தில் எம் மனமுள்ளது பார். ரோஜாப்பத்தியும் அவ்வளவு மணமுடைத்தன்று"—என்றார் மிடில்டன். †

பெண்கள், ஒருவராலும் தாங்கக்கூடாத ஆபத்து விபத்துக்களை அதிகமான தைரியத்தோடு பொறுத்திருப்பதை நான் அநேகம் தடவை பார்த்திருக்கிறேன். மனிதனது ஊக்கத்தையழித்துத் தரையில் வீழ்த்தும்படியான துயரம் மெல்லியரின் முயற்சியைக் கிளப்பி மாக்ஷிமைப்படத்தக்க தீரத்தையும் மேன்மையையும் உண்டுபண்ணுகின்றது. உயர்ந்தோங்கும் நாளில், சோர்வும் தளர்வும், சார்புமாயேயுள்ள, சிறுகொடுமையையும் கண்டு அஞ்சும், இனிமையும் மென்மையுமுள்ள ஒரு பெண் திடீரென்று மனோதைரியத்திலுயர்ந்து தன் கணவனைத் தேற்றி ஆதரித்து மிகவும் திடனுடன், வறுமையின் மிகுந்த இடுக்கண்களைப் பொறுக்கப் பார்ப்பது மிகவும் மனதை உருக்கத் தகுந்ததே.

தேக்குமரத்தைத் தன் அழகிய இலைகளால் சுற்றியிருக்கும் திராக்ஷக்கொடி, அவ்வுயர் மரம் இடியினால் பிளக்கப்பட்ட பொழுதும், தன் இளந்தளிர்களுடன் இன்னும் அதைத் தழுவிக்கொண்டு, அதன் ஒடிந்த கிளைகளைச் சேர்த்துக் கொண்டிருப்பதுபோல, சுகானுபவத்தில் கணவனுக்குப் பூஷணமாயிருந்து, திடீரென்று விபத்து சமபவிக்கும் நாளில் அவன் நொந்தமனதை ஆற்றி, தொங்கும்

* Translated from Washington Irving's Sketch Book.

† Middleton.

துன்பத்தைத்தாங்கி அவனுக்கு ஆறுதலும் உதவியுமாய் இருக்கும் பொருட்டன்றோ சுவாமி பெண்களைச் சிருஷ்டித்திருக்கின்றனர்.

"மனைவியும் குழந்தைகளும் உடையனாயிருத்தலைவிட மிகவும் நலமானது நான் உனக்கு விரும்பக் கூடியதன்று": ஆக்கம் வருநாளில் அதை உன்னுடன் அனுபவிக்கவோ, துக்கம் வருநாளில் உன்னை ஆற்றவோ அவர்களிருக்கிறார்கள்.

மணம்புரிந்தவன், துயரத்தில் வீழ்ந்தால், தன்னந்தனியாயிருப்பவனைவிடச் சீக்கிரத்தில் தன்னிலைமையைத் திருப்பி அடையக்கூடும். ஏனெனில் ஜீவனத்திற்கு அவனையே நம்பியிருக்கும், கதியற்ற பிரியமுற்ற பெண்சாதி பிள்ளைகளின் குறைகளினால் அவன் வேலைக்குத் தூண்டப்படுவான். இதன்றி இன்னும் முக்கியமாக ஒரு சாதகமுமுண்டு. வெளியெல்லாம் மனம்நோக உழைத்தாலும், சுயாதிபத்தியமுள்ள பிரியமான ஒரு சிறு உலகமாகிய தன் இல்லமுண்டு.—அதற்காகத் தன் மானத்தைக் காப்பாற்றவேணும் என்ற எண்ணம் தூண்டுதலினாலும், இல்வாழ்க்கையில் ஒரு ஆறுதல் காணலாம் என்ற எண்ணத்தினாலும் தன் நிலைமையைத் திருத்த முயலுவான்.

இவன்கதி இப்படியாக, தனிமையாயிருப்பவனோ அசாக்கிரதையாய் வீண்செலவில் வீழ்ந்து, தன்னை எல்லோரும் கைவிட்டதாயும் தனக்கு வேறுகதியில்லை என்றும் நினைத்து குடியில்லாமல் பாழாய்க்கிடக்கும் வீடு இடிந்துவிழுவதுபோல மனமுடைந்து வீழ்ந்து விடுவான்.

இப்படி யோசிக்குங்கால் நான்நேரில் பார்த்த இருவர் இல்வாழ்க்கை என்ஞாபகத்துக்கு வருகின்றது. உயர்ந்த குடியிற்பிறந்து செல்வமாய் வளர்க்கப்பட்டவளான அழகுவாய்ந்த கற்றுத்தேறிய மெல்லிய மங்கையொருவளை தன் அத்யந்தசிநேகனை லெஸ்லி மணம்புரிந்தாள். அவளோ ஆஸ்தி யொன்றும் ஸ்ரீதனமாகக் கொண்டுவரவில்லை; ஆனாலும் என் சிநேகிதனிடத்திருந்த ஐசுவரியம் அவர்கள் எவ்வித சுகபோகங்களையும் அனுபவிக்கப் போதுமானதாயிருந்தது. அவளுக்குத் தான் எல்லா இந்திர போகங்களையும் அளிக்கக்கூடும் என்று எண்ணி எண்ணி ஆனந்தப்படுவான். 'அவள் ஸர்வபோகங்களையும் அனுபவித்து ஆனந்தித் திருக்கச் செய்வேன்' என்று சொல்வான்.

அவர்கள் சுபாவம் வெவ்வேறாயிருந்தும், அவ்வேற்றுமையே அவர்களை ஒத்திருக்கச் செய்தது. அவன் விசித்திரமான எண்ணங்கொண்டு எப்பொழுதும் ஒருமாதிரியாயிருப்பவன். அவளோ சிரிப்பும் உற்சாகமுமுள்ளவள். அவள் பத்துப்பேர் மத்தியிலிருக்கும் பொழுதும், அவள் கணவன் அவளையே, வாய் திறந்து ஆனந்தத்துடன் பார்த்துக்கொண்டிருப்பான். அவளைப் பலர் தெய்வமாகக்கொண்டாடும்பொழுதும் அவள் கண், அருளும், அங்கீகாரமும் லெஸ்லியிடத்துத்தான்பெற வேண்டுமென்றாற்போல, அவனிடத்தே செல்லும். அவன்கையில் அவள் சாய்ந்து கொண்டிருக்கும்பொழுது, அவள் மெல்லிய சரீரமும், அவன் உயர்ந்த ஆண்மை தங்கிய உடம்பும் வெகு நேர்த்தியாயிருந்தது. இல்வாழ்க்கை என்னும் பூம்பாதையில் மிகவும் சுகிருத்திருக்கக்கூடிய வகைகளுடன், இவ்விருவரைப்போல், வேறெவரும் நடக்கத் தொடங்கினார்களில்லை.

லெஸ்லி தன் ஆஸ்தியைக்கொண்டு பெருவியாபாரம் செய்துவந்தனன். மணம்புரிந்து சிலமாதத்திற்கெல்லாம் திடீரென்று ஒன்றின் மேலொன்றாய் விபத்துக்கள் சம்பவிக்க, அவன் ஆஸ்திமுழுவதும் அழிந்து மிகவும் வறுமையுற்றான். கொஞ்சகாலம் இதை ஒருவரோடும் சொல்லாமல் வாடினவதனமும் உடைந்தநெஞ்சுமாய் உள்ளூர வருத்தப்பட்டு வந்தான். அவன் உயிரோ ஓயா வேதனையாயிருந்தது. அத்துக்கத்தை இன்னும் பொறுக்கமுடியாமற் செய்தது யாதெனில், தன் மனைவியிடத்து

அதைச் சொல்லத்துணிவு வராமையால் அவள் முன் நகைமுகம் காட்டி யிருக்கவேண்டி நேரிட்ட அவசியமேயாம். ஆனால் அவளோ, மிகவும் கூர்மைப்புத்தி யுள்ளவளாகையால் 'தன் கணவனுக்கு யாதோ துயரம் நேர்ந்திருக்கின்றது' என்றறிந்தாள். அவன் முகத்திலுண்டான வாட்டத்தையும் மனதிலுண்டான துக்கத்தையு மறிந்தாள். அவள் அசட்டுச்சிரிப்பினால் ஏமாந்துபோகக்கூடியவளன்று. அவள் தன்னால் இயன்றமட்டும் தன் உல்லாசத்தினாலும், இன்சொல்லாலும் ஹித வசனத்தாலும் தன்கணவனை உற்சாகப் படுத்தப் பார்த்தாள். ஆனால் அது அவன் துக்கத்தை அதிகப் படுத்தியதேயன்றி சாந்தப்படுத்தவில்லை. அப்பொழுதும் அவளிடத்து அவனுக்கு நேசம் அதிகரித்தது. அதிகரிக்கவும் அவளை சீக்கிரம் துர்ப்பாக்கியமுள்ளவளாக்குவோமே என்று எண்ணிஎண்ணி வாதனைப்பட்டான். இன்னும் சில க்ஷணம்தான்—அவள் இனியமுகத்தினின்றும் சிரிப்பு ஒழிந்து விடுமே!—அவள் குமுத வாயினின்றும் பாட்டு ஒழிந்துவிடுமே!—அவள் தாமரைக் கண்ணினின்றும் ஒளி நீங்கிவிடுமே!—உற்சாகமாய் உலாவும் அவளது உல்லாச மனம் இவ்வுலகத்துக் கவலைகளினாலும் தன் பத்தினாலும் மாறிவிடுமே!—என்று எண்ணி எண்ணி யேங்கினான்.

இப்படியிருக்க அவன் ஒருநாள் என்னிடத்துவந்து மிகுந்த துயரத்துடன் தன் நிலைமையைக் கூறினான். நான் முழுதும் கேட்ட பிறகு "உன் மனைவிக்கு இதெல்லாம் தெரியுமா" என்றேன். உடனே அவன் கண்ணும் கண்ணீருமாய் மிகுந்த துயரத்துடன் "உனக்கு என்னிடத்து இரக்கமிருப்பின் அவள் பெயரைச் சொல்லாதே. அவளை நினைக்கவே வெறி பிடித்தவனாகிறேன்" என்றான். "ஏனப்பா, அவளுக்கு எப்படியாவது தெரியத்தானே போகிறது! நீ அதிகநாள் ஒளிக்கமுடியாது. நீ சொன்னால் உண்டாகும் துயரத்தைவிட, மிக்கத்துயரம் விளைக்கத்தக்கதாகத் திடீரென்று அவளுக்கு வேறு எப்படியாவது தெரியும்படி யாயிருக்கும். நீ சொல்லிவிடில் நலம். ஏனெனில் நேசிப்பவர்கள் வாய்ச்சொல் மிகக் கடுமையான சமாசாரத்தையும் கடுமை நீக்கி மிருதுவாக்கும். நீ அவளிடத்துச் சொல்லாமையால் அவளாலுண்டாகும் ஆறுதலை நீக்கிக் கொள்ளுகிறாய்—இன்னும் இருவர்மனதை ஒருமைப்படுத்தும் பாசத்தையும் விநாசப்படுத்துகிறாய். அப்பாசமாவது ஒருவர்க்கொருவர் தட்டுத்தடையின்றி திறந்த மனத்துடன் அவரவர் எண்ணுவதையும் நினைப்பதையும் ஒருவர்க்கொருவர் சொல்லிக் கொள்ளுவதே. 'ஏதோ உன்மனதை அரித்துக் கொண்டிருக்கிறது' என்று அவள் சீக்கிரம் அறிவள். இருவர் நிஜமாக நேசித்தால் ஒருவர் வெளிப்பார்வைக்கு மிகவும் அமைதியாயிருப்பது போலிருந்து தன் மனதிலுள்ளதை ஒளித்தலை மற்றொருவர் சகியார்: அதுவும் துக்கத்தைச் சொல்லாமல் மறைத்தாலோ, தன்னை அலக்ஷியம் செய்து அவநம்பிக்கையுடன் நடத்தியதாக நினைக்க இடமுண்டாகும்."—என்றுவிவரமாய்ப் புத்திசொன்னேன்.

"அவள் வெகு ஆனந்தத்துடன் எண்ணியிருப்பதையும், நோக்கியிருப்பதையும் நாசப்படுத்துவேனே. 'அவள் கணவன் தாரித்திரியமடைந்தான்' என்றுசொல்லி அவள் மனதைத் தரையில் வீழ்த்தப் போகிறேனே! உங்க வாழ்வின் இன்பங்களையெல்லாம் அவள் இழக்கவேண்டுமே. நக்ஷத்திரகணத்து மத்தியில் பூர்ண சந்திரன்போல் விளங்கிக்கொண்டிருந்த அவள், வறுமைக்கு இலக்காகவேணுமே! அவள் அதை எப்படிப் பொறுப்பாள். அவள் செல்வத்தினாலேயே வளர்க்கப்பட்டாளே. எல்லாரும் அவளைத் தெய்வமாகக் கொண்டாடுகிறார்களே—இப்படியிருக்க, இவையெல்லாம் அவள் மனதைப் பிளக்குமே!—மனதைப்பிளக்குமே!"—என்று பாலாபித்தழுதான்.

'அவன் ஆறுத்துக்கம் அழுகையின் நீங்கும்' என்று எண்ணி அவன் போக்குக்கு விட்டுவிட்டேன். அவன் அழுகை ஓய்ந்து தலையைத் தொங்கவிட்டு மௌனமாயிருக்கையில் அவன் நிலைமையை அவன் மனைவிக்குக் கூறும்படி மெதுவாய் வற்புறுத்தினேன். அவன் விசனத்துடன் 'அகத்தியம் ஆகட்டும்' என்றான்

"நீ என்னமாய் அவளிடத்தினின்றும் மறைக்கமுடியும்? உன் நிலைமைக்குச்சரியாய் நீ குடித்தனம் செய்யும் விதத்தை மாற்றவேண்டாமா? மாற்ற அவளுக்குத் தெரியவேண்டியது அவசியமல்லவா!" என்று சொல்லவும், அவன் முகம் வாடியது. "நீ மனத்தொந்தரவு படாதே. நீ வெளி டம்பத்திலா உன் சுகானுபவமுழுவதையும் வைத்திருக்கிறாய்! நீ முன்னிருந்தபடி டம்பமாய் வசிக்காமற்போனாலும், அதற்காக உன்னைக் குறைவாய் எண்ணாத மிகவும் வேண்டிய சிநேகிதர்கள் சிலர் இருக்கிறார்கள். நிச்சயம் நீ உன் மனைவியுடன் சுகித்திருக்க அரண்மனை வேண்டுவதில்லையே". "ஒரு குடிசை போதும்!—நான் அவளுடன் அங்கேயும் சுகமாயிருப்பேன்! நான் அவளுடன் வறுமைக்கும் போவேன்!—மண்ணுக்கும் போவேன்! நான் எதுக்கும் அவளுடன்—அவளைபகவான் ரக்ஷிக்க! பகவான் ரக்ஷிக்க!"என மிகத்துயரத்துடன் விம்மிவிம்மி யழுது கூறினான்.

"நான் சொல்வதை நம்பு, நம்பு; நீ சொன்ன பிறகும் முன்னிருந்ததுபோல் தானிருப்பாள்; இன்னும் அதிகப் பிரியமாகக்கூட இருப்பாள். அவள் 'உன்னை, உனக்காகவே மணம் புரிந்தேன், செல்வத்திற்காக அன்று' என்று உனக்குத்தெரிவிக்க சமயம் வாய்த்ததே என்ற சந்தோஷத்தினால் கம்பீரமும் மேன்மையும் உற்றிருப்பாள். அவளிடத்து மறைந்திருக்கும் தீரத்தை உயர்த்தி உன்னிடத்துக் கூடின இரக்கத்தையும் உண்டுபண்ணும். ஒவ்வொரு பெண்ணினிடத்தும் ஒருவித தெய்வசக்தி உளது. அது ஆக்கம் வருநாளில் மறைந்து, துக்கம்வருநாளில் வெளியாகி மிகவும் பிரகாசிக்கும். தம் மனதுக்கு அருமையான பெண்சாதி இப்படிப்பட்டவளென்று அவளுடன் உலகத்திற் கடுந்துன்பங்களை அனுபவிக்கும் வரையில் ஒருவருக்குத் தெரிகிறதுமில்லை—வெளியாகிறதுமில்லை.—அவள் துக்கம்வரும் பொழுது தன் கணவனது குறைகளைத் தீர்த்து ஆறுதல்செய்யும் தேவதை போலிருக்கிறதும் தெரிகிறதில்லை."

நான் பேசினமாதிரியும் சொன்ன பேச்சும் அவன் மனதைக் கவர்ந்தது. கவர்ந்ததை அறிந்து "உன் துக்கத்தை அவளிடத்துப் போய் வெளியிட்டு ஆற்றிக்கொள்!" என்று மறுபடியும் தூண்டினேன்.

இம்மாதிரி நான் பேசியும் 'சொன்னால் என்னமாய் முடியுமோ' என்று கொஞ்சம் விசாரப்பட்டேன். இதுவரை இன்பத்திலேயே புரண்டாளே. அவள் மனோதைரியம் எப்படியிருக்குமோ. இருண்ட தாரித்திரிய வழி போகக் குழம்பி, அவ்வுல்லாச வழியை விட மாட்டேன் என்கிறாளோ! உயர்ந்த பதவியில் அழிவுநேரிட்டால் மற்றப் பதவிகளுக்கெல்லாம் இல்லாத துன்பங்களை உண்டுபண்ணி மனதை மிகப் புண்படுத்துகிறது.

ஆகையினால் மறுநாள் காலமே லெஸ்லியைக் கொஞ்சம் சந்தேகத்துடனே பார்த்தேன். அவன் அவளுக்கு எல்லாம் சொல்லிவிட்டதாகத் தெரிந்தது.

"அதை அவள் எப்படிப் பொறுத்தாள்?" என்றேன். "தேவதைபோல! அவளுக்கு ஒரு பாரம் நீங்கினாற்போலிருந்தது. பிறகு அவள் என்னைப்புல்லியணைத்து "உன்னைத் துன்பப்படுத்தியதெல்லாம் இதுதானா" என்று கேட்டாள். ஆனால் அவள் நிலைமையில் என்னமாறுதல் உண்டாகும் என்று அறியவில்லை. தாரித்திரியம் என்ற பெயர்தவிர அது இப்படிப்பட்டதென்று அறியாதவள். கணவனுடன் மனைவிகள் அனுபவித்ததாகக்கவிகள் வர்ணித்தெழு

திபிருக்கிற தாரித்திரியத்தைத்தவிர அவளுக்கு வேறுதெரியாது. அவள் துக்கப்படுவதாகத் தெரியவில்லை. அவள், வழக்கமாயனுபவித்த சௌக்கியங்களையும், சௌகரியங்களையும் இன்னும் குறைக்கவில்லை. சமுசாரதுக்கங்களையும் கவலைகளையும் உண்மையாக அனுபவிக்கும் பொழுதல்லவோ அவள் குணமெல்லாம் நிஜமாகவெளிப்படும்!" என்றான்.

"அவளுக்குச் சொல்லியாய்விட்டது. பின் உலகுக்கு எவ்வளவு சீக்கிரம்தெரிவிக்கிறாயோ அவ்வளவுக்கவ்வளவு நலம். முதலில் வெளியிடும்பொழுது மனதுக்கு மிகவும் துக்கமாகத்தானிருக்கும். ஆனால் அது ஒரே துன்பம். அதுவும் சீக்கிரம் நீங்கிவிடும். அப்படி வெளியிடாவிடில், எப்பொழுது வெளியாய் விடுமோ என்று நாள்முழுதும் மனத் துன்பத்தினால் வருத்தப்படுவாய். ஒருமனிதன் மனதைத் தொந்தரவுப்படுத்துவது தாரித்திரியமல்ல! வெளிக்கு டம்பமாயிருக்கும் பாசாங்கே!—செருக்குக்கும் தாரித்திரியத்துக்குமுள்ள விருத்தமே!—ஒழித்துவிடவேண்டிய வெளிடம்பத்தில் இன்னும் பிரியம்வைத்துக் கொண்டிருப்பதே! வெளிக்கு ஏழைபோலிருக்கத் துணி' துணிவாயாகில் வறுமையின் கடுங்கொடுக்கை அறுத்துவிடுகிறாய்!" நான் இப்படிச் சொல்ல லெஸ்லி சரியென்றான். அவனுக்கு வீண் செருக்குக் கிடையாது. அவன் மனைவியோ எப்பொழுது நம் புதுநிலைமைக்குத் தகுந்தபடி இருக்கப்போகிறோம் என்று ஆவலாயிருந்தாள்.

சிலநாட் கழிந்தபின் அவன் என்வீட்டுக்கு ஒருநாள் சாயங்காலம் வந்தான். அவன் தான் முன்னிருந்த மனையை விற்றுவிட்டு பட்டணத்துக்குக் கொஞ்சதூரத்தில் ஒரு கிராமத்தில் ஒரு சிறு குடிலிற்கு குடிப்போயிருப்பதாகச் சொன்னான்.

அவன் நாள்முழுதும் சாமான்களை வெளியே தூக்கி யனுப்புவதிலேயே முனைந்திருந்தான். அச்சிறுகுடிசைக்கு சில சாமான்கள் தான் வேண்டியிருந்தன. அவைகளும் வெகு சாதாரணமானவைகள். அவன் மனைவியின் வீணையைத்தவிர முன்வீட்டு நேர்த்தியான சாமான்களையெல்லாம் விற்றுவிட்டான். வீணையோ அவள் ஞாபகத்துடன் அதிகமாகச் சேர்ந்திருந்தது. அவர்கள் மணக்குமுன் நேசித்தகாலத்தைச் சேர்ந்ததாயிருந்தது. அவர்கள் ஒருவரையொருவர் நேசித்தகாலத்து அவ்வீணையின் சுரத்தோடிசைந்துபாடும் அவள் இனியகுரலைக் கேட்டுக்கொண்டிருந்ததும் காலந்தான் அவனுக்கு மிகவும் ஆனந்தமான காலமாயிருந்தது. ஆகையினால்தான் அதை விற்கவில்லை என்றான்.

நாள்முழுதும் வீட்டுச்சாமான்களை வரிசைப்படுத்தி நேரிலே மேற்பார்வைபார்த்துக்கொண்டிருக்கும் அவன் மனைவியிருந்த குடிசைக்கு இப்பொழுது போய்க்கொண்டிருந்தான். எனக்கு அவர்களிடத்து அக்கறை பிறந்தபடியாலும், அந்திப்பொழுது நன்றாயிருந்தபடியாலும், நானும் கூடச்சென்றேன். அவன் மிகவும் தளர்வுற்றிருந்தபடியால், என்னவோ யோசித்துக்கொண்டேவந்தான்.

"ஐயோ மேரி!" என்று துக்கத்துடன் பரிதபித்தான். "அவளுக்கென்ன? ஏதாவது நேர்ந்ததா!" என்றேன். "இந்நிலைமைக்கு வந்ததே போதாதா? இக்குடிசையில் மிகவும் இழிவான வேலைகள் செய்யவேண்டியதாயிருப்பது போதாதா?"

"இம்மாறுதல் அவளைமிகவும் வருத்தப்படுத்தியதோ"?

"வருத்தமா!—அவள் இனிமையும் நற்குணமும் ஒழிய வேறில்லை. அவள் முன்னி[illegible] அதிக உற்சாகமுடையவளாக இருக்[illegible]

அவள் என்னிடத்து முன்னிலும் அதிகப்பிரியமும், மேன்மையும், ஆதரவுமாயிருக்கிறாள்."

"மெச்சத்தக்கதே! நீ உன்னை ஏழையென்றாயே. நீ ஒருபொழுதும் இவ்வளவு செல்வவானாகவிருந்ததில்லை. அம்மாதினிடத்துள்ள அளவற்ற நற்குணக்குவியல் இதுவரை உனக்குத் தெரியவில்லை". என்றேன்.

"இப்பொழுது அக்குடிசையில் அவளை முதல் தடவை பார்ப்பது ஒழிந்தால் நான் அப்புறம் சௌக்கியமாயிருப்பேன். கஷ்டத்தை நேரிலனுபவிப்பது இன்றைக்குத்தான் முதல் நாள். அவளை இச்சிறு குடிசைக்கு இழுத்தாய்விட்டது. அவள் நாள்முழுதும் சாமான்களைச் சீர்திருத்துவதிலே முயன்றிருந்தாள். வீட்டுவேலையின் சிரமத்தை முதல் முதல் அனுபவிக்கிறாள். நேர்த்தியானவைகளும் சௌகிரியங்களுக்கு வேண்டியவைகளுமற்ற வீட்டை இதுதான் முதற்தடவை பார்க்கிறாள். இனி அனுபவிக்கப்போகிற வறுமையை யோசித்துயோசித்துவாடியிருக்கின்றனளோ!' என்று அச்சமுற்று ஏங்கிநடந்தான்.

'இவைகளெல்லாம் நிஜமாயிருக்கலாம்,' என்று எண்ணி வாய்மூடிப் பேசாமலிருந்தேன்.

பெரியவீதியினின்றும் பிரிந்து ஒப்புறவாயுள்ள ஒருநெருக்கமான சந்துக்குள் நுழையவும் அந்தக் குடிசையைப் பார்த்தோம். அது பார்வைக்குமிகவும் தாழ்மையாயிருந்தது. ஆனால் அது பார்வைக்கு மிகவும் மனோரம்மியமாயிருந்தது. இலைகள் நிறைந்த திராக்ஷக்கொடி ஒருமூலையில் படர்ந்திருந்தது. அழகாய்ச் சில மரக்கொம்புகள் அதன்மேல் வளைந்திருந்தன. வாசற்கதவுக்கருகேயும் முன்னிலையிலேயும் வெகு அழகாய் அநேகபூச்செடித்தொட்டிகள் வரிசையாய் வைக்கப்பட்டிருந்தன. நாங்கள் அதை அணுகவும் கீதசப்தம் காதில் விழுந்தது.—லெஸ்லி உடனே என் கையைப் பிடித்துக்கொண்டான். நாங்கள் கொஞ்சம் நின்றுகேட்டோம். தன்கணவன் மனதுக்குமிகவும் இசைந்த ஒருசிறுபாட்டை வெகுநேர்மையுடன் பாடிக்கொண்டிருந்தாள்.

லெஸ்லி கை நடுக்குற்றது. அக்கீதத்தை செவ்வையாய்க்கேட்க முன்சென்றான். செல்லவும் சப்தம் கேட்டது. உடனே மிகவுமழகிய ஒருமுகம் ஜன்னலில் தோன்றி மறைந்தது; உடனே ஒரு மிருதுவான காலடிசப்தம் கேட்டது. மேரி எங்களை எதிர்கொள்ள வெளியே வந்தாள். அவள் முழுவெள்ளை உடுப்புத் தரித்திருந்தாள். அவள் நேர்த்தியான கூந்தலில் புஷ்பம் சூட்டப்பட்டிருந்தது. அவள் முகத்திற் புதிதாய் ஒரு மலர்ச்சி உண்டாயிருந்தது. —சிரிப்பும் நிறைந்திருந்தது.— அவள் இதற்குமுன் அவ்வளவு அழகாய்த் தோன்றியதேயில்லை.

"என்பிரியமுள்ள ஜார்ஜே †உன்னைப்பார்க்க மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. நீ எப்பொழுது வரப்போகிறாயென்று சந்துவழியெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தேன். நான் உனக்காகக் கார்த்துக்கொண்டிருக்கிறேன். குடிசைக்குப் பின் ஒரு அழகிய மரத்தடியில் சாப்பாட்டுக்கு மேசைபோட்டு அதன்மேல் சாப்பாடு வைத்திருக்கிறேன். மிகவும் நேர்த்தியான 'ஸ்ட்ராபெரி'ப்பழங்கள் சேகரித்து வைத்திருக்கிறேன். உனக்கு அதில் மிகப் பிரியமல்லவா!—நேர்த்தியான பாலாடைவைத்திருக்கிறேன். இவ்விடத்தில் எல்லாம் நேர்த்தியாயும், நிசப்தமாயும் இருக்கின்றது. ஓ! நாம் மிகவும் சுகமாயிருக்கலாம்!" என்று அவன் கையைபிடித்துக்கொண்டு முகத்தைப்பார்த்து முகமலர்ச்சியுடன் கூறினாள்.

லெஸ்லியோ ஆனந்த பரவசமடைந்து அவளை இறுகப்புல்லி முத்தமேல் முத்தமிட்டான். அவனால் பேசமுடியவில்லை. கண்ணினின்றும் ஆனந்த நீர்ப்பெருக்கோடியது. பிறகு அவன் நல்லஸ்திதி அடைந்தபொழுது, இக்காலத்தில் தான் அனுபவித்த சுகத்திற்கு பின் எக்காலத்து சுகமும் ஈடாகாது என்று அடிக்கடி கூறுவதுண்டு.

† ஆங்கிலருள் ஸ்ரீபுமான்கள் ஒருவரையொருவர் பேர் சொல்லியழைப்பது அவர்கள் ஜாதிவழக்கம். புருஷன் பெண்சாதி ஒருவரையொருவர் பேர்சொல்லிக்கூப்பிடக் கூடாதென்கிற வழக்கம் அவர்களிடத்தில்லை. இங்கே புருஷன்பேர் ஜார்ஜ் லெஸ்லி, மனைவியின்பேர் மேரி லெஸ்லி.

EASY LESSONS IN ECONOMICS.
WHAT IS WEALTH?
செல்வ நூல் விளக்கம்.
செல்வமென்றால் என்ன?
அன்னவஸ்திராதிகள்.
THE NECESSARIES OF LIFE AND LUXURIES.

மானிடர்களனுபவிக்கும் சௌக்கியாதிகளுக்குக் காரணபூதங்களான பதார்த்தங்கள் பலவுள. உயர்ந்த அந்தஸ்தில் உள்ள ஒருவனுக்கு வேண்டியவைகள் பலவாயினும், ஒவ்வொரு ஜீவனும் உயிருடன்பிழைத்துவாழ முக்கியாபீஷ்டமான பொருள்கள் சிலவே. அவை அன்னவஸ்திராதிகள். இவைகள் கையேறினதின்பேரில்தான் மற்றைய அலங்காரார்த்தமானவிஷயங்கள் வேண்டியிருக்கின்றன. இப்படியே படிப்படியாக கீழில் உள்ள ஆசைகள் தீரத்தீர மேன்மேலான ஆசைகள் உதித்து அவ்வவ்வாசைகளைப் பூர்த்திசெய்ய பற்பல வியாபாரங்களில் மனிதன் உழைக்கவாரம்பிக்கிறான். ஆகையால் மனிதன் உழைப்பதற்கு ஆசையே காரணம். ஆகவே மனித வாழ்க்கையை ஆராய்ந்து நோக்குங்கால் நாம் அறிவதென்னவெனில், படிப்படியாகப் பல ஆசைகளும், அவ்வாசாபூர்த்தியின்பொருட்டு ஏற்படும பலமுயற்சிகளும், அம்முயற்சிகளால் பிரசவிக்கப்பட்ட காமங்களின்மீது துஷ்பூரமாகக் கிளம்பும் வேறு பல காமங்களும் மனிதஜன்மத்திற்கு சுபாவமாயுள்ளன என்பதுதான். இது தான் சாமானிய மனித தருமம். பலபெயர்கள் ஆசையை அடக்கிப் பேரின்பம்தேடி நடக்கிறார்கள். அவர்கள் நடவடிக்கைகளைப்பற்றிக் கொஞ்சமேனும் நாம் குறைத்துப்பேசுவதில்லை. சாமானிய மனிதன் நடத்தைதான் சரியென்று நாம் பூஷிக்கிறதும் இல்லை. உலகவியற்கையைப்பற்றிப் பேசுவது நமது எண்ணமே யொழிய இது நல்லது பொல்லாதென்கிற விஷயம் நமக்கு இப்போது பிரகிருதமல்ல. ஆகையால், பெரும்பான்மையாக ஜனசங்காதங்களைப்பற்றிப் பேசும்போது, சாமானிய மானிடத்தன்மையைத்தான் அங்கீகாரம் செய்துகொண்டு அதனால் உண்டாகும் பலாபலன்களைப்பற்றி விவரிக்கவேண்டியதேயொழிய மனிதர்கள் இப்படித்தான் நடக்கவேண்டியது என்று தருமசாஸ்திரம் விதிப்பது நமது காரியமல்ல.

மனிதர்களது இச்சாசக்தி.
"THE WILL-POWER."

இந்தலோகத்தில் பலவித சக்திகள் இருக்கின்றன. அவைகளால் நன்மையும் நேரிடும், தீமையும் நேரிடும். ஆனால் அவைகளைச்சரியான வழியில் உபயோகித்தால் தீமையை நீக்கி கூடுமானமட்டும் நன்மையை விளைக்கலாம். எப்படியெனில் ஏராளமாய் மழைபெய்து பெருகும் ஆற்றின்ஜலம், தோட்டம் துரவுகளை மூழ்கச் செய்து ஜனங்களுக்குப் பலவித இம்சைகளைச் செய்யத்தக்கதாயினும் அதை நேரானபடி ஏரி குளங்களில் தேக்கி சீரான கால்வாய் அணைக்கட்டு மூலமாய் உலகத்திற்கு நன்மையுண்டுபண்ணச்செய்யலாம். அப்படியே இயற்கையான சக்திகளில் ஒன்றாகும் மனிதர்களது இச்சாசக்தி. அதனை நேரில் உபயோகிப்பதால் பலவிதமான போக போக்கியங்கள் பெருகும். ஆதலால் அச்சக்தியின் சுபாவத்தை நாம் நன்றாக அறியவேண்டியது.

செல்வப்பொருள்கள்.
"ECONOMIC "WEALTH."

இப்போது, ஜனங்களுக்கு சந்தோஷபலிதமான எல்லாப்பொருள்களைப் பற்றியும் நாம் பேசுவதில்லை. தேகதாட்டியம், ஆரோக்கியம், மனதின்சாந்தி, சௌஜன்னியம் பந்துமித்திரர்களின் பிரேமை முதலிய பலபொருள்கள்

மனிதசந்தோஷத்தைக் கொடுக்க அத்தியாவசியமானவை. ஆனால் அவைகளைப்பற்றி இச்செல்வநூல் உரைப்பது ஒன்றுமில்லை. இந்த சாஸ்திரத்தின் விஷயம் யாதெனில், சந்தோஷபலிதமான பொருள்களில் எவைகளுக்குச் செல்வம் எனப் பெயர் வழங்கிவருகிறதோ அவைதான்.

அவற்றின் மூன்று இலக்ஷணங்கள்.
THREE CHARACTERESTICS OF "WEALTH."

இப்படிக்குச் சாஸ்திரவிஷயமான செல்வத்திற்கு முக்கியமான இலக்ஷணங்கள் மூன்றுள.

முதலாவது:— *கிரயவிக்கிரயாருகதை. இதனால் நாம் அறிவது என்னவெனில் எந்தப் பொருளுக்கு ஒருவர் கையினின்றும் மற்றவர் கைக்கு முழுதாயாவது, பாகம் செய்யப்பட்டாவது, சங்கிரமணம் செய்யச் சீலமுண்டோ அதற்குத்தான் செல்வமென்ற பெயர் கொடுக்கப்படும். இப்படி சங்கிரமிக்கச் செய்யப்படக்கூடாதவைகள் பலவுண்டு. அவைகள் செல்வமென்று அழைக்கப்படமாட்டா. ஒருவனுடைய சாமர்த்தியம், பலம் முதலியகுணங்கள் செல்வமாகமாட்டா. ஆனால அவைகளைக் கொஞ்சகாலம் பிறருக்காக உபயோகப்படுத்தலாம். அப்போது அவைகளின் உபயோகம் செல்வத்தின் முதல் இலக்ஷணத்தை உடையவை யாகலாம்.

இரண்டாவது:—†பாகுள்யராகித்தியம்? அல்லது ஏராளமாய்க் கிடைக்கமாட்டாமை. எந்த வஸ்து ஏராளமாய்க் கிடைக்கக்கூடுமோ அது எவ்வளவு உபயோகமுள்ளதாயினும் செல்வமாகாது. எப்படியெனில், நாம உட்கொள்ளும் காற்று நம் ஜீவனைத்தரிக்க முதல் கருவியாயிருக்கிறது; ஆயினும் அது ஏராளமாய்க் கிடைப்பதால் செல்வமல்ல. அப்படியே தான் ஜலத்தின் விஷயத்திலும். ஆனால் சிலகாலங்களில், சிலவிடங்களில் இவைகள் ஏராளமாய்க் கிட்டாமையால் இவைகளுக்கு விலையேற்படும். அப்போது இவைகள் செல்வம்தான்.

மூன்றாவது:—முக்கியமாய் பதார்த்தங்கள் உபயோகமுள்ளனவையாக விருத்தல்வேண்டும். உபயோகம் என்றால்மனிதனுக்கு துக்கத்தைப்போக்கி சுகத்தைக்கொடுத்து ஆசையைத்தீர்க்கும் குணம். இது இருந்தால்தான் ஒருபொருளுக்குச் செல்வம் எனப்பெயர் பிறக்கும். ஆகையால் இதே முதல் இலக்ஷணம். ஆனால் உபயோகம்மாத்திரம் போதாது. காற்றும், ஜலமும் எவ்வளவு உபயோகமுள்ளவையாயினும் ஏராளமாயிருத்தலால் வேண்டிய பொழுது எத்துணைவேண்டுமோ அத்துணை கிடைக்கும். ஆகையால் அவைகளைச் சேகரிக்கவும், காப்பாற்றவும் சாமானியமாக யாதொரு பிரயாசமும் வேண்டியதில்லை. ஆகவே அவைகளுக்கு விலை ஏற்படுகிறதில்லை. இப்போது நாம் மொத்தமாய் அறிவது என்னவெனில், எந்தெந்த பதார்த்தங்கள் மனிதனுக்கு துக்கத்தைப்போக்கி சுகத்தை உண்டுபண்ணுவதினால் உபயோகமாகிறதுடன், அவை ஏராளமாயிராமலிருத்தலினால், சேகரிக்கவும் காப்பாற்றவும் பலவிதமான பிரயாசம் வேண்டியிருந்து, பலபெயர் கைம்மாற்றுக்கிடமாகிச் சமானமான வேறு பதார்த்தங்களைச் சம்பாதிக்கக் கூடியவையோ அவைகளுக்குத்தான்செல்வம் என்று இச்சாஸ்திரத்தில் வழங்கும் பரிபாஷை. வா க (Walker) என்னும் செல்வநூலாளர் கூறியபடி, செல்வமென்பது 'குணி', விலையென்பது 'குணம்.' அவைகள் பரஸ்பரம் வேறுபட்டு நிற்கமாட்டாதவை. எப்படி பதார்த்தமும் அதன் குணமும் ஒருங்கக்கூடியவையோ அப்படியே தான் செல்வமும் விலையும்.

---

* The quality of being transferred.

† Limited Supply.

MUTUAL DEPENDENCIES OF MEN IN ORGANISED SOCIETIES.

ஜனசங்காதங்களது பரஸ்பர அபேக்ஷை.

"சமஷ்டிஜீவன்."

"SOCIAL BEING."

ஒரு நாட்டின்கண் வாழும் ஜனங்கள் பரஸ்பராபேக்ஷையுள்ளவர்களாக விருக்கிறார்கள். ஒவ்வொருவரும் மற்றவரின் சகாயத்தின் மீது சார்ந்தே ஜீவிக்கிறார்கள். சிறிது ஆலோசித்துப் பார்த்தால் நம்முடைய சுகதுக்கங்களுக்கு எவ்வளவு பிறர் காரணபூதர்களாகிறார்கள் என்று நன்குவிளங்கும். நாம் பிறர் உதவி கிஞ்சித்தேனும் இல்லாமலே ஜீவிப்போம் என்று சங்கல்பம் செய்துகொண்டு அதன்படி நடக்கமுயன்றால் மூன்றுநாள்கூடப் பிழைத்துக் கடைத்தேறமாட்டோம்.

"உதாரணம்."

"ILLUSTRATION."

நாம் உடுத்தும் துணியை எடுத்துக்கொள்வோம். அது நம்மானத்தைக் காக்கவும் குளிருக்குப் போர்க்கவும் உதவி, நம்மேல் உல்லாஸமாய்வந்து அமைவதற்குமுன் எவ்வளவு வேலைக்காரர்கள் கைப்பாட்டிற்கு இலக்காயிருக்கவேண்டும்.

"நாம் உடுத்தும்துணி."

"THE CLOTH WE WEAR."

முதல் முதல், காலாகாலத்தில் பருத்தி போட்ட குடியானவனை நாம் கணக்கில் சேர்க்கவேண்டியது. திருநெல்வேலி, பல்லாரி, கடப்பை, கோயமுத்தூர் முதலிய தேசத்தவரான கவுண்டனும், கவுடனும், வடுகனும் பாடுபட்டுப் பருத்திபோட்டுக் காவலிருந்து அது வெடிக்கும் தருவாயில் தனது குடும்பசகிதமாக சிறுமிகளும் கிழவிகளும் ஒருங்கக்கூடி அந்த வெடித்த பருத்திகளை யெடுக்கவேண்டும். பிறகு அச்சமயத்தில் இத்தேசத்திலும் மறுதேசங்களிலும் உள்ள யந்திரசாலைக்காரர்களுக்காக, அச்சாரம் கொடுத்துக் காத்திருக்கும சில்லறை வியாபாரிகள் சேர்ந்து வண்டிவண்டியாய் பட்டணங்களுக்குக் கொண்டுபோக, அங்கு ராட்டைகளில் அகப்பட்டு கொட்டை வேறு பஞ்சுவேறாகப் பிறிக்கப்பட்டு கட்டியான மூட்டை மூட்டைகளாகக் கட்டப்பட்டு வெவ்வேறு ஊர்களுக்கு அனுப்பப்படுகிறது.

பிறகு வேறு சிலயந்திரங்களிடம் அகப்பட்டு விதம் விதம் திடமுள்ள நூல்களாக ஆக்கப்பட்டு, மற்றும் சில இடங்களுக்குச் செல்கிறது. அங்கே அந்நூற்கட்டுகள் சாயம் போடப்பட்டு பலவிதத்துணிகளாக நெய்யப்படுகின்றன. இப்படி அந்தத்துணி ஆவதற்குள் எவ்வளவு வேலைப்பாடு படவேண்டியிருக்கிறது! எவ்வளவு கூலியாள், எத்தனை எஜமான்கள், எந்தெந்த வர்த்தகர் வேண்டியதோ அதைக் கணக்கிட்டு முடியாது.

"உழைப்பின் சமஷ்டி லக்ஷணம்."

"SOCIAL SERVICE"—A NECESSITY.

இப்படியேதான் நாம் உண்டு உடுத்து ஆண்டு அனுபவிக்கும் ஒவ்வொரு பதார்த்தமும நமக்கு உபயோகமாகுவதற்குள் வெகுவான ஜனங்கள் கையுதவி வேண்டுகின்றன. நாம் விளக்குப்பற்றவிடும் தீக்குச்சி பதினாயிரம மயில்களுக்கு அப்பால் உள்ள நார்வே என்னும் தேசத்திலிருந்து வருகிறது. ஆகவே நாம் எல்லோரும், (இந்நாட்டில்வாழும் ஜனங்கள்மாத்திரம் அல்ல, இவ்வுலகம் முழுதும் வாழும் ஜனங்கள் எல்லாரும்) பிறருடைய அபேக்ஷையில்லாமல் தம்மட்டில் தம்மையே சார்ந்தவராகவில்லை.

"ஒன்றே குலமும்"

"THE HUMAN FAMILY"

இப்பூமியில் வாழும் எல்லாரும், ஊகித்துப் பார்த்தால், ஒரு குடும்பஸ்தர் மாதிரி கலந்து சுகதுக்கங்களுக்கு பாத்தியப் பட்டிருக்கிறார்கள். ஒருமலையாவதற்கு எப்படி சிறுசிலாசகலங்கள இன்றியமையாதவையோ, எப்படி ஒருபிராணியாக, உடம்பின் உறுப்புகள் இன்றியமையாதவைகளோ, அப்படியே உலகத்தில் வாழும் ஒவ்வொருவனும், இராச்சியத்தின்தேகத்தைப் புஷ்டிகரிக்க ஏற்படுத்தப்

பட்ட ஒருபாகம் என்று நாம் கொள்ளவேண்டியது.

"அயோக்கிய : புருஷோநாஸ்தி."

"NO MAN USELESS AND NONE DISQUALIFIED"

இதற்கிணங்கவே சுக்கிராசாரியர் "அயோக்ய: புருஷோ நாஸ்தி" என்று யோக்யமில்லாத மனிதன் ஒருவனும் இல்லை என்ற அருத்தத்துடன் சொன்னார்.

"சமஷ்டி ஜீவனம் எப்படி நடக்கிறது."

"SOCIAL LIFE" MAINTAINED BY "SOCIAL SERVICE"

ஜனங்கள் செய்வதென்னவென்றால் அவரவர்கள் தங்கள் தங்கள் அத்தி, சக்தி, சமயம் இவைகளுக்குத் தக்கபடி என்னென்ன வேலை செய்யக்கூடுமோ அந்தந்த வேலைகள்செய்து, என்னென்ன பொருள்கள் ஜனங்களுக்குப் பிரயோசனமாகத்தக்க வைகளோ அவைகளை ஏராளமாகத் தங்களாலியன்ற மட்டும் உண்டாக்கி. தங்களுக்கு வேண்டியதுபோக மிகுதியை வியாபாரிகள் மூலமாகப் பிறருக்குச் சேர்ப்பிக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு மனிதனுக்கும் வேண்டிய பதார்த்தங்கள் வெவ்வேறு இடங்களில் உற்பத்தியாக்கப்பட்டு வெவ்வேறு கையேறி சமுத்திரம்பாயும் ஆறுகள்போல, பல இடங்களில் பாவி இவ்வுலகில் வாழும் பற்பல ஜனங்களின் சங்காதமாகிற மகாசமுத்திரத்தில் விழுந்து லயமடைகிறது ஒருநாள் உலகம் முழுதும் வேலை செய்யாவிடில் எப்படி உடனே சமஸ்தமானிட ஜீவமும் மடிந்து விடுமென்று எளிதில் விளங்கும். ஆகையால் நாமறியவேண்டியது என்னவெனில் உழைப்பு என்பதின்பேரில் தான் இந்த ஜகத்ஜீவனெல்லாம் சார்ந்திருக்கிறது. உழைப்பு இல்லாவிடில் பிழைப்பு இல்லை என்பது செல்வநூல் கற்பிக்கும் தத்துவங்களில் முதன்மையானது. ஆகவே எல்லாரும் உழைத்தே பிழைக்க வேண்டியது. எவன் உழைப்பில்லாமல் பிழைக்க வகைதேடுகிறானோ அவன் திருடனே யொழிய வேறில்லை. நாம் மற்ற ஜனங்களிடமிருந்து அவர் உழைப்பின் பலனை அடைகிறோம். நாமும் அவர்களுக்கு நம் உழைப்பின் பலனைக்கொடுக்கவே வேண்டும்.

[illegible]

TO LIVE IN TOUCH WITH THE LAND IS TO 'LABOUR' INDEED!

வேளாண்மையோ தாளாண்மையோ!

"உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு."—திருக்குறள்.

"உழுதுண்டு வாழ்வது" தானே வேளாண்மை எனப்படும். இந்த வேளாண்மைக்கு ஒப்பான வேறு தொழில் இல்லை. ஏனெனில் இத்தொழிலில் பழுதொன்றும் இல்லை. மற்றோர் வேலையில் பழுதுண்டு.

"உழுதுண்டு வாழ்வான்" பிரகிருதிவித்தையிற் சிறந்தவனாக இருப்பான். இல்லாவிடில் அவன் தொழில்நடத்த சாத்தியப்படாது. பிரகிருதி வித்தையிற் சிறந்தவன் தாய்மடியில் விளையாடும் பிள்ளைபோல் யாதொருகுறையுமின்றி வாழ்வான் என்பது அனுபவசித்தாந்தம். ஏனெனில், "தன்குலை தாங்காக் காம்பில்லை" யென்பதுபோல் பிரகிருதியினுண்மையுணர்ந்தவனுக்கு தரித்திரம் என்பது இல்லை. உலகமெல்லாம் அவன் வசமாயிருக்கும். இகத்திலுள்ள பாக்கியமெல்லாம் அவனுக்குண்டாவதோடு அவன் யோக்கியனாகவேயிருப்பானாதலால் பரத்திலுள்ள இன்பமும் அவனுக்குண்டு. எப்படியெனில் "பிரகிருதியினுண்மையில் பரமனைக்காணலாம்." பரமனைக்கண்டவனுக்கு இகபரசம்பத்துக்களெல்லாம் ஒருங்கேவந்தமையும். அன்றி வேளாண்மை முயற்சியின்றி நடவாது. எண்சாணுடம்புக்குச் சிரசே பிரதானம் என்பதுபோல, வேளாண்மைக்குத் தாளாண்மையே அத்தியந்தசாதகமும் சாதனமுமாகும். தாளாண்மை என்றால் என்னவரினும் ஏற்று ஈடு கொடுத்துச் சமாளிக்கும் சாமர்த்தியம். இதற்கே முயற்சி யென்றுபேர். இப்படிப்பட்ட "முயற்சி" தான் "திருவினை ஆக்கும்" என்றார் மேலோர். இங்கே யிவையெல்லாம் சொல்லவந்தது வேளாளரின் தாளாண்மையைப்பற்றி அத்தொழில் பழகுவார் ஒருவர் கிருஷிகன் பத்திரிகையில் எழுதியுள்ளதைப்பார்த்து அதுவிஷயம் எழுத்துப்பிழைமலிந்திருந்தாலும் சொற்பிழைகள் பலவிருந்தாலும் பொருட்சுவை குன்றாது படிக்கமிக ரஸிகமாயிருப்பதையெடுத்துக் காட்டவேண்டுமென்றே யன்றி வேறல்ல. இனி அவருடைய வியாசத்தைப் பிழைதிருத்திக் கீழே பிரசுரிப்போம்.

"ஒருவன் ஒரு காரியத்தில் முயற்சி செய்யும் காலத்து எவ்வித இடையூறினும் கைவிடாது செய்தலே முயற்சியாகும். முயற்சி அதாவது, தாளாண்மையாவது தடுக்கப்படாத ஆண்மையாகும். முயற்சி தன்னுலேயே கைகூடும். விதிப்படி நடக்குமென்றெண்ணி யாதொரு காரியத்திலும் முயற்சி செய்யாமலிருத்தலே வறுமையடைவதற்கு முக்கியகாரணம். "தெய்வத்தாலாகா தெனினும்முயற்சிதன்மெய்வருத்தக்கூலிதரும்." "முயற்சி திருவினையாக்கும், முயற்சின்மை இன்மை தவிர்த்துவிடும்." சாத்தியப்படாத பொருளை அடைய முயல்கின்றவன் மேன்மையுடையவனயினும் பெயர்களில் முந்தினவனுய்க்காணப்படுவான். யாதொருகாரியத்தினிடத்தும் சோம்பலின்றி தக்க முயற்சி செய்பவனை வறுமை நெருங்குதற்கு அஞ்சும். சோம்பலுக்கு இடந்தராது முயற்சி செய்ய வேண்டும். மேலான விரதங்களை இடையூறின்றி நடத்த முயல்கின்றவன் வயதில் சிறியவனுக இருக்கினும் தவசி எனப் பெயரெடுப்பான். பயிர் என்பது பயிர்ச்சி-முயற்சி எனவும் கொள்ளப்படும். ஆதலால் பயிர் செய்வதினுல் இயற்றப்படும் முயற்சியே செல்வப்பெருக்குக்கு ஆஸ்பதமாம். உழவு முதலியவைகளும் வருத்தமுற்று இட்ட பயிரின் பலனைக் கொடுக்கும் காலத்தில் சோம்பலால் நடத்த அறியாதவன் தரித்திரத்தை யடைவான். எல்லாக் காரியங்களுக்கும் அவைகளடையும் பயனுக்கும் தெய்வகாரணத்தைப் பார்க்கிலும் புருஷப்பிரயத்தனம் மேலானதாகும். எப்படியெனில் ஒற்றைத்தேருருளையால் ரதம் நடவாத தன்மைபோல் புருஷப்பிரயத்தனம் இல்லாமல் தெய்வசங்கல்பத்தினுல் ஒன்றும் முடியாது. தெய்வசங்கல்பம் தானே புருஷப்பிரயத்தனத்தைக் கூட்டுவிக்கும்.

"எள்ளும் அதற்குள் எண்ணெயும் கடவுளால் உண்டாக்கப்பட்டிருந்தாலும் புருஷப்பிரயத்தனமென்கிற முயற்சியில்லாமல் எண்ணெய் வெளிப்படுகிறதில்லை. ஆதலால் முயற்சியின்றி ஒன்றும் நிறைவேருது. அதில்லாமல் சோம்பலுற்றவன் பயன்படான். முயற்சி இல்லாவிடில் கல்வி இல்லை. கல்வி இல்லாவிடில் புத்தியுமில்லை. பராக்கிரமமுமில்லை. இவைகளில்லாவிடில் பொருளும் இல்லை, பெருமையுமில்லை. சில சமயம் பொருள் மாத்திரம் இருந்தால் முயற்சி இல்லாவிடில் யாதொன்றும் கைகூடாது. முயற்சியுள்ள புருஷ சிம்மத்தையே மகாலட்சுமி அடைகிறாள். தெய்வத்தால் பொருள்பெற வேண்டுமென்று சோம்பலுற்றிருப்பவன் அவிவேகியும் அறியாமையுமுள்ளவனவன். புருஷப்பிரயத்தனத்தோடுகூடியபுத்திமான் பலவற்றிலும் சென்றுழல்கின்ற மனதை விவேகத்தால் தடுத்து நிலைநிற்கச்செய்வதே மோக்ஷத்துக்கு முக்கிய காரணமான முயற்சியாம். ஒருவன் தன் கஷ்டத்தைப் பாராமல் பிரயோஜனத்தைக் கொடுக்கும் தொழில் இன்னதென்று அறிந்து அதனிடத்து முயற்சிசெய்து நடப்பானுகில் செல்வமும் பெருமையும் ஏன் உண்டாகாமற்போகும். உண்டாவது நிச்சயம். எதைக் குறித்தும் சோம்பலின்றி முயற்சி செய்யாமல் தரித்திரத்தால் வருந்துவோன் கல்வியில் சிறந்தவனுக இருந்தாலும் உலகத்தால் பழிக்கப்படுவான். இவ்வித உலகப் பழிப்புக்கு ஆளாவதைவிட இறந்தலே நன்று. அல்லது பிறருக்குபகாரம் செய்ய முன்வந்தவனுக்கும் முயற்சியினுல் மனம் சோராமலிருப்பவனுக்கும் பல நன்மையும் கைகூடும். முயற்சி இல்லாமல் பரோபகாரம் செய்யவேண்டுமென்கின்ற எண்ணத்தைமாத்திரம் கொண்டிருந்தால் அவ் வெண்ணம் முடிவுபெருது. "தாளாண்மை இல்லான் வேளாண்மை பேடிகைவாளாகக்கெடும்" என்று குறளாசிரியர் கூறியுள்ளார். எல்லா உயிரையும் வதைப்பதற்குக் காரணமாகிய கூர்மையுள்ள வாளாயுதம் பேடிகையில் விளங்கிக்கொண்டிருந்தால் அதினுல் யாதுபயன்? முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். முயற்சியில் பல இடையூறுகள் வந்த போதிலும் தங்களுடைய தொழிலிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பதோடு சிரமத்தை கவனியாது முயற்சிக்க வேண்டும்.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணுயி னர்."

என்று நூல்கள் கூறுகின்றன. இக்கால நாகரிகத்தைத் தழுவி பலர் புகழை விரும்பித் தத்தம் தொழிலையும் கைசோரவிடுகிறுர்கள்."

"NO GOOD WORK IS EVER LOST."
"MY BEST WISHES FOR THE SUCCESS OF YOUR PUBLICATION."
—SIR HAROLD STUART.

Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God that sublime belief that seeing evil I yet have faith.'

" Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—SPEAK THE TRUTH.

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."

அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE. "Approved"

பத்தாம். 24.] நளஸு புரட்டாசிமீ, 1916ஸு செப்டெம்பர்மீ [சஞ்சிகை 6.

MY BEST WISHES FOR THE SUCCESS OF YOUR PUBLICATION.

Greetings from Far and Near.

Sir P. S. Sivaswamy Aiyar, to whom a copy of the final proof of the "Memorandum on the Reform of Rural Education" was sent as to other Members of Council, Officers and publicists who are interested in Education, thus spoke at Trichinopoly in opening the Lalgudy Educational Exhibition on the 16th September, 1916.

The Importance of Elementary Education.

"Of all the problems which engage the attention of the people of this country, perhaps the most important are the problems of Education and Sanitation, but even the problems of Sanitation will largely resolve itself into a question of education and of the various problems to which the subject of education applies, the one which relates to the spread of Elementary Education yields to none in importance or magnitude or difficulty. Apart from the magnitude of the problem ....we have to remember that the whole fabric of education must necessarily rest upon a foundation of sound Elementary Education." That would indicate the

Need of an Efficient System of Elementary Education.

The Hon'ble Member in saddling the responsibility for dealing with the admittedly unsatisfactory state of things, spoke with that "want of reverence for the child" which is the besetting sin of an officialised system of education in every country. For he said in effect that the fault is in the

" Natural disposition of the child-mind."

" In the West a boy learns to use his eye. They possess the faculty of observation and learn to take pleasure in the study of Nature." " But in this country, on the other hand, boys use their eyes much more largely for poring over their books than for studying the book of Nature. The printed book means much more to the student than the unprinted and open book of Nature. I need not emphasise this point, for I am sure it is an obvious one and one which must be known to every one of you." That is quite true but what is unknown to us, *parents*, who have necessarily had to bring up our children and watch the working of the child-mind is, that this is "the natural disposition of the child-mind" in this country. It is certainly not the case judged by the many questions which a three-year-old child put to its father on the several statues which adorn the Mount Road while being taken there on its first drive in an open carriage. And we have the testimony of the Mother everywhere that *the natural disposition of the child is keenly observant, instinct with curiosity and eager to learn and assimilate.*

Result of an Officialised System of Education.

" There are hundreds among us, even among the most educated (*sic*) of our countrymen, who can engage in learned disputations, read excellent essays, but who if called upon to describe anything they have seen, will most probably fail miserably." That is the result of officialised education which encourages cram at the expense of *real education* which should concern itself, on the great authority of *Auvaiyar*, (reverenced throughout the Tamil land,) with organising and training the common sense naturally existent in the child-mind.

The Reform most urgently needed.

It therefore gives us very great pleasure to find ourselves at-one with the Hon'ble Member who is officially responsible for the education of children in rural areas which are now mainly and mostly with a few exceptions under the Local Boards and we heartily and sincerely embrace this opportunity of publicly soliciting his able co-operation in the most urgent reform that is needed in helping the poorly-paid teachers of Elementary Schools in discharging "the obvious duties" imposed upon them, which, to use his own words, is imperatively necessary if they are " to develop the powers of observation of the children committed to their care and teach them to use their eyes and their hands to study nature and to take a real pleasure in Nature-Study."

"The faculty of observation remains in most of us undeveloped. It is one of the obvious duties of the teachers in the Elementary Schools to develop the power of observation of their students, to teach them to use their eyes and their hands to study Nature and take a real pleasure in Nature-Study."

Reform of Rural Education.

That is exactly the goal we have placed before ourselves and we seek the aid and co-operation of all interested including Members of Council, and the departments working under them, as well as parents who can do much to preserve the natural intelligence, sincerity and hopefulness of the child-mind and prevent it being stunted by unnatural methods of education.

We seek from one and all their kindly help and co-operation thanking them all and the retiring Member of Council for sending us in parting his " best wishes for the success of your publication" which we value all the more because of the deep interest he took in educational problems, though not in charge of that portfolio.

[We give below the *Memorandum on the Reform of Rural Education* which will count as pp. 163 to 170 in the current volume.]

"No good work is ever lost."
—*Max-Muller*.

" *There is no darkness but Ignorance*"
—*Shakespeare*.

MEMORANDUM

ON THE REFORM OF RURAL EDUCATION.

BY C. V. SWAMINATHA AIYAR, K. S. S. A.

I

CONSTRUCTIVE PLAN : FIRST PRINCIPLES.

I am glad, that the subject of Rural Education is receiving the increased attention it so well deserves. The article in the *Indiaman* on the " Ideal of Rural Education " effectively exposes the defects of the present unsuitable and inefficient system of Rural Education in India. It says :—

" The ordinary result of existing primary courses is thus either negative or harmful ; † at present it is chiefly negative, but the harm done is increasing in volume; there is very little to show on the other side of the account; and we believe that on balance, India has so far got practically nothing in return for the enormous amount of money which has been spent on the maintenance of her village schools. This is where the concern of the public comes in: more and more of its money is being spent, and it has not merely the right, but the duty, to insist that the expenditure shall be devoted to securing the best interests of the nation which are bound up inextricably with the efficacy of the rural population."

I am glad to take this extract from the *Indiaman* and I quote it all the more readily, as it exactly conveys the verdict of those who are supposed to be in actual control of Primary education as Local-Board Presidents, or Educationists taking part in the control and organization of Rural Education. It is now more than a year since I put forth my plea for the reform of rural education and in a " letter to the Press and leading educationists " which I addressed in May last, I pointed out the example of the Danish Peasant Schools and emphasised the principle which must form the basis of all true and efficient eduation. "*The object of Education must be to awaken the spiritual life of pupils*" which can be done only by preserving and cultivating the purity and innocence of the child-mind. " *Balabudhi* is both sincere and hopeful " said Sir John Woodroffe in his remarkable address to the students at Calcutta and anything which adveresely affects the two inherent qualities of the child-mind is bound to end disastrously for the education of the child. *Sincerity* is the basic foundation of all search for true knowledge; and we may take it for certain that when this quality of the child-mind is lost, there can be no progress in the acquirement of true knowledge. It would be an eternal bungling from one error to another wherein teacher and taught are bound to share the fate of " the blind leaders of the blind." *Hopefulness* is the elixir of life which imparts buoyancy of spirit and sprightliness of disposition necessary for making successful mental efforts.

The great majority of people whether educated or uneducated have lost these two primary qualities of the child-mind by their worldly ambitions and disillusionments and are therefore unfit to enter into the spirit of the Child-Mind or *Balabudhi*.

Man is first and foremost " the Child of Nature." It is only when he has come by his inheritance as the " Child of Nature " that he is fit to ascend the Ladder of Life and become the " Child of Man." And it is " the son of Man " who in due course of Spiritual Evolution becomes the " son of God." Nature-study, Child-study and God-study are all so inter-related to one another that it is impossible to make a water-tight compartment of each of them. An appreciation of Nature is a direct channel to an understanding of God; and the child which is brought up without this appreciation of Nature is deprived of its birth-right as " the Child of Man." It is unnatural and against the ordained laws of progress which no human ingenuity can change.

" Education can fulfil its mission " only " when it views the human being in this three-fold relationship (as " the Child of Nature," " the Child of Man " and " the Child of God," and takes each into account. To bring about the unfolding of this three-fold nature must be the vital element in present day education; and it must begin at the very beginning with the child on the mother's knee, and proceed through the Kindergarten which may be compared to the child playing on the mother's lap, and then through the primary and secondary stages of school-education. The moral and spiritual interests of the child must be carefully preserved, pruned and cultivated and this aspect of it especially must be carefully emphasised and guarded in the elementary department of the school system which must strengthen the two natural qualities of the child-mind, *viz.*, Sincerity and Hopefulness. Well did His Imperial Majesty the King-Emperor give us the Message of Hope, the eternal spiritual message which is the natural inheritance of the child from its first parent, Nature. When we have preserved this and secured it safe from the temptations of after-life to barter its natural inheritance for a mess of

† [illegible] iners testify to " the poverty of ideas " which is so common a feature of school-education and the [illegible] the lack of reverence for the child " which " is all but universal in Education, with its codes and [illegible] from a Government Office, " cannot escape the 'seeing-eye' of the observant on-looker.

pottage, we have laid the foundations of true culture in the child-mind; for with sincerity and hopefulness undiminished but ever increasing, *faith* in its inherent capacity to create and master its own environments must follow as a matter of course with the progress of education, which is the unfolding of the three-fold relationship of the child as the inheritor of the gifts of Nature, of Humanity and of God.

I have now travelled 1250 miles by rail and cart since my last letter to the Press and leading educationists was addressed in May last, and have come into close touch with the representatives of rural education of all sorts and conditions. Whatever the differences of opinion amongst them as to the constructive side of it may be, there seems to be an unanimity of opinion among the thinking minds that the present system of education is unsatisfactory and useless, while the so-called "reforms" proposed by the "code-bound red-tape official" are characterised as "spurious." (*Compare* : Dr. Russel's verdict in the *Atlantic Monthly*)

II

Constructive Plan : Organization.

In the first part I dwelt on the fundamentals of rural education and laid emphasis on its First Principles. I said : "Education can fulfil its mission only when it views the human being in its three-fold relationship (as "the Child of Nature, the Child of Man and the Child of God") and takes each into account."

"To bring about the unfoldment of this three-fold nature must be the vital element in present-day education;" and it must begin at the very beginning in the Nursery (of home-life, of school-life, and of the larger world-life).

There is a Tamil proverb which says: "To bring up children properly and preserve the purity of home-life is even a greater feat than to rule kingdoms."

An English writer familiar with the ways of children in the West, says :—

"All sorts of puzzling questions greet Nursey, which shows that she ought to be more than a mere drudge to answer them.

"As a matter of fact little minds expand so fast, that command of a nursery requires high science and art to direct it while information is being gained, to say nothing of the knack and sympathy in imparting it that leads to quick and ready assimilation and proper use of knowledge offered. And if the fundamentals of the teacher's schooling are faulty it is not long before the little ones find it out."

It has been well said that "the way to heaven lies through hell." There can be no true appreciation of happiness without a knowledge and experience of misery. For happiness and misery are the obverse and reverse of life's experiences in this world of contraries. Contraries in their nature are not two different things, but the positive and negative aspects of one and the same thing. Good and bad are not two different things or even qualities. "That which exists is One" and the positive (affirmative) or negative attitude of mind towards it makes itself felt as good or bad in its effect on the mind.

Sincerity and hopefulness represent the positive attitude of mind which derives its nourishment by its leaning on things eternal in preference to things ephemeral.

Balabudhi or the Child-Mind has this wealth of possession for its inheritance as the Child of Nature. We must take care not to rob it of this wealth,—this natural endowment of the child-mind.

This is the *First Essential* to be cared for and preserved in a well-organized system of Primary Education under competent supervision and dealing with a receptive people. Without this there can be no "well-organized system of education" and any system that passes muster for it by the creation and manipulation of statistics to prove it, is bound to end in disastrous failure,—failure disastrous both to teacher and taught, the state and the citizen.

The *next essential thing* to strive for and secure for certain is "Definiteness of Purpose." The inter-relation between the goal and the aim must be preserved and the sense of proportion cultivated in the child-mind. Every step in education must be taken with a "definiteness of purpose" which must be clearly grasped and understood by the teacher and the taught. This "definiteness of purpese" must be the guiding principle of the activities of the

child-life;—for every aimless endeavour is a dissipation of energy which is sure to tell with mathematical effect on the future progress of the child-mind in dealing with the problems of Life. Now "Life is made up of problems." "What to do?" and "How to do?" are questions which confront every one born under the sun from the cradle to the grave. The child is never at a loss to know what to do. And it learns "How to do it" by its own observations. All that we have to do is to remember that we are under the constant and watchful observation of the child-mind and that we should do nothing which we would wish were undone. This is what in one word is called the child's environment. We should see that this environment is always good, that is to say, stimulating to action preserving and strengthening the positive or affirmative attitude of mind towards things the child has to do or deal with.

Organizers of Rural Education should remember that:—

(1) Introduction of a school or school-system in a rural area is nothing ; success in school-life is everything.

(2) Education leads to expansion of mind which builds up or brings out the personality of each child according to its own natural endowments and home-life as well as social environments.

(3) Every home should have a garden and serve as a nursery of school-life.

(4) The school-life with its larger gardens illustrating the development and growth not only of individual plants but also of the garden as a whole should serve as the nursery of the spirit of social-service and civic adjustment, thus laying the foundations of a well-ordered civic life in the child.

"The school-garden is an important factor in character-building. Habits of industry, patience and economy are developed. Its aim should be to introduce the pupil to nature in such a way that he may observe the simple processes and laws affecting natural phenomena; can understand and apply them to his own moral rule of life. It teaches self-exploration, self-discovery, self-support and self-restraint. Its final goal is that of all education—the making of a good citizen. The scholar must learn to apply the code of nature to his own moral code. Each single school-year has its own definite aim and all converge in the direction of the ultimate ideal."

(5) Teacher and taught should be made to realise the truth that "Achievement is the only patent of Nobility."

The manipulation of pupils by which "examination results" are shown or achieved ought to find no place or tolerance in a well-organised system of education. "The examinations will be our ruin" and that it has already proved ruinous to a great extent is acknowledged by all true thinkers. "Most of those who pass examinations are so exhausted that they are incapable of any initiative,* assume a negative attitude towards everything that concern them and worst of all, have a high opinion of their own capacities because they passed these examinations successfully." This is a product of education which can truly be classified as "Waste". And the utmost care should be taken to avoid such "waste products" of education as are now common.

(6) Every child should be made to realise that "Everything and every individual should be of some use." A progressive society can have no room for waste-products. Nature has a peculiar way of eliminating them when they have become too cumbersome.

(7) "The incapable are not only useless but cumbersome and liable to be eliminated by Nature's own process."

(8) The child must be made to think and act for itself ; for "Life is made up of problems."

(9) The whole child must be trained.

(10) The ideal home is the higest aim of each person. (A careful teacher can idealise home life in school work and suggest that by industry and right living, the better home may be within the reach of all. He must use the 'Laboratory of Nature' to practically impress this lesson in the child-mind. There is nothing like nature-study to begin with for the education of the child-mind. For it is attuned to nature, being "the Child of Nature"; and it can study nature as it is "the Child of Man." As "the Child of God" it is destined to rise above "the flesh" of Man and "the bonds" of Nature.

These ten points should be carefully borne in mind by all concerned in the organization of an efficient system of rural education for the masses.

* Compare the Hon'ble Mr. Cardew's evidence on the effect of Civil Service Examinations before the Public Services Commission.

The school system ought to be closely adapted for the needs of people and provide a well thought out plan of acadamic, industrial and physical training whereby the pupil learns how to make a living while receiving his common school education. The cultivation of the heart (emotions) and the brain (intellect) must be coordinated with the training of the hands and the eyes (senses). And there is nothing like nature-study to achieve this end. The school-garden is a necessary adjunct to every school and the following note taken from the Nature-Study Review will be found helpful to teachers and parents too.

" The life of the child begins in the home and his highest ideal is the home where he may rear the family which is to bear his name. Thus generation succeeds generation in this circuitous path" (paying their debt to *pitris* who are in charge of the uninterrupted continuation of the race, evolving and lifting up the racial consciousness to a higher and higher level in the excelsior path of human progress.)

" In this path of the child while his parents have been caring for it, his teachers have been assisting with his education, there is a natural inclination to be doing something for himself (the past development of the individual and the race asserting itself and impelling the child to move on and on, an impetus which must be carefully studied and guided in the right channel of progress).

" There comes a time in the life of every child, normal or abnormal, when he begins to think and act for himself, according to his physical condition and environment. It is when the boy or girl reaches this period of devolepment that the greatest tact and skill are required to aid him along the cleanest and best channels of thinking and doing for himself. This *self-reliance* is the pivot on which the life-work is likely to revolve. Its importance can never be over estimated. To develop the motor nerves as well as the sensory nerves, an equal opportunity for their development must be supplied. There is no better opportunity for this development than that of the school-garden which has been truly called the "Laboratory of Nature." In villages (in Southern India at least) there is always ready to hand a common garden in the Village-*Nandavanam* which is an invariable adjunct to every village as is the local temple.

III

CONSTRUCTIVE PLAN : MEANS AND METHOD.

" All authorities on 'the Country Life Problem' write in urging nature-study as one of the means whereby rural-mindedness may be fosterd". It is an axiomatic truth to say that "the nation lives in the cottage." The conditions of living are more healthy and vitalising in rural areas than in crowded cities. It is also a truism to say that "work chiefly in the open air, close to the soil (in touch with nature) and the association of men in small and not too homogeneous groups are the only conditions under which large numbers of human beings fit to possess and improve the earth can be bred and reared continuously over long periods of time." "From Log Cabin to White House" is a tale not only of individual merit and success but it is also the natural history of the progress of the human race. Life under rural conditions is undeniably more valuable to the individual as well as more hopeful to the race. Possessing as it does, all the elements that give interest and develop personality, it is certainly worth while preserving and cultivating the rural life of the nation, and thus prevent the inherent vitality of the race from degeneration and decay.

" The atmosphere of depression, of spiritual and mental squalour, that broods so thickly over (conditions of life in the city where) men and women no longer know blue skies, green grass and the grace of God, is in itself enough to condemn" the migration of rural population into crowded cities which is observable everywhere. The formative years of childhood and adolescence must be spent in intimate touch with nature. Such intimacy breeds the type of character that produces the heroes and heroines of every-day-life who suddenly emerge into public life in times of stress and strain which crises in national life produce. "Both in national life and in individual, fine character is the gift of the limitless ocean, the rugged mountain, the mighty river, the quiet valley with the cloud-flecked blue brooding over all."

Not only is it true that fine character is the gift of Nature but even more so is it to say that familiarity with nature is essential to its expression in literature and art, to its permanent embodiment as a force for rigteousness. † As the official organ of the American Nature

† A Swiss lady informs us: 'This was also the opinion of some of the Swiss reformers of prisons, foremost of whom is Mr. Kellerhals, the most capable and devoted Director of the Penitentiary Sanatorium of Witzwill, Ct. Berne, who in 1904 wrote that agriculture was the best means of reforming the prisoners, " for the contact with earth will exercise its moralising influence...... Contact with nature produces its benefactory influence, as to the giant of the Greek legend, so still to-day the earth gives new forces to the one who touches it".'

Study Society puts it : " How much of language depends on the multitudinous sensory impressions of nature for its significance. The stately poetry of Hebrew is full of sensory imagery. Shakespeare is saturated with it. Hardly a chapter of your favourite masterpiece of fiction or an essay that is classic but would be a jumble of meaningless hieroglyphics without a stock of sensory images to suggest and elucidate their meaning,—images gathered in large measure out-of-doors. Childhood must have a wealth of experience in the open to read intelligently unless it be doomed to the market reports and the humdrum happenings the daily paper reports. It must know nature to enjoy art."

I have said enough to convince even the most sceptical reader of the necessity of re-forming, that is to say, reconstructing rural education in a manner essential for the formation of character. And the means to be employed lie ready to hand only waiting the magic touch of hands that know how to utilise them to advantage. " Familiarity with nature " is the means to be employed and the method of teaching should and would naturally become adapted to bring the child into close and intimate touch with Nature so that the touches of Nature may leave their impressions in the child-mind in the form of sensory images that would serve it in good stead under all circumstances from the cradle to the grave.

" Those sensory images are essential to the imagination, that delight of childhood, the distinctive resource of creative minds. They furnish the rough materials which under the touch of genius are transmuted by dissociation and reconstruction into the masterpieces of art and literature and which in the experience of mediocrity are the essential elements in appreciation and intellectual pleasure."

These thoughts which are clothed in language meet to appeal to minds that are habitually accustomed to think in English, are merely reproductions in a more methodical form of an " impromptu talk with Elementary grade teachers " delivered in the form of an address at one of their crowded meetings held in a mofussil centre in the course of my recent rambles through the country.

It now remains for me to offer a few remarks on the Organisation of Nature-Study before I send out this plea for the Reform of Rural Education on its errand;—touching the hearts of those in power or position to help, and stimulating the thoughts of those who are in a position to work. For we want both workers and helpers to carry out this much needed reform which may appear gigantic at first sight, but which, in course of time, is sure to yield to the sustained efforts of High Character, Noble Aim and Sincere heartfelt Co-operation.

To begin with, I wish to quote the fertile thought of Dr. L. H. Bailey, President of the American Nature-Study Society, who stated in effect,—that "when the teacher is thinking more of his subject he is probably teaching formal science,—when he is thinking more of the child he may be teaching nature-study."

The teacher should not confound " *information* about natural objects with *heuristic* nature-study."

In genuine nature-study, " the pupil is the investigator; he is doing to find out or enjoy. In discovering his environment he is accomplishing a greater theory—namely, discovering himself. His powers and his interests are revealed to himself as well as to his teacher and it is through these powers and interests that the teacher should view the environment in order to select the most advantageous educational experience for the pupil."

A printed course of study may help teachers in making a selection. But it must be borne in mind that "a programme of topics in a knowledge subject—arithmetic for example—may very well be rigidly *prescriptive*—but in nature it should never be other than *suggestive*. This difference ought to be made explicit in the directions accompanying any course of nature-study."

In choosing a subject for nature-study, the natural response of the child is the test of fitness of a study. But it should not be forgotten even for a moment that the fitness is an outcome of the method of treatment even more than of the matter appropriate to the topic. It ought to be carefully borne in mind that children's interest and teacher's method are the factors of distinguishing importance in nature-study teaching.

In Nature-Study where the choice of material must be conditioned upon the environment and experience of the learner, and the efficacy of its use upon the methods employed by the teacher, it is impossible to devise a graded course of study like one in arithmetic or history,

suited to the schools of a whole state. In this connection it would be well to bear in mind the following illustrative remark of an expert in the organization of Nature-Study. He says :—

"The relations of fractional quantities have always been, will always be considered less elementary than the corresponding relations of integral quantities ; but for the purpose of nature-study it cannot be said that the study of a geranium is simpler or more difficult than the study of the moon or that either is suited to the second grade and the other to the fourth."

The organisation of Nature-Study is not so easy as the time-honoured subjects of public school curriculum seem to be, for teaching purposes. Knowledge-subjects like history and arithmetic, for example, are capable of being organised along lines of chronological or logical sequence, without regard either to the circumstances of the learner, or the methods of the teacher. But in Nature-Study, the choice of materials and the efficacy of its use are conditioned by the enviromment and experience of the learner on the one hand and the methods of the teacher on the other and for this reason it is impossible to devise a graded course of study as in the other case. But how to judge and estimate the work of the teacher one may ask. My reply is the same as that of the expert in the organization of nature-study whose words I have so freely quoted.

"To judge a nature-study teacher I should not ask him what topics he had taken and what ones as printed in a course of study he had omitted. I should prefer to see him at work with his class. Could he then say, 'I employ a half-hour daily with these children in work of this quality' I should know better the satisfactoriness of his nature teaching than by the application of any other test I know of."

Increase of knowledge and development of mental power may closely interrelate but the expert student of education easily distinguishes them. It is not so easy to hoodwink "the expert student of education" as one may think it possible from what is actually taking place in the cramming world. In this connection it may be pertinent to tell a tale of Nemesis overtaking a teacher whose method of teaching was not of the right sort.

A model school organizer wished to show the results of his method to the Head of his Department whom he invited to preside at the prize distribution of one of the schools in the primary grade. The students were drilled to play their parts in the programme which included among other things the staging of a nature-study subject.—[Two rustic boys were caught in the wood and were overtaken by a Bear. One of them fled and took refuge on the top of a tree which he was able to climb up. The younger unable to follow him, lay down on the ground as one dead, holding his breath while Bruin was scenting and turning him over.]—The boy who played the Bear was so well dressed for his part that he took the house by storm which readily gave him an encore The Chief who presided said: "Let the Bear appear again!" The boy came on the stage again and played his part as Bear but unable to contain himself clean forgot his part and played the audience out clapping his hands at his own performance before the Bear has left the stage, spoiling the whole effect of his first appearance and betraying the lack of method which his training for the occasion by cram involved. Thus did Nemesis unexpectedly overtake the teacher who has employed faulty methods of nature-study.

Let me draw the attention of the intelligent and discriminative reader to what a conscientious teacher well up in nature teaching could achieve by making proper use of the opportunities afforded him or her. Child-study is as essential as nature-study for a successful teacher. Such a teacher "while working with her pupils in the out-door sunshine, will gain a closer confidence of her pupils. Lessons of faith and perseverance are developed as the seeds are planted and their growth studied; guidance to avoid evil thoughts and habits as the gardens are cleared of weeds. Ambitions for future usefulness are unfolded to the teacher and an opportunity for advice as to the choice of the life-work of each child." This is not all. Further more: 'Life and its relations to other studies may be explained. The questions in the child's mind as to the origin of life may be satisfied by a conscientious teacher who carefully explains the plant, its growth, blossom and fruit. This can be simply done while bringing children close to nature."

LALITALAYA, MYLAPORE,
Madras, 31*st* *July* 1916.

C. V. SWAMINATHAIYAR.

'DISCOVERY' NOTES FOR NATURE-STUDENTS AND PRIMARY TEACHERS.*

"In Education, the lack of reverance † for the child is all but universal."—Avoid falling into it.

EYES AND NO EYES.

EXAMPLE:— "Two men stood looking through the bars,
One saw the mud, the other saw the stars."—*Tennyson.*

QUERIES AND ANSWERS.

(1) "Do you wish education to cultivate supreme regard for truth? Then let it include the Study of Nature, for in dealings with her every false coin is inexorably nailed to the counter."

(2) "Do you wish to create a sense of moral responsibility ? Then learn from Nature that every act has a consequence, and every sin a penalty."

(3) "Is a habit of mind required which will not be deceived by the noisy huckster of sensational statements? Then give attention to training in scientific method, by which a critical faculty is developed that enables fact to be distinguished from fable and is cautious in arriving at conclusions."

(4) "Do you believe in the dignity of work and the duty of self-sacrifice ? Then turn to science, which demands devoted labour for the benefit of others."

(5) "Are satisfaction with the superficial, and a desire for continuous excitement to be the characterestics of the new generation ? If not, see that interest is aroused in the nobler views of life opened by scientific knowledge."

COMMON ATTRIBUTES.

"Regard for veracity, patience, logical thought, responsibility, discipline and original work are all taught by the study of science ; and these attributes are as desirable in every one of us as in the investigator whose life is an exemplar of them."

THE FACE AND THE VOICE OF NATURE.

"Beauty is truth, truth beauty ; that is all
Ye know on earth, and all ye need to know."—*Keats.*

"All science has one aim, namely, to find a theory of Nature."—*Emerson.*

"Nature alone is always true to herself ; she alone through the ages never lies, never changes, never hesitates, ever presses onwards."

"There are *three voices* of Nature. She joins hands with us and says : *Struggle Endeavour.* She comes close to us, we can hear her heart beating, ([illegible]), she says : *Wonder, Enjoy, Revere.* She whispers secrets to us, we cannot always catch her words, she says : *Search, Inquire.* These, then, are the three Voices of Nature, appealing to Hand, Heart and Head, the *Trinity of our Being.*"

AN EVERY-DAY HYMN FOR EVERY-BODY.

"Grant that with zeal and skill this day I do,
What me to do behoves, what thou commands't me to ;
Grant that I do it sharp at moment fit,
And, when I do it, grant me good success in it."
—*The Battle Hymn* to sing for those who enter the Battle of Life.

* By Professor R. A. Gregory. † "Reverence requires imagination and vital warmth ; it requires most imagination in respect of those who have least actual achievement or power."—*Dr. B. Russel.*

'GLIMPSES' AND 'GLEANINGS' FOR NATURE—STUDENTS AND TEACHERS.

"The Gospel of Work is the Gospel of Science. Science is trained and organised common sense"—Huxley.

"CULTIVATE APPRECIATION FOR BEAUTY, THE INSTINCT FOR TRUTH AND THE CREATIVE POWER, AND ALL THE REST SHALL BE GIVEN UNTO YOU."

"Truth, Beauty, Learning Observation, Reason, Expression, Production, are powers which all of us possess in varying degrees; and the greatest of the seven is Production, whether it be applied to literature, art, or science."

"The future of our civilisation depends upon the widening spread and deepening hold of of the scientific habit of mind."—*Dewey.*

"I do not know anything, except it be humility, so valuable in education as accuracy. Direct lies told to the world are as dust in the balance when weighed against the falsehoods of inaccuracy; and accuracy can be taught."—*Sir Arthur Helps.*

"*Scientific thought* does not mean thought about scientific subjects with long names. There are no scientific subjects. The subject of science is the human universe: that is to say, everything that is, or has been, or may be related to man—*Clifford.*

"All men who have been drilled in the ways of common sense should possess the characteristics of a fruitful scientific mind."—*Huxley.*

"The seeker after truth must himself be truthful, truthful with the truthfulness of Nature." It is far more imperious, far more exacting than that which man sometimes calls truthfulness. Nature never is content with "the nearly" and "the almost" which satisfy unscientific minds. . . He must be alert of mind. Nature is ever making signs to us, she is ever whispering to us the beginnings of her secrets; the scientific man must be ever on the watch, ready at once to lay hold of Nature's hint, however small, to listen to her whisper however low. And for this he must have above all the moral quality of courage—of steadfast endurance.

"Natural science is a subject which a man cannot learn by paying for teachers. He must teach it himself, by patient observation, by patient common sense. And if the poor man is not the richman's equal in those qualities, it must be his own fault, not his purse's."

"Love of truth creates the habit of accuracy and exactness in matters of fact which characterises a scientific mind."

"Scientific truth † is objective not subjective; it must be open to all eyes and not a vision limited to the consciousness of one mind."

"All labour that demands *exactness, honest thought,* and *steady application* is worth doing and all these things are required of a worker for science." "The work of a scientific mind *is sacred.*"

"Devotion to science is a tacit worship—a tacit recognition of worth in the things studied; and by implication in their cause. It is not a mere lip-homage, but a homage expressed in actions—not a mere professed respect, but a respect proved by the sacrifice of time, thought, and labour."-*Herbert Spencer.*

"'The Study of Nature is an intercourse with the highest mind. You should never trifle with Nature. At the lowest her works are the works of the highest powers, the highest something in whatever way we look at it."

"I wish to be a good son, a good citizen, and the first nuturalist of my time."—*Louis Agassiz (born in a village in Switzerland) to his father.*

"My strength is as the strength of ten,
Because my heart is pure"—*Tennyson.*

† "Absolute Truth will come by introspection rather than by studies of material conditions and things" but objective Nature-Study is essential for unerring introspective vision.

Thompson & Co., Printers, Madras

"No good work is ever lost." "My best wishes for the success of your publication"—*Sir Harold Stuart, K. C. V. O.*

புஸ்தகம்-24.] [சஞ்சிகை-6.

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

ஆவணி
புரட்டாசி

விவேக சிந்தாமணி

Sept.-Oct. 1916.

ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றோ ரெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னோ சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

"NO GOOD WORK IS EVER LOST."
"MY BEST WISHES FOR THE SUCCESS OF YOUR PUBLICATION."

ON THE IMPORTANCE OF NATURE-STUDY.

பிரகிருதி வித்யா சிக்ஷையின் முக்கியம்.

"Natural science is a subject which a man cannot learn by paying for teachers. He must teach it himself, by patient observation, by patient common sense. And if the poor man is not the rich man's equal in those qualities, it must be his own fault, not his purse's"
—Extract from *Helps and Hints* appended to "Memorandum on the Reform of Rural Education" by C. V. Swaminatha Aiyar, K. S. S. A.

இங்கே பிரகிருதி வித்யா சிக்ஷையின் முக்கியத்தைப்பற்றி யெடுத்துக் கூறுமுன் அதற்கு முன்னுரையாகச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறோம். "போரடிக்கிற மாட்டின் வாயைக் கட்டலாமா?" என்பது முதுமொழி. வியவசாயிகள் யாரும் இந்தப் பாபம் செய்யார்கள். அப்படியே அம் முதுமொழியிலுள்ள தத்துவத்தை யெடுத்தாளுவோமானால், "அங்காடிக்கூடையை அதிர விலைபிடக்கூடாது", "வேலைக்காரன் கூலியைப்பிடித்து வாயில் போட்டுக் கொள்ளக்கூடாது" என்கிற இம் மாதிரியான வெகுஜன வசனங்கள் ஞாபகத்திற்கு வரும். சாமான்ய ஜனங்களுக்குள் வழங்கும் இந்த தர்மமே அசாமான்யமான வித்வத் ஜனங்களுக்குள்ளும், ஆத்ம. வித்யார்த்திகளுக்கும் பொருந்தும். வக்கீல், வைத்தியர், இஞ்சினியர்போன்ற வித்வத் சாமர்த்தியம் பொருந்தியிருக்கவேண்டிய தொழிலாளர்கள் சாதாரணமாக தங்கள் தொழிலுக்குத் தக்க வேதனம் கிடைக்கும் வழியைத் தாமே பார்த்துக்கொள்வார்கள். அவர்களுக்கு அனுகூலமாக வித்வத்சபைகள் சட்டசபைகள் நியாய சபைகளின் ஒழுங்குகளும் விதிகளும் சட்டங்களும்கூட ஏற்பட்டிருக்கக் காணலாம். ஆனால் ஏழை ஜனங்களுக்கு தர்மக்கூலி கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது வாஸ்தவம். ஏனென்றால் அவர்கள் அறியாத்தன்மையால்தங்கள் உழைப்பின் மதிப்பை உயர்த்திக்கொள்ளும் வகையறியாதிருக்கிறார்கள். உழைப்பாளி உளமறிந்து உழைத்தால்தான் உழைப்பு சிறக்கும். அதாவது மதிக்கத்தக்க பலனைத்தரும். உளமறிந்துழைக்க நுட்பபுத்தி வேண்டும். நுட்ப புத்தியோ சிக்ஷை தீக்ஷைகளினால் சித்திக்கத்தக்கதாயிருக்கிறது.

MEANS AND METHODS OF NATURE-STUDY.

சாதன—சாதகங்கள்.

சாதனம்:—சிக்ஷை தீக்ஷைகளுக்கு இன்றியமையாத சாதனங்கள் இரண்டுள. ஒன்று, பொறுமையோடுகூடிய தரிசனசக்தி (Patient Observation); மற்றொன்று, பொறுப்பு நிறைந்த சாமானியபுத்தி (Patient Common Sense).

இவ்விரண்டும் பணத்தினால் சித்திக்கத் தக்கவையல்ல. இவ்விரு குணங்களும் எவ்வளவு ஏழைமைப்பட்டவனானாலும் மஹா பணக்காரனுக்குச் சமமாகவோ இன்னும் உயர்வாகவோ பொருந்தப் பெற்றிருக்கலாம்;— அப்படி யிருக்க வேண்டியது அவசியம். அந்தமாதிரி யில்லாவிட்டால் அது அவனுடைய சொந்தக் குற்றமேயன்றி அவனது பணமில்லாமையின் குற்றமல்ல. இதை யாவரும் நன்றாகச் சிந்தித்து மனதில் வைக்கவேண்டும். இது எல்லாரும் கவனிக்கவேண்டிய முதல் அம்சம்.

AIDS TO NATURE-STUDY:

சாதக-சாத்தியங்கள்.

இரண்டாவது அம்சம் என்னவென்றால் "சாஸ்திரஜ்ஞானம்," "சிரத்தை" யென்று சொல்லப்பட்ட இரண்டு அந்தர்-லக்ஷணங்கள் அமைந்திருக்கவேண்டியது. இவ்விரண்டும் மனதின் சிக்ஷை தீக்ஷைகளினால் சித்திப்பனவாகையால் சாதகமும் சாத்தியமுமாக விளங்குவனவாகும்.

THE SCIENTIFIC MIND: ("ORGANISED AND TRAINED COMMON SENSE.")

சாஸ்திரஜ்ஞானம்.

இவற்றில் "சாஸ்திரஜ்ஞானம்" என்றால் என்ன? சாஸ்திரங்களை நெட்டுருப்போட்டுத் தலைகீழாக ஒப்பிக்கக் கற்றிருந்தால்மட்டும் அது சாஸ்திரஜ்ஞானமாகாது. ஆனால் சாஸ்திரஜ்ஞானமென்பது சாஸ்திர-சிந்தனையினால் அதாவது சிரவண மனனங்களோடுகூடிய சாஸ்திரப்படிப்பினால் சித்திக்கத் தக்கதாயிருக்கிறது. "சாஸ்திர-சிந்தனை" யென்றால் "டுக்ருங்கரணே" யென்று நெட்டுருப்போட்டவன் கதையாக சூத்திரங்களை நெட்டுருப் போடுவதாகாது. சாஸ்திரங்களில் கூறப்படும் விஷயங்களின் உண்மைகளை குருமுகமாகக் கேட்டு ஐயந்திரிபற அதை மனதில் வாங்கிக்கொண்டு பிறகு கேட்டவைகளை மனதினுட்டானே சிந்தித்து மனதானது குவிந்துவிரிந்து அந்த உண்மைகள் மயமாக மாறத்தக்கதாக சிந்திப்பதுதானே "சிரவண மனனம்" என்று சொல்லப்படும். மனனத்தின் (சிந்தனையின்) முதிர்ச்சி நிதித்தியாஸனம் (அதாவது Assimilation).

"THE SUBJECT OF SCIENCE."

"சாஸ்திர விஷயங்கள்."

சாஸ்திர விஷயங்கள்—என்றால் சாஸ்திர புஸ்தகங்களில் விவரிக்கப்பட்ட விஷயங்கள் என்று அர்த்தமல்ல. "சாஸ்திர விஷயங்கள்" என்னும் பேரே அசம்பாவிதம். ஏனென்றால் ஜடஜீவப்பிரபஞ்சம் எல்லாம் த்ரிகால லக்ஷணங்கட்குட்பட்டமட்டில் சாஸ்திர இலக்ஷணங்களுக்குட்பட்டவைகளே. "இலக்ஷியம் கண்டதற்கு இலக்ஷணம் இயம்புவர் புலவரோர் என்மர்" என்றிருக்கிறதல்லவோ.

இலக்ஷியம் தரிசன மாத்திரமானது. இலக்ஷணம் "கண்டதைக் கண்டபடி யுரைத்தல்" என்னும் வித்வத் சாமர்த்தியத்தைப் பொறுத்தது. முதலாவது மனதை விகற்பம் நீக்கி (நிர்விகற்பமான நிலையில்) இலக்ஷியத்திற்சேர்க்க அதன் ஏகாக்கிர சக்தியினால் 'கண்கூடாக' காணத்தக்கது. (இங்கே 'கண்' என்றது மனக்கண்.) அப்படி பார்த்தறிந்த தொன்மை ஞாபகப் படுத்திக்கொண்டு மேன்மேலும் அதை ஆராய்ந்து "இது இதுவாய் இப்படியிருக்கிறது" என்று குணங்குறியறிந்து கூறுவது இரண்டாவதான வித்வத் சாமர்த்தியத்தைப் பொறுத்ததாயிருக்கிறது. இப்படி உள்ளதை உள்ளபடி கண்டு கிரகிப்பதும், கண்டதைக் கண்டபடி "இது இப்படியிருக்கிறது" என்று இலக்கணங் கூறி வாக்சாதுர்யத்தால் அதை விளக்குவதும். ஆகிய இரண்டுமே சாஸ்திரத்துக்கு விஷயமானவை. இந்த இரண்டில் இப்பிரபஞ்சமெல்லாம் அடங்கும்.

"கண்டேன், கண்டதைக் கண்டபடி
யானுரைத்தேன்"

என்பதுதானே "சாஸ்திர விஷயம்" என்று சொல்லும் வார்த்தைக் கிலக்காயிருக்கிறது.

இந்த மனோ சக்தி தானே "சாஸ்திரீய பாவம்" என்கிற (Scientific habit of mind) மனோ பாவ சித்தியைத் தரும். இந்த சித்தி கைகூடினால் "திடபாவம்" என்கிற (Thought-power) பாவனா சக்தி லபிக்கும். திடபாவத்தினால் திடசித்தமும், திட சித்தத்தினால் நினைத்தது முடிக்கும் ஆற்றலும் சித்திக்கும். இதைக்கொண்டு எல்லாக் காரியசித்திகளையும் அடையலாம்.

இங்கே யொருவிஷயம் சொல்லத்தக்கது. பொதுஜன க்ஷேமத்துக்காகப் பொது விஷயங்களிலுழைப்பவர் ஸமுதாய லக்ஷிய லக்ஷணங்களை நன்றாக அறிந்தவர்களாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட "ஸமுதாய ஞானம்" இல்லாதவர்களைப் பொதுநலகாரியங்களைப் பார்க்க நியமிப்பதனால் விளையும் அநர்த்தங்கள் அனந்தம். அவைகளை விவரித்துச் சொல்லில் இந்த தர்மத்துக்கு விரோதமாயிருப்பவர்களெல்லாம் சிறிச்சினந்து நடுவு நிலைமை கடந்து நடப்பார்கள். ஆகையால் யேசு (Jesus' parable of the wheat and the tare) நாதர் சொல்லிய பயிரும் களையும் எனகிற கதையின போதனையை மேற்கொண்டு உண்மையை வற்புறுத்திக்கூறி தாமத்தை வளர்த்துக்கொண்டுபோனால், களைகளுக் கொப்பான பொய்யும் புனைசுருட்டும அறுபபுக் காலத்தில் தன்னாலே யொதுக்கப்பட்டுப்போம். அப்படிக்கின்றி அவைகளை இப்பொழுதே விலக்க வேண்டுமென்றால் அது தெய்வ சங்கல்பத்தினால் உதிக்கும் அவதார புருஷர்களால் ஆக வேண்டுமேயன்றி மனுஷப் பிரயத்தனத்தினால் சாத்தியப்படமாட்டாது.

NATURE-STUDY: AN EASTERN PARABLE.

"பிரகிருதி வித்தை"—ஒரு கதை.

பிரகிருதி யென்றால் என்ன? அது நம்மைச் சுற்றி இயற்கையாதவும் ஸ்வபாவமாகவு மிருக்கும் எல்லாவற்றிற்கும் பொருந்துமொரு பேராகும். நமது தத்துவ சாஸ்திரநூல்களில் பற்பலவிதமாகப் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தாலும் அதன் உண்மையை உள்ளபடி பார்க்கில் அது எல்லோருக்கும் ஒரே பொருளாக விளங்கும். அதை விளக்க ஒரு கதையுண்டு. அது இது:—

"பூர்வம் வங்கதேசத்தில் ஒரு அரசன் இருந்தான். அவ்வரசன் தர்மத்தை முன்னிட்டு அரசாண்டுவரும்பொழுது அவனுடைய தம்பியின் ஆலோசனைக்குட்பட்டு அசுவமேதயாகம் ஒன்று செய்ய ஆரம்பித்தான். அதற்காக பூப்பிரதக்ஷணம் செய்துவர யஜ்ஞக்குதிரையை அவிழ்த்துவிட்டு அதைத் தடுப்பவரையெல்லாம் வென்றுவர பராக்கிரமசாலிகளான இராஜகுமாரர்கள் அதன்பின் தொடர்ந்து சென்றார்கள். இவர்கள் திக்விஜயம் செய்துகொண்டு ஐராவதி நதிக்கரைக்கு வரவும் அங்கு தபோநிதியான இராஜரிஷியொருவர் சமாதியிலிருக்க அவரை வணங்காத குற்றத்தைக் கண்டிக்கவென்று அவருடைய புத்திரனை மஹாயோகி அந்தக் குதிரையைப் பிடித்து அதையும் தன்னை யெதிர்த்த இராஜகுமாரர்களையும் ஜயித்து கண்ட சைலம் என்கிற ஒரு மலைக்குகைக்குள் நுழைந்து கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துபோயினர்.

இதையறியலான வங்கதேசத்தரசன் தன் தம்பியை அழைத்து அந்த இராஜரிஷியான தங்கணர் என்பவர் மஹாத்துவத்தையுரைத்து அவரைச் சமாதானப்படுத்தி அவருடைய அருட்பிரசாதம் பெற்றுக் குதிரையையும் இராஜகுமாரர்களையும் மீட்டுக்கொண்டுவர வேண்டுமென்று ஆஜ்ஞாபித்தார். அவர் சொன்னதாவது: "தபசிகள் அளவிடப்படாத வீர்யமுடையவர்கள்; அவர்களை மானிடரும் தேவர்களும வெல்லமுடியாது. அவரைச் சந்தோஷப்படுத்தி புதல்வர்களையும் குதிரையையும் விடுவித்துச் சீக்கிரத்தில் இங்கு அழைத்துவரல் வேண்டும்."

அவர் அப்படியே அங்குசென்று அவரை அடிபணிந்து துதிக்க அவருடைய புத்திரன் தோன்றி சமாதியிலிருந்த தன் பிதாவைக்

கண்டு பேசுவது சாத்தியமில்லையென்பதைக் கூறி அவர் கேட்கும் வரத்தைத் தானே யளிப்பதாக வாக்குக்கொடுத்தான்.

புத்திமானான அரசிளவல் அந்த ரிஷி புத்திரர் வாக்குப்படி அவர் பிதா சமாதியிலிருந்து விழித்துத் தன்னோடு பேசும்படி செய்யவேண்டுமென்று வரம் கேட்டுக்கொண்டான்.

வாக்குப் பிசகக்கூடாதென்கிற தர்மத்துக்குக் கட்டுப்பட்டவனாய் ரிஷி புத்திரன் தன்னுடைய யோகசக்தியினால் தன் பிதாவை, சூக்ஷ்ம உபாயங்களால் சமாதியினின்றும் வெளிக்கிளம்பச் செய்தான். அவர் தன்னெதிர்பணிந்து நின்ற அரசனைப்பார்த்ததும் அவர் கேட்குமுன் தானே அவருடைய கோரிக்கையைத் தம் யோகதிருஷ்டியால் உணர்ந்து தம் புத்திரனைப்பார்த்து,—

"குழந்தாய்! இதுபோல் இனிமேற் செய்துவிடாதே: குரோதமானது தபசிற்குச் சத்துருவாகும். இராஜாக்கள் உலகத்தைப் பாலனஞ்செய்வதால் தபசானது விக்கினமின்றி நடக்கின்றது. யாகத்திற்கு விக்னம் உண்டுபண்ணுவது அசுரர்களுடைய ஸ்வபாவமல்லவா! குதிரையையும் இராஜகுமாரர்களையும் சீக்கிரத்தில் இவரிடம் ஒப்புவித்து விடு. யாகமானது காலதாமதமின்றி நடக்கவேண்டுவதாயிருத்தலின், இவர் சீக்கிரத்தில் செல்லவேண்டும்" என்றார். உடனே ரிஷிகுமாரன் கண்டசைலத்திற்குட்புகுந்து குதிரையுடன் இராஜகுமாரர்களைக் கொண்டுவந்து அவரிடத்தில் பிரீதியுடன் ஒப்புவித்தான்.

வங்கதேசத்தரசன் தம்பியான மஹாசேனனும் குதிரையையும் இராஜகுமாரர்களையும் நகரத்திற்கு அனுப்பிவிட்டு அவர்கள் சிறைப்பட்டிருந்த மர்மத்தை அருள்கூர்ந்து அவருக்குத் தெரிவிக்கப் பிரார்த்தித்துக் கொண்டதின் மேல், ரிஷியினுடைய ஆஜ்ஞையினால் ரிஷி புத்திரன் தன்னுடைய மனோபலத்தால் சிருஷ்டித்து ஆண்டுவந்த லோகத்தை (இதற்கு "கண்டசைலலோகம்" எனப் பேர் என்று கதை கூறுகின்றது) அவ்வரசிளவனுக்குக் காட்டி அதன் உற்பத்தி விவரத்தையும் எடுத்துரை செய்கின்றான்.

"MY MIND TO ME A KINGDOM IS."

ஸாம்ராஜ்ய மனோராஜ்யம்.

அப்படிச் சொல்லிக்கொண்டு வரும்பொழுது மனோசிருஷ்டியின் மஹத்துவத்தைக் கூறிவருகையில் பிரகிருதி யென்றால் இன்னதென்று பின்வருமாறு கூறுகிறார். அதை மனதில் இருத்திக்கொண்டால் ஒரு சமயம் அதனுண்மை வெளிப்படும்பொழுது அவர் சொல்லிய வாக்கின் அர்த்தம் புலப்படக்கூடும்.

"சிதாத்மாவினுடைய (அறிவினுடைய) சக்தியை ஆதாரமாகக் கொண்டிருக்கும் ஜனங்களுடைய பலவாறான அநாதி கர்மங்களின் வாசனைகளுடைய சமுதாயமே பிரகிருதி யென்று சொல்லப்படும்" என்கிறார். இந்தப் பிரகிருதி தத்துவத்தை வித்யா பூர்வமாய் உள்ளமுறை உணர்ந்தறிவது தானே பிரகிருதி வித்தையாம். இந்த அறிவு இருந்தால் உலகமெல்லாம் ஆளலாம்; ஆட்டுவிக்கலாம்.

HINTS TO NATURE STUDENTS.

பிரகிருதிவித்தியார்த்திகளுக்கு சுட்டுச்சொல்.

இந்த வித்தையைப் பயிலும் விதத்தைப் பற்றி மேற்றிசை வித்வத் சிரேஷ்டர்கள் பாவப்படி "வித்யா தத்துவம்" (The Spirit of Science) இன்னதென்றும் வித்யோபாசனை (The Service of Science) எப்படி யிருக்கவேண்டுமென்று ப்ரொபெஸ்ஸர் ஆர். ஏ. க்ரெகரி அவர்கள் 'Discovery' அல்லது 'நிராவரணம்' என்னும் தலைப்பெயரிட்டு ஒரு முக்கியமான புஸ்தகம் எழுதியிருக்கிறார். அதில்கண்ட சமரஸஞான சாதகமான குறிப்புகளில் சிலவற்றைத் திரட்டி நாட்டுப்புறப் படிப்பைச் சீர்திருத்துவதற்கான ஏற்பாட்டைக் குறிப்பிட்டெழுதியிருக்கும் "Memorandum" என்னும் குறிப்புரையின் முடிவில் அதற்கநுபந்தமாகச் சேர்த்தச்சிட்டிருக்கிறோம். அந்தக் குறிப்பையும் இதன் முகட்டில் சேர்த்திருக்கிறோம்.

னம்பொருந்திய கவர்னர் (வித்யா மெம்பர்) முதலாக கௌன்ஸில் மெம்பர்கள், வித்யா இலாகாத்தலைவர், வித்யா இலாகா காரியதரிசி, வித்யாவிற்பன்னர், வித்வத்ஜனர் முதலான ஆங்கிலர் இந்தியர் எல்லாருக்கும் முன்னதாகவே பிரதியனுப்பி அவர்களுடைய அங்கீகாரம் பெற்றுவந்ததையெல்லாம் திரட்டிப் பெற்றோர்க்கும் உபாத்தியாயர்களுக்கும் வித்யார்த்திகளுக்கும் கூட உள்ளத்துணர்வில் உறுத்தும்படியான விதமாய் "மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம்" என்றுள்ளபடி சாஸ்திரஜ்ஞானத்தில் பெரியோர்களாய் விளங்கியுள்ளவர்கள் வார்த்தையைக்கொண்டு இங்கிலீஷில் விளக்கியிருக்கிறோம். (See Appendix.)

"THE SCIENTIFIC HABIT OF MIND"

சிக்ஷைதீக்ஷையிற் பழகின மனம்.

மேலேசொன்ன பிரகிருதி தத்துவத்தின் மாறுதலே சித்தம். "சுழுத்தியில் (தூக்கத்தில்) இந்த வாசனைபிண்டத்தைப் பிரகிருதி யென்றும், சுழுத்தியின் முடிவில் இதுவே சித்தமென்றும் சொல்லப்படும்" என்று யோகதீரரான ரிஷி புத்திரர் கூறியிருக்கிறார். இதையே அநுசரித்து மேற்றிசை வித்வத்ஜனரும் கூறியிருக்கிறார்கள். அம்மதை இங்கிலீஷில் பரிச்சயமுள்ளவர்கள் பிரயாசைப்பட்டுத் தேடித் தெரிந்துகொள்ளலாம். "வாசனைபிண்டத்துடன் கூடியிருக்கிற சித்தே (அறிவே) சித்தம் என்று மொழியலாகும்." ஆகையால் "சித்தமே பிரகிருதியென்றும் சொல்லப்படும்" என்கிறார்.

இப்படியிருப்பதால்தான் பிரகிருதி விர்த்தியையும் லயத்தையும் உணர "சித்தவிருத்தி நிரோதனம்" அவசியமென்றும் அதுவே "யோகம்" என்று சொல்லப்படும் என்றும் பதஞ்சலி முனிவர் கூறியிருக்கிறார்.

சித்தவிருத்தி என்பது சங்கற்ப விகற்பத் தொடர்பு ரூபமாகவிருக்கிறது. அந்த சித்த விருத்தியை அடக்கியாள்வதே அதன் "நிரோதம்."

"தன்னைத்தானெஞ்சம் கரியாகத் தானடங்கின், பின்னைத்தானெய்தாற் பயனில்லை,—தன்னைக், குடிகெடுக்கும் நெஞ்சிற்குக் குற்றேவல் செய்யிற், பிடிபடுக்கப்பட்டகளிறு" என்று இதையே வெகு அழகாக எடுத்துச்சொல்லியிருக்கிறார். வித்தியாப்பியாசத்தில் மனப்பழக்கமே பிரதானம். "கற்றோர் கல்வியும் மனப்பழக்கம்" என்று சொல்லியிருக்கிறார் ஔவையாரும். இப்படியாக நமக்குள் உள்ளபடி வசனமாக வழங்கிப் பிரபலம்பெற்ற உண்மையை உணர்ந்து வித்யா சிக்ஷையை அதற்கு அனுகுணமாகத் திருத்துவதிற் பிரமாதமான தென்னவென்று நமக்குப் புரியவில்லை. ஆனால் "பெற்றதாயை விற்றடிமை கொள்ளுகின்ற பேதைகாள்" என்று ஒரு மகான் கூறியபடி தாய்பாஷையை அசட்டைசெய்துவிட்டு ஸ்வபாஷா ஞானமின்றி அந்நியபாஷா ஞானமும் அடைவாக ஏற்படாமல் "இரண்டுங்கெட்டு" நடுவாந்தரத்தில் 'திரசங்கு ஸ்வர்க்கம்போல்' நின்று தியங்குவோருக்கு எல்லாம் மலைப்பாகத் தானிருக்கும். ஆதலால் தான் நாட்டுப்புறத்தில் இந்த வித்யாசீர்திருத்தம் தலையெடுத்து பட்டணத்திற்குப் பரவவேண்டும் என்று அநேகர் நினைக்கிறார்கள். ஏனெனில் நாட்டுப்புறத்தார் இன்னும் தங்கள் ஸ்வபாவமிழந்துபோகவில்லை. பூமியையடுத்து பூதேவி புத்திரர்களாகவே யிருந்துவருகிறார்கள். பூதேவி வசமானால் ஸ்ரீதேவியும் வசமாவாள். ஸ்ரீதேவியைக்கொண்டு பரதேவிபாகனாகிய பரமனைக் காணலாம்.

"பிரகிருதியின் உண்மையில் பரமனைக் காணலாம்."

"THROUGH NATURE TO GOD"

ஆதலால்தான் "பிரகிருதியின் உண்மையில் பரமனைக் காணலாம்" என்றுள்ள மூத்தோர் வசனம் வழங்கலாயிற்று. "கற்றதனாலான பயன்" எல்லாம் "வாலறிவன் நற்றாள் தொழாப் பெறல்" ஆதலால் கல்வியைக் கசடறக் கற்க விரும்புவோர் பிரகிருதிவித்தையைக்

குழந்தைப்பருவம் முதலே கைப்பிடியாகக் கொண்டு அநுஷ்டித்து வரல்வேண்டும். "கல்வியைக் கல்: கற்றபடி நில்" என்றார் ஆன்றோரும். ஆகையால் ஏட்டுப் படிப்பால் மட்டும் பிரயோசனமில்லை. கல்வியென்பது மனப்பழக்கத்துக்கே உரியது. அந்த மனப்பழக்கம் தானும் அநுஷ்டானக் கிரமத்தாலே அப்பியாச முதிர்ச்சியில் பலப்பட்டு சுபவாசனையாகும். சுபவாசனை கூடினால் அது சுத்த வித்யா சம்பத்தை அளிக்கும். சுத்த வித்தியா சம்பத்துத்தானே வித்வத் லக்ஷணமான (Scientific habit of mind) தீர்க்க திருஷ்டி, வாக்சித்தி, திடபாவம், திடசித்தம் முதலான சாஸ்திரோக்த ஞானபாவத்தை யளிக்கும். இந்த உயர்ஞான உத்தம பாவத்தாலேயே இப்பூலோகத்தில் நாகரிக விர்த்தி ஓங்கி வளர்ந்து உத்தம பலனை அளிக்கவேண்டும் என 'டியூவி' என்னும் சாஸ்திரக்ஞர் கூறியிருக்கிறார்.

EPILOGUE.

பின்னுரை.

இதை வாசிக்கும் உத்தம சித்தர்களே!

இந்த உத்தமபலன் சித்திக்க நாகரிகவிர்த்தியை நிர்மல சித்தத்தோடு பயின்ற நற்பயிற்சியினால் சுத்தப்படுத்தவேண்டியது சத்துக்களுடைய கடமை. இவர்கள் எத்தேசத்திலும் எக்காலத்திலும் தொகையிற் சொற்பமாயிருந்து செல்வாக்கில் அளவற்றவர்களாக விளங்கி வருகிறார்கள். இப்படிப்பட்டவர்களுடைய பூர்ணதயவைமுன்னிட்டு இந்த நாட்டுப்புற வித்யா சீர்திருத்தத்தை நாம் மேலெடுத்துப் போட்டுக்கொண்டிருக்கிறோம். உடல், பொருள், ஆவியையும் ஒன்றாகத் தத்தஞ்செய்து பல வருஷகாலம் "உழைப்ப உழைத்துக்" கூழையாகினதன்றி அக்கிரம அழிச்சாட்டியக்காரர்களுடைய அநுக்ரக விசேஷத்தால் ஏழையுமாய்விட்டோம். "இகழ்தற்றாக்கருங்கூண்டு" என்கிற முதுமொழிப்படி "தெய்வானுகூலம்" பலமாயிருக்கிறது கொண்டு இப்பொரு முயற்சியில் சிற்பாலனை நம்பித் தலையிட்டுக்கொண்டோம். நமக்கு ஸ்வயலாபம் மனச்சாக்ஷி சம்மதமன்றிவேறொன்றில்லை. ஆகையால்,

AN APPEAL TO LOCAL AND SCHOOL BOARDS.

ஓர் விண்ணப்பம்.

ஸ்வய ஆக்ஷித்தலைவர்களாயும் பிரமுகர்களாயுமுள்ளவர்கள் "போரடிக்கிற மாட்டின் வாயைக் கட்டுவது"போலவும், வேலைக்காரன் கூலியைப் பிடிப்பதுபோலவும், "அங்காடிக் கூடையை அதிர விலையிட்டாற்"போலவும், ஏழைகளையும் பாலர்களையும் வஞ்சித்து "பஞ்சு விரோதம்" செய்வாரைப்போல் இடையூறு விளைக்காதிருக்கக் கேட்டுக்கொள்கிறோம். காகிதத்தின் விலை அபரிமிதமாகவேறி யிருப்பதாலும் இதை அச்சிட்டு வெளிப்படுத்துவதற்கான செலவுதானும் கட்டிவராதிருப்பதாலும் பள்ளிப்பிள்ளைகளுக் குழைக்கவென்று 'பிரதிக்ஞை' வாங்கிக்கொண்டு சிபார்சு செய்தவர் வாக்குத் தவறாதபடி ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் ஒரு காபியாவது வாங்கி இதை ஆதரிக்கவேண்டும். ஒரு காபியை வாங்கிப் பல பள்ளிகளுக்குபயோகப்படுத்தி அந்த ஒரு காபியின் பணத்துக்கும் தொங்கலில்விடுவது மேலோர் செய்காரியமாகாது. தர்மத்துக்கும் விரோதமாம்.

MEMORANDUM ON THE REFORM OF RURAL EDUCATION.

SUBMITTED FOR APPROVAL TO ALL INTERESTED IN EDUCATION.

"The faculty of observation remains in most of us undeveloped. It is one of the obvious duties of the teachers in Elementary Schools to develop the power of observation of their students, to teach them to use their eyes and their hands to study Nature and to take a pleasure in Nature-Study."—*The Hon'ble Sir P. S. Sivaswamy Aiyar, K.C.S.I., C.I.E.* "My best wishes for the success of your publication."—*The Hon'ble Sir Harold Stuart, K.C.V.O.*

"Have read it with interest and profit."—*The Hon'ble Mr. V. S. Srinivasa Sastriar.*

"I am in general agreement with your ideas on the subject."—*The Hon'ble Mr. Justice T. V. Seshagiri Aiyar.*

'Reconstruction'—not of a piecemeal fragmentary kind, is what is wanted.'—*Mr. T. V. S. Sastry.*

"Hope the paper will do good among teachers for whom it is intended."—*Dewan Bahadur L. D. Swamikkannu Pillai.*

The President, Corporation of Madras, and the Health Officer, have read it with interest and approval.

Copies submitted for approval to the Educational authorities and acknowledged.

LOVE OF TRUTH: A CHARACTERISTIC OF THE SCIENTIFIC MIND.

வாய்மையால் அகத்தூய்மையாம்

"Love of truth creates the habit of accuracy of mind and exactness in matters of fact which characterises a scientific mind."

அகத்தூய்மை யென்றால் சித்தசுத்தம். சித்தம் சுத்தப்படுவது மனோசுத்தியினால். "மனதின் சுத்தி யாதென்றால் அந்நிய விஷயங்களிலிருந்தும் திரும்புவதுதான்." அதாவது தனக்கு அந்நியமான விஷயங்களிலிருந்து தன்முகமாய்த் திரும்புவது. இதற்கு அகமுகம் என்றும் அந்தர்முகம் என்றும் சொல்கிறதுண்டு. "இதுதான் தத்துவஞானத்திற்கு (உண்மையை உள்ளபடி அறிவதற்கு) முக்கியமான சாதனமென்று சொல்லப்படுகிறது." "சுத்தமானதும் (Pure), யோக்கியமானதும் (Cultivated) ஆன மனதினாலேதான் சித்தேவி (அறிவு) விளங்குகின்றனள்" என்று ஜனகராஜன் அஷ்டவாக்ரர் என்னும் ஒரு பிராமணருக்கு உபதேசித்திருக்கிறார். "சாஸ்திரங்களால் சொல்லப்பட்ட கர்மங்கள், உபாசனைகள், வைராக்கியாதிகள் என்னும் இவைகள் யாவும் மனதைச் சுத்திபண்ணுவதற்காக ஏற்பட்டனவேயன்றி வேறில்லை."—ஜனகராஜன்.

"சுழுத்தியில் (தூக்கத்தில்) மனதிற்குத் 'திரும்புதல்' உண்டு. ஆனால் அதன் சக்தி தமோகுணத்தினால் இலீனமாயிருக்கிறது. மைதடவப்பட்ட கண்ணாடியிலிருக்கும் ஆகாசமானது அன்னிய விஷயங்களிலிருந்து திரும்புவதனால் மாத்திரம் ஒருக்காலும் விளங்குகிறதில்லை. அவ்வாறேபோல் சுழுத்தியில் அந்நிய விஷயங்களிலிருந்து மனது திரும்பியும் நித்திரையினால் (இருளினால்: cf. "There is no darkness but Ignorance"—Shakespeare.) மனப்பார்வை மறைக்கப்பட்டு யோக்கியதையற்றிருப்பதனால் அது சித்தை (அறிவை) விளக்குகிறதில்லை."

"மனதுக்கு யோக்கியதை யில்லாமையால் தான் குழந்தைகளுக்கு (விஷயங்களிலிருந்து திரும்பின மனதிருந்தும்) ஒன்றுமே விளங்குகிறதில்லை." ஆதலால் யோக்கியமான மனது (cultivated mind) சுத்தமான மனதைப்போல் உண்மையை உள்ளபடி உணர்வதற்கு இன்றியமையாததாகின்றது.

"THE SEEING-MIND"

மனது அபிமுகமாக விருந்து வெளியிலுள்ள விஷயங்களைப் பார்வையிடும்பொழுது பிரகாசம் என்று சொல்லப்படும்.

"THE INQUIRING MIND"

மனது தன்னிடத்தில் பிரதிபிம்பித்த விஷயங்களை "இது இப்படியிருக்கிறதென்று" சப்தரூபமாகச் சிந்தனை செய்யும்பொழுது விமர்சம் (விசாரம்) என்று சொல்லப்படும்.

பிரகாச அவஸ்தையில் விஷயங்கள் பேதமின்றிப் பொதுவாய் விளங்குகிறபடியினால் அது நிர்விகற்பம் (நிச்சிந்தை) எனப்படும்.

விமர்சாவஸ்தையில் (விசாரஸ்திதியில்) "இது இவ்விதமிருக்கிறது" என்று சப்த பேதங்களால் வித்தியாசப்படுகிறபடியால் ஸவிகற்பம் (சிந்தனையோடுகூடியது) எனப்படும்.

"இது இவ்விதமிருக்கிறது" என்ற சப்த பேதமின்றிய விஷயப்பார்வையான பிரகாசம் விகற்பமற்றதாகும்.

THE SCIENTIFIC MIND:

சிரத்தாமனஸ்: சாஸ்திரோக்த மனம்.

"விஷயப் பார்வையை மூலகாரணமாகக் கொண்டு "இது இப்படியிருக்கிறது" என்றும் சப்தபேதங்களுடன் விசாரரூபமாக விளங்குவது ஸவிசற்பமாகும் (விமர்சம்.) இந்த விமர்சமானது (1) ஆந்தரமென்றும் (2) அபிநவம் என்றும் இருவகைப்படும்.

"ஆந்தரம் என்பது முன் அநுபவித்தவைகளை ஞாபகத்தினால் நினைத்துக்கொண்டு வாசனையினால் ஸவிகற்பமாகச் சிந்தனை செய்வதாகும்."

"அபிநவம் என்பது அநுபவ சொரூபமானது." இவ்விதம் மனமானது இரண்டு சக்திகளுடன் எப்பொழுது மிருக்கின்றது. இந்த இரண்டு சக்திகளையு முபயோகிக்கப் பழகுவதே சாஸ்திரோக்த மனதின் லக்ஷணமாம்.

(சுழுத்தியில் மனம் மூடதசையில் மூழ்கியிருக்கிறது.)

"சாஸ்திரங்களைச் சிரவணம் செய்ததனால் யாதொரு ஞானமுண்டாகின்றதோ, அதனாலே சிரத்தை மாத்திரம் உதிக்கிறதேயன்றி அஞ்ஞானத்தின் நிவிர்த்தியான பலன் உண்டாகாது." இந்த சிரத்தை யிருந்தால்தான் தத்துவ விசாரம் பயன் பெறும்.

ILLUSTRATION.

உதாகரணம்.

"உதாகரணமாக: மாணிக்கம் இன்னதென்று அறியாத ஒருவன் பொக்கிஷத்தில் அதைப் பார்வையிட்டாலும் அறிகின்றதில்லை. மாணிக்கத்தின் இலக்ஷணம் தெரிந்த மற்றொருவன் சிரத்தையுடன் அதனைப் பார்வையிடுவானால் இதுதான் மாணிக்கமென்று தீர்மானம் செய்கின்றனன். மணியின் இலக்ஷணங்கள் கேட்டிருந்தும் சிரத்தையற்றவனாகவிருந்தால் எத்தனை தரந்தான் மணியினை ஒருவன் பார்த்தாலும் அவன் மாணிக்கமென்று அறியமாட்டான். அதி நிபுணனாயிருந்தாலும் சிரத்தையற்றவன் ஞானசம்பன்னனாக மாட்டான். அப்படியிருக்க மூடர்கள் சுபாவமாகச் சமாதி கூடினதால் மட்டும் விஞ்ஞானத்தாலுண்டாகும் பலனை அவர்கள் எப்படி அடைவார்கள்? (அடையமாட்டார்கள் என்றபடி.)

"மூடர்கள் அறியாத் தன்மையினாலும் சிரவண ஞானமுடைய பண்டிதர்கள் சிரத்தையின்றிய தன்மையாலும் எவ்விதத்திலும் (உண்மையை) உள்ளபடி அறிகின்றதில்லை."—ஜனகராஜன்.

ANOTHER ILLUSTRATION.

மற்றுமொரு திருஷ்டாந்தம்.

"இலக்ஷணம் தெரியாத ஒருமூடன் நக்ஷத்திரங்களைப் பார்த்தாலும் அவை இன்னவையென்று அறிகிறதில்லை. கேள்வியினால் இலக்ஷணம் தெரிந்தவனும் நக்ஷத்திரங்களைப் பார்த்தாலும் விருப்பமில்லாவிடில் அவை இன்னவையென்று அறியான். விருப்பமுடைய ஒரு புத்திமான் தன் ஏகாக்கிர மனதினால் திக்கு, வடிவு முதலிய இலக்ஷணங்களைக்கொண்டு "சுக்கிர நக்ஷத்திரம் இன்னவிதமாக விருக்கும்; இதுதான் அந்த சுக்கிர நக்ஷத்திரம்" என்று ஸ்பஷ்டமாக அறிகின்றான். இவ்விதமே அறியாத்தன்மையினால் மூடர்களும், விருப்பமின்மையால் (சிரத்தையின்மையால்) மற்றவர்களும் உண்மையை உணர்ந்திருந்தும் உணர்வை உணர்ந்து அறிகிறதில்லை. இவர் தன்னண்டையிருக்கும் புதையலை விட்டுப் பிச்சையெடுப்பவருக்கு நிகராவர்."

இப்படியே பிறந்த குழந்தைகளுக்குச் சதாகாலமும் நிர்விகற்பம் (நிச்சிந்தை) இருந்தும் அஞ்ஞானம் (அறியாமை) நிவிர்த்தியாகாததால் பலனின்றியிருக்கின்றது. ஆகையால் அறியாமை யொழியவேண்டி முதலில் மனதைச் சுத்தமானதாகவும் யோக்கியமானதாகவும் செய்யவேண்டும். அந்நிய விஷயங்களினின்றும் மனதை ஆமையைப்போல் உள்ளேயிழுத்துக்கொள்வதால் சிந்தனையொழிந்து அதனால் மனோசுத்தமும், நிச்சிந்தையான மனதை யடக்கியாண்டு குறித்தகுறி யெதுவோ அதையே பிற சம்பந்தமின்றி ஏகாக்கிர தசையில் பற்றிப்,பற்றின பற்றுவிடாது ஸ்திரமாகத் தைலதாரைபோல் அதில் சேர்ந்து விளங்கும்படிச் செய்வதால் (தாரணைத்தியான சாதன சமாதிகளால்) யோக்கியதையும் உண்டாகின்றது. இந்த யோக்கியதாம்சத்துக்கு "யோகஸம்யமம்" என்று மானவ தத்துவ சாஸ்திரங்கள் சொல்வதுண்டு. யாரும் பேரைக் கண்டு மயங்கக்கூடாது.

விஷயத்தில் மூழ்கியிருந்த மனதைத் திருப்பி சூரியனைப் பார்க்கவிட்டால் அது சூரிய மண்டலம் வரையில் நீண்டு திருஷ்டா, திரிசயம், தரிசனம் என்கிற மூவகைப் பெயரான

அம்சத்தோடு ஏகமயமாய்விடுகிறது. இது ஒருவர் தெரிந்துகொண்டாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, மனதிலுண்டாகும் மாறுதல்கள் சம்பந்தப்பட்டமட்டில் எல்லாரிடத்திலும் உண்மையாகவே யிருக்கிறது. யோகி உள்ளறிந்து சூரிய மண்டலத்தை தன் சூக்ஷ்ம அறிவினால் விசாரித்தறிகிறான். சாஸ்திரோக்தமான மனப்பழக்கம் பெற்ற சிரத்தாமனஸ் உள்ளவர்களுக்கும் அது இல்லாதவர்களுக்கும் உள்ள வித்தியாஸம் இதுவே. ஆகையால் அநேககோடி ஜன்மங்களில் எடுத்துக்கொண்ட முயற்சியினால் மனதின் பரிபக்குவம் சித்திக்கவேண்டும். ஔவையார் ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமி பரிசோதனைக்குவந்து விடை யளித்தபடி இந்தப் பரிபக்குவம் வாய்க்கப் பெறுவது "அரிது, அரிது," "பல்காலும் அரிது."

"அரியது."

"அரியது கேட்கின், வரிவடி வேலாய்!
அரிதரிது மானுட ராத லரிது;
மானுட ராயினும், கூன், குருடு, செவிடு,
பேடு நீங்கிப் பிறத்த லரிது;
பேடு நீங்கிப் பிறந்த காலையும்,
ஞானமுங் கல்வியும் நயத்த லரிது;
ஞானமுங் கல்வியும் நயந்த காலையும்
தானமுந் தவமுந் தாஞ்செய லரிது;
தானமுந் தவமுந் தாஞ்செய ராயின்,
வானவர் நாடு வழிதிறந் திடுமே."

அரிதிலும் அரிதாகிய இப்பிறவியைப்பெற்று பக்தியும் சிரத்தையும் நிறைந்த மனதும் பழக்கவாசனையால் சித்திக்கப்பெற்றால் "வானவர் நாடு வழிதிறந் திடும்" ஆனாலும் பெறற்பாலதாம் பெரியதோர் பேறு அது வன்றாகும். பின்னைப் "பெரியது" தான் எதுவென்றாலோ, ஔவை குமாரக் கடவுளுக்குச் சொன்னதைக் கேளுங்கள்:—

"பெரியது."

"பெரியது கேட்கின், எரிதவழ் வேலாய்!
பெரிது பெரிது புவனம் பெரிது;
புவனமோ நான் முகன் படைப்பு;
நான்முகன் கரியமா லுந்தியின் வந்தோன்;
கரிய மாலோ, அலைகடல் துயின்றோன்;
அலைகடல், குறுமுனி யங்கையில் அடக்கம்;
குறுமுனியோ, கலசத்திற் பிறந்தோன்;
கலசமோ, புவியினிடத்துச் சிறுமண்;
புவியோ, அரவினுக் கொருதலைப் பாரம்;
அரவோ, உமையவள் சிறுவிரன் மோதிரம்;
உமையோ, இறைவர் பாகத் தொடுக்கம்;
இறைவரோ, தொண்டருள்ளத் தொடுக்கம்;
தொண்டர்தம் பெருமை சொல்லலும் பெரிதே;

இப்படி உலகெலாமுணர்ந்தோதற்கரியவரை அம்மையார்சொல் கதையாகச் சொல்லி, உண்மையோதியதின் பெருமையை உண்மையுணர்ந்தார் தாமே மதிக்க வல்லாரன்றி மற்றவரன்று. பரஞானத்திற் பிரசித்திபெற்று விளங்கியதுபோல உலகஞானத்திலும் அந்த ஔவையார் ஒப்பற்று விளங்கினர் என்பது அவருடைய சரித்திரத்தை உணர்ந்தார் எல்லாருக்கும் விளங்கும். ஆயினும் இந்த அவஸரத்தில் தானே அவர் "இனியது" எது? "கொடியது" எது? என்று மாட்டுக்காரப் பையனாய் வந்து தன்னை வென்ற தேவ குமாரனுக்குச் சொன்னதைக் கேளுங்கள்:—

"இனியது."

"இனியது கேட்கின், தனிநெடு வேலாய்!
இனிதினிது ஏகாந்த மினிது;
அதனினு மினிதே ஆதியைத் தொழுதல்;
அதனினு மினிதே அறிவினர்ச் சேர்தல்;
அதனினு மினிதே அறிவுள் ளோரைக்
கனவிலும் நனவிலும் காண்பது தானே."

—என்றுரை செய்தவர் "கொடியது" இன்னதென்று சொன்னதைக் கேண்மின்:—

"கோடியது."

"கொடியது கேட்கின், நெடியவெல் வேலாய்!
கொடிது கொடிது வறுமை கொடிது;
அதனினுங் கொடிதே இளமையில் வறுமை;
அதனினுங் கொடிதே ஆற்றொணாக் கொடுநோய்;
அதனினுங் கொடிதே அன்பிலாப் பெண்டிர்;
அதனினுங் கொடிதே இன்புற அவர்கையில் உண்பது
[தானே."

இவ்வளவு வல்லமைவாய்ந்த வித்வத் சிகாமணியாம் அக்கிழவியை அவளது வித்யாகர்வம் நீங்க பகவான் ஒரு மாட்டுக்காரப் பையனாகவந்து வென்றுவிட்டார். ஆனைக்கும் அடி சறுக்கும் என்றதுபோல, கம்பனையும் வென்ற காரிகையான அவள் "பெருங்கானில், காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான் தோற்றது, ஈரிரவு துஞ்சாதென் கண்" என்று துக்கிக்கும்படிச் செய்துவிட்டார்.

அந்தக் கதையின் நீதிபோத மென்னவெனில் பகவான் யாரையும் சோதித்துக்கொண்டேயிருக்கிறார்; ஆதலால், யாவரும் 'நாம் வல்லேம்' என்று செருக்கடையக் கூடாதென்பதேயாம்.

ஔவையும் மாட்டுக்காரப்பையனும்.

ஒரு நாள் ஔவையார் மலைசூழ்ந்த ஒரு பெரிய வனமார்க்கமாய்ப் போய்க்கொண்டிருக்கையில் குமாரக்கடவுள் அவளைப்பரிசோதிக்கக்கருதி ஒரு எருமை மேய்க்கும் சிறுவனைப்போல் உருவங்கொண்டு ஒரு நாவல் மரத்தின்மேலேறிப் பழங்களைத்தின்றுகொண்டிருப்பவர்போல் தோன்றியருளினர். ஔவை ஆயாசத்துடன் அம்மரத்தடியில் வந்துட்கார்ந்ததும், அதன்மீதிருக்கும் மாடுமேய்க்கும் அப்பிள்ளையைப்பார்த்து "தம்பி, நான் பசியாலும் தாகத்தாலும் களைத்திருக்கிறேனாதலால், எனக்குச் சில நாவற்பழம் பறித்துப்போடு" என்று கேட்டுக்கொண்டாள். அதற்கு அம்மாட்டுக்காரப்பையலான(ஸ்வாமி) "பாட்டி உனக்குச் சுடுகிற பழங்கள் வேண்டுமோ? சுடாத பழங்கள் வேண்டுமோ? சொல்," என்க, நாவற்பழத்தில் சுடுகின்றவையுமிருக்குமா? என்று ஆலோசித்து ஒன்றும்தோன்றாமல் திகைத்துப் பிறகு, "அப்பனே! சுடுகிறபழம் வேண்டாம்; சுடாத பழமே வேண்டும்!" என்றாள். உடனே மாட்டுக்காரப்பையன் மரக்கிளைகளைக் கையாற்பிடித்து நன்றாகக்குலுக்கி விட்டான். அப்பொழுது கனிந்த பழங்களும் கனியாதபழங்களும் கீழே உதிர்ந்தன. ஔவையார் அவற்றில் கனிந்தபழங்களைப்பார்த்துப் பொறுக்கியெடுத்து, அவற்றில் தரையிலிருந்தமண்ணும் மணலும் ஒட்டிக்கொண்டிருந்தமையால் அவை விழுந்து போகவேண்டி வாயினால் ஊதினாள். அதைக்கண்ட மாட்டுக்காரப் பையன், "பாட்டீ! சுடாதபழம் கேட்டீர் இப்பொழுது சுடுகிறபழத்தைத் தின்னப்பார்க்கிறீரே! வாய் வெந்துவிடும்! நன்றாக ஊதி ஆறினபின்பு சாப்பிடு" என்றான். ஔவை அப்போதுதான் "சுடாதபழம்" கனியாத பழம் என்று அறிந்துகொண்டு "இக்கருத்து முன்னமே நமக்குத்தெரியவில்லையே!" என்று வெட்குற்று தம் புத்தி கம்பனை வென்று இம்மாட்டுக்காரப்பையன்புத்திக்கு இளைத்துப்போயிற்றேயென்று விசாரமுற்று அதற்குப் பிரகிருதியி லுண்மையான உதாரணம் எடுத்துச்சொல்லி அதுவும் இயல்பேயானாலும் வெட்கம் வெட்கமே யென்று துக்கித்து இரண்டுநாளைக்கு எனக்கு உறக்கம் கொள்ளாது என்று விசாரப்பட்டாள்.

AUVAI: AN EXAMPLE.
ஔவையின் உண்மைக்குணம்.

"கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்—பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்தோற்ற
தீரிரவு துஞ்சா தென்கண்"

என்று தனது பிரகிருதி ஞானம் விளங்கவும் ஆத்மஞானம் சுருங்கியதே யென்று துக்கித்தாள். அதைக்கேட்ட மாடுமேய்க்கும் பையன் திருவருள்கூர்ந்து மரத்தை விட்டிறங்கித் தனது நிஜரூபத்தைக் காட்டி அவள் உண்மைக்குணத்தை (love of truth) மெச்சி நாம் உம்முடன் விளையாட வந்ததேயன்றி இகழ்தற்கன்று என்றுறுதிகூறி உலகில் அவளுக்கொப்பாவார் அறிஞர் யாருமில்லையென்று தேற்றி அவரது கவலை தீர்த்தருளினர். பிறகு அவரை இன்னும் மகிழ்வித்தற் பொருட்டு உமது வாக்கால் "உலகத்தில் இனியது, கொடியது, அரியது, பெரியது இன்னின்னதென்று உரைக்கவேண்டு" மென்று கேட்டுக்கொண்டார்.

ALTRUISM THE ESSENCE OF GODLINESS.
லோகோபகார தர்மம்.

லோகோபகாரமாகக் கடவுள் தானே மாடு மேய்ப்பவனாக வந்து அந்த மாட்டுக்காரப் பையனும் உலகத்தில் ஒப்புயர்வற்ற அறிஞரோடு வாதுகூறி யுறவாடி விளையாடலாமென்று ரூபித்ததை யுணர்ந்து யாரும் கற்றவர், கல்லார் என்கிற வீண்கர்வம் பாராட்டாது உலகத்தில் ஞானம் பரவிச் சந்தோஷம் மேலிட உழைப்பதே திருவருள் ஆஜ்ஞையென்றுணர்ந்து எப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலும் பொய்யைத்தள்ளி மெய்யைத் தழுவித் தேவராலும் மனிதராலும் பூஜிக்கப்படத்தக்கவராதல் வேண்டும்.

ஔவை காட்டுமார்க்கத்தில் தானும் மாடுமேய்ப்போனும் தவிர வேறுயாரும் இல்லாதபோதும்கூட தான் தோற்றுப்போனதை யுணர்ந்து துக்கித்தாள். இக்காலத்தில் உண்மைக்குக் கேடு வாராமல் அவ்வளவு வாய்மை வாய்ந்தவர் யார் என்றால் அவர் சாஸ்திரஜ்ஞநிபுணர்களே. அவர்களில் சிரத்தாபுத்தியுண்டானவர்கள் என்ன ஆபத்து வந்தாலும் பொய் சொல்ல உடன்பட்டாரில்லை. இதற்கு 'ப்ரொபெஸர் ஹக்ஸ்லி'யின் உதாரகுணத்தைச் சென்ற சஞ்சிகையில் "சோரனைக் கண்டனம்" என்கிற பாட்டில் ஒன்றிற்கு உதாரணமாகக் கீழ்க்கோடிட்டு இங்கிலீஷில் விளக்கியிருந்தோம். ப்ரொபெஸர் ஹக்ஸ்லி, அவருடைய முதற்பிறந்தகுழந்தை இறந்துபோனபோதும், தாம் பரலோக பாவனமற்றவராயிருக்க, ஒருவர் இந்தச் சமயத்தில் உலகத்தாருக்கெல்லாமுள்ள ஆறுதல் உங்களுக்கில்லாமற்போயிற்றே! யென்று துக்கமுகமன் கூற, அதற்கு அவர் அவருடைய சினேகிதர் ஒருவருக்கெழுதிய கடிதத்தில் தான் பெண்டுபிள்ளை ஆஸ்தியெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய் இழக்க நேரிட்டாலும் நான் பொய் சொல்ல முடியாது என்று எழுதியுள்ளார். இந்தத் தீரமும் உண்மைப் பிரியமுமல்லவோ அவரை நாஸ்திகத்திலும் ஆஸ்திகம் நிறைந்தவராகச் செய்து சாஸ்திரஜ்ஞானத்தில் மிகத் தேர்ந்தவராகச் செய்தது.

* THE STATE OF FEMALE EDUCATION, ANCIENT AND MODERN.

A REVIEW OF IT IN THE PRESENCE OF MISS E. A. MANNING, (1900.)

நமது தேசத்தில் பெண்கல்வியின் ஸ்திதி.

(BY A HINDU LADY.)

அநேக வருஷ காலங்களாய் இந்து ஸ்திரீகளாகிய நமது கல்விக்காக மிகக் கவலையெடுத்துக்கொண்டு நமது விருத்தியையும் சந்தோஷத்தையுமே தனது வாழ்நாளின் முக்கிய எண்ணமாய்க் கருதிக்கொண்டு நமது நன்மைக்காக மிக ஊக்கத்துடன் உழைத்து வருகின்ற மிஸ் மானிங் துரைசானி இன்று சாயந்திரம் நமதிடையில் வீற்றிருப்பதற்கு நாம் மிகச் சந்தோஷமுள்ளவர்களாயிருக்கவேண்டும். பெண்கல்விக்காக இவ்வளவு கவலையும் பிரயாசையுமெடுத்துக் கொண்டிருக்கும் இந்த துரைசானி வந்திருக்கும் தருணத்தில் பெண்கல்வி இந்த தேசத்தில் முன்னாட்களில் எப்படியிருந்தது என்பதையும் இப்போது எப்படியிருக்கிறது என்பதையும் குறித்துப்பேசுவதே தகுந்த விஷயமாய்த் தோன்றுகிறது.

GARGI, MAITRAYI, AUVAI.
கார்கி, மைத்ரேயி, ஔவை.

பூர்வகாலங்களில் கார்கி, மைத்ரேயி முதலிய ஸ்திரீ வித்வான்கள் இருந்தார்களென்று பிரசங்கங்களில் சொல்ல நாம் கேட்டிருக்கிறோம். தமிழ் நாட்டில் நல்ல கல்வியும் ஞானமுமுள்ள ஔவை என்ற ஸ்திரீ இருந்ததாய், அவருடைய பாடல்களால் நன்றாய்த் தெரியவருகிறது. ஆனால் அக்காலங்களில் இப்படிச் சொல்லப்பட்ட சில ஸ்திரீகளைத்தவிர, பொதுவாய் ஸ்திரீகளெல்லாம் படித்திருந்தார்களோ என்பது சந்தேகம். மிகப் புத்திசாலிகளாயிருந்த

* In view of the Conference on Female Education now being held a Review, by a Hindu Lady, of the state of Female Education when Miss E. A. Manning, Secy National Indian Association visited India in 1900 will be not only interesting but instructive.

சில ஸ்திரீகள், வித்தைகற்று சாஸ்திர பரீக்ஷைமுதலியனசெய்து வந்ததனாலேயே, அக்காலத்திலுள்ள மற்ற ஸ்திரீகளுக்கெல்லாம் கல்வியில் தேர்ச்சியும் கற்கவேண்டுமென்ற ஆசையுமிருந்ததென்று நினைப்பதற்குக் காரணமில்லை. ஆனால் இக்காலத்திலோ பொதுவாய் ஸ்திரீகளுக்கெல்லாம் எழுதப்படிக்கத் தெரியவேண்டும் என்ற ஆசையிருக்கிறது. மேலும் அநேக ஸ்திரீகள் அப்படியே கற்றுக்கொள்ளுகிறார்கள். நம்மவர்களுள் அநேகர் நமது முன்னோர்களிருந்த நிலைமையைக்குறித்து பெருமை கூறுவது மிக சாதாரணம். அதன் பிரகாரம் மேற்கூறிய வித்வசிரோமணிகளைக் குறித்தும் வீண்பெருமை கூறிக்கொள்வதுண்டு. ஆனால் அவர்கள் பெருமையைக் குறித்துப் பேசுவதனால் நமக்கென்ன உண்டு? பல நூற்றாண்டுகளுக்குமுன் சில இந்துஸ்திரீகள் நன்றாய்க் கல்விகற்றிருந்ததனால் நாம் படித்தாற்போலாகுமா? அவர்களது கல்வித்திறமை நமது குழந்தைகளுக்கு நல்லறிவைப் புகட்டி அவர்களை நல்வழிகளில் திருப்பக் கூடுமோ? அல்லது அது நமது கணவர்களைச் சந்தோஷப்படுத்தி அவர்கள் வேலையில் ஒத்தாசைக்கிடமாயிருக்குமோ? ஆகையால் வீண் கர்வத்துடன் நமது முன்னோர்களைப் புகழ்ந்துகொண்டிருப்பதைக் காட்டிலும், இப்போது நம் முன்னோர்கள் நம்மைவந்து பார்த்தால் அவர்கள் நம்மைப் புகழத்தக்கபடி நாம் நடந்துகொள்வது எவ்வளவு சிலாக்கியமானது?

SIXTY YEARS' PROGRESS.

அறுபது வருஷத்து அபிவிருத்தி:

சென்னை இராஜதானி.

இப்போது நமது நாட்டை ஆளும் பிரிடிஷ் துரைத்தனத்தார் மிகக் கருத்து எடுத்துக்கொண்டு பெண்கல்வியை விருத்திசெய்ய விரும்புகிறார்கள். நமது இந்து ராஜாக்கள் நாட்களில் என்ன செய்தார்கள் என்பது புராணம் மூலியமாய் நமக்குத் தெரிகின்றதேயொழிய நிச்சயமாய் சரித்திர பூர்வமாய்த் தெரியாது. ஆயினும் இராஜாங்கத்தார் பொறுப்பு எடுத்துக்கொண்டு பெண்கல்வியை விருத்திசெய்ததாக தகுந்த சாக்ஷியங்கள் இல்லை. மகம்மதியர் நாட்களிலோ கேட்கவே வேண்டியதில்லை. அவர்கள் ஸ்திரீகளைச் சும்மாவிட்டால் அதுவே பெரிய உபகாரமாய் ஜனங்கள் எண்ணினார்கள். இங்கிலீஷ்காரர்கள் நமது தேசத்தைக் கைக்கொண்டபிறகுதான், இன்னும் நமது தேசத்துக்குச் செய்யும் மற்ற நன்மைகளுடன் பெண்கல்வியையும் கொஞ்சம் கொஞ்சமாய் விருத்திசெய்துகொண்டு வருகிறார்கள். ஆனால் அவர்களுக்குள்ளும், கிறிஸ்தவ பாதிரிமார்கள் தான் முதலில் பெண்கல்வியில் சிரத்தையெடுத்துக்கொண்டார்கள். சுமார் 1840-ம் ஆண்டில் சென்னை ராஜதானியில் முதல் முதலில் கிறிஸ்தவப்பெண்பிள்ளைகளுக்காக பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தினார்கள். 1850-ம் வருஷத்தில் சுமார் 250 - பெண்பாடசாலைகளும் அவைகளில் சுமார் 8000 - மாணாக்கர்களும் இருந்ததாகத் தெரியவருகிறது. இப்பாடசாலைகளெல்லாம் கிறிஸ்தவ பாதிரிகளுக்குச் சேர்ந்தவையே. 1854-ம் வருஷத்தில் துரைத்தனத்தார் கல்வியின் விஷயமாய்ப் பொதுவாய் அநேக ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்தார்கள். அவைகளில் பெண்கல்வியையும் சேர்த்துக்கொண்டு அதற்காகப் பணஉதவி (Grant) முதலானவைகள் கொடுத்தும், இன்னும் மற்ற விதமாயும் அபிவிருத்தி செய்யவேண்டிய ஏற்பாடு செய்தார்கள். இதனால் அநேகம் புதிய பெண்பாடசாலைகளுண்டாய், கல்வி கற்கும் பெண்கள் அதிகமானார்கள். 1882-ம் வருஷத்தில் சுமார் 56)-பெண் பாடசாலைகளும் அவைகளில் 35-ஆயிரம் மாணாக்கர்களும் இருந்ததாய்த் தெரியவருகிறது. ஆனால் சென்ற வருஷத்திலோ, இந்த ராஜதானியில் சுமார் 1,100 பெண் பாடசாலைகளும் அவைகளில் லக்ஷத்து இருபதினாயிரம் மாணாக்கர்களும் இருந்ததாகத் தெரியவருகிறது.

PROGRESS OF FEMALE EDUCATION IN BENGAL.

வங்காளத்தில் பெண்கல்வி அபிவிருத்தி.

நமது ராஜதானியை விட்டு வங்காளத்தில் பெண்கல்வியின் ஸ்திதியைக் குறித்து நோக்குங்கால், அங்கேயும் முதலில் கிறிஸ்தவ பாதிரிகள்தான் அதைத்துவக்கினதாய்த் தெரியவருகிறது. ஆனால் 1850-ம் வருஷத்தில் இந்து ஸ்திரீகளுக்கென்றே தனியாயிருக்கும் காலேஜாகிய 'பெத்யூன் காலேஜ்' (Bethune College) அங்கே ஸ்தாபிக்கப்பட்டது. சில வருஷங்கள் சென்றபின் டல்ஹௌஸி பிரபு (Lord Dalhousie) கவர்னர் ஜனரலாயிருக்கையில், இது கவர்ன்மெண்டாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இப்போது அவர்கள் வசத்தில் தானிருக்கிறது. 1879-ம் வருஷத்தில் இந்தப்பாடசாலையிலிருந்து ஸ்திரீகள் பி. ஏ. பரிக்ஷைக்குச் சென்றார்கள். அது முதல் வருஷா வருஷம் அந்தப் பரிக்ஷைக்குச் சென்று தேறிப் பட்டம் பெற்றுவருகிறார்கள். சிலர் மிக கௌரவமாய்த் தேறுகிறார்கள். சிலர் M. A. பரிக்ஷையும் கொடுத்திருக்கிறார்கள். அவர்களில் இரண்டுபேர் சென்ற வருஷத்தில் கல்கத்தா (University) சர்வகலா சங்கத்தாரால் (Chief Examiners.) முக்கிய பரிக்ஷாதிகாரிகளாய் நியமிக்கப்பட்டிருந்தார்கள். மேற்சொன்ன பெத்யூன் காலேஜைத் தவிர வங்காளத்தில் ஸ்திரீகளுக்கென்றே பெரிய பாடசாலைகள் இன்னும் சில இருக்கின்றன. இவ்விஷயங்களிலெல்லாம் நமது ராஜதானியைவிட வங்காளம் சிறந்ததாயிருந்தபோதிலும், பொதுவாய்ப் பார்த்தால், பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்த சில ஸ்திரீகள் தான் மேற்சொன்ன பாடசாலைகளுக்குச் சென்று கற்கிறார்களேயொழிய, மற்றப்படியுள்ள ஹிந்து ஸ்திரீகள் நம்மிலும் வித்தையில் குறைவாகவேதானிருக்கிறார்களென்று தெரிகிறது.

IN BOMBAY.

பம்பாய் இராஜதானி.

பம்பாய் ராஜதானியிலும் முதலில் கிறிஸ்தவ பாதிரிகள்தான் பெண்கல்வியை விருத்திசெய்தார்கள். ஆனால் அந்த ராஜதானியில் இந்துக்கள் தங்கள் பெண்களுக்கென்றே, வெகுவருஷங்களுக்குமுன், பூனா, ஆமதபாத் முதலிய பட்டணங்களில் பாடசாலைகள் ஏற்படுத்தினார்கள். இப்போது பம்மாய் ராஜதானியில் பெண்கல்வி அதிக விருத்தியடைந்திருக்கிறதென்பது நமக்கெல்லாம் தெரிந்த விஷயமே.

SOME PARTICULARS.

சில விவரங்கள்.

மூன்று ராஜதானிகளிலும் கிறிஸ்தவ பாதிரிகள்தான் முதலில் பெண்கல்வியை விருத்திசெய்தார்களென்றும் கிறிஸ்தவப்பெண்பிள்ளைகள் தான் முதலில் கல்வி கற்றார்கள் என்றும் மேலே கண்டோம். இப்போதுகூட இந்து ஸ்திரீகளைவிட கிறிஸ்தவ ஸ்திரீகள்தான் வித்தையில் மேலாகவும் கணக்கில் அதிகமாகவும் படிக்கிறார்களென்பது நம்மெல்லாருக்கும் தெரிந்த விஷயமே. நமது ராஜதானியில்1900-வருஷம்வரையில் பி.ஏ. பரிக்ஷை தேறினஸ்திரீகள் 3-4 பேர் இருக்கிறதாகத்தெரியவருகிறது. அதில் சென்ற வருஷம் அந்தப்பட்டம்பெற்ற மிஸ்ஸஸ் ஸத்தியநாதனைத் தவிர மற்றவர்களெல்லாம் ஐரோப்பியர்கள். இப்போது எம். ஏ. பரிக்ஷையில் தேறின ஸ்திரீகள் 25 பேர் இருக்கிறதாகத் தெரியவருகிறது. அதில் 20 பேர் ஐரோப்பியர்களும் மற்ற 5 பேர் கிறிஸ்தவர்களுமாம். 'மெட்ரிகுலேஷன்' பரிக்ஷையில் தேறியிருப்பவர்கள் 309 பேர் இருக்கிறார்களாம். அதில் 4 பிராமண ஸ்திரீகளும், 1 மகமதிய ஸ்திரீயும், 6 பார்சீக ஸ்திரீகளும், 71 கிறிஸ்தவர்களும், 227 ஐரோப்பியர்களும் இருப்பதாய்த் தெரியவருகிறது. மேற்கண்ட எண்ணிக்கைகளைப் பார்க்குங்காலத்தில் கிறிஸ்தவ ஸ்திரீகளும் ஐரோப்பிய ஸ்திரீகளும் அதிகமாய்க் கல்வி கற்கிறார்களேயொழிய நம்மவர்

கள் கற்கிறதில்லை யென்ற செவ்வையாய் விளங்குகிறது. பெண்பாடசாலைகளில் இன்னும் கீழ் வகுப்புக்களாகிய 'லோயர்-செகண்டரி', 'ப்ரைமெரி' வகுப்புகளில் படிக்கும் பெண்களைக் கணக்கெடுத்தாலும், மேற்கண்ட விஷயமே தெரியவருகிறது. முன்னே யிருந்த ஸ்திதிக்கு இப்போது பெண்கல்வி விருத்தியாய்க்கொண்டிருக்கிறதென்பதற்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லை. ஆனால் ஆண்பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளில், நமது பிள்ளைகள் கிறிஸ்தவப்பிள்ளைகளைக் காட்டிலும் அதிகமாயிருக்க, பெண்பாடசாலைகளில் மாத்திரம் ஏன் கம்மியாயிருக்கிறார்கள்? இது நமக்கு மிகவும் வெட்கத்தைத் தரத்தகுந்ததல்லவா? மேலும் ஆண் பிள்ளைகள் பாடசாலைகளில் முக்கால்வாசிப் பிள்ளைகள் பிராமணர்களாயிருக்க, பெண்பாடசாலைகளில் 100-க்கு 10-க்கூட பிராமணப்பெண்கள் இல்லாதிருப்பதற்கு என்னகாரணம்? இந்தக் குறைகளையெல்லாம் சீர்திருத்துவது நம்முடைய கடமையாய் எண்ணிக்கொண்டு நாம் ஒவ்வொருவரும் நம்மாலியன்றமட்டும் முயலவேண்டும்.

SOME EDUCATIONAL INSTITUTIONS.
சில வித்யா ஸ்தாபனங்கள்.

கல்கத்தாவில் இந்து ஸ்திரீகளுக்கென்றே தனியாக ஏற்பட்டுள்ள 'பெத்யூன் காலேஜ்' ஒன்றிருக்கிறதென்றும் அதிலிருந்து வருஷாவருஷம் ஸ்திரீகள் பி. ஏ. பரீக்ஷைக்குச் சென்று பட்டம் பெறுகிறார்களென்றும் முன்னமே கண்டிருக்கிறோம். பம்பாயில் இப்படிக்கொத்த காலேஜ் இல்லாவிடினும் இந்து ஸ்திரீகளுக்காக அநேகம் உயர்தரபாடசாலைகள் (High Schools) இருக்கின்றன. நமது பக்கத்தில் சுதேச சமஸ்தானமாகிய மைசூரில் மகாராணியவர்களது காலேஜ் ஒன்றிருக்கிறது. பாளயங்கோட்டையிலும் இந்தப்பட்டணத்திலும் கிறிஸ்தவ பாதிரிகளால் ஏற்படுத்தப்பட்ட காலேஜ் ஒவ்வொன்றிருக்கின்றன. இவைகளிலெல்லாம் எப். ஏ. பரிக்ஷைக்குக் கல்வி கற்றுக்கொடுக்கிறார்கள். ஆனால் இவைகளைத்தவிர இந்து ஸ்திரீகளுக்கென்று நம்மவர்களால் நடத்தப்பட்ட 'ஹைஸ்கூல்கள்' எங்கேயிருக்கின்றன?

சென்ற இரண்டு வருஷங்களாகச் சென்னையில் பெண்பாலார்க்கென்று கவர்ன்மெண்ட் காலேஜ் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அதைப்போல் கிறிஸ்தியன் காலேஜ் ஒன்றும் மிஷன்களால் ஏற்பட்டிருக்கிறது. கடற்கரையோரத்திலுள்ள சென்னை கவர்ன்மெண்டு ஸ்திரீகள் காலேஜிலும் திருவல்லிக்கேணியிலுள்ள செகண்டரி பாடசாலையிலும் இரண்டு பிராமணமாதர்கள் பி. ஏ. பட்டதாரிகளாய் வேலையிலமர்ந்திருக்கிறார்கள்.

* * * * *

HOME EDUCATION CLASSES.
வீட்டிற்படிக்க வித்யானுகூலங்கள்.

பெண்கல்வியை விருத்திசெய்ய, மேற்கண்ட பாடசாலைகளைத் தவிர, வீட்டுக்கு வந்து கல்வி கற்பிக்கும் 'ஜினானா' உபாத்திமார்களும் இருக்கிற விஷயம் நமக்கெல்லாம் தெரிந்ததே. இந்த 'ஜினானா' ஏற்பாடு இந்தப் பட்டணம் தவிர கூடலூர், கோயமுத்தூர், சேலம் முதலிய பட்டணங்களிலும் இருக்கின்றனவாம். இவைகளிற் சில கிறிஸ்தவ மிஷன்களால் நடத்தப்பட்டும், மற்றவைகளெல்லாம் 'நாஷனல் இந்தியன் அஸோஸியேஷன்' என்னும் சங்கத்தால் நடத்தப்பட்டும் வருகின்றன. லண்டனிலுள்ள தலைச்சங்கத்துக்கு, இப்போது நமதிடையிலிருக்கும் மிஸ் மானிங் துரைசானி தான் முக்கிய காரியதரிசி. மகாராணியின் ஜேஷ்டபுத்திரராகிய வேல்ஸ் இளவரசரும் இன்னும் இந்த தேசத்தில் கவர்னர் ஜெனரல், கவர்னர் உத்தியோகங்களிலிருந்து நீங்கிச் சென்றவர்களும், மிக முதன்மையான மெம்பர்கள். அவர்களெல்லாம் நமது நன்மைக்காக எடுத்துக்கொள்ளும் பிரயாசைக்கு நாம் மிகவும் வந்தனமுடையவர்களாயிருக்க வேண்டும்.

GENERAL.
பொது.

பொதுவாய்ப் பெண்கல்வியில் முன்னிலும் இப்போது கொஞ்சம் விருத்திக்குறைவு இருப்பதாய் இவ்விராஜதானியில் வித்யா இலாகாத் தலைவராயிருப்பவர் (Director of Public Instruction) தனது ரிப்போர்ட்டில் சொல்லியிருப்பதாய்த்தெரியவருகிறது. இந்தக் குற்றம் நிஜமாயிருக்கும் பக்ஷத்தில் நாம்கொஞ்சம் யோசித்துப்பார்க்கவேண்டும். ஏனெனில் ஸ்திரீகளுக்குக் கல்வி கற்பிப்பதனால் தீங்கு விளைகிறதென்ற சந்தேகத்துக் கிடமில்லாவிட்டால் அது குறைவதற்குக் காரணமேயில்லை. மேற்சொன்ன சங்கதி நிஜமாயிருந்தாலும் இல்லாவிட்டாலும், கல்விகற்ற ஸ்திரீகள் தங்கள் பொறுமையினாலும், அடக்கத்தினாலும், பிறருக்கு உதவி செய்துகொண்டு நடந்து கொள்ளும் மற்ற எல்லா வித நடத்தைகளினாலும், கல்வியினால் ஸ்திரீயினது குணநிசயங்கள் ஸ்வர்ணத்தில் பதித்த இரத்தினம்போல பிரகாசிக்குமேயொழிய தீங்கு அடையா என்று தெளிவாய்க் காட்டவேண்டும். அப்படிப் படித்த ஸ்திரீகளெல்லாம் நடந்துகொண்டால், கல்வியின் வாசனையறியாத மூடர்கள்கூட அதனது சிரேஷ்டத்தை நன்கு உணர்வார்கள். பெண்கல்வி நாளுக்கு நாள் விருத்தியடையுமென்பதற்குச் சிறிதேனும் ஆக்ஷேபமில்லை.

IMPEDIMENTS.
தடைகள்.

ஸ்திரீகள் கல்விகற்பதற்குத் தடைகள் அநேகம் நமது தேசத்தில் இருக்கின்றன. இந்தக் காரணங்களால் பெண்கல்வி விருத்தியடைகிறதில்லை. முதலாவது, பத்து வயதுக்குமேல் பெண்கள் பள்ளிக்கூடத்துக்குப் போனால், ஊர் ஜனங்களுக்கு வெறுப்பு உண்டாகிறது. பேசப்போனால் நாம் இவ்விடத்தில் மாதத்துக்கு ஒருதடவை பிரசங்கங்களுக்கு வருகிறதுகூட சாதாரண ஜனங்களுடைய எண்ணங்களுக்கும் அபிப்பிராயங்களுக்கும் விரோதமாயிருக்கிறது. கிரகணம்முதலிய விசேஷ நாட்களில் புருஷர்களுக்கெல்லாம் எதிரே சமுத்திரத்தில் போய் ஸ்நானம் செய்வதில் தப்பில்லையாம். புருஷர்கள் நெருங்கிய கூட்டங்களுக்குள் உற்சவாதி நாட்களில், இராக்காலத்தில், கோயில் குளங்களுக்குச்செல்லுவதில் பிசகொன்றுமில்லையாம். ஆனால் பகற்காலத்தில் ஸ்திரீகள்மாத்திரம் இருக்கும் பாடசாலைகளுக்கு 10-வயதுக்கு மேற்பட்ட பெண்பிள்ளைகள் சென்றால் தோஷத்துக் கிடமாகும் என்பார்கள். பொதுஜன அபிப்பிராயத்தை எதிர்த்துச்செல்வது கஷ்டம்தான். ஆனால் இந்த விஷயத்தில் ஜனங்களுடைய அபிப்பிராயம் எவ்வளவு அநுசரிக்கத் தக்கதாயிருக்கிறது என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். மேலும் அநேகர் தங்கள் பெண்பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கனுப்ப வண்டி வைத்துக்கொடுக்கவும் இன்னும் மற்ற விதங்களில் பணம் செலவழிக்கவும் சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். தவிரவும், ஸ்திரீகளுக்கும் படிக்கவேண்டுமென்ற ஆசை அதிகமாயில்லை. இப்படிக்கொத்த பல காரணங்களால்தான் பெண்கல்வி அதிகமாய் நமது தேசத்தில் விருத்தியாகிறதில்லை.

THE IMPORTANCE OF SELF-HELP.
தன்முயற்சியின் பிரதானம்.

ஆனால் இவைகளுக்கெல்லாம் புருஷர்கள் பேரில் குற்றம் கூறுவதில் உபயோகமில்லை. அவர்கள் தங்களாலியன்றமட்டும் பிரயாசைப்படுகிறார்கள். பிரயாசையெடுத்துக்கொள்பவர்கள்பேரில் குற்றம் கூறினால் உள்ளதும் போய்விடும். ஆகையால் நாமும் நம்மால் கூடிய உதவி செய்யவேண்டும். ஒவ்வொரு ஸ்திரீயும் தனது புருஷனிடத்தில் ஏன் கல்வி கற்றுக்கொள்ளக்கூடாது? அவர்கள் அவகாசமாயிருக்கும் காலத்தில் நாம் அவர்களைக் கற்றுக்கொடுக்கச் சொன்னால் செய்யமாட்டார்களா? எவ்வளவு சந்தோஷத்துடன் செய்வார்கள்! "மனமுண்டானால் வழியுண்டாகும்" என்ற பழமொழியின்படி நாம் கல்வி கற்கவேண்டுமென்ற ஆசையுடன் வேண்டிய முயற்சிசெய்தால், கற்றுக்கொள்ள வழியில்லாமல் போகாது.

THE INFLUENCES IN EDUCATION OF CHILD, PARENT AND TEACHER.
BY MISS E. A. MANNING.
வித்யாப்யாச முயற்சி: குழந்தைகள், பெற்றோர்கள், போதகர் செய்கடன்.

"வித்யாப்யாச விஷயத்தில் குழந்தைகள், பெற்றோர், உபாத்தியாயர் இவர்கள் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய முயற்சிகளும் அவற்றின் பலன்களும்" என்னும் தலைப்பின் கீழ் மிஸ் மானிங் சென்னையிலிருந்தபொழுது ஒரு பிரசங்கம் செய்தார். அது மிகவும் முக்கியமானதன்றி நாம் கவனித்துக் கிரகித்துக்கொண்டு பயன்படவேண்டிய ஆணித்தரமான புத்திமதிகள் பல நிரம்பினதாயிருப்பதால் அப்பிரசங்கத்தின் சாராம்ஸம் விளங்க அதை மொழிபெயர்த்து இங்கு பிரசுரிக்கிறோம்.

THE MEANING OF EDUCATION.
'படித்தவர்' என்றால் அர்த்தம் என்ன?

'படித்த மனிதன்,' 'படித்த ஸ்திரீ' என்று சொல்லுகிறோமே, அப்படியென்றால் என்ன? படித்தவர் என்றால் இந்த ஜன்மத்தில் செய்யவேண்டிய கடமைகள், வேலைகளைச் செய்ய நன்றாகவும் ஜாக்கிரதையாகவும் பழக்கப்பெற்றவர் என்று அருத்தம். இந்தப்பழக்கம் போதனையாலும், அப்பியாசத்தாலும், சொந்த முயற்சியாலும் சித்திக்கத் தக்கது. இப்படி அவர்களைத் தயார் செய்வதற்குத்தான் படிப்பித்தல் அல்லது வித்தியாப்பியாசம் செய்வித்தல் என்று சொல்கிறது. இப்படித் தயார் செய்வதற்குப் பிடிக்குங்காலந்தான் இளமைப் பருவம்.

EARLY TRAINING.
"இளமையிற் கல்."

இந்த இளமைப் பருவத்தில் ஒவ்வொருவரும் பின்னால் செய்யவேண்டிய கடமைகள், தொழில்களுக்கு அவர் தகுதியானவர்களாகும்படி தர்பீது செய்து பழக்கப்படவேண்டியது அத்யாவசியகம். இளமைப்பருவம் எல்லாருக்குமுரியதுபோல அக்காலத்திற்குரிய மேற்குறித்த தர்பீது முயற்சியும், அதாவது பின்வரும் காலத்தில் அவரவர் செய்யவேண்டிய கடமைகள் தொழில்களைச் சரிவரச்செய்து முடிக்கத்தக்கவராகப் பழக்குவித்தலும் ஒவ்வொருவருக்கும் உரித்தானதே. இவ்வுரிமையைப் பெற்றோரும் இராஜாங்கத்தாரும் சரிவரச் செலுத்தக் கடமைபட்டிருக்கிறார்கள். பெற்றோர் தம் குடும்பத்துக்குத் தலைவராயிருப்பதுபோல், இராஜாங்கத்தார் அவர்கள் அதிகாரத்துக்குட்பட்டு வாழும் ஜனசமூகத்துக்கு மாதா பிதா ஸ்தானத்தை வகித்தவர்களாயிருக்கிறார்கள். குடும்ப க்ஷேமத்துக்குப் பெற்றோர் பாத்தியப்பட்டவர்களாக விருப்பதுபோல தேச க்ஷேமத்துக்கு இராஜாங்கத்தார் பாத்தியப்பட்டவர்களாக விருக்கிறார்கள். இவ்விருதரத்தார் கடமைகளையும் வரையறுத்து விளங்கவைப்பது, பிரஸ்தாப விஷயத்திற்கு அவ்வளவு ஒட்டினதாகவில்லை. இருவரும் அவரவர் கடமைகளைச் சரிவரச் செலுத்தவேண்டிய தவசியமென்று மட்டும் வற்புறுத்துவோம். இது நிற்க, வித்யாப்பியாசத்துக்குரிய இளமைப் பருவகாலத்தைச் சரியாக முறைப்படி ஏற்பாடு செய்து செலவழித்து வந்தால் அக்கால முடிவில் புருஷத்துவம், பெண்மைத்தனம் வரும்பொழுது 'படித்தவர்' என்று சொல்லும்படியான யோக்கியதையுள்ளவர்களாவோம். 'படித்தவன்,' 'படித்தவள்' என்று சொல்வதற்கு உண்மையான அருத்தம் இது.

THE EFFICIENCY OR INEFFICIENCY OF SCHOOL AND COLLEGE EDUCATION.
ஸ்கூல், காலேஜ், படிப்பின் குறைநிறை.

இப்பொழுது நாம் ஒருவரைக் கண்டு "உங்கள் பிள்ளை படித்தவனா?" என்று கேட்டால், "ஆம், அவன் அந்த 'ஸ்கூலில்' படித்தான், இப்பொழுது இந்த 'காலேஜில்' படிக்கிறான்" என்று மறுமொழி சொல்வது சகஜமாயிருக்கிறது. அவர் சொல்லியபடி, அவர் பிள்ளை ஒரு ஸ்கூலில் படித்து முடித்து ஒரு காலேஜில் படித்துக்கொண்டிருப்பது விசேஷந்தான். ஆனால் அதனாலேயே அவன் "படித்தவன்" என்று நிச்சயிக்க நியாயமில்லை. அப்படியானால், பின்னை, பிள்ளை 'படித்தவன்' என்று எப்பொழுது நிச்சயமாய்ச் சொல்லலாம்? என்கிற கேள்வி உடனே பிறக்கும். அதற்கு பதில் சொல்லி விளங்கவைப்பதுதான் மிஸ் மானிங் உபந்நியசிக்க எடுத்துக்கொண்ட விஷயம்.

THE THREE ESSENTIALS OF EDUCATIONAL EFFICIENCY.
உண்மையான படிப்புக் கின்றியமையாத மூன்றம்சங்கள்.

பிள்ளை பள்ளிக்கூடத்தில் வாசிக்கிறது ஒன்று மட்டும், மேற்சொன்ன அர்த்தத்தில் 'படிப்பு' ஆகமாட்டாதென்றால் பின்னர் வேண்டியது என்ன? 'படிப்பு' அநேகர் நினைக்கிறபடி உபாத்தியாயரை மட்டும் பொறுத்ததாகவில்லை. உண்மையான படிப்புக்கு அவசியமான அம்சங்கள் இன்னும் இரண்டிருக்கின்றன. அவை படிப்பு விஷயத்தில் பிள்ளை தானே செய்யும் முயற்சியொன்று; பிள்ளையின் பெற்றோர் செய்யும் முயற்சியொன்று. இப்படிக்குள்ள எல்லா அம்சங்களும் சேர்ந்து, உபாத்தியாயர் முயற்சியோடு, பிள்ளையின் சொந்த முயற்சி பெற்றோரின், முயற்சி இவைகள் கலந்துவர உழைத்து வந்தால் மட்டுமே உண்மையான படிப்பு, அதாவது, உயிர்வாழ்க்கைக்கு வேண்டிய உண்மையும் பிரயோஜனகரமுமான யோக்யாம்சங்கள் பொருந்தினவர்களாவோம்.

THE INFLUENCE IN EDUCATION OF THE CHILD, OR SELF-EDUCATION,
குழந்தைகளின் தன்முயற்சி.

இப்பொழுது படிப்பில், குழந்தை அல்லது பிள்ளையின் சொந்த முயற்சியைப்பற்றிச் சற்று விசாரிப்போம். குழந்தை ஐந்து வயதாகுமுன், பிந்தி அதன் ஆயுள் முழுவதிலும் கற்றுக்கொள்வதைவிட அதிகமாகக் கற்றுக்கொள்கிறது என்று மிக்க சாதுர்யவான் ஒருவர் ஒரு காலத்தில் சொன்னார். அது வாஸ்தவமே. ஐந்துவயதான குழந்தையையும், மூன்று நாலு மாசமான குழந்தையையும் ஒத்துப் பார்ப்போமானால், ஐந்துவயதுக் குழந்தைக்கு நிலை குலையாமல் நிற்கத்தெரிகிறது. நடக்கத்தெரிகிறது. ஓடவும் குதிக்கவுங்கூடத் தெரியும். தாராளமாயும் வேகமாயும் பேசத்தெரிகிறது. தன் மனதிலுள்ள எண்ணங்களையும கருத்துக்களையும் திட்டமாய்ச் சொல்லத்தெரிகிறது. தான் சொல்வதின் அருத்தம் நன்றாக விளங்கும்படி தெரிவிக்கத்தெரிகிறது. வஸ்துக்கள் தூரத்திலிருப்பது சமீபத்திலிருப்பதை யறிந்துகொள்ளக் கற்றிருப்பதனால் தானாக வழியறிந்து நடக்கத்தெரிகிறது. ஸ்பரிச உணர்ச்சியால், வஸ்துக்களின் குணங்கள் அநேகத்தை யறிந்திருக்கிறது. கடினம், மென்மை, பளு, இலேசு, உருண்டை, நீளம், சூடு, குளிர்ச்சி முதலான பல குணங்களை யறிந்திருக்கிறது. இப்படி இன்னும் வஸ்துக்கள் பலவற்றின் குணம் குறிகளை யறிந்திருக்கிறது: அவனுடைய மனோசக்திகள் பலவும் அப்பியசிக்கப்பட்டு விர்த்தியாய்க்கொண்டிருக்கின்றன. ஞாபகசக்தி, பாவனாசக்தி, யூகசக்தி இவைகளையெல்லாம் உபயோகிக்கக் கற்றுக்கொண்டிருக்கிறான். தர்ம விஷயத்திலும் இது நல்லது, கெட்டது, என்று ஒருவாறு பகுத்தறியவும், இன்னார் நல்லவரென்றுணர்ந்து அவரை நேசிக்க அபிமானிக்கவும், மற்றவரை விலக்க வெறுக்கவும் கற்றுக்கொண்டிருக்கிறான். சரி தப்பு இன்னதென்று உணரவும், உணர்ந்தபடி நடக்கவும் கற்றுக்கொண்டிருக்கிறான். இவைகளையெல்லாம் ஐந்து வயதுக் குழந்தை எங்கு கற்றுக்கொண்டது? பள்ளிக்கூடத்திலுமில்லை, காலேஜிலுமில்லை. ஆயினும் இந்த 5 வருஷகாலத்தில் இக்குழந்தை கற்றுக்கொண்ட விஷயங்கள் நாம் கண்டபடி மிகவும் ஏராளமானவையே. இவைகளையெல்லாம் அக்குழந்தை யறிந்துகொண்டதெப்படி? எல்லாம் தன்முயற்சியாலே. இப்படிப்பட்ட சிறு குழந்தைகளுக்கு முதற்றரப்படிப்பு அல்லது வித்யாப்யாசம் சித்திக்க நாம் செய்யவேண்டியதென்னவெனில் தகுந்தவரையறைகளுக்குட்பட்டு தன்னிஷ்டப்படி தாராளமாகச் செல்லவிட்டுத் தானாகக் கற்றுக்கொள்ள விடுவதேயாம்.

QUERIES AND ANSWERS.
குழந்தைகளின் பிரசனோத்தரம்.

குழந்தைகள் எதைக்கண்டாலும் அதைப்பற்றித் தெரிந்துகொள்ள ஆசைப்படுவது சுபாவமாக விருக்கிறது. அது என்ன, எங்கேயிருந்து வந்தது, இப்படிச்செய்தால் என்ன, அப்படி செய்தால் என்ன? என்று ஆயிரங் கேள்விகள் கேட்கின்றனர். ஒரு பொம்மையைக் கொடுத்தால் அதன் அழகைப்பார்த்து, அதன் வர்ணத்தைப் பார்த்து, அதை உடைத்துப்பார்த்து இனனும் எத்தனையோ பரீக்ஷைகள் செய்து பார்க்கின்றனர். இக்காலத்தில் பள்ளிப்பிள்ளைகள் அருத்தம் தெரியாமல்

பொட்டைப்பாடம் செய்வதுபோல் எதையும் தெரிந்துகொள்வதில் குழந்தைகள் திருப்தியடைகிறதில்லை. நெருப்பு சுடுமென்றால், கேட்காது; அதைத் தொட்டு, கையைச் சுட்டுக்கொண்டு, 'சுடுகிறது' என்றால் இன்னவென்று அனுபவத்தில் தெரிந்துகொண்ட பின்தான் திர்ப்தியடையும். தனக்குத் தெரியாத விஷயங்களையெல்லாம் தன் தகப்பனைக் கேட்டுத் தெரிந்துகொள்ளும். பெரியவர்கள் தெரியாத வார்த்தைகளுக்கு அர்த்தம் பார்க்க அகராதியைப் பார்ப்பதுபோல, குழந்தைகள் தங்களுக்குத் தெரியாத விஷயங்களைத் தெரிந்துகொள்ள தகப்பனைப் பார்த்திருக்கும்.

KINDER-GARTEN OR THE CHILD-GARDEN.

பாலபிருந்தாவனம், அல்லது பிரகிருதி வித்யாரம்பம்.

புத்தியில்லாத பெற்றோர்களே குழந்தைகள் கேட்கும் கேள்விகளுக்கு சரியான பதில் சொல்லாமல், சாக்குப்போக்குச் சொல்லி வாயையடக்குவார்கள். குழந்தைகள் செய்யும் ஒவ்வொரு காரியமும், ஒவ்வொரு வார்த்தையும், ஒவ்வொருயத்தனமும், எல்லாம் அக்குழந்தைகளின் விர்த்தியை நாடினதாய், விர்த்திக்கும் வளர்ச்சிக்கும் காரணமாயிருக்கின்றன.

SELF-EDUCATION GUARANTEES EFFICIENCY OF PRIMARY EDUCATION.

பிரதம வித்யா சிக்ஷையின் திறம், அல்லது ஸ்வபோத வுணர்ச்சி.

இப்படியாக ஐந்து வயதுக் குழந்தை தான் கற்றதெல்லாம் தன் சொந்த முயற்சியாலேயென்று அறிகிறோம். எல்லாம் 'கிண்டர்கார்டன்' முறைப்படி தானாகக் கற்றுக்கொண்டதே. 'கிண்டர்கார்டன்' முறையாவது குழந்தைகள் தங்கள் தேகமனோ சக்திகள் விரிந்து வளருவதற்கு அனுகூலமானபடி வஸ்துக்களும், சந்தர்ப்பங்களும் சூழ்ந்திருக்கும்படியான ஸ்திதியில் வைத்து அவர்கள் தக்க மேற்பார்வையில் தம் அந்தக்கரணங்களைத் தாராளமாக உபயோகித்துத் தம் சொந்த முயற்சியால் அறிவையடைந்து விர்த்தியடையத்தக்க வழியாம். இப்படி ஐந்து வயது வரையில் குழந்தை தன் முயற்சியால் தானாகக் கற்றுக்கொண்டது போலவே, அதற்குமேல் வயசில் வளரவும் அவனுடைய சொந்த முயற்சி அவன் உண்மையான படிப்புக்கு அவசியம் வேண்டியதாயிருக்கிறது. இப்படி ஒவ்வொரு குழந்தைக்கும் இயற்கையாய் அமைந்துள்ள படிப்புக்கனுகூலமான தன்முயற்சி செய்யும் சக்தியை அவனுடைய வித்தியாப்பியாச விஷயத்தில் நாம் எப்பொழுதும் துணைக்கொள்ள வேண்டும். 5 அல்லது 6 வயதில் பள்ளிக்கூடத்துக்குப் போகத் தலைப்பட்ட பின்னும், விஷயங்களைத் தானாக அறிந்து கிரகித்துக்கொள்ளும் விஷயத்தில், இதற்கு முன்னுள்ள தன் முயற்சியில்லாவிட்டால், பள்ளிக்கூடத்துக்குப் போவதினால் அவனுக்குண்டாகும் நற்பயன் மிகவும் சொற்பமாம். மேற்காட்டியபடி, படிப்பதில் அவன் சொந்த முயற்சியில்லாவிட்டால், அவன் பள்ளிப்படிப்பினால் புத்திசாலியாவதற்குப் பதிலாக, கட்டைபுத்தியுடையவனாக ஆனாலும் ஆவான். காலேஜிலும்கூட மாணாக்கன், எவ்வளவுக்கெவ்வளவு தானாக முயற்சித்து, எதையும் தன் சொந்த யத்தனங்களால் அறிந்துகொள்ளப் பிரயாசைப்படுகிறானோ, எவ்வளவுக்கெவ்வளவு போதனாசிரியர் உதவியையே நாடியிருப்பது குறைந்து, தன் சொந்த முயற்சியாலும் பிரயாசையாலுமே விஷயங்களையும் உண்மைகளையும் உணர்ந்து கிரகித்துக்கொள்கிறானோ, அவ்வளவுக்கவ்வளவு அவன் காலேஜில் வாசிப்பதும் ஆராய்வதும், அவனுக்குப் பயன் தருவதாய், அவன் படிப்பு பூரண அறிவைக் கொடுப்பதும், மனோசக்திகளை விர்த்தி செய்வதுமாகவிருக்கும். உண்மையை உரைக்கில், எந்தப் படிப்பும், படிக்கிறவன் தானே முயற்சித்து விடாது பிரயாசை யெடுத்துக்கொண்டு ஒவ்வொன்றையும் தானே சுயமாகக் கிரகித்துக் கொள்ளும்படியாக விருக்கும் வித்யாப்பியாசமே, உண்மையும், ஆணித்தரமானதுமாகும்.* மற்றதெல்லாம், வீணாகவும், பொய்யாகவும், பயனற்றதாகவும் முடிவதாகும்.

*Vide (Appendix) "Memorandum on the reform of rural Education" by C. V. Swaminatha Aiyar, K.S.S.A.

THE DUTIES OF PARENTS.

பெற்றோர் கடன்.

வித்தியாப்பாச விஷயத்தில் குழந்தைகள் செய்யவேண்டிய முயற்சியையும் அதன் முக்கியத்தையும் பற்றி இவ்வளவு தூரம் வற்புறுத்திக் கூறியபின், மிஸ் மானிங் துரைசானி பெற்றோர் கடமையையும் அவர்கள் செய்யவேண்டிய முயற்சியையும்பற்றி விஸ்தரித்துப் பேசினார். குழந்தைகள் கடைத்தேற, தாயும் தகப்பனும் சேர்ந்து அவர்கள் குழந்தைகளாயிருக்கும்பொழுது அவர்களை நன்றாகக் கவனித்து வரவேண்டியது மிகவும் முக்கியமான காரியம் என்று சொன்னார். இந்த விஷயத்தில் பெற்றோருக்குள்ள சக்தி ஒரு அரசனுக்குமில்லை. ஆகையால் பெற்றோர் குழந்தைகளிடத்தில் தங்களுக்கிருக்கும் அளவு கடந்த அதிகாரத்தையும் செல்வாக்கையும் புத்தியுத்தியோடு செலுத்தப் பார்க்கவேண்டும். அவர்கள் ஒழுக்க வழக்கங்களாலும், ஏற்பாடுகளாலும் தங்கள் குழந்தைகளின் வித்யாபிவிர்த்திக்கு அனுகூலமாகவோ, பிரதிகூலமாகவோ இருக்கலாம். பெற்றோர் நல்லவர்களாயிருந்து தங்களுடைய கடமைகளைச் சரிவரச் செலுத்த விரும்பினால் தங்களுடைய குழந்தைகள் எப்படிப்பட்டவர்களாயிருக்க வேண்டும்: எவ்விதம் வளர்ந்து விர்த்தியடைய வேண்டுமென்று உயர்ந்த மாதிரியான எண்ணங்களை மனதில்திரட்டி உருவாக்கி வைத்துக்கொள்ள வேண்டும். வைத்துக்கொண்டு அந்த உயர்ந்த மானதக்காக்ஷி யுருவுக்குச் சரியாகத் தங்கள் குழந்தைகளை வளர்க்க வழி தேடி ஓயாது சிந்தித்துழைக்கவேண்டும். தங்கள் பெண்களும் பிள்ளைகளும் பெற்றோர்க்கடங்கி, சுறுசுறுப்பும் நன்னடக்கையுமுள்ளவர்களாயிருக்க விரும்பினால், நன்னடத்தையை மெச்சி, துர்நடத்தையைக் கண்டித்து, நல்லவழியில் நடக்கத் தங்கள் சொந்த நடத்தைகளால் உதாரணம் காட்டி, கெட்டவர்கள் சகவாசம் படியாமல் பார்த்துத் தீயவழிகளை விலக்கச்செய்து, தங்கள் குழந்தைகள் நல்வழியில் விர்த்தியடைய ஒத்தாசை செய்து வரவேண்டும். பள்ளிக்குப் போகும் பருவம் வந்தபின் நல்ல சேர்மானமும் நன்னடக்கையும் நல்லதிட்டமும் படிமானப்படுவதற்கேதுவான பள்ளிக்கூடத்தைத் தேர்ந்தெடுத்து அதற்குத் தங்கள் பிள்ளைகளை யனுப்பவேண்டும். அனுப்புவதோடு தங்கள் கடமை முடிந்துபோய் விட்டதாக நினைக்கக்கூடாது. பள்ளிக்கூடத்தில் நடக்கும் விஷயங்களிலும், பிள்ளைகளின் படிப்பிலும் அக்கறையெடுத்துக்கொண்டு அவர்களை நல்வழிகளில் உற்சாகப்படுத்தி தீவழிகளில் எச்சரித்து நடத்திவரவேண்டும். இப்படி உறுதியாய் விடாமுயற்சியோடுழைத்து தினமானம் கொஞ்சம் கொஞ்சமாக உத்தேசித்த உருவகத்துக்கு ஒத்துவரப் பழக்கிக்கொண்டு போகவேண்டும்.

THE DUTIES AND RESPONSIBILITIES OF TEACHERS.

உபாத்திமார் கடனும் பொறுப்பும்.

பெற்றோர் கடமையும் முயற்சியும் இப்படியாகவிருக்க, உபாத்தியாயர் கடமையைப் பற்றிப் பேசுங்கால், அவர் பிள்ளைகளின் "வித்யாப்பாசம்" முழுவதையும் கவனிக்கவேண்டியவரா யிருக்கிறார். 'வித்யாப்யாசம்' என்பது புஸ்தகப்படிப்பைமட்டும் குறிக்காமல் குணம் நடத்தை மனோவிர்த்தி எல்லாவற்றையும் சேர்த்துக் குறிக்கும் அருத்தத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் உபாத்தியாயரின் கடமை மிகப் பொறுப்புள்ளதாயிருக்கிறது. உபாத்தியாயர் பாடங்களை முறைப்படி நன்றாகச் சொல்லிக்கொடுப்பதோடு பள்ளிக்கூடமுள்ள காலத்தில் பிள்ளைகளின் நடத்தைகளையும் கவனித்துத் திருத்த நல்வழியில் அவர்களை நடத்தக் கடமைப்பட்டவராயிருக்கிறார். பள்ளிக்கூடத்தில் சச்சரவு, கீழ்ப்படியாமை, சோம்பர், சூது, வஞ்சகம் முதலிய துர்க்குணங்கள் படிவதற்குக் காரணமான சந்தர்ப்பங்கள் உண்டாகலாம். அச்சந்தர்ப்பங்களில் உபாத்தியாயர் பிள்ளைகள் நடத்தையை

நோட்டமிட்டுக் கண்டித்துச் சரிப்படுத்தத் தவறினால், அப்பள்ளிப்படிப்பால் பிள்ளைகளுக்கு நன்மை விளையக்காரணமில்லாமற் போகும். பிள்ளை பரீக்ஷைகளிலெல்லாம் முதலாகவிருந்தாலும் அப்பள்ளிப் படிப்பு உபயோகமற்றதென்றே சொல்லவேண்டும். பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்குப் பெற்றோர் ஸ்தானத்தை வகித்திருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் பிள்ளைகளை நல்வழியில் நடக்க உற்சாகப்படுத்தி கெட்ட வழியில் நடக்கவிடாமல் தடுத்து ஆதரித்து வரல்வேண்டும். எந்தப் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் தங்கள் உபாத்தியாயர் குணம், நடத்தையில் அதிக மதிப்பு வைத்து அவரைக் கண்யப்படுத்தி நடத்திவருவதோடு, அவ்வுபாத்தியாயருக்குத் தங்களிடத்திலிருக்கும் மதிப்பை யிழக்கக்கூடிய எந்தச் செய்கையையும் செய்வது இகழ்ச்சியாக நினைக்கிறார்களோ, அந்தப் பள்ளிக்கூடந்தான் நல்ல பள்ளிக்கூடம் என்று சொல்லத் தக்கதாகும்.

COOPERATION AND COORDINATION OF THE ABOVE THREE-FOLD INFLUENCES.

மேற்சொன்ன மூன்றின் கூட்டுறவும் ஒத்துழைப்பும்.

முடிவாக, மிஸ் மானிங் வற்புறுத்திக்கூறியதென்னவென்றால், மேற்குறித்த மூன்று அம்சங்களும் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும். குழந்தை தானாகமுயற்சித்து எதையும் சொந்தப் பிரயாசையால் நன்குணர்ந்து கிரகித்து விர்த்தியடைந்து வரல்வேண்டும்; பெற்றோர் அப்படி விர்த்தியடைய முயற்சிக்கும் குழந்தைகளுக்கு நல்வழிகாட்டி அவர்கள் சொந்த அபிவிர்த்தியின்பொருட்டுச் செய்யும் யத்தனங்கள் பலிப்பதற்கு வேண்டிய சாதகங்களும், சாதனங்களும் அளிக்கச் சிரமமெடுத்துக்கொண்டுழைத்து வரல்வேண்டும்; உபாத்தியாயரும் தான் செய்யவேண்டிய பாகத்தில் குறைவுவராமல் கவனித்து நடந்துகொள்ளல்வேண்டும். அப்பொழுதுதான் ஒன்றுந் தெரியாத உதவியற்ற சிறுபாலன், நாலாவிதத்திலும் சமவிர்த்தியடைந்து, பயபக்தி நிறைந்து, சக்திவாய்ந்த மனமும், கண்யமும் பொருந்திய புருஷன் அல்லது ஸ்திரீயாக வளரக்கூடும்—என்று சொல்லிப் பிரசங்கத்தை முடித்தார்.

EASY LESSONS IN ECONOMICS.

THE SCIENCE OF ECONOMICS.

செல்வநூல்.

நாம் முந்தின பாடத்தில் செல்வம் (Wealth) என்றால் என்னவென்று விசாரித்திருக்கிறோம். முக்கியமாய், செல்வமென்றால் பணம் என்று தான் சாமனிய ஜனங்கள் எண்ணுவது வழக்கம். ஆயினும் நாம் அது அப்படியல்லவென்று வற்புறுத்திக் கூறியிருப்பதால் இப்போது செல்வமென்றால் உபயோகமுள்ளதும், ஏராளமாய்க் கிடைக்கக்கூடாமையால் கைமாற்றுதல் பெறக்கூடியதுமான வஸ்துவே என்று உறுதியாக மனதில் கொள்ளவேண்டியது.

இச்செல்வம் மூவகைப்பட்டது:—

(1) இயற்கையாக பூமியிலும், ஆறு குளங்களிலும் கனிகளிலும் இருப்பதால் மனிதர்கள் ஸ்வஸ்தீகரணம் (monopolised) செய்துக்கொள்ளக்கூடியது சிலது.

(2) வேறு சில வஸ்து மனிதர்கள் உழைப்பால வெவ்வேறு விதமாக ஆக்கப்பட்டு, அவர்களது இஷ்டபூர்த்தியின்பொருட்டு உபயோகமாவது.

(3) மற்றும் சிலது, வேறு பொருள்களின் உற்பத்திக்காக ஸககாரியாக உபயோகிக்கப் படுவது.*

இம்மூவகைச் செல்வமும் உழைப்பினால் தான் பெறப்படுகிறது. உழைப்பில்லாவிடில் (Labour) செல்வம விசேஷமாய் கிடைக்காது. ஆனால் வெறும் உழைப்பினால் ஒன்றையும் புதிதாய் உண்டுபண்ணமுடியாது. இயற்கையாகவே அநேகம் பொருள்கள் நமக்குக் கிட்டுகின்றன. அவைகளை நாம் ஸ்வஸ்தீகரணம் செய்யும்பொருட்டு பிரயத்தினம் செய்கிறோம். அல்லது அவைகளைமாற்றி மற்றும் வேறுவிதமான நாமரூபங்களைக் கொடுத்து மனிதனது பலவகை வேண்டுதலின் பூர்த்திக்காக நானாவித வஸ்துக்களை உண்டாக்குகிறோம்; அல்லது ஓரிடம் உத்பத்தியான பொருள்களை மற்றும அவை வேண்டிய இடங்களுக்குக் கொண்டுபோய் சேர்க்கிறோம். இப்படிப் பலவிதமாக உழைப்பு (Labour) செல்வத்தின் உத்பத்திக்கு வேண்டியிருப்பினும் செல்வத்திற்கெல்லாம் மூலாதாரமானது இயற்கையாயுள்ள பூமியும் அதில் உள்ள பிருகிருதி சக்தியுமே. இப்படி இயற்கையாகக் கிடைக்கக்கூடிய பொருளுக்கெல்லாம் நாம் க்ஷேத்திரம் (Land) என்னும் சொல்லைக் குறிச்சொல்லாகக்கொள்ளுவோம். இத்துடன் வேலையை எளிதில் நடத்திவருவதற்கு கைமுதல் (Capital) என்பதும் வேண்டும். ஆகவே செல்வம் உண்டாக இம்மூன்று சகாயங்களும் இல்லாமல் தீராது. ஆனாலும் இம்மூன்றும் தனைப்பத்தி விஷயத்தில் ஸம ஸாதனங்கள் அல்ல.

* The Requisites of Production.

ஆகையால் செல்வத்தின் உத்பத்தியையும் (Production), விபாகத்தையும் (Distribution) பற்றி விவரிக்கப்பிறந்த இச்செல்வநூல், க்ஷேத்திரஸாதனம் தனைப்பத்தியில் எவ்வளவு மட்டும் உபயோகப்படுகிறது. உழைப்பு அல்லது உத்யமம் எத்துணைமட்டும், கைமுதல் அல்லது மூலதனம் எவ்வளவு மட்டும் என்று அறிவதுடன், தனவிபாகத்திலும் இவ்வாறே இம்மூன்று ஸாதனங்களிற்கு இசைய க்ஷேத்திரத்திற்கு உரியவன் பெறவேண்டிய பாகம் இன்னது; உழைப்பாளிகளின் கூறு இம்மாற்றம்; மூலதனம் போட்டவனது சுவு இத்துணைதான்; என்று நிச்சயிக்கவேண்டும். இதுதான் செல்வநூல் கற்பிக்கவேண்டிய முக்கியமான விஷயம்.

மேற்கூறிய மூன்று ஸாதனங்களில் இயற்கைப்பொருள் அனைத்தும் க்ஷேத்திரத்தைச் சார்ந்திருக்கிறது. உத்பத்தி யென்பது உத்-பூர்வக, பத் - தாதுவினடியாகப் பிறந்த வடசொல். அதன்பொருள் 'மேற்கிளம்பியது' என்றாகும். ஆகையால் நாம் உற்பத்தி செய்வதெல்லாம் இப்பூமியினின்றும் 'மேற்கிளம்பியது'தான். பிரகிருதி சக்தியின்படி உத்பத்தியாகும் இயற்பொருளைக்கொண்டுதான் நாம் ஜீவிப்பது. ஆகையால் நமக்குச்செல்வம் வேண்டுமானால் ஏதாவது ஒரு க்ஷேத்திரத்தினிடம் சென்று காலதேசங்களுக்குத் தக்கபடி பிரகிருதி சக்திகளை (Natural Forces) அனுசரித்து அதனால்பெறக்கூடிய பொருள்களைப் பெற வேண்டியது. பிறகு அதை நம் கைப்பாட்டிற்குள்ளாக்கி வேண்டுமானபடி மாற்றி உபயோகித்துக் கொள்ளவேண்டியது. சமஸ்தத்திற்கும் உபாதானகாரணமான (Material Cause) பொருள் க்ஷேத்திரத்திலிருந்து வரவேண்டியதுதான். அதை உபயோகிக்கவேண்டிய சக்தியும் பல தடவைகளில் ஸ்வபாவிகமாக க்ஷேத்திரத்திலேயே யிருக்கிறது. இதற்கு நிதர்சனமாக ஓயாமல் அடிக்கும் காற்று, சமுத்திரத்தில் உள்ள அலைகள், மலைகளில் பெருகும் அருவிகள், மின்சாரம், நீராவி முதலியவைகளைக் குறிப்போம். இவைகளை நேராகக் கைக்கொண்டுதான் இப்போது ஐரோப்பாக்கண்டத்தில் உத்பத்தியாகும் பொருள்களெல்லாம் செய்யப்படுகின்றன. எவ்வளவுக்கு எவ்வளவு நாம் இவ்வாறு உள்ள ஸ்வபாவிகமான பிரகிருதி சக்தியை உபயோகிக்கிறோமோ அவ்வளவிற்கேற்கவே நமது செல்வமும் பெருகும். இப்போது ஐரோப்பியர்கள் நாகரிகத்திலும் செல்வத்திலும் மிக்கவர்களாகியது இச்சக்திகளின் பிரபாவம்தான்.

செல்வ ஸாதனங்களுக்குள் க்ஷேத்திரத்திற்குப் பிந்தியது உழைப்பு அல்லது உத்யமம் தான். (Labour) உழைப்பு என்றால் என்னவென்பது எல்லோரும் அறியக்கூடும் விஷயம்; உழைப்பில்லாவிடில் ஒன்றுமே சாத்தியமாகாது. ஏராளமாய்க் காய்கனிகள் காட்டில் இருக்கினும் அவைகளை வேண்டியபோது புசிக்கத் தேடியாவது வைத்திருக்கவேண்டும். இம்மட்டிலாவது உழைப்புவேண்டும். மேலும் செல்வம்பெருக உழைப்புத்தான் முக்கியமாய் வேண்டும். க்ஷேத்திரவளம்மாத்திரம் போதாது. எவ்வளவு வளம்பொருந்திய தேசமாயினும் ஜனங்கள் உழைப்பாளிகளாயில்லாவிடில் செல்வம் கூடிவராது. அமெரிக்கா தேசத்தை கொலம்பஸ் கண்டுபிடிக்குமுன்னம் அவ்விடத்திய ஜனங்கள் நித்திய தரித்திரப் பட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களது தேசமோ நீர்வளத்திலும் நிலவளத்திலும் முதன்மையானது. இப்போது ஐரோப்பியர் கைவேலைப்பாட்டால் ஐசுவரியம் பொழியும் அவ்விசாலமானதேசத்தில் சிறுபான்மையோராகிய பூர்வீகசுதேசிகள் சோற்றுக்குச் செத்துக்கொண்டிருந்தார்கள். மேலும் இப்போது நமது இந்தியாவிலும் இங்கிலாந்து தேசமானது நீர்வளம் நிலவளம் இவைகளில் மிகத் தாழ்ந்தது. அதிலும் ஆங்கிலேயர் நம்மிலும் தனத்தில் பதின்மடங்கதிகமுடையவராயிருப்பது அவர்கள் உழைப்பினாற்றான் என்று நாம் அறியவேண்டியது. இதனால்

நாம் இப்போது உழைப்பு என்பதே இல்லா மலேயிருக்கிறோம் என்று சொல்வதில்லை. சாமான்ய உழைப்பு உழைப்புடன் சேர்ந்தது அல்ல; உழைப்புக்குக் குணம்கொடுப்பது அறிவு (Knowledge) அல்லது கியானமும், விடாமுயற்சியும் (Perseverence) தான். நம் மறிவுக்குத் தக்கபடிதான் நாம் உழைப்போம். நம்மறிவுக்குத் தக்கப்படி தான் நம்முழைப் புக்குப் பலன் உண்டு. உழைப்பை நேராகப் பிரயோகிக்கப் பிரகிருதிசக்தியின் ஸ்வபாவம் முதலியது தெரியவேண்டியதாகையால் அறிவு அல்லது கல்வி உழைப்புக்கு முக்கியமாய் வேண்டியது. விடாமுயற்சியும் வேண்டும். ஏனெனில் நாம் முடிக்கக்கருதும் ஒவ்வொரு கருமத்திலும் பலவித விகாதங்கள் நேரிடுவது ஸகஜம். அவைகளுக்கு அஞ்சி மனம் தளராது உறுதியுடன் உழைத்தால் தான் எந்தக்காரிய மும் கைகூடும். இப்படி உழைப்பது ஸர்வ ஜன ஸாமானியமான குணமல்ல. ஆகையால் யார் இம்மாதிரி உழைக்கிறார்களோ, அவர் களது உழைப்புத்தான் உழைப்பு.

ஆகவே கஷேத்திரமும், உழைப்பும் வேண்டும். ஆயினும் இவையிர ண்டு ஸாதனங்களும் மாத்திரம் இருந்தால் பொருள் ஏராளமாகக் கிடைக்கமாட்டாது. உழைப்பில் இருக்கும் வேலையாட்கள் உண்டு உடுக்கும்பொருட்டு செலவிடப் படவேண்டிய பொருள்களும், அவர்கள் வேலைசெய்யும் யந் திரங்களும் ஆயுதங்களும் இல்லாவிடில் வேலை எளிதில் ஆகமாட்டாது. இப்படி செலவாகும் பொருளுக்குத்தான் நாம் முன்னமே மூல தனம் என்று பெயர் கொடுத்திருக்கிறோம்.

மூலதனம் இல்லாவிடில் நேரிடும் கஷ்டத் தை நாம் இவ்வகைத்தானது என்று அறிய வேண்டுமானால் ஒரு சுலபமான திர்சனம் போதும். நான்கு பெயர்கள்கூடி யாதாமொரு ஆயுதங்கள் வகைரா இல்லாமலும், ஆகாரமில் லாமலும் ஒரு காட்டிற்குப்போய் ஏதாவது ஒருகாரியம் செய்யப்போனால், எப்படி அவர் கள் எந்தக்காரியம் துவங்கப்போனாலும் வேறு ஒரு பொருள் முந்தி வேண்டியிருப்பதாக அறிந்துகொள்வார்கள் என்று நாம் ஊகித்துக் கொள்ளலாம். ஆயினும் இம்மூலதனம் முற் கூறிய இரண்டு ஸ்தானங்களைப்போல அவ்வ ளவு முக்கியமானதல்ல. ஆதியில் மூலதன மில்லாமலேதான் பொருள் உண்டாயிருக்க வேண்டியது. ஆயினும் தற்காலத்திய நாகரி கத்திற்கு அனுகுணமாகத் தனத்பத்தியாக்க மூலதனம் இல்லாமல் முடியாது.

THE WAY TO HELP.

உபகாரத்தின் விதி.

"பாத்திரமறிந்து பரிந்துகொடு."

ஒரு ஆதரவுமில்லாத ஏழைகளே தருமத் துக்கு அருகர்கள். உண்டானவர்களுக்கு தா னம் கொடுத்தலினால் இதற்கு சமானமான பலன் உண்டாகாது. ஒருதடவை விதைத்த பூமியில் மறுபடியும் விதைப்பதனால் இரண்டு பயிரும் கெடும்.

எப்படி பசுஞ்சாணத்தை குப்பலாய் போ டும்பொழுது அஸஹ்யமாகவும் அதேசாணத் தினால் பூமியை மெழுகினால் பரிசுத்தமாகவு மாகிறதோ அப்படியே ஒரு பாக்கியவான் தன் தனத்தைப் பிறருக்குதவாமல் சேர்க்கிற போது அவனை ஜனங்கள் லோபி என்பார்கள்; ஆனால் தன் சக்திக்கியன்றவளவு பிறருடைய வேண்டுகோளறிந்து அதே தனத்தை உதவு கிறபோது இந்த கெட்டபேர்போய் பரோப காரி என்று கொண்டாடப்படுவான்.

விதைவிதைப்பவன் பூமியில் விதையைத் தெளிக்கிறான், அது விஸ்தாரமாய்ப் பயிராகி றது. அதே ரீதியாய் தயவோடு ஏழைகளு க்கு தானம்செய்தல் நமக்கு சந்தோஷமும் அவர்களுக்குத் திருப்தியும் உண்டாக்குகிறது. அதெப்படியென்றால் எப்பொழுது ஏழை களுக்குத் தானஞ்செய்கிறோமோ அவ்வளவும் கடவுளுக்குக் கடன் கொடுத்தமாதிரி யாத லின் கடவுளும் நம்மிடத்தில் கிருபையுள்ள வராக விருப்பார்.

ஆகவே நாம் பாத்திரமறிந்து பரிந்துகொடு த்து தருமம்செய்தல் கடவுளுக்கும் மனிதர்க ளுக்கும் திருப்திகரமான செய்கையா யிருக் கின்றது.

"HELP US HELP THE HELPLESS IN THE WAY TO HELP THEMSELVES."

Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith.'

"*Seek Truth wherever you can find it,*" But, "*Make your choice and stick to it till you reach the End.*"

ஸத்தியம் வத—SPEAK THE TRUTH.

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."

அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE. "Approved"

புத்தகம். 24.] நள௵ ஐப்பசிமீ, 1916௵ அக்டோபர்மீ [சஞ்சிகை 7.

FREEDOM AND SERVICE OF THE SPIRIT.

FREEDOM AND DISCIPLINE IN EDUCATION.

பாலவித்யாகீதை

அல்லது சிக்ஷை தீக்ஷையின் ஸ்வதந்திரம்.

"THE AIM OF EDUCATION."

"The Aim of Education is primarily spiritual and there are three and only three, primary aims of the spiritual life. These are Goodness, Truth and Beauty."—*Rev. W. Temple, President of the Education Section of the British Association.*

"OUR CARDINAL MISTAKE, AS EDUCATORS."

"I think it has been our cardinal mistake, as educators, to impose on the young during the periods of childhood and adolescence the discipline of compulsion and the discipline of repression (especially the latter) to the exclusion of other formative influences, and then expect them to impose on themselves the discipline of self-control. And, I think, further, that no small part of what is unsatisfactory in our social life, that much of the prevailing disorder and discontent, that many of our acute social maladies, are due to the inability—the sheer inability—of those who have been forcibly disciplined for the first fifteen or twenty years of their existence, to take themselves in hand at a moment's notice, and to control their one anti-social desires and impulses and regulate their own lives."..."Self-discipline—the discipline in freedom—cannot begin at too early an age."—*Mr. Edmond Holmes, late Chief Inspector of Elementary Education in England,* (in the July Nineteenth Century and After).

"CHARACTER AND ENVIRONMENT."

"CHARACTER IS NINE-TENTHS ENVIRONMENT."—*Sir Henry Jones.*

"Direct compulsion exercised by one person over another, either breeds rebellion or abject servility, according to the nature of the victim. The pressure of environment operates unnoticed and, therefore, with all the more potent effects. *And the only way of creating a good environment for children and the masses is for parents, teachers and leaders* to live upright, ordered and self-controlled lives."

RELIGIOUS INSTRUCTION IN SCHOOLS.

"I am not interested in the maintenance of religious instruction as something apart from the rest of education as a subject of study like Chemistry or Mathematics......The only religion worth having is one that colours and governs the whole of life and thought."

"All who care for education should watch and help the spirit of 'disinterested desire for knowledge' as that leads to a real emancipation of the soul."

"THE SALVATION OF THE PEOPLE."

"It must be from the aspiration of the common people that the salvation of the people comes. Nothing that is really good can be imposed upon people by well-wishing superiors. In education, as in everything that concerns the spirit, freedom is the one condition of progress. It is for freedom that we are fighting in the war; it is for freedom that those who care for education are struggling at home; for there is nothing that so much hinders the effective freedom of our people as the fact that they are left without facilities for the whole development of their faculties."—*Rev. W. Temple, President, Education Section of the British Association.*

"REFORM OF RURAL EDUCATION."

"OUR THEISM IS THE PURIFICATION OF THE HUMAN MIND."—*Emerson.*

The memorandum on the "Reform of Rural Education" aims at curing this lopsidedness, so far as rural education is concerned, as the rural population are more in touch with Nature than those bred in the asphyxiating atmosphere of towns and cities.

"The transformation of character which is another name for the evolution of character must begin in the nursery and the school room."

Every reform, for which we are still waiting, and not merely social reform, "is to be achieved, not so much by legislation as by the transformation of character."

OUR APPEAL TO PARENTS, TEACHERS AND LEADERS.

That is why we request all friends of education and every one interested in the cause of education from the Hon'ble Members of Council down to ordinary parents and teachers to help us and encourage us in this the only method of achieving the much-needed Reform of Rural Education in this country.

HELP TO "OUR ELEMENTARY TEACHERS."

We know, as an English friend, a member of the Indian Educational Service, who is an authority in educational matters urges it on us,—we "know, our elementary teachers; a few are idealists but the vast majority have no more idea of education than they have of aviation" But we also know that *it is not their fault*, and we believe, if they are given opportunities of helping themselves, an appreciably large number of them are not incapable of availing themselves of such opportunities to rise above their own ignorant selves. We find an Indian Member of Council saddling them (rightly or wrongly, it is not for us to enquire) with the responsibility which "even the most educated of our countrymen" have "miserably failed" to realise—*viz*, the serious responsibility of developing "the undeveloped faculty of observation" and that to the extent of using it "to develop the power of observation of their students, to teach them to use their eyes and their hands to study Nature and take a real pleasure in Nature-study." We ask in all seriousness "Are they to be mere blind leaders of the blind?" Having exacted a pledge from us to serve the children, their teachers and parents to the exclusion of the general public, we think we have a right to ask them "to stoop down" to the level of children, their teachers and parents, and "help us help the helpless in the way to help themselves."

And Remember, Please, "the only way of creating a good environment for children and the masses is for parents, teachers and leaders to live upright, ordered, self-controlled lives."

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

நள ஞ ஐப்பசிமீ } விவேக சிந்தாமணி { Oct.-Nov. 1916.

ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழ்ல் வந்ததேன்னோஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

"HELP US HELP THE HELPLESS IN THE WAY TO HELP THEMSELVES."

IN PRAISE OF CHILD EDUCATION.

பாலவித்யா கீதை.

"The transformation of charactor which is another name for evolution of charactor must begin at the nursery and the school-room."

"துர்க்காலக்ஷ்மி ஸரஸ்வதீதேவி
மஹிஷாஸுர மர்த்தநீஜய
வித்யாலக்ஷ்மி ப்ரஹஸ்பதீம் வந்தே
அத்யாத்மிக சாந்த நீதுபவ !
வித்யாரம்பதினே விஜயதசமியாம்
ஹே அமிர்ததே துவாம்வந்தேது ஸர்வதா."

"ஏகைவசக்தி பரமேச்வரஸ்ய ப்ரயோஜனார்த்தாய சதுர்விதாபூத், போகேபவானி, புருஷேஷு விஷ்ணு, குரோதேசகாளி, சமரேசதுர்க்கா."

வித்தையென்பது வித் என்னும் தாது வடியாகப் பிறந்தது. அறிவுக்கு ஆதாரமாயிருப்பதொன்றெதுவோ அது வித்தையென்னப்படும். அந்த வித்தையை சிக்ஷாதீக்ஷா சேவைகளால் அடுத்து வழிபடுதல்தானே வித்யாரம்பம். ஹிந்துக்கள் எல்லாருக்கும் வித்யாரம்பதினம் விஜயதசமி யன்றைக்காமென்பது உலகப் பிரசித்தம். அந்த வித்யாரம்பதினத்திலே (அதாவது விஜயதசமியிலே) சிறு குழந்தைகளுக்கு வித்யாரம்பம் செய்வது ஹிந்துக்களுக்கு வழக்கம். இன்றைக்கு 12-வருஷங்களுக்கு முன் இவ்விவேகசிந்தாமணியின் ஆசிரியர் அவருடைய குழந்தைக்கு வித்யாரம்பம் செய்து வைத்தனர். அப்பொழுது பாவனுவிசேஷத்தால் தாமும் குழந்தையேயாகி வித்யாதேவியைத்தொழுத சுலோகத்தை இதன் முதலில் வரைந்திருக்கிறோம். 12-வருஷமாகிய ஒரு "மாமாங்கம்" கழித்து நாட்டிலுள்ள குழந்தைகளுக்கெல்லாம் வித்பாப்யாசம் செய்துவைப்பதிலுழைப்பதாகச் சத்தியம்செய்து வாங்கிய வித்யா அதிகாரிக்குக் கொடுத்தவாக்குத் தவறாது நாட்டுப்படிப்பைச் சீர்திருத்துவதற்கான முறையை நாம் 30-வருஷகாலமாக அறிவைப் பரவச்செய்யுந் துறையில் இறங்கியுழைத்த உழைப்பின் அனுபவங்கொண்டு ஒருவாறு குறிப்புரையாகச் சொல்லவேண்டியதைச் சொல்லி அச்சிட்டு கவர்னர்முதல் வித்யாதிகாரிகள், வித்யா போதகர்கள், பெற்றோர்கள், புண்யவதிகளான தாய்மார்களையுங்கூட நேரிலோ, கடித மூலமாகவோ கண்டு கலந்து யோசித்து அவர்கள் கருத்தையும் உள்வாங்கிக்கொண்டு சாராம்ஸத்தைவிடாது கிரகித்து வெளியிட்டோம்.

இனி அவ்வேலையைத் தொட்டுத் தொடர்ந்து மேலுழைக்கவேண்டும். இது எல்லாரும் சேர்ந்து ஒத்துழைக்கவேண்டிய காரியமாயிருக்கிறது. லோகல்போர்டு அதிகாரிகள் ஸ்கூல்மானேஜர்கள் வித்யா இலாகா அதிகாரிகள், பெற்றோர்கள், பிள்ளைகள், உபாத்தியாயர்கள் எல்லோரும்சேர்ந்து ஒத்துழைக்கவேண்டும். அதாவது ஒருமனப்பட்டு உழைக்கவேண்டும். திருச்சிறுப்பள்ளியில் லாலுகுடி

வித்யாபொருட்காட்சி சாலையைத் திறந்த பொழுது கனம்பொருந்திய கௌன்ஸில் மெம்பர் ஸர். பழமானேரி சுந்தரப்பய்யர் சிவஸ்வாமி அய்யர் அவர்கள் பிரதமபாடசாலை உபாத்தியாயர்கள் செய்கடன்களில் முக்கியமான தொன்றையெடுத்து வற்புறுத்திக்கூறினார். அது என்னவென்றால், நம்மில் பெருமிதமாகக் கற்றோர்களும் வாய்ச்சாலமாகப் பேசியும் படித்தும் வாதித்தும் வியாஸங்கள் எழுதியும் விசேஷமான வித்யாசாமர்த்தியம் பொருந்தியவர்களாகக் காட்டக்கூடுமானாலும், ஒரு காட்சியைக் கண்ணால்கண்டு காதால்கேட்டு அல்லது ஸ்பரிசத்தாலுணர்ந்து உள்ளதையுள்ளபடிகண்டு, கண்டதைக் கண்டபடியுரைக்கச்சொன்னால் மிகத் தடுமாறிப் போவார்களென்பது பிரத்தியக்ஷமாய் எல்லாருக்கும் தெரிந்திருக்கிறது என்றும், இதனால் நமக்குள் தரிசனசக்தி பயிர்ச்சியின்றிக் குன்றிக் கிடக்கிறதென்றும், பிரதமபாடசாலை உபாத்தியாயர்கள் அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்ட குழந்தைகளின் தரிசன சக்தியை வளர்த்து விகசிதமாகப் பிரகாசிக்கச் செய்யவேண்டியது அவர்கள் செய்கடன்களில் ஒன்றாக இருக்கிறதென்றும் சொன்னார். இதைத்தான் நம்மில் குழந்தையின் பெற்றோர்கள் வித்யாப்பியாச காலத்தில் குழந்தையை வித்யா குருவிடம் ஒப்புவித்து "குழந்தையைக் கண் திறந்துவிட்டு ஆளாக்கவேண்டும்" என்று கேட்டுக்கொள்ளுகிறார்கள். இது புராதனமாய் உள்ள வழக்கங்களில் ஒன்று.

இப்படிப்பட்ட பிரதமபாடசாலை உபாத்தியாயர்களில் சிறுபான்மையர் இலக்ஷிய இலக்ஷண உணர்ச்சியுள்ளவர்களாயிருப்பது உண்மையாயினும் பெரும்பான்மையாக எல்லாருக்கும் வித்யாப்பியாசம் என்பதைப்பற்றியே ஒன்றும் தெரியாதென்றும், ஆகாய ரதமேறிப்பறக்க எவ்வளவு அருகர்களோ அவ்வளவு அருகர்களாயிருக்கிறார்கள் உள்ளபடி வித்யா போதனை செய்யும் கடனைச் செலுத்துவதிலும் என்றும் ஸ்கூல் இன்ஸ்பெக்டர் ஸ்தானத்திலிருந்து அனுபவம் பெற்ற மேதாவியான ஆங்கிலேயர் ஒருவர் நமக்கு எழுதியிருக்கிறார். இது நமக்கும் தெரிந்ததேதான். ஆனால் இவர்களெல்லாருமே உருப்படாதவர்களென்று நாம் நினைக்கவில்லை. வித்யாபோதன முறையைக் கற்றுக்கொள்வதிலும், தாங்களே வித்யாப்பியாசம்செய்து மனதைப் பழக்கிக்கொண்டு தேர்ச்சி பெறுவதிலும் வேண்டிய சாதகசாதனங்களின் உதவி கிடைக்குமாயின், இவர்கள் பெருமுயற்சிசெய்துழைத்து முன்னுக்குவரப் பார்ப்பார்களென்றே நம்புகிறோம். அந்த நம்பிக்கைவிசேஷத்தினாலேயே கைப்பொருள் நஷ்டத்தையும் தேஹமனோசிரமத்தையும் பெரிதாகக் கருதாமல், இதையோர் உத்தமமான தெய்வ கைங்கரியமாகக்கொண்டு ஈசனருளை முன்னிட்டு, ஜனசமூகத்திலுள்ள சிரேஷ்டர், சிரோமணிகள், சாமான்யர்கள் எல்லாருடைய உதவியையும் கோறி அவர்கள் ஒத்துழைப்பார்களென்று நம்பி இதில் அதிக ஊக்கத்துடன் உழைத்து வருகிறோம். நாம் முக்கியமானதென்று காட்டிய சீர்திருத்தங்களெல்லாம் மேற்றிசையிலும் பிரதமஸ்தர்களாயிருக்கிறவர்களால் வித்யாக்ஷேமத்துக்கு அவசியமானவையும் இன்றியமையாதனவுமாயிருக்கிறதென்று ஒப்புக்கொண்டு அவர்கள் அபிப்பிராயம் பலிக்கப் பிரயத்தனம்செய்து வருகிறார்கள். அவர்களுடைய முக்கிய கருத்தை முதலேட்டிலும் இரண்டாமேட்டிலும் இங்கிலீஷில் சுருக்கமாய் எடுத்துக் கூறியிருக்கிறோம். இது இங்கிலீஷ்தெரிந்த பெற்றோர்கள் பிரதமபாடசாலை உபாத்தியாயர்கள் மேல்வகுப்பில் வாசிக்கும் மாணவர்கள், இவர்களுக்கு உதவியாக விருப்பதன்றி தமிழ் தெரியாதவர்களாய் இருந்தும் பிரதமவித்யாபிவிர்த்தியில் அதிகசிரத்தையுடையவர்களாயுள்ள ஆங்கில, இந்திய நண்பர்கள், அதிகாரிகள், மற்றவர்களுக்கும் நமது முயற்சியின் போக்கு இன்னபடியிருக்கிறதென்று தெரிந்துகொள்ளச் சாதகமாயிருக்குமென்று அவ்விரண்டு பக்கங்களையும் இங்கிலீஷில்தானே வழக்கமாய் அச்சிட்டு வருகிறோம். அங்கே

சொல்லியுள்ள கருத்துகள், எண்ணங்கள், இலக்ஷியங்கள் எல்லாம் அப்போதைக்கப்போது விவேகசிந்தாமணியில் எடுத்துக் கையாளப்பட்டவையாகவே யிருத்தலால், இங்கிலீஷ் தெரியாதவர்களுக்கு அதைப்படிக்க முடியாததால்வரும் நஷ்டம் ஒன்றுமில்லையென்று நம்புகிறோம். ஆனால் அவர்கள் விவேகசிந்தாமணியை சிரத்தையோடும் பக்தியோடும் விடாது படித்துவருகிறவர்களாயும், அப்படியேபடித்து வந்தவர்களாயுமிருக்கவேண்டும். இவ்வளவு முகவுரையோடு தாய்மார்கள் பிள்ளைகளுக்குப் புகட்டவேண்டியது எவ்வளவிருக்கிறதென்று காட்ட 22-வது வால்யம் முதல் நம்பரில் வித்யா அதிகாரியின் நேர் சம்மதியின்பேரில் அவர் பார்வையிட்டு அங்கீகரித்த விஷயமொன்றிலிருந்து பிள்ளைகளுக்கும் பெற்றுவளர்க்கும் பாக்கியம்பெற்ற தாய்மார்களுக்கும் அவர்கள்போற்றும் குழந்தைகளுக்கும் உபயோகமான பாலவித்யாகீதையாக விளங்கும்படி வித்யாதத்துவங்களாக மேற்றிசை யாராலும் எல்லாராலும் கொண்டாடப்படும் சில உத்தமக் கொள்கைகளடங்கிய உண்மையை தாலாட்டு ரூபமாக விவேகசிந்தாமணியில் வெளியிட்டிருப்பதிலிருந்தெடுத்துக் கீழே பிரசுரிக்கிறோம்.

"தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டும்" என்பது பழமொழியாதலாலும், "அறையிலே யாடினதே அம்பலத்திலுமாடவரும்" என்பது வாசனை விசேஷத்தின் மஹிமையாக விருப்பதாலும், இன்றைக்கு கத்தரிக்காய் திருடின குழந்தையின் கையே நாளைக்குக் கன்னக்களவு செய்யத்துணியுமாதலால், கள்ளங்கபடுகளைப் பெற்றதாய் தன் குழந்தை மடியிற் பாலனாயிருக்கையிலேயே தன தாயின்பால் ஆராய்ந்தறிந்து களைந்துவிடல்வேண்டும். அதற்குச் சாதனானுகூலமாக விவேகத்தாய் தன் கண்மணிக்குச்சொல்லும் புத்திமதிகளை விவேகரஸம்பொழியும் இத்தாலாட்டு மொழிகளில் காணலாம்:—

1. "ஆதலாற் கண்மணியே
   அழகுமிகும் விண்மணியே
   காதலித்த கற்பகமே
   கள்ளமெதுஞ் செய்யாதே.

2. "கள்ளமெதுஞ் செய்யாதே
   கபடேதுஞ் செய்யாதே
   எள்ளளவும் வஞ்சகத்தே
   இச்சைவைத்துச் செல்லாதே.

3. களவுசெய்த கைகளுக்குக்
   கைவிலங்கு பூட்டிடுவார்,
   அளவிலாத் துன்பமுண்டாம்
   ஆற்றுதற்கு மாளாது.

4. பொய்சொன்ன வாயிற்
   புழுப்புழுக்கு மென்னரசே
   மெய்சொன்ன வாயில்
   விளம்புவதுஞ் சீனியம்மா.

5. மதிகேடு செய்தாலும்
   மார்க்கமுண்டு தப்பியிட
   சதிகேடு செய்யாதே
   தங்கள்கண்ணி தங்களுக்கே.

6. வஞ்சித்தார் வாழார்
   வழிப்பறித்தார் பாழாவார்
   பஞ்சான தேகமிது
   பகவா னொருவனுண்டு.

7. கச்சைகட்டிக் கூத்தாடிக்
   கடைத்தெருவி லோடேந்தி
   பிச்சையெடுத் துண்டாலும்
   பிறர்துயரம் செய்யாதே.

8. தணியாத கோபமுள்ளார்
   தயக்கம்வந்து தாழ்வார்கள்
   பணிவாய் நடப்பவர்க்கோ
   பாரெல்லாங் கையாட்சி.

9. மூலந் தனத்தினுக்கு
   முயற்சியென்பார் சிற்சிலபேர்
   காலந் திரவியமாம்
   கருத்துடையார் காட்சியிலே.

10. உடலம் பிணிநீங்கி
    உள்ளமதும நற்றெளிவாய்
    திடம்பெற் றிருப்பதுவே
    சேரறிய பாக்கியமாம்.

11. அகலாது வாசனைதான்
    அகிலமிதி லெல்லோர்க்கும்
    சகவாசம் போல்நடக்கை
    சத்தியந்தான் சத்தியந்தான்.

12. மாருக்க லகமதை
மாற்றுவது நன்மௌனம்
ஆருத் துயரமெல்லாம்
ஆற்றுவதோ விசனருள்.

13. சத்தியமே நன்மார்க்கம்
தவறுவரு மற்றெறிலும்
வித்தையிதில் லாபமெத்த
விசுவாசம் மெத்தமெத்த.

14. பூட்டியிட்ட தேகமிது
போயழிபு மென்னாளும்
நாட்டிலுள்ள வாழ்வினுக்கு
நற்பெயரே கண்டபலன்.

15. வாலிபந்தா னானாலும்
மாசிமறு சம்மதியேன்
பாலியந்தா னானாலும்
பழிபழுது சம்மதியேன்.

16. சித்தம்மொழி தான்திருந்தி
செயல்திருந்தி நீ நடப்பாய்
உத்தமியான் பெற்றெடுத்தேன்
ஒருகுறையுஞ் செய்யாதே.*

17. உள்ளபல பூமியெல்லாம்
ஓர்குடைக்கீ ழாண்டாலும்
பிள்ளைகளை வளர்க்கும் வித்தை
பிரயாச மானவித்தை.

18. ஆராய்ந் துலகனைத்தும்
ஆண்டாலும் பிள்ளையொன்றை
நோக்க மாளாது
நிச்சயந்தா னிச்சயந்தான்.

19. கண்ணே யுறங்குறங்கு
கற்பகமே நித்திரைபோ
மண்ணிலுள்ள யாபேரும்
வாழியென்று நித்திரைபோ.

20. பிள்ளையை வளர்ப்பதிலே
பேரறிவு பெற்றுநின்ற
தள்ளையெல்லாம் வாழியென்று
தண்ணமுதே நித்திரைபோ.

* The following assurance of the Child grown up under such tender care and influence of the Mother will be instructive and interesting to all who believe in the impressionable nature of the Child-mind. "*You may assure Mother that I will never do anything which she may disapprove of, or may cause her pain.*" Thus is the abiding influence of the intelligent and discriminate Mother in the Nursery potent for good in the critical period of youth and adolescence.

[Ed. "V. C."]

THE PRINCIPLE OF CO-OPERATION.

எத்தால் வாழலாம்?
ஒத்தால் வாழலாம்!

Co-operation supplements political economy by organising the distribution of wealth. It touches no man's fortune, it seeks no plunder, it causes no disturbance in society, it gives no trouble to statesmen, it enters into no secret associations; it contemplates no violence, it subverts no order; it envies no dignity, it asks no favour, it keeps no terms with the idle, and it will break no faith with the industrious; it means self-help, self-dependence, and such share of the common competence as labour shall earn or thought can win, and this it intends to have."—*G. J. HOLYOAKE.*

"My brave boys,—Nothing else necessary but these—*Love, Sincerity*, and *Patience*. What is life but growth, i. e., *Love*. Therefore all love is life, it is the only law of life; all selfishness is death; and this is true here or hereafter. It is life to do good, it is death not to do good to others."—Epistle of *Swami Vivekananda.*

"He doeth much that doe th a thing. He doeth more that serveth others in the doing. He doeth most that loveth most 'the God that made and loveth all'."

"We have got each to be a real Christ or the world will never be saved. Only Christs can save the world. And what was the Christ? Absolute unity with God, real unity with man. Are we united with man? A whole gulf cuts us off from all but a few of our fellow creatures. Yet we are one with them......that is, we ought to be. And until we are, we are not a Christ."—*From W. T. Stead's Annual "Here am I: Send me."*

"எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்!" என்பது நமக்குள் வெகு காலமாக வழங்கி வரும் ஒரு பழமொழி. இது இகபரமிரண்டிற்கும் சரி. 'ஒத்துமை' என்றால் என்ன? மனது ஒன்றுபடுந்தன்மை. இதற்கு மாறாயிருப்பது என்ன? அஹம்பாவம். "அஹமழிந்தால் பரமாகும்" என்பது உண்மையானாலும்

"அஹம்விருத்தியினால்" மனோவிருத்தியும், மனோவிருத்தியினால் புத்திகூர்மையும், புத்திகூர்மையினால், வஸ்து விவேகமும், வஸ்து விவேகத்தால் அஹத்தை (நான், எனது, என்று அகங்கரிப்பதை) விட்டுப்பரத்தை ('எல்லாம் நான்' என்னும் மேலான பாவத்தை) ப்பற்றினால் அப்பொழுது 'எல்லாம் நீ' 'உன் னுடைமை' 'உன்னடிமை' யென்கிற பாவம் தானாகத் தோன்றும். 'எல்லாம் நான்' என்கிற பாவமும் அழிந்து 'எல்லாம் நீ' யென்கிற பாவமுதித்தால் அப்பொழுது 'நான் நீ' என்கிற வேற்றுமை யொழிந்துபோம். இப்படி யொழிந்துபோகுங்கால் 'தன்னைக்கொடுப்பதே' கலைமையான ஆனந்தமாகவிருக்கும். இப்படி அஹம் முதிர்ந்துதிர்ந்து தன்னைக்கொடுக்கும் திறமைவாய்ந்த பரமோத்தமனுக்குக் கடவுள் தன்னையே கொடுக்கிறார். இந்த அநுபவத்தை எம்பெருமான் ஸ்ரீ மாணிக்கவாசகர் பின்வரும் பாட்டில் நன்றாகச் சொல்லியிருக்கிறார்:—

"தந்த துன்தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோசதுரர்
அந்த மொன்றில்லா ஆனந்தம்பெற்றேன்
யாது நீ பெற்றதொன்றென்பால்
சிந்தையேகோ யில்கொண்ட எம்பெருமான்
திருப் பெருந்துறை யுறைசிவனே
எந்தையே! ஈசா! உடலிடங்கொண்டாய்!
யானிதற்கிலனோர்கைம்மாறே!"

இந்தப் பரமானந்த சுகத்தைப் பெற்று ஜன்ம சாபல்யமடையும் பொருட்டுத் திருவாதவூரர் துறவுபூண்டு நிறைவெய்தியர். நம்மால் துறவுபூணல் சாத்தியமா? என்றுகேட்கலாம்! இல்லை! அவர் பாண்டியனுக்கு அமைச்சராகவிருக்கையில் அருள்பெற்று அநுபவம் முதிர்ந்த பின்னே, அவருக்குக் கிடைத்த பூரணானந்தத்தை யனுபவிக்கும்பொருட்டு ஏற்கனவே கைத்துப் புளித்துப்போன சிற்றின்ப சுகங்களை விட்டொழித்தார். அதுவு மீசனருளிருந்தவாறென்றுணரத்தக்கது.

இப்பொழுது இவருடைய உதாரணத்தைச் சொன்னது என்னத்திற்காக வென்றால், "அஹம்விருத்தி-பரசேவை" என்னும் முக்கிய சாதனங்களைக்கொண்டு எல்லாரும் (பாமரஏழைகளும்) கிரமேண ஹிருதயசுத்தியுண்டாகவுழைத்து, இகசுகானுபவங்களைக் கொண்டே பரசுகத்தையும் தேடிக்கொள்வது வழியறிந்து பிழைப்பவர்களுக்கு மிகவும் எளிதாம் என்பதை வற்புறுத்துமாறேயன்றி வேறல்ல.

அஹம் விருத்தியின்றி—நான் என்கிற பாவம் முதிர்ந்து பழுத்தாலன்றி—அஹங்காரம் அழியாது. அஹங்காரத்தை முளையிலேயடக்கினால் தாமஸாந்தகாரமாகிய மூடத்தன்மை வந்து மூடிக்கொண்டு—அஹலிகையைப்போல் கல்லாகப் போகவேண்டும். இப்படி மூடமும் சோம்பலும் வந்துமூடிக்கொள்ளாதபடி நாம் "அஹம்விருத்தி" செய்யவேண்டும். "அஹம்விருத்தி" என்றால் இந்த ஜகமெல்லாம் எண்சாணுடல்பெற்ற எனது போக போக்கியத்துக்குத் தான் சிருஷ்டிக்கப்பட்டதென்று மமதைகொண்டு துரியோதனனைப்போல், அகங்காரத்தால் அழிந்துபோவதல்ல; பின்னென்னவென்றால், — தனுகரண புவன போக்கியங்களெல்லாம் நாம் ஆத்மலாபத்தையடையும்பொருட்டு நமக்கு ஈசுவரன் அளித்ததாகவெண்ணி, ஒவ்வொரு அனுபவத்திலும் உள்ள உண்மையை உள்ளபடியுணர்ந்துய்வதே 'அஹம் விருத்தியாம்.' இந்த "அஹம் விருத்தி" "பரசேவை" யின்றி சாதிக்கத்தக்கதல்ல வாதலால், "அஹம்விருத்தி-பரசேவை" இரண்டையும் ஆத்மானந்தம் பெறுவதற்கு ஹேதுவான வழிநடப்பதற்குற்ற இரண்டு கால்களுக்குச் சமானமாக ஒப்பிட்டுக் கூறுவதுண்டு.—"அஹம்விருத்தி-பரசேவை" யென்று சொன்னால் கேட்க இன்பமாகத் தானிருக்கிறது! முடிவில் கிடைக்கும் ஆத்மலாபம் அழிவற்ற இன்பத்தைக் கொடுப்பதால் எல்லாரும் விரும்பத்தக்கதாயும், உண்மையாகவே யெல்லாரும் விரும்புவதாகவு மிருக்கிறதுண்மைதான்! ஆனால் அவனவன் வயிறு வளர்ப்பதே கஷ்டமாயிருக்கிற இந்தக் காலத்தில், பரசேவை செய்யக் காலமேது? பரசேவையினால் பசித்த வயிற்றுக்

குச் சோறு கிடைக்குமா?—என்று இதை வாசிக்கும் உலக ஞானிகள் நம்மை உசாவலாம். அவர்களுக்குச் சரியான பதில் சொல்லத் தயாராயிருக்கிறோம். ஆனால் மனதைக் குதர்க்கம் செய்வதில் செல்லவிடாமல், உண்மையை உள்ளபடி யுணரவேண்டுமென்கிற உத்தம சித்தங்கொண்டு, அந்த சிந்தனையில் மனதை நிறுத்தி கிராகியசக்தியோடிருந்து கேட்கவேண்டும்.

"ஐயா! உலகஞானியே! நீர் சொல்லுகிற ஆக்ஷேபணையை நான் ஒப்புக்கொள்கிறேன். வயிற்றுப்பாடு பெரும்பாடு என்பதை ஒப்புக்கொண்டே பேசுகிறேன். ஐயா வயிற்றுப் பாட்டைப் பார்க்கையிலே மனதும் சுத்தப்பட வழி யேற்பட்டால் அது நல்லதுதானே! அதையும் சிந்தாது கேவலம் மிருகஜன்மமாகத் தான் காலங்கழிப்பேன் என்பாருக்கு நான் ஒன்றும் சொல்ல வரவில்லை. மிருகஜன்மத்தைப் பழக்கவாசனையால் வெகுதூரம் நல்வழிக்குக் கொண்டுவரலாம். ஆனால் அது பழக்கவாசனையாகமட்டு மிருக்குமே யன்றி அதன் உட்கருத்தை யுணர்ந்துகொள்ள அதற்கு சக்தியில்லை. ஸ்வாமி அந்த ஜன்மத்துக்கு அவ்வளவுதான் உண்டென்று படியளந்திருக்கிறார். அதைமீறி நடக்க யாராலுமில்லை. ஜன்மம் ரூபத்தைமட்டும் பொறுத்ததல்ல. முக்கியமாய் மனோ நிலையைப் பொறுத்ததாம். ஜடபர தருமானாகப் பிறந்தார். பிறந்தும் அவர் ஜீவன்முக்திநிலை குலையவில்லை. துச்சாதனன் மனிதவுருவெடுத்தும் அவன் மிருகத் தன்மை அவனை விடவில்லை. ஆகையால் மானிட ரூபத்திலும் எத்தனையோ ஜன்மமுண்டு. "காண்டாமிருக முதலாகக் காக்கை கழுவீறாக வெத்தனையோ ஜன்மம்மா!" என்பது உண்மை, உண்மை! ஆகையால் அவர்களை விட்டு சன்மார்க்க விருத்தியையும் சத்குண சம்பத்தையும் நாடி யுள்ளவர்களில் ஏழை எளியவர்களாயிருப்பவர்களை யெடுத்துக்கொண்டு பேசுவோம்.

"ஒருவன் ஏழையாயிருந்தால் வயிற்றுக்குச் சாப்பிடாமல் இருக்கிறானா! எப்படியோ பாடுபட்டுழைத்துப் பணத்தைத் தேடி உப்புப்புளி முளகாயாவது வாங்கி ஜீவனம் செய்கிறான்! இப்பொழுது இந்த ஏழை தன்னந்தனியாயிருந்தால், அதோ அந்த முடுக்கில் பலசரக்குக் கடைவைத்திருக்கும் பாப்பைய செட்டி மொத்தமாகப் பண்டங்களை வாங்கி சில்லரை வியாபாரந்தானேயென்று தம்படிக்கு தம்படி லாபம்வைத்து ஒன்றுக்குப் பாதியாக விற்று இந்த ஏழையின் காசைப் பறித்துக்கொள்வதுமன்றி, சரக்குகளைக் கண்டபடியெல்லாம் கொட்டிக் கலந்து, மண்ணும் மணலும் சேர்த்தும் இன்னும் சொல்லத்தகாத எத்தனையோ அக்கிரமங்கள் செய்தும், இவன் தேக சௌக்கியத்தையும் கெடுத்து நாளைக்கு உழைத்து ஒருபணம் சம்பாதிப்பதற்கும் சக்தியில்லாமல் செய்துவிடுகிறான். இந்தக் கொடுமைக்கு விமோசனமென்னவென்று பார்த்தால் ஏழை மனிதனுக்கு ஒன்றும் தோன்றவில்லை! கடவுளை நொந்துகொண்டு தன் தலைவிதியென்று வந்ததை யனுபவிக்கிறான்! ஐயா! கர்மம் என்பதும் விதியென்பதும் இதற்குத்தானா சொன்னது. கர்மம் என்பது இன்னவென்றும் விதியென்பது இன்னவென்றும் கண்டு தேறிய நமது ரிஷிகள் இப்படி ஏழைகள் தியங்கி மயங்கிக் கெட்டுப் போகாமலிருக்கும் பொருட்டு, ஜாதி யேற்பாடுசெய்து வர்ணாச்ரம தர்மங்களை விதித்தார்கள். அந்த வர்ணாசிரம தர்மங்கள் எந்த ஸநாதந தர்மத்தை யனுசரித்து ஏற்படுத்தப்பட்டதோ, அந்த ஸநாதந தர்மம் இன்றைக்கும் என்றைக்கும் உண்மையேயாயினும், அதை யொட்டி அந்தந்தக் காலதேசவர்த்தமான பேதங்களுக்கிசைய நமது இருஷிகள் ஏற்படுத்திய வருணாசிரம தர்மங்களின் உள்மர்மத்தையுள்ளபடி யுணர்ந்துய்வாரின்றி இப்பொழுது அந்த தர்மங்கள் காலத்திற்கேற்ற மாறுபாடுகள் செய்வாரின்றி தலைதடுமாறிக் கிடக்கின்றன. பிரம்மவித்தையை யுபாசித்து அனுஷ்டிக்கிறவனுக்கு பிராம்மண தர்மம்.

ராஜ்ய தர்மவித்தையை யனுஷ்டிப்பவர்க்கு க்ஷத்திரிய தர்மம். பொருள் சேகரித்தலாம் அர்த்த வித்தையை யனுஷ்டிப்பவர்களுக்கு வைசிய தர்மம். இம்மூன்றுக்கும் யோக்கியதையின்றி கேவலம் அடிமைத் தொழில்மட்டும் செய்யத்தக்கவர்களை சூத்ர வர்ணத்தில் சேர்த்தவராக்கியுள்ளார்."

இப்போ "ஜன்மம்" என்பதற்குள்ள தத்துவார்த்தத்தை யுணராமல் நம்மவர்கள் மதிமயங்கித் தவிக்கிறார்கள். ஆகையால் அம்மயக்கொழிய, இக்காலத்துக்குத் தக்கபடி ஸநாதந தர்மத்தையொட்டி யேற்பட்டுள்ள உண்மையான தர்மஸ்தாபநங்களை நாம் ஆச்ரயித்துக் கடைத்தேறவேண்டும். இப்படி யேற்பட்ட நவீன நாமதேயமட்டுமுள்ள பூர்வாச்ரம தர்மஸ்தாபனங்களில் ஒன்று: "கோ-ஆபரேடிவ் ஸொஸைடி" என்று இங்கிலீஷ் நாமம் பூண்ட—"ஒத்துவாழும் தர்மத்தை உட்புகட்டும் கருத்துக்கொண்ட ஜனக்கூட்டங்களாம்" இந்த ஜனசங்கங்கள் அங்கங்கே யேற்பட்டுழைத்துவரவேண்டுமென்றும், இதில் பழகி "எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்" என்னும் மூதுரையின் உள்மர்மத்தை ஜனங்கள் உணர்ந்துய்ய வேண்டுமென்றும் கருதி துரைத்தனத்தார் ஒரு சட்டம் செய்திருப்பதுமன்றி இதற்காக கலெக்டர் அந்தஸ்துள்ள ஒரு உத்தியோகஸ்தரை ரிஜிஸ்திராராகவும் நியமித்திருக்கிறார்கள். இப்படி இராஜதானிதோறும் நியமிக்கப்பட்டிருக்கிற உத்தியோகஸ்தர்களில், இவ்விராஜதானி முழுமைக்கும் இது விஷயமாக முதல் முதல் வேற்படுத்தப்பட்டவர் தென்கன்னடம்ஜில்லா கலெக்டர் ஸ்தானத்துக்குரியவராய் இப்பொழுது உள்நாட்டு செக்ரிடெரியாக விருக்கும் கனம்பொருந்திய ம-ா-ா-ஸ்ரீ திவான் பஹதூர் இராஜகோபாலாசாரியார் அவர்கள். இவர் நியமனம் பெற்றபின் இரண்டு வருஷங்களாக இவ்விராஜதானியெல்லாம்சுற்றி அங்கங்கே ஜனங்கள் அவரவர்களுடைய தொழில் வியாபாரம் விருத்தி யவைகளுக்கேற்ப ஒத்துவாழ அஸ்பதமான ஒத்துழைக்கும் சங்கங்கள் ஏற்படுத்தியிருக்கிறார். ஒத்துவாழும் தன்மை குணத்தைப் பெற்றிருந்ததால், அவரவர்கள் ஹிருதயபூர்வமாகவொன்றாகும் அந்த காரணமாக இத்தசத்குணம் பிறந்து விருத்தியாகவேண்டுமேயன்றி சர்க்கார் நிர்ப்பந்தத்தாலாவது வேறு எந்தநிர்ப்பந்தத்தாலாவது இது விருத்திசெய்யத்தக்கதல்ல! ஆனால் சர்க்கார் உத்தியோகஸ்தர் ஒருவர் ஏன்? என்று கேட்டால், பல ஜனங்கள் எளியவர் ஏழைகளாயிருப்பவர்கள் சேர்ந்து ஏழைகளுக்கனுகூலமாகச் செய்துகொள்ளும் முயற்சியாதலால், யாராவது வல்லாளகண்டர் புகுந்து ஏழை ஜனங்களை ஏமாற்றிவிட்டுப் போகாதபடி ஒருவாறு சட்டதிட்டங்கள் செய்து அவைகளின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்துவரத்தக்க அதிகாரமும் அனுபவமுமுள்ள ஒருவர் வேண்டும். அப்படிப்பட்டவரே இந்த "கோ-ஆபரேடிவ் சங்கங்களின் ரிஜிஸ்திரார்." இப்பொழுது அந்த வேலையிலிருப்பவர் திவான் பஹதூர் எல். டி. ஸ்வாமிகண்ணுபிள்ளையவர்கள். இவருக்கு முன்னிருந்தவர் திவான் பஹதூர் இராமச்சந்திரராயர்.

இந்த கூட்டுச்சங்கங்களில் பூர்வம் நமது ரிஷிகள் ஏற்படுத்திய வருணாசிரம தர்மம் எப்படி அனுசரிக்கப்பட்டுவருகிறது என்று கேட்கலாம். இந்தக் காலத்துக்குத் தக்கபடி, தொழிலினாலோ, வர்த்தக வியாபாரங்களினாலோ, வியவசாயத்தினாலோ, உத்தியோகம் உழைப்பு ஜீவனங்களாலோ, ஒருவிதத்தில் ஏகபாவ சம்பந்தப்பட்டவர்கள் பலர் தங்களுக்குப்பொதுவாயுள்ள குறை நிறைகளைத் தாங்களே பார்த்துக்கொள்ளும்பொருட்டு ஒருகூட்டுச் சங்கமாகச்சேர்ந்து, கூட்டு வியாபாரத்தைப்போல் லாபத்தையே பிரதானமாகக் கொண்டுழைக்காமல், கூட்டு வியாபாரத்தால் வரும் லாபத்தைத் தாங்கள் தானே யனுபவிக்கும்படியான சாதகங்களோடு, லாப சிந்தனையை விட்டு பரஸ்பரோபகாரத்தையே பெரிதாகக் கொண்டுழைக்கக் கங்கணங்கட்டித் தங்களில் வியவகார ஞானமும் பரோபகார சிந்தையும்சேர்ந்த

விவேகிகள் சிலரைத் தெரிந்தெடுத்துத் தலைமைக்காரர்களாகநியமித்து அவர்களுக்குவேண்டிய பொருள்களை அவர்கள் தாங்களே வாங்கி தங்களுக்குள் தாங்களே விற்றுக்கொள்கிறார்கள். இதனால் போட்டிப்பேய் அவர்களைப் பிடித்து ஆட்டுவதில்லை. அவர்கள் ஒருவருக்கு துரோகம்செய்வதுமில்லை. ஒருவர் தயவை யெதிர் பார்ப்பதுமில்லை. ஒருவருக்கு நஷ்டம் வரச்செய்ய வேண்டுமென்பதும் அவர்கள் கருத்தில்லை. தாங்கள் தனிச்சுள்ளிகளாக விருந்தபோது கண்டவன் போனவனெல்லாம் தங்களை அலக்ஷியமாக நடத்திவந்ததை பொறுக்காமல், "எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்" என்கிற மூதுரையினுண்மையில் கட்டுப்பட்டவர்களாய் ஆளுக்குக் கொஞ்சம் சிறுதனம் சேர்த்துப் பொருமுதல் வைத்து, தங்களுக்கு வேண்டிய பொருள்களை மொத்தமாக வாங்குபவர்க்குக் கிடைக்கும் சரஸ விலைக்கு வாங்கி, ஊரொப்பந்தம் தங்களுக்குள் தாங்களே கடன் வியாபாரமின்றி ரொக்கத்திற்கு விற்றுக்கொண்டு, அதனால் வரும் லாபத்தைக் கடைசியில் தங்களுக்குள் கிரம விகிதமாகப் பங்கிட்டுக்கொள்கிறார்கள். இதில் கொள்பவனும் கொடுப்பவனும் ஏகமாயிருக்குந்தன்மையினால் மோசம்செய்ய ஹேதுவில்லை. மொத்தமாக வாங்கின சரக்கைப் பங்கிட்டுக் கொள்ள வியாபார முறையை யனுசரித்துச் சில சிப்பந்திகள் வைத்துக்கொள்கிறார்கள். இவர்கள் தங்களுக்குட்பட்டவர்களாக விருப்பதன்றி தங்களைப்போல் அந்த சங்கத்திலும் மெம்பர்களாக விருப்பவர்களாதலால் "எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்" என்னும் தர்மக்கட்டுப்பாட்டுக்கு மீறி நடக்க ஹேதுவில்லை. அப்படிப் பிசகாய் நடந்துகொண்டால் உடனே கண்டிக்க அவர்களுடைய பிரதிநிதிகளிருக்கிறார்கள். அவர்களுக்கு சம்பளமில்லையாதலால் "அஹம்நிருத்தி-பரசேவை" என்கிற தர்மத்துக்குக் கட்டுப்பட்டுழைக்கிறவர்களாக விருப்பார்கள். இப்படியாக இக்காலத்து வியாபார மோசத்துக்காட்படாமல், வியாபாரத்தால் வரும் லாபத்தையடைவதும், அதற்கு வேண்டிய வியவகாரங்களை நடத்தி வருவதால் வரும் சாமார்த்தியத்தில் தேறுவதும் அவர்களுக்குத் தலைப்பாடமாக ஏற்பட்டு விடுகிறது. இதனால் தன்னலமழிக்கும் சுயநயப் பின்குணம் படியாது பரநயம் பாராட்டும் பெருங்குணம் படிவதோடு, இகலோக வியாபாரத்துக்கு வேண்டிய "அஹம்நிருத்தியும்", பரலோக சாதனமான ஹிருதய சுத்திக்கு இன்றியமையாத "பரசேவை"க்குணமும் படிந்து அதனால் சத்குண சம்பத்து மேன்மேலுமுண்டாகி வளருவதற்குக் காரணமாகிறது! ஐயா! இப்படிக் 'கரும்பு தின்னக் கூலியும்' கிடைத்ததுபோல், வியாபார மோசத்துக்குட்படாமல் நல்ல சரக்கும், நல்ல சரக்குகளோடு வருஷக்கடைசியில், அவைகளை மொத்தமாக வாங்கித் தங்களுக்குள் தாங்களே பகிர்ந்து கொள்வதால் வரும் லாபத்தில் பங்கும் ஆகிய இகலோக லாபங்களோடு பரோபகார விர்த்திக்குக் காரணமான பரசேவைக் குணமும், அதனால் பரலோக சாதனமான வாய்மை, உறுதி, தீரம், ஹிருதயசுத்தி முதலிய பல உத்தம குணங்களும் சம்பவிக்குமானால் இதினும் மேலான சாதகம் வேறென்ன வேண்டும்! ஆகையால் நம்மவர்கள் முன்னுக்கு வரவேண்டுமானால் நெல்லிக்காய் மூட்டைகளாகத் திரிந்து சீரழிந்தது போதுமென்று கண்டுணர்ந்து, "எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்" என்னும் பரம தர்மத்தை மேற்கொண்டு அதை நித்தியப்படி ஜீவனத்தில் மேற்கொண்டொழுகி சன்மார்க்கத்தில் நடக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்! புருஷார்த்தங்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கின் தன்மையை ஒளவையார் வெகு நன்றாக விளக்கியிருக்கிறார்.

"ஈதலறம் தீவினைவிட் டீட்டல்பொருள் எஞ்ஞான்
காதலிரு வர்க்குங் கருத்தொருமித்—தாதரவு [றும்
பட்டதே யின்பம்; பரனைநினைந் திம் மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு."—ஒளவையார்.

THE RIGHT HON'BLE JOHN BURNS, M. P.

A LESSON FROM HIS LIFE.

He (Charles XII of Sweden) inspired me with the idea of triumphing over physical weakness, weariness and pain. To inure his body to bear all manner of hardships, indifferently to bathe in ice, or face the torrid rays of the sun, to discipline his physical powers by gymnastics, to make his body an instrument as tempered steel and at the same time to have that body absolutely at the disposition of the mind, that seemed to me, conduct worthy of a hero. And so, boylike, I tried to imitate him, and succeeded, at least so far as to be happily indifferent to the circumstances of my personal environment."—*John Burns.*

"The world is my country and to do good is my religion."—*Tom Paine's aphorism which affected the course of John Burns' life.*

"I have always held the view and I shall continue to hold it, that mere material improvement in man's environment, whether by Municipalities or States is not enough. Men are the sport of circumstances, when circumstances should be the sport of men. Just as one is compelled to divert one's passion into rational enjoyment, and disciplined pleasure, so, whilst uplifting men, women and children by Municipal and Imperial agencies, one must insist upon personal effort, individual will, the necessity of character, the obligation of sacrifice and control ; not too much officialism, less bureaucracy—in fact, a minimum of restriction, but example everywhere. We are a free people and it is better that men are taught that volition, initiative, and desire often yield, even with limited opportunities, a greater result for all than an over mechanised society that has only material improvements as its objective. "Man does not live by bread alone"......I mean...that it is not sufficient that society should consist of well-fed, regularly employed, materially prosperous people. Concurrent with that should go the higher qualities of civilization that spring from character, particularly on its Spartan side, which as history in the past proves, can be all too easily sapped by the allurements that prosperity yields, and against which the simplicity of a humbler standard of life is often a safeguard."—*The Right Hon'ble John Burns.*

கைவேலை செய்துழைத்து கனம் பொருந்திய மந்திரி ஸ்தானத்துக்கு வந்தவரான ஜான் பர்ன்ஸ்.

"இஷ்டவிருத்தி"—"ஈசனருள்."

மகாகனம்பொருந்திய ஜான் பர்ன்ஸ் என்பவர் இப்பொழுதுக்கு முன்னிருந்த லிபரல் கவர்ன்மெண்டில் "லோகல் கவர்ன்மெண்ட் போர்டுக்கு ப்ரெஸிடெண்டாக" விருக்கும் மந்திரி வேலைவகித்திருந்தார். இவருடைய சரித்திரம் சிந்திக்கப் பயன்தரும் ரஸம் பொருந்தியதாயிருக்கிறது. இவர் மிகவும் ஏழை வம்சத்தில் பிறந்து 10-வயதிலே தன் ஜீவனத்துக்காகத் தானே யுழைக்கும்படி நேரிட்டது. முதல் முதல் மெழுகுவர்த்தி செய்யும் ஒரு வேலைச் சாலையில் கூலிவேலைக் கமர்ந்துழைத்தார். பிறகு ஆபீஸில் சில்லரைச் சேவகத்திலமர்ந்தார். பிறகு இரும்பு வேலைக்கிடங்கில் பட்டந்தைக்கும் பையனாக வேலைசெய்து பிழைத்தார். இவ்வளவுழைத்தும் இப்பையனுடைய வருமானம் இவனுடைய சொற்ப ஜீவனத்துக்குப் போதாமையால் ஞாயிற்றுக்கிழமை தினம் சாராயக்கடையில் கூலிவேலைசெய்து வந்த லாபத்தைக்கொண்டு பிழைத்தார். இப்படி கஷ்டப்பட்டு ஜீவனம் செய்துவந்த பையன், ஒரு அணாவுக்கு ஒரு பழையபுஸ்தகம் வாங்கி வாசித்தார். அது ஸ்வீடன் தேசத்து 12-வது சார்ல்ஸ் அவர்களின் சரித்திரம். இந்த மன்னர் தேகவன்மை பொருந்தி தேகத்தை நன்றாகப் பழக்கி மனதுக்கிசைந்து நடக்கும்படி செய்து வந்தவராதீர். இவருடைய சரித்திரத்தை வாசித்த ஜான் பர்ன்ஸ் என்னும் வாலிபனுக்கு இவரைப்போல் தானும், பசி, தாகம், சீதோஷ்ணம் இவைகளையெல்லாம் சகிக்கத்தக்கதாகத் தன் தேகத்தைப் பழக்கிப் பதமிட்டு எஃகு போல் வணங்கி வரச்செய்து கொள்வதோடு, மனதுக்குட்பட்டு மனோவசப்பட்ட தேகமாகவிருக்கும்படி தன் தேகத்தைப் பழக்கிக்கொள்ளவேண்டுமென்று ஆசையுண்டாயிற்று. உண்டாகவே, பனியில் நனைந்து வெயிலில்

சாய்ந்து, ஆகாரங்களில் சொகுஸுபாராமல் கிடைத்ததைப்புசித்துப், புசித்ததை நன்றாக ஜீரணிக்கச் செய்யும்படியான வன்மைபொருந்தியதாய்ச் செய்துகொண்டார். இதனால் இச்சிறுவன் எவ்வளவோ ஜீவனோபாயத்துக்காகக் கஷ்டப்பட்டுழைக்க வேண்டியிருந்தும் அந்த தேககஷ்டங்களையெல்லாம் லக்ஷியஞ்செய்யாது தன் மனதையும் விர்த்திசெய்து கொள்ளவேண்டி அபாரசிரமம் வகித்துழைக்கத் தீர்மானிக்கவும், தீர்மானித்தபடி நடக்கவும் சாத்தியமாயிருந்தது. இப்படி ஜீவனத்துக்குழைத்துக் கூலிவேலை வாங்கி ஜீவனம் செய்து வருகையிலும் வேலைசெய்து வருந்தியிளைத்த பின் இளைப்பினால் களைமீறாது தன்தேகத்தை மனோசக்தியால் திடப்படுத்திக் கொண்டு, மேன்மேலும் அனேக புஸ்தகங்களை வாசித்து வருகையில், இவர் 'ஜனசாமான்னிய தர்மம்' என்று சொல்லும் எல்லா ஜனங்களும் ஈசுவரனுக்கு சமமானதால், ஈசுவர சிருஷ்டியாம் ஜகத்திலுள்ள சுகபோகங்களை எல்லாரும் சமமாக அனுபவிக்கப் பாத்தியப்பட்டவர்களாக விருக்கிறார்கள் என்கிற "ஸோஷியாலிஸம்" என்று சொல்லும் ஜனசாமன்னிய தர்மத்தை யனுசரித்துழைக்கும் ஒரு கக்ஷியார் அபிப்பிராயங்களை யனுசரித்து அவர்கள் கொள்கைகளை யங்கீகரித்தனுஷ்டிப்பவரானார். இவர்களுடைய பிரதமக் கொள்கை யென்னவென்றால், ஜகம் எல்லாருக்கும் பொது: ஜீவன்களெல்லாரும் சமமாக ஜீவித்து சுகித்திருக்க பாத்தியப்பட்டவர்களாயிருக்கிறார்கள். ஏழை தனவந்தன் என்கிற வித்தியாசங்கள் மனுஷன் தானாக ஏற்படுத்தினவேயன்றி இயற்கை தர்மத்தில் அவை ஏற்படவில்லை யென்பதே. இதற்கு மாறாகவுள்ள சட்டதிட்ட துரைத்தன ஏற்பாடுகளையெல்லாம் இதற்கு அனுகுணமாகத் திருத்தவேண்டுமென்பது இவர்கள் கோரிக்கை. இதற்காக இவர்கள் கங்கணங்கட்டி யுழைத்துவந்தார்கள். இப்படி உழைத்து வந்தவர்களில் சிரேஷ்டர்களாயுள்ளவர்கள் தர்மங்களையாராய்ந்து அனுஷ்டிக்கத் தலைப்பட்டபொழுது "இவ்வுலகெலாம் எனக்கு ஸ்வதேசம், நலஞ்செயல் ஒன்றே உண்மையாய் நான் கொண்டாடும் மதம்" என்று மிஸ்டர் டாம் பெயின் என்பவர் சொல்லிவந்த ஸத்ய வாக்கியம் இவர் மனதைக்கவர்ந்து இவரை அவ்வழியில் நடக்கச்செய்தது. இந்த உண்மையையே, இன்னும் தூக்கி நமது வேதங்கள் "ஸத்யம்வத: தர்மம்சர!" என்று கோஷிக்கின்றன.

இப்படி சிறுகச் சிறுக சாமான்ய ஜனங்களின் க்ஷேமத்தை நாடி தனவந்தர்கள் செய்யும் அக்கிரமத்தை யடக்க வுழைக்கும் உத்தமர்களில் இவர் ஒருவராக முன்னுக்கு வரத் தலைப்பட்டார். அப்பொழுது ஜனங்களைக்கூட்டி அவர்களுக்கு ஹிதபோதம் சொல்லி அக்கிரமங்களை யெதிர்த்துப் பேசிவரும் போது போலீஸ் அதிகாரிகள் இவர்களை "கலகக்காரர்கள்" என்று பிடித்துக் காவல்படுத்தி போலீஸ் கோர்ட்டில் கொண்டுபோய் தண்டித்து வந்தார்கள். இப்படி எத்தனையோ தரம் போலீஸாரோடு மன்றாடி, ஒருமுறை ஜயிலுக்குங்கூடப் போயிருந்து வந்தார். லண்டனிலுள்ள "ஹைட்பார்க்" என்னும் பொதுத்தோட்டத்தில் இவர் பிரசங்கம்செய்து வந்தபொழுது போலீஸார் இவரைப் பிடித்திழுத்துச் சிறைப்படுத்தி முரட்டுத்தனமாகக் கோர்ட்டுக்கிழுத்துச் சென்றார்கள். அப்பொழுது இவருடைய மேன்மையையும் தைரியத்தையும் பார்த்து ஆச்சரியப்பட்டு பிரமித்து நின்ற மிஸ் சார்லோட்டி கேல் என்னும் ஒரு இளமாது இப்படிப்பட்ட தீரனை மணந்து இவனுக்குப் பக்க பலமாயிருந்துதவவேண்டுமென்று மனசில் தீர்மானித்துக் கொண்டு காத்திருந்தாள். ஜெயிலை விட்டு வந்ததும் அப்பெண்ணரசி அவர் பெருமையையும் தீரத்தையும் கொண்டாடித் தன்னை அவருடைய வாழ்க்கைத் துணையாக அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளத் துணிந்தாள். அந்தப் பெண்மணி, இப்பொழுது அவருடைய மனதுக்கிசைந்த மனைவியும் விரதத்துக்கிசைந்த தலைவியுமாகவிருந்து அவருக்கு உற்றதோர் வாழ்க்கைத் துணையாயிருந்து அவருடைய இல்லறம் சிறக்கச்செய்து வருகிறார். அவர் முன்னுக்கு வந்து சிறப்பெய்தியது அந்த அம்மாளுடைய உதவியினாலேயே யென்று அவரே ஒப்பிக்கொள்கிறார்.

மிஸ்டர் ஜான் பர்ன்ஸ் விவாகமாகுமுன் தென்னாபிரிகாவில் இஞ்சினீராக வேலை செய்துவந்தார். அங்கே பெரும் கீர்த்தியும் பெற்று இங்கிலாந்துக்குத் திரும்பிவந்து "கௌன்டி கௌன்ஸில்" மெம்பராக ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டு, ஏழைகளில் ஏழையாய் ஏழைகளுக்குதவியாய் வெகுபாடுபட்டுழைத்து வந்தார். 1886-ம் வருஷத்தில் மறுபடியும் அதிகாரிகளுக்கும் ஜனங்களுக்கு முண்டான சச்சரவில் இவர் சிறைப்பிடித்து 3-மாசம் காவலிலிடப்பட்டார். ஆனாலும் இவர் ஒன்றுக்கும் அஞ்சாது பொதுவிஷயத்தில் மனம் கவிந்து பொதுக்ஷேமமே பெரிதாகவுழைத்துவந்தார். இவர் "கௌன்டி கௌன்ஸில்" மெம்பராக வந்தபின், இவருடைய டிஸ்திரிக்டில் ஏழைகளுக்குவேண்டிய உதவிசெய்துழைப்பதில் அதிக சிரத்தையெடுத்து வந்தார். இவர் ஏழைக்கெளியவர் என்றும் ஏழைபங்காளியென்றும் ஜனங்கள் இவரைக் கொண்டாடி வந்தார்கள். பிறகு பார்லிமெந்து சபையில் மெம்பராக வந்து பல வருஷங்கள் அம்மகா சபையில் தன்னுடைய சாமர்த்தியத்தைக் காட்டி ஏழைகளுக்குச் சகாயமாக வுழைத்துவந்ததில், இவரைப்போல் கைவேலைசெய்து உழைத்து முன்னுக்குவந்த அனேகர் இப்பொழுது பார்லிமெந்து சபையில் மெம்பர்களாக வர ஏற்பட்டு, இவர்கள் கக்ஷி பலப்படலாயிற்று. பலப்படவும் அக்கக்ஷிக்கெல்லாம் தலைவராய் விளங்கிய இவர் புதிதாய் ஏற்பட்ட லிபரல் கவர்ன்மெண்டில் ஸ்தானீக சுய ஆக்ஷித்தலைவராக மந்திராலோசனை சபையில் முதல்மந்திரி முதலானவர்களோடுகூட விருந்து ஆலோசனை சொல்லும் அந்தஸ்துப் பெற்றவரானார். இந்தப் பதவிக்கு வருமுன்னரே, மாக்ஷிமைதங்கிய நமது அரசர், இவரைத் தமது சொந்த ஆலோசனை சபையில் (Privy Council) ஒரு மெம்பராகவிருக்க நியமித்துவந்தார். கைவேலை செய்துழைத்து கனம்பொருந்திய மந்திரி ஸ்தானத்துக்கு வந்த இவர், ஏதோ காட்டாள், மோட்டாளாகவில்லாமல், ஸர்வகலாசாலையில் படித்துத் தேறிப் பரம்பரையாக இராஜதுரந்தரர்களாயிருந்த பிரபுக்கள் பிரமுகர்கள் வமிசத்தில் பிறந்த பிரபுக்கள் வித்துவான்களுக்குச் சரியாக அந்தஸ்துவகித்து ஆலோசனை சொல்வதன்னியில், இவருடைய கொள்கைகளும் அபிப்பிராயங்களும் மூலதத்துவங்களை யொட்டினவைகளாகவும், இரண்டு சொல்ல சாத்தியமில்லாதனவாகவு மிருக்கின்றன. உதாரணமாக, ஜனக்ஷேம விர்த்தியைப்பற்றி இவர் ஆதிமுதல் கொண்டிருந்து இப்பொழுது பின்னும் அதை வற்புறுத்திக் கூறின கொள்கை மிகவும் மேலாகவும் உத்தமமாகமிருப்பது பின்வரும் அவர் அபிப்பிராயத்தால் விளங்கும். அவர் சொல்கிறார்:—

"மனுஷன் விர்த்திக்குவர முனிசிபாலிடிகளாலும் சர்க்காராலும் தனதான்ய சுகசம்பத்துக்கள் விர்த்தியாகமட்டும் செய்தால் போதாது என்பது ஆதிமுதல் நான் கொண்ட கொள்கையாயிருக்கிறது. இன்றைக்கும் அதை மாற்றாமல் நாளைக்கும் அதுவே உண்மையாகக் கொள்ளத்தக்கது என்று கொண்டிருக்கிறேன். மனிதர்கள் சந்தர்ப்ப வசப்பட்டவர்களாயிருக்கிறார்கள். அப்படிக்கின்றி சந்தர்ப்பங்கள் மனிதர் வசப்பட்டனவாகவும் அவர்கள் லீலா விநோதமாக உபயோகிக்கத் தக்கனவாகவு மிருக்கவேண்டியது கிரமம். மனுஷன் பிரத்தியேகத்தில் காமமோஹாதி தாபங்களை யடக்கி யுக்தானுசாரமாய் அவைகளையனுபவிக்கப் பழக்க வேண்டியதவசியமாயிருப்பதுபோலவே, பொதுக்ஷேமத்திலும் முனிசிபாலிடிகள் மூலமாகவும் சர்க்கார் உதவியினாலும், ஜனக்ஷேமத்துக்கடுத்த சாதன சாதகங்களை விர்த்திசெய்து வருகையில், ஜனங்கள் தாமே தங்கள் சொந்த முயற்சியாலும் இஷ்டப்பிரயத்தனத்தாலும், சத்குணசம்பத்தாலும், கர்மபலத்தியாகத்தாலும், தன்னடக்கத்தாலும் முன்னுக்குவர முயற்சித்துழைக்கும்படி செய்யவேண்டியது அத்யாவசியமாயிருக்கிறது—அதாவது அதிகார வரம்பும், உத்தி

யோகஸ்தர் கட்டுப்பாடும், குறைந்துவர, எங்கும் ஜனங்கள் தன்முயற்சியால் முன்னுக்குவர உதாரணங்காட்டி யுழைப்பவர்களாக விருக்க வேண்டும். நாம் (ஆங்கிலேயர்) ஸ்வதந்தர புருஷர்கள்; ஆகையால் ஜனங்கள் தன்னிச்சையாலும், தன்முயற்சியாலும், ஸ்வசங்கல்பத்தாலும் (அநேக இக்கட்டுகளுக்குட்பட்டுழைக்கவேண்டியிருப்பினும்) எவ்வளவோ முன்னுக்குவரலா மென்பதையுணர உணர்த்த வேண்டும், பஹிர்முகசுகத்தையே நாடி தனவிருத்தி யொன்றிலே மனமூன்றி சட்டதிட்ட கட்டுப்பாடுகளெல்லாம் அதற்கனுகூலமாக அமைந்து ஸ்வசிந்தையும் ஸ்வமுயற்சியும் அதிகமாக வேண்டியிராமல், யந்திரம்போல் நடந்துவரும் இராஜாங்க ஏற்பாடு அமையப்பெற்ற ஜனசமூகத்தைவிட, ஸ்வசிந்தையும் ஸ்வமுயற்சியும் பொருந்திய ஸ்வதந்திர ஜனங்களமைந்த ஜனசமூகம் சீக்கிரத்தில் மேன்மையடைந்து முன்னுக்குவரக் காரணமாகும். மனுஷன் வயிறு வளர்க்கவென்றே பிறந்தவனல்ல. வயிற்றுப்பாட்டோடு அவன் புத்தி சித்தம் விர்த்தியடைந்து அறிவு விர்த்தியடையப் பாடுபட்டுழைப்பது மிகவும் அவசியமாயிருக்கிறது. உண்டு கொழுத்த காளைகள் நிறைந்த ஜனசமூகம் மேலானதல்ல. அஹம் விருத்தி, பரசேவை இவைகளால் ஸ்வாத்ம விருத்தியும் ஸ்வக்ஷேமநாட்டமும் பொருந்திய மனிதர்கள் இருக்கும் ஜனசமூகமே விர்த்தியடைந்து முன்னுக்கு வருமென்பது என்னுடைய சித்தாந்தம். ஆகையால் ஐசுவரிய விர்த்தியால் உண்டுடுத்துறங்கி சுகித்து மிருகப்பிராயமாய் வளரும் ஜனங்களைவிட, கஷ்ட ஜீவனம்செய்து, இஷ்டவிருத்தியை நாடும் ஜனங்கள் மிகுந்திருப்பதே நாட்டுக்கு நன்மை பயப்பதாம்'' என்று அவர் தம் அபிப்பிராயத்தைக் கூறியிருக்கிறார். இஷ்டவிருத்தி யென்றால் "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்று திரிவதில்லை. திருமூலர் திருமந்திரோபதேசத்தில் திருவாய்மலர்ந்தருளியபடி "இஷ்டவிருத்தி" முதிர்ந்தால் அதுவே "ஈசனருளு" மாம்.

"கொட்டுக்குந்தாலியிரண்டேயிரண்டுக்குங்
கொட்டுக்குந்தாலிக்கும் பாரைவலிதென்பர்
கொட்டுக்குந்தாலிக்கும் பாரைக்குமூன்றுக்கும்
மிஷ்டம்வலிதென் பரீசனருளே."

TRAVEL AND DESCRIPTION.

யாத்திரை க்ஷேத்திர வர்ணனை.

AYODIYA.

அயோத்தி.

அலகாபாத்திலுள்ள டோராகஞ்சுக்கு சமீபத்திலுள்ள அல்லன்கஞ்சு ரயில் ஸ்டேஷனில் வண்டியேறி வடக்காக பிரதாப்கர் என்ற சந்திப்பு ஸ்டேஷனைக் கடந்து அயோத்திக்குச் செல்லவேண்டும். இந்த பிரதாப்கர் என்பது ஒரு சிறிய இராஜ சமஸ்தானம் ஸ்டேஷனிலிருந்து சுமார் மூன்றுமைல் தூரத்திலுள்ள ஒரு அழகான பட்டணம். ஸ்டேஷனுக்கு சமீபத்திலேயே சில கடைகளும் வீடுகளும் காணப்பட்டாலும் தாமதிக்க சற்றும் வசதியானதன்று. திருடர்களும் போக்கிரிகளும் அதிகம். வண்டியொன்றுக்கு எட்டணா கொடுத்தால் பட்டணம் சேரலாம். இவ்விடத்தில் இறங்குவதற்கு தகுந்த இரண்டு மூன்று தர்மசாலைகளிருக்கின்றன. பட்டணம் கூடியவரையில் அதிக சுத்தமாகவும் சீர்த்தியாகவும் காணப்படுகிறது. இராஜருடைய அரண்மனை அதிக அலங்காரமானகட்டடம். சில தெருவுகள் மட்டும் விஸ்தாரமானதாகக் காணப்படுகிறதேயன்றி மற்றவைகள் பெரும்பாலும் சந்துகள். அலகாபாத்திலிருந்து அயோத்திக்கு நேராக வண்டிகள் செல்கிறதில்லையாதலால் யாம் இந்த ஊரில் ஒருநாள் தங்க நேர்ந்தது. இவ்விடத்திலிருந்து இரவு ஒரு மணிக்குப் புறப்படுகிற வண்டியில் ஏறினால் மறுநாட்காலை எட்டு மணிக்கு அயோத்தி சேரலாம். இது ஒரு சிறிய ஸ்டேஷன். இதற்கு அயோத்தியாகாட் என்று சொல்லப்படுகிறது. ஸ்டேஷனிலிருந்து பட்டணம் அதிகதூரமன்று. அரைமைல் தூரம் சென்றால் நாட்டுக்கோட்டை செட்டிமார்களுடைய சத்திரம் சேரலாம்.

இந்த க்ஷேத்திரமானது வைகுண்டத்திற்கு சமானமானதென்றும், இதின் முக்கிய பாகமானது சுவயம்பு மனுவால் வைகுண்டத்திலிருந்து பூலோகத்திற்குக் கொண்டுவரப்பட்

டதென்றும், இதற்கு சாகேதபுரி, சத்திபுரி, விமலை என்ற பெயர்களுண்டென்றும், ஸ்ரீ மகா விஷ்ணுவுக்கு இந்த அயோத்தி முகம் போன்றதென்றும், இதில் பிர்ம்மகுண்டம், தசரதகுண்டம், பிரகஸ்பதிகுண்டம் முதலிய அநேக தீர்த்தங்களிருக்கின்றன வென்றும், இதில் பிரவேசித்து ஓடும் சரயு நதிக்கு இராமகங்கா, வசிஷ்டா என்ற பெயர்களுண்டென்றும், இந்தப்பட்டணம் ஆதியில் வைவசுவத மனுவினால் கட்டப்பட்டதென்றும், இது ஒருவராலும் ஜயிக்கப்படாதபடி அவ்வளவு உன்னத காப்புகளை யுடையதாயிருந்தபடியால் இதற்கு அயோத்தி என்றபெயர் கொடுக்கப்பட்டதாகவும், கூறப்படுகிறது.

தசரத சக்கரவர்த்தியால் 60,000-வருஷம் ஆளப்பட்டதும், அவர் குமாரரும் மகாவிஷ்ணுவின் அவதாரமுமான ஸ்ரீராமரால் 12,000 வருஷகாலம் இராஜ்ஜியபாரம் வகிக்கப்பட்டதுமானவிடமிதுவே என்றால் அதற்கு வேறு சிறப்பு என்னவேண்டும்? அன்றியும், ஸ்ரீராமர் தம் தம்பிமார்களுடன் அந்திகாலத்தில், சரயு நதியிலிறங்கி தேகத்தோடு வைகுண்டம் சென்றதாகக் கொண்டாடப்படுவதால், சரயு நதியில் ஸ்நானஞ் செய்கிறவர்களுக்கு பலனை விளக்குவதாயிருக்கிறது. இது பூர்வத்தில் 200-மைல் நீளமும் 72-மைல் அகலமு முள்ள பிரமாண்டமான பட்டணமாக விருந்ததாகவும், ஸ்ரீ காசியே இதற்கு மயான பூமியாக விருந்ததாகவும் கூறப்படுகிறது. பிறகு நேர்ந்த கலகங்களால் பலதடவைகளில் அழிவுற்றும், பலதடவைகளில் புதுப்பிக்கப்பட்டும் வந்ததில் கடைசியாக கி. மு. 87-க்கு முந்தி விக்கிரமார்க்க ராஜனுடைய வசமாகி புதுப்பிக்கப்பட்டு சுமார் 400 ஆலயங்கள் வரையில் கட்டப்பட்டு உந்நத ஸ்திதியிலிருந்ததாகவும் தெரியவருகிறது. மேற்படி விக்கிரமார்க்க ராஜரால் கட்டப்பட்டதாக சொல்லப்படுகிற ஸ்ரீராமர் ஆலயம் ஒன்றே தான் இப்பொழுது நல்ல ஸ்திதியிலிருக்கிறது.

தற்காலம் இந்த அயோத்தி மாகாணமானது 24,050 சதுரமைல் விஸ்தீரணமுள்ளதும், இலக்ஷ்மணபுரி என்ற லக்நோவை தலைமை பட்டணமாகக் கொண்டதும். பைசாபாத்து, அயோத்தி, பிரதாபகர், பாரியகர், கொண்டா, சீதாப்பூர் முதலிய சில பட்டணங்களையுடையதுமான செழிப்பான நாடு என்பதில் தடையில்லை. நெல், கோதுமை, சோளம், கரும்பு, பருத்தி, புகையிலை, அபினி, முத்துக்கொட்டை முதலியவைகள் ஏராளமாய் விளைவிக்கப்படுகின்றன. சரயு நதியோரத்தில் உருளைக்கிழங்கு, கத்தரி, வெள்ளரி, வாழை முதலியவைகள் பயிர் செய்யப்படுகின்றது.

இப்பொழுது இந்த அயோத்தி பட்டணமானது சரயு நதியின் தென்பக்கத்தில் சுமார் 12-மைல் சுற்றளவுள்ளதாயும், நதியின் ஓரத்தில் தகுந்த மாதிரியான படிக்கட்டுகளை கட்டியதாகக் காணப்படாதபோதிலும் இலக்ஷ்மணகாட், இராமகாட், சுகிரிகாட் என்ற பல நாமங்களையுடைய ஸ்நான கட்டடங்களை யுடையதாயும், விசாலமான பல தெருக்களை யுடையதாயும், மூன்று, நான்கு அடுக்கு மெத்தைகளுடைய பல வீடுகளையுடையதாயும், ராவணனுடைய மூலபலச்சேனைகள் யுத்தத்திற்கு வெளிப்பட்டபோது அங்கும் இராமன், இங்கும் இராமன், எங்கும் இராமன் என்று கூறும்படி ஒவ்வொருவரும் ஸ்ரீராமராகக் காணப்பட்டதாகக் கூறப்படுவதுபோல ஒவ்வொரு வீட்டிலும் கட்டடத்திலும், சத்திரத்திலும், தர்மசாலையிலும், சீதா, லக்ஷ்மண, பரத, சத்துருக்னர், அனுமத் ஸமேதராக ஸ்ரீராமரை சலவைக்கல் முதலியவைகளில் திவ்விய விக்கிரகங்களாகச் செய்து, பலவித ஆபரணங்களாலும் பட்டாடைகளாலும் அலங்கரித்து திவ்வியமான மண்டபங்களில் பொன்மயமான சிம்மாசனங்களில் கொலுவைத்து தினப்படி பூஜை, நைவேத்தியம், தூபதீபாராதனைகளை வெகு விமரிசையாகச் செய்து வருகிறார்கள். இப்பேர்க்கொத்த ஆலயங்கள்

சுமார் 2000-த்திற்கு அதிகமாக விருக்கலாமென்று மதிக்கலாம். இவைகளில் முக்கியமானவை:

1. கனகபூவனம்.—என்பது தர்பங்கா இராஜரால் கட்டப்பட்டது. மூன்றடுக்குமெத்தையுள்ளது. மண்டபம் வெகு விநோதமான கட்டடம். பொன்னினால் செய்யப்பட்ட சிம்மாஸனத்தில் ராமர் இலக்ஷ்மணர் முதலியவர்களுடைய விக்கிரகங்கள் வெள்ளைக்கற்களால் செய்யப்பட்டு அதிக விலைபெற்ற ஆபரணங்களால் அமைக்கப்பட்டிருக்கிறது. விக்கிரகங்கள் உயிருடனிருப்பதுபோலவே காணப்படுகின்றன.

2. இரத்தினபூவனம்.—இது ஒரு இந்து அரசரால் கட்டப்பட்ட பிர்மாண்டமான கட்டடம். இதற்குள்ளிருக்கும் இரத்தன பூவனம் என்ற மண்டபம் வெகு விநோதமும் வேலைப்பாடுமுள்ளது. சிம்மாசனமானது பொன்னினால் செய்யப்பட்டு நவமணிகளால் பிரகாசிக்கின்றது. இராமர் விக்கிரகமும் பரதர் விக்கிரகமும் நீலகற்களினாலும் இலக்ஷ்மணர், சத்துருக்னர், சீதை இவர்களுடைய விக்கிரகங்கள் வெள்ளைக் கற்களாலும் செய்யப்பட்டிருக்கின்றன.

3. சிரோய்ராஜா மண்டபம்:—இது வெள்ளைக் கற்களாலேயே கட்டப்பட்ட இரண்டு கோபுரங்களோடுகூடிய அழகான கட்டடம். இந்த கோபுர கலசத்தின்பேரில் பொன்னால் செய்துவைக்கப்பட்ட ஒரு மயிலும், ஒரு பெரியஸர்ப்பமும் வெகு விநோதமாகவும் பயங்கரமாகவும் காணப்படுகிறது. இவ்வாலயத்தில் இரண்டிடத்தில் இராமலக்ஷ்மணர்களுடைய விக்கிரகங்கள் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருப்பதுடன் வேதவியாசர் பாரதபடனஞ் செய்வதுபோல விக்கிரகம் செய்தும் வைக்கப்பட்டிருக்கிறது.

4. சீதையின் ஸ்வர்ணவிக்கிரகம்:—இது ஒரு பெரியதும் புராதனமுமானகட்டடம். ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம் செய்யும் காலத்தில் சீதை வனத்திலிருந்தபடியால் அவ்வம்மனைப்போல் பொன்னால் ஒரு விக்கிரகம் செய்து யாகத்தைநடத்தியதாகவும், அந்த பொன்விக்கிரகமே இப்பொழுதும் இந்தஆலயத்திலிருக்கிறதாகவும் கூறுகிறார்கள். தவிர பிற்காலத்தில் இராம லக்ஷ்மணர்களுடைய விக்கிரகங்களும் பொன்னாலேயே செய்துவைக்கப்பட்டதாகவும் சொல்லுகிறார்கள். சீதையம்மன்விக்கிரகம் அதிக சிறியதாகவிருந்தபோதிலும் வெகுலக்ஷணமாயும் உயிர்க்களையுள்ளதாயும் காணப்படுகிறது. இதை தரிசிக்கவிரும்புகிற ஒவ்வொரு குடும்பத்தாரும் ஒருரூபாய் கொடுக்கவேண்டும். இரவு ஏழு மணிக்குமேல்தான் தரிசிக்கமுடியும். பகலில் யாவருக்கும் தரிசனஞ்செய்ய முடியாது. ஏகாதசி தினங்களில்மட்டும் யாவரும் இலவசமாகப் போய்தரிசிக்கலாம்.

இராமர் ஜெனன ஸ்தானம்:—இப்பொழுது இது ஒரு சிறியகோவில். சுமார் 12 அடிநீளமும் 15 அடிஅகலமும்கொண்டதாய் 8-அடி உயரமுள்ள கட்டடம். மனிதர்கள் உள்ளே தாராளமாய்ச் செல்லமுடியாது. ஒரு பண்டா (ஸ்தானீகர்) இவ்விடத்தில் இராமலக்ஷ்மணர்களுடைய விக்கிரகங்களை வைத்துக்கொண்டும், ஸ்ரீராமர் ஜெனனஸ்தானத்தில் ஒரு சிறியகட்டிலும் அதன்மேல் பட்டினால் செய்யப்பட்டமெத்தை, திண்டு, தலையணை முதலியவைகளையும் வைத்துக்கொண்டு தரிசனஞ்செய்ய வருகிறவர்களிடம் விக்கிரகம், படுக்கை முதலியவைகளைக்காட்டி பைசா வாங்குகிறார். இதற்கு அடுத்தது பெரியதான மகம்மதியர்களுடைய கோரி. ஸ்ரீராமருடைய ஜெனனஸ்தானத்திலிருந்த பிர்மாண்டமான ஆஸ்தானமண்டபத்தை யிடித்து இந்தகோரி கட்டப்பட்டதாகவும், பிற்காலத்தில் பலதடவைகளில் மகமதியர்களுக்கும், இந்துக்களுக்கும் இந்தவிஷயமாய் கலகங்கள் நடந்து கடைசியாக அக்கோரியின் வாயிலிலேயே இப்பொழுதிருக்கிற இந்த ஆலயம் கட்டப்பட்டதாகவும் கூறப்படுகிறது. கோரியினுடைய வாயிலும் மூடப்பட்டே கிடக்கிறது. இந்தவிடத்தில் எப்பொழுதும் ஒரு திவ்வியமான வாசனையுள்ள காற்று அடித்துக்கொண்டே யிருக்கிறது. இதற்கு சமீபத்தில் அழிந்துபோன பலகட்டடங்களின் அஸ்திவாரம் முதலிய குறிகளை இன்றும் காணலாம்.

அநுமார் சந்நதி.—இது இலக்ஷ்மணகட்டத்திலிருந்து ஒருமையில் தூரத்தில் ஒரு சிறிய குன்றின்பேரிலுள்ள பெரிய ஆலயம். இம்மலைக்கு செல்வதற்கு பலமானகற்படிகள் கட்டியிருக்கிறார்கள். துளசிதாசர் இந்தவிடத்தில்தான் தங்கி அன்னதானஞ்செய்துக்கொண்டுவந்ததாகவும், அநுமார் இந்தவிடத்தில்தான் அவருக்கு பிரத்தியக்ஷமாகி ஸ்ரீராமபிரானை தரிசனஞ்செய்யத் தகுந்த வழிகளையுபதேசித்ததாகவும், இப்பொழுது இவ்விடத்தில் பூஜிக்கப்படும் அநுமார் விக்கிரகம் மேற்படி துளசிதாசர் பிரதிஷ்டை செய்து வைத்து பூஜித்ததென்றும் கூறப்படுகின்றது. இந்த ஆலயத்தில் தினப்படி 500—600,பைராகிகளுக்கு அதிக உபசாரமாக அன்னபானாதிகள் அளிக்கப்படுகிறது. இம்மலையின் மீதுள்ள கட்டடம் வெகு பலமாகவும் அழகாகவும் கட்டப்பட்டது.

அயோத்திராஜா மஹால்,—இது சுமார் இரண்டு மைல் சுற்றளவுள்ள விஸ்தாரமான விடத்தில் வெகு அழகாகவும் கம்பீரமாகவும் கட்டப்பட்ட அரண்மனை. அரண்மனைவாசலுக்கு எதிர்ப்புறத்தில் இரண்டு சிறிய கோவில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஒன்றில் அநுமாரும் மற்றொன்றில் கருடரும் காணப்படுகிறார்கள். வில்வளைவான வாயிலின் இருபுறத்திலும் இரண்டு சிம்ம உருவங்கள்செய்து வைக்கப்பட்டிருப்பதுடன் இரண்டு பெரிய பீரங்கிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. உள்ளே யாவரும் சென்று பார்க்கலாம். உள்ளே சென்றால், நடுவில் சுமார் 200—கஜ அகலமும் நீளமுமான காலியிடம் விடப்பட்டு சுற்றிலும் மூன்றடுக்குள்ள மெத்தை கட்டடம் காணப்படுகிறது. இந்த கட்டடங்களில் பல ஆபீஸ்களிருக்கின்றன. இதைக்கடந்து உட்சென்றால் இதே மாதிரியான ஒரு காலியிடமும் சதுரமான கட்டடமும் காணப்படுகிறது. இந்த கட்டடங்களில் கஜானாவும், அதைச் சேர்ந்த ஆபீசுகளும், போலீஸ் டாணாவுமிருக்கின்றது. இதையடுத்ததும் முன் சொன்ன மாதிரியான சதுரகட்டடம் இதில் ஆயுதசாலையும், புஸ்தகசாலையும், வைத்தியசாலையும், அரண்மனையைச் சேர்ந்த பண்டசாலையு மிருக்கின்றன. இதற்குப் பின்புறத்தில் ஒரு அழகான சிங்காரவனம். பல விதமான புஷ்பச் செடிகள் இலக்ஷணமாக வைக்கப்பட்டு பரிபாலித்து வரப்படுகின்றன. இதில் இளைப்பாறுவதற்கு பல விடங்களில் பெஞ்சுகள் போடப்பட்டிருப்பதன்றி இரவு வெளிச்சத்திற்காக இலாந்தர்களும் போடப்பட்டிருக்கின்றன. இதைப் பார்த்துக்கொண்டு சற்றுதூரம் சென்றால் ஒரு அழகான ஆலயத்தைக்காணலாம். இதில் விஸ்வநாதலிங்கம் என்ற நாமத்தோடு ஒரு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு திரிகாலங்களிலும் பூஜை முதலியவைகள் அதிக சிரத்தையுடன் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆலயத்தின் முன் இந்த சமஸ்தானபதிகளாகவிருந்த அரசர்களுடைய உருவப் படங்களை வைத்திருக்கிறார்கள். இந்த ஆலயத்தின் பின்புறத்திலும் சிங்காரவனம் சூழ்ந்திருக்கிறது. இந்த இராஜாநுடைய பூர்வ அரண்மனை நாட்டுக்கோட்டை செட்டிமார்களுடைய சத்திரத்திற்கு எதிரிலிருக்கிறது. இதுவும் பலமான கட்டடமே என்றாலும் நாகரீகமானதன்று.

இவைகளைத் தவிர வடதேசத்திலுள்ள ஒவ்வொரு இராஜாவும், ஜமீன்தாரரும், பிரபுவும் இந்த ஸ்தலத்தில் ஒவ்வொரு கட்டடத்தை தன் யோக்கியதைக்குத் தகுந்த விதம் கட்டி அதில் இராம லக்ஷ்மணர்களுடைய விக்கிரங்களை யமைத்து, பூஜை முதலியவை

களை நடத்திவருகிறார்கள். அன்றியும் பைராகிகளுக்கும் மற்ற பரதேச யாத்திரைக்காரர்களுக்கும் அன்னமளிக்கிற தர்ம ஸ்தாபனங்களும், சதாவிர்த்தி என்பதாக, கோதுமை மாவு, துவரைப்பருப்பு, நெய், வெல்லம் முதலியவைகளைக் கொடுக்கிற தர்மசாவடிகளும் ஏராளமாயிருக்கின்றன. பட்டணத்தைச்சுற்றி எந்தப் பக்கங்களில் பார்த்தாலும் வெகு தூரம் வரையில் இடிந்து அழிந்துபோன கட்டடங்களையும் மா, புளி, வேம்பு முதலிய மரங்கள் அடர்ந்த தோப்புகளையும் காணலாம். ஒரு காலத்தில் மண்மாரியடித்து பட்டணமே யழிந்து போயிருக்குமென்று எண்ணும்படியாக சிலமரங்களின் அடிபாகம் சுமார் 25-அடிவரையில் ஒரு வகையான சாம்பல்போன்ற மண்ணால் மூடப்பட்டு அம்மரத்தின் மேல்கிளைகள் மட்டும் இங்கொன்று அங்கொன்றாகக் காணப்படுகின்றன. இப்பேர்க்கொத்த பாகத்தில் ஓரிடத்தில் ஒருபாதை வெட்டி வழி ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது சுமார் 20- அடி ஆழத்திற்கு அதிகமாகவே வெட்டப் பட்டிருக்கிறது. இப்படி வெட்டி யெடுக்கப்பட்ட மண்ணை பாதையின் இருபுறத்திலும் மலைபோல் குவித்திருக்கிறார்கள். இப்படி பாதை வெட்டி ஏற்படுத்தி யிருப்பதில் பல கட்டடங்களை கண்டதாகவும் சொல்லுகிறார்கள். தவிர பூமியானது அடிபாகத்தில் கடினமானதாகவு மிருக்கிறதாம்.

இப்பட்டணத்தில் குரங்குகள் அதிகம். ஒவ்வொன்றும் அதிககாத்திரமானதாயிருக்கிறது. இவைகள் அதிக தொந்திரவு செய்கிறதில்லை என்றாலும் ஒவ்வொருவரும் கையில் பெருத்த தடியை வைத்துக்கொண்டே வெளியில் செல்லுகிறார்கள். இவ்விடத்தில் ஓட்டுவில்லை வீடுகள் கிடையாது. எங்கு பார்த்தாலும் மாடமாளிகையும் கூடகோபுரங்களும், மெத்தைகளுமாகவே காணப்படுகின்றன. நாட்டுக்கோட்டை செட்டிமார்களுடைய சத்திரம் மெத்தைகட்டட மல்லவாயினும் விஸ்தாரமானது. இதிலும் நமது தென்தேச நாகரீக மாதிரியான பஞ்சலோகத்தினால் செய்யப்பட்ட இராம இலக்ஷ்மணர் முதலியவர்களுடைய விக்கிரகங்கள்செய்து வைக்கப்பட்டு தினப்படி பூஜை முதலியவைகள் செய்யப்பட்டு வருகிற ஒரு மண்டபமிருக்கிறது. இதில் பிராமணர்களுக்கு மட்டும் ஒருவேளை அன்னம் போடப்படுகிறது. யாத்திரைக் காரர்களுக்கு தங்குவதற்கு இடமும் கொடுக்கத் தகுந்த விதமான சில கட்டடங்கள் கட்டியிருக்கிறார்கள். ஆனால் அப்படி தங்குகிறவர்களிடத்தில் தினத்திற்கு இவ்வளவு என்பதாக வாடகை வசூல் செய்கிறார்கள்.

சரயு நதியில் ஜலம் சுமார் ஒரு மைல் அகலத்தில் எப்பொழுதும் ஓடிக்கொண்டே யிருக்கிறது. இதைக்கடந்து செல்ல ஒரு படகுப் பாலம் கட்டியிருக்கிறார்கள். தவிர படகுகளும் ஏராளமாய் உபயோகிக்கப்படுகின்றன. இந்நதி மகா உன்னதமான இமயமலையில் உற்பத்தியாகி அதிக வேகமாய் ஓடிவருகிறபடியால் எப்பொழுதும் ஜலம் அதிக குளிர்ச்சியாயிருக்கிறது. சில சமயங்களில் பனிக் கட்டிகள் ஜலத்தின்பேரில் மிதந்துக் கொண்டு போகுமாம். இதில் முதலைகள் அதிகம். ஸ்நானஞ் செய்யப்பட்ட துறையிலேயே சாதாரணமாய் சிறிய முதலைகளைப் பார்க்கலாம். இந்த தீர்த்த மகத்துவத்தைக் கருதியே தற்காலத்திலும் சில புண்ணியவான்களும் பைராகிகளும் தங்கள் தேகத்தோடு, பரம பதத்தைக் கொடுக்குமென்ற முழு நம்பிக்கையுடன் இந்த நதியில் இறங்கி விடுகிறார்களாம். இந்த நதியில் ஸ்நானஞ்செய்ய வருகிறவர்களுக்கு கணக்கேயில்லை. இவ்விடத்திலுள்ள புரோகிதர்களும் பண்டாரங்களும், மற்ற ஸ்தலங்களில் யாத்திரைக்காரர்களை வருத்திப் பிடுங்குவதுபோல

செய்யாமல் கொடுத்ததைப் பெற்றுக்கொண்டு திருப்தியடைகிறார்கள்.

பட்டணத்தில் ஒவ்வொரு மடத்திலும், ஆலயத்திலும், வீட்டிலும் கிணறுகள் வெட்டியிருக்கிறார்கள். கிணறுகள் அதிக ஆழமானவை. இவைகளுக்கு இரண்டடி உயரமுள்ள கைபிடிச் சுவர் கட்டி அதன்பேரில் குறுக்கும் நெடுக்குமாக சிலமரங்களைப் போட்டும், மேல்பாகத்தில் இரண்டுகஜசுற்றளவுள்ள ஒருபெரிய உருளையைப்போட்டும், அதன்பேரில் இரண்டு நுனியிலும் இரண்டு இரும்பு வள்ளத்தைக் கட்டிய கயிற்றைப்போட்டும் தண்ணீர் இறைக்கிறார்கள். தண்ணீர் இறைக்கிறவன் கைபிடிச் சுவரின்பேரில் போடப் பட்டிருக்கிற மரங்களின்மேல் நின்றுக்கொண்டு மேற்படி கயிற்றை இழுக்க ஒரு வள்ளம் தண்ணீருடன் மேலேவர மற்ற வள்ளம் தண்ணீரைநோக்கிக் கீழே செல்லுகிறது. ஆனால் தண்ணீர் இறைக்கிறவன் வெகு ஜாக்கிரதையாக மேற்படி மரங்களின் பேரில் நிற்கவேண்டும். சற்று தவறினால் கிணற்றில் விழுவானென்பதில் தடையில்லை. இவ்விடத்தில ஜனங்கள் இதில் வழக்கப்பட்டிருக்கிறபடியால் சிறிய பெண்களும் கூட வெகு லகுவாயும் அலக்ஷியமாயும் இதில் தண்ணீர் இறைக்கிறார்கள்.

கடைகளில் கத்தரி, உருளைக்கிழங்கு, சேப்பங்கிழங்கு, வெள்ளரி, மிளகாய் முதலியவைகள் ஏராளமாய் விற்கப்படுகின்றன. புளியமரங்கள் அதிகமாக பலவிடங்களிலும் காணப்பட்டாலும் குரங்குகளினுடைய உபத்திரவத்தினால் பலனாகிய புளி கொஞ்சமும் சேர்க்கப்படுகிறதில்லை. இலந்தை, கொய்யா முதலிய பழங்கள் வேண்டிய அளவு கிடைக்கின்றன. பால், தயிர், வெண்ணெய், நெய் முதலியவைகளுக்குக் குறைவில்லை. ஜனங்கள் அநேகமாய் விஷ்ணுபக்தர்களாதலால் எவர் வாயி[illegible]ராம்' என்ற பாராயணமே பல மாயிருக்கின்றது. இதைக்குறைக்க எண்ணங்கொண்டே அவுரங்கசிப் காலத்தில் அநேக இந்து ஆலயங்களை இடித்து பதினான்குவளைவுகள் வைத்து ஒரு பெரிய மஜீதைக் கட்டினார்கள். இதனால் மனிதர்களுக்குள்ள ராமபக்தி யதிகப்பட்டதேயன்றிக் குறைவு படாததால் 1730-ம் வருஷத்தில் அயோத்திக்கு நான்கு மைல் தூரத்தில் பைசாபாத்து என்ற ஓர் பட்டணத்தைக்கட்டி அதில் பிர்மாண்டமான சில கோரிகளையும், மஜீதுகளையும், பல கோட்டைகளையும் கட்டினார்கள். இவ்விடத்தில் சவுக்கென்ற கடைத்தெருவு மிகவும் அழகானது. பித்தளைப் பாத்திரங்கள், பலவர்ணங்கள் தோய்த்த துணிகள், தட்டுமுட்டு சாமான்கள் ஏராளமாய் விற்கப்படுகின்றன. உக்கா குடுக்கைகள் செய்து விற்கப்படுகிற கடைகள் மட்டும் 500-க்கு அதிகமாகவே காணப்படுகின்றன. பலவித தானியதவசக் கடைகள் ஆயிரக்கணக்காயிருக்கின்றன. சாயந்திரவேளையில் இந்த சவுக்கண்டை போய்ப்பார்த்தால் ஜனங்கள் நடப்பதற்கு வழியின்றி தடுமாறுவதைக் காணலாம். தவிர இவ்விடத்தில் அவுரங்கசீப்பினால், ஆக்ராவிலுள்ள டாஜ்மஹாலுக்கு சமமானதாகக் கட்டப்பட்ட கோரி விசேஷமான கட்டடம் சுமார் ஒருமைல் சுற்றளவுள்ள மைதானத்தில் கோட்டை போன்ற மதில்சுவர்களுடனும் இரண்டடுக்கு மெத்தை வைத்துக்கட்டப்பட்ட கட்டடமான வாயிலையுடையதாயும் சுற்றியும் சிங்காரமான தோட்டத்தை யுடையதாயும், மத்தியில் பிரமாண்டமான மூன்று அடுக்கு மெத்தையும ஸ்தூபிகளையு முடையதாய் உட்பக்கத்தில் விசாலமான அறைகளை யமையப்பெற்றதாயும 100 கஜநீளமும் அதற்குத்தக்க அகலமும் வைத்துக் கட்டப்பட்டது. இதன்மத்திய அறையில் சூஜாடௌலாவின் மனைவி தாய் ஜீபீகம் என்றவளுடைய கல்லறையிருக்கிறது.

இந்த கட்டடத்தை அதிகசிராய் வைத்திருக்கிறார்கள். இந்த பைசாபாத்தை யடுத்துச் செல்லும் சரயுநதி இரண்டுமைல் அகலமுள்ளதாயிருக்கிறது. ஸ்ரீராமர் தமது தம்பியார்களுடன் சரயுநதியில் இறங்கியவிடம் இவ்விடத்தில் தானிருக்கிறது. இதற்குக் கேதாரகட்டம் என்றுபெயர். இதைத் தவிர வேறு சில கட்டடங்களுமிருக்கின்றன. இவைகளுக்கு பலமான படித்துறைகளும் அவைகளுக்கு மேல்புறத்தில் அநேக மண்டபங்களும் மாளிகைகளும் அழகாகக் காணப்படுகின்றன. இவ்விடத்திலிருந்து இமயமலை சார்புகளையும் அதில் பெருகிவரும் நதிகளின் அழகையும் பார்க்க வெகு ஆநந்தமாய்த் தோற்றும்.

அயோத்தியிலிருந்து பரதர்தங்கி யரசாண்டு வந்ததாகச் சொல்லப்படுகிற நந்திக்கிராமம் 14 மைல்தூரத்திலிருக்கிறது. இவ்விடத்தில் பரதருடைய ஆலயமிருக்கிறது. இந்த ஸ்தலத்திற்கு ரயில் மார்க்கமாகவும் போகலாம். இதற்கு பரதகுண்டா ஸ்டேஷன் என்று பெயர். அயோத்திக்கு மூன்று மைல்தூரத்தில் சூரியகுண்டம் என்பதாக ஒரு தீர்த்தமிருக்கிறது. இதில் 21-நாள் தினப்படி சூரியோதய காலத்தில் ஸ்நானஞ்செய்தால் வெள்ளைக்குஷ்டம், அபஸ்மாரம் முதலிய வியாதிகள் நீங்கிவிடுவதாகச் சொல்லுகிறார்கள். அயோத்தியில் ஸ்ரீராம நவமி உற்சவம் அதிக அற்புதமாகக் கொண்டாடப்படுகிறது. இலக்ஷக் கணக்கான ஜனங்கள் கூடுகிறார்கள்.

NOTICE TO SUBSCRIBERS.

Subscriptions to the "Vivekachintamani" in arrears outstanding after October 1916, will be liable to be collected by V.P.P. Intimation of the same has been given to officers and heads of institutions by certified post. Subscriptions cannot be discontinued in the middle of a volume.

Lalitalaya, *25th October 1916.* } LALITA PUBLISHING Co., *Managing Agents.*

"SPEAK GENTLY."*
இனியசொற் கூறல்.

கலிவிருத்தம்.

1. இன்புரை யியம்புக யாவர் மாட்டினும்;
வன்பினைச் சுறுத்தயே வலிதி னூன்தலின்
அன்பினு லாளுத லரிது; வெஞ்சொலால்
என்புரி நலனெலா மிழந்த லீண்டரோ?

2. உள்ளுறுஞ் செயிரறு முலப்பி லன்பினால்
கள்ளமின் மொழிபகர் காத லாளர்தாம்
எள்ளலி லெழுமையும் பிரிகி லேமென
விள்ளலுங் குறித்திடின் மெல்ல வல்லவோ?

3. ஒண்பயத் 1தோடுதேன் கலந்த தொப்பென,
நண்புறுந் தூயவர் நவிலு நல்லுரை
தெண்புனன் மெல்லெனச் செல்லல் போலுமே;
பண்புறு மன்பினோர் 2பணியு மன்னதே.

4. இளஞ்சிறார் தங்களோ டிசைக்க வின்னுரை,
உளஞ்சிறந் தவருமை யுணர்கு மாறுநீர்;
தெளிஞ்சிடத் தெரித்தலு மினிது செய்கவே;
விளிஞ்சவர் போதலா றிவர் மேலரோ?

5. மூப்பினால் வருந்துவோர் 3முனிந்து வாடுநீர்
தீப்படு கொடுமொழி செப்ப லீரவர்
கீழ்ப்படு நெடுந்துயர் 4இளத்தி னெண்ணில,
மேற்படு வாழ்க்கையு மிகவிங் கில்லையே.

6. ஏழைகண் மாட்டினு மிசைக்க வின்னுரை,
தாழ்வும்வெவ் தளர்வுடன் னவர்க்குச் சார்ந்தன;
சூழுகின் மிகவுள; துயர்செய் சொல்லினால்
மாழ்கியுள் ளயர்ந்தவர் வருந்தல் வேண்டுமோ?

7. அறநெறி திறம்பினோ ரவர்க்கு மின்னுரை
முறைமையின் மொழிகுக முயன்றும் வீணதா
பிறர்புரி துயரினுற் பிழைத்த தாகுமால் [யப்
மறுவற வவரைநீர் மாண்பின் மீட்கவே.

8. மெல்லவுள் ளன்பொடும் விளம்பு மின்னுரை
வல்லுமெஞ் ஞான்றினில் வித்தத்த வோர்
மல்லலி னதுதரு மகிழ்வு மின்பமும் [விதை
சொல்லுமே யுலப்பிலாத் தொகையி 5னூழியே.

* Bates.

1 பயன்-பால். 2 பணி-சொல். 3 முனிந்து-மெலிந்து. 4 இளத்தின்-சொல்லுங்கால், 5 ஊழி-யுகம்.

SHORT STORY.

"SIVASAMBAN."

சிவசாம்பன்.

இஃது ஓர் செழிப்பான கிராமம். இதை யடுத்து காவேரிநதியின் ஓர் கிளை பாய்கிறபடியால் நஞ்சை பூமிகளும், தென்னை, கமுகு முதலிய தோப்புகளும் கண்களுக் கெட்டிய தூரம் பரந்து, நீர்வளம் நிலவளம் பொருந்தி, குடிகள் பொருளாதார முள்ளவர்களாயும், கஷ்டமென்பதையேயறியாதவர்களாயும், திடகாத்திர தேகமுடையவர்களாயும் குதூஹலமுள்ளவர்களாயு மிருந்தார்கள். இதில் பற்பல ஜாதியார்களிருந்ததன்றி, பிள்ளைகளுக்கு வேண்டிய அளவு கல்வியைக்கற்பித்துசர்க்கார் உத்தியோகத்தையே தமது குலத்தொழிலாக்கிக் கொள்ளக் கருதி கடன் பட்டாவது, யாசகஞ்செய்தாவது தமது பிள்ளைகளைக் கற்பிக்கவேண்டுமென்ற பேரவாக்கொள்ளும் பார்ப்பினருமில்லாமற் போகவில்லை.

யதேஷ்டமான பூஸ்திதிகளை யுடையவர்களும் தம்மக்களை கல்வி பயிலவிட்டு, ஐகோர்ட் வக்கீலாகவும், டிப்டி கலெக்டராகவும், சப்ஜட்ஜியாகவும் பார்க்க அவாக்கொண்டவர்களாய் செலவிடுவதைக்கண்ட மத்தியதர ஸ்திதிகளையுடையவர்களும், ஏழைகளும் அதே நோக்கமுள்ளவர்களாய் தம்குமாரர்களையும் உத்தியோகத்தின் பொருட்டாகவே கல்வி கற்பிக்கத் தொடங்கினர்கள். பலர்தமது பூமிகளையும் வீடுகளையும் ஒவ்வொன்றாக விற்று தமது செல்வச் சிறுவர்களை தென்னிந்தியா கேம்பிரிட்ஜ் என்ற பட்டணத்திற்கு அனுப்பி கல்விச்சாலையில்படிப்பித்துவந்தார்கள். இதிலும் போட்டாபோட்டி யதிகரித்துவிட ஒருவர் என்குமாரனை பி. ஏ. வரையில் ஒருகைபார்த்துத்தான்விடுவேனென்பார்கள். மற்றொருவர் ஆஸ்திபோனாலுஞ் சரி, பாஸ்திபோனாலுஞ் சரி, என் மகனை பி. எல். வரையில்படிப்பிக்காமல் விடேனென்பார். வேறொருவர் தன் மைந்தனைப் பெரிய இஞ்சினீர் வேலை கிடைக்கத் தகுந்த பி. சி. இ. பரீக்ஷை வரையில் படிப்பித்தே தீருவேனென்பார்.

இவர்களில் மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவரும், நமது கதாநாயகர் சிவசாம்பனுடைய தந்தையுமாகிய லோகநாதய்யர் தனது ஒரே செல்வப் புத்திரனான சிவசாம்பனை, ஹைஸ்கூல் பரீக்ஷையில் தேற்றுதற்குவேண்டி தமது வீட்டின்பேரில் 500 ரூ. கடன் வாங்கினார். அவனும் அப்பரீக்ஷையில் முதல்வகுப்பில் தேறவே எப். ஏ. க்குப் படிப்பதாயிருந்தால் பாடசாலையில் சம்பளமின்றி சேர்த்துக் கொள்வதாக தலைமை உபாத்தியாயர் சம்மதித்தனர். லோகநாதய்யருக்கு ஆசை யதிகரித்தது. பையனை எப். ஏ-க்கும் படிப்பித்தனர். இதற்கு தொகையதிகமாக வேண்டியிருந்ததால், கையில் பணமின்றி தமது நஞ்சை பூமியை விற்று இந்திய கேம்பிரிட்ஜிலிருக்கும் தமது குமாரனுக்கு வேண்டிய வரையில் அப்போதைக்கப்போது பணம் அனுப்பிக்கொண்டு வந்தார். எப். ஏ. பரீக்ஷைக்கு பணம் கட்டும் காலம் நெருங்கிற்று. சிவசாம்பன் ஓட்டலுக்குக் கொடுக்கவேண்டிய தொகைக்கும் பரீக்ஷைக் கட்டணத்திற்கும் 50 ரூபாய் அனுப்பும்படி இரண்டு கடிதம் எழுதியும் லோகநாதய்யர் பதில் எழுதவில்லை. ஹைஸ்கூல் பரீக்ஷைக்கு வீடும், எப். ஏ. க்கு பூமியும் தீர்ந்தது. கடன வாங்க எண்ணங்கொண்டு பலரிடம் சென்றனர். "தங்கள் குமாரனுக்கு ஸ்கூல் சம்பளங்கூட இல்லையாமே. இந்த வருஷத்தில் எப். ஏ. பரீக்ஷையும் முதல் வகுப்பில் தேறுவான். பி. ஏ. க்குப் படிக்க உபகார சம்பளமும் கிடைக்கும். ஒரு வேலைக்குச் சேர்ந்தாலும் 60-80. ரூ. வாங்குவான், இனி உங்கள் கஷ்டம் தீர்ந்தது" என்று சிலர்கூறினார்கள். ஒரு பைசாக்கூடக் கிடைக்காதபடியால் குமாரனுக்கு பதில்கூட எழுதவில்லை.

சிவசாம்பன்—"இன்று சனி, நாளை ஞாயிறு, பன்னிரண்டு மைல் தூரத்தைப் பார்த்தால் திங்கட்கிழமை பணம் கட்டமுடியாது. கிராமத்திற்கு சென்று தாய் தகப்பனைக் கண்டு தொகை பெற்று வருவோம்," என்பதாக சனிக்கிழமை அதிகாலையில தனது இஷ்டர்களிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டான்.

குடிமங்கலத்தில் லோகநாதய்யர் தனது மனைவியைப் பார்த்து:—

"என்னடி! சிவசாம்பனிட மிருந்து இரண்டு கடிதம் வந்துவிட்டது. திங்கட்கிழமை பரீக்ஷைக்குப்பணங்கட்டுகிற தினமாம். மெட்ரிகுலேஷனுக்கு வீடு போயிற்று, எப். ஏ. முடிவதற்கு முந்தியே பூமியும் தொலைந்தது. யாரைக் கேட்டாலும் நமது பையன் பேரில் பொறு

மைகொண்டு கடன்கூடக் கொடுக்கமாட்டே னென்கிறார்கள். இந்தப் பரீக்ஷையில் எப்படி யாவது தேறிவிட்டானானால் ரூ. 50, 60-க்குக் குறையாமல் எங்கேயாவது வேலைக்கு அமர்த்தி விடலாம். உன்னிடம் ஏதாவதுண்டானால் கொடுக்கிறாயா? இல்லாவிட்டால் பையன் படிப்பை நிறுத்தி விடவேண்டியது தான்."

மனைவி:—"என்னிடம் இன்னும் என்ன இருக்கிறது. முந்திமே என் தாயார் வீட்டில் போட்ட கம்மலைக் கொடுத்தேன். பிந்தி கழுத்தில் கட்டிக்கொண்டிருந்த சரட்டட்டிகையும் பிடுங்கிக்கொண்டு போய்விட்டீர்கள். ஒவ்வொருவரைப் போல வீட்டுப் பண்டங்களை விற்றுசிறுபாடுசேர்த்து நான்கையில் வைத்துக் கொண்டா இருக்கின்றேன். சில்லரை நகைகளையும் ஒவ்வொன்றாக விற்று படிப்பு, படிப்பு என்பதாக கொடுத்துவிட்டீர்கள். உங்களை யறியாமல் என்னிடத்தில் ஒரு பைசாகூட கிடையாதே! அவன் சம்பாதித்துப் போட்டு நாம் சாப்பிடப்போகிறது தெரியாதா! என்னவோ கடன்! நடேசன் பிள்ளைபோல் இவனும் எப்பொழுது கிறிஸ்து வேதத்தில் சேருகிறானோ! நீங்கள் படித்துத்தானா இந்த வீடு பூமி முதலியவைகளை யெல்லாம் சம்பாதித்தீர்கள் நீங்கள் செய்து வந்ததுபோல அவனும் சொந்தப் பண்ணையஞ் செய்துக்கொண்டு வந்தால் போதாதா? அப்படித்தான் ஏராளமாய் சம்பாதித்து யாருக்குவைக்கவேணும்? நமக்குள்ளவனோ ஒருத்தன். அவனைத்தனியாக வேறு இடத்தில் விட்டு விட்டு, நாம் இங்கே யிருக்கிறதில் என்ன சுகம். குழந்தைக்கு தலை, கால் வலித்தது, யார் அவனுக்குதவி? உடனே கடிதமெழுதிப் புறப்பட்டு வரச்சொல்லுங்கள்."

இவர்கள் இவ்விதம் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே சிவசாம்பன் உள்ளே பிரவேசித்து தாய் தகப்பன் கால்களில் விழுந்து நமஸ்கரித்தான்.

சிவசாம்பன்:—"ஏனப்பா! கடிதம்கூட எழுதவில்லை."

லோகநாதய்யர்:—"கையில் காசில்லை. அதினாலேதான் விழிக்கிறேன்."

சிவசாம்பன்:—"இந்த சமயத்தில் காசில்லையென்றால் என்ன செய்கிறது? இந்த வருஷம் எப்படியும் பரீக்ஷையில் தேறிவிடுவேன். எப். ஏ. தேறிவிட்டால் எங்கேயாவது ஒரு வேலைக்கு பிரயத்தனஞ்செய்து அமர்ந்துவிடுகின்றேன். பிந்தி உங்களுக்கு இந்தக் கஷ்டம் வேண்டாம்."

தாயார்:—"சிவசாம்பா! நீ முந்தி ஸ்நானஞ் செய்து சாப்பிடவா. எங்கேயாவது உங்கப்பா போய் கடன் வாங்கிக்கொண்டுவந்து கொடுக்கட்டும்."

சிவசாம்பனும் ஸ்நானஞ் செய்யப்போனான். லோகநாதய்யர் மறுபடியும் யாரையாவது கடன் கேட்கலாமென்று வெளியே போனார்.

சற்று நேரத்திற்கெல்லாம் தந்தை வீட்டுக்குத் திரும்பிவந்து "சிவசாம்பா! கேட்காத விடமெல்லாம் கேட்டேன், முட்டாத விடமெல்லாம் முட்டினேன் என்னசெய்கிறது.!"

"அகப்பட்டுதோ? இல்லையோ?"

"இந்த வருஷம் கிடக்கட்டும், வருகிற வருஷம் பார்த்துக் கொள்வோம்." "இந்த வருஷம்கிடக்கட்டுமா? இந்தவருஷம் நான் கஷ்டப்பட்டுப் படித்ததுபோல் இதுவரையில் எந்த வருஷமும் படிக்கவில்லை. பரீக்ஷைக்கு அனுப்புவதற்காக பாடசாலையில் செய்யப்பட்ட பரீக்ஷையில் நான் தான் முதலாகத் தேறினேன். அப்படியிருக்க இந்த வருஷம் வேண்டாமென்றால் என்மனம் கொதிக்கின்றதே. பணமில்லாததால் இன்ன பையன் பரீக்ஷைக்கு வரவில்லை. என்று கூடப்படிப்பவர்கள் என்னை கேலிசெய்வதைக்கேட்டுக் கொண்டிருப்பதைவிட பிராணனையே விட்டுவிடலாமே.

"பிராணம் க்ஷணபங்குரம்,
மானமோ ஆசந்திர தாரசமானது"

என்று சொல்லிவிட்டு யோஜிக்கலானான்.

"அவரன்றி அணுவுமசையா. ஆ! இச்சமயத்தில் எனக்கு பணமில்லாமற் செய்தவர் கடவுளே. அவர் என்னை ஏன் இவ்வளவு தூரம் படிக்கும்படிசெய்து கடைசியில் கைவிடவேண்டியதா? அதற்கும் காரணமிருந்தேயிருக்கும். அவரை அநாதரக்ஷகரென்கிறார்களே? எப்படி? இப்பொழுது என்னை அநாதையாக்கியவர் அவராகவிருக்க, அவரை அநாதை ரக்ஷகரென்று கூறுவது எங்ஙனம்! ஆனால் "நான் அநாதையாக விருக்கின்றேன், என்னை ரக்ஷி" என்பதாக நான் அவரை நேரில்கண்டு கேட்டு அவர் என்னை ரக்ஷிக்காவிட்டாலன்றோ நான் அவரை ரக்ஷகரல்லவென்று கூறலாம். சரி, நான் வரும்வழியில் ஒரு பெரிய காடும் அதன் நடுவில் ஒரு ஆலமரமு மிருந்ததன்றோ? அங்கேசென்று, 'இனிது இனிது ஏகாந்த மினிது' என்றபடி தனியாகவிருந்து பகவானைக் கண்டு நமது சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வோம்" என்று யோஜனையை முடிவுசெய்துக் கொண்டு:—

"அம்மா! அப்பா! நான் தென்னிந்தியா கேம்பேரிட்ஜ்க்குப்போய் என் கூடப்படிக்கும் பிள்ளைகளில் சிலரை எனக்கு உதவி செய்யும்படியாகக்கேட்டு பணத்தைக்கட்டி பரீக்ஷைக்குப் போகின்றேன். பிறகு ஈசன் செயல்!" என்று கூறிவிட்டு புறப்பட்டான்.

தாய்:—"சிவசாம்பா நீ போகவேண்டாம். உன் கூடப் படிக்கப்பட்டவர்களெல்லாம் பரீக்ஷைக்குப்பணம் கட்டவும், நீ யவர்களைக் கேட்டு அகப்படாமற் போனம்பக்ஷத்தில், உனக்கு அவமானமாகவிருக்கும். நீயோ அவமானத்தைச் சற்றும் சகிக்கமாட்டாய். பிறரை நம்பிப்போவது சரியானதன்று; போகவேண்டாம் நின்று விடு."

சிவசாம்பன்:—"அம்மா! இல்லை, எனக்கு கடவுள் கிருபைசெய்வார். அவருடைய பரிபூர்ணமான கிருபை எனக்குண்டாகும்படி நீ ஆசீர்வாதம்பண்ணு. தடைசெய்யாதே."

தாய்:—"நல்லது, அப்பனே! உனக்கு பகவான் கிருபை செய்வார், போய்வா."

சிவசாம்பன் மூன்றுமைல் தூரம் சென்று குறித்த வனத்தையடைந்து, பிரமாண்டமான ஆலவிருக்ஷத் தினடியிலமர்ந்து பகவானை நேரில் காண்பதற்கு இதுவே தருணம் விடமென்றெண்ணி அவரையே சிந்தித்துக்கொண்டிருந்தனன். குளிர்ந்த காற்றுவீசிற்று. பூர்ண சந்திரன் உதயமாயினன். மனுஷ்ய அரவமென்பதேயின்றி உம் என்ற மெல்லிய காற்றின் ஓசையை ஸ்ருதியாகக்கொண்டு பக்ஷி ஜாதிகள் பாடவும், இவனுக்கு குதூஹலம் மிகுதியாகி, மெய்மறந்து ஆநந்த பரவசனாகி, "அரனே! திரிபுரனே! சங்கரனே! கங்காதரனே! பராபரனே!" என்று வாய்விட்டுக் கூவினான். தன் முன்னால் ஏதோவொன்று கிர் என்ற சப்தத்துடன் வருவதாகத்தோற்றி கண்களைத்திறந்து பார்த்தான். காற்றினால் அடித்துக்கொண்டு வரப்பட்ட ஒருகாகிதத்துண்டு அவன் காலண்டை கிடந்தது. அதையெடுத்து விரித்து சந்திரிகையின் வெளிச்சத்தினால் படித்தான்.

"தேடரிய சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே,
தேசோமயாநந்தமே."

என்று தாயுமானவர் பாடலின் ஓரடியை எழுதிய கடிதம். "இந்த அடிகளை கொண்டு முடியும் பாடல் கவனத்திற்கு வரவில்லை." தன் இனிமையான குரலால்.—

"இனியே தெமக்குனருள் வருமோ வெனக்கருதி
எங்குதே நெஞ்சமையோ,
இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லையே,
அனியாயமாயிந்த வுடலை யானென்று வரும்
அந்தகற்காளாகவோ,
ஆடித்திரிந்து நான் கற்றதுங் கேட்டதும்
அவலமாய்ப் போனதன்றோ,
கனியேனும் வறிய செங்காயேனு முதிர் சருகு
சந்த மூலங்களேனுங்,
கனல்வாதை வந்திடினள்ளிப் புசித்து நான்
கண்மூடி மௌனியாகி,
தனியேயிருப்பதற் கெண்ணினேனெண்ணமிது
சாமி நீ யறியாததோ,
சர்வ பரிபூரண வகண்ட தத்துவமான
சச்சிதா நந்த சிவமே."

"இந்தப் பாடலல்ல"

2 "தந்தை தாய் தமர்தாரமகவென்னு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்டமிதிலோ
சந்தேகமில்லை மணிமாட மாளிகை மேடை
சதுரங்க சேனையுடனே
வந்ததோர் வாழ்வு மோரிந்திரசால கோலம்!
வஞ்சனை பொறாமை லோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்த மல பாண்டமோ
வஞ்சனை யிலாத கனவே!
எந்த நாளுஞ்சரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே
இரவு பகலில்லாவிடத்
தேகமாய் நின்ற நின்னருள் வெள்ளமீதிலே
யானென் பதறவுமுழுகிச்
சிந்தைதான் றெளியாது சுழலும் வகையென்
தேடரிய சத்தாகியென் [கொலோ
சித்தமிசைகுடி கொண்டவறிவான தெய்வமே
தேசோமயாநந்தமே."

என்று மனதுருகிப் பாடினான். கா, கு வென்று கத்திக் கொண்டிருந்த பக்ஷிகளும் இவனது இனிய குரலைக்கேட்டு மௌனமாய் செவிசாய்த்தன.

"என்னுடைய சித்தத்தில் குடிகொண்டிருக்கப்பட்ட தேசோமயாநந்தமாகிய தெய்வத்தை யானறியவில்லை யல்லவா" என்று இரவு பன்னிரண்டு மணிவரையில் தன்னுடைய பஞ்ச பூதங்களையும் ஒரே நிலையில் நிறுத்தி அசைவற்றிருந்தனன். உடனே அவனது மனக்கண்ணிற்கு ஒரு திவ்விய ஜோதி தோன்றிற்று. அதையானந்தமாய் தரிசித்துக்கொண்டு வெகுநேரமிருந்தனன். பிறகு அவனது உடல்சிலிர்த்து, பலதடவை நடுங்கி,கொட்டாவி விட்டு மரத்தின் வேர்களின்பேரில் சாய்ந்து,—

"ஆகாசலிங்கத்தைக் கண்டேன்டியங்கே
யாருமறியாமல் நின்றேன்டி
ஏகாந்தமாக விருந்தேன்டி மன
தேக்கர்துலைந்தது பாருங்கடி."

"சித்தஞ்சிதம்பரமாச்சுதடி, முன்
செய்த வினையெல்லாம் போச்சுதடி
சுத்தப்பிர்ம மயமாச்சுதடியதைச்
சொல்லத் தரியுமோ பாருங்கடி."

என்ற கும்மியை வாயில் பாடிக்கொண்டு எழுந்து குதித்தான். கண்களில் தாரை தாரையாக நீரைப் பெருக்கினான்.

சூரியன் உதித்தது. உலகப்பற்றுகளை அடியோடுகளைந்த சந்நியாசியாகி, தான் உடுத்திக்கொண்டிருந்த வஸ்திரங்களை வழியில் சந்தித்தவர்களுக்குக் கொடுத்து கோவணாண்டியாய் மானாபிமானத்தைவிட்டு, கண்டவர் கொடுத்தவைகளைத்தின்று, கிடைக்காத தினங்களிலுண்டாகும் பசிவேதனையின்றி, பற்பல ஊர்களைக் கடந்து சிற்சில க்ஷேத்திரங்களில் தங்கி கொங்கேழு சிவஸ்தலங்களில் ஒன்றாகிய தாடிக்கொம்பு என்ற திவ்வியஸ்தலத்தை யடைந்து சிவகைங்கரியங்களைச் செய்துகொண்டிருந்தனன். இவருடைய வைராக்கியத்தைக் கண்ட பலர் இவருக்கு அன்னபானாதிகளை யுதவிக்கொண்டு வந்தனர். சில சமயங்களில் 8-10 நாள்வரையில் ஆகாரமின்றியே இருந்தனராம். வருஷம் நான்கு சென்றது.

லோகநாதய்யர் தன் குமாரன் சங்கதியாதொன்றும் தெரியாதபடியால் தென்னிந்தியா கேம்பிரிட்ஜிக்குச்சென்று விசாரித்து, அப்பு அகப்படாமல் பல ஊர்களை வீணாகச்சுற்றித்திரிந்து குடிமங்கலஞ் சேர்ந்து புத்திர சோகமடைந்து காலங்கழித்தார்.

தாடிக்கொம்பில் ஒருநாள், சிவாலயத்திற்கு ஒரு உத்தியோகஸ்தர் வந்தார். அவரோடு அவர் மனைவியும் குழந்தைகளும் வந்தார்கள். உத்தியோகஸ்தர் மனைவி நமது சிவசாம்பஸ்வாமிகளை சற்று உற்று நோக்கினாள். உத்தியோகஸ்தர் தம்மனைவியை நோக்கி யவனை ஏன் அவ்வளவு குறிப்பாய் பார்க்கிறாய் என்றனர்.

அவரைப் பார்க்கும்பொழுது மூர்த்தி பார்த்த முகம்போலிருந்தது. எங்கள் ஊரில் லோகநாதய்யர் என்று ஒருவருண்டு அவரை யுங்களுக்குத் தெரிந்திருக்குமே! அவர் குமாரன் சிவசாம்பன் என்ற பையன் சிலவருஷங்களுக்கு முந்தி காங்கேயா போய்விட்டான். எப். ஏ - க்குப் பணங்கட்ட தகப்பனார் தரித்திரத்தினால் பின்வாங்கினவராய் மறுவருஷம் பரீக்ஷைக்குப் போகலாமென்று சொன்னார். அன்றுபோனவன் இதுவரையில் கிடைக்கவில்லை. இந்த மனுஷனைப் பார்த்தால் அந்த லோகநாதய்யருடைய குமாரன்போல் தோற்றுகின்றது என்றனள்.

"மெடிரிகுலேஷன் பாஸ்செய்து எப். ஏ. வரையில் படித்தவனா இப்படி இருப்பான்? உனக்கு தாய் வீட்டு ஞாபகம்போல் தோற்றுகிறது."

"இல்லவே இல்லை. அவன் சிவசாம்பனே, நீங்கள் தான் அவனை விசாரியுங்களேன்."

"நல்லது விசாரிக்கலாம். மூர்த்தி சுவாமி தரிசனஞ்செய்துக்கொண்டு வருவோம்."

உத்தியோகஸ்தரும் அவர் மனைவியும் பேசியவைகளை கவனித்த சிவசாம்பஸ்வாமிகள் உடனே தான் உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு நீங்கி வேறு ஒரு மறைவான இடம் போய் உட்கார்ந்துக்கொண்டிருந்தார்.

அவர்களும் ஸ்வாமிதரிசனஞ்செய்து விட்டு அவரைவந்து பார்க்கக் காணாதவர்களாய் ஆலயத்தை பிரதக்ஷணஞ்செய்யச் சென்றார்கள். வடகோடி மூலையிலுள்ள ஓர் மரத்தடியில் இவரைக்கண்டு,

உத்தியோகஸ்தர்:—நீர் எவ்வளவு வருஷமாய் இவ்விடத்திலிருக்கிறீர்?

ஸ்வாமி:—இக்கூண்டில் பிரவேசித்து சுமார் 25-வருஷமாயிற்று.

உத்தி:—நான் கேட்பது அதுவல்ல,' இந்த ஊருக்கு வந்து எவ்வளவு காலமிருக்கும்?

ஸ்வாமி:—ஐந்து வருஷத்திற்கு அதிகமாகவேயிருக்கும். பிராரத்தம் இன்னும் விடவில்லை.

உத்தி:—உமக்கு தேகத்தின் பேரில் அவ்வளவு வெறுப்பு வருவானேன். உம்மை இன்னாரென்று அறிய விரும்புகின்றேன். தகப்பன் பேரையும் ஊரையும் கூறினால் போதுமானது.

ஸ்வாமி:—இதற்கு ஊரேது, பேரேது. பெற்று வளர்த்து வாலிபஞ்செய்த தகப்பனுக்கும் தாய்க்கும் கணக்கில்லை. பலதடவை இராஜ குமாரனாகவுமிருந்தேன். சிலதடவை கிராமகலையாரி மகனாகவுமிருந்தேன். நாற்காற் பிராணியாகவும் பிறந்ததுண்டு. உத்பீஜமாக ஜன்மமெடுக்காமலுமிருக்கவில்லை. மரஞ்செடிகளாகவுமிருந்தேன். அப்பொழுதெல்லாம் தாயும் தகப்பனுமுண்டு. உத்தமமென்று கூறும் இம்மானிட ஜன்மத்தில் தான் ஆசை, பாசம், மானம், அபிமானம், பொறாமை, மோசம், பொய், அகங்காரம் முதலிய ஞான சூன்யஞ்செய்கிற குணங்கள் அதிகமாகப் பற்றிக்கொண்டு வருத்துகிறதென்பதையறிந்தேன். மற்ற ஜன்மங்களில் இவைகளினுடைய பாதையவ்வளவாகவில்லை. இதையறியவே, மாயைதொலைந்து தேடரிய சத்தாகியென் சித்தமிசை குடிகொண்ட அறிவேயான தேசோமயாநந்தமான தெய்வமாகிய தகப்பனுக்குற்ற பிள்ளையானேன். அவரை இப்பொழுது எங்கும் பார்க்கின்றேன். மறுபடியும் நீர் கேட்பதற்குண்டோ?

உத்தி:—நீர் பூர்ணவேதாந்தி என்பதையறிந்துக்கொண்டேன். ஆயினும் குடிமங்கலம் லோகநாதய்யர் குமாரன் சிவசாம்பய்யர் என்று நினைத்து உம்மிடம் இவ்வளவு தூரம் பேசத்துணிந்தேன். இன்னும் என் சந்தேகம் தீரவில்லை. நீர் ஒப்புக்கொண்டால் போய்விடுகிறேன். என்னிடம் கோபம் கொள்ளவேண்டாம் தயவுசெய்து கூறவேண்டும்.

ஸ்வாமி:—நீர் கூறியதில் உண்மை யில்லாமற் போகவில்லை. எனது அன்பே சிவசாம்பஸ்வரூபம். தந்தையாகிய லோகநாதனிருப்பது மங்களமானவிட மென்பதற்கு சந்தேகமுண்டோ? ஆயினும் ஒன்று கூறத்துணிந்தேன். நீர் எந்த லோகநாதய்யருடைய குமாரனைப்பற்றி அதிக அன்பாயும் ஆவலாயும் விசாரிக்கிறீரோ அவன் தாய் பரலோகம் சென்ற சங்கதி யுமக்குத் தெரியாதாயினும், ஆதிசங்கரரும் அன்போடு செய்த காரியமாகிய தாய்க்கடனை, அவனுஞ்செய்து தீர்த்து நேற்றுத்தான் இவ்விடம் வந்தான்.

உத்தி:—ஆ! ஆ!! அப்படியா! நீர் கூறுவது உண்மைதானா? உமக்கு சங்கதி எப்படி தெரிந்தது.

ஸ்வாமிகள் மௌனமாயிருந்ததன்றி கண்களையும் மூடிக்கொண்டார்.

உத்தியோகஸ்தர் தான் வந்த காரியத்தை முடித்துக்கொண்டு மனைவிக்குத் தாய்வீடாகிய குடிமங்கலத்திற்கு வந்தார். லோகநாதய்யர் மனைவி இறந்துபோனது வாஸ்தவமென்று தெரியவந்தது. மற்ற சங்கதிகளையும் விசாரிக்கும்பொழுது, அவள் இறந்த தினத்தில் ஒரு பரதேசி, வீட்டு வாயிலில் வந்து காத்துக்கொண்டே யிருந்ததாகவும், சுடுகாட்டுக்கும் அப்பரதேசி பிரேதத்தைத் தொடர்ந்து வந்ததாகவும், பிரேதத்தின்பேரில் லோகநாதய்யர் நெருப்பை வைக்கப்போகும்பொழுது, அதைப்பிடுங்கி தன்கையால் பிரேதத்தின் பேரில் போட்டுவிட்டு ஓடிவிட்டதாகவும், அவனைப்பின் தொடர்ந்து ஓடிய சிலர் அவன் மறைந்து சென்றதைக்கண்டு திரும்பி வந்ததாகவும் தெரியவந்தது. உத்தியோகஸ்தர் தான் தாடிக்கொம்பில் கண்ட மனிதனைப் பற்றி லோகநாதய்யரிடம் கூறினார்.

லோகநாதய்யருக்கு, அன்று நெருப்பைத் தன்கையிலிருந்து பிடுங்கி சவத்தின் பேரில் போட்டுவிட்டு ஓடிய பரதேசி தனது குமாரன் சிவசாம்பன் என்பதாக உறுதிப்பட்ட படியால், அவனை எப்படியாவது பார்க்கவேண்டுமென்ற எண்ணமுள்ளவராய் தன்னிடமிருந்த சொத்துக்களை விற்று பொன் நாணயமாக்கி, இடையில் கட்டிக்கொண்டு குடிமங்கலத்தைத்துறந்து, தாடிக்கொம்பு என்ற க்ஷேத்திரத்தை யடைந்து ஒரு வருஷகாலமிருந்தும், குமாரனைக்காணாதவராய் சந்நியாசி வேஷம் பூண்டு தன்குமாரனைக் கண்டு பிடிக்க வேண்டுமென்ற வாஞ்சையினால், பல க்ஷேத்திரங்களை சுற்றிப்பார்த்துக்கொண்டு ஸ்ரீ காசிமாநகர்

சேர்ந்தனர். 'ஏ! கங்காதேவி! உன்னிடத்தில் ஸ்நானஞ் செய்கிறவர்களுடைய சகல பாவங்களையும் போக்கி, எண்ணங்களை நிறைவேற்றுவது சத்தியமாக விருந்தால், இந்த திவ்விய க்ஷேத்திரத்தில் என் குமாரனை யான்காணும்படி செய்வாயாக!' வென்று பிரார்த்தனைசெய்துக்கொண்டு பலதடவை முழுகினர். 64 கட்டடங்களிலுமுள்ள பல ஆலயங்களிலும், சத்திரங்களிலும் மடங்களிலும் தேடினர். யாதொரு குறிப்புங்கூடகிடைக்கவில்லை. இப்படி இரவு பகலென்பதின்றி நான்கு வருஷகாலம் சுற்றி யலைந்தபடியால் மெய்தளர்ந்து முகம் வாடி எப்பொழுது ஓரிடத்தில் சற்று படுத்திருப்போமென்ற எண்ண முள்ளவராய் கேதார கட்டத்திலுள்ள கேதாரேஸ்வரர் ஆலயத்தில் ஒருநாள் இரவு தங்கினர்.

" கங்காதேவியோ நமது பிராத்தனைக்கு பலன் கொடுக்கவில்லை. இனி நம்மால் நடந்து அலையவும் சக்தியில்லை, தேகத்தில் உயிரானது தாமரையிலையில் தண்ணீர்போல்தவிக்கின்றது. சிவசாம்பா! உன்னை நான் இனி காண்பது சமீபத்திலிருக்கவேண்டும். இல்லையாயின் இந்த ஜன்மத்திலில்லை" என்று சொல்லிக்கொண்டு ஓர் மூலையில் உட்கார்ந்தார்.

சந்தியா காலமாயிருந்தபடியால் ஆலயத்தில் வாத்திய கோஷத்தோடு வெகு விமரிசையாய் பூஜை நடந்துக்கொண்டிருந்தது. நூற்றுக்கணக்கான ஜனங்கள் ஸ்வாமிதரிசனத்திற்கு வந்து போய்க்கொண்டிருந்தார்கள். சுமார் ஒன்பது மணிக்கு பூஜைமுடிந்து ஜனக்கூட்டமும் குறைந்தது.

சந்நியாசி வேடம்பூண்ட லோகநாதய்யரிருந்த மேடையில் சில சந்நியாசிகள்வந்து தங்கள் காஷாயங்களை விரித்துப் படுத்துக்கொண்டார்கள். இவருக்கு சமீபத்தில் இருவர் படுத்துக்கொண்டிருக்க, அவர்களை யடுத்து ஒருவர் உட்கார்ந்துக்கொண்டே யிருந்தார்.

சமீபத்தில் படுத்துக்கொண்டிருக்கிறவர்களைப்பார்த்துலோகநாதய்யர் சுவாமிகளே! நீங்கள் எந்த வூரென்று இரண்டு மூன்று தடவை கேட்டனர். படுத்துக்கொண் டிருக்கிறவர்கள் பாஷை தெரியாததாலோ, உரக்கத்தினலோ அலக்ஷியத்தினலோ, வேறுயாது காரணத்தினலோ பதில் கூறவில்லை. உட்கார்ந்திருந்தவர்:—

"உம்மையும் என்னையும் போன்ற சந்நியாசிகளுக்கு சொந்த ஊருமுண்டோ? நீர் ஊர், பெயர் விசாரிப்பதைப் பார்த்தால் சந்நியாசம், மேல்வேஷமேயன்றி யாதொன்றையும் விட்டவரல்ல வென்று தோற்றுகின்றதே. உம்மோடு வார்த்தையாடுவதும் துன்பத்தை யுண்டாக்குமென்று பயப்பட வேண்டியன்றோ இருக்கின்றது."

லோகநாதய்யர் உடனே எழுந்து அவர் சமீபத்திற்குச்சென்று உட்கார்ந்தனர். தமிழ் பேசும் சந்நியாசி:—"ஏனையா! தமிழ் பேசியவுடனேயே உமது ஆசை எம்மிடத்திற்கு வரும்படிசெய்தது. இன்னும் ஏதாவது என்னிடம் விசேஷமிருந்தால் என்ன செய்வீரோ அறியேன்."

"ஸ்வாமிகளே! தாங்கள் ஞானிகள். என் குமாரன் ஒருவனைத் தேடிக்கொண்டு எட்டு வருஷமாய் அலைகிறேன். ஆள் மாநிறமாயிருப்பான். இடதுகையில் ஆறுவிரலிருக்கும்"

தமிழ் பேசும் சந்நியாசி உடனே தனது இடதுகையை மறைத்துக்கொண்டனர். லோகநாதய்யர் உடனே அவரை யாவலுடன் ஆலிங்கனஞ் செய்துக்கொண்டு சிவசாம்பா! சிவசாம்பா! என்று இருமுறைகூறி பிடித்த பிடிவிடாமல் அவர்மேல் சாய்ந்துவிட்டனர்.

* * *

தமிழ்தெரிந்த சந்நியாசி :—இது என்ன தர்மசங்கடம்! சுவாமிகளே! என்னை விடுங்கள் உங்களுக்கு சுகிர்தமுண்டு, விடுங்கள்! என்

பலதடவை உபயோகமின்றிக் கூறியதன்றி கைப்பிடியை நீக்கிக்கொள்ளவும் பிரயத்தனப்பட்டார்.

பிறகு இதுவும் தெய்வ சங்கல்பமென்று பிர்ம்ம தியானத்திலிருந்து விட்டார். காலையில் நிஷ்டையிலிருந்து எழுந்து, தன்னை இரவில் கட்டிக்கொண்டு அதேபிடியா யிருப்பவர் முகத்தை உற்றுப்பார்த்தார். "நீரே மகாபுண்ணிய சீலர். இந்த ஸ்தலமே உமக்கு மோக்ஷம் கொடுப்பதாயிருக்க, புத்திர ஸந்தானத்தையும் விரும்பினீரோ" என்று சொல்லிக்கொண்டு, அவர் இடையில் கட்டிக்கொண்டிருந்த பையை சோதித்தார். அதில் முப்பது பவுன்களிருந்தன. அவைகளை அவ்விடத்திலிருந்தவர்களுக்குக் கொடுத்துவிட்டு, அவர் தேகத்தை எடுத்துக்கொண்டுபோய் கங்காநதியோரத்தில் வைத்து கங்கை நீரால் அபிஷேகஞ்செயது, தலையில தேங்காயுமுடைதது, தோணியின் மூலமாய் நடுகங்கைக்கு எடுத்துச் சென்று கங்கை நீரில் போட்டுவிட்டனர்.

மறுநாள், ஒருவர் கேதாரேஸ்வரர் ஆலயத்தில் இறந்து போனதாகவும அவரிடம 300-பவுன்களிருந்ததை ஒரு சந்நியாசி எடுத்துக்கொண்டு அவர் தேகததை கங்கையில் போட்டு விட்டதாகவும போலீ சாருக்குத் தெரிந்து இவரைப் பிடித்துக் கொண்டுபோய சோதிக்க, ஒன்று மகப்படாத படியால் சப் ஜெயிலில் அடைத்து வைததனர். ஜெயில அறை பூட்டபபட்டிருந்ததனறி போலீஸ்காரர்களும பாராக்கொடுத்துக் கொண்டு விழித்திருந்தனா. மறுநாள் போலீஸார் ஜெயில் அறையைத்திறந்து பார்க்க நமது ஸ்வாமிகளைக்காணவில்லை. தேடுகிறார்கள், இன்னும் தேடுகிறார்கள்.

ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடலில்
நாழி முகவாது நானாழி—தோழி
நிதியுங் கணவனு நேர்படினுந்தந்தம்
விதியின் பயனே பயன்.

சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

அப்பய்யன் கதை.

வேளை கூடும்பொழுது எல்லாம் கூடிவிடும்.

(முதல்பாகம்.)

ஒரு ஊரில் ஒரு பிராமணனிருந்தான். அவன சாதாரணமான குடித்தனக்காரன். அதிக புத்திமானுமல்ல. சக்திமானுமல்ல. கேவலம் முட்டாளுமல்ல. மத்திய ஸ்திதியிலிருந்தான். அவனுக்கு இகலோக சௌக்கியத்துக்காக ஒரு மனையாளுண்டு. அவளுடன் கூடி மனதொத்து வாழ்ந்து வந்தபோதிலும் இந்த வாழ்வை சிறப்பிக்கிற புத்திர பாக்கியம் மட்டிலில்லாத பெரும் பாவியானன். பிறகு இந்த சம்பத்துமட்டில் நமக்கு இல்லாத பக்ஷத்தில் இகத்தில் சௌக்கியம் போய்விடுவதுடன் பரத்திலும் கதியில்லை என்பதை நன்றாய் ஆலோசித்து இரண்டாம் விவாகம் செய்துகொள்ள யோசித்தான். இந்த எண்ணத்துக்கு மூத்தாள் கொஞ்சமேனும் சம்மதிக்கவில்லை. "அடிமேலடி யடித்தால் அம்மியும நகரும்" என்பதுபோல் தினம் இரண்டு தடவை அவளை இந்த விஷயமாய் பிடித்து வர அவளும் புருஷன் உபத்திரவம் பொறுக்க மாட்டாமல் "அப்படியே செய்யுங்கள்" என்று உத்தரவு கொடுத்தாள் என்றாலும் நல்ல எண்ணத்துடன் கொடுதத உத்திரவல்ல. "இந்தப் பிராமணன் இப்போது செய்து கொளளட்டும. நயமால் அந்த இளையாளை ஒழித்துவிடத் தெரியாதா" என்று நினைத்து கொடுத்த உத்தரவாம. அந்தப்படியே பிராமணன மற்றொரு அயல் கிராமஞ்சென்று ஒரு கன்னியை மணந்து அந்த இளையாளோடு வீடு வந்துசேர்ந்தான். மூத்தாளும் இளையாளும் அக்காள் தங்கைபோல் மனதொதது வாழ்ந்துவந்தார்கள். மூத்தாள்மட்டும இளையாளை எப்பொழுதாவது கொன்று விடவேண்டுமென்று எண்ணியிருந்த போதிலும் உடனே செய்தால் ஜனங்கள் சங்கிப்பாகளாகையால் அதற்கு ஒத்த காலத்தை எதிர் பார்த்திருந்தவளாய் இருந்தாள்.

இப்படி யிருக்கையில் இளையாள் கர்ப்பம் தரித்தாள். பிராமணனுக்கு உண்டான ஆனந்

தத்திற்கு அளவுமுண்டோ. மேலும் அவனுக்கு முதிர்ந்த வயதிலுண்டான பாக்கியமாதலால வெகுவாய் அதைக்கொண்டாடி கிரமமாயவளுக்கு காப்பு சீமந்தம் முதலியவைகளைச் சிறப்பித்தான். மாதம் அதிகமாக ஆகவே இளையாளின் தாய்தகப்பன்மார்கள் தங்களூரில் பிரசவிக்கப் பெண்ணை அழைத்துப் போனார்கள். அங்கு அவள் யாதொரு குறைவின்றி வாழ்ந்துகொண்டிருந்தாள்.

இவ்விடம் மூத்தாள் வெகு நாளாய் இளையாளின் பேரில் இலக்குவைத்திருந்ததாகச் சொல்லியிருக்கிறோமே. அவளுடைய அசூயை இவள் கர்ப்பமாகவே ஜாஸ்தியாய்ப பொங்கிறது. பிராமணனுக்கோ தேகம் மூத்தாளிடமும், உயிர் இளையாளிடமுமாக இருந்தனர். தினம் தன் மூத்த பெண்சாதியினிடம் வருவான். "அடியே சாதம் கொஞ்சம் பிசைந்து கொட்டடி அவளைப் போய் பார்த்து வருவோம்" என்பான். மூத்தாள் இதுதான சமயம், இனமாய் இளையாளை நாம் கொன்றுவிடுவோம் என்று யோசித்து "ஆம, அவளுக்கும் உங்களுக்கு இருப்பதுபோலிருக்குமல்லவா, நாளை நான நெய்யில் ஊத்தப்பம சுட்டுத்தருகிறேன். அவளோ வயிறும் பிள்ளையுமாயிருக்கிறாள். அவளிடம் நூறு அப்பம் கையிலகொண்டுபோய்க் கொடுத்து திருப்தியாய்த் தின்னச்சொல்லிப் பார்த்து வாருங்கள். உங்களுக்கு வழிப்பயணத்திற்கு அலாதியாய்க் கட்டிக்கொடுக்கிறேன். இலலாவிட்டால் அவளுக்குக்கட்டிக் கொடுக்கும மசக்கை பக்ஷணததை நீங்கள் பாதி வழியிலேயே ஒழித்துவிடுவீர்களே" என்றாள். அதற்குப் பிராமணன் "இல்லையடி இல்லை. அவளுக்கு ஒரு வெங்கலப்பானையில நூறு அப்பம் தனியாய்க் கொஞ்சம் வேப்பிலைக் கொத்தும் போட்டுவைத்துக்கொடு. எனக்கு அந்த சின்ன சவுக்கத்தில கொஞ்சம முடிந்து கொடு" என்றான். அந்தப்படியே மறுநாள் மூத்தாள் தனபுருஷன போனால் மாங்கலயம் போய்விடுமாகையால் அவனுக்குமட்டில் பத்து பதினைத்து அதிரசம் நெய்யில சுட்டுக்கொடுத்து தன சக்களத்தியாகிய இளையாளுக்கு மாவில் கொஞ்சம் விஷத்தைக் கலந்து நூறு கொதியப்பம வார்த்து வெங்கலப் பானையில் வைத்துக்கொடுத்தாள். புருஷனும் எப்போ எப்போ என்று காத்திருந்தவனாகையால் வெங்கலப்பானையைத் தூக்கித் தலையில் வைத்துத் தன் சவுக்க மூட்டையைத் தோளில் மாட்டி வெயிலைப் பாராமல வழி நடந்தான்.

வேகமாய் நடந்து அஸ்தமிக்கும்பொழுதில் மூன்றுகாததூரம் போய்விட்டான். பிராமணனுக்கு தேகத்தில் வந்த அலுப்புக்கு அளவில்லை. அங்கு ஒரு குளமும் சாவடியும தோன்றின. குளத்திலிறங்கி கைகால்களைக் கழுவி சந்தியாவந்தனம் செய்து துணியில் தன பெண்சாதி முடிந்து கொடுத்த அதிரசத்தை அவிழ்த்து சாப்பிட்டு, நடந்த சிரமம் மேலிட்டதனால் தன்னையறியாமல் நித்திரைவந்து விடவே சாவடியிற்சென்று தலைமாட்டில் பானையை வைத்துப் படுத்துக்கொண்டான். அவ்வளவுதான தெரியும அவனுக்குத் தன்னையறியாமல் நித்திரை வந்துவிட்டது. கும்பகர்ணனுக்கு இரண்டாவன் போல் நித்திரை செய்தான்.

அந்த சாவடிக்கு ஐந்து நாழிவழி தூரத்தில் சோதிநகரம எனவொரு தேசமுண்டு. அந்த நகரத்தரசன் வெகுநாள புத்திரனில்லாமல் பராசக்தியை உத்தேசித்துத் தபம்செய்து அந்தத் தெய்வத்தின பிரீதியால ஒரு பெண்ணைப்பெற்றான். உலகத்திலுள்ள அழகையெலலாம உருட்டித்திரட்டி வைத்தாற்போலந்தப்பெண்ணின அழகு காணபபட்டது. அவளை அரசன நாளொருமேனியும பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்துவந்தான. அவள பாலியப்பருவமடைந்தும தகுந்த புருஷன ஒருவன கிடைக்காததால் அவளா கலியாண உத்ஸவத்தை நடத்தாமலிருந்தான். அரசனுடைய அருமை மகளாதலால அவளுடைய செல்வததிறத்தைச் சொல்லவேணடுமா. அவள் உட்காரும பலகைகளெல்லாம தங்கப் பலகைகள், கட்டில்கள் கனகக் கட்டில்கள; கற்களிழைக்கபபட்டு கோடி சூரியப் பிரகாசமாய் விளக்கின.

இந்தச் சோதிநகரத்து அரசனுக்கும் அப்புக்காததான எனவொரு கள்ளத்தலைவனுக்கும் ஒரு பெரும் மனஸதாபம நேரிட்டிருந்தது. ஏனெனில அப்புக்காத்தானுக்கு ஒரு அருமை மகனுண்டு. அவன் ஜாதியில திருடனாயிருந்தபோதிலும அழகிலும் நற்குணநற்செய்கைகளிலும் சிறந்தவனாயிருந்தான். இந்த மகனுக்கு சோதிநகரத்து ராஜகுமாரத்தியை அப்புக்காத்தான் கேட்டிருந்ததுண்டு. மாப்பிள்ளை என்ன அழகாயிருந்தபோதிலும் ஜாதி கள்ளசாதியானபடியால் சோதிநாட்டரசன் அவனுக்குப் பெண்ணைக்கொடுக்க இசையவில்லை. இப்படியாயிருந்தது.

ஒருநாள் அப்புக்காத்தான் என்னும் கள்ளத்தலைவன் தன் ஆட்களில் சரியாய் நூறு பெயர்களைக் கூப்பிட்டு அவர்களிடம் சோதிநகரம் சென்று அஞ்சன வித்தைகளால் இராஜகுமாரத்தி தூங்கும் அறைக்குப்போய் அவளை தூக்கம் கலையாமல் கட்டிலுடன் தூக்கி காட்டிற்குக் கொண்டுவந்துவிடும்படி கட்டளையிட்டான். அவர்கள் எல்லோரும் அப்படியே புறப்பட்டுச் சென்றார்கள். அஞ்சனபலத்தால் இராஜகுமாரத்தி தூங்கும் அறை சேர்ந்து கட்டில் கொஞ்சமேனும் அசையாதபடி அவளைத் தூக்கிக்கொண்டு ஐந்து நாழிகைவழி தூரத்திலிருக்கும் சாவடி வந்து சேர்ந்தார்கள். அன்றிரவு தான் பிராமணன் பக்ஷணத்தோடு அங்குவந்து தூங்கினான். திருடர்கள் கட்டிலைச் சாவடியிலிறக்கி குளத்திற்சென்று நீருந்தி வருவோமென்று யோசிக்கையில் அதிரசவாசனையை மணந்து இந்த இடத்தில் இப்பேர்ப்பட்ட மணம் வரக்காரணம் என்னவென்று பார்க்கையில் பிராமணன் தூங்குவதையும் தலைமாட்டில் மூட்டையையும் கண்டார்கள். உடனே வெங்கலப்பானையை யெடுத்துப் பார்க்கவே நூறு அதிரசங்களதிலிருந்தன. இது நம்முடைய பாக்கியமென்றெண்ணி வந்தபெயர்களும் நூறு ஆகையால் ஆளுக்கொரு அதிரசமாய் புசிக்கத் தலைப்பட்டார்கள். இந்தப் பணியாரங்கள் மூத்தாள் விஷங்கலந்து கட்டி பிராமணன் கையில் இளையாளுக்குக் கொடுத்ததாக நாம் முன்னமே சொல்லியிருக்கிறோமே. இவைகளைத் தின்றபிறகு திருடர்கள் எப்படி பிழைக்கக் கூடும். எல்லோரும் மாண்டார்கள். அவர்களில் ஒருவனாவது மீறவில்லை. கொஞ்ச சிரமம் தீரவே பிராமணனும் கண்விழித்துப் பார்த்தான். தலைமாட்டிலிருந்த வெங்கலப் பானையைக் காணோம். தனக்கு எதிரில் நூறு பெயர்கள் கத்தியும் கையுமாய் படுத்திருப்பதைக் கண்டு இவர்கள் தான் நம்முடைய பக்ஷணத்தை தின்றிருக்கவேண்டுமென்று நினைத்து அவர்களுள் ஒருவன் கைக்கத்தியைப் பிடுங்கிக்கொண்டு நல்லது என்னதான் ஆகிறது பார்ப்போம் என்று ஒவ்வொருவனாய் வெட்டிக்கொண்டேபோய் கடைசியவனையும் வெட்டிவிட்டான். இவர்கள் எல்லாம் பிரேதங்கள் என்றாவது அல்லது இவர்கள் தன்னுடைய விஷங்கலந்திருந்த அதிரசத்தைத் தின்று மாண்டார்கள் என்றாவது அல்லது மூத்தாள் இளையாளைக் கொல்ல விஷம் கலந்து பணியாரஞ் சுட்டுக் கொடுத்தாள் என்றாவது இந்த பிராமணனுக்குத் தெரியவே தெரியாது. அவர்களைக் கொன்றுவிட்டு குளத்திற்சென்று கைகால்களை கழுவிக்கொண்டு சாவடியில் வரவே அங்கு ஒரு மூலையில் ஜகஜோதியாக வைக்கப்பட்டிருந்த ரத்தினமிழைத்திருந்த கட்டிலைக்கண்டு அதனிடம் போய்ப் பார்க்கவே கேவலம் அழகே அவதாரம் செய்து பெண்ணுருக்கொண்டு வந்தாற்போல் தூங்கும் இராஜகுமாரத்தியைக் கண்டான். கொஞ்சம் புத்திமானாகையால் கட்டிலில் தூங்கும் பெண்ணையும் எதிரில் தான் கொன்ற பெயர்களையும் பார்த்து "ஓஹோ இவர்கள் திருடர்களாகவேண்டும். இந்தப் பெண்ணை எங்கிருந்தோ கொண்டு வந்திருக்கிறார்கள். எல்லாம் இவளைக் கேட்டால் தெரியும்" என்றெண்ணி அவளை எழுப்பினான். அவள் எழுந்திருந்து தான் வழக்கமாய்த் தூங்கும் அறையிலில்லாமல் காட்டிலிருப்பதையும் தன் முன் ஒரு ஆள் நிற்பதையும் பார்த்துப் பயந்தாள். பிராமணன் பயப்படாமலிருக்கச் சொல்லி தான் அவளைக் கொண்டுவந்த நூறு திருடர்களையும் கொன்று

விட்டதாகச் சொன்னான். அவள் கண்டு ஆச்சரியப்பட்டு இவனல்லவோ சூரன், நூறு பெயர்களையும் கொன்றானல்லவா என்று சந்தோஷப்பட்டு திருடர்கள் அப்புக்காத்தான் மனிதர்களாகத் தானிருக்கவேண்டுமென்று மனதில் நிச்சயம் பண்ணிக்கொண்டு பிராமணனைப் பார்த்து இந்த உலகத்திற்குள் தங்களைப்போலொத்த தீரர்களைப் பார்த்ததில்லை. எனக்கு நாதன் நீங்களே. இந்த நூறு கிராதகர்கையினின்றும் என்னை விடுவித்தீர்கள்; இன்னும் காலைவரையில் என்னை விடாமற் காத்து என் தகப்பனாரிடம் ஒப்புவித்து என்னை மணம்புரியவேண்டும் எனவே வலுவிற்றனக்கு வந்த பாக்கியத்தைக்கண்டு பிராமணன் சந்தோஷப்பட்டு அப்படியே ஒப்புக்கொண்டான்.

இங்கு இப்படியிருக்கையில் அரசன் மனையிலோ இராஜ குமாரத்தியைக் காத்திருந்த வேலைக்காரிகள் எழுந்திருந்து பார்த்து ராஜ குமாரத்தியைக் காணாமற் றிடுக்கிட்டு உடனே அரசனிடம் தெரிவித்தார்கள். அரசனுக்குச் சந்தேகம் அப்புக்காத்தானிடமாதலால் கட்டிலுடன் பெண் காணாமற்போயிருக்கவே அவன்தான் கொண்டுபோயிருக்கவேண்டுமென்று நினைத்து அவன் காட்டுவழியாய்ச் சைனியத்தைத் திரட்டிக்கொண்டு புறப்பட்டான். ஐந்துநாழிகைவழி வந்ததும் சாவடியில் தன் பெண்ணும் பிராமணனுமிருப்பதையும் நூறு கள்ளர்கள் வெட்டுண்டிருப்பதையும் கண்டு ஓடோடியும்வந்து தன் பெண்ணை வாரி எடுத்து "நீ ஆபத்தில்லாமல் பிழைத்திருக்கிறாயா" என்று வினவ, அவள் "இந்த வீர பிராமணனால் எனக்கு யாதொரு குறைவுமில்லை. இவர்தான் என்னைக் காபாற்றினவர். இவர்தான் உங்கள் மாப்பிள்ளையாக வேண்டும்" என்றாள். அரசனும நடந்த சங்கதியை பிராமணனிடம் நன்றாய் விசாரிக்க பிராமணன் சமாசாரங்களின் போக்கை நன்றாய் அறிந்துகொண்டுவிட்டபடியால் தான் நூறு பெயர்களை எதிர்த்து யுத்தம்பண்ணினதைப் பிரமாதமாய் வர்ணித்து அரசன் மனத்தைக் களிப்பித்தான். அரசன் பார்த்து "இவன் நூறு திருடர்களைக் கொன்றவன்" என்ற பட்டம் அங்கேயே கொடுத்து "நூறு பெயர்களுக்கு நமன்" என்று நாமம் வைத்தழைத்து ஊருக்கு இட்டுக்கொண்டுபோய்த் தன பெண்ணையும் கட்டிக்கொடுத்தான். அன்றியும் அரசனுக்கு புத்திரபாக்கியமில்லையாதலால் நமக்குப் பிற்காலத்தில் நம்முடைய தேசத்தையாள ஈசுவரனிவரைத் தானனுப்பினாரோ என்னமோவென்று நினைத்து நினைத்து மனமகிழ்ந்தான். அப்புக்காத்தானும் நூறு பெயர்களைக் கொன்ற நமன் அங்கிருக்கிறான் என்று அன்றுமுதல் சோதி நகரத்தரசன் எண்ணத்தையே விட்டுவிட்டான். பெண்ணும் மாப்பிள்ளையும் அந்த நகரத்தில் மன்மதனும் ரதியும்போல் வாழ்ந்து வந்தார்கள்.

REFORM OF RURAL EDUCATION.

(From the Hindu of 10th October 1916.)

MR. C. V. SWAMINATHAIYAR writes :—

With reference to the editorial note in the "Hindu" on Rural Education in America, will you permit me to draw your attention to a Memorandum on the Reform of Rural Education which I have prepared after consultation with all those whom I know to be interested in the improvement of children's education. I have myself given some 30 years of my life for studying the question in the light of personal experiences gained in the course of my work in connection with the Diffusion of Knowledge Agency which was founded by the active support and encouragement of such men as the late Sir T. Muthuswamy Iyer, Dewan Bahadur R. Raghunatha Rao, Dewan Bahadur S. Srinivasaraghava Iyengar and my own Guru. It is based on a constructive plan and deals with (i) First Principles, (ii) Organization and (iii) Means and Methods. I send you a copy of Memorandum itself which embodies in its appendix the suggestions and hints I have received from those whom I consulted, in a highly digested form.

"I am desired to acknowledge, with thanks, the receipt of an advance copy of your memorandum on the 'Reform of Rural Education,' forwarded to the Hon'ble Sir Sankaran Nair, with your letter No. 5224, D. O., dated the 7th October 1916."

Yours truly,

G. HENDERSON,

Asst. Secy. to the Govnt. of India,

Dept. of Education, Simla.

DEEPAVALI FESTIVAL.

தீபாவலிப் பண்டிகை.

"கங்கா ஸ்நாநம் ஆயிற்றா?"

(அக்டோபர்மீ 25உ புதன்கிழமை.)

தீபாவலிப்பண்டிகை யென்பது பஞ்சாங்கத்தில் நரகசதுர்த்தசி யென்ற குறிக்கப்பட்டிருக்கிறது. இது நவராத்திரிக்குப்பின் அதையடுத்துவரும் கிருஷ்ணசதுர்த்தசி யன்று கொண்டாடப்படும் ஒரு தேசப்பொதுப்பண்டிகை. ஹிமாலயம் முதல் கன்னியாகுமரி வரையில் இப்பண்டிகை ஹிந்துக்கள் எல்லாராலும் கொண்டாடப்படுகிறது. ஆதலால், இது நவராத்திரி, தசராவைப்போல் இப்பரதக்கண்டம் முழுவதுக்கும் பொதுவானதோர் பண்டிகை. அன்று விடியற்காலம் எல்லோரும் எண்ணெய் தேய்த்துக்கொண்டு மங்களஸ்நாநம் செய்து கோடியுடுத்தி தீபவரிசைகளால் வீட்டையலங்கரித்து பண்டு பலகாராதிகள் புசித்துப் பண்டிகை கொண்டாடுவார்கள். பொழுது விடிந்ததும் அவரவர் தம் சிநேகிதர்களையும் நல்லோர் பெரியோர்களையும் கண்டு தரிசித்து "கங்காஸ்நாநம் ஆயிற்றா" என்று பண்டிகை விசாரித்து மனங்கலந்து அளவளாவியிருந்து வருவார்கள். குழந்தைகள் பாணவேடிக்கைகள் வெடிபட்டாசுகள் கொளுத்திச் சந்தோஷிப்பார்கள்.

இது பண்டிகைச் சுருக்கம். இப்பண்டிகையின் பூர்வோத்தரமும் வரலாறும் என்னவென்று சற்று விசாரிப்போம். ஏனெனில் நவநாகரிகமிகுந்த இக்காலத்தில் பூர்வ சம்பிரதாயமாயுள்ள பண்டிகைகளைக்கொண்டாடியும் அதன் கருத்தையும் அர்த்தத்தையும் அனேகர் விசாரித்தறிகிறதில்லை. பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு இப்படிப்பட்ட தேசப்பொது பண்டிகைகளின் அர்த்தம் இன்னதென்று தெரியவில்லை யென்று வடமேற்கு மாகாணத்தில் வித்யா இலாகா பரீக்ஷகர்கள் அவர்கள் ரிபோர்ட்டில் முறையிட்டிருக்கிறார்கள்.

இந்த உலகத்திலுள்ள சக்திகளையெல்லாம் துவந்துவம் (தொந்தம்), மிதுனம் என இருவகைத்தாகப் பிரிக்கலாம். துவந்துவசக்திகள் ஒன்றுக்கொன்று எதிரிடையாகவிருந்துகொண்டு எப்பொழுதும் ஏற்றத்தாழ்ச்சிக்குக் காரணமாய் ஜயாபஜயங்களை யுண்டுபண்ணிக்கொண்டேயிருக்கும். மிதுனசக்தியோ ஒன்றுக்கொன்று ஐக்கிய பத்தியம் கொண்டனவாய் ஒன்றையொன்றிழுத்துக்கொண்டு எல்லாம் ஒன்றாய் ஏகரஸமாயிருந்து அறிவை விர்த்திசெய்துகொண்டு அகண்டானந்த ஐசுவரியத்திற்குக் காரணமாயிருக்கும். இவையிரண்டுக்கும் சாஸ்திரக்ஞர் "Polar activity" "துருவசக்தி" யென்றும், "Magnetic force" காந்தசக்தி அல்லது மிதுன சக்தி யென்றும் சொல்லுவார்கள்.

தேவாசுரர்கள் எப்போதும் எதிரிடை முயற்சியுள்ளவர்கள். தேவரிஷிகள் மிதுன சக்திக்குள்பட்டவர்கள். தேவர் ஸ்வயம்பிரகாச அறிவுடையவர்கள். அசுரர் இருள் (அறியாமை) கலிக்க புத்தி யுடையவர்கள். முன்னவர் "ஆத்மா நான்" என்று பிரஸித்திப்பவர்கள். பின்னவர்கள் "தேஹம் நான்" என்று பிரஸித்திப்பவர்கள். தேவர்கள் கர்மதர்மத்தையனுசரிப்பவர்கள்; அசுரர்கள் "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்று தங்கள் கைபலத்தைக்கொண்டு எல்லாரையும் தங்களுக்கு அடிமையாக்கி அஹம்விருத்தியையே நாட்டமாயுடையவர்கள்.

நவராத்திரியில் சித்-தேவி பண்டாசுரன், மஹிஷாசுரன் முதலிய அசுரக்கூட்டங்களை ஜயித்துத் துறத்தியபின் விஜயதசமியில் வித்யா லக்ஷ்மியை ஸ்தாபித்து வில்லம்புதொடுத்து விவேகஞானம் உதயமாகச் செய்கிறாள். விவேகசைதன்னியர்களான மானுடர்களில் மஹாவலி யென்னும் சக்ரவர்த்தி தன்புஜபலத்தால் திரிலோகாதிபதியாக ஆண்டுவருகையில் தன்வலி விசேஷத்தால் செருக்குற்று

தர்மனிக்ஷம் செய்துவந்தான். ஆதலால் அவன் செருக்கையடக்கும்பொருட்டு, காப்புத்தொழில் கர்த்தாவாகிய மஹாவிஷ்ணு சிஷ்டபரிபாலனார்த்தம் துஷ்டநிக்ரஹம் செய்யக்கருதி ஒரு குள்ளப்பிராமணனைய் "வாமனரூபம்" எடுத்துக்கொண்டு யஜ்ஞம் செய்யவேண்டி மூன்றடி இடம் வேண்டுமென்று இரந்துநின்றார். மஹாவலி சக்ரவர்த்தியும் கொடைவள்ளல் ஆகையால் "அப்படியே கொடுத்தேன்" என்று சொல்லி அர்க்கியம்விட்டு தத்தம் செய்து கொடுத்துவிட்டார்.

பகவான் சக்ரவர்த்தியின் உண்மைக் குணத்தை உணர்ந்தவர். அசுரகுருவாகிய சுக்கிராசாரி குள்ளனை நம்பாதே யென்று எச்சரித்தும் அவர் கேட்கவில்லை. ஆகவே "மூன்றடி இடம் தந்தேன்" என்று தத்தம் வாங்கிக்கொண்டபின் குள்ளப்பிராமணன் தனது வாமன வடிவத்தை விரித்து விசுவரூபங்கொண்டு, பூமியையெல்லாம் ஒரு அடியால் அளந்து, ஆகாசத்தையெல்லாம் மற்றொரு அடியால் அளந்துவிட்டு, மூன்றாவது அடி வைக்க இடம் எங்கே யென்று கேட்டார். சக்ரவர்த்தி புஜபலத்தையே நம்பினவரானாலும் விவேகசம்பந்நராதலால், இப்படிப்பட்ட வித்தைசெய்ய வல்லவர் மஹாவிஷ்ணுவாகவேயிருக்கவேண்டுமென்றெண்ணி, ஸத்தியம் தவறக்கூடாதென்கிற கட்டுக்குட்பட்டு, மூன்றாவது அடியை அவர் தலையில் வைக்கச்சொல்லிக்காட்டினார். அப்படியே பகவான் அவர் தலையில் திருப்பாதம் வைத்து அழுத்த அவர் பாதாளலோகம் சென்று அடைந்தார். அங்கே நரகமிருக்குமிடமானாலும், பகவான் உண்மைக்குக் கட்டுப்பட்டு நடந்தவரைக் கைவிடக்கூடாதென்று தானும் நரகத்திற்குச் சென்று நகராசுரனை வதைசெய்து மஹாவலிக்கு தரிசனமளித்து அவர் அஹங்காரபிகுதியால் செய்த அக்கிரமங்களின் கர்ம பலனை அனுபவித்தபின் இந்திரப்பட்டம் பெறுவாய் என்று அனுக்கிரகித்தார்.

எப்பொழுதும் பூதவுடலிலும் புகழுடம்பே பெரிதென்றுன்னிய மஹாவலி சக்ரவர்த்தி தன் ஞாபகம் பூலோகத்தில் நிலைத்திருக்கவேண்டுமென்று தனக்கு நரகத்தில் தரிசனம் தந்த அத்தருணத்தை பூலோகத்தில் எல்லாரும் புண்யகாலமாகக் கொண்டாடவேண்டுமென்றும் அக்காலத்தில் மங்களஸ்நாநம் செய்து அந்த நரகசதுர்த்தசியைக் கொண்டாடுகிறவர்களுக்கு நதிகளிலெல்லாம் புண்யநதியாகிய கங்கையில் ஸ்நாநம்செய்த பலன் தந்தருளவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். "அப்படியே" யென்று மஹாவிஷ்ணுவும் அவருக்கு வரந்தந்தருளினார். ஆதலால் இந்த நரகசதுர்த்தசியாகிய தீபாவலிப் பண்டிகையின் உட்கருத்து என்னவென்றால் ஜடசக்தியினும் ஆத்மசக்தியே மேல் என்பதை ருசுப்படுத்துவதாம். இந்த நினைவுதானே எல்லா ஜனங்களாலும் ஒரே காலத்தில் தியானிக்கப்படும்பொழுது அது தியேயாகாரமாகி அமிர்த கலையை வர்ஷிக்கச்செய்கிறது. அமிர்தவர்ஷணமே "கங்காஸ்நாநம் ஆயிற்றா?" என்று பண்டிகை விசாரிப்பதின் உட்கருத்து. ஜடசக்தியினும் ஆத்மசக்தியே பெரிதென்கிற உண்மையை கிரகித்தீர்களா? என்று விசாரித்து முகமன் கூறிக்கொண்டு அது திடபாவமாகவிருந்து தர்மக்ஷேமத்தை விர்த்திசெய்ய வேண்டுமென்பதே. இப்படியாகவுள்ள பண்டிகைகளைக் கொண்டாடிவருவதால், தேசப்பொதுவின் யோகக்ஷேமவிர்த்தி யதிகரிக்கிறது ஆதலால் இதையெல்லாரும் நன்குணர்ந்து சிந்திக்கவேண்டுமென்று நல்லோர் பெரியோர் எல்லாரையும் நாடிப் பண்டிகை விசாரித்தபின் துவேஷபாவமுடையவர்கள் கூட இப்பண்டிகை விசாரிக்குங்காலத்தில் அந்த துவேஷபாவத்தை மறந்திருந்து இஷ்டாநுகூல பாவர்களாயிருக்கவேண்டு மென்பதை வற்புறுத்துவான் இதை மேலோர் உபதேசித்தபடி இங்கே வெளியிடலானோம்.

"THE STUDY OF NATURE IS AN INTERCOURSE WITH THE HIGHEST MIND."

Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

" Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End.

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." " TO THINE OWN SELF BE TRUE."

அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** **"Approved"**

புத்தகம். **24.**] நளஹு கார்த்திகைமீ, **1916**ஹு நவம்பர்மீ [சஞ்சிகை **8.**

Special Notice to Subscribers.

Subscribers of the *Vivekachintamani* who are still in arrears after October 1916, will please clear their a/c at once or accept V.P.P. Intimation of the same has been given to officers and heads of institutions by certified post. " Subscriptions registered by volume only, and cannot be discontinued in the middle of a volume." Please note we have no thin paper edition to issue owing to scarcity of thin paper. All indents for schools are registered for school edition only and to begin with the current volume (April-March) corresponding with the Tamil or official year. Please note our "Terms" opposite.

LALITALAYA, MYLAPORE, } LALITA PUBLISHING Co.,
31st October, 1916. } *Managing Agents.*

Business "Terms": General Notice.

N.B.—To avoid all possibility of misapprehension, we *reiterate* our " terms" (approved by our constituents and by Government) which, from the beginning, are :—

1. Cash or Remittance with Order : Rs. 5 per Vol.; or,
2. *One month's credit at the arrears rate* : Rs. 6 per Vol.
3. Arrears to be cleared on rendering of *a/cs.* or by V.P.P.
4. All Indents registered for School Edition only and to *begin with the* current volume (corresponding with Tamil or Official year, April-March).
5. Subscriptions registered to continue from Vol. to Vol. and not to be discontinued in the middle of a Vol.
6. No popular edition *issued owing to scarcity* of paper.
7. Monthly parts (spare or sample) 8 (eight) annas each.,

☞ Owing to the increased and increasing *prices* and scarcity of paper, *we desire to make it clear that* no exception to this rule can be made without detriment to the important educational work we have been led to undertake and to the permanent interests of a well-established business which has become an institution now approaching its Silver Jubilee. In no case can subscriptions remain outstanding after three months, of which due notice is hereby given to all concerned.

THE MANAGING AGENTS, "VIVEKACHINTAMANI,"
October, 1916.] *Lalitalaya*, 19, *Adam Street*, *Mylapore*.

"THE STUDY OF NATURE IS AN INTERCOURSE WITH THE HIGHEST MIND."

"THE STUDY OF NATURE'S STORY-BOOK."

"The Faculty of observation in most of us is undeveloped. It is one of the obvious duties of the teachers in Elementary schools to develop the power of observation of their students, to teach them to use their eyes and their hands to study Nature and take a real pleasure in Nature Study."—The Hon'ble Member in Charge of the Local and Municipal Department responsille for the efficiency of Elementary Education.

"The Study of Nature is an intercourse with the highest mind. You should never trifle with Nature. At the lowest her works a are the works of the highest powers, the highest something in whatever way we may look at it. A Labarotary of Natural History is a sanctuary where nothing profane should be tolerated. I feel less agony at improprieties in churches than in a scientific laboratory."—*Louis Agassiz.*

At the beginning of his career, Agassiz wrote to his father, "I wish to be a good son, a good citizen and the first naturalist of my time"; and his life realised these aims. He was born in a little village in Switzerland in 1807, and attained the highest reputation as a naturalist in Europe before he removed to the United States of America when thirty-nine years of age. The nobility of his character, his untiring efforts to increase the knowledge of Science, and his inspiring personality, brought him many friends and pupils. An active generation of Nature Students was created by his work and influence. His fiftieth birthday was celebrated on May 28,1857, at a club of distinguished men of which he was a member; and upon that occasion Longfellow read a memorable poem in which occur the well-known verses:

And Nature, the old nurse, took
The child upon her knee
Saying "Here is a story-book
Thy Father has written for thee.

"Come wander with me," she said,
"Into regions yet untrod;
And read what is still unread
In the manuscripts of God."

And he wandered away and away
With Nature, the dear old nurse,
Who sang him night and day
The rhymes of the Universe.

"The only qualifications required for the Study of Nature's *story-book* are devotion to truth, and sincerity of spirit; all the other qualities will come to the possessor of these, and a habit of mind will be developed that tries to face all facts squarely and honestly, despises sham and false convensions, and exposes superstition whenever it is encountered. These are the standards of scientific integrity, and the man whose ideals are dominated by them has found the way to intellectual and spiritual salvation."—*Prof. R. A. Gregory.*

"Science seems to me to teach in the highest and strongest manner the great truth which is embodied in the Christian conception of entire surrender to the will of God. *Sit down before fact as a little child*, be prepared to give up every preconceived notion, follow humbly wherever and to whatsoever abysses Nature leads, or you shall learn nothing. I have only begun to learn content and peace of mind since I have resolved at all risks to do this."—*Huxley.*

"Oh, Devil! truth is better than much profit" I have searched over the grounds of my belief, and if wife and child and name and fame were all to be lost to me one after the other as the penalty, still I would not lie."—*Huxley.*

"யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற."—திருக்குறள்.

"உலகத் தோடு ஒட்ட ஒழுகல்
பலகற்றும் கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

Next Month:—Educationists on "The Educational Problem in India."
Wanted Great "Missionaries of Education."

"No good work is ever lost." "My best wishes for the success of your publication"—*Sir Harold Stuart, K. C. V. O.*

புஸ்தகம்-24.] [சஞ்சிகை-8.

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

நள வருஷ கார்த்திகை மீ } விவேக சிந்தாமணி { Nov.-Dec. 1916.

ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சர்யத் தாலிகழ்ந்தால் வந்ததென்னென் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

"THE STUDY OF NATURE'S STORY-BOOK."

பிரகிருதி வித்யா கதைப் படிப்பு.

"The faculty of observation in most of us is undeveloped. It is one of the obvious duties of the teachers in Elementary Schools to develop the power of observation of their students, to teach them to use their eyes and their hands to study Nature and take a real pleasure in Nature-Study."—The Hon'ble Sir, P. S. Sivaswami Ayyar, Member in charge of the Local and Municipal portfolio in the Government of Madras.

"அபேத தரிசனம் ஞானம்" என்று சுருதி முறையிடுகிறது. "தரிசனம்" என்றால் பார்வை—பார்க்கும் சக்தி. இது இந்திரியங்களெல்லா வற்றிற்கும் பொதுவாக உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் எல்லா இந்திரியங்களும் உள்ளேயிருந்து பார்ப்பானுக்குப் பல கணிகளைபோல் உதவுகின்றன. கண்ணால் பார்க்கிறோம். காதால் கேட்கிறோம். (துவக்கு) தோலால் ஸ்பரிசிக்கிறோம். நாவால் ருசியறிகிறோம். மூக்கால் முகர்கிறோம். இந்த ஐந்தும் அறியும் கருவிகள். இவைகளன்றி செயலுக்குரித்தான கருவிகளும் ஐந்து இருக்கின்றன. கையால் கொடுக்கல் வாங்கல் வேலை செய்கிறோம். காலால் நடக்கிறோம். வாக்கால் பேசுகிறோம். மலஜல விசர்ச்சன இந்திரியங்களால் தேககசுத்தியும் ஆனந்த அனுபவமும் லபிக்கின்றன.

இப்படியாகவுள்ள 10-கருவிகளுக்கும் தலைமையானதாய் இவையெல்லாவற்றின் தொழில்களையும் செய் சக்தி வாய்ந்ததாய் இவையெல்லாவற்றிற்கும் இராஜாவாயிருந்துகொண்டு புறத்தில் கண்டவற்றை அகத்தில் எண்ணங்களாகப் பதியச்செய்யும் சக்திவாய்ந்ததாய் இருப்பது மனம். இதுவும் ஒரு கருவியேதான். இது அறிவின பிரகாசத்தினால் விளங்கிக்கொண்டு அந்த உள்ளறிவு வெளித்தோற்றங்களை ஆராய்ந்து அறிவதற்குக் காரணமாயிருக்கும் கருவியாயிருப்பதால் இதற்குள்ளேயிருக்கும் ஞாபகசக்திவாய்ந்த அறிவுக்கு "அந்தக்கரணம்"—"உட்கருவி" யென்று பேர்.

"The Faculty of observation" என்றால் "பார்க்கும்சக்தி." இந்த சக்திக்கு குணம், குறி என்கிற இரண்டு உபசக்திகளுண்டு. குணம், குறி என்னும் இவ்விரண்டுமின்றி கிரஹியசக்தியில்லை. பார்வையின்றி குணம், குறி விளங்கா. ஆகையால் இம்மூன்றும் சோந்து நிகழ்வதுதானே தரிசனசக்தி. காண்பான், காட்சி, காணபொருள் எனகிற மூன்றையும் பேதித்து (வெவ்வேறாக) அறிவது பேதபுத்தி (உலக ஞானம்): இந்த பேதபுத்தியிலும் இது நித்தியம் (மாறுந்தன்மையுடையது) இது அநித்தியம் (மாறுந்தன்மையுடையது): என்று நிச்சல புத்தியால் அறிந்துணர்வது "விவேகம்" என்னப்படும்.

காண்பான், காட்சி, காண்பொருள் என்று இணைபிரியாதுள்ள முக்காலிபீடம் போன்ற வித்தைக்கு உலகஞானம் அல்லது ஆஜ்ஞாபீடம் என்று சொல்கிறது. இந்த ஆஜ்ஞாபீடத்தில் "பிரஹ்மவித்தை", "ஸ்ரீவித்தை" போன்ற அத்துவித ஞானசாதனங்கள் இரண்டைத் தவிர மற்ற எல்லா வித்தைகளும் (கலைஞானங்களும்) அடங்கும். இதற்கே அவித்யா பீடம் என்றும் சொல்லுவர்: ஏனெனில் எல்லாம் கற்றும் "ஏகமேவாத்துவதீயமாய்" உள்ள மெய்ஞ்ஞானப்பொருளை உணராமை பற்றி இதற்கு எதிர்மறை அடைமொழி பொருந்துவதாயிற்று.

"கற்றதனா லானபயனென்கொல் வாலறிவன்
நற்றாள்தொழப் பெறாஅ ரெனின்'

என்று திருவள்ளுவர் சொல்லியுள்ளதை மேற்றிசை வித்வான்களில் பூர்ணஞானம் பெற்றவர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

"பள்ளியிற் பழகுவதெல்லாம் கண்திறக்கப் பெறுமாறே." ஆகையால் பிரதம வித்பாசாலையிற் போதகர்களாயுள்ளோர் இந்த லக்ஷியத்தைக் கடைப்பிடியாகக்கொண்டு குழந்தைகள் கண்திறக்க அவர்களுடைய தரிசன சக்தியை மனப்பழக்கத்தால் தீர்க்கமாகச் செய்யவேண்டுமென்றும் அது அவர்களுடைய பிரத்தியக்ஷ கடமைகளில் ஒன்று என்றும் பிரதம வித்யாசிக்ஷைப் பொறுப்பை வகித்த லோகல் அண்டு முனிசிபல் ஸ்தாபனங்களுக்கெல்லாம் தலைவராய் அந்த இலாகாவின் மேல்விசாரணையை வகித்தவராயுள்ள கௌன்ஸில் மெம்பர் கனம்பொருந்திய ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் அவர்கள் வற்புறுத்திக்கூறினார். "சொல்வது யாருக்கும் எளிது: சொன்னவாறுள்ளமு வத்துண்மை வழிப்பட்டு நடப்பதே அரிது"—என்று மேலோர் வாக்கியமிருப்பதால் அவர் எளிதாய்ச் சொல்லிவிட்ட உபதேசமொழிகளை அரிதாய் அப்பியஸித்து நடந்து பலிக்கச்செய்யவேண்டியது உபாத்திமார்கள் கடமையாகவிருக்கிறது. அவ்வளவு அரிய சாதனை சாதிக்கவேண்டியவர்களுக்கு எல்லா விதத்தாலும் உதவிசெய்யவேண்டியது சான்றோர் கடனாயிருக்கிறது. காசால் பணத்தால் உதவிசெய்ய நம்மாலில்லை. அந்த உதவி அவர்தாமே செய்யவேண்டும். ஆனால் அந்த உதவி யிருந்தவிடத்தும் "Devotion to truth"—உண்மையை உணரவேண்டுமென்கிற பேராவும், "Sincerity of spirit" வாய்மையால் தூய்மை யெய்திய அஹமும் (சித்தசுத்தியும்) வேண்டும். இவ்விரண்டு சாதகங்களின்றி புறச்சாதனங்கள் பயனைத்தரா. பணம், காசு இல்லையாயினும் "முயற்சி திருவினை ஆக்கும்" என்பது மூதுரையாதலால் ஊக்கம் மிகுதியாயிருந்தால் பக்தி சிரத்தை யென்னும் இருகால்கள் கொண்டு மண்ணெலாம் ஒரு அடியாக அளந்துவிடலாம். ஆகவே,—

பக்தி, சிரத்தை, ஊக்கம்: இந்த மூன்றும் குழந்தைகளை வளர்த்து பாலசிக்ஷையிற் பழக்குகிறவர்களுக்கு இன்றியமையாத இலக்ஷணங்களாய் அமைந்திருக்கவேண்டும். இந்த மூன்றும் பயன்பெற தேகசுத்தி, மனோசுத்தி, ஆத்மசுத்தி ஆகிய மூன்றும் சித்திக்கவேண்டும்.

"தாயோடறுசுவைபோம்" என்றிருப்பதால், முதலாவது தாய்மார் குழந்தைகளை வளர்ப்பதில் பக்தி, சிரத்தை, ஊக்கங்கொண்டு அவர்கள் ஸ்வபாவமறிந்து உழைக்கவேண்டும். அப்பொழுதுதான் திடகாத்திரம் சித்திக்கும். ஆயுஸும் ஆரோக்கியமும் திடகாத்திரமின்றிச் சித்திக்கமாட்டா.

"பண்டு முளைப்பது அரிசியேயானாலும் விண்டுமிபோனால் முளையாதாம்." ஆகையால் குழந்தை மாதா உதரத்தில் உற்பத்தியாகி அவள் ஊட்டத்தால் வளர்வதேயானாலும் "உத்பத்திகாரணனான பிதாவுக்கு ஆயுராரோக்கிய திடகாத்திர பாக்கியமில்லையாயின் அவை குழந்தைக்கு உண்டாகச்செய்வது அருமையாம்.

இப்படிப் பெற்றோர்கள் வாய்க்கப்பெறுவதே "குடிப்பிறப்பு" என்று நாம் சொல்லிக் கொண்டாடுகிற அதிமேலான லக்ஷணமாம்.

இதன் சிலாக்கியத்தை வற்புறுத்தவே "குலமறிந்து பெண்ணைக்கோள்", "கோத்திரமறிந்து பெண்ணைக்கோடு" என்றுள்ள உத்கிருஷ்டமான உண்மைகள் நிறைந்த பழமொழிகள் வழங்கி வருகின்றன. "பெண்ணைப் போற்றி வளர்க்க" "பிள்ளையை அடித்து வளர்க்க" என்பதின் அர்த்தமும் பிரத்தியக்ஷமே. பெண்ணுக்கு குடிப்பிறப்பும் நல்ல போஷணையும் வேண்டும். இவை யில்லாவிடத்து "இல்லாள்" ஆகி இல்லறம் நடத்த அவளாலியலாதுபோகும்.

"இல்லென இல்லவள் மாண்பானால்" என்ற திருக்குறளினாலும் மனைமாட்சி இல்லாளைப் பொறுத்தது என்பது விளங்கும். ஆணுக்கு வித்யா சம்பன்னரான ருஷிகள் பரம்பரை அவசியம். ஆதலால் நல்ல கோத்திரத்தில் உதித்தவனாக இருப்பதோடு சிக்ஷை தீக்ஷைகளில் இளம்பிராயம் தொட்டுப் பழக்கப்பெற்றவனாகவுமிருக்கவேண்டும். இல்லாவிட்டால் பித்ருக்கடன், ருஷிகடன், தேவர்கடன் ஆகிய மூன்று கடன்களையும் சரிவரச்செலுத்திக் கிருதார்த்தனாதல் அவனுக்கு முடியாதுபோகும்.

இந்த இரண்டு பழமொழிகளினாலும் நம்மவர் இரண்டு மேலான தர்மங்களை ஆதிமுதல் கைப்பற்றி நடந்து வந்தார்களென்று தெரிகிறது. இந்த இரண்டு தர்மமும் விவேகத்தாய் தன் குழந்தைக்குச் சொல்லும் தாலாட்டில் வெகு நன்றாயமைக்கப்பட்டிருக்கிறது. (சென்ற மாதம் விவேகசிந்தாமணியைப் பார்க்க.) இந்த இரண்டு தர்மத்திற்கும் மேற்றிசையார் (1) "Law of Environment" என்றும் (2) "Law of Heredity" என்றும் சொல்லி வழங்குகிறார்கள்.

"Character is nine-tenth environment" என்று சொல்லியிருப்பதால் குடிப்பிறப்பினாலேயே குணம் அமையும் என்பது பிரத்தியக்ஷமாயிற்று. குடிப்பிறப்பினால் வரும் குணவிசேஷமும் அதனாலுண்டாகும் பாக்கியமும் பின்வரும் தாலாட்டுப்பாட்டில் குழந்தைகள் உள்ளத்திலும் உறுத்தும்படியாக நன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

"உடலம் பிணிநீங்கி
உள்ளமதும் நற்றெளிவாய்
திடம்பெற்றிருப்பதுவே
சேரறிய பார்க்கியமாம்."

இதுதான் குடிப்பிறப்பினால் வரும் பாக்கியம். (Law of Environment).

கோத்திர பரம்பரை யென்பது ஜன்மஜன்மமாய்த் தொடரும் வாசனா விசேஷத்துக்குக் காரணமாம். இதற்கு "Law of Heredity" என்று சொல்கிறார்கள். "எள்ளுப்போட்டால் கொள்ளுமுளைக்குமா?" என்கிற பழமொழியினால் இந்த வாசனா விசேஷத்தின் உள்மர்மத்தை நம்மவர்கள் சாமான்யமாக உணர்ந்து அனுபவத்தில் அதைக் கையாண்டுவந்தார்களென்பது ஸ்பஷ்டமாகவில்லையா! பெண்ணைக்கொடுக்க வரன் தேடுவதில் ரிஷி பரம்பரையாகிய கோத்திரத்தையேன் நன்றாக ஆராய்ந்துப் பார்க்கவேண்டும் என்றால் பரம்பரையாக வந்த வாசனை நல்லதானாலும் கெட்டதானாலும் பழக்கவழக்கத்தால் மாற்றக்கூடியதாகமாட்டாது. இதை விவேகத்தாய் தன் குழந்தைக்கு வெகு நன்றாக எடுத்துச் சொல்கிறாள்.

"அகலாது வாசனை தான்
அகிலமிதி லெல்லோர்க்கும்
சகவாசம் போல் நடக்கை
சத்தியந்தான் சத்தியந்தான்"

சென்ற மாசம் "பால வித்யாகீதை" என்று தலைப்பெயரிட்டெழுதிய விஷயத்தில் இந்தப் பாட்டைப் பின்தொடர்ந்து வரும் ஒவ்வொன்றும் ஒரு முக்கியமான வித்யாதத்துவத்தைக் குழந்தை மனம் கோணாதிருக்க வற்புறுத்துவதாயிருக்கிறது. இப்பொழுது பிரதமபாடசாலை உபாத்தியாயர்கள் தம்செய்கடனைச் செய்ய லாயக்கில்லாதிருக்கிறார்களென்பது இக்காலத்துப் படிப்பில் தேறிய பட்டதாரிகளும் தரிசனசக்தி குன்றியிருக்கிறார்கள் என்று ஸர் சிவஸ்வாமி அய்யர் அவர்கள் தாமே சாக்ஷி

பகர்ந்திருப்பதால் விளங்கும். ஆனால் முன் காலத்தில் அத்தைகளும், பாட்டிகளும் குழந்தைகளுக்கு மேலான தத்துவங்களை அவர் மனதிற்பட கதைகளாகச்சொல்லி உபதேசம் செய்துவந்தார்களென்பது ஸ்பஷ்டம். இப்படிப்பட்ட கதைகளில் ஒன்றை மிஸஸ் ப்ராண்டர் மாக்மிலன் கம்பெனிக்காகத் தயார் செய்த "கிண்டர் கார்டன் மானுவல்" என்னும் சிறு புஸ்தகத்துக்கு நாம் எழுதியனுப்பியதைக் கீழே பிரசுரிக்கிறோம். அதை வியாக்கியானத்தோடு விசேஷார்த்தம் செய்துபார்த்தால் தத்துவபோதனை செய்வதில் நம்மவர்கள் பெற்றிருந்த பெருந்திறமை விளங்கும்.

ஒரு சிறு குழந்தை "கதை சொல்" என்று கேட்க அதற்குப் பின்வரும் கதையைச் சொல்லுவாள் தாயோ, அத்தையோ, பாட்டியோ அநுபவசாலிகளாகவிருக்கப்பட்ட மூத்தோர்கள். இதை பிரகிருதி வித்யா கதைக்கு உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம்:—

"கதை கதையாம் காரணமாம்
காரணத்தில் ஓர் உழக்காம்
ஓர் உழக்கில் புல்லுமுளைத்தது
புல்லைக்கொண்டு மாட்டுக்குப்போட்டேன்
மாடு பால் தந்தது
பாலைக்கொண்டு பாட்டியிடம் கொடுத்தேன்
பாட்டி பக்ஷணம் தந்தாள்
பக்ஷணத்தைக்கொண்டு காக்கைக்குப் போட்
காக்கை கரி தந்தது [டேன்
கரியைக்கொண்டு கன்னானிடம் கொடுத்தேன்
கன்னான் செம்பு தந்தான்
செம்பைக்கொண்டு குளத்துக்குப் போனேன்
குளம் ஜலம் தந்தது
ஜலத்தைக்கொண்டு பூச்செடிக்கு விட்டேன்
பூச்செடி புஷ்பம் தந்தது
புஷ்பத்தைக்கொண்டு பிள்ளையார்க்கு சாத்தி
பிள்ளையார் பிரசாதம் தந்தார் [னேன்
பிரசாதத்தைக்கொண்டு அம்மாளிடம் கொடுத்
அம்மாள் அதை விண்டு தந்தாள்; [தேன்
விண்டு தந்ததை உண்டு பார்த்தேன்
உண்டு பார்த்ததும் பசி தீர்ந்தது:
பசி தீர்ந்ததும் சந்தோஷமாச்சு
சந்தோஷமானதைக் கண்டுகளித்தேன்.
கண்டு களித்ததும் காட்சியாயிற்று
காட்சியைக்கொண்டு மாட்சிபெற்றேன்
மாநிலமெல்லாம் என்னதாயிற்று!
என்னதான விந்தையைச் சொன்னால்
சின்னக் குழந்தையும் சிரித்து விளையாடும்."*

* cf. "உண்டு பசி தீர்ந்தாப்போலிருக்கும்
கண்டுகொள் காட்சி நிலே."—ஔவைகுறள்.

* Note the sequence of cause and effect and compare with the moral of the above Nature-Story specially designed for the delectation of the Child-mind, the following from Professor R.A. Gregory's Discovery about "the Formation of the Scientific Mind" :—

"Science may not be able to provide a complete code of ethics, but it does teach that every action carries with it a consequence—not in another world but in this to be felt either by ourselves or by others, in our own time or the generations to come. The knowledge that effect inevitably follows cause in Nature makes the student of science circumspect in all his dealings with her. In the sublime words of Francis Thompson :

"All things by immortal power
Near or far,
Hiddenly
To each other linked are,
That thou canst not stir a flower
Without troubling of a star."

"The man who keeps constantly before him, and understands the altruistic principle suggested by it, cannot act lightly towards others or himself. But neither this principle nor any other stimulus to high endeavour can have any significance in moral philosophy *unless it is put into practice or creates a response in the form of action. Light is invisible until* it *strikes a material body, and a maxim of conduct has likewise no practical meaning until it is reflected in human life.* The *final test* of a Gospel is the influence it has upon those who follow it ; and by that test the Spirit of Science ([illegible]) is content to be judged:"

☞ (*Compare* with this the note we sounded last month at the end of p. 194.)

"கதை கதையாம் காரணமாம்"— என்றால் பார்ப்பனவெல்லாம் ஒவ்வொன்றும் ஒரு விதத்தில் பரமன் மஹிமையை உணர்த்தும் கதையைச் சொல்லிக்கொண்டிருக்கின்றன என்று சூசிப்பித்ததாம்.

"பார்த்த இடமெங்கும் நீக்கமற நிறைகின்ற பரிபூரணா
னந்தமே"
வென்றதை யுள்ளோர்ந்துணர்க.

இப்படி கதை கதையாகவுள்ள பார்ப்பன (பிரபஞ்ச விலாசம்) எல்லாம் ஆதிகாரணமாயுள்ள ஒன்றை (First Cause) ப்பற்றியிருக்கிறது. இதைத்தான் இங்கிலீஷில் "Nature's Story-Book" என்றும் "Book of Nature" என்றும் உவமான அலங்காரமாகச் சொல்கிறார்கள். "காரணமின்றிக் காரியமில்லை."

அந்த ஆதிமுதற் காரணத்தில் கால்பாகம் அல்லது நாலில் ஒருபங்கான "உழக்கு"ப்போலும் அளவு கருவியாய் விளங்குகிறது காலம். இதுதான் சக்திக்கு (காலசக்ரத்துக்கு) ஆதாரமாயிருக்கிறது. புல் என்றது பச்சை நிறத்துக்கும் பிராணவசக்திக்கும் அறிகுறியாக நிற்கும் குணங்குறி வாய்ந்தது.

"ஓங்காரி யென்பாள் அவளொரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை யுடையவள்."

என்றோதியுள்ளார் பெரியோரும். இப்படியே சிருஷ்டிக்கிரமம், ஞானசம்பத்து, உலகஞானமாகிய (தத்துவவிசாரம்), உபாசனைக்கிரமம், 'அஹம்விருத்தி பரசேவை'யாலுண்டாகும் அற்புதசித்தியாம் "நினைத்தது முடிக்கும் ஆற்றல்" (இதைப் 'பிள்ளையார் பிரசாதம்' என்று குறிக்கிறார்), அதையும் எனதென்றும் நான் பெற்றதென்றும் அகங்கரிக்காமல் "அம்மாளிடம் கொடுத்து" அருள்வெளியில் அவள் கர்மதர்மத்தை "விண்டு" காட்ட, "நைஷ்கர்ம ஸித்தி"யாம் அதை "யுண்டு பசிதீர்ந்து", "காட்சிநிலை" யுணர்ந்து, மாட்சிபெற்று பூலோகம்முதல் ஸத்யலோகம் வரையிலுள்ள "மாநிலமெல்லாம்"—"ஞான பூமிகளெல்லாம்" என்னதாகப்பெற்று, தேஹத்தில் தேஹியாயிருப்பதுபோல் ஞானபூமிகளுக்கெல்லாம் அதிஷ்டானதேவதையாயுள்ள சித்சக்தியோடு தான் இரண்டறக்கலந்த விந்தையைச்சொன்னால் சின்னக்குழந்தையும் (குழந்தைமனம் மாறாதவர்கள் எல்லாரும்) ஆனந்த பூரிதராய் பகவான் லீலையிலீடுபட்டுச் "சிரித்து விளையாடும்படியிருக்கும்."

SPEAK THE TRUTH AND PURIFY THE HEART.

"Do the truth you know and yon will learn the truth you need to know"—Geo. Macdonald.

"வாய்மையாலகந் தூய்மையாம்"

"The only qualifications required for the study of Nature's Story-book are devotion to truth, and sincerity of spirit ; all the other qualities will come to the possessor of these, and a habit of mind will be developed that tries to face all facts squarely and honestly, despises shams and false conventions, and exposes superstitions whenever it is encountered. These are the standards of scientific integrity, and the men whose ideals are dominated by them has found the way to intellectual and Spiritual Salvation."—"*The Spirit and Service of Science.*"

"சத்யம்வத"—வேதவாக்.

"செய்மையண்மையி லுயிர்க்கொரு துணை பெனசிறந்த
வாய்மையா லகந் தூய்மையா மற்றிலை புறத்தைத்
தூய்மைசெய்வது நீரலாற்சொல்லில் வேறுளதோ
நோய்மை செய்யினும் வாய்மையே சொன்பெமக்கறிதி."

ஸத்யவிரதம் எல்லாவற்றிலும் பெரிய நோன்பு. ஸ்திரீகளுக்குப் பதிவிரதம் எப்படியோ அப்படிப் புருஷர்களுக்கு ஸத்யவிரதம் எல்லா நன்மையையும் பயக்கும்.

"தெய்வந்தொழாஅள் கொழுநனைத்தொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"

யென்று செப்பிய திருவள்ளுவ நாயனாரே

"பொய்யாமை பொய்யாமை யாற்றினறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று" என்றார்.

பொய் சொல்லாமையையே விரதமாகக் கொண்டு சதாநடக்கச் சக்தியிருக்குமானால் வேறுதருமங்களெதுவுஞ் செய்யாமையே நல்லது. ஏனெனில், மனம் பொருந்த உண்மை சொல்பவன் தவத்துடனே தான தர்மங்கள் செய்பவரினும் மேலாவன் என்பது நிதரிசனமாவதுபற்றி அப்படிச்சொன்னார்.

"மனத்தொடுவாய்மை மொழியில் தவத்தோடு
தானஞ்செய்வாரிற்றலை."

இகபரசுகமிரண்டு மெளிதில் அடைவதற்கு சத்திய விரதத்தைப்போல் அதி சுலுவான

வழி வேறில்லை. ஆனால் இந்த விரதமிருந் தனுஷ்டிப்பது மகாகஷ்டம். இது ஊருக்கு ஒப்புக்குப் பொய் சொல்லாமையன்று. அல்லது சுயநயம் பாராட்டி வியாபார நாணயம் பற்றிப் பொய் சொல்லாது வாக்குப் பரிபாலனம் செய்வதுமன்று. இவையெல்லாம் கொடுக்கல் வாங்கல் வியாபார நாணயமாம். காசுபண மதிப்பின்மேல் காரியார்த்தம் பொய்சொல்லாமலிருப்பது சத்தியவிரதமாகாது. இக்காலத்திலுள்ள சத்தியமெல்லாம் இப்படிப்பட்டதாகவே யிருக்கிறது. சத்தியவிரதத்தின் தத்துவமென்னவெனில் கறந்தபால் கறந்தபடியுண்மை யுரைப்பதேயாம். கறந்தபால் கறந்தபடி யுண்மை பேசுவதென்றால் உண்மையைச் சொல்கிறேனென்று எல்லார் மனதையும் நோக வைப்பதல்ல. மனநோவ மெய்யுரைப்பான் உண்மை யுரைப்பினும் அது சத்தியவிரத அனுஷ்டானமாகாது. மனம்நோவ மெய்யுரைக்கின் விரதபங்கம்வரும். இதை வற்புறுத்தவே திருவள்ளுவநாயனார் எடுத்தது,

“வாய்மையெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமையிலாத சொலல்”

என்று சொன்னார். பிறிதோருயிருக்குச் சிறிதேனும் தீமையைத்தராத சொல்லே வாய்மை யெனப்படுமென்றார். சத்தியம் அழிவற்றது. அதை நாம் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் அது மாறுவதில்லை. ஆனால் வாய்மைபேசல் வியவகாரதசையில் அனுஷ்டிக்கத் தக்கது. உண்மையைச்சொல்ல உள்ளபடி யிருவர்வேண்டும். சொல்கிறவனுண்டானவிடத்துக் கேட்கிறவனொருவனிருக்கவேண்டு மென்பது தானேயமையும். சொல்கிறவன் கேட்கிறவன் என்றேற்பட்டபொழுது, சொல்கிறவன் கேட்கிறவனுக்கு வருத்தமுண்டாகாதபடிச் சொல்லவேண்டிய தவசியம். கேட்கிறவனுக்கு வருத்தமுண்டுபண்ணினால் அவன் மனம் வருத்தத்திலீடுபட்டுக் கேட்கும் சக்தியற்றதாய் விடுகிறது. அப்பொழுது முதல்வன் பேசுமுண்மை கேட்பவன் மனதிலேறாமற் போய்விடுகிறது. அப்பொழுது முதல்வன் உண்மைபேசியும் பேசாதவனேயாகிறான். எப்பொழுது இவன் பேச்சு ஏறவில்லையோ அப்பொழுது அது பிரயோஜனமற்றதாகப் போகிறது. போகவே சத்தியவிரதம் தவறிப்போகிறது. நோன்பு தவறாதிருக்க, கேட்பவன் மனம்நோகாதபடி உண்மையை ஹிதோபதேசமாகச் சொல்லல் வேண்டும். அப்படிச் சொல்லாதுபோனால் அது உண்மை பேசியதாகாது. ஆனால் பிறர் மனம் நோவாமலிருக்கப் பொய் சொல்லலாமோ வெனின், அதுவும் கூடாது. மனதறிந்து பொய்சொன்னால் தன் மனமே தன்னைச் சுடும்.

“தன்னெஞ்சறிவது பொய்யற்க, பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.”

மெய்யைப் பேசவும் வேண்டும். பிறர்மனம் நோவப் பேசுதலும் கூடாது. மனதறியப் பொய்சொல்லலும் ஆகாது. இந்த நோன்பில் எவ்வளவு கஷ்டமிருக்கிறது பாருங்கள். அகத்து அகந்தாயின் அருளுதயமாம். அருளுதயமாக ஞானசித்தி கைகூடும். ஞானசித்தி கைகூட எல்லா சம்பத்தும், இகபரசுகமும் கிடைக்கும். பிரகிருதி தர்மங்களையெல்லாம் விரித்தபடம்போல் பார்த்துக் கிரகிக்கலாம். பிரகிருதி தர்மங்களை யெல்லாம் கிரகித்துணர்ந்தால் “பிரகிருதியினுண்மையில் பரமனைக்காணலாம்.” பரமனைக்காணவும் எல்லா சித்திகளும் தானே வரும். புருஷப்பிரயத்தனம் சித்திக்க ஸத்யவிரதம் வேண்டும். ஸ்திரீ தர்மமாகிய பதிவிரதத்தில் ஸத்தியம் பதிலக்ஷணமாதலால் அது தானே வந்து சித்திக்கும். இதற்கு அரிச்சந்திரன் சந்திரமதி இவர்களே உதாஹரணமாம்.

RATIONALE OF THE WORSHIP OF THE WIFE IDEAL.

சுமங்கலிப் பிரார்த்தனை.

“பெண்ணிற் பெருந்தக்கயாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்”—திருக்குறள்.

கற்பென்னும் கலங்கா நிலைமை யுண்டாயிருக்கப் பெற்றால் ஒருவன் பெறுவதற்குரிய பொருள்களுள் மனையாளினும் உயர்வான பொருள் வேறில்லையென்றார் பெரியோர். இது உலகானுபவத்தில் யாருமறிந்த உண்மை. “மங்கல மென்ப மனைமாட்சி.” மனையாளது நற்குண நற்செய்கைகளே மங்கலம்—நன்மையென்று சொல்லப்படுவதாம். இந்த மங்கலத்துக்கு நன்மக்கட்பேறு ஆபரணமாமென்று சொல்லியுள்ளார். ஆகவே, சுமங்கலியென்னும் பேர் “அம்மி மிதித்து அருந்ததி பார்த்துப் பதிவிரதா தருமம் பூண்டபெண்,” அவ்வருமை விரதத்துக்குப் பங்கம் வராது நடந்து வருவாளாயின் அவளுக்கே யுரித்தாம். மனோவாக்குக் காயங்களாகிய திரிகரண சுத்தியோடும் பதிவிரதாபங்கம் வராத கத்தி முனையில் நடப்பவள்போல் நல்லொழுக்கம்பற்றி நடக்கும் உத்தம ஸ்திரீகளாம் இல்லறக் கிழத்திகளே அருந்ததிமாரி வைதரித்த சுமங்கலிகளாவர். பதிவிரதையானது புருஷனையே கண்கண்ட தெய்வமாகக் கொண்டாடி யுபாசித்து உத்தம வழியிற் பழகி உய்யும் வழிதேடுதலாம். நம்முன்னோராகிய இருஷிகள் இதை அவ்வளவு உத்தமோத்தமமான வழியாகச் சிறப்பித்துக் கூறுவானேனெனில், இந்தப் பதிவிரதா தர்மத்தால், பத்னி அன்பு பெருக ஆர்வநிறைந்து ஆருயிர்க் காதலனை அன்போடு பணிந்து அவன் எத்துற்றமுள்ளவனாயினும் தன் அன்பு நிறைந்த கண்ணால் அவனைப் பார்க்கும்பொழுது அவன் குற்றங்களையெல்லாம் குணங்களாகமாற்றி, குறைகளையெல்லாம் நிறைவெய்தச்செய்து, பரிசவேதி தான் தொட்டதையெல்லாம் பொன்னாகச் செய்யுமாறுபோல், உள்ளன்பு நிறைந்த உண்மையளாமிவள் பூர்ண அன்பினால் அவன் குற்றங்களையெல்லாம் குணங்களாக மாற்றி அவனைப்பூஜித்துத் தான் கடைத்தேறுவதன்றி தன்னுடைய பூஜாவிசேஷத்தாலும், பதிவிரதாமகிமையினாலும் அவனையும் கடைத்தேறச்செய்யும் சக்திவாய்ந்தவளாகிறாள். இவ்வளவு சக்தியுமவளுக்குண்டாவது எதனாலென்றால், அவளுடைய பூரண அன்பின் மகிமையால். பூரண அன்பின் சக்திக்கு அளவில்லை. அன்பின் மகிமையை அளவிட்டுச்சொல்ல முடியாது. “அன்பொன்றுண்டானாலவர்தான் பிழைக்கமாட்டார்!” என்று சொன்னது ஒப்புக்குச்சொன்ன வார்த்தையல்ல. உண்மையில் உள்ளபடி ஸ்வானுபவத்தில் கண்டதை வெளியிட்டதன்றி வேறில்லை. ஆகையால் பதிவிரதாதருமம் ஏற்படுத்தினது ஸ்திரீகள் இல்லறத்திலிருந்து இகபரசுகமெய்தி மோக்ஷ சாம்பிராஜ்ய மடைவதற்காக அதிசூக்ஷ்மமாக அமைந்த சுலபவழி. தூய்மையின்றி ஆராயின் எல்லாம் அசாத்தியமாகவே படும். நோன்பெடுத்து அனுஷ்டித்து வந்தால் எல்லாக்கஷ்டங்களும் சிறுகச்சிறுகப் பறந்துபோம். தன்னுள்ளஞ் சாக்ஷியாக வுண்மை பேசுகிறவன் உலகத்தாரெல்லாராலும் கொண்டாடப்படுவான். ஏனெனில் அவன் சத்யவிரதத்தின் அருமை நோக்கி அவனையே உயர்ந்தோரெல்லாரும் மேலாகக் கொண்டாடுவார்கள். எல்லாருள்ளத்திலும் அவன் வாசஞ் செய்பவனாவன். அரிச்சந்திரனைக் கொண்டாடாதார் யார்? அவனைப்போல், சத்யவிரதன் உலகுய்ய அவதாரமான சத்புருஷனாகக் கொண்டாடப்படுவான்.

“உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன்”

சத்யவிரத மனுஷ்டிப்பவன் கஷ்டங்களையெல்லாம்வென்று நோன்பு தப்பாமல் நடந்து வருவானானால் அவன் மனத்திலுள்ள அழுக்காறு நீங்கி உள்ளம் பிரகாசிக்கும். இதை அருட் பிரகாசமென்பர் மதநூல் பற்றிப்பேசுவோர். எப்படி யுரைக்கினுமென்? உள்ளொளி

விளங்க விளங்க உண்மையை மேலு மேலுமுணர்ந்து சன்மார்க்க வழியில் அவன் முன்னிட்டுச் செல்பவனுவன். இப்படிப்பட்டவர் சான்ருேராகி சாயுஜ்ய சாம்ப்ராஜ்ய பதவிக்கருகராவர். இகபரசுக மிரண்டிற்கும் இது காரணமானதுபற்றி இந்த சத்திய விரதத்தை இளமைப் பருவமுதற் கொண்டே குழந்தைகளனுஷ்டித்துவரப் பழக்கவேண்டும். இதற்கு வாக்குமாத்திரத்தில் உபதேசித்தால் போதாது. பெரியவர்கள், அதாவது பெற்ருேர்களும் உபாத்தியாயர்களும் மற்றப்படி குழந்தைகள் நடத்தைக்குக் காரணபூதராக விருக்கும் பெரியவர்களும் சத்தியந்தவருது நடந்து காட்டல் வேண்டும்.

"எல்லாவிளக்கும் விளக்கல்ல சான்ருேர்க்குப்
பொய்யாவிளக்கே விளக்கு."

என்றதனுல் இந்த சத்தியவிரத அனுஷ்டானத்தால், அதாவது பொய் சொல்லாமையானுண்டாகும் விளக்கே ஆத்மா உஜ்ஜீவித்துய்ய வழிகாட்டும் பேரொளி விளக்காயிருப்பதால் இந்தவெளிச்சம் குழந்தைகளுக்கு பாலப்பிராய முதலமைய அவர்களை வெகு ஜாக்கிரதையாக மெய்வழிப்பட்டு நடக்கப் பழக்கல் வேண்டும். உலகத்தில் உடலைவளர்ப்பதற்கவசியமான சீவனர்த்த காலக்ஷேப முதல் மோக்ஷசாம்பிராஜ்யம் வரையில் எல்லா இஷ்டசித்திகளேயும் கொடுப்பது இந்த வாய்மையொன்றே யாதலால் இதை நம்மவர் நித்ய விரதமாக அனுஷ்டித்துவரல் வேண்டும் தானம், தவம், மதம் முதலான மன்னுயிர்க்கின்றியமையாத ஆசாரானுஷ்டான விரதங்களெல்லாவற்றிலும் புருஷார்த்த நான்கையும் பயக்கும் பெருமை வாய்ந்த சத்யவிரதமாம் இந்த வாய்மையின் மிக்கது வேறொன்றில்லையால் இதையே யெல்லாரும் அனுஷ்டித்துவரல் வேண்டும்.

"யாமெய்யாகக் கண்டவற்று ளில்லையெனைத் தொன்றும்
வாய்மையி னல்ல பிற"

என்ருர் பிறவிஞானியாகிய திருவள்ளுவரும். ஆகையால் நம்மில் எல்லவரும் இந்த ஸத்ய விரதத்தைக் கைவிடாது அனுஷ்டித்துவரல்வேண்டும். "வாய்மையா லகந்தூய்மையாம்" என்றது சாதனுமுறை யவசியம்பற்றி யென்று அறியவேண்டியது. இக்காலத்தில் இங்கிலீஷ் படிப்புப் படித்தவர்கள் ஸ்திரீ புருஷர் சமத்வம் பொருந்தப்பெறவேண்டுமென்று முன்னேர் ஏற்படுத்திய உத்தம வழிகளைப் பழித்து பாதகம் செய்கிருர்கள். முன்னேர்தம் கருத்தறிந்து நடக்காது கண் மூடித்தனமாய் நடக்கும் மாமூல்வழக்கத்தால் கெடுதலேயன்றி நன்மை சிறிதும் விளைவதில்லை யென்பது திண்ணம். ஆனல் அதைச்சீர்திருத்த முயலுவோர் தற்காலத்தில் நடக்கும் அக்கிரம வழக்கங்களைப் பழித்து நீக்காமல், முக்காலத்துப் பெரியோர்கள் சத்யநிலையறிந்து தீர்க்கதரிசன விசேஷத்தோடு ஏற்படுத்திய சம்பூரண சாக்ஷாத்கார சாதனுமுறைகளாம். உத்தம எண்ணங்களை யுண்மையறியாமல் உதாசினமாகப்பேசி அவைகளை மண்ணில் போட்டிழுத்து உண்மையாளர் மனமறுகச்செய்வது தேசக்ஷேமத்திற்காவது ஜனக்ஷேமத்திற்காவது உண்மைக்காவது ஒத்ததாகவில்லை. இப்படிப்பட்ட உத்தமக்கொள்கைகளையனுசரித்து வாழ்ந்து வானுலகம் சென்ற புண்யவதிகள் தேவலோகத்தில் பெருஞ்சிறப்புப் பெற்றுய்ந்து புகழுடம்பெடுத்து வாழ்வார்களென்பது தீர்க்கதரிசிகள் சாக்ஷாத்காரமாய்க் கண்டவுண்மை.

"பெற்ருர் பெறிற் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழுமுலகு." —திருக்குறள்.

தம் கணவர்களைத் தெய்வமாக வணங்கும் பெண்களைத் தேவர்க்ள் தொழுவார் என்று திருவள்ளுவர் உண்மையை உள்ளபடி செப்பியுள்ளார்.—இப்படிப்பட்ட உத்தமிகள் தேகம் விட்டுத்தேகிகளானுல் அவர்கள் தேவர்களும் வணங்கும் தேவதாம்சமாவது பற்றி இல்லறத்தார் அவரவர் குலத்தில் உண்மையாகவிருந்த உத்தமஸ்திரீகளாம் சுமங்கலிகளை விசேஷகாலங்களிலும், வருஷத் திதிக்குப் பின்னிட்டும் தெய்வமாகக் கொண்டாடும்

பூஜித்துப் பிரார்த்தனை செய்யவேண்டுமென்று ஏற்படுத்தியுள்ளார்.—இது நாளது வரையிலும் எல்லாக் குடும்பங்களிலும் வழங்கி வருகிறது. இப்படிப் பதிவிரதா சிரோமணிகளாயிருந்து மாங்கல்யத்தோடு மாக்ஷி பெற்றுய்ந்த மஹாத்மாக்களைப் பூஜித்துப் பிரார்த்தித் தனுக்கே சுமங்கலிப் பிரார்த்தனை யென்றுபேர். எப்போதும் நன்மையே செய்யும் தேவதாம் சமானவர்களைப் பூஜித்துப் பிரார்த்திக்துக்கொள்ளல் தகுமென்பது இதன் உட்கருத்தாம். மேற்றிசையார் நம் ஆர்யானுஷ்டானங்களையிகழ்ந்து பேசுவது வழக்கமாக விருக்கிறது. நம்மவர்கள், உயர்நிலைதவறி உத்தமவழிதப்பி, இருளும் மருளும் நிறைந்து, உண்மைவழி தப்பி உய்யும் வழியறியாது அல்லாடி வருவதால் அவர்கள் நம்மவரைப் பார்த்து இப்படி நையாண்டி செய்து பழித்துப்பேச நேரிடுகிறது.—இதற்கு அவர்கள் பேரில் குற்றஞ்சொல்லக் காரணமில்லை. நம்மவர்கள் மடைமையே காரணமாயிருக்க அவர்களை வீணில் நொந்து கொள்வதில் பயனென்ன? மேற்றிசையில் உண்மை வழிபற்றி உய்ய விரும்புகிறவர்கள் அங்கு வழங்கும் உத்தம எண்ணங்கள் அவர்கள் ஆத்ம தாபத்தைத் தணிக்கத்தக்க பெருமை பொருந்தியதில்லாமை கண்டு, கீழ்த்திசை நோக்கி வந்து சத்தியத்தை நாடி சாதிகமேற்பூண்டுழைத்து வருகிருர்கள். அவர்கள் பூர்வத்தில் ஏற்பட்ட ஆர்ய உண்மைகளின் மேன்மையையும் அதை அனுபவத்தில் கண்டுய்ய நம்முன்னேற்பட்டுள்ள உண்மையான உயர் வாழ்வையுங் கண்டும் கேட்டும் ஆனந்தித்து அந்த நிலையடைய உண்மையிலுழைத்து வருகிருர்கள். நம்மவர்களில் இங்கிலீஷ் படிப்புப்படித்து சந்தியாவந்தனத்தையும் கைவிட்டு சாஸ்திர உண்மையை யனுசரித்து நடப்பதாகச் சொல்லி போம்வழி வரும்வழி தெரியாமல் "குருடனும் குருடனும் குருட்டாட்டமாடிக்குழியில்விழுந்த" கதையாக மேற்றிசையார் பின்பற்றிச்செல்வதே பெருமையாக மதிக்கும் புன்மதிகள் இந்த மேற்றிசைச் சற்சீஷரைத் தமக்கு சத்குருவாகக்கொண்டு பணிந்து அவர்கள் இழுத்தவழிகளிலெல்லாம் போயலைந்து புனிதமான ஜன்மத்தைப் பாழாக்குகிருர்கள். இதுவுமவர் விதிவசமேயன்றி வேறல்ல. இவ்வகைமொழிகளை நாமே பகர்ந்தோமென்று எவரும் நம்மீது பகைபாராட்டத் தேவையில்லை. அவர்கள் கொண்டாடும் குருகுலதிலகர்கள் உள்ளத்தில் உள்ளபடி உண்மையாக நினைக்குமெண்ணத்தை நாம் நம்மவர்கள் நன்மையைக் கருதி வெளியிட்டதன்றி வேறல்ல. பகைத்தும் திகைத்தும் பிரயோசனமில்லை. போனதைப் போகவிட்டு, இனி வீண்காலம் போக்காது உள்ளதை யுணர்ந்து உண்மை வழிநடக்க இதைப் பார்த்தவுடன் சங்கற்பித்துக் கொண்டு முன்வைத்தகால் பின் வாங்காது முயலுவதே ஆண்மைக் கடையாளமாம். உண்மைக்கும் அது அனுகூலமாம். ஆகையால் பதிவிரதாதர்மம் இப்பரதக்கண்டத்தில் வளர்ந்துவர யாவரும் முயலவேண்டும். சுமங்கலிகளைப் போல சுபம்நிளைப்போர் யாருமில்லை. ஆகையால் இப்பரதக்கண்டத்தில் மட்டுமன்றி, கீழ்லோகம் மேல்லோகமிரண்டிலும் பதிவிரதாதர்மம் பூண்டொழுகும் பத்னிகளுக்கும அவர்களைக் கொண்டாடும் சிஷ்யவர்க்கங்களுக்கு நித்யமங்கலம்கூறி இதை முடிப்போம். ஜகத்திலவதரித்த சுமங்கலிகளுக் கெல்லாம் மங்கலம். பாரிலவதரித்த பதிவிரதைகளுக்கெல்லாம் மங்கலம். பூவிலவதரித்த புண்யவதிகளுக் கெல்லாம் மங்கலம். ஊரிலவதரித்த உத்தமிகளுக் கெல்லாம் மங்கலம். நாட்டிலவதரித்த நன்மக்களுக் கெல்லாம் மங்கலம். என்னிருதயத் திருந்தாளு மின்னுயிர் நாயகிக்கு மங்கலம்: ஜய மங்கலம்.

விண்ணிலொளியே விழுமியதேனே
மண்ணின்மதிபோல் மனைக்கோர்விளக்காய்
எண்ணிலொளியாய் ஏ்ருதயத்தன்பாய்
கண்ணிற்பாவைபோல் கணவற்கிசைந்த பாவாய்போற்றி.

"அன்பும் சிவமுமிரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாருமறிகிலார்
அன்பே சிவமாவ தாருமறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப்பாரே."—திருமந்திரம்.

சுபமஸ்து. ஓம்.

SONGS FOR CHILDREN.

"பாலர்க்கினிய கீதம்"

சரஸ்வதி ஸ்தோத்திரம்.

இராகம்-மோஹனம்; ஆதிதாளம்.

பல்லவி.

ஓவீணாவதிவாணியென்முன் ஓடியேவாராய்

அநுபல்லவி.

ஓடியேவாராய் துயரோட்டிடநேராய் (ஓவீ)

சரணம்.

சந்ததமுன்னரவிந்த பதந்தன்னையே
சிந்தனைசெய்தேயுளம் நொந்துருகினேன்பாராய்!
இந்தவேளையிலென்னை ஆள்வதுனக்கரிதா
சுந்தரிநிரந்தரி அருள்புரிகிருபாகரி
சா சதபகதபா கபகரிகசரீரி கபகரி!
சரிகரிசதசாச தசரீ சரிகரிகபா கபதபதசா
தசரிகரி சரிசசதப கதபா கபகரிகப (ஓவீ)

இங்கிலீஷ் நோட்டு.

1. கல்விக்கரசேகலைமகளே
கருணாகரிநல்வரமருளே
செல்வக்கிளிதன்மொழியினளே
சேவடியிணைதொழுதனமருளே (க)

2. எங்கள்மேல்கிருபைசெய்வாணீ
எங்கும்புகழுளகல்யாணி
வைகுந்தன்சேயடன்ராணீ
வரவீணாபுஸ்தகபாணி (க)

3. மாதர்க்கல்வியுமோங்கிடவே
மாதேயருள் புரியேந்திழையே
வானோர்போற்றிடும்பைங்கொடியே
வந்தனமீதோசரஸ்வதியே. (க)

4. சிறுமியர்கள்கல்விதனை
சீராய்கற்பதுகெடுதியென
கழறுஞ்சிலசிற்றறிஞர்களின்
கொடிதாமறிவைக்கொய்தருளே. (க)

('கார்த்தருள்வாய்' என்னும் பார்வதிநாடகமெட்டு)

இராகம்-பியாக; ரூபகதாளம்.

கார்த்தருள்வாய் கலைமகளே நினதுபதம்
கன்னியர்போற்றினோம் கருணைகூர்ந்தெம்மை (கார்)

1. வெள்ளைக்கமலத்தின்மீதிலமர்ந்தவளேஎழிலினளே
வெள்ளைக்கலை யணிந்தாளே [எமக்கருளே
கல்விச்செல்வந்தனைத் தந்தருள்தாயே
செல்வச்சிறுமியர் செப்புதற்கிரங்கி (கார்)

2. நான்முகனார் மகிழ்நங்கா யென்முன் வருவாய்
வரந்தருவாய் அருள்புரிவாய் நம்பினோம் உம்பதம்
ஞாலத்தில்மாதர்க் கல்விபெருகுமோங்க [பாகாய்
நன்கருள்செய்யயன் நாயகியேஅம்ப (கார்)

('தேமஜதிவ்வியமதீ சரஸ்வதி' என்னும் மெட்டு.)

இராகம்-இந்துஸ்தானி; ஆதிதாளம்.

(பல்லவி.)

சேவடிபணிந்தேனே கலைமகளே (சேவடி)

1. சேவடிபணிந்தேனுன் சேயனையாண்டிட
தாமதமுனக்கேனோ தயைபுரிவாய் (சேவடி)

2. நான்முகன்தேவியே நம்பினேனுன்னையே
யான் முயலும்தொழிலும் நடந்தேறவே (சேவடி)

3. சஜ்ஜனபாலினி சரவிருஹாஸனி
இச்சையின்படிவரமே ஈந்தருள்வாய் (சேவடி)

4. வித்யாரூபமாய் விளங்கிடும்பாவையே
நித்யமுமென்னிடத்தே நிலைத்திருப்பாய் (சேவடி)

(என்னுடன் நீ பேசாததுஞாயமோ என்னும்மெட்டு.)

இராகம்-செஞ்சுருட்டி; ஆதிதாளம்.

1. வாணியேயுன்பதம் போற்றினோம்யாமுமே
வந்தருள்செய்வாயினி வனஜபவன்சதியே (வா)

2. வெள்ளைக்கலையினளே வேண்டுகின்றோம் முன்னமே
சொல்லருங்கல்விதனை சீராயுணர்த்துவையே (வா)

3. வீணைதரித்தவளே விமலகுணவதியே
விண்ணவர்போற்றும் மணிவிளக்கேகலைமகளே (வா)

4. சுந்தரரூபியே சுபமருள்தேவியே
பாலர்கள்
இந்துமத ——— பாடசாலையோங்கவே (வா)
பாலிகா

5. நிச்சயமாயருள்வோர் நினைவிடவேறுளர்
சிறுவர்கள்
இச்——— மிக வின்பமுறவேயருள். (வா)
சிறுமியர்

LESSONS IN NATURE STUDY.

BEES AND BEEHIVES.

பிரகிருதிவித்யாம்சம்.

தேனீக்களும் தேனும்

பலவகைத் தேனீக்கள்.

ஈக்களில் தேனீ என்பது ஒரு ஜாதி. இந்த ஜாதியில் மலைத்தேனீ, நாட்டுத்தேனீ கொசுகுத்தேனீ எனமூன்றுவிதமுண்டு. மலைத்தேனீக்கள் உருவத்தில் ஒன்றரையங்குல நீளமுள்ளதாயும், கொடுக்குகள் நீண்டு வளைந்து கூர்மையுள்ளதாயும், தேகம் கருநிறமானதாயுமிருக்கிறது. இது செங்குத்தான குன்றுகளிலுள்ள பாறையிடுக்குகளிலும், உயர்ந்த மரக்கொம்புகளிலும், பெரிய மரப்பொந்துகளிலும் கூடுகட்டுகிறது. இதற்கு மூர்க்ககுணமும் கடுங்கோபமும் அதிகம். தங்களுக்குத் தீங்கு செய்ய வருகிறவர்களை மைல் கணக்காகத் துரத்தி விரட்டியடிக்கும் தன்மையுள்ளது. மூன்று ஈக்கள் சேர்ந்தால், ஒரு பலமுள்ள மனிதனை எதிர்த்துக்கொன்று தீர்க்கும் சக்தியுள்ளது. இவ்வீக்களைக்கண்டால குரங்கு, கரடி முதலிய மதுப்பிரியமுள்ள மிருகங்களுக்கும அதிக பயம். இதனுடைய ரீங்காரத் தொனியைக் கேட்டவுடன் அவைகள் பறந்தோடிப் பதுங்கிவிடும். இவைகளினுடைய கொடுக்குகள்மட்டும் காலங்குல நீளமுள்ளதாயிருப்பதுடன், கோபமூண்டு கொட்டும்பொழுது நீளும் தன்மையுடையதாயிருக்கிறது. இவைகள கட்டும்கூடு அல்லது இராட்டை ஒவ்வொன்று 6 அல்லது 7 அடி சுற்றளவுள்ளதாயும, அரையடி கனமுள்ளதாயும், ஒவ்வொரு அரையும இரண்டங்குல ஆழமுள்ளதாயும், ஒன்றரையங்குலம சுற்றளவுள்ளதாயுமிருக்கும. இவைகள் சில சமயங்களில் மனித சஞ்சாரங்குறைந்த மேட்டுப்பாங்கான இடங்களிலுள்ள உயர்ந்த மரக்கொம்புகளிலும், கற்சந்துகளிலும் கூடுகட்டுவதுமுண்டு. இதன் மூர்க்ககுணத்தைத் தெரிவிப்பதற்காக நேரில் யாம் கண்ட ஒரு சங்கதியைக் கூறுவது விஞ்ஞாபமென்று எழுதித்தீருவோம்.

கோயமுத்தூர் ஜில்லா திருப்பூருக்கடுத்த ஒரு மேட்டுப்பாங்கான கிராமத்தில் தோட்டசாகுபடி செய்யப்பட்ட ஒரு பூமியும், அதில் கண்ணாடியைப்போன்ற தெளிவான ஜலத்தையுடைய ஒரு பெரிய கிணறுமிருந்தது. இக்கிணற்றின் அடிப்பாறை மட்டத்திலிருந்து சொந்தக்காரன் நான்குபுறமும் கற்கட்டடங் கட்டி கைப்பிடி சுவரமைத்து, சுண்ணாம்புச் சாந்துபூசி, கிணற்றிலிறங்குகிறவர்களுக்கு அநுகூலமாகப் படிகளுமமைத்து, வெகு சுத்தமாய் வைத்திருந்தனன். தவிர பூமியின் நாலாபக்கமும் தண்ணீர் பாய்ச்சும்படியாக துலைகளுள்ள பக்கத்தில் உயர்த்தி கற்கட்டடங்கட்டி, மேடிட்டு கால்வாய்செய்து செய்து கவலையிறைக்கும எருதுகளுக்கும் ஆட்களுக்கும் நிழல் தரும்படி பூவரசு மரங்களை வரிசையாய் நட்டு வளர்த்தியுமிருந்தனன். மேற்படி கிணற்றையடுத்து ஓட்டு வில்லைக் கொட்டகை யொன்றுமிருந்தது.

யாம் ஜீவனார்த்தமாய் இவ்வூரிலிருக்குங் காலத்தில் ஜல சௌக்கியத்தையும ஏகாந்தத்தையும் விரும்பியபடியால், தூரத்தை இலக்ஷியஞ் செய்யாமல் இக்கிணற்றுக்கு தினப்படி அதிகாலையில் சென்று வேஷ்டிகளைத் துவைத்து ஸ்நான ஜபதபங்களைச் செய்துகொண்டு திரும்புவது வழக்கம். இப்படியிருக்க ஒரு நாள் யாம் இக்கிணறுக்குச் சென்றபொழுது, இரண்டு கவலைகளும் பூட்டப்பட்டு இருவர் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்ததைக் கண்ட யாம் வழக்கப்படி கிணற்றிலிறங்கி, வேஷ்டிகளைத் துவைத்து ஸ்நானஞ்செய்து விபூதி யணிந்து படித்துறையிலுட்கார்ந்து கண்களை மூடிக்கொண்டு ஜபஞ்செய்துக் கொண்டிருந்தோம்.

சற்று நேரத்திற்கெல்லாம் திடீரென்று ஒரு பயங்கரமான சப்தமுண்டாயிற்று. ஊருக்கு இவ்வளவு தூரமான ஏகாந்தமானவிடத்திலும் ஜபத்திற்குத் தடைகளுண்டாகிறதே என்கிற மனக்கிலேசத்துடன் கண்களைத் திறந்து

பார்த்தோம். தண்ணீர் இறைக்கும் தோல் பரியின் வாய்க்கயிறு அறுந்து பரியிலுள்ள தண்ணீர் மறுபடியும் கிணற்றில் குபீலென்று விழுந்தது தான் சப்தத்திற்குக் காரணமென்று தெரிந்து, மறுபடியும் கண்களை மூடிக்கொண்டு ஜபத்திலுட்கார்ந்தோம்.

சற்று நேரத்திற்கெல்லாம் ஐயோ! ஐயோ என்று கவலை இறைக்கிற ஆட்களின் சப்தமும், அம்மா! அம்மா!! என்று கவலை இறைக்கிற எருதுகளின் சப்தமும் கேட்டது. மறுபடியும் ஜபத்திற்கு ஏதோ தடையுண்டாயிற்றே என்று கண்களைத் திறவாமலே மனதை வெளியில் செலுத்தக் கூடாதென்று உறுதி கொண்டிருக்கையில் கிணற்றுக்குமேல் அழுகையும் கூக்குரலும் அதிகரித்தது. மேலே ஏறிவந்து பார்த்தோம். கவலையிறைக்கும் ஆட்களின் பேரிலும் எருதுகளின்பேரிலும், இவ்வளவு அவ்வளவு என்றுசொல்ல முடியாத மலைத் தேனீக்கள் உட்கார்ந்து தங்கள் கொடுக்குகளால் கொட்டுவதையும், ஆட்களினுடைய தேகமும் எருதுகளின் உடலும் கண்களுக்குப் புலப்படாமல் ஈக்களால் மறைக்கப்பட்டிருப்பதையும், எங்கு பார்த்தாலும் ஈக்கள் ரீங்காரத் தொனியுடன் பறந்து கொண்டிருப்பதையும் கண்டோம். சமீபத்திலுள்ள சிலர் உதவி செய்யவந்தாராயினும், அவ்வீக்களுக்கு ஈடு கொடுக்க ஒருவராலும்மாளவில்லை. வந்தவர்களையெல்லாம் இவ்வீக்கள் துரத்தியடித்தன. சிலர், தங்கள் உடலை சாக்கு, துணி முதலியவைகளால் மறைத்துக்கொண்டு தைரியமாகவே நெருப்பு மூட்டி, ஆட்களைத் தூக்கி நெருப்புக்குச் சமீபத்தில் போட்டு, எருதுகளையு மவிழ்த்து நெருப்புக்குச் சமீபத்தில் நிறுத்தினார்கள். இப்படி உதவிசெய்ய வந்தவர்களையும் ஈக்கள் வருத்தாமலிருக்கவில்லை.

தேனீக்கள் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவைகளென்று சிலர் கூறுவதை யாம் கேட்டிருந்ததுண்டு. ஜபம் செய்வதை விடாமல் கையிலிருந்த ஒரு சிவப்பான பட்டுத்துணியைத் தலைக்குமேல் சுற்றிக்கொண்டேயிருந்து ஈக்கள் சற்று அடங்கிய பிறகு வீட்டுக்குத் திரும்பினோம். எம்மிடத்திலொரு ஈ கூட வரவில்லை. எம்மைக்கொட்டவும் துணியவில்லை. ஈக்களால் துன்பப் படுகிறவர்களுக்கு தேகப் பிரயாசப்பட்டு உதவிசெய்ய மனமிருந்தும், இருந்த இடம் விட்டுப் பெயர, யாம் துணிவு கொள்ளவில்லை. எம்மையும் ஈக்கள் வருத்தியிருந்தால், யாம் செய்த வாய்சகாயஞ்செய்யக்கூட அவ்விடத்திலவர்களுக்கு ஒருவருமில்லை. கவலையாட்களின் பேரிலும் எருதுகளின்பேரிலும் உரோமக்கால்கள் தவறாமல் ஈக்களினுடைய முட்கள் ஏறியிருந்தன. ஆட்களின்தேகமும், எருதுகளின் உடலும் ஒருமணி நேரத்திற்குள்ளாக பூதாகாரமாய் வீங்கிப் பருத்துவிட்டது. ஒரு மனிதனும் மூன்று எருதுகளும் அன்று சாயந்திரத்திற்குள்ளாகவே இறந்துபோக, மறுநாள் மற்றொரு எருதும் அதேகதியடைய, ஒரு ஆள்மட்டும் பிழைத்தானாயினும் வெகுநாள் வரையில் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்து, தன ஜீவகாலமெல்லாம் வேலைக்கு உபயோகமற்றவனாகவிருந்தான். உதவிசெபய வந்தவர்களிலும் சிலர் வெகுநாள் வருத்தப்பட்டார்கள்.

கிணறுறுத்துலைக்கு அடியிலிருந்த ஒரு பொந்தில் அவ்வீக்கள் வெகுநாளாக வாசஞ்செய்துக் கொண்டிருந்தனவாம். ஆனால், பதுப்பதினைந்து ஈக்களுக்கு அதிகமாக இத்தோட்டக்காரர்கள் எப்பொழுதும் கண்டதில்லையாம். இப்பொழுது வெளிப்பட்டவைகளை ஒரு உத்தேசமாய்க் கணக்கிட்டாலோ அறுபதினாயிரத்துக்குக் குறையாது. தோல் பரியின் வால் கயிறு அறுந்து, தண்ணீர் குபீலென்று கீழ் நோக்குலகையில் மேற்படி ஈக்களின் கூடிருந்த விடத்திற்கு, பொந்துவழியாக

ஜலம் உட்பிரவேசிக்கவே, ஈக்களுக்கு உக்கிரம் பிறந்து இவ்வாறு நேர்ந்ததாகத் தெரிய வந்தது. மறுநாள் அவ்விடத்தில் சிற்சில இறந்த ஈக்களினுடைய உடல்களைத் தவிர, உயிருள்ள ஈ ஒன்றாவது காணப்படவில்லை. இந்த விடம் இனி வாசத்திற்குத் தகுந்ததல்லவென்று கண்டு வேறு இடம் போயிருக்க வேண்டும். கிணற்று கற்கட்டைப் பிரித்து பார்க்கும்பொழுது ஐந்தரையடி சுற்றளவுள்ள ஏழு கூடுகளிருந்தன. சில கூடுகளில் ஈ முட்டைகளும், பக்குவமடையாத குஞ்சுகளுமே இருந்தன. எடுக்கும்போதே செலவு செய்யப்பட்டதுபோக 23 படி சுத்தமான தேன் கிடைத்தது.

இம்மாதிரியான மலைத்தேனீக்கள், ஆனைமலைக்கடுத்த உடைய குளம் என்கிற கிராமத்திற்கு சமீபத்திலுள்ள தேன் கரடு என்ற குன்றின் செங்குத்தான பாறையின் அடிப்புறத்தில் ஏராளமான கூடுகள் கட்டிக்கொண்டு வசிக்கின்றன. இக்கூடுகள் ஒவ்வொன்றும் தூரப்பார்வைக்கு முழுச்சாக்கு மூட்டைகள் போல் காணப்படுகின்றன. இவ்விடத்திலிருந்து தேன் எடுப்பது மகா கஷ்டமும் பயங்கரமுமான செய்கை. செங்குத்தாய் சற்று வளைந்து நிற்கப்பட்ட. பாறையின் உச்சியில் இரும்புகட்டப்பாரை கொண்டு இடித்து இரண்டடி ஆழமுள்ள துவாரஞ் செய்து, அதில் அக்கட்டப்பாரையையே முளையாகவடித்து, இதற்கென்றே தயார் செய்து வைத்திருக்கிற சமீபகணுக்களையுடையதும், 50, 60 அடி நீளமுள்ளதும், ஒரு புறத்தில் கொக்கி மாதிரி வளைத்துக் கட்டியும், மற்றுப் புறத்தில் துவாரஞ்செய்து சில முளைகளையடித்ததுமான பிரம்பைக்கொண்டுவந்து, மேற்படி பாறையிலடித்த முளையில் மாட்டி, உற்ற துணையை முளையண்டை நிறுத்திவிட்டு, கணுக்களையுடைய பிரம்பின் வழியாய் ஒருவன் கீழே இறங்குவான். ஒருகையில் தீக்கொளுத்திய ஒரு பந்தத்தை எடுத்துக்கொண்டும், தேன்கூடுகளை எடுத்து வரத்தகுந்த ஒரு வலையை இடையில் கட்டிக்கொண்டும், பிரம்பின் கணுக்களில் கால் விரல் சந்திறைப் பற்றிக்கொண்டும் போவான். ஒரு கஜம் கீழேபோய் விடுவானானால், மேலே இருக்கப்பட்டவன் இவனைக் காணமுடியாது. சுமார் 200 கஜத்திற்குகீழே பூமியானது கல்லும் காடுமாய்க் காணப்படும். கீழே பிரம்பின் வழியாக இறங்கினவன் தேன் கூடுகளை எட்டக்கூடிய அளவில் நின்று ஊசலாடுவதுபோல் பலதடவைகள் ஆடி தேன் கூடுகளிருக்கப்பட்ட விடத்தைச் சேர்ந்து தீக்கொளுத்திய பந்தத்தினால் ஈக்களைச் சுடுவான். இரண்டு மூன்று தடவை இவ்விதம் சுட்ட பிறகு, தேன் கூடுகளை அறுத்தறுத்து, தன் அரையிலுள்ள வலையை எடுத்து பிரம்பின் முளையில் கட்டி, அதில் போட்டுவிட்டு மேலே இருக்கப்பட்டவனுக்கு சமிக்கை செய்து ஏறி வந்துவிடுவான். பிறகு பிரம்பை இழுக்க தேன் கூடுகளையுடைய வலையும் வந்துவிடும். ஒருதடவையில் சுமார் 40-படிக்குக் குறையாத தேனுள்ள கூடுகளை எடுப்பான். இப்படி ஒரு தினத்தில் இரண்டு தடவைக்கு மேல் எடுக்க ஏலாது. இறங்குகிறவன் தன் சொந்த மனைவியைத் தவிர வேறு ஒருவரையும் மேற்படி முளையண்டை நம்பிவைப்பதில்லை. இவ்வேலையில் தேர்ந்தவர்கள் அப்பிராந்தியங்களில் ஒருவரிருவருக்கு அதிகமாயிருக்கமாட்டார்கள். இவர்களைக் கொண்டே பலசமயங்களில் இப்போர்க்கொத்த விடங்களிலுள்ள தேன்களை எடுக்கப்படுகிறதாகத் தெரியவருகிறது. இவர்களை இத்தேனீக்கள் எவ்விதத்திலும் வருத்துவதில்லை.

2. நாட்டுத்தேனீக்கள் பலவிடங்களிலும் காணப்படும். இதில் மூன்று விதமுண்டு. ஒரு அங்குலமுள்ளவைகளை பெருந்தேனீ என்றும், அரையங்குல முள்ளவைகளை கொம்புத்தேனீ என்றும், காலங்குல முள்ளவைகளை சிற்றீ என்றும், சொல்லப்படுகிறது. இவைகளில் பெருந்தேனீக்களும், கொம்புத்தேனீக்களும், கருஞ்சிவப்பு நிறமானது. சிற்றீக்கள் கருமையாகவே காணப்படுகின்றன. இவைகள் மரக்கொம்பு, கற்சந்து, மரப்பொந்து இவ்விடங்களில் கூடுகட்டுகின்றன. இவைகளில் சிற்றீக்களைவிட கொம்புத் தேனீக்கள் கொடியவை. கொம்புத் தேனீக்களைவிட பெருந்தேனீக்கள் கொடியவை. இவைகளெல்லாம் மலைத்தேனீக்களைப்போல அவ்வளவு மூர்க்க குணமுள்ளவல்லவாயினும், தங்களுக்கு இடர் செய்பவர்களைக் கொட்டாமலும் வருந்தாமலுமிரா. இவைகளில் கொம்புத்தேனீக்களால் சேர்க்கப்பட்ட தேனே அதிக மதுரமானது.

3. கொசுகுத்தேனீ என்பது மிகவும் சிறியது. இது அளவில் சாதாரண சிக்காடு, கொசுகு முதலியவைகளைவிட சற்று பெரியது. இது அதியுஷ்ணமான விடங்களில் கூடுகட்டும். இது சேர்க்கும் தேனை எடுப்பவர்களைத் தீங்கு செய்யத் தகுந்த கொடுக்கு இதற்கில்லை. ஆனால் சற்று கடிக்கும். இவைகளினுடைய கூடும் அதிக சிறியது, தேனுமதற்குத் தக்கின அளவாகவேயிருக்கும். இத்தேன் ஔஷதங்களுக்கு மிகவும் சிரேஷ்டமானதென்று நம்பப்படுகிறது.

தேன்.

தேனென்பது நானாவிதமான புஷ்பங்களினின்றும் தேனீக்கள் அலைந்து திரிந்து எடுத்துக்கொண்டுவந்து தங்கள் கூட்டில் சேர்க்கப்பட்ட மதுரமான திரவப்பொருளெனக் கூறலாம். இதில் சர்க்கரை, மெழுகு, புஷ்பசத்து, ஜலம், சாயம் முதலியவைகள் சேர்ந்திருக்கின்றன. ஈக்கள் தங்கள் வாயால் புஷ்பங்களிலுள்ள தேனைக்குடித்து மறுபடியும் அவற்றை வெளிப்படுத்தி, சேர்க்கப்பட்டதாயினும், மனிதர்கள் அதை நிந்தியாமல் வெகு சிரேஷ்டமாகக் கொள்ளுகிறார்கள். இது ஒன்றைத்தான் இப்படி எடுத்துக்கொள்ளுகிறார்களோ வென்று ஆராயுங்கால்—

“தாமரை பொன்முத்து சாமரை கோரோசனை பால் பூமருதேன் பட்டு புனுகு சவ்வா-தாமழன் மற்றெங்கே பிறந்தாலு மெள்ளாரே நல்லோர்களெங்கே பிறந்தாலுமென்.”

இப்படி பொருளின் குணத்தைப் பார்த்து எடுத்துக்கொள்வதும், அவை பிறந்தவிடத்தைப்பற்றிக் கவனியாமலிருப்பதும் மானிடருக்கு சகஜம். தேனானது ஈக்கள் எடுக்கும் புஷ்பத்தின் தன்மைக்குத் தக்கபடி நிறம், உருசி, முதலியவைகளில் பேதப்படுகிறது. சில புஷ்பங்களிலிருந்து எடுத்துச் சேர்க்கப்பட்ட தேன் இரத்தநிறமாயிருக்கிறது. வேறு சில புஷ்பங்களிலிருந்து எடுத்து சேர்க்கப்பட்ட தேன் கசப்பாயிருக்கிறது. தவிர, தேன் சேகரிக்கப்பட்ட காலத்தை யனுசரித்தும் தேனின் குணம் வித்தியாசப்படும். வாஸ்தவத்தில் மழைகாலத்தில் சேர்க்கப்பட்ட தேனில் ஜலம் அதிகமாயிருக்கும். அது வெகு சீக்கிரத்தில் புளித்துப்போம்.

(இன்னும் வரும்.)

SELECTIONS FROM SCHILLER'S POETRY.

I. THREE WORDS OF STRENGTH.

மூன்று மந்திரம்.

(நேரிசை வெண்பா.)

THREE WORDS OF STRENGTH.

THERE are three lessons I would write,—
Three words as with a burning pen,
In tracings of eternal light,
Upon the hearts of men.

மாந்தருளத் தென்றும் வயங்குமெரி கோலொன்றால்
நேர்ந்தரிது தீட்டு நெறிபோலச்—சேர்ந்தொளிரத்
தீட்டுதற்கி யான்கருதுந் தீங்கின்மொழி மூன்றுளவால்
ஊட்டுவன வொண்மதியை யுற்று.

(இ-ள்.) பிரகாசித்து எரிகின்ற எழுது கோலொன்றால் எழுதினால் எப்படிப் பளிச்சென்று விளங்குமோ அப்படி விளங்கும்படி மனிதர் இருதயத்தில் நான் எழுதவெண்ணும் குற்றமற்ற நல்ல புத்தியைப் போதிக்கத் தக்க வார்த்தைகள் மூன்றிருக்கின்றன. (க)

Have HOPE. Though clouds environ now,
And gladness hides her face in scorn,
Put thou the shadow from thy brow,—
No night but hath its morn.

ஊக்கமது கொள்கவுனை யோங்குதுயர் சூழினும்
தேக்குகளி நிற்கரந்து செலினும்—மீக்கிளரும்
வாட்டமுகங் கொள்ளற்க மாநிலத்தி னில்விடியா
தீட்டுமிரா வில்லையென வெண்.

(இ-ள்.) அம்மூன்று வார்த்தைகளுள் முதலாவது யாதெனில்—ஊக்கம் கொள்வாயாக; உன்னை மிகுந்த துன்பங்கள் வந்து சூழ்ந்தபோதிலும் மகிழ்ச்சியானது உன் கண்முன் எதிர்ப்படாது தன்னை ஒளித்துக்கொண்டபோதிலும் நீ மனமெலிந்து முகம் வாடாதே. இவ்வுலகில் எவ்வகைப்பட்ட பயங்கரமான இரவுக்கும் முடிவும் விடிவும் உண்டு. அதுபோல உன் துன்பங்களுக்கும் நிவர்த்தி யுண்டாகும். (உ)

Have FAITH. Where'er thy bark is driven,—
The calm's disport, the tempest's mirth,—
Know this,—God rules the hosts of heaven,
Th' inhabitants of earth.

ஈசனருள் பற்றிடுக வெங்கலைந்து கெட்டிடினும்
ஓசைபெறு வாரிதியி லுன்கலன்றான்—தேசிற்
றெரிந்திடுக வானவருந் திண்புவியோர் தாமும்
பொருந்துவரன் னானரசிற் புக்கு.

(இ-ள்.) இரண்டாவது உபதேசம் யாதெனில்—உன் கப்பலானது கடலில் எவ்விடத்தில் அலைந்து திரிந்து வருந்தியபோதிலும், அதாவது, நீ எத்தனை துன்பங்களை அடைய வந்தபோதிலும், தைரியப்படாமல் கடவுள் திருவருளையே துணையாகப் பற்றுக. வானுலகில் உள்ளவர்களும் மண்ணுலகில் உள்ளவர்களும் யாவரும் அக்கடவுளின் அரசாட்சிக்குட்பட்டவர்களாய் அவனால் இரக்ஷிக்கப் படுகிறார்களென்று நீ அறிவாயாக. (ங)

Have LOVE. Not love alone for one,—
But man, as man, thy borthers call,
And scatter like the circling sun
Thy charities on all.

யாரிடத்து மன்பு நிறைந்திடுக யாவரையும்
நேருமொரு சோதரர்போ னெஞ்சுறுக—வாரமுடன்
எவ்வெவர்க்கு நின்கொடையை யின்பாற் புரிந்திடுக
அவ்வெயில்போ லாருலகி லாங்கு.

(இ-ள்.) மூன்றாவது மந்திரம் யாதெனில்—யாவரிடத்திலும் நிறைந்த அன்பைச் செலுத்துவாயாக. எல்லோரையும் உன்னுடன் பிறந்த சகோதரர் போலப் பாவிப்பாயாக. வெயிலானது பட்சபாதமில்லாமல் எங்கும் ஒரே தன்மையாய் எறித்தல்போல் எல்லாவர்க்கும் அன்போடு உன்னாலியன்றதைக் கொடுத்து உதவி செய்வாயாக. (ச)

Thus grave these lessons on thy soul,—
Hope, Faith, and Love, and thou shalt find
Strength, when life's surges rudest roll,
Light, when thou else wert blind.

Schiller.

ஊக்கமருள் பற்றிடுதல் உற்றிடுமன் பெண்ணிவற்றை
நீக்கமற நெஞ்சிற் பொறித்திடுக—ஆக்கை
தளர்ந்திடும்போழ் தார்வலியைத் தந்திடுமா ருள்ளில்
விளைந்தவிரு ணீக்குமொளி யிக்கு.

(இ-ள்.) ஊக்கம், திருவருளைப்பற்றுதல், அன்பு என்னும் இந்த மூன்று வார்த்தைகளையும் உன்னுடைய நெஞ்சில் பதியும்படி எழுதிக்கொள்வாயாக. இவை உனக்கு மெய்த்தளர்ச்சி வந்தபோது பலத்தைக் கொடுக்கும்; மனத்தில் துயரமாகிய இருள் நிரம்பிய காலத்தில் ஒளியைக் கொடுக்கும். (ரு)

II. DIVISION OF THE EARTH.
கடவுள் உலகைப் பங்கிட்டுக் கொடுத்தது.

[ஆதியில் முழுமுதற் கடவுள் மனிதர்களைநோக்கி, "இவ்வுலகத்தை உங்களுக்குரிமையாகக் கொடுக்கின்றேன், அவரவர்க்கு வேண்டியபடிப் பங்கிட்டுக் கொள்ளுங்கள்" என்றனர். உடனே எல்லாரும் எனக்கு எனக்கு என்று ஆவலோடு வந்து தங்கள் தங்களுக்கு வேண்டியவற்றைப் பெற்றுக்கொண்டனர். வேளாளன் விளைநிலத்தைக் கொண்டனன்; வேடன் வனத்தைகொண்டு வனவிலங்குகளை வேட்டையாடினன். வர்த்தகன் வாணிபத்துக்குரிய பொருள்களைக் கவர்ந்து பண்டகசாலைகளிற் பூட்டிவைத்தனன். அரசன் வழிதோறும் காவல் வைத்து வரிகளும் சுங்கங்களும் வாங்கிக்கொண்டனன். இவ்வாறு பலரும் பலபொருள்களையும் உரிமையாகக்கொண்டபின் புலவன் இரைக்க இரைக்க ஓடிவந்து பார்க்க அந்தோ! தான் சமயத்துக்கு வாராமல் தாமசித்ததனால் பொருள்கள் யாவையும் பலரும் பெற்றுக்கொண்டு தனக்குப் பெறக்கூடியதொன்றும் இல்லாமையைக் கண்டு, கடவுளை நோக்கி "எந்தாய்! நின்மக்கள் யாவர்க்கும் அவரவர்க்கு வேண்டிய பொருள்களை யீந்து யாவரினும் சிறந்த நின் ஜ்யேஷ்ட புத்திரன்போன்ற எனக்கு ஒன்றுமில்லாமற் செய்வது தர்மமா?' என்ற முறையிட்டனன். அதுகேட்டுக் கடவுள், "நானென்ன செய்வேன்! நீ சமயத்துக்கு வாராமல் எங்கேயோ தூங்கிவிட்டு இப்போது வந்து என்னைக் குறைகூறுவதாற் பயனென்ன?" என்றனர். அதற்குப் புலவன், "பெருமானே! நான் எங்கும் புறஞ்சென்றிலேன். உமது சந்நிதியில் நின்று உமது திருமேனியைத் தரிசித்து உமது புகழாகிய திவ்ய கானங்களைக் கேட்டுக்கொண்டு பரவசப்பட்டிருந்தேன்" என்றனன். அதுகேட்டுக் கடவுள் ஆனந்தித்து, "அன்பா, என்செய்வேன்! உலகில் உள்ள பதார்த்தங்களையெல்லாம் ஒன்றொழியாமல் அவரவர்க்குக் கொடுத்துவிட்டேன். இனிக் கொடுக்கற்பால தொன்றுமில்லை! ஆயினும் ஒன்று சொல்லுவன் கேள். உனக்கு என்னுடைய பொன்னுலகில் இருக்க எண்ணமுண்டானால் வருக! நீ யெப்பொழுது வரினும் அவ்வுலகம் உனக்கு வழிதிறந்து காட்டும்" என்றனர். அதைக்கேட்ட புலவன் 'இங்கற்றார்க்கங்குண்டு' என்கிறபடி தனக்குப் பொன்னுலகு தந்த ஈசனை 'ஏழைபங்காளி' என்று துதித்துப் போற்றிச் சுகமாயிருந்தனன்.]

நேரிசை வெண்பா.

1. மைந்தருக்குத் தந்தை வழங்குதல்போல் வண்புவியைச்
சொந்தமுறத் தந்தேனீர் சோதரர்போற்—சிந்தைக்
கலக்கமறக் கொண்டிடுவீர் காதலா லென்றான்
தலைக்கடவுள் தண்ணருளாற் றான்.

2. ஆவலால டியாரு மவரவர்க்குத் தக்கபடிக்
கூவியருள் திண்புவியைக் கொண்டனரால்—வாவிகள்சூழ்
தண்மருதம் சார்ந்திருந்தான் வேளாளன் தான்வேடன்
உண்மகிழ்ந்தான் கானனத்தை யுற்று.

3. வாணிகன் தனக்குரிய வண்பொருளைக் கொண்டு
திணிய அறை தோறும் செறித்தான்—மணிமுடிவேய்
வேந்தனவன் எவ்வழியும் மேவுமவ ரைத்தடுத்துப்
போந்திடுசுங் கங்கொண்டான் புக்கு.

4. இவ்வகையி னெல்லோரும் எப்பொருளுங் கொண்டதற்பின்
அவ்வழியே யோடி யணைந்திட்டான்—செவ்விப்
புலவனவ னந்தோபின் புக்கதுகண் டொன்றில்
கிலையோ எனக்கென்று னேய்ந்து.

5. எந்தையே நின்மக்கள் யாவரினும் மெய்யான
மைந்தன்யா னேனும் மருவாமல்—சிந்தை
தளர்ந்திடுதல் நீதியோ என்றுதாள் வீழ்ந்தான்
உளம்புரிவான் உத்தமனுப் உற்று.

6. இத்தனைப்போழ் தெங்கிருந்தாய் ஏழாய்நீ எவ்விடத்துப்
புத்திகெட வேயுறங்கிப் போயினையென்—றத்தன்
புகன்றிடலும் ஐயநின் புண்ணியத்தாள் பற்றி
அகன்றிலனே யென்றா னவன்.

7. தேசாரும் நின்றன் திருமுகத்தைக் கண்டிருந்து
பாசம் கழன்றோர்நின் பாடல்கேட்—டாசை
ஒழிந்துனது சந்நிதிக்கண் உற்றிருந்தேன் ஐய
இழந்தனன்மற் றென்னுரிமை யீங்கு.

8. என்றதுகேட் டீசன் இசைப்பான் எனக்கினியாய்
குன்றலிலா தியாவுங் கொடுத்திட்டேன்—ஒன்றுகேள்
என்னோடு வானத் திருத்தியெனி லெய்திடுவாய்
நன்னயர் வழிதிறக்கும நாடு.

('ஷில்லர்' என்னும் தத்துவஞானியும் மஹாகவியும் செய்த இவ்வேட்டுப் பாவையும் கேட்பின்னிருந்து படித்த பரதேசி யொருவர் "தொட்டுக்காட்டும் வித்தையிதென்" றப்பாலேயிப்பா வொன்றுணர்தியெனச் சொல்லிப் பொட்டென மறைந்தார். அதை நாம் கேட்டது கேட்டபடி கீழே வரைகிறோம்.)

"உலகெலா முணர்ந் தோதற் கரியவெந்தாய்
உலகிலா மைந்தனேற் குளபொன் னுலகுதந்தாய்
சகமெலா மினியெனக்குச் சாக்ரசொப் பனமேயாகும்
யுகமெலாம் பழிக்குமுன்னை யேழையங் காளியென்றே."

III. SPACE
இடம்.

(பஃறொடை வெண்பா.)

முத்திறத்த தாகு மிடமென்ப மொய்நீளம்
தடுத்திடுமே தாவி முடிவில் பரப்பெல்லாம்
எத்திசையுஞ் சென்றளக்கு மெல்லையிலா தோரகலம்
மற்றுளதோ ராழ மருவியே சென்றண்டப்
பித்தியையும் பேதித்துக் கீழே பிறங்கிடுமால்
எத்தகையான் சொல்வே னிதை.

(இ-ள்.) இடமானது மூன்று வகையாகுமென்பார்கள். ஒன்று நீளம்; இது முடிவில்லாத பரப்பெல்லாம் சென்று தாவும்; இரண்டு, அகலம்; இஃது எல்லையில்லாமல் எத்திசையையும் சென்று அளக்கும்; மூன்று, ஆழம்; இது அண்ட புத்தியையும் பிளந்து அப்புறஞ்சென்று அதற்கடியில் வியாபிக்கும். இதன் பெருமையை நான் எவ்வாறு எடுத்துச் சொல்லுவேன்?

TRAVEL AND DESCRIPTION.

THE HOLY BENARES.

யாத்திரை க்ஷேத்திர வர்ணனை.

ஸ்ரீகாசி.

இந்த திவ்விய ஸ்தலத்திற்கு செல்லவேண்டுமானால் தென்தேசவாசிகளுக்கு இரண்டு மார்க்கமுண்டு. ஒன்று சென்னை இருப்புப்பாதையிலுள்ள அரக்கோணத்திலிருந்து ரேச்சூருக்குச் சென்று ஜி.ஐ.பி. இருப்புப்பாதை மார்க்கமாய் ஷோலாப்பூர், வாடி, டோண்ட், புஷாவல், ஜெப்பல்பூர் என்ற ஸ்டேஷன்களைக் கடந்து அலகாபாத்து மார்க்கமாய் செல்லலாம். மற்றொன்று சென்னையிலிருந்து கிழக்குக்கரை இருப்புப்பாதை மார்க்கமாய் கூடூர், பெஜ்வாடா, விஜயநகரம், கட்டாக், கார்க்பூர் என்ற ஸ்டேஷன்களைக் கடந்து கல்கத்தா சென்று, கிழக்கிந்தியா இருப்புப்பாதை மார்க்கமாய் அசன்சோல், லுக்கிசரி, கயா என்ற ஸ்டேஷன்களின் வழியாகச் செல்லலாம்.

ஸ்தலமகிமை.

இந்த க்ஷேத்திரத்திற்கு வாராணசி, ஸ்ரீகாசி, ஆனந்தவனம், ஆனந்தபுரி, மகாஸ்மசானம், கௌரிமுகம், கங்காமுகம், அவிமுக்தம் முதலிய பல நாமங்கள் வழங்குகின்றன.

வருணை, அசி என்கிற இரண்டு சிறிய நதிகளுக்கு மத்தியில் இந்த ஸ்தலமிருக்கிறபடியால் வாராணசி என்றும், ஜோதிரூபமாகிய பரப்பிர்ம்மம் இந்த க்ஷேத்திரத்திலுள்ள விஸ்வநாதலிங்கத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறபடியாலும், அதாவது ஜெகத் சிருஷ்டிக்கு முன்பே இந்த நிர்குணபிர்ம்மம் தேஜோமயமாய் பிரகாசித்துக் கொண்டிருந்ததாகவும், பிர்ம்மாவும், விஷ்ணுவும் அகம் பிர்ம்மம், அகம் பிர்ம்மம் என்பதாக வாதம் செய்கையில் இந்த ஜோதியைப்பார்த்து சாந்தியடைந்தபடியாலும் ஸ்ரீகாசி என்றும், இந்த ஜோதிரூபமான லிங்கத்தை ஆதியில் பிர்ம்மா முதலிய தேவர்கள் வணங்கி, தபசு, யாகம் முதலியவைகளைச் செய்து பல இஷ்ட சித்திகளையடைந்தபடியாலும், பிறகு வியாசர், அகஸ்தியர் முதலிய ரிஷிகள் இவ்விடத்தில் பிர்ம்மானந்தமாகிய கைவல்லியத்தை யடைந்தபடியாலும், தற்காலத்திலும் இவ்விடத்தில் பல சித்தர்கள் ஆனந்தமாய் வசிக்கிறபடியாலும், ஆனந்தவனம், ஆனந்தபுரி என்ற நாமங்கள் வந்ததாகவும், உருத்திருக்கு வாசஸ்தலமாயிருப்பதால் மகாஸ்மசானம் என்று பெயர்பெற்றதாகவும், கங்காதேவிக்கு முகம் போன்றதாயிருக்கிறபடியால் கௌரிமுகம், கங்காமுகம் என்ற பெயர்களையடைந்ததாகவும், இந்த லிங்கத்தில் பிரணவமாகிய நாதம் பிரகாசித்துக் கொண்டிருக்கிறபடியால் தாரகப்பிர்ம்மம் என்ற பெயர் வந்ததாகவும் பல கிரந்தங்களால் தெரியவருகிறது.

தவிர, இந்த ஸ்தலமானது பிரபஞ்ச சிருஷ்டிக்கு முந்தியே தோன்றிய ஜோதிலிங்கத்தையுடையதாயிருப்பதினால் அவிமுக்தி க்ஷேத்திரமென்று பெயர் பெற்றதோடு கங்காதேவி விஸ்வநாதருடைய கிருபையைப் பெற்று வருணை, அசி என்ற நதிகளுக்கு மத்தியில் பிரவேசிக்கிறதில், இந்த நதிகளுக்கு மத்தியிலிருக்கிற எந்த ஜீவஜெந்துக்களுக்கும் உபத்திரவம், பிணி, சோகம், யமவாதனை முதலியவைகளில்லாமல் காப்பாற்றுவதாக உடன்பட்டு பிரவாகித்ததாகவும் ஸ்தலபுராணங்களில் சொல்லியிருக்கிறபடியால் இந்த வாராணசியின் பெயரை உச்சரிப்பதாலேயே யமவாதனையினின்றும் நீங்கி சற்கதிக்கு வழியாகுமென்றும், காசி என்ற இந்த இரண்டெழுத்துகளை ஸ்மரிக்கிறவனும், இந்த ஸ்தலத்திற்கு செல்லுவதாக சங்கற்பஞ்செய்துகொண்டு ஏழடி நடந்து செல்லுகிறவனும் சிவலோகத்தை யடைவானென்றும், ஸ்ரீ காசி என்று ஜெபஞ்செய்கிறவன் பிர்ம்ம ஞானியா

கிறானென்றும், இதை தரிசித்தவர்களும், இதன் மகத்துவத்தைக் கேட்டவர்களும், மான்மியத்தைப் படித்தவர்களும், பிர்ம்மஹத்தி, ஸ்திரீஹத்தி முதலிய பாபங்களிலிருந்து நீங்கி சாயுஜ்ஜிய பதவியையடைவார்களென்றும் பல புராணங்களால் தெரியவருகிறது.

அன்றியும் ஜோதிலிங்க ஸ்தலங்களாகிய சோமநாதம், மல்லிகார்ஜ்ஜுனம், உஜ்னிமகாகாளம், ஓங்காரமமலேஸ்வரம், வைத்தியநாதம், பீமசங்கரம், ராமேஸ்வரம், நாகேசம், விஸ்வேசம், திரியம்பகம், கேதாரம், திருஸ்ணேசம் முதலியவைகளில் விஸ்வேசலிங்கமிருக்கப்பட்ட 'ஸ்ரீ காசியே விசேஷமானதென்று பல சித்த'புருஷர்கள் இந்த ஸ்தலத்தில் வாசஞ்செய்கிறார்கள்.

தீர்த்தமகிமை.

பரதக்கண்டத்திலுள்ள எல்லா தீர்த்தங்களினும் பிரயாகையிலுள்ள திரிவேணி சங்கம தீர்த்தமே சிரேஷ்டமுடையதென்றும், அதைவிட இந்த ஸ்தலத்திலுள்ள தீர்த்தங்கள் சிரேஷ்டமானதென்றும், இவற்றிலும் மணிகர்ணிகா கட்டத்திலுள்ள சக்கரதீர்த்தமும், ஞானவாவியும், மணிகர்ணிகையும், காசிப்பிரயாகையும், பஞ்சகங்கையும் விசேஷமானவைகளென்றும் எண்ணப்படுகிறது.

சக்கரதீர்த்தம் :—ஒரு காலத்தில் விஷ்ணுவானவர் தனது சக்கரத்தினால் தீர்த்தமுண்டாக்கி தவஞ்செய்கையில் பார்வதி சகிதமாய் சிவபெருமான் அவ்விடத்திற்கு வந்து தரிசனம் கொடுத்தபடியால், இந்த ஸ்தலத்திற்கு வருகிறவர்கள் முதலில் இந்த தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்யவேண்டும். இதற்கு பாத்தியஸ்தர்களாகிய கங்காபுத்திரர்கள் நபர் ஒன்றுக்கு ஒருரூபாய் வாங்குகிறார்கள். இது கங்கையின் கரையோரத்திலுள்ள ஒரு சிறிய குளம்.

மணிகர்ணிகை :—விஷ்ணு தபசு செய்துக் கொண்டிருக்கையில் பார்வதியுடன் பரமசிவம் வரவும், பார்வதியின் காதோலையாகிய மணிகர்ணிகை இந்த தீர்த்தத்தில் விழ, அதை விஷ்ணு தனது சக்தியால் மறைத்து சிவபெருமானுடைய மனதைத் தம்மிடம் செல்லச் செய்த காரணத்தினால், இது எல்லா தீர்த்தங்களிலும் மேன்மையடைந்ததாயும், காசியிலுள்ள எல்லா தீர்த்தங்களும் இதில் ஸ்நானஞ்செய்து தங்களுடைய பாபத்தை தீர்த்துக்கொண்டதாயும் கூறுகிறபடியால் இந்த கட்டத்தில் ஸ்நானஞ்செய்ய வருகிறவர்கள் மிகவும் அதிகம். அதிலும் பகல் 12-மணிக்கு ஸ்நானஞ்செய்வது, நூறு அஸ்வமேதஞ் செய்து வரும் பலனைவிட அதிகமென்று பல கிரந்தங்களில் கூறுகிறபடியால், அக்காலத்தில் ஸ்நானத்திற்கு வருகிறவர்கள் இவ்வளவென்று சொல்ல முடியாது. சிற்சில மிருகங்கள்கூட அச்சமயத்தில் இந்த கட்டத்திற்கு வந்து கங்கையில் முழுகிச்செல்வதை இன்னும் பார்க்கலாம்.

ஞானவாவி :—இது ஸ்ரீ விஸ்வநாதாலயத்திற்குள்ளிருக்கப்பட்ட ஒரு பெரிய கிணறு. உருத்திரர் தம் சூலத்தினால் இந்த தீர்த்தத்தையுண்டாக்கி தவஞ்செய்யுங்கால் அவருடைய தவத்திற்கு சந்தோஷமடைந்த விஸ்வநாதர் பிரசன்னராய் இந்த வாவியில் ஸ்நானஞ்செய்கிறவர்களுக்கு ஞானமுண்டாகுமென்று வரங்கொடுத்ததாகவும் இதற்கு ஞானவாவி என்று பெயரிட்டதாகவும் புராணத்தில் கூறப்படுகிறது.

காசிப்பிரயாகை :—இவ்விடத்தில் கங்கை, யமுனை, ஸரஸ்வதி என்னும் மூன்றில் கங்கை உத்திரவாகினியாயும், யமுனை பூர்வவாகினியாயும், சரஸ்வதி அந்தர்வாகினியாயும் வருவதால் இதில் ஸ்நானஞ்செய்கிறவர்களுக்கு சர்வகாமியங்களும் நிறைவேறுமென்பதாக காசிகாண்டத்தில் கூறப்படுகிறது.

பஞ்சகங்கை :—இவ்விடத்தில் கங்கை, யமுனை, சரஸ்வதி என்ற நதிகளுடன் கருணை

யும், தூதபாவையும் சேருவதால் பஞ்சகங்கை என்ற பெயர் வந்து, மூன்றுலகிலும் பிரசித்தியடைந்து இதில் ஸ்நானஞ் செய்கிறவர்களுக்கு பஞ்சபௌதிகமான சரீரம் நீங்கி திவ்விய சரீரமுண்டாகு மென்பதாகக் கூறப்படுகிறது.

கங்கை:—சத்தியலோகத்தில் பகீரதன் பொருட்டு மகாவிஷ்ணுவின் பாதத்திலிருந்து உற்பத்தியாக பூமியில் வந்து சிவபெருமானால் உக்கிரகம் தணிந்து எல்லா நதிகளுக்கும் சிரேஷ்டமானதாகி ஸ்ரீ காசியின் கீழ்பாகத்தில் உத்திரவாகினியாய்த் திரும்பி, விஸ்வநாதர் அனுக்கிரகம்பெற்று அதிக பரிசுத்தத்தையடைந்து பூர்வவாகினியாய் சென்றதாகக் கூறப்படுகிறது. மேலும் இக்கலியுகத்தில் இதைவிட விசேஷமுடைய தீர்த்தமில்லையென்றே கருதப்படுகிறது. இக்கங்கையின் நதியோரமாக வருணகெட்டம், இராஜகட்டம், மணிகர்ணிகாகட்டம், துர்க்காகட்டம், பஞ்சகங்காகெட்டம், தெசாஸ்வமேதகெட்டம், முனுஷிகெட்டம், கேதாரகட்டம், அனுமகெட்டம், அசிகட்டம் என்பனவாகிய பெயர்களோடு 64 கட்டங்களிருக்கின்றன.

தேவர்களின் மகிமை.

விஸ்வேசம் மாதவம் துண்டிம்,
தண்டபாணிஞ்ச பைரவம்,
வந்தே காசிம் குகாம் கெங்காம்,
பவானீம் மணிகர்ணிகாம்.

என்ற ஸ்லோகப்படி நித்திய யாத்திரை செய்கிறவர்கள் முதலில் ஸ்நானஞ்செய்து விஸ்வநாதரையும் அந்நபூரணியையும் தரிசித்துப் பணிந்து பிந்து மாதவர் சந்நிதிக்குச் சென்று தொழுது, துண்டி விநாயகரை வணங்கி, தண்டபாணியை நமஸ்கரித்து, பயிரவர் சந்நிதியில் வணங்கி வந்தே காசி என்ற விடம் சென்று ஈஸ்வரரைப் பணிந்து, குகையை தரிசித்து, கங்கை என்ற குளத்தில் ஸ்நானஞ் செய்து, பவானி என்ற அம்மனை வணங்கி, மணிகர்ணிகை எஃகிற கட்டத்தில் மாத்தியான ஸ்நானஞ் செய்துக்கொண்டு வீடு சேரவேண்டும். இந்த வரிசைப்படி சென்று திரும்பவேண்டுமென்றால் சுமார் பன்னிரண்டு மைலில் தூரமிருக்கும். காலை ஏழு மணிக்குப் புறப்பட்டால் பகல் ஒரு மணிக்கு வீடு சேரலாம். இந்த கஷ்டத்தை கவனியாமல் நித்திய யாத்திரை செய்கிறவர்களுக்கு கணக்கேயில்லை. சக்தியில்லாதவர்கள் விஸ்வநாதாலயத்திலேயே உள்ளமற்ற தேவதைகளையும் வணங்கிவிட்டுத் திரும்பிவிடுகிறார்கள்.

இப்படி தரிசிக்க விரும்பியவர்கள் முதலில் கங்கையில் ஸ்நானஞ்செய்ய வேண்டிய முறையாதலால் சங்கல்பத்தைக் கூறிவிடுகிறோம்.

ஆரியவர்த்தைகதேசே அவிமுக்த
வாராணசிக்ஷேத்ரே, அசிவர்ண
மத்தியே, மகாஸ்மசானே, ஆநந்த
வனே, கவுரிமுகே, பாகீரதீயாயாம்,
உத்தரவாகினி பஸ்சிமேதீரே, ஸ்ரீ
காசிக்ஷேத்திரே, பவுத்தாயதாரே,
விக்கரமசகே...........சய்வஸ்ரே
என்று சொல்லி மற்றவைகளையும்
சொல்லுகிறார்கள்.

இனி விஸ்வநாதர் ஆலயத்திற்குச் செல்வோம்.

ஸ்ரீ விஸ்வேஸ்வரர்.

ஜோதிலிங்கங்களுக்குள் சிரேஷ்டமானதென்று எண்ணப்படுகிற இந்த விஸ்வேஸ்வரலிங்கம் பிரம்ம விஷ்ணுவாதிகளை இரக்ஷிக்கும் நிமித்தமாகத் தோன்றி மோக்ஷ லக்ஷ்மிக்கு வாசஸ்தானமாகிய திவ்விய விமானத்திலிருக்கின்றது. ஆகையால் இந்த க்ஷேத்திரம் திரிலோகத்திற்கும் சிவராஜதானி என்னும் பெயர் பெற்று வழங்குகிறது. பூஜிக்கின்றவர்களும், பரிசிக்கின்றவர்களும், தெரிசிக்கின்றவர்களும் சகல பாவங்களினின்றும் நீங்கி துக்க ரூபமாகிய வீட்டையடைவார்களென்றும், விஸ்வேஸ்வரருடைய விமானத்

தையும், ஸ்வர்ண கோபுரத்தையும், கலசத்தையும், ரிஷபக்கொடியையும் தரிசித்தவர்கள் மகாபாவங்களிலிருந்து நீங்கி விஸ்வேஸ்வரருடைய பிரசாதத்திற்கு பாத்தியஸ்தர்களாகிறார்களென்றும் காசி காண்டத்தில் கூறியிருக்கின்றது.

இந்த ஆலயத்திற்கு மணிகர்ணிகா கட்டத்திலிருந்தும், தெசாஸ்வமேத கட்டத்திலிருந்தும் செல்லுகிறவர்களுக்கு சமீபம். இரண்டு கோபுரங்கள் பசும் பொன் தகடுகளால் செய்யப்பட்டும், ஒன்று சாதாரண காரையினால் செய்யப்பட்டும், தென் தேச ஆலயங்களின் கோபுர மாதிரியின்றி வாழைப்பூ ரூபமான சிகரங்களோடும், அவைகளின்பேரில் ரிஷபக்கொடியோடும் ரமணீயமாய் வழங்கப்பட்ட ஒரு சிறிய சதுரமான கோவில். இதற்கு அர்த்த மண்டபம், சபாமண்டபம், கர்ப்பகிரகம் போன்றவைகளில்லை. ஆலயத்தை சுற்றி திண்ணைகளிருக்கின்றன. நான்கு மூலைகளிலும், விநாயகர், பார்வதி, கங்கை, தண்டபாணி விக்கிரங்களும், அநேக சிவலிங்கங்களும் காணப்படுவதுடன், பலர் தங்கள் தங்களுக்கிஷ்டமான புஸ்தகங்களை வைத்துக் கொண்டு பாராயணம் செய்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் திண்ணைகளுக்கு மத்தியில் தான் மூன்று கோபுரங்களோடு கூடிய விமானம். மத்திய கோபுரத்திற்கு கீழ் ஒரு பெரிய சிவலிங்கமும் இடதுபுறத்திலுள்ள சாதாரண கோபுரத்தின்கீழ், விஸ்வேசர், மாதவர், துண்டி விநாயகர், தண்டபாணி, பைரவர் விக்ரகங்களிருக்கின்றன. வலது புறத்திலுள்ள ஸ்வர்ண கோபுரத்தினடியில் தான் விஸ்வேஸ்வரலிங்கம் பத்தடி சதுரசுற்றளவுள்ள தொட்டிக்கு வெள்ளித்தகடு அடிக்கப்பட்டு நடுவில் சுமார் ஒன்றரையடி உயரமுள்ளதாக வழங்குகிறது. இச்சிறிய அறைக்கு நான்கு புறத்திலும் கதவுகளிருக்கின்றன. சதாஜனங்கள் ஒருவர்மேல் ஒருவர் விழுந்துக் கொண்டு வந்து லிங்கத்தின்பேரில் கங்கா தீர்த்தத்தை அபிஷேகம் செய்து புஷ்பம் அக்ஷதை வில்வாதிகளையும், அர்ச்சித்து, பழம், பைசா முதலியவைகளை மேற்படி தொட்டியில் போட்டு வணங்கி, தமது சிரசை லிங்கத்தில் மோதிப்பரிசித்து, அபிஷேக தீர்த்தத்தை எடுத்து கண்களில் ஒத்திக்கொண்டு திரும்புகிறார்கள். இப்படி பூஜை செய்யப்படும் வில்வ புஷ்பாதிகளை பிரகாரத்திலிருக்கும் விருஷபங்கள் தின்று தீர்க்கின்றன. யாத்திரைக்காரர்கள் பூஜையின் பொருட்டாகக் கொண்டுவரப்பட்ட அக்ஷதை (அரிசி)க்காக ஒருதுணியை முன்புறத்தில் விரித்துக் கொண்டு உட்கார்ந்து காத்துக்கொண்டிருக்கிற பலருக்கு, ஒவ்வொருவரும் இரண்ட க்ஷதை போடுவதால் பகல் 12-மணிக்குள்ளாக அநேகருக்கு நான்கு ஐந்து படிவிகிதம் அரிசி சேருவதென்றால், எவ்வளவு ஜனங்கள் தரிசனத்திற்காக வருகிறார்களென்பது ஒருவாறு விளங்கலாம். ஆலயத்தின் முன்புறத்தில், வெள்ளைக் கற்களால் பாவப்பட்ட தரையின்மேல் வெள்ளி ரூபாய்களைப் பதித்திருக்கிறார்கள். ஒரு அரசரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கமொன்று பொன் தகட்டினால் செய்யப்பட்ட ஒரு சிறிய கோபுரத்தோடுகூடிய ஆலயத்திற்குள் விளங்குகிறது.

இவைகளைப் பார்த்துக்கொண்டு பின்புறமாகச் சென்றால் ஞானவாவியையும் ஒரு மண்டபத்தையும் அதில் ஒரு சிலா ரூபமான பெரிய நந்தியையும் அதற்கு அடுத்தாற்போல் அவுரங்கசீப் என்ற துலுக்க அரசனால் கட்டப்பட்ட உயரமான ஸ்தூபிகளோடுகூடிய பெரிய கோரியையும் காணலாம். விஸ்வேசராலயத்தில் பண்டா என்பதாக ஒருவர் சதா லிங்கத்திற்கு சமீபத்திலுட்கார்ந்துக் கொண்டு யாத்திரைக்காரர்கள் போடுகிற பைசா, பழம் முதலியவைகளை எடுத்துக்கொண்டு, அதிகமாக பைசா போட்டவர்கள் கழுத்தில் ஒரு

புஷ்பமாலையணிவார். இவர்களுக்கு இதைவிட வேலையில்லை. கிரமப்படி அபிஷேகதீபாராதனை முதலியவைகள் செய்யவேண்டுமானால் இவர்களுக்கு ஏதாவது கொடுத்தால் கூட்டத்தைத்தடுத்து சற்று சாவகாசமுண்டாக்குவார்கள். இவர்களுக்கு தினத்திற்கு கால் அணா அரை அணாவாகவே 30,—40, ரூபாய் வரையில் சேரும். இந்த குடும்பத்தார் விசேஷதனிகர்கள் என்பதாகவே கேள்வி.

ஞானவாவி ஒரு பெரிய கிணறு. இதன் தீர்த்தத்தை ஒரு பண்டா எடுத்துவைத்துக்கொண்டு ஜனங்களுக்கு கொடுக்கிறார். இவருக்கு வேண்டிய வரையில் பணம் சேருகிறது. இதற்கு சமீபத்தில் பலசாதுக்கள் எப்பொழுதுமிருக்கிறார்கள்.

ஸ்ரீ அன்னபூரணி மகிமை.

இவர் தர்மார்த்த மோக்ஷத்தைக் கொடுப்பதன்றி ஞானவைராக்கியத்தை யுண்டாக்கியும் பக்தர்கள் பசிநோயால் வருந்தாமல் தன் கையிலுள்ள காண்டியால் சதா அன்னத்தைக் கொடுத்துக் கொண்டேயிருக்கப்பட்டவர். தவிர விஸ்வேசர் கருத்தின்படி மோக்ஷசாம்பிராஜ்யத்தை பிக்ஷையாகக் கொடுக்கிறவரென்பதாகவும் தெரியவருகிறது. இந்த ஆலயம் விஸ்வேசர் ஆலயத்திற்கு சமீபத்திலிருக்கிறது. எவ்விதத்திலும் விஸ்வேசர் ஆலயத்தை யொத்திருந்தபோதிலும் ஒரே கோபுரத்தையுடையது. இதிலும் அநேக புண்ணியவான்கள் எப்பொழுதும் சில புஸ்தகங்களை வைத்துப் பாராயணஞ்செய்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்விடத்திலும் மாடுகள் கன்றுகளுடன் பூஜைசெய்யப்படுகின்ற பில்வபத்திரங்களை தின்றுக்கொண்டிருக்கின்றன. இந்த பிரகாரத்தில் ஏகசக்கரத்தோடு ஏழு குதிரைகள் பூட்டப்பட்ட ரதத்தில் ஏறிக்கொண்டு அருணன் சாரத்தியம் செய்ய அதிக வேகமாகச்செல்லும் சூரியனுடைய விக்கிரகத்தைக் காணலாம். இது வெகு சுந்தரமாயிருக்கின்றது. இந்த அன்னபூரணி சந்நிதியில் எப்பொழுதும் சில மயில்களும் புறக்களும் ஆடிப்பாடிக் கொண்டிருப்பதைப் பார்க்க வெகு விநோதமாயிருக்கின்றது. தவிர இந்தப் பிரகாரத்தில் கணபதி, அநுமார், கவுரிசங்கர் என்ற சந்நதிகளுமிருக்கின்றன.

பிந்துமாதவர் மகிமை.

காசிவாசிகளை இரக்ஷிப்பவர். இவரை தரிசித்தால் மோக்ஷ சாதகமுண்டாகுமென்பதாம். இந்த ஆலயம் மணிகர்ணிகை கட்டத்திற்கு சமீபத்தில் ஒரு சிறிய மெத்தை வீட்டின் பேரிலிருக்கிறது. இதற்கு சமீபத்தில் ஒரு வடவிருக்ஷமும் அவுரங்கசீப் கட்டிய பெரிய கோரியும் காணப்படுகிறது.

துண்டிவிநாயகர் மகிமை.

இவர் சகல விக்கினங்களையும், பாவங்களையும் நீக்கி சகல போகங்களையும் கொடுப்பவர். இந்த ஆலயம் ஒருசந்தின் ஓரத்தில் வழிமேலிருக்கிறது. ஒருபெரிய பாறையில் அழகிய ரூபமாக செய்யப்படாத உருவம். இந்த விநாயகரை பாதையிலிருந்தே தரிசித்து வணங்கவேண்டியதே.

தண்டபாணி மகிமை.

இவர் காசியில் மரணமாகிறவர்களுக்கு யமவாதனையின்றிக் காக்கப்பட்டவர். விஸ்வேசர் தாரகமந்திரத்தை ஆன்மாக்களுக்கு உபதேசிக்கையில் இவர் திவ்வியசரீரத்தைக் கொடுக்கப்பட்டவர். இந்த ஆலயம் சற்று தூரமானவிடத்தில் அதிக சிறியதாக வழங்குகிறது.

காலபயிரவர் மகிமை.

இவர் வழிப்படுகிறவர்களுடைய பாவங்களைப் போக்கி ஞானத்தைக் கொடுத்து ஆசாபாசங்களைப் போக்கி யமவாதனையினின்றும் காப்பவர். இது தண்டபாணி ஆலயத்திற்கு சமீபத்திலேயே இருக்கின்றது. இதுவும் ஒரு

சதுரமான சிறிய கட்டடம். சந்நதியிலும் சுற்றுப்பிரகார திண்ணையிலும் காவி வஸ்திரத்தோடுகூடிய சிலர் உட்கார்ந்துக்கொண்டு தரிசனத்திற்கு வருகிறவர்களிடத்தில் காலணா வீதம் பெற்றுக் கொண்டு மயில் இறகினால் செய்யப்பட்ட தண்டத்தினாலடித்து, காலபயிரவர் தாரம் என்றகயிற்றை கையில் கட்டியனுப்புகிறார்கள். காசியில் தண்டம், பிரயாகையில் முண்டம், கயாவில் பிண்டம் என்று சொல்லுகிற பழமொழியில் முதலாவதாகக் கூறிய தண்டம் இக்காலபயிரவர் சந்நதியில் தண்டத்தினால் அடிபடுவதே இந்த சந்நதியிலிப்படி அடிப்பட்டவர்களுக்கு யமவாதனையில்லை என்பது ஐதீகம்.

இதர தேவர்கள்.

மேற்சொன்ன சந்நதிகளைத் தவிர விசாலாக்ஷி கோவில், கேதாரேஸ்வரர் கோவில், அமிர்தேசர் கோவில், சநீஸ்வரர் சந்நதி, தாரகேஸ்வரர் கோவில் முதலிய பல கோவில்களும், லிங்ககங்ளும், சந்நதிகளும் முக்கியமானவைகளே. தவிர கவுடிபாய் கோவில் என்பதாக ஒரு மூலையில் ஒரு சிறிய கோவில் இருக்கிறது. இதற்குப் போகிறவர்கள் கவுடி என்கிற பலகரைகளை வாங்கிக்கொண்டுபோய் தினத்திற்கு ஒன்று வீதம் காசியிலிருக்கப்பட்ட தினங்களுக்கு இவ்வளவென்று போட்டுவிட்டு வருகிறார்கள். அன்றியும் சாக்ஷிவிநாயகர் கோவில் என்பதாக கேதாரேஸ்வர கட்டடத்திற்கு சமீபத்திலிருக்கிறது. இவரை அவசியம் தரிசிக்கவேண்டியதென்று சொல்லுகிறார்கள். இப்படி இந்த க்ஷேத்திரத்திலுள்ள கோவில்களுக்கும் லிங்கங்களுக்கும் கணக்கு சொல்லிமுடியாது.

யாத்திரையின் மகிமை.

நித்திய யாத்திரை, வாரயத்திரை, திதியாத்திரை, வாசயாத்திரை, நக்ஷத்திர யாத்திரை, பஞ்சக்கோசயாத்திரை என்பதாக யாத்திரைக்காரர்கள் தங்கள் தங்கள் சக்திக்குத் தகுந்தபடி செய்கிறார்கள். இப்படி யாத்திரை செய்து பல லிங்கங்களை தர்சித்து ஸ்ரீ காசியைப் பிரதக்ஷணஞ் செய்தால் மூன்று லோகத்தையும் பிரதக்ஷணஞ்செய்த பலனைக்கொடுத்து சகல பாவங்களும பரிகாரமாகுமென்று கூறுகிறார்கள். இப்படி யாத்திரை செய்கிறவர்களின் சங்கை கொஞ்சமல்ல.

நகரம்.

வடக்கேயிருந்து தென்கிழக்காகச் செல்லுகிற கங்காநதியானது இந்தஸ்தலத்தில் தெற்கேயிருந்து வடக்கே செல்வதில் வருணா என்ற நதியும், அசி என்ற நதியும், மேற்கு திசையிலிருந்து பாய்ந்து கங்கையில் கலக்கவே மத்தியமப் பிரதேசமாகிய அசிக்கும் வருணைக்கும் இடையிலுள்ள சுமார் 30 சதுர மைல் விஸ்தீரணமுள்ள இடமே வாராணசி என்று சொல்லப்படுகிறது. கங்காநதிக்கு மேற்குக்கரையே பட்டணம். சுமார் நதியோரமாக ஆறு மையில் தூரம், சிந்தியா, ஹைதராபாத், நாகப்பூர், நேப்பால், ஹோல்கார், விஜயநகரம் முதலிய இராஜாக்களும் பல பிரபுக்களும் கோடிக்கணக்காக பொன்களை வாரியிறைத்து ஸ்நாநஞ் செய்கிறவர்களுக்கு அநுகூலமாக படிக்கட்டுகளையும், மண்டபங்களையும், சத்திரங்களையும், பல சிவாலயங்களையும், விசாலமான வீடுகளையும், பலமான அஸ்திவாரங்கள் போட்டு நான்கு, ஐந்து அடுக்கு மெத்தைகள் வைத்துக் கட்டியிருக்கிறார்கள். ஒவ்வொரு கட்டடமும் பார்வைக்கு கோட்டைகள்போலவே காணப்படுகின்றன. இதில் மணிகர்ணிகா கட்டமும், தசாஸ்வமேத கட்டமும் அதிக பெரியவை. இவைகளில் ஜனங்கள் எப்பொழுதும் நிறைந்தேயிருக்கிறார்கள். பஞ்ச கவுடர்களாகிய பிராமணர்களும், கங்காபுத்திரர்களும், டாணியர், காட்டியர் என்றவர்களும் சந்தனம், விபூதி, புஷ்பம் முதலியவைகளை கையில் வைத்துக்கொண்டு ஸ்நானஞ் செய்ய வருகிறவர்களுக்கு சங்கல்பம் சொல்லிவைக்கிறார்கள். இதற்காகவே கங்கைக்கரையோரத்தில் பலகைகள் கட்டியும், குடைகளை வைத்துக்கொண்டு, உட்கார்ந்திருக்கிறார்கள். தசாஸ்வமேத கட்டத்திற்கு சமீபத்தில், காலையில், தினப்படி இலை, காய், கிழங்கு, கீரை, பழம் முதலியவைகள் கொண்டுவந்து ஏதேஷ்டமாக விற்கப்படுகிறது. கேதாரேஸ்வராலயத்திலிருந்து விஸ்வநாதராலயத்திற்குச் செல்லும் சந்தும், இங்கிருந்து அரிச்சந்திர பஜார் அல்லது சவுக்குக்கு செல்லும் சந்தும், மற்ற பலசந்துகளும் நாநாவித தானிய தவசங்களையும் ருத்திராக்ஷம், பாத்திரம், லிங்கம், பட்டு பீதாம்பரம், தாவணி, பரணி முதலியவைகளை விற்கப்படுகிற கடைகளாகவே யிருக்கின்றன. கங்கைநதியோரமாக அநேகமாய் சந்துகளே

யாயினும் தசாஸ்வமேத கட்டத்திலிருந்து பல இடங்களுக்கு வண்டிகள் செல்லக்கூடிய பெரிய தெருக்களுமிருக்கின்றன. பல புண்ணியவான்கள் அங்கங்கே பிரமாண்டமான வீடுகளை கட்டிக்கொண்டு சுகமாக வசிக்கிறார்கள். துர்கா காட், மணிகர்ணிகா காட் முதலிய சில காட்டுக்களுக்கு மேல்பக்கத்தில் செல்லும் சந்துக்களிலும் ராஜ பஜார் தெருவிலும் அநேக சாவுகார்களுடைய வீடுகள் ஆறடுக்கு, ஏழடுக்கு மெத்தைகளுள்ளனவாய்க் காணப்படுகின்றன.

பழைய தங்கச்சாலை என்ற பெரிய கட்டடத்தில் ஹென்றி காரிதக்கர் என்ற கமீஷனருடைய உருவப்படம் வைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு வடபுறத்தில் நந்தேசுவரகோட்டி என்று ஒரு கட்டடமுண்டு. டேவிஸ் என்ற ஜட்ஜி வைஜர் அலிசேனைகளைத் தாக்கியவிடமென்று சொல்லப்படுகிறது.

மகாராணி காலேஜ்.

குவீன்ஸ் காலேஜ் என்ற கட்டடம் 1847-௵ கட்டத்தொடங்கி 1853-௵ முடிவுபெற்றது. இதற்கு சுமார் இலக்ஷத்தி ஐம்பதினாயிரம் ரூபாய் செலவிடப்பட்டதாம். கட்டடம்முழுவதும் சூனார்கற்களால் கட்டப்பட்டு அக்கற்களின்பேரில் பலவிடங்களில் நாகர எழுத்துகளால் வேதப்பிரமாணங்களை செதுக்கப்பட்டிருப்பதுடன் மத்தியில் ஒரு பெரியஹாலையுடையதாய் பட்டணத்திற்கு ஒரு அலங்காரமாய் விளங்குகிறது. இதில் கலாசாலையின் தலைமை வகித்தவர்களாகிய டாக்டர் பாலன்டைன் (Dr. Balantine), மிஸ்டர் டன்கின் (Mr. Dunkin), (Major Kito) என்பவர்களுடைய உருவப்படங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்துக்களுடையவும் மற்றதேசத்தாருடையவும் உபயோகத்திற்காக இதில் ஆங்கிலபாஷையையன்றி அரபி, சமஸ்கிருதம், பார்சி முதலிய பாஷைகளும் கற்பிக்கப்படுகின்றன. கட்டடத்தை சுற்றிலில் வைக்கப்பட்ட சிங்காரத்தோட்டமும் அதிலுள்ள ஒருகுளமும் உண்டு. இதற்கு வடபுறத்திலுள்ள ஜேம்ஸ் தாமஸ் (James Thomas) என்பவர் நாட்டிய கல் ஸ்தம்பமும் 1853-௵த்தில் காஜிப்பூரில் கண்டெடுக்கப்பட்டதாம்.

THE BOYHOOD OF GREAT MEN OF THE WEST.—I. HORATIO NELSON:

(The Hero of Trafalgar: 21st October, 1805.)

மேற்றிசை மேதையோர் பாலிய சரிதை.

1. ஹோரேஷியோ நெல்சன்.

மின்னுமேற்றிசை மேதையோர் பாலிய
நன்னயச் சரிதந்தனை நற்றமிழ்ச்
சொன்னயம் பெறச்சொற்றிட வசனமாய்
மன்னருட் கலைமாமகள் காப்பரோ.

ஆழிசூழ் ஆங்கிலேய தேயத்து கப்பற்போர் வீரர்களில் ஒப்பற்றவராகிய நெல்சன் என்பவரைப் பற்றிய பால்ய சரிதையைச் சிறிது விவரிப்பாம். எண்டிசையும் நல்லிசை நாட்டிய இவர் தன் தேச அபிமானத்தை முன்னிட்டு அது பிரகாசித்து உன்னத நிலைமையடைய மெய்வருந்தி இளமை முதல் உழைத்து வந்தார். தன் பெயரைக் கேட்கையிலேயே பகைவர் படை கலங்கவும் நாட்டார் தன் நாமத்தை நயம்பட விசைக்கவும் இன்னும் இத்தகைய புகழடைவதற்குரியவர் இவரே என சொல்லும் அறிகுறிகள் இவர் குழவிப் பருவத்தே துலங்கி விளங்கிற்று. பிறரையடுத்து அவருடைய கருணையும், நன்குமதிப்பும், தனக்கெப்போது வாய்க்குமோவெனக் காத்திருந்து முன்னுக்கு வர வேண்டுமென வெண்ணம் உதிக்கப் பெறாதவனாகி தன் சொந்த முயற்சியால் தன் தேசத்திற்கும், தேசாதிபனுக்கும், செய்யவேண்டிய கடமைகளை உணர்ந்தவனாய் ஊக்கத்தோடும், மனவெழுச்சியோடும், உழைத்து உன்னத பதவியடைந்தான். இத்தகையப் பெருமிதத் தோற்றங்கள் இவரிடம் சிறந்து விளங்கினமையின் ஆங்கில நாட்டார் இவரைப்பற்றிச் சிந்திக்கும் தோறும் இவருடைய தேசாபிமானத்தையும் யுத்தகளத்தில் உயிர் துறக்குமளவும் இவர் காட்டிய வியக்கத்தக்க வீரத்தன்மையைப் பற்றியும் பலவாராய்ப் புகழ்ந்து கொண்டாடி இன்றளவும் களிப்புறு வண்ணமாயிருக்கின்றனர்.

1758-௵ செப்டம்பர்௴ 29-ம்தேதி நார்போல்க் (Norfolk) மாகாணத்தின்கண் உள்ள பரண்ஹாம தோர்ப்' (Purnham Thorpe), என்ற ஊரில் பிறந்தார். இங்ஙனே இவருடைய தகப்பனார் ஓர் தேவாலய மடாதிபத்தியத்தை வகித்து உஜ்ஜீவித்து வந்தார். 'சக்லிங்' (Suckling) என்ற சிறப்புப் பெயர்வாய்ந்த இவருடைய தாயார் ஆங்கில நாட்டு அமாத்தியருள் அதிக வல்லவரான 'ஸர் ராபர்ட் வால்போல்' (Sir Robert Walpole) என்பவரின் மூத்த சகோதரியின் மருமகளாதலின் உயர்குடிப் பிறப்பின் மாட்சிமையடையப் பெற்றவள் மதலைப்பருவத்தே மன உறுதியும், ஊக்கமும் இயற்கையாய் அமையப் பெற்றிருந்தனனென இவரைப் பற்றி ஒருசிறு கதையுண்டு. சிறு பாலகனான நெல்சன் ஒருநாள் விளையாடிக்கொண்டிருக்கையில் வீட்டை விட்டு வெகுதூரம் வெளியே திரிந்து ஓரிடையனைப் பின்பற்றிச் சென்று அவனோடு பட்சிகள் கூண்டைக் கண்டு பிடிக்க வெண்ணங்கொண்டான். அமுதுண்ணும் சமயத்திற்கு குழந்தை வரக்காணோமே என்ற ஏக்கங்கொண்ட பெற்றோர்கள் நாடோடிகள் எவரேனும் தம் அருமைப்புதல்வனை இட்டுக்கொண்டு போய் விட்டார்களோவென ஐயமுற்று அசைவற்ற பாவைபோல் நின்று மனக்கலக்க மெய்தினர். அக்கணமே இல்லத்தைத்துறந்து புறம்போந்து தேடிக்கொண்டு வருமளவில் "நீலநதிச்சூரன் நெல்சன்" (Hero of the Nile) எனப் பெயர் பெற்று விளங்கப்போவோனாகிய தங்கள் சேயைக் கண்ணுற்ற சமயம் குறுகிட்டோடும் சிற்றூற்றை எவ்வாறு கடக்கலாமென்று ஆலோசனையில் ஆழ்ந்தவனாய் அமர்ந்திருந்தனன். மனையை வந்தடைந்ததும், இவனுடைய பாட்டியார் பார்த்து "குழந்தாய்! பசியும் அச்சமும் மேலிட்டு வீட்டுக்கு வரவேண்டுமென்ற வெண்ணம் உதிக்கவில்லையோ" வெனக் கேட்டதற்கு 'அச்சமென்ற பதத்தையே நான் கேட்டறியேன் அஃதென்னவெனச் சொல்' என்று விடை பகர்ந்தான். இத்தகைய சொல்லில் வல்லவனையும், அஞ்சாதவனுமாகியவனை வெல்லல் யார்க்குமரிது என்பதை நாயனாரும் "சொல்வல்லன் சோர்விலனஞ் சானவனை இகல் வெல்லல் யார்க்குமரிது" என்று கூறியதையும் காண்க. 'விளையும் பயிர் முளையிலே' என்றபடி பிற்காலம் பிரசித்தமான வெம்போர்களில் ஜயசீலனாய் விளங்க சுத்தவீரனுக்குரிய இலட்சணங்கள் இவனிடம் சிறுபாலகனாகவிருக்கையிலேயே இயற்கையாய் அமரப்பெற்றான். ஒன்பது வயது நிரம்பவும் இவனுடைய தாயார் உயிர்துறந்தாள். அப்போது இக்குடும்பத்திற்கு நேரிட்ட துன்பத்தை ஒருவாறாற்றக்கருதி இராஜாங்கக் கப்பற்படையில் (Royal Navy) சேர்ந்து தக்க உத்தியோகத்திலமர்ந்திருக்கும் இவனுடைய தாய் மாமன் 'சக்லிங்' (Suckling) என்பவர் இங்கு விஜயஞ் செய்தகாலத்து பிள்ளைகளில் யாவரேனும் ஒருவனை தம்மால் விடுக்க நெல்சனுடைய தகப்பனாரை வேண்டிக்கொண்டனர். குழந்தை நெல்சன் கடல் யாத்திரை செய்யவும், போர் கப்பல்களில் ஏதேனும் ஒரு வேலையில் அமர்த்தவும் தக்க தேகவலிமை வாய்ந்தவனல்லனென கண்ணுற்று அவனை தன்னோடு இட்டுக்கொண்டுபோக மனமில்லையென அவனுடைய தாய் மாமன் பகர்ந்தான். இப்பாலகனோ ஒரு சிறு படகு ஒன்றைச் செய்துகொண்டு தன் மாமன் ஏறிச் செல்லும் கப்பலின் பெயரை அதற்கமைத்து தகப்பனார் மடத்தினருகாமையிலுள்ள தடாகத்தின்மீது செலுத்தி விளையாடி தான் கற்ற அல்லது கேள்வியுற்ற கப்பற்போர்களைக் குறித்துச் சிந்தித்துத் தானும் இவ்வாறு கப்பற்போர் வீரனென பெயர் படைத்து புகழ் பெறுவதெக்காலமோவென ஏக்கங்கொண்டிருந்தான். நெல்சனும் அவனுடைய சகோதரன் உவில்லியமும் தம் மாகாணத்திற்குச் சேர்ந்த 'வடவால்ஷம்' (North Walsham) என்னும் ஊரிலுள்ள ஓர் கல்லூரியில் கற்கச் சென்றார்கள். இங்ஙனே நெல்சன் தோழர்கள் தன் வன்னெஞ்சத்தையும், வீரத்தன்மையும் கண்டு பிரமிக்கும்வண்

ணம் சில சாகசச் செயல்களைச் செய்தான். ஆசான் தோட்டத்தில் பையன்கள் கண்ணைக் கவர்ந்து வாயில் தண்ணீர் ஊறும்படியாக ஒரு செடியில் பேரிக்காய்கள் பழுத்துத் தொங்கிக் கொண்டிருந்தன. மாணவர்கள் அவற்றைப் பறித்துக் களிப்பாற உண்ண தங்களுக்குரிமை யுண்டென வகித்து எவ்வகையேனும் அவ்வாறு செய்யத் துணிந்தார்கள். ஆனால், அது இருந்த இடமோ தங்களில் எத்தகைய சூரனும் துணிவொடுசென்று பறிக்கக்கூடாத அவ்வளவு அபாயகரமாகவிருந்தது. அச்சமென்பதைச் சிறிது மறியாதவன்னெஞ்சம் படைத்த நெல்சன ஆசான் அகத்திலுள்ள ஒரு அறையின் பல கணியினின்று இரவில் கயிற்றைக் கட்டியிறங்கி கை கொண்டளவு பறித்துக் கட்டிக்கொண்டு தன் தோழர்கள் தன்னை மேலே யிழுக்கச் சடுதியில் வெளியேறி அவற்றையெல்லாம் அங்கு கூடியிராநின்ற தன கூட்டாளிகளுக்கு பங்கிட்டுவிட்டு தான் அதில் ஒனறேனும அங்கீகரித்துக் கொள்ளவில்லை. மற்றப் பிள்ளைகள் இதனைக்கண்டு வியப்புற்று இற்கையில் பெருந்தகை நெல்சன் அவர்களை நோக்கி உங்களால் முடியாதென்று எட்டாப்பழத்திற்குக் கொட்டாவிவிட்டு மரத்தை அண்ணாந்த வண்ணமாயிருந்தமைபற்றி இதை எவ்வாறேனும் செய்து முடித்து உங்களை திருப்தி செய்யவேண்டுமென அவா மேவிட்டுச் செய்தேனே ஒழிய இக்காரியம் நன்றெனக்கருதி இயற்றினவனல்லனென உதட்டை மடித்து முகஞ்சுளித்து முறுவல் செய்தோதினன். இவற்றால் பெருமையுடையோர் அருமையுடைய செயல்களைச் செய்வர் என்பதை விளக்கிக் காட்டினர். இக்கருத்தை நாயனாரும் தம் திருக்குறளில்,

"பெருமை யுடையவ ராற்றுவா ராற்றி
னருமை யுடைய செயல்"

என்று கூறியிருத்தலையும் காண்க.

கிருஸ்தவப் பண்டிகை விடுமுறை நாட்களைக்கழிக்க தங்கள் தகப்பனாரோடு ஊரில் சில நாட்தங்கி இருந்து மறுபடியும் பள்ளிக்கு குதிரையின்மீதேறிக்கொண்டு நெல்சனும அவன் சகோதிரன் உவில்லியமும் புறப்பட்டுப் போகையில் பாட்டையிற் பனி படர்ந்திருந்ததை உவில்யம் கண்டு கடக்க முடியாதென்று உன்னி நெல்சனை நோக்கி முன்னேக்கிச் செல்வது முற்றிலும் அபாயமெனவும் இல்லத்தை யடைவது நலமெனவும் நவின்றனன். மனையை வந்தடைந்த செய்தி கேள்வியுற்ற அவர்கள் தந்தை ஐயமுற்று தம் மைந்தர்களை மறுபடியும் ஒருமுறை புறப்பட்டுப் போய் பார்த்து பாட்டை கடக்க முடியா அவ்வளவு கெட்ட நிலைமையில் இருந்தால் போகாமல் திரும்பி வந்துவிடலாமென்று சொன்னார். இவ்விஷயத்தில் உங்கள் சொன்னையத்தையும், மனச்சாட்சியையுமே அத்தாட்சியாகக் கொள்வேனென வற்புறுத்திக் கூறியனுப்பினர். இருவரும் இன்னொரு முறை விசைவாசத் தம துரகங்களின்மீது ஏறிச் செல்லுகையில் பனி படர்ந்த பாதையை மறுபடியும் பார்த்து திரும்பிப் போவோம் வா என்று உவில்யம் கேட்க அஞ்சா நெஞ்சமுடைய நெல்சன் நகை முகங்கொண்டு "நன்று, நன்று, நம்மை நம்பி நம் தந்தை அறைந்ததை நீ யறியாயோ. இயன்றளவு முயன்றுச் செல்வதே தகுதி" யெனத் துணிந்து கடக்கவே தங்கள் உறைவிடம் க்ஷேமமாய் வந்தடைந்தார்கள். இவற்றால் தொழில் முயல்பவன் எவ்வகை இடுக்கணுறினும் மனங்கலங்காது அதனை முடித்தலால் உண்டாகும் மனவெழுச்சியைத் தான் தலையாக்கொளவன் என விளங்கிற்று, இக்கருத்தை நாயனாரும்,

"இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில்"

என்று விளம்பியுளர். பாடசாலை விடுமுறைக்காக இன்னொருமுறை மூடப்படவே

சகோதிரர்கள் இருவரும் 'பர்ன்ஹாம் தோர்ப்' என்ற தம் பதியை நாடிச்சென்றார்கள். அக்காலத்தில் தங்கள் தந்தை தன் தேகக்கூறு வேறுபாடடைந்து வருவதை ஒருவாறுற்றுக் கருதி ஊரைவிட்டு 'பாத்' (Bath) என்ற ஓர் உத்தமமான ஆரோக்கிய பதியையடைந்து அங்ஙனே இயற்கையாய் இளவேனிற்காலத்தில் வீசும் சுத்தமான காற்றை உட்கொள்ள உவகை பூத்தார். ஒரு நாள் சமாசாரபத்திரிகை ஒன்றில் எட்டெட்டு பீரங்கிகள் ஏற்றப்பட்டு மின்றொளிரும் 'இரோஜினபிள்' (Raisonable) என்ற ஓரருமை மரக்கலாதிபத்தை யடைந்தன னென அறிந்து Horatio Nelson தன் தமையனை நோக்கி தனக்குக் கடல்யாத்திரை செய்ய மாமனோடு போவதற்கு தகப்பனருக்கு எழுதி எவ்வாறுவது அனுமதி வாங்கித் தரவேண்டுமென வெகுவாய் மன்றாடிக்கேட்கவே அவனும் அதற்கிசைந்து 'பாத்' என்னும் ஊரிலுள்ள தங்கள் பிதாவுக்கு பத்திரகை ஒன்றை வரைந்தான். தன் மைந்தனின மன உறுதியையும், தீவிர வைராக்கியத்தையுமுணர்ந்த அவன் தகப்பனர் எவ்வகை அலுவலில் அமரவேண்டுமென அவனுக்கு அவாவிருந்தபோதிலும் அதினிலேற்றம் பெறவாற்றலடையச் செய்யவேண்டுமென விருப்புற்றனர் என்றாலும் இச்சாகர சாகஸத் தொழிலை மேற்கொள்ள கொண்ட கொள்கை மதலைப் பருவத்து மடமைத்தனமென மதித்தார். தன உயிர்த்தோழியின் சகோதிரனான 'சக்லிங்' என்பவரும் வேலையின்கண் வெம்போர்புரிய மெல்லிய மெய்பூண்ட நெல்சனாலாகாதென முன்னமே சொலலியுளார். பெருந்தன்மையும், ஆராய்ச்சியுமுள்ள பாலகன் நெல்சனோ அவ்வாரதிபிலேயே தன் வாணாளைக் கழித்துப் புகழ்படைத்து பலபோரிய இராஜாங்க பத்திரிகையிற் தன் பெயர் பிரசுரிக்கப்பட்டு பொலி உற்றுவிளங்க உழலவேண்டுமென உன்னியிருந்தனன். அவனவன் விருப்பத்தின்படியே விட்டு விடுவது தகுதியென தீர்மானங்கொண்டு அவன் தகப்பனார் கப்பற் போற்றொழிலைக் கற்றுவர 'சக்லிங்' என்பவரிடம் சேர்ப்பிக்க விருப்புற்று இருளும், குளிரும் கவிந்த வசந்தகாலத்தன்று ஒரு வேவுகாரனை விளித்து "வடவால்ஷம்" பாடசாலையிற் படித்துவரும் பால்ய நெல்சனை இட்டுக்கொண்டு 'மெதவே' (Medway) துறைமுகத்தில் உள்ள மரக்கலத்திலமர்த்தி விட்டு வர ஏவினர். தன் உடன்பிறந்தானும், விளையாட்டுத் தோழனுமான உவில்யம் என்பானையும், கல்விக்கழகத்துக் கூட்டாளிகளையும் விட்டுப் பிரிய காலங்கிட்டிற்றேயென விசனமுற்று, கண்களிற் கண்ணீர் ததும்ப அவர்களிடம் விடைபெற்று வந்தவகை கன்னெஞ்சனும் கண்டு உருகத்தக்கதாக விருந்தது. நட்பைப்போல் சம்பாதித்தற்கரிய பொருள் உலகத்தில் எவை உளதென விளக்க நாயனாரும்,

"செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு."

என்றும், அதினும் இளமைப் பருவத்தில் இளைஞர்கள் களங்கமின்றி உள்ளன்போடு உண்மையாய் உவந்து கூடும் நட்பைப்போல் முதுமைப் பருவத்து பொச்சாப்பு, பொறாமை பெருமோசம் என்ற தீக்குணங்கள் குடிகொண்டு ஜீவகாருண்ணிய மென்றகக்ஷீரம் வற்றிய காலத்து ஒருவரோடுவர் செய்து கொள்ளும் நட்பு மனதில் வேரூன்றாமல் சீர்கெட்டுச் சிதையுமென்பது தெற்றென விளங்கும். இளமையின் நட்பு மரத்திற்பூத்த பூவைப் போல முகமலர்ச்சியுடையதெனவும், முதுமையின் நட்பு குளத்தில் பூத்த பூவைப்போல முகம் குவிக்குந் தன்மையுடையதெனவும் நாலடியில்,

"கோட்டுப் பூப்போல மலர்ந்து பிற்கூம்பாது
வேட்டதே வேட்டதா நட்பாட்சி—தோட்ட
கயப்பூப் போன் முன்மலர்ந்து பிற்கூம்புவாரை
நயப்பாரு நட்பாரு மில்."

என்று சொல்லி யிருத்தலையும் காண்க. நெல்சன் தந்தை தன் அருமைக்காதலனோடு

இலந்தன் மாநகருக்குப் போந்து 'சத்தாம்' (Chatham) பட்டணத்திற்குச் செல்லும் தபால் வண்டிக்குச் சத்தமபேசி நெல்சனை அதிவிருத்தி புறப்பட்டுப் போய்வர ஆசிகூறித் திரும்பித் தம் ஊர் வந்தடைந்தார். இச்'சத்தாம்' என்னும் தேசம் தனக்குப் புதுமையானதுபற்றி தான் போய்ச்சேரவேண்டிய கப்பல் எங்குளதோவென நெல்சன் ஐயமுற்று ஏங்கித் திகைத்து திசையறியாமல் அலைவதை ஒரு சீமான் கண்ணுற்று அவனை விசாரித்து இன்னானென உணர்ந்து தன்னில்லத்திற்கு இட்டுக்கொண்டுபோய் உண்டி முதலியவைகளைக் கொடுத்துபசரித்து "இரேஜினபிள்" என்ற கப்பல் நிற்குமிடத்தையும் காட்டியனுப்பினர். அவன அக்கப்பல் நிற்கும் துறைக்குக் கடுகிச்சென்று அஃதினுட் பிரவேசித்து கப்பற்றலைவனை எங்கேயென விசாரிக்குமளவில் எங்ஙனமுற்றனோ எங்களுக்குத் தெரியாதெனச்சொல்லவே மனக்கவலை எய்தினனாய் மெல்ல மேற்றளத்தின் மீதேறி சுற்றிப் பார்த்துக்கொண்டு அங்கேயே இருந்துவிட்டான். ஒருநாள் முழுமையும் பட்டினியாய் கேட்பாரின்றி காலங்கழிக்க மறுநாள் இவன் பரிதாபநிலையை சிலர் கண்ணுற்று இரக்கங்கொண்டார்கள். கடல்போர்களில் வலமிலானாய் பெரும்புகழ்பெற அடல்வாய்ந்தோனும், தாயற்ற சேயும், உம்ராசமுள்ள உணர்ச்சியுடையோனும், மெல்லிய மேனியையுடையோனுமான நெல்சனை இக்கப்பற் போர்வீரர் உபசரித்தவகை அவனதுள்ளத்தை விட்டென்றுமகலவில்லை. தான் தக்க வதிகாரத்தை வகித்தகாலத்து தனக்குட்பட்ட யுத்தவீரர்களை ஊக்கமுடனும், உள்ளன்போடும், உழைத்துவரச்செய்தது ஆழாழியின் ஆதிக்கம் ஆங்கிலநாடு அடையும் வண்ணம் மெய்வருந்தி முயன்றனர். மேலும் தான் இத்தொழிலின் துவக்கத்தில் துன்பத்தை யனுபவித்தவனாதலின இனி இத்தொழிலை மேற்கொள்பவரை உற்சாகமாயிருக்கச் செய்யவேண்டுமென்று அவர்களுக்குத் துன்பம் நேரிட்டவிடத்து தேற்றிவருவாராயினர்.

(இன்னும்வரும்.)

AVADHUTA-GITA OR SANNYASIN'S SONG.

"NOT FOUND"—IS IT SO?

அவதூத கீதை.

"பண்டேபயில்தொறு மின்றேபயில்தொறு
மொளிக்குஞ் சோரனைக்கண்டனம்."

"அகப்படவில்லை"—அகப்படவில்லையா ?

1. "அகப்படவில்லை" யென்று வடிதோழி
மெய்ப்பட நான்கண்ட "சோரனைத்" தானே
உய்ப்பிட மில்லை ஒழிவில்லை பாரடி
கைப்பிடி யாகவ"கள்வனைப்' பிடியார்க்கு.

2. பிடித்தேன் கள்வனை "சிக்கெனத்" தானே
யடித்தேன் கொல்வினைக் கூட்டத்தின் ஞறவைத்
துடித்தேன் தாய்நெறி பற்றியே நடக்கக்
குடித்தேன் குருசொல் லமிர்தமென் றறிந்தே.

3. அறிந்தேன் உலகின் வஞ்சனை வழியெலாம்
எறிந்தேன் உதறியே பறறிய பாசத்தைத்
தெரிந்தேன் தேய்பிறை மர்மத்தை யுள்ளத்தில்
விரிந்தேன் வளர்பிறைப் பூரணம் நானுக.

4. நானது வாராயின் வெனக்கென் குறையசால்லேன்
நானது வாகவே யுழைத்துள்ளே முறையிட்டேன்
நானது வாகவும கண்டேன் குணங்குறி
நானது வாகவே விணடேன் 'துரைத்தனம்.'*

5. விண்டேன் 'துரைத்தனம்' வேறென் றும் நினைக்கி
"கண்டனை கமழதரு வகானறையருனடி" [லன்
யுண்டேன் உய்வழி கணமுணா உண்மையைக்
கொணடேன் குருமறைமொழி கண்டதை மெய்யெனவே.†

"கல்மலற்" நாயனார்கூற்று.

6. மெய்யென்றுகண்டதைக்கடைப்பிடியாக்கொண்டு
பொய்யென்று சொல்லவுங்கொன்றையுங்காணுதே
செய்யென்று சொல்லச்செய் கர்மமுமெலாந்த
கெய்யெடுத்தக்னியில்விட்டாறபோல னென்பார்!

ஸ்வஸ்வாஹா!

7. பார்து பாரில் அதிர்சயம் ஸ்வஸ்வாஹா !
பார்து ஊரில் அதாசயம ஸ்வஸ்வாஹா !
பார்து நாரில் அதிசயம் ஸ்வஸ்வாஹா !
பார்து மாரில அதாசயம் ஸ்வஸ்வாஹா !

ஓம்தத்ஸத்.

---

* The Samashti or Collective Form of 'Family Life' cf. 'குடித்தனமோ, துரைத்தனமோ.'

† cf. Huxley: "Sit down before fact (The Great Fact of Life) as a little child, be prepared to give up every preconceived notion, follow humbly wherever and to whatsoever abysses Nature leads or you shall learn nothing. I have only begun to learn content and peace of mind since I have resolved at all risks to do this."

EVENTS OF THE MONTH.

மாத விசேஷங்கள்.

அக்டோபர்மீ 15உயில் சரியாக வடகிழக்கேயிருந்துவரும் மேகங்கள் பொழியும் மழைகாலம் தொடங்கிற்று. இந்த வருஷம் நல்லமழை பொழிந்ததுமன்றி அனேக இடங்களில் அதிகமழையும் அதனால் வெள்ளப் பெருக்கும், உடைப்புகளும், வெள்ளச்சேதமும் நேர்ந்துவிட்டன. கிருஷ்ணா, குண்டூர் ஜில்லாக்களிலும், சேலம் நெல்லூர் ஜில்லாக்களிலும் வெள்ளப்பாழினால் நேர்ந்த சேதம் அதிகம். லக்ஷக்கணக்கான சொத்து நஷ்டமும், ஏழைகள், குடியானவர்கள் வீடு வாசலின்றி தவிக்கவும் நேர்ந்திருக்கிறது. இதைப்பற்றி நவம்பர்மீ 21உகூடிய சட்டநிரூபண சபையில் பலமெம்பர்கள் கேள்விகள் கேட்டார்கள். கவர்ன்மெண்டார் சரியான விவரம்சொல்ல முடியவில்லையென்று ஒருமெம்பர் நடபடிக்கைகளை நிறுத்தி சட்டநிரூபண சபை மீட்டிங்கை ஒத்தி வைத்துக்கொள்ளப் பிரேரேபித்தார். கவர்ன்மெண்டார் மேலேவிசாரித்துச் சொல்வதாகச் சொன்னதின்மேல் அவர் நடபடிக்கைகள் நடக்கச் சம்மதித்தார். இப்படி கவர்ன்மெண்டார் திருப்திகரமான விடையளிக்காவிட்டால் நடபடிக்கைகளை நிறுத்தி மீட்டிங்கை ஒத்தி வைத்துக்கொள்ளப் பிரேரேபிப்பது பார்லிமெண்டு காமன்ஸ் சபையில் அதிசாதாரணமாக வழங்கிவருகிறது. இதுவரையில் இந்தவழியை இங்கு யாரும் அனுசரித்ததில்லை. இதுதான் முதல்தடவை. இந்த தந்திரத்தை உளவறிந்து உபயோகித்தவர் கனம் எம். இராமச்சந்திரராவ் அவர்கள். சட்ட நிரூபணசபை நடபடிக்கைகள் 21உ முதல் நடந்துவருகின்றன. மறுநாள் "செகண்டரி எடியுகேஷன்" என்கிற மத்தியதரப் படிப்பை நன்றாகப் பரவச் செய்ய அதிகப்படி மத்தியதர பாடசாலைகள் வேண்டியிருப்பதால் அதைப்பற்றி விசாரிக்க ஒரு கமிட்டி யேற்படுத்த வேண்டுமென்று செய்த சிபார்சை யொட்டி ஒருதர்க்கம் நடந்தது. அதின்முடிவு என்னவென்றால் கவர்ன்மெண்டார் எத்தனையோ கமிட்டிகள் நியமித்திருக்கிறார்கள். பாடசாலைகள் அதிகம் வேண்டுமென்பது மெம்பர்களுடைய அபிப்பிராயமாயிருக்கிறது. சுமார் 300 பாடசாலைகள் அதிகம் வேண்டுமென்கிறார்கள். அதற்கு சுமார் 30-லக்ஷம் ரூபாய்வேண்டும். யுத்தம் நடக்கிற காரணத்தால் பொருளெல்லாம் அதில் செலவாய் விடுகிறது. பணம் இல்லாத காலத்தில் பணச்செலவு பிடிக்கும் காரியங்களைத் தொடங்கல் பயனற்றதாக முடியுமென்று சொல்லிவிட்டார்கள். மற்றொரு முக்கியவிஷயம் என்னவென்றால், ரெவினியூ போர்டுக்கு ஒரு இந்தியரை மெம்பராக நியமிக்க வேண்டுமென்று 6-வருஷங்கள் முன் கௌன்ஸிலில் தீர்மானம் கொண்டு வந்தபோது ஸர் மர்ரே ஹாமிக் 'சமயம் வாய்ந்தபோது ஆகட்டும்'என்று சொன்னார். இப்பொழுது கனம் மிஸ்டர் கில்மான் ஸ்தானத்தில் ஒரு இந்தியரை நியமித்திருக்கலாம். அப்படிச் செய்யாமையால் மறுபடியும் அதை வற்புறுத்த ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்கள். சமயம் நேர்ந்தால் சந்தர்ப்பம்போல் ஒருவரை நியமிக்கிறது என்று ஒத்துக்கொண்டார்கள். தென்னாற்காடு ஜில்லா அஜிமாஷ் (ஸெட்டில்மெண்டு) நடப்பதில் வரியை உயர்த்துமுன் குடிகள் நிலைமையைப் பற்றி நன்றாக விசாரிக்க வேண்டுமென்று ஒரு

தீர்மானம் கொண்டுவந்தார். ஒவ்வொரு செட்டில்மெண்டு காலத்திலும் விசாரணை செய்தே வரியை உயர்த்துவது வழக்கம்: இன்னும் அதிகவிசாரணை செய்யவேண்டியது அவசியமாகத் தோன்றினால் அப்படியே நடத்துகிறதாக ஒப்புக்கொண்டார்கள். நவம்பர்மீ 22உ முழுதும் சென்னையில் அடைமழை கொட்டினதன்றி, காற்று அதிகரித்து மத்தியானத்துக்கு புயல் காற்றாகமாறி இரவு முழுதும் சுழல் காற்றடித்தது. இந்தச் சுழல் காற்று மறுநாள் 12 மணிவரையில் இருந்து கொண்டிருந்தது. இதனால் அநேகம் மரங்கள் விழுந்து தந்திக்கம்பிகளும் ஸ்தம்பங்களும், டிராம்வையன் கம்பிகளும் போசுந்தந்திக் கம்பிகளும் அறுபட்டுச் சேதமாயின. சாலைகளிலுள்ள மரங்களும் தோட்டம் துரவுகளிலுள்ள மரங்களும்விழுந்து அதிக சேதத்தையுண்டுபண்ணின. அநேகவீடுகளும் விழுந்துபோய்விட்டன. சென்னைத் துறைமுகத்தின் துவாரத்தில் கட்டப்பட்டிருந்த விளக்குக்கூண்டு ஒன்று 5,000 டன் பாரமுள்ள "கான்க்ரீட்" பாறையோடு இருந்த இடம் தெரியாமல் மூழ்கிப்போய்விட்டது. அதில் மூன்று பேர்கள் இருந்தார்கள். ஒருவன் தண்ணீரில் நீந்திக் கொண்டிருக்கக்கண்டு உதவிசெய்து கரையேற்றப்பட்டான். மற்ற இருவர்களும் காணாமற்போய்விட்டார்கள். அவர்களுடைய பிரேதம் தண்ணீரில் மிதந்து ஒதுக்கப்பட்டிருக்கக்கண்டார்கள். துறைமுகத்துக்கு நேர்ந்தநஷ்டம் அதிகம் என்று சொல்கிறார்கள். தென்னாற்காடு ஜில்லாவில் திண்டிவனம் விழுப்புரம் தாலூக்காக்களில் சுழல்காற்றினால் நேர்ந்த சேதம் அபரிமிதமென்று ரிபோர்ட்டு வந்திருக்கிறது. கடலூரில் பலமான சுழல்காற்று அடித்தது. தென்னிந்தியா ரயில்வண்டித்தொடர்கள் அப்படியே காற்றில் குடைகவிழ்ந்துபோய்விட்டன.

23உ புதன்கிழமையன்று சாயங்காலம் சென்னை 'யூனிவர்ஸிடி' (ஸர்வகலாசாலை) வருஷோற்சவமாகிய 'கான்வொகேஷன்' மீட்டிங்கு கூடிற்று. வித்தியார்த்திகளுக்குப் பட்டமளித்தானபின் நவாப் ஸயிட் ஹூஸேன் பில்கிராமி ஸி. எஸ். ஐ. அவர்கள் வித்தியாபட்டம் பெற்றவர்களுக்கு வழக்கமாய்ச் சொல்லவேண்டிய புத்திமதிகளைச்சொல்லிப் பிரசங்கம் செய்தார். அதில் அவர் குழந்தைகளுக்குப் பாலசிக்ஷை செய்யவேண்டிய முறையைப்பற்றிப் பேசியது விவேகசிந்தாமணியில் நாம் வற்புறுத்திவருவதற் கொத்திருந்தது. 10-வயது வரையில் குழந்தைகளுக்கு நிர்ப்பந்தமின்றியே பெற்றோர்களும் போதகர்களும் வாய்ப்பாடமாக எவ்வளவோ சொல்லிக்கொடுக்கலாம். அதுவரையில் தாய் பாஷையையே நன்றாகப் படியக்கற்றுக் கொடுக்கவேண்டும். இப்படிச் செய்தால் எழுதவாசிக்கவும் கணக்குப்போடவும் குழந்தைகள் எளிதில் தேர்ந்தவர்களாவார்கள். அதன்மேல் ஸ்வதேசபாஷையல்லது ஸ்வதேச பூர்வ பாஷையொன்றை நன்றாகக் கற்றுக்கொண்டு இங்கிலீஷ் படிப்புத் துவங்கினால் மற்றவர்களுக்கு 14-வருஷம் பிடிக்கும் பரீக்ஷையை இவர்கள் 7-வருஷ காலத்தில் படித்து முதல்தரமாகவும் பரீக்ஷையில் தேறிவிடுகிறார்களென்று அனுபவபூர்வமாய் அவர் கண்டதை வற்புறுத்திக் கூறினார்.

அற்பசிமீ அடைமழை பொழியுமென்றபடி சென்றமீ முழுதும் மழை நன்றாகப்பெய்தது. கார்த்திகைமாசம் கடகத்திற் சந்திரன் பிரவேசிக்கும் காலத்திலும் பெருமழை பொழியுமென்றபடி. இந்தவருஷம் 'புயல்' காற்றோடு மழைபொழிந்தது. இந்தமாதிரிப் புயல்காற்றடித்துச் சென்னையில் 12-வருஷங்களாயின.

EDUCATIONISTS ON "THE EDUCATIONAL PROBLEM IN INDIA."

Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

" Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End.

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."



அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** **"Approved"**

புத்தகம். **24.**] நள ௵ மார்கழி ௴, **1916** ௵ டிசம்பர் ௴ [சஞ்சிகை **9.**

Business "Terms":

N.B.—To avoid all possibility of misapprehension, we *reiterate* our " terms" (approved by our constituents and by Government) which, from the beginning, are :—

1. Cash or Remittance with Order : Rs. 5 per Vol.; or,
2. *One month's credit at the arrears rate* : Rs. 6 per Vol.
3. Arrears to be cleared on rendering of *a/cs.* or by V.P.P.
4. All Indents registered for School Edition only and to begin with the current volume (corresponding with Tamil or Official year, April-March).
5. Subscriptions registered to continue from Vol. to Vol. and not to be discontinued in the middle of a Vol.
6. No popular edition issued owing to scarcity of paper.
7. Monthly parts (spare or sample) 8 (eight) annas each.

General Notice.

☞ Owing to rarity of credit and scarcity of paper, we beg to make it clear and give notice to all that—

i. the *terms* offered are for regular subscribers only ;
ii. no exception to these rules can be made or recognised ;
iii. short credit allowed should not be misused ;
iv. unpaid accounts are subject to " fluctuations " and overcharges ;
v. all arrears should be fully paid *within* three months ; (*Time being an important factor*)
vi. every outstanding account will be charged *One Rupee Extra* per Vol. or any part thereof for every notice or Reminder sent after this period.
vii. all subscribers are *ipso facto* bound to observe the rules.

(*By Order of the Managing Committee.*)

THE MANAGING AGENTS, " VIVEKACHINTAMANI,"
Novr. 1916.] *Lalitalaya*, 19, *Adam Street*, *Mylapore.*

☞ *Calculations made are based on the principle of one copy for each school which should be strictly adhered to.*

EDUCATIONISTS ON "THE EDUCATIONAL PROBLEM IN INDIA."

"PIONEERS AT WORK":—"PUBLIC INTEREST LACKING."

Mr. P. A. Subrahmania Aiyar, Headmaster of the Hindu High School, Triplicane, delivered a lecture on "What is wrong with our Educational System" under the presidency of Professor, H. O. Kershaw, B.SC.,(lately Inspector of Schools, Palghat, (VIII Circle). The lecturer dwelt on the following points touching the "Educational Problem in India," especially in the field of Primary Education :—

(1) Comparing the state of things in India and countries like England and America; he pointed out that in those countries, boys remain in the primary schools up to their 14th year and had no foregin language to learn. In India the primary course extended only for five years, two years of which had to be devoted to teaching English—a foreign language difficult to learn—to the detriment of mental growth and expansion of ideas.

(2) In the West pupils in secondary schools had all instruction in non-language subjects given in their mother-tongue, and foreign languages were learnt as language subjects only. It was not so in India and the 'stunted' school-boy is the inevitable result.

(3) Primary Education in those countries was universal and compulsory. In India only 24 per cent. or so of school-going population (among boys) was at school.

(4) Education in India was unsuited to the special needs of the people—being purely literary and useful only for entering public services or the learned professions, thus giving rise to "the educated unemployed problem"—which has a grave as well as a humorous side to it.

(5) Universal and compulsory education would solve this problem. For in addition to the very large demand for teachers, a wide diffusion of Elementary Education would bring along with it a larger complexity and refinement of national life which would increase the number of departments of national activity, thus giving room for the exercise of the talents and energies of all.

(6) Educational ideals in the West were governed by the social, economic and industrial life of the nation, the reverse of it being the case in India.

(7) The social and political outlook and the economic life of the people were seriously affected by the educational ideals which are foreign and unsuited to the needs and the genius of the nation. No one could see where the change will lead the people to, though the minds of the foremost men of the land are engaged in solving how best to retain all that was good in the old and assimilate all that was good in the new.

(8) The Bolpur School of Sir Rabindranath Tagore, the Gurukula at Haridwar and the National College at Masula were but struggling and feeble expressions of national will in educational matters which aims at the harmonious synthesis of the ideals of the East and the West which is to reflect itself in the ideals of Education, pursued here.

The Chairman, Professor H. O Kershaw, a true friend of Education, in his concluding remarks emphasised the following points as deserving of public attention :—

(i) The picture of a village school under a banyan tree was what had been advocated again and again by the department and what nobody had ever denounced. [But what about it in practice ?]

(ii) An organised management by local Committees was what the department had been endeavouring to achieve but could not achieve. [Why?]

(iii) There was a lack of enthusiasm and lack of interest on the part of the people. [What about mutual understanding ? Cannot the lack of it account for it ?]

(iv) Until some remedy was found to make people really desire education there was not much use in criticism. [Why not make it 'desirable' first, by removing the tinge of 'artificiality' and 'foreignness' admittedly present ?]

* * *

[Our 'English friend,' Mr. Kershaw, whom we quoted in another issue (p. 194), spoke of "the lack of enthusiasm and lack of interest among the people." That is but one side of the picture. There is another side to it which a people's man working in the midst of the people may usefully point out. (Our queries above are intended to suggest reflection in that line to a thinking mind.)

But it is best that a regular worker thoroughly conversent with the aims and efforts of the department and the actual state of things from the people's point of view, should deal with it and we call special attention to the article on "Spreading Elementary Education" appearing in another page from Mr. M. H. S. Thompson, whose devotion to his work in connection with the Training Schools coupled with his thorough knowledge of the language and sentiments of the people invest his opinion with special value in the field of spreading Elementary Education.—*Ed. "V. C."*]

"No good work is ever lost." "My best wishes for the success of your publication"—*Sir Harold Stuart, K. C. V. O.*

புஸ்தகம்-24.] [சஞ்சிகை-9.

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

நள வருஷ மார்கழி மீ } விவேக சிந்தாமணி { December-January 1916-17.

ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாசிரியத் தாலிகழில் வந்ததென்னைத் செயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

"THE EDUCATIONAL PROBLEM IN INDIA"

இந்தியா வித்யாரம்பம் பெறுவது எப்படி?

"It is well-known how during the last decade it has become increasingly difficult for parents to educate their children; it is well nigh impossible for private individuals to start a school and the Government aid to private indigenous efforts has not risen very much."—the *Hindu* in its review of Education in India.

"Sometime ago the Department offered to give Rs. 200 for the institution of a village school and Rs. 50 for furniture and wanted to hand over the management to the Village Committee. The proposal was practical and unconditional. No Mahajan of the village except the karnam came forward to undertake the work. When he, as Inspector of Schools, was in charge of four districts, and when he invited applications for the formation of village schools he had to wait for two years to get two applications. He tried to institute Village Committees and organise the education in the village school. There were practical difficulties. In one instance a school-master closed up his school and migrated elsewhere. Until some remedy was found to make people really desire education there was not much use in indulging in criticism."—*Prof. H. O. Kershaw, late Inspector of Schools, (Palghat) VIII Circle.*

"The Problem of Education in India" as so many other problems resolves itself into this: How best the mutual understanding and co-operation of the people and the state agencies at work can be secured to the lasting advantage of the cause they both have at heart.

இந்தியா "வேதபூமி" யென்று பேர்பெற்றுளது. வேதம் என்றால் (வித்-அறிவு) அறிவை யுணர்த்துவது. அறிவு, உணர்வு, உணர்த்துவது என்றுள்ள மூன்றில் அறிவு உணரப்படும் பொருளாயும், உணர்வு உணரும் சக்தியாகவும், உணர்த்துவது அவ்விரண்டையும் கூட்டி வைக்கும் கருவியாகவும் இருக்கிறது. உணர்வும் அறிவும் இயல்பாயுள்ளன. "கண்ணிலான் பார்வை பெற்றதுபோலும்" உணர்வு தட்டித்தடவிக் கொண்டுபோகும் ஸ்திதியிலிருந்து தீக்ஷண்ய விர்த்தியாகி தீர்க்கதரிசனம் பெற்றுள்ளவிடத்து அதுவே அறிவாகிறது. உணர்வை அறிவாக்கி அறிவாகச் செய்வதொன்றெதுவோ அதுவே வித்தையென்று சொல்லப்படும். தமிழில் கல்வியென்றும படிப்பு என்றும் இதையே சொல்வார்கள். பிரவிர்த்தி மார்க்க தாமந்துக்குட்பட்ட எல்லாவற்றிற்குமுள்ளதுபோல இந்த வித்தைக்கும் "அடி, நடு, முடி" யென்கிற மூன்று அங்கம உண்டு.

(1) வித்தைக்கு அடிப்பாகமாகவுள்ளது பிரதமவித்தையென்றும் ஆரம்பப்படிப்பு என்றும் பேர்பெறும். இதுவே "பாலசிக்ஷை" யிலடங்கும். (மனம் படியப் பெறுவது—'படிப்பு.')

(2) வித்தையின் நடுப்பாகம் மத்தியதர வித்தையென்றும் நடுத்தரப்படிப்பு என்றும் இரண்டாம்படியான பள்ளிப்படிப்பு என்றும் பலவாறு பேர்பெறும். (இது

அஸ்திவாரமாயுள்ள பிரதம வித்தையின்மேல் எழுப்பும் சுவருக்குச் சயானமாகும்.) இதில், ப்ராசீன "தீக்ஷா பாகம்" அடங்கும். தீக்ஷைஸ்ய சித்தத்தோடு சேர்ந்தது முடிக்கவுமைத்தல் 'தீக்ஷை.'

(3) வித்தையின் முடியாகவுள்ளது உயர்தர வித்தையென்றும் காலேஜ்படிப்பு என்றும் கலாசாலைப்படிப்பு என்றும் பேர் பெறும். இதில் மனதின் ஏகாக்ர சக்தியினால் (Concentration), கிராஹியசக்தியும் விவேகமும் ஏற்படுகிறது.

ASSIMILATION AND DISCRIMINATION.

இந்தமூன்றும் பொருந்தப்பொருந்தி ஏகமாய் இரண்டற்றதாய் (அங்கங்களெல்லாம் பொருந்தி தேஹமானதுபோல்) பங்கமற்று விளங்குவது ஸ்ரீவித்தை (The Holy Science of Character Building). இது ஆதிமூலமாயுள்ள திரிகுணங்களின் தர்மத்தையும் விசேஷத்தையும் (ஸம்யம‡ தீக்ஷையால்) உணர்த்துவதால் இதற்கு "திரிகுணாத்மகம்" என்கிற சிறப்புப்பேருமுண்டு. அப்பொழுது இது உணர்த்தும் அறிவுக்கு சகுணப்ரஹ்மம் என்கிற பேர் உண்டு. இதுவே "குணமெனும் குன்று."

இந்தமூன்று குணவிசேஷங்களையும் இவற்றின் தர்மங்களையும் கடந்து தானே தானாய் தன்மயமாய் ஸ்வயம்பிரகாசமாய் விளங்குவது திருகுணாதீதமென்றும் பிரஹ்மவித்தையென்றும் பேர்பெறும். இந்தவித்தை உணர்த்தும் அறிவுக்கு நிர்க்குணப்ரஹ்மம் என்கிற பேர் உண்டு. ராஜா கொலுமண்டபத்தில் ஸ்ரீங்கார புருஷனாயிருப்பதும் அந்தப்புரத்தில் அலங்காரங்களெல்லாம் களைந்து ஸ்ரீங்கார ரஹிதனாயிருப்பதும் போல, எங்குநிறைந்து ஏற்றத்தாழ்வற்று விளங்கும் இரண்டற்றுள்ள ஏகமயமான அறிவு குணஸஹிதமாகவும், குண ரஹிதமாகவும் இருக்கும். இருந்தாலும் இரண்டிற்கும் உண்மையில் உள்ளபடி பார்க்கில் பேதமில்லை. இப்படி அபேதமாயறிவது தானே எல்லாவற்றிலும் உயர்ந்த 'ஞானம்'—அறிவு. "அபேததரிசனம் ஞானம்" என்று சுருதி வாக்குரைப்பது இதையேயன்றி வேறல்ல. இப்படியாக அக்ஷராப்பியாசம் (அரிச்சுவடி) தொடங்கி அக்ஷரதேவதைகளான சப்தப்ரஹ்மம்§ (எங்கும் பரவியுள்ள நாதம்) வரையில் படிப்படியாக உணரப் பெறுவதையெல்லாம் உணர்த்துவது வித்தையே. ஆகையால் இதை "நாத வடிவாகிய மஹா மந்திராதிரூபியே நாதாந்த வெட்டவெளியே" யென்று விளித்திருக்கிறார் மேலோர். நாததத்துவம் என்பது வேதோ வாச்சா வாக்கியமென்று நினைக்கவேண்டாம். அந்த நாததத்துவமில்லாவிட்டால் ஒருவரோடொருவர் சம்பாஷிப்பது கூடாமையாகும். இப்பொழுது அத்யற்புதமாய் விளங்கும் (Wireless Instrument) தந்தியில்லாது சமாசாரம் விளக்கும் கருவியை காரியத்திலுபயோகப் படுத்தக்கூடிய அவ்வளவு மேலான நிலைமைக்குக் கொண்டுவந்தவரான (Marconi) மார்கோனி என்பவர் செய்வித்தையைக் கண்டு வியந்து ஒரு பெருமாட்டி அவர்கண்டுபிடித்திருக்கும் கருவியின் மஹாத்மியத்தைப் புகழ்ந்து அதன் அதிசயத்தில் ஈடுபட்டுப் பேசியபோது, அவர் "அம்மணி, நீர்பேச நான்கேட்பது அதிலும் விந்தையான வித்தையாயிருக்கிறது. கண்ணிருந்து பார்ப்பவர்களுக்கு அதிசயங்காட்சிக் கொல்லை குறைவு!" என்று

‡ The process of Concentration, Reflection and Assimilation in one is called 'Samyama.'

§ X Rays, N Rays, Radium, Uranium are remarkable for their comparatively unlimited powers of radiation. These are but manifestations of, or emanations from, still more subtle everlasting manifestations of vibrating particles of Cosmic Energy known as 'Primeval Sounds' which are practically indestructible (*Akshara*) powers of light or radiations (*Devalamsam*).

பதில்சொன்னார். ¶ ஆகையால் வித்தையின் நோக்கமெல்லாம் ஆதியோடந்தமாய் பிரகிருதி தர்மத்தையுணர்ந்து "பிரகிருதியினுண்மையில் பரமனைக்காண்பது" வாயிருக்கிறது. இது தான் வித்தையின்கடைசி முடிவு. இதையே தான் திருவள்ளுவர்,

"கற்றதனாலான பயனென் கொல் வாலறிவன்
நற்றாள்தொழாஅர் எனின்."

என்னும் திருக்குறளினால் எடுத்துச்சொல்லியிருக்கிறார். இந்தியாவில் பூர்வம்தொட்டு வித்தையின் விலாசமும், அத்யந்தநோக்கமும் (Ultimate aim) இப்படியாக இருக்கிறதென்பதை வித்தியாசிந்தனையுள்ளவர்களெல்லாரும் முதல்முதல் ஆராய்ந்தறிந்து கிரஹித்துணர வேண்டும். † இதைக் கிரஹித்துணராவிட்டால் "வித்யாவிஷயமாக என்ன செய்கிறது" என்கிற "வித்யாபோத வழிவகை" யைப்பற்றி (Problem of Education) விசாரித்தறிவது கூடாமையாகும்.

"ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது" என்பது இந்தியாவில் வெகு சாதாரணமாய் விளங்கும் பழமொழி. ஏட்டுப்படிப்பு பிரயோசனப்படாது என்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். ஆகையால் வெறும் ஏட்டுப்படிப்பு படிப்பல்ல. மனம்படியப் பெறுவதேதான் படிப்பு. இதையுணர்ந்தே "கற்றோர் கல்வியும் மனப்பழக்கம்" என்றார் ஔவையார்.

"சித்திரமும் கைப்பழக்கம்" என்றதனால் கைமுதலான கர்மேந்திரியங்களின் பழக்கமும், "செந்தமிழும் நாப்பழக்கம்" என்றதனால் வாக்குமுதலாக ரஸம் வரையிலுள்ள சுவையை உணர்வதும் உணர்த்துவதுமான கருவியாகவிருக்கும் நாவின்பழக்கமும் (இதில் ஞானேந்திரியங்களின் பழக்கம் அடங்கும்) அமையப்பெற்றாலன்றி கல்விக்கு இன்றியமையாத மனப்பழக்கம் சித்திக்கப்பெறுதல் கூடாமையாகும். கல்வி பயன்படவேண்டில் "கல்வி யைக்கல்: கற்றபடி நில்" என்ற மூதுரைப்படி பிரகிருதிதர்மத்தை யுணர்ந்து அந்த தர்மவழியில் நடக்க அப்பியசிக்கவேண்டும். அப்பொழுதுதான் படிப்பு (மனம் படியப்பெறுதல்) நிறக்கும் நிலைபெறும். இதைத்தான் "உற்றுநோக்கல்" என்றும் "Cultivating the faculty of observation" என்றும் சந்தர்ப்பங்களையொட்டிச் சொல்வதுண்டு.

"உற்றுநோக்கிட உள்ளது விளங்கும்." "உற்றுநோக்கில் பற்றுவிட்டிடும்." கருவி கரணங்கள் ஒன்றுபட்டுப்பொருந்த ஏகாக்ரப்பட்ட மனசினால் (அதன் சலனத்தை நிறுத்தி) நிதானமாகப் பார்த்தல்தானே "உற்றுநோக்கல்" ஆகும். (Exercising the faculty of observation.)

இப்படி உற்று நோக்குமிடத்து "உள்ளது" அதாவது, தத்துவம் — உண்மையாயுள்ளது, தானே விளங்கும். விஷயப்பற்று விட்டுப்போய் மனம்தெளியும். இதுதான் படிப்பின் திறம். இந்தத் திறமைதான் நம்மில் வித்யா பட்டங்கள்பெற்று சண்டப் பிரசண்டமாய்ப் பேசவும், வாதிக்கவும், வியவஹாரங்கள் செய்யவும் கற்ற "கல்வியாளர்"களுக்கு இல்லையென்று கனம். ஸர். பழமானேறி சிவஸ்வாமி அய்யர் அவர்கள் பிரத்தியக்ஷமாய் விளங்க எடுத்துக் காட்டிப் பேசினார்.

இந்தத்திறமை யுண்டாகச்செய்வது எப்படி? என்றெழும் கேள்விக்கு உத்தரமாக ஸர் சிவஸ்வாமி அய்யர் "குருவியின்தலையின் பனங்கா

¶ "Communication by wireless telegraphy is very wonderfull," once remarked a lady to Mr. Marconi. "It is not half so wonderful as our conversing together now" modestly replied the inventor; and he was right. The production of sounds by the organs of speech, their transmission by waves in the air, and their appreciation by the organs of hearing involve infinitely more complicated actions than are concerned in producing electric waves at one station and detecting them hundreds or thousands of miles away.- *Prof. Gregory's 'Discovery': Chapter XI, Across the Border.*

There are 'experts' in India who can perform this feat without a Marconi Instrument.

† Educational thinkers should understand and realise that the ultimate aim of Education in India from ancient times is the perfection of **Knowledge.**

யைக் கட்டினதுபோல்," பிரதமவித்யாபாடசாலை உபாத்தியாயர்கள் தலையில் அப்பெரும் பொறுப்பைக் கட்டிவிட்டார்.

"பாத்திரமறிந்து பிச்சையிடு!"
"சாத்திரமறிந்து செய்வனசெய்!"
"காத்திரமறிந்து வேலையிடு"
"கோத்திரமறிந்து பெண்ணைக்கொடு!"

என்றுள்ள பழமொழிகள் சாமான்யஜனங்களின் புத்திவிசேஷத்தை விளக்குவதாயிருக்கின்றன. "காத்திரமறிந்து வேலையிடு" என்பதற்கு விருத்தமாய் நடப்பவனை "குருவியின் தலையில் பனங்காயைக் கட்டின" வனுக்கு ஒப்பாகக் கதைசொல்லிக் காட்டியிருக்கிறார்கள்.

இப்படியாக சுருதி - ஸ்மிருதி - இதிஹாஸங்கள் எல்லாம் பழமொழியாக விளங்கப்பெற்ற இத்தேசத்தில், குழந்தைகளின் ஸ்வபாவமறிந்து முன்பின்முரணாது பாலசிக்ஷை செய்ய வேண்டியதாயிருக்க, குழந்தைகள் படிக்கும் வகுப்புகளில் முதற்பாடம் முதற்கொண்டு "மார்ஸ்டன், கார்த்வெய்ட் வாசகபுஸ்தகங்களைப்" பாடமாகவைத்து "அக்கா அப்பம் தா" என்று போதித்தால ஜனங்கள் அப்படிப்பை அசட்டைபண்ணாது என்ன செய்வார்கள்.

இது பிரதமவித்யா லக்ஷணமாகவிருக்க, வித்யாவிசாரணையில் தேர்ந்தவர்களாக நியமிக்கப்படும் அதிகாரிகளில் இன்ஸ்பெக்டர் பதவி பெற்ற இந்தியர் ஒருவர் "பேதமையென்பது மாதர்க்கணிகலம்" என்றுள்ள வாக்கியத்துக்கு "பெண்களை மௌட்டிய ஸ்திதியில் வைத்திருப்பதே அழகு" என்று அர்த்தஞ்செய்து அதன்மேல் சண்டப்பிரசண்டமாகப் பிரசங்கமாரிபொழிந்து அந்த அற்புதப் பிரசங்கத்தைத் தனியாக அச்சிட்டும் வழங்க வருவாரானால், வயிற்றுப் பிழைப்புக்கும் மேல்பதவி பெறுவதற்கும் அவர்கையைப் பார்த்திருக்கும் ஏழை உத்தியோகஸ்தர்கள் என்ன செய்வார்கள் பாவம்!

பாலக்காட்டில் இன்ஸ்பெக்டராயிருந்து இப்பொழுது ப்ரெஸிடென்ஸி காலேஜில் ப்ரொபெஸ்ஸராயிருக்கும் மிஸ்டர் எச். ஓ. கர்ஷா அவர்கள் நல்லபுத்தி கூர்மைவாய்ந்தவர். உண்மையாக வித்யா விர்த்தியில் மனப்பற்றுள்ளவர். ஜனங்களுக்கு நன்மையுண்டாக உழைப்பதே சர்க்கார் உத்யோகஸ்தர்கள் கடமையென்னும் மேலான கொள்கையுள்ளவர். அவர் பாலக்காடு ஸர்க்கிள் ஸ்கூல் இன்ஸ்பெக்டராயிருந்தபொழுது கிராமாந்திரங்களில் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தவும், அந்த கிராமாந்தர பாடசாலைகளை கிராமத்தார்கள் தானே மேன்பார்வை செய்துவரவும் ஏற்பாடுசெய்ய வெகு பிரயாசைப் பட்டாராம். வித்யா இலாகாதாரர்கள் ஒரு கிராமபாடசாலையேற்படுத்த முதலெடுப்பில் 200 ரூபாய் ஸ்தாபனச் செலவுக்கும் 50 ரூபாய் பெஞ்சு முதலான சாமான்களுக்கும் கொடுப்பதாகச் சொன்னார்களாம். அந்தப்படி கொடுப்பதாகச் சொல்லி கிராமங்கள்தோறும் பாடசாலையேற்படுத்தப் பார்த்தார். ஒருவரும் முன்வரவில்லை. இரண்டு வருஷகாலத்தில் 4-ஜில்லாக்களில் இரண்டு பேர்கள்தான் முன் வந்தார்களாம். அவர்களும் கிராம கணக்கர்களாம். கிராமத்து மஹாஜனங்களில் இதுவிஷயமாக சிரத்தையெடுத்துக்கொண்டவர் ஒருவரேனும் இல்லையென்று, கெல்லட் ஹாலில் ஹிந்து ஹைஸ்கூல் தலைமை உபாத்தியாயர் ம-௱-௱-ஸ்ரீ பி. ஏ. சுப்ரமணிய ஐயர் அவர்கள் "நமது வித்யா சிக்ஷயி லுள்ள தோஷமென்ன" வென்னும் விஷயமாய்ப் பிரசங்கித்தபோது அக்கிராசனம் வகித்திருந்தமுறையில் பேசினார்.

இந்த அவருடைய அநுபவத்திலிருந்து அவர் முடிவுக்குவந்த தீர்மானம் என்னவென்றால், ஜனங்களுக்குப் படிப்பில் சிரத்தையில்லை. அவர்களுக்கு உண்மையான சிரத்தையுண்டாகச் செய்யும்வரையில் வித்யா இலாகா விசாரணை தோரணையைப்பற்றிக் குற்றங்கூறுவதில் பிரயோசனமில்லை — யென்பதாயிருக்கிறது.

ஜனங்களுடைய அபிப்பிராயத்தை யெடுத்துப்பேசும் ஹிந்து பத்திரிகையோ அதேவாரத்தில் இந்தியாவில் வித்யாபிவிர்த்தியைப்பற்றி விமர்சமெழுதி வருகையில் "சென்ற பத்து

வருஷகாலத்தில் இந்தியாவில் பெற்றோர்களுக்குப் பிள்ளைகளைப் படிப்பிப்பது வரவரக் கஷ்டமாய்க்கொண்டுவருகிறது என்பது பிரத்தியக்ஷமாய் வருகிறது; அந்தரங்க நபர்கள் பள்ளிக்கூடம் ஏற்படுத்துவது அஸாத்தியமாக முடிந்துவருகிறது; சொந்தத்தில் ஜனங்கள் ஏற்படுத்தி நடத்தும் வித்யாசாலைகளுக்கு சர்க்கார் உதவிசெய்வதும் அதிகமாகவில்லை" யென்று வெகுஜன அபிப்பிராயத்தை யெடுத்துக்கூறி முறையிடுகிறது.

மிஸ்டர் கர்ஷா அவர்களோ ஜனங்களுக்குப் படிப்பு விஷயத்தில் சிரத்தையில்லையென்று முறையிடுகிறார். அவரும் உண்மையாளியாதலால் அவர்பேச்சைத் தள்ளுவதற்கில்லை.

இப்படி இருதரப்புக்கக்ஷியும் ஏககாலத்தில் நிலைத்திருப்பது சாத்தியமா? பெற்றோர்கள் பிள்ளைகளைப் படிப்பிப்பது கஷ்டமாயிருக்கிறது என்கிறார்கள். ஸ்கூல்-இன்ஸ்பெக்டர் வித்யா இலாகா அதிகாரிகள் பக்ஷத்தை யெடுத்துக்கொண்டு நான் வித்யா இலாகா உத்யோகஸ்தராகவிருந்து கிராமங்களில் பிரதம வித்யா பாடசாலைகளேற்படுத்தப் பிரயாசைப்பட்டேன். பெற்றோர்கள் முன்வராமையால் என்முயற்சி பலிக்கவில்லை. ஆகையால், ஜனங்களுக்குத்தான் படிப்பில் சிரத்தையில்லை யென்கிறார். உத்யோகஸ்தர்களுக்குப் படிப்பை விர்த்திசெய்ய வேண்டுமென்கிற எண்ணமிருப்பதுபோலவே ஜனங்களுக்கும் படிப்பில் சிரத்தையுண்டென்பது உண்மை. இப்படியிருக்க, ஒருவரையொருவர் குற்றங்கூறிக் குறைபேசுவதேன்?

இதற்குக்காரணம் விசாரிக்கில் இருதரத்தாருக்கும் பரஸ்பரம் இருக்கவேண்டிய மன ஒற்றுமையில்லாமையே காரணம் என்று நமக்குத்தோன்றுகிறது.

பிரதமவித்தையாகிய ஆரம்பப் படிப்பைப் பரவச்செய்யவேண்டியது அத்யாவசியம். அது [illegible]பரவாமல் தடைப்பட்டிருப்பதும் [illegible]. இந்தியா கவர்ன்மெண்டார் வெளியிட்டிருக்கும் வித்யா சம்பந்தமான விவரங்களில் பள்ளிக்கூடவயதுள்ள பிள்ளைகளில் 100-க்கு 34-பேர்கள் விகிதம் பள்ளியிலிருக்கிறதாக வெளியிடப்பட்டிருக்கிறது.

ம-௱-௱-ஸ்ரீ சுப்ரமணிய அய்யர் அவர்கள் இவர்கள்தொகை கிட்டத்தட்ட 100-க்கு 24-தானிருக்குமென்று சொன்னார். இந்தியசேவைசங்கத்து (Servants of India Society) மெம்பர் ஒருவர் சர்க்கார் கணக்கு தப்பென்று "மாடர்ன் ரிவியூ" என்னும் மாதாந்த பத்திரிகையில் விவரமாய் எடுத்து எழுதி நிரூபிக்கிறார். பள்ளிக்கூடவயதுள்ள பிள்ளைகள் ஜனமொத்தத்தில் 100-க்கு 15-என்று சர்க்கார் கணக்கு உத்தேசம் போட்டிருக்க, இது இந்தியாவிற்குப் பொருந்தாது என்றும், உள்ளபடி கணக்கிட்டால் 100-க்கு 30-விகிதமாகுமென்றும் எதிர்க்கக்ஷி பேசியிருக்கிறார். இது எப்படியாயினும் பிரதம வித்தையாகிய ஆரம்பப் படிப்பை விர்த்தி செய்யும்வகை முக்கியமானது. அதுவிஷயத்தில் சர்க்கார் தரப்புக்கும் ஜனங்கள் தரப்புக்கும் வித்யாசம் ஒன்றுமில்லை. அது சம்பந்தமாய் உபாத்தியாயர் சிக்ஷைசெய்யும் (Training Schools) பாடசாலைகளின் விசாரணை கர்த்தராகிய மிஸ்டர் தாபஸன் அவர்கள் எழுதியிருக்கும் விஷயம் எல்லாராலும் கவனிக்கப்படத் தக்கதாயிருக்கிறது.

ம-௱-௱-ஸ்ரீ பி. ஏ. சுப்பிரமணிய அய்யர் அபிப்பிராயம் நாம் விவேகசிந்தாமணியில் பலமுறையும் பன்னிப்பன்னி யெழுதியதாகவேயிருக்கிறது. ஆதலால் அதை இங்கிலீஷில் மட்டும் எடுத்துமுகப்பில் அச்சிட்டிருக்கிறோம். மிஸ்டர் கர்ஷா துரையினுடைய அபிப்பிராயத்தையும் அப்படியே வெளியிட்டிருக்கிறோம். வித்யாவிஷயத்தில் சிரத்தை பூண்டவர்கள் இவ்விருவகை அபிப்பிராயங்களையும் ஆராய்ந்து சந்தேக விபரீதமற உண்மையுணர்ந்து உள்ளபடி நற்சிந்தையோடுழைத்து வரவேண்டுமென்பதே நமது கோரிக்கையும் பிரார்த்தனையுமாகவிருக்கிறது. முதலெடுப்பில் எத்துறையிலும் நல்ல காரியத்துக்கு விக்கினங்கள் நேரிடுவது சகஜம். "நல்ல காரியத்துக்கு நாலாயிரந்தடை" யென்பது உலகவழக்கு. தடையறுத்து இடையறாமுயற்சியினால் நன்மைகடைப் பிடித்துழைத்துக் கஷ்டசாத்தியமாயினும் காரியத்தைச்செய்து சாதிப்பதே புருஷலக்ஷணம்,

SPREADING ELEMENTARY EDUCATION.

ஆரம்ப படிப்பைப் பரவச்செய்தல்.

BY MR. M. H. S. THOMPSON.
(Assistant Inspector of European and Training Schools.)

ஆரம்பப் படிப்பு (பிரதம வித்தை) விருத்தியடையும் பொருட்டுக் கல்வியபிமானிகள் எங்கும் உழைத்துவருகிறார்கள். தனவான்கள் கல்வி விஷயமாகப் பல இடங்களிற் பிரசங்கிக்கிறார்கள், பல பத்திரங்கள் மூலமாய்த் தாம் பிரசங்கிப்பதைப் பிரசுரிக்கிறார்கள்; கல்விச்சங்கங்கள் பல இடங்களிற் கூடுகின்றன; கல்வி விஷயமான கண்காட்சிச் சாலைகள் சில இடங்களில் ஸ்தாபிக்கப்படுகின்றன. ஆனால், கல்வியின் அபிவிருத்தியை நாடி ஆவலுடனுந் திறமையுடனும் உழைத்து வருவோர் பலராயிருந்தபோதிலும், ஆரம்பப்படிப்பு இன்னும் தகுந்த விருத்தியடையாமலிருக்கிறதென்று பலர் பரிதபிக்கிறார்கள்; அப்படிப் பரிதபிப்பதற்கும் நியாயமில்லையென்று மறுப்பதற்கு இடமில்லை.

கல்வி விஷயமாக ஜனங்களிடத்தில் தகுந்த முயற்சியிருக்கும் பக்ஷத்தில் ஒவ்வொரு ஊரிலும் பணங்கட்டாமல் வாசிக்கக்கூடிய பள்ளிக்கூடமொன்றை ஆரம்பப் படிப்புக்காக ஏற்படுத்தலாமென்று சில நாட்களுக்கு முந்தி கடப்பை ஜில்லாவிலிருக்கும் ராஜாம்பேட்டையிற் கூடின ஜில்லா சபையின் அக்கிராசனாதிபதியாகிய கனம்பொருந்திய மீர் அசாட் அலிகான் பஹதூர் அவர்கள் கூறினார். கூறினாலும் ஜனங்களிடத்தில் தோன்றும் அசிரத்தையின் காரணம் யாதாயிருக்கக் கூடுமென்று அவர் விசாரிக்கவில்லை. இந்த அசிரத்தை விஷயமாகவே எட்டாவது சர்க்கில் (பாலக்காடு) இனிஸ்பெக்டராயிருந்த கர்ஷாதுரையவர்களும் திருவல்லிக்கேணியிலிருக்கும் கோகலே மண்டபத்தில் கல்வி அபிவிருத்தி விஷயமாகப் பிரசங்கம் நடந்த காலத்து அக்கிராசனாதிபதியாயிருந்து சொன்னதாவது:—பொதுஜன அசிரத்தையினாலே தான் கல்வி பரவுதற்கு வழியில்லாமல் அது தடைப்பட்டு நிற்கின்றதாம்; இதற்குத் தமது அநுபோகத்தில் இரண்டொரு உதாரணமும் எடுத்துக்காட்டினார்; ஆனால் இக்கொடிய அசிரத்தையை நீக்குவதெப்படியென்று இவருங் கூறவில்லை.

உபயோகமற்ற பொருளை நாம் விரும்பாமல் விட்டுவிடுவதென்றால், கல்வியும் உபயோகமற்ற பொருளென்றே பொது ஜனங்கள் அபிப்பிராயப் படுகிறார்களா இல்லையாவென்று நாம் விசாரிப்போமானால், கல்வி விஷயத்தில் அவர்களுக்குப் பொதுவாய் நல்ல அபிப்பிராயந்தான் உதிக்கிறதென்று தெரியவருகிறது. நோக்குமிடத்துக் கல்வியினிடத்தில் ஹிந்துக்களுக்கிருக்கும் விசுவாசமும் பக்தியும் வேறெந்த ஜாதியாரிடத்திலும் காண்பதரிது. விசுவாசமிருப்பின் கல்வியினைக் கைவிடுவதற்குக் காரணமென்ன? இக்கேள்விக்கு விடை ஒன்றுதான் உளதென்று நமது பத்திராதிபர் கூறுவார். அவ்விடையானது வருமாறு:—

இந்தியர்க்கான கல்வி இந்தியர்க்கேற்றதாயும் அவர்களால் எங்கும் விரும்பப்பட்டு வருவதாயுமாயிருந்தாலொழிய நாட்டில் அது நிலைத்திருக்காது. இப்பொழுது ஆதரிக்கப்படுங் கல்வி பல இடங்களில் இந்தியர்களுக்கு ஏற்றதாய் இராமல், மேல்நாட்டார் ஆசாரங்களை அநுசரித்ததாயும் அவர்களுடைய குணாதிசயங்களுக்கு ஏற்றதாயுமேயிருப்பதால், அதனைப் பெற்றோர் வெறுக்காது விட்டுவிடாமற் போனாலும், அதில் தமது முழுநோக்கமும் சித்தி பெறாமலிருப்பதனால், அதனை ஆவலுடனே விரும்பாமலிருக்கிறார்கள். இதனை உருவக வணியாய்க் கூறவேண்டுமானால் பின்வருமாறு கூறலாம் போலும்:—ஒரு கிளை தானே மரத்தினின்று உற்பத்தியாகி வளர்ந்து வருவதற்கும், வேறொரு மரத்தினின்று வெட்டப்பட்டு ஒட்டவைத்து வளருங்கிளைக்குமிருக்கிற வித்தியாசம் மேற்கூறிய இருவிதக் கல்விக்குமிருக்கிற வேறுபாடாகும்.

புதுமாதிரிப்படிப்பு வேண்டாம் என்று பெற்றோர் முறையிடுவதை நாம் எல்லோருங் கேட்டிருக்கிறோம். கிராம பள்ளிக்கூடங்களிற் பிள்ளைகள் ஏராளமாய்க் கூடுவதும், சர்க்கார் பள்ளிக்கூடங்களிற் பிள்ளைகள் சில சமயம் சேராமலிருப்பதும் நாம் எல்லோரும் பார்த்திருக்கிறோம். இதன் அருத்தம் யாதென்றுந் தெரிந்தோம். ஆனால் ஊரார் வேண்டுகோளுக்கிணங்கப் பாடங்களை நடத்த நமக்கு மனம் வருகிறதில்லை. 'புது மார்க்கம்' பிரகாரம் கற்பித்தால் மாத்திரம் போதனை செய்தல் ஏற்றபோதனையாகு மென்றும், உற்றுப் பார்க்குந் திறமையை விருத்தி செய்தல் அத்தியாவசியகமென்றும் நாம் சொல்லிக்கொள்வது வழக்கம். சொல்லிக் கொண்டாலும் அமிர்தங்கூட விஷமாவதுபோல, இத்தகைய சிந்தனைகள் பற்பல கெடுதிகளை விளைவிக்கக் கூடியனவென்று கல்வி எங்கும் பரவும்படி உழைக்கும் உத்தியோகஸ்தர் கூறுகிறார்கள். உள்ளதைப் பார்த்து நாம் நடக்கவேண்டியதொழிய, மனோராஜ்யஞ் செய்து, இதைப் பின்பற்ற வேண்டும், இதைத்துறக்க வேண்டுமென்று சொல்வது கூடாதென்று கல்வி இலாகா தணிக்கைச் சட்டங்களில், அதாவது 110-வது சட்டத்தில், கூறப்பட்டிருக்கிறது*. 'புது மார்க்கம்' யாதென்று தெரியாமல், திகிலடைந்து பாடங்களைக் கற்பிப்பதைவிட, தமக்குத் தெரிந்த வரையும் தாம் அநுசரித்து வந்தமுறைப் பிரகாரமும் கல்வி கற்பிப்பது கிராம பள்ளிக்கூட உபாத்தியாயருக்கு நலமென்று எவரும் ஒத்துக்கொள்வார்கள். உபாத்தியாயர் தொழிலினை எவ்வளவு சுலபமாய் ஆக்கக்கூடியதோ அவ்வளவு சுலபமாய் ஆக்குவது நலமென்றும் ஒத்துக்கொள்ள வேண்டியதுதான். பாட விஷயத்திற்கூட யாதொரு நஷ்டமும் இடையில் நின்று வருத்தக்கூடாது, ஏனெனில் கஷ்டமான சில புதுப் பாடங்கள் பாடபட்டியில் இறங்கியிருப்பதால், உலகவியாபாரத்துக்கு முக்கியமாய் வேண்டியிருக்கும் கையெழுத்து வாசிப்பு கணிதமென்னும் மூன்று பாடங்கள் சோர விடவுஞ் சில சமயங்கள் நேரிடுகின்றன. முக்கியமான இப்பாடங்களில் தமது பிள்ளைகள் தகுந்த தேர்ச்சியடையாமலிருப்பதைப் பெற்றோர்கள் கண்டால், உடனே பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பாமல் நிறுத்திவிடுகிறார்கள். தாம் கற்ற போதனமுறை ஒன்றைச் சொன்னாலும் பெற்றோர் விரும்பியபடி செய்வது அவசியம்; அப்படிச் செய்யாவிட்டால் கல்வி விஷயத்திற் பொது ஜனமிடம் விசுவாசம் ஜனிக்காதென்பது நிச்சயம். அந்த விசுவாசமின்றி நமது உழைப்பெல்லாம் வீணாய்ப் போகிறது. நமது ஊக்கமே நமக்குக் கூற்றமாய் வந்து நிற்பது போலும்!

கல்வியின் பொருட்டு உழைப்பெல்லாம் ஆரம்பபடிப்பினைப் பரவச்செய்தலை முதன்மையான நோக்கமாகக் கொண்டதாயிருக்க வேண்டியதென்று பத்திரிகைகளிலும் மஹாஜன சங்கங்களிலுங் கூறப்பட்டுவருகிறது. கல்வி பரவவொட்டாது தடுக்கும் ஒவ்வொரு இடையூறினையும் அப்போதைக்கப்போது நீக்கிவிடவேண்டியது. கடப்பைச் சங்கத்தில் கனம்பொருந்திய அக்கிராசனாதிபதி கூறினதாவது:—கல்விக்காக அதிகமாய்ப் பணஞ் செலவழிக்க வேண்டுவதில்லை, பாடங்கள் அதிகமாய்க் கற்பிக்க வேண்டுவதில்லை, கட்டடங்களுக்காக வீண்செலவு வேண்டியதில்லை என்பதாம். இப்படி அவர் கூறியதன் நோக்கம் நன்றாய்த்தான் விளங்குகின்றது.

சில நாட்களுக்கு முந்தி மிக்கத்திறமையுடன் திருவல்லிக்கேணியிலிருக்கும் ஹிந்து ஹை

* ART. 110. '[Methods] should be judged by their results.'

ஸ்கூல்ஹெட்மாஸ்டரவர்கள் ஆரம்பப்படிப்பை பரவச் செய்வதற்கு முக்கியமாய் வேண்டுவன மூன்றென்று கூறினர்; அவையாவன—(1) பள்ளிக்கூட கட்டட விஷயமாக அதிகமாய்க் கவலைப்படாமலிருத்தல், (2) ஆரம்ப படிப்பைக் கற்பிக்கப் போதனைமுறைப் பாடசாலைகளிற் படித்த உபாத்தியாயர்கள் அவசியம் வேண்டியதென்று பிடிவாதமாய்ச் சொல்லாமலிருத்தல், (3) இதர பாடங்களைக் கற்பிக்க யோக்கியதையில்லாத உபாத்தியாயர்கள் கையெழுத்து, வாசிப்பு, கணிதம் என்கின்ற மூன்று முக்கியமான பாடங்களைக் கற்பித்தாற் போதுமென்று அபிப்பிராயப்படுதல். இக்கனைய யோசனைகளெல்லாம் இப்பொழுது உலவி வரும் கல்வி இலாகா சட்டங்களுக்கு நோக்கத்தில் முற்றும் விரோதமென்று நினைக்கக்கூடாது. காலத்தையும் ஸ்தலத்தையும் அனுசரித்துப் பாட அட்டவணையைத் தயாரிக்கவேண்டியதென்று சர்க்கார் தணிக்கைச் சட்ட புஸ்தகத்தில் இரண்டிடங்களிற் கூறியிருக்கிறது (அதாவது, 50-வது 116-வது சட்டங்களில்)*. இனிஸ்பெக்டரானவர் ஐந்து மணி நேரத்துக்குக் குறைந்த நேரத்துக்கும் பள்ளிக்கூடத்தை நாளொன்றுக்கு நடாத்தலாமென்று உத்தரவு அளிக்க யோக்கியதையுற்றவரென்று சென்னை கல்விச் சட்டங்களிற் கூறியிருக்கிறது. எனவே, சட்ட சகாயத்தினைற் கல்வி பல நன்மைகளை அடையக்கூடியதல்லாமல், தடைபட்டு நிற்பதற்கில்லையென்று விளங்குகின்றது. இதற்காக கல்வியபிமானிகள் சந்தோஷிக்கவேண்டியதல்லவா?

M. H. S. THOMPSON.

* ART. 50. "They should also be on their guard against the tendency to make instruction in all schools within their jurisdiction conform to one and the same pattern."

ART. 116. "It is obviously better that a time-table and curriculum shou'd be developed gradually and naturally in accordance with local needs and circumstances."

NATURAL DEVELOPMENT AND FORCING OF EDUCATION.

வித்யாபிவிர்த்திமுறை:—ஸ்வபாவம், நிர்ப்பந்தம்.

வித்தையை விர்த்திசெய்ய இரண்டு முறைகள் உண்டு. வித்தையென்றாலும் படிப்பு என்றாலும் ஒன்று என்று பலதரம் கூறியிருக்கிறோம். மனம் படியப்பெற்றால் அறிவு உதயமாகுமாதலால் மனம் படியப்பெறும் படிப்பும், அறிவு உதயமாகச்செய்யும் வித்தையும் காரண காரிய தோரணைபற்றி ஒன்றையே விளக்குவதாகும்.

வித்தையை மேன்மேலும் விர்த்திசெய்தல் வித்யாபிவிர்த்தி. இந்த வித்யாபிவிர்த்திசெய்ய இரண்டு முறைகள் உண்டு. ஒன்று ஸ்வபாவம்; மற்றொன்று நிர்ப்பந்தம். ஸ்வபாவம் இயற்கை பற்றித் தானே வளர்வது. நிர்ப்பந்தம் என்பது செயற்கைபற்றிக் "கட்டாயம்" காரணமாக வருவது. (கட்டு × ஆயம் = கட்டுக்குட்படச் செய்யும் கோல்.)

"அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்" என்பது ஒரு பழமொழி. அதாவது, நிர்ப்பந்தத்தால் அசைவற்ற ஜடப்பொருளையும் அசையச்செய்யலாம். மந்தமதிகளும் நிர்ப்பந்தத்தால் வித்யாலக்ஷணம் பொருந்தப்பெறச் செய்யலாம். ஆனால் வித்தையின் முடிவு வித்யாலக்ஷியத்திலிருக்கிறதேயன்றி வித்யா லக்ஷணத்திலில்லை. 'இலக்ஷியம் கண்டதற்கு இலக்ஷணம் இயம்புவர் புலவரோர்' என்பார். இலக்ஷணம்கொண்டு இலக்ஷியம் காண்டல் மந்தமதிகளுக்கு சாத்தியமில்லை.

மனிதன் ஸ்வபாவத்தில் திரிகரணாத்மகன். அதாவது: மூன்றுவடிவம் கொண்டவன்.

(1) தேஹம் ஒருவடிவு; (2) மனம் ஒருவடிவு; (3) அறிவு ஒருவடிவு. (அறிவு என்றாலும் ஆத்மா என்றாலும் ஒன்றே.)

(1) தேஹம்-ஸ்தூலவடிவுடையது.

(2) மனம்-சூக்ஷ்மவடிவுடையது.

(3) அறிவு - ஸ்வயம்ப்ரகாசவடிவுடையது.

இந்த மூன்று வடிவுக்கும் பொருந்தியதாய் மூன்று குணங்கள் உண்டு.

(1) தேஹம்—தாமஸ குணமுடையது. இருளுக்கு சமானமானது. 'There is no darkness but Ignorance' அறியாமையே 'இருள்.' இதற்கு 'ஜடம்' என்றும் சொல்கிறதுண்டு. அப்படியென்றால், நகராமைக் குணமுடையது.

(2) மனம்—ராஜஸகுணமுடையது. அதாவது சதாசுற்றிச் சுழன்ற வண்ணமாயிருக்கும். ('தட்டாமாலை' சுற்றிப்பாருங்கள். என்னமாகவிருக்கிறது? மயக்கமாகவிருக்கிறது அல்லவா?) அதுதான் மருள் (மயக்கம்) மனக்குழப்பம்.

(3) அறிவு—ஸத்துவகுணமுடையது. அதாவது மெல்லிய ஒளி வீசிக்கொண்டேயிருக்கும். இது பிரகாசிக்குந்தன்மையுடையதுபற்றி இருளுக்கு எதிரிடையானது என்று சொல்லலாம்.

இந்த மூன்று குணத்தையும் மந்தம், சுறுசுறுப்பு, சாந்தம் என்கிற லக்ஷணங்களோடு பொருந்தப்பொருத்தலாம.

(1) "தேஹமே நான்" என்கிற பாவம் (நினைவு) உடையவன் எப்போதும் மந்தமதியாகவே யிருப்பன். அவன் என்னதான் யோகவானாயிருந்தாலும் மதிகெட்டுப் போய் விடுவன் என்பது நிச்சயம். உதாரணமாக பஸ்மாசுரனைப் பாருங்கள். அவன் ஈசுவரனையே கண்டு யார் தலையில் அவன் கை வைத்தாலும் பஸ்மமாகப் போய்விடவேண்டுமென்று வரன் வாங்கியிருந்தாலும் பெண்ணுருக் கொண்டுவந்த மாயையைக்கண்டு மோஹித்தபோது ஸந்தியாவர்த்தனம் செய்யாமல் என்னைச் சேரக்கூடாது என்று அவள்கொண்ட விரதத்துக்குப் பங்கம் வரக்கூடாதென்று சொல்ல மதிகெட்டுத் தன் தலையில்தானே கைவைத்துக்கொண்டு சாம்பலாகப் போய்விட்டான். இராவணன் முதலான அசுரர்களெல்லாரும் இப்படி ஒவ்வொரு விதத்தில் மதிகெட்டு அழிந்தவர்களே. ஏனென்றால், அவர்கள் வித்யாலக்ஷியம் 'தேஹம்' அதாவது 'அழிவுள்ளது'—"தஹிக்கப்படத்தக்கது." ஒருவன் எதை நினைக்கிறானோ அதுவேயாகிறான். "யத்பாவம் தத்பவதி." நினைப்பு எப்படியோ சம்பவமும் அப்படியே. ஆகையால் வித்யாலக்ஷியம் குற்றமற்றதாகவிருக்க வேண்டும். இல்லையேல் கேடுவரும் என்பது திண்ணம். இப்பொழுது நடந்துவரும் பாரதப்போர் இதற்கு ஒரு நல்ல உதாரணமாம்.

(2) "மனமே அல்லது புத்தியே நான்" என்று அஹங்கரிப்பவன் இந்திரஜால மஹேந்திர ஜாலங்களெல்லாம் செய்ய வல்லவனாவான். ஆனால் அவன்மனம் ஒருபோதும் சாந்தமடையாது. இதற்கு உதாரணம் பேதாளக் கதைகளில் காணலாம். மனதின்தொழில் பேதபாவனை செய்தலேயாம். அதாவது "நினைப்பும் மறப்புமாயிருக்கும்." இது சஞ்சல ஸ்வபாவமுடையதால் இந்த லக்ஷியம்கொண்டு வித்தைபயின்றால் கூத்தாடி, குரங்காட்டிகளைப்போல், நிஷ்பிரயோசனமான ஜாலவித்தைகள்செய்து புரட்டு உருட்டுச் சாமர்த்தியத்தில் வல்லவராகி உலகுக்கு ஓர் நாசகாலராகவிருந்து தாமும் நாசமடைவார்கள். இக்காலத்தில் சோற்றுப்படிப்பு படித்துவிட்டு விதண்டாவதம் செய்வல்லவராயிருந்தும் தரிசனசக்தி (Faculty of observation) குன்றி ஜனங்களுக்கு ஒரு சகாயமும்செய்ய ஆற்றாதவராய் பணம் பறிப்பதிலே கண்ணாயிருப்பவர் இந்த லக்ஷியக்குறைவினால் இந்த கதியானவர்களே.

(3) "அறிவே நான்" என்னும் ஆத்மபாவம உள்ளவர் அறிவுருவாகி ஸ்வயம்பிரகாச ஆத்மதரிசனமபெற்ற ஆனந்த மயமாவார்கள்

என்பது திண்ணமாயினும் தேஹம், மனம் என்கிற இருகரணங்களின் உதவியின்றி இவ்வுலகை யுணர்ந்தொழித்து ஸம்ஸார பந்தத்தை யறுத்து ஸ்வதந்திரனாக வெளிப்படுதல் (அறிவுவெளிகாண்டல்) அசாத்தியமேயாம்.

ஆகையால் உண்மையான வித்பாலக்ஷியம் மனிதனுடைய திரிகரண சுத்தியைக்கொண்டு அடையப்பெறும் "பேரறிவு" தானேயாக விருக்கவேண்டும். இதுதான் பூர்வந்தொட்டு இந்தியாவில் வித்தையின் நோக்கமும் லக்ஷியமுமாக விருந்துவருகிறது. இதற்கு ஹானிவராமல் நடந்துகொள்ளல்வேண்டும். ஆகையால், குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுப்பதில் "Cleanliness"—சுத்தம்சுசி படியப் பழக்கல்வேண்டியது முக்கிய நாட்டமாயிருக்க வேண்டும்.

"பானைசுசி சட்டிசுசி
பாத்திரங்கள் வீடுசுசி
ஆனதொரு தன்தேகம்
அளவில்லா நல்லசுசி,"—

என்று கூறியபடி புறப்பொருள் சம்பந்தமாய் சுசிபாராட்டும் முக்கியமான தேஹப்பயிற்சியும்; அப்படியே,—

"அத்தையார் பெற்றதனை
அம்மானார் தன்தகப்பன்
பர்த்தாவி னுற்றோர்தன்
பந்துவென வெண்ணுமனம்"—

என்று கூறியபடி மனவிகாரங்களும் அழுக்காறும் அற்றுவிளங்கப் பழகின மனப்பயிற்சியும் யாருக்கு அமைந்திருக்கிறதோ அந்தப் பெண்கொடியே இல்லறத்துக்கிசைந்த பெண்ணுவள் என்று விவேகரஸத்தாலாட்டில் விவேகத்தாய் தன் குழந்தைக்குத் தன் சரித்திரத்தையே சொல்லிப் புத்தி புகட்டுகிறாள்.

தேஹசுத்தம் மனோசுத்தம் இரண்டும் அமையப்பெறறிருந்தால் இவை மூலமாக விளங்கும் ஸ்வயம்பிரகாச அறிவும் சுத்தம் சுசிபற்றியே நிற்கும்.

அப்படிப்பட்டவளே இல்லறத்துக் கிசைந்த பெண் என்று அக்குழந்தையின் தகப்பனார் தம் இயல்பான விவேக ஞானக்கொள்கை வழிபற்றி தன்னைக்கொண்டார் என்று,—

"அளிகொண்ட மாலையிட்ட
அன்புடைய நாயகனார்
வெளிவேலை தீர்ந்தபின்பு
வீட்டில்வரும் வேளையிலே,

"மதியிலே மந்திரியும்
மனத்தயவில் மாதாவும்
மதிபோற் குளிர்முகமும்
வார்த்தையிலே சீனியுமாய்,

"வணங்கியுப சாரமுடன்
வந்தேற்றுக் கைகொடுத்தும்
இணங்கியிடும் வார்த்தைகளால்
இயல்புகளைத் தானறிந்தும்,

"மாறாத் துயரமெல்லாம்
மாற்றிமண வாளனவன்
ஆறாத் துக்கமெல்லாம்
ஆற்றுமின்னாள் வேறுமென்றார்."

இப்பாட்டுகளினால் சாந்தநிலைபெற்ற சாத்விக குணசிரோமணியின் லக்ஷணங்கூறி, இந்தச்சாந்த நிலைதானே பெண்ணில் மணியாவாள் தனக்கு புகழத்தக்க சிங்காஸனமாகும் என்றும் அந்த சாந்த நிலைகுலையா திருத்தலே சிங்காசனத்திருந்து பெண்ணரசு நடத்தலாகுமென்றும் சூசிப்பிக்க அடுத்தபாட்டில் அதை வெளிப்படையாகச் சொல்கிறார்.

"வெறிகொள்ள வீட்டினிலே
விபரீதம் மெத்தவரும்
பொறுமைநிலை பெண்மணிக்குப்
போற்றிய சிங்காசனமாம்."

எப்படியாகிலும் பாலும் சீனியும் கலந்தாற்போல ஸ்வபாவமறிந்து சுத்தம் சுசிபடியப் போதிப்பதே இயற்கைதர்மத்தையொட்டிய ஸ்வபாவமுறையாம்.

பிரம்பாலடித்தும் வாயாலடித்தும் கெடுபிடி தடபுடல்செய்து குழந்தைகளை பீதிக்குள்படுத்தி (பயப்படச்செய்து) போதிப்பான கருத்துக்கிசைய அவன் இஷ்டப்படியே நடக்க, பேயாட்டி, குரங்காட்டி செய்வித்தைபோல், பாலபோதம் செய்வதே கிரப்பந்தமுறையாம். இவ்விருமுறைகளில் எது வாசியென்று இதை வாசிப்பவர்களே தேர்ந்து துணியட்டும்.

THE FIRST NEED OF THE VILLAGE.

(The Hon'ble Sir C. Sankaran Nair, Kt., C.I.E.)

THE INFLUENCE OF EDUCATION.

The first need of the village is education suited to its needs. "The teacher in ancient days moulded the life of the boy, and imparted to him the education needed for him. The village schools now scarcely exercise any influence on village life. The school is not in harmony with the needs of the village. The curriculam of studies is the same for all the castes and classes in the Presidency, for towns and villages, irrespective of the needs of the student. The teacher is town-bred. The official Director of educational studies has his eye not on the requirements of any village but on the Madras Presidency as a whole. The courses of study prescribed are really formulated for the use of town boys and are calculated to draw the boys away from villages. The studies are literary and do not make the village boys better farmers or agriculturists. To the girls, such a course of studies is thoroughly unsuited. We want the entire curriculam to be modified to suit the needs of a particular village. Interest may diverge with each village or community, and the children are brought up in the environment peculiar to their village and community. All this can only be done by the members of the village cummunity itself. They have to meet and discuss the needs of their village, and the purposes to be attained by attendance at schools. An official Inspector trying to find out what they want and carrying out the wishes so ascertained can never be a sufficient substitute. A shool under village supervision will interest and attract both women and men. We know now that when schools are started in villages in which teachers known to them teach subjects like music, the women flock to them. That the officials may sometimes be white men need make no difference. A school under the management of the members of a village cummunity, teaching the subjects required by them, will also introduce a new element of interest in the village community. They will take a pride in this school, which will be a meeting place for them.—The Hon'ble Sir C. Sankaran Nair, (Educational Member of Council) in the Modern Review.

கிராமவாசத்துக் கின்றியமையாத நாட்டுப்படிப்பு.

"The basis of village life must be a proper system of education devised to suit the needs of the village."—*The Hon'ble SirC.Sankaran Nair.*

படிப்பு என்றால் ஏட்டுப்படிப்பு மட்டும் படிப்பாகாது. மனம்படியக் கற்றலே படிப்பாகும். "கற்றோர் கல்வியும் மனப்பழக்கம்" என்றார் ஔவையார். மனப்பழக்க மில்லாத படிப்பு படிப்பாகமாட்டாது. கிளிப்பிள்ளையைப்போல் சொன்னதைச்சொல்லக் கற்பதினால் பிரயோசனமில்லை. வெளியாடம்பரம் மட்டும் மனப்பழக்கத்துக் கனுகூலமாகாது. எதையும் திரிகரண சுத்தியோடு பயிலவேண்டும். திரிகரண சுத்தியாவது மனம், மொழி, மெய் யென்கிற மூன்று கரணங்களும் ஒத்துழைத்தலாம். மெய் (உடல்) கொண்டு பழகுவதெல்லாம் காயிகம் ஆகும். இதையே "Physical Exercise" என்பர் ஆங்கிலத்தில். மனம் கொண்டு பழகுவது மானஸம். இதை "Mental Exercise" என்பர். இந்த மனப்பழக்கமெல்லாம் சித்தவிருத்தியும் சித்த-விருத்தி நிரோதமுமாயிருக்கும். குழந்தைகள் எதைக் கண்டாலும், இது என் இப்படி யிருக்கிறது? அது என் அப்படி யிருக்கிறது? என்று காரண காரிய தோரணை யறிந்துகொள்ளச் செய்யு முயற்சி சித்தவிருத்தியாகும். இது இயல்பாயமைந்துள்ளது. சித்தம் வளர்ந்து நினைக்கும் சக்தியுண்டாகி எண்ணம் விரிவது மனோதர்மம். எப்படியென்றால் மனதின் இயற்கையாயமைந்த சக்தியின் விலாஸம். இந்த சித்தவிருத்தி வளர்ந்து பிரவாகமாக ஓடும்போது விஷயப்பற்று ஜாஸ்தியாகும். விஷயப்பற்

றின்றி சித்தவிருத்தியில்லையானாலும், அது மட்டுக்குமிஞ்சி யதிகரித்தால் ஆபத்து விளைக்கும். ஆகையால் ஓடுகின்ற ஆற்றுநீர் கரை கடந்து போகாது காப்பதுபோல் சித்தவிருத்தியினால் விஷயப்பற்றில் விழுந்து மனக்கண் பஞ்சடைந்து போகாதபடி அதை நிரோதம் செய்துவரல்வேண்டும்: அதாவது தடுத்தாண்டு வரவேண்டும். இது மனதை விவேகஞானத்தோடு சேர்ப்பதால் மட்டுமே சாத்தியமாகையால் இதற்கு "யோகம்" என்கிற பேர் வழங்குகிறது. சித்தவிருத்தி ரூபமான மனசு விஷயப்பற்றினாலே வளரும் ஸ்வபாவமுடையதாயிருப்பதால் அதற்கு நித்தியாநித்திய வஸ்து விவேகம் இயல்பாக இல்லையாகும். பிசைந்த மண் குயவன் தொட்டபடியெல்லா மிசைந்து பாண்டமாவதுபோல், பக்குவ மனசு ஆத்துமா நினைத்தபடியெல்லாம் இசைந்து 'அதுவதுவாகும்.' பக்குவ மனஸ்தானே சித்தம் என்று சொல்லப்படும். இது பாவனா சக்தியை யொட்டி நிற்கும். பாவனம்=நினைத்தல். (இதில் மறத்தலுமடங்கும்). நினைப்பின்றி மறப்பும், மறப்பின்றி நினைப்பும் இல்லை. இப்படி 'நினைப்பு-மறப்புமா'யிருப்பதே மனம். அவிவேகத்தினால் வ்யவஸ்தையின்றி விஷயப்பற்றில் மூழ்கிக் கிடக்கும் மனதை விவேகஞானத்தோடு சேர்த்துப்பூட்டி அதற்கிசைந்து நடக்கும்படி செய்தலே மனதைப் பழக்குதலாகும். இப்படி மனவினால்செய்யும் காரியமெல்லாம் மானஸம். இது 'காயிகம்' என்கிற தேஹ சம்பந்தமான அப்பியாஸங்களுக்கு ஒத்திருக்கவேண்டும்.

மானஸம் (Mental Exercise) காயிகம் (Physical Exercise) என்கிற இரண்டுக்கும் மத்தியில் அவ்விரண்டையும் இணைப்பதாயிருப்பது வாசகம். அதாவது வாக்கு. மனமும் வாக்கும் ஒத்திருந்தால்தான் தேஹம் சொன்னபடி கேட்கும்.

வாக்குசுத்தம் (வாய்மை) இல்லாவிட்டால் மனோசுத்தம் (அஹத்தூய்மை) உண்டாகமாட்டாது. மனம் அசுத்தப்பட்டால் அறிவிழந்துபோம். ஆதலால் தான் இராஜாதி ராஜர்களானாலும் பொய் சொல்ல அஞ்சுவது. ஹரிச்சந்திரமகாராஜா எல்லா இன்னலையும் அநுபவித்துக்கொண்டு பொய் சொல்ல இசையாதிருந்ததின் மர்மம் இது தான்.

"பதியிழந்தனம், பாலனையிழந்தனம், படைத்த
நிதியிழந்தனம், இனி நமக்குளதென நினைக்கும்
கதியிழக்கினும், கட்டுரையிழக்கிலேம் என்றான்
மதியிழந்து தன் வாயிழந்த மாதவன் மறைந்தான்."

"அரசன் தன் பட்டணத்தை (தலைநகரை) யிழந்து தவித்தான்; பாதகமில்லை. பெற்ற பாலனை யிழந்தான்; பாதகமில்லை. படைத்த நிதி யிழந்தான்; பாதகமில்லை. இனி வரும் கதியாகிய மோக்ஷஸாதனத்தை யிழந்தாலும் இழப்போம்: வாக்குத்தவரமாட்டோம்" என்றான். வாக்குத் தவறினால் அஹத்தூய்மை போய்விடும். அஹத்தூய்மை போனால் மனத்தெளிவு மாறிவிடும். மனத்தெளிவு போனால் மாயை வந்து மூடிக்கொள்ளும். அறிவிழந்து தவிக்கவேண்டும். அப்பப்பா! அந்தக்காரியம் செய்ய எங்களாலாகாது என்று விட்டார் விவேகசாலியான அரிச்சந்திர மஹாராஜா. உலகத்தில் ஸத்ய விருதத்தை யனுஷ்டிப்பவர் யார் இருக்கிறார்கள்: ஒருவருமில்லை யென்று வசிஷ்டரோடு சபதம் கூறிக்கொண்டு அரிச்சந்திரனைப் பொய் சொல்லச்செய்யாவிட்டால் என் தபஸில் பாதியை இழந்து விடுவேன் என்று பந்தயம் கட்டி வந்த விசுவாமித்திர ரிஷி தன் சபதம் பலிக்காமல் தபவிழந்து அதனால் தன் தேஜஸ் (மதி) இழந்து மறைந்தார். இந்த மர்மம் கிராமவாஸிகள் எல்லாருக்கும் தெரியும். பட்டணவாஸிகள் அண்டப்புளுகர்களாயிருப்பது இதன் மர்மமுணராமையினாலன்றி வேறல்ல. முழுப்பூசினிக்காயைச் சோற்றில் மறைப்பவனைப்போல் அகாதமான புளுகையெல்லாம் கட்டி விட்டு ஸர்க்கார் சட்டத்துக்குள் மட்டும் அகப்பட்டுக்கொள்ளாமல்

ஜாக்ரதையாக விருந்து வருகிறார்கள். ஐயோ! ஸர்க்கார் சட்டம் எந்த மட்டும் செல்லும்! "தலைக்கு மிஞ்சின ஆக்கினையில்லை; ஆஸ்திக்கு மிஞ்சின அபராதமில்லை" என்பது கிராமத்தார் சொல்லும் பழமொழி. அறிவோ ஆஸ்திக்கும் பாஸ்திக்கும், எட்டாதது. ஐசுவரியமெல்லாம் அறிவின்றேல் எதுவும் ஐசுவரியமாகாதபடி செய்யவல்லது. அறிவை இழந்துவிட்டால் அப்புறம் மனிதனுக்கு என்ன இருக்கிறது! மனித ஜன்மமே போய்விடுகிறது. அறிவிழந்தபின் மனிதன் ஜடமாய்விடுகிறான். பிரஹ்லாதனுக்கு பகவான் பிரஸந்நராகி யோகவித்தை முழுவதையும் கற்றுக்கொடுத்து "அப்பா, இனி உன்னைத் துக்கமும், ஸம்ஸாரமும் பற்றாது: நிர்ப்பயமாய் உலகானுசரணார்த்தம் நீ இராக்ஷஸர்களுக்கரசனாயிருந்து வருவாயாக. உனக்கு வேண்டிய 'வரத்தைக்'கேள்! தருகிறேன்" என்று சொன்னபோது, அக்குழந்தை என்ன கேட்டான்?

"ஸ்வாமி! யோகவித்தையினால் தேஹசம்பந்தத்தினால் பாதிக்கப்படாத அறிவைப் பெற்றேன். இந்த ஸாம்ராஜ்யத்தை ரக்ஷித்துப் பாதுகாக்கும் வழி தான் தெரியவேண்டும். "யோக க்ஷேமம்" என்கிற இரண்டில் பின்னதில்லாது முன்னதுமட்டு மிருந்தால் அவன் சீக்கிரத்தில் அதை யிழந்து யோகப்ரஷ்டனாய் விடுகிறான். "அப்ராப்தப்ராபணம் யோக: க்ஷேமோ லப்தஸ்யபாலநம்" என்றிருப்பதால் தேஹ ஸம்பந்தத்தினால் பாதிக்கப்படாத தெளிந்த அறிவாகிய பெறற்கரிய பேறு பெற்றேன் தாங்கள் பிரஸாதித்த யோக வித்யா ஸாம்ராஜ்யத்தினால். அப்படிப் பெற்றதைப் பாலநம் செய்ய (காப்பாற்ற) ஒரே வழிதானுண்டு. அது பகவானை மறக்காமல் பக்தி செய்து வருதலொன்றினாலே சாத்தியமாம். ஆகையால் எந்த தேஹத்தை யளித்தாலும் எந்த ஜன்மம் எடுக்கச்செய்தாலும் சரி, எனக்குச்சிந்தை யில்லை: ஆனால் எந்த தேஹத்திலிருந்தாலும் உம்மை மறக்காத பக்தியை மட்டும் தந்தருளவேண்டு"மென்று கேட்டான்.

பகவானும் அவனுடைய சாமர்த்தியத்துக்கு உவந்து அப்படியே வரம் அளித்தார்.

கிராமத்தார் இப்பொழுது வேண்டுவதெல்லாம் உண்மையான வித்யாப்பியாஸம். இது எட்டுப்படிப்பு மாத்திரம் ஆகாது. எத்தொழிலில் எத்துறையில் இறங்கியுழைத்து ஜீவனம் செய்யவேண்டியிருந்தாலும் சரி, மனம்படிந்து, தேஹமும் படிந்து நடக்கப் பழகலாம் பாக்கியம் வேண்டும். விவேகம் மட்டும் சிந்தை நிறைந்திருந்தால் விவேகசிந்தாமணியாகிய வரப்பிரஸாதத்தால் எல்லா பாக்கியமும் பெற்று வாழலாம். விவேகசூந்யமான வித்தை அவித்தையே தானாகும். ஆகையால் அவிவேகத்தைப் போக்கி விவேகத்தைக் கொடுக்கும் வித்தை வேண்டும். இது கிராமத்தார் தாமே செய்முயற்சியால் ஸித்திக்க வேண்டுமே யன்றி அவர்களுக்காகப் பிறர் செய்யும் முயற்சியால் ஸித்திக்காது. "கட்டிக்கொடுத்த சோறும் சொல்லிக்கொடுத்த வார்த்தையும் எத்தனை நாளைக்கிருந்துதவும்?" என்பது கிராமத்தார் சொல்லும் பழமொழி. "யோக்யன் தானே பாக்கியனாவான்" என்றால், "அது வேதாந்தம் கூடாது" என்கிற வித்யா விற்பன்னர்களு மிருக்கிறார்கள். அவர்களால் கிராமத்தாருக்கு இடையூறு விளைக்கலாகுமே யன்றி அநுகூலம் செய்வது கூடாமையாக விருக்கிறது. சாதகத்துக்கிடமின்றி பாதகத்துக்கிடந்தரும் ஏற்பாடு எக்காலத்தும் விலங்கம் விளைக்குமேயன்றி ஸமஷ்டிவாழ்க்கைக்கு நல்லங்கமாகாது; இதை உண்மையாளர்கள் உள்ளபடி ஆய்ந்தோய்ந் துரைரல்வேண்டும்.

இதற்கு இன்றியமையாத சாதகம் என்னவென்றால் கிராமவாசத்தின் உண்மைநிலையுணரல்வேண்டும். இந்த உண்மை யுணர்வது இலகுவான காரியமில்லை. ஸமஷ்டி வித்தையில் பழகினவர்கள் தானே உண்மை யுணர்ந்து ஓதவல்லவராவார். இப்படிப்பட்டவர்கள் நம்மவர்களாக விருந்து [illegible]வேண்டும். இதையே ஸர் ஜா[illegible] சொல்லி வற்புறுத்தியிருக்கிறார். அவர் வாக்கை அடுத்த சஞ்சிகையில்பிரசுரிப்போம்.

MAIDEN SACRIFICE OF MODERN SOCIETY.

"Not you, adored father, but I am to be the sacrifice . . . . Only the other day I heard how bands of noble-minded youths had gone from door to door to raise funds for the relief of some people in far away South Africa. But is there no one among them to feel for their own people? . . . . Then I resolved to save you all and made a sign to the Divine Mother that I would not delay obeying Her merciful call. May the conflagration I shall kindle set the whole country on fire . . . . And now, dear father, farewell! The hour of sacrifice is come."—*Suchalata.*

தற்கால தாடகை வாங்கும் கன்னியாபலி.

I

உத்தம சித்தர்க ளாம்யுவ புருஷர்கள்
எத்தனை யோபேர்கள் சுத்தம னத்துடன்
அத்தனை நம்பியே ஆப்பிரிகா சென்ற
மெத்தவு மேழைக ளான ஜனர்க்குச்
சித்தந்தா னிரங்கிச் சீரா யுழைத்தனர்;
அத்தனை பேர்களி லெத்தனை பேர்கள்தான்
உத்தம குலத்திற் பிறந்தென் போலிடர்
உற்றவர்க் குடன்பிறப் பாம்நல சித்தமுள்ளார்?

II

ஐயகோ! தெய்வமே! யாரிடம்போய் முறையிடுவேன்!
வெய்யகோ! என்னரசே! என்னுள்ள முருகுவதை
மெய்யவோ! உணர்ந்து நீ புணராது போலிருப்ப
தையவோ! என்னதனு லென்றேழை யறிகிலனே!
பையநான் பசுங்குழந்தை படுந்துயரை யுன் கண்ணால்
வெய்யநீ பார்த்திருந்தும் தீர்க்கிலையா லிப்போதே
மெய்யவென் னம்மையிடம் முனைந்துநான் முறையிடு
செய்யவெனக் கிதுசமயம்! வதுவையாண் டடிமை கொள்வாய்!

III

அம்மவோ! அன்னையே! அலறுகிறேன் உனைக்கூவி
எம்மவர்கள் இப்புவியி லிதயங்கல்லாச் சமையலுற்றார்!
செம்மையெல்லா முருவெடுத்தே யருள்வடிவா யமர்ந்தவுன்றன்
வெம்மைமிகு பயங்கரமாம் திருவுருவைக் காட்டியென்றன்
துன்பமெல்லாந் துடைத்தென்னைத் தூயவளாச் செய்துன்றன்
அன்புமிகு திருப்பாதம் தந்தென்னைக்காக்கவேண்டும்.
வன்புதுன்பு நிறையுலகில் வாழ்ந்திருக்கத் தரிக்கிலேனால்
அன்பொழுகுன் திருக்கமல பாதமெனக் குதந்தருள்வாய்!

IV

"துர்க்காலக்ஷ்மி! ஸரஸ்வதீதேவி மஹிஷாஸுரமர்த்தனீஜய!
வித்யாலக்ஷ்மி ப்ரஹஸ்பதீம்வந்தே அத்யாத்மிக சாந்தநீதுபவ
வித்யாரம்பதினே விஜய தசமியாம் ஹேஅமிர்ததே!
துவாம்வந்தே து ஸர்வதா!"—என்றுன்னை மனமோய
வோதியேநான் துதித்தழைக்க, ஒளித்திருப்பதுனக்காமோ!
ஆதியனாதியு மாகியருள்வடி வாயுள்ளத் தமர்கல்ல
சோதியேசுடரே! சுடரொளியின்சுடே! சூடாயிருந்துள்ளூன் வளர்க்குதற்
றுதியே, தாயே! தரிக்கிலேனித்தேஹம் தஹியம்மா ஸ்வாஹா! ஓம்.

V

"முன்னையிட்டதீ முப்புரத்திலே
பின்னையிட்டதீ தென்னிலங்கையில்
அன்னையிட்டதீ அடிவயிற்றிலே
நானுமிட்டதீ மூள்க மூள்கவே!"—
என்று சொன்னார் வாக்கை நம்பி
இன்றுன்னைத் துதிக்கிறேன் நான்
நன்று தேஹம் விடுதலென்றே நான்மூட்டு மிச்சிறுதீ
என்றும்விடா திவ்வுலகில் காட்டுத்தீயாவளர்ந் தெரிய வரமெனக்கு நீயருள்வாய்!

CYCLONE DAMAGES.
சுழல்காற்றினால் நேர்ந்தசேதங்கள்.

இந்த நவம்பர் 22, 23உகளில் சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு ஜில்லாக்களின் கடற்கரையோரமான புரங்களில் அதிக பலமான சுழல்காற்றடித்து அதனால் உண்டான சேதங்கள் மிகுதி. காற்று என்பது வாயுவின் இயக்கம். இது உண்டாகும் விதத்தை கடற்காற்று, தரைக்காற்று என்னும் தலைப்பின் கீழ் முன்னமே விரித்துக் கூறியிருக்கிறோம். சீதோஷ்ண பேதத்தினால் சமுத்திரத்திலிருந்து நிலத்துக்கும், நிலத்திலிருந்து சமுத்திரத்துக்குமாக வாயுவினியக்கம் தோன்றுவதுண்டு என்று சொல்லி நிரூபித்தோம்.

இப்பொழுது இந்தக்காற்று, பெருங்காற்று, புயற்காற்று, சுழல்காற்று எனவுள்ள விவரத்தைச் சிறிது எடுத்துச் சொல்லுவோம். "தென்றல் முற்றிப் "பெருங்காற்ரு" யிற்று" என்பது பழமொழி. தென்றல் என்பது இளங்காற்று. வாயுவின் இயக்கம் மெதுவாயின்றி மிக்க விரைவாகவும் பெருந்திறையாகவுமிருந்தால் அதற்குப் பெருங்காற்று என்று சொல்கிறது. இந்தக்காற்று அடித்தால் மேகங்கள் சிதறிப்போகும். ஏனெனில் இதன் இயக்கம் பூமியிலிருந்து மேகமண்டலம்மட்டும் பரவிப் பெருமிதமாய்க் கூடியிருப்பதாலும் இதில் குளிர்ச்சியென்பதில்லையாதலாலும் இக்காற்று மேகங்களின் மேல்பட அவை ஒதுக்கப்பட்டுச் சிதறுண்டுபோகின்றன. மேகம் என்பது நீராவிப்படலமன்றி வேறல்ல. இது ஆவியாகச் சுமந்துள்ள நீரை மழையாகப் பொழிவதற்குக் குளிர்ச்சி வேண்டும். உலையில் மூடின பாத்திரத்தின்மேல் ஒட்டிய ஆவி, குளிர்காற்றுப் பட்டவுடனே நீர்த்திவலைகளாக மாறுவதைப் பரீக்ஷித்துப்பாருங்கள். புயல்காற்று என்பது மழையோடு கலந்து அடிப்பது. இது மேகங்கள் கூடிக்குமுரிக்கொண்டு இடம்விட்டு இடம்பாய சீதோஷ்ணநிலை பேதத்தால் உண்டாகும் காற்றுக்குப்பேர். காற்றுக்குள்ள இயக்கத்தின் வலியெல்லாம் பூமியின் ஆகர்ஷண சக்தியினாலும் காற்றின் லேசுத் தன்மையாலுமே யுண்டாகிறது. மேகங்கள் சீதோஷ்ண பேதத்தால் அதிக வேகமாகவும் திடீரென்றும் இடம்விட்டு இடம் மாறியோடுவதால் புயல்காற்று உண்டாகிறது. இந்தக் காற்றினுடைய வேகம் கப்பல்களையெல்லாம் மோதியுடைத்து விடும்படியான அவ்வளவு பலமுள்ளதாயிருக்கும். மழைபெய்து பூமி இளகியிருக்கும்பொழுது பலமான காற்று அடித்தால் மரங்கள் வேரற்று விழுந்துபோம். கடலில் அலைகள் வெகு கொந்தளிப்பாயிருக்கும், பார்க்கப் பயங்கரமான இக்காட்சியைக் கண்டுணர்ந்தால் தான் அதன் கொடுமையும் மஹிமையும் விளங்கும். கொடுமையென்று சொன்னது அதன் அழிக்கும் சக்தியை ஒட்டியும், மஹிமையென்று சொன்னது அதன் வல்லமையின் சிறப்பையொட்டியும் கூறியதாக உணர்க.

சுழல்காற்று என்பது நீர்ச்சுழி சுற்றிக்கொண்டு கீழே யிறங்குவதுபோல் காற்றுச் சுழன்றுகொண்டு மேலேறிப் போவதனால் உண்டாகிறது. காற்று ஒரு திசையிலிருந்து மறு திசைக்கு அடிக்கும்பொழுது அது நேரோட்டமாக ஓடுகிறது. காற்று கீழேயிருந்து நேர் மேலே அதிவேகமாக ஓடும்பொழுது அது சுழன்றுதான் மேலெழல்வேண்டும். பீரங்கிவாயில் குண்டுவைத்துச் சுடுகிறார்களே அதுவும், அதிவேகமாய் எறியப்பட்ட அம்பும் குறிதப்பாது பாய்ந்து தாக்கவேண்டுமானால் சுழன்றுகொண்டேதான் போகும். அப்போதுதான் அதற்கு விசையும் ஒழுங்கும் ஒத்துவரும். சுடப்பட்டகுண்டு அல்லது எய்யப்பட்ட அம்பு காற்றைக் கிழித்துக்கொண்டு நேர்முகமாகப் போகவேண்டுமானால் தமர் கடைவதுபோல் சுழன்றுகொண்டுதான் போகவேண்டும். இருசக்திகள் ஒன்றையொன்று எதிர்த்துத் தாக்கிக்கொண்டு நிற்கப் புகலிடம்

சிறிது நேரங்கால் அது சுழன்றுகொண்டே அதுவழியாகச்செல்லும்: வேகத்தின் அதகரிப்புக்கும் அதன் எதிர் மறுப்புச் சக்தியின் பலத்துக்கும் தக்கபடியிருக்கும் சுழற்சியின் வேகம். உதாரணமாகக் காற்றாடியந்திரத்தைப் பாருங்கள். காற்றாடியைக் கையில் பிடித்துக்கொண்டு ஓட ஓட அது அதிகமாகச் சுழல்கிறது. எதிர்வேகம் குறையக் குறைய சுழற்சியின் வேகமும் குறைகிறது. சென்றமீ நேர்ந்த சுழல்காற்றினால் தென்னாற்காடு ஜில்லாவிலும் புதுச்சேரியிலும் சேதம் அதிகம். ஜனங்களில் இறந்தவர்கள்மட்டும் 1000-த்துக்கு மேலிருக்கும். கூரை குச்சுகளெல்லாம் காற்றில் தூக்கிக்கொண்டு போகப்பட்டன. மண்வீடுகளும், செங்கல்வீடுகளில் மண்ணால் கட்டிய வீடுகளும் அதிகமாகச்சேதமாய்விட்டன. கிராமாந்திரங்களில் 100, 200 வீடுகளிருந்தால் அவற்றில் 50, 60 தான் தங்கின. மற்றவை சேதமாய்விட்டன. தென்னைமரங்கள் லக்ஷக்கணக்காய் விழுந்து அழிந்துவிட்டன. தென்னிந்தியா ரயில்வேயில் மரங்கள் விழுந்தும் தந்தி ஸ்தம்பங்கள் பறித்துக்கொண்டு போகப்பட்டும், ரயில்பாதைகள் வெள்ளத்தில் உடைத்துக்கொண்டும் இப்படியாக மிகச் சேதங்கள் நேர்ந்துவிட்டன. சில நாட்களுக்கு போக்குவரத்து சரியாக நடக்காமல் நின்று பிறகு பாதையை ஒக்கப்பண்ணி ரயில் விட்டுவருகிறார்கள். ஆயிரக்கணக்கான ஜனங்கள் வேலையற்று உண்ணச் சோறும் தங்க நிழலுமின்றித் தவிக்கிறார்கள். தனவந்தர்கள் இவர்களை ஆதரித்து வந்தாலும் அது போதாமலிருக்கிறது. சர்க்கார் ரெவினியூபோர்டு மெம்பர் ஒருவரை யனுப்பி விசாரிக்கச் சொன்னார்கள். அவரும் மேலே சொன்ன விவரங்களை உறுதிப்படுத்தி ரிபோர்ட்டு அனுப்பியிருக்கிறார். வீடுகள்கட்ட காட்டிலிருந்து மரங்கள் வெட்டிக்கொண்டுபோக சகாயம் செய்துவருகிறார்கள். சாலையில் விழுந்துபோன மரங்களையும் ஏலத்தில் விற்று வருகிறார்கள். இந்தச் சுழல்காற்றுக்கு மையம் புதுச்சேரியண்டையாகையால் அங்கே சேதம் அதிகம். ரயில்வண்டித் தொடர்கள் இப்படியும் அப்படியுமாகப் பக்கம் மாற்றி விழுந்து போயிருந்தன. இதிலிருந்து சுழல்காற்றின் சுற்றுமார்க்கம் இப்படியென்று நன்றாகத் தெரியலாயிற்று. வாயு பலத்துக்கு அதிஷ்டான தேவதை. ஆகையால் அது அதன் பலத்தைக் காட்டியது ஏழை ஜனங்களுக்குத் துன்பமாய் முடியினும் இது எல்லாரும் அருமையாய் உணர்ந்தறியவேண்டிய பிரகிருதி வித்யாபாடங்களில் ஒன்றாம்.

நம்முன்னோர்களான பெரியோர் இதை வெகு அழகாக சாமான்ய ஜனங்களுக்கும் விளங்கும்படி ரூபகமாக (புராணக் கதையாக)ப் போதித்திருக்கிறார்கள். பஞ்ச பூதங்களின் தத்துவமர்மங்களையும் பஞ்சலிங்கங்களாக ஒவ்வொன்றையும் அதற்குரிய ஸ்தலமொன்றில் நிர்ணயித்து அதற்கு கோயில் புராணமும் ஸ்தலபுராணமும் கற்பித்து எழுதியிருக்கிறார்கள். இந்த உலகமே கற்பனையினாலுண்டானது. சிருஷ்டிக்கு ஜீவேசுவரபேதமில்லை. சமஷ்டி வியஷ்டி ஏற்பட்டதே பாவனையினால். சமஷ்டிஜீவனை ஈசுவரனென்றும், வியஷ்டிஜீவனை மனிதன் என்றும் சொல்லுகிறோம். சங்கற்பமின்றிச் செயலில்லை. ஈசுவர சங்கற்பங்கள் பிரகிருதி தர்மங்களாக விளங்குகின்றன. ஜீவசங்கற்பங்கள் குணவிசேஷங்களாக விளங்குகின்றன. பிரகிருதி தர்மங்களுக்கும் குணவிசேஷங்களுக்கும் எவ்வளவுக்கெவ்வளவு பொருத்தமிருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு மனிதனுடைய மனோசக்தியும் ஈசுவரனுடையமாயாசக்தியும் நேரொத்துநின்று விளங்கும். பிரகிருதி தர்மங்கள் பொய்ப்பதில்லை. அப்படியே ஒருவனுடைய மனோ தர்மமும் வாய்மைபற்றி சத்தியம்பிறழாது நின்றால் அவன் பிரகிருதியாத்மகனாகிறான். அதாவது பிரகிருதியோடொன்றுபட்டு விளங்குகிறான். ஒன்றுபட்ட விடத்தில் எல்லா மர்மங்களும் வெளியாகும். அப்படியென்றால்

வெளிப்படையாகும்—அதாவது அதன் உண்மையை மறைத்துக்கொண்டிருக்கிற திரை (Veil of Nature) விழுந்துபோம். திரை விழுந்துபோனாலும் விஷயவாசனையின் விசேஷத்தால் மனம் பஹிர்முகப்பட்டு விஷயங்களைப் பற்றி நிற்கும். பற்றி நின்றாலும் அந்தர்முகப்பட்டு உண்மைத் தரிசனம் செய்யும் சக்தியும் வாய்ந்ததாயிருப்பதால் உண்மையை உள்ளபடி ஆய்ந்துணர்ந்து அப்பியசிப்பதினாலே வாசனாக்ஷயமுண்டாகி மனம் நிர்விஷயப்பட்டு நிற்கும். இதுவே உண்மையானதியானம். "தியானம் நிர் விஷயம் மன:" என்று சுருதியும் முறையிடுகிறது. மனம் நிர்விஷயப்பட்டு நின்றால் தேஹமே தேவாலயமாகிறதென்றுசொல்லப்பட்டிருக்கிறது; ("தேஹோ தேவாலய ப்ரோக்த:" என்பது சுருதிவசனம்.) அந்த தேஹத்திலுள்ள ஜீவன் கேவல சிவனாகவும் ஆகிறது. அறியாமையை (பிரகிருதி தர்மங்களை அறியாது மயங்குகிற மயக்கத்தை) விட்டு புத்தி நிர்மலப்பட்டவிடத்து விஷயப்பற்றையறுத்துச் சிந்தித்தால் சிந்தனைகழன்ற சிந்தையில் (நான் சிந்திக்கிறேன். என்கிற அஹம்பாவமழிந்த சிந்தையில்) அறிவின மஹிமை விளங்குகிறது. 'தீர்க்க தரிசனம்' என்று சொல்லும் முழுக்கண்பார்வைபெற இந்த வழியொன்றே தவிர வேறில்லை. அதற்கு மனத்தெளிவு ஒன்றே சாதகம். இந்தச் சாதகம்பெற சாதனங்கள் (வழிவகைகள்) எத்தனையோ உண்டு. அவைகளை மனோபக்குவமறிந்து கையாளவேண்டும்.

மனிதன் பிரகிருதியின் மஹிமைகளையுணர நித்தியப்படி சம்பவங்களே போதுமானாலும் அவன் இருட்டில் கிடந்து உழன்றுவரும் விசேஷத்தால் ஆந்தைபோல் பகல்குருடாய் விடுகிறான். அதாவது, பிரத்தியக்ஷமான பொருளைப்பார்க்கப் பார்வையற்றவனாகிறான். இப்பொழுது நேர்ந்த சுழல்காற்றைப்போன்ற சம்பவங்கள் பிரகிருதியின் மஹத்துவத்தை விளக்கச் சாதனமாயிருக்கின்றன. ஏழைகளை வதைத்துச்சேர்த்த பணச்செருக்கால் மமதைகொண்டு மதிமயங்கிக் கிடக்கும் மூடாத்மாவுக்கு இதைப்போன்ற அபூர்வ சம்பவங்கள் அவன் மதிமயக்கத்தை நீக்குவதற்கான காரணங்களாயிருக்கின்றன. மணல் வீடு கட்டி விளையாடும சிறு குழந்தைகளைப்போல் மனிதன் திடபாவமின்றி சங்கல்பசித்தி யின்னதென்றுணரமாட்டாமல் உழல்கிறான். அப்படியுழல்பவனை சுழல்காற்று வந்து காலோடு பறித்துத் தூக்கி ஒரு சுற்றுச்சுற்றித் துரும்புபோல் பறக்க வெறிந்தால் அவன் மமதையடங்கி சிந்தாக் கிராந்தனாகிறான். சிந்தையில் விழுந்துழன்றாலும சிந்தனை சிந்தனைதானே. உழல் சிந்தைக்கும் சுழல்காற்றுக்கும் ஒற்றுமையுண்டு. சுழல்காற்று மனிதனைச் சிதற அடிப்பதுபோல உழல் சிந்தனை மனதைச் சிதற அடிக்கும். மனம்† சிதறிப்போகாது சிதறினால் அது மூடத்தை உதறியெறிந்து விழித்துக்கொள்ளும். இப்படி மூடத்தை உதறியெறிந்து விழிப்புகொள்ளும் மனமே தரிசன சக்தியைப் (Powers of observation) பெற்றுய்யும். மனம் உய்தலாவது மூடத்தில் ஆழ்ந்து அறிவிழந்துபோகாமல், மூடத்தைவிட்டு அறிவுமயமாகி அறிவானுக்கும் அறிபொருளுக்கும் இடைசந்தமேதார் ஞானசாதனமாதல்.

"அறிவானும் அறிபொருளும்" ஒன்றுபட்டால், அதுவே அறிவுமயமாகும். இதை அனுபவித்துணரவேண்டுமே யன்றி எழுத்தால் வார்த்தையால் செல்லிக்காட்டமுடியாது.

† அதாவது 'உருக்கிவார்த்த ஸ்படிகம்போல் அதன் அழுக்காறழியச் சிதைந்து பின் ஸ்படிகரூபமாக நிர்மலஸ்வபாவம்பற்றி ஒன்றுசேர்தல்.'

THE BOYHOOD OF GREAT MEN OF THE WEST.—I. HORATIO NELSON.

(The Hero of Trafalgar 21st October, 1805.)

மேற்றிசை மேதையோர் பாலிய சரிதை.

1. ஹோரேஷ்யோ நெல்சன்.

(Concluded.)

(கார்த்திகைமீ ஸஞ்சிகையின் 254-பக்கத்தொடர்ச்சி)

ஐபீரியா (Spain) நாட்டுக்கும் ஆங்கில நாட்டுக்கும் 'பாக்லண்ட்' (Falkland) தீவுகளைப்பற்றிய விவாதம் முடிவுபெறவே அதினிமித்தமனுப்பப்பட்ட 'இரேஜினபிள்' கப்பலில் அமரப்பெற்ற போர்வீரர் பரிசுபெற்றுப் பிரிந்துபோயினர்.

ஆலசியமற்ற நெல்சன் வேலையில்லாமல் வீண்காலம்போக்க மனமின்றி தன் மாமனுடன் சமானனாகவிருந்து வேலைபார்த்து வந்த "ஜான் இராத்போன்" (John Rathbone) என்பவர் ஒரு வாணிபமரக்கல அதிபனாய் மேற்கு இந்திய தீவுகளுக்கு (West Indies) புறப்படுகிற செய்தியறிந்து அவனோடு தானும் கூடச் சென்றான். ஏதோ காரணத்தாற் கப்பற்றொழிலில் வெறுப்புற்ற இராத்போன் இளைஞன் நெல்சனும் இக்களங்க குணத்தையே கைக்கொள்ளும் வண்ணம் கழறினார். இவரிடமிருந்து மாலுமி சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றோனாயினும் மன்னர் மரக்கலப்படையிற் பணிவிடைசெய்ய மனவெறுப்பெய்தினன். 'சக்லிங்' என்பவர் "ஜயக்கலம்" (Triumph) என்ற தமது கப்பலில் தன் மருகன் நெல்சனை அமர்த்திக்கொண்டு அவன் கொண்ட களங்க குணத்தையும் களைந்தார். இக்கப்பல் காப்புக் கப்பலாக தெளிந்த புனலும், தடங்கரையும் பெற்றொளிரும் தெம்ஸாற்றின்மீது தங்கி இருந்தது. இங்ஙனமிருந்து மாலுமிவேலையை நெல்சன் தன்னாலியலுமளவு பயில முயலுவானாயின் 'சத்தாம்' பட்டணத்துப் படக்கலமொன்றில் படைவீரனுக் கருகாமையிலுள்ள படகுக்கதிபனாக அமர்த்துவதாக அவன் மாமன் அறைந்தான். இதைக்கேட்டு அளவற்ற ஆனந்தங்கொண்டு நெல்சன் அவ்வாழியைச் சுற்றுப்பிரயாணஞ் செய்து ஆங்காங்கு கண்ணுக்குத் தென்படும் மணல்வெளிகளையும், பாறைகளையும் கவனமாய் மனதில் பதித்துக்கொண்டு பயமின்றி கப்பலைச் செலுத்தத் துணிவுபெற்றான். மேன்மேலும் விருத்தியடைந்து மாலுமி சாஸ்திரத்தில் மாட்சிமையடைய மனங்கொண்ட நெல்சனுக்கு வேலையின்றி சும்மா நிற்கும் 'ஜயகலத்திலமர்ந்திருக்க ஊக்கமும் உவப்புமற்றிருந்தது. நேடாழியின் மீது இருமரக்கலங்கள் புதியநாடுகளைக்கண்டு தேடிவர வடதுருவத்தை நோக்கிப் புறப்படுகிறதென்று கேள்வியுற்று பாலன் நெல்சன் தானும் பிறதேயங்களைப் போய்பார்த்துவர அவாமேலிட்டோனாகி தன் மாமன்பால் ஏகி அநுமதிபெற்று அவரது செல்வாக்கால் கப்பலதிபனுக் கடுத்தஸ்தானத்தில் உள்ள ஒருஉத்தியோகஸ்தனிடத்தில் ஒரு சிறு படகுக் கதிகாரியாகப் போயமர்ந்தான். இந்த கப்பற்படை "நோர்" (Nore) என்ற துறைமுகம் விட்டு 177௩௵ ஜூன்மீ 4-ந்தேதி பாய்மரங்களை விரித்துக்கொண்டு புறப்பட்டது. போகும் பாட்டையிற் பலவகை இடுக்கண்களுறினும் கலங்கா நெஞ்சம் படைத்த நெல்சன் அவற்றைச்சிறிது மோராமல் உல்லாசமாகவேயிருந்தான். மூடுபனி முற்றும் செறிந்த "ஸ்பிட்ஸ்பர்கன்" (Spitzbergen) என்ற தீவைச்சார்ந்ததும் இங்ஙனம் தங்கியிருக்க இயலாதென உன்னி கப்பற்றலைவன் வேறேதேனும் ஒரு துறையைக்கண்டு தனக்குத் தெரிவிக்கக் கப்பலாட்களைச் சிலரை ஏவ நெல்சனும் மனக்கிளர்ச்சி எய்தி மரக்கலமொன்றில் ஏறிக்கொண்டு புறப்பட்டான். முந்தி

செல்லுகின்ற கப்பலாட்களை கடற்குதிரைக் கூட்டங்கள் வீராவேசத்துடன் வந்து தாக்கத் தன்படகை வேகமாய் நடத்தி விரைந்து சென்று அவ்விலங்கினங்கள் ஓலமிட்டோடச் சிதறடித்து கப்பலில் உள்ளவர்களை நெல்சன் காப்பாற்றினான். ஒருநாள் இரவில் அவன் ஒருவருமறியாமல் கப்பலைவிட்டகன்று புறம் போந்தனன். மறுநாள் வைகறையில் ஒரு பெருங்கரடியோடு கைகலந்து அமர்புரிந்து கைத்துப்பாக்கியை அடிப்புறம் திருப்பி அதை அடிக்க இருக்கையில் கப்பலில் உள்ளோர்கள் கண்ணுற்று அம்மிருகம் மருண்டு திடுக்கிட்டோட துப்பாக்கியைச் சுட்டார்கள். கப்பற்றலைவன் நெல்சனை நோக்கி ஏன் இவ்வபாயகரமான சண்டையைச் செய்யத்துணிந்தாய் என்று கண்டித்துக்கேட்க தான் அந்தக் கரடியைக் கொன்று அதன் தோலை உரித்தெடுத்து ஊரையடைந்ததும் தந்தை கையிற் கொடுக்கவேண்டுமென்றிருந்தேனென விடை பகர்ந்தான். இவ்வரும் மரக்கலங்கள் ஆங்கிலநாடு நண்ணியதும் மாலுமிகள் அனைவர்க்கும் மரியாதை செய்தனுப்பவே, தாளாண்மையை தலையாகக் கொண்ட நெல்சன் குணதிசை நோக்கிச்செல்லும் 'கடற்குதிரை' (Seahorse) என்ற ஓர் கப்பலையடைந்தான். இக்கப்பலதிபன் இவன் நற்குணங்களையும், நன்னடக்கைகளையும் கண்டு வியந்து கப்பலில் பால்ய உத்தியோக (Midshipman) அந்தஸ்தை வகிக்க உதவிபுரிந்தான். கடல்யாத்திரையில் கைதேர்ந்து தேகவலிமையையும் பெற்றான். கீழ்த்திசையை நோக்கி நெடுந்தூரம் பிரயாணஞ் செய்து இந்தியாவரையிலும் வந்தடைந்தான். இங்ஙனே பதினெட்டுமாதம் தங்கியிருக்க நேரிட இப் பிரதேசத்தின் பகலவன் கொடுங்கிரணங்களின் தாபத்தால் தபிக்கப்பட்டு தேகமெலிவுற்று நெல்சன் காயலாவானான். வரவர தேகவாரோக்கியம் சீர்கெட்டு வந்தமைபற்றி ஊருக்குத் திரும்பிப்போக அவாமேலிட அப்போது ஆங்கிலநாட்டுக்கு பிரயாணமாயிருந்த "சாகரச்சுறா" (Dolphin) என்ற கப்பற்றளகர்த்தன் வசம் ஒப்பிவிக்கப்பட்டான். அங்கமெலிந்து, அகக்கிளர்ச்சி குன்றி ஊக்கமெனுமார்க்கத்தையுமிழந்தான். கப்பற்றொழிலைக் கற்று ஏற்றமடைய எண்ணியவெண்ணம் வீணாய்ப்போகுமோவென ஐயமுற்று அகங்குன்றினான். கண்ணகல் ஞாலம் கங்குல்கழிந்தபின் கதிரொளிவீசி விளங்குமாபோல் அகங் கலங்கிய நெல்சன் உள்ளம் பொங்கி பொலிவுற்றது.

இதனால் தன் தேசாபிமானமெனும் செஞ்சுடர்க்கொழுந்து விட்டெரிய "நான் சுத்தவீரனாவேன். என் தேசமும், தேசாதிபனுந்தான் எனக்குற்ற நண்பரும், உபகாரிகளும்" என்று தனக்குள் எண்ணலானான். இக்கோள்கை பசுமரத்தில் ஆணி அறைந்தாற்போல் பதிந்து தான் உயிரோடிருக்கும் வரையில் உழைத்து உல்லாசமாய் காலங் கடத்தினான். கப்பற்றலைவன் அவனைப் பட்சமாய் பரிபாலித்து நோய்களைந்து ஊரில் கொண்டுபோய்ச் சேர்த்தான். தன் மாமன் கப்பற்படை விசாரணை கர்த்தா (Comptroller) வாக நியமனம் பெற்ற செய்தியறிந்து மகிழ்ச்சியடைந்தான். ஜிப்ரால்டர்க்கு (Gibraltar) ப்போகும் ஊர்செஸ்டர் (Worcester) என்ற யுத்த கப்பலில் உதவி உத்யோகஸ்தனாக (Ag. Lieutenant) நெல்சன் நியமனம்பெற்றான். 177௵ ஏப்ரல்மீ த்தில் உத்தியோகப் பரீட்சையில் தேறவே சமாக்க (Jamaica) நகருக்குச் செல்லும் ஓர் மரக்கலத்தில் அமர்ந்தான். ஆங்காங்கு அமர்புரிந்து ஆங்கிலம் ஆழியாட்சியடைந்து பொங்கிப்பொலிவுற்று விளங்க நல்லிசை நாட்டிய நெல்சனை ஆங்கிலேயர் இன்றளவும் போற்றிய வண்ணமாய் இருக்கின்றனர். 'நீலநதிச் சண்டை' (Battle of the Nile) செய்யப்புறப்படுகையில்

தன் சைன்யங்களைப் பார்த்து "நானே நான் இப்போரில் வென்றால் 'பியர்' (Peer) என்ற பிரபுப் பட்டம் பெறுவேன். இன்றேல் வெஸ்ட்மினிஸ்டர் இடுகாட்டில் அடக்கம் பெறுவேன்" எனப்பகர்ந்தான் அவருக்கு இராஜாங்கத்தில் 'பாரன்' (Baron) என்ற பட்டமளித்து £2000 பொன் உபகாரச்சம்பளத்தையும் உபகரித்தார்கள். உயர்தரப்பட்டமளிக்க வேண்டுமென்று "காமன்ஸ் சபையார்' (House of Commons) உத்தேசித்துக் கொண்டிருக்குமளவில்வல்லாயனும்சபாபண்டிதனுமான 'பிட்' (Mr. Pitt) என்பவர் எழுந்து அங்குற்றோரை நோக்கி "போர்க்கப்பற் கூட்டத்தலைவன் நெல்சன் (Admiral Nelson) நாட்டிய புகழ் பிரதானியமென்ற பெயருளளவரைப்போல் உற்று விளங்கும். சரித்திரங்களின் எங்கும் கண்டும் கேட்டறியா கடுங்கப்பற் போரில் சுத்த வீரனாய்த் துலங்கும் இவருடைய கீர்த்தியின் ஒளி எங்கும் பரவி வீசுகையில் ஒருவரும் இவரடைந்த பட்டம் 'பாரனோ' அல்லது 'இயர்லோ' (Baron or Earl) என்று கேட்கவும் மனதில் நினையார்." என்று வதியம்பினர். 'கோபன்ஹேகன்" (Copenhagen) என்னுமிடத்தில் தானியரோடு (Danes) கோரமான யுத்தம் புரிந்து அவர்களுடைய மரக்கலங்களை நிர்மூலமாக்கினதின் நிமித்தம் 'பியர்'என்ற பட்டத்திற்கும் சிறந்த 'வைகவுண்ட' (Viscount) என்ற பட்டமடைந்தார். இது நிகழ்ந்து நான்காண்டுகழித்த பின்னர் "டிராபல்கர்" (Trafalgar) என்றபிரபலமான வெம்போரில் வெற்றியடைந்தார். இதில் உயிர் துறக்கும்படியான காயம் பட்டபோதிலும் வெற்றிபெறு மாற்றம் காதிற்பட்ட பிறகுதான் உயிரை நீத்தனர். மேலும் எதிரிகள் மடைகலங்கி திரண்டோடுவதை காதலோடுகண்ணுற்றார். இறக்குந் தறுவாயில் தன்னருமை மாலுமிகளை நோக்கி: "கடவுள் அருள் புரிவாராக, நான் கைக்கொண்ட கடமை முடிவு பெறச் செய்து விட்டேன்." என்று சொல்லிக்கொண்டே உயிர் துறந்தனர். ஆங்கிலேயர் இன்றளவும் இவருடைய பெயரைக் கேட்கையிலேயே உற்சாகமும், ஊக்கமும் அடைகிறார்கள் என்ற விவரத்தைப் பின்வரும் நிதர்சனத்தால் நிதானிக்கலாம். 'கதிரவன் உதித்தெழும் பதியாயினோர்க்கும்,' (People of the Land of the Rising Sun, ie., Japan) உறமொன்றே உரிமையாக் கொண்ட "உருஷ்யருக்கும்" உலக சரித்திரங்களில் எங்கும் கண்டும் கேட்டுமறியாத கங்குல்பகலின்றி பதினெட்டுமாதம் நடந்த உக்கிரமான போரில் எப்புவியும் போற்றும் ஜப்பான் கப்பற்றலைவன் 'தோகோ' (Admiral Togo) என்பவர் ஜெயங்கொண்டார்' ஆங்கிலேயர் அளவற்ற ஆனந்தமேலிட்டு இவரை "குணதிசை நெல்சன்" (Nelson of the East) எனக் கொண்டாடினார்கள். இந்த அக்டோபர்மீ 21உ இவர்ஜயம பெறப் புரிந்த டிராபல்கர் யுத்தத்தின 115-வது அப்தபூர்த்தியாதலால் சென்ற நூற்றாண்டுற்சவத்தை அத்தருணம் உலகெலாம் பரவியுள்ள ப்ரிடிஷ்ராஜ்யமெங்கும் பெருமையாகக் கொண்டாடினவர்கள் இத்தருணம மறக்கமாட்டார்கள். ஏனெனில் பிரிடிஷ் கப்பற்படையின் உறத்தினால் தான் சண்டை எங்கும் பர இன்னல் விளைக்காது நாம் பாதுகாக்கப்பட்டு வருகிறோம். நெல்சனுடைய நாமத்தை ஆங்கில நாட்டார் இன்றளவும் போற்றுவதினால் இவர் அடைந்த கீர்த்தியின் பிரதாபம் சொல்லாமலே விளங்கும். இவரிடம் விளங்கிய பேராண்மை பகைவரும் மெச்சத்தக்க பண்பினையுடையதாக விருந்தது. இக்கருத்தை நாயனாரும்:

"பேராண்மை யென்ப தறுகணொன்
றுற்றக்கா லூராண்மை மற்றதனெஃகு"

என்று கூறியுள்ளார்.

LESSONS IN NATURE STUDY.

PEES AND BEEHIVES.

பிரகிருதி வித்யாப்யாசம்.

தேனீக்களும் தேனும்.

(கார்த்திகைமீ ஸஞ்சிகையின்240-ம்பக்கத்தொடர்ச்சி)

தேன்கூடு.

இது ஈக்களின் ஜாதிக்கும் சங்கியைக்கும் தக்கபடி பெரிதாயும் சிறியதாயுமிருக்கிறது. அநேகமாய் எருமுட்டையைப்போல் வட்டமாகவும், கூடுகட்டப்படுமிடத்திற்குத் தக்கபடி நீண்ட வட்டமாகவுமிருக்கும். நாட்டுத் தேனீக்களின் கூடுகள் எவ்விதத்திலும் மூன்றங்குல கனத்திற்கு அதிகமாயிராது. எருமுட்டையின் இருபுறமும் துவாரங்களமைக்கப்பட்டு, நடுவில் இடைவெளியின்றி தடுக்கப்பட்டு, துவாரங்களெல்லாம் அறுகோணமாய்ச் செய்யப்பட்டிருந்தால் எப்படி காணப்படுமோ அப்படியே அநேகமாய்த் தேன் கூடுகள் காணப்படுகின்றன. அவ்வாறுகோண வளைகளே அவைகளுக்குத் தாயிடமாகவும், பறக்கச் சக்தியில்லாத சிறிய ஈக்களின் உறைவிடமாகவும், முட்டையிடும் பிரசவ வீடாகவும், தேனைச் சேகரித்து வைக்கும் பண்டசாலையாகவும், உபயோகப்படுகின்றது. இவ்வறைகளுடன் கூடுமுழுவதும் மெழுகினாலே செய்யப்படுகின்றன. அறைகளெல்லாம் ஒரே அளவானதென்றே சொல்லக்கூடியதாயினும், மத்தியிலுள்ளவைகளைவிட ஓரத்திலுள்ளவைகளின் ஆழமானது குறைந்திருக்கும். தேனீக்கள் தங்கள் கூடுகளிலுள்ள இன்ன அறைகளில்தான் முட்டையிடவேண்டுமென்றும், இன்ன அறைகளில்தான் குஞ்சுகளிருக்கவேண்டுமென்றும் இன்ன அறைகளில்தான் தேன் வைக்கப்படவேண்டுமென்றும் ஏற்பாடு செய்துகொள்ளுகிறதென்று கூறத்தக்கதாக கூடுகளின் ஒருபுறமுள்ள பல அறைகளில் முட்டைகளே காணப்படுகின்றன. மற்றொருபுறமுள்ள பல அறைகளில் குஞ்சுகளே உறங்குகின்றன. வேறொரு புறமுள்ள பல அறைகள் தேனினால் நிறைந்து விளங்குகின்றன. ஆகவே நாகரீகமடையாதவர்கள் வீட்டில் சமையலறையில் படுக்கையறை சாமான்களும், தரிசனவரையில் சமையல் பாத்திரங்களும் ஒழுங்கீனமாகக் காணப்படுவதுபோலன்றி, நாகரீகத்தேர்ச்சியடைந்தவர்களுடைய வீடுகளைப்போலக் காணப்படுகின்றன. ஒரு கூண்டின் ஈக்களின்மேரில் சர்வாதிகாரம்பெற்ற இராணி ஈ வசிப்பதற்குத் தகுந்த இராஜமாளிகையெனக் கூறக்கூடிய ஒரு பெரிய அறையும், அதற்குக் கீழதிகாரிகளான சில ஈக்கள் வசிக்கத்தகுந்த, இராஜமாளிகைக்குச்சற்று சிறியதான சில அறைகளும், கூட்டின் சிகரத்திலாவது அடிப்புறத்திலாவது காணப்படுகிறது. இவ்வறைகள் மட்டும் அறுகோணமாயில்லாமல் வட்டமாயிருக்கின்றன.

மெழுகு.

சிலந்திப்பூச்சிகள் முசுக்கொட்டைச் செடியின் இலைகளைத்தின்று தங்கள் உடலிலிருந்து உண்டாகிற ஒருவித மெல்லிய பதார்த்தத்தினால் தங்கள் கூடுகளைக் கட்டுவதுபோல, தேனீக்களும் புஷ்பங்களிலுள்ள மதுரமான தேனைக்குடித்து தம் உடலிலிருந்து உற்பத்தியாகிற மெழுகினாலேயே தம் கூடுகளைக் கட்டுகின்றன. தாங்கள் குடிக்கும் தேனையே மெழுகாக மாற்றக்கூடிய சக்தி யவைகளுக்குளது. தேனீக்கள் தாம் கூடுகட்டிக்கொண்டு வாசஞ்செய்யப்பட்ட விடத்தில் எவ்வித இடஞ்சலாவது நேர்வதாயிருந்தால், அவ்விடத்தைவிட்டு வேறு தகுந்தவிடத்தைத் தேடிக்கொண்டு பெருங் கும்பலாகப் புறப்பட்டுப் பறந்துபோவதை யநேகர் பார்த்திருக்கலாம். அப்படிப் போகும்பொழுது அவைகள் தாம் முன்னிருந்த கூண்டில் சேகரித்துவைத்த தேனை வேண்டிய அளவு குடித்துவிட்டே செல்லும். அப்படியும் குடித்துவிட்டுச்

செல்ல சாத்தியப்படாவிட்டால், தாம் வேறு புகலிடம் கண்டுபிடிக்கச் செல்லும் மார்க்கத்திலுள்ள செடிகளின் புஷ்பங்களிலுள்ள தேனை ஏராளமாய்க் குடித்து, கடைசியில் ஓரிடத்தில் சபைகூடும். அதாவது அதிக காற்றில்லாததும் வெயிலடிக்கக் கூடியதுமான ஓரிடத்தில் மரக்கிளையொன்றைப் பற்றி சில ஈக்கள் உட்கார, அவைகளின்பேரில் வேறு சில ஈக்கள் உட்கார, இப்படியே ஒன்றின் பேரிலொன்றாக எல்லா ஈக்களுமுட்கார்ந்து பெருங்கும்பலாக சுமார் ஒருநாளெல்லாம் தொங்கிக் கொண்டேயிருக்கும்.

இவைகளிப்படியிருக்க, கீழ்திகாரிகளான சில ஈக்கள் தகுந்த புகலிடத்தைத் தேடிக் கண்டுவந்து இவைகளுக்குத் தெரிவித்து, அவ்விடத்திற்கு இவைகளையழைத்துக் கொண்டுசெல்லும். இப்படிப் புதியவிடத்திற்குச் செல்லுமுன் ஒரு மரக்கிளையைப் பற்றிக்கொண்டு தபசிகளைப்போல் தொங்கிக்கொண்டிருந்ததை சபையென்று கூறினோமன்றோ. சபையின் நடவடிக்கைகளை நீங்கள் அறியவேண்டியது அவசியமாதலால் அதையும் கூறுவோம்.

CONDOLENCE.

துயராற்றல்

" ஆறாத்துயரமெல்லாம் ஆற்றுவதோ ஈசன் அருள்."

I

" அப்பநீ அம்மநீ அய்யநீ
அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய தாரமும் உண்பொருளு'நீ
ஓர் குலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துணையாய் என்னெஞ்சம் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ, இம்மணிநீ, இம்முத்துநீ,
இறைவநீ, ஏறூர்ந்தசெல்வம் நீயே !"

II

அன்புநீ யருளும்நீ யமுது'நீ
துன்புநீ துக்கம்நீ துயரு'நீ
என்புநீ எரியும்நீ வெய்ப்பு'நீ
வன்புநீ வடிவுநீ வழக்கு'நீ
*மன்றுநீ மரபுநீ பாரன்நீ
அன்றுநீ இன்றுநீ என்றும்நீ
என்றரற்றிக் கற்றபோற் கதறினேன்
வெந்துயர்தீர் அம்மானே! அரங்கேசனே !

* மன்று - சபை, அரங்கம்.

* LOOK AT THE STAGE! AND DRINK OF THE BLISS OF LOVING THOUGHT.

இராமானுஜபஜனை - திருவரங்க தரிசனம்.

முன்னுரை.

† " துவாதசி இன்றைக்"கென்றான்
துவம்பத லக்ஷியராமன்
துவாதசி அன்றைக் கென்னைத்
துவம்பத லக்ஷியனுண்டான்!
துவாதசி என்றைக் கென்றால்
துவம்பத லக்ஷியங்கண்டால்:
துவாதசி ஒன்றைக் கொண்டே§
துவம்பத லக்ஷியந்தந்தான்.

துவம்பத லக்ஷியம்$:—"அமலன் ஆதிபிரான்."

" அப்பநீ அம்மநீ அய்யநீ
அன்புடைய மாமனும் மாமியுநீ
ஒப்புடையதாரமும் உண் பொருளுநீ
ஓர்குலமும் சுற்றமும் ஓரூரும்நீ
துணையா யென்னெஞ்சம் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ, இம்மணிநீ இம்முத்துநீ!
இறைவநீ! ஏறூர்ந்த செல்வம்நீயே!"

* Tirupzpanazhvar's Original rendered into Sanskrit By Mr. M. K. Tatacharyar, B.A.

† The 'Watchord' giving admittance to the Presence.

" துவாதசி இன்றைக்கு" என்றால் (ஞானசந்திரனின்) பன்னிரண்டாங்கலை தரிசனம் பார்' என்று அர்த்தம். "குருசொல் ஒருசொல்" என்றபடி இக் குறிச்சொல்லை' (Watchword) க்கொண்டு கடைத்தேறுவார் உத்தமசாதக புருஷர். சாத்தியருக்கு இது சாமாண்யம்.

cf. "தசமியிலே சாகரத்துக் சப்பாலேறிச் சிலம்பொலியுமனதுடைய இருக்கால்கண்டு, விஜமாக ஸ்தூல சூக்ஷமத்தில்தோன்றி, விஷ்களத்தில் நீயும் நானும் ஒன்றேயாகி, அறிவில்லா ஆனந்தமயமேயாகி, அருள்வெளியாய் வரமருள்வாய் அகண்டரூபி, சுசிவழியாய் சுசிமுகமாய்ப் பிள்ளைமுகம் பார்த்தாள்வாய் சோதியே, மனோன்மணியே, சுதினவாழ்வே!"

§ 'துவாதசநாமங்கள் வாய்ந்த அருட்சக்தி ஒன்றைக்கொண்டே' யென்று அர்த்தம். "பூரணி, புராதனி, சுமங்கலை, சுதந்தரி, புராந்தகி, - த்ரியம்பிகே, எழிற்புங்கவி, விளங்கு சிவசங்கரி ஸஹஸ்ரதள மலர் மீதுரை அம்பிகே, - நாரணிமனோதீத நாயகி குணாதீத, நாதாந்த சக்தியென்றுன் நாமமே யுச்சரித்திடுமடியார் நாமமேயானுச்சரிக்க வசமோ !"—என்றார் பிறரும் காண்க.

$ (வாக்கீசர் அருளிச்செய்த ஷோடசாந்தர "துவம்பதலக்ஷியம்.")

ஸ்ரீ:

" அமலன் ஆதிபிரான்."

(திருப்பாணாழ்வார் அருளிச்செய்தது.)

1. அகப்பொருள் காண்டல்.

அமலன் ஆதிபிரான் அடியார்க் கென்னை ஆட்படுத்த
விமலன் விண்ணவர்கோன் விரைஆர் பொழில்வேங் [கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள்மதிள் அரங்கத்து [அம்மான் திருக்
கமலபாதம் வந்தென் கண்ணின்உள்ளன வொக்கின் [றதே.

2. உள்ளக் கவர்ச்சி.

உவந்த உள்ளத்தனாய் உலகமளந்து அண்டமுற
நிவர்ந்த நீள்முடியன் அன்றுநேர்ந்த நிசாசரரைக்
கவர்ந்தவெங்கணைக் காகுத்தன் கடியார்பொழில் அரங் [கத்தம்மான் அரைச்
சிவந்த ஆடையின்மேல் சென்றதாமென் சிந்தனையே.

3. உயிர்த்தானம்.

மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள்
சந்திசெய்யநின்றான் அரங்கத்தரவின் அணையான்
அந்திபோல் நிறத்து ஆடையும் அதன்மேல் அயனைப் [படைத்ததோர் எழில்
உந்திமேலதன்றோ அடியேன்உள்ளத்து இன்னுயிரே.

4. உதரபந்தம் : உள்ளத்துஉலா.

சதிரமாமதிள் சூழ்இலங்கைக் கிறைவன் தலைபத்து
உதிரவோட்டிஓர்வெங்கணையுய்த்தவன் ஓதவண்ணன்
மதுரமாவண்டுபாடமாமயிலாடரங்கத்தம்மான் திரு
வயிற்று உதரபந்தம் என்னுள்ளத்துள் நின்று உலா' [கின்றதே.

5. 'பாரிது மார்பில் அதிசயம் ஸ்வஸ்வா :

பாரமாய பழவினை பற்றறுத்து என்னைத்தன்
வாரமாக்கி வைத்தான் வைத்ததன்றி யென்னுள்புகுந் [தான்
கோரமாதவஞ் செய்தனன்கொல் அறியேன் அரங்கத் [தம்மான் திரு
வார‡மார்பதன்றோ அடியேனை ஆட்கொண்டதே.

6. 'எனையுய்யக் கொண்ட'கண்டம்.

துண்டவெண்பிறையான் துயர்தீர்த்தவன் அஞ்சிறைய
வண்டுவாழ் பொழில்சூழ் அரங்கநகர்மேயஅப்பன்
அண்டரண்ட பகிரண்டத் தொருமாநிலம் எழுமால் [வரை முற்றும்
உண்டகண்டம்கண்டீர் அடியேனைஉய்யக்கொண்டதே.

7. 'உள்ளம்கவர்கள்வன்.'

கையினார் சுரிசங்கம் நல்ஆழியர் நீள்வரைபோல்
மெய்யனார் துளபவிரையார் கமழ்நீள்முடியெம் [ஐயனார்
அணியரங்கனார் அரவினணைமிசைமேயமாயனார்
செய்யவாய் அய்யோ ! என்னைச்சிந்தை கவர்ந்ததுவே.

8. 'பேதமை' யென்பது மாதர்க்கணிகலம்.

பரியனாகிவந்த அவுணன்உடல்கீண்ட அமரர்க்
கரியஆதிப்பிரான் அரங்கத்து அமலன் முகத்துக்
கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி [நீண்டவப்
பெரியவாய கண்கள் என்னைப்பேதைமைசெய்தனவே.

9. 'நிறைதுறை சிறைநிறை.'

ஆலமாமரத்தின் இலைமேல் ஒருபாலகனாய்
ஞாலம் ஏழுமுண்டான் அரங்கத்து அரவின் அணையான்
கோலமாமணியாரமும் முத்துத்தாமமும் முடிவில்ல [தோர் எழில்
நீலமேனி அய்யோ! நிறைகொண்டதென் நெஞ்சினை [யே.

10. 'கண்டகண்கானாக்' காட்சிநிலை.

கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்டவாயன் என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதனைக்
கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே.

பின்னுரை.

'திருக்கூத்து தரிசனங்கண்டகண்'-

" நன்றிது ஆட்டம் ! நன்றிது கூத்து !
நன்று நன்றிது நடனம் !
அங்குமிங்கு மெங்குங்கண்டிலே
னிதுவொரு அதிசயங்காண்மினோ
ஒன்றிநின்றன்றுணர் வழிந்துள்
ளொளியானபின்
அங்குமிங்கு மெங்குமிதுவலால்
வேறொரு அதிசயம் காண்கிலேனே !"

திருவரங்கத்து அரவணையான் தரிசனங்காணல்.

" நன்றிது தூக்கம் நன்றிது ஊக்கம்
நன்று நன்றிது நாட்டம் !
அங்குமிங்கு மெங்குங்கண்டிலே
னரவணையானறிதுயில் காண்மினோ
ஒன்றி நின்றன் றுணர் வழிந்துள்
ளொளியானபின்
அன்றுமின்று மென்று மிவனறிதுயிலலால்
வேறொரு துயில்காண்டிலனே !"

‡ திருஹாரமார்பு - திருஆரமார்பு - திருவாரமார்பு.

PHYSICAL CULTURE AS PRACTICED BY PROF. RAMAMURTI.

தேஹப்பயிற்சி.

பீம அபிநவ இராமமூர்த்தி யுதாரணம்.

தேஹப்பயிற்சிக்கு மனப்பயிற்சி இன்றியமையாத சாதனமெனக்காட்ட இப்பொழுது சென்னைக்கோட்டை மைதான வெளியில் கூடாரமடித்து வித்தையாடிவரும் பீமனைப்போல தேஹதாட்டியமுடைய இராமமூர்த்தியவர்களுடைய உதாரணம் பின்பற்றத் தக்கது. அவர் 'ஸாண்டோ' வந்து வித்தையாடிப் போனதைப்பார்த்து தானும் அப்படியாக வேண்டுமென்கிற அவாத்தூண்ட தன் தேஹப்பயிற்சியில் முக்கிய லக்ஷியம் வைப்பவரானார். அவருடைய விரதங்களாவன:—

(1) நித்தியம் பிராணாயமம் செய்யல்.

(2) ஏகாக்ரசித்த ஸ்வாதீன அப்பியாசம்.

(3) மாம்ஸாகாரமின்றி தானியம், இலை, காய், கனி, கிழங்குகளையே புசித்துவருதல்.

(4) காபி முதற்கொண்டு அற்பஸ்வற்பமான லாஹிரி யுண்டுபண்ணும் எல்லா வஸ்துக்களையும் மதுபானத்துக்குச் சமானமாகவெண்ணி அறவிலக்கல்;

(5) பிரஹ்மசரியம்.

இந்தப் பஞ்சசாதனங்களைக்கொண்டு அவர் செய்திருக்கும் தேஹப்பயிற்சி அபாரமானதாயிருக்கிறது. அவர் ஒரு யானையைச் சுமக்கிறார். மோட்டார் வண்டியை அவர் மேலேஓட்ட விட்டு அதன் கீழிருந்து நசுங்கிப்போகாமல் அதன் பளுவைத்தாங்குகிறார். சங்கலியைக் கழுத்தில் கட்டி மாட்டியறுத்துவிடுகிறார். அப்படியே மாரில்கட்டியும் அறுத்துவிடுகிறார். இன்னம் அதிஸாஹஸமான பீமவித்தைகள் எத்தனையோ செய்கிறார். இதற்கெல்லாம் அனுகூல சாதனமாயிருப்பது மேலேசொன்ன பஞ்சசாதனங்களைத் தவிர வேறில்லை. ஆகையால்தான் பிராம்மணச் சிறுவர்களுக்கும் த்விஜர்களுக்கும் இளம்பருவத்திலேயே இந்த பஞ்ச விரதங்களும் அனுஷ்டிக்க ஆதாரமாகவிருக்கப் பூணூல்போடுகிற சம்பிரதாயம் நமக்குள் ஏற்பட்டிருக்கிறது. இதைக் காசுபறிப்பதில் கண் பஞ்சடைந்த பிராமணர்கள் இப்பொழுது மேலுக்குமட்டுமே அனுஷ்டித்து பிராணாயாமம் முதலிய அப்பியாசங்களை அறவிட்டு வருகிறார்கள். இவர்கள் பள்ளியிற் படித்து கலாசாலையில் மூளைக்கு வலிகொடுக்கும் பாடங்கள் பயிலும்போது அப்படிப்பின் கடுமைதாங்காது மூளை கெட்டுப்போகிறது. காபித்தண்ணீரோடு காசுபணம் கையில்சேர்ந்தால் மதுபானம் முதலான தோஷங்களும்சேர மதுரோகத்துக்கு ஆளாகி ராஜப்பிளவை புறப்பட்டு அற்ப ஆயுளில் மாண்டுமடிந்து இருந்த இடந்தெரியாமல் போகிறார்கள். இதுதான் நிர்ப்பந்தமுறையை அனுசரித்துப் போதிக்கும் படிப்புத்தரும் கடைசிப்பலன். "தானாகக் கனியாதது தடியெடுத்தடித்தால் கனிந்துவிடுமா?" என்கிற பழமொழியைச் சிந்திக்கவும்.

அபிநவபீம இராமமூர்த்தி.

(By a Pupil of the V form.)

1. கண்ணாணப் பருத்துயர்ந்த
    கடகம் விளங்கு தோளினன்
காவலர்கள் கண்களிக்கக்
    கனசிரமம் பயிற்றுவான்
மின்னொளி வொளிதயங்கு
    மேனிகொண்ட மித்திரன்
விண்ணும் மண்ணும் விறல்படைத்த
    விஜய வீரகேசரி
தன்னுண்மை யுலகெங்குந்
    தயங்கவைத்த தகைமையோன்

தரணியாளர் மெச்சவந்த
    தகுதிபெற்ற வீரர்கோன்
எந்நாளும் எத்திசையும்
    இன்புறுத்தும் ராமமூர்த்தி
இவனை நாமெல்லோரும்
    ஏத்திப் புகழ்வம் வாருமே.

2. அன்றிருளில் தனியறையில்
    அறுத்தான் தந்தை தாய்தளையை
அநகன் அசோதை பரிந்தளித்த
    அழகார் கண்ணனெம்பிரான்
இன்று தரணியெங்குஞ் சென்று
    எழிலார்ந்த ராமமூர்த்தி
ஏற்றவரிசை பெற்றுயர்ந்து
    எங்கள் பாண்டி யாஜியின்
மன்றில் பகலில் பலமனிதர்
    மருங்குநின்று காணவே
மகிழ்வோ டறுத்தான் தன்னை
    வரிந்த இரும்புச் சங்கலியை
நன்று நன்று நண்பினரே
    நன்குவந்து காண்மினே
நாடி லிவனுக்கி யாவரிணை
    நானிலத்தில் நவிலுமே.

3. கொல்லானை தன்முதுகிற்
    கொண்டுயர்ந்த வீரர்கோன்
கொம்மை கொட்டிக் குறங்கறுக்குங்
    கோதில் கலிங்கர் கோமகன்
எல்லார்ந்த விருஞ்சுடரும்
    மதியும்போல வெழிலிருந்த
இன்முகத்தன் இராமமூர்த்தி
    எங்கள் தேயம் விளங்கவே
கல்லார்ந்த பலநாடுங் கருங்கடலுங்
    கடந்து சென்று
ககனமு மெண்டிசையுங்
    களிக்க வீறு பெற்றுயர்ந்து
பல்லாண்டு பல்லாண்டு
    பாரில் பலமாண்பு பெற்றுப்
பார்த்திபர்கள் மெச்ச வாழ்க
    பாடல்பெற்று வாழ்கவே.

EVENTS OF THE MONTH.

மாத விசேஷங்கள்.

தனுர்மாச விசேஷம்.

"மார்கழிமாசம் திருவாதிரையும் வரப்போகுதையே!"

இந்தமாசத்தில் முக்கியமாய் கவனிக்கத்தக்க விசேஷமென்னவென்றால் சூரியன் விருச்சிக ராசியிலிருந்து தனுசுக்கு நகர்ந்ததே. தனுசில் சூரியன் பிரவேசிக்கவும் மார்கழிமாசம் பிறந்தது. இது தேவர்களுக்கு பிரஹ்ம முகூர்த்தகாலம் என்பர். அப்படியென்றால் விடியற்காலம். அசுரர்கள் கொட்டம் அடங்க தேவர்கள் கஷ்டம்நீங்க (விடிய) அவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும் மாசம் இது. இந்தமாசம் திருவாதிரை நக்ஷத்திரத்தில் பரமசிவன் சகளவுருக்கொண்டு "பாரிலுள்ள பக்தர்கள் பரிபக்குவர் பலருமுய்யப் பரங்கருணை மிகுதியாலே, திரிபுரமெரித்த தேஜோமயனுந்தனைத் தாள் கொடுத்தாள்வன், தரிசிக்கவாரீர் வாரீரே!"—என்றபடி தரிசனமளிப்பர். இதற்குத்தான் "ஆருத்ரா தரிசன" மென்று சொல்லுகின்றது. இது சிதம்பரத்தில் விசேஷ வைபவத்தோடு நடந்தேறும். இது இந்த மார்கழீ 25உ திங்கட்கிழமை யன்று (ஜனவரீ 8உ) சம்பவிக்கிறது.

"திருப்பொற்சுண்ணம்."

இந்தமாசம் பிறந்ததுமுதல் பக்தர்களெல்லாரும் பகவானைப் பாடிஸ்துதித்துக் கொண்டாடுவார்கள். "எம்கோன் எம்கூத்தன் தேவியும் தானும்வந்து எமையாள செம்பொன் செய் சுண்ணமிடித்துப்" பாடியாடி விளையாடுவது பூர்வ வழக்கம். இதை மணிவாசகப்பெருமான் திருப்பொற்சுண்ணம் என்கிற பதிகத்தில் வெகு அழகாகப் பாடியிருக்கிறார். இந்த திருப்பொற் சுண்ணமிடித்து விளையாடுவதின் உட்கருத்து "ஆனந்தமனோலயம்." இதையே என்தாய் "போகப்போகப் பொன்னம்பலமாம்" என்றாள். இப்படி சங்கற்ப விகற்ப ரூபமாய் (நினைப்பு மறப்புமாயிருந்து) அறிவை விஷயப்பற்றில் சிக்கவைத்து அது தெளிவுறச்

செய்வது நினைப்புமறப்பில் பழகிப்பழகி விஷய வாசனை தடித்தமனமாம். அந்தமனதை இடித்துப்பொடித்துத் தூளாக்கிப் 'பொற்சுண்ணம்' செய்து பகவான் பிறக்குங்காலையில் அவருக்கு மங்கலவாழ்த்தாகத் தூவுவது இயற்கை தர்மத்தையொட்டிய ஸர்ஜ்ஜனர் சம்பிரதாயம். இப்படி 'பொற்சுண்ணம்' இடிப்பது (நல்லமனதைச் சுத்தமனதாய் சுபவாசனை நிறைந்ததாகச்செய்வது) எப்படியென்றால்,

(1) வையகம் (உலகம் எல்லாம்) உரலதாக

(2) மஹாமேரு என்னும் உலக்கை காட்டி

(3) மெய்யெனும் மஞ்சள் நிறையவட்டி

(4) கடவுளின்செய்ய திருவடியாடிப் பாடி

(5) செம்பொன் உலக்கை வலக்கைபற்றி

(6) ஐயன் அணிய தில்லைவாணனுக்கு (மஞ்சள்நீர்) ஆடப்,

(7) பொற்சுண்ணம் இடித்துவைப்போம் வாருங்கள் என்கிறார்.

இப்படி இடிக்கும்பொழுது அறிவெனும் பெண்ணினம் கூட்டமாகக்கூடி (ஸமஷ்டி பாவத்திற்பொருந்தி) சித் உருவாகி,

(1) முத்தணி கொங்கைகள் ஆடவாட

(2) மொய்குழல் [தலைமயிரில் மொய்க்கும்) வண்டினம் ஆட ஆடச்

(3) சித்தம் சிவனொடும் ஆட ஆடச்

(4) செங்கயல் (ஒத்த) கண்பனி (வியர்வை நீர் அல்லது அயிர்தவூறல்) ஆட ஆட

(5) பித்து (ஏகாக்ர மிகுதியால் பித்தேறிய சித்தம்) பிரானொடும் (பகவானோடு) ஆட ஆட,

(6) பிறவி பிறரொடு (பிறவி முதலான ஸம்ஸார துக்கங்களெல்லாம் பறந்தோடி) ஆட ஆட,

(7) அத்தன் (அப்பன்) கருணை மிகுதியால் ஆனந்த நிருத்தம்செய்து காட்டி ஆட ஆட,

(8) இத்தனை வைபவங்களைக் கண்டு களியாட பொற்சுண்ணமிடித்து ஆடிப்பாடி விளையாடுவோம் வாருங்கள்.

'ஸர்வம்நாஸ்தி' 'பகவன் ஆஸ்தி.'

இந்த திருமைலாப்பூரில் இந்த சம்பிரதாயத்தை யொட்டி யூனிவர்ஸிடி பட்டதாரிகள் என்ன, பெரிய பெரிய உத்யோகஸ்தர்கள் என்ன, வக்கீல்கள் என்ன இவர்கள் எல்லாரும் காலையிலெழுந்து நீராடித் தூய்மடியுடுத்து பாகவத சின்னங்களோடு வெளிப்புறப்பட்டு பஜனை செய்துகொண்டு வீதிவலம் வருகிற காட்சி இந்தக்காலத்தின் விசேஷத்தை விளக்கும் ஓர் அற்புதக்காட்சியாக விருக்கிறது. படித்தவர்களும் பாமரர்களும் இப்படி விடியற்காலத்திலெழுந்து பகவானைத்துதித்துக் கல்லானமனம் மஞ்சளாக (சுபவாசனை பொருந்தியதாக) மாற, அம்மஞ்சளை மேற்கூறியவாறு பொற்சுண்ணமிடித்து பகவானுக்குத் திருமஞ்சன நீர் ஆடத் தயாரிப்பது ஒருபெரிய விசேஷமென்றே கண்டு குறிப்பிடலானோம். "கிர்வாணதேசத்தில் கோவணம் கட்டினவன் பைத்தியக்காரன்" என்பது பழமொழி. அது போல ஜனங்கள் பணச்செருக்கில் மூழ்கி நாஸ்திகபாவம் தடித்துள்ளபொழுது பகவத்சிந்தனை உள்ளவன் பைத்தியக்காரனாக விளங்கினான். நாஸ்திகசிந்தனை முற்றி முதிர்ந்து "ஸர்வம் நாஸ்தி" யென்கிற பலனைக்கொடுக்கிற பொழுது அதன் கசப்புப் பொறுக்காமல் அதுவே யருமருந்தாக உதவி ஆஸ்திகசிந்தனை மேலிட்டுக்காட்டுவது மனதுக்குப் பூரிப்பைத் தருவதாக விருக்கிறது. 'ஸர்வம்நாஸ்தி' யான பின்னரே 'பகவன் ஆஸ்தி' என்கிற ஆஸ்திக புத்தி சித்திப்பதும் சகஜந்தானே.

DURBAR DAY CALEBRATION

மற்றொரு விசேஷசம்பவம் என்னவெனில், இந்த டிசெம்பர்மீ 12உ பள்ளிக்கூடங்களிலெல்லாம் டில்லிதர்பார் நாள் கொண்டாடப்பட்டது. அந்தக் கொண்டாட்டத்துக்குதாரணமாக திருச்சினாப்பள்ளி சர்க்கார் போதனை முறைப்பாடசாலைத்தலைவர் நமக்கெழுதியதைக் கீழே பிரசுரிக்கிறோம்:—

திருச்சினாப்பள்ளி சர்க்கார் போதனாமுறைப் பாடசாலையில் டில்லி தர்பார் தினக் கொண்டாட்டம்.

இராஜதம்பதிகளின் உருவப்படம் உன்னதமாய் மேடையின்மீதுவைத்து அலங்கரிக்கப்பட்டிருந்தது. நகரவாசிகளில் சில முக்யஸ்தர்களும் உத்தியோகஸ்தர்களும் மாணவர்களின் பெற்றோர்களும் வந்திருந்தார்கள். ஐந்தாவதுவட்டம் பள்ளிக்கூட இன்ஸ்பெக்டராகிய மகா-௱-௱-ஸ்ரீ இராமசாமி ஐயங்கார் அவர்கள். B. A. L. T. சபா நாயகராய் அமர்ந்திருந்தார்கள். பள்ளியின் சிறுர்கள் வாணிதுதி நல்வரவு ராஜபக்தி சுகாதாரம் இவைகளைப்பற்றிய பாக்களை இனிய ராகத்துடனும் மெல்லிய குரலுடனும் பாடினார்கள். அவர்களுக்கு திருப்தியாய் சிற்றுண்டிகள் வழங்கப்பெற்றனர். பிறகோர் புகைப்படம் எடுக்கப்பட்டது.

2. பின்னர் சங்கீதக் கச்சேரி நடந்தேறியது. உபாத்தியாய மாணவர்கள் வனபரிபாலன பாக்களை செவ்வனே பாடினார்கள். திருச்சினாப்பள்ளி சப்ரிஜிஸ்தரார் மகா-௱-௱-ஸ்ரீ P. K. கல்யாணராமசாஸ்திரிகள் அவர்கள் B. A. இராஜவிஸ்வாசத்தைப்பற்றி இதிகாச புராணங்களினின்றும் மேற்கோள்கள் எடுத்துக்காட்டி சிறந்ததோர் உபன்யாசம்செய்தார்கள். விசேஷ கரகோஷத்தின் மத்தியில் எழுந்த சபா நாயகரவர்கள் இத்தினக் கொண்டாட்டத்தின் அவசியத்தைப்பற்றி வேண்டிய காரணங்களுடன் மிக வினயமான பிரசங்கத்தை ஆங்கிலத்தில் செய்தார்கள். நமது காருண்ய அரசருக்கும் அவரைச்சார்ந்த நட்பாசர்கட்கும் சீக்கிரம் வெற்றியுண்டாக ஆர்வத்துடன் பிரார்த்தித்தார்கள். அதன் விஷயத்தை ஆங்கில மறியாதவர்கட்கு தமிழிற் சொல்லவேண்ட பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயர் மகா-௱-௱-ஸ்ரீ P. சுப்பிரமண்ய ஐயர் அவர்கள் B. A., L. T. எல்லோருக்கும் எளிதில் விளங்கும் வண்ணம் மொழிபெயர்த்துக் கூறினர். பிறகு வந்தனங்கள் கூறப்பட்டும் சந்தனபுஷ்ப தாம்பூலாதிகள் வழங்கப்பட்டும் இராஜ வாழ்த்து இராஜ மங்களம் பாடப்பட்டும் மாக்ஷிமை அரச அரசிகட்கு மும்முச்சீர் கூறப்பட்டும் வெகு சந்தோஷத்துடன் தர்பார் தினக்கொண்டாட்டம் திருப்திகரமாகப் பூர்ணமடைந்தது?

கவர்ன்மெண்டு மாறுதல்.

மற்றொரு முக்கிய விஷயம் என்னவென்றால், சீமையில் முதல் மந்திரியாகவிருந்த மிஸ்டர் ஆஸ்குவித் அவர்கள் அவர் வேலையை இராஜீநாமா கொடுத்துவிட்டார். யுத்தம் நடத்துகிற விஷயத்தில் யுத்தமந்திராலோசனை சபையில் மெம்பரா யிருந்தவர்களுக்குள் ஏதோ அபிப்பிராயபேதம் தோன்ற மிஸ்டர் ஆஸ்குவித் தமது வேலையை இராஜிநாமா கொடுத்துவிட்டார். அவருடன் அவர் கக்ஷியைச் சேர்ந்தவர்களும், இராசிநாமா கொடுத்துவிட்டார்கள். மிஸ்டர் போனர் லா அவர்கள் தம்மால் புதிய கவர்ன்மெண்டு ஏற்படுத்தி நடத்தும் பொறுப்பை வகிக்க முடியாதென்று சொல்ல, மிஸ்டர் லாய்ட்ஜியார்ஜ் அவர்கள் அப்பொறுப்பை வகித்து அரசரின் ஆஜ்ஞையினால் புதிய மந்திராலோசனை சபையேற்படுத்தியிருக்கிறார். அந்த சபையில் யுத்த சம்பந்தமான கௌன்சிலைச் சேர்ந்தவர்கள் ஐந்தேபேர்தான். இவர்களைத்தவிர மற்றவர்களெல்லாம் அவரவர் இலாகா வேலைகளைப் பார்த்து வருவார்கள். அவர்கள் பேர் விவரம்:

WAR CABINET.

(1) மிஸ்டர் லாய்ட் ஜார்ஜ்-முதல் மந்திரி.

(2) லார்ட் கர்ஸன் (கௌன்ஸில் ப்ரெஸிடெண்ட்) லார்ட்ஸ் சபையில் பிரதமஸ்தர்.

(3) மிஸ்டர் போனர் லா (அரசிறை மந்திரி) காமன்ஸ சபையில் பிரதமஸ்தர்.

(4) மிஸ்டர் ஹெண்டர்ஸன்.

(5) லார்ட் மில்னர்.

இந்தியாமந்திரி வேலையில் முன்னிருந்த மிஸ்டர் ஆஸ்டின் சாம்பர்லென் தானே இப்பொழுது மிருக்கிறார்.

வேதாரண்யம் சர்க்கார் பெண்பாடசாலையின் வருஷோற்சவம் நாளது டிஸெம்பர்மீ 3உ வழங்கப்பெற்றதென்றும் அத்தருணம் பாலிகைகளுக்குப் பரிசளிக்கும் காரியம் வெகு விமரிசையாக நடந்ததென்றும் அப்பாடசாலைத் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

பெங்கால் கவர்னர்:—சென்னையில் கவர்னராயிருந்து வங்காளத்துக்கு முதல் கவர்னராக மாற்றப்பெற்றுச் சென்ற லார்ட் கார்மிகேல் அவர்களுக்கு 5-வருஷ தவணையாய்விடுகிறபடியால் அவருக்குப்பின் லார்ட் ரோனல்ட்ஷே யென்பவர் கவர்னராக நியமிக்கப்பெற்றிருக்கிறார். இவருடைய நியமனம் வங்காளத்தாருக்கு இசைந்ததாகவில்லை யென்கிறார்கள். இந்தியா மந்திரியோ அவர்தான் அவ்வேலைக்கேற்றவர் என்று சொல்லிவிட்டார்.

WANTED GREAT "MISSIONARIES OF EDUCATION."

Speaking at a meeting of educational workers, Lord Haldane declared it to be his wish to devote the remaining days of his life to being a missionary on the great question of Education. Germany knew the value of Education. "When peace came," Lord Haldane said, "they would hear no more in Germany about 16-inch guns, but they would hear a great deal about continuation schools. The Germans were training up a generation of skilled workmen with whom we would not compete. We had to be upsides with Germany in this matter. We must take care to train the children of our working classes in at least as good a way as the Germans had been able to train theirs. If we cared enough, educational developments and reforms could be forced through. The State would find the money, for unless it was spent, the nation would drop out in the race. A great Education system was an expensive thing, but it was our duty to make it the first quetion to be considered after the War." What India wants at present even more than England does, is great "Missionaries of Education" like Lord Haldane and Sir Rabindranath Tagore.

THE DIFFICULTIES IN OUR WAY.

(BY THE MANAGING AGENTS.)

பத்திரிகைகளின் கஷ்டநஷ்டங்கள்.

பத்திரிகைகள் நடத்துவதிலுள்ள கஷ்டநஷ்டங்களை அதை வாங்கி வாசிப்பவரும் இதரரும் அறிவதில்லை. அறியாததுமன்றி அவர்கள் நடத்தையினால் பத்திரிகைகளின் கஷ்டநஷ்டங்களை அதிகரிக்கச்செய்து வருகிறார்கள். சந்தா தொகையைக் கறாராக முன்னிட்டு அனுப்பவேண்டுமென்கிற நிபந்தனை எல்லாப் பத்திரிகைகளுக்கும் உண்டு. கறாராக முன்பணம் கட்ட இயலாதவர்களுக்கு தவணை வேண்டி கடன் கொடுத்தால் அதற்கு அதிக சந்தா ஏற்பட்டிருப்பதுமுண்டு. "எருதின் நோய் காக்கையறியுமா?" என்கிறபடி, பத்திரிகையைப் படிக்கமட்டும் ஆவல்கொண்டு பணம் கட்டப் பின்னடைகிறவர்கள் பத்திரிகை நடத்துவதிலுள்ள கஷ்டநஷ்டங்களை யறியாது இடறு விளைப்பதன்றி பாக்கியைச் செலுத்தக் கேட்டால் திடீரென்று "பத்திரிகையை நிறுத்திவிடு" என்று எழுதிவிட்டு கடனைச் செலுத்தாமல் நம்பிக்கைமோசம் செய்து ருணபாதகர்களாகிறார்கள். ஆளுக்கு ஒரு காபி வாங்கி வருகிறதானால் ஏதோசிலர் அயோக்கியர்களாயிருக்கவாவது நடக்கவாவது காணப்பட்டால் அவர்களை விலக்கிவிடலாம். நூறு, ஐம்பது பாடசாலைகளுக்கு மானேஜர்களாயிருக்கப்பட்டவர்கள் தாங்கள் பொதுஜன காரியங்களை பொதுஜன நன்மைக்காக நடத்த ஏற்பட்டவர்கள் என்பதை மறந்து, பத்திரிகையை நூறு ஐம்பதுக்கு கடன் அனுப்பச்சொல்லிவிட்டு ஒரு வருஷம் இரண்டு வருஷம் ஆகியும் பணத்தைச் செலுத்தாமல் வல்லடிவழக்குக்கூறி பொதுஜன காலத்தையும் சிப்பந்திகள் வேலையையும் வீண்வழியில் உபயோகிப்பதன்றி, காரியஸ்தர்களான பத்திரிகை மானேஜர்களின் காலத்தையும் வீண்போக்கி அனாவசியமான கஷ்டநஷ்டங்களை யுண்டுபண்ணுகிறார்

கள். புரோகிதனுக்குத் தாசில்வேலை கொடுத்தமாதிரியாக, பொதுநலநாட்டம் படியாதவர்களுக்கு அதிகாரம் கொடுத்து விடுவதால் விளையும் அநர்த்தம் மிகுதியாயிருக்கிறது. இவர்கள் பொது ஸ்தாபனங்களின் காரிய விசாரணை கர்த்தர்களாயிருக்கிற முறையில் பிறரை நம்பவைத்து கடன் பட்டுக் கடனைத்தீர்க்கவும் முடைசெய்து தங்கள் சொந்த கௌரவத்தைக் குறைத்துக்கொள்வதன்றி பொதுவாயுள்ள ஸ்தாபனங்களின் நாணயத்துக்கும் குறைவு உண்டுபண்ணுகிறவர்களாயிருக்கிறார்கள். ஒருவர் "அக்கவுண்ட்கோடில்" அதிகாரமில்லையென்கிறார். அவர் சொல்வது சரியல்ல, தப்பு, என்று தெரிந்திருந்தாலும் அக்கௌன்டெண்டு ஜெனரல்மட்டும் போய்த்தான் அக்காரியம் ஆகவேண்டும். அப்படி அக்கௌன்டெண்டு ஜெனரல் வரையிலும் அதற்குமேல் கவர்ன்மெண்டாருக்கும் சென்று ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயங்களிலுங்கூடச் சிலர் அதையொப்புக்கொள்ளாமல் இரண்டு வருஷத்துக்கு முன், முன்பணமாகக் கொடுக்கவேண்டிய தொகையை எட்டுத்தரம் மரியாதையாய் எழுதியெழுதி யலுத்துச்சலுத்தவர்கள் கண்டிப்பாய் எழுதிக்கேட்டபின் "அப்படிகணக்குக்கொடு" "இப்படி கணக்குக்கொடு" என்று சொல்லி அழிவழக்குச்சொல்லி "அவலை நினைத்து உரலையிடிக்கிற அம்மையார் கதையாக" மனதில் ஒன்றைவைத்துக்கொண்டு அதை நினைத்து குதர்க்கவாதம் செய்கிறார்கள். இப்பொழுது இப்படிப்பட்ட கேஸ்கள் பல நமது கவனத்துக்குக்கொண்டுவரப்பட்டிருக்கின்றன பத்திராசியர் பணம் தண்டப் புறப்பட்டால் பத்திரிகை காலாகாலத்தில் நடப்பது எப்படி? ஆகையால் எல்லாப் பத்திரிகைகள் ஆபீஸிலும் பணந்தண்டல் அச்சிட்டு வெளிப்படுத்தல் முதலிய வேலைகள் வேறொருவர் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டிருப்பது சகஜம். இதையுணராமல், கடனைச் செலுத்தக் கேட்டால், பத்திராசிரியரையும் கௌரவ காரியதரிசியையும் வம்புக்கு இழுப்பதனால் பிரயோசனம் ஒன்றுமில்லை. இந்தக் கஷ்டம் எல்லாப்பத்திரிகைகளுக்கும் உண்டு: ஆனாலும் இப்பத்திரிகைக்கு அது அதிகமாக ஏற்பட்டு இருக்கிறது. ஆதலால் மானேஜிங் கமிட்டியார் நடந்த நடபடிக்கைகளை யெல்லாம் பரிசீலனைசெய்து சந்தாதாரர்களும் இப்பத்திரிகையின் வரவுசெலவு காரியங்களை ஏஜண்டாகவிருந்து பார்த்துவர ஒப்புக்கொண்ட கம்பெனியாரும் கட்டுப்பட்டு நடக்கத்தக்கதாக ஏற்கனவேயுள்ள விதிகளை யெடுத்து பரிஷ்காரமாக வெளியிட்டிருக்கிறார்கள். காகிதம் அகப்படாமையினால் நாலு ரூபாய்ப் பதிப்பு வெகு காலமாக வெளிவராமல் நின்றுவிட்டது. அதுமுதல் ஸ்கூல் எடிஷன் என்று பள்ளிக்கூடங்களுக்கு உபயோகமானதாக ஒரே பதிப்புத்தான் வெளியாகி வருகிறதென்பதை யெல்லாரும் நன்றாக அறியவேண்டும். வால்யம் கணக்காகவே சந்தா ஏற்படுள்ளது. அதற்கு குறைந்தது முன்பணமாக ரொக்கம்கட்டினால் ரூ. 5; ஒரு மாசக் கடன் வேண்டின் கடன்-சந்தாவிகிதம் ரூ. 6. மூன்றுமாசத்துக்குமேல் கடன் பாக்கி யொன்றுமிருக்கக்கூடாது. அப்படி நிலுவை நின்றால் அது விஷயமாக அனுப்பும் ஒவ்வொரு நோட்டீசு அல்லது ஞாபகக்குறிப்புக்கும் வால்யம் 1-க்கு ஒரு ரூபாய் விகிதம் அதிகச் சார்ஜ் சேர்த்துக் கட்டல்வேண்டும். வால்யம் நடுவில் நிறுத்தக்கூடாது. வருஷப்பிரதி வருஷம் வாங்கிவருகிறவர்களைசந்தாதாரர்கள்பட்டியில் சேர்க்கப்படுவார்கள். அவர்களுக்கே இந்த நிபந்தனைகள். இதரர்களுக்குக் காலநிலைபோல் விலையேற்றம் கையிருப்புக் காபிகள் முதலிய சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி விலை யேற்படுத்த நேரிடும். இந்த நிபந்தனைகளை முதலேட்டில் மானேஜிங் கமிட்டியார் உத்தரவுப்படி மானேஜிங் ஏஜண்டார் வெளியிட்டிருக்கிறார்கள். இதுவே எல்லாருக்கும் நோட்டீஸாக எடுத்துக்கொள்ளவேண்டும். இங்கிலீஷ் தெரியாதவர்களும் தெரிந்துகொள்ளவேண்டி தமிழில் இதை வெளியிட்டோம்.

லண்டனில் பிரசுரமாகும் டைம்ஸ் பத்திரிகை முதற்கொண்டு எல்லாரும் விலையை அதிகரித்திருக்கிறார்கள். ஒரு காபியை வாங்கிப் பல பாடசாலைகளுக்கு உபயோகிப்பது சந்தாவிதிக்கு விரோதமென்பதையும் அவர்கள் இதர சந்தாதாரர்கள் செலுத்தும் தொகையைக்கொண்டும் கைம்முதல் கொண்டும் அச்சிட்டு வெளியாகும் பத்திரிகையை கிரமம் தப்பி உபயோகிக்கிறவர்களாவார்களென்பதையும் மானேஜிங் கமிட்டியார் வசராவிட்டுக் குறிப்பிட்டிருக்கிறார்கள். காகிதம் பவுண்டு 2½-அணா விற்றகாலத்தில் ஏற்பட்ட சந்தாவையே இப்பொழுது பவுண்டு 7-அணா விற்கும் காலத்திலும் இரண்டு வருஷம் கடனாக வைத்திருந்து கொடுப்பேன் என்று சொல்கிறவர் யோக்கியதையைப்பற்றி நாமொன்றும் சொல்லவேண்டியதில்லை. ஆனால் அப்பேர்ப்பட்டவர் பொது நலஸ்தாபனங்களின் விசாரணை கர்த்தராயிருக்கிற முறையில் கிடைக்கக்கூடிய நாணயத்தைக்கொண்டு ஆயிரம் ஐந்நூறு என்றும் நூறு, இருநூறு என்றும் கடன்பட்டுவிட்டுக் கடனைத் தீர்க்கமாட்டேன் என்று வம்புசெய்தால் இதற்கு என்ன செய்கிறது! இவர்கள் சொந்தத்தில் இப்படி நடப்பவர்களானால் இவரைநம்பி இவ்வளவு கடன் கொடுப்பார்களா என்பதை நிதானிக்கவேண்டும். "இந்தக் கேஸ்கள் எல்லாம் கோர்ட்டுக்குப்போனால் கோர்ட்டுச்செலவு வம்பு வழக்குகளுக்கெல்லாம் யார் ஆளாகிறது என்பதை இவர்கள் சிந்திக்கிறார்களில்லையே!" இன்றைக்கு வந்த சுதேசமித்திரனிலும் பின்வருகிற விஷயம் வெளியாகியிருக்கிறது. சென்னை டைம்ஸ், ஹிந்து பத்திரிகைகளும் குறைந்த சந்தாவுக்குப் பத்திரிகை விற்பது இனி முடியாது என்று விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள்.

பத்திரிகைகளின் க்ஷாமம்.

பத்திரிகைகளுக்கு ஏற்பட்டிருக்கும் சிரமத்தைப்பற்றி அடிக்கடி ஞாபகப் படுத்தப்படுகிறோம். "ஸிலோன் டைம்ஸ்" என்ற பத்திரிகை ஞாயிற்றுக்கிழமைகளிலும் பிரசுரமாவது வழக்கம். ஞாயிற்றுக்கிழமைப் பிரசுரத்தை நிறுத்திவிடப் போகிறதாக அப்பத்திரிகை அறிவிக்கிறது. "இங்கிலாந்தில் பத்திராதிபர்கள் சந்தாத் தொகையையும் உயர்த்தி பக்கங்களையும் குறைத்துவிட்டார்கள். அவர்களுக்கிருப்பதைவிட இங்குள்ளவர்களுக்கிருக்கிற கஷ்டம் அதிகம். காகிதம் முதலிய சாமான்களின் விலை உயர்ந்துவிட்டதல்லாமல், எந்த சமயத்தில் தட்டேற்பட்டு விடுமோ என்ற அச்சத்தால் ஒரு வருஷத்துக்குவேண்டிய சாமானை வாங்கி வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது; அதனால் ஏராளமான வட்டி நஷ்டமும் ஏற்படுகிறது" என்று சொல்லி அப்பத்திரிகை வருத்தப்படுகிறது.—சுதேசமித்திரன்.

Dr. D. Duncan, late Director of Public Instruction, who is one of the supporters of the Children's Educational Movement, still keeping himself in touch with the same, writes with reference to the Memorandum on the Reform of Rural Education published in the "*Vivekachintamani*" as follows, under date 20th November 1916 :—

"I am glad to see by the copy of *Vivekachintamani* received the other day, that you are as active as ever in your efforts for the welfare of your fellow-countrymen old and young. Yourmain purpose is rightly, I have no doubt, to get at the young. The war is the engrossing subject in this country at present ; but educational questions are also being discussed ; it being realized that many changes must come after the war and that it is desirable that men's minds should be prepared beforehand, so that ill-considered schemes should not be rushed at the last moment."

REFORM OF RURAL AND ELEMENTARY EDUCATION.

Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith.'

"Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End.

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."

அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** **"Approved"**

புத்தகம். **24.**] நள௵ தை௴, **1917**௵ ஜனவரி௴ [சஞ்சிகை **10.**

Business "Terms":

N.B.—To avoid all possibility of misapprehension, we *reiterate* our "terms" (approved by our constituents and by Government) which, from the beginning, are :—

1. Cash or Remittance with Order : Rs. 5 per Vol.; or,
2. *One month's credit at the arrears rate* : Rs. 6 per Vol.
3. Arrears to be cleared on rendering of *a/cs.* or by V.P.P.
4. All Indents registered for School Edition only and to begin with the current volume (corresponding with Tamil or Official year, April-March).
5. Subscriptions registered to continue from Vol. to Vol. and not to be discontinued in the middle of a Vol.
6. No popular edition issued owing to scarcity of paper
7. Monthly parts (spare or sample) 8 (eight) annas each.

General Notice.

☞ Owing to rarity of credit and scarcity of paper, we beg to make it clear and give notice to all that—

i. the *terms* offered are for regular subscribers only ;
ii. no exception to these rules can be made or recognised;
iii. short credit allowed should not be misused ;
iv. unpaid accounts are subject to "fluctuations" and overcharges ;
v. all arrears should be fully paid *within* three months (*time being an important factor*) ;
vi. every outstanding account will be charged *One Rupee Extra* per Vol. or any part thereof for every notice or Reminder sent after this period;
vii. all subscribers are *ipso facto* bound to observe the rules.

(*By Order of the Managing Committee.*)

THE MANAGING AGENTS, "VIVEKACHINTAMANI,"
Novr. 1916.] *Lalitalaya,* 19, *Adam Street, Mylapore.*

☞ *Calculations made are based on the principle of one copy for each school which should be strictly adhered to.*

N.B.—Due care is taken in addressing and personally handing copies to the Post Office at Brodie's Road and there the publishers' responsibility ceases. Evidence of posting is preserved and can be made available for enquiries. The publishers do not undertake to replace missing copies but will endeavour to supply spare copies when available on payment, if applied for within 30 days after the 15th of each month for which such copies are due.

REFORM OF RURAL AND ELEMENTARY EDUCATION.

THE HON'BLE JUSTICE SIR JOHN WOODROFFE'S VIEWS.

Writing to Mr. C. V. Swaminatha Aiyar, K. S. S. A., under date the 4th December, 1916, from Calcutta, fresh from Kashmir, whither he had gone on leave, Sir John Woodroffe expresses his views in a refreshing manner which is sure to command the attention of all earnest workers in the field of Educational Reform. This is what he writes :

"Thank you for sending me your Memorandum on Rural Education. As regards practical measures I have not the necessary knowledge which would *authorise* me to speak. But I certainly agree with you on matters of principle. I suppose any one of sense is now aware that our education is no education at all. I have always thought so. To begin with, people confuse education and literacy which are two different things. Any one can read and write without being educated. It was Sir George Birdwood who said that the illiterate Indian peasant was the most cultivated peasant in the world. He has a great tradition behind him, portions of which suited to his capacity have been meted out to him through the ages in the way best suited to him. I personally detest the modern system of Education. I doubt whether at any period of the world there have been so many truly uncultivated Philistines as are to be found to-day. Many of them may have high 'Educational' honours to their credit but they are not cultivated and as regards the most they have a *veneer* of knowledge ill-digested, ill-understood, which has spoiled the qualities which Nature has given them.

2. "You truly write that the basis of all (Education) is 'the awakening of the spiritual life.' By this I do not mean mere church-going, puja or the like. It is too long to explain in a letter but your note shows you know what I mean. There is another danger as regards Primary Education and it is this. What Primary Education should be for Indians should be determined by the latter who know the Indian soul and its needs. If it is planned and administered by foreigners with different ideas, the giving of Primary Education may make matters worse than if no Education were given at all; for the system may denationalise the peasants who with the Indian woman *are* the casket in which your traditions are preserved and thus your precious heritage will be lost...... ..I wish you well in your admirable work and trust that it will meet with success but I suppose you have learnt by now that there is always a 'but.' It is a good idea to address the Member of Education who being himself an Indian will I am sure, look well on your endeavours.

Yours sincerely,

JOHN WOODROFFE."

Dr. D. DUNCAN, LATE DIRECTOR OF PUBLIC INSTRUCTION

Dr. D. Duncan, late Director of Public Instruction, who is one of the supporters of the Children's Educational Movement, still keeping himself in touch with the same, writes with reference to the Memorandum on the Reform of Rural Education published in the *Vivekachintamani* as follows, under date 20th November 1916 :—

"I am glad to see by the copy of *Vivekachintamani* received the other day, that you are as active as ever in your efforts for the welfare of your fellow-countrymen, old and young. Your main purpose is rightly, I have no doubt, to get at the young. The war is the engrossing subject in this country at present; but educational questions are also being discussed; it being realized that many changes must come after the war and that it is desirable that men's minds should be prepared before hand, so that ill-considered schemes should not be rushed at the last moment."

THE "MADRAS MAIL" OF 5th DECEMBER 1916 ON THE REFORM OF RURAL EDUCATION.

"The *Vivekachintamani*, the Tamil monthly which is doing much good work in the cause of education and particularly rural education and children's education, is urging the need for the development of the faculty of observation in children being given the foremost place in any system of elementary and rural education. Considering the importance of the subject, a journal of the type of *Vivekachintamani* has much scope for useful work both for teachers and thinking pupils. It is being conducted by its able and enthusiastic Editor, Mr. C. V. Sawminatha Iyer, who has laboured much for the promotion of vernacular education."

"No good work is ever lost." "My best wishes for the success of your publication"—Sir Harold Stuart, ... 0

புஸ்தகம்-24.] [சஞ்சிகை-10.

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

நளவருடம் தைமீ

விவேகசிந்தாமணி

December-January 1916-17.

ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

WANTED GREAT "MISSIONARIES OF EDUCATION."

Speaking at a meeting of educational workers, Lord Haldane declared it to be his wish to devote the remaining days of his life to being a missionary on the great question of Education. Germany knew the value of Education. "When peace came," Lord Haldane said, "they would hear no more in Germany about 16-inch guns, but they would hear a great deal about continuation schools. The Germans were training up a generation of skilled workmen with whom we would not compete. We had to be upsides with Germany in this matter. We must take care to train the children of our working classes in at least as good a way as the Germans had been able to train theirs. If we cared enough, educational developments and reforms could be forced through. The State would find the money, for unless it was spent, the nation would drop out in the race. A great Education system was an expensive thing, but it was our duty to make it the first question to be considered after the War." What India wants at present even more than England does, is great "Missionaries of Education" like Lord Haldane and Sir Rabindranath Tagore.

வித்யாவிஷயமாய் கங்கணம் கட்டி உழைக்க உத்தமர்கள் வேண்டும்.

ஐரோப்பாவில் இப்பொழுது சென்ற 30-மாசங்களாக நடந்துவரும் பாரதப்போர் மேற்றிசையார் பலத்தையெல்லாம் குலைத்து விட்டது. ஒவ்வொரு தேசத்திலும் திடகாத்திரர்களாக இருந்தவர்களில் பெரும்பான்மையரும் போர்க்களம் சென்று மாண்டு மடிந்தனர். மிஞ்சியிருப்பவர்களெல்லாம் கிழவர்களும் சிறுவர்களும் பெண் பாலர்களுமே தான் என்று சொல்லலாம். மத்திய வயசுடையவர்களெல்லாம் போர்க்களஞ்சென்று மடிந்தவர்கள் போக மற்றவர்கள் அங்கங்கேயினனும் போர்க்களத்தில் நின்று போராடி வருகிறார்கள். ஜெர்மனிக்கும் கைசளைத்து விட்டது என்று தோன்றுகிறது. ஏனெனில் இந்த மாசம் 'ஜெர்மன் சான்ஸெலர்' சமாதானத்தைப்பற்றிப் பேசி ஒவ்வொரு பகை நாட்டார்க்கும் தனித்தனியே சமாதானப் பேச்சுவிட்டுப் பார்த்திருக்கிறார். ருஷியாவும் பிரான்சும் அவர்கள் தேசத்தில் ஒரு பங்கை ஜெர்மனி வசப்படுத்திக்கொண்டிருக்கிற 'வல்லடி வழக்குக்குத்' தீர்ப்பு நிவாரணம் சொல்லாமல் தானே சமாதானப் பேச்சுக் கொடுத்துப் பார்ப்பது அவர்களை ஏளனம் செய்வது போலிருக்கிறதென்று மறுத்துவிட்டார்கள் அங்கிலேய பார்லிமெந்து சபையில் தற்கால முதல் மந்திரி மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் அவர்

களும் ஜெர்மானியர் சமாதானப் பேச்சுக் கொடுத்துப் பார்க்கிறார்கள் என்றும் ஆனால் அதில் சமாதானம் செய்துகொள்ள வழி வகை யொன்றும் காணவில்லையென்றும் வல்லடி வழக்காய்ப் பிடித்துக்கொண்ட தேசங்களை யெல்லாம் காலிசெய்துவிட்டு, அவர்கள் செய்த அக்கிரமங்களுக்கு நஷ்டங் கட்டிக்கொடுத்து, இனி அதிக்கிரமித்து நடக்காதபடியிருக்கத் தக்க ஜாமினும் கொடுக்கவேண்டுமென்றும், அப்படி யொன்றும் செய்யாத வரையில் சமாதானப் பேச்செல்லாம் வீண்பேச்சேயென்றும் அதைக் கண்டு கூட்டாளிகள் யாரும் ஏமாந்து போகமாட்டார்களென்றும் சொல்லி வெளியிட்டுப் பேசினார். பற்றியதீ காட்டுத்தீயானாலும் விறகுள்ளமட்டும்தான் அது எரியும். காட்டுத் தீயின் கொடுமையினால் பச்சை மரங்களும் காய்ந்து கருகித் தீய்க்கு இரையாகலாம். ஆனாலும் பற்றியதீ எப்படியும் அணைந்தேதான் தணியவேண்டும். ஆகையால் யுத்தப் போக்கையும் சமாதானப் பேச்சையும் விட்டு இந்த யுத்தத்துக்குப் பிறகு ஆகவேண்டிய முக்கிய காரியம் என்னவென்று விசாரிப்பது ஒக்கும்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வியல்பினானே" யென்றதனால் பழையனவாக வுள்ளனவெல்லாம் மார்கழி மாசம் கழிப்புக் கழிப்பதுபோல இந்த மஹா யுத்தத்தில் கழிந்துபோக, அந்தஸ்தானத்தில் புதியனவாகப் புகவிருப்பது என்ன என்னவென்று விசாரிக்க இதுவே சமயம்.

லார்ட் ஹால்டேன் என்பவர் ஜெர்மனியோடு நன்றாகக்கூடிப் பழகினவர். அவர்களுடைய உட்கருத்தெல்லாம் அவருக்கு நன்றாகத் தெரியும். அவர் என்ன சொல்கிறாரென்றால்: இந்தச் சண்டை முடிவுக்கப்புறம் ஜெர்மனியில் 16-அங்குலப் பெரிய பீரங்கிகள் செய்வதைப்பற்றி யாதொரு பேச்சும் கேட்கப் படமாட்டாது. பின்னை யென்ன பேச்சுப் பிரதானமாக விருக்குமென்றால், பிள்ளைகளைப் படிக்கப் பழக்கும் முறை அதி விஸ்தாரமாக அனுஷ்டிக்கப்பட்டு அதில் அத்தேசச் சிறுவர்கள் நன்றாகத் தேறச்செய்யப் பெரும்பாடு பட்டுழைப்பார்கள் என்பது நிச்சயம். அவர்களோடு போட்டிபோட பிரிடிஷாரால் முடியாதபடி, படிப்பு அத்தேசத்தில் மிகப் பின்னடைந்திருக்கிறது. ஆதலால் அவர் அவருடைய மிகுதியான வாழ்நாளையெல்லாம் வித்யா சீர்திருத்தஞ்செய்து வித்தையைப் பரவச்செய்ய வுழைப்பதில் தீக்ஷைகொண்டுழைக்கத் தீர்மானித்திருக்கிறதாகச் சொன்னார்.

அது உண்மையானபடி நல்ல மனப்போக்குத்தான். இனி வருங்காலம் குழந்தைகளுக்குரியது. ஆகையால் அவர்களை யாளாக்க முயல்வதுதானே மேலோர்க்கிசைந்த பெரிய வேலை. "பிள்ளைகளை வளர்க்கும் வித்தை பிரமாதமான வித்தை" யென்று விவேகத்தாய் சொல்லியிருக்கிறபடியால் அந்தப் பிரமாதமான வித்தையை நடத்தப் பேராற்றல் பெற்ற பெரியவர்களே முன்னின்றுழைக்கவேண்டும். இந்தியாவில் இப்பொழுது ஸர் ரவீந்திரநாத் தாகோர் அவர்கள் இதற்கெனவே கங்கணம் கட்டி யுழைத்து வருகிறார்கள். இவர்களைப் போன்ற மேதாவிகள் வித்தையைக் குழந்தைகளுக்குப் போதிக்கவும் அவர்கள் உள்ளபடி வித்யாலக்ஷ்மி வரப்பிரஸாதம் பெறவும் உழைக்க நோன்புகொண்டு முயற்சிக்கவேண்டும். இந்தியா இங்கிலாந்தைவிட தற்காலம் வித்யாவிஷயத்தில் மிகப் பின்னடைந்திருக்கிறது. பூர்வத்தில் ரிஷிகளும் முனிவர்களும் மற்றப் புருஷோத்தமர்களும் பாலர்க்கு வித்யா சிக்ஷை தீக்ஷை செய்துவைப்பதே உத்தம தர்மமாகக்கொண்டு உழைத்துவந்தார்கள். ஸ்ரீஇராமலக்ஷ்மணர் ரிஷிகளால் ஆளாக்கி விடப்பட்டவர்களே. அப்படிப்பட்ட பாரம்பரிய தர்மம் ஏற்பட்ட இத்தேசத்தில் இப்பொழுது படிப்பு மிகவும் ஹீனஸ்திதியிலிருக்கிறது. இதன் காரணத்தைப்பற்றி கல்கத்தா

ஹைகோர்ட்டு ஜட்ஜி கனம் ஸர் ஜான் வூட்ராப் அவர்கள் இந்த விவேகசிந்தாமணி பத்திராசிரியருக்கு ஒரு அருமையான கடிதமெழுதியிருக்கிறார். அதை இந்தியா கவர்ன்மெண்டு வித்யாமந்திரி கனம் ஸர் ஸங்கரன் நாயர் அவர்களுக்கும் இவ்விராஜதானி கவர்ன்மெண்டாரில் வித்யா இலாகா, லோகல் அண்டு முனிசிபல் இலாகாத் தலைவர்களுக்கும் அந்தந்த இலாகா காரியதரிசிகள் மூலமாக அனுப்பி வைத்திருக்கிறோம். அத்துடன் பாலபோத சாதனசங்க விசாரணைக் கமிட்டியார் சென்ற நவம்பர் 30உ கூடி நடத்திய நடபடிக்கைகளையும் அனுப்பி வைத்திருக்கிறோம். இதன்முகட்டில் அவருடைய கடிதத்தை வெளியிட்டிருக்கிறோம். அடுத்த சஞ்சிகையில் முதல் அதன் உட்கருத்தை விவரத்துடன் எடுத்துக்காட்டி யெழுதுவோம். இப்பொழுது இந்தியாவுக்கு வேண்டிய முக்கிய தேவை யென்னவென்றால் பாலபோதன விஷயமாய்க் கங்கணம் கட்டியுழைக்கும் உத்தமோத்தமர்களையென்றுமட்டும் வற்புறுத்தி இதை முடிப்போம். சுபமஸ்து.

இங்கே ஒருவிஷயம் குறிப்பிடத்தக்கது. இப்பத்திராசிரியர் பாலபோதன விஷயமாக சிறுவர்களுக்கும் அவர்கள் மனப்பயிற்சிக்குக் காரணமான பெற்றோர் போதகர்களுக்கும் சாதகமாகவிருக்க இப்பத்திரிகையை நடத்த வித்யா இலாகா அதிகாரி முன் கங்கணம் கட்டியுழைக்க உடன்பட்டிருக்கிறார். அப்படியே வித்யா இலாகா அதிகாரிகளும் உதவிபுரியக் கடமைப்பட்டிருக்கிறார்கள். பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் பலரும் இதன் அருமை பெருமையை பாராட்டி வருவதை நாமறிவோம். அவர்கள் உபயோகத்துக்காகவென்று லோகல் போர்டார் வாங்கத்தீர்மானித்த புஸ்தகங்கள் அவர்களிடம் சேராதபடி சிலர் இடையூறுவிளைத்து வருகிறதாகத் தெரிகிறது. இந்த வில்லங்கம்நீங்க ஜகதீசன் அருள்புரிய வேண்டுமென்று சபாநாயகரைப் பிரார்த்தித்து மன்றாடிக் கேட்டுக்கொள்கிறோம்.

THE HOME AND SCHOOL INFLUENCES.

இல்லப்பயிற்சிக்கும் பள்ளிப்பயிற்சிக்குமுள்ள வித்தியாசம்.

பிள்ளைகள் பள்ளிக்கூடத்திலிருக்கையில் மனதிற் பதியப்பெறும் அபிப்பிராயங்களுக்கும், வீட்டிலிருக்கையில் பதியப்பெறும் அபிப்பிராயங்களுக்குமுள்ள விரோதம் முன்னிலுமிப்பொழுது அதிகப்பட்டிருக்கிறது. இதனால் சிறுபிள்ளைகள் பகுத்தறிவுண்டாகாத காலத்திலே இன்னது சரி இன்னது பிசகு என்று ஐயமற உணர்ந்துகொள்ளக்கூடாமல் ஒன்றுக்கொன்று நேர் விரோதமான இருவகை யதிகாரங்களுக்குட்பட்டு அவர்கள் சரியாக நடக்கவேண்டியவழி யின்னதென்றுணரக்கூடாமல் மனம் ஊசலாட அவதிப்படுகிறார்கள். இதனால் சரியான வழியில் நடக்கவேண்டுமென்கிற நல்ல தீர்மானத்தை நிறைவேற்ற முடியாமல் சமயத்துக்குத் தக்கபடி நடந்துகொள்வதே சாமார்த்தியமென்கிற தப்பெண்ணம் மனதிற் பதிந்து அவர்கள் மனதைக் கெடுத்து விடுகிறது. இது காரணத்தினாலேயே தற்காலம் இங்கிலீஷ் படித்தவர்கள் பெரும்பாலும் காலத்துக்குத் தக்க கோலம்போட்டு மனவுறுதியும் சீர்மைக்குணமுமின்றி வீட்டில் ஒரு மாதிரியாகவும் வெளியில் ஒருமாதிரியாகவும் பேசிப் பழகிப் பல வேஷக்காரர்களாய் ஆங்கிலேயருக்குள்ள மனோதைரியமும் துணிவும் திடமுமின்றி அவர்களால் இளப்பமாக வெண்ணி அநேகமாய் அவமதிக்கப்பட்டும் வருகிறார்கள்.* இது பெற்றோர் குற்றம் மாத்திரமின்றிப் பள்ளிக்கூட ஏற்பாட்டிலுமுள்ள குற்றமாம்.

இக்குற்றத்தைத் தக்க காலத்தில் கண்டு நிவர்த்திக்காமையால் நம்தேசத்துக்கு எவ்வளவோ சொல்லரிய தீங்கு விளைந்திருக்கிறது. இன்னமும் நிவர்த்திக்காமல் காலதாமதம் செய்துவரில் என்ன விநாசகாலம் நேரிடுமோ அதைப்பற்றி நினைக்கவும் மனம் நடுங்குகின்றது. இவ்விஷயத்தை சுதேசபாஷாபிவர்

த்தி விஷயமாக தர்க்கம்நேர்ந்த சமயத்தில், மதராஸ் மெயில் பத்திரிகையில் மிக வற்புறுத்திக்கூறி யிருக்கிறோம். கவர்ன்மெண்டார், வித்தியா இலாகா அதிகாரிகளுமேயன்றி நம்முள் பெற்றோராயிருக்கும் பொறுப்புவாய்ந்த ஒவ்வொருவரும் இது விஷயத்தைக் குறித்து ஆர அமர யோசித்து இக்குற்றத்தை நிவர்த்திக்க முயற்சி செய்யக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள். இக்கடமையை அவர்கள் நிறைவேற்றப் பின்வாங்குவரேல் மகா பாதகம் விளையும். வித்யா அதிகாரிகளும் கிளிப்பிள்ளைக்குப் பேச்சுக் கற்றுக்கொடுப்பது போல் நம் பிள்ளைகளுக்கு இங்கிலீஷைப் பொட்டைப்பாடமாக நெட்டுருப்போட்டு வைப்பதே வித்யாபோதனை யென்று ஏமாந்து, தங்கள் கடமையைத் தாங்கள் இதனாலேயே சரிவரச்செலுத்தி வருவதாக மனப்பால் குடித்திராமல் உண்மையை யாராய்ந்தறிந்து இப்பொழுதுள்ள இப்பெருங்குற்றம் நிவர்த்தியாகும்படி வித்யாபோதன முறையைச் சீர்திருத்தி, சரியான மனோவிர்த்தி யுண்டுபண்ணக்கூடிய உண்மையான வித்யாபோதனை தேசத்திற் பரவும்படிச் செய்ய முயற்சிக்க வேண்டும்.

ஜனங்களும் அதிகாரிகளும் சேர்ந்துழைத்துப் பிள்ளைகளின் இல்லப்பயிற்சிக்கும், பள்ளிப் பயிற்சிக்குமுள்ள வித்தியாசத்தைக் குறைத்து இரண்டையும் ஒன்றுபடுத்தப் பார்க்கவேண்டும். இச் சிலவார்த்தைகளுடன் இதன் ஆரம்பத்தில் குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி சுமார் 40-வருஷங்களுக்குமுன் வித்யா இலாகா அதிகாரிகள் மேன்பார்வையில் நடைபெற்றுவந்த ஒரு பத்திரிகையில் வெளியானதை, இன்றைக்கும் பொருந்துவதாயிருப்பதுபற்றி அப்படியே எடுத்துக்கீழே பிரசுரிக்கிறோம். இது சம்பந்தமாகச் சமயம் நேர்ந்துழில் பின்னும்பேசி இப்பொழுது நமது பிள்ளைகளைப் பயிற்றுவிக்கும் முறையில் சென்ற 40-வருஷ காலமாயுள்ள குறைகளை வற்புறுத்திக்காட்டி வருவோம்.

“இப்போது இத்தேசத்தில் பிள்ளைகளைப் படிப்பிக்கப் பாடசாலைகள் அநேகம் ஏற்பட்டிருக்கின்றன; அவற்றில் படிக்கின்ற பிள்ளைகளுக்கோ கணக்கில்லை; ஆயினும் அப்பிள்ளைகள் படிக்கின்ற படிப்பெல்லாம் வெகுவாய் மதிமலர்ச்சிக்கு மட்டும் ஏதுவாயிருக்கின்றனவே யொழிய நீதிபோதனைக்குப் பயன்படவில்லை. பிள்ளைகள் முதலில் ஒரு பாடசாலையில் படிக்கப் பிரவேசிக்கிற நாள்முதல், கடைசியில் படிப்பெல்லாம் முடிந்ததென்று சொல்லி ஒரு பெரிய வித்தியாசாலையைவிட்டு நீங்குகிற நாள்வரையில், சர்வகலாசாலையார் ஏற்படுத்திய பரீக்ஷைகளுக்கு உபயோகமான பாடங்களையே படித்துக் காலங்கழிக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய கோரிக்கை நிறைவேறாமல் இருக்கிறதென்பதில்லை; அந்த விஷயங்களில் சித்தி பெறவே பெறுகிறார்கள். ஆயினும் பின்பு உலக வியாபாரங்களிற் புக வேண்டுமென்றால் வருத்த முண்டாகின்றது. இக்காலத்துப் பிள்ளைகளுக்குப் புத்தி விவேகங்கள் இல்லையென்பதில்லை; உபாத்தியாயர்கள்கூடக் கண்டு ஆச்சரியப்படும்படியான புத்தி நுட்பமும் விவேகமுமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய புத்தி வாலிபத்திலேயே நன்றாய்ப் பயிற்றப்படுமானால், பின்பு அவர்கள் உலக வியாபாரங்களில் வெகு சாமர்த்தியமுடையவர்களாயிருப்பார்கள். அப்படிப் பயிற்றுவதுதான் வெகு அருமையாயிருக்கின்றது. உபாத்தியாயர்கள் அதற்கேற்றபடி புத்திகூர்மையைமட்டும் கற்பித்துக் கொடுக்கிறார்களே யொழிய உலக வாழ்க்கைக்கு வேண்டிய நீதிமுறைகளை நன்றாய்ப் போதிப்பதில்லை.

“இக்காலத்துப் பிள்ளைகளுக்கு நீதிமுறைகள் மனதில் சரியாகப் படிவதில்லை. ஒன்றுக்கொன்று விரோதமான கருத்துகள் முதலி

*Vide Series of 4 Articles in the “Madras Mail” under “Vernacular Studies in Madras.”

லேயே அவர்களுக்கு உண்டாகின்றன. வீட்டிலிருக்கையில் ஒரு விதமான அபிப்பிராயமுண்டாகின்றது; பாடசாலையிலும் புத்தகங்களைப் படிக்கையிலும் மற்றொருவிதமான அபிப்பிராயமுண்டாகின்றது. பந்துக்களும் அவ்விரோதாபிப்பிராயங்களை மாற்றி அப்பிள்ளைகளின் மனதை ஒருமைப்படுத்துவதில்லை; பாடசாலை உபாத்தியாயர்கள் அதைச் செம்மைப்படுத்தினால் படுத்தலாம்; அவர்களும் தாங்கள் கடமையாய்ச் செய்யவேண்டிய கற்பனையொன்று தவிர மற்ற விஷயங்களிற் புகுவதில்லை. பிள்ளைகளுக்கு வீட்டிலே கிடைக்கின்ற நற்போதனை மிகவும் அற்பமானது. “செடியாய் வணங்காதது மரமாய் வணங்குமா” என்கிறபடி, இளமையிலேயே திருத்தப்படாத மனது முதிர்ந்த பிறகு திரும்புமா என்பதைக் கவனியாமல், தாய் தந்தையர்களும் தம்மிஷ்டப்படி வணங்கத்தக்க இளமனதைச் சீர்ப்படுத்தாது உபேக்ஷையா யிருந்துவிடுகிறார்கள். பாடசாலைகளில் பூர்வகாலத்தக் கோதண்டம் முதலிய கொடிய தண்டனைகளெல்லாம் அனேகமாய் அடக்கப்பட்டிருந்தாலும், கோபமும் கொடுமையும் அதிகமாய் அடங்கவில்லை. இப்படிப் பலவாறிருப்பதனால், பிள்ளைகள் அடங்கியொழுகவேண்டிய வழி செம்மையாய்த் தெரியாமலே பெரியோராவார்களானால், அதைக் கண்டு நாம் ஆச்சரியப்படுவானேன்? சில பிள்ளைகளுக்குச் சரி இன்னது கப்பு இன்னதென்பதுகூடச் செம்மையாய்த் தெரிவதில்லை. தற்செயலாய் அவரவர் புத்திக்குத் தோன்றியபடி ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதமான அபிப்பிராயமுண்டாகின்றது. வித்தியாசாலையில் உயர்ந்த பாடங்கள் படிக்கும்போதும் இப்படியே. பின்பு தானே சுதந்திரமாய் உயிர்வாழ்க்கைக்கு வேண்டிய வியாபாரங்களை நடத்திக்கொண்டு போகவேண்டிய நாள் வந்தால் அப்போது வெகு வருத்தமுண்டாகின்றது. சிறந்த துணிவும ஏதோ ஒரு கொள்கையில் நல்ல பிடிமானமுள்ள சிலர்மட்டும் செம்மையாய்க் காரியங்களை நடத்திக்கொண்டு போகிறார்கள். மற்றவர்கள் ஒருவழியுந் தெரியாமல் உழன்று தவிக்கிறார்கள்.

“இத்தேசம் முன்போலிராமல் இப்போது வெகுவாய்ச் சீர்ப்படுத்தப்பட்டிருந்தும், சிறந்த நீதிபோதனைமட்டும் பிள்ளைகளுக்கு மிகவும் அருமையாயிருக்கின்றது. இனி இத்தேசத்துப் பெண்பிள்ளைகளெல்லாம் தக்கபடி நன்றாய்க் கற்பிக்கப்பட்டுப் பிள்ளைகளுக்கெல்லாம் புத்தி தெரியாமலிருக்கையிலேயே விவாஹம் செய்வது நிறுத்தப்படுங்காலம் வரும்போது இதுவும் சீர்படுமெனத் தோன்றுகின்றது. அதற்கு இடையிலேயே பிள்ளைகளுக்குப் பல வித நீதிகளும் ஜீவகாலத்தில் அவர்கள் சமுசாரத்தை நடத்தவேண்டிய விதமும், யுக்தாயுக்தங்களைப் பகுக்கறியுந் திறமையும் இவை முதலியவெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாய்க் கற்பிக்கப்பட்டு வந்தாலும் வரலாம்.

“இச்சிறந்த விஷயங்களையெல்லாம் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் வழி எப்படியெனில், நாமே வருத்தி அவர்களை ஒரு வழியில் திருப்பாமல் பிள்ளைகள் தங்களுக்குத் தாங்களே நியாயங்களையும் நன்மை தீமைகளையும் கடமைகளையும் அறிந்துகொள்ளும்படி அவர்கள் மனதை நாம் பண்படுத்திவிடவேண்டும். தத்துவ விசாரங்களும் ஆத்தும விசாரங்களும் செய்வதிற் பயனில்லை. யாவரிடத்திலும் அனுதாபமுடையவர்களாயிருப்பது, அதாவது பிறர் நம்மிடத்தில் எவ்விதமாய் நடக்கவேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ அவ்விதமாகவே நாம் பிறரிடத்தில் நடப்பது நமது கடமை என்பதை முதலில் பிள்ளைகளுக்குக் கற்பித்து, பின்பு அதைக்கொண்டு நல்வழியில் நடப்பதற்கு வேண்டிய பல நற்குணங்களையும் கற்பிக்கவேண்டும். தருமம், தயை, ஈவு, இரக்கம், உண்மை, அடக்கம், அன்பு, உழைப்பு, ஆட்சி, ஆண்மைத்திறம் முதலிய உலகவாழ்க்கைக்குவேண்டிய பல நற்குணங்களும், கர்வம், கொடுமை, பொறாமை, கள்ளம், கபடம், மோசம் பெருமிதச்செலவு முதலிய பல தீக்குணங்களும் ஆகிய இவற்றையெல்லாம் தெளிவாய்த் தெரிவிக்கவேண்டும். இக்குணங்களையும இவற்றால் விளையும குணதோஷங்களையும் நாமே எடுத்துக் காட்டுவதைவிட, அவரவருடைய அனுபவத்தையும் புத்தி நுட்பத்தையும் சாமர்த்தியத்தையுங் கொண்டு பிள்ளைகள் தங்களுக்குத் தாங்களே தக்க

உதாரணத்துடன் அக்குணங்களின் நன்மை தீமைகளை எடுத்துக் காட்டும்படிச் செய்தால், தற்காலத்தில் அதனால் அப்பிள்ளைகளுக்கு மிக்க உற்சாகமுண்டாவதோடுகூட, அவ்விஷயங்களெல்லாம் அவர்களுடைய மனதில் நன்றாய்ப் பதிந்துபோம். இப்படி அவற்றை ஒருதரம் எடுத்துக்காட்டுவது போதாது; ஒன்றுமாற்றி யொன்றாய்ப் பலதினங்களில் பல முன்னோர்களுடைய சரித்திரங்களையும் பிரபஞ்சத்திலுள்ள பல நியாயங்களையும் உதாரணமாகக் காட்டிப் பலவாறு போதிப்பிக்க வேண்டும்: அப்போதுதான் அவற்றின் நன்மை தீமைகளெல்லாம் பிள்ளைகளுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல நன்றாய் விளங்கும் பின்பு அவர்கள் தீக்குணங்களைவிட நற்குணங்களையே கைபாளத் தலைப்படுவார்கள். இக்குணங்களைப் பிள்ளைகளுக்குப் போதிப்பிக்கும்போது போதகர்களுடைய குணமும் நடத்தையும் அதற்கேற்றபடியே இருக்க வேண்டும் மேலும் போதகர்கள் பிள்ளைகளிடத்தில் அதிக நேசம் பாராட்டிச் சிரிப்பும் விளையாட்டுமாகவே நீதிகளைப் போதிப்பார்களானால், அப்போது அவை மிகவும் உறுதியாகப் பிள்ளைகளின் மனதில் பதியும் இவற்றோடுகூடப் பிள்ளைகளை அடக்கியாளுந் திறமை உபாத்தியாயர்களுக்கு அவசியமானது.

“இவ்விதமாக விதிகளைப் பிள்ளைகளின் மனதில் பதியச்செய்ய உதாரணங்கள் இன்றியமையாதிருப்பதுபோல், உதாரணங்களிலுள்ள விஷயங்களைத் தெளிவாக்க விதிகளும் தக்கபடி சேர்ந்திருக்கவேண்டும். இவற்றிற்கெல்லாம் முக்கியமாய் உபாத்தியாயர்களுடைய சாமர்த்தியம் அவசியமானது, பிள்ளைகளுடைய தேர்ச்சிக்குவேண்டிய பல வழிகளையும் நன்றாய் ஆய்ந்தோய்ந்து பார்த்து உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்குக் கற்பிப்பார்களானால், அப்போது பிள்ளைகள் உலகத்தில் நல்லவர்களென்று பேர்பெற்றுத் தங்கள் வாழ்நாளைச் செம்மையாய்ப் போக்கத் திறமையுடையவர்களாவார்கள்.”

இது சுமார் 40-வருஷங்களுக்குமுன் எழுதப்பட்டது. இன்றைக்கும் இவையெல்லாம் அமையும்படியிருப்பது விவேகசிந்தாமணியில் இதைப்பற்றி நாம் சமீபத்தில் எழுதிவந்ததை ஊகித்து உண்மையறிந்து கிரகித்தவர்களுக்கு நன்றாக விளங்கும்.

THE USE OF TOYS IN THE EDUCATION OF CHILDREN.

குழந்தைகளும் விளையாட்டுக்கருவிகளும்.

குழந்தைகள் எங்கும் விளையாட்டுப் பிரியர்களாயிருக்கிறார்கள். இப்பிரபஞ்சவாழ்வே ஒரு விளையாட்டாகச் சொல்லப்படுகிறது. அப்படியானால் இப்பிரபஞ்ச நாடகத்தில் ஆடப்பிறந்தவர்கள் ஆரம்பந்தொட்டே விளையாட்டிற் பிரியர்களாயிருப்பது சகஜந்தானே. குழந்தைகளுக்கியல்பாயுள்ள விளையாட்டுப்பிரியத்தைத் தக்கபடி வளரவிட்டு அதன் வளர்ச்சியைச் சமயோசித சாமர்த்தியத்தோடு தக்கவாறு மேற்பார்வைசெய்து நடத்திவருவதே வித்தியாப்பியாசமாகும். குழந்தைகளைச் சுபாவத்தில் வளரவிட்டு குற்றநற்றமறிந்து குற்றத்தைநீக்கிக் குணத்தை வளர்த்து நாலாவிதத்திலும் குழந்தைகள் சமதோரணையாக விர்த்தியடைந்து வரப்பார்த்து வருவதே கிண்டர்கார்டன் முறையென்று சொல்வதாம். இந்த முறையைச் சரிதோரணையாகக் கண்டுபிடித்து வெளிப்படுத்தினவர், ப்ரோபெல் என்னும் ஜர்மனி தேசத்தவர் ஒருவர். இவர் தம் ஆயுள் கால முழுவதையும் குழந்தைகளை வளர்க்கும் விதத்தையறிந்து முறைப்படுத்திச் சீர்ப்படுத்துவதில் கழித்தார். ஆகையால் இம்முறை காரணப்பெயரால் இவர் பெயர்பற்றி ப்ரோபெல் முறையென்று வழங்குகிறது.

இவர் கண்டுபிடித்தது ஒன்றும் நூதனமல்ல. இவர் காலத்துக்குமுன் ஜனங்கள் உணராத உண்மைகளை, இவர் ஆராய்ந்தும் ஊகித்துமுணர்ந்து அவ்வுண்மைகளை உபயோகிக்கும் வழியையும் கண்டுபிடித்து ஒழுங்குபடுத்தினதே இவர்செய்த பெரிய வேலை. “இப்புவியில் இல்லாததொன்றில்லை இளங்குமாரா” என்று ஸ்ரீராமர் லக்ஷ்மணனுக்குச் சொல்லியபடி இவ்வுலகில் இல்லாததொன்றுமில்லை. எல்லாம் புராதனமானதே. ஆனால் அததன் குணாகுணத்தையறிந்து குற்றத்தை

நீக்கிக் குணத்தை வழிப்படுத்தி உபயோகிப்பதே விசேஷமாம். இந்த மர்மம் நமக்குத் தெரியவரும் வரையில் உள்ளனவெல்லாம் இருந்தும் நமக்கு இல்லாதனவேயாகும். பிரபஞ்சத்திலுள்ள சூக்ஷ்மவிலாச யுத்திகளின் மர்மத்தை யறிந்துகொள்ளும்போதே நாம் அவைகளின் இருப்பை உணர்ந்தவர்களாகிறோம். இந்த உணர்வு நமக்கு உண்டாகும்போதே ஒன்றை நாம் கண்டுபிடித்ததாகச் சொல்கிறோம். அதாவது நம் புத்திக்குப் புலப்படாமல் மறைந்திருந்ததைக் கண்டுபிடித்ததாகச் சொல்கிறோம். ஆகையால் இப்படிக் கண்டுபிடித்த விஷயமோ, வஸ்துவோ, முறையோ, எதுவோ ஒன்றைப்பற்றி விவரிக்குங்கால் அதில் சில பல பாகங்கள் நமக்குத் தெரிந்ததாக விருத்தலால் இதிலென்ன அதிசயமென்று நிராகரித்துப்பேசுவது சரியல்ல; அப்படிப் பேசுவது யுக்தி புத்தி இரண்டிற்கும் ஒவ்வாததாகும். இந்த வழக்கம் நம்மவர்களுக்குள், விசேஷமாய் நமது பெண்பாலார்களுக்குள், அதிகமாய் உண்டு. இதனால் நேரும் கெடுதி மிகுதி. ஊகமாய் யுக்திபுத்தியோடு எதையும் உற்றுநோக்கி ஆராயும் வழக்கம் படியப்பெற்றோருக்கு அவர் கண்முன்படும் எவ்வளவு சாதாரணமாகத் தோன்றும் வஸ்துவும் ஓர் அதிசயக் களஞ்சியமாகுமென்பதிற் சந்தேகமில்லை. மின்னலையறியாதார் யாருமில்லை. மின்சாரமென்பது மின்னலின் சக்தியேயன்றி வேறல்ல. மின்சாரத்தினுதவியால் வண்டியோடுவதையும், ஒளிவிளக்கு வெளிச்சம் தருவதையும், பேசுந் தந்தியாலும், அடிக்குந் தந்தியாலும் வெகுதூரத்திலுள்ளோர் ‘வாயு வேகம், மனோவேகம்’ என்று உவமித்துச்சொல்லும் மிகுதியான வேகத்திலும் அதிக வேகமாகக் கலந்துபேசிக் கொள்வதையும் பார்த்தால் எவ்வளவு அதிசயமாகவிருக்கிறது பாருங்கள்.

சிலநாள் முன் நாட்டுப்புறத்திலிருந்துவந்த ஒரு புத்திசாலி சென்னையில் டிராம்வண்டியோடுவதைப்பார்த்து மிக அதிசயப்பட்டு அது எப்படி ஓடுகிறதென்பதை விளக்கும்படி மிக வருந்திக்கேட்டார். நான் மின்சாரத்தின் உதவியால் ஓடுகிறதென்றும் மேலேபோகும் கம்பிவழியாக வரும் மின்சார ஓட்டம் யானையின் துதிக்கைபோல் வண்டியின் மேற்றட்டிலிருந்து வளைந்துசென்று கம்பியை ஒட்டி உருவியோடும் சிறு சக்கரத்தின்வழியாக வண்டியிலிறங்கி அதன் கீழே வண்டியோடும் உருளைகளை ஒட்டி அமைந்திருக்கும் யந்திரத்திற்சென்று உருளைகளைச்சுற்ற, வண்டியோடுகின்றது என்றும் சொன்னேன். இது ஒன்றும் விளங்காதவராய் மின்சாரமாவது வண்டியோட்டவாவது என்று நம்பிக்கையற்றுப் பேசினார். மின்னலுக்குச் சக்தியிருக்கிறதென்று தெரியுமா? வானத்தில் தோன்றும் மின்னல் நம் கண்ணைப் பறித்துக்கொண்டு போவதில்லையா? மரத்தில் அல்லது கட்டடம் கோபுரத்தில் விழுந்து தகர்த்துவிடுவதில்லையா என்று கேட்டேன். அதற்கு அவர் “ஆம் சரிதான். ஆனால் இந்த மின்சாரம் என்பது மின்னலைப்போல் இல்லையே. வண்டியில் தெரியும் மின்சார வெளிச்சம் மின்னல் வெளிச்சம்போலவா விருக்கிறது என்றார்.

இவருக்கு வாயாற்சொன்னால் விளங்காது என்று மின்சாரத்தின் மின்னலை முதலில் காட்டுகிறேன், அப்புறம் பேசலாமென்று சொல்லி வார்த்தையை நிறுத்திவிட்டு அவரை வீட்டிற்கழைத்துவந்தேன். அன்று சாயங்காலம் அவரை யழைத்துக்கொண்டு ‘டிராம்வே’ மூலைதிரும்பும் ஓரிடத்தில் கொண்டுபோய் நிறுத்திக்கொண்டு வண்டி வந்து இந்த மூலை திரும்பும்பொழுது மேலும் கீழும் கண்ணுக்கு மறைந்திருக்கிற மின்சாரம் மின்னலாகத்தோன்றும் பாருமென்று சொன்னேன். வண்டி வந்து திரும்பும்பொழுது மேலும் கீழும் உரைசல் அதிகமாக உண்டாகப் ‘பளிச், பளிச்’ என்று மேலே கம்பியிலும் கீழே வண்டியுருளை தண்டவாளத்தைத் தொடுமிடத்திலும் மின்னல் தோன்றியது. அதைப் பார்த்தவர் “மின்னலிருக்கிறது இப்பொழுது தெரிந்ததையா. எப்படியோ மின்லைப்பிடித்து மேலே

கம்பியிலும் கேழ சக்கரத்திலும் மாட்டிவிட்டான்; அது ஓடுகிறது. எல்லாந் தெரிந்துவிட்டது வாருங்கள்" என்றார்.

சற்றுமுன் ஒன்றுந் தெரியவில்லை யென்றீரே இப்பொழுது எல்லாந் தெரிந்துவிட்டது என்கிறீரேமின்னல் மின்சாரமாக விருக்கிறது ஒன்று தெரிந்தால் மற்றதெல்லாம் தெரிந்துவிட்டதா? அது எப்படி?" என்றேன்.

"எப்படியோ "மின்னலைப் பிடித்துவிட்டான். அப்புறம் அதைக்கொண்டு ஓடச்செய்வதில் என்னவிருக்கிறது. அது ஒரு சொப்படிவித்தை" என்றார்.

மின்சாரமென்பது மின்னலையொத்தது. மின்னல் அவர் கண்ணாற் கண்டது: மின்சாரத்தையும் கண்ணாற் கண்டாய்விட்டது. ஆகவே அவர் இனி அறிந்துகொள்ளவேண்டிய அதிசயம் அதிலொன்றுமில்லை! அவர் புத்திக்குப் பட்டது அவ்வளவுதான். இப்படி நுனிப்புல் மேய்ந்து எல்லாமறிந்துவிட்டதாகப் பாவிக்கும் புத்தி நம்மவர்க்கு அதிகமுண்டு.

இதையடக்கி எதையும் ஆழ அறிந்து ஆராய்ந்து தெரிந்துகொள்ள வேண்டுமெனகிற புத்தியும் அதற்கு வேண்டியமன உறுதியும் திடசித்தமும் உண்டாகப் பயிலவேண்டும். இப்பயிற்சியுண்டாக எதையும் அரைகுறையாக அறிந்ததிலிருந்து எல்லாந் தெரிந்துவிட்டதாகப் பாவித்துத் திர்ப்தியடையும் சித்தம் கூடாது

எதையும் ஆய்ந்தோய்ந்து ஆழ்ந்துணரும் சக்தியும் அதற்குவேண்டிய சித்தமும் உண்டாகவேண்டும். இது உண்டானால் விர்த்திக்கு மெத்த அனுகூலம் உண்டு. இக்குறை மிகவும் முக்கியமான குறையாக விருப்பதால் இதை நிவர்த்தித்துக்கொள்ளவேண்டியதின் அவசியத்தைக் குறித்து இவ்வளவு தூரம் வற்புறுத்தி யெழுதினோம். இனி நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தைக்குறித்துப் பேசுவோம்.

விளையாட்டுக்கருவிகள் வித்யாப்பியாசத்திற்கு மிகவும் இன்றியமையாதன. விளையாட்டுக்கருவிகள் உபயோகிக்காத குழந்தைகள், உலக விஷயங்களைக் கிரகித்துக்கொள்வதில், அவை உபயோகிக்கும் குழந்தைகளைவிட மந்தமாகவே யிருக்கும்.

சித்திர விசித்திர வேலைகளிற் சிறந்தவர்கள் விசேஷமாயுள்ள தேசத்தார் தங்கள் குழந்தைகளுக்கு விளையாட்டுக்கருவிகள், படங்கள் முதலியன யதேஷ்டமாகக் கொடுத்து வளர்ப்பவர்களா யிருக்கிறார்களென்பது பிரத்தியக்ஷாநுபவத்தி லறிந்தவிஷயம். சிறு குழந்தைகளுக்கு இவ்வுலகவிஷயங்கள் அவர்கள் புத்திக்கெட்டாத பெரியனவாகவிருக்கின்றன.

ஆகையால் குழந்தையின் பச்சைப்பிராயத்துக்குத் தக்கபடி விளையாட்டுக் கருவிகளால் அவர்களுக்கு ஒரு சிறு உலகம் சிஷ்டித்துக் கொடுக்கவேண்டும். நல்ல ஆடையாபரணங்களணிந்த ஒரு ஸ்திரீயைக்கண்டால் சிறிதும் கவனியாத குழந்தை சிறிய பொம்மை அல்லது மரப்பாய்ச்சி ஜோடித்து வைத்திருப்பதைக்கண்டால் சந்தோஷம் பொங்கிக் குதூகலப்படும். பச்சைப்பிராயமான குழந்தைகளின் அறியாததன்மைக்கும் உலக சம்பந்தமான பெரிய காரியங்களுக்கும் இடையே அதபாதாளமான இடைவெளியிருக்கிறது. இந்த இடைவெளியைத் தாண்டிச்செல்ல விளையாட்டுக்கருவிகள் குழந்தைகளுக்கு ஒரு பாலம் போல் உதவுகிறது.

ஆகையால் குழந்தைகளுக்கு பொம்மைகளும், சொப்புகளும், மற்ற விளையாட்டுக் கருவிகளும், படங்களும் விளையாடக் கொடுக்கல் வேண்டும். விளையாடக் கொடுப்பதன்றி குழந்தைகளது விளையாட்டில் நாம் சிரத்தையுமெடுத்துக்கொள்ளல் வேண்டும். நம்மவர்கள் குழந்தைகள் என்னவோ விளையாடிவிட்டுப் போகின்றன. உபத்திரவம் செய்யாமலிருப்பதொன்றே போதும என்று இருப்பது வழக்கம். அப்படியிருப்பது சுத்தப்பிசகு. குழந்தைகள் விளையாடும் பொழுது அவர்களுக்கு நூதனமான எண்ணங்களும் கருத்துக்களும், சரி, தப்பு என்கிற விவரங்களும் உண்டாகின்றன.

இவைகளையெல்லாம் நாம் கவனிக்காவிடில், குழந்தைகளின் மனதை யறிந்து, அவர்கள் மனோவிர்த்தியை ஒழுங்குபடுத்தும் மார்க்கத்தையிழந்துவிடுகிறோம்.

குழந்தைகள் பொம்மை வைத்து விளையாடுகையிலே நன்னடக்கை, சன்மார்க்கவழி இவைகளையறிந்துகொள்ளத் துவக்குகின்றனர். அப்பொழுது நாம் அவர்கள் விளையாட்டைக் கவனித்துக்கொண்டிருந்தால், அவர்கள் பிசகிப்போகும் தருணம் பார்த்து அவர்கள் மனதை நல்வழியில் திருப்பலாம்.

பொம்மை அல்லது மரப்பாவைவைத்து விளையாடும் பொழுது குழந்தைகளுக்கு, சரி, தப்பு—விவரமும், நல்லதில் விருப்பும், கெட்டதில் வெறுப்பும், அனுதாபம், இரக்கம், ஆதரவு முதலிய குணங்களும் நன்னடக்கையில் பற்றும் உண்டாகின்றன. குணங்களெல்லாம் அப்பொழுதுதான் முளைக்க ஆரம்பிக்கின்றன.

குழந்தைகளுக்கு ஊகபுத்தி அதிக ஜாஸ்தியாகையால் அவர்கள்முன் பெற்றோர் நடத்தை சிறிதும் வழுவற்றதாக விருக்கவேண்டும். குழந்தைகளை அலக்ஷியமாக நடத்துவதும் அவர்களிடத்து அநுதாபமின்றிப் பேசுவதும் மகா கெட்டகுணங்கள். இந்த நடத்தைகளையெல்லாம் குழந்தைகள் அறிந்துகொண்டு அவைகளை நன்றாகப் பற்றிக்கொள்கின்றனர். குழந்தைகள் விவரம் தெரியாதவர்கள் தானேயென்று மூடமதிகளான பெற்றோர் உற்றோர், அவர்களிடத்து இல்லாத சாக்குப் போக்குகளெல்லாம் சொல்லி ஏமாற்றுகிறார்கள். பிறகு குழந்தைகள் தாங்கள் ஏமாற்றப்படுவதைக் கண்டுகொண்டு இவர்கள் சமாதானத்தில் நம்பிக்கையிழந்தவர்களாகக் காட்டினால், குழந்தையின் புத்திகூர்மை யைப்பற்றிக் கொண்டாடிச் சந்தோஷப்படுகிறார்களேயன்றி, தாங்கள் தம் குழந்தைகளுக்குக் கெட்ட உதாரணங்காட்டிப் பொய், சூது, வினை முதலிய கெட்ட குணங்களெல்லாம் முளைப்பதற்கு வித்தாயிருக்கிறார்களேயன்றி தங்கள் மூடத்தனத்தைப் பற்றி விசனக்கிறார்களில்லை.

நமது குழந்தைகள் சிறுபிராயத்திலே பொய், புளுகு, சூது, வினை சொல்லத்தெரிந்தவர்களாயிருப்பதற்குக் காரணம் பெற்றோர்கள், விசேஷமாய் தாயார், அத்தை, பாட்டிமார்கள் குழந்தைகளிடம் பொய்சொல்லி அவர்களை ஏமாற்றிவரும் கெட்ட வழக்கத்தினாலேயே உண்டாகின்றது. மிகவும் சிறிய ஒரு குழந்தையினிடத்து ஏதாவது துர்க்குணங்கள் இருக்கக்கண்டால் அக்குழந்தையின் தாய், பாட்டி, அத்தை அல்லது அக்குழந்தையோடு அதிகமாகப் பழகும் வேறு யாரோ அவர்களிடத்து அத்துர்க்குணங்கள் இருக்கின்றனவென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். நமக்குள் தாய்மார்கள் பச்சைப்பாலன்கள் மனதில் நாம் மேற்காட்டியபடி பொய், சூது, வினை முதலிய கெட்ட வித்துக்களைத் தாங்களே விதைத்துவிட்டுப் பிந்தி அவ்வித்துக்கள் முளைத்துக் களைக்கும்பொழுது குழந்தைகள் கெட்டவர்களென்று அவர்களைக் கண்டிக்கிறார்கள். இதனால் அவர்கள் தங்கள் அறியாமையைக் காட்டுவதுமட்டுமன்றிப் "பண்டமொருபக்கம் பழியொருபக்கம்" என்கிற பழமொழிப்படி குற்றம் தங்களிடத்திலே யிருக்க, வீணாய்க் குழந்தைகளைப் பிடித்து ஹிம்சிக்கிறார்கள்.

குழந்தைகள் விளையாடும்பொழுது ஊக்கமாய்ப்பார்த்துக் கவனித்துக்கொண்டு வந்தால், வேண்டியபொழுது நாமும் அவர்களோடு கலந்துகொண்டு விளையாட்டு மூலமாகவே அவர்களிடத்துக்காணும், துர்க்குணங்களை ஆரம்பத்திலேயறிந்துகொண்டு அவை குழந்தைகள் மனதிற் பதியாதவண்ணம் எளிதில் அவைகளை மாற்றி, குழந்தைகளின் குணத்தை நல்லவழியில் திருப்பிவிடலாம்.

இப்படிச் செய்ய நம்மிடத்தில் நல்லகுணம் உண்மையிலிருக்கவேண்டும். ஒன்றில் நமக்கே பற்றின்றி யிருக்கையில் அதைக்குழந்தைகளுக்குப் போதிக்க யத்தனித்தால், நாம் கற்றுக்கொடுக்க யத்தனிப்பதைவிட, நாம் பாசாங்கு செய்வதையே குழந்தைகள் எளிதாகக் கற்றுக்கொள்ளும்.

ஒரு தீக்குணம் படிந்தபின் நீக்க யத்தனிப்பதைவிட அது படியாமற் காப்பது எப்போதும் எளிதாகையால், குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பு வாய்க்கப்பெற்றோர் அப்பொறுப்பைப் பிழையின்றி வகித்துச் சமாளித்து வருவதற்குவேண்டிய முயற்சி செய்யவேண்டும்.

இதற்கு முதலாவது பெற்றோரிடத்துப் படிப்பும் புத்தியும் வேண்டும். இது இல்லாதவர்க்குப் பத்திரிகை வாயிலாகப் புத்திபோதிப்பது இயலாத காரியமாதலால் இந்த இரண்டு முக்கிய குணங்களும் இதை வாசிப்போரிடத்து இருக்கிறதாகப் பாவித்துக்கொண்டு, அவர்கள் தங்கள் கடமையைச் செலுத்துவதற்குதவியாகச் சில குறிப்புகளை அடுத்த முறை இத்தலைப்பெயரின்கீழே எடுத்தெழுதுவோம்.

சைதாப்பேட்டை வித்யாபோதன பொருட்காட்சி.

சைதாப்பேட்டை "டீச்சர்ஸ் காலேஜில்" வித்யாபோதன பொருட்காட்சி வைத்திருந்ததைப் போய்ப் பார்த்தவர்கள் பிரகிருதி வித்தைக்கும் மற்ற எந்த விதமான வித்யாபோதனைக்கும் மண்ணாலும் மரத்தாலும் சித்திரத்தாலும் அமைந்தமாதிரி உருவங்கள் எவ்வளவு அவசியமென்றறிந்துகொள்வார்கள். விளையாட்டில் வித்தை போதிப்பதே உண்மையான வித்யாபோதனையாம். மனஉற்சாகமின்றி வித்யாபோதனை மனதிற் பதியாது. இந்த உண்மையை நம்மவர்கள் நன்றாக உணரவேண்டும்.

THE BEAUTIES OF KAMBAN.
கம்பநாட்டார் காப்பிய அழகுகள்.

"ஈவது விலக்கேல்"

பின்வரும் செய்யுட்கள் ஸ்ரீமத் கம்பராமாயணம் பாலகாண்டம் வேள்விப் படலத்தில் மாவலி வரலாற்றில் மாவலி தன்பால் மூவடி மண்ணேற்ற வாமனமூர்த்திக்குக் கொடுக்கவுற்ற தானத்தைக் கொடுக்க வேண்டாமென்று தடுத்த சுக்கிராசாரியனை நோக்கிக் கூறியவை.

1. வீணைக்கிலை, யென்கை மிளிர்ந்திட, வந்து
தனக்கியலாவகை, தாழ்வது தாழ்வில்
கனக்கரியானது கைத்தல மென்னின்,
எனக்கிதன் மேல்நல மியாதுகொல்? என்றான்

(இ-ள்.) ஏ! சுக்கிராசாரிய! நீ ஆலோசனையில்லாமல் சொல்லுகின்றாய். என்கை மேலாக எனக்கு முன்வந்து தன் மேன்மைக்குக் குறைவாகும்படித் தாழ்ந்து "தா" வென்று நீட்டுவது மேலாகிய ஸ்ரீமந் நாராயணமூர்த்தியின் திருக்கரமேயானால் எனக்கு இதனில் மேலாகப்பெறத்தகும் நன்மை யாதுள்ளது? என்று மாவலி சொன்னான்.

'ஏற்பதிகழ்ச்சி' யாதலின், தனக்கியலாவகை தாழ்வது என்றார். அகில லோகங்களுக்கும் நாயகனாகிய பெரியோன் என்பது தோன்ற தாழ்வில் கனக்கரியான் என்றார். கனம்-மேகம். 'எனக்கிதன்மேல் நலம் யாது? ஒன்றும் இல்லை யென்பதை வற்புறுத்தியது. மேலோர் தம்மிடத் தொன்றை ஏற்கப்பெறுவது கீழோருக்குப் பெருமையாதலின் அவ்வாறு கூறினன். (1)

2. தன்னினர் துன்னல, ரென்பது சொல்லார்
முன்னிய நன்னெறி நூல்வலர் முன்வந்
துன்னிய தான மூயர்ந்தவர் கொள்க
என்னி, னிவன்றனை யாவ ருயர்ந்தார்?

(இ-ள்.) தமக்கு முன் வந்து தாம் கொடுக்கக் கருதிய தானத்தை உயர்ந்தோர் ஒருவர் கொள்ளவரின், அவ்வாறு கொள்பவர் உறவினரென்றும பகைவரென்றும் வேத சாஸ்திரங்களைக் கற்றறிந்த பெரியோர்கள் சொல்லமாட்டார்கள். அவரது உயர்ச்சி ஒன்றையே கருதிக் கொடுப்பார்கள். இப்போது என்முன் ஏற்று நின்ற இந்தத் திருமாலினும் உயர்ந்தவர் யாவருள்ளார்? ஒருவரும் இல்லையாதலின் எனக்கு மற்றொன்றையும் சிந்தியாமல் கொடுத்தலே முறைமையா மென்றனன். (2)

3. வெள்ளியை யாதல் விளம்பினை, மேலோர்
வள்ளிய ராக வழங்குவ தல்லால்
எள்ளுவ வென்சில? வின்னுயிரேனும்,
கொள்ளுதல் தீது, கொடுப்பது நன்றால்.

(இ-ள்.) உன் பெயருக் கேற்ப நீ (வெள்ளியை) அறிவின்மையை யுடையா யாதலின் இவ்வாறு தடுத்துக் கூறினாய். மேலோர்கள் தம் வண்மைக் குணம்விளங்க ஏற்றவர்களுக்குக் கொடுத்தலே முறைமையாகும். அவ்வாறன்றிக் கொடாமல் மறுக்கின், அதனினும் இகழ்ச்சியைத் தரும் செய்கைகள் ஒன்றும் இல்லை. தமது உயிரே கொடுக்கும் பொருளும் கொள்ளும் பொருளுமாயினும் ஒருவரிடம் கொள்ளுதல் இகழ்ச்சியேயாம். ஒருவர்க்குக் கொடுப்பது பெருமையேயாம்.

வெண்மை-அறிவின்மை. எள்ளுவ என்சில-வழங்காது மறுத்தல்போல இகழ்ச்சியைத் தருவன யாவை யென்று வருவித்துப்பொருள் கொள்ளற்பாலது. என்?-என்றது இல்லை யென்றபடி.

இன்னுயிரேனும் எவ்வளவு அருமையான பொருளாயினும், ஒருவர்க்கு உயிரினும் சிறந்ததில்லை யாதலின் அங்ஙனம் கூறினர். (3)

4. மாய்ந்தவர் மாய்ந்தவரல்லர்கள், மாயா
தேந்திய கைகொடிரந்தவ ரெந்தாய்!
ஈய்ந்தவ ரென்பவர், வீய்ந்தவ ரேனும்
ஈய்ந்தவ ரல்ல திருந்தவர் யாரே.

(இ-ள்) உலகத்தில் காலகதியினாலே உயிரிழந்தவர்கள் இறந்து போனவரல்லர். அவர்களுக்கு நேரும் துன்பம் அவ்வளவு பெரிதன்று. வறுமையால் வருந்தி யிரப்பவர்களே உயிரோடிருப்பினும் இறந்தவரென்று சொல்லத்தக்கவர். ஏனெனில் இரப்பவர்களுக்கு நேரும் துன்பம் இறத்தற்றுன்பத்தினும் பெரிதாகும் என்றபடி. [illegible] புகழுடம்பைப் பெறினும் ஈகையினாலேப் புகழுடம்பைப் பெற்றவர்களே இறந்தபோதினும் இறவாதிருக்கப் பெற்றவராவர்.

இரந்தவர் வீய்ந்தவரென்றது துன்பம் பற்றியன்றிச் சிறுமைபற்றி யாயினுமாம். உயிரிருந்தும் நடைப்பிணமாவார்கள் என்பதாம். (4)

5. அடுப்ப வரும்பழி செய்குரு மல்லர்,
கொடுப்பவர் முன்பு கொடேலென நின்று
தடுப்பவ ரேபகை, தம்மையு மன்னர்
கெடுப்பவ ரன்னதோர் கேடிலை யென்றான்.

(இ-ள்). ஒருவருக்குப் பகையாவார் அடுத்தடுத்து மிகுதியாகப் பொறுத்தற்கரிய தீங்குகளைச் செய்பவர்களேயல்லர். பின்பு யாவரென்னில், தாம் ஒரு பொருளைத் தானம் கொடுக்கக் கருதியபோது எதிர்நின்று கொடுக்கவேண்டாமென்று தடுப்பவர்களேயாவர். அப்படித் தடுப்பவர்கள் கொடுப்பவர்களைக் கொடாமற்செய்து கெடுத்தலேயன்றித் தங்களையும் கெடுப்பவராவர். ஆகையினாலே கொடுப்பதை விலக்கலினும் கொடிய தீங்கு வேறில்லை யென்றான்.

அறத்தைச் செய்ய வொட்டாமல் தடுப்பவர் இம்மைக்கண்ணன்றி மறுமைக்கண்ணும் கேடுவிளைவிப்பவராதலின் அவரை அரும்பழி செய்பவரினும் மேலான சத்துருக்களாகக் கூறினார். "ஈவது விலக்கேல்" என்றார் ஔவையாரும். (5)

6. கட்டுரையிற்றம கைத்துள போதே
இட்டிசை கொண்டற னெய்த முயன்றோர்
உட்டெறு வெம்பகை யாவது லோபம்
விட்டிட லென்று விலக்கினர் தாமே.

(இ-ள்.) அறநூல்களிற் சொல்லிய உறுதிமொழிப்படித் தம்கையிற் பொருளுள்ளபோதே பிறருக்குக் கொடுத்து அதனால் கீர்த்தியும் புண்யமும் பெற முயல்பவர்களுக்கு

162030
Rm 21.1852 M82.24

ஆத்மலாபத்தைக் கெடுத்துக் கெடுதியை விளைவிக்கும் கொடிய சத்துருவாயிருப்பது உலோப குணமாகும். அதுபோலவே கைப்பொருளைக் கொடுக்கவேண்டாமென்று விலக்குகின்றவர்களும் பகைவரே ஆவார்கள்.

கைத்து - கையிலுள்ளதாகிய பொருள். பொருள் இலையன்றாதலின் 'உள்ளபோதே இட்டு' என்றார். கொடுத்தலால் புகழும் அறமும் இரண்டும் ஒருங்கே உண்டாகின்றன. மற்றப்பகைவர் உடலை வருத்துவாரா வர். இவர்களோ உயிரையும் உணர்வையும் அழித்து நரகத்துக்கு ஆளாக்குகின்றாராதலின் 'உட்டெறு வெம்பகை' என்றார்.

வேறு.

7. எடுத்தொரு வருக்கொருவ ரீவதனின்முன்னே
தடுப்பது நினக்கழகிதோ, தகைவில் வெள்ளி!
கொடுப்பது விலக்குகொடியோ யுனது சுற்றம்
உடுப்பதுவு முண்பதுவு மின்றிவிடுகின்றாய்.

(இ-ள்). ஒருவர் தம்பொருளை யெடுத்து யாசகர்களுக்குக் கொடுக்கும்போது அப்பொருளைக் கொடுக்கவொட்டாமல் தடுப்பது உனக்கு முறைமையாகுமா? அற்புதத்தை யுடைய சுக்கிரனே! கொடுத்தலை விலக்கும் கொடியோனே! இப்படிச் செய்வது உனக்கு நன்மையன்று. இதனால் நீயேயன்றி உன் சுற்றத்தாரும் உண்ணச் சோறும் உடுக்கத் துணியுமின்றி வறுமையால் வருந்த வேண்டி வரும் நிச்சயம். 'விடுகின்றாய்'-விடுவது நிச்சயம் என்னும் பொருளில் வந்தது.

"PEARLS OF FAITH"

SELECTED AND STRRUNG TOGETHER EOR PARENTS AND CHILDREN TO WEAR,

From the Sayings of St. Vemanna.

ஆந்திரபாஷையில், பிரஹ்மஞ்ஞானியும், அருட்கவியுமாகிய,
வேமன்ன மகாகவி அருளிச்செய்த
பத்யங்கள்.

(Fifth Series.)

(சித்தவேரற்றால் பிரகிருதிமரம் சிதையும்.)

1. சித்தவே ரற்றாற் சிதைந்திடுமன் றேபகுதிப்
பெற்றியுறு கின்ற பெருமரமங்—கற்றவுடன்
ஆசையெனு நீளு மருங்கவைக ளாரணங்கே
நாசமுறு மேயுலர்ந்து நாடு.

(இ-ள்.) சித்தமாகிய வேர் அற்றதாயின் பிரகிருதி யென்னும் மரமும் அற்று வீழ்ந்துவிடும். அம்மரம் அற்றதாயின் ஆசையாகிய கவைகள் உலர்ந்து நாசமாம்.

(குருவுக்கு மேலானகுரு இன்னவன்.)

2. ஆசையறுத் துச்சினமா மங்கிதனை முற்றவித்துப்
மாசிழையார் பற்றறுத்துப் பாங்காகப்—பேசரிய
உண்மைதனை யோர்ந்தோ னொருவன் குருவுக்கு
வண்மைதரு மெய்க்குருவா மற்று.

* This is what he said:—"Long might the ass have lived to eat
The green and tender barley grain,
Accoutred in the lion's skin,
But that he brayed and ruined all."—*The Jataka Tale or Budda's Birth Story.*

(இ-ள்.) ஆசையை நீக்கிக் கோபமாகியதழலை அவித்து காமத்தை யொழித்து அறிதற்கரிய பரமார்த்தத்தை அறிந்தவனே குருவுக்குக் குருவாக மதிக்கப்படுவான்.

(பெரியோர்க்குக் கோடார், வேசையர்க்குக் கோடுப்பார்.)

3. ஊசற்கழியு முதவார் குரவற்கு
வேசைக்குத் தாங்கள்பெறும் வித்தமெலாம்—ஆசையுடன்
ஈவார்க ளம்மாவவ் வேசையரி லும்மிழிந்தோர்
ஆவாரோ வாசிரிய ராங்கு.

(இ-ள்.) பெரியோர்களுக்கு ஊசற்கரியும் கொடுக்கமாட்டார்கள். வேசைகளுக்குத்தாம் தேடிய பொருளெல்லாம் கொட்டிக்கொடுப்பார்கள். இதென்னபுதுமை! வேசையரினும் அப்பெரியோர்கள் தாழ்ந்தோராவரோ!

(பிறர் குற்றங்களன்றித் தங்குற்றம் பார்க்கமாட்டார்கள்.)

4. குற்றங்க ளாய்வார் தாங் கோடாது கோடியுளார்
குற்றமிலா ராரே குவலயத்திற்—குற்றங்கள்
காண்கின்றார் தங்குற்றங் கன்னனமொழிக் காரிகையே
காண்கிலரே மற்றிதனைக் காண்.

(இ-ள்.) பிறருடைய குற்றங்களை ஆராய்ந்துதேடிப் பிடிப்பவர் உலகத்தில் அநேகருள்ளார்கள். ஆயினும் குற்றமில்லாதபேர்கள் யாவர். எல்லாருக்கும் குற்றமுண்டு. பிறர்குற்றங்களை ஆராய்கின்றவர்கள் தங்குற்றங்களைமாத்திரம ஆராயாமல் விடுகின்றார்கள்.

(நீதியில்லா அதிகாரியைப் பேதைகள் வெகுமானிப்பார்.)

5. வானரத்துக் கோர்புதிய வத்திரத்தைக் கட்டிவிடிற்
கானகத்து மந்தியெலாங் கைகூப்பும்—தானதுபோல்
நீதியில்லா மன்னவனை நேசித்துத் தாம்பணிவார்
பேதையர்கள் பேருலகின் கண்.

(இ-ள்.) குரங்கொன்றைப் பிடித்துப் புதுவேட்டியைக் கட்டிவிட்டுவிட்டால் அதைக்கண்ட மற்றக்குரங்குகளெல்லாம் அதைமகாராஜாவாக வெண்ணிக் கைகூப்பி நமஸ்கரிக்கும். அதுபோல நீதியில்லாமன்னவனை அறிவில்லா மூடர்கள் நேசித்துப் பணிவார்கள்.

(சிநேகத் துரோகிகள்போலக் கோடியவரில்லை.)

6. சொற்பிறழு வானுக்குச் சொல்லுமொரு மானமிலை
அற்பனவன் மற்றோர் துயரறியான்—விற்பழித்த
வாணுதலாய் நட்டதற்பின் வஞ்சிப்பா ரிற்கொடியார்
நீணிலத்தி லில்லை நினை.

(இ-ள்.) சொன்னசொற் றவறுகின்றவனுக்கு மானமில்லை. பிறர் துயரறியாதவன் அற்பபுத்தியுள்ளவன். சிநேகம்செய்தபின் ஒருவரை வஞ்சனை செய்பவர்போலக் கொடியவர் உலகத்திலில்லை.

(வரப்போகிறது ஒருவர்க்கும் தெரியாது.)

7. வானமழை பெய்வதுவு மாண்டுயிர் தான் போவதுவும்
தானெவர்க்குந் தேறல் தரமின்றே—மாநிலத்தில்
மற்றிவைதாங் காண்குவரேல் வாய்ந்தகலி யிப்பரிசின்
உற்றுங்கொ லும்மோ வுரை.

(இ-ள்.) மழைவருவதும் உயிர்போவதும் ஒருவர்க்கும் அறியமுடியாது. அறிய முடியுமாயின் கலிகாலம் இப்படி நடக்குமா.

(இழிந்தவ னின்னு னென்பது.)

8. இழிகுலத்தா னென்று மிளிருடையா னாகான்
மொருபிறழு வானவனே முன்னில்—இழிவுடையான்
பெற்றகுல நிந்தித்த பேதையே மற்றவனின்
முற்றுமிழிந் தோனு மொழி.

(இ-ள்.) குலத்தால் இழிந்தவன் இழிந்தோனாகமாட்டான்; சொன்னசொல் தவறுகின்றவனே இழிந்தோனாவான். இழிகுலத்தானென்று ஒருவனை நிந்திக்கின்றவன் அவ்விழிகுலத்தானிலும் கடையனாவான்.

(கெட்டவர் சகவாசம் கேடுதியே விளைக்கும்.)

9. தீயவரோ டொன்றிச் சிநேகம் புரிந்திடலால்
மேயவினை யென்றும் மிகுதுயரே—ஆயிழையே
ஓங்குபனைக் கீழிருந்தங் குண்பதுபா லேனுமது
தீங்குறுகள் ளாமே தெரி.

(இ-ள்.) கெட்டவர்களோடு சிநேகம் செய்தால் துன்பமேயன்றிச் சுகமுண்டாகாது. பனைமரத்தின் கீழிருந்து பாலைக்குடித்தாலும் கள்குடித்தானென்பார்கள்.

(ஈனரைச் சேவித்துப் பயனில்லை.)

10. எத்தனைநாட் சேவித்து மீனமதி யாளர்தமைப்
பெற்றிடுவ தொன்றுமிலை பேசுபயன்—முற்றிழையே
பாலென்று மீயா மலட்டுப் பசுவையணைந்
தாலென்ன நல்கு மது.

(இ-ள்.) ஈனபுத்திடைய பிரபுக்களை எத்தனைநாட் சேவித்தும் பயனில்லை.

(உலோபிக ளொன்றும் கொடார்.)

11. பாலீயாத் துட்ட மலட்டுப் பசுவதனைக்
காலணைத்து பற்றிற் கடிந்தெரிதல்—போலுமதி
யொன்றுமுக நங்கா யுலோபியர்பாலோர்பொருளைச்
சென்றிரத்த லென்றே தெரி.

பாலீயாத மலட்டுப்பசுவைக் கட்டிக் கறப்பதனால் பயனுண்டா?

THE BOYHOOD OF GREAT MEN OF THE WEST.

II. Dr. Johnson:

மேற்றிசை மேதையோர் பாலிய சரிதை.

II. டாக்டர் ஜான்சன்.

விருத்தம்.

மின்னு மேற்றிசை மேதையோர் பாலிய
கன்னயச்சரி தந்தனை நற்றமிழ்ச்
சொன்னயம் பெறச் சொற்றிட வசனமாய்
மன்னருட்கலை மாமகள் காப்பரோ.

சிறப்புற்றோங்கிய ஐரோப்பா கண்டத்தின் கண் நடுநாயகம்போல் துலங்கி விளங்கும் ஆங்கில நாட்டுப் புலவர்கள் பலருள் குறை குணங் கூறுவதில் வன்மை வாய்ந்த டாக்டர் ஜான்சன் என்பவரைப்பற்றிய பாலிய விருத்தாந்தத்தைச் சிறிது புகல்வோம். இவர் சிறுவயதில் வறுமைப் பிணியால் வருந்தினராயினும் தம்புத்தி வன்மையால் அவற்றைச் சிறிது மோராமல் வாணாளைச் சுகமே கழிக்கும் திறமைபூண்டனர். அழியா உடம்பெய்தினராய் 18-ம் நூற்றாண்டுப் புலவர்களில் இவர் சிகாமணியாய் விளங்கினர். ஜனங்களிடத்தில் அதிக செல்வாக்குப் பெற்று விசேட மதிப்புக்கு பாத்திரமாயினர். கல்வி கேள்விகளில் வல்லோர் இவருடைய நடை உடை பாவனைகளைப் பற்றியும், சிநேகிதர்களுடன் அமுதுண்ணும் போழ்து இவர் பேசிய வியக்கத்தக்கதும் பரிகாசமுமான கூற்றுகளைப் பற்றியும் எடுத்தோதி அகமகிழ்வர். இவர் 1709-வரு செப்டம்பர் மாதம் 18-ம் தேதி லிச்பீல்ட் (Lichfield) என்ற பட்டணத்தில் பிறந்தார். இவர் தகப்பனார் மிகேயல் ஜான்சன் (Michael Johnson) (Derby) தர்பிமாகாணத்தவர். இவர் உயர்குடிப் பிறப்பின் மாட்சிமையடையப் பெற்றிலரேனும், புத்தக வியாபாரத் தொழிலை மேற்கொண்டு உஜ்ஜீவித்து வந்தார். தாயார் வூர்செஸ்டர்ஷயர் (Worcestershire) மாகாணத்தில் ஒரு சிறந்த குடித்தன மரபிற் பிறந்து வளர்ந்தவள். பெற்றோர்களின குணாதிசயங்கள் குழந்தை ஜான்சனிடம் பொலிவுற்று பிற்காலம் விளங்கிற்று. மிகேயல் ஜான்சன் இலத்தீன் பாஷையில் ஒரு சிறந்த வித்வானானதால் அவர் நன்கு மதிக்கப்பட்டு மேஜஸ்திரேட் வேலையில் நியமனம்பெற்றார். என்றாலும் அவருடைய நிலைமை பரிதபிக்கத்தக்கதாகவே யிருந்தது. இவர் ஓர் உயர்தாவாலயச் சீடரும் (High Church) ஜெகோபைட்ஸ் (Jacobites)* என்ற கூட்டத்தைச் சேர்ந்தவராதலின் தம் மகனும் இளமைப் பருவமுதற்கொண்டே. தான் கொண்ட பிடிவாதமான கொள்கைகளையே பிறர் மனம் நோவச்செய்யினும் சிறிதும் கவனியாமல் நிலைநிறுத்துவதிலேயே கண்ணாயிருந்தனன்.

இவர் தாயார் கல்வித்தேர்ச்சியற்றவளேனும் விவேகமும்,யுக்திசாதனங்களும்நிரம்பப்பெற்றவள். பிற்காலம் தன் மகனை ஆசாரசீலனாயும் தீவிர தெய்வபக்தி யுடையவனாகவும் செய்யக்கருதி தினந்தோறும் மதக்கிரந்தத்தினின்றும் பாடங்களைக் குறிப்பிட்டு அவற்றை வீட்டு வேலைக்காரனொருவனிடத்தில் ஒப்புவிக்கும்படியாய் திட்டஞ்செய்தாள். இவ்வேற்பாட்டால் அவரது ஞாபகசக்தி பாலியத்திலேயே விருத்தியடைந்து வருவதற் கேதுவாயிற்று. இவரைப்பற்றி விசேஷமாய் சரித்திர ரூபமாய் எழுதியிராநின்ற பாஸ்வல்(Boswell) என்பவர் இவ்விளைஞரது ஞாபகசக்தியைப் புகழ்ந்து பின்வருமாறு கூறியுளர். "சிறு பாலகனை தன் மகனுக்கு எழுத்துக்கூட்டி வாசிக்கத்தெரியவே தாயார் ஸ்தோத்ரம்பாட புஸ்தகத்தை கையிற் கொடுத்து படித்து ஒப்புவிக்கும்படி உத்தரவுசெய்துவிட்டு மாடப்படியின்மீது போகத்தொடங்கினள். அம்மாது அப்படி அவர்களையெல்லாம் கடந்து செல்லுமுன்னர் தனக்குப் பின்னால் குழந்தை ஓடி வருவதைக் கண்டு வெகுண்டு ஏன் படியாமல் பின் தொடர்ந்து வருகிறாயென விரட்டிக்கேட்கவே அம்மா அங்

* ஜெகோபைட்ஸ் (Jacobites): ஆங்கிலதேயத்து சிங்காசனம் இழக்க நேரிட்ட இரண்டாம் ஜேம்ஸ்க்கும் அவனது சந்ததியாருக்கும் சேரவேண்டுமெனப் பிடிவாதமான கொள்கைகளைக் கொண்ட ஓர்கூட்டத்தார்.

தப் பாடம் எனக்கு நன்றாய்த் தெரியும். இதோ ஒப்புவிக்கிறேன் பார் என்று இரண்டு தரத்திற்கு மேல்படித்திராவிடினும் ஒரு வார்த்தைகூடப் பிழையின்றி தெளிவாய் சொல்லி முடிக்கவே தாயார் கேட்டு அளவற்ற ஆனந்தமடைந்தனள்" அவனுக்கு மூன்று வயது நிரம்புவதற்கு முன் ஒரு சமயம் 'இலிச்பீல்டு'க்கு பிரசங்கஞ்செய்வதில் கியாதிபெற்ற டாக்டர் 'சாசர்வெல்' (Dr. Sachervel) என்பவர் விஜயஞ் செய்தார். அப்போது அவர் செய்யும் உபந்நியாசத்தைக் கேட்க திரளான ஜனங்கள் வந்து கூடினார்கள். தன் தகப்பனார் தோளின் மீது ஏறிக்கொண்டு ஜான்சன் என்னும் பாலகன் அதிவிநயத்தோடும், கவனமாயும், ஆவலாயும் அவ்வுபந்நியாசஞ் செய்வோர் வதனத்தையே உற்று நோக்கிய வண்ணமாக விருந்தனர். இளம்பிராயத்தில் இவர் கண்டமாலை போன்ற ஒரு கடுநோயாற் பிடிக்கப்பட்டு முகமும் கறுத்து ஒரு கண் ஒளியும் மழுங்கியது. தாயார் துயருற்று இந்நோய் தீர சிகிச்சையாதேனுமுளதோ வென விசாரிக்குமளவில் அக்காலத்து ஜனங்களுக்கு மூடபக்தி விசேஷமாய் இருந்ததால் சிலர் சொற்படி குழவியை அரசன்பால் விடுத்து தொடப்பெற்றால் சௌக்கியமடையுமென்று நம்பி அப்போது இங்கிலாந்து மஹாராணியான ஆன் (Anne) என்பவளிடம் வந்தடைந்தனள். அக்காரிகை தன் கையாற்றடவினும் சிறிதும் பயன்படவில்லை என்றாலும் இதைப்பற்றி பிற்காலத்தில் ஜான்சனை சிலர் கேட்டதற்கு தன்னை சிறுவயதில் கறும் பட்டாடையுடுத்தி வைரப்பூணாரம் பூண்ட ஒரு சீமாட்டி தடவிக்கொடுக்கும் பாக்கியத்தை பெற்றேனென்று புகழ்ந்து கொண்டாடினர். கல்வி பயிலகனமிகுகாரிகையால் கற்பிக்கப்பட்டுவரும் கல்லூரியில் காதலோடு வந்தடைந்தனர். ஒருநாள் தன்னைவழக்கமாய் அழைத்துக்கொண்டுபோக வருகிற வேலைக்காரன் பள்ளிக்கூடம் கலைந்த பிறகு வந்ததால் தனிமையாய் வீட்டுக்குப்போக நேரிட்டது. போகும் பாட்டையில் சாக்கடைகளைக் கடந்து செல்லவேண்டியிருந்ததால் குனிந்துகொண்டே ஒற்றைக்கண் பார்வையுடன் தரையைக் கீழ்நோக்கிச் சென்றனர். இதைக் கண்ணுற்ற அவருடைய ஆசிரியர் எதிர்படும் வண்டிகளாலாவது மற்று இன்னும் வேறெவ்விதத்திலேயும் இடுக்கண் நேரா வண்ணம் தன் மாணாக்கரைப் பின்பற்றி சென்றனர். இதைக் கடைக்கண்ணாற் கண்டு கடுஞ் சினங்கொண்டு கண் பொட்டை யென்றல்லவோ தன்னைப் பின்றொடர்ந்து வருகிறாரென ஐயுற்று அக்கல்லூரித் தலைவியை கண்ணில் தீ பறக்க உற்று நோக்கினர். இதனால் அப்பாலகனது நாணமுடைமையின் சிறப்பும், பிறர் தன்மீது குறைகூறுதலைச் சகியானென்பதும் விளங்கிற்று. ஆங்கிலமைய்யமறக் கற்றுணர "டாம் ப்ரவுன்" (Tom Brown) என்ற ஆசாரியரிடம் சிலகாலமிருந்து இலத்தீன் பாஷையைக் கற்க 1719௵ ஒரு கலாசாலைக்குச் சென்றார். இவர் இரண்டாண்டு பயின்ற பிறகு தலைமை உபாத்தியாயரால் உபதேசிக்கப்பட்ட ஒரு உயர்ந்தவகுப்புக்கு மாற்றப்பட்டார். இவர் பிரம்பெடுத்தடிப்பதில் பிரபல பாண்டித்தியத்தை யுடையவரே ஒழிய கற்றுக்கொடுப்பதில் கைதேர்ந்தவரல்லரெனக் குறைகூறினர். என்றாலும் இவரிடமுள்ள பிரீதியால் இலத்தீன் பாஷையை நன்றாய் கற்றுக்கொள்ள விடமுண்டாயிற்றென்றும், தான் இவ்வாறடி படாவிட்டால் தனக்கு அப்பாஷை வந்திராதென்றும் வற்புரித்துக் கூறினர்.

பிள்ளைகளைச் சிறிதளவு அடிப்பதால் குணமுண்டென்ற கொள்கைக் கிசைந்தவர். "அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்ற பழமொழி நம்மவருள்ளும் வழங்கி வருவதைக் காண்க. வகுப்பில் மற்றப் பிள்ளைகளோடு பேசினதற்கும் அவர்களுடைய கவனம் பாடத்தில் செலுத்தாமல் தடை செய்ததற்கும் தண்டிக்கப்பட்டதே யொழிய மற்றெவ்விதமாயும் கண்டிக்கப்படவில்லையென ஜான்சன் சொல்லிக்கொள்வது வழக்கம். இயற்கையாய் சோம்பற்குணமுடையோராயினும் கீர்த்தி

பெறவேண்டுமென்ற அவாக்கொண்டவர் இவ்வெண்ணம் உதிக்கப் பெற்றமையின் பிற்காலத்தில் பிரபல வித்வானாய் புகழ் பெற இடமுண்டாயிற்று.

கண்ணைக்கெடுத்த தெய்வம் மதியைக் கொடுத்தாற்போல் கண் ஒன்று ஊனமானதின் நிமித்தம தன் தோழர்களோடு விளையாடுவதற்கில்லாமற் போகவே படிப்பிலேயே காலங் கழிக்கத் தலைப்பட்டார். பண்டையக் கட்டுக்கதைகளைக் கற்றுணர்வானாயினர். இவற்றைத் தன் ஜீவ திசைவரைகற்க பேரவாக்கொண்டனர். ஆதலின் மற்றெவற்றின் மீதும் பற்றற்றவனாய் சித்த சுத்தி வேறு பாடடைந்து யாதேனு மொரு ஜீவனோபாயத்துறையில் இறங்க முடியாமற் போயிற்றேயென அயருற்றனர். அளவற்ற இடுக்கண்கள் உறினும் தினையளவும் கலங்கா நெஞ்சத்தராய் கல்வியைப் பெரிதாக உன்னிப்பயின்றுவந்த வகை வியக்கத்தக்கதே.

"முடிவு மிடையூறு முற்றிய தொழில் படு பயனும் பார்த்து செயல்."— (குறள்).

பிரதிதினமும் விசித்திர கற்பனைக் கதைகளை (Romances) ஒரு முறை வாசித்து அவற்றை மனதில் பதியும் வண்ணம செய்ய உன்னிப்பகதற்பொழுதிலேயே கணக்காண்பவர்போல் தானே வாயில் பிதற்றிக்கொண்டு ஒரு தோழனோடு வெளியே உலாவப்போவதுண்டு. அவருடைய ஞாபக சக்தி யாவரும் கண்டு பிரமிக்கும்படி அவ்வளவு மேம்பட்டதாகவும் தான் கற்ற அல்லது கேட்ட யாவையும் எவ்வமயத்தில் கேட்டபோதிலும் முன்பின் யோசனையின்றி எடுத்துச்சொல்லும் ஏற்ற முடையதாக விருந்தது. இவரைப் பற்றிப் பள்ளிக்கூட தோழர் ஒருவர் பேச நேரிட்டபோது தான் ஒருக்கால் 18 செய்யுட்களை படித்துக் கொண்டு வந்ததைக் கேட்டுக் கொண்டிருந்த ஜான்சன் அவைகளைச் சற்று நேரத்திற்கெல்லாம் முழுமையும திருப்பிச் சொன்னதாகவும் ஏதோ ஒரு வரிமாத்திரம் சிறிது மாற்றினதாகவும் அவ்வாறு வேறுபாடாய்ச் சொன்னது அதில் உள்ளதைக் காட்டிலும் வெகு அழகாயிருந்ததெனவும் கூறியுளர். படித்த எதுவும் மனதை விட்டகலா திருந்தமையின் அவர் பேரறிவு வளர்ந்தோங்கி வந்தன. இதைப் பள்ளித் தோழர்கள் பார்த்து வியந்து அவர்பால் அன்பும், பக்தியும் பெருகி பணிவிடை செய்யத் தலைப்பட்டார்கள். காலை வேளைகளிற் கலாசாலைக்குச் செல்லுங்கால் இவரை ஒரு பையன் முதுகின்மேற் சுமந்து கொண்டும், விழாதபடி இருபுறத்திலும் இருவர் கைலாகு கொடுத்துக்கொண்டும் இட்டுக்கொண்டு போவார்கள். மூடுபனி காலங்களில் ஒருநாள் பனியின் மீது சறுக்கி விளையாட அவரக்கொண்டு மிதியடியின்றி தன்னை இழுக்கும்படி ஒரு பையனைப்பார்த்து ஏவவே அவனதற்கிசைந்து அவர் இடுப்பைச் சுற்றி பலமான கயிற்றைக் கட்டி தன் முழுபலத்தோடு முக்கி முரண்டி இழுத்து திருப்தி செய்தான். சிறிதுகாலம் மாமன் இல்லத்திலிருந்து கொண்டு 'இலிச்பீல்ட்' பாடசாலையிற் படித்தார். பிறகு தகப்பனார் இவரை 'ஷராப்ஷயர்' (Shropshire) மாகாணத்தில் உள்ள 'நியூபோர்ட்' (New Port) பாடசாலையில் உதவி உபாத்தியாயராகவும், மாணாக்கராகவும் சேர்த்துக் கொள்ளும்படி தலைமை உபாத்தியாயரை வெகுவாய் இறைஞ்சினாராயினும் அவர் அதற்குடன்படாமல் தனக்கு மனமில்லை என்று விடை பகர்ந்தனர், என்றாலும் இவர் ஜான்சன் மாணாக்கராக தன்னிடத்தில் வரப்பிரிய மிருந்ததெனச் சொல்லிக் கொண்டு பிற்காலத்தில் பெருமை பாராட்டிக் கொண்டனர். இப்பள்ளியிற் சேர்க்க முடியாமற்போகவே வூர்ஸெஸ்டர்ஷயர் (Worcestershire) மாகாணத்திலுள்ள 'ஸ்டோன் பிரிட்ஜ்' (Stonebridge) என்ற கல்விக்கழகத்திற்கு அனுப்பப்பட்டார். (தொடரும்.)

TRANSFUSION COLUMN.*

மொழிபெயர்ப்பு வித்தை.

["If a combined, honest and sustained effort is made to *transfuse* (not merely *translate*) good English ...into Tamil, the effect will be to assist and stimulate the study of both languages."—Dr. G. U. Pope.]

"THERE IS ONE THING I FEAR."

There is one thing I fear
  Not death, nor sharp disease,
Nor loss of friends I hold most dear,
  Nor pain, nor want—not these.

But the life of which men say :
  "The world has given him bread ;
And what gives he to the world as pay
  For the crust on which he fed ?"

I would pour out strength, and then
  When I have no strength to give,
No use, no share in the lives of men
  Who toil and fight and live—

Then let the end come fast,
  Whatever my past success ;
That I may not cumber the ground at last,
  Nor linger in uselessness.

"அஞ்சுவதொன்றுளதய்யனே"!

"அண்டருக்காநஞ்சருந்தி அம்பலத்திலாடுசிவன்
தொண்டருக்குத் தொண்டனெனத் தொண்டுசெய்வ
[தெக்காலம்."—பத்திரகிரியார்.

I

அஞ்சுவதொன்றுளதய்யனே யுன்னைத்
தஞ்சமென்றடைந்தேன் தயவுசெய்யப்பனே !
அஞ்சிலேன் †காலற்குமாருயிர்வதைக்குமோர்
[வியாதிக்கு
மெஞ்சியதோழர்தந் தேனுறவொழியினுமஞ்சிடேன்
நஞ்செனவருத்துமோர் நல்குறவஞ்சிடேன் நயமில்
வஞ்சகவாதனையால் வருவேதனைக் கஞ்சிடேன் :
அஞ்சிலேனிவைக் கெலாமாருயிர்த் தோழனின்
செஞ்சடைநிறைச் சென்னி மீதுறைவெண்ணிலா
[வறியவே.

II

அஞ்சுவதொன்றுள தென்னெனிலையனே,
பஞ்சுபோற்பறக்கும்பான்மையதாமிப்பிரபஞ்சந்தானும்
"கஞ்சிவார்த்திவனைக்காத்ததற்கிவன் செய்பிரதியே
[தென்ன"
கிஞ்சித்துமோராதஞ்சிடச்செய்யும்அம்பெனவுள்ளத்து
நஞ்சுபோற்பாயும்நயமில் வார்த்தைக்கஞ்சினேனையே !
*கிஞ்சுகமேந்தியகையுடையம்பிகைகாதலனேயுன்றன்
நெஞ்சிலேதங்கியநஞ்சுருக்கெடா அஞ்சியதேவரை
யஞ்சிடேலென்றதன் சக்தியறக்கெடவுண்டனையே !

III

உண்டுமேநஞ்சதை உலகெலாங்காத்தனை
கண்டுமேதேவர்கள் கரங்கூப்பித்தொழுதனர்
உண்டதோர்நஞ்சுமே உன்னுளேசெல்லாது
கண்டத்திற்றங்கிநிற்கச் செய்தனள்காதலி !
அண்டத்தைக்காத்தநீ பிண்டத்தை வதைக்காதுன்
கண்டத்தில்நிறுத்தியே காத்தனள் பிண்டத்தை—யப்
பிண்டத்தைக்காத்தவுன் பேரருட்சக்திக்கிப்
பிண்டத்தைகாத்தருள் செய்வது பெரிதாமோ !

IV

பெரிதிலையாதலால் சிறிதுமேயெண்ணுதே.
எரிதீயிற்பெய்யுமோர் ஆகுதியேபோல
அரிதினிற்பெற்ற விப்பிண்டத்தின் சக்தியை
† எரிதீயின்சக்தியால் இசையக்கொடுப்பனுன் :
எரிதீயின்சக்தி 'சுவாஹா'போல் தூரியப்
பரியேறிநின்றுநான் பாருக்குழைப்பேன்காண் :
பெரிதிலைசிறிதிலையுடலிலை யுயிரிலைசொல்லற்கோ
வரிதரிதென்தாயே!யுன் னுர்வநிறை சக்திசெயல் !

V

‡ உழைப்பான் "நீ"யுழைத்தாலுலகெல்லாமுய்யுமே
பிழைப்பான் "நான்"பிழைத்தாலுலகெல்லாம் பிழை
[யாதோ !
உழைப்பானும் பிழைப்பானு முழைத்துப் பிழைக்
[கவென்
றுழைப்பொடு பிழைப்பை யுலகினிற்படைத்தைநீ !
உழைப்பொடு பிழைப்பும் பிழைப்பொடுழைப்பும்
[பேதமில் தழைக்கத்
தழைத்திடு முலகம் தருமமுஞ் செழிக்குமேயாதலால்,
உழைப்பானுழைக்கவுடனுழைக்குமுலகேயால்
பிழைப்பான் உழைக்கவுழைப்பேன் § பேரருளே
[கதியாமால்.

ஓம் தத் ஸத். C. V. S.

* "No exercise of faculty is better and nobler for a *real man* than that of struggling with great thought and labouring to express them in such a way that they shall reach the heart, instruct the mind, stimulate the best feelings, and elevate the whole being of their fellow men around them!"—Rev. Dr. G. U. Pope on the *Vivekachintamoni Series.*

† காலன்=எமன், மரணம்.

* 'கிஞ்சுகம்'—கிளி'யேந்தியகை,-அபயஸ்தமாம்.

† எரிதீயின் சக்தி "ஸ்வாஹா"

‡ "நானெனை நீயெனத் தத்துவமிரண்டே." யென்னும் திருமந்திரத்தைக்கவனித்து, ஜீவேசுவர ஐக்கியத்தின் மர்மத்தை யுணர்க, "நீ" பதி, "நான்" சீவன், சீவனுக்கந்நியமாய் உலகில்லையால், "உவுகெல் லாம் பிழைக்காதோ" வென்றார்.

§ 'உழைக்க வுழைப்பேன்'—work for work's sake, நிஷ்காமிய கர்மத்தைச் சுட்டிநின்றது.

LESSONS IN NATURE STUDY.

BEES AND BEEHIVES

பிரகிருதி வித்யாம்சம்.

தேனீக்களும் தேனும்

(மார்கழிமீ சஞ்சிகையின் 280-ம் பக்கத் தொடர்ச்சி.)

தேன் கூடு.

காற்றுவாட்டமில்லாமல் வெயிலடிக்கப்பட்ட ஓரிடத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் சபைகூடி அதிகநேரம் பேசிக்கொண்டேயிருந்தால், அவர்களுடைய தேகத்தில் புழுக்க மிகுந்து வியர்வை வெளிப்படுவது சகஜந்தானே! அதிலும் சபையோர்களெல்லாம் லாகிரி பதார்த்தங்களையுண்டு தலைகால் தெரியாதவர்களாய் ஒருவர்மேலொருவர் விழுந்து கிடந்தால், அவர்களுடைய தேகத்திலிருந்து வியர்வை ஜலம் மழைபோல் பொழியாமலிருக்குமோ? அப்படியே தேனீக்களும் தங்கள் தேகத்திற்கு விசேஷ அனலைக் கொடுக்கக்கூடிய மதுவையுண்டு, குடியர்களைப்போல் ஒன்றின்மேலொன்றாயும், பத்தாயிரக்கணக்காயும் உட்கார்ந்திருந்தால், சூடுண்டாகி அவைகளின் தேகத்தினின்று பாளம்பாளமாகவும் தகடுதகடாகவும் மெழுகு வெளிக்கிளம்புகிறது. அங்ஙனம் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் மெழுகை சிற்சில ஈக்கள் எடுத்துக்கொண்டுபோய் கண்டுபிடிக்கப்பட்ட நூதனவிடத்தில் கூடுகட்டத் தொடங்கும்.

"வால்குருவியின் கூடு வல்லரக்குத்தோல் கறை
[யான்,
தேன்சிலம்பி யாவருக்குஞ் செய்யரிதால்—யாம் பெரி
[தும்.
வல்லோமே என்று வலிமைசொல் வேண்டாங்காண்,
எல்லோர்க்கு மொவ்வொன்றெளிது."

என்றபடி, மற்றயர்களுக்குத் தேன்கூடு கட்டுவது கஷ்டமானதேயன்றி, ஈக்களுக்கு மிகவும் எளிதானதே. எப்படியென்றால்:—பிடித்தால் பிள்ளையாரென்பதுபோல, சர்வாதிகாரியான இராணி ஈயானது, அஸ்திவாரக்கல் நாட்டுவதுபோல, ஓரிடத்திலுட்கார்ந்து தன்னுடலின்பேரிலுள்ள மெழுகை வைத்து இரண்டு மூன்று தடவையசைந்து, வெளியேவந்து உட்சென்று, மறுபடியும் முன்னும் பின்னுமாக அசையவே, ஒரு அறையுண்டாகும். இதுவே அரசமாளிகை இதற்கு சமீபத்தில் கிழுதிகாரிகளான சில ஈக்களும் அவ்விதமேயுட்கார்ந்து தங்கள் அறைகளையும் செய்ய, மற்ற ஈக்களும் அவற்றையடுத்து உட்கார்ந்து வரிசைக்கிரமமாக வீடுகளைச் செய்துக்கொண்டேவரும். இப்படி ஒருபுறத்தில் சில ஈக்கள் அறைகளையமைக்க வேறு சில ஈக்கள் மறுபுறத்தில் அறைகளைச் செய்து கூண்டை முடிவுசெய்யும். ஈக்கள் ஆறுகால் பிராணிகளானதால், தம்மறைகளையும் அறுகோணமாய் அமைக்கிறதென்று எண்ணவும் கூடும். வட்டமாகவே அறைகளைச் செய்கிறதென்று வைத்துக்கொண்டாலும், அவைகள் இரண்டு வரிசையான ஆறு கால்களையும், இரண்டு இறகுகளையும் மடக்கிக்கொண்டு தங்கள் அறைகளுக்குள் செல்லுகிறபடியால், கால்களினால் இரண்டு மடிப்புகளும் இறகுகளினால் நான்கு மடிப்புகளுமுண்டாய், அறைகள் சம அளவுள்ள அறுகோணவீடுகளாய் அமைகின்றனவென்று கூறத்தகும். இப்படி ஒவ்வொரு ஈயும் தன் தேகத்திலுண்டான மெழுகை ஒன்றுக்கு சமீபத்திலொன்றாய் வைப்பதால, ஒவ்வொரு அறைக்குமுள்ள ஆறு சுவர்களும் இரட்டை சுவர்களாய் ஏற்பட்டுவிடுகின்றன. இது முடிந்தபிறகு கூண்டின் பொது வேலைகளாகிய, சுற்றுச்சுவர் போடுதல், தப்பித்தவறியிருக்கும் இடுக்குகளையும் துவாரங்களையும் சரிபடுத்தல், கரடுமுரடுகளைத் சமன்படுத்தல் முதலிய வேலைகளை சில ஈக்கள் மேற்கொண்டு தங்கள் கால்களையே, மெழுகுத்தகடுகளை எடுக்கும் இடுக்கியாகவும், நாவையே கரணையாகவும், உமிழ்நீரையே சாந்தாகவும் உபயோகப்படுத்தி வேலையை முடிக்கும்.

தேனீக்கள் தங்கள் சங்கைக்கும் சக்திக்கும் தக்கின அளவாய் கூட்டைக்கட்டத்தொ

டங்கி 24-மணி நேரத்திற்குள் முடிக்கின்றனவேயன்றி, நம்மவரைப்போல் கையிலுள்ள பணத்தையெல்லாம் அஸ்திவாரத்திற்கும் கட்டடத்திற்குமாகச் செலவிட்டு, கூரைபோடக் கையிற் தொகையில்லாமற் கடன்பட்டு, அதையொருவாறு ஒப்பேற்றி, சாந்துபூசி வெள்ளையடிக்கக் கையில் பொருளில்லாதவர்களாய், வருஷக்கணக்காய் வீட்டை யப்படியே வைத்துக்கொண்டு, தங்களுக்கனுகூலமாய் கன்னடபாஷையில் "மனைகட்டி நோடு, மதுவே மாடிநோடு" என்ற பழமொழி வற்பட்டிருப்பதை நினைத்து திருப்தியடைவது போல தேனீக்கள் இருப்பதில்லை. ஒரு கூட்டத்தை சேர்ந்த ஈக்களெல்லாம் வீடுகட்டுகிற வேலையிலேயே இருந்தால் எப்படி சாத்தியம்? ஆகாரம வேண்டுமே? அக்காலத்தில் சில ஈக்கள் பிரவேசித்து செய்துக்கொண்டே யிருக்கும். சிற்சில ஈக்கள் எட்டு, பத்து மைல தூரஞ்சென்று தேனை எடுத்துக்கொண்டு வந்து சேர்க்கும்.

நீலகிரி மலையில் கட்டை என்று ஒருவிதமான செடியுண்டு. இது பன்னிரண்டு வருஷத்திற்கொருமுறைதான் புஷ்பிக்கிறதென்று கூறுகிறார்கள். அதிலும் தொதவனாட்டிலுள்ள செடிகள் புஷ்பித்து ஆறுவருஷமான பிறகுதான் பறங்கிநாட்டிலுள்ள செடிகள் புஷ்பிக்குமென்றும், பறங்கினாட்டிலுள்ள செடிகள் புஷ்பித்து ஆறுவருஷமான பிறகுதான் மறுபடியும் தொதவனாட்டில் புஷ்பிக்குமென்றும் கூறுகிறார்கள். யாம் பரீக்ஷித்தவரையில் அது உண்மையென்றே நம்பவேண்டியிருக்கிறது. இந்தச் செடிகளில் மலரும் புஷ்பங்களும் அதிகம், புஷ்பங்களில் தேனும் அதிகம். புஷ்பங்களைப்போலவே தேனின் நிறமும் இரத்தச் சிவப்பாயிருக்கும். ஒரு சமயத்தில் பறங்கினாட்டிலுள்ள ஓரிடத்தில் எடுக்கப்பட்ட தேன், கட்டை புஷ்பத்தினின்று எடுத்து சேகரிக்கப் பட்டதேனாகவிருந்தது. பறங்கினாட்டில் அப்பொழுது அப்புஷ்பமே கிடையாது. அப்படியிருக்க ஈக்கள் தொதவனாட்டிலிருந்தே அத்தேனைக் கொண்டுவந்து சேகரித்திருக்க வேண்டுமென்று நம்பப்போதுமான காரணங்களிருந்தன. இதனால், ஈக்கள் பத்துமைல் தூரத்திற்கப்பால் சென்றும் தேனைத்தேடிக்கொண்டு வருகிறதென்று விளங்கிற்று.

ஈக்கள்.

ஒவ்வொரு கூண்டிலும் இராஜமாளிகையென்று ஒரு வட்டமான பெரிய அறையும் அதையடுத்து கீழதிகாரிகள் வசிக்கும் வேறு சில வட்டமான அறைகளுமுண்டென்று முந்தியே கூறியிருக்கிறோம். இராஜமாளிகையில் வசிக்கும் இராணி ஈயும், கீழதிகாரிகளான வேறுசில ஈக்களும உருவத்தில் மற்ற ஈக்களைவிடப் பெரியது. இவைகள் மற்ற ஈக்களைப்போல ஓடியாடித்திரிந்து பாடுபடுகிறதில்லை. மற்ற தேனீக்கள் பாடுபட்டு சேர்க்கிற தேனை இவைகள் குடித்து யாதொரு வேலையும் செய்யாமலிருக்கிறபடியால், உடல் பருத்து பறக்கச் சக்தியற்றவைகளாய் கூண்டையே காத்துக்கொண்டிருக்கின்றன. இவ்வீக்களே முட்டையிட்டு குடும்ப விருத்தி செய்கின்றனவென்று எண்ணப்படுகிறது. அம்முட்டைகள் சீக்கிரத்தில் வெண்புழுக்களாய்மாறி, பிறகு இறகுமுளைத்து ஈக்களாக வெளிப்படுகின்றன. இராணி ஈயும் அதிகாரி ஈக்களுமிருக்கிறவரையில் மற்ற ஈக்கள் பிரிந்து போவதில்லை. எக்காரணத்தினாலாவது இவ்வீக்கள் இறந்துபோய்விட்டால், மற்ற ஈக்களும பிரிந்துபோய்விடும். அரசனில்லாத ஊர் பாழ் என்பது பொய்யன்றே. சிற்சில கூண்டுகளில் இராணி ஈக்கள் இரண்டு வருஷத்திற்கதிகமான காலமுயிருடனிருந்ததாகவும் தெரியவருகிறது. இத்தேனீக்களையும் வியாதிகள் சில சமயங்களில் வருத்துகின்றன. மனிதர்களால் அமைக்கப்படுகிற விடங்களில் வந்து சேர்ந்து, கூடுகட்டிக்கொண்டிருக்கின்ற ஈக்களில் அநேகம் திடீரென்று இறந்துவிடுகின்றன. இப்படி இறந்துபோவது அநேகமாய் ஒருவிதமான ஊதல் காற்றடிக்கும் சமயமே என்று எண்ணப்படுகிறது.

சாதாரணமாய் தேன் சேகரிக்கிறவர்கள் அங்கங்கே வனங்களிலும் குன்றுகளிலும் காணப்படுகிற தேன் கூடுகளைக் கலைத்து தேன் எடுக்கிறார்களே தவிர, தேனீக்களை வளர்த்தி வாலிபம் பண்ணித் தேன் எடுப்பதுண்டென்று கேட்டிருக்கமாட்டார்கள். ஐரோப்பாவிலுள்ள சில தேசங்களில் தேனீக்கள் கூடு கட்டத்தகுந்த வசதியான இடங்களை அவ்விடத்திலுள்ளவர்கள் அமைப்பதாகவும், அதில் தேனீக்கள் தங்கள் கூடுகளைக் கட்டுவதாகவும் அவைகளிலிருந்து தேனையவர்கள் வேண்டியபொழுது எடுத்துக்கொள்வதாகவும் அறிகிறோம். அப்படியே நீலகிரி மலையின்பேரில் ஐரோப்பிய தோட்டக்காரர்களில் பலரும் மற்றவர்களில் சிலரும் செய்துவருவதை யாம் நேரில் பார்த்து வருகிறோம். இவர்கள் தேனீக்கள் வந்து கூடுகட்டுவதற்கு வசதியான தகுந்தவிடத்தில் ஒரு சிறிய குடிசைசெய்து, அதில் பெரிதான இரண்டு மூன்று பானைகளுக்கு ஈக்கள் நுழையும்படியான சிறிய வாரங்களைச்செய்து, ஒரு பலகையின்பேரில் கவிழ்த்து வைக்கிறார்கள். இப்பானைகளுக்கு வாசனையுண்டாகும் படியாக கொஞ்சம் வெண்ணெய் பூசிவைப்பதுண்டாம். சிறிது நாளைக்குள் ஈக்கள் இந்த சுகமான விடத்தைக்கண்டு பானைகளிலுள்ள துவாரங்களின் வழியாக உட்சென்று கூடுகள் கட்டத் தொடங்கிவிடுகின்றன. அமாவாசைக்கு நான்கு நாள் முந்தியே, பானையொன்றுக்கு ஒன்று இரண்டு கூடுகளை விட்டுவிட்டு மற்றவைகளை எடுத்துக் கொள்ளுகிறார்கள். அவற்றிலும் எந்தக் கூண்டுகளிலும் தேன் அதிகமாயிருக்கிறதோ அவைகளை எடுத்துக்கொள்ளுகிறார்கள். முட்டைகளும் குஞ்சுகளும அதிகமாயிருக்கப்பட்ட கூடுகளை எடுத்துவிட்டால் ஈக்கள் வேறு இடத்திற்குப் போய்விடுமென்று கருதப்படுகிறது. அமாவாசைக்குப் பிந்தி எடுத்தால் கூடுகளில் தேன் அதிகமாயிருப்பதில்லையாம். சூரிய அஸ்தமானத்திற்குப் பிறகு கூடுகளை எடுப்பதானால், ஈக்கள் அவ்வளவாகக் கொட்டுவதில்லையாம். இப்படி மனிதர்களுடைய இஷ்டப்படி கூடுகட்டுகிற தேனீக்கள் நாட்டுத்தேனீயில் கொம்புத்தேனீ என்ற ஜாதியே அதிகம். இப்படி தேனைக்கூடுகளிலிருந்து எடுப்பவர்கள் சிலர் கூடுகளை அழுத்திப் பிழிந்துகொள்ளுவார்கள். மற்றும் சிலர் கூடுகளை முறித்து ஒருபாத்திரத்தில்போட்டு கொஞ்சம் காச்சுவார்கள். தேன் உருகின உடனே வடிக்கட்டு எடுத்துக் கொள்ளுவார்கள். காய்ச்சி எடுக்கப்பட்ட தேன் வெண்மையாகக் காணப்படுகிறது. ஆனால் சீக்கிரத்தில் கற்கண்டாய் விடுகிறது. காய்ச்சின தேனிலிருந்து எடுக்கப்பட்ட மெழுகு அதிக கடினமானதாய் விடுகிறது. கூண்டிலுள்ள முட்டைகளையும் ஈக்களையும் அழுத்திக்கொன்று விடாமல் தேனைமட்டும் எடுத்து வைத்தால் வெகுகாலம் கெட்டுப்போகாமலிருக்கும் இவ்விதத் தேனில் ஒரு சொட்டெடுத்து ஒரு காகிதத்தின்பேரில் வைத்து ஊதினால் அது உருண்டோடும். அதுவே சிரேஷ்டமான தேன். (முற்றிற்று)

"LIFTINGS" விஷயத்திருட்டு.

பத்திரிகைகள் விஷயத்திருட்டுச் செய்வது மானக்கேடு. பணம் மிகுந்தவர்களும் பேர் பெற்றவர்களும் கூட இந்த அவமானத்துக்கு ஆளாவது ஈனமாக நினைக்கிறார்கள். தமிழில், பிழைக்கத் தெரியாதவர்களெல்லாம் பத்திரிகை போடத்துவக்கி விஷயத்திருட்டுக் கஞ்சாது துஞ்சிப்பிழைக்கிறார்கள். அந்தத் திருட்டுச் சொத்தையும் வர்மம் பாராட்டி வாங்குகிறவர்கள் இருக்கிறார்கள். இவர்கள அந்தஸ்தும் பாராட்டுகிறார்கள். இஃதெல்லாம் காலக்கொடுமை.

VALUABLE MAXIMS FOR EVERY-CAY

நித்தியப்படி நினைத்துச் சாதிக்கத்தக்க சிறந்த நீதிகள்.

இந்நீதிகள் இங்கிலீஷில் அப்பாஷைக்குரிய இருபத்தாறு அக்ஷரங்களின் கிரமப்படி சேர்க்கப்பட்டவை. இவை பாரன் ராத்ஸ்சைல்ட் (Baron Rothschild) என்னும் செல்வப்பிரபுவால் தெரிந்து சேர்க்கப்பட்டவை என்பர். இவை உண்மையாகவே உயர்ந்த நீதிகளை அடக்கிக்கொண்டிருக்கலின் இவற்றை தமிழ் மூதுரைகள் சேர்த்து அடியில் தமிழெழுத்து முறைப்படி நித்தியக்கடமையை நினைத்து நன்மதியொன்றில் சாதிக்க நாளைக் கொன்றாய் நவில்கிறோம் தமிழில்.

1. அடையவெண்ணி முடியத்துணிக.
2. ஆ! அற்பத்தொழிலினும் சட்டைசெய்யற்க.
3. இடையூறெல்லாம் உடைதரப்பெறுக.
4. ஈடில்லை கண்டுணர் ஈகைக்குணத்திற்கு.
5. ஊக்கம் கைவிட்டாக்கமிழவேல்.
6. எல்லார் பாலும் இன்மொழிகூறுக
7. எனைத்தினைப்பெறினும்தினைத்துணைப்பொய்யேல்
8. ஏற்பதிகழ்ச்சியால் எனைத்துணையானும் ஊக்கமது கைவிடேல்.
9. ஒழிந்தசமயத்துற்றதுசெய்வகையறிந்துசெய்.
10. ஓதுவதொழியேல் கோதவரும் மற்றெதிலும்.
11. கசடுறு சிந்தையைக் கருதாதொழிக்கவே.
12. சடனைவாங்கஉடன்படேலென்றும்! வாங்கின [கடனை உடனேதீர்க்குக.
13. காமாதிகளைக் காத்தடக்குகவே கருத்துடனென் [றும்.
14. தக்கனஎண்ணித் துணிந்துசெய்கர்மம்: தகாதன [செய்யக்கருதலும் கேடே.
15. தாயைப் பேணித் தந்தையைவணங்கிப் புத்தியை [வளர்க்க.
16. திரிசரணசுத்தியைத் திரிகாலத்தும் ஒறுவாதுறுக.
17. தீயோரினத்தைச் சேராதொழிக.
18. துயர்வந்துறுதொறும் தூயசிரத்தால்ஆய்ந்ததைப் [பெறுக்க ஆக்கம்பெருகும்.
19. துறக்கினும்கைப்பொருள் துறவேல்கொள்கையை
20. நட்பினலம்நாடி நண்பனை ஒறுக்கேல்.
21 நல்லாருறவை நனவிலும் கனவிலும் பற்றியொழு [கிற் பதம்பெறலாமே.
22. நன்னடக்கையினில் மன்னி ஒழுகுக.
23 நெறியல்லாதன மருவுதலொழிக.
21. நெறியாமதனைக் குறியாச்செய்க.
25. பல்லோர்நேசம் பொல்லாங்காமே.
26. மதுவர்க்கங்களை மனதிலும் நினையேல்.
27. மற்றவர் பெயரை வசையாற்கெடற்க.
28. மேற்கொள் வினையை விரைவில் முடிக்க.
29. வெளிவேடத்தை விடுக்குக முற்றும். [தவறேல்.
30. வேளைதப்பாமல் வினையைத்தொட்டு முடிக்கத்

HEALTH STORY:

SE HU AND HIS MOTHER
(ON THE EVILS OF OVEREATING.)

சேஷுவும் அவன் தாயாரும்

சுகாதாரத்தைப்பற்றிய ஒரு சிறுகதை

மீதூண் கேடு.

திப்பிராஜபுரத்தில் சேஷு என்று ஒரு பையன் இருந்தான். அவனுக்கு பன்னிரண்டு வயதாகிறவரையில் அவனைப் பள்ளிக்கூடத்தில் போடவில்லை. அவன் பாலியத்தில் வெகுவிஷமக்காரன். அந்த ஊரில் அவன் ஏறாத மரம் கிடையாது. அவன் நீஞ்சாத குளம் கிடையாது. ஆனால் அவன் பிறருக்குத் தீங்குசெய்கிறதில்லை. அவன் தாயார் பாலியத்திலே புருஷனை இழந்துவிட்டபடியால் தன் ஒரேபிள்ளையாகிய சேஷுவே கதியென்று அவனை வெகு அக்கறையுடன் வளர்த்துவந்தாள். ஆனால் அவளுக்குத்தெரிந்தவரையில் அவள் அக்கறையெடுத்துக்கொள்ளக்கூடியவிஷயம் அவன்சாப்பாட்டுவிஷயம்தான். அவனுக்கு வயிறுநிரம்ப அவள் ஒவ்வொருவேளையும் சாப்பாடு போடுவதுவழக்கம். அவன் திருப்தியாய்ச் சாப்பிட்டுவிட்டு விளையாடப்போய்விடுவான்.

இந்த ஏற்பாடு அவன் விளையாட்டுக்காலம் வரையில் சரியாக இருந்தது. பிறகு சேஷுவின் தாயாருக்கு சுமார் முப்பதுவயதானபோது தன்பிள்ளை ஒரு படிப்புமில்லாமல் திரிகிறானே, தனக்குப்பிறகு என்னமாய்க் காலக்ஷேபம் செய்வான்; தனக்கு உள்ளசொத்துகொஞ்சம்தானே! என்று விசாரம் உண்டாயிற்று. அப்பொழுது தன்பிள்ளையைவிட்டுப் பிரிந்திருக்க மனமில்லாதவளாய், ஒருசிறிய பள்ளிக்கூடமுள்ள அடுத்த ஊருக்கு சேஷுவை அனுப்பினாள். அங்கே சேஷு இரண்டுவருஷங்களில் நான்குவருஷப்படிப்பை முடித்தான். பிறகு நாகப்பட்டணத்துக்கு மேற்படிப்புக்காகப் போக வேண்டியதாகவிருந்தது. அங்கேயே எட்டுவருஷங்களிருந்து 'மெட்ரிகுலேஷன்' 'எப். ஏ.' பரீக்ஷைகளில் தேறினான். இதற்குமேல் இவனைப் படிக்கவைக்க இவன்

சொத்து இடங்கொடுக்கவில்லை. ஆகையால் அங்கே 'கலெக்டர் ஆபீஸில்' ஒருவேலை பார்த்துக்கொண்டு தான் பல வருஷங்களாகப் பார்க்கவே இல்லாத தன்பிரியமுள்ள தாயாரை அழைத்துவரத் திப்பிராஜபுரத்துக்குச் சென்றான். அங்கே இவனைக்கண்டவுடன் இவன் தாயார் "என்ன அப்பா இப்படி இளைத்துப் போய்விட்டாயே" என்று வெகு விசனத்துடன் கேட்டாள்.

சேஷு, 'இல்லை அம்மா, இளைக்கவேயில்லை: சௌக்கியமாக இருக்கிறேன்' என்றான்.

அம்மா, "சௌக்கியமாவது,கிவுக்கியமாவது; விலாஎலும்பெல்லாம் தெரிகிறது. கோற்காலியாட்டமா இருக்காயே. வயிறுநிரம்பச் சாப்பிடுகிறதில்லையோ?" என்று கேட்டுவிட்டு உடனே தனக்குள் தன்னைப்போலக் கட்டாயப்படுத்தி 'இந்தப் பிடியைமட்டும் சாப்பிடு, இந்தப் பிடியை மட்டும் சாப்பிடு' என்று போடாமல் தான் பிள்ளை இந்தமாதிரி இளைத்துப் போய் விட்டான் என்று நிதானித்துக்கொண்டு தான் இனியாவது ஜாக்கிரதையாக இருக்கவேணுமென்று நிச்சயித்தாள்.

சேஷு ஸ்நானம்செய்துவிட்டு சாப்பிடவந்தான். அம்மாள் பரிமாறினாள். பருப்புஞ்சாதமும் சாப்பிட்டாய்விட்டது. இரஸமும் சாதமும் சாப்பிட்டாய்விட்டது. சேஷுவுக்கு வயிறு நிறைந்துவிட்டது அதாவது அவனுக்குத்திருப்தியாகிவிட்டது. அவன்தாயாருக்குத் திருப்தியாகவில்லை. 'இல்லையடா இதுமட்டும் போட்டுக்கோ' என்று சிப்பத்தட்டில் நிரம்ப சாதத்தை வைத்துக்கொண்டு வருத்துகிறாள். இவன் 'என்ன அம்மா கஷ்டப்படுத்துகிறாயே' என்கிறான். அம்மாளுக்குக் கோபம் வந்துவிட்டது.

'என்ன நாம்பதான்படிச்சு 'பாஸ்' பண்ணிவிட்டோம் என்று தலைகீழே நிற்கிறாயோ. வயிறு நிரம்பசாப்பிடாவிட்டால் என்னத்துக்கு ஆகும் உடம்பு?' என்றாள்.

சேஷு, 'அம்மா, எனக்கு முட்டமுட்டச் சாப்பிட்டால், அப்புறம் என்னவோ போலிருக்கிறது. ஒன்றும் ஓடுகிறதில்லை. அப்படிச்சாப்பிடுகிறது நல்லதில்லை என்று நான் வாசித்திருக்கிறேன்'! என்றான்.

அம்மாள் வருத்தத்துடனும் கோபத்துடனும், 'உன் புஸ்தகத்தை அடுப்பிலேபோடு, அதாருடாசொன்னது? வயிறுநிரம்பச் சாப்பிடாமல்தான் இப்படி நாயாட்டமா இருக்கே. சீ! சாப்பிடு' என்று அந்தசிப்பந்தட்டுச் சாதத்தையும் இலையில் போட்டுவிட்டாள். சேஷுவுக்கு வருத்தமாக இருந்தது. 'இதென்ன இந்த சாதாரணசங்கதி இவர்களுக்குத் தெரியவில்லையே. ஆனால் தெரியக்கூடியதில்லை. நாம் சொல்வோம்' என்று யோசித்துக்கொண்டான்.

'அம்மா, இப்படிச்சாதத்தைக் கொட்டிவிட்டாயே,நான் ஒருசங்கதிசொல்லுகிறேன் கேள். ஒரு மிராசுதாரனுக்கு 10 குடியானவர்கள் இருக்கிறார்கள். அவனுக்கு வயல்வெட்டுக்கு 7 ஆள்வேண்டியிருக்கிறது ; தண்ணீர்பாய்ச்ச 8 ஆள்வேண்டியிருக்கிறது ; என்றால், அவன் ஒரே சமயத்தில் இரண்டு வேலைகளையும் முழுமையும செய்யமுடியுமா. ஒருவேலைக்கு 7 ஆள் விட்டால் மற்றவேலைக்கு 3 ஆள்தான் இருப்பார்கள். 6 ஆள் ஒரு இடத்துக்கு விட்டால் மிகுதி 4 ஆள் தான் இருப்பார்கள். ஆகையால் அவன் இரண்டுவேலைகளையும் ஒரேசமயத்தில் இந்த 10 ஆள்களை வைத்துக்கொண்டு முடிக்க முடியாது.

காலையிலிருந்து 10 மணி வரையில் தண்ணீர் இறைக்க 8 ஆட்களை விட்டுவிட்டுப் பிறகு அவர்கள் திரும்பிவந்த உடன் வயல்வெட்டுக்கு வேண்டிய ஆட்களை அனுப்பவேண்டும். மிகுதி ஆட்கள் இன்னும் எவ்வளவோ ஸாதகமான வேலைகள் செய்ய ஏவப்படலாம். இதுபோல, நம்தேகத்தில் எந்தக்காரியத்திற்கும் நம்முடைய இரத்தத்தின் உதவிவேண்டியிருக்கிறது. நடந்தால் கால்களுக்கு மற்ற இடங்களைக்காட்டிலும் சற்றுஜாஸ்தி இரத்தம் வேணும். வேஷ்டிதோய்த்தால் கைகளுக்கு மற்ற இடங்களைக்காட்டிலும் ஜாஸ்தி இரத்தம்வேணும்.

அப்படியே, நாம் சாப்பிட்ட பிறகு ஜீர்ணம் ஆகிறவரையில் வயிற்றுக்குள் ஜாஸ்தி இரத்தம் வேண்டியிருக்கிறது.

படிக்கும்போது மூளையில் ஜாஸ்தி இரத்தம் வேண்டியிருக்கிறது. சாப்பிடுகிறதும் படிக்கிறதும் ஒரேசமயத்தில் நம்தேகத்தில் சாதாரணமாக உள்ள இரத்தத்தின் உதவியினால் செய்யமுடியாது. அப்படிச் செய்கிறது பிசகு. ஒருமனிதன் வயிறுமுட்ட சாப்பிட்டு விட்டு உடனே படிக்க உட்காருவானானால் அவனுக்குத் தூக்கம் வந்துவிடும். வயிறுமுட்டச் சாப்பிட்டு விட்டு ஏதாவதுயோசனைவேண்டிய வேலையை ஒருவன் வழக்கமாகச்செய்து கொண்டு வருவானானால் அவன் சிறிதுநாட்களில் தேகத்தில் இரத்தக்குறைவினால் கஷ்டப்படுவான். உடம்பு வெளுத்துப்போகும். பலம்குறையும். அடிக்கடி மயக்கம்வரும். மறதி உண்டாகும். இவைகளுக்குக் காரணம் நம் தேகத்தில் உள்ள இரத்தம் ஒரு அளவுக்குள்பட்டிருக்கிறதே. இருக்கிற இந்த இரத்தத்தைப் பல விஷயங்களுக்கு ஒரேசமயத்தில் உபயோகிக்கமுடியாது. மிதமிஞ்சிச் சாப்பிட்டால் வெகுநேரத்துக்குப் படிக்காமலிருக்கவேணும். அளவாய்ச்சாப்பிட்டால் சாப்பிட்டுச் சற்றுநேரத்திற் கெல்லாம் படிக்கவோ, வேறு வேலைசெய்யவோ துவக்கலாம். தூக்கம் வராது. தூக்கம் வருகிறதற்கு ஒருகாரணம் மூளையில் இரத்தம்குறைவுபடுகிறதுதான். நான் இப்போது வேலையில் அமர்ந்திருக்கிறதுடன்கூட இப்படி யிருந்துகொண்டே, பி. ஏ. பரீக்ஷையும் கொடுக்கவேணுமென்று உத்தேசிக்கிறேன். இப்படிச் சாப்பாடு போட்டாயானால் நாலுநாளில் தூங்குமூஞ்சியாகிவிடுவேன். அதிகச்சாப்பாடு மிகவும் கெடுதல் உண்டுபண்ணும். மிதமாகவும் பலதடவைகளிலும் சாப்பாடு செய்யவேணும். சுளுவாக ஜீர்ணமாகக்கூடிய சாப்பாடு சாப்பிடவேணும். இன்னொரு சங்கதி'.—

அவன் முடிக்கிறதக்குள் அம்மாள் 'சரிதான், நீ சொன்னதெல்லாம் சரி, இனிமேல் நான் உன்னைக் கட்டாயப்படுத்துகிறதில்லை; ஆனால் தனக்கு வேண்டியதைத்தான் எங்கே எல்லாரும் சாப்பிடுகிறார்கள்? சாதத்தைக் கிட்டக் கொண்டுபோகிறதற்குள்ளே தான் "போதும், போதும், போதும்," என்று இலைமேலே குப்புற விழுகிறார்களே. இப்படிப் பூகஞ்சிபண்ணினால் கட்டாயப் படுத்தித்தான் சாதம்போடவேண்டியதாக இருக்கிறது. கடக்கட்டும், இலையில் சாதம் விரைவிரையாகப் போய்விட்டது; மோர்விட்டுக்கலந்து சாப்பிடு' என்று சொன்னாள்.

சேஷு,'சாப்பிடுகிறேன். இத்தனை நாழிகை பேசிக்கொண்டிருந்ததில் சற்று வயிறுகுறைந்ததுபோல் இருக்கிறது. ஆனாலும் இவ்வளவு சாதம்சாப்பிடுகிறதுநல்லதில்லை. இருக்கட்டும், வெள்ளைக்காரர்களுக்குள் இப்படிப் பரிமாறுகிறதில்லையே. சமையலான பதார்த்தங்களை வரிசையாகச் சாப்பிடுகிறவர்கள்முன் கொண்டு வந்து வேலைக்காரர்கள் வைத்து விடுகிறார்கள். இவர்கள் தங்களுக்கு வேண்டிய பதார்த்தங்களில் வேண்டிய அளவுமட்டும் எடுத்துக் கொண்டு சாப்பிட்டு முடிக்கிறார்கள். அவர்களுக்குள் பிறர் கட்டாயப்படுத்துகிறதென்ற ஏற்பாடில்லாததினால் பூகஞ்சி என்ற அம்சம் காண இடமில்லை. நமக்குள்ளும் அந்தமாதிரி ஏற்பாடு இருந்தால் நல்லது. அவனவன் வயிற்றுக்குச் சாப்பிடுகிறதற்கு இன்னொருவர் சிபார்சென்ன? அம்மா, இத்தனை சாதமும் சாப்பிடமுடியாதம்மா; கொஞ்சம் பிழிந்து வைத்து விடுகிறேன். கோபிக்காதே அம்மா' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

அப்பொழுது அம்மாள் தன் பிள்ளை சொன்ன காரணங்களை எல்லாம்கேட்டு மனந்தெளிந்து அவன் சௌகரியம்போல் செய்ய அநுமதித்ததுடன் "எனக்குக்கூட வயிறுநிரம்பச் சாப்பிட்டால் வரவரக் கஷ்டமாகத்தானிருக்கிறது. வயதாகிவிட்டது பார்த்தாயா. சாப்பிட்டுவிட்டு ராமா, ராமா,என்று உட்கார்ந்தால் தூக்கம் வந்துவிடுகிறது. ஏதாவது வம்புபேசினால் தான் சரியாக இருக்கிறது. இனிமேல் நீ வேணுமென்கிறபோது என்னைக் கேளு, நான்உனக்கு வேண்டிய அளவு சாதம் போடுகிறேன். நாகப்பட்டணத்துக்குப் போனோமானால் ஏதாவது அகத்திலே நல்லபக்ஷணம் பண்ணிவைத்துக் கொடுக்கிறேன். எப்படியாவது நீமுன்னுக்குவந்தால் எனக்குப் போதும். நீசொல்லுகிறதும் நியாயமாகத்தானே இருக்கிறது' என்றாள்.

அவரவர்களுக்கு வேண்டிய உணவின் மாதிரியும் அளவும் சாதாரணமாக அவரவர்களே நிர்ணயிக்கவேண்டும். குழந்தைப் பருவத்தில் ஊட்டிவளர்க்கும் தாய் இந்த உண்மையை உணர்ந்து தன் குழந்தையை மிதமாக உணவு கொடுத்து வளர்க்கவேண்டும். போசனங்களுக்கு மத்தியில் நச்சுத்தீனி தின்னலாகாது.

THE SECRET OF LONGEVITY.
STORY OF KING DHARMAPALA.

தர்மபால ராஜன்கதை.

சிரஞ்சீவி யிரகசியம்.

பூர்வகாலத்தில் காசியில் ஒருவகையான பிராமணர்கள் இருந்தனர். இவர்கள் ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய குடும்பப் பெயர் தர்மபாலு. இப்பெயர்கொண்ட ஒருவன் அரசு செலுத்திவந்தான். அவனுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். அந்தப் புத்திரனுக்கும் தன்னைப்போலவே தர்மபாலு என்று பேரிட்டான்.

இந்த தர்மபாலு என்னும் ராஜகுமாரனுக்கு வித்தியாப்பியாசம் செய்விக்கும் பருவம் வந்துவிட்டது. ஆகலால் அக்காலத்தில் கல்வியிற் சிறந்து பெரும்புகழடைந்திருந்த தேசலே (Tesala) என்னும் பட்டணத்திலுள்ள ஒரு பண்டிதரிடம் அவன் தகப்பன் அவனை அனுப்பினான்.

இப்படியாக இந்த ராஜகுமாரன் வித்தியாப்பியாசம் செய்துகொண்டு வருங்காலத்தில் பண்டிதருடைய ஜேஷ்டபுத்திரன் காலகதியால் மரணமடைந்தான். குருவானவர் அந்தப் பிணத்தை தகனம் பண்ணும் பொருட்டு நதிக்குச் சென்றார். அப்போது எல்லாச் சிஷ்யர்களும் குருவோடு சென்றார்கள். தர்மபாலு மாத்திரம் வீட்டிலேயே இருந்துவிட்டான்.

நதிக்கரையில் நடத்தவேண்டிய கிரியைகளையெல்லாம் நடத்திவிட்டு குருவும் சிஷ்யர்களும் வீடுவந்து சேர்ந்தார்கள். பிறகு சிஷ்யர்களெல்லாம் அவரைச் சுற்றிக்கொண்டு மிகவும் நல்லவனாயும் விவேகியாயும் இருந்த அவருடைய பிள்ளையின் மரணத்தைபபற்றி அவருடன் துக்கித்துக் கொண்டிருந்தார்கள்.

பின்பு அடியில்வருமாறு தர்மபாலுவுக்கும் அவனுடைய சகோதர சிஷ்யர்களுக்கும் சம்பாஷணை உண்டாயிற்று.

தர்ம.—"நீங்கள் நமது குருவின்மகன் சிறுவயதிலேயே இறந்துபோய்விட்டான் என்று விசனப்படுகிறீர்கள். ஆனால் மனிதர் சிறுவயதில் இறந்துபோகக் கூடாதுதான்."

மற்றசீஷ.—"எல்லா ஜீவ ஜெந்துக்களுக்கும் மரணம் உண்டென்பது உனக்குத் தெரியாதா?"

தர்ம.—"ஆமாம் நீங்கள் சொல்வது சரியே! ஆனாலும் மனிதர் விருத்தாப்பியமான பிறகுதான் இறக்கவேண்டுமேதவிர சிறுவயதில் இறந்துபோகக்கூடாது."

மற்றசீஷ.—"ஆனால் உங்கள் வம்சத்தில் சிறுவர் இறப்பதில்லையா?"

தர்ம.—"இல்லை, எங்கள் வமிசத்தில் ஒருவர் தவறாமல் எல்லாரும் இரட்டைக் கிழவராய் (மிகவும் வயது முதிர்ந்து) இறக்கிறார்களே தவிர ஒருவரும் சிறுபிராயத்தில் இறப்பதில்லை."

இவன் இப்படிச் சொல்லவே மற்ற சீஷர்கள் இதைக்கேட்டு மிக்க ஆச்சரியப்பட்டு குருவினிடம் இந்த சங்கதியைச் சொன்னார்கள்.

இதன்மேல் குருவானவர் தர்மபாலுவை யழைத்து "உங்கள்வம்சத்தில் ஒருவராவது சிறுவயதில் இறப்பதில்லையா" என்று கேட்டார்.

தர்மபாலு "ஆமாம் எங்கள் குலத்தில் ஒருவரும் சிறுவயதில் இறப்பதில்லை" என்றான்.

இதைக்கேட்டு குரு மிகவும் ஆச்சரியப்பட்டு தனக்குள்ளே சொல்லிக் கொண்டதாவது:—

"இது என்ன அதிசயம்! நான் தர்மபாலுவின் தகப்பனிடம் சென்று அவரிடம் இதைச் சொல்லி இதன் உண்மையை அறியவேண்டும். அவர் இந்த சங்கதி நிஜந்தான் என்று சொன்னால் நான் அவர்களிடம் குடிகொண்டிருக்கிற குணகுணங்களைக் கேட்டறிந்து அந்தப்படி என்னைச் சீர்திருத்திக் கொள்ளக் கடவேன்"

அந்தப் பிரகாரமே ஐந்து நாளைக்குப் பிறகு அவர் ஒரு கூலியாளின் தலையின்மேல் ஒரு வெள்ளாட்டின் எலும்புகளை மூட்டையாகக் கட்டுவித்து, அவனையும் கூட்டிக்கொண்டுக் காசிப்பட்டணம் வந்துசேர்ந்தார்.

இவர் தர்மபாலுவின் வீட்டுக்கு வந்ததும்தர்மபாலுராஜன் இவரை மிக ஆசார உபசாரத்தோடு அழைத்து, அவருடைய பசியை யாற்றி ஒரு ஆசனத்தின்மேல் வீற்றிருக்கச்செய்தான். குருவானவர் தன் காலைக்கழுவிக்கொண்டு உட்கார்ந்துக்கொண்டு "ஓ பிராம்மணோத்தமா! உனக்கு மிகவும் சங்கடமான சங்கதி ஒன்று கொண்டுவந்திருக்கிறேன். மூன்றுவேதங்களை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தவனும், மிக புத்திசாலியாயுமிருந்த உன்னுடைய குமாரனாகிய தர்மபாலு இறந்துபோனான். ஆனால் உனக்கு எல்லாப் பொருள்களும் அநித்தியம் என்றது தெரியும். ஆகையால் வீணாக விசனப்படாதே" என்று சொன்னார்.

அரசன் இவரைப்பார்த்து சிரித்து "என் மகன் இறந்துபோகவில்லை. வேறு யாராவது இறந்துபோயிருக்கவேண்டும்" என்றான். உபாத்தியாயர் அரசனுடைய நிர்ணயத்தைக் கண்டு ஆச்சரியமடைந்து "உன் சொந்தமகனே இறந்து போயிருக்கிறான். இதோபார்! அவனுடைய எலும்புகள்" என்று சொல்லிக்கொண்டு மூட்டையிலிருந்த எலும்பைக் காட்டினார்.

மறுபடியும் அரசன் "இந்த எலும்புகள் ஒரு ஆட்டினுடையதோ அல்லது ஒரு நாயினுடையதோ அல்லாமல் தர்மபாலுவின் எலும்புகள் அல்ல. என்மகன் இறந்துபோகவில்லை. எங்கள் வம்சத்தில் 7 தலைமுறைகளாக ஒருவரும் சிறுவயதில் இறந்துபோனதில்லை" என்றார்.

"ஓய் பிராமணோத்தமா? நீர் என்ன நீதிகளை அனுசரிக்கிறீர்? என்ன விரதங்களை அனுஷ்டிக்கிறீர்? உன் வம்சத்தில் சிறுவர்களை சாவினின்றும் காப்பாற்றும் இரகசியமான சங்கதி ஏது?" என்று குரு சிரேஷ்டர் கேட்டார்.

தர்மபாலு என்பவர் அடியில் வருமாறு சொன்னார்.

"1. நாங்கள் மாசற்ற தர்ம வழியில் நடக்கிறோம்.

"2. பொய்யென்பது எங்களிடம்நாடாது.

"3. பாவச்செயல் எங்களைக் கண்டால் விலகும்.

"4. எது பாவமான காரியமோ அதைத் தவிர்த்து புண்ணியமான காரியங்களைத் தழுவுவோம்.

"5. நல்லவர்கள் சொல்லுகிற பிரசங்கங்களைத் தான் கேட்போம்.

"6. துஷ்டர்கள் எங்கள் காதினிடம் வந்து உரத்துக் கூவினாலும் செவி கொடோம்.

"7. நாங்கள் துஷ்டர்களைத் தள்ளி சிஷ்டர்களை சிநேகிதராக்கிக் கொள்ளுகிறோம்.

"8. அதிதிகளுக்குப் பிக்ஷை மிகவும் சந்தோஷத்தோடு கொடுக்கிறோம்.

"9. அப்படிப்பட்ட தர்மத்தின் பலனாககடவுள் சௌக்கியத்தை எங்களுக்குந் தந்தருளுகிறார்.

"10. அதிதிகளுக்குப் பிக்ஷைபோட்டால் அவர்கள் தங்கள் மனங்குளிர்ந்து எங்களை ஆசீர்வதித்துச் செல்லுகிறார்கள்.

"11. நாங்கள் பிராமணகுல சிரேஷ்டர்களையும், திக்கற்றவர்களையும், களைத்துப்போன வழிப்போக்கர்களையும், சட்டிப் பிச்சைக்காரர்களையும், கந்தை உடுத்துக் கொண்டுவருகிற பிச்சைக்காரர்களையும் எங்கள் பந்துக்கள்போலப் பூஜிக்கிறோம்.

"12. எங்களிடம் களங்கமற்ற பதிவிரதா தர்மம் குடியிருக்கிறது.

எங்களது சுந்தரமான மனைவிகளைத் தவிர வேறொருவர்மீதும் விருப்பம் கிடையாது.

அவர்களோ என்றால் தங்களுடைய மிகவும் அருமையான பர்த்தாக்களைத் தவிர வேறொருவரையும் பார்த்திருக்க மாட்டார்கள்.

இப்பேர்ப்பட்ட பதிவிரதா தர்மங்களின் பலனாக எங்களுக்கு புத்திக் கூர்மையும், சாஸ்திர விஷயங்களில் மிகவும் பயின்றகுண சீலமும் வாய்ந்த குழந்தைகள் உற்பத்தியும் ஆகிறார்கள்.

"13. எங்கள் பந்துஜனங்களும் மித்திரர்களுமாகிய, பிள்ளை, பெண், சகோதரன், சகோதரி, மனைவி முதலிய எல்லோரும் மற்றும் எங்களிடம் சேவகம் செய்கிறவர்களும் எங்களுடைய அடிமைகளும் இதேமாதிரி புண்ணியதிசையை நாடுகிறவர்களா யிருக்கிறார்கள்.

"14. உண்மையான புண்ணியவழி எங்கள் மனதில் குடிகொண்டிருக்கிறது. எங்களுடைய மனதாகிய ஆகாயத்தை அசுத்தப்படுத்த ஒரு நோவுக்காவது ஒரு விசனத்துக்காவது தைரியம் இல்லை.

"15. எங்களுடைய நெற்றி எல்லையில்லாச் சந்தோஷத்தில் நிறைந்திருக்கிறது.

"இவைகளின் பலன்தான் எங்களுடைய குழந்தைகளைச் சிறுவயதில் இறப்பதினின்றும் காப்பாற்றுகிறது."

பின்னும் அரசன், "பனையிலையால் செய்தகுடை எப்படி ஒருவனை வெயிலினின்றும் மழையினின்றும் காக்குமோ அப்படியே பரிசுத்தமான மனமுள்ளவர்களுக்கு நேரும் துன்பங்களை அவர்கள் செய்யும் புண்ணியங்கள் நீக்குகின்றன. என் மகனான தர்மபாலு அவன்பண்ணிய புண்ணியத்தாலும் ஆயுர் பலத்தினாலும் உயிரோடிருக்கிறான். இந்த எலும்புகள்வேறு யாருடையதோ எனக்குத் தெரியாது" என்றார்.

குருவானவர் பிராமண குலத்தரசனான தர்மபாலுவின் முகத்தில் தோன்றிய தர்மகுணத்தையும் தாராளகுணத்தின் மகிமையையும் பார்த்து வெட்கித்துப் போய்விட்டார்.

ஆகையால் இதைப்படிக்கிற எல்லோரும் மேற்சொன்னவாறு நடந்து நீடித்தவாழ்வைப் பெற்று சுகமாக வாழ்வார்களாக.

EVENTS OF THE MONTH.

மாதவிசேஷங்கள்.

உத்தராயண புண்யகாலம்.

கண் திறக்கக் கல்வி அவசியம்.

மார்கழிமீ திருவாதிரை வந்துபோயிற்று. பகவானும் சகள வுருக்கொண்டு பக்த ஜனங்களுக்கு உண்மை யுபதேசம் செய்வான் குருமூர்த்தமாய் அவதரித்து ஆனந்த நடேசராக தரிசனந் தந்தருளினர். எதுவும் கண்ணுள்ளவர் தான் காண்பார்கள். கண்ணிலானுக்குக் காட்சியில்லை. "முகத்திற் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள், அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்," என்றோதியுள்ளார் பெரியோரும். ஆதலால் அகக்கண் திறக்கப்பெறுவதே மனுஷஜன்மம் எடுத்ததற்குப் பலனாம். அகக்கண்பெற்றுப் பார்க்கவும்கற்றுப் பழகினால் அப்பொழுது அகக்கண்ணுக்கு விளங்குவது முகக்கண்ணுக்கும் விளங்குவது விகசிதமாகும். "அரங்கத்து அம்மான் திருக்கமல பாதம் வந்தென்கண்ணின் உள்ளன ஒக்கின்றதே" யென்று ஆழ்வார்கூறிய திருவாக்குப் பெருமை அப்பொழுதுதான் விளங்கும்.

"பார்வை யிரண்டுண்டு: பஹிர்-அஹமுக
மென்பர்."

என்றார் மற்றோரும். இந்த இரண்டு பார்வையும் ஒன்றுவதுணர அகத்திற்கண்டதைப் புறத்திலும் புறத்திற் கண்டதை அகத்திலும் கண்டு இரண்டும் 'ஒன்றுவது'—அதாவது, ஒருபொருளையே உணர்த்துவது கண்டு உணரல்வேண்டும். இதற்குத்தான் தரிசன சக்தி யென்று சொல்கிறது. தரிசனசக்தி யென்றாலும் (Powers of Observation) என்றாலும் முடிவில் ஒன்றேயாகும். பார்க்கப் பார்க்கத்தான் பார்வை தீக்ஷண்யப்படும்.

அப்படியே கேட்கக்கேட்கத்தான் கேள்வி தீக்ஷண்யப்படும். இந்திரியங்கள் என்று நாம் சொல்வதெல்லாம் மனோசக்திகளின் பிரவிர்

த்திவாயில் அன்றி வேறல்ல. இந்திரியங்கள் கருவியாகும். மனோசக்தி கரணம் ஆகும். கருவி கரணங்களின்றி ஆராய்ச்சியில்லை.

"ஆராய்ச்சியின்றி தேர்ச்சியில்லை."

ஆதலால் "ஆய்ந்து-ஓய்ந்து-தேர்தல்" என்பது அறிவு விலாசத்தின் லக்ஷணமுறையாகும். பசுமாடு புல்லைமேய்ந்து பின்னர் அவகாசமாய்ப் படுத்துக்கொண்டு அசைபோட்டு, முன் தின்னபுல்லை ஜீரணமாகத் தயார்செய்து முடிவில் பாலைக் கொடுக்கிறதுபோல் குழந்தைகளுக்கு போதனாமுறையறிந்து போதை(அறிவுமயக்கம்) உண்டாகப் போதிக்கவேண்டும். போதை தெளிந்தால் அது அறிவு ஆகும். போதையிலுள்ள மயக்கம் மனக்கிளர்ச்சியினால் உண்டாவது. ஆகவே போதனா முறையறிந்து போதித்தால் தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற மனக்கிளர்ச்சி யுண்டாகும். இந்த மனக்கிளர்ச்சியின்றி அறிவுவிர்த்தி யுண்டாகாது. அறிவு விர்த்தியின்றி மனப்பழக்கம் சித்திக்காது. மனம் படியப்பெறுவதே மனப்பழக்கம். இந்த மனப்பழக்கம்தான் கல்வியென்னும் பதத்துக்கு உண்மையான பொருள்.

பழக்கமே பயிர்ச்சி.

"சித்திரமும் கைட்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம், கற்றதோர் கல்வியும் மனப்பழக்கம்" என்றார் ஔவையார். இந்த உண்மையைத்தான் எத்தேசத்திலும் எக்காலத்திலும் எத்தகையாரும் உண்மையான பாலபோத முறையாக வெடுத்துக் கையாளக்கூடும்.

"கைப்பழக்கம்" என்று ஔவையார் சொன்னதையே "Hand and Eye Training" என்று சொல்கிறார்கள். (Vide Mr. Porret's Lecture at the Teacher's College Exhibition.)

"நாப்பழக்கம்" என்று சொன்னதில் இலக்கிய இலக்கணங்களோடு உள்ளத்தோர்ந் துணர்ந்ததை வெளியிடும் சக்தியனைத்தும் அடங்கும். இது தான் வாணியின் வரப்பிரஸாதம்.

"மனப்பழக்கம்"- கலைஞான மெல்லாமடங்கும். சாஸ்திரஞானம் (Scientific Knowledge) என்பது "மனப்பழக்கம்" இன்றி சித்தியாதொழியும்.

இந்தமூன்றில் கர்மம் (செய்கை), கருவி, கரணம் என்னும் மூன்றின் பயிற்சியும் அடங்கும். இதையே பொதுவில் கல்விப்பயிர்ச்சி யென்றும், மனப்பயிர்ச்சியென்றும், அடைமொழியின்றி "பயிர்ச்சி" (Calture) யென்றும் சொல்கிறது.

பிரசனம்.

இந்தப் பயிர்ச்சிக்கும் உத்தராயண புண்ய காலம் என்கிற தலைப்பெயருக்கும் என்ன சம்பந்தம்? என்று இதை வாசிப்போர் கேட்கலாம். உத்தரம் கூறுவோம்.

உத்தரம்.

கைப்பழக்கம், நாப்பழக்கம், மனப்பழக்கம் இவற்றிற்கும் கண்ணுக்கும் என்ன சம்பந்தமுண்டோ அதே சம்பந்தம் உண்டு மற்றிரண்டுக்கும். கண்ணுக்கு ஞானேந்திரியம் என்கிற விசேஷப்பேருண்டு. காண்பானுக்கும் காட்சிக்கும் காண்படு பொருளுக்கும் பொதுவாய் சம்பந்தப்பட்டுள்ளது கண். மனிதனுக்கு கண் எப்படியோ அப்படிப்போன்றது சூரியன் ஜகத்துக்கு.

சூரிய நமஸ்காரம்.

"நமஸ்ஸவித்ரே ஜகதேகச் சக்ஷுஷே" என்றுள்ள சூரியநமஸ்கார ஸ்தோத்ரத்தில் ஸவித: என்பது சூரியனுக்குப் பேர். ஜகத்

துக்கு ஒரு கண்ணாகவிருந்து விளங்குபவனே உனக்கு நமஸ்காரம். ஜகத் என்பதில் தோற்றப்படுவதெல்லாம் அடங்கும். "ஜகதேகச் சக்ஷுஷான" இந்தக்கண் அகமுகப் பார்வையுள்ளதா பஹிர்முகப் பார்வையுள்ளதாவென்று தெரிந்துகொள்வது பிரதானம். ஏனெனில் அகமுகப்பார்வை (நிவிர்த்தி) ஒடுக்கத்தையும், பஹிர் முகப்பார்வை விர்த்தியையும் உண்டு பண்ணும். வடக்கும்தெற்கும் விர்த்தி நிவிர்த்தியைக்குறிக்கும் திசைகளாம். இவ்விரு திசைகளுக்கும் அதிஷ்டான தேவதைகள் குபேரனும், யமனும் ஆவர். சூரியன் நிவிர்த்தி மார்க்கத்தில் தெற்கு நோக்கிச்சென்று உலகெலாம் குளிரால் நடுங்கியொடுங்கும் காலத்தில் சட்டென்றுநின்று விர்த்தி மார்க்கமாகிய வடதிசையை நோக்குவதுதானே உத்தராயண புண்யகாலம்.

SUMMER SOLSTICE.

உத்தராயணம்.

இது டிஸெம்பர்மீ 22உயில் என்பர் மேற்றிசையார். சந்திரமான காலகணிதப்படி இது கிட்டத்தட்ட சரியாம். உள்ளபடி இந்த வருஷம் டிஸெம்பர்மீ 24உயில் நேர்ந்த அமாவாஸையோடு தக்ஷிணாயனம் முடிவாகி உத்தராயணம் ஆரம்பமாகிறதென்பர். ஆனால் ஸௌரமான காலகணிதப்படி மகரசங்கராந்தி ஜனவரிமீ 13உ. இந்த வித்தியாசமெல்லாம் காலகணிதமுறை வித்தியாஸத்தை யொட்டிவந்தவை. டிஸம்பர்மீ 25உ கிறிஸ்து பிறந்தநாள் என்பது ஒரு ஐதிகம். அடுத்த பௌர்ணமியன்று திருவாதிரைநாளில் சிவன் பிறந்தார் என்பது ஒரு ஐதிகம். காலகணித பேதத்தைத் தள்ளிப்பார்த்தால், இவ்விரண்டு ஐதிகங்களும் ஒரு தத்துவத்தையே குறிக்கிறதென்று விளங்கும்.

"ஜகத்சிருஷ்டி" காலம்.

மேலே நாம் எடுத்தாண்ட சூரிய நமஸ்கார ஸ்தோத்திரத்தில், சூரியனை "ஜகத் ப்ரஸூதி, ஸ்திதி, நாச ஹேதவே" யென்று வர்ணித்திருக்கிறது. அதாவது, ஜகத்தை உண்டுபண்ணிக், காப்பாற்றி, அழிக்கும் காரணஸ்தரே யென்று அவரை வர்ணித்திருக்கிறது. ஆகையால் உத்தராயண புண்யகாலம் "ஜகத் சிருஷ்டி" காலம் (Spring season).

ஐதிகமும் அதன் உண்மையும்.

இந்தக் காலத்தில்தான் கிறிஸ்துபிறந்த பண்டிகையும் புதுவருஷப் பண்டிகையும் கொண்டாடப்படுகிறது. திருவாதிரையும் மகர சங்கராந்தியும் கொண்டாடப்படும் காலமும் இதுவே. சிருஷ்டிகாலத்தில் சைதன்ய சக்தி சகள உருக்கொண்டு மானிடர்க்குப் போதனை செய்கிறது. (Nature Study) பிரகிருதி வித்தைக்கு ஏற்றகாலம் இதுவே. இந்தக் காலத்தில் தேவர்களெல்லாம் விழித்தெழுங்காலம்; ஸஜ்ஜனர்க்கு அனுகூலமான காலம் இதுவே.

சந்தோஷமுகமன்.

ஆகவே இக்காலத்தில் ஒருவருக்கொருவர் சந்தோஷமுகமன் கொண்டாடுவது சகஜம். இப்பத்திரிகையின் ஆசிரியரும் பாலபோதனா சங்கக் காரியகாரியாகவிருக்கும் முறையில் பள்ளியிற்படிக்கும் பாலர்களையெல்லாம் சிந்தித்து வித்யா இலாகா தலைமைஸ்தானத்தை வகித்துள்ளவரும் இப்பத்திரிகாசிரியரை ஈசுவரவாககால் "பாலர்க் குழைக்கவென்று பரிந்து மிக அழைத்துச், சாலவு நானித்துறையிலுனக்குதவி , செய்வேனென்ற" வருமானகனம். மிஸ்டர் ஜெ எச். ஸ்டோனுக்குச் சந்தோஷமுகமன்கூற, அவரும் அதை அங்கீகரித்து பதில் முகமன் கூறியுள்ளார்.

GREETING TO CHILDREN.

ஆசீர்வசனம்.

அவருடைய சந்தோஷமுகமன் பள்ளியிற் படிக்கும் பாலர்க்கெல்லா முரியதாகையால் அதை இங்கே வெளியிட்டு அவர்களெல்லாருக்கும் புதுவருஷம் ஸகலபோக பாக்கியங்களையுமளித்து வித்யா ஸம்பத்தை யுண்டு

பண்ணுவதாகவென்று ஆசிகூறி பகவானைத் துதித்துப் பிரார்த்திக்கிறோம். இனி மற்ற விசேஷங்களைச் சுருக்கிச்சொல்லி இதை முடிப்போம்.

காங்ரேஸும் கான்பரேன்ஸுகளும்.

முதலாவது எல்லாரும் கவனிக்கத்தக்கது கிறிஸ்த்மஸ் விடுமுறைகாலத்தில் கூடும் காங்ரெஸ் சபையும் இதர கான்பரென்ஸுகளுமே. இந்தியன் நேஷனல் காங்ரெஸ் சபையின் 31-வது வருஷாந்தக்கூட்டம் இலக்ஷ்மணபுரியென்று பேர்போன லக்னெளவில் நடந்தேறியது. மிஸ்டர் மொஸும்தார் அதற்கு அக்கிராசனாதிபதியாக விருந்தார். வடமேற்கு மாகாணத்து உதவிக்கவர்னர் ஸர். ஜேம்ஸ் மெஸ்டன் இரண்டாவதுநாள் காங்ரெஸ் சபைக்கு விஜயமாய் வந்திருந்தார். இந்த வருஷத்தின் முக்கியவிசேஷம் காங்ரெஸார் ஒருமனப்பட்டு கக்ஷிப்பிரதிகக்ஷியின்றி இந்தியாவுக்கு "ஸ்வய ஆக்ஷி" வேண்டுமென்று தீர்மானம் செய்தார்கள். இந்த யுத்தத்துக்குப் பிறகு துரைத்தன ஏற்பாடுகள்மாறுவது நிச்சயமாதலால் இந்தியாவானது த்ரௌபதி பஞ்சபாண்டவருக்கு வாழ்க்கைப் பட்டதுபோல், பிரிடிஷாரால் பஞ்சதேசத்தார் (Five Nations) காட்டா'மைக்குள்பட்டதாக ஆய்விடப் போகிறதென்றுணர்ந்து இந்தத்தீர்மானம் அது கூடாதென்பதைத் தெரிவிக்க முன்னிட்டுச் செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

மகம்மதியர் கூட்டம்.

மகம்மதியர்களும் இந்தியாமுழுவதும் பரவிய முஸ்லிம்லீக் சபையின் வருஷாந்தக்கூட்டம் கூடினார்கள். அவர்களும் காங்ரெஸாரோடு கலந்து மனம்ஒன்றுபட்டு "ஸ்வய ஆக்ஷி" தீர்மானத்துக்கு பூர்த்தியப் பட்டவர்களாயிருந்திருக்கிறார்கள்.

மற்ற கான்பரேன்ஸுகள்.

மற்ற கான்பரென்ஸுகளின் பேரைமட்டும் சொல்வதுபோதும். லக்னௌவில் கூடியவை: ஸோஷியல் கான்பரென்ஸ்; தொழில்விர்த்தி கான்பரென்ஸ்; தியஸாபிகல் கான்பரென்ஸ். சென்னையில் கிறிஸ்தவர் கான்பரென்ஸ் ஒன்று கூடியது. இந்தியாவிலுள்ள கணிதசாஸ்திரப்பிரியர்கள்கூடிய சபையொன்று இருக்கிறது. அச்சபையாரும் இந்தவருஷம் சென்னையில் ஒரு கான்பரென்ஸ் கூடினார்கள்.

கிறிஸ்த்மஸ் விளையாட்டும் கொண்டாட்டமும்.

"பீப்ள்ஸ் பார்க்" தோட்டத்தில் கிஸ்தமஸ் ஜனவரிப் பண்டிகையைக் கொண்டாட, விளையாட்டும் வேடிக்கைகளும்வைத்துக் காசு வாங்கிக்கொண்டு ஜனங்களை உள்ளேவிட்டார்கள். இதில் சேர்ந்ததொகை யுத்தபண்டுக்கென்று ஏற்பாடாயிற்று.

சைதாப்பேட்டையில் வித்யா சம்பந்தமான காட்சி.

சைதாப்பேட்டை டீச்சர்ஸ் காலேஜில் வித்யா சம்பந்தமான பொருட்காட்சியொன்று வைக்கப்பட்டது. அதில் வித்யா போதனை முறைகளும் அவற்றிற்குவேண்டிய தளவாடங்களும் காட்சிப் பொருள்களாகக் காட்டப்பட்டிருந்ததோடு, பள்ளிக்கூட சாமான்கள், பள்ளிக்குழந்தைகள் கைவேலைகள் முதலியனவும் காட்சிப் பொருள்களாகக் காட்டப்பட்டிருந்தன. போதனாசிரியர்களையன்றி பெற்றோர்களும் அக்காட்சியைக் கண்டுகளிக்கவும் அதிலிருந்து அனேக உண்மைகளைக் கிரகிக்கவும் சாதகமானதாயிருந்தது.

எக்ஸிகியூடிவ் கௌன்ஸில் மெம்பர்.

அடுத்த பிப்ரவரி௴ 24உ யோடு கனம் ஸர். பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் அவர்களுடைய ஐந்து வருஷதவணை முடிகிறது. அவருக்குப்பின் அவருடைய ஸ்தானத்தில், கனம். திவான் பஹதூர் பெருங்காலூர் - ராஜகோபாலாசாரியார் அவர்களை நியமிக்க சிபார்சு செய்திருந்ததை மாக்ஷிமைதங்கிய அரசர் அங்கீகரித்துவிட்டாரென்பதைத் தெரிவிக்கச் சந்தோஷப்படுகிறோம்.

வர்த்தக யுக்தி.

வியாபாரம் செய்து விருத்தியை அடைந்து முன்னுக்கு வருவதற்கான சாதகங்களை வாலிபர்களுக்கு மிகவும் நன்றாய் விளக்கிக் காட்டும் ஒரு முக்கியமான புத்தகம்.

விலை. அணா 4.

விலாசம்:—

M. A. NELLAIYAPPAR Esqr.,
162, Coral Merchant Street, Madras-E.

"MANNERS MAKETH MAN."

Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith.'

" Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End.

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."



அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** **"Approved"**

புத்தகம். **24.**] நள ௵ மாசி ௴, **1917** ௵ பிப்ரவரி ௴ [சஞ்சிகை **11.**

Business "Terms":

N.B.—To avoid all possibility of misapprehension, we *reiterate* our "terms" (approved by our *constituents* and by Government) which, from the beginning, are :—

1. Cash or Remittance with Order : Rs. 5 per Vol.; or,
2. *One month's credit at the arrears rate* : Rs. 6 per Vol.
3. Arrears to be cleared on rendering of *a/cs.* or by V.P.P.
4. All Indents registered for School Edition only and to begin with the current volume (*corresponding* with Tamil or Official year, April-March).
5. Subscriptions registered to continue from Vol. to Vol. and not to be discontinued in the middle of a Vol.
6. No popular edition issued owing to scarcity of paper.
7. Monthly parts (spare or sample) 8 (eight) annas each.

General Notice.

☞ Owing to rarity of credit and scarcity of paper, we beg to make it clear and give notice to all that—

i. the *terms* offered are for regular subscribers only ;
ii. no exception to these rules can be made or recognised;
iii. short credit allowed should not be misused ;
iv. unpaid accounts are subject to "fluctuations" and overcharges ;
v. all arrears should be fully paid ***within*** three months (*time being an important factor*) ;
vi. every outstanding account will be charged *One Rupee Extra* per Vol. or any part thereof for every notice or Reminder sent after this period;
vii. all subscribers are *ipso facto* bound to observe the rules.

(*By Order of the Managing Committee.*)

THE MANAGING AGENTS, "VIVEKACHINTAMANI,"
Novr. 1916.] *Lalitalaya*, 19, *Adam Street*, *Mylapore.*

☞ *Calculations made are based on the principle of one copy for each school which should be strictly adhered to.*

N.B.—Due care is taken in addressing and personally handing copies to the Post Office at Brodie's Road and there the publishers' responsibility ceases. Evidence of posting is preserved and can be made available for enquiries The publishers do not undertake to replace missing copies but will endeavour to supply spare copies, when available, on payment, if applied for within 30 days after the 15th of each month for which such copies are due.

Notice of discontinuance to have effect must be given in time in writing before a New Volume begins in April and after all the arrears due to the end of the current Volume have been paid and account settled.

"MANNERS MAKETH MAN"

H. E. LORD CHELMSFORD ON UNIVERSITY LIFE.

"MEN WITH CHARACTER AND PURPOSE."

"What, then, do we look for from you as a result of your university life? First that you should come out with your character formed and strengthened and that that character should be no unworthy one, and next that you should come out men ready to take up the duties of citizenship and play your part in the common life, in short, men with character and purpose. As I look back to my university days, I believe that even as undergraduates we dimly held by these two ideas, character and the responsibility of citizenship. For us it was largely a matter of tradition. On the walls of our colleges we could see the portraits of those who had played a great part in the life of the State. We took in the lesson of the past as naturally as we had imbibed our mother's milk. For you the task is a harder one. Your university is still young, and though you have had distinguished *alumni* in the past and you have them in the present, your tradition is not yet one of centuries. On your shoulders then lies the responsibility of moulding the tradition which is to be handed on. It was not for nothing that that great educational statesman, William of Wykeham, gave as the motto of his great school, Wynchester 500 years ago: "Manners maketh man," manners not in the superficial sense of to-day, but in the older sterner sense of the Latin *mores* "character." He did not leave it to his successors to evolve the note which his school should strike. He struck it once and for all. Time and subsequent generations have bowed before his prescience and marvelled at his insight into the heart of all education, and you with the innate imagination of your race can visualise this objective for yourselves more quickly than we of a Western stock. I have no doubt then that you will accept this first objective of your university life.

THE POLICY OF GOVERNMENT.

"Our policy then is first to secure that there shall be as many opportunities of a livelihood as possible open to the educated classes and next to endeavour to divert the students into channels other than those of law and Government clerical employ. I hope and believe that we shall be able to do so. Don't imagine that I promise the millennium for to-morrow or the next day. If we can lay the foundation of a policy which will increase the spheres of employment and at the same time switch off the overflowing stream of students into new channels of instruction, we shall at least have done something to remedy what is admittedly a very serious state of things.

INDUSTRIAL AND COMMERCIAL OPPORTUNITIES FOR INDIA'S SONS.

"India is asking for industrial and commercial opportunities for her sons. The Commission which is now sitting will, I hope, give us an answer which will enable us to secure this end. It will then be our duty so to train our students that when those opportunities are within their reach they shall be capable of grasping them.

THE CALL OF YOUR COUNTRY.

"The call, then, to your generation is, I believe, to educate your people and to improve their material welfare. For my part I promise you that I shall do all that is in my power to enable you to answer that call, and is it not a great call? Each one of you who takes up the profession of teacher* as a sacred calling and the teacher who regards his work as sacred has a great place in your history and will have the teachers' reward of knowing that he has raised his disciples out of the slough of ignorance and has made life full of meaning for them. And for those of you who throw in your lot with the industrial and commercial development of your country, apart from the material prizes which will be yours to win, there will be the vision of India emerging from a life of bare subsistence to a life with a higher standard of living and of comfort."

* "At the present time it is only regarded as a form of employment which will keep the wolf from the door until briefs come in, or some other permanent occupation be secured. This in not as it should be. The profession of teaching is a great and honourable profession and it should engage the whole attention of those who follow it. But this is not likely to be the case so long as teachers are paid an inadequate wage. If we are to divert students on to this road we must increase the pay and opportunities of our teachers and magnify the status of the teaching profession."

"No good work is ever lost." "My best wishes for the success of your publication"—*Sir Harold Stuart, K. C. V. O.*

புஸ்தகம்-24.] [சஞ்சிகை-11.

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

களஞ்சிய மாசிகை } விவேக சிந்தாமணி { January-February. 1917.

ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னேஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

REFORM OF RURAL AND ELEMENTARY EDUCATION.

கிராமவாசத்துக்கின்றியமையாத பிரதம் வித்யா சீர்திருத்தம்.

பிரதமவித்தை யென்பது ஆரம்பப்படிப்பு. அக்ஷராப்பியாசம் முதல் "படிப்பு" என்பதெல்லாம் மனப்படியப் பெறுவதற்கான சாதனங்களன்றி வேறல்ல. மனப்படியப் பெறுவது இருவிதம். விஷயங்களை ஊன்றி உணர்ந்து ஆராய்ச்சி செய்து அறிவதற்கு வேண்டிய படிமானம் அல்லது சிக்ஷை பெறுவது ஒருவிதம். விஷயவாசனை இவ்வாறு பற்றியபின் விஷயப்பற்றை விட்டு உள்ளுணர் சக்தியை உற்றுணர்ந்து ஆய்ந்து அறிவதற்கான சிக்ஷை பெறுவது ஒருவிதம். முன்னது குழந்தைகளுக்கும் பின்னது உலகஞானிகளுக்கும் இன்றியமையாத படிப்பாக அமையும். குழந்தைகள் விஷய ஆராய்ச்சிக்குவேண்டிய சிக்ஷையின்றி உலகத்தை ஆய்ந்தறியக்கூடிய சக்தி அமையப்பெறார். உலகஞான[illegible]பெற்றவர்கள் விஷயப்பற்றைவிட்டு விஷயங்களைப்பற்றும் கருவியாகிய மனதின் செய்கைகளை ஆய்ந்தறிந்து தேறுவதற்கு இரண்டாவதான நிவிர்த்திசிக்ஷையென்று சொல்லும் சிக்ஷை பெற்றிருக்கவேண்டும். இந்த இருவித சிக்ஷைகளுக்கு பிரவிர்த்திமார்க்கம், நிவிர்த்திமார்க்கம் என்று சொல்லப்படும்.

கனம்பொருந்திய இராஜப்பிரதிநிதி லார்ட் செம்ஸ்போர்ட் அவர்கள் கல்கத்தா ஸர்வகலா சங்கத்தலைவராக விருந்து அதன் வருஷாந்தக் கூட்டத்தில் (Convocation) பேசியபோது ஸர்வகலாசாலையில் படிப்பது பிள்ளைகளை உலகத்தில் நடந்துகொள்வதற்கு வேண்டிய பக்குவமுடையவர்களாகச் செய்யத்தக்கதாயிருக்கவேண்டுமென்றும் அப்படிக்கில்லாதவரையில் ஸர்வகலாசாலைப் படிப்புப் பிரயோசனமற்றதாகுமென்றும் சொன்னார். இதற்கு முக்கிய சாதனம் என்னவென்றால் குணப்பயிர்ச்சி (cultivation of character) என்று சொன்னார். இது உண்மையே.

ஆனால் இந்த குணப்பயிர்ச்சி யென்பது ஸர்வகலாசாலையிற் படிப்பவர்களுக்குத்தான் முக்கியமென்று சொல்லக்கூடாது. குணமின்றி மனமில்லையால், குணப்பயிர்ச்சி ஆதிமுதல் கவனிக்கப்படத்தக்கதேயாகும். அக்ஷராப்பியாசம் செய்யும் குழந்தைகளுக்கும் குணப்பயிர்ச்சிதான் பிரதானம். குணப்பயிர்ச்சியின்றி மனப்பயிர்ச்சியில்லை. எட்டுப்படிப்பினால்மட்டும் பிரயோசனமில்லை. எட்டுப்படிப்பு மனோசிக்ஷைக்கனுகூலமாயிருப்பதனாலும் அதனால் மனோசிக்ஷையை மேன்மேலும் விர்த்தி செய்துகொள்ள சாதகமிருப்பதாலும் அதற்கு விசேஷ மதிப்புண்டேயன்றி மற்றப்படி அதற்கு விசேஷமதிப்பில்லை.

எழுதப்படிக்கத்தெரியாமலே மனப்பயிர்ச்சியில் மிகத் தேர்ந்து பரமயோகிகளாகவும் பிரஹ்ம ஞானிகளாகவுமுள்ள பேர்கள் எத்தனையோபேர் எல்லாதேசங்களிலுமிருந்திருக்கிறார்கள். இந்தியாவில் முக்கியமாய் ஏட்டுப் படிப்பிலும் மனம்படியப் பெறுவதாகிய படிப்பு (மனப்பயிர்ச்சி) தானே விசேஷமாக மதிக்கப்படுகிறது. கல்கத்தா ஹைகோர்ட்டு ஜட்ஜிகளில் ஒருவராகிய கனம். ஸர் ஜான் வூட்ராப் அவர்கள் இப்பத்திராசிரியார் தயார்செய்த நாட்டுப் படிப்புச் சீர்திருத்தத்தைப்பற்றிய குறிப்பைப் பார்வையிட்டு அவருடைய அபிப்பிராயத்தை வெளியிட்டெழுதிய கடிதத்தை சென்ற சஞ்சிகையில் வெளியிட்டிருக்கிறோம். அதன்பிரதியொன்று இந்தியா கவர்ன்மெண்டில் வித்யா இலாகா மந்திரியாகவிருக்கும் கனம். ஸர் சங்கரன் நாயர் அவர்களுக்கும், சென்னை வித்யா இலாகாத் தலைவர்க்கும், வித்யா இலாகா கவர்ன்மெண்டு காரியதரிசி அவர்களுக்கும் லோகல் அண்ட் முனிசிபல் டிபார்ட்மெண்டு கவர்ன்மெண்டு காரியதரிசியவர்களுக்கும் அனுப்பிவைத்தோம். அவர் சொல்வது என்னவென்றால்:—மேற்படி குறிப்பில் இப்பத்திராசிரியர் எடுத்தோதிக் குறிப்பிட்டுள்ள வித்யா தத்துவங்களெல்லாம் அவர் ஒப்பத்தக்கவையாகவே யிருக்கின்றன. இப்பொழுது பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் போதிக்கப்படும் படிப்பு மனம் படியப் பெறுவதற்கு அனுகூலமான படிப்பாகவில்லை யென்பது உற்று நோக்குவார் எல்லாருக்கும் விளங்கும்.

முதலாவது ஜனங்கள் ஏட்டுப்படிப்பையும் மனம்படியப் பெறுவதற்கான படிப்பையும் அவ்விரண்டுக்குமுள்ள வித்யாஸம் தெரியாமல் இரண்டையும் ஒன்றாக நினைத்து வியவகரிக்கிறார்கள். இது தப்பு. இந்தத் தப்பு அபிப்பிராயம் மனதிற் குடிகொண்டிருப்பதினால் விளையும் வில்லங்கத்துக்கு அளவில்லை, எழுத்து வாசனையறியாதவன் (எழுதப்படிக்கத் தெரியாதவன்) மனப்பியிர்ச்சியுள்ளவனாக விருக்கலாம். ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸதேவர் எழுதப் படிக்கத்தெரியாதவராயிருந்தும் ஞானக்களஞ்சியமாயிருந்து வித்வத்சிரோமணிகளெல்லாம் தலைவணங்கி அவரைக் கொண்டாடும்படியான அவ்வளவு மஹிமைபெற்று விளங்கினார். இது அவருடைய மனோபக்குவத்தினால் உண்மையறியக்கூடிய சாமர்த்தியம் வாய்ந்தவராயிருந்ததுபற்றி யென்று யாவருக்கும் நாம் சொல்லாமலே விளங்கும். ஸர் ஜான் வூட்ராப் அவர்கள் ஸர் ஜியார்ஜ் பர்ட்வூட் அவர்கள் அபிப்பிராயத்தை யெடுத்தாண்டு இந்தியாவிலுள்ள வியவசாயக்குடிகள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாயினும் உலகத்திலுள்ள இதரதேசங்களின் வியவசாயக்குடிகள் எல்லாரிலும் அதிக மனப்பயிர்ச்சி வாய்ந்தவர்களா யிருக்கிறார்களென்பது உண்மையென்று வற்புறுத்துகிறார். மனம் படியப்பெற எத்தனையோ வழி வகைகளுண்டு. அவை யெல்லாவற்றுக்கும் மூலாதாரமாகவிருப்பது பிரகிருதிஞானம். இதைப்போதிக்கும் வகையைத்தான பிரகிருதிவித்தை (Nature-Study) யென்று புகழ்ந்து சொல்கிறார்கள். பிரகிருதிஞானம் என்பது (Book of Nature) என்று சொல்லும் பிரகிருதி தத்துவங்களை உற்றுநோக்கி யுணரும் மனோசக்தியினால் உண்டாகிறது. அந்த மனோசக்திக்கு 'உற்று நோக்கி யுணர்தல்' தானே மூலகாரணம். இந்த சக்திதான் இக்காலத்தில் படித்துத்தேறி வித்யா பட்டங்கள் பல பெற்றவர்களிடத்தில் மிகவும் குறைவாயிருக்கிறது. இது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். ஆனாலும் படாடோபத்தினால் இப்பட்டம் பெற்றவர்கள் வாச்சா மஹோசாரமாய்ப்பேசிப் பிழைக்கிறார்கள். இத்தேசத்தில்தான் இப்படியென்றால், இதரதேசங்களிலும் இப்படியே தானிருக்கிறது என்று ஸர் ஜான் வூட்ராப் அவர்கள் எழுதியிருப்பதாலும் லார்ட் ஹால்டேன் முதலானவர்கள் செய்முயற்சியாலும் விளங்குகிறது. "இந்த உலகத்தில் இப்பொழுதிருக்கிற அவ்வளவு நுனிப்புல்மேய்ந்து படித்தவர்கள் என்று பேரும் பட்டமும்பெற்றுப படாடோபம் செய்துவருகிறவாகள் வேறு எந்தக் காலத்திலும் இருந்திருக்கமாட்டார்கள் என்பது எனது அபிப்பிராயம். அவர்களில் அனேகர் உயர்ந்த வித்யாபட்டங்கள் பெற்றவர்களாக விருக்கலாம். இருந்தாலும் அவர்கள் மனப்பயிர்ச்சி யில்லாதவர்களேயென்பதிற் சந்தேகமில்லை. படித்தவர்கள் என்று பேர்பெற்று விளங்குபவர்களில் பெரும்பாலாரும் படித்துள்ளபடிப்பு மேற்பூச்சுப் படிப்பேயன்றி வேறில்லை. அவர்கள் கசடறக்கற்காமல் 'கசடு நிறையக் கற்றவர்கள்' ஆதலால், அவர்கள் கற்றகல்வி ஸ்வபாவமாக அவர்களுக்குள்ள குணவிசேஷங்களையும் கெடுத்துவிட்டதென்றே சொல்லலாம்."

உற்றுநோக்கி ஆராய்ந்துபார்த்தால் இந்த அபிப்பிராயம் உண்மையென்றே சொல்லலாம். "ஊமையனுக்கு உளறுவாயன் சண்டப்பிரசண்டன்" என்கிறபடி ஏட்டுப்படிப்புப் படியாதவர்களைவிட அந்தப்படிப்புப் படித்தவர்களாய் "சண்டப் பிரசண்டமாய்ப்" பேசிப் படாடோபம் செய்தாலும் அவர்கள் மனப்பயிர்ச்சியில்லாதவர்களே. ஏனென்றால் மனம் படியப் பெறுமலே அத்தனை படாடோபமும் செய்கிறார்கள். இவர்களை வெகு எளிதில் கண்டுபிடித்துக் காட்டிவிடலாம். ஆனால் "நிர்வாண தேசத்தில் கோவணம் கட்டியவன் பைத்தியக்காரன்" என்கிற பழமொழிப்படி, மனம்படியப் பெறாதவர்கள் ராஜ்ஜியத்தில் மனம்படியப் பெற்றவனுக்கு மதிப்பில்லை. மதிப்பில்லாதவிடத்தில் தலை யிட்டுக்கொண்டால் அவமதிப்பு உண்டாவது நிச்சயம். ஆதலால்தான் பெரியோர் "மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்" என்று மூதுரை ஓதியிருக்கிறார்கள். மனம் படியப்பெறாதவன் கொடிய மிருகத்துக்குச் சமானம். அப்படிப்பட்டவர்களுடைய சகவாசம் எப்பொழுதும் நீக்கத்தக்கதே. ஆனால் எல்லாரும் அப்படியிருந்தால் என்செய்கிறது? என்று ஒருகேள்வி பிறக்கலாம். அதுதான் அவரவர் குணத்தைப் பொறுத்தது. விவேகிகள் வருங்கேடறிந்து முன் ஜாக்ரதையாயிருந்து நீக்குவர். விவேக நுட்ப மில்லாதவர்கள பட்டனுபவித்தபின் புத்தி வந்து மறுபடியும் கேடுவராதபடி அப்போதப்போது உஷாராயிருந்து தப்பிவருவர். அவிவேகியோ, துன்பப்பட்டு இன்பத்துக்காசைப்பட்டு வருந்துவர். இவர்கள் குணவிசேஷங்களை "வருமுன் காப்போன், வருங்கால் காப்போன், வந்தபின் காப்போன்" கதையில் நன்றாகக் காணலாம்.

THE VICEROY ON EDUCATION.

வித்யா விஷயமாய் அரசப்பிரதிநிதியவர்கள் அபிப்பிராயம்.

நமது இராஜப் பிரதிநிதி கனம்பொருந்திய லார்ட் செம்ஸ்போர்ட் அவர்கள் வித்யாவிஷயமாய் இரண்டு முக்கியமான பிரசங்கங்கள் செய்திருக்கிறார். ஒன்று கல்கத்தா யூனிவர்ஸிடியின் தலைவராகவிருக்கும் முறையில் அந்த யூனிவர்ஸிடியின் கான்வொகேஷன் (வருஷாந்தரக்கூட்டம்) மீட்டிங்கில் செய்த பிரசங்கம். மற்றொன்று ஜனவரிமீ 22உ டில்லியில் கூடிய வித்யா இலாகா டிரெக்டர்கள் கான்பரென்ஸ் சபையைத் துவக்கச்செய்த பிரசங்கம். கல்கத்தாவில் அவர் சொல்லியதில் முக்கியபாகமாயுள்ளதை யெடுத்து முகட்டில் அச்சிட்டிருக்கிறோம்.

THE AIM OF UNIVERSITY LIFE.

ஸர்வகலாசாலைப் படிப்பின் நோக்கம்.

ஸர்வ கலாசாலையில் புகுந்து படிக்கிறவர்கள் "பழையகுருடி கதவைத்திறவடி" யென்று அவர்களுடைய மனப்பயிர்ச்சி விர்த்தியடையாமல் திரும்பினால், அப்பொழுது கலாசாலைகளினால் ஜனசமூகத்துக்காவது ராஜாங்கத்துக்காவது யாதொரு பிரயோசனமுமில்லை. ஆனால் சர்வகலாசாலைப்படிப்பின் நோக்கம் அதில் நுழைந்தவர்கள் மனம் படியப்பெற்று குணமும் மணமும் நிறைந்தவர்களாய் உலகவாழ்க்கையில் உண்மையாக ஈடுபட்டுழைக்க இன்றியமையாத மனோபக்குவம் அமைந்தவர்களாய்த்திரும்புவது சாத்தியமாகச் செய்வதாயிருக்கிறது.

CHARACTER & PURPOSE.

குணமும் மணமும்.

இந்த நோக்கத்தை மறக்காமல் மனதில் வைத்து ஸர்வ கலாசாலைப்படிப்பு சம்பந்தப்பட்டவர்களெல்லாரும் அங்கேபோய்ப் படித்துத் திரும்புகிறவர்கள் குணமும் மணமும் நிறைந்தவர்களாயிருக்கப் பார்க்கவேண்டியது அவசியம்.

"MANNERS MAKETH MAN"

"குணமே மணம்"

உவின்சஸ்டர் ஸ்கூல் தலைவரான (William of Wykeham) உவில்லியம் என்பவர் வித்யா விஷயத்தில் தேர்ந்தவரான அரசியல் நிபுணர். அவர் 500-வருஷங்களுக்குமுன் உவின்சஸ்டர் ஸ்கூல் தலைவராக விருந்தபொழுது மனிதனுக்கு மணமளிப்பது குணமேயென்று பள்ளிக்கூட வாசலில் எழுதிவைத்தார். இந்த முதுரையைக்கொண்டு அந்தப் பள்ளியில் போதனசிரியர்களாயிருந்தவர்கள் எல்லாரும் பிள்ளைகளின் குணம் படியச் செய்வதே தங்கள் கடமையாக முனைந்துழைத்து வந்தார்கள். அப்படியே இந்தியாவிலுள்ள ஸர்வகலாசாலைகளும் குணத்தைப்பெருக்கி மணத்தை யுண்டுபண்ண வேண்டுமென்று வற்புறுத்திக் கூறினர்.

சர்க்கார் நோக்கம்.

இந்தியாவில் ஸர்வகலாசாலைகள் ஏற்படுத்தினபொழுது அங்கே போதிக்கச் செய்யப்பட்ட ஏற்பாடு இதுவரையில் சர்க்கார் சிப்பந்திகளும் லாயர்களும் உண்டுபண்ணுவதிலேயே உபயோகமாயிருந்துவந்தது. இப்பொழுது ஸர்க்கார் சேவகம் வித்யாபட்டம் பெற்றவர்களுக்குக் கிடைப்பது அருமையாய்விட்டது. கிடைத்தாலும் உத்தியோகங்கள் கொஞ்சமாகவும் அதற்கு ஆசைப்படுகிறவர்கள் தொகை பலமடங்கு அதிகப்பட்டதாகவு மிருக்கிற காரணத்தால், பெரும்பாலார் அவர்கள் மனோரதம் நிறைவேறாது ஆசைப்பட்டு மோசம் போனவர்களாய் மனக்கிலேசமடைந்து கவர்ன்மெண்டுமேல் குற்றங்கூறுகிறவர்களாக மாறிவிடுகிறார்கள். இது கவர்ன்மெண்டுக்கு இடைஞ்சல் விளைப்பதாயிருப்பதால், வித்யாபட்டம் பெற்றவர்களுக்கு வேறு ஜீவனவழி காட்டவேண்டியது அவசியமாயிருக்கிறது. இதை அநுசரித்து வர்த்தக வியாபாரத்துறைகளில் இறங்குவதற் கநுகூலமான படிப்புச் சொல்லித்தர முயற்சிக்கவேண்டுமென்றார்கள். இஃதோடு வித்யாபோதகர்கள் ஏராளமாகவேண்டியிருப்பதால் அத்துறையில் பெரும்பாலார் இறங்கியுழைக்கத்தக்கதாக ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்பது சர்க்கார் நோக்கமாயிருக்கிறது என்று சொன்னார்.

இந்தியர்களின் கடமை.

இந்தியாவில் கைத்தொழில் வியாபார விர்த்தி அதிகமாயிருக்கவேண்டுமென்று எங்கும் முறையிடுகிறார்கள். அதற்காக ராயல் இண்டஸ்டிரியல் கமிஷன் ஒன்று நியமித்து தற்போது அந்தக் கமிஷன் சபையார் சென்னைக் கோட்டையிலுள்ள கௌன்ஸில் ஹாலில் உட்கார்ந்து சாக்ஷி விசாரணை செய்துவருகிறார்கள். அவர்கள் ரிபோர்ட்டை யெதிர்பார்த்து அதற்குவேண்டிய அநுகூலங்களெல்லாம் அமையச்செய்ய வேண்டியது சர்க்கார் நோக்கமாக விருக்கிறது. இஃதோடு கல்கத்தா யூனிவர்ஸிடி சம்பந்தமாக ஒரு கமிஷன் நியமிக்கவும் உத்தேசமென்று வெளியிட்டார்.

ஜனசிரத்தை வேண்டும்.

ஜனவரிமீ 22உ டில்லியில் கூடிய வித்யா இலாகாத் தலைவர்கள் கான்பரென்ஸ் சபை முன் பேசியதில் வித்யா சம்பந்தமான விஷயத்தில் ஜனங்கள் சிரத்தையெடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமும் மிக முக்கியமானதாயுமிருக்கிறது என்று சொன்னார். இங்கிலாந்தில் ஜனங்கள் அசிரத்தை பாராட்டி வந்ததால் நேர்ந்த கெடுதிகள் இந்த யுத்தம் நேர்ந்ததில் வெள்ளிடை மலைபோல் விளங்கலாயிற்றென்றும், இப்பொழுது அவர்கள் சிரத்தை யெடுத்துக்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்களென்றும் சொன்னார்.

போதகாசிரியர் தொழில்.

போதகாசிரியர் படிப்பு விஷயத்தில் இன்றியமையாதவர்களாதலால் அவர்கள் தொழிலுக்கு ஒரு கௌரவமும் அந்தஸ்துமுண்டாகச் செய்யவேண்டுமென்று சொன்னார். பள்ளிப்படிப்பு பயன்படுவதாக, லார்ட் செம்ஸ்

போர்டு கூறியபடி, முதலாவது, உபாத்தியாயர்கள் (போதகாசிரியர்) வேண்டும்; இரண்டாவது அவர்களை நன்றாகப் பழக்கித் தேற்றல் வேண்டும். இவ்விரண்டும் ஆனபின் அவர்கள் அத்தொழிலைவிட்டு வேறு தொழிலுக்குப் போய்விடாதபடி அத்தொழிலிலிருந்து பக்தி சிரத்தையோடு உழைக்க வசதியேற்படுத்தவேண்டும். இதற்காக அவர்களுடைய சம்பளங்களை உயர்த்தி அவர்களுக்கு அந்திய காலத்தில் பென்ஷனோ, வேறு உபகார சம்பளமோ கிடைக்கக்கூடியதாக ஒரு நிதி யேற்படுத்தவேண்டும். இந்தமாதிரி "டீச்சர்ஸ் ப்ரொவிடெண்டுபண்டு" ஒன்று ஏற்படுத்த மூன்று வருஷங்கள் முன் எடுத்துக்கொண்ட ஆலோசனை முடிவுபெறாமல் இன்னும் ஆலோசனையில் தானேயிருக்கிறது. அதை ஒரு விதத்தில் அநுகூலாஸ்பதமாக முடிவுசெய்து அநுஷ்டானத்துக்குக் கொண்டுவரல்வேண்டும்.

கைத்தொழில் வேலைகள்.

கைத்தொழில் வேலைகளில் பழக்கம் ஏற்படப் பள்ளிப்படிப்புமட்டும்போதாது. அஃதோடு வேலைச்சாலைகளில் புகுந்து வேலைசெய்து பழகல்வேண்டும். இந்த சாதனம் ஏற்படாதவரையில் பட்டுப்படிப்புமட்டும் கைத்தொழிலுக்குச் சாதகமின்றி பாதகமே விளைப்பதாகும்.

பெண்கள் கல்வி.

பெண் கல்வி இப்பொழுது மிகப் பின்னடைந்திருப்பது தேச க்ஷேமத்துக்கு நன்மை விளைப்பதாகவில்லை. ஆணும் பெண்ணும் மனமொத்து வாழ்ந்தால் இல்லற தர்மமும் அஃதேபோல் அரசியல் தர்மமும் சிறப்பெய்தி விளங்கும்: இந்தக் குறை நிறைய முயற்சி செய்யல்வேண்டும்.

ஸ்வபாஷாஞானம்.

படிப்புச் சொல்லிக்கொடுப்பதில் அந்நிய பாஷையில் போதிக்க வேண்டியிருப்பதால் நேரிடும் அநர்த்தங்கள் எத்தனையோ உண்டு. ஸ்வபாஷையில் போதித்தால் மனப்பயிர்ச்சிக்குச் சாதனம் அதிகமாகவுண்டு என்பதில் சந்தேகமில்லை. ஆகையால் எந்தமட்டும் ஸ்வபாஷையில் போதிக்கவேண்டும்: அல்லது ஸ்வபாஷையைவிட்டு இங்கிலீஷில் தானே அதிக முயற்சி யெடுத்துக்கொண்டு போதிக்க வேண்டுமென்று தீர்மானிப்பது மிகவும் முக்கியமான விஷயமாகவிருக்கிறது. ஸ்வபாஷையில் போதிப்பது மனப்பயிர்ச்சிக்கு மெத்த அநுகூலமென்பது மறுக்கக்கூடாததாயிருக்கிறதுண்மையாயினும் இதைப்பற்றி அபிப்பிராயபேதம் அதிகமாயிருக்கிறதென்று அவருக்குத் தெரியும். ஆதலால் இந்த விஷயத்தின் முக்கியத்தை மட்டும் வற்புறுத்தி இதைத் தீர்க்காலோசனைக் கேற்றதோர் முக்கிய விஷயமாக எடுத்துக் கூறினர்.

வித்யா இலாகாத்
தலைவர்கள் கான்பரென்ஸ் நோக்கம்.

இந்த வித்யா இலாகாத் தலைவர்களின் கான்பரென்ஸ் கூடியதின் நோக்கம் என்னவெனில், யுத்தச்செலவு காரணமாக வித்யா விஷயமாய் வேண்டிய அளவு செலவு செய்யக் கூடாமலிருக்கிறபடியால், பிரதம வித்தை, மத்தியதரவித்தை, காலேஜ் படிப்பு என்கிற மூன்றுதர வித்தையில் இருக்கிற தொகையை யெப்படிச் செட்டுமட்டுமாய்ச் செலவு செய்யலாமென்று யோஜித்துத் தீர்மானிக்கவேயன்றி வேறொன்றுக்குமல்லவென்று சொன்னர். அரசர்பிரதிநிதி கான்பரென்ஸ் துவங்கப்பேசியபின் வித்யாமந்திரியாகிய கனம். ஸர். சங்கரன்நாயர் அவர்கள் அக்கிராசனத்தை வகித்து நடபடிக்கைகளை நடத்தினர். அவர்கள் செய்த தீர்மானங்கள் இன்னும் வெளியாகவில்லை.

The Hon'ble Dewan Bahadur P. Rajagopala Chariar Avl, C. I. E.

கனம். திவான் பஹதூர் பெ. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள். ஸி. ஐ. இ.

Intimation has been received that His Majesty the King has approved the appointment of the Hon'ble Diwan Bahadur PERUNGAVUR RAJAGOPALA ACHARIYAR Avargal, C.I.E., to be Member of the Executive Council in succession to the Hon'ble Sir P. S. Sivaswami Ayyar, K.C.S.I., C.I.E.

சென்னை ராஜதானியின் நிர்வாக சபையில் வருகிற பிப்ரவரி மாதம் 27-ந் தேதியன்று காலியாகப்போகும் இந்தியமெம்பர் ஸ்தானத்திற்கு கனம் திவான்பஹதூர் பெ. இராஜகோபாலாச்சாரியரின் நியமனத்தை மகாராஜா ஜார்ஜ் சக்கிரவர்த்தி அங்கீகாரம் செய்துவிட்டார் என்ற சமாச்சாரம் இன்றையதினம் நமக்கெட்டியிருப்பதை மிக்க சந்தோஷத்துடன் மேலே பிரசுரிக்கிறோம். திவான்பஹதூர் இராஜகோபாலாச்சாரியரின் நியமனம் பொதுஜனங்கள் எல்லோருக்கும் ஸர்வ சம்மதமானதென்பதை நாமெடுத்துச் சொல்லவேண்டியதில்லை. இவருடைய பிரதாப வரலாற்றைப் பற்றிச் "சுதேசமித்திரன்" எழுதியிருப்பதவ்வளவும் உண்மையே. காகிதப் பஞ்சநிமித்தம் அப்பத்திரிகையின் வருஷ சந்தா ரூ. 18-க்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.

பிறப்புவளர்ப்பு, படிப்புப் பிரதாபம்.

"அவர் சென்ற 1862-ம் வருஷத்தில் செங்கற்பட்டு ஜில்லா பெருங்காவூர் என்னும் கிராமத்தில் பிரபலமான குடும்பத்தில் பிறந்தவர். அவருடைய தகப்பனார் ராஜாங்க அலுவலில் டிப்டிகலெக்டர் அந்தஸ்திலிருந்து இராஜகோபாலாச்சாரியாரை சென்னை பிரஸிடென்ஸி காலேஜில் கல்விகற்க வைத்தார். இராஜகோபாலாச்சாரியார் கல்வியில் மிகத் திறமை காட்டி எம். ஏ., பி. எல்., பரீக்ஷைகளில் தேறியடைந்தார். அப்போது இந்தியர்களும் ஸிவில் ஸர்விஸிற்கு ஸமமான உயர்ந்த பதவிகளை ஐரோப்பியர்களைப்போல் பெறவேண்டுமென்று அக்காலத்தில் வற்புறுத்தியதின் பலனாக "ஸ்டாட்டரி ஸிவில்ஸர்விஸ்" என்னும் புதியவகுப்பு உத்தியோகங்களைசிருஷ்டித்தகாலத்தில் அதற்காக முதன்மையாகநடத்தின போட்டிப் பரீக்ஷையில் மிஸ்டர் ராஜகோபாலாச்சாரியார் பிரதமஸ்தானம் பெற்றுத்தேறினர். ஆனால் அவரையும் இரண்டாவது இடம் பெற்ற காலஞ்சென்ற டி. சுப்பராவையும் கவர்ன்மெண்டார் நியமனம் செய்யாமல் மூன்றாவதாகவிருந்த ராஜா டி. ராமராவின் குமாரரான பி. வரதராவுக்கு ஸிவில்ஸர்விஸ் உத்தியோகம்கொடுத்தார்கள்.

உத்யோக வரலாறு.

முடிவில் 1886-ம் வருஷத்தில் ஆச்சாரியாருக்கு டிப்டிகலெக்டர்வேலைகொடுத்தார்கள். அந்தஉத்தியோகத்தில் நாமக்கல் டிவிஷனில் நடந்த கலகத்தை யடக்கும் விஷயமாய் அவர்காட்டிய திறமையை மிகமெச்சி ஜில்லா கலெக்டர் செய்த சிபார்சின்பேரில் மிஸ்டர் ஆச்சாரியாரை வரதராயரைப்போல் அஸிஸ்டண்டு கலெக்டராக் 1888-ம் வருஷத்தில் நியமித்தார்கள். பிறகு பல ஜில்லாக்களில் உதவி கலெக்டர் ஸ்தானத்தில் மிகசாமர்த்தியத்துடனும் நற்பெயருடனும் வேலை பார்த்து, கொச்சி தேசத்து ராஜாவின் வேண்டுகோளுக்கிணங்க அத்தேசத்திய திவானாக 1896-ம் வருஷத்தில் அனுப்பப்பட்டார். கொச்சி சமஸ்தானத்தின் நிர்வாகத்தை அவர் வெகு ஊக்கத்துடனும் திறமையுடனும் நடத்தி ராஜாங்கத்தின் திரவிய நிலைமையையும் நிர்வாக நிலைமையையும் படிப்படியே முன்னுக்குக் கொண்டுவந்த பிறகு அதை விட்டுத் திரும்பவும் 1902-ம் வருஷத்தில் பிரிட்டிஷ் ஸெர்விஸுக்குத் திரும்பி சில மாதம் சேலம் ஸெஷன் ஜட்ஜியாகவிருந்து, கர்னூல் ஜில்லா கலெக்டராக நியமிக்கப்பட்டார். அதில் இரண்டு வருஷங்கள் இருந்த பின்னர் புதிதாக ஏற்படுத்தப்படுவதாகவிருந்த ஐக்கியநாணயச் சங்கங்களை உற்பத்தி செய்வித்து விருத்தியாக்கவேண்டிய மிகப் பொறுப்பான கோவாபரேடிவ் ஸொஸைடிகளின் ரிஜிஸ்டிரார் உத்தியோகத்தை சென்னை கவர்ன்மெண்டார் அவரை ஏற்கச்செய்துவிட்டார்கள்.

ஏழைக்கிரங்கி.

இந்த உத்தியோகத்தின் காரணமாய்க் கொண்டு அவர் மூன்று வருஷங்களுக்கு மேற்பட்டு தமது தாய் நாட்டின் ஏழைக் குடிகளுக்கும் பாமரஜனங்களுக்கும்

சுவல்ப ஜீவனக்காரர்களுக்கும் தங்கள் தங்கள் தாழ்ந்த ஸ்திதியிலிருந்து ஐக்கிய சங்கங்கள் மூலமாய் நாளடைவில் அகன்று முன்னேற்றமடையவும், மற்றும் கூட்டுறவைத் தங்களுள் அதிகரித்து, பொதுவாழ்வையும் நாட்டாரின் க்ஷேமத்தையும் பெருகும்படியாகவும் வழிகாட்டி அதற்காகப் பெரும்பாடுபட்டிருக்கிறார் என்பது நாடெங்கும் பிரசித்தியன்றோ. இந்தக் காரியத்தில் அவர் விதைத்தவிதை அவர் ரிஜிஸ்டிராரா யிருக்கும்போதே வேரூன்றி முளையிட்டு, பிறகு சர்க்காரின் போஷணை குறைவா யிருந்தும் தழைக்க ஆரம்பித்து விட்டதை யாவரு மறிவார்கள். கோவாபரேடிவ் ரிஜிஸ்டிரார் பதவியில் மிஸ்டர் ராஜகோபாலாச்சாரியார் சிலகாலமிருந்தபிறகு 1907-ம் வருஷத்தில் திருவாங்கூர் மகாராஜாவின் ஸமஸ்தானத்திற்கு திவானாக நியமனம் பெற்று திருவநந்தபுரம் சென்றார்.

அங்கே ஆறு வருஷகாலம் ராஜ்யதந்திரத்தையும் ராஜ்யநிர்வாகத்தையும் மிகச் சிறப்புடனும், ஒன்றிரண்டு விஷயத்தில் சற்றுக்கடுமையுடனும் நடத்தி தாழ்வடைந்திருந்த திரவிய நிலைமையை மிக நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவந்து அதிகாரிகள் மிகநெறியுடனும் நேர்மையுடனும் வேலை பார்த்துவரச்செய்து பலவிதத்திலும் ராஜாங்கத்தை நல்லவழியில் ஏற்படுத்தியிருக்கிறார். இப்படி திவானாக யிருக்கும்போதுதான் அவருக்கு 1907-ம் வருஷத்தில் திவான் பஹதூர் பட்டமும், 1908-ம் வருஷத்தில் ஸி. ஐ. ஈ. பட்டமும் அளிக்கப்பட்டன. அவ்விடம் தாம் திவானாக விருக்கக் குறிப்பிட்டகாலம் முடிந்ததும், பிரிட்டிஷ் ஸர்விஸுக்குத் திரும்பினார்.

கவர்ன்மெண்டு செக்ரிடேரி.

ராஜ்யநிர்வாகம் படிப்படியே செலுத்திவந்த இந்தியப் பிரமுகருக்கு திரும்பவும் ஜில்லா கலெக்டராக வேலை பார்க்கும் சிறுமையே ஏற்படும்போலிருந்தது. ஆகிலும், புதிதாக சென்னை கவர்ன்மெண்டார் ஏற்படுத்திய செக்ரிடேரி பதவிக்கு அவரை 1913-ம் வருஷத்தில் நியமித்தார்கள். அந்த ஸ்தானத்தில் கனம். கவர்னருக்கு அவருடைய சாமர்த்தியமும், சாதுர்யமும் நிர்வாகசக்தியும் நன்கு புலப்பட்டதே இந்த நிர்வாக சபை மெம்பர் உத்தியோகத்திற்கு அவர் நியமனம் பெற்றதற்கு முதற்காரணமாகும்.

கவர்ன்மெண்டு மெம்பர்.

அனுதாபம் அனுபோகம் இரண்டும் நிறைந்தவர்,

ஆகவே இந்தியர்களின் பிரதிநிதியாயிருந்து, அவர்கள் தேவைகளையும் குறைகளையும் அபீஷ்டங்களையும் ராஜாங்க நிர்வாகத்தில் கவர்ன்மெண்டாரை உணரச்செய்வதற்கும், கனிந்து பரிகாரங்கள் செய்யும்படி செய்வதற்கும், வேண்டியகுணங்கள் யாவும் இவரிடம் பொருந்தியிருக்கிறதென்றே நாம் சொல்லுவோம். அதிகாரத்திலேயே பழக்க மிகுந்தவரான போதிலும் இரண்டு ஸமஸ்தானத்தின் பரிபாலனத்தின் முக்கியபளுவை வகித்திருந்தவராதலாலும், கோவாபரேடிவ் ரிஜிஸ்டிராராக உத்தியோகஸ்தரல்லாத படித்தவர்கள் பாமரர்கள், இவர்களுடன் பல வருஷங்களில் பழகி அவர்கள் நோக்கங்களையும், எண்ணங்களையு மறிந்திருப்பவராதலாலும், உத்தியோகம் வகித்தவரென்பதினால் சொல்லக்கூடிய குறை அவர் விஷயத்தில் இருப்பதற்கிடமில்லை. இதர உத்தியோகஸ்தரல்லாத பிரமுகர்கள் நியமனம் பெறக்கூடியவர்களைவிட ஜனங்களிடம் இவருக்கு அனுதாபம் ஒருவிதத்திலும் குறைவாக இராதென்றே நாம் திடமாய் நம்பியிருக்கிறோம். அவர்களைவிட நிர்வாக அனுபோகம் உண்டென்பதை நாம் சொல்லத் தேவையில்லை. ஆதலால், பார்லிமென்டார் சீர்திருத்தத்தில் இந்தியருக்குப் பிரதிநிதியாகவிருக்கவும் இந்தியநோக்கங்களை அறியும்பொருட்டும் இந்தியரொருவரை நிர்வாகசபைகளுக்கு நியமிக்கச் செய்திருக்கும் ஏற்பாட்டிற்கு மிஸ்டர் ராஜகோபாலாச்சாரியாருடைய நியமனம் ஒத்ததென்றுதான் நாம் கருதுகிறோம். ஸாதாரணமாய் உத்தியோகஸ்தரல்லாதவர்களே இந்தியர்களுள் இப்படிப்பட்ட பிரதிநிதி முறைமையை வகிக்கத் தகுந்தவர்களாயினும், அவர்கள் ஏதோ காரணத்தினால் உத்தியோகஸ்தர்களாகிவிட்டால் அப்படிபட்டவர்களொருவரும் இதுவரையில் செய்த நியமனங்களில் அனர்கர்களாக ஒதுக்கப்படவில்லை. அதற்காக ஜனங்கள் பக்ஷம் ஆக்ஷேபனையொன்றும் ஏற்படவுமில்லை.

சந்தோஷ முகமன்.

இப்பெரிய பதவியையும், பொறுப்பையும் வகிக்கப்பெற்ற மிஸ்டர் ராஜகோபாலாச்சாரியாருக்கு நம்முடைய அந்தரங்க சந்தோஷத்தை அறிவிக்கக் கோருகிறோம். அவர் சில மாதங்களுக்குமுன் பிரிட்டிஷ் தேசத்திற்குச் சென்றிருந்த காலத்தில் கல்வி விஷயமாய் மிக ஆராய்ச்சி செய்திருக்கிறார். அதின் பொருட்டு ஸ்காட்லாண்டு நாட்டில் கல்வி இலாகா மந்திரியுடன் தம்முடைய மோட்டார்வண்டியில் ஊர் ஊராய்ச் சென்று எல்லாபாடசாலைகளையும், பிரதமகல்வி ஸ்தாபனங்களையும் பார்வையிட்டு அவைகளின் அமைப்பையும் நடப்பையும்பற்றி பல விஷயங்களறிந்து நமது ராஜதானியின்பொருட்டு அவ்விஷயஞானத்தை உபயோகித்து, அதின் தாழ்ந்த ஸ்திதியை சீர்படுத்தக் கொண்டிருக்கும்எண்ணத்திற்கிணங்ககல்வி இலாக்கா நிர்வாகத்தை அவர் வகிக்கப் போவதாகச் சொல்லப்படுகிற வார்த்தை நிஜமாகிவிடுமென்று நம்புகிறோம். அப்படிக் கல்வி யபிவிருத்தியில் அவர் கொள்ளப்போகும் பொறுப்பில் இந்நாட்டின் தேசபாஷைகளின் நிலைமையும், அவைகள் மூலமாய் ஜனங்களுக்குக் கிட்டவேண்டிய வித்தியாபிவிருத்தியும் முக்கியமானவையென்பதை இப்பத்திரிகையில் நாம் முதலிலேயே குறிப்பிடலானோம். மிஸ்டர் ராஜகோபாலாச்சாரியார் இந்த நிர்வாக பதவியினின்றும், தேசத்தின் க்ஷேமத்தையும் முற்போக்கையும நன்கு கவனித்து பலன்களுண்டாகச் செய்வாரென்று பூரணமாக நம்புகிறோம்."

THE USE OF TOYS IN THE EDUCATION OF CHILDREN-II.

குழந்தைகளும் விளையாட்டுக் கருவிகளும்-II.

(தைமீ சஞ்சிகையின் 300-ம் பக்கத்தொடர்ச்சி.)

விளையாட்டுக் கருவிகள் வித்யாப்பியாசத்திற்கு இன்றியமையாதன வென்று சொன்னோம். அவைகளையுபயோகிப்பதினால் குழந்தைகளுக்குண்டாகும் சந்தோஷத்தையும் மனோவிர்த்தியையும் நாம் நோட்டமிட்டு அறிந்து கொள்ளவேண்டும். சிறு குழந்தைகளிடத்தில் அவர்கள் மனதுக்கிசைந்த பொருள் ஒன்றைக்கொடுத்தால் ஒரு நிமிஷம் அதை வாங்கிக் களிப்புடன் பார்த்துவிட்டு அப்புறம் எறிந்து விடுவதைக்காணலாம். கொஞ்ச காலம்சென்று விளையாட்டுப்பருவம் வந்த குழந்தைகளிடத்தில் ஒரு பொம்மையைக்கொடுத்தால் அதை அவர்கள் ஆவலோடு வாங்கிக் கொள்வதோடு "அது எனது, எனது" என்று சொல்லிக் கொண்டாடுகிறதைப் பார்க்கலாம். பொம்மைகளால் குழந்தைகளுக்கு முதல் முதல் 'சொத்து' என்கிற எண்ணம் உண்டாகிறது. "எனது, எனது" என்று சொல்லும்பொழுது முதல் முதல் "சொந்தம்" என்கிற எண்ணம் உதிப்பதில்லை; 'சொத்து' என்கிற எண்ணம் உதித்தபின் "சொந்தம்" என்கிற எண்ணம் உதிக்கிறது. முதலில் "எனது, எனது" என்று சொல்லிக்கொள்வதோடு திருப்தியாகவிருக்கும் குழந்தை கொஞ்ச காலம் சென்றால் அந்தமட்டோடு திருப்தியடையாமல் அதில் 'சொந்தம்' பாராட்ட விரும்பும். அப்பொழுது 'என்பொம்மை' என்று அது சொல்வதைப்பிறர் ஒப்புக்கொண்டால் அதோடு திருப்தியடைகிறதில்லை. தன் பொம்மையைத் தான் வைத்துக்கொண்டிருக்க வேண்டும்; தன்னனுமதியின்றி வேறொருவர் தொடக்கூடாது; தன்னதென்று அதைத்தனியாக வைத்துக்கொள்ள வேண்டும்; என்று, சொந்தம் பாராட்டுவதற்குரிய எண்ணங்களெல்லாம் ஒன்றின் பின்னொன்றாக உதிக்கின்றன. பொம்மை அல்லது சொப்புக் கொடுத்தவுடன் புதிய கொடை யொன்று கிடைத்தது என்கிற சந்தோஷம் சொற்ப காலமிருந்து போய்விடுகிறது. ஆனால் அதுமுதல் குழந்தை உலகானுபவங்களை அறிந்தனுபவிக்கத் தொடங்குகிறது. கொடுத்த கொடை ஒரு மரப்பாய்ச்சியல்லது பொம்மையானால் அதைக் குழந்தையென்று பாவித்துப் பாராட்டித் தாலாட்டிப் பால் போட்டி, எண்ணெய்தேய்த்து இன்னும் குழந்தைக்குச் செய்யும் காரியங்களில் தான் அறிந்ததெல்லாம் அதனிடத்தில் காட்டி அநுபவம் பெறுகிறது. ஒரு குதிரை கொடுத்தால் "ஹைஹை" யென்று ஓட்டி விளையாடுகிறது. ஒருநாய்க்குட்டி கொடுத்தால் "தோ, தோ" என்று கூப்பிட்டு விளையாடுகிறது. இரண்டு மூன்று பலகைகளைக் கொண்டு ஒரு உள்ளுத்தடுத்துக் கொடுத்தால், அதை முன்னிட்டு அப்பா, அம்மா, குழந்தை, அடுப்பு, சமையல், சாப்பாடு முதலிய விளையாட்டுகள் விளையாடும். இப்படி பொம்மைகள், சொப்புகள் மூலமாகவே குழந்தைகள் முதல் முதல் லோகானுபவங்களை யுணர்ந்து அனுபவிக்கத் தொடங்குகிறார்கள். ஆகையால் குழந்தைகளுக்கு விளையாட்டுக் கருவிகளும் பொம்மைகளும், படங்களும் எவ்வளவுக் கெவ்வளவு கொடுக்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவர்களுக்குச் சந்தோஷம் அதிகமாவதோடு அறிவும் ஞானமும் அனுபவபூர்வமாக அதிகமாய் வளர்கிறது. இதுவே குழந்தைகளின் பள்ளிக்கூடப் படிப்புக்கு அஸ்திபாரமாக ஏற்படுகிறது. குழந்தைகளின் மனோவிர்த்திக்குக் காரணமான இவ்விஷயத்தில் பெற்றோர் எவ்வளவு சிரத்தையெடுத்துக் கொள்ளவேண்டும்! இருந்தும் நம்மவர்களில் எத்தனைபேர்கள் குழந்தைகள் விளையாடுவதைக் கண்டால் "என்னவோ சிறிதுகள் விளையாடிக் கொண்டிருக்கின்றன" வென்று அலக்ஷியம் பாராட்டி அசிரத்தையாயிருக்கிறார்கள். ஐரோப்பா, அமெரிக்கா தேசங்களில் குழந்தைகளின் மாதிரிகளை யறிந்து கொள்ள வேண்டி, மகா நிபுணர்களெல்லாரும் எவ்வளவோ பிரயாசையெடுத்துக் கொண்டு வருகிறார்கள். உபாத்தியாயர்கள், பெற்றோர்களெல்லாரும், இதுவிஷயமாய் சங்கங்கள் கூடி ஒருவருக்கொருவர் ஒத்தாசைசெய்து கொண்டுவருகிறார்கள்; குழந்தைகள் சுபாவங்களை யறிந்து அவர்களைச் சரியாக நடத்தி அவர்கள் தேகமனோவிர்த்தி ஆத்மவிர்த்திக் கனுகூலமானபடி நடந்து வளர்த்துவர உதவி செய்யும்பொருட்டு இதற்கென்று பிரத்தியேகமான பத்திரிகைகள் எத்தனை பிரசுரிக்கப் பட்டுவருகின்றன. நம்மவர்கள் இது விஷயத்தில் அக்கறையற்று அசிரத்தையாக விருப்பதால் நமதுதேசப் பொதுவிர்த்திக்குண்டாம் இடையூறு இவ்வளவவ்வளவல்ல. ஆகையால் பெற்றோராயுள்ள எல்லோரும் இது விஷயத்தில் தங்கள் கடமையையுணர்ந்து அதைச் சரிவர நிறைவேற்றிவர முயற்சிக்கவேண்டும். பால போதகர்களாயிருக்கும் உபாத்தியாயர்களும், பிரதம பாடசாலை உபாத்தியாயர்களும் தங்கள் பொறுப்பை யறிந்து அதற்குச்சரியாக நடந்து கொள்ள யத்தனிக்கவேண்டும். இத்தேசத்தில் பிரதமபாடசாலை உபாத்தியாயர்கள் சம்பளம் மிகக்குறைவாக இருப்பதால் அதிகப் படிப்பும் புத்திசாமர்த்தியமு முள்ளவர்கள் அவ்வேலைக்குக்கிடைப்பது துர்லபமாகவிருக்கிறது. இருப்பவர்களில் புத்திசாலிகளாயுள்ளவர்கள் வயிற்றுப்பாடு பெரும்பாடாக விருப்பதால், இது விஷயத்தில் வேண்டியமட்டும் படித்து நூதனமுறைகளையும் விஷயங்களையு மறிந்து தங்கள் ஞானத்தை விர்த்திசெய்துகொள்ள வழியற்று தங்கள் தொழிலில் உற்சாகமற்றவர்களாக விருக்கிறார்கள். இக்குறைகளெல்லா மிருந்தாலும், நாமெல்லாரும் நமது குறைகளுக்குமேல் எழுந்து விர்த்தி வழியை நாடவேண்டியது அவசியமாயிருக்கிறபடியால் புத்திசாலிகளான பெற்றோர்களும், உபாத்தியாயர்களும, இது விஷயத்தில் மிக்க கவனம் செலுததிப் பிள்ளைகளை வளர்க்கும் வழியை நன்றாயறிந்துகொள்ள முயறசிப்பார்களென்று நம்புகிறோம்.

SOCIAL ESSAY ON FRIENDSHIP.

ஸமஷ்டி ஸாதனம் : நட்பு.

Dr. Ames of Chicago in one of his celebrated lectures, emphasizes the fact that, beyond all fear of contradiction, Social Service generates religious feeling and conviction. "Emotion accompanies voluntary activity. Feeling and sympathy are generated by conduct. To share and to take a part in the great human activities, to help in charities, to serve our neighbours, to support the educational and religious movements,—when we do all this, we experience the love of God in our lives."

And this is true. Unselfish service is more convincing, than all doctrinal controversy! And friendship is its natural fruit ripened by season and service.

The ideal of Social Service is full of practical deeds and of sweet reasonableness. And this ideal appeals to the young and the strong; it is attracting a better type of leader to the cause of Righteousness in all the world.

இது ஒருவரிடத்துக் கொள்ளும் சிநேகம். சிநேகமென்றாலோ ஒரே வழியாய் மூச்சுவிடுவது என்று அர்த்தம். அதாவது இரண்டு உடலுக்கு ஒரு உயிர்போல் ஒத்துவாழ்தல். இத்தகைய நட்பானது ஒரு மனிதனுக்கு பிறவிக்குணமாக உண்டாகக் கூடியதாயிருக்கிற கிறது, ஆயினும் சத்சங்கப் பழக்கத்தாலுண்டாகக் கூடியதல்லவென்றும், ஒருவன் தானாக ஆக்கிக்கொள்ளக் கூடியதல்லவென்றும் சொல்லக்கூடியதன்று. இவ்விதம் பாராட்டப்படும் நட்பானது மனப்பூர்த்தியாய்ப் பாராட்டப்பட்டாலன்றி அது நட்பாகாது. "முகநக நட்பது நட்பன்று, நெஞ்சத் தகநக நட்பது நட்பு" என்றபடி அகமறிந்து நட்புச்செய்த நண்பர்கள் ஒருவருக்கொருவர் ஆவியென விளங்குவார்கள். அவர்களில் ஒருவன் இடுக்கணுறுவானாயின் மற்றவன் சகியான். எப்பாடு பட்டாவது அவன் இடுக்கணைக் களைவான். ஒருவனுடைய வஸ்திரமானது நெகிழ்ந்து விழுங்கால் எப்படி அவனுடைய கையானது மனதினுங் கடியதாய்ச் சென்று உடையைத் தடுத்து மானத்தைக் காக்குமோ அவ்வண்ணமே, தன் நண்பன் எண்ணுவதற்கு முன்னே, "உடுக்கை

"இழந்தவன் கைபோல" அவன் இடுக்கணைக் களைவான். இவ்விதம் எவன் தன் மித்திரனுடைய ஆபத்தை நீக்கியும், நீக்கவியலாத காலத்திலவனுடன் அத்துன்பத்தை யனுபவித்தும், தனக்குச் சம்பத்து வந்தாலதை யவனுடன் அனுபவித்தும் வருகிறானோ அவனே நண்பர்களில் உத்தமனெனப்படுவான்.

அத்தகைய நேசர்களுடைய பொருள்களனைத்தும் பொதுவேயாமென்பதில் சந்தேகமில்லை. அவர்களில் ஒருவருக்கு நேரிடும் சுகதுக்கம் மற்றவருடையனவே. அவர்களுக்குள் "நீ, நான்" என்ற வேற்றுமை கிடையாது. இவ்வித நண்பர்கள் ஒருவரைவிட் டொருவர் பிரிந்தால், பிரிக்கப்பட்ட கன்றையும், பசுவையும்போற் கதறுவார்கள். இவர்களில் ஒருவர் இறந்தால் மற்றவர் உயிர் தரியார். தரித்திருப்பினும் உயிரற்ற உடல்போலவே செயலற்றுழல்வர். அதாவது மனதுங் குணமும் ஒருமைப்பட்டு சிநேகித்த நேசர்களுக்குள் வேற்றுமையே கிடையாது. இதற்கு நமது நூல்களிலிருந்து பல உதாரணங்கள் கூறலாம். பத்மாவதி என்ற பதிவிரதை தன் கணவர் ஜெயதேவ் இறந்தாரென்று கேள்விப்பட்டவுடன் உயிர் துறந்தாள். தன் நகரத்தைவிட்டகன்ற காளிதாசரைத் தேடிக்கொண்டு பல தேசங்களுக்கு உருமாறிச் சென்று அவரைக்கண்டு பிடிக்கவேண்டுமென்ற அபீஷ்டத்தால் போஜராஜர், எதிர்ப்பட்ட யாவரிடத்திலும் வழக்கமாகக் கூறுகிறபடி, தன்முன் வந்தவர் காளிதாசரென்றுணராமல், காளிதாசர் இறந்து வெகுநாளாயினவே என்றார். அவ்வாசகம் காளிதாசர் செவிக்கு காச்சியலோகநீராகப்பட, பதைபதைத்து, தாரா நகரம் நிராதாரமாய்த் தத்தளிக்கவும், சரஸ்வதி கொள் கொம்பற்ற கொடிபோல் வருந்தவும், பண்டிதர்களை ஒருங்கே நல்குரவு பற்றவும் போஜன் இறந்தானே! என்னுங் கருத்துள்ள,—

"அந்யதாரா நிராதாரா நிராலம்பா சரஸ்வதீ,
பண்டிதா கண்டிதா சர்வே போஜ ராஜாதி
வங்கதே."

என்ற சுலோகத்தைச் சொன்னார். உடனே அரசர் இறந்து கீழேவிழுந்தார். அதனைக் கண்டதும் காளிதாசர் முன்னிலும் பதின்மடங்கு நடுநடுங்கி அவரை அரசரென உணர்ந்து, என்னைக் கண்டு பிடிக்கவோ இவ்வுபாயத்தை மேற்கொண்டீரென, அவர் தேகத்தைத் தூக்கி மார்போடணைத்துக்கொண்டு முன்பாடிய சுலோகத்தை மாற்றி,—

"அந்யதாரா சதா தாரா சதாலம்பா சரஸ்வதீ,
பண்டிதா மண்டிதா சர்வே போஜராஜா
புவங்கதே."

என்று பாட அரசர் உயிர்பெற்று எழுந்து இருவரும் தழுவிக்கொண்டு தாரா நகரம் சேர்ந்தனர்.

இவ்விதம் ஒரு அரசர் ஒரு கவியைக் கண்டு பிடிக்க வேணுமென்று உருமாறி பல தேசங்களுக்கு செல்லக்காரணமென்ன? நட்பின் பலமேயன்றி மற்றொன்றுமல்ல.

இராமாயணத்தில் களங்காண் படலத்தில் இலங்கையின் மேலைக் கோட்டைவாசலில், இராவணன் இலக்ஷ்மணருடன் போராடி அபஜயப்பட்டகாலத்தில், இத்தனை சங்கடமும் இந்த விபீஷணனால் நேரிட்டதல்லவா வென்று மனமெரிந்து, விபீஷணர்மேல் ஓர் சக்தியை பிரயோகிக்க, சுக்கிரீவன் அதை தம் மார்பில் ஏற்றுக்கொள்ளும்படி அதற்கெதிரே போய் நிற்க, அதுகண்டு அங்கதன் பிதாவிற்கு அபாயம்வரப் பார்ப்பது புத்திரனுக்கு அழகோ, ஆபத்திற்கில்லாத பிள்ளை இருந்தென்ன உபயோகமென்று, அதைத் தன் மார்பிலேற்கப்போக, அவனை விலக்கி ஆஞ்சநேயர், அரசரைக்காட்டிக் கொடுப்பது அமைச்சனுக்குத் தர்மமல்லவே யென்று தம்மார்பிலேற்கப் போக, இந்தப்படி படைத்தலைவர்களும் ஒரு

வர்பின் ஒருவராக தங்கள் மார்பிலேற்கப் போவதையறிந்து, நீங்கள் யாரும் இறக்க வேண்டியதில்லை, அதை நான் கண்டிக்கிறேன், விலகியிருங்களென்று உபாயமாகச் சொல்லி அனைவரையுந் தடுத்து கடைசியில் அதை இலக்ஷ்மணன் தன் மார்பிலேற்றுக்கொண்டு இறந்து, அனுமன் உதவியால் உயிர்பெற்றெழுந்து, இராமரிடம் வந்து சேவித்து நிற்கையில் விபீஷணர் இச்சங்கதியை இராமரிடம் விண்ணப்பஞ் செய்தார். அப்பொழுது,—

"புறவொன்றின் பொருட்டால் யாக்கை
புண்ணுறவரிந்த புத்தேன்,
அறவனு மின்னையை நிகர்க்கில
னப்பானின்ற,
பிறவினி யுரைப்ப தென்னே
பேரருளாள ரென்பார்,
கறவையுங் கன்றும் போல்வார்
தமக்கிடர் காண்பாராயின்."

என்று இராமர் சொன்னதாக கம்பர் கூறியிருக்கிறார். இப்படி தமது நண்பர்களுக்கு ஆபத்து நேர்ந்தால், தனது உயிரையும் திரணமாக நினைத்து ஆப்தர்களைக் காப்பதும் நட்பே.

ஐரோப்பா கண்டத்தில் கிரீஸ் தேசத்தில் நடந்த ஒரு உதாரணத்தையும் கீழே கூறுவோம். எதென்ஸ் என்னும் நகரத்தில் நெடுநாட்களுக்கு முன் ஒரு பள்ளிக்கூடத்தில் அல்காண்டர், செப்டிமியஸ் என்ற இரு பிள்ளைகள் படித்துவந்தார்கள். அவர்களில் ஒருவன் சிறந்த தார்க்கிகன்; மற்றவன் தேர்ந்த பிரசங்கி. இவர்களில் ஒருவர் திறமையைப்பற்றி மற்றவருக்கிருந்த வியப்பாலும், குணவொற்றுமையாலும், அன்பினாலும் நட்பு மிகுந்தது. கல்வி, செல்வம், வயது முதலியவைகளில் இருவரும் சமானமா யிருந்தார்கள். இவர்களில் ஒருவருக்கு மற்றவர் எவ்விதமாயாவது கெடுதலுண்டாகும்படி நடந்தாலும், செய்தாலும் அவைகளைப் பாராட்டாமல், சகோதர அன்பு பூண்டு நடந்துவந்தார்கள். ஒருவன் மற்றவனைப்பிரிந்து தனித்திருக்க மனமிசையான். ஒரு அற்பப் பொருளாயிருந்தாலும், அல்லது கோடி பவுன் பெறும்படியான பொருளாயிருந்தாலும், ஒருவன் மற்றவனுக்கு மறைக்க எண்ணங்கொள்ளான். இவ்வித மிவர்கள் நட்பானது வளர்ந்து, தழைத்து வருகையில் அல்காண்டரென்பவன் கல்வி பயிலும் காலங்கழித்து உலக வியவகாரத்தில் புக எண்ணவே, அதற்கு அனுகூலமாக இபேஷியா என்ற சகலலக்ஷணங்களுமமைந்த ஓர் யவ்வனமாதின் பேரில் காதல்கொண்டான். அவளும், இவனுடைய அன்புக்கும், காதலுக்கு மிசைந்தனள். இவ்விருவருக்கும் விவாகத்திற்கு முகூர்த்தம் நிச்சயித்து அதற்குவேண்டிய காரியங்களும் தயாராக்கப்பட்டன. அந்த நாளை மணமகளும் மகனும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இப்படியிருக்கும்பொழுது தன்னுடைய மனமகிழ்ச்சியின் மேலீட்டாலோ, தன்னுயிர்த் தோழனாகிய செப்டிமியஸ் இல்லாமல் தான்மட்டும் மனதார இன்பமனுபவிக்க இயலாமலோ, தன் காதலியைத் தன்னுயிர்த் தோழனுக்குக் காட்டவேண்டுமென்ற எண்ணத்தாலோ, செப்டிமியஸை வரவழைத்து, மனதிற்கியைந்த காதலியையும், ஒப்புயர்வற்ற தோழனையும் இவ்வுலகத்தில் நாமே யடைந்தோமென்ற பெருமை தோற்ற, தன் மித்திரனுக்கு காதலியைக் காட்டப் பின்வாங்கவில்லை. அந்தோ! இதுவே இருவருக்கும் ஆபத்தாய் முடிந்தது. பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தவாறுபோல் செப்டிமியஸ் இபேஷியாவைப் பார்த்தானோ இல்லையோ, தன்னை யறியாது அவளிடத்தில் காமங்கொண்டான். காமத்திற்குங் கண்ணுண்டோ? ஐயோ! நமது தோழன் மனைவியாயிற்றே, யவள்பேரில் நாம் காமுறல் அநியாயமும் அவிவேகமுமன்றோ, என்று தன்னாலானமட்டும் தன்னுளோங்கி வளர்ந்த காமத்தீயைக் கடிந்து

கொண்டான். மதியற்ற மானிட ஜன்மந்தானே! அடக்கமுடியவில்லை. அந்த மடந்தையின்முன் நில்லாது செல்வோமென்று தன்னறைக்குட் சென்றான். சென்றும் மன்மதனுடைய கணைகளுக்கு சகிக்கமாட்டாமல் வருந்தினான். காமசுரம் காய்ந்தது. வைத்தியர்கள் இந்நோய் ஔஷதப்பிரயோகத்தால் நீங்கத் தக்கதல்லவென்று தீர்மானித்தார்கள்.

இதைக் கண்ட அல்காண்டரோ, அவனிடத்துள்ள அன்பு மிகுதியால், அவன் பக்கத்திலிருந்து பணிவிடைகள் செய்ததன்றி, தனது நண்பனுக்கு இவ்வியாதி எப்பொழுது, எவ்வாறு தீருமென்று கிலேசமுற்றவனாயிருந்தான். தன் நண்பனுக்கு செய்யு மூழியத்தில் தன் காதலியாகிய இபேஷியாவையும் சேர்த்துக்கொண்டான். இபேஷியா பக்கத்திலிருந்து பணிவிடை செய்து வந்தகாலத்தில் உற்றுநோக்கி வந்த வைத்தியர்கள், நோய்க்குக் காரணமிவளே யென்று தெரிந்துகொண்டு அல்காண்டரிடம் சொன்னார்கள். இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டவனாய், இது வாஸ்தவமென்பதை சாகக்கிடக்கும் தன் நேசனிடமிருந்து வெகு கஷ்டத்தின்மேல் தெரிந்துக்கொண்டான். என்ன செய்வான் அல்காண்டர்! கொடுப்பானா தான் காமுற்ற காதலியை? இழப்பானா நெடுநாளாய் சிநேகித்த செப்டிமியஸை? தனக்கு இபேஷியாவிடத்தில் காதல் கரைபுரண்டிருப்பதையும், தனது நண்பன் அவளிடத்து கொண்ட காமத்தால் சாகக் கிடப்பதையும் கண்டு, கவலையுற்றவனாய் வெகுநேரம்வரையில் தத்தளித்து, கடைசியில் தனக்கும் இபேஷியாவுக்கும் கலியாணமாகாமலிருப்பதைப்பற்றிச் சந்தோஷித்து, அற்பகாலத்திற்கு முன் காமுற்ற கணிகையினும், வெகுகாலத்திற்கு முன்னிருந்து நண்பனாயிருக்கும் தோழனே சிறந்தவனென்ற தீர்மானத்துடன், சுய நன்மையைக் கருதாது, குலம், குணம், அழகு முதலியவைகளால் ஒப்புயர்வற்ற இபேஷியாவை தனது மித்திரனுடைய உயிராக்கிவிட்டான். அல்காண்டரின் சம்மதத்தின் பேரில் அவ்விருவருக்கும் இரகசியமாய் விவாகம் நடந்துவிட்டது. கொஞ்சகாலத்திற்கெல்லாம் செப்டிமியஸ் தன் ஊராகிய ரோமேனியாவிற்கு செல்ல, அங்கு அவனுடைய கல்வித்திறமையாலும், சாமர்த்தியத்தாலும், நியாயாதிபதியாகினான்.

(இன்னும் வரும்.)

THE BOYHOOD OF GREAT MEN OF THE WEST.

II. Dr. Johnson :

மேற்றிசை மேதையோர் பாலிய சரிதை.

II. டாக்டர் ஜான்சன்.

தை௴ சஞ்சிகையில் 307-ம் பக்கம் தொடர்ச்சி.

இங்ஙனே ஜான்சன் இரண்டாண்டு இருந்துகொண்டு சிறுபிள்ளைகளுக்கு பாடம் சொல்வதில் திறமைபெற்றார். தனக்கும் ஆசிரியருக்கும் மனமொவ்வாமையாற்பிணங்கித் தன்தேயமடைந்தனர். வீட்டிலிருந்துகொண்டு கல்வியைக் கைசோரவிடாமற் கற்றுணர்ந்து வருவாராயினர். இச்செய்தி தந்தை யறியானாகி மகனைப்பார்த்து வீண்காலம் போக்குகிறாயென்றும், சோம்பற்தன மேலிட்டிருக்கிறதெனவும் கண்டித்தார். ஜான்சனோ பண்டைப்புலவர்கள் வெளியிட்டுள்ள பலவிடயங்கள் பதிந்த காப்பியங்களை கற்றுத் தன் மனக்களஞ்சியத்தை நிரப்பிக்கொண்டு வருவாராயினர். "ஷராப்ஷயர்" மாகாணத்தில் உள்ள ஒரு உயர்தர கலாசாலைக்காவது அனுப்பலாமென்றாலோ தனக்கு சக்தியில்லையே என்று தகப்பனார் தவித்துக்கொண்டிருக்கையில் அந்நாட்டில் உள்ள சீரியர் ஒருவர் பாலகன் ஜான்சனைக் கண்ணுற்றுப் பிரியங்கொண்டு கல்வியைக் கசடறக் கற்றுணர 'ஆக்ஸ்போர்ட்' (Oxford கலாசாலைக்குப் போக பொருள் உதவி புரிவதாக வாக்களிக்கவே 1728௵ அக்டோபர் மாதம் இறுதியில் அக்கலாசாலைக்கனுப்ப அவர் தகப்பனார் உவகை பூத்தார். ஜான்சன் ஊரைவிட்டுப் புறப்பட்டுப்போகிற சங்கதி கேள்வியுற்று ஓர் பெண் ஆசிரியர் தன்னிடத்தில் சிறிதுகாலம் மாணவனாயிருந்த காரணம் பற்றி அவருக்கு ஆசி கூறி அனுப்பக்கருதி கையிற் சுவைப் பணிகாரம் ஒன்றை எடுத்துக்கொண்டு ஜான்சன் இல்லத்தை வந்தடைந்தனள். அப்பணிகாரத்தை அக்குழந்தை கையிற் கொடுக்க அவர் அதை அன்புடனேற்றுக் கொண்டு

அருகாமையில் நிற்க, பிதாவை நோக்கி என்னிடம் படித்த பிள்ளைகளில் இவன் மகா புத்திமானென உரைத்து ஆசீர்வதித்தனள். இதை ஜான்சனும் பிற்காலத்தில் மறக்காமல் புகழ்ந்துபேசி அக்கலைமாதை வெகுவாய்க் கொண்டாடினார். தந்தையும் தன்மகன் கல்வி கேள்விகளிற் சிறந்தவனென முன்னமே சிறிதளவு தெரிந்தவனாதலின் இன்னும் பதின்மடங்கு மனம் பூரித்தனன். தன் மகனை யழைத்துக்கொண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதியன்று 'ஆக்ஸ்போர்ட்' கலாசாலையைக் குறுகி நடுவு நிலைமை (Commoner) வாய்ந்த மாணவர்கள் பயிலும் 'பெம்ப்ரோக்' (Pembroke) காலேஜில் சேர்த்தனர். இவர் ஓராசிரியர்பால் விடுத்து இவரது வித்யாவிஷயத்தை கவனித்துவர ஏற்பாடுசெய்ய அதிகப் பிரயாசைப்பட்டார். தகப்பனார் இவ்வூருக்கு வந்த அன்று சாயங்காலமே கலாசாலைக்கேகி அங்ஙனே கூடியிராநின்ற கற்றோர் குழாத்தின் முன்னிலையிற் கூசாமற் தன் மகன் கல்வி கேள்விகளிற் திறமையுடையவனென செருக்குற்றோதினன். அவர்கள் இப்பாலகனது நவீனநடையுடைபாவனைகளைக் கண்ணுற்று சித்தங்கலங்கி சும்மாவிருந்தனர். அப்போது ஜான்சன் உரையாட நேரிட்டபோது தன் கல்வித் திறமையை ஒருவாறு காட்டக்கருதி தானே கசடறக்கற்றவைகளுட் சிலமேற்கோள்களடங்கிய அருமை வசனங்களைக் கழறலுற்றார். ஆசிரியரையே நாடி மெய்வருந்திப்பயில வேண்டுமென்றெண்ணம் கொண்டவரல்லவாதலின் ஜான்சன் ஆசிரியர்பால் கற்றுக்கொண்டவை அற்பமெனவே கொள்ளல்வேண்டும். சேர்ந்த முதல்நாள் பள்ளிக்குக் கிரமமாய்ச் சென்று 4 நாள் போகாமலே வீட்டில் நின்றுவிட்டார். ஆறும் நாள் வந்தபோது ஆசிரியர் ஏன் வரவில்லையென்று வினவ அதற்குத் தான் சறுக்கி விளையாட தேவாலயத்திற்கருகே ஒருமைதானத்திற்குச் சென்றிருந்ததாக விடைபகர்ந்தனர். இவ்வாறெடுத்துரைப்பது நன்மாணாக்கன் இயல்பல்லவென அப்பருவத்தே தனக்குப் புலப்படவில்லையென்றும் ஆனால் தனக்கு ஆசிரியர்பால் விஸ்வாசம் எள்ளளவும் மாறவில்லை யென்றும் பிற்காலம் நவின்றனர். இவர் வாசிக்கும் 'பெம்பரோக்' காலேஜில் நவம்பர் மாதம் 5-ம் தேதி ஒரு விசேடநாள் கொண்டாடப்பட்டு வந்தமையின் ஜான்சனுக்கும் மற்றப் பிள்ளைகளுக்குப் போலவே வீட்டு அப்பியாசத்திற்கு "வெடிமருந்து வைக்கச் செய்தோர் கள்ளயூகம்" (Gunpowder Plot) என்கிற சரித்திர விஷயத்தைப் பற்றி எழுதிக்கொண்டு வரும்படியாய் ஆசிரியர் சட்டளையிட அவ்வாறுசெய்ய சற்றும் கவனியாமல் தான் சொந்தமாய் கட்டிய சில கவிகளைக் காட்டி மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டனர். இவற்றைக்கண்டு ஆசிரியர் ஆனந்தங்கொண்டு 'போப்' (Pope) என்ற மகாகவிபாடிய 'மேச்சியா' (Messiah) என்னும் நூலை இலத்தீன் பாஷையில் மொழி பெயர்த்து கிருஸ்துப் பண்டிகைத் திருவிழாவன்று கொண்டுவரும்படி திட்டஞ்செய்தார். கலாசாலையிற் கையும் புஸ்தகமுமாயிருந்த காலையிலேயே கவிசெய்யும் திறமை வாய்க்கப்பெற்றார். தன் சுதேசமாகிய 'இலிச்பீல்டில்' இருந்தகாலத்து அந்நாட்டிலுள்ள சில சீமாட்டிகள் சேர்ந்து "துயரமுற்ற தாய்" (The Distressed Mother) என்ற ஓர் நாடகத்தை ஆட எண்ணி ஜான்சனை அதற்கு ஒரு 'முடிவுரை' (Epilogue) எழுதமன்றாட அவரும் அதற்கிசைந்து வெகு அழகாய் எழுதிமுடித்தார். இவர் கீர்த்தி எங்கும் பரவ இடமுண்டாய் தான் படித்த சர்வகலாசாலைவரை எட்டிற்று. வெகுகாலம் இவரை 'மனோன்மத்தம்' (Hypochondria) என்ற கடுநோய் பின்றொடர்ந்து வந்தமையின் அதை நிவர்த்திக்கக்கருதி வைகரையில் வெகுதொலை வெளியே உலாவப் போவதும், இன்னும் இதைப்போன்ற தனக்குப் பிறரால் சொல்லப்பட்ட சிகிச்சைகளைச் செய்தும் யாதொரு பயன்படவில்லை. மனக்கவலை எய்

தினவராய் ஒரு ஆயுள்வேத பண்டிதனைச் சார்ந்து தன் நோயின் கூறுபாடுகளையும், வெங்குறைகளையும் இலத்தீன் பாஷையில் வர்ணித்து வரைந்து காட்டினார். இதில் உள்ள ஆராய்ச்சித் திறமையும், சொல்லலங்காரத்தையும் கண்டு வியப்புற்று அவ்வாயுள்வேதபண்டிதன் தன் நேசர்களிடம் காட்டி மகிழ்ந்தனன். இதைக் கேள்வியுற்ற ஜான்சன் கடுஞ்சினங்கொண்டு தன் உள்மர்மத்தை வெளியிட்ட குற்றத்திற்காக அவரை மன்னிக்காமல் பலபேர் அறிய குறை கூறியும் வந்தனர். ஒன்பதாம்வயது முதற்கொண்டு தெய்வபக்தி குன்றி யாதினும் பற்றற்றவனாய் இருந்தார். ஆக்ஸ்போர்ட் (Oxford) கலாசாலைக்கு வந்த நாள் முதல் பக்திப் பிரதாபத்தைப் பற்றி தீர்க்காலோசனையில் ஆழ்ந்தவராய் இறுதியில் செய்கடமைகளில் தெய்வாராதனை தான் முக்கியமென வோர்ந்து தன்னைப் பிறர் பார்த்து அனுஷ்டிக்குமாறு அவ்வளவு ஆசாரசீலனாய் விளங்கினார். கிரீக் பாஷையைச் சிறிதளவு கற்றுணர்ந்தார். 'மானத சாஸ்திரம்' (Metaphysics) பயின்று பண்டிதனாக வேண்டுமென்ற எண்ணம் இருந்தமையின் இதை விசேஷமாய்க் கற்று வந்தார். எந்நூலை எடுத்தாலும் நூன்முகம் முதல் நூலின் முடிவு வரை வாசிக்காமலே அதனில் படிந்திராநின்ற முக்கிய அம்சங்களைமாத்திரம் ஆராய்ந்தெடுக்கும் வல்லவராதலின் கல்வி கேள்விகளிற் சிறந்தவராய் பிற்காலம் இவற்றை உபயோகிக்கும் மேன்மையையும் பெற்றார். இக்காலத்தில் இவன்பால் சகிக்கவொண்ணா வறுமைநோய் அணுகிற்று. அப்போது இவரைப்பற்றி ஒரு கதை உண்டு. தினந்தோறும் தேவாலயத்தில் உபந்நியாசங்களின் கருத்தை எழுதி வாங்கிக் கொண்டுவர ஒரு போதகரிடம் போவதுண்டு. அப்போது இவர் உபயோகித்து வந்த மிதியடி பழையதாயும், தேய்ந்ததாயுமிருந்தமை பற்றி கால் விரல்கள் வெளியே விகாரமாய்த் தோன்றின. இதை அப்போதகர் ஒருநாள் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்ததை யறிந்த, ஜான்சன் அவரிடம்போக மனமில்லாமல் நின்றுவிட்டார். சிலர் இவரது நல்வரவை நோக்கி மனமிரங்கி புதியமிதியடி ஒன்றை அவனுடைய உபயோகத்திற்காக வீட்டு வாசற்படியில் வைத்துவிட்டுப் போயினர். அதைக் கண்டு வெருண்டு அதை எடுத்து வெளியே எறிந்துவிட்டார். சான்றோர் எவ்வகை மிடியாற்றுன்புறினும் நாணம் என்னும் அணிகலத்தைப் பூண்டு ஒழுகுவர். இக்கருத்து விளங்க நாயனாரும்,

"அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்
கஃதின்றேற்
பிணியன்றோ பீடுநடை"—என்றார்.

"நரம்பெழுந்து நல்கூர்ந்தா ராயினுஞ் சான்றோர்குர
குற்றங் கொண்டேறா—ருரங்கவறா [ம்பெழுந்துங்
உள்ளமெனு நாரினாற் கட்டியுள வரையாற்
செய்வர் செயற்பாலவை"—(நாலடியார்)

கல்வி ஆக்கத்தை ஆதாரமாக்கொண்டு உலகத்தில் உஜ்ஜீவிக்க முயன்றார். 'ஆக்ஸ்போர்ட்' (Oxford) கலாசாலையிற் கைப்பொருளின்மையாற் கஷ்டப்பட்டபோதிலும் கலங்கா நெஞ்சமுடையாராய் காலங்கழித்து வருவாராயினர். தனக்குப் பொருள் உதவி புரிவதாக ஏற்றுக்கொண்ட கனவானும் சொன்ன சொற்றவறி யொழுகினமையின் படிப்பைப் பாதியிலேயேவிட்டு B.A. பட்டமின்றி 1731-ல் தன் சுய தேசத்திற்குப் போகும்படி நேரிட்டது. இதனால் ஒரு தக்க அலுவலிலமர்ந்து ஊதியம் பெறவிடமில்லாமற் போயிற்று. தந்தையும் இவ்வாண்டின் இறுதியிலே கடனிறுக்க சக்தியற்றவனாய் காலஞ்செல்லவே ஜான்சன் விசனக் கடலிலாழ்ந்தனர். ஒரு வேலையில் எங்கேயாவது போய் அமரவேண்டுமென பாஸ்வர்த் (Bosworth) என்னும் ஊரிலுள்ள ஒரு பாடசாலையிற் கடையாசிரியத் தொழிலை மேற்கொண்டார். இவன் சிறிது காலந்தான் இருந்தபோதிலும் ஆராத் துயரமுற்று, அகக்கிளர்ச்சியின்றி காலங்கடத்தினர். தன்றேயத்

தனும் பள்ளித்தோழனுமான ஒருவன் பர்மிங்ஹாம் (Birmingham) என்னும் நகரில் இராணுவக்கியாதைப் புகழ்பெற்றிருக்கின்றனனெனக் கேள்வியுற்று அவனிடம் சென்றார். இங்ஙனமிருக்குங்கால் 'வாரன்' (Warren) என்ற பிரபுவோடு வளவளாவி வரும் வேண்டுகோளின்படி "லோபோ" என்பவரால் இயற்றிய அபிஸீனியா யாத்திரை" (Lobo's Voyage to Abyssynia) என்ற நூலை மொழிபெயர்த்தனை நடையில் வரைந்தனர். ஜான்சன் இயற்றிய இம்முதனூல் இலண்டன் மாநகரில் பிரசுரிக்கப்பட்டு பரவலாயிற்று. போர்ட்டர் (Porter) என்ற வேறொரு கனவானை யடுத்து அவர் காலஞ்சென்றதன்மேல் அவருடைய தாரத்தை 1736-ம் ஆண்டில் மணம் விவாகஞ் செய்துகொண்டு தன் சொந்தத்தில் கல்விக்கழகம் ஒன்றை இலிச்பீல்டில் (Lichfield) ஸ்தாபித்தார். இது சரிவர நடந்தேறிவராமையின் இவ்வூரைவிட்டு அடுத்த ஆண்டு 1737-ல் இலண்டன் மாநகருக்குப்போந்து அங்கு நாளும் வசிக்க நேரிட்டதால் பிரசுரமாகிவரும் சஜ்ஜன சஞ்சிகை (Gentleman's Magazine) என்ற பத்திரிகைக்கு பல விஷயங்களைப்பற்றி எழுதி வருவாராயினர். அக்காலத்தில் உள்ளோர் வயிற்றைப்படித்து களிப்புற்று புகழ்க் கொண்டாடியதால் அவருடைய பெயர் எங்கும் பரவலாயிற்று. இதனைக் கேள்வியுற்றுத் தன் மதாபிமானமுங் கல்வியுஞ் சிறந்த கர்த்தாவாகவே இருந்து காலக்ஷேபஞ் செய்யத்தொடங்கினர். 'புலவர் சரித்திரம்' (Lives of the Poets) என்ற ஒரு பிரபந்தத்தை எழுதி முடித்தார். இதில் புலவர்களின் வரலாற்றுடன் முக்கியமாய் அவர்களுடைய குறை குணங்களை எடுத்து விளக்கினமையின் "குறைகுண நூல்" என்றே கொள்ளல்வேண்டுமென தம் அபிப்பிராயத்தை வெளியிட்டுள்ளார். இந்நூலின்கண் சொல்வன்மையும், சொற்பொருளும், சொல்லலங்காரமும் காண விரும்புவோர் 'கவுலி' (Cowley) 'டைரிடன்' (Dryden) 'அடிசன்' (Addison) 'போப்' (Pope) என்ற புலவர்களைப் பற்றி படித்தால் விளங்கும். அக்காலத்து இங்கிலாந்து தேயத்தரசன் 1762-ஆம் ஆண்டில் இவருக்கு உபகாரச்சம்பளம் கொடுக்க உத்தரவு செய்தார். டப்ளின் (Dublin) நகரத்து திரினிடி (Trinity) காலேஜ் சங்கத்தார் இவருக்கு L.L.D பட்டம் அளித்தார்கள். இவர் 75-வயது ஜீவித்திருந்து 1784-ஆம் டிசம்பர்மாதம் 13-ம் தேதி உயிர் துறந்து Westminister (வெஸ்ட்மினிஸ்டர்) என்ற இடுகாட்டில் அடக்கஞ் செய்யப்பட்டார். இவர் காலத்தில் இலண்டன்மாநகர் வாழ்வோர்க ளிருந்த நிலைமை சற்று விவரிப்போம். அந்நாட்டு மேலோர் கல்வியைக் கசடறக் கற்றுணர்ந்தோரையும், கவிஞர்களையும் தம்மாலியன்றளவு கைம்மாறு செய்யக்கடவனேனும் எண்ணாமல் காலக்ஷேபத்திற்கே கதியின்றித் திக்கற்றவர்களாய்த் தவிக்கச் செய்ததன்றி எள்ளலுஞ் செய்தும் ஏசியும் வந்தார்கள். ஜான்சன் அக்காலத்தில் வெளிவந்த நூலாசிரியரின் நல்லறிவு நவிலவொண்ணா நிலைமையில் இருந்தது. ஜான்சன் இத்தகைய வறுமையால் வருந்திப்பிழைக்க வகையற்ற காலத்தும் தன்னைத் தன்னை பிற்காலத்தவர்கள் புகழ்ந்து கொண்டாடும்படியான கோட்பாடுகளைக் கைவிடாமல் காலங் கடத்திவந்தது விந்தையினும் விந்தையே. நன்னெறியைவிட்டு நழுவாமலும், நலனுடையார்களின் பண்புடைமைகளைப் போற்றியும் கல்வியையே பெரிதாக உன்னி உன்னதபதவியடைந்தார். கல்விகற்றதன் பயன் கசடற வழியில் நிற்றல் என்பதை உணர்த்திக் காட்டினவருள் இவர் ஒப்பற்றவரென இவர் சரிதையால் விளங்குகின்றது. நாயனாரும் நாவலர்களின் நல்லிசையை நாட்டக்கருதி "உவப்பத்தலைக் கூடியுள்ளப் பிரிதலனைத்தே புலவர் தொழில்." என்று கூறியிருப்பதைக்காண்க: இவர் இயற்றிய முக்கிய நூல்கள்:—

1. ஆங்கில அகராதி. (English Dictionary.)
2. மானிடவின் எண்ணம் என ஓர் அகவல். (Vanity of Human Wishes.)
3. கடமைப் பிரதாபத்தை குறிக்கும் ஓர் நூல். (*Irene* a work on sense of Duty.)
4. பலவியாசங்க ளடங்கிய "ராம்ப்ளர்" Rambler என்னுமோர் நூல்.
5. தத்துவத்தை விளக்கும் Rasselas கதை.
6. புலவர்சரித்திரம் (Lives of the Poets.)

(முற்றிற்று.)

"HAIL, MOTHER ! I TAKE REFUGE IN THEE !"
TRANSFUSION COLUMN:

["If a combined, honest and sustained effort is made to *transfuse* (not merely *translate*) good English......into Tamil, the effect will be to assist and stimulate the stnty of both languages."—Dr. G. U. Pope.]

["Here in Nature's splendid Hall, (the Magician's *Arcanam* and the Mystic's *Astral Light*)—the "audience-chamber" where Nature with maidenly modesty surrounded by Her heavenly hosts, grants ceremonial interview to those intrepid souls that have dared death and staked their very life in pursuit of Her, the undaunted wooer that will yet win Her heart and love, and claim her hand, is allowed to read the fates of all that have dared to venture further on and failed. A rueful tale of tears, vain strivings, great falls an immense array of skeletons shorn clean of all their coverings, ghastly spectres of high hopes cherished with great powers, but shattered to pieces by faint heart or faltering faith at a moment of sudden peril or overwhelming misfortune,– these greet the advancing Initiate's eye and he is allowed plenty of time to muse on them or loiter about. Woe betide the laggard pilgrim who is attracted by the mirths and make-believe joys of the swarming host of heavens who have great powers to make or mar all that is beneath the sway of that stately Hall, but who are warned like the well-disciplined retainers they are, of a noble regnant Queen, not to intrude themselves with their attentions on any guest against his will. They are free to make the most of him who courts them or even flirts with them; and their power to charm and chain the unsteady in heart is indescribable; but the ardent virtuous wooer and true lover who cares for nought but the hand of the regnant Queen, and that for her own sake, not for the wealth or pomp of her court, has nothing to fear: and these hosts show the utmost deference to his will and their assiduous endeavours to please him form a remarkable feature of Life at this stage."—*Gleanings on the Way.*

"The truly poetic account of the writing in the inmost heaven which as it consists of inflexions according to the form of heaven can be read without instruction. In the transmission of heavenly waters, every hose fits every hydrant. Nature avenges herself speedily on the hard pedantry that would chain her waves. She is no literalist. Every thing must be taken genially and we must be at the top of our condition to understand anything rightly."—*Emerson.*

A PRODIGAL'S REPENTANT SUPPLICATION TO HIS MOTHER.

"O mighty Mother - in silence receive thy child.
Weary, fainting - having travelled far and forsaken thee, having undertaken burdens too great to be borne -
Atlas of griefs and sorrows, well nigh borne down beneath the load -
Thy foolish child, wandering afar from thee, yet led by what divine madness? -
O mighty Mother receive.

Never again to stray.
Having circled the globe, having completed the many - thousand - year - long round which thou secretly appointedest for me -
Through what mystifications, troubles, delays, what returning on old tracks, what torments and inward suffering (thou knowest best) -
What entanglements and illusions -
O mighty Mother receive!

Outcast and friendless (for that was my necessary doom) and homeless on the verge of creation, I first knew myself - sorrow was the wall which divided me from thee.
I beheld thee afar and knew thee not; I was a prisoner and guessed not that I was in prison.
But now at thy feet - thanks, thanks!
Pouring out my soul in gratitude to thee - thy child so foolish, to Thee dear mother.
Whilst thou one by one disentanglest the loaded heavy chains which I have dragged so far -
(One by one, for not all at once will they come off, and fast and eating into my flesh are they riveted) -
At thy feet I sit and sing, knowing thou hast sworn to give me Freedom.
Ages shall my song last - for not all at once can I disburden myself;
Ages will I sing for joy - warbling in thy presence - as the birds to the risen sun;
Then at last arising Thou mother shalt take me by the hand - we will leave the earth, and thou shalt learn me to fly through Heaven.

—*Edward Carpenter.*

உ
கணேசாயநம :

மொழிபெயர்ப்பு வித்தை : "தஞ்சமென்றடைந்தேன், தாயே, வந்தனம் !"

(அத்துவித இலக்கணம்)

"நெக்கு நெக்குள்ளுருகியுருகி நின்றுமிருந்துங்கிடந்து மெழுந்து
* நக்குமழுதுந்தொழுதும் வாழ்த்திநாளுமிதத்தாற் கூத்துநவிற்றிச்
† செக்கர்போலுந் திருமேனிதிகழ நோக்கிச் சிலிர்சிலிர்த்துப்
புக்குநிற்பதென்று கொல்லோவென் பொல்லாமணியைப் புணர்ந்தே."

"ஆற்றகில்லேனடியேனரசே யவனி தலத்தைம்புலனாய
சேற்றிலழுந்தாச் சிந்தைசெய்து சிவனெம்பெருமானென்றேத்தி
யூற்றுமணற்போனெக்கு நெக்குள்ளேயுருகி யோலமிட்டுப்
போற்றிநிற்பதென்று கொல்லோவென் பொல்லாமணியைப் புணர்ந்தே."

—திருவாசகம்.

I

தாயே, மாதேவி ! தஞ்சமோ தஞ்சம் ! அஞ்சேலென்றுன் றேற்றருணின்சேயை !
நாயேனின்பொன் னடிவிட்டோடியே அலைந்துதிரிந்து நலிந்துமெலிந்தேன் !
வாயேனெற்கு ஆ ! வெறியேனின்சேய்வீம்பது பூண்டு பாம்பதுபோல நெளிந்தேன் புவிமிசை !
தாயேநொந்தேன் ! தாங்கேனினிப்பாரம் ! தூக்கொணாத்துயர்ச்சுமை தூக்கிநான்னைந்தேன் !
(CHORUS [illegible]) தஞ்சந்தஞ்சந்தாயேகாத்தருள் அஞ்சலென்றுன்சேயை அரவணைத்தே !

* நகைத்தும் அழுதும் ; நவில் = to learn, to imitate, to speak. கூத்துநவிற்றி-கூத்தாடி.
† செக்கர் = செம்மை; செவ்வானம்போலுந் திருமேனி-சிவன் திருமேனி. Comp. "அந்திபோலுருவானும்"

II

வர்மம்வேண்டாம் தாயேகாத்தருள் நின்னடிபிரியா தென்னையணைத்தே !
கர்மவினைசூழக் காசினிமுழுவதுங் கெட்டலைந்தலைந்தது போதும்போதும் !
வர்மந்தானெத்தனை ! வாதுகளெத்தனை ! சூதுகணிறைந்த சுனைவழியெத்தனை !
தர்மந்தலைகிழாத் தவழிவிழுந்திடக் கர்மவலைப்பட்டுக் கருத்தழிந்தயர்ந்தனன் !
(CHORUS கணாதம்) உள்ளமுணர்ந்தேயின்னருள்சாதித்துக் காத்தருள்தாயே நின்சேயை !

III

யாரொடுநோவே னார்க்கெடுத்துரைப்பனென் பட்டதொர்பாடெலாம் பார்த்திருந்தாய் !
யாரொடுசேர்த்தியா னெனக்குற்றார் ! உனையலாதெனக்கொரு கதிதானில்லைகண்டாய் !
சீரொடுபொலிவாய்ச் செம்மைநலந்தரும் நினையலாதொருவரைத் தொழுதியான் துதிப்பேனோ
[சொல்லாய் !
வேரொடுமும்மலக் களையறுத்தாண்டிடு மன்னையேநின்னடி தஞ்சமென்றடைந்தேனே !
(CHORUS கணாதம்) உள்ளமறிந்துன் திருவடிசூட்டிக் காத்தருள்தாயே நின்சேயை !

IV

நின்னடிதந்தனை யென்கலிதீர்த்தனை நினையன்றியானென்ப தில்லாதியற்றினை
பொன்னடிநீழலிற் பிணைத்தென்னையிருத்திக் கணத்தினிறப்பெந்தக் கயிற்றினையறுத்தனை
நின்னடிசேர்ந்தயான் பொன்னடிதொழுது முன்னைமுடிச்சுக ளவிழ்தொறும்பாடுவன்
என்னடிசோரா துன்னடிதந்தது மென்வினை தீர்ந்தது ! நின்னடிதொழுவனென் !
(CHORUS கணாதம்) எல்லாவுயிர்களினுள்ளத்துறையும் உனையறிந்துரைசெயு மாறுணர்த்தே !

V

போற்றுவனின்னடி புகழுவனின்பதம் வேற்றுமைதோற்றம் வேறில்லையெனக்கினி !
ஊற்றுநீர்சுரக்குமா றுள்ளெழுந்தூறியூறிக் கூற்றுவனொழிந்திடக் குதூஹலம்விளைத்தனை !
போற்றுவனுனையான் போதப்பெருக்கினாற் புள்ளினங்ளளிருடீரப் பாடுமாபோல் !
ஆற்றுநீரோடியோடி யலைகடலசேர்ந்துகூடிக் காற்றதுசலனந்தீரக் கரைதிரையற்றவாறே !
(CHORUS கணாதம்) நின்னருள்போற்றியேற்ற நின்மலன்றானேயாகி நிறைவெளி யடைவனின்சேய் !

VI

அருளினி லிருந்திருந் தருள்முதிர்ந் ததிர்ந்தபோது
மருளினைப் போக்கியென்றன மயலெலாந் தீர்த்தவென்தாய் !
தெருளினில் வளர்ந்தவுன்றன தெள்ளமுதுண்டநற்சேய்
இருளெலாந் தாண்டியுன்னோ டருள்வெளிக்கப்பாலுள்ள—
(CHORUS கணாதம்) அத்தனோடைக்கியமாகச் செய்வதுன் கடமையன்றோ !

தாயே வந்தனம் ! தயாநிதே வந்தனம் ! சோதியேவந்தனம், சொல்மதியே !

(ஓம் தத் ஸத்.)

C. V. S.

"PEARLS OF FAITH."

SELECTED AND STRUNG TOGETHER EOR PARENTS AND CHILDREN TO WEAR

From the Sayings of St. Vemanna.

ஆந்திரபாஷையில், பிரம்மஞானியும், அருட்கவியுமாகிய,
வேமன்ன மகாகவி அருளிச்செய்த
பத்யங்கள்.

(Fifth Series.)

(கடன் படாமல் வாழ்தலே மேலாகும்.)

1. அயலாரை வஞ்சித் தவர்பொருளைக் கொண்டு
மயலார வாழ்வன்மாண பன்றே—புயலேயும்
கார்குழலா யென்றுங் கடனுண்டு வாழாமை
ஆருலகின் மேலா மறி.

(இ-ள்.) பிறரை வஞ்சித்து அவர் பொருளைக் கவர்ந்து மதங்கொண்டு வாழ்ந்திடுதல் பெருமையாகாது. தன் முயற்சியாற் பொருளைத்தேடிக் கடன்படாமல் வாழ்தலே பெருமையாகும்.

(துஷ்டர்களை யமன் சிக்ஷிப்பான்.)

2. எண்ணிறந்தாரைக் கொன்றங் கெளியோரை யும்வதைத்து
மண்ணிலொரு சாண்கொள் வயிற்றுக்கா—உண்ணலீய்
ஊர்தனையுங் கொள்ளையிடும் வெய்யோரை யோதுநமன்
வாதனைசெய் தெறநுமதி.

(இ-ள்.) எண்ணிறந்த ஜனங்களைக்கொன்று எளியவர்களை வதைத்துச் சாண்வயிற்றுக்காக வூரெல்லாம் கொள்ளையிடும் கொடியபாதகர்களை நமன் பிடித்து வதைப்பான்.

(சிறிய வஸ்துக்களால் பெரிய துன்பங்கள் விளையும்.)

3. செருப்பினுட் கல்லுஞ் செவியினு ளீயும்
உருத்துயண்ணுற் பிறாச மோதினை—இருத்தடியில்
முள்ளும்வா மூமனையின் மோதவருஞ் சச்சரவும்
கொள்ளரிய வாம்மை குறி.

(இ-ள்.) செருப்புக்குள்ளே கல்லும் செவிக்குள் ஈயும், கண்ணுக்குள்ளே தூசியும், காலில் முள்ளும், வீட்டில் கலகமும் எத்தனை அளவிற் சிறிதாயினும் விசேஷ துன்பத்தைத்தருவன வாகும்.

(ஈசனைமனத்தில் தியானித்தலே எல்லாப்புண்ணியங்களிலும் சிறந்தது.)

4. பன்னதிக டோறும் பரவைமுதற் றீர்த்தத்தும்
துன்னரிய காடுமலை தோறும்போய்க்—கொன்னேதாம்
மெய்வருந்து வாரந்தோ வீசனையுள் ளத்தே
பொய்யகன்று காணறியார் போந்து.

(இ-ள்.) நதிகளிலும் சமுத்திரத்திலும் இன்னம் அநேக தீர்த்தங்களிலும் சென்று ஸ்நானம் பண்ணியும் காடுமலைகளிற் சென்று திரிந்தும் வீணே வருந்துவார்கள். மனத்தில் உள்ள கடவுளை ஞானத்தாற் கண்டு வணங்கவறியார்கள்.

(ஈசனையடையும் விர்த்தியை அற்பர் அறியார்.)

5. கந்தபந்தா னோர்ந்திடுமோ கந்தமலர் வாசனையை
இத்தலத்தி லேபெருமை தாழ்மையினை—யுய்த்தறிய
வல்லதோ நாய்துறவான் மாதேவன் றாள்பெறுதல்
புல்லரறி வாரோ புகல்.

(இ-ள்.) புஷ்பத்தின் வாசனையைக் கழுதை அறியுமா? பெருமை சிறுமைகளை நாய் அறியுமா? அறியாவன்றே. அதுபோல துறவறமார்க்கமாகப் பரமேசுவரன் திருவடிகளைப்பெறும் உபாயம் அற்ப குணத்தையுடைய மூடர்கள் அறிவார்களோ? அறியார்கள்.

(மனக்கோயிலே மற்றக்கோயில்களிற் சிறந்தது.)

6. குன்றிலுள்ள கல்லெல்லாங் கொண்டுபெருங் கோயில்தனை
நன்றுறவே கட்டி நடந்திடலால்—ஒன்றுபயன்
யாதுளது மெய்யி னிதயத் தொளிர்ந்திடுமே
நீதொருவு மாதிச் சிவம்

(இ-ள்.) மலைகளிலுள்ள கற்களையெல்லாம் கொண்டுவந்து அயர்ந்து பெரிய கோயில்களைக் கட்டி ஊர்தோறும் நடந்து திரிந்திடுதலாலே பயனென்ன. உண்மையாக ஆராயின் நீங்கள் தேடுகின்ற சிவம் உமது இதயகமலத்திலேயே பிரகாசித்துக்கொண்டிருக்கின்றதே. அதைவிட்டேன் வருந்துகிறீர்கள்.

(உடம்பை யலங்கரிப்போர் உண்மையறியார்.)

7. பல்பணிகள் பூண்டுதனைப் பாரோர் வியந்திடுமா
புல்லுமகிழ் வாலுள்ளம் பூரிக்கும்—நல்லுணர்வில்
ஏழையவ னந்தோதான் யாரென்று தேர்கிலனே
மாழைநிகர் கண்ணாய் மதி

(இ-ள்.) பார்த்தவர் தன்னை வியக்கும்படி அநேக விலையுயர்ந்த ஆபரணங்களைப்பூண்டு உடம்பை அலங்கரித்துக்கொண்டு நமக்குச்சமான மொருவரும் இல்லை யென்று பூரிக்கும் அறிவில்லாத மூடன் தன்னுடைய ஸ்வஸ்வரூபமின்னதென்று தெரியாமையாலன்றோ இப்படிச் செய்கிறான்; தெரிந்தால் மகிழ்வானோ.

(இறந்தவர்களுக்கு வருந்துவர் காரியவசமாகும்.)

8. தந்தைதாய் மாயத் தனயன் வருந்திடலும்
சிந்தைமகிழ் காதலற்குச் சேயிழைதான்—நொந்து
வருந்துதலுங் கார்ய வசமாமே தத்தம்
பொருந்துபயன் போய்விடலாற் போந்து.

(இ-ள்.) தந்தைதாயர் இறத்தலுக்காகப் புத்திரர்கள் அழுது வருந்துதலும், புருஷன் இறத்தலுக்காக மனைவி அழுது வருந்துதலும் விசனத்தாலன்று. கார்யவசத்தாலேயாகும். அவர்கள் இறத்தலினால் தாம் அவர்களாலடையக்கருதிய பிரயோசனத்தை இழந்துவிடுதலாலே தத்தம் சுவயப்பிரயோசனத்தைக் கருதியேயாகும்.

(எமனுக்கு ஒளிக்க முடியாது.)

9. மாற்றலர்தஞ் சேனையினைக் கண்டு மயங்கிடுமோர்
ஆற்றலிலாப் பேதை யகன்றிடலாம்—தோற்றுமொரு
வெம்மறலி யைக்கண்டு மெய்நடுங்கி யெவ்விடத்துந்
தம்மை யொளிப்பதுதான் சாற்று.

(இ-ள்.) சண்டைசெய்யத் தைரியமில்லாதவன் பகைவர் சேனையைக்கண்டு பயந்து ஓடி யொளித்துக்கொள்ளலாம். யமன் எதிர்ப்படும்போது அவனுக்குப்பயந்து ஒருவன் எங்கு ஒளித்துக்கொள்ளலாம்.

TRAVEL AND DESCRIPTION:
AGRA.

யாத்திரை க்ஷேத்திர வர்ணனை: ஆக்ரா.

இந்த தேசத்தில் பூர்விகமானதும் அலங்காரமானதும் தேச சரித்திரத்தில் முக்கியமாய்க் கூறப்பட்டதுமான பட்டணங்களில் இந்த ஆக்ராவும் முக்கியமான பட்டணமாதலால் இதைப்பற்றி யாம் கேள்விப்பட்டதில் மட்டும் திருப்தியடையாமல் நேரில் சென்று பார்த்து, ஆநந்தமடைந்து, அப்பட்டணத்தின் சிறப்பை எழுதி முடியுமோ வென்ற ஆசங்கையினால் ஒவ்வொன்றையும் சவிஸ்தாரமாய் எழுதிக்கொள்ள வில்லாமல் எமது புஸ்தகத்தில் சுருக்கமாய்க் குறித்துக்கொண்டவைகளை நமது சிந்தாமணியைப் படிப்பவர்களும் படித்து சந்தோஷமடையுமாறு வரையலானோம்.

இப்பட்டணத்திற்குச் செல்லவேண்டுமானால் சென்னை இருப்புப்பாதையில் பெரிய சந்திப்பு ஸ்டேஷனாகிய அரக்கோணத்திலிருந்து ரேச்சூர் வரையினால் சென்று ஜி. ஐ. பி. இருப்புப் பாதை மார்க்கமாய் வாடி, டோண்டு, மன்மாட், புஷாவல், இடார்சி, ஜான்சி முதலிய சந்திப்பு ஸ்டேஷன்களின் வழியாய் நேர்வடக்காகச் சென்றால் ஒருவாரத்தில் போய்ச் சேரலாம். நாம் காசி, பிரயாகை, அயோத்தி, லக்னோ, கான்பூர், டில்லி முதலிய இடங்களைப் பார்த்துக்கொண்டு மட்ரா (மதுரா) மார்க்கமாய் இந்த நகரத்தை யடைந்தோம். இவ்விடத்தில் ஆக்ராகோட்டை, ஆக்ராஜங்ஷன் என்பதாக இரண்டு ஸ்டேஷன்களிருக்கின்றன. ஒவ்வொரு ஸ்டேஷனும் வேண்டிய விஸ்தாரமும் அழகும் பொருந்திய கட்டடங்கள். ஆக்ராபோர்ட் என்கிற கோட்டை ஸ்டேஷன் பட்டணத்தின் மத்தியில் ஜிம்மா மசூதி என்ற கோரியின் கட்டடத்திற்கு சமீபத்திலிருக்கிறது. இந்த ஸ்டேஷனுக்கு அடுத்த தெருவே பெரிய கடைத்தெருவு. பிரயாணிகளின் சௌகரியத்தின்பொருட்டு ஸ்டேஷனுக்கு வெளிப்புறத்தில் ஒரு மத்தியமானவிடத்தில் எப்பொழுதும் டிக்கட்டுகள் விற்கப்படுகிறது. டிக்கட்டுப் பெற்றவர்கள் 24-மணி நேரத்திற்குள்ளாக வண்டியில் ஏறிப் போகலாம். தினத்திற்கு இவ்விடத்திலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு பாதையிலும் ஐந்து அல்லது ஆறுவண்டிகள் போய்க்கொண்டே யிருக்கிறபடியால் பிரயாணிகள் தங்கள் சௌகரியம்போல் டிக்கட்டுகள் பெற்றுக்கொண்டு இஷ்டமான வண்டிகளில் புறப்படுகிறார்கள்.

இந்த ஆக்ரா பட்டணமானது லெப்டினெண்டு-கவர்னருடைய ஆளுகைக்குட்பட்ட வடமேற்கு மாகாணத்தில் ஒரு டிஸ்திரிக்ட்டின் பிரதானபட்டணம்.

இந்த டிஸ்திரிக்ட்டுக்கு வடக்கே மட்ரா ஜில்லாவும், கிழக்கே மனியூர் என்ற ஜில்லாவும், தெற்கே டோல்பூர் என்ற இராஜ்ஜியமும், மேற்கே பரதப்பூர் (Bhurtpur) என்ற இராஜ்யமும் எல்லைகளாய் அமைந்திருக்கின்றன. இந்தப் பட்டணத்தை யடுத்து யமுனைநதியானது சுமார் அரைமைலில் அகலத்தில் ஓடிக்கொண்டிருந்தாலும் பூமி மட்டத்திற்கு அதிகம் தாழ்ந்து ஓடுவதால் பாசன வேலைகளுக்கு அந்நதியின் ஜலம் உபயோகப்படுத்தப்படுவதில்லை. இந்நகரத்திற்கு சற்று வடக்காக ஒரு அணைகட்டி, இந்நதியின்ஜலத்தை ஒரு கால்வாய் மார்க்கமாய்க் கொண்டுவந்து சாகுபடிக்கு உபயோகிப்பதாயிருந்தால் ஏராளமான பூமிகளில் நஞ்சைசாகுபடி செய்யலாம். விசேஷ இலாபத்தைக் குடிகள் அடையவும், கவர்ன்மெண்டாருக்கு அரசிறை அதிகப்படவும் காரணமாகும். கிணற்றுத் தண்ணீரை இறைத்தே கோதுமை, துவரை, கசகசா முதலிய பலதானியங்கள் விளைவிக்கப்படுகின்றன. பருத்தி ஏராளமாகப் பயிரிடப்படுகிறது. குடிகள் அநேகமாய் விபவசாயிகளென்றும் பம்பாய் முதலிய நகரங்களிலிருப்பவர்கள் போன்று கைத்தொழில், வியாபாரம் முதலியவைகளை கைக்கொண்டவர்களன்று.

இப்பட்டணத்திற்கு சமீபத்திலிருக்கிற பட்டிப்பூர் சிக்கிரி என்னும் மலைத்தொடர்களில் வெட்டியெடுக்கப்படும் செந்நிறமான கற்களைக் கொண்டுவந்து செதுக்கி வேண்டியமாதிரி உருவாக்கி கட்டப்படுகிற ஒவ்வொரு கட்டட வேலைகளுக்கும் உபயோகிக்கிறார்கள். இக்கற்கள் நயப்படுத்துவதற்கு அதிக அநுகூலமானதாகவும், கட்டடவேலைகளுக்கு மிகுந்த உறுதியும் வன்மையுமுள்ளதாயிருக்கிறபடியால் இந்த பிராந்தியங்களில் இக்கற்களால் கட்டப்பட்ட கட்டடங்களே அதிகமாகக் காணப்படுகின்றன.

யமுனைநதிக்கு இரண்டு அடுக்குகள் வைத்து ஒரு விநோதமான பாலம் கட்டப்பட்டிருக்கிறது. கீழ்ப்புறத்திலுள்ள அடுக்கில் ரயில் வண்டிகள் செல்கின்றன. மேலடுக்கில் ஜனங்களும், குதிரை, எருதுகளால் இழுக்கப்பட்ட வண்டிகளும் செல்லுகின்றன. இந்த பாலத்திலிருந்து சுமார் எழுபதடி அகலத்தில் மூன்று மைலில் நீளமுள்ள ஒரு பாதை போட்டிருக்கிறார்கள். இந்தப்பாதை நேராக டாஜ் மஹால் என்ற விநோதமான கட்டடம் வரையில் செல்லுகிறது. இவ்வளவு அகலமும் நீளமுமுள்ள பாதையானது ஒருவிதமான பலகைக் கற்களால் பாவப்பட்டு மிக உறுதியாயும் குப்பை கூளங்கள் தங்க இடமின்றியும் வெகு இலக்ஷணமாகக் காணப்படுகின்றது. இந்தப் பாதையைப்போல் பட்டணத்திற்கு மத்தியில் சிற்சில தெருக்களில் கற்கள் பாவியிருக்கிறார்கள். இப்பாதைகளில் வண்டிகள் ஓடும்பொழுது பாறைகளின்மேல் ஓடுவது போலவே சப்தமுண்டாகின்றன. இப்பாதைகள் போடப்பட்டு இருநூறு வருஷமாயிற்றென்று சிலரும் கூறுகிறார்கள். பாதைகளிருக்கப்பட்ட ஸ்திதியை நோக்குங்கால் சுமார் 300, 400 வருஷங்களுக்கு முந்திப் போடப்பட்டிருக்கலாமென்று தோற்றுகிறது. யமுனை நதிக்கரையில் ஸ்நானபானங்களுக்கு உபயோகமாக பல தர்மகுணசீலர்கள் ஏராளமான திரவியச்செலவு செய்து அனேக படிக்கட்டுகளைக் கட்டியிருக்கிறார்கள். இப் படிக்கட்டுகள் பல சமயங்களில் உபயோகப்படாததாய் யமுனையில் வெள்ளம் வற்றிப் படிக்கட்டுகளுக்கு வெகுதூரத்தில் ஓடுகிறது. அப்பொழுது பண்டாக்கள் என்ற மாதியார் தங்களுடைய பலகைகளையும், வெயிலுக்காகப் போட்டுக்கொள்ளும் குடைகளையும், பெருங்குடைகளையும் நதியின் ஜலத்திற்கு சமீபத்தில் கொண்டுபோய் வைத்துக்கொண்டு ஸ்நானத்திற்கு வருகிறவர்களை உபசரித்து தங்கள் பலகையின்மேலிருந்து யமுனாபூஜை, ஜபம் முதலியவைகளை செய்யச்சொல்லி, அதற்குக் கூலியாக கொடுக்கும் காசைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

இந்த யமுனைநதிக்கரையில் இப்பொழுதும் காணப்படும் சிற்சில பழங்கட்டிடங்களைப் பார்வையிட்டால், இப்பட்டணமானது முன்காலத்தில் எவ்வளவு பெரியதாயிருந்திருக்குமோ எப்போர்க்கொத்த மாடமாளிகைகளால் நிறைந்து விளங்கியதோ, எப்போர்க்கொத்த கனதனவான்கள் குடியிருந்தார்களோ என்று பிரமிக்கும்படியான அப்போர்க்கொத்த கற்களால் சன்னைப்பூச்சாந்திட்டுக் கட்டியதாயும் 5, 6 அடி அகலமுள்ளவைகளாயும் காணப்படுகின்றன. பலர் கூறுகிறபடி இப்பட்டணமானது முன்னொருகாலத்தில் எட்டுமைல் நீளமும் 5 மைல் அகலமுமுள்ளதாயிருந்திருக்க வேண்டுமென்று நம்பப்போகிய காரணங்களும், அடையாளங்களும் காணப்படுகின்றன. முந்தியிருந்த பட்டணத்தில் பாதியாகவே இப்பொழுது பட்டணமாக விளங்குகிறதென்று சொல்லலாம்.

இந்நகரத்தில் நடுநாயகமாக விளங்கும் கோட்டையிலிருந்து வடமேற்காக பட்டணத்திற்குள் செல்லும் தெரு மிகவும் அழகானது. இத்தெருவின் இருபுறமும் ஐந்து, ஆறு அடுக்குகளுள்ள மெத்தைவீடுகளாலும், கூட கோபுரங்களுள்ள மாளிகைகளாலும், சிங்கார

மான கட்டடங்களாலும் காணப்படுவதன்றி அவைகளில் பல வியாபார வர்த்தகசாலைகளும் வைக்கப்பட்டு, எப்பொழுதும் இத்தெருவில் ஜனங்கள் கணக்கிட முடியாதபடி வந்துபோய்க் கொண்டேயிருக்கிறார்கள். இந்தத்தெருவும் பலகைக்கற்களால் பாவப்பட்டிருக்கின்றது. 'சவுக்' என்ற கடைத்தெருவில் உணவுப்பொருள்கள் மலைமலையாக குவிக்கப்பட்டு வெகு சகாயமாக விற்கப்படுகின்றன. சாயந்திரவேளையில் இச்சவுக்கண்டை ஜனக்கூட்டம் அதிகரித்து தெருவுடன் செல்கிறவர்களுக்கு வழியகப்படுவதே கஷ்டமாய் விடுகிறபடியால் போலீஸ்காரர்கள் சதாஜனங்களை குண்டாந்தடியைத் தூக்கிக்கொண்டு ஜா! ஜா! என்று கூவிக்கொண்டும், நிற்பவர்களை தள்ளிவிட்டுக்கொண்டுமே இருக்கிறார்கள். இச்சவுக்கிலிருந்து கிழக்காக மற்றொருதெரு செல்லுகிறது. இந்தத்தெருவும் மெத்தைவீடுகளாலும் கூடகோபுரங்களாலும் வெகு விநோதமாகவே காணப்படுகிறது. இந்த வீடுகளின் மெத்தைகளின்மேல் பலஜாதியாரான தாசிகளும், வேசிகளும், குடிப்புகுந்து தெருவில் செல்கிறவர்களுக்குத் தோன்றும்படியாக சோபா, நாற்காலி முதலியவைகளின் மேலுட்கார்ந்து வீணை, பிடில் முதலிய வாத்தியக்கருவிகளை வைத்துக்கொண்டு பாடியும், உல்லாசமாக உலாவியும், கேலி, நகைப்பு, ஆட்டமுதலிய செய்கைகளில் ஈடுகொண்டவர்களாய்த் தோற்றப்படுகிறார்கள். இப்படியே ஒவ்வொருதெருவின் விநோதத்தையும் கூறின் வியாசம் பெருகுமென்றஞ்சி விடலானோம்.

இந்த நகரத்தில் கட்டப்பட்டிருக்கும் சில கட்டடங்கள் தேர்ந்த சிற்பிகளும் மேல்நாட்டு இன்ஜினீர்களும் வியக்கத்தக்கவைகளாயும், பூலோகத்திலுள்ள ஏழு ஆச்சரியங்களில் ஒன்றாகிய (Taj Mahal) டாஜ் மஹால் என்ற அற்புதமான கட்டடத்தையுடையதாயும், மகாதர்மசீலரும் ஜீவகாருண்ணியருமான அக்பர் சக்கரவர்த்தியின் சமாதியும், இன்னும் பற்பல சிறந்த கட்டடங்களுமிருப்பதால் உலகத்தின் விநோதங்களைப் பார்க்க எண்ணமுள்ளவர்களாய் வெளிப்புறப்படுகிற ஒவ்வொருவரும் இவ்விடத்திற்குவந்து எட்டு அல்லது பத்துநாள் தங்குவதால் வீட்டுவாடகை அதிகப் பட்டிருப்பது அதிசயமன்றென்றே கருதலாம்.

கோட்டை.—இது சுமார் 700 வருஷங்களுக்குமுன் பட்டிப்பூர் மலையில் வெட்டியெடுக்கப்பட்ட செந்நிறமான கற்களால் அக்பர் பாதுஷா அவர்களால் கட்டப்பட்ட ஒரு அந்தயான பெரிய கட்டடம். இது யமுனையாற்றின் ஓரமாக சுமார் 5 பர்லாங்கு நீளமும் இரண்டரைபர்லாங்கு அகலமுமுள்ளதாய், சுமார் 45 அடி உயரமும் 20 அடி அகலமுமுள்ள மதில் சுவர்களுள்ளதாயும், சுற்றியும் பலவட்டமான வளைவுகளுடன் பெரும் அகழோடும் கூடியது. இந்த அகழில் யமுனையாற்றின் ஜலத்தைக்கொண்டுவர வழியும் செய்திருக்கிறார்களாயினும், இப்பொழுது அகழில் ஜலம் விடப்படுவதில்லை. இப்பொழுது இந்தக்கோட்டைக்குள் கொஞ்சம் பட்டாளம் வைக்கப் பட்டிருக்கிறது. இதற்குள்ளிருக்கிற (Motee Masjid) முத்து மஸ்ஜீத் ஷாஜீஹான் கட்டியதென்று தெரியவருகிறது. மூன்று வரிசையான 54 வெள்ளைக்கல் ஸ்தம்பங்களையுடையதாய் 540 புருஷர்கள் உட்கார்ந்து ஜபம்செய்ய இடம் குறிக்கப்பட ஒரு பெரிய அறையையும், அதற்கு அடுத்த புறத்தில் 60 கோஷா ஸ்திரீகள் உட்கார்ந்து ஜபம் செய்ய இடம் குறிக்கப்பட்ட ஒரு சிறிய அறையையும் உடையதாய், விநோதமான ஸ்தூபிகளுடன் வெள்ளைக்கற்களாலேயே 250 அடி நீளமும் 200 அடி அகலமும் கொண்டதான கட்டடம். இதற்கு முன்புறத்தில் விசாலமான ஒருமேடையும் அதில் ஜபம்செய்யவருகிறவர்கள் கைகால் முதலியவைகளை சுத்தஞ்செய்துக்கொள்ளத் தக்கதான ஒரு தடாகமும் காணப்படுகிறது. இந்தக்குளத்திற்கு யமுனையாற்றிலிருந்து குளாய்மூலமாய் ஜலம்வருகிறது.

ஷாஜீஹான் அரண்மனை.—இதுவும் வெள்ளைக்கற்களால் கட்டப்பட்டது. தரை வெள்ளை கருப்புச் சதுரக்கற்களால் பாவப்பட்டிருக்கிறது. இந்த அரண்மனையின் ஓரறையானது கட்டடத்தின் சுவர்களிலும் மூலைகளிலும் பொன்முலாப்பூச்சினால் பூங்கொடி வேலைகள் செய்யப்பட்டிருந்ததாகவும் கல்கத்தில் பாதப்பூர் கொள்ளைக்காரர்கள் அவைகளை சுரண்டிக்கொண்டுபோய்விட்டதாகவும், பிறகு அந்த மாதிரி பொன்முலாமிட மூன்று அடி நீளத்திற்கு இவ்வளவாகுமென்பதையறிய அங்கிலேயர் செய்துபார்த்ததில் 3000 ரூபாய் செலவானதாகவும், தெரியவருவதுடன் பிந்தி முலாமிடப்பட்ட பாகம் மட்டும் இன்றைய வரையில் காணப்படுகிறது. இதற்கு அடுத்த பக்கத்தில் ஷாஜீஹான் மனைவியார் வாசஞ்செய்த அறைகளும், படுக்கை அறையும், அவ்விடத்திலிருந்தே ஸ்நானத்திற்கு யமுனையாற்றுக்குச்செல்லும் நிலவறையு மிருக்கின்றன. இதில் படுக்கையறை அதி அற்புதமானது. மூலை முடக்குகளில்லாமலும், மேல்பாகம் வில் வளைவாகவளைத்தும் வெள்ளைக்கற்களாலேயே கட்டப்பட்டு சுவர் முழுவதும் சிகப்பு, வயிரம், பச்சைமுதலிய கற்களாலேயே பதிக்கப்பட்டு இரண்டு புறத்திலும் விசாலமான இரண்டு கட்டில்கள் போடும்படியாக மேடைகளமைத்தும், மத்தியில் நினைத்தவுடன் ஸ்நானஞ்செய்யத்தக்க விதமாயமைத்த தண்ணீர் வெந்நீர் குழாய்களுடன்கூடிய தொட்டியை யுடையதாய், கட்டப்பட்ட கட்டடம். இதற்கு சமீபத்தில் ஒருவன் காவலாக இன்றும் வைக்கப்பட்டிருக்கிறான். இவனுக்கு ஒரு அணா கொடுத்துவிட்டால் உள்ளே கூட்டிக்கொண்டுபோய் தீபமேற்றி செவ்வையாகக் காட்டுகிறான். அப்படி பார்க்கும்பொழுது நாம் உண்மையாகவே ஒரு கட்டடத்தை பார்க்கிறோமென்ற எண்ணம்மறந்து கனவுதான் காண்கிறோமென்ற எண்ணமுண்டாய் பிரமிக்கச்செய்கிறது. நமது தேசத்தில் கட்டிக்கொண்டிருக்கப்பட்ட துணிகளை பலவித நிறத்துடன் ஜ்வலிப்பதால், அதை நேரில் பார்த்தவர்களுக்கேயன்றி மற்றவர்களுக்கு எவ்வளவு கூறியும் அதின் இலக்ஷணம் இவ்விதமானதென்று அறிவது சாத்தியமன்று. இதற்கு அடுத்த அறை நூர்ஜிஹான், ஷாஜீஹான் மனைவி உடுக்கும் அறை. இதில் வெள்ளைக்கற்களால் கட்டப்பட்ட சுவற்றில் நகை நட்டுகள் வைக்கும்படி பெரியதும் சிறியதுமான பல அறைகள் காணப்படுகின்றன. இப்படியே பல அறைகளும் மேடைகளும் காணப்படுகின்றன.

திவானீயம்.—இது ராஜாங்கவிஷயமான யோஜனைகள். செய்யப்பட்ட பெரிய ஹால், சுமார் 100 கஜ நீளமும் 30 கஜ அகலமுமுள்ளது. வெள்ளைக்கற்களாலேயே கட்டப்பட்டது. இரட்டை ஸ்தம்பங்களாகவே நான்கு வரிசையாக 40 ஸ்தம்பங்கள் வைத்து மேல்பாகத்தில் பலவித சித்திரங்கள் செய்தும், இதற்கு மேல்புறத்தில் ஸ்திரீகள் நின்று பார்க்கும்படியாக வெள்ளை கற்களில் செய்த திரைபோன்ற மறைவுள்ள இரண்டு சிறிய அறைகளுடன்கூடிய பெரிய கட்டடம். இந்த மண்டபத்தில் இராஜாங்க உத்தியோகஸ்தர்களுடன் ஆக்பர் உட்கார்ந்து பல விஷயங்களைப்பற்றி யோஜிப்பது வழக்கமாம்.

கசீனா மாஸ்க்கு.—இது இராஜ்ஜியத்திலுள்ள பெரிய தனக்காரர்களுடன் சேர்ந்து ஆலோசனை செய்யப்பட்ட அறை. இதுவும் மூன்று வரிசையான 24 ஸ்தம்பங்களுடன் கூடிய பெரிய ஹால். வெள்ளைக்கற்களாலேயே கட்டப்பட்டது. இந்த அறைக்கு எதிர் புறத்தில் 40 அடி சுற்றளவுள்ள ஸ்படிகக் கல்லிருந்ததாகத்தெரியவருகிறது. இப்பொழுதும் ஒரு மேடையின்மேல் 40 அடி சுற்றளவுள்ள ஒரு கருங்கல் போடப்பட்டிருக்கிறது. இக்கல்லின் பேரிலுட்கார்ந்து பார்த்தால் 60 அடி பள்ளமான 5-6 பள்ளத்தாக்குகள் சுற்றியும் காணப்படுகின்றன. இந்த பள்ளங்களில் புலி, யானை முதலிய மிருகங்களை சண்டைக்குவிட்டு ஆக்பர் மேற்படி கல்லின் பேரிலுட்கார்ந்து கொண்டு

வேடிக்கை பார்ப்பது வழக்கமாம். மற்றும் சிலபள்ளங்களில் வரும் மீன்கள் விடப்பட்டிருக்குமாம். இந்த கல்லிற்கு அடுத்த கட்டடமாகிய இந்து ராஜஸ்திரீகளை வைத்திருந்த அறைச்சுவற்றின்பேரில் 15 அங்குல சுற்றளவுள்ள பீரங்கிக்குண்டு பாய்ந்து துளைத்தவளை இன்றும் காணப்படுகிறது.

இந்த கசீனா மாஸ்க்குக்கு எதிரில் வடமேற்கு மாகாண லெப்டினெண்டு கவர்னராகவிருந்த மிஸ்டர் J. R. Colvin என்ற ஐரோப்பியருடைய தேகம் அடக்கம் செய்யப்பட்டு கல்லும் பதிக்கப்பட்டிருக்கிறது. தவிர ஷாஜீஹான் ஸ்நானஞ்செய்து வந்த பெரிய கல் தொட்டி யொன்றும் காணப்படுகிறது. இது சுமார் 6 அடி உயரமுள்ளதாய் மேலே ஏறிச் செல்ல நான்கு படிகள் வைத்து மிகவும் இலேசானதாய் செய்யப்பட்ட கல் தொட்டி.

இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு வந்தால் பேர்பெற்ற சோமநாத் கோவில் தலைவாயிலின் கதவு சுமார் 25 அடி உயரமும் 16 அடி அகலமுமுள்ளது. இதை இவ்விடத்தில் கொண்டுவந்து வைத்திருக்கிறார்கள். இது சந்தனமரம் என்பதாகவும், கோர்க்கப்பட்டிருக்கிற ஆணிகள் வெள்ளி என்பதாகவும் தெரியவருகிறது. இது இவ்விடத்திற்கு வர வேண்டிய காரணம் தெரியவில்லை.

ஆகவே, இந்த கோட்டையைபோன்ற பலமானதும் அதிக வேலைப்பாடுள்ளதும், அநேக விசித்திர விநோதங்களைக் கொண்டதுமான கோட்டை அந்த தேசத்திலேயே இல்லை என்று கூறலாம. இந்தக்காரணத்தைக் கொண்டே இப்பொழுதும இந்தக்கோடடைக்குள்ளிருக்கிற கட்டடங்களை கவர்ன்மெண்டார் இடிக்காமல் காப்பாற்றி வருவதுடன் இதற்குள்ளாகவே இந்த ஜில்லா கஜானாவையும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

NOTES ON ALUMINIUM AND ITS ALLOYS.

அலுமினியம் என்னும் உலோகம்.

அலுமினியம் என்பது தங்கம், வெள்ளி, ஈயம், இரும்பு முதலிய உலோகங்களைப் போன்ற ஒரு தாதுப்பொருள். இந்த உலோகத்தினால் செய்யப்படும் பாண்டங்கள், பித்தளை, வெண்கலம் முதலிய கலப்பு உலோகங்களாலும் ஈயம் துத்தநாகம் முதலிய உலோகங்களாலும் செய்யப்பட்டு சாமானியமாய் நமது தேசத்தார் உபயோகப்படுத்திவரும் பாத்திரங்களைக் காட்டிலும், அதிக சுசிகரமும், சுத்தமும், தேக ஆரோக்கியமு முண்டாக்கக் கூடிய குணங்களுள்ளவையானதால் இந்த உலோகத்தைக்குறித்து ஒருவாறு இவ்விடத்தில் எழுதப்படுகிறது.

இந்த உலோகம் தங்கம், வெள்ளி, பாதரசம், தாமிரம் அல்லது செம்பு முதலியவைபோல இயற்கையிலேயே சுத்தமான ஸ்திதியில் கிடைக்கக்கூடியதல்ல. ஆனால் இது [1] பிராணவாயுவினும், சில [2] காரச்சரக்குகளுடனும், புளிப்புச்சரக்குகளுடனும்[3] கலந்து பாறைகளிலும், மண்ணிலும் விசேஷமாய் அகப்படுகிறது. கருங்கல், வெண்கல், [4] அப்பிரகம் முதலியவைகளிலும் இந்த உலோகம் அதிகமாய்க் கலந்திருக்கிறது. நாம் ஆபரணங்களாக உபயோகப்படுத்தும் கெம்பு, நீலம், செம்மணி, இந்திர நீலக்கல், புஷ்பராகம் முதலிய இரத்தினவகைகளும் இந்த உலோகம் பிராணவாயுவுடன் கலந்து பளிங்குருவமடைவதால் உண்டாகின்றன. கந்தகாமிலீயமான இந்த உலோகமே [5] படிக்காரமென்று சொல்லப்படுகிறது. களிமண்ணில் [6] அலுமினியம் உலோகமும், [7] ஸில்கான் என்னும் தாதுப்பொருளும் பிராணவாயுவும் கலந்துள்ளன.

1 Oxygen. 2 Alkalies. 3 Acids.

4 Mica. 5 Alum = Aluminium Sulphate. 6 Clay = Aluminium silicate + Aluminium + Silicon + Oxygen.

7 Silicon; இந்த தாதுப்பொருள் பிராணவாயுவுடன் கலந்து உண்டாயிருப்பது? சமுத்திரமணல், சக்கிமுக்கிக்கல், மணற்கல் முதலியன.

இந்த உலோகத்தின் நிறம் வெள்ளியைப் போன்ற சுத்த வெண்மையானது. ஆயினும் இதன் நிறம் அதைக்காய்ச்சி உருக்கும் சூட்டிற்கு அனுகுணமாயிருக்கும்.

இந்த உலோகத்தை உருக்கி குளிர்ந்த அச்சுகளிலாவது, அல்லது ஈரமணலினாலாக்கப்பட்ட அச்சுகளிலாவது வார்த்து சீக்கிரத்தில் ஆற்றினால் அதற்குப் பிரகாசமான வெண்ணிறமுண்டாகும். ஆனால் வெகு சூட்டுடனாவது அல்லது உலர்ந்த மண்ணச்சுகளிலாவது வார்க்கப்பட்டால் அதன்நிறம் ஈயத்தைப்போன்ற சாம்பல் வர்ணமாகவும், துத்தநாகத்தைப் போன்ற வெண்மை கலந்த நீலவர்ணமாகவுமிருக்கும்.

இந்த உலோகத்தினால் செய்யப்படும் பலவித தட்டுமுட்டு சாமான்களும், கிரககிருத்திய காரியங்களுக்கு உபயோகமாகும் பாத்திரவகைகளும், சாதாரணமாய் நமது தேசத்தில் வழங்கிவரும் பித்தளை, செம்பு, வெண்கலம், ஈயம், தகரம், துத்தநாகம் முதலிய உலோகங்களால் ஆக்கப்படும் சாமான்களையும் பாத்திரங்களையுங் காட்டிலும் பல விஷயங்களில் மேன்மைப்பட்டுள்ளனவாக அனுபவத்தால் தெரியவருகிறபடியால் அவைகளை ஒருவாறு இவ்விடத்தில் எழுதுகிறோம்.

சுத்தமான அலுமினியத்தினால் செய்த பாத்திரங்களில் பித்தளை, தாம்ரம் முதலியவற்றால் செய்த பாண்டங்களில் களிம்பேறுவதுபோலும் நாற்றமுண்டாவதுபோலும் ஒருவிதக் கெடுதலும் உண்டாவதில்லை. சுத்தமில்லாமல் 'ஸிலிகான்' முதலிய தாதுப்பொருள்களுடன் கலக்கவிட்டு உருக்கினால், அது தண்ணீருடனும் புளிப்பு வஸ்துக்களுடனும் சம்பந்தப்படும்போது இரும்புத் துருவையொத்த நாற்றமுண்டாகும். ஆனால் சுத்த அலுமினியத்திற்கு நாற்றமில்லை. இந்த விசேஷகுணத்தால் இந்த உலோகத்தாலாக்கப்படும் பாத்திரங்களுக்கு ஈயம் பூசவேண்டிய நிமித்தமில்லை; இவைகளில் சமைக்கப்படும் போஜன வகைகள் தேகத்திற்கு ஆரோக்கியத்தை யுண்டாக்கும். தாம்ரப் பாத்திரத்தில் ஜலத்தைக் காய்ச்சிச் சாப்பிடுவதால் உடனே வாந்தியுண்டாவதைப் பலகாலும் அனுபவத்தால் கண்டிருக்கிறோம். தண்ணீர் காயும்பொழுது அந்த சூட்டில் தாமிரமும் மிகவும் கொஞ்சவளவு உருகித் தண்ணீரில் கலப்பதால் உண்டாகும் ஒருவிதமான பாஷாணமே வாந்தியை யுண்டாக்குகிறது. சுத்த அலுமினியப் பாத்திரங்களில் திரவ வஸ்துக்களை எவ்வளவு சூடேற்றிக் காய்ச்சினாலும் அது கொஞ்சமேனும் உருகாது. வெள்ளிப் பாத்திரங்களை வெளியே வைத்திருப்பதால் ஆகாயத்தில் பரிணமித்துக்கிடக்கும் [8] கந்தகம் கலந்த ஜலவாயு அவைகளின்மேரில் படும்போது ஒருவித கருப்புக்களிம்பேறி அவைகள் பார்வைக்கு அவலட்சணமாகின்றன. ஆனாலோ அலுமினியப் பாண்டங்களில் அந்தவாயு லவலேசமும் பற்றுகிறதில்லை; எப்போதும் சுத்த நிறமாயிருக்கும்.

அலுமினியமானது அதே பரிமாணமுள்ள தங்கத்தின் எடையில் சற்றேறக்குறைய $7\frac{1}{4}$-க்கு ஒன்றும், ஈயத்தின் எடையில் $4\frac{1}{4}$-க்கு ஒன்றும், வெள்ளியின் கனத்தில் 4-க்கு ஒன்றும், செம்பின் எடையில் $3\frac{1}{4}$-க்கு ஒன்றும், பித்தளையின் கனத்தில் $3\frac{1}{8}$-க்கு ஒன்றும், துத்தநாகத்தின் கனத்தில் $2\frac{3}{4}$-க்கு ஒன்றுமாக உள்ளது. ஆகவே இந்த உலோகமானது நாம் பாத்திரங்களாக உபயோகப்படுத்தும் எல்லா உலோகங்களைக் காட்டிலும் கனக்குறைவானது. இதனால் வழிப்பிரயாணங்களுக்காகக் கொண்டுபோகவேண்டிய பாத்திரச்சாமான்களை இந்த உலோகத்தினால் செய்துகொள்வதால் அதிக கனமின்றி சுலபமாய் அவைகளைக் கையாடுவதற்கு அனுகூலமாயிருக்கும்.

வெள்ளி, செம்பு, தங்கம் இம்மூன்று உலோகங்களுக்கும் அடுத்தபடியாய் மற்ற உலோகங்களைக்காட்டிலும் அலுமினியத்தில் நெருப்புச்சூடு சீக்கிரத்தில் பிடிக்கும். ஆதலால் அலுமினியப் பாத்திரங்களில் சமையல் செய்வதில் மற்ற வெண்கல முதலிய பாத்திரங்களில் செய்வதைக்காட்டிலும் விறகு குறைவாகவே செலவாகும். கீழே விழுந்த மாத்திரத்தில் உடையக்கூடிய வெண்கலப் பாத்திரங்களைப்போலல்லாமல் அலுமினியப் பாத்திரங்கள் கீழே விழுந்தாலும் உடைந்து நஷ்டமாகா. அவைகளைத் துலக்குவதும் சுலபமானது.

காய்ச்சிப் பதப்படுத்திய அலுமினியமானது அதிக மெதுவடைகிறபடியால் அதை அதிக மெல்லிய வெள்ளிரேக்குகளைப்போலவும் கம்பிகளைப்போலவும் அடிக்கவும் நீட்டவும் கூடும். அலுமினிய ரேக்குகள் வெள்ளி ரேக்குகளைக் காட்டிலும் விலை சரசத்திலும் களியபோக்

8. Sulphide of the Oxygen.

தன்மையிலும் சிறந்ததாதலால் அலங்காரச் சித்திரிப்பு வேலைகளில் மிகவும் பிரயோசனப்படுகின்றன. இந்தரேக்குகள் பொடி செய்யப்பட்டு ஒருவிதவெள்ளிப பூச்சுவர்ணமும் செய்ய உபயோகப்படுகின்றன.

அலுமினியத்தால் செய்யப்படும் பாத்திரங்களின் விலை அதேமாதிரியான பித்தளைப்பாத்திரங்களைக் காட்டிலும் இரண்டுமடங்கு அதிகமும், வெண்கலப் பாத்திரங்களைக் காட்டிலும் கால்பங்கு அதிகமும், வெள்ளிப் பாத்திரங்களைக் காட்டிலும் 30 பங்கு குறைவும் உள்ளதாகச் சொல்லப்படுகிறது. சாமானியமாய் பித்தளை தாமிரமுதலியவற்றால் செய்யப்படும் பாத்திரங்களைக்காட்டிலும் அலுமினியப் பாத்திரங்களின் விலை அதிகமாகவிருந்தாலும் அதற்கேற்ற அனுகூலங்களுமிருக்கின்றன வென்று இவ்வுலோகத்தால் செய்த பாத்திரங்களை இங்கு வழக்கத்துக்குக் கொண்டுவர முயற்சித்துவரும் மிஸ்டர் சாட்டர்டன் துரை சொல்கிறார். (இவர் இப்பொழுது ராயல் இண்டஸ்டிரியல் கமிஷனில் ஒரு மெம்பராகவிருந்து கோட்டை கௌன்ஸில் ஹாலில் உட்கார்ந்து விசாரணை செய்துவருகிறார். இவரைக் கண்டு மறுபடியும் அவையளாவிய காரணத்தினால் இவர் முன் சென்னையிலிருந்தபொழுது எழுதப்பட்டவிஷயம் திருத்தமறுபடியும் உபயோகமாகும்படி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.)

செம்புடன் ஈயம், துத்தநாகம் முதலிய உலோகங்களைக் கலப்பதால் பித்தளை, வெண்கலம் முதலிய வேறு கலப்புலோகங்கள் செய்யப்படுவதுபோல் அலுமினியத்துடன் மற்ற சில உலோகங்களைக் கலந்து கலப்பு உலோகங்கள் செய்வதுண்டு.

நமது சென்னைநகரிலுள்ள சித்திர வித்தியாசாலை (School of Arts)யில் அலுமினியத்தால் அழகிய தவலை, அடுக்குப்பாத்திரம், தட்டம், அடுக்குச்சட்டி, குடம், சொம்பு, பாணலி, லோட்டா டம்ளர், தூக்குச்சட்டி, கோகர்ணம், தூக்குச்சொம்பு, கூஜா முதலிய பலவித வீட்டுப் பாத்திரங்களும் தயார் செய்யப்பட்டு கூடுமானவரையில் விலைசரசமாகவும் விற்று வந்தது. இப்பொழுது திருவல்லிக்கேணி ஹைரோட்டிலிருந்து அலுமினியம் பாக்டரியில் சொந்தக் கம்பெனி மேல்விசாரணையில் இன்னும் ஏராளமாகச்செய்து லாபகரமாக விற்கப்பட்டுவருகிறது.

CHILDREN'S PAGE.

A FIGHT BETWEEN A TIGER AND A WILD BOAR.*

சிறுவர்க்கான பக்கம்.

புலிக்கும் காட்டுப்பன்றிக்கும் நடந்தசண்டை.

BY MR. M. S. H. THOMPSON,

(*Assistant Inspector, Training School.*)

சில வருஷங்களுக்கு முன் வங்காள தேசத்தில் வடக்கேயிருக்கும் பூர்ணியா ஊரிலே ஜேம்ஸ் இங்கில்ஸ் துரையொருவர். வேட்டையாடுவதில் மிக்க கீர்த்தி பெற்றிருந்தார். முக்கியமாய் அவர் வேட்டையாடின மிருகம் புலியாகும். இம்மிருகத்தைப் பற்றி அவர் விசேஷமாய் ஒரு பெரிய புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார். அதிற்கண்ட ஒரு கதை இதனடியில் எழுதியிருக்கிறேன்.

புலிக் குட்டியானது தாயோடு சுமார் இரண்டுவருஷ காலமிருந்து, வேட்டையாடக் கற்றுக்கொண்டு, தனியாக வேட்டையாடுமாம். தாய விட்ட புலி தான் மிகவும் அஞ்சத்தக்கது. அது எருமை முதற்கொண்டு எந்தமிருகத்தையும் கொல்லும். அது அடிபட்டுக் கிடக்கும்போது யானையைக்கூட அடிப்பதுண்டு.

ஒரு நாள் இங்கிலஸ் துரையானவர் தன் தோழரோடு ஒரு பள்ளத்தில் பதுங்கியிருந்தார். அப்போது சுமார் பத்துமணி இரவு. சுற்றுப் புறத்தில் எங்கும் மூடுபனி மூடிக்கொண்டிருந்தது. ஆகாயத்தில் மேகங்கள் நிலா வெளிச்சத்தைத் தடுத்துக் கொண்டு மெதுவாய மேற்குத்திசை நோக்கிச் சென்றன. ஆனால், வெளிச்சமில்லாவிட்டாலும் தான் இருக்கிற பள்ளத்திலிருந்து தரை மேற செல்லும் ஒவ்வொரு 'பிராணியின் உருவம் நன்றாயத் தெரிந்தது. தூரத்திலே ஒருபுறம் கிராமம் தெரிந்தது. ஒருபுறம் காடு, காறும் கருங்கடல்போல தரை மட்டத்திலும் காடுகள் மீதும் அலையடித்துக்கொண்டு போனது. கொசுக்கள் ஓட்டுவதற்காகக் கிராமத்தில் இங்குமங்கும் செத்தை கொளுத்துவது மின்மினிப் பூச்சியின் மின்னல்போல தோற்றினது. எங்கிருந்தோ வந்த மங்கலான ஒரு சத்தந்தவிர வேறு சத்தம் கிடையாது.

* Compiled *Tent Life in Tigerland* by James Inglis (Hutchison & Son, Sydney, 1888.) Specially written for the Viveka Chintamani.

திடீரென்று யாரோ ஒருவன் ஒரு பாறையைத் தள்ளிவிட்டதுபோல் ஒரு உருவம் காட்டுத் திக்கிலிருந்து ஓடிவந்தது. இதென்ன ஓடிவருகிறதென்று நன்றாய் உற்றுப் பார்க்கவே காட்டுப் பன்றியென்று வேட்டைக்காரர்களுக்குத் தெரிந்தது. காட்டுப்பன்றி பயங்கரமான மிருகம். நம்மைக்கண்டால் அதனின்று தப்பித்துக் கொள்வது அசாத்தியம். ஆகவே பள்ளத்தில் பதுங்கிக் கிடக்கும் இருவரும் துப்பாக்கியைத் தோள் மட்டத்துக்குக் கொண்டுவந்து பன்றியைச் சுடப்போனார்கள். அச்சமயத்திலோ பன்றி நின்றுவிட்டது. நான்குபக்கமும் திரும்பிப் பார்த்து, "ஹூ! ஹூ! என்று முரட்டுத்தனமாய்க் கத்திற்று. பிடரிமயிர் கம்பிபோல் செங்குத்தாய் நின்றது. ஏதோ ஒரு சங்கடமநேரிட்டதோ? அல்லது தனது இரைத்தார் தன்னைக் கைவிட்டதனால் கோபமோ என்று இப்படி வேட்டைக்காரர் இருவரும் யோசித்துக் கொண்டிருக்கும்போது, தரைக்குத்தரையாய் ஒருகால் மற்றொருகாலுக்கு முன் மெதுவாய் வைத்துக் கொண்டுசெல்லும் ஒரு இளயபுலியைக் கண்டார்கள். இப்படியும் அப்படியும் புல்பூண்டுகளுக்குப்பின் பதுங்கிவந்தது. புலி எப்படிவந்தாலும் பன்றி ஏமாந்துபோகாமல் அதை எதிர்க்க சித்தமாய் இருந்தது. புலிக்கும் பன்றிக்குமுள்ள தூரம் சுமார் நான்கு கெஜமிருக்கும்போது, புலி ஓ வென்றுகூவி, ஓசைபாய்ச்சலாய்ப் பாய்ந்து, பன்றியை முகத்தில் ஒரு அறை அறைந்தது. பன்றி அறையைவாங்கித் தலையை அசைத்துப் புலியை தன் நீண்ட பற்களினால் கீறிற்று. புலி உடனே அப்புறம் பாய்ந்து வாலை வீசி, கோபாக்கினி சிதறும்படி பயங்கரமான தனது இரண்டு கண்களினாலே பன்றியை உற்றுப் பார்த்தது. திரும்பிப் பிரதட்சணஞ் செய்ய ஆரம்பித்தது. பன்றியும் ஜாக்கிரதையாய்த்திரும்பி திரும்பிப் பார்த்து, கொஞ்சங்கொஞ்சமாய் இரண்டு மிருகங்களும் பள்ளத்துக்குச் சமீபத்திலவந்தன. அப்போது இரண்டிற்கும் பட்ட கொடியகாயங்கள் வேடர்களுக்குத் தெரிந்தன. அப்பப்பா, புலி அறைந்த அறை என்ன அறை! சதை அப்படியே வந்து விட்டது, இரத்தம் தாரை தாரையாய்த் தரையில் சிந்தினது. புலிக்கும் உடல் நிரம்ப இரத்தம்.

மறுபடியும் புலி நல்லசமயம் பார்த்து உரக்கக் கூவி, பன்றி முதுகின் மேல் பாய்ந்தது. கொத்துக்கொத்தாய்ச் சதையைக் கடித்துப் போட ஆரம்பித்தது. பன்றி இடறி விழுந்து, புலியை தனது முதுகிலிருந்து உதறிவிட்டு, மல்லாக்காய்த் தள்ளிப்போட்டது. பின்பு கண்ணிமைப் பொழுதிலே எழுந்து நின்று, புலியின் வயிற்றை முன்கால் முதல் பின்கால் வரையில் கிழிப்போட்டு, நிறகச் சக்தியற்று இங்குமங்கும் அலைந்து இடறிக் கீழே விழுந்து புலியோடு மாய்ந்தது.

M. S. H. THOMPSON.

EVENTS OF THE MONTH.

மாத விசேஷங்கள்.

INDIA AT THE IMPERIAL CONFERENCE.

லண்டனில் யுத்தகாலத்துக்கு ஏற்படி ஐந்துபேர்கள் மட்டும் சேர்ந்த யுத்தமந்திராலோசனை சபை (War Cabinet) மிஸ்டர் லாய்ட் ஜியார்ஜ் அவர்கள் முதல மந்திரியாகவிருக்க நியமிக்கப்பட்ட விஷயத்தை இப்பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறோம். அந்த மந்திராலோசனை சபையார்தானே பிரிடிஷ் குடியேற்ற நாடுகளின் முதல் மந்திரிகளாயிருப்பவர்களையும் இந்தியா மந்திரியவர்களையும் சேர்த்துக்கொண்டு "இம்பீரியல் கான்பரென்ஸ்" என்கிற பேரினால், யுத்தத்தை ஜயகரமாய் முடிக்கும் வகையைப்பற்றியும் யுத்தத்திற்குப்பின் பிரிடிஷ் மஹாராஜ்யத்தின் அமைப்பு எப்படி மாறுபடலாமென்பதைப் பற்றியும் ஆலோசிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். அந்த சபையில் இந்தியாவுக்குப் பிரதிநிதியாகவுள்ள இந்தியா மந்திரிக்குத் துணையாக மூன்றுபேர்களைப் பொறுக்கி இந்தியாவின் பிரதிநிதிகளாயிருந்து ஆலோசனை சொல்ல ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் பேர்:—(1) ஐக்கியமாகாணங்களின் உதவிக் கவர்னராயிருக்கும் கனம் ஸர் ஜேம்ஸ் மெஸ்டன்; (2) இந்தியா கவர்ன்மெண்டில் மந்திரிஸ்தானம் வகித்திருந்து இப்பொழுது பெங்கால் கவர்ன்மெண்டில் மந்திரிஸ்தானம் வகித்து வருபவரும் பம்பாயில் கூடிய காங்கிரஸ மஹாசபைக்கு அக்கிராசனாதிபதியுமாகிய ஸர் ஸத்யேந்திர ப்ரஸாத ஸிம்ஹா அவர்கள்; (3) இராஜபுத்திரஸ்தானத்தில்

பிகானீர் ராஜ்யத்து மஹாராஜா அவர்கள்; ஆகிய இம்மூவரும் இந்தியாவுக்குப் பிரதிநிதிகளாயிருந்துதவ நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ராயல் இண்டஸ்ட்ரியல் கமிஷன்.

இந்தியாவின் கைத்தொழில் வியாபாரவிர்த்திக்கு அனுகூலமான சாதக சாதனங்களை விசாரித்தறிந்து தெரியப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட ராயல் கமிஷன் சபையார் சென்னைக்கு விஜயமாகி ஜனவரி௴ 22௳ முதல் 31௳ வரையில் கோட்டையிலுள்ள கௌன்ஸில் ஹாலில் உட்கார்ந்து சாக்ஷிகளை விசாரித்துவிட்டுப் போனார்கள். இந்தக் கமிஷனுக்குத் தலைவர் ஸர் தாமஸ் ஹாலண்ட் அவர்கள். இதர மெம்பர்கள்:—

(1) மிஸ்டர் ஆல்ப்ரெட் சாட்டர்டன் ஸி. ஐ. இ.
(2) ஸர் பாஸல்பாய் கர்ரிம்பாய்;
(3) டாக்டர் இ. ஹாப்கின்ஸன்;
(4) ஸர் ஆர். என். முகர்ஜி
(5) ஸர் ப்ரான்ஸிஸ் ஸ்டுவர்ட்
(6) கனம். மிஸ்டர் ஸி. இ. லோ
(7) பண்டித் மதனமோஹன மாலவியா
(8) ஸர் டோராப்ஜீடாடா

இந்தக் கமிஷனுக்குக் காரியதரிசி மிஸ்டர் பெல்.

தேசபாஷையிற் போதனை.

டில்லியில் கூடிவரும் வித்யா இலாகாத் தலைவர்கள் சேர்ந்த கான்பரென்ஸுமுன் தேசபாஷை அல்லது ஸ்வபாஷையிற் கல்வி கற்பிக்கவேண்டிய அவசியத்தைப்பற்றி அரசர் பிரதிநிதியவர்கள் அவருடைய பேச்சில் பிரஸ்தாபித்த விஷயமாய் சுதேசமித்திரன் பத்திராதிபர் 24௳ சஞ்சிகையில் பின் வருமாறு எழுதுகிறார். அவருடைய அபிப்பிராயம் நமது அபிப்பிராயத்தோடும் இது விஷயமாய்ப் பேசத்தகுந்தவர்கள் தெரிவித்துள்ள அபிப்பிராயத்துக்கும் ஒத்திருப்பதால் அதை அப்படியே எடுத்துக் கீழே பிரசுரிக்கிறோம்.

"இராஜப்பிரதிநிதியவர்கள் அந்நிய பாஷையிற் பயின்று பரீக்ஷை தேறும் மாணாக்கர்களுடைய கல்விக் குறைவைக்கண்டும் அவர்களுடைய குணத்தை மெச்சிப் பேசியிருப்பது அவருடைய உள்ளப்போக்கைத் தெரிவிப்பதாயிருக்கிறது. லார்ட் செம்ஸ்போர்ட் யூனிவர்ஸிடியில் படித்துத் தேறினவராதலால் யூனிவர்ஸிடி படிப்பின் பிரயாஸை யறிந்து பேசியிருக்கிறாரென்பது நாம் சொல்லாமலே அமையும். சுதேசமித்திரன் அபிப்பிராயம் இது:—"கல்வி ஸ்தாபனங்களில் போதிக்கப்படும் பற்பல பாடங்களையும் மாணவர்கள் நன்கு அறிந்துகொள்ளவேண்டுமாயின், தேசபாஷையின் மூலமாகவே போதனை நடக்கவேண்டுமென்று பலர் விரும்பியிருக்கின்றனர். தேசபாஷையின் மூலமாய் போதிக்கவேண்டிய அவசியத்தையும் நன்மையையும் குறித்து முன்பே நாம் பலதடவைகளில் வற்புறுத்தியிருப்பதோடு, கல்கத்தா ஹைகோர்ட்டில் ஜட்ஜியாயிருந்த பாபு ஸாரதா சரணமித்திரா முதலிய பெரியோர்களின் அபிப்பிராயத்தையும் எடுத்துக் காட்டியிருக்கிறோம். இந்த உண்மையை லார்டு செம்ஸ்போர்ட் நன்குணர்ந்து தேசபாஷை போதனையில் ஆதரவு கொண்டு வற்புறுத்திப் பேசியிருப்பதை இங்கே குறிப்பிடுவதவசியம். வித்தியா இலாகா அதிகாரிகளை நோக்கி இவ்விஷயமாக அவர் சொல்லியதாவது:—

"நமது கல்விமுழுவதும் அன்னிய பாஷை மூலமாகவே போதிக்கப்பட்டிருக்குமாயின் நாம் எப்படியிருந்திருப்போமென்று உங்களைக் கேட்கிறேன். என்னையும் நானே கேட்டுக்கொள்ளுகிறேன். அன்னிய பாஷையின் மூலமாகவே போதனை நமக்கு இருந்திருக்குமாயின் நாம் அதைரியத்துடன் படிப்பை விட்டிருக்கமாட்டோமா? அன்னிய பாஷையின் மூலமாகவே போதனை என்ற தீங்கான முறைமையை தீரமுடன் சமாளித்து விஷயங்களை யறிந்துகொண்டு வெளிக்கிளம்பும் மாணவர்களைக் கண்டு நான் ஆச்சரியத்தில் ஆழ்ந்து விழும்படியிருக்கிறது. எனவே, கூடுமான வரையில் தேசபாஷையின் மூலமாகவே போதிக்கவேண்டும், கடைசியில் தான் ஆங்கில பாஷையின் மூலமாக போதிக்க வேண்டும். இல்லையேல் ஆங்கில பாஷையைப் போதிப்பதில் நாம் மிக்க கவனம் செலுத்த வேண்டும்."

"இவ்விதம் அவர் சொல்லியிருப்பதை அனைவரும் சந்தோஷத்துடன் சிந்தித்துப் பார்ப்பார்களென நம்புகிறோம். இவ்விஷயம் விவாதத்திற்கு வந்தபொழுது தேசபாஷையின்

மூலமாய் போதனை இருக்கவேண்டுமென்று சென்னை மாகாணத்தினர் விரும்பியிருக்கின்றனரென்பது "ஜம்பப் பேச்சாகும்" என நமது வித்தியா இலாகாத் தலைவர் சொல்லியிருப்பதைப் பார்த்தால் பலரும் ஆச்சரியமடைவார்கள். "ஜம்பப் பேச்சாகு"மென்று அவர் இலகுவில் சொல்லிவிட்டது சரியாவென்பது கேள்வி. யுத்தம் முடிந்தபின் இவ்விஷயம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமாதலால், அனைவரும் தங்களது திட்டமான அபிப்பிராயத்தைச் சொல்வதற்கு இப்பொழுது முதற்கொண்டே சிந்தனை செய்ய வேண்டுமென்று ராஜப்பிரதிநிதி அறிக்கை செய்திருக்கிறார்.

லண்டனில் நேர்ந்த பெருவிபத்து.

லண்டன் ஆயுதத் தொழிற்சாலையில் தீப்பற்றி யந்திரம் வெடிக்க, அதனால் அதிக உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் நேர்ந்தது. இறந்தவர்கள் 100-பேர். காயம்பட்டவர்கள் தொகை 400. பொருள் நஷ்டம் ஏராளம். அந்த ஆயுதத்தொழிற்சாலையில் முக்கியஸ்தராயிருந்த ரசாயன நிபுணர் ஆபத்தில் மாண்டனர். அவருடைய மனைவியும் அந்த ஆயுதத்தொழிற்சாலையில் வேலைசெய்யும் ஸ்திரீகளுக்குத் தலைவராயிருந்தார். அவர் அந்த சமயம் வெளியில் போயிருந்த காரணத்தினால் தப்பிக்கொண்டார். இப்படிப்பட்ட ஆபத்துகள் இனி நேரிடாதபடி வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்குக் காரணம் தீவிபத்தன்றி வேறு பிசகொன்றுமில்லையென்று தோன்றுகிறது.

வெடி விபத்தினால் கஷ்டத்திற்குள்ளானவர்களுக்கு உதவி செய்வதற்கு, ஜார்ஜ் அரசர் 250 பவுனும், மஹாராணி 100 பவுனும், அலெக்ஸாந்திரா ராணியார் 100 பவுனும் கொடுத்திருக்கிறார்கள். காயமடைந்தவர்களின் தேக ஸ்திதியைப்பற்றி அரசர் ஆஸ்பத்திரி அதிகாரிகளிடம் விசாரணை செய்தார். அலெக்ஸாந்திரா மஹாராணி விபத்துக்குள்ளானவர்களுக்கு தமது அனுதாபத்தை தெரிவித்திருக்கின்றார்.

ரயில்வண்டித் தொடர்கள் போக்குவரத்துக் குறைவு.

பிப்ரவரிமீ 1உயிலிருந்து ரயில்வே சம்பந்தமாய் செட்டுச்செய்ய சில நூதன விதிகள் ஊர்ஜிதத்துக்குவரும். மெஸபொடேமியாவில் யுத்தம் நடக்கிற இடங்களுக்கு இந்தியாவிலிருந்து ரயில்வே இஞ்சின்களும் வண்டிகளும் அனுப்பவேண்டியிருப்பதால் இதுவரையில் ரயில் பிரயாணத்துக்கிருந்த சாதகம் இனிக் கிடைக்காது. இதுவரையில் போய்க்கொண்டிருந்த ரயில்வண்டிகள் சில நிறுத்தப்பட்டும் மற்றவையின் வேகம் குறைக்கப்பட்டும் இருக்கிறது. ஏனென்றால் நிலக்கரி போதுமானதாயில்லையென்கிறார்கள். தென்னிந்தியா ரயில்வேயில் இதற்குமுன் 4-வண்டித்தொடர்கள் முற்றமுடியப் போய்க்கொண்டிருந்தன. அவற்றில் ஒன்று நிறுத்தப்படும். மெயில் டிரெயினிலும் பிரயாணிகள் போகும் எக்ஸ்ப்ரெஸ் வண்டிகளிலுமுள்ள "ரிப்ரெஷ்மெண்ட் கார்"—சிற்றுண்டி வண்டிகள் எடுத்துவிடப்படும். அதற்கு பதிலாக முக்கிய ஸ்டேஷன்களில் வண்டித்தொடர்கள் அதிகமாய் நிற்கும். மெயில்வண்டிமட்டும் மணிக்கு 30 மயில் விகிதம் ஓடும். மற்றவண்டிகள் மணிக்கு 20-மயில்தான் ஓடும். ரயில் சார்ஜும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. மெயில் வண்டிகளுக்கு 1-க்கு $1\frac{1}{2}$ ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. பிரயாணிகள் ஏறிச்செல்லும் வண்டிகளில் போகிறவர்களுக்கு ஒன்றுக்கு ஒன்றேகாலாக சார்ஜ் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இவை போன்ற இன்னும் சிலபிரதிகூலமான கட்டுப்பாடுகள் செய்யப்பட்டிருப்பதோடு ஜனங்கள் அத்தியாவசியமாக விருந்தாலொழிய ரயில்பிரயாணம் செய்வதை நிறுத்திவைத்தல் நலமென்று அவர்களுக்கு உபதேசமும்செய்து வருகிறார்கள். சரக்குகள் ஏற்றுவதும் இப்படியே குறைபட்டுப்போகும். இஃதெல்லாம் யுத்த நிர்ப்பந்தங்களினால் நேர்ந்த செட்டுமட்டு நிதானம் என்று சொல்கிறார்கள். ஐரோப்பாவில் நடக்கும் சண்டையின் பாரம் அத்தேசங்களிலுள்ள குடிகள் தலையில் நன்றாக உறைத்துவர நாம் தூர இருப்பதினால் ஒருவாறு அதை அவ்வளவாக உணராமலிருந்தோம். இப்பொழுது அவை நம்தேச ஜனங்கள் தலையிலும் உறைக்கத்தலைப்பட்டிருக்கிறது. அடுத்த ஏப்ரல் மாதம்முதல் வரியை உயர்த்தவும் யுத்தச்செலவுக்கு இந்தியாவில் கடன் வாங்கி பணம் அனுப்பவும் ஏற்பாடு செய்யப்படும்.

"OBEISANCE TO THEE! O THOU, MIGHTY WITH MULTIPLE MIGHT,"

"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

"Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End.

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."

அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** **"Approved"**

புத்தகம். **24.**] நளஹு மார்ச்சுமீ, **1917**ஹு பங்குனிமீ [சஞ்சிகை **12.**

Business "Terms":

N.B.—To avoid all possibility of misapprehension, we *reiterate* our "terms" (approved by our constituents and by Government) which, from the beginning, are :—

1. Cash or Remittance with Order : Rs. 5 per Vol.; or,
2. *One month's credit at the arrears rate* : Rs. 6 per Vol.
3. Arrears to be cleared on rendering of a/cs. or by V.P.P.
4. All Indents registered for School Edition only and to begin with the current volume (corresponding with Tamil or Official year, April-March).
5. Subscriptions registered to continue from Vol. to Vol. and not to be discontinued †in the middle of a Vol.
6. No popular edition issued owing to scarcity of paper.
7. Monthly parts (spare or sample) 8 (eight) annas each.

General Notice.

☞ Owing to rarity of credit and scarcity of paper, we beg to make it clear and give notice to all that—

- i. the *terms* offered are for regular subscribers only ;
- ii. no exception to these rules can be made or recognised ;
- iii. short credit allowed should not be misused ;
- iv. unpaid accounts are subject to "fluctuations" and overcharges ;
- v. all arrears should be fully paid *within* three months (*time being an important factor*) ;
- vi. every outstanding account will be charged *One Rupee Extra* per Vol. or any part thereof for every notice or Reminder sent after this period;
- vii. all subscribers are *ipso facto* bound to observe the rules.

(*By Order of the Managing Committee.*)

THE MANAGING AGENTS, "VIVEKACHINTAMANI,"
Novr. 1916.] *Lalitalaya*, 19, *Adam Street*, *Mylapore.*

☞ *Calculations made are based on the principle of one copy for each school which should be strictly adhered to.*

†Notice of discontinuance to have effect must be given in time in writing before a New Volume begins in April and after all the arrears due to the end of the current Volume have been paid and account settled.

N.B.—Due care is taken in addressing and personally handing copies to the Post Office at Brodies' Road and there the publishers' responsibility ceases. Evidence of posting is preserved and can be made available for enquiries. The publishers do not undertake to replace missing copies but will endeavour to supply spare copies, when available, on payment, if applied for within 30 days after the 15th of each month for which such copies are due.

Copies lost in transit, if promptly brought to notice, will be referred to the Postmaster-General direct who has written to say "that every effort will be made to trace" them. "If you should have further cause for complaint of the loss or delay of articles, similarly posted or addressed" continues the same high authority, "I shall be glad if you will let me know without delay, giving me the fullest particulars possible."

"OBEISANCE TO THEE! O THOU, MIGHTY WITH MULTIPLE MIGHT, REDEEMER THOU! REPELLER OF THE ENEMY'S HOSTS!"

HAIL MOTHER!

Sweet Thy water, Sweet Thy fruits.
Cool blows the scented south wind.
Green waves thy corn.
Hail Mother! (Vande Mataram)

Land of the glad white, moon-lit nights.
Land of trees with flowers in bloom.
Land of Smiles, land of voices sweet,
Giver of joy, giver of desire.
Vande Mataram!

Seventy million* voices resounding,
Twice seventy million arms in resolve uplifting
Dare any call Thee weak?
Obeisance to Thee! O Thou, mighty with multiple might,
Redeemer Thou, Repeller of the Enemy's hosts.
Vande Mataram!

In Thee all Knowledge, Religion Thou,
Thou, the Heart, Thou, the seat of life,
The "breath of life in the flesh"
Vande Mataram!

O Mother, the strength of this arm, Thou,
Thou, the Devotion in the heart,
Thine, the Image consecrate,
From temple to temple.
Vande Mataram!

The wielder of ten arms, Durga, Thou,
Thou, the Goddess of wealth, bowered in the [lotus,
Thou, the Muse dispensing Wisdom.
Obeisance to Thee!
Vande Mataram!

Salutations to Thee! Holder of Wealth, peerless
With thy limpid water and luscious fruit,
Mother! Hail, Mother!
Verdant, Artless, Sweet—Smiling,
Radiant, Sustaining, Nourishing,
Mother! Hail, Mother!
Vande Mataram!

அருந்திறலுடையாய் அருளினை போற்றி!

தாயே! வந்தனம்!

I
இனிய நீர்ப்பெருக்கினை, இன்கனி வளத்தினை,
தனிநறு மலயத் தண்காற் சிறப்பினை,
பைந்நிறப் பழனம் பரவிய வடிவினை!
போற்றிதாய்! (வந்தே மாதரம்)

II
வெண்ணிலாக்கதிர் மகிழ்விரித்திடு மிரவினை!
மலர்மணிப் பூத்திகழ் மரன்பல செறிந்தனை!
குருநகையின் சொலார்† குலவிய மாண்பினை!
நல்குவை யின்பம், வரம்பல நல்குவை!
வந்தே மாதரம்!

III
முப்பது கோடிவாய்* (நின்னிசை) முழங்கவும்
அறுபது கோடி தோளுயர்ந் துனக்காற்றவும்
"திறனிலாள்" என்றுனை யாவனே செப்புவன்!
அருந்திறலுடையாய், அருளினை, † போற்றி!
பொருந்தலர் படைபுறத் தொழித்திடும் பொற்பினை,
வந்தே மாதரம்!

IV
நீயே வித்தை, நீயே தருமம், †
நீயே யிதயம், நீயே மருமம், †
உடலகத்திருக்கு முயிருமன்னீயே!
வந்தே மாதரம்!

V
தடந்தோ ளகலாச்சத்தி நீ! யம்மே,
சித்தநீங்காதுறு பத்தியு நீயே
ஆலயந்தோறு மணிபெற விளங்கும்
தெய்விக வடிவமுந் தேவியிங் குனதே!
வந்தே மாதரம்!

VI
ஒரு பது படைகொளு முமையா வணியே!
கமல மெல்லிதழ்களிற் களித்திடுங் கமலை நீ!
வித்தை நன்கருளும் வெண்மலர்த் தேவி நீ!
வந்தே மாதரம்!

VII
போற்றி! வான் செல்வீ, புரையிலை † நிகரிலை,
இனிய நீர்ப் பெருக்கினை, இன்கனி வளத்தினை,
சாமள நிறத்தினை † சரளமாந்† தகையினை,
இனியபுன் முறுவலாய்! இலங்குநல் லணியினை,
தரித்தெமைக்† காப்பாய்! தாயே, போற்றி!
வந்தே மாதரம்!

---

* When Mr. Bankim Chandra Chaterjee wrote this song the population of Bengal was only 70 millions. In the Tamil rendering, this has been changed into "300 millions" so that the song might apply to our *Bharatmata* (Mother-India) instead of merely a single Province.

* பெங்காளி பாஷையிலே 7-கோடி என்றே கூறியிருக்கின்றது. ஆனல் அது பெங்காள மாகாணத்தை மட்டிலுமே குறிப்பிட்டது. 30-கோடி இந்தியா முழுமையின் ஜனத்தொகை.

† இக்குறிப்பிட்ட இடங்களில் ஆங்கில மொழிபெயர்ப்பானது சிறிது மாறுபட்ட தோற்றங் கொண்டிருப்பதால் பெங்காளிச் சொற்களைத் தழுவியே தமிழ் எழுதப்பட்டிருக்கின்றது.

"No good work is ever lost." "My best wishes for the success of your publication"—*Sir Harold Stuart, K. C. V. O.*
புஸ்தகம்-24.] [சஞ்சிகை-12.
"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."
நளவருட பங்குனி } விவேக சிந்தாமணி { February-March. 1917.
ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழ்ல் வந்ததென்னென் றேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

THE DEFENCE OF INDIA FORCES.
இந்தியா பாதுகாப்புச் சைனியங்கள்.

கனம் பொருந்திய இராஜப்பிரதிநிதியவர்கள் இந்தியா சட்டநிரூபணசபையின் முன் பேசியதிலிருந்து இந்தியா பாதுகாப்புக்காகப் புதிதாய் சைனியங்கள் சேர்க்க ஏற்பாடு செய்யப்போவதாகவும் அதற்காக இந்தியாவிலுள்ள ஐரோப்பியர்கள் எல்லாரும் 18-வயதுமுதல் 40-வயது வரையில் உள்ளவர்களாயிருக்குமளவில் அவரவர்கள் பேர்களை ரிஜிஸ்தர் செய்து கொள்ளவேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்களென்றும் தெரியவந்தது. இதன் கருத்து என்னவென்றால், புதிதாய் இந்தியா பாதுகாப்புக்காகச் சைனியங்கள் சேர்க்க வேண்டியதைப்பற்றி சட்டம் உண்டுபண்ணப் போவதாகவும் அந்தச்சட்டம் செய்துமுடிந்து ஊர்ஜிதத்துக்கு வரும்போது ஐரோப்பியர்களெல்லாரும் இராணுவத்தில் சேரத் தயாராயிருப்பார்களென்றும் சொன்னார். அப்படியே இந்தியர்களில் இராணுவத்தில் சேரவிரும்புகிறவர்களையும் இந்தியர்கள் சேர்ந்த படைகளாகச் சேர்த்து யுத்தத்துக்கு வேண்டிய தர்பீது செய்ய ஏற்பாடு செய்யப்படுமென்றும் சொன்னார். இந்தியர்கள் தொகை ஏராளமாயிருப்பதால் அவர்களை நிர்ப்பந்தித்து இராணுவத்தில் சேரச்செய்வது அசாத்தியமாக விருக்குமென்றும் இஷ்டப்பட்டு இராணுவத்தில் சேருவதற்கு முன்வருகிறவர்களை மட்டும் சேர்த்துப் பழக்கப்படுமென்றும் சொன்னார். இந்த சைனியங்களெல்லாம் இந்தியாவின் எல்லைக்குள் உபயோகிக்கப்படுவதற்காகவே சேர்க்கப்படுகின்றன. ஆனாலும் அவசரம் நேர்ந்தால் இந்தியாவுக்கு வெளியில் யுத்தகளத்துக்கும் அனுப்பப்படுவார்களாதலால் அதற்கும் தயாராக விருக்கவேண்டும். இதுவரையில் இந்தியர்களை வாலண்டியர்களாகச் சேர்ப்பதில்லையென்றிருந்தார்கள். இது இந்தியாவுக்கு ஒரு பெருங்குறையாகவிருந்தது. ஏனென்னில், இந்தியர்கள் தங்கள் சொந்ததேசத்தைக் காத்துக் கொள்ள அநர்கர்களாயிருந்தார்கள். இப்பொழுது அக்குறைதீர அவர்கள் இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். ஆனால் இது யுத்தகாலம் வரையில்தான். ஐரோப்பாவில் யுத்தமின்னும் வெகு மும்முரமாகவே நடந்து வருகிறது. ஜெர்மனியா சமாதானப் பேச்சு விட்டுப் பார்த்ததெல்லாம் வீண் பசப்பு வார்த்தையென்கிறார்கள்.

யுத்தமுகத்தில் சேதமான சைனியங்களுக்கு பதிலாகப் புதிய சைனியங்கள் அனுப்பிக் கொண்டேயிருக்கவேண்டியிருக்கிறது. ஆள் மாகாணம் போதுமானதாயில்லை. ஆகையால் இந்தியாவில் ஏராளமான சைனியங்கள் சேர்க்க ஆள் மாகாணம் நிறைந்திருப்பதால் இந்தச் சமயத்தில் புதிதாய் இந்தியாவின் பாதுகாப்புக்காக வென்று சைனியங்கள் சேர்க்க யத்தனித்து வருவது உசிதமே. கனம். வா. பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் அவர்கள் நாமக்கல்லில் இதைப் பற்றிப் பேசியபொழுது அவருக்கு வயது 18-க்குமேல் 40-க்கு உள்ளாக இல்லையே யென்று வருந்துவதாகச் சொன்னார். இருந்தால் அவர் தேசப் பாதுகாப்புக்காகச் சேனையில் சேர்ந்து இந்தியாவுக்காக யுத்தகளத்தில் பிராணனைவிட்டு வீரசொர்க்கம் அடையத் தயாராயிருப்பார். வயதானவர்களெல்லாரும் இவ்வளவு உற்சாகமாகப் பேசும்பொழுது பாலியமும் தேகபலமுமுள்ளவர்கள் எவ்வளவு ஆவலாக இருக்கமாட்டார்கள்.

THE NEW SUBMARINISM.
ஜெர்மன் சண்டை புதுமோஸ்தர்.

ஜெர்மானியர் பசப்புவார்த்தை காட்டி சமாதானப் பேச்சு விட்டதெல்லாம் எதிரிகளை ஏமாற்றி வெற்றி பெறலாமென்று செய்த தந்திரமென்று தெரிகிறது. ஏனெனில் சமாதானப் பேச்சு விட்டுக்கொண்டிருக்கையிலேயே இரகசியத்தில் வெற்றி பெறுவதற்கான பெருமுயற்சி யொன்று செய்யத் தயாரித்து வந்தார்கள். அது என்னவெனில்: சமுத்திரத்தில் எதிரிகள் நாட்டுக்குப் போக்குவரத்து இல்லாதபடி அடிக்க, சண்டைக்காரர்கள் கப்பலாக விருந்தாலும்சரி, சண்டையில் சேராதவர்கள் கப்பலாயிருந்தாலும்சரி, அவர்கள் குறிப்பிட்ட எல்லைக்குள் எந்தக் கப்பலாவது தலைகாட்டினால் அதை கடலின்கீழ் பாய்ந்து தாக்கும் 'டார்பிடோ' யந்திரமமைத்த படகுகளால் தாக்கியுடைத்து நாசம் செய்துவிடுவதாகத் தீர்மானித்து ஜனவரிமீ 31உ முதல் இந்தப் புதுமோஸ்தர் சண்டை ஊர்ஜிதத்துக்கு வருமென்று வெளியிட்டு விட்டார்கள். வெளியிட்டபடியே எதிரிகள் கப்பல்கள் பலவற்றோடு அமெரிக்கா யூனைடெட் ஸ்டேட்ஸ் கப்பல்கள் சிலவற்றையும் உடைத்துத் தகர்த்துவிட்டார்கள். இதனால் அமெரிக்கா ஐக்கியமாகாணத்து கவர்ன்மெண்டாருக்கும் ஜெர்மனியாருக்கும் பேச்சுவார்த்தை யில்லாதபடி மனஸ்தாபம் முற்றிவிட்டது. அந்தந்தத் தேசங்களிலுள்ள தூதர்கள் திரும்பி விட்டார்கள். யுத்தம் நடப்பது சித்தம்போலிருக்கிறது. ஆனால் இன்னும் யுத்தம் ஆரம்பித்துவிட்டதாகப் பயிரங்கப்படுத்தப் பெறவில்லை. அதற்குள் சமாதானமாய் இதை ஒருவிதம் தீர்த்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். ஜெர்மானியர்க்கு கைசளைக்கும் காலமாயிருப்பதால் எப்படியாவது சீக்கிரத்தில் வெற்றி பெறவேண்டுமென்று பார்க்கிறார்கள். ஆங்கிலேய கப்பற் சேனைகள் ஜெர்மனிக்கு போக்குவரத்தில்லாதபடி மறியல் யுத்தம் செய்துவந்ததில் அத்தேசத்தாருக்கு சாப்பாட்டுக்குப் போதாமல் அவர்கள் பட்டினிகிடக்கும்படியான நிலைமைக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். ஜனங்கள் பட்டினிகிடக்க நேரிட்டால உற்சாகத்தோடு போர்செய்யமுடியாது. தேசத்துக்குள் கலகமுண்டாகும். இதைத் தடுக்கவென்று ஜெர்மனியார் ஆங்கிலேயரையும் அப்படியே மறியல் யுத்தம் செய்து அவர்கள் கப்பற்படைகளைக் கலக்கி அவர்கள் கொட்டத்தை அடக்கப்பார்க்கிறார்கள். எதிர்நின்று சண்டைபோட ஜெர்மானியருக்கு கப்பற் சைனியபலம் போதாதாதலால், தண்ணீரில் மூழ்கிக் கப்பலைத் தாக்கி யுடைக்கும் படகுகளை ஆயிரக்கணக்காய்ச் செய்து முடித்துக்கொண்டு தனியாக வரும் கப்பல்களை யெல்லாம் தண்ணீருக்குள்ளாகச் சென்று தாக்கியுடைத்துச் சேதம் செய்து வருகிறார்கள். பிப்ரவரிமீ 14உக்குள் சேதமான கப்பல்களின் தொகை அதிகமாகவேயிருக்கிறது. இந்த விகிதம் கப்பற்சேதம் செய்துவந்தால் இது எவ்வளவு காலத்துக்கு நடக்குமோ யோசனைதான்! ஆனால் பிரிடிஷார் அஞ்சாத நெஞ்சராய் பகைவர்கள் செய்முயற்சிக்கு எதிர் முயற்சிசெய்து புதிய கப்பல்களைச்செய்து கப்பற்படையை விர்த்திசெய்து வருகிறார்கள். வியாபாரககப்பல்களை யெல்லாம் சண்டைக்கு முஸ்தீபாக ஆயுதம் அமைத்து வருகிறார்கள். இந்தப் போராட்டம் எப்படி முடியுமோ அது இன்னும் இரண்டொரு மாச காலத்தில் தெரியலாம்போலும்.

THE WAR EXPENDITURE.
யுத்தச் செலவு.

இந்தப் பாரத யுத்தம் துவங்கின முதல் வருஷத்தில் பிரிடிஷாருக்கு தினப்படி 10-லக்ஷம பவுன் செலவு நேர்ந்துவந்தது. இரண்டாவது வருஷம் துவங்குமுன் தினம் ஒன்றுக்கு 35-லக்ஷம் பவுன் செலவு பிடித்தது. இன்னும் சிலமாதங்களுக்கெல்லாம் இந்தச் செலவு தினம் ஒன்றுக்கு 50-லக்ஷம் பவுன் அல்லது அரைக்கோடி பவுன் ஆக அதிகரித்தது. இப்பொழுது அதுவும் போதாமல் சென்ற இரண்டு மாதங்களாக தினம் ஒன்றுக்கு 57-லக்ஷம் பவுன் செலவாகி வருகிறதென்று அரசிறை மந்திரி தெரிவித்திருக்கிறார். இப்பொழுது ப்ரான்ஸ் தேசத்தாருக்கு தினம் 40-லக்ஷம் பவுன் செலவாகி வருகிறது. ஆங்கிலேயர் பிரான்ஸ்க்காரர் இவ்விருவர் செலவு மட்டும் 1915௵ செப்டெம்பர்மீ வருஷத்துக்கு 215-கோடி பவுன் விகிதமாயிற்று. அது இப்பொழுது 355 கோடி விகிதமாயிருக்கிறது. அதாவது 100-க்கு 70 விகிதம் அதிகரித்திருக்கிறது. இந்த விகிதம்போல் கணக்குப் பார்த்தால் அடுத்த செப்டெம்பர்மீ 600 கோடி பவுன்விகிதமாகப் பெருகிவிடும் என்கிறார்கள். யுத்தம் ஆரம்பித்தது முதல் ஜெர்மனியின் யுத்தச்செலவுமட்டும் 3 ஆயிரம்கோடியே 500 லக்ஷம் பவுன் ஆயிருக்கிறதென்று கணக்கிட்டிருக்கிறார்கள். இந்த யுத்தத்தில் சம்பந்தப்பட்ட இன்னுமுள்ள இதர தேசத்தார்கள் செலவை யெல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால் எவ்வளவு ஆகுமென்று சிந்திக்க மனம் கூசுகிறது.

THE USE OF TOYS IN THE EDUCATION OF CHILDREN—III.
குழந்தைகளும் விளையாட்டுக் கருவிகளும்.—III.

(மாசிமீ சஞ்சிகையின் 331-ம்பக்கத் தொடர்ச்சி.)

குழந்தைகள் பொம்மைகளையும் விளையாட்டுக் கருவிகளையும் கண்டு அவைகள் தங்களுக்கு வேண்டுமென்று ஆசைப்படவும், கிடைத்தால் வைத்துக் கொண்டாடவும்கற்றுகொண்ட பிறகு அப்பொம்மைகளையும் விளையாட்டுக் கருவிகளையும் தாங்களே வைத்துக்கொண்டு தனியாக அனுபவிக்க விரும்பாது தங்களை யொத்த சிறு குழந்தைகளோடுகூட அவைகளை வைத்துக்கொண்டு விளையாட விரும்புகின்றன. அப்பொழுது தங்களதென்று சொந்தம் பாராட்டிக்கொண்டாடிய விளையாட்டுக் கருவிகளைத் தங்களோடு விளையாடும் மற்றக் குழந்தைகளுக்கும் கொடுக்கக் கற்றுக்கொள்கின்றன. இதனால் அனுதாப சிந்தையுண்டாகிறது; அனுதாபசிந்தை வளரவே, பிறகு தங்களுடைய சிறுதங்கை தம்பிகளுக்குத் தங்கள் பொம்மைகளைக் கொடுக்கவேண்டுமென்கிற எண்ணம் உதிக்கிறது. இது மூலமாக தயாளத்துவம் உதிக்கக்காரணமாகிறது. இப்படியாக விளையாட்டுக்கருவிகள் குழந்தைகள் மனதில் அனேக நல்லெண்ணங்களும் கருத்துக்களும் உதிக்கக் காரணமாகின்றன. விளையாட்டுக் கருவிகளில்லாவிட்டால் இந்த நல்ல எண்ணங்கள் கருத்துகள் எல்லாம் உதிப்பதற்கு மூலமாயிருக்கும் காரணம் இல்லாமற் போய்விடுகிறது. விளையாட்டுக் கருவிகளினால் மனதும் சிந்தையும் சரியாக விர்த்தியடைந்து லோகசுபாவத்தையும் மாதிரியையும் அனுபவித்தறிந்துகொள்ள ஆஸ்பதமான ஸ்திதியை யடைகின்றன. ஆகையால் நாம் விளையாட்டுக்

கருவிகளையும் பொம்மைகளையும் அலக்ஷியம் செய்யாமல் நமது குழந்தைகள் விர்த்தியடைய மிகவும் உபயோகமான கருவிகளாக மதித்து தெய்வீகமாக அவைகளைப் பாராட்டவேண்டும். குழந்தை மனம் நன்னடத்தையின்னதென்று ஊகித்தறியச் சக்திபெறுமுன், விளையாட்டுக் கருவிகளும் பொம்மைகளும் அம்மனதில் நல்லெண்ணங்கள் உதிக்கும்படிச் செய்கின்றன. குழந்தைகள் விளையாடும்பொழுது பொம்மைகளைத் தாலாட்டிச் சீராட்டுவதையும், அது அழுவதுபோல் பாவித்து சமாதானப்படுத்துவதையும், பொம்மைக்குக்காயலாவென்று சிகிச்சைசெய்வதையும், இது போன்ற நடவடிக்கைகளையும் அலக்ஷியம செய்வது பிசகு. குழந்தைகளுக்கு அத்தருணங்களில் உண்மையான நல்லெண்ணங்கள் உதித்து மனதில் பதியும்படியான நிலையிலிருக்கின்றன. அச்சமயத்தில் நாம் யோசனையின்றி அலக்ஷியம் காட்டினால் அம்மேலான எண்ணங்கள் மனதில் பதிந்து வேரூன்றுவதற்குப் பங்கமுண்டாகும்.

புஸ்தகங்களைக்கொண்டு குழந்தைகளுக்குப் போதிக்க முடியாதவைகளை ஒழுங்கோடு கூடிய வேடிக்கை விளையாட்டுக்களால் மிக நன்றாகவும் இலகுவாகவும் போதிக்கலாம். இதனாலேயே எந்தெந்த தேசத்தில் குழந்தைகளுக்கு விளையாட்டுக்கருவிகளும் பொம்மைகளும அதிகமாகக் கொடுத்துதவிச் சீராய் வளர்த்து வருகிறார்களோ அந்தந்தேசத்தார் விசேஷமாக ஏகத்துவம, (அதாவது, குருட்டுத்தனமாய்ப் பிறரைப்பார்த்துப் பின்தொடராமல், தாங்களாக சொந்த யோசனைசெய்து சுயபுத்தியைக்கொண்டு நடக்குந்தன்மை)* எதிலும் மிகமேன்மையான எண்ணங்களைத் திரட்டி உருவகப்படுத்திக்கொண்டு அதற்கொப்ப நடக்குந்தன்மை†, சௌரியம்‡ முதலிய மேலான குணங்களில் சிறந்து விளங்குகிறவர்களாக விருக்கிறார்கள். இந்த உண்மையை ப்ரோபெல் என்பவர் கண்டு பிடித்து இந்த சூக்ஷ்ம வழியை யனுசரித்துக் குழந்தைகளைப் படிப்பித்துப் பழக்கவேண்டுமென்று, வேடிக்கை விளையாட்டுகளையெல்லாம் நன்றாக கவனித்துத் தீர ஆலோசித்து அவைகளை வித்தியாவிஷயத்துக்கு அனுகூலமாக, அதாவது குழந்தைகள் நாலாவிதத்திலும் விர்த்தியடைந்து வளருவதற்கு ஒத்தாசையாக விருக்கும்படி ஒழுங்குபடுத்தி முறைக்குக் கொண்டு வந்தார். இப்படி அவர் நூதனமான போதனா முறை கண்டுபிடித்ததில் அவர் உபயோகப்படுத்தின வழி வகைகள் ஆதிகாலந்தொட்டு புத்திசாலிகளான தாய்மார் தங்கள் குழந்தைகளுக்கு விளையாட்டுக்காட்ட உபயோகித்து வந்த பந்து, கல், குச்சி, பாட்டு, விளையாட்டு, கஸரத் முதலியவைகளேயன்றி வேறல்ல. அப்படியானால் இவைகளை அவர் உபயோகித்ததில் விசேஷமென்ன வந்ததென்று கேட்டால், அவர் வேடிக்கை விளையாட்டுகளை உபயோகித்ததில் குழந்தைகள் உத்தேசமின்றி, ஒழுங்கற்று, நினைத்தபடி விளையாடுவதை ஒழித்து, ஒவ்வொரு விளையாட்டையும் ஒழுங்காகவும், கருத்தாகவும், இடையில அதை விட்டு வேறொன்றில் மனம் பற்றுதபடி திருத்தமாகவும் விளையாடும்படி குழந்தைகளுக்கு ஒத்தாசைசெய்து எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்துவதை ஒரு பெரிய காரியமாகக்கொண்டு நிறைவேற்றத்துவக்கினார். விளையாட்டுக் கருவிகளை நினைத்தபடி உபயோகித்து நினைத்தபடி யெறிந்துவிட்டுப்போவது கூடாதென்று காட்டித் தடுத்தார். விளையாட்டிலும் குழந்தைகள் மனதை ஒருவழிப்படுத்தி அந்தவழியில் சரியாகச் செல்வதால் விர்த்திக்கிடமுண்டாகும்படி அவ்விளையாட்டுகளையெல்லாம ஒழுங்குபடுத்தினார். இப்படி ஒழுங்குபடுத்திய

* Individuality. † Idealism. ‡ Heroism.

விளையாட்டுகளே 'கிண்டர்கார்டன் விளையாட்டுகள்' என்றும், அவ்விளையாட்டுக்கு வேண்டிய கருவிகளுக்கே 'கிண்டர்கார்டன் கொடைகள்' என்றும் பேர் வழங்கிவருகிறது. நமது தேசத்தில் வழங்கிவரும் விளையாட்டுகள், பாட்டுகள் முதலியவைகளை 'கிண்டர்கார்டன் முறை'க்கு ஏற்கும் வண்ணம் உபயோகிக்கலாமென்று அனேகம் பாட்டுகள் விளையாட்டுகளை அதற்கேற்ப உபயோகிக்கும் விதத்தை யெடுத்து விளக்கிக்காட்டி இவ்விவேகசிந்தாமணியில் பிரசுரித்து வந்திருக்கிறோம். 'கிண்டர்கார்டன்' விளையாட்டுக்கும், சாதாரணமாகக் குழந்தைகள் நம் வீடுகளில் விளையாடுகிற விளையாட்டுக்கும் ஒரு பெரிய வித்தியாசமுண்டு. கிண்டர்கார்டனில் குழந்தைகள் விளையாடும் விளையாட்டு ஒவ்வொன்றும் ஒரு பலனை உத்தேசித்துச் செய்யப்படும். அப்பலன் சித்திக்கும்படி கிண்டர்கார்டன் உபாத்தியாயர் குழந்தைகள் விளையாடுவதைப் பார்த்திருந்து அவர்களை நிர்ப்பந்திக்காது ஹிதமாகவே சரியான வழி காட்டி அந்தவழியிற் செல்ல நடத்திக்கொண்டு போவார்கள். வீட்டில் விளையாடும் விளையாட்டுகளோ மேற்பார்வையற்று அடிக்கடி மாறும் குழந்தைகள் மனபேதத்துக்குள்பட்டும், வீண்காலப்போக்கு, சோம்பித்திரிதல், அற்பசொற்பம் முதலிய குற்றங்களுக்கு இடந்தருவனவாகவு மிருக்கும். இவ்வித குற்றங்களுக்கு இடமுண்டானால் அவ்விளையாட்டு வளர்ச்சிவிர்த்திக்குக் காரணமாகவின்றி ஒழுங்கீனம், துர்க்குணம் இவைகளுக்கு ஆதாரமாகின்றன. குழந்தைகள் விளையாடும்பொழுது நடுவில் நேரும் இடையூறுகள், வீணெண்ணங்களால் அவ்விளையாட்டின் நோக்கமும் பயனும் கெட்டுப் போகாதபடி காக்க அவர்களுக்கு தக்கவர்கள் உதவியாயிருந்து வழிகாட்ட வேண்டியது அவசியம். ஆனால் அப்படி வழி காட்டி நடத்திக்கொண்டு போவதில் அவர்களை நிர்ப்பந்திக்காமல் லாவண்யமாய் நாம் அவர்களை நடத்துவது தெரியாதபடி அவர்களிடத்தில் வெகு மிருதுவாக நடந்துகொள்ளவேண்டும். இப்படியாகக் குழந்தைகளின் வித்யாப்பியாச விஷயத்தில் பொம்மைகளும் விளையாட்டுக் கருவிகளும் மிக அவசியமும் உபயோகமுமானவைகளென்பது ஸ்பஷ்டமாய் விளங்கும். விளையாட்டுக் கருவிகளினாலேயே குழந்தைகளுக்கு குணங்களெல்லாவற்றிலும் மேலான மானுஷிகத்தனம் முதல்முதல் உதிக்கிறது. இதற்கு ஆதாரமாகவிருப்பது அனுதாபம். அனுதாப குணம் பொம்மை விளையாட்டில்தான் குழந்தைகளுக்கு முதல்முதல் உதிக்கிறது. விளையாட்டுபொம்மையில்லாவிட்டால் அக்குணம் உதிப்பதற்கு அனுகூலமின்றிப் போய்விடும். ஏனென்றால் சிறு குழந்தைகளுக்கு பொம்மை விளையாட்டுக்கருவிகள் மூலமாகவின்றி மற்றப்படி லோகவிஷயங்களைக் கிரகித்துக் கொள்வதற்கான சக்தியில்லாமலிருக்கிறது.

இது சங்கதியை முன்னரேயெடுத்து விளக்கிக்காட்டியிருக்கிறோம். விளையாட்டுக் கருவிகளையுபயோகித்தல் வித்தியாரம்பத்தின் பிரதமபாகமென்னலாம். இதையொட்டி இதற்கு மேல் வருவது 'பொருள் பாடம்' ஆகும். 'கிண்டர்கார்டன்' முறையில் இந்தப் 'பொருள் பாடம்' சொல்லல், விளையாட்டுக் கருவிகளையுபயோகித்தலுக்கு அடுத்த இரண்டாவது படியில் வருவதாகச் சொல்லலாம். இதைப்பற்றிப் பின்னால் வேறொரு சஞ்சிகையில் எழுதுவோம்.

C. V. S.

SOME REFLECTIONS ON THE STATE OF THE COUNTRY.

BY A COUNTRY MAN.

பஞ்சமும்-பிரபஞ்சமும்

அனுபவசித்தாந்தம்.

M. A. நெல்லையப்பர்

இந்த பூலோகம் ஐஸ்வரியம் நிறைந்ததாயிருந்தும் 'ஆறிடும் மேடும் மடுவும் போலாஞ் செல்வம்' என்பதுபோல ஆங்காங்கு தரித்திரமும் குடிகொண்டிருக்கிறது. இதனை இந்தியாவில் நேரில் அறிந்துகொள்ளலாம். வீதி வழிநின்று ஜனங்களின் நடையுடைபாவனைகளைக்கண்டும் அறியலாம். இவ்விதம் முக்கியமாய் நம் இந்தியர்களில் பலர் ஏன் இங்ஙனம் கஷ்டப்படவேண்டும்?

முதலாவது, வேலைசெய்து, அதற்குத் தக்க ஊதியம்-சம்பளம்-கிடையாததாலும் (வேறு மார்க்கமின்றி) அதிருப்தி அடைதல்; அற்ப காரியத்தில்கூட ஒற்றுமையாய் இல்லாதிருத்தல்; தன்னயம் பாராட்டுதல்; கைத்தொழில் வியாபாரம் விர்த்தியாகாது மேன்மேலும் கஷ்டமடைதல்; தேசாபிமானம், இரக்கம் இவை குறைந்திருத்தல்; ஊக்கமின்மை இன்னும் இது போன்ற பற்பல காரணமுள.

எந்த விஷயத்திலும் நல்ல எண்ணமுண்டாகுதலும், பிறர் நன்மையை நாடுதலும், பரோபகாரமாயும், பிறர் குற்றத்தை தூறாமலும், வேலைசெய்வதில் சிறிது பாகமேனும் தேச நன்மைக்குப் பாடுபடக் கூடியவராயும் இருத்தல் மிகுந்த நன்மைதரும்.

சிலர் சம்பாதிப்பது கொஞ்சமாயிருந்தபோதிலும்-எண்ணாதும்எண்ணி-ஆகாசக்கோட்டை கட்டுகின்றனர். ஒரு விஷயத்தில் புகுமுன் தீரயோசிப்பதில்லை. ஆரம்பித்த தொழிலை மனோவேகம்போல் விர்த்தியாகவில்லையென்று விட்டுவிட்டு அதிகமான கஷ்டத்துக்குட்படுகின்றனர்.

(1) சுமார் நூற்றுக்குப் பத்துப்பேர் அளவுக்குமிஞ்சிய செல்வத்தால் மகிழ்ந்து வாழ்கின்றனர்.

(2) சுமார் நூற்றுக்கு பதினைந்துபேர் வரவுக்குத் தக்க செலவுசெய்து திருப்தியாயிருக்கின்றனர்.

(3) சுமார் நூற்றுக்கு அறுபதுபேர் செலவுக்குப் போதாமல் தரித்திரத்தோடு வாழ்கின்றனர்.

(4) சுமார் நூற்றுக்கு 15 பேர் இன்னவிதம் என்று எழுதுவதற்கில்லை.

இதற்குக் காரணமென்ன?

நாகரிகம் முன்னேறுகிறது. சாஸ்திர-விசாரணை அநுபவத்துக்குத் தக்கவாறு அதிகப்படுகிறது. மனிதனுடைய சக்தி எத்தன்மையுடையதென்பது விளங்க, அபூர்வமானதையும், ஆச்சரியமானவைகளையும் யுக்தியால் கண்டுபிடிப்பது. இம்மாதிரியெல்லாம் நாகரிகம் முதிர்ச்சியடைந்து வரும் இக்காலத்தில் நமது நாட்டில் தரித்திரம்-பஞ்சம்-பரவிவருவானேன்?

நிலத்தின் விலை அதிகப்படுவானேன்? நிலமுள்ளவனுக்கு சுதந்தரம் குறைவானேன்? தொழிலாளிகளும் கஷ்டப்பட்டு ஏன் லாபம்-திருப்தி-அடைவதில்லை. எஜமானன்-செல்வவந்தர்கள்-வணிகர்கள் ஏன் தத்தம் வேலைக்காரர்களை திருப்தி செய்கிறதில்லை?

இப்பரதக் கண்டத்தில் பிறந்தவர்கள் அபார புத்தியுடையவர்கள் என்று அயல் நாட்டார் பெருமைப்படுத்துகிறார்கள். சுமார் நூறு வருஷத்திற்கு முன் நிலத்தில் அபரிமிதமான லாபமிருக்க இப்பொழுது தாழ்வடைவானேன்? எந்த விஷயத்திலும் திடசித்தம்-தைரியம்-இல்லை. ஆரம்பித்த ஒரேதொழிலில் நன்றாய் பாடுபடுவதில்லை. வேலைசெய்யாதவனுக்கு கூலி யார் கொடுப்பார்? ஒருவர் போனவழியே போய், மற்றவர்களைக் கெடுக்கப் பார்த்து தானும் கெடுவதில் என்னபயன்? நன்றாய் ஆலோசனை செய்யவேண்டும். இதுதான் ஒரு மனிதன் செய்யவேண்டிய பெரிய வேலை.

நவீன நாகரிக ஆராய்ச்சி.

நாகரிகமடைந்த இக்காலத்தில் நவீனமானவை எங்ஙனம் அபிவிர்த்தியாகின்றன வென்பதை ஆராய்வோம். ஒருவன் அபூர்வமாய் ஒன்றைக் கண்டுபிடித்தால், தன்மட்டில் ரகஸ்யமாயிருந்து மற்றிரு தலைமுறைவரை நடந்து கடைசியில் பொது ஜனங்களுக்கு பஹிரங்கமாகி, பலரும் அவ்விதம் செய்துபார்க்க, எல்லோருக்குமே சொந்தமாகி விடுகிறது: அல்லது பயிர்த்தொழில் செய்வோருக்கு பயன் தரத்தக்கதைக் கண்டுபிடித்தால் தக்கபடி முயற்சியெடுத்துக்கொண்டால் நன்மையுண்டாகிறது. அதாவது அபிவிர்த்திக்குப் போதுமான திரவியசகாய மிருக்கவேண்டும் அப்படி அதிகப்படுத்தினால் அளவற்ற ஜனங்களுக்குப் பேருபகாரமாயிருக்கும்.

நம்மவர்களில் அநேகருக்கு, புத்தி தீக்ஷணியமும், நல்லயுக்தியும் இருந்தும், உத்தியோக நிமித்தம் கூட்டுப்பட்டிருக்கிறதை நிராகரித்து வெளிவரமுடியாமல் அப்படியே இருந்து விடுகிறார்கள்.

அயல் நாட்டாரைப்போல் பாவனைசெய்து கொண்டு, மனம்போன போக்கில் நடந்து, 'இப்படிச் செய்யலாமா' வென்று கேட்டால் 'நாகரிகம்' என்று ஒரேவார்த்தையில் அடக்கி விடுகிறார்கள். வெறும் ஆடம்பரத்துக்கு அநேகர் அளவற்ற அரும்பொருளை விரயமாக்குகிறார்கள்.

யுத்த காலம்.

இப்பொழுதோ யுத்தகாலம். 1916 ஒருவாறாய் அகன்றது. 1917 ஆரம்பமாய் விட்டது. பொதுஜன வாழ்க்கைக்கு இடையூறும் பலத்துக் கொண்டிருக்கிறது. அதிக கஷ்டம் வரும்போது பெருநன்மை உண்டாவதற்கு ஓரடையாளமென்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறோம். கடவுள் செயல் எப்படியோ! யுத்தகாரணமாய் விரோதிகளின் சரக்கு விலையேற்றமாகி லட்சக் கணக்கில் லாபத்தைச் சம்பாதித்தவர்களும் உண்டு. அவ்விதமே அதிக கஷ்டத்துக்கே அடைக்கலமாயிருந்து துன்புறுவாரும் இருக்கின்றனர். செல்வம் பெருகியவர்கள், அடிமைபோல் தங்களிடத்தைக் காத்துக் கொண்டிருக்கும் குமாஸ்தாமுதலானவர்களையும், அன்னவஸ்திரத்துக்கு ஆதாரமின்றி அவதிப்படும் ஏழைகளையும், ரக்ஷிக்கிறதற்கு கருணைக்கண் திறப்பதில்லை.

அநேகர் பயிர்த்தொழில் லாபம் தருகிறதில்லையென்று விட்டுவிடத் தலைப்படுகிறார்கள். கீழ்த்தர ஜாதியாரோ மேன்மைபெற்றுவிடலாமென்று கருதி கண்காணிகள் வசம் சிக்கிக் கொள்கிறார்கள்.

கஷ்ட-நஷ்ட-சகிப்புவேண்டும்.

சுகம்-லாபம் உண்டாகும்போது நம் சரீரம் கூடத் தெரியாவண்ணம் ஆனந்தக்கடலென மூழ்கிவிடுகிறோம். சுகத்துடனிருக்கும் துக்கத்தையும், லாபத்தோடிருக்கும் நஷ்டத்தையும் நீக்கமுடியுமோ? இவ்விஷயத்தைப் பற்றி ஒவ்வொருவரும் நன்றாய் சிந்தித்துப்பார்க்கவேண்டும். கஷ்ட நஷ்டம் வரும்போது சகித்திருக்கவேண்டிய தவசியமன்றோ!

நாட்டுவாசம்-நகரவாசம்.

நகரங்களில் ஜனநெருக்கம் அதிகப்பட ஆரம்பித்துவிட்டது. கிராமத்திலிருப்போர் சிலர் தங்களுக்குள்ள சிறிது நிலத்தையும் விற்று, கல்வி-ஆங்கிலம்-கற்று, பிறகு ஏராளமாய் சம்பாதித்துவிடலாமென்று குடும்பசகிதம் நகரவாசம் செய்யவந்து கடைசியில், கல்விக்காக செலவிட்டதொகையின் வட்டியேனும் கிடைப்பதில்லை. இக்காலத்திய கலாசாலைக் கல்வியைப்பற்றி எழுதப்புகின் நகைப்புக் கிடமாவதுமன்றி விஷயமும் பெருகும். என்றாலும் கருத்தை வெளியிடுவோம். இப்பொழுது கலாசாலையில் கற்பவர் ஏதேனும் வித்யாபட்டம்

பெற்றால் நன்மையுண்டாகும். இல்லையெனில்- இன்னவிதமென எழுதுவதற்கில்லை. கற்றவரைக்கும் பிழைப்புக் கனுகூலமாமோவெனக் கவனிக்கில் ஒரு சிறிதுமில்லை. என்றாலும் அறிவு விளக்கமும் பாஷாபிவிர்த்தியு முண்டாகிறது. உத்தியோகத்துக் கானாலும், தொழிலுக்கானாலும், (படித்தவைகளை நீக்கி) பழகவேண்டியதுதான்.

பயிர்த்தொழில் குறையவும், வேலைக்காரர்கள் வெளியூருக்கு கூலிகளாக செல்கிறார்கள்; இப்படி நிலங்கள் பயிரிடப்படாமலு மிருக்கலாம். இதனால் நிலம் சகாயமென நினைத்துவிட வேண்டாம். நிலத்தின் விலை அதிகப்பட்டுக் கொண்டே யிருக்கிறது.

வியாச்சியத்தால் சீரழிவு.

கோர்ட்டுகளுக்குச் சென்று நியாயம் பெறுவதற்கு எவரும் பின் வாங்குவதில்லை. சச்சரவு இல்லாதகுடும்பம் அபூர்வம். சகோதரர்கள் ஒற்றுமைப்படுகிறதில்லை. இவர்களுக்கு கோர்ட்டுதான் கதியாயிருக்கிறது. கருணைவாய்ந்தகவர்ன்மெண்டார் பொதுஜனங்களுக்கு எவ்வளோ நன்மைசெய்கிறார்கள். ஆனால் கோர்ட்டுகளையும், நியாயாதிபதிகளையும் அமர்த்திக் கொண்டு, "வாருங்கள், வழக்குத்தீர்க்கிறோம்" என்றும் அழைக்கவில்லை. வக்கீல்களும், நியாயாதிபதிகளும் அதிகப்பட்டுக் கொண்டேயிருக்கிறதால், விவகாரம் குறையவில்லையென்பது விளங்குகிறது. கோர்ட்டில் செலவிடப்படும் செல்வத்துக்கு மதிப்பில்லை. கோர்ட்டுக்குப் பணம் ஓடாகத்தான் ஓடுகிறது.

இதரதேசங்களில் இம்மாதிரி இல்லாதிருக்கவில்லையென்றாலும், இந்தியாவில் அதிகம். ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைக் குறைவின்றிச் செய்வார்களானால் மேன்மைதரும்.

SOCIAL ESSAY ON FRIENDSHIP.

ஸாமஷ்டி ஸாதனம்: நட்பு.

(மாசி௴ சஞ்சிகையின் 334-ம் பக்கத்தொடர்ச்சி.)

அல்காண்டரோ தான் காதலித்த மாதையும், உயிர்த்தோழனையும் விட்டுப்பிரிந்ததன்றி இபேஷியாவின் பந்துக்களால் நியாயசபையில் குற்றஞ்சாட்டப்பட்டான். ஏனென்றால், அவர்கள், இவன் இபேஷியாவை செப்டிமியஸுக்கு பணம் பெற்றுக்கொண்டு விக்கிரயஞ் செய்து விட்டானென்று எண்ணிவிட்டார்கள். ஐயோ பாவம்! தான் நிரபராதி என்று தன்னாலான மட்டும் வாதித்தும் பயன்படவில்லை. பெருந்தொகை யபராதம் விதிக்கப்பட்டது. குறிப்பிட்ட காலத்திற்குள் மேற்படி அபராதத் தொகையை செலுத்த சக்தியில்லாமையால் இவன் சொத்துக்களை சர்க்காருக்கு சேர்த்துக்கொண்டதன்றி, போதாத தொகைக்கு இவனையும் அடிமையாக சந்தையில் கொண்டு போய் விற்றுவிட்டார்கள். அவனை ஒரு வர்த்தகன் வாங்கி, வேறு அநேக அடிமைகளுடன் சேர்த்து, வெயிலின் கொடூரத்தால் பயிர் பச்சைகளை காணப்படாததும், சாகுபடி செய்வதற்கே ஏலாததுமான வோரிடத்தில் கொண்டு போய்ச்சேர்த்தான். அவ்விடத்தில் இவனுக்கு ஆடு மேய்ப்பதைவிட வேறு அலுவலகப்படவில்லை. கட்டக் கந்தைக்கும், குடிக்கக் கூழுக்கும் திண்டாட்டமாயிற்று ஆனால் இவனுக்கு வேட்டையாடத் தெரிந்திருந்தபடியால், மிருகங்களைக்கொன்றுதின்று உயிருடனிருந்தான். துன்பமோ நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டேவர சகிக்கமுடியாதவனாகி, உயிரைத் துறந்து விடலாமா?என்று சமயத்தை நாடிக் கொண்டிருக்கையில், தெய்வாதீனமாய் கிடைத்த சமயத்தை நோக்கி சந்தோஷமடைந்து, தப்பியோடிப்பலவிடங்களில் அலைந்து திரிந்து, கடைசியில் ரோமேனியா நகரம் வந்தடைந்தான்.

இவன் ரோமேனியா வந்தடைந்தபொழுது இவன் நண்பனாகிய செப்டிமியஸ் நியாயஸ்தலத்தில் விசாரணை செய்துக்கொண்டிருந்தான். இதைக் கேட்ட அல்காண்டர், "நல்லவேளை, நாம் அவன் கண்ணிற் படுவோமானால் அடையாளங்கண்டு ஆதரிக்கப் பின்வாங்கான்" என்று எண்ணிக்கொண்டு தன் தோழனிருக்கும் நீதிஸ்தலத்திற்குச்சென்று, கூட்டத்துடன் நின்றுக்கொண்டு அவன் முகத்தையே ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்தான். நியாயாதிபதியோ வேலையின் மிகுதியால் தலையை நிமிராமல் எழுதிக்கொண்டிருந்து கச்சேரி கலையவும் வீட்டுக்குப் புறப்பட்டுவிட்டான். அவனை கிட்ட நெருங்கலாமென்று சென்ற அல்காண்டரை சேவகர்கள் பிடரிபிடித்துத் தள்ளிவிட்டார்கள். என்ன செய்வான்! இருட்டும் சூழ்ந்துக் கொண்டது! இவனோ ஊருக்குப் புதிது; தெரிந்தவரோ இல்லை; நண்பனோ இவன் முகத்தைப் பார்க்கவேயில்லை. தெருக்களில் படுத்துறங்கலாமென்றால் போலீசார் பிடித்துச் சிறையில் வைப்பார்கள். ஆதலால் ஊர்ப் புறத்திலுள்ள ஓர் பாழ்மண்டபத்தில் படுத்துத்தூங்கினான். அவ்விடத்தில் நடு இரவில், திருடரிருவர் வந்து, தாங்கள் களவாடிக்கொண்டுவந்த பொருள்களைப் பங்கிடுவதில் நேர்ந்த வழக்கால் ஒருவன் மற்றவனைக் கொன்றுவிட்டு, பொருள்களை சுருட்டிக் கொண்டு போய்விட்டான். ஊரில் பொருள்கள் கொள்ளை போனதைக் கேள்வியுண்ட போலீசார்கள் பல பக்கங்களில் தேடிக்கொண்டு இப்பாழ் மண்டபத்திற்கு வந்து, அல்காண்டர் தூங்கிக்கொண்டிருப்பதையும், சமீபத்திலேயே கொலையுண்ட மனிதன் தேகம் கிடைப்பதையும் கண்டார்கள். அல்காண்டரை எழுப்பினார்கள். நெடுநாளாய் பல இடுக்கண்களுக்குட்பட்டு, பலவிடமும் சுற்றியலைந்து திரிந்து வந்து, படுத்துறங்கினவனாதலால், அவன் தோற்றமே அவனுக்கு விரோதமாய் ஏற்பட்டது. ஆதலின இவனையே குற்றஞ்சாட்டி நியாயாதிபதியின்முன் கொண்டுபோனார்கள். இவன் எவனுடைய நன்மையை நாடி இக்கதியடைந்தானோ அவனாலேயே விசாரணை செய்யப்பட்டு முடிந்துவிட்டது. இவனோ தன் துன்பங்களெல்லாவற்றிற்கும் பரிகாரம் நேருமென்றெண்ணினவனும், உயிர் துறக்கத்துணிந்தவனுமாதலின் தன்னுடைய மனத்தூய்மையைக் காட்டிக்கொள்ளவில்லை. கேஸ் ருஜுவாகிவிட்டபடியால், நியாயாதிபதி மகா கொடுமையானவும், அநீதகதியுமான தண்டனை விதிக்க ஆரம்பித்தான். அத்தருணத்தில் தன்னுயிருக்கிடமாயிருந்து, நெடுநாளைக்குமுன் பிரிந்துபோன தன் நண்பனாகிய அல்காண்டரே இக்குற்றஞ் சாட்டப்பட்ட கைதி யென்று தெரிந்தது! என்ன செய்வானினி! நாம் காண்கிறது கனவு தானோவென்று கண்களைத் துடைத்துக் கொண்டான். கடைசியில், கைதி தன்னுடைய உயிர்த்தோழனென்பது வெட்டவெளிச்சமாய்ப் புலப்படவே, செப்டிமியஸ் மனம் என்னபாடுபடும்? தன் நன்மைக்காக அவன் தன்னுடைய காதலியைக் கொடுத்தும், சுயேச்சையையிழந்தும், பலதுன்பங்களுக்கு ஆளான அல்காண்டரையோ மரணதண்டனைக் குட்படுத்துவது! அவன் கொலை செய்யத் தகுந்தவனுமல்லவே! ஆனால் யாரறிவார் அவன்பெருமையை? ருஜுவோவேற்பட்டிருக்கிறது! தன்உயிர்த்தோழனைக் காண நேர்ந்ததே என்று ஒருவேளை மகிழ்வான்! ஐயோ! குற்றவாளி யாகிவிட்டானே என்று ஒருவேளை துன்புறுவான்! இவ்விதம் மத்துறுதயிர்போல் மனமுருகி அன்பின் மேலீட்டால் தன்னிலைமையையும் மறந்து, தன் தோழன்மேற் பாய்ந்து அவனைக் கட்டிக்கொண்டு ஓவென்று கதறினான். ஜனங்களனைவரும் திகைத்து நின்றார்கள். காரணம் விளங்கவில்லை. இவ்வித நேசர்களைக்கண்டு இரக்கமுற்ற கருணாநிதியாகிய பரமன் கிருபையால் திருட்டுப்போன சொத்தை விலைப்படுத்த முயன்ற, திருடனைப் போலீசார் பிடித்து நியாயாதிபதியிடம் கொண்டுவந்தார்கள். அத்திருடனும் தன் குற்றத்தை யொப்புக்கொண்டான்.

இப்பொழுது ஜனங்களுக்குண்டான குதூகலத்தையும், அல்காண்டருக்கும் செப்டிமியஸ்க்குமுண்டான ஆனந்தத்தையும் அளவிடக் கூடுமோ? உடனே குற்றமற்ற அல்காண்டர் விடுதலையடைந்து செப்டிமியஸ் வீடு சேர்க்கப்பட்டு, தன் வாழ்நாள் முழுமையும் அவனிடத்திலேயே யிருந்து, அவனுடைய பொருள் யாவற்றையும் தன்னுடைய வையாகவே யனுபவித்து வந்தான். அப்பட்டணத்து ஜனங்களும் இவர்களுடைய நட்பின் பெருமையைக் கேட்டும், கண்டும் மனமகிழ்ந்தார்கள்.

இவ்விதம் அல்காண்டரைப்போல் தன்னுயிருக்கு இருப்பிடமென்று கருதநேர்ந்த காதலியைத் தன்தோழனைக் காப்பாற்றும்பொருட்டு கொடுக்க மனமொப்புகிறவரும், அதனால் நேரும் பல துன்பங்களையு மனுபவிக்கக் கருதுபவரும் அருமையிலும் அருமை. அவ்விதமிருப்பவருக்கு செப்டிமியஸைப்போல், தனது நண்பனுடைய ஈனஸ்திதியையும், அவன் பேரில் சாட்டப்பட்ட கொலைக் குற்றத்தையும், தன்னுடைய உயர்ந்த நிலைமையையும் கவனியாது, அவனைக்கட்டி யாலிங்கனஞ் செய்து பரிவுகாட்டியதன்றி, பிறகு தன் பொருளனைத்தையும் நண்பனுடையவையாகச் செய்பவரும் அரிதென்றே கூறலாம்.

"கதிரவ னுதிப்பதெங் கேநளின மெங்கே
களித்துள மலர்ந்த தென்ன,
கார்மேக மெங்கே பசுந்தோகை யெங்கே
கருத்தின்ட் பான தென்ன,
மதியமெங் கேபெருங் குமுதமெங் கேமுக
மலர்ந்த மகிழ் கொண்டதென்ன,
வல்லிரவு விடிவதெங்கே கோழி யெங்கே
மகிழ்ந்து கூவிடுத லென்ன,
நீதியரச ரெங்கே யிருந்தாலு மவர்களொடு
நேச மொன்றுயிருக்கு,
நீதிமிகு நல்லோர்க ளெங்கிருந்தாலு மவர்
நிறைபக்ஷ மறவார்கள் காண்,
மதிலுடன் கோபுரமும் வாவியும் புடைசூழ
மருவி சோணாட் டதிபனே,
மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு
மலை மேவு குமரேசனே."

"PEARLS OF FAITH."

SELECTED AND STRUNG TOGETHER FOR PARENTS AND CHILDREN TO WEAR

From the Selected Sayings of St. Vemanna.

ஆந்திரபாஷையில், பிரஹ்மக்ஞானியும், அருட்கவியுமாகிய,
வேமன்ன மகாகவி அருளிச்செய்த
பத்யங்கள்.

(Fifth Series.)

(ஆபத் சந்நியாசத்தாற் பயனில்லை.)

1. உள்ளநாளெல்லாமங் குற்றபுலன் வெல்லாமல்
தள்ளரியசாவுவரச் சந்யாசம்—கொள்ளுதலால்
கிட்டுமோ முத்தியது கிழகன்ற நாளெல்லாம்
கட்டியவுள்ளத் தனுக்கே காண்.

(இ-ள்.) ஜீவித காலமெல்லாம் ஐம்புலன்களை யடக்காமல் ஆசாபாசங்களில் உழன்று பின்பு மரணம் வரும்போது ஆபத்சந்யாசம் வாங்கிக்கொள்ளுதலாலே ஒருவனுக்கு மோக்ஷம் கிடைத்துப்போமா, கிடையாது. ஆயுள் முழுதும் எவன் மனோ நிக்கிரகம் பண்ணி வருகின்றானோ அவனுக்கே முத்தி லபிக்கும்.

(உலோபி உதாரிக்குச் சமானமாக மாட்டான்.)

2. கோவாகாதற்பங் கொடுவரியா காதுச்சம்
மாவாதலில்லை மசகங்காண்—மேவும்
உடற்பருமனைத்தனைதா னுற்றிடினும் லோபி
கொடுப்பவ னேராகான் குறி.

(இ-ள்.) எவ்வளவு தான் உடல்பருத்து உருவம் சிறந்த போதிலும் நாய் பசுவுக்குச் சமானமாகாது. முயல் புலிக்குச் சமனாகாது. கொசுகு யானைக்குச் சமனாகாது. அதுபோல, எத்தனை தான் பெருமை பாராட்டிக் கொண்டபோதிலும் உலோபி உதாரிக்குச் சமான மாகமாட்டான்.

(கடவுள் நம்பினவர்க்கன்றி மற்றவர்க்கில்லை.)

3. இல்லனெனச்சொல்வார்க் கிலனேயெஞ்ஞான்று மிலன்
அல்லனெனச்சொல்வார்க்கு மல்லனே—தொல்லுலகில்
நற்றுணையாப்பற்றினர்க்கு நற்றுணையா மேவுமவன்
பெற்றியெவ ரோர்வார் பெரிது.

(இ-ள்.) ஈசன் இல்லன் என்று சொல்வார்க்கு எந்நாளும் இல்லனே யில்லன். அல்லனென்று சொல்வார்க்கும் அல்லனே அல்லன். ஆயினும் தன்னையே உலகில் துணையாக நம்பியடைந்தவர்களுக்கு அகலாத் துணையாயும் உள்ளான். அவன் அளவிடற்கரிய பெருமையை அறிபவர் ஒருவருமில்லை.

(பாத்திரமறிந்து பிச்சையிடவேண்டும்.)

4. சோறிறங்கானுக்கிட்ட சோறுவீணு மன்றி
வேறுபயனுண்டோ விம்மேதினியில்—ஆறிதுபோல்
செல்வமுள்ளார்க்கீந்த செழும்பொருள் வீணுமன்றி
நல்கு பயனுண்டோ நவில்.

(இ-ள்.) அசீரணத்தால் சோறு வேண்டாதவனுக்குப் போட்டசோறு வீணாக எறியப்படுதலன்றி இட்டவனுக்கு ஒரு பிரயோசனத்தைக்கொடுக்குமோ? அதுபோலவே பொருள் உடையவர்களுக்குத் தானமாகக்கொடுக்கும் பொருளால் கொடுத்தவனுக்கு யாதும் பிரயோசனமில்லை.

(பிச்சையிடாதவர் மறுபிறப்பில் வறுமையால் வருந்துவார்கள்.)

5. இருந்துமிரவலருக் கிட்டறியார் பின்பு
வருந்துவரான்மற் றோர்பிறப்பிற்—பொருந்த
இடுவாரிலாதைய மீதுணர்வீர் நன்று
கெடுவீ ரல்லீர் நும்மதி.

(இ-ள்.) பொருளிருந்தும் யாசிக்கின்ற ஏழைகளுக்குக் கொடுத்தறியாத உலோபிகள் ம பிறப்பில் தாம் வறுமையடைந்து தமக்குப் பிச்சையிடுவாரில்லாமல் வருத்தமடைவார்கள். இவ்வுண்மை நன்றாகத் தெரிந்துக் கொள்ளுங்கள். வீணாகப்புத்திகெட்டுப் போகாதீர்கள்.

(நாம் கொடுப்பதுபோல நமக்கும் கிடைக்கும்.)

6. தண்டாமலீவார்க்குத் தண்டாமலே கிடைக்கும்
தண்டினபின்னீவார்க்குத் தண்டினபின்—தண்டியும்
ஈயாதார்க்கியாதுங் கிடைத்தலிலை யிவ்வுலகில்
ஞாயமிது சேர்ந்திடுவீர் நன்கு.

(இ-ள்.) கேளாமலிருக்க வலியச்சென்று ஏழைகளுக்கு உபகரிப்பார்களுக்குக் கேளாமலே அதிட்ட வசமாகச் செல்வம் கிடைக்கும். கேட்டபின் கொடுப்பார்களுக்குக் கேட்ட பின்னுயினும் கிடைக்கும். கேட்டும் கொடாத பரம லோபிகளுக்கு இவ்வுலகில் யாதும் கிடைத்தலில்லை. இது நீதியே யன்றிவேறல்ல. தெரிந்து கொள்வீராக.

(அதிர்ஷ்டமில்லாதவனுக்குக் கூடிவரமாட்டாது.)

7. அதிட்டமில்லாப்பேதைக் கரும்பரிச வேதி
விதித்திடினும் மில்லாது வீயும்—கதித்ததிரும்
காரிருந்துவீழாலங் கட்டியது கைப்புகலும்
ஓர்நொடியி லேயுருகல் போல்.

(இ-ள்.) அதிட்ட மீனனுக்குத் தொட்டதெல்லாம் பொன்னுக மாற்றும் பரிசவேதி விதிவசத்தால் ஒரு வேளை கிடைத்தபோதிலும் உடனே அது இல்லாமல் இழந்து போகப்படும். எப்படி யென்னில் இடி முழங்குகின்ற மேகத்திலிருந்து மழையோடு விழுகிற ஆலங்கட்டி ஒருவன் கையில் எடுத்த மாத்திரத்தில் எப்படி நொடிப் பொழுதில் உருகிப்போகின்றதோ அதுபோல.

(அறிவீனர் உலகவின்பங்களால் மகிழ்ச்சியடைவார்கள்.)

8. குறைத்துமரஞ்செடியைக் கொண்டெழுப்பிச் சூழப்
பெருத்தமதிலுள்ளிடத்துப் பெட்பால்—திருத்தமுறு
மாளிகையைக்கட்டி மகிழ்வார்க ளோராரே
மேல்விளையுந் தீமையினை மிக்கு.

(இ-ள்.) மரஞ்செடிகளெல்லாவற்றையும் வெட்டி யெறிந்து நாற்புறமும் மதிலெழுப்பி நடுவே உன்னதமான அழகிய மாளிகையைக் கட்டி ஆசந்த்ரார்க்கம் இருக்கப் போகின்றோமென்று மகிழ்ச்சியடைகின்றவர்கள் மேலே தமக்குண்டாகும் கெடுதிகளை ஆராய்தலில்லை.

(அயோக்கியமான இடத்திற் செல்லலாகாது.)

9. கட்கடையிலேயிருந்து காணவமு துண்ணுகினும்
உட்கொளுதல்கள்ளென் றுணர்ந்திடுவார்—இப்புவியில்
ஆதலினல்யாமிருத்தற் காகாவிடத் திருக்கத்
தீதுவரு நல்லாய் தெரி.

(இ-ள்.) கள்ளுக்கடையிலிருந்து பிறர் காணப் பாலையுண்டபோதிலும் பார்ப்பவர்கள் அதைப் பாலென்றெண்ணார்கள் கள்ளென்றே எண்ணுவார்கள். ஆகையினலே நாம் இருக்க யோக்கியமில்லாத இடத்திற் சென்றிருந்தால் கெடுதி விளையும்.

(அற்பர் சகவாசம் அநர்த்த ஹேதுவாகும்.)

10. அற்பர்தமைநுந்தமகத் தேவரவிடுப்பின்
பொற்பிழந்துதுன்பம் பொருந்திடுவீர்—முற்படுமோர்
ஈவாயினூடே வயிற்றினிடைப் புக்கால்
மேவாதோ மிக்க துயர்.

(இ-ள்.) ஈனபுத்தியுடையவர்களை உம்முடைய வீட்டில் வரவிடங்கொடுத்தால் அதனல் உங்கள் சுகத்தையும் பெருமையையும் இழந்து துன்பமடைய வேண்டிவரும். எப்படியென்னில், ஈயொன்றை வயிற்றுக்குள் புக விடங்கொடுத்தால் அதனல் எப்படித் துன்பமுண்டாகின்றதோ அதுபோல.

(கொடுப்பதனல் இரந்தார்க்குக் குறையில்லை.)

11. ஐயம்புகுவார்தா மன்னதிலோர் கூறன்பால்
ஐயம்பிறர்க்கிடுவா ராமாயின்—ஐயம்
புகுந்திடலான் மற்றவர்க்குப் போதுதலின்றீனம்
மிகுத்திடுமே வேண்டும் புகழ்.

(இ-ள்.) பிச்சையெடுத்துப் பிழைப்பவர்கள் தாங்கள் எடுத்த பிச்சையில் ஒருபாகம் தம்மைப் போன்ற எளியவர்க்குப் பிரீதியோடு கொடுப்பாராயின் அவர்க்குப் பிச்சையெடுத்தலினல் ஓர் இளப்பமும் இல்லை. அதனல் மிக்க புகழேயுண்டாகும்.

(மண்முதலான விக்கிரகங்களில் ஈசனைக்காண முடியாது.)

12. மண்ணிலுலோகத்தின் மரத்திற்சிலை தன்னில்
எண்ணும்படத்தி லிருஞ்சுவரில்—நண்ணும்
பதுமையினுங் காட்டுவனே தன்னைப்பரமன்
புதுமையிது காணப் புகல்.

(இ-ள்.) மண் உலோகம் மரம் சிலை முதலியவற்றாற் செய்த விக்கிரகங்களிலேனும் படம் சுவர் முதலியவற்றிலெழுதிய உருவங்களிலேனும் வேறுவகையான பிரதிமைகளிலேனும் பரமாத்மா தன்னை எளிதுகாணும்படி காட்டுவானே. அவ்வுருவங்களில் அவனைக் காணப்புகுதல் ஆச்சரியம்.

(பொருளுடையானைப் பெண்கள் வெகுமானிப்பார்கள்.)

13. கைப்பொருளொன் றுள்ளானைக் காணினுடன் றந்துகிலால்
பொற்பினடைபாவாடை போடுவரால்—அப்பொருளொன்
றில்லானைப்பெண்கள் நடைப்பிணமா வெண்ணியவன்
அல்லலுறவே யிகழ்வா ரங்கு.

(இ-ள்.) பெண்மக்கள் புருஷன் பணமுள்ளவனுனல் அவனைக் கண்டவுடன் தாமுடுத்த ஆடையைக் கூடவிரித்து நடைபாவாடை போடுவார்கள். பொருளில்லானை நடைப்பிணமா யெண்ணி அவன் வருந்தும்படி அவனை இகழ்வார்கள்.

(அருளில்லாக் கொடியர்போற் பயனற்றதில்லை.)

14. வேம்பும்விடமு மருந்துக்கா மேதினியில்
ஆம்பயனில்லாதபொரு ளாருலகில்—காம்புறழ்தோள்

நங்காய்தயையில் நலனற்ற மாக்தர்போல்
இங்கேது மில்லை யினி.

(இ-ள்.) ஒன்றுக்கும் உதவாவென்று கருதும் வேம்பும் விஷமும்கூட சிற்சில மருந்துகளுக்குப் பிரயோஜனமாகும். ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாத பொருள், தயையில்லாத துஷ்ட ஜனங்கள்போல் உலகில் வேறொன்றுமில்லை.

(யதா ராஜா ததாப்ரஜா.)

15. மன்னனொருமற்கடமேல் மந்திரிமார் பன்றிகளாம்
பன்னும்படைத்தலைவன் பக்கியெனில்—துன்னுமொரு
சேவகருமாநிரையாம் திண்களிறும் வாசியும்
தாவுமெலி பூனையுமாம் சார்ந்து.

(இ-ள்.) அரசன் குரங்கானால் அவனுக்கேற்ற மந்திரிகள் பன்றிகளாவர். படைத்தலைவன் திறமற்ற பட்சியானால் அவனைச்சூழ்ந்த சேவகரும் பசுக்களாவர். ஆனையும் குதிரைகளும் எலியும் பூனைகளுமாகும். அதாவது அரசன் மதியில்லானாயின் மந்திரிகள் அவனிலும் மதியற்றவராவாரென்றும், சேனைத்தலைவன் திறமையும் சௌரியமும் இல்லானாயின் அவன் கீழ்ச்சேனைகள் பயனற்றவாகுமென்றும் சொல்லியவாறு.

(கோபத்தை அடக்கவல்லார்க்கு எல்லாம் கைகூடும்.)

16. கோபத்தான்மேன்மை யனைத்துங் குலைந்துபோம்
கோபத்தாலுட்டுயரங் கூர்ந்திடுமே—கோபத்தை
உள்ளடக்குமாற்ற லுடையார்க்குக் கைகூடும்
கொள்ளும்விழை வெல்லாங் குறி.

(இ-ள்.) கோபத்தால் மேன்மையெல்லாம் குலைந்துபோகும். விசேஷமான துக்கங்க ளுண்டாகும். கோபத்தை அடக்கவல்லவனே தான் எண்ணின காரியத்தை நிறைவேற்ற வல்லவனாவான்.

(கோபத்தால் எல்லாத் துன்பமும் உண்டாகும்.)

17. கோபத்தாற்போதும் நிரயக் கொடுந்துயரம்
கோபத்தால் நற்குணங்கள் குன்றிடுமால்—கோபத்தால்
வானாளுமந்தோ வளராது தேய்ந்திடுமே
மாணாது கோபம மதி.

(இ-ள்.) கோபத்தாலே நரகத்துன்ப முண்டாகும். நற்குணங்களெல்லாம் குறைந்துபோம். ...ம் விர்த்தியாகாது க்ஷீணிக்கும். கோபம் எல்லாவற்றாலும் கெடுதியே உண்டுபண்ணும்.

(இன்னா ரின்னாரோடு விளையாடல் தீது.)

18. ஆரழலினோடுமிக வற்பரொடு மங்கியர்தம்
நேரிழையாரோடு நிலைதவறும்—பூரியர்கள்
தமமோடு மென்றுங் களித்திடுத றுனறிவீர்
நம்மாவி நூறி விடும்.

(இ-ள்.) நெருப்போடும் அற்பரோடும் பிறர் மனையாரோடும் தம் நிலையிலிருந்து வீழ்ந்த பதிதர்களோடும் உறவாடிக்களித்தல் உங்களுக்குப் பிராணஹானியை யுண்டுபண்ணும்.

(உணவு உயிரைக்காத்தலுக்கும் போக்கலுக்கும் வல்லது.)

19. ஏறுகினுங்கொல்லுமஃ தில்லையெனினுங் கொல்லும்
தேறுகினுமுண்ணுமொரு தீனதுவே—வீறுடனே
போற்றுதற்குமாவிதனைப் போக்குதற்கும் போதுமே
சாற்றுமுண வொன்றதுவே தான்.

(இ-ள்.) நாமுண்ணும் ஆகாரம் அளவில் மீறினாலும் மரண முண்டுபண்ணும். முற்றும் இல்லாவிடினும் சீவன் போய்விடும். ஆகையினாலே பிராணனை ரக்ஷிப்பதற்கும் போக்குதற்கும் இரண்டுக்கும் நாமுட்கொள்ளும் ஆகாரமே போதுமானது.

(பெரியோர் வார்த்தை இதமாயிருக்கும்.)

20 பேரறிஞர்பேசும் பிழைபறுசொல் பைம்பொழிலில்
சேருமொருகோகிலத்தின் தீங்குரல்போலும்—ஆரறிவில்
மூடர்மொழிகாகத்தின் முற்றுஞ் செவிக்கியலா
நீடுகரை விற்த நிகர்.

(இ-ள்.) பேரறிவுடையோர் பேசுகின்ற குற்றமற்ற இனிய வசனங்கள் குளிர்ந்த சோலையிலுள்ள இனிய குயிலின் மதுரமாகிய குரலை யொக்கும். அறிவில்லாத மூடர்களுடைய வார்த்தைகளோ காதுக்கு நாராசம் போலும் கடூரமாகிய காக்கையின் தொனியை ஒக்கும்.

(நரகத்துன்பம் யாவினும் கொடிது.)

21. எண்ணிறந்ததுன்பங்க ளிவ்வுலகத் தெய்திடினும்
நண்ணுநிரயத்துயா நண்ணரிதால்—கண்ணியிது
மற்றவர்க்குச்செய்யுந் துயரை மறந்திடுவீர்
நற்றவந்தான் மற்றதனி லில்.

(இ-ள்.) கணக்கில்லாத துன்பங்களை இந்த உலகத்திலே அநுபவித்தபோதிலும் நரகவாதனை மாத்திரம் அநுபவித்தல் மிகப் பிரயாசமாகும். இதை நினைந்து பிறருக்குச் செய்யும் துன்பங்களைச் செய்யாதொழிவீர்களாக. அவற்றை மனத்தாலும் நினையாமல் முற்றும் மறப்பீர்களாக. இதைவிட மேலான தவம் வேறில்லை.

(பரோபகாரத்தில் பெரிய புண்ணியமில்லை.)

22. பிறர்க்குதவிசெய்யப் பெரும்பவங்க ணீங்கும்
பிறர்க்குதவியேபிடிக்கும் கோலாம்—பிறர்க்குதவி
வானுலகமேற்றும் வழியாகு மற்றதனில்
ஆனதுணை யில்லை யறி.

(இ-ள்.) பரோபகாரத்தினாலே பாவங்கள் நீங்கிப்போகும். பரோபகாரமே நமக்கு பிடித்துச் செல்லும் ஊன்றுகோலாம். பரோபகாரமே வானுலகத்துக்கு வழியுமாகும். பரோபகாரத்திலும் மேலான துணை வேறில்லை.

(வலியில்லாதகாலத்தில் தொடங்கும் காரியங்கள் நிறைவேறா)

23. மெலிவுற்றவேளையினில் வெம்மடங்க லுனும்
வலியற்ற நாயால் வருந்தும்—நலிவுற்ற
காலத்துநாந்தொடங்குங் கன்மங்க ளொன்றேனும்
ஞாலத்திலே முடியா நன்கு.

(இ-ள்.) மெலிந்தபோது சிங்கம்கூட நாயால் வருத்தமடையும். மெலிந்த காலத்தில் நாம் தொடங்கிச்செய்யும் காரியங்கள ஒன்றும் நிறைவேறாது.

THE BLOCKADE AND ITS EFFECTS.

THE SCARCITY OF PAPER.

மறியல் யுத்தமும் அதன் பலன்களும்.

காகிதப் பஞ்சம்.

இந்த யுத்தம் காரணமாக நேர்ந்த பல இக்கட்டுகளில் காகிதப்பஞ்சம் பத்திரிகைகளுக்குப் பெரிய கஷ்டநஷ்டத்தை யுண்டுபண்ணி வருகிறது. இந்தியாவில் காகிதம் செய்யும் யந்திரங்கள் வடக்கே சில இருக்கின்றன. அவைகள் செய்யும் காகிதங்கள் பெரும்பாலும் கவர்ன்மெண்டார் உபயோகத்துக்கும் ரயில்வே கம்பெனியார்கள் உபயோகத்துக்கும் உபயோகமாகிவிடுகிறதாகவும் இதரர்களுக்குக் கொடுக்க அதிகமாகக் காகிதம் கையிருப்பில் இல்லையென்றும் சொல்லுகிறார்கள். 100 கட்டு காகிதத்துக்கு உத்தரவு செய்தால் அதைக் கவனிக்க ஒருவருஷத்துக்கு மேலாகிறது. இந்த ஒரு வருஷகாலத்துக்கும் அவர்களிடத்தில் கட்டிவைத்த ஏராளமானமுன்பணத்துக்கு வட்டியில்லை. உத்தரவு செய்தபடி காகிதம் கிடைக்குமென்கிற உறுதியுமில்லை. உத்தரவையும் முன்பணத்தையும் வாங்கிக்கொண்டு சரக்குக் கொடுக்க முடியும் என்கிற நிச்சயமில்லையென்கிற ஷராவொன்று போட்டு பதில் எழுதிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட யுத்த காலத்தில் செய்யப்படும் வர்த்தக உடன்படிக்கைகள், கண்டிராக்டுகளெல்லாம் "Force Majeur" என்று சொல்லப்படும் ஒருவிதிக்குள்பட்டவையாக விருக்கின்றன. அதாவது சண்டைக்காலத்தில் பலவந்தமாக நேரிடும் இக்கட்டுகளினால் தடை நேர்ந்தால் அதற்கு அவர்கள் உத்தரவாதியில்லை யென்பதாம். 'பலவந்தம்' என்பது கப்பற்சேதம், பொருட்சேதம், சண்டைச்சேதம் என்கிற இவைக்கு மட்டுமன்றி, சரக்கு அகப்படாமை, கையிருப்புச் சரக்குப் போதாமை முதலான இயற்கை, செயற்கை நிர்ப்பந்தங்கள் எல்லாவற்றிற்கும் பொருந்துவதாகச் சொல்லப்படுகிறது. விலையோ நாளுக்குநாள் நிமிஷத்துக்கு நிமிஷம் மாறிவருகிறது. 1916௵ பிப்ரவரி௴ கொடுத்த உத்தரவை நிறைவேற்ற 1917௵ பிப்ரவரி௴ பிறந்தும் உத்தரவும் முன்பணமும் வாங்கினவர்களுக்கு சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. எவ்வளவோ நயபயமாய் அவர்களை அனுசரித்து உத்தரவை நிறைவேற்றச் சம்மதிக்கச்செய்தும் விலைப்பாடு சரியாகவும் உறுதியாகவும் சொல்வதற்கில்லை. ஒரு[illegible] உத்தரவு கொடுத்து முன்பணம் கட்டினவருக்கே அவசரம் என்று கேட்டபொழுது ஒன்றுக்கு ஒன்றரை விலைபோட்டு கொஞ்சம் சரக்குக் கொடுத்தார்கள். மறுபடியும் நெருக்கிக் கேட்டபொழுது சரக்கைக் கொடுக்கச் சம்மதித்தும் விலையில் கட்டுப்பட்டுப் பேசவில்லை. 'பில்' செய்த பிற்பாடுங்கூட, திடீரென்று ஒரு தந்திவந்தால் அதை ரத்து செய்துவிட்டு, விலையைத்தூக்கி வேறு 'பில்' செய்கிறார்கள். "இது அடுக்குமா?" என்று கேட்டால் வேண்டுமானால் வாங்கிக்கொள், இல்லாவிடில் போ என்கிறார்கள். லண்டனில் டைம்ஸ் பத்திரிகை காகிதப்பஞ்சத்தினிமித்தம் அதன் விலையைத் தூக்கினதன்றி, இன்னும் அதிகமாகத் தூக்கப்போவதாக ஒரு தந்திசமாசாரம் வந்தது. இந்தத் தந்திசமாசாரம் பத்திரிகைகளில் வெளிவந்ததன் பலனை நமக்குத்தெரிந்த ஒருவர் கணக்கு சனிக்கிழமையன்று போடப்பட்டதற்குமேல் திங்கட்கிழமையன்று 25 ரூபாய் ஜாஸ்தியாக்கிவிடப்பட்டது. இது இங்கிலீஷ் வர்த்தகர்கள் நடைதோரணையால் இவர்களிடம் வாங்கி விற்கிற சுதேச வர்த்தகர்கள் செய்யும் சூதுவாதுக்குக் கேட்பானேன். "சபலபுத்தி அபலகாரணம்" என்பார்கள். அப்படியென்றால் பலக்குறைவு என்றும், நிஷ்பலம் அளிப்பது என்றும் அர்த்தம் செய்யலாம். வியாபாரத் துறையிலும் மற்ற எந்தத் துறையிலும் இயல்பாயுள்ள அநித்திய சுபாவத்தோடு யுத்தக் குழப்பத்தினால் நேர்ந்துள்ள அநிச்சய காரணமும் சேர எல்லாம் முறைபிறழ்ந்து நடக்கக் காரணமாகிறது. இஃதேபோல் வியாபாரத்துறைகள் ஒவ்வொன்றிலும் இறங்கி ஜீவனம் செய்கிறவர்கள் தங்கள் அனுபவத்தைச் சொல்லி முறையிடுகிறார்கள். "போதாக்குறைக்குப் பொன்னியம்மன் குறையொன்று" என்கிற பழமொழிப்படி சண்டைகாரணமாகவுண்டாகும் இந்தக் குழப்பங்கள் போதாவென்று பணமுள்ளவர்கள் சரக்குகள் கிராக்கியறிந்து ஏராளமான சரக்கைப் பிடித்து அடைத்து வைத்துக்கொண்டு, தரவுகாரர்களைக்கொண்டு சரக்குக்கு கிராக்கி யுண்டுபண்ணுவதன்றி சரக்கே யகப்படாதென்கிற பீதியும் உண்டுபண்ணி இந்தக் குழப்பத்தில் ஒன்றுக்குமூன்றாக விலையை ஏற்றிவைத்து அதிக கிராக்கிகாட்டி விற்கிறார்கள். இந்த அநர்த்தங்களெல்லாம் உணவு பொருள்களினும் விளையக்கூடியவைகளே. அப்படி விளையும்பொழுது அன்றாடம் ஜீவனம்செய்கிற ஏழைகள் ஜீவனத்துக்கு வகையேற்படாத போது பீதிகொண்டு கலகம்செய்யத் துவக்குவார்கள். இப்படிப்பட்ட கலகங்கள் ஆபத்தாய் முடியுமாதலால் சண்டையில் சம்பந்தப்பட்ட தேசங்களிலெல்லாம் உணவுபொருள்களின் விலையை மேற்பார்வைசெய்து சரிப்படுத்திவர ஒரு உத்யோகஸ்தரை அதற்கு வேண்டிய அதிகாரதோரணையோடு 'கமிஷனர்' என்று பேரிட்டு நியமித்து வருக்கிறார்கள். அவர்கள் தேசமொத்தத்துக்கு உக்கிராணக்காரர்கள் போலிருந்து மேலே பார்த்துவர வேண்டியது. "சட்டியிலுள்ள மட்டும்தான் அகப்பையில் வரும்" என்கிற பழமொழிப்படி உணவுபொருள்கள் போதுமான அளவு தேசத்திலிருந்தால்தான் இவர்கள் அதிகாரம் செய்நேர்த்தி பெறும். போதுமான உணவுபொருள் இல்லாதபோது இவர்கள் கடமை மிகக்கஷ்டமாய் முடிகிறது. இப்படிப்பட்ட கஷ்டங்களைப் பொறுத்துச் சமாளிப்பதற்கு யுத்த சாமர்த்தியத்திலும் அதிகசாமர்த்தியம் வேண்டும். எதிரிகளை வயிறெரிட்டச்செய்து வசப்படுத்துவதின்மர்மம் இதுதான். எப்படிப்பட்ட நோய்களுக்கும் எதிரிகளுக்கும் இடங்கொடுத்துச் சமாளித்தாலும் பசிநோய்க்கு இடங்கொடுத்துச் சமாளிப்பது மஹாகஷ்டம். முன்காலங்களில் கோட்டை கொத்தளங்களை முற்றிகைபோட்டு இப்படிப்பட்ட சாகஸம் செய்துவந்தார்கள். இப்பொழுது "மறியல் யுத்தம்" (Blockade) என்றுசொல்லி, தேசம், கண்டம் முழுவதையும் பிரித்துவிடுவதன்றி கரைகடந்து எங்கும் பரவியுள்ள சமுத்திரத்திலும் இந்த மறியல்யுத்தம் செய்வது சாத்தியமாக விருக்கிறது. இதற்கு முக்கிய சாதனமாயிருப்பது 'ஸப்மாரின்'என்றுசொல்லும் சமுத்திரமட்டத்துக்குக் கீழே நீரில் அமிழ்ந்து சென்று பெரியபெரிய கப்பல்களையும் உடைக்கத்தக்க வசதிவாய்ந்த படகுகளேயாம். இதில் ஜெர்மானியர்கள் கைதேர்ந்தவர்களாக விருக்கிறார்கள். அவர்கள் கைப்பலத்தை இப்பொழுது காட்டவும் தொடங்கியிருக்கிறார்கள். இதன்முடிவு எப்படியாகுமோ பகவானுக்குத்தான் வெளிச்சம்.

THE PUBLIC SERVICES COMMISSION REPORT.

பப்ளிக்ஸெர்விஸ் கமிஷன் ரிபோர்ட்டு

1912-ம் வருஷம் ஸெப்டம்பர்௴ 5௳ நியமிக்கப்பட்டு 1913-ம் வருஷம் இந்தியாவில் எங்குஞ்சென்று அலைந்து சாக்ஷிகள் விசாரித்து வந்த பப்ளிக் ஸெர்விஸ்கமிஷன் சபையாருடைய ரிபோர்ட்டுஜனவரி௴ 25௳ சென்னையிலும் மற்ற எல்லாவிடங்களிலும் பிரசுரிக்கப்பட்டது. அந்த ராயல்கமிஷனர்களில் ஒருவரான கனம். மிஸ்டர் கோக்கலேயவர்கள் இறந்துவிட்டதினால் அவரொழிந்த மற்றவர்கள் தயாரித்த ரிபோர்ட்டு வெளியாகியிருக்கிறது. அவர்களில் கனம் மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்தர்ராஹிம் அவர்கள் ஒருவர்மட்டும் மிஸ்டர் கோக்கலேயோடு கலந்துபேசி அவருடைய அபிப்பிராயத்தையும் சேர்த்து ஒரு தனி ரிபோர்ட்டு எழுதியிருக்கிறார். அவரல்லாத மற்றவர்கள் எல்லாரும் எழுதியிருக்கும் ரிபோர்ட்டு இதற்கு முன்னிருந்ததிலும் அதிகமாக அந்நிய சிப்பந்திகளை நியமிப்பதற்கு அனுகூலமானதாயிருக்கிறதென்று ஜனங்கள் எங்கும் குறைகூறிகொண்டிருக்கிறார்கள். இந்தியன் ஸிவில் ஸெர்விஸில் 100-க்கு 75-பேர்கள் ஐரோப்பியர்களாகவேயிருக்கவேண்டு மென்றும் பாக்கியுள்ள 100-க்கு 25-பேர்கள் மட்டும் இந்தியாவிற் பிறந்தவர்களாக விருக்கலாமென்றும் கண்டிருக்கிறது. இந்தியாவில் இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் ஜாதிவர்ணபேதம் பாராமல் சரிசமமாக எல்லாரையும் நடத்திவரப்படும் என்றுள்ள உத்தமகோட்பாடு இந்த ரிபோர்ட்டினால் தள்ளிவைக்கப்பட்டதாகிறது. இதுபோலவே இன்னும் உள்ள இதர சிபார்சுகளும் இந்தியர்களுக்குப் பிரதிகூலமாகவும், அந்நியர் கையாட்சிக்கு அனுகூலமாகவுமிருக்கிறதென்று எங்கும் ஜன அதிர்ப்தி அதிகமாய்ப் பரவியிருக்கிறது. இந்த ரிபோர்ட்டு சிபார்சுகளைக்குறித்து ஆக்ஷேபித்து விண்ணப்பம் செய்துகொள்ளச் சென்னையில் ஒரு பொதுக் கூட்டம் கூடிற்று.

TRAVEL AND DESCRIPTION.
AGRA.

யாத்திரை க்ஷேத்திர வர்ணனை ஆக்ரா.

(மாசியீ 349-ம் பக்கத் தொடர்ச்சி)

Mothee Musjid:—முத்துமஸ்ஜீத். இந்த பிர்மாண்டமான கட்டட வெளிச்சுவரும் பட்டிப்பூர் கற்களால் கட்டப்பட்டது. உள்பாகமெல்லாம் வெள்ளைக்கற்களால் கட்டியிருக்கிறார்கள். கட்டடமானது தகுந்த மேட்டின்மேரில் கட்டியிருப்பதால் சுமார் 30-படிக்கட்டுகளை ஏறியே கட்டடத்திற்குள் நுழையவேண்டும். உயரமான கல்ஸ்தம்பங்கள் வைத்து கட்டப்பட்ட ஒரு அலங்காரமான மண்டபமும், மேல்புறத்தில் வாழைப்பூ வடிவமான கோபுரங்களும், அவற்றின்மேல தங்கமுலாம் பூசிய கலசங்களும், அதிக விநோதமாயக் காணப்படுவதுடன் எதிர்மேடையில் தண்ணீர்த்தொட்டிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த மஸ்ஜிதைப் பார்ப்பவர்கள் ஆனந்தமடையாமலிராரென்பது திண்ணம்.

ஆக்பருடையசமாதி. (The Tomb of Akbar.) இது ஆக்ராவிலிருந்து ஆறுமைல் தூரத்திலுள்ள 'சிகந்தர்' எனனும் கிராமத்தை யடுத்து இரண்டுபர்லாங்கு அகலமும் அதேநீளமும வைத்து கட்டப்பட்ட உன்னதமான கட்டடம். மேலே வைக்கப்பட்டிருக்கிற ஸ்தூபி, கோபுரம் இவைகளின் உயரம் உட்பட 130-அடி உயரமுள்ளதாய் பெரிய வண்டிகளும் யானைகளும உள்ளே செல்லக்கூடிய வாயில்களையுடையதாய், பட்டிப்பூர் கற்களை வெளிப்புறத்திற்கு வைத்தும், வெள்ளை ஸ்படிகக் கற்களை உளபாகத்திற்கு வைத்தும் கட்டப்பட்டது. இதன மத்தியப் பிரதேசத்தில் ஆக்பர் பாதுஷாவின் சமாதியானது வெள்ளைஸ்படிகக் கற்களால் பூங்கொடி சித்திர அலங்காரங்கள் செய்து அமைக்கப்பட்டு "உனதுபெயர் விளங்கட்டும" எனனும் கருத்துள்ள பதங்கள் அரபி பாஷையில் செதுக்கப்பட்டிருக்கிறது. தவிர கட்டடத்தின் சுவர்களில குரான முதலியவைகளிலிருந்து பலவாக்கியங்களை வெள்ளை ஸபடிகக்கற்களில செதுக்கி யிருக்கிறார்கள். இதேமாதிரி சமாதிமேல் மெத்தையின்மேரில் செய்து வெகு அலங்காரமாய் வைத்திருப்பதால் அங்கிலேயர் முதலிய அந்நிய தேசத்தவர்கள் தாராளமாய் வந்து பார்த்துக்கொண்டு போகிறார்கள். அடிபாகத்திலுள்ள சமாதி, மேல்பாகத்திலிருந்து படிகளின் வழியாய்க் கீழேயிறங்கி சுற்றிப்பார்ப்பவர்களுக்கு ஒரு குகையில் கட்டப்பட்டதுபோலத் தோன்றும். இந்த சமாதியைச் சுற்றி அவர் பந்துக்களுடைய சமாதிகள் பல காணப்படுகின்றன.

டாஜ்மஹால் (Taj Mahal.) இந்த ஆச்சரியமான கட்டடம் யமுனாநதியின் வடகரையில் தேவேந்திர விமானம்போல் கட்டப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டடம் கட்டியிருக்கப்பட்ட பூமியானது 120-கஜ அகலமும் அதற்கு மூன்று மடங்கு அதாவது 360-கஜநீளமுமுள்ளது. இந்த விஸ்தீரணமுள்ள இடத்தைச் சுற்றி, பத்துப்-பதினைந்து அடி உயரமும் நான்கடி அகலமுமுள்ள மதிள்சுவர் கட்டப்பட்டிருக்கிறது. முந்திய புறத்தில் பட்டிப்பூர்கற்களால் ஒரு கோபுரத்துடன் கட்டப்பட்ட ஒருபெருந் தலைவாயில் விளங்குகிறது. சமசதுரமான விஸ்தீரணத்தில் பெரியவளைவுகள் வைத்தும், வெள்ளைப்பளிங்குக் கற்களால் 10அடி உயரமுள்ள ஸ்திரீ ரூபமான இரண்டு பிம்பங்கள் செய்து சாய்ந்தவாக்கில், முன்சொன்ன வளைவுகளுக்குமேல் அமைத்தும், மேலேயுள்ள கோபுரத்திற்குச் செல்ல ஒருபுறத்தில் படிகள் அமைத்தும், கீழ்புறத்திலுள்ள ஒரு அறையில் இந்த டாஜ் மஹால் சம்மந்தமான பிளான் பல வருஷங்களில் எடுக்கப்பட்ட 'போட்டோ' படங்கள், கட்டியவராகிய ஷாஜீஹான் பாதுஷா படம், மும்டாஜி படம் முதலிய பல சாமான்களைவைத்து 'டாஜ் மியூசியம்' என்று பெயரிட்டிருக்கிறார்கள். இதற்குள் சற்று படித்தவர்களென்று தோற்றுகிறவர்களை மட்டுமே விடுகிறார்கள். இந்த வாயிலைக் கடந்து உட்சென்றால், இரண்டு வரிசையாக செல்லும்படி இரண்டடியகலமுள்ள, கல்களமைத்து, பாதையாகவும், இருபுறத்திலும் வரிசையாய் தண்ணீர்க்குழாய்களமைத்து, எப்பொழுதும் தண்ணீர் வாரி இறைத்த பாவனையாய் விழும்படி செய்து கீழே தண்ணீர், தொட்டிகளில் தேங்கும்படியாகவும், அத்தண்ணீர் இருபுறத்திலுமுள்ள சந்தனம், அகில் அசோகு, வாழை கமுகுமுதலிய மரங்களுக்கும் மல்லிகை இருவாக்ஷி, ஜாஜி முதலிய புஷ்பச் செடிகளுக்கும் பாயும்படி செய்திருக்கிறார்கள். இம்மாதிரி தண்ணீர்க் குழாய்களும், தொட்டிகளும் கல்

புரைகளும் இந்த வாயிலிருந்து வைக்கப்பட்டிருப்பதைத் தவிர டாஜ் மஹால் என்ற ஆச்சரியமான கட்டடத்திலிருந்தும் வைக்கப்பட்டு மத்தியில் வெள்ளைக் கற்களாலேயே செய்யப்பட்ட ஒரு மேடையும் அம்மேடையின் நடுவே வெண்மை, சிவப்பு, மஞ்சள் முதலிய வர்ணமுள்ள மச்சங்கள் துள்ளிவிளையாடிக் கொண்டிருக்கிற ஒரு சிறிய தடாகமும், அதற்கு நான்கு புறத்திலும் உட்காரத் தகுந்த ஆசன மேடைகளும், இரவில் விளக்கு வைக்கத் தகுந்த லாந்தர் ஸ்தம்பங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த மேடையிலிருந்து பார்த்தால் சுமார் 150-கஜ தூரத்தில் நாம் முன்கூறிய வாயிலும் அதற்கு எதிர்முகமாக 150-கஜ தூரத்தில் டாஜ்மஹாலும் மற்ற இருபுறத்திலும் 50-கஜ தூரத்தில் மதிள் சுவரை யொட்டி இரண்டு 'மஸ்ஜீதுகள்' என்று அழைக்கப்படுகிற சித்திராலங்காரமான கட்டடங்களும் காணப்படுகின்றன. இவைகள் பட்டிப்பூர் மலைக் கற்களேயன்றி மற்றப்படியன்று. இம்மாதிரி சற்று பெரியதான இரண்டு கட்டடங்கள் டாஜ் மஹாலின் இரு புறத்திலும் மதில் சுவரை யொட்டிக் கட்டப்பட்டிருக்கிறது. இக்கட்டடங்களுக்கு நடுநாயகமாக விளங்கும் டாஜ் மஹாலானது யமுனை நதியை நோக்கிய பாவனையாய் சுமார் 50, 60, அடி ஆழத்திலிருந்து பிர்மாண்டமான பலகைக் கற்களாலேயே அஸ்திவாரம் போட்டு தரை மட்டத்திற்கு மேல் 15 அடி உயரம் கட்டடம் கட்டி அதன் மேல் வெள்ளை ஸ்படிகக் கற்களையே பரப்பி சுமார் 200-அடி அகலமும் அதே அடி நீளமும் வைத்து மேடை செய்து, நான்கு புறத்திலும் 137-அடி உயரமுள்ள நான்கு மினரெட்ஸ்களென்னும் நீண்ட கோபுரங்கள். வெள்ளை ஸ்படிகக் கற்களாலேயே கட்டி, உள்ளே வளைந்து சுற்றிச் செல்லும் படிகளமைத்து, மேல் உச்சியில் எட்டுஸ்படிகத் தூண்களால் வாழைப்பூ மாதிரி செய்த கோபுரங்களும் அவற்றின் மேல் பொன்முலாமிட்ட கலசங்களும் பிரகாசிக்கின்றன. இந்த மினரெட்ஸ்களுக்குள் வளைவுப்படிகள்வைத்து, போதுமான வெளிச்சம் வரும்படி அங்கங்கே பலகணிகள் வைத்திருக்கிறபடியால் யாவரும் பயமின்றி ஏறி டாஜ் மஹாலின் அழகையும், யமுனாநதியின் [illegible]ரத்தையும், ஆக்ரா பட்டணத்தின் தோற்றத்தையும், கோட்டையின் அமைப்பையும் கண்டு ஆநந்தமடையலாம்.

இந்த நான்கு கோபுரங்களுக்கிடையில் 75-அடிநீளமும் 75 அடி அகலமும், 250-அடி உயரமும் கொண்டதாய், சுற்றியும் பன்னிரண்டு சிறிய ஸ்தூபிகளும், அவைகளுக்கு மத்தியில் நான்கு பெரிய வாழைப்பூ வடிவமான கோபுரங்களும், அவைகளுக்கு மத்தியில் ஆகாயத்தை யளாவும்படியாக பிர்மாண்டமான வளைவுகளுடன் கூடிய கோபுரமும், அந்த கோபுரங்களின்மேரில் பொன்முலாம் பூசிய கலசங்கள் ஒன்றுக்குமேலொன்றாய்ப் பிரகாசிக்கிற கோபுர உருண்டைகளின்மேரில் வரிசையாக பச்சை, சிவப்பு, நீலம் முதலிய நிறங்களோடுகூடிய தீபங்கள் ஏற்றியதுபோல், பதிப்பிக்கப்பட்ட கற்கள் ஜ்வலிக்க, சிற்ப சாஸ்திரமே சிரித்து 'சபாஷ்' என்று சொல்லும்படியாக உள்ளும் மேலும் ஒரே மாதிரியாக ஸ்படிகக் கற்களைக் கொண்டே, ஒட்டு இன்ன இடத்தில் என்பது தெரியாமலும், சாரங்கட்டியவிடம் தெரியாமலும், சுண்ணாம்பு, காரை மணல் முதலியவைகளை உபயோகப்படுத்தாமலும் கதவுகளுக்கன்றி மற்றவைகளுக்கு மரமென்றதை மருந்துக்கும் சேர்க்காமலும், வேண்டிய ஒவ்வொரு தூண், சட்டம், நிலை, பலகணிமுகப்பு முதலிய பாகங்களில் வெள்ளை ஸ்படிகக்கற்களையே செதுக்கி பச்சை, சிவப்பு, நீலம், மஞ்சள் முதலிய கற்களைப்பதித்து புஷ்பங்களோடுகூடிய கொடிகள் படர்ந்தமாதிரி செய்திருப்பதையும், ஸ்படிகக்கற்களையே குடைந்து செடி கொடியலங்காரங்கள் துளைச்சலினாலேயே யுண்டாகும்படி செய்திருப்பதையும், பார்த்தால் விஸ்வகர்மாவே வந்து கட்டிச் சென்றனரோவென்று கூறும்படி தோற்றுகின்றது. உள்பாகம் பக்கத்திற்கு மூன்று அறை விதம் எட்டு அறைகளோடும் மத்தியில் ஷாஜீஹான் பாதுஷாவுடையவும் அவர் அன்புக்குகந்த 'மும்டாஜி' என்னும் மனைவியுடையவும் சமாதிகளின் மேடைகள் அபூர்வமான ஸ்படிகக் கற்களால் செய்து சுற்றியும் சித்திரப்பூங்கொடி வேலைகள் செய்த வெள்ளைக் கற்களினாலேயே கைபிடிச்சுவர் அமைத்திருக்கிறது. சமாதிக் கற்கள் மேலும் சித்திர அலங்காரமாய் விலையுயர்ந்த கற்களினாலேயே பூங்கொடிவேலைகள் செய்திருக்கிறார்கள். இவை பார்வைக்கு

அலங்காரமாக விருந்தாலும் குரான் முதலிய புஸ்தகங்களிலிருந்து எடுத்தெழுதிய அக்ஷரங்கள் என்பதாகவும் கூறப்படுகிறது. 'மும் டாஜ்' சமாதியைவிட ஷாஜீஹான் சமாதி சற்று உயரத்தில் குறைந்தும், சித்திரவேலைப்பாடுகளில் கொஞ்சம் தாழ்ந்ததாகவே காணப்படுகிறது. இந்த சமாதியை, இதைச்சுற்றியுள்ள எட்டு அறைகளிலிருந்தும் பார்க்கும்படியாக வெகு சாதுரியமாய் பலவர்ணக் கண்டிகளமைத்த ஜன்னல்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. மேல்பாகத்தில் கோபுரமாக செய்து வளைக்கப்பட்டதால் நேர்ந்த உள்பக்கத்து வளைவுகளுக்கும் எவ்விதமாகவோ பல சித்திரங்களுண்டாகும்படியாக வேலைசெய்திருக்கிறார்கள். 200-அடி உயரமுள்ள இந்த கல்வளைவுகளில் சித்திர அலங்காரம் செய்திருப்பதைப் பார்க்க அற்புதமாகத்தோற்றுகிறது.

இந்த சமாதியின் அடிதளத்தில் உண்மையாக சமாதிசெய்யப்பட்ட இடமுண்டு. மேலே செய்திருக்கிற மாதிரியாகவே மேடைகள் செய்து ஸ்படிகக்கற்களாலேயே மூடியிருக்கிறார்கள். இந்த அடிதளத்திற்கு சென்று பார்க்க இஷ்டப்படுகிறவர்களை மட்டும் ஒரு லாந்தர் வெளிச்சத்துடன் கூட்டிக்கொண்டுபோய்க் காட்டுகிறார்கள். இந்த பாகமும் வெள்ளை ஸ்படிகக் கற்களாலேயே கட்டப்பட்டு அதிக பரிசுத்தமாகவே வைக்கப்பட்டிருக்கிறது. இந்த சமாதிகளும் 'டாஜ் மஹால்' என்ற ஆச்சரியமான கட்டடமும், மினரெட்ஸ்கள் என்ற கம்பங்களும் பல்லாயிரக்கணக்கான ஸ்படிகக்கற்களால் கட்டப்பட்டதாயிருந்தாலும், அக்கற்களை அறுத்து நயப்படுத்திய விதமும், குடையவேண்டிய இடங்களில் குடைந்தெடுத்த விதமும், பொருத்துகள் தெரியாமல் பொருத்தப்பட்ட விதமும், அக்கற்களின்மேலில் கொடிகளும் புஷ்பங்களும் அமைய சித்திர அலங்கார விநோதமாக, பலவர்ணக் கற்களைப் பதித்த மாதிரியும், உள்ளும் புறமும் ஒரேமாதிரியாக அமையும்படி கட்டியிருக்கிற திறமையையும் என்னவென்று சொல்வது! யோஜித்தால் மூளை சிதறுமேயன்றி புத்திக்கு ஒன்றும் எட்டுகிறதில்லை. அம்மாதிரி 10-அடி நீளமும் அகலமுமுள்ள ஒரு கட்டடம் கட்டுவதென்றாலும் இலக்ஷக் கணக்கான திரவியமும், அநேக வருஷ உழைப்பும்வேண்டுமே!

இந்தக் கட்டடத்தை ஷாஜீஹான் தனது அன்புள்ள மனைவி ஜெகத்ஜோதி என்ற மாதின் வேண்டுகோளுக்கிசைந்து இருபத்திரண்டு வருஷகாலம் இரவு பகல் என்ற வித்தியாசமின்றி, இருபது லக்ஷம் ஜனங்களை வேலைக்கு நியமித்து இருபது கோடி பூவராகனைச் செலவழித்து, தனது இதரவேலைகளை தருந்தவர்களைப் பார்க்கும்படி ஒப்புவித்து தானே கண்ணும் கருத்துமாயிருந்து செய்வித்ததாகத் தெரியவருகிறது. இதைக்கட்டுதற்கு முன் துருக்கிஸ்தானம், கான்ஸ்டாண்டிநோபில் முதலிய விடங்களிலிருந்தும் பலவிதமான பிளான்களை வரவழைத்துப் பார்த்ததாகவும், கடைசியில் இத்தேச சிற்பியொருவரால் தயார் செய்யப்பட்ட பிளான் பிரகாரமே இந்துக்களைக் கொண்டே இதைக் கட்டியதாகவும் தெரியவருகிறது. உலகத்திலுள்ள ஏழு ஆச்சரியங்களில் ஒன்று என்பதாகக் கொண்டாடப்படுகிற இந்த அற்புதமான கட்டடத்தை நேரில் கண்டவர்களுக்கு அதன் அருமை பெருமை தெரியுமேயன்றி ஒரு வியாசத்தில் எழுதுவது முடியாத காரியமே. இந்த டாஜ் கட்டடத்திற்கு வடபுறத்திலும் தென்புறத்திலும் இப்பொழுது சிங்காரவனம் செய்து அநேக செடிகொடிகளையும் பல விருக்ஷங்களையும் வைத்து பயிர் செய்திருக்கிறார்கள். தவிர இந்த டாஜ்மஹாலை யடுத்து பூர்வத்தில் கட்டப்பட்ட பலவீடுகளும், மாளிகைகளும் காணப்படுகின்றன. இவைகளெல்லாம் பட்டிப்பூர் கற்களாய் கட்டப்பட்டவைகளே. மேற்கூறிய சிங்காரவனத்தில் நமது காருண்ணிய விக்டோரியா சக்கரவர்த்தியின் சிலையொன்று நூதனமாய் நாட்டியிருக்கிறார்கள். தவிர இந்த சிங்காரவனத்துக்குள் பந்தாடும மேடைகளும் சில போடப்பட்டிருக்கின்றன.

இதையன்றி யமுனைநதிக்கு அக்கரையில் இராமபாக் என்பதாக ஒரு சிங்காரவனமிருக்கிறது. இது முன்னொரு காலத்தில் அதிசிரேஷ்டமான சிங்காரவனமாயிருந்து இப்பொழுது சீர்கெட்ட ஸ்திதியிலிருக்கிறது. இந்தத் தோட்டத்தைப் பார்க்கச் செல்லுபவர்கள் யமுனையாற்று பாலத்தைக் கடந்து செல்ல வேண்டும்.

ஜிம்மா மசீத்:—இதுவும் பட்டிப்பூர் கற்களால் கட்டப்பட்ட பெரிய கட்டடம். அ